தோல்

சாகித்திய அகாதெமி விருது பெற்ற நாவல்

மு.செல்வராஜ்

தோல்

சாகித்திய அகாதெமி விருது பெற்ற நாவல்

டி. செல்வராஜ்

EBOOK BY BIBLIOPHILE

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41–B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை– 600 098.
☎: 26258410, 26251968, 26359906

I.

Language : Tamil
Thol
Author : **D. Selvaraj**
First Edition : March, 2010
Third Edition : June, 2013
Fourth Edition : August, 2017
Copyright : Author
No. of pages : xvi + 696 = 712
Publisher :
New Century Book House Pvt. Ltd.,
41-B, SIDCO Industrial Estate,
Ambattur, Chennai - 600 098.
Tamilnadu State, India.
Email : info@ncbh.in
Online: www.ncbhpublisher.in

ISBN. 978 - 81 - 2341 - 739 - 4
Code No. A 2123
₹ 450/-

Branches

Ambattur (H.O.) 044 - 26359906, **Spenzer Plaza (Chennai)** 044-28490027
Trichy 0431-2700885 **Pudukkottai** 04322- 227773 **Tanjore** 04362-231371
Tirunelveli 0462-2323990 **Madurai** 0452 2344106, 4374106
Dindigul 0451-2432172 **Coimbatore** 0422-2380554 **Erode** 0424-2256667
Salem 0427-2450817 **Hosur** 04344-245726 **Krishnagiri** 0434-3234387
Ooty 0423 2441743 **Vellore** 0416-2234495 **Villupuram** 04146-227800
Pondicherry 0413-2280101 **Thiruvannamalai** 04175-223449

தோல்
ஆசிரியர் : டி.செல்வராஜ்
முதல் பதிப்பு: மார்ச். 2010
மூன்றாம் பதிப்பு : ஜூன். 2013
நான்காம் பதிப்பு : ஆகஸ்ட். 2017

அச்சிட்டோர்: **பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,**
16 (142), ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14
☎: 044-28482441

பதிப்புரை

தோலால் செய்யப்பட்ட பொருட்கள் நமக்குப் பிடித்தமானவை. ஏனென்றால் அவை மிருதுவானவை; அழகானவை. ஆனால் ஒரு முறையேனும் தோல் பதனிடும் தொழில் பற்றி, அதில் வேலை செய்யும் தொழிலாளர் பற்றி எண்ணிப் பார்த்திருக்கின்றோமா?

தமிழகத்தில் இருக்கும் தோல்ஷாப்புகளில் சுண்ணாம்பு நீருக்குள் நின்று தோலலசுவதால் இரணமாகிப் போன உடலோடும், காலங்காலமாக நிலவும் சாதி அடிமைத்தனத்தாலும், முறி எழுதி வாங்கிக்கொண்ட தோல்ஷாப்பு உடைமைகளின் அட்டகாசத்தாலும் இரணமாகி போன உள்ளத்தோடும் நின்ற மக்களின் கதை தெரியுமா?

சாதி அடிமைத்தனத்தின் கொடுவிலங்குகள் உடைத்து, தொழிலாளி ஏழை மக்களென ஒன்றுபட்டுத் தோல்ஷாப்பு உடைமைகளையும், பெருந்தனக்காரர்களையும், மாமதை கொண்ட அதிகாரிகளையும் தூவென ஊதித்தள்ளி, உரிமைகளை வென்றெடுத்துத் தன்மானத்துடன் வாழத் தலைப்பட்ட மக்களின் கதையை, அவர்களின் தோளோடு தோள் கொடுத்து நின்ற பொதுவுடைமை இயக்கம் மக்களின் இதயத்தில் ஊற்றெடுத்து, குருதில் கலந்து வளர்ந்த கதையைச் சொல்லும் நாவல் **'தோல்'**.

டி.செல்வராஜ் தமிழ்கூறும் நல்லுலகத்தில் நன்கறியப்பட்ட பொதுவுடைமை இயக்க இலக்கியக்காரர். அவர் எழுதியுள்ள இந்நாவல் தோல்ஷாப்புத் தொழிலாளிகளை, நகரச் சுத்தி தொழிலாளிகளை, அவர்களின் இயக்கத்தை இரத்தமும் சதையுமாகச் சித்திரித்துக் காட்டுகிறது.

-பதிப்பகத்தார்

முன்னுரை

கடந்த கால் நூற்றாண்டுக் காலத்துக்கு மேலாக என் உள்ளில் ஊறிக்கிடந்த கருவுக்கு இந்தப் படைப்பின் வாயிலாக உருவமும் உயிரும் கொடுக்க முயன்றிருக்கிறேன்.

சிறந்த ஆய்வாளரும், விமர்சகருமான ரேமண்ட் வில்லியம்ஸ், இந்தக் கால கட்டத்தின் கதை மாந்தர்கள் வீரர்கள் அல்லர், வஞ்சிக்கப் பட்டவர்களே என்றார் (victims not heroes). ஆம்! இந்த நாவலின் கதை மாந்தர்கள், காலம் காலமாக சமூகத்தின் விளிம்பில் தள்ளப்பட்டிருக்கும் கடையர்கள்.

பரம்பரை பரம்பரையாகச் சரித்திர கதியில், சமூகத்தால் வஞ்சிக்கப்பட்ட இந்த உழைப்பாளி மக்கள் சாதிய வருணதருமக் கட்டமைப்பின் அடிமட்டத்தில் தீண்டப் படாதவர்களாகவும், பார்க்கப் படாதவர்களாகவும் சமூக அமைப்புக்கு வெளியே ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் அவர்ணர்கள்.

இவர்கள் ஆதிதிராவிடர், பழந்தமிழர், தாழ்த்தப்பட்டோர், பஞ்சமர், புலையர், அவர்ணர், இழிசினர், புலையர், பறையர் மற்றும் திருக்குலத்தார் (இராமானுஜர் இவர்களுக்குச் சூட்டிய பெயர்) ஹரிஜனங்கள் (தேச பிதா மகாத்மா காந்தியால் உருவாக்கம் பெற்ற சொல்) என்று பல்வேறு நாமகரணங்களால் அழைக்கப்பட்ட போதும், இவர்களுக்குச் சரித்திரத்திலும் இலக்கியத்திலும் இடம் கிடையாது. தமிழ் மக்களின் தொன்மையைச் சொல்லும் தொல்காப்பியமும் விதிவிலக்கல்ல. சமூக விதியைச் சொல்ல வந்த தொல்காப்பியனார், இவர்களை ஒதுக்கி வைத்து விட்டுத்தான் "மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்தே" என்று அடியோரையும், வினைவலரையும் விலக்கி வைத்துவிட்டே சமூக அமைப்பைச் சொல்லுகிறார்.

நால்வருண அமைப்பானது தொழிலைப் பிறவியின் அடிப்படையில் ஒதுக்கி, அதற்கான சடங்காச் சாரங்களையும் ஏற்படுத்தித் திருமண உறவைச் சாதிக்குள்ளாகவே முடக்கி, விதியைக் காவலுக்கு வைத்து, எந்த விதமான மீறலுக்கும் இடம் கொடாமல் இந்திய நிலமான்ய அமைப்பு வர்ண அடுக்கை அடைகாத்துப் பாதுகாத்து வந்திருக்கிறது. சனாதனம், இந்த உழைப்பாளி மக்களுக்கு இழிதொழிலையும்,

அடிமைத்தனத்தையும் ஒதுக்கிக் கொடுத்திருக்கிறது. மீறுபவர்கள் கடும் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டனர். சம்புகனும், ஏகலைவனும், உத்தர நல்லூர் நங்கையும், நந்தனும் இதற்கு உதாரணம். சரித்திர கதியில் அவ்வப்போது ஏற்படும் எதிர்ப்புகளும் மீறல்களும் சரித்திரத்திலும் இலக்கியத்திலும் இடம் பெறவில்லை. அவை எல்லாம் நாட்டார் கதைகளாகவும், நாடோடிப் பாடல்களாகவும், சிறு சிறு தெய்வ வழிபாடுகளாகவும் முடக்கப்பட்டுக் கிடக்கின்றன. உதாரணம் முத்துப்பட்டன் கதை.

தேசவிடுதலை இயக்க காலத்தில் கூட தீண்டாமை எதிர்ப்பு என்பது வெறும் சமூகச் சீர்திருத்தமாகவும், மனிதாபிமான அடிப்படையைக் கொண்டதாகவுமே இருந்தது. இலக்கியப் பதிவுகளும் அப்படிப்பட்டவையாகவே இருந்தன எனலாம். 1927ஆம் ஆண்டு வாக்கில் வெளிவந்த கா.சி. வேங்கடரமணியின் 'முருகன் ஓர் உழவன்' மற்றும் 1932ஆம் ஆண்டு வாக்கில் வெளியான அவரது மற்றொரு படைப்பான 'தேச பக்தன் கந்தன்' என்கிற நாவலில் தலித் சமூகத்தைச் சேர்ந்த கதாபாத்திரங்கள் கள்ளுக் கடைக்காரர்களாகவும், திருடர்களாகவும் தேச விடுதலையில் நாட்டம் அற்றவர்களாகவுமே சித்திரிக்கப்பட்டுள்ளனர் என்று டாக்டர் முத்தையா "தமிழ் நாவல்களில் தலித் நிலைபாடு" என்கிற கட்டுரையில் குறிப்பிடுகிறார் (மேலே சொல்லப்பட்ட நாவல்கள் இரண்டும் முதலில் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுத் தமிழாக்கம் செய்யப்பட்டவை). கல்கியின் 'தியாக பூமி' நாவலில் கூட சாதிசமத்துவத்தில் நம்பிக்கை கொண்ட சாம்பு சாஸ்திரிகள், தலித் ஒருவனுக்குத் தம் வீட்டில் இடம் கொடுத்தமைக்கு அவர் சாதியை விட்டு விலக்கி வைக்கப்படுகிறார். அன்றைய சனாதனக் கோட்பாடு சக மனிதனை மனிதனாகப் பாவிக்கப்படுவதைக்கூட அனுமதிக்கவில்லை என்பதையே இது காட்டுகிறது.

ஆனால், இந்திய உப–கண்டத்தின் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் தீண்டப்படாதவர்களாக ஒதுக்கி வைக்கப் பட்டிருக்கும் தலித் மக்களும், மலை சாதியினருமாவர். ஒரு பக்கம் கொடூரமான முதலாளித்துவச் சுரண்டலுக்கும், மறுபக்கம் வருணதர்ம தீண்டாமை என்கிற நிலமான்ய அமைப்பின் சமூகப் பொருளாதார பண்பாட்டு அடக்கு முறைக்கும் ஆளாகி அல்லல் படும் இம்மக்கள், இந்த நாட்டின் பாட்டாளிவர்க்க, அரைப் பாட்டாளி வர்க்க (Semi proletariate) மக்கள் தொகையில் பிரிக்க முடியாத பகுதியாகும்.

இம்மக்களின் பங்களிப்பின்றி, இன்றைய முதலாளித்துவ – நிலமான்ய ஆளும் வர்க்கத்தை எதிர்கொள்ள முடியாது. எனவே தீண்டாமை எதிர்ப்பு என்பதும், சாதிய ஒழிப்பு என்பதும் ஜன நாயக இயக்கங்களின் கடமையாகும். எனவே, சமூக விடுதலைக்காக நிற்கும் எந்த ஒரு ஜனநாயக இயக்கமும் இந்த மக்களின் விடுதலையின்பால் நிற்பது என்பது இந்தக்கால கட்டத்தின் கட்டாயமாகும்.

இத்தகு சூழ்நிலையில், தலித்துக்கள், பெண்கள், மற்றும் தமிழ்த் தேசியம் பற்றிய ஆய்வில் பெரிதும் ஈடுபட்டு வரும் புதுச்சேரிப் பேராசிரியர் பஞ்சாங்கம் குறிப்பிட்டுள்ளது கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகும். தலித்துக்கள், பெண்கள், தமிழ் மக்கள் என்ற தனது நூலுக்கான முன்னுரையில் இவ்வாறு குறிப்பிடுகிறார்:

"அதாவது, தலித்தியம், பெண்ணியம், தமிழ்த் தேசியம் சார்ந்த சொல்லாடல்கள், தமிழ்ச் சூழலில் இன்று விறுவிறுப்பாக நடந்து கொண்டிருக்கின்றன. ஏன் இப்படி? என்று ஒரு நண்பர் கேட்டார். மார்க்சியம் தான் காரணம் என்றேன். ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக் காலமாக இங்கு விதைக்கப்பட்ட மார்க்சிய சிந்தனை தான் ஒடுக்கு முறையின் பல் வேறுபட்ட வடிவங்களையும், ஆதிக்க அதிகார சக்திகளின் நுட்பமான தந்திரங்களையும் பச்சையான சுயநலக் கூறுகளையும் அடையாளம் கண்டுகொள்வதற்குத் துணைபோகின்றன. எனவே மார்க்சியத்தின் நீட்சியாகவே இவைகளை நான் பார்க்கிறேன்"

இன்றைய தலித் படைப்பாளர்களும், விமர்சகர்களும், ஆய்வாளர்களும், பேராசிரியர் பஞ்சாங்கத்தின் கூற்றை ஏற்றுக் கொள்கிறார்களோ இல்லையோ அதுதான் பிண்டப்பிரமாணமான உண்மை.

மார்க்சிய சிந்தனை வயப்பட்ட இடதுசாரித் தலைவர்கள், தேசவிடுதலைக் காலத்தின் போதும், தேசவிடுதலைக்குப் பிறகும், தலித் மக்களுடைய இயக்கத்தையும், தீண்டாமை ஒழிப்பு என்பதையும் சமூகவிடுதலையினுடையவும், வர்க்கப் போராட்டத்தினுடையவும் பிரிக்க முடியாத அங்கமாகவே கருதிச் செயல்பட லாயினர். அம்மக்களோடு இரத்தமும் சதையுமாக இரண்டறக்கலந்து நின்று அம்மக்களின் விடுதலைக்காகப் போராடினர். அம்மக்களின் அடிமைத்தளைகளை உடைத்தெறிவதற்கான இயக்கத்தின் முன்னணியில் நின்றனர். பண்ணை அடிமைத் தனத்தையும் தீண்டாமைக் கொடுமையினையும்

எதிர்த்துச் சக்தி மிக்க இயக்கங்களை நடத்தினார்கள். நிலமான்ய அமைப்பின் உறைவிடமான தஞ்சை மண்ணில் தலைவிரித்தாடிய சாட்டையடிக் கொடுமைக்கும், சாணிப்பால் புகட்டும் தண்டனைக்கும் முடிவுகட்டியது இடதுசாரி இயக்கம் தான் என்பது நியாய புத்தி படைத்த எவராலும் மறுக்க முடியாத உண்மையாகும். நிலமான்ய அமைப்புக்கெதிராகப் போடப்பட்டிருக்கும் சட்டங்கள் கூட இத்தகு இயக்கங்களினது போராட்டங்களின் விளைவு என்பதாகும். தூரதிர்ஷ்ட வசமாகத் தமிழகமெங்கும் நடைபெற்ற இத்தகு போராட்டங்கள் எழுச்சிகள் ஆகியவை பற்றிய சரித்திரப் பதிவுகள் மிகமிகக் குறைவு. இலக்கியப் பதிவுகளும் மிகமிகக் குறைவு. ஆனால் இந்தப் போராட்டங்களைக் கருவாகக் கொண்டு படைக்கப்பட்ட நாவல்கள் நவீன இலக்கியத்தில் ஒதுக்கிவிட முடியாத இடத்தை வகிக்கின்றன.

மராட்டிய மாநிலத்தில் மகான் கோவிந்தராவ் பூலே (1827–1890) மற்றும் அண்ணல் அம்பேத்கார் அவர்களும், தலித் மக்களின் சமூகப் பொருளாதார பண்பாட்டு ஒடுக்கு முறைகளுக்கு எதிராக நடத்திய இயக்கங்கள் காரணமாகவும், அவர்களால் உருவாக்கப்பட்ட பள்ளிகளில் படித்து உணர்வு பெற்ற மகர் இன இளைஞர்களால் 1960களில் ஆரம்பிக்கப்பட்ட தலித் இயக்கம், தலித் இலக்கியஇயக்கம் மராட்டிய இலக்கியத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்திற்று (இன்று அது மங்கிக் கொண்டிருக்கிறது). இந்த இலக்கிய இயக்கம் 1980களில் தமிழ் இலக்கியத்திலும் படித்த மத்தியதரவர்க்கப் படைப்பாளிகள் வாயிலாகக் கால் பதிக்கத் தொடங்கியுள்ளது. ஆனால் துரதிர்ஷ்ட வசமாகப் பெரும்பாலான தலித் படைப்புக்கள், அம்மக்கள் அனுபவிக்கும் இன்னல்கள், அவலங்கள், கேவலங்கள், அவஸ்தைகள் ஆகியவை பற்றியே சித்திரிக்கின்றனவே அல்லாமல் ஏனோ, இந்த அவஸ்தைகளையும், அவமானங்களையும் எதிர்த்துச் சமர்புரியும் தலித் இன மக்களையும் அவர்களது போராட்டங்களையும் இலக்கியத்தில் கொண்டு வர மறுக்கின்றன. உண்மையில் தலித் இலக்கியக் கோட்பாடு தலித் மக்களின் விடுதலைக்கான கோட்பாட்டின் ஒரு பகுதியாகத்தான் இருக்க முடியும்; உழைக்கும் பாட்டாளி மக்களின் மறுக்க முடியாத ஒரு பகுதியாகத்தானிருக்க முடியும். தலித் மக்கள், தம்மீது சுமத்தப்பட்டுள்ள சாதிய அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறுவதை மட்டுமே தளமாகக் கொண்டு, உழைக்கும் மக்களின் ஒட்டு மொத்த விடுதலையினின்றும் வேறுபட்டுத் தனித்து இயக்கம் நடத்துவதும்,

இலக்கியம் படைப்பதும் கடுமையான முரண்பாட்டிலும், சோர்விலும் கொண்டு சேர்க்கும். இப்படி ஒரு நிலை மராத்திய தலித் இலக்கியத்தில் ஏற்பட்டிருப்பதை தயாபவர் வேறுவிதமாகக் குறிப்பிடுகிறார்.

பெரும்பாலான தலித் படைப்புக்கள், சமூகத்தின் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்ட, இம்மக்களின் அவமானங்களையும், அவலங்களையும் மட்டுமே சித்திரிப்பதன் காரணமாகவோ என்னவோ, தலித் இலக்கிய வாதிகளில் ஒரு சாரார் தலித் இலக்கியமானது பின் நவீனத்துவ இலக்கியக் (Post Morderism) கோட்பாட்டுக்கு உட்பட்டது என்றும் நுண் அரசியலாகப் (Fragmentation) பார்க்கப்பட வேண்டிய இலக்கியப் போக்கு என்றும் வகைப்படுத்த ஆரம்பிக்கின்றனர். இது மிகவும் ஆபத்தான இலக்கியக் கோட்பாடாகும்.

உலக மகா யுத்தத்தின் அழிவினைக் கண்டு பேதலித்துப் போன அய்ரோப்பிய புத்தி ஜீவிகளின் அழுகுணி சித்தர் கோட்பாட்டாகும், பின் நவீனத்துவக் கோட்பாடு. வெறுப்பு, அவநம்பிக்கை, அச்சம், குழப்பம், விகாரமான எண்ணப் போக்கு– சொல்லப் போனால் மனிதனை ஒருவித பைத்தியக்கார நிலமைக்குத் தள்ளும்போக்கு, இது. முடிவாகச் சொல்லப் போனால் பின் நவீனத்துவம் மனிதனையும், இயற்கையையும் புறக்கணிக்கிறது. பின் நவீனத்துவம் என்கிற வார்த்தை ஜாலத்தில், தலித் படைப்பாளிகள் இந்த வலையில் வீழ்ந்து படாதிருப்பார்களாக !

நிற்க;

ஒரு வரலாற்றுக் காலத்தின் சமூகப்போக்கின் சாராம்சம் முழுவதையும் பலகதா பாத்திரங்கள் வாயிலாக வெளிப்படுத்தும் இலக்கிய வடிவமே, நாவல் இலக்கியம். நாவல் என்பது அக்காலச் சமூகத்தில் நிகழும் சமூக மாற்றத்தைச் சித்திரிக்கக் கூடியதாகவும், அக்காலத்தைய மக்களது மனோபாவத்தைப் பிரதிபலிக்கக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். எனவே தோல் பதனிடும் தொழிலாளர் தொழிலும் வாழ்வும் இந்த நாவலின் அடிநாதமாகக் கொள்ளப்பட்ட போதும், அக்கால கட்டத்தில் நடைபெற்ற பல சரித்திர நிகழ்வுகளும், இயக்கங்களும் நாவலில் இடம் பெற்றுள்ளன.

இந்த நாவலில் இடம் பெற்றுள்ள கதைமாந்தர்கள் தமிழகத்தின் சரித்திர கதியில், ஒருகால கட்டத்தில் வாழ்ந்த மாந்தர்களின் பிரதி பிம்பங்களே. கதையின் போக்கிலும் கதை மாந்தர்களின் போக்கிலும், கதாசிரியன் என்ற முறையில் எந்தக் கட்டத்திலும் நான் தலையிட

வில்லை. அவர்கள் போக்கிலேயே உலவ விடப் பட்டிருக்கின்றனர். அவர்கள் முடிவுகளை அவர்களே தேர்ந்தெடுத்துக் கொண்டிருக் கிறார்கள். ஆனால் இந்த நாவலில் வரும் கதை மாந்தர்கள், அவலங்களையும், அவமானங்களையும் தலைவிதியே என்று ஏற்றுக் கொண்டு தெண்டனிட்டு அடிபணிந்து கிடப்பவர்கள் அல்லர். மாறாகப் படிப்படியாக உணர்வு பெற்றுச் சனாதனச் சமூகவிதியை மாற்றுபவர் களாகப் பரிணாமம் பெறுகின்றனர். இந்தச் சமூக உண்மையை இந்த நாவல் ஓரளவு பிரதிபலிக்க முயன்றிருக்கிறது.

இந்த நாவலை ஒரு தலித் படைப்பு என்று கொண்டாலும், அல்லது இது வர்க்க இலக்கியம் என்று கொண்டாலும், ஒரு படைப்பாளி என்கிற வகையில் நான் ஏற்றுக் கொண்ட சோஷலிஸ யதார்த்தவாதம் என்ற விஞ்ஞானப் பூர்வமான இலக்கியக் கோட்பாட்டின் அடிப்படையிலே இந்தப் படைப்பை நான் உருவாக்கியுள்ளேன்.

இந்த நாவல் சம்மந்தமான பல தகவல்களை அளித்து எனக்கு உதவி செய்த திண்டுக்கல் தோல்பதனிடும் சங்கத்தின் முக்கிய ஊழியரும், தொழிலாளியுமான முதுபெரும் தோழர் சார்லஸ் அவர்களுக்கும், திண்டுக்கல் நகரசபை முன்னாள் உறுப்பினர் தோழர் சின்னத்தம்பி அவர்களுக்கும் நான் நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இவ்வளவு அதிகம் பக்கங்கள் கொண்ட நாவலை எந்தப் பதிப்பகத்தார் வெளியிடப் போகிறார்கள் என்று மூலையில் போட்டு வைக்கப் பட்டிருந்த நாவல் கையெழுத்துப் பிரதியைத் தற்செயலாகப் பார்த்துவிட்டு, எவ்வளவு அதிகப் பக்கங்கள் கொண்டதாக இருந்த போதும் நாவலை வெளியிடுவதாக உறுதி சொல்லி, அதற்கான முயற்சியை மேற்கொண்ட காந்தி கிராம கிராமியப் பல்கலைக் கழகப் பேராசிரியர் திரு. பா.ஆனந்தகுமார் அவர்களுக்கும் என்.சி.பி.எச் பதிப்பகத்தின் மண்டல மேலாளர் தோழர் கிருஷ்ணமூர்த்திக்கும் நல்ல முறையில் இந்த நாவலைப் பதிப்பித்திருக்கும் என்.சி.பி.எச் நிறுவனத்துக்கும் எனது மனமார்ந்த நன்றி.

இடம்: திண்டுக்கல்
நாள்: 26-1-2009

டி. செல்வராஜ்

கதா மாந்தர்கள்

1

1.	சங்கரன்	–	வழக்கறிஞர் – தொழிற் சங்கத் தலைவர்
2.	சுந்தரேச அய்யர்	–	வழக்கறிஞர் – சங்கரனின் தந்தை
3.	அம்புஜத்தம்மாள்	–	சங்கரனின் தாயார்
4.	வெங்கி என்கிற வெங்கடேசன்	–	சுந்தரேச அய்யர் வீட்டுச் சமையற்காரர்
5.	அப்துல்லா	–	சுந்தரேசய்யர் குதிரை வண்டியோட்டி

2

6.	ஆசிரியர் இருதயசாமி	–	தொழிற்சங்கத் தலைவர்
7.	சாமிக்கண்ணு மேஸ்திரி	–	இருதய சாமியின் தகப்பனார்
8.	பெப்பின் பெர்னாண்டோ	–	இருதயசாமியின் ஞானகுரு பாதிரியார்

3

9.	ஒசேப்பு	–	தோல் பதனிடும் தொழிலாளி
10.	ஆசீர் என்கிற ஆசீர்வாதம்	–	ஒசேப்பின் தகப்பனார்
11.	ஏசுவடியாள்	–	ஒசேப்பின் தாயார்
12.	தாயம்மாள்	–	ஒசேப்பின் வளர்ப்புத்தாய்
13.	அருக்காணி	–	ஒசேப்பின் காதலி

4

14.	கணேசய்யர்	–	நகரசபைத்தலைவர்
15.	வக்கீல் பொன்னுச்சாமி நாயுடு	–	சுந்தரேசய்யரின் நண்பர்

16.	கண்ணன்	–	பொன்னுச்சாமி நாயுடுவின் மகன்
17.	சூடாமணி நாச்சியார்	–	பொன்னுச்சாமி நாயுடுவின் தாயார்
18.	கோதையம்மாள்	–	பொன்னுச்சாமி நாயுடுவின் மனைவி

5

19.	டாக்டர் சர்தார் பாய்	–	தேசிய முஸ்லீம் டாக்டர்
20.	நரசிம்ம பாரதி	–	தேசியவாதி தொழிற்சங்கவாதி
21.	தோழர் வேலாயுதம்	–	காங்கிரஸ் சோஷலிஸ்ட்
22.	வாட்ஸன்	–	ஆங்கிலோ இந்தியன் சப்–கலெக்டர்
23.	அனந்த சயனம்	–	கலெக்டர்
24.	சங்கரபாண்டியன்	–	சப்–ஜெயிலர்–தாசில்தார்
25.	அமலநாதன்	–	தாசில்தார்

7

26.	ஜஸ்டிஸ் ஜனார்த்தனம்	–	மாவட்ட நீதிபதி
27.	மாஜிஸ்திரேட் தேவ இரக்கம்	–	மாஜிஸ்திரேட்
28.	சுந்தரமூர்த்தி	–	மாஜிஸ்திரேட்
29.	சத்தியவாகீஸ்வரன்	–	அரசு வழக்குரைஞர்
30.	வக்கீல் சேதுராமன்	–	வேலாயுதத்தின் வக்கீல்

8

31.	ஹாஜியார் அஸன் ராவுத்தர்	–	தோல் ஷாப் முதலாளி
32.	முஸ்தாபா மீரான்	–	அஸன் ராவுத்தர் மைத்துனன்
33.	கனிபாய்	–	அஸன் ராவுத்தரின் கணக்கப்பிள்ளை

34.	கனிராவுத்தர்	–	சாமிக்கண்ணுவின் முதலாளி
35.	மம்முது	–	கனிராவுத்தரின் மச்சான்
36.	ஆயிஸா பீவி	–	கனிராவுத்தரின் மனைவி
37.	அப்துல்லா	–	மம்முதுவின் மகன்
38.	மக்தூன் மைதீன்	–	தோல் வர்த்தகர் சங்கச் செயலாளர்
39.	ஜமீன் நாராயண அய்யர்	–	சனாதன பிராமணன்
40.	வேத சிரோன்மணி	–	தோல் ஷாப்பு முதலாளி
41.	சுந்தரம் அய்யர்	–	அய்யர் தோல் ஷாப்பு முதலாளி
42.	வரதராஜ நாயுடு	–	நாயுடு தோல் ஷாப்பு முதலாளி
43.	சக்கல மகமது	–	பாரைப்பட்டி மிராசுதார்

9

44.	சுப்புணி என்கிற சுப்பிரமணி	–	ரெயில்வே ஸ்டேஷன் மாஸ்டர்
45.	ரெங்கக் கோனார்	–	பாயின்ட்ஸ்மேன்
46.	ஆனந்தன்	–	ரெயில்வே ஊழியர்
47.	வேலப்பன்	–	விவசாயிகள் சங்க ஊழியர்
48.	மாரப்பன்	–	விவசாயிகள் சங்க ஊழியர்

10

49.	தோழர் கந்தசாமி	–	தஞ்சை விவசாயிகள் சங்கத் தலைவர் சட்டமன்ற உறுப்பினர்
50.	சிவகாமியம்மாள்	–	கந்தசாமியின் மனைவி மாதர் சங்கத் தலைவி

11

51.	சகோதரர் தங்கசாமி	–	சாமியார் பள்ளியில் பயின்ற கிறிஸ்தவர்
52.	எட்வின் தாமஸ்	–	தங்கசாமியின் சகோதரர்
53.	பிலோமினாள்	–	தாமஸின் மனைவி
54.	நிக்கலாஸ்	–	தங்கசாமியின் தந்தை

12

55.	வெள்ளைத்துரை	–	போலீஸ் உதவி சூப்பிரண்ட்
56.	தேவசகாயம்	–	போலீஸ் உதவி சூப்பிரண்ட்
57.	பாலையன்	–	சப்–இன்ஸ்பெக்டர்
58.	தனசேகரன்	–	இன்ஸ்பெக்டர்
59.	தீச்சட்டிக் கோவிந்தன்	–	சப்–இன்ஸ்பெக்டர்
60.	சத்தியநேசன்	–	போலீஸ்
61.	இஸ்மாயில்	–	போலீஸ்
62.	ஞானமாணிக்கம்	–	போலீஸ்
63.	ஏசுவடியான்	–	சப்–இன்ஸ்பெக்டர்

13

64.	சின்னக்கிளி	–	முஸ்தாபா மீரானால் கற்பழிக்கப்பட்ட பெண்
65.	வெட்டியான் காக்கையன்	–	சின்னக்கிளியின் பாட்டனார்
66.	வனப்பேச்சி	–	காக்கையன் மனைவி
67.	துக்கையம்மாள்	–	சின்னக்கிளியின் தாயார்
68.	மாசானம்	–	நந்தவனப்பட்டிச் சேரி வாலிபன்
69.	ஆண்டிச்சாம்பான்	–	அருக்காணியின் தந்தை
70.	அல்லி	–	அருக்காணியின் தாயார்
71.	மூக்கன்	–	சாமிகொண்டாடி

72.	ராமாயி	–	மூக்கனின் மூத்தாள்
73.	முத்தாலம்மாள்	–	மூக்கனின் இரண்டாம் மனைவி
74.	பெரிய மூக்கன்	–	ஆதிச்சாமி கொண்டாடி
75.	ரெங்காத்தாள்	–	பெரிய மூக்கனின் மனைவி

14

76.	மனகாவலன் பிள்ளை	–	மிராசுதார் சனாதனி
77.	நாராயண மூர்த்தியாபிள்ளை	–	தொழில் அதிபர் ஆளும் கட்சிப்பிரமுகர்
78.	கழுவத்தேவன்	–	தோல் ஷாப்பு முதலாளிகளின் அடியாள்

15

79.	பஞ்சாங்கம்	–	பள்ளிக்கூட டிரில் மாஸ்டர்
80.	ராமானுஜ அய்யங்கார்	–	கார்ப்பரேஷன் பள்ளித் தலைமை ஆசிரியர்

16

81.	சந்தனத் தேவன்	–	தொழிற் சங்கத் தலைவராகப் பரிணமித்த அடியாள்
82.	முத்துப்பேச்சி	–	சந்தனத்தின் மனைவி
83.	விருமாயி	–	சந்தனத்தின் தாயார்
84.	சீயான்தேவர்	–	தேசியவாதி – முற்போக்காளர்

17

85.	சுப்பவாடன்	–	நகர சுத்தித் தொழிலாளி
86.	வீராயி	–	சுப்பவாடன் மனைவி
87.	ஆண்டாள்	–	சுப்பவாடனின் மகள்
88.	செல்லி	–	சுப்பவாடனின் சகோதரி

18

89.	பூச்சிநாயக்கன்	–	மலை விவசாயி
90.	சிட்டம்மாள்	–	பூச்சி நாயக்கனின் மனைவி

19

91.	செல்லமரைக்காயர்	–	சிறுகடைக்காரர்
92.	துண்டு பாய் என்கிற சவுக்கத்து அலி	–	நாடோடி வியாபாரி
93.	அசன் மகமது	–	மகமதியாபுரம் முஸ்லீம் பிரமுகர்
94.	மைதீன் குட்டி	–	மகமதியாபுரம் முஸ்லீம் பிரமுகர்

20

95.	அப்துல் ஜபார்	–	வாணியம்பாடி தோல் பதனிடும் தொழிற்சங்கத் தலைவர்
96.	கோதண்டராமன்	–	வட ஆற்காடு பீடித் தொழிலாளர் சங்கத் தலைவர்

21

97.	வேலுநாயக்கன்	–	துப்புரவு ஆய்வாளர்
98.	ஆதிநாதன்	–	நகர சபைக் கவுன்சிலர்

22

99.	அமலோற்பதம்	–	தோல் ஷாப்புத் தொழிலாளி
100.	பெஞ்சமின்	–	அமலோற்பதத்தின் கணவன்
101.	மினிசாமி	–	தோல் ஷாப்புத் தொழிலாளி
102.	பாதாளை	–	தோல் ஷாப்புத் தொழிலாளி
103.	மம்முதன்	–	தோல் ஷாப்புத் தொழிலாளி

104. அக்னீஸ்மேரி	–	தோல் ஷாப்புத் தொழிலாளி
105. மாடத்தி	–	தோல் ஷாப்புத் தொழிலாளி
106. பேச்சி	–	தோல் ஷாப்புத் தொழிலாளி
107. கசமாடன்	–	தோல் ஷாப்புத் தொழிலாளி
108. வீரணன்	–	தோல் ஷாப்புத் தொழிலாளி
109. சின்னப்பன்	–	தோல் ஷாப்புத் தொழிலாளி
110. சார்லஸ்	–	தோல் ஷாப்புத் தொழிலாளி
111. பேச்சியாத்தாள்	–	தோல் ஷாப்புத் தொழிலாளி

23

112. வீரபத்திர நாடார்	–	சுயமரியாதை இயக்கத் தலைவர்

24

113. அம்மாளு அம்மாள்	–	பெண் ஜெயில் வார்டர்

25

114. வடிவாம்பாள்	–	சங்கரனது காதலி
115. கோதை நாச்சியார்	–	வடிவாம்பாளின் தாயார்
116. அபரஞ்சி	–	வடிவாம்பாளின் மூதாதையர்

26

117. மிக்கேல் சாமி	–	கருங்காலி

பாகம் - 1

1

அந்தச் சம்பவம் காட்டுத் தீயைப் போன்று, அந்தப் பிரதேசம் முழுவதும் பரவிவிட்டது.

அந்த நகரத்தில் தோல் ஷாப்புத் தொழில் ஆரம்பிக்கப் பட்ட காலம் முதல் நடவாத சம்பவம். இதுநாள் வரையில் ஒரு பறையனுடைய கரம் எந்த ஒரு தோல் ஷாப்பு முதலாளியின் மீதும் பட்டது கிடையாது.

மதுரை ரஸ்தா ஹாஜியார் அஸன் ராவுத்தர் தோல் ஷாப்பில் வேலை செய்யும் ஆசீர் என்கிற ஆசீர்வாதச் சாம்பான் மகன் யோசேப்பு என்கிற ஓசேப்பு, முதலாளியின் மூன்றாம் குடியாள் யாசின் பீவியின் சகோதரன் முஸ்தாபா மீரான் பாயைச் சண்டாளமாகத் தாக்கியதோடு, விறு வட்டங் கட்டையால் அவனது கபாலத்தையே பிளந்து விட்டிருக்கிறான்.

அசாதாரணமாக நடைபெற்றிருக்கும் நிகழ்ச்சியைக் கேட்டதும், மதுரை ரஸ்தாவில் உள்ள தோல் ஷாப்புத் தொழிலாளர்கள், ஆண், பெண் அடங்கலும், நீரில் நனைந்துவிட்ட குருவிக் குஞ்சாக நடுங்கிக் கொண்டிருந்தார்கள் எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்கிற பீதி.

தான் உண்டு, தன் வேலையுண்டு என்று யாரிடமும் அதிகம் பேச்சுக் கொடுக்காமல் தன் பணியிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கும் அப்பாவியான ஓசேப்பு இப்படி ஒரு காரியத்தைச் செய்வான் என்று அவர்கள் எதிர் பார்க்கவே இல்லை.

"வேணாண்டோய், ஓசேப்பு வேணாம் பெரிய மொதலாளி பிசாசுப்பெய. ஒன்னையப் பதம் பாத்துப் பிடுவான்" என்று மேஸ்திரி ஞானப் பிரகாசம் எச்சரிக்கை செய்ததையும் பொருட்படுத்தாதமட்டில், ஓசேப்பு, சீற்றம் கொண்ட வேங்கையைப் போன்று முஸ்தாபா மீது பாய்ந்து, மதங்கொண்ட யானையாக முஸ்தாபாவை அலக்காகத் தூக்கி ஆகாயத்தில் சுழற்றி வீசியதோடு, சூரிக்கத்தியை வீசிக் கொண்டு அவனைத் தாக்க முஸ்தாபா வந்த போது விறுவட்டன் கட்டையால், அவனது கபாலத்தைப் பிளந்தவன், கோபம் தணியாமல் மீண்டும் தாக்கப் போனவனை முடிதள்ளும் பெண் அருக்காணி மட்டும் தடுத்திருக்காவிட்டால் அவன் குரல்வளையைக் கடித்து உதிரத்தையே குடித்திருப்பான்.

நிலமையின் சுடுமையை உணர்ந்த மேஸ்திரி.

"அல்லாரும் சும்மா இருக்கையிலே ஒனக்கு எதுக்குடா வம்பு. தோல் ஷாப்புவள்லே நடக்காத அலுவுசமா நடந்து போச்சுது. அவ என்ன ஒனக்குச் சொந்தமா சுருத்தா பொத்திக்கிட்டுச் சும்மா கெடக்காம" என்று நடந்த அநியாயத்தை நியாயப்படுத்த முற்பட்டபோது

"பெத்த மவளையே கூட்டிக்குடுத்துச் சம்பாத்தியம் பண்ணற பேமானி. ஒனக்கு எப்படி ரோஷம் வரும். பருந்து கோழிக்குஞ்சியத் தூக்கிட்டுப் போரதாட்டம், பச்சை மண்ணெ கதறக் கதற, சேலைய உறிஞ்சி தூக்கிட்டுப் போரான். பாத்திட்டு நிக்கச் சொல்லுதியா." என்று ஓசேப்பு எரிந்து விழுந்ததைக் கேட்டு விக்கித்துப் போன மேஸ்திரி வெறிகொண்ட மட்டில் நிற்கும் ஓசேப்பு தன்னையும் பீறிப் போடுவானோ என்று பயந்த மட்டில், சுண்ணாம்புக்குழி இருக்கும் பக்கமாக ஒதுங்கிக் கொண்டான்.

தோல் / 3

முஸ்தாபா மீரான் பேகம்பூரில் மகா வஸ்தாது. மஜ்லீஸ் அமைப்பின் தலைவரும் கூட மட்டுமல்லாமல், ஊரிலேயே செல்வாக்கு மிக்க முதலாளியின் மச்சான். பெரிய பள்ளிவாசலே அவர்களது ஆதிக்கத்தில் தான் இருக்கிறது. மேலும், முகமது அலி ஜின்னாவின் முஸ்லீம் லீக் கட்சியின் முக்கியப் பிரமுகர்களில் ஒருவன் என்பதால், பெரிய மனிதர்கள் எல்லாருக்கும் அவன் செல்லப் பிள்ளை. பேகம் பூர், மற்றும் மகமதியாபுரம் என்ன, எந்தப் பகுதியில் கலவரம் நடந்தாலும், கலவரத்தின் தலைமையில் முஸ்தாபா மீரானைப் பார்க்க முடியும். எனவே, அந்த வட்டாரத்தில் முடிசூடா மன்னனாக அலைந்தான். பெண் லோலனான முஸ்தாபா மகமதியாபுரத்தில், ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு கன்னிப் பெண்களை ஆசை வார்த்தை சொல்லிக் கெடுத்துப் போட்டான். ஒரு பெண் மானம் தாங்காமல் தூக்குப்போட்டுக் கொண்டாள். பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஜமாத்தில் புகார் கொடுத்தும் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. போலீசாரும், பெரிய வீட்டுக்காரரின் மைத்துனனாக இருப்பதால், நடவடிக்கை ஏதும் கைக் கொள்ளவில்லை.

இந்த நபர்தான் ஹாஜியார் அஸன் ராவுத்தரின் தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கான மேற்பார்வையாளர். தோல் ஷாப்புக்களில் எந்த ஒரு பெண்ணும் கண்ணுக்குப் பசுமையாகவும், புதுமையாகவும் இருந்துவிடக் கூடாது. அவனது காமாந்தகாரக் கண் எந்தப் பெண் மீது படுகிறதோ, அந்தப் பெண் அவனது இச்சையைப் பூர்த்தி செய்தாக வேண்டும். மறுத்தாலோ, அவன் மிருகமாகவே நடந்து கொள்வான். முறி எழுதிக் கொடுத்திருக்கும் அந்த அப்பாவி அடிமைகளால் எப்படி அவனை எதிர் கொள்ள முடியும். பெரும்பான்மையான தோல் ஷாப்புக்களிலும், இப்படிப்பட்ட அக்கிரம அநியாயம்தான் அரங்கேறிக் கொண்டிருக்கிறது. அன்றும் அஸன் பாயின் தோல் ஷாப்பிலும் அப்படித்தான் நடந்தது.

"அடி ஆத்தே இந்த அக்குருவத்தைக் கேக்க நாதியில்லையா? நேத்து ருசுவாயி வந்திருக்க பச்சை மண்ணெ, அம்மணமா ஆக்கிப் பருந்தாட்டமா தூக்கிட்டுப் போரானே முடிவான்"

என்கிற அஞ்சலைக் கிழவியின் அபயக்குறலைக் கேட்டுப் பதறிப் போய், கடுக்காய்க் குழியில் இருந்து ஓடி வந்த ஒசேப்பு அந்த அநியாயமான காட்சியைப் பார்த்து ஒரு கணம் என்ன செய்வது என்று அறியாமல் திகைத்துப் போய் நின்றான். சின்னக்கிளியின் கதறலையும், அலறலையும் கேட்டு, அங்கு கூடிவிட்ட ஆண்கள் அனைவரும் பதுமையாக நின்று விட்டனர். அடிமை விலங்கென்னும் உணர்வால் பீடிக்கப்பட்டுக் கரடு தட்டிப் போனவர்களாக நின்றார்கள்.

முஸ்தாபா தனது இடது கரத்தால், துடித்துக் கொண்டிருக்கும் அந்தப் பெண்ணைத் தூக்கிப் பிடித்த வண்ணம் அவர்களை ஏளனமாகப் பார்த்தான். அவனால் நிர்வாணப் படுத்தப்பட்ட சின்னக்கிளி, வேடன் கையில் சிக்கிய பறவையாகத் துடித்துக் கொண்டிருந்தாள். பிறகு, தனது இச்சையைப் பூர்த்தி செய்யும் முகத்தான், அவளைத் தூக்கிக் கொண்டு, தோல் ஷாப்பு ஸ்டோர் ரூமுக்குள் புகுந்து கதவைச் சாத்திக் கொண்டான். அந்த இளம் பிள்ளையின் கதறல் மட்டும் ஏகாந்தமாக அந்தப் பிரதேசத்தில் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

சின்னக்கிளி என்றால், அந்தத் தோல் ஷாப்பில் பணிபுரியும் அத்தனை பேருக்கும் மகாப் பிரியம். இளம் மஞ்சள் கலந்த மாந்தளிர் மேனி. சிட்டுக்குருவியைப் போன்ற உடற்கட்டு. கண்களில் மறைந்து கிடக்கும் மோகனம். யாரையும், எப்போதும் பகைத்துக் கொள்ளாமல், எந்த வேலை சொன்னாலும் தட்டாமல் செய்யும் சுபாவம். துன்பத்தையும் சோகத்தையும் எடுத்தெறிந்து சதா சிரிப்பும், கும்மாளமாக அலையும் வெடலைச் சூட்டிக்கை. சொல்லப்போனால், சோகமும் துக்கமும் நிறைந்த வாழ்க்கைச் சுமையால் அவதிப்படும் தோல் ஷாப்புத் தொழிலாளர் மத்தியில் சின்னக்கிளி ஒரு பூனைக் குருவியைப் போல் அலைந்தாள். உடன் பிறந்த சகோதர சகோதரிகள் இல்லாமல் ஏக்கம் கொண்ட ஒசேப்பு சின்னக்கிளியைத் தனது உடன் பிறந்த சகோதரியாகவே நேசித்தான். முஸ்தாபா, சின்னக் கிளியைத் தூக்கிக் கொண்டு போனதைப் பார்த்த ஒசேப்பு பதறிப் போனான்.

"ஸ்டோர்" ரூமிலிருந்து எழும் அவளது கதறல், அவனது இதயச் சுவர்களை வெட்டிக் கூறு போடுவது போல் வேதனை. பேசா மடந்தைகளாட்டம் ஊமைகளாக நிற்கும் ஆண்களைப் பார்த்தபோது அவர்களையே பீறிப் போட வேண்டும் என்கிற எரிச்சல்

அவனால், என்ன செய்வது என்று தெரியவில்லை. கணப்போது, ஸ்தம்பித்துப் போய் நின்ற ஓசேப்புக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. மேஸ்திரியும், மற்றவர்களும் தடுத்ததையும் பொருட்படுத்தாமல், வெறி கொண்ட மட்டில், ஸ்டோர் ரூம் கதவை மோதினான். கதவு இரண்டாகப் பிளந்து விழுந்தது. முகட்டு ஓடுகள் சரிந்து விழுந்தன.

மின்னல் வேகத்தில் அறைக்குள் புகுந்த ஓசேப்பு, முஸ்தாபாவை அலக்காகத் தூக்கி வெளியே வீசினான். நரசிம்மமூர்த்தியாக நின்ற ஓசேப்பின் தாக்குதலால் நிலை குலைந்து போன முஸ்தாபா ஓநாயாக ஊளையிட்டான். காலம் காலமாக அடிமைப்பட்டுக் கிடந்த கொத்தடிமையின் சீற்றத்தின் மொத்த உருவமாக நிற்கும் ஓசேப்பின் மீது, மாமிச மலையாகத் தோன்றும் முஸ்தாபா, இடுப்பில் இருந்த சூரிக்கத்தியை வீசிக் கொண்டு, தாக்கப் பாய்ந்த போது, கோலியாத்தைத் தாவீது வீழ்த்தியது போல் திரும்பவும் தூக்கித் தரையில் அடித்தான். மேலும் அவன் தாக்க முற்பட்ட போது, அருகில் கிடந்த விறுவட்டன் கட்டையால் அவனது கபாலத்தைப் பிளந்த போது 'அரே! அல்லா' என்று இறைவனுக்குள் அடக்கமாகி விட்டதேபோல் அலறிய முஸ்தாபா மயங்கிச் சாய்ந்தான். மீண்டும் ஓசேப்பு அவனைத் தாக்க முனைந்த போது, ஓடோடி வந்த அருக்காணி தடுக்கவும், தடியைக் கீழே போட்டவன் கோபம் தணியாமல் பெருமூச்சு விட்ட வண்ணம் நின்றிருந்தான்.

மயங்கிக் கிடந்த முஸ்தாபா மீரானை ஏஜண்டுகளும், மேஸ்திரிகளும், அவன் சவாரி செய்து கொண்டு வந்திருந்த ரேக்ளா வண்டியில் கொண்டு ஏற்றிக் கொண்டிருந்தனர்.

நிர்வாண கோலத்தில் குற்றுயிரும் கொலையுயிருமாக உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த சின்னக் கிளியைப் பூச்சி நாயக்கன் பட்டி மினிசாமி தூக்கி வந்து ஸ்டோர் ரூமுக்கு வெளியே போட்டான்.

அந்தப் பெண்ணின் பரிதாபக் கோலத்தைப் பார்த்த பெண்கள் கதறி அழுதனர்.

அந்தப் பெண்ணின் யோனி பிளந்து உதிரம் பெருக்கெடுத்துக் கொண்டிருந்தது. தாமரை மொட்டுக்கள் போன்ற மார்பகங்கள் கடித்துக் குதறப்பட்டுச் சிதைந்து போயிருந்தன. அஞ்சலைக் கிழவி தனது மாராப்புச் சேலையைக் கிழித்து அவளது மானத்தை மறைத்தாள்.

"சரி, சரி கூட்டம் போடாதீய. அவளை டோலி கட்டி ஆஸ்பத்திரிக்குத் தூக்கிட்டுப் போவ வேண்டியது தான். பொம்பளைக அல்லாம் ஒப்பாரி வைக்காம அவ அவளுக வேலையைப் பார்க்கப் போங்கடீ. ஏதோ நடக்காத வெசயம். அலுவுசமா நடந்திட்ட மாதிரில்லா ஒப்பாரி வைக்காளுவ. மொதலாளி வந்தாருண்ணா அம்புட்டுப் பேரோடவும் சீட்டைக் கிழிச்சுப் போடுவாரு" என்று ஏஜண்ட் ஒருவன் கூடி நின்ற ஆண்களையும் பெண்களையும் பார்த்து அதட்டிய போது, கூட்டத்தில் நின்ற பெண் ஒருத்தி

"இந்தாய்யா, எரிச்சலைக் கிளப்பாதே, நாங்களே நொந்து போயி வெந்து போயி நிக்கம். பொச்சை மூடிட்டுப் போவயா. போக்கிரிப் பயலுக்கு ஏண்டுக்கிட்டுப் பேச வந்திட்டான்" என்று எகிறிய போது மௌனமாக வேறு பக்கம் போனான்.

அருக்காணி மட்டும் ஒசேப்பைக் கையைப் பிடித்து மறைவான இடத்துக்குக் கூட்டிப் போனாள்

2

அந்த துக்ககரமான சம்பவத்துக்குப் பிறகு அஸன் ராவுத்தர் தோல் ஷாப்பில் வேலை ஏதும் நடக்கவில்லை. ஒவ்வொரு தொழிலாளியும் பிரம்மை பிடித்தது போல் நின்றனர்.

சுண்ணாம்புக் குழியினின்றும், கடுக்காய்க் கிடங்கிலும், தோல்களை மாற்றிப் போடாமல் கோவணத்தோடு அரை நிர்வாணமாக வெளியேறிய ஆண்கள் முழுமையாகப் பீதியால் பீடிக்கப் பட்டவர்களாய் நின்றனர்.

தோல் ஷாப்பு முதலாளி ஒருவன் தாக்கப்பட்டதால், முதலாளிகளின் ஏவல் நாய்களாக வளர்க்கப்படும் அடியாட்கள் தோல் ஷாப்புக்குள் புயலாகப் புகுவார்கள். பிறகு கண் மண் தெரியாமல் கையில் கிடைப்பவர்களையும், கண்ணில் தென்படுபவர்களையும் நையப் புடைப்பார்கள் என்னவென்று யாராலும் கேட்க முடியாது. சில சமயம் நகரப் போலீசும் வரவழைக்கப்பட்டுத் தடியடிக்கும் ஆளாக வேண்டி வரும் மிருகத்தை வசக்குவது போல், அடிமைகளான தோல் ஷாப்புக் கூலிகளைப் பீதியிலேயே முதலாளிகள் வைத்திருந்தனர். அடியும் உதையும் கொடுமையும் தோல் ஷாப்பில் மாமூல்.

முடி தள்ளும் பெண்களும், உப்பும் கடுக்காயும் இடிக்கும் சக்கிலியப் பெண்களும், தங்களது பணிகளை விட்டுவிட்டுக் கூடிக்கூடி நின்று தங்களுக்குள்ளேயே ரகஸ்யமாகக் குசு குசுத்துக் கொண்டனர். தோல் ஷாப்புச் சுவர்களுக்குக் கூட கண்ணும் காதும் இருப்பது போல் அவர்களுக்குப் பீதி அடியாட்களின் தாக்குதலுக்கும், தூஷணத்துக்கும் எத்தனை பெண்கள் பலியாகப் போகிறார்களோ என்று அவர்களுக்குள் இனம் தெரியாத

பீதி. அக்கிரமியும், பெண் லோலனுமான முஸ்தாபா, தாக்கப்பட்டு, மண்டை பிளக்கப்பட்டது ஒவ்வொரு பெண்ணுக்கும் உள்ளூற சந்தோஷம். நீண்ட காலமாக அவர்கள் தங்களது நெஞ்சுக்குழிக்குள் ஒளித்து வைத்திருந்த குரோதத்துக்குப் பழிவாங்கிவிட்ட உணர்வு. வெளிப்படையாக மட்டும் அந்த உணர்வையும், மன உறுத்தலையும் அவர்களால் பேசமுடியவில்லை. அதேபோலக் கற்பழிக்கப்பட்டு, உயிருக்குப் போராடும் நிலையில், பெரிய ஆஸ்பத்திரிக்கு எடுத்துப் போகப்பட்டிருக்கும் சின்னக் கிளிக்காக அவர்கள் மிகவும் துக்கித்துப் போனார்கள். தங்களுக்குள்ளேயே புழுங்கி அழுது கொண்டார்கள். நபுஞ்சகனைப் போல் அவர்களால் துக்கித்து அழத்தான் முடியும்.

அப்போது நனைவுக்குழியில் மாட்டுத் தோலை மாற்றிப் போட்டுவிட்டுக் கோவணத்தோடு கரை ஏறிய வெங்கடேசன் கன்னக் கதுப்புகளில் பத்திரமாக அதக்கி வைத்திருந்த கிறுக்கன் புகையிலைக் கலவையை இடது கரத்தில் உமிழ்ந்து, கரையோரம் வைத்த வண்ணம் "அந்த வேசை மவனைப் பத்தித்தான் அம்புட்டுப் பேரும் அறிஞ்ச சங்கதி தானே, அவம் கண்ணுக்குப் பசப்பா ஒரு பொம்பளை தெரிஞ்சிரப்படாதே. கல்லுலே சேலையச் சுத்தி வெச்சாக் கூட வெலக்கிட்டுப் பாக்கிற பேமானி எந்தப் பொம்பளைய உட்டு வச்சான்."

"அந்தப் புள்ளெய அவம் என்ன எழவும் பண்ணிட்டுப் போரான்னு உட்டுர வேண்டியது தானே. ஆசீர் மச்சான் மவனுக்கு இந்த வம்பெதுக்கு. வம்பெ வெலக்கி வாங்கிப் போட்டானே பாவி மவன். பெரிய ராவுத்தன் அம்மளை அல்லாம் சேத்துல்லா பழி வாங்கப் போரான்" என்று பக்கத்துப் பட்டைக் குழியில், பதப்படுத்தக் கிடக்கும் ஆட்டுத் தோலைக் காலால் மிதித்துச் சமன் செய்து கொண்டிருந்த மாயவனிடம் அங்கலாய்த்தவன் போயிலைக் கட்டையை எடுத்துத் திரும்பவும் அதக்கிக் கொண்டான். திரும்பவும் சுண்ணாம்புக் குழியில் இறங்க வேண்டும்; வெந்து கொண்டிருக்கும் தோல்களை ஏற்றிக் கரையில் வைத்துவிட்டுத் தண்ணீரை மாற்றி மட்டியை

வெளியேற்றுவதற்குள் உயிரே போய்விடும். எனவே, சுண்ணாம்புக் குழிக்குள் இறங்குவதா வேண்டாமா என்கிற தயக்கத்தோடு வெங்கடேசன் நின்ற போது

"ஆமா, பொட்டச்சியாட்டம் பொறணி மட்டும் பேச வந்திடு. நீயெல்லாம் ஆம்பிளேன்டு இருக்கே பாரு. ஆசீர் மச்சாம் மவன் ஓசேப்பு இந்த ஷாப்புலேயும் ஆம்புளப்பிள்ளெ இருக்கேண்டு காட்டிப் போட்டான்; எத்தனை காலத்துக்குத் தான் இந்த ரோதனையைத் தாங்கிட்டு இருக்கது" என்று மனைவி மாடத்தி சொன்ன போது, அவளிடம் பேச்சுக் கொடுத்து மாட்டிக் கொள்ளக் கூடாது என்கிற விவேகத்தாலோ என்னமோ முறைக்காத குறையாக அவளை ஒரு மாதிரியாகப் பார்த்தவன்,

"ஆமா, இந்தச் சுண்ணாம்புக் குழியே என் சீவன்ல, பாதியத் திண்டு போட்டது, அவன்கிட்டே போயி வீரம் பேசச் சொல்லுதை" என்று தனக்குள்ளேயே கறுவிய வண்ணம், பீடி குடிப்பதற்காக மறைவிடம் தேடி, கிந்திக் கிந்தி வலிப்பு வந்தவன் போல நடந்து போனான். கால் உடைந்து போன கோழிக்குஞ்சைப் போல் நடந்து போகும் வெங்கடேசனைப் பார்த்தபோது மாடத்திக்கு அவன்பால், பரிதாபமும், பச்சாதாபமும் ஏற்பட்டது.

உண்மையில் தோல் ஷாப்பின் சுண்ணாம்புக் குழி வேலை அவனது திடகாத்திரமான உடற்கட்டில் பாதியை மென்று விழுங்கி விட்டிருந்தது. நாள் முழுவதும், சுண்ணாம்புக்கலவை கலந்த நீரில், நாற்றம் பிடித்த நிணவாடை வீசும் மாட்டுத் தோலையும் ஆட்டுத் தோலையும் போட்டு அலசுவதாலும், மிதித்துச் சவட்டுவதாலும், பாதங்களும், கரங்களின் உட்பகுதியும் வெந்து ரணமாகிக் காய்த்துப் போய்விட்டன. பாதங்களில் விப்பும் விரிவும் ஏற்பட்டு நடப்பதற்கே சிரமம். அதிலும், புதிதாகச் சுண்ணாம்புக் கலவையைக் குழியில் கலக்கிக் கொண்டு, தோல்களை அலசும் போது அவனை அறியாமலே மூச்சுத் திணறும், உடல் முழுவதும் வியர்த்துக் கொட்டி ஆயாசம் ஏற்படும். சுண்ணாம்பு ரசாயனத்தின் வேகத்தில் ரோமகால்கள் அத்தனையும் கருகிப் போய்ப் பார்ப்பதற்கு

அவலட்சணமாகப்படும். இப்போது, அவன் சலித்துக் கொண்டது போல் அரை மனிதனாகிப் போனான்.

வெங்கடேசன், நடை பழகும் குழந்தையைப் போல் நடந்து போனதைப் பார்த்த போது, மாடத்திக்கு வெங்கடேசனைப் பற்றிய இளமைக்கால நினைவு துளிர்த்தது. வெங்கடேசன் திடகாத்திரமான வாலிபனாக இருந்த போதும், காலம் காலமாக அடிமைப்பட்டுக் கிடந்த சேரியில் பிறந்ததாலோ என்னமோ வெங்கடேசன் பயந்தாங் கொள்ளியாக இருந்தான். உரக்கக் கூடப் பேசமாட்டான். ஆனால் மாடாக மட்டும் வேலை செய்யத் தெரியும்.

மாடத்தியோவெனில் அவனுக்கு நேர் எதிர் மாறான ஒருவிதமான முசுடுக்குணம் கொண்டவள். தராதரம் பார்க்காமல் கூடப் பேசிவிடுவாள். மாடத்தி என்றால் சேரி வாலிபர்களுக்குக் கூட பயம்.

மாடத்தி கருப்பி என்ற போதிலும் தாடிக் கொம்பு அழகர் கோவில் சிலைகளைப் போன்ற வடிவழகு. வெற்றிலைச் சிவப்புக் கலந்த கனத்துத் தடித்த உதடுகளும், பேசத்துடிக்கும் நயனங்களும், தீபாவளி வெடி வெடித்தாற் போன்று வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று பேசும் அவளது தெறித்த பேச்சும், மாடத்திக்கு என்று தனி அழகு சேர்த்திருந்தது.

வெங்கடேசன் முறை மாப்பிள்ளை என்றதால் பெற்றோர்கள் அவனுக்குக் கட்டி வைத்து விட்டார்கள். வெங்கடேசன் ஒரு வகையில் கூதரையாக இருப்பினும், அவன் மீது மாடத்திக்கு அளவு கடந்த பிரியம். அவனது கோணங்கித்தனமான நடத்தையால் அளவுக்கு மிஞ்சிய கோபம் ஏற்பட்டால் அவனை இழுத்துப் போட்டு நையப் புடைத்தாலும், அவன் மாடத்தி மீது கோபமே காட்டியதில்லை. எனவே அவளுக்கு அவன் பால் ஆழமான பாசம். மாடத்தி வெங்கடேசன் அல்லாமல் வேறு யாருக்கும் முந்தி விரிச்சது கிடையாது. அவளது வஞ்சகமற்ற பேச்சும், கல்மிஷமில்லாமல் பழகும் சுபாவமும் அவளைக் காமாந்தகார ஆண்களால் வேறு விதமாகப் பார்க்க வைத்தது ஆனால், அவளிடம் எந்த ஆம்பிளையும் அட்டம் சுழிக்க முடியாது.

அஸன் ராவுத்தர் தோல் ஷாப்பில் கணவன் வெங்கடேசனுடன், முடி தள்ளும் கூலியாகக் சேர்ந்தபோது கிராமத்துப் பெண்ணுக்குரிய திடகாத்திரமான தேகக்கட்டும், அவளது மதர்த்த மார்பகங்களையும், பார்த்த மாத்திரத்திலேயே பெண் லோலனான முஸ்தாபாவுக்கு அவள் பால் அடங்காத இச்சை ஏற்பட்டுப் போனது. ஒரு வார காலமாகச் செக்கு மாடு மாதிரி, பலவிதமான சாக்குகளும், சாடைகளுமாக அவளையே சுற்றி வந்து பார்த்தான். அவளை அவனால் வசியம் செய்ய முடியவில்லை.

கடைசியில் தனது கைபாணமான பேச்சியின் மூலம் தூதனுப்பித் தனது ஆசையை முஸ்தாபா வெளிப்படுத்திய போது மாடத்தி பதறிப் போனாள். மகா போக்கிரியான முஸ்தாபா மட்டும் தனது இச்சை நிறைவேற்றப்படாவிட்டால், சண்டாளத்தனமாக ஏதும் செய்வான் என்பது மட்டும் உறுதி. சம்மதத்தைத் தெரிவிக்க பேச்சி அவளுக்கு ஒரு வார கால அவகாசம் கொடுத்திருந்தாள்.

அப்பாவியும், பயந்த சுபாவமும் கொண்ட கணவன் வெங்கடேசனிடமும் சொல்வதற்குத் தயக்கம். அல்லாமலும் இரண்டாம் பேருக்குத் தெரிந்தாலே அசிங்கமான அவலெட்சணமான சேதி வெளியே வந்தால் அவளது மானமே போய்விடும். பேச்சியும், மாடத்தி முஸ்தாபாவின் ஆசைக்கு இணங்கப் போகும் விஷயத்தை யாரிடமும் சொல்லாமல், ரகஸ்யம் காப்பதாக உறுதியும் கொடுத்திருக்கிறாள். இப்படியான உறுதி மொழி சொல்லி அவள் பல பெண்களைக் கெடுத்திருக்கிறாள். முஸ்தாபாவுக்குக் கூட்டிக் கொடுத்திருக்கிறாள்.

பேச்சிக்குப் பூர்வீகம் என்று ஒன்றும் கிடையாது. எங்கிருந்தோ அத்தலைஞ்சு வந்தவள் ஹாஜியார் தோல் ஷாப்பில் சேர்ந்த போது முஸ்தபாவுடன் ஒட்டிக் கொண்டாள். இது பரியந்தம் நான்கு கணவர்களைச் சட்டை சேலை மாற்றிக் கொள்வது போல் மாற்றிக் கொண்டிருக்கிறாள். அவளுக்குப் பிறந்த பையன் சம்மந்தம், அசல் முஸ்தபாவை அச்சடித்த மாதிரி யாராவது கேட்டால்

"ஆமாடீ! நான் முஸ்தாப்பா பாய்க்குத்தான் புள்ளெ பெத்திருக்கேன். செடிய மூடிட்டுச் சும்மாருங்கடீ, அவுசாரி முண்டைகளா" என்று எடுத்தெறிந்து பேசுபவளிடம் எந்த மானமுள்ள பெண்தான் பேச்சுக் கொடுக்க முடியும். அப்படியாகப் பட்ட அவுசாரி முண்டை. எனவே, எந்த ஒரு தோல் ஷாப்புப் பெண்ணும் பேச்சியை வெளிப்படையாகப் பகைத்துக் கொள்வது கிடையாது. மாடத்தியிடம், அவள் முஸ்தாப்பாவின் ஆசையை வெளியிட்ட போது தன் ஜீவனே போய்விட்டது போல் பதறிப் போன மாடத்தி என்ன செய்வது என்று புரியாமல், பித்துப் பிடித்தவள் போல் அலைந்தாள். பலநாள் நித்திரை கொள்ள முடியவில்லை. கடைசியில், மானத்தை இழப்பதையும் விட அவனுடன் போராடி மாய்வதென்ற முடிவுக்கு வந்த மாடத்தி, பேச்சியிடம், முஸ்தாபாவின் ஆசைக்கும், ஆணைக்கும் இடம் கொடுப்பதாக ஒப்புக் கொண்டாள், ஆனால் தோல் ஷாப்பில் சந்திப்பு நடைபெற்றால், எல்லோருக்கும் தெரிந்து அசிங்கமாகிப் போகும். பைத்தியக்காரனான வெங்கடேசனும், அவளைத் தீர்த்து விடுவதற்கான வாய்ப்பும் இருப்பதால்,

"அம்ம, மலைக்கோட்டை ஓதச்சாமி கோயில் கொகைப் பக்கம், சாலிக் காட்டுக்கு வரச் சொல்லு. நான், மொதலாளிக்காண்டி காத்திட்டிருப்பேன்" என்று தூதுவச்சியிடம் குரலில் ஏற்படும் நடுக்கத்தையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் சொல்லி வைத்தாள். பேச்சிக்கு மகா சந்தோஷம்.

அன்று அது ஒரு வெள்ளிக்கிழமை. முஸ்தாபா மீரான் பெரிய பள்ளி வாசலில் தனது மாலை வேளைத் தொழுகையை முடித்துக் கொண்டு, தனது உற்சாகமான சம்போகத்தை அனுபவிப்பதற்காகத் தனது தளவாடங்களுடன் மலைக் கோட்டை ஓதச் சாமியார் கோவில் சாலிக் காட்டைப் பார்த்துப் போனான்.

எந்தப் பெண்ணை அனுபவிப்பதானாலும், மதுவும், மாமிசமும் இல்லாமல், மாதர் சேர்க்கை இல்லை என்ற கல்யாண குணம் கொண்ட முஸ்தாபா, நாயக்கர் கடை பிரியாணியும், மேல் நாட்டு மதுவையும் மறக்காமல் எடுத்துக் கொண்டு போனான்.

மாடத்தி மட்டும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு, அந்தக் கயவனின் வரவுக்காகக் காத்திருந்தாள்.

மலையோரம், இருட்டுக் கவிந்து கொண்டிருந்ததால், இருளின் வருகையை வரவேற்பது போல் சில் வண்டுகளின் ரீங்காரம் மட்டும் ஒலித்துக் கொண்டிருந்தது. மழை வருவதற்கான அறிகுறியாக ஒரு வித ஊதைக் காற்று மட்டும் விட்டுவிட்டு வீசிக் கொண்டிருந்தது.

சாலிமரக் காட்டில் இருள் சூழத் தொடங்கிய நேரத்தில் முஸ்தாபா சீதையைக் கவர்ந்து போகவரும் ராவணனாகச் சாலி மரக் காட்டில் நுழைந்தான். யானை வரும் பின்னை, மணி ஓசை வரும் முன்னே என்பது போல், முஸ்தாபாவின் வருகையை அவன் பூசியிருக்கும் அரேபிய நாட்டுச் சென்டின் நெடி அந்தப் பிராந்தியத்தையே வியாபிதமாகிக் கிடந்தது. அந்த நெடி பட்ட போது மாடத்திக்கு வாந்தி வருவது போல் இருந்தது.

என்னதான் மனதுள் தைரியத்தை ஏற்படுத்திக் கொண்ட போதும், தான் ஒரு பெண் என்கிற தாழ்வு உணர்வு அவளது உள்ளத்தை நெருடிக் கொண்டிருந்தது. எப்படியும், உயிர் போனாலும் சரி, அவனது இச்சைக்கு மட்டும் இடம் கொடுக்கக் கூடாது என்கிற திட உந்துதல், அதனடியாகப் பிறந்திருக்கும் உறுதி.

மாடத்தியைக் கண்டதும் மகிழ்ச்சியில் ஆழ்ந்துபோன முஸ்தாபா, முட்டையிடப் போகும் பெட்டைக் கோழி கேருவது போல் சிரித்தான் பிறகு, பிரியாணிப் பொட்டலத்தை அவிழ்த்து அவள் முன் வைத்தான். மதுப் பாட்டிலை உடைத்து, ஊற்றிக் கொண்டான்.

"சுதி ஏத்தினாத்தான் புள்ளெ சொவம் இருக்கும்" சொல்லிக் கொண்டான்.

அவள் மட்டும் ஒன்றும் பேசாமல் மௌனமாக உட்கார்ந்திருந்தாள்.

மதுவின் போதையால் தலை கிறங்கவும் பிரியாணியை எடுத்து அவளுக்கு ஊட்டப் போனான். அவன் ஸ்பரிசம் பட்டதும், மின்சாரம் தாக்கியது போல் பதறி எழுந்ததும் அவளது கையைப் பிடித்தான்.

"ஒக்காருளா. புதுசுலே கூச்சமாத்தான் இருக்கும். பழவிப் போவும்ளா. பிராந்தி கூட குடிக்கப் பழவிக்கோ" அவளை நிர்வாண கோலத்தில் பார்க்க மாராப்புச் சேலையை உருவினான்.

அவன், ஸ்பரிசம் பட்டதுதான் தாமதும் "வேச மவனே!" என்று குரல் எழுப்பியமட்டில், அவனது டர்க்கிக் குஞ்சம் போட்ட குல்லாவைத் தட்டி விட்டாள் அவனது மொட்டைத் தலையை இரு கரங்களாலும் பிடித்து சுழுத்தை வளைத்துத் தனது திடமிக்க தொடைகளுக்கு மத்தியில் வைத்து அழுத்தினாள் அவன் திணறினான்.

முஸ்தாபா திமிறிவிடக் கூடாது என்பதற்காக, அவளை அறியாமலேயே, வெட்டப்பட்ட ஆட்டுக்கிடாயைப் போன்று துடிதுடித்து நின்ற முஸ்தாபாவின் ஆண்குறியையும், வெதர்களையும், தனது கரங்களால் பலம் கொண்ட மட்டும் அழுத்தலானாள்

"அரே! அல்லா நான் செத்தேன்" என்று முஸ்தாபா மீரான், சாலிக்காடே எதிரொலிக்கும்படி கத்தவும், பிடியை விட்டாள்.

முஸ்தாபா, அரை மயக்கத்தில் தரையில் சாய்ந்தான்.

"ஏண்டா சாண்டக்குடிக்கி," என்று கோபம் தாளாமல் தூஷணமாகக் கத்தினாள். பாதங்களால் அவனது முகத்திலும் தலையிலும் மாறி மாறி தொழி மிதிப்பது போல் மிதித்தாள்.

"அல்லா! அல்லா!" என்று ஆண்டவனை அபயத்துக்கு அழைத்தான்.

"மாடத்தி, என்னைய உட்டிரு சாமி" என்று கரங்களைத் தூக்கிக் கும்பிட்ட வண்ணம் கெஞ்சினான். அவனது, கண் முழிகள் பிதுங்கி மூச்சுத் திணறியது.

சீற்றம் கொண்ட பத்திரகாளியாக நின்றவள் "ஏண்டா, பொட்டச்சிண்டா அம்புட்டு எளக்காரமோ? பறச்சி, சச்சிலிச் சிண்டா நீங்க கையப் புடிச்சா படுத்துக்கணமோ பல பட்டறப் பைய" என்றவள் திரும்பவும் அவனது கன்னங்களைக் காலால் எகிறினாள்.

"பொளச்சுப் போ. இதை வெளியே சொன்ன பொம்பள கவட்டுக்குள்ளே திண்டாடுன பயண்டு காறித்துப்புவாங்க. எங்கிட்டே இனி வச்சுக்கிட்டே அங்கேயே ஒன்னெ வெரட்டி வெரட்டி அடிப்பேண்டா, தேவடியாளுக்குப் பொறந்த பயலே" என்றவள் திரும்பிக் கூடப் பார்க்காமல் புயலாக ஊரை நோக்கிப் போனாள்.

அதற்குப் பிறகு மாடத்தி காற்றுப்படும் இடத்தில் கூட முஸ்தாபா நிற்க மாட்டான். ஆனால் அவனது பெண் லோலத்தனம் மட்டும் நிற்கவில்லை.

பழைய சம்பவத்தை நினைத்துப் பார்த்த மாடத்தி

"அண்ணைக்கே நா, அவன் கழுத்தை நெறிச்சுக் கொண்ணிருக்கணம்" தனக்குள்ளேயே மறுகிக் கொண்ட மாடத்தி, உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கும் சின்னக் கிளியைப் பார்க்கப் போனாள்.

மினிசாமியும், பாதாளையும், சின்னக்கிளியைத் தொட்டிக் கட்டி பெரிய ஆஸ்பத்திரிக்கு டோலியாகத் தூக்கிக் கொண்டு ஓடினார்கள்.

இதற்குள் பெரிய முதலாளி அஸன் ராவுத்தரிடமிருந்து தகவல் வரவே, தோல் ஷாப்பின் முன் கேட்டுகள் இரண்டும் அடைக்கப்பட்டுப் பூட்டப்பட்டன. எந்த ஒரு தொழிலாளியும் தோல் ஷாப்பை விட்டு வெளியே போகக் கூடாது என்று உத்தரவு. வெளியே இருந்தும் யாரும் தோல் ஷாப்புக்குள் வராமல் இருக்க வாசல் ஓரம் பலத்த பாதுகாவல்.

மேஸ்திரி ஞானப்பிரகாசம் ஒவ்வொரு தொழிலாளியையும் கண்காணித்த வண்ணம் ஷாப்பில் ரோந்து வந்து கொண்டிருந்தான்.

பெரிய முதலாளியின் விசாரணைக்குப் பிறகுதான் அவர்கள் விடுவிக்கப்படுவார்கள். வெளியே போகமுடியும்.

ஒவ்வொரு தொழிலாளியும் நெஞ்சில் பீதியைத் தேக்கிய வண்ணம் மௌனமாக நின்றார்கள்.

●

3

நல்ல வேளையாக தோல் ஷாப்பின் கேட்டுக்கள் அடைக்கப் பட்டுப் பூட்டுப் போடுவதற்கு முன்பாகவே ஓசேப்பும் அருக்காணியும் அஸன் ராவுத்தர் ஷாப்பைவிட்டு வெளியேறி விட்டார்கள்.

மேஸ்திரி ஞானப் பிரகாசம் மட்டும் பார்த்திருப்பானேயானால், முதலாளிகளின் கையாட்கள் மூலம் ஓசேப்பை நையப் புடைத்துக்கட்டிப் போட்டிருப்பான்.

மாடத்தி மட்டும் சுதாரித்துக் கொண்டு எச்சரிக்கை பண்ணவில்லையானால் அருக்காணிக்கு அந்த யோசனை கூடத் தோன்றியிருக்காது.

"அருக்காணி கூதரை, பிரம்ம புடிச்சது ஆட்டம் நிக்காதடி, ஓசேப்பை உப்ப, இந்தத் தோல் ஷாப்பிலேருந்து கூட்டிட்டுப் போயி எங்காச்சும் கண்காணாச் சீமைக்கு அனுப்பிச்சுப் போடு, இல்லாங்காட்டியும் பெரிய மொதலாளி துப்பாக்கியோட தாண்டி வருவான். ஓசேப்பைச்சுட்டுப் பொசுக்கிப் போடுவான்.

ஒம் மச்சான் மம்முதனைக் கொண்ட தாட்டம் கொண்டு போட்டுட்டு நானுமில்லே எடுப்பாருமில்லேண்டு பூடுவான். எலும்பைக் கூடக் காட்ட மாட்டான். நீத்துப் போவ வச்சிருவான்" என்று சொன்னவள் தனது முந்தானையில் முடிந்து வைத்திருந்த சில்லறையையும் ரூபாயையும் எடுத்துக் கொடுத்த போது சீற்றம் கொண்ட மட்டில் நின்ற ஓசேப்பை, ஹாஜியார் தோல் ஷாப்புக்கு வெளியே கூட்டிக் கொண்டு வந்துவிட்டாள்.

தோல் ஷாப்பில் காவலுக்கு நின்ற நாய்கள் குரைப்பதைக் கூட பொருட்படுத்தாமல், ஓட்டமும்

நடையுமாக ஓசேப்பை இழுத்துக் கொண்டு, சிறுமலைக்குப் போகும் ஒத்தையடிப் பாதையை ஒட்டி இருக்கும் சௌராஷ்டிரா நந்தவனம் பெரிய கிணற்று மறைவுக்குக் கூட்டி வந்தாள்.

ஓசேப்போ ஒன்றும் புரியாத மட்டில் கிணற்றுப் பட்டியல் கல்லில் உட்கார்ந்தபடியே அருக்காணியை இமை கொட்டாமல் பார்த்த வண்ணம் இருந்தான். சின்னக்கிளியின் மரண ஓலம் அவன் உள்ளத்தை இப்போதும் அலைக்கழித்திருக்க வேண்டும்.

"இங்க பாரு ஓசேப்பு. உன்னும் ஒரு நாழிய நீ தாமசம் பண்ணினே முதலாளி ஆளுவ ஒன்னயை வேட்டை நாய்களாட்டம் மோப்பம் புடிச்சு அந்தச் சண்டாளன் அஸன் ராவுத்தன் கையிலே புடிச்சுக் கொடுத்துப் போடுவாங்க. அப்புறம் எங்க மச்சான் மம்முதனுக்கு ஏற்பட்ட கதிதான் ஒனக்கும் பொறவு நாங்கல்லாம் நாதி அத்து நிக்க வேண்டியது தான்" தொண்டை கனக்க அருக்காணி சொன்ன போது அருக்காணியின் சேரிக்காரனும், அவளுக்கு மச்சான் முறைக்காரனுமான மம்முதனுக்கு ஏற்பட்ட பரிதாபகரமான சாவு அவன் மனக்கண் முன் பட்டது. பீதி தட்டியது.

அந்த வட்டாரத்தையே குலுக்கிய மர்ம மரணம் அது. ஒரு வருடத்துக்கு முன்னால் நடைபெற்றது. அந்தச் சம்பவம் அஸன் ராவுத்தர் தோல் ஷாப்பு ஊழியர்களை மட்டுமல்லாமல் மதுரை ரஸ்தாவில் உள்ள அத்தனை தோல் ஷாப்புத் தொழிலாளர்களையும் பீதியிலும் அச்சத்திலும் ஆழ்த்தியிருந்தது.

மச்சக்காளை என்கிற மம்முதன் திடகாத்திரமான அழகான வாலிபன். சிற்றம்பலத்தே ஆடும் நடராசப் பெருமானுக்குக் கோவணம் கட்டிவிட்டாற் போன்ற கட்டு மஸ்தான உடல்வாகு.

சுண்ணாம்புக் குழிகளுக்காகக் காளவாயிலில் இருந்து வரும் சுண்ணாம்புக் கட்டிகளைக் கலவையாக்கிப் பக்குவப் படுத்தும் குழியில் அவனுக்கு வேலை.

நுகத்தடியில் பூட்டபட்ட காளையாக நாளெல்லாம் கோவணத்தோடு செக்கு மாடாகப் பிணையல் வர வேண்டும். நீர்த்தப்படும் சுண்ணாம்பிலிருந்து கிளம்பும் புகை சுவாசிக்க

முடியாமல் மூச்சு முட்டும். சுண்ணாம்பிலிருந்து கிளம்பும் வெக்கையால் உடம்பெல்லாம் வெந்தது போன்ற உணர்வோடு உடம்பே வியர்த்துக் கொட்டும். தப்பித்தவறி கால் இடறிக் குழியில் விழுந்தால் நீர்த்துப் போக வேண்டியது தான். அவ்வளவு அபாயகரமான பணி. நீத்துக் குழியில் வேலை செய்யும் தொழிலாளிக்குச் சாதாரணமாக ஆயுசு கம்மி. வெக்கை நோயாலோ, ஈழல் நோயாலோ மரணம் ஏற்படுவது சாதாரணம்.

இவ்வளவு அபாயகரமான பணியாக இருந்த போதும் மம்முதன் உழைப்பில் மகா சுத்தம். அதே போன்று தனது சம்பளத்தைப் பெறுவதிலும் கறாராக இருப்பான்.

மம்முதன் ஓர் ஆண்டுக்கு முறி எழுதிக் கொடுத்து அஸன் ராவுத்தர் தோல் ஷாப்பில் சேர்ந்திருந்தான். ஆண்டு முடிந்த போது எழுதிக் கொடுத்திருந்த அடிமை சாசனத்தை மம்முதன் திரும்பிக் கேட்ட போது தான் அந்தச் சம்பவம் நடைபெற்றது.

"மாதச்சோத், ஒருதபா எழுதிக் கொடுத்தா குடுத்தது தாண்டா. வெளியே போயிடுவிகளோ என் தோல் ஷாப்பை உட்டு, வேறே ஷாப்புக்கு நீ போரதைப் பாப்பம்" என்று அஸன்பாய் சொன்ன போது

"வருஷமெல்லாம் எம் உழைப்பையும், என் ரெத்தத்தையும் உறிஞ்சது போதாதா. எங்கிட்டே எழுதி வாங்கிய ஒப்பந்தப் பத்திரம் கெடு முடிஞ்சு போயிட்டது. என் கைக்கு வரலேண்டா நல்லாருக்காது" என்று மறுமொழியாக மம்முதன் சொன்னது தான் தாமதம்.

"ஏய்! எகிறாதலே, அஸன் ராவுத்தனைப் பத்தி ஒனக்குத் தெரியாது. நீ, இந்த ஷாப்பை உட்டுப் போவ மாட்டே, "லேய்" ஒம் பொணம் தான் போவும்" என்று முஸ்தாபா முறைத்தான்.

அதன் படியே மறுவாரம், சுண்ணாம்பு நீத்தும் குழியோரம் மன்முதன் நாக்குத் தள்ளிச் செத்துக் கிடந்தான், வெறும் கோவணத்தோடு கிடந்த அந்தப் பிணத்தின்

கரங்களும், கால்களும் தொடை வரையில் ரணமாக வெந்து காணப்பட்டது.

பிணத்தின் மீது விசாரணைக்கு வந்த போலீஸ், சுண்ணாம்பு நீத்துக் குழியில் கால் இடறி விழுந்து இறந்து போனதாக வழக்கை முடித்துக் கொண்டு போய்விட்டது.

அருக்காணியும், முடி தள்ளும் பெண்களும், வாய்விட்டு ஒப்பாரி வைத்துக் கூட அழ முடியவில்லை.

மம்முதனின் அகால மரணம் என்கின்ற திட்டமிட்ட கொலையைப் பற்றி அருக்காணி ஓசேப்பிடம் சொன்ன போது "பிசாசுக்குப் பொறந்த பெய என்னை கொண்டு போடணம்ண்டா கொல்லட்டும். இவனுக்குப் பயந்து நா, ஊரை விட்டுப் போவணுமோ."

ஓசேப்புச் சற்றுக் கோபமாக அருக்காணியைப் பார்த்துக் கேட்டான்.

"ங்கொப்பனாட்டம் ஒனக்கும் மொரசக் கொணம் ஒப்பனாட்டம் தெரு நாயா அடிபட்டுச் சாவப் போரியா. ஒன்னைத் தாங்கதுக்கு எந்த நாதி இருக்கு. ரோசனை பண்ணாம எதையும் பேசாதை" அவள் தன் நெற்றியில் துளிர்த்திருந்த வியர்வையை முந்தானையால் துடைத்தபடியே சொன்னாள்.

பீதியாலோ என்னமோ, இளம் காற்று வீசும் அந்த மாலைப் போது கூட அவளுக்கு வியர்வை தளும்பியது. எந்த நேரமும் முதலாளியின் அடியாட்கள் ஓசேப்பைத் தேடி ஓநாய்களாக வருவார்கள் என்று அவளுக்கு உள்ளூற பீதி.

அருக்காணி சொன்னதில் நியாயம் இருப்பது போல் அவனுக்குப் பட்டது. யோசனையில் ஆழ்ந்தவாறே ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தான். வானப் பரப்பில் பறவை இனங்கள், தங்கள் இருப்பிடத்தை நாடி, சிறுமலை அடிவாரத்தை நோக்கிப் பறந்து போய்க் கொண்டிருந்தன.

அதைப் பார்த்த போது அவனுக்கு, பீவி குளக்கரையில் சேக்காளிகளுடன் சேர்ந்து, ஆலமரத்து நிழலில் சயனித்த படியே, வேடன் விட்ட அம்பாகப் பாய்ந்து மீன்களைக் கொத்திச் செல்லும் பறவைகளையும், நீர்வாத்துக்கள் நீரில் மிதந்து முக்குளித்துச் செல்லும் அழகையும் பார்த்தவண்ணமே, இளம் காற்றில் தூங்கிப் போகும் இளமைக்கால நினைவு வந்தது.

வறுமையிலும், சிறுமையிலும் வாழ்ந்த இனிமையான இளமைக்கால நாட்கள் நினைவு தட்டவும் பெருமூச்செறிந்த வண்ணம் அருக்காணியைப் பார்த்தபோது "நா ஒரு தரித்திரியம் புடிச்ச முண்டை நான் நெனச்சது ஒண்ணும் எனக்குக் கெடைக்காது. மொண்டி கொம்புத் தேனுக்கு ஆசைப்படலாமா?" தொண்டை கனக்கச் சொன்னவள் கண்களில் துளிர்த்த கண்ணீரை இடது கொடங்கையால் துடைத்துக் கொண்டாள்.

அவள் இதுவரையில் தனது உணர்வை அவனிடம் வெளிப்படையாகச் சொல்லவில்லையானாலும், அவளுக்கு அவன் மீது ஆசை இருப்பது ஓசேப்புக்குத் தெரியும். வேலைத் தலத்தில் எடக்கும், ஏடாசியுமாக முகிழ்த்த உறவு, வெளியில் சொல்ல முடியாத காதலாகப் பரிணமித்திருக்கிறது. அவன் பாண்டிச்சேரித் தங்கப் பறையன். அவளோ, செத்த மாட்டைத் தின்னும் ஊருக்கெல்லாம் துட்டி சொல்லிப் போய், சுடலையைக் காக்கும் உள்ளூர் சேரி பறைப்பெண். பாண்டிச்சேரிப் பறை ஜனங்களைப் பொறுத்தமட்டில், உள்ளூர் பறைஜனங்கள் தீண்டப்படாதவர்கள். அவனோ கிறிஸ்தவன். அவளோ சாத்தானை வணங்கும் அஞ்ஞானி. அவளோ அநியாயமாகக் கெடுக்கப்பட்டவள். இவை எல்லாம் அவர்களுக்கு மத்தியில் கண்ணுக்குத் தென்படாத மதில்களாக நிற்கின்றன. இதையெல்லாம் மீறி, அவர்களுள் கலந்து கொண்டிருக்கும் காதல் உணர்வை வெளிப்படையாகவே சொல்ல வேண்டிய நேரம் வந்து விட்டதை உணர்ந்த ஓசேப்பு

"ஒன்னைய மட்டும் தனியா வுட்டுட்டு நா மட்டும் ஊரை வுட்டுப் போவ முடியுமா. மனம் ஒப்பலை அருக்காணி"

இப்படி அவன் சொன்ன போது, அதீதமான உணர்ச்சியாலும், மகிழ்ச்சியாலும் அவளை அறியாமலேயே பொல பொல வெனக் கண்ணீர் கொட்டியது.

"நெசமாவா சொல்லுதே ஓசேப்பு நீ வேதக்காரன். நான் சேரிப்பறைச்சி. நடக்கிற காரியமா. ஊரு ஒப்புமா" அழுகையினூடே சொன்னாள்.

"அப்படிச் சொல்லாதே அருக்காணி. ஒழைச்சி வவுத்தக் கழுவுற நமக்குள்ள என்ன வித்தியாசம். எந்தச் சாமியாச்சும் வந்து நமக்குள்ள கல்லாணம் நடக்க வேண்டாண்டு தடுத்துச்சா. அருக்காணி நாம அல்லாரும் ஒருச்சாண் வவுத்துக்கு வேண்டி கைய ஊண்டிக் கரணம் போட்டுக் காலத்த ஓட்டறவுக"

இப்படி ஓசேப்பு பேசியது அவளுக்கு நெஞ்சுக்கு இதமாக இருந்தது. அப்படியே அவன் தலையை வருடி ஒரு குழந்தையைப் போன்று தனது மடியில் சாய்த்துக் கொண்டாள். பிறகு அன்பொழுக அவனது சிரசை வருடிக் கொடுத்தாள்.

அவனது தாயார் ஏசுவடியாளின் மரணத்துக்குப்பின் சின்ன ஆத்தாள் தாயம்மாவுக்குப் பிறகு இப்போது தான் ஒரு பெண்ணின் கருணைக்கு ஆளாகியிருக்கிறான். அவளது ஸ்பரிசம் இதமாக இருந்தது. அத்தனையையும் மறந்து அப்படியே இருந்து விடவேண்டும் போல் அடங்காத ஆசை.

கொஞ்ச நஞ்சமிருந்த ஆள் அரவமும் குறைந்து, சில்வண்டுகளின் ரீங்காரம் மட்டும் விட்டுவிட்டு ஒலித்துக் கொண்டிருந்தது. எவ்வளவு நேரம் அவர்கள் தங்களை மறந்த நிலையில் இருந்திருப்பார்களோ தெரியாது. திடீரென்று அந்தப் பிரதேசத்தையே அலற வைத்து எழுந்த ரெயில் வண்டியின் சங்க நாதம் அவர்களைத் திடுக்கிட வைத்தது.

ஓசேப்பு தீர்க்கமான ஒரு முடிவுக்கு வந்த மட்டில் அருக்காணியைப் பார்த்துக் கேட்டான்.

"அருக்காணி! நாம ரெண்டு பேருமே இந்தச் சீமையவுட்டே ஓடிப் போயிருவமா. நம்ம கல்லாணத்தை எங்க வேதமும் தடுக்காது ஒங்க சாமியும் தடுக்காது. நாத்தம் புடிச்ச இந்த ஊத்தத் தொழிலும் நமக்கு வேணாம்" அவளது நயனங்களை ஊடுருவிய வண்ணம் ஓசேப்பு கேட்டான்.

இப்படி அவன் சொன்னபோது துக்கத்தால் பீடிக்கப் பட்டவளாக அருக்காணி விம்மினாள். வாஞ்சையுடன் அவனைப் பார்த்தாள். தென்னங்கீற்றுகளின் வழியாக ஒழுகிய நிலவொளி அவன் வதனம் சாம்பியிருப்பதைத் துல்லியப்படுத்தியது.

வெகுநேரம் ஏதும் பேசாமல் மௌனமாக உட்கார்ந்திருந்த அருக்காணி "நீ சொல்லற ரோசனை நல்லாத்தான் இருக்கு. நெஞ்சுக்கு இதமாக இருக்கு" என்றவள்

"ரோசேப்பு ஒனக்கு மிந்தி விரிக்கணம். ஒனக்கு வீடு களக்கப் புள்ளெகளைப் பெத்துப் போடணம்ண்னு எனக்குக் கொள்ளை ஆசை" என்று சொன்னவள் ஆகாயத்தைப் பார்த்து நீண்ட பெருமூச்சு விட்டாள்.

"என்னால அம்புட்டையும் உதறிப் போட்டுட்டு ஒம் பின்னாடி எப்படி வர முடியும்" என்றவள் வேதனை ததும்ப அவனைப் பரிதாபமாகப் பார்த்துச் சிரித்தாள்.

"இந்தப் பாழாப் போன தோல் ஷாப்புலே நனைவுக் குழியிலே நிண்டு நிண்டு, கையும் காலும் அழுவி குட்டம் கண்டதாட்டம் உடம்பு உப்பி ஊட்டுலே மொடங்கிக் கெடக்குதே. எங்கப்பன் ஆண்டிச் சாம்பான், முடிக்கழிவுலே காலமெல்லாம் நிண்டு, மூச்சுத் தெணறி, இப்போ ஈழல் நோயாளியாகிப் போயி, பாயும் கையுமா ஆயிப் போச்சுதே எங்க ஆயி அல்லி, அதுவளை இப்படியே சாவுங்கண்டு உட்டுப் போட்டு ஒம் பின்னால என்னால எப்படி வரமுடியும்" தொண்டைக் குழியில் துக்கம் கனக்க அருக்காணி பேசலானாள்.

"நமக்குண்டு விதிச்சது இம்புட்டுத்தான்" அவனது கேசத்தை வருடி அன்போடு, அவனை மார்போடு அணைத்துக் கொண்டு விம்மலானாள்.

அவனால், அவளுக்கு ஏதும் சொல்ல முடியவில்லை. அவனது தாயார் ஏசுவடியாள் மீது அவன் எவ்வளவு பாசமும், நேசமும் வைத்திருந்தான். சின்ன ஆத்தாள் வளர்ப்புத் தாய் தாயம்மாளை எப்படிப்பிரிவது. மனம் பேதலித்தது.

"ஓசேப்பு, இம்புட்டு நேரமும் ஒரு பச்சைக் குழந்தையா எம் மடியிலே ஒன் தலைய வச்சுப் படுத்திருந்தே பாரு அது ஒண்ணே போதும். காலமெல்லாம் ஒங்கூட என் காலத்தைக் கழிச்சதா மனசுக்கு இதமா இருக்கு. ஒம் நெனப்புலேயே என் காலம் கழியும்" பெரு மூச்சும் கேவலுமாகச் சொன்னவள், தனது மடியில் முடிந்து வைத்திருந்த ரூபாய் நோட்டுக்களையும் சில்லறைகளையும் அவனிடம் கொடுத்தாள்.

ஒன்றும் புரியாமல் ஓசேப்பு அவளைப் பார்த்த போது

"மாடத்தி அக்காளும், முடி தள்ளும் பொம்பனாட்டிகளும் ஒம் வழிப் பயணத்துக்குக் குடுத்த காசு" என்றவள் இடுப்பில் சொருகி வைத்திருந்த சுருக்குப் பையில் பத்திரப்படுத்தி வைத்திருந்த கூலியையும் எடுத்து அவன் கையில் கொடுத்தாள்.

"ஒன்னப் பெத்த ஆத்தாளும் ஒங்கப்பனும் பொறந்த பாண்டிச்சேரி சீமையப் பாக்கணம்ண்ணு, ஆசை ஆசையாச் சொல்லுவயே. அந்தச் சீமையப் பாத்துப் போயிரு. இந்தப் பாவி மண்ணுலே தரிச்சே ஒன்னையப் பழி வாங்கிப் போடுவானுக கொண்டே போடுவான்க" என்று சொன்னவள் வெடுக்கென்று எழுந்து நின்றாள்.

"பொழைச்சுக் கெடந்தா எண்ணைக் காச்சும் நாம சந்திச்சுக்குவோம்"

நிராசையுடன் சொன்னவள் திரும்பிக் கூடப் பார்க்காமல், மதுரை ரஸ்தாவை நோக்கி நடந்தாள்.

துக்கம் தாளாமல் அவள் கேவுவது அவனது நெஞ்சைப் பிளப்பது போலிருந்தது. அவள் தலை மறைந்து புள்ளியாக மாறும் வரையில் பார்த்த வண்ணம் நின்றிருந்தான்.

தோப்புக்கு வெளியே ஆள் அரவம் கேட்டது. அவர்கள் அவனைத் தேடி வந்து கொண்டிருக்கிறார்கள்.

4

ரெயில்வே பிளாட்பாரத்தில் விளக்குகள் எல்லாம் அணைக்கப்பட்டு, வடக்கே கேபினுக்குப் போகும் வழியில் இருக்கும் விளக்கு மட்டும், ஊதைக் காற்றின் வேகம் தாளாமல் வெட வெடத்து உயிர் போகாத மட்டில் மின்மினிப் பூச்சியைப் போன்று ஒளியை உமிழ்ந்து கொண்டிருக்கிறது.

தெற்கே செங்கோட்டையிலிருந்து மதுரை, திருச்சிராப்பள்ளி மார்க்கமாகச் சென்னைப் பட்டினம் வரை செல்லும் கூலி ரெயில் வழக்கம் போல் இரண்டு மணி நேரம் தாமதமாகப் பிரயாணம் செய்து கொண்டிருப்பதாக "ஸ்டேஷன்" மாஸ்டர் சுப்பிரமணி என்கிற சுப்புணி அய்யருக்குத் தகவல் வந்ததால், தனது டியூட்டி உடையைக் கூட கழற்றாமல் பொறுப்பை "பாயின்ஸ்ட்மேன்" ரெங்கக் கோனாரிடம் ஒப்படைத்துவிட்டு ஸ்டேஷன் நுழைவாயிலில் கிடந்த பிரயாணிகள் இருக்கையில் நீட்டி நிமிர்ந்து நித்திரா தேவியின் அணைப்பில் ஆழ்ந்து கிடக்கிறார். சிக்னல் விளக்கு மட்டும் அவருக்குக் காவலாகக் காலடியில் ஒளிர்ந்து கொண்டிருக்கிறது. நடு நிசியில் வந்து தொல்லை தரும் சரக்கு ரெயிலும் 'கான்ஸல்' செய்யப்பட்டுப் போனதால் எந்த ஒரு வண்டியும் அந்தச் கெடியைக் கடந்து போகக்கூடிய அபாயம் கிடையாது.

பாயின்ட்ஸ் மேன் ரெங்கக் கோனார் மட்டும், ஸ்டேஷன் உயிரோடு இருக்கிறது என்பதற்கு அடையாளமாக, ரெயில் எண்ணையை ஊற்றி பந்தத்தைக் கொளுத்திக் கொண்டு கொள்ளிப் பிசாசாட்டம் தெற்கும் வடக்குமாக வடக்குக்

கேபிள் ரூம் வரையில் ரோந்து போய்விட்டுப் பந்தத்தையும் அவித்துவிட்டு, மேல் வகுப்புப் பிரயாணிகள் தங்கும் அறை ஒரமாக அமர்ந்து, தனது இரண்டாம் குடியாள் பற்றிக் கனவு கண்ட மட்டில் அரைத் தூக்கத்தில் இருக்கிறான்.

பிளாட் பாரத்தில் ஊதைக் காற்றானது சிறுமலையின் மூலிகைகளுடையவும், காட்டு மலர்களுடையவும் நறுமணத்தை அள்ளித் தெளித்து வீசிக் கொண்டிருக்கிறது. பிளாட் பாரத்தில் மேற்கே பூனாச்சி மலை தேயிலைத் தோட்டங்களிலிருந்து வந்த மலேரியாச் சோகை பிடித்த தொழிலாளர்கள் மட்டும் வடக்கே இருந்து தெற்குச் சீமைக்குப் போகும் ரெயிலுக்காகக் காத்துக் கிடக்கிறார்கள். வண்டி எப்போது வரும் என்கிற உறுதி கிடையாது.

வானப் பரப்பில் சஞ்சாரம் செய்து கொண்டிருந்த முழு நிலவு திடீரென்று இருண்ட மழை மேகத்துக்குள் மறைந்துக் கொள்ளவும் அந்தப் பிரதேசமே அந்தகாரத்தில் மூழ்கிப் போகிறது எதிர்பாராத இந்த மாற்றத்தால் மிரண்டுபோன மரிய நாதபுறம் சேரி நாய்கள் எமனையே நேரில் கண்டுவிட்ட மாதிரிச் சண்டாளமாகக் கூச்சல் போட்டுக் குறைக்க வாரம்பிக்கின்றன.

இப்படி ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து ஒத்தைக் கண்பாலம் சுடுகாட்டோரம் பதுங்கியிருந்த ஓசேப்பு வேகம் வேகமாக ரெயில் சுத்தாளைகளையும் சுள்ளிச் செடிகளையும், இண்டம் புதர்களையும் தாண்டி, பிளாட் பாரத்தின் தெற்குக் கோடியில், அரசு மரத்துக்கடியில் இருக்கும் கழிப்பறைக்குள் பாய்ந்து தன்னை மறைத்துக் கொள்கிறான். பிறகு தன்னை யாராவது பின் தொடர்கிறார்களா, கண்காணிக்கிறார்களா என்று சுற்றுமுற்றும் கவனிக்கிறான்.

சௌராஷ்டிரா நந்தவனத்திலிருந்து ஒத்தைக் கண் பாலம் சுடுகாடு வரும் வரையில் பல தவணை, முதலாளியின் அடியாட்களும் அவர்கள் கொண்டு வந்த ராஜபாளையம் நாய்களும், அவனைச் சல்லடை போட்டுத் தேடியதும், அவர்கள் போட்ட கொலை வெறிக் கூச்சலையும் அவனால் மறக்க முடியவில்லை. இப்போதும் நெஞ்சு படபடக்கிறது.

நல்ல வேளையாக அரச மரத்துக்கடியிலும், கழிப்பறையிலும் மனித நடமாட்டம் இல்லை. திடகாத்திரமான பன்றி மட்டும் காண்டாமிருகம் மாதிரி, மலக்கழிவை மிகவும் சுவாரஸ்யமாகச் சுவைத்துக் கொண்டிருக்கிறது.

திடீரென்று தனது எதிரில் நிற்கும் கரிய நெடிய மனித உருவருத்தைக் கண்டு மிரண்டு போன மிருகம், பயந்து பின் வாங்கியது. பிறகு அவனைப் பயமுறுத்தும் மட்டில் பயங்கரமாக உரும ஆரம்பித்தது. அந்த மனிதன் தன்னைப் பிடித்துக் கசாப்புச் செய்யப் போகிறானோ என்கிற பீதி அதற்கு. தனது எஜமானனான ராமக் குரவனைப் பலதவணை இப்படி மிரட்டிப் பின் வாங்க வைத்திருக்கிறது.

ஓசேப்பைப் பொறுத்த மட்டில் வடக்கு முகமாகப் போகும் கூலி ரெயில் பிளாட் பாரத்துக்கு வரும் வரையில் யாருடைய பார்வையிலும் படாமல் மறைந்துறைய வேண்டியுள்ளது. அந்தக் கழிப்பறை மட்டும் தான் பாதுகாப்பான இடமாகப்பட்டது.

பிளாட் பாரத்துக் கழிப்பறைகள் அனைத்தையும், தனது ஏக போகக் குத்தகைக்கு உட்பட்டதே போன்று செருக்குடன் அலையும் அந்த மிருகத்துக்குத் தனது உரிமையை விட்டுக் கொடுக்க விருப்பமில்லாதது போல் செறுத்துக் கொண்டு நின்றது. போருக்குத் தயாராகும் வீரனைப் போல், அவனைத் தாக்கத் தயாராகி செறுத்துக் கொண்டு நின்றது. பன்றியைப் பயமுறுத்துவதற்காக அருகில் கிடந்த செங்கல் கட்டியை எடுத்துப் பன்றியின் மீது வீசினான். மேலும் சீற்றம் கொண்ட பன்றி தலையைக் குனிந்து கொண்டு உறுமியது. பிறகு வாலை முறுக்கிப் பயங்கரமாக உறுமிய வண்ணம் கழிப்பறையைக் காலி செய்து கொண்டு வெளியேறியது.

பன்றி இடத்தைக் காலி செய்யவும், இருளடைந்த பகுதியில் அவன் தன்னை மறைத்துக் கொள்ள பிரயத்தப்பட்டான். மலக்கழிவின் வாடை, குடலைப் பிடுங்கிப் போட்ட மாதிரி இருந்தது. இருந்தாலும், தோல் ஷாப்பின், உதிரம் கலந்த நிணக்கழிவின் அழுகல் வாடையை

விட அதிகக் கொடியதாக இருக்கவில்லை. மிக ஜாக்கிரதையாகத் தனது வேட்டியையும் சட்டையையும் களைந்து கட்கத்தில் வைத்துக் கொண்டு, கோவணத்தோடு உட்கார்ந்து கொண்டான்.

அரசமரக் கிளைகளினூடே பரவி வரும் சந்திரிகையின் ஒளி, கழிப்பறையில் படும்போதெல்லாம் அவன் உள்ளம் படபடக்கும் உடலின் இனம் தெரியாத நடுக்கம் ஏற்படும்.

அப்போது

நடுநிசியின் அமைதியைக் குலைத்துக் கொண்டு மணிக் கூண்டு வளவனார் பெரிய ஆலய மணி, ஏசுபிரான் உயிர்த்தெழுந்த திருநாளை அறிவிக்கும் முகத்தான், முழங்கி அந்த நகரத்தின் வீதி எங்கும் ஒலித்து எதிரொலித்தது. அர்த்த சாம ஜெபத்துக்காகக் கிறிஸ்தவர்களை எல்லாம் கூவியழைப்பது போல நகரத்தின் தேவாலயங்களில் இருந்து எழுந்த மணியின் நாதம் மலைக்கோட்டை மதில்களில் பட்டுத் தெறித்தது.

கர்த்தராகிய ஏசுபிரான் கல்லறையினின்றும் உயிர்த்தெழுந்த நன் நாளின் மணி ஓசை கேட்ட போது ஓசேப்பு அவனை அறியாமலே நெஞ்சுக்கு நேராகக் கரங்களால் சிலுவை அடையாளம் போட்டுக் கொண்ட போது, 'சேசுவே! பரம பிதாவே! என்று வாய் முணுமுணுத்தது. பிறகு மௌனமாக எழுந்து நின்று நயனங்களை மூடி தியானத்தில் ஆழ்ந்தான். தேவாலயம் கண்முன் தோன்றியது.

அப்போது, பிரார்த்தனை நடத்த வந்த குருவானவர் பரிசுத்த வேதாகமத்தை விரித்து மத்தேயு சுவிசேஷம் 28ம் வசனத்தை எடுத்து "ஓய்வு நாள் முடிந்து வாரத்தின் முதல் நாள் விடிந்து வருகையில் மகதலேனா மரியாளும், மற்ற மரியாளும் கல்லறையைப் பார்க்க வந்தார்கள். இதோ பெரிய பூமி அதிர்ச்சி உண்டாயிற்று. கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்து இறங்கி வந்து வாசலிலிருந்த கல்லை உருட்டித்தள்ளி அதன் மேல் உட்கார்ந்தான். அவன் ரூபம் மின்னல் போலவும், அவன் வஸ்திரம் உறைந்த மழை போல் வெண்மையாக இருந்தது. அவனைப் பற்றிய பயத்தினால் காவலர்கள் நடுநடுங்கிச் செத்தவர்கள் போல் ஆனார்கள். தேவதூதன் அந்த ஸ்திரீகளை நோக்கி; நீங்கள் பயப்பட

வேண்டாம். சிலுவையில் அறைபட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று எனக்குத் தெரியும். அவர் இங்கே இல்லை தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார். சீக்கிரமாய்ப் போய் அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று அவருடைய சிஷ்யருக்குச் சொல்லுங்கள். அவர் உங்களுக்கு முன்பு கலீலியோவுக்குப் போகிறார். அங்கே அவரைக் காண்பீர்கள்" என்கிற திரு வசனங்களை வாசிக்கும் போது தீண்டப்படாத கிறிஸ்தவர்களான ஓசேப்பும் தாயார் ஏசுவடியாளும், தேவாலயத்துக்கு வெளியே மைதானத்தில் முழந்தாழில் நின்று பிரார்த்தனை செய்தது நினைப்புக்கு வந்தது.

"பிதா, குமாரன் பரிசுத்தாவியின் நாமத்தினாலே ஆண்டவனே ஒம்மை வேண்டிக்கிறேன். இந்தப் பாவிக கண்ணிலே நான் தட்டுப் படாம என்னைக் காத்தருள் சாமி" என்று கை கூப்பிய வண்ணம் ஏசு பெருமானிடம் வேண்டுகோள் விடுத்தான்.

அப்போது அவன் மனத்திரையில் தலையில் முட்கிரீடம் சூட்டப்பட்டு, ஆடை களையப்பட்டு, கொல்கதா மலையில் சிலுவையைச் சுமந்தபடியே நிற்கும் ஏசு பெருமானின் படம் நிழலாடியது.

"ஏசுநாதரும் அம்மளை மாதிரி பறைச் சாதிக்காரனாத்தான் இருப்பாரோ இல்லையான அந்த மணிசனையும் சாட்டை வாரால் அடிச்சுச் சிலுவையச் சொமக்க வச்சிருக்க மாட்டாங்களே" என்று சொல்லிக் கொண்ட போது, தோல் ஷாப்பு முதலாளிகள் கசைக் கல்லில் தொழிலாளர்களைக் கட்டி வைத்துச் சாட்டை வாரால் உயிர் ஊசலாடும் வரையில் வாதைப் படுத்துவது அவனது நினைவுக்கு வரலாயிற்று.

"நான் இவங்க கையிலே அகப்பட மாட்டேன் என் பூர்வீக ஊருக்கு ஓடிப் போயிடுவேன்; அப்புறமா அருக்காணியவும் கூட்டிக்கிட்டுப் போயிருவன்"

இப்படி அவன் கற்பனை செய்து கொண்டது உள்ளத்துக்கு இதமாகவும் இனிமையாகவுமிருந்தது.

●

5

கடைசியாக அருக்காணி சொன்ன பிரகாரமே தனது மூதாதையர்களின் ஜென்ம பூமியான பாண்டிச் சேரிக்கே போய்விட வேண்டும் என்கிற திட மனத்தோடு ஓசேப்பு இப்போது ரெயில்வே ஸ்டேஷனில் வந்து சேர்ந்திருக்கிறான்.

அவனுக்கும் பாண்டிச்சேரி எங்கே இருக்கிறது என்று தெரியாது. வடக்கே வெகு தொலைவில் கடலோரம் இருக்கிறது என்பது மட்டும் தான் தெரியும். வடக்கே போகும் ரெயிலில் ஏறிப் பயணம் செய்தால், ரெயில் வண்டி, பாண்டிச்சேரிப் பட்டினத்தில் கொண்டு சேர்த்துவிடும் என்று ஏசுவடியாள் அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பாள்.

ஏசுவடியாள், தன் கணவன் ஆசீர்வாதம் என்கிற ஆசீருடன், இந்த ஊரில் தங்கத்தையும், பொன்னையும் அள்ளிக் குவித்து விடலாம் என்ற கனவோடு தான் வந்தாள். ஆனால், மற்ற எல்லா தோல் ஷாப்புப் பணியாட்களின் நிராசையான வாழ்க்கையே போல் அவர்களது வாழ்க்கையும் நரக வாழ்க்கையாகி நசித்துப் போகும் என்று அவள் கனவில் கூட நினைத்துப் பார்த்ததில்லை.

கடைசியில் இந்த நரக வாழ்க்கையினின்றும் கடைத்தேற வேண்டும் என்று ஒவ்வொரு விநாடியும் ஏசுவடியாள் ஏங்கலானாள். முழம் ஏற சாண் வழுக்கிய வாழ்வு. எப்படியாவது தனது தாய் மண்ணான பாண்டிச்சேரியில் தன்னைக் கொண்டு சேர்த்துவிட வேண்டும் என்று நித்த நித்தம் முழந்தாழில் நின்று ஆண்டவனை வேண்டியது தான் மிச்சம். அவளது ஆசையும், கனவும் கானல் நீராகிப் போயிற்று.

ஒழுக்க சீலனும், பொறுமை காப்பவனும் திடகாத்திரமான மனிதனாகவும் இருந்த ஆசீர்வாதம் நரகக் குழியாகிப் போன இந்த தோல்ஷாப்பு வேலைக்கு வந்த பிறகு கோபாவேசம் கொண்டவனாகவும், குடிகாரனாகவும் ஆகிப் போனான், வேலை முடிந்து வீட்டுக்குத் திரும்ப மாட்டான். கிடைக்கும் கூலியைக் கள்ளுக் கடைகளிலும், பட்டை சாராயத்துக்கோ செலவழித்து விட்டு, தோல் ஷாப்பு ஏஜெண்டுகளையும், மேஸ்திரிகளையும் அவர்கள் மயக்கமடையும் வரையில் அடித்துப் போட்டு விட்டு வருவான். அவர்களோ அடியாட்கள் மூலம் அவனை வெறி நாயை அடிப்பது போல் அடித்துப் போட்டு விடுவார்கள்.

பாதை ஓரமோ, ஆள் நடமாட்டம் இல்லாத மைதானத்திலோ, மயங்கிக் கிடக்கும் ஆசீர்வாதத்தைச் சகஊழியர்கள் கைத் தாங்கலாகத் தூக்கி வந்து ஆசீர்வாதத்தின் குடிசையில் போட்டு விட்டுப் போவார்கள். பரிதாபமாகப் படுத்துக் கிடக்கும் ஆசீர்வாதத்தின் காயங்களுக்கு மஞ்சள் பத்துப் போட்டு ஏசுவடியாள் பராமரிப்பாள். இரவெல்லாம் ஆசீர் தன்னை இக்கதிக்கு ஆளாக்கிவிட்ட முதலாளியையும் ஏஜெண்டுகளையும் தனது போதை தனியும் வரையில் தூஷணை வார்த்தைகளால் திட்டிக் கொண்டிருப்பான். சில சமயம் ஏசுவடியாளையும் மகனையும் நையப்புடைப்பான். இவ்வளவு இருந்த போதும் கடுக்காய் தோலைப் பிழியும் வேலைக்கு, அவனைப் போன்ற திடகாத்திரமான ஆள் இல்லாததால் அஸன்ராவுத்தர் ஆசீரைச் சகித்துக் கொண்டிருப்பதாக வதந்தி.

எது எப்படியானாலும், போதை தெளிந்து, காலையில் கண் விழிக்கும் போது, முதல் நாள் ஏசுவடியாளுக்குச் செய்த அநியாயத்துக்கும் அவளது புத்திமதியைக் கேளாமல் நடந்து கொண்டதற்கு ஏசுவடியாள் பேச்சைக் கேட்காமல் மிருகமாக நடந்து கொண்டமைக்கும் அவளிடம் மன்னிப்புக் கேட்பான்.

பிறகு முழந்தாழில் நின்று பிரார்த்தனை செய்வான்.

"ஏசு சாமியே என்னை மன்னியும். நான் உமக்கு விரோதமாகவும் பரத்துக்கு எதிராகவும் நீசத்தனமான பாவம் செய்பவன் ஆகிவிட்டேன். குடித்துவிட்டுத் தூஷணமான வார்த்தைகளால் எல்லோரையும் திட்டிப் போட்டேன். நான் மேல் கொண்டு குடிக்காமல் இருக்கவும் திட்டாமல், மாற்றானை அடிக்காமல் இருக்கவும் ஆண்டவனே நீர்தான் எனக்குப் புத்தியைத் தர வேண்டும்" என்று ஒரு குழந்தையைப் போல் ஆண்டவனை வேண்டுவான், சத்தியம் கூடச் செய்வான். ஆனால் அன்று மாலையே குடித்துவிட்டுச் சேற்றில் புரளும் பன்றியாகிப் போவான். ஏசுவடியாள், இப்படி ஒரு குழந்தையாகவும், மிருகமாகவும் நடந்து கொள்ளும் ஆசீருக்கு வேண்டி அவளும் பிரார்த்தனை செய்து கண்ணீர் வடிப்பாள். மனம் கசந்து அழுவாள்.

என்ன மனத்தாங்கல் இருந்த போதும், என்ன துன்பம் ஏற்பட்ட போதும் மிகுந்த விசுவாசியான ஏசுவடியாள் ஞாயிற்றுக் கிழமைகளில் தோல் ஷாப்புக்கு வேலைக்குப் போகமாட்டாள். அது ஆண்டவனுக்கென்று ஒதுக்கப்பட்ட தினமாகும்.

ஆசீரும் கூட, அன்றைய தினம் எந்தவிதமான பாவக் கிருத்தியங்களிலும் ஈடுபட மாட்டான். சனிக்கிழமை மாலை முதலே அவன் குடியை நிறுத்திப் போடுவான். யாருடனும் அதிகமாகப் பேசுவது மல்லாமல் வேற்று இடங்களுக்குப் போவதும் கிடையாது.

ஆசீர்வாதம், எப்பாடு பட்டாகிலும் மேட்டுப் பட்டியிலோ, அல்லது பேசும்பூரிலே, மாட்டிறைச்சி வாங்கி வந்து ஏசுவடியாளிடம் சமைக்கக் கொடுப்பான்.

காசுக்குச் சிரமப்படும் நாட்களில் ஏனைய முடிதள்ளும் பெண்களுடன் சேர்ந்து பாடம் செய்வதற்கு வரும், மாட்டுத் தோல்களிலும், ஆட்டுத் தோல்களிலும், கசாப்புக் கடைக்காரன் விட்டு வைத்திருக்கும் கழுத்துப் பிரதேச சவ்வையும், வெதர் பகுதி சவ்வையும் தோலில் ஒட்டிக் கொண்டிருக்கும் மீந்த மாமிசத்தையும் கரண்டி எடுத்து, உப்புச் சத்து நீங்கும் வரையில் நீரில் அலசி எடுத்து வந்து தோல் கறியையும், குச்சிக் கிழங்கு அவியலையும் சேர்த்துச் சமைத்து வைத்திருப்பாள்.

ஞாயிற்றுக் கிழமையாகையால், ஏசுவடியாளும் ஆசீரும், மகன் ஓசேப்பையும் கூட்டிக் கொண்டு தேவாலயம் போய் வருவார்கள். ஆசீருக்கு அன்று விடுமுறை. மாட்டுக்கறி, அல்லது தோல்கறி கலந்த உணவை, வயிராற உண்ட மயக்கத்தில் குடிசைக்குள் ஆசீர் அடித்துப் போட்ட பாம்பாக முடங்கிப் போவான்.

முழுநிலவு காயும் இரவுகளில் ஏசுவடியாள் நடு நிசி வரையில் நித்திரை போக மாட்டாள். சிறு மலையின் மூலிகைக் காற்று, தோல் ஷாப்பு நிணக் கழிவின் துர்நாற்றத்தையும் கலந்து வீசிக் கொண்டிருக்கும். மதுரை ரஸ்தாவின் ஓரம் அமர்ந்து மகன் ஓசேப்பை மடியில் கிடத்திய வண்ணம், தான் பிறந்த பாண்டிச் சேரியையும் அந்த மண்ணின் மகத்துவத்தையும், பக்கத்துக் குடிசைக் காரிகளான தோல் ஷாப்புப் பெண்களிடம் சொல்லிக் கொண்டிருப்பாள். அவள் சொல்லும் கதையை வானப்பரப்பில் சஞ்சாரம் செய்யும் சந்திரிகை கூட ஒரு நாழிகை நின்று கேட்டுவிட்டுப் போக வேண்டும். அவ்வளவு இன்ப மயமான நாட்கள் பற்றிய எழுதப்படாத வரலாறு.

"பாண்டிச்சேரியிலே நாயுடு புரத்துக்குப் பக்கத்துச் சேரி அய்யங்குப்பமிண்டா அந்த வட்டாரத்திலேயே பேர்போன ஊரு.

ஒரு காலத்திலே அந்த ஊருக்கு வந்த பிரெஞ்சுக்காரனும், இங்கிலீஸ் காரனுவளும் குடும்பத்தோட வந்து சேரியிலே தங்கிட்டுப் போயிருக்கானுக. அவனுவ கட்டின வேதக் கோயிலு கூட இப்ப இடிஞ்சு சுட்ட மண்ணாக கெடக்குது.

வெள்ளக்காரன் மாட்டுக் கறியத் திங்கதாம் காட்டியும், அவனுவளுக்குச் சமையல் பண்ணிக் கொடுக்கதுக்கும், ஊட்டு வேளை செய்யதுக்கும் மேல் சாதி சனங்க ஆரும் வரலையாங் காட்டியும். பிரெஞ்சுக்கார தொரை, டுப்ளேங்கிறவன் எங்க குப்பத்திலேந்து தான் சமையல் செய்யதுக்கும், வூட்டு வேலை செய்யதுக்கும் ஆளைக் கூட்டிட்டுப் போயிருக்கான் இப்பக்கூட எங்க குப்பத்திலே பட்லர் ஞானப்பிரகாசம் குடும்பம் இருக்குது. அந்தக் குடும்பம் தான் மொத மொதலா பிரெஞ்சு தொரைகளுக்குச் சமையல் செய்யப் போன

குடும்பம். இப்போக்கூட அந்தக் குடும்பதுக்கு பிரெஞ்சு நாட்டிலேருந்து பின்சன் வருது. அப்படி வெள்ளக்காரன் மெச்சுப் போன குப்பம் எங்க குப்பம்.

நாங்க என்ன தான் வெள்ளக்காரத் தொரைகளுக்கு வேண்டியவுகளா இருந்தாலும் எங்க மக்களை ஊருக்கு வெளியே ஒதுக்கித் தான் வெச்சிருந்தாக.

ஆனா சேரின்னா அப்படியாக்கொந்த சேரிய எந்தச் சீமையிலேயும் பாக்க முடியாது. குப்பத்தைச் சுத்தி நாலா பக்கமும் தென்னந்தோப்பு, வயக்காடு. சேரிய ஒட்டி வந்தா ஆறு ஓடிட்டிருக்கும். வயக்காட்டு வாய்க்கால்ல தண்ணி எள நீராட்டம் வருஷம் பூரா ஓடிட்டிருக்கும். எந்நேரமும் தூரி போட்டு அயிர மீன அள்ளிட்டு வரலாம் கிழக்குப் பக்கம் கடல் அலை வந்து வந்து நம்மளைப் பாத்து தலையை ஆட்டிட்டுப் போவும்.

வயக்காட்டுலே நெல்லுமுப் போகம் வெளையும் நெல்லு வெளஞ்சிட்டாப் போதும், சேரியே நெல் வாடையிலே மெதக்கும் எங்க ஆத்தா அப்பெ. ஆண் பெண் அடங்கலும் ஆண்டைக வயக்காட்டுலே கூலிக்கும் கொத்துக்கும் போயிநிக்கும் வருஷத்துக்கும் சாப்பாட்டுக்குக் கெடைக்கும்.

அப்பொ நானெல்லாம் சின்னப்புள்ளெ வயசுக்கு வரலை. கடற்கரையிலே ஓடி வந்து நண்டுக்குஞ்சுவளை புடிச்சி வெளையாடுவம். கிளிஞ்சல் பொறுக்கி விப்பம். ஊரைச்சுத்தி பாக்க வரும் வெள்ளைக்காரங்க மிட்டாயும் பெப்பர்மெண்டும் குடுத்து வாங்கிட்டுப் போவாங்க. அவங்க கொண்டார பெப்பர்மெண்டும் பண்டமும் மெத்த ருசியா இருக்கும் ஒரே தித்திப்பு.

கட்டுமரங்களை எடுத்துட்டுப் போயி விடிய விடிய கடலுக்குள்ளே கெடக்கிற முக்குவன்கள். பொழுது பொல பொலன்னு விடியும் போது, முக்குவச்சிகளும் நம்ப சனங்களும் கூடைகளையும் பொட்டிகளையும் எடுத்துட்டுப் போய் நிப்பாங்க. எங்க அக்கா எசக்கியும் நானும் கூட்டத்திலே போயி நிப்பம். பெரிய பெரிய சுறா மீன்களும், வஞ்சிரம் அல்லாம் வரும். முக்குவங்க கிட்ட விலை பேசி எங்க அக்கா மீனை வாங்கிப் பாண்டிச்சேரி பட்ணத்துக்கே கொண்டு

போவம். நானும் கூடப் போவன். பொழுது திரும்பதுக்குள்ளாற அத்தனை மீனும் வித்துப்போவும். அப்பெல்லாம் நாங்க வேதக் காரவுங்க கெடையாது. எசக்கியம்மன் தான் எங்க குல தெய்வம். எங்க ஆத்தா மேல சாமி எறங்கிக் குறி கூடச் சொல்லும்.

நா, சடங்கானதும் எங்க ஆத்தாவும் அப்பனும் என்னெய கொத்துக்கும் கூலிக்கும் அனுப்பாதுவ. ஏன்னா நான் அம்புட்டு அழுசமா இருப்பன். படாதவன் கண்ணில பட்டிரப்படாதுன்னு அவியளுக்குப் பயம். அப்படிப் பொத்திப் பொத்தி வளத்த மவளை இந்தப் பாவி மனிசன் கையிலே புடிச்சிக் கொடுத்தாவ.

இவரு வேதக்காரு. நான் அஞ்ஞானி ஆனா இவரு எனக்கு மொற மாப்புளெ. வயசுலே இந்த மனிசன் கருப்பு ஆனாலும் ஒங்கு தாங்கா ஒரு ஊரையே திரட்டி அடிக்கிற தாட்டியம். பாண்டிச்சேரி பட்ணத்துலே கரத்தை இருக்கிற பொழப்பு. அப்பெல்லாம் துபாஷுகளும், வெள்ளக்காரங்களும் தான் கரத்தையிலே சவாரி போவாங்க.

பாத்ததும் எனக்கு மனிசனைப் பிடிச்சுப் போச்சு. எனக்கு ஞானஸ்நானம் குடுத்து வேதக்காரியாக்கி கல்லாணம் முடிஞ்சு வச்சாவ.

பட்ணத்துக்குப் போனப்புறம் தான் இந்த மனிசன் வேனாப் பறக்குற வெயில்லே மாடாட்டம் மனிசனைக் கரத்தையிலே வச்சு இழுத்துட்டுப் போவதைப் பார்த்து நான் பரிதவிச்சுப் போனன். இது தான் நமக்கு "லவிச்" சதிண்ணு சாமி மேலே பாரத்தைப் போட்டுட்டுச் சும்மா இருந்திட்டேன். ஆனா மனிசன் அம்புட்டுச் சிரமத்திலேயும் என்னைய வேலைக்கு அனுப்புனவர் கிடையாது. வஞ்சது இல்லே ராசாத்தி யாட்டம் பாத்துக்குவாரு.

அப்பத்தான் ஒரு நா அலுத்துச்சலித்து ஊட்டுக்கு வந்த மனிசன், இது என்ன நீசப் பொழப்பு மனிசனை மனிசன் வண்டியிலே வச்சுப் பொதி மாடாட்டம் சுமந்திட்டுப் போர

பொழப்பு. நாலு காசு சம்பாதிச்சாலும் இல்லேண்டாலும் மனிசன் மானத்தோட இருக்கணும்ன்டு சொன்ன மனிசன் அண்ணெக்கே கை கரத்தை இழுக்க வேலையை உட்டுக் கடாசிட்டு நிக்காரு.

தெக்குச் சீமையிலே தங்கமும், வெள்ளியும் கொட்டிக் கெடக்கு அள்ளிட்டுப் போலாமிண்டு என்னையும் கூட்டியாந்து, ராவுத்தனுக்கு முறி எழுதிக் கொடுத்து என்னையவும் இந்த மனிசன் அடிமையாக்கிப் போட்டது. இந்த நரகக் குழியிலேந்து கர்த்தராகிய பரமபிதா எண்ணைக்குத் தான் எனக்கும் அந்த மனிசனுக்கும் விடுதலை குடுக்கப் போரானோ தெரியலை என்று மனம் நொந்து சொன்ன வண்ணம் கண்களில் கசிந்து நிற்கும் கண்ணீரைத் துடைத்து பெருமூச்செறிவாள் ஏசுவடியாள். பிறகு தனது மடியில் சயனித்திருக்கும் தனது பாலகனின் அழுக்கும் சிக்கும் நிறைந்த கேசத்தை வருடி விடுவாள்.

ஏசுவடியாள் சொல்லும் கதை பாதியைக் கடக்கும் முன்பே அவள் மடியில் படுத்திருக்கும் ஓசேப்பு தூங்கிப் போவான். மங்கிய நிலவொளியில் வானத்துக்கும் பூமிக்கும் வியாபகமாகி வாமனாக ஊர்எல்லையில் படுத்திருக்கும் மலைக்கோட்டையும் மலை உச்சியில் மூளியாக நிற்கும் அம்மன்கோவிலும் குளமும் அவள் கனவில் வரும்.

குளத்தில் ஓசேப்பும் அவன் சேக்காளிகளும் நிர்வாணமாக ஜலக்கிரீடை ஆடி, ஒடிப்பிடித்து விளையாடியதும், விளையாட்டின் நடுவில் தொடு வானத்து வரையில் பிச்சிப்பூச் சிதறலாகக் கிடக்கும் நட்சத்திர மண்டலத்தை அள்ளி மடியில் சொருகிக் கொண்டு மலையடிவாரத்தை நோக்கித் தலை தெறிக்க ஓடி வருகையில், மலைக்கோட்டையைச் சுற்றி ஆகாயத்தில் பறக்கும் கழுகுக் கூட்டம் அவனையும் சேக்காளிகளையும் தூக்கிக்கொண்டு ஆகாயத்தில் ராட்டினம் ஆடுகையில் யாரோ ராட்சத உருவம் அவனையும் நண்பர்களையும் பாதாளத்துக்குத் தள்ளிக் கொண்டு போவது போல் கனவு கண்டு, உடல் வியர்க்கக் கண்விழித்துப் பார்க்கிறான்

குடிசையும் சுற்றுப்புறமும் வெறிச்சோடிக் கிடக்கிறது. அவன் அடுப்பண்டை கட்டாந்தரையில் படுத்துக் கிடக்கிறான்.

பன்றிகள், மண் சட்டிகளையும் பானைகளையும் உருட்டிப் பதம் பார்த்துக் கொண்டிருக்கின்றன.

ஏசுவடியாளும், ஆசிர்வாதமும் அவனைத் தூங்க வைத்துவிட்டுத் தோல்ஷாப்புக்குப் போய் விட்டிருக்கிறார்கள்.

ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் அவர்களது வாழ்வு இப்படித்தான் கழிந்து கொண்டிருந்தது.

ஓசேப்பு மட்டும் ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு பயங்கர விசித்திரமான கனவுகளைக் கண்டு கொண்டிருந்தான்.

6

தான் பிறந்த பாண்டிச்சேரி பூமிக்குப் போய்விடவேண்டும் என்கிற ஏசுவடியாளின் கனவு நாளுக்கு நாள் கானல் நீராக அவளை விட்டு வெகுதூரம் விலகிக் கொண்டே போயிற்று.

ஏசுவடியாளும், ஆசீரும், அந்த ஊருக்கு வந்து அஸன் ராவுத்தர் தோல் ஷாப்பில் கூலிகளாக அமர்ந்த போது, அட்வான்ஸாகப் பெற்ற ஐம்பது வெள்ளிக்காசுகளை எப்படியாவது தெத்துவளி பண்ணி, முறி எழுதிக் கொடுத்த அடிமை சாசனத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டு ஊருக்குப் போய்விடவேண்டும் என்று பிரம்மப் பிரயத்தனம் செய்தது அத்தனையும் வீணாகப் போனதே அல்லாமல் ஒன்றும் நடக்கவில்லை.

மகிமைக்காசு என்றும் வட்டிப்பணம் என்றும், உழைத்த பணம் எல்லாம் முதலாளியின் கப்பறையில் போய் அடக்கமானதே அல்லாமல் ஐம்பது வெள்ளிக்காசு வட்டியும் முதலுமாக, இரட்டிப்பாகிக் குட்டிமேல் குட்டி போட்டு அவர்களைப் பார்த்து ஏளனம் புரிந்து கொண்டிருக்கிறது.

தோல்ஷாப்புகளில் அடிமை சாசனமான முறி எழுதி ரிஜிஸ்தர் செய்யப்பட்ட எந்த ஒரு தொழிலாளியும் தோல்ஷாப்பு முதலாளிகளின் உடும்புப் பிடியை உதறிவிட்டு வெளியேற முடியாது என்கிற எழுதப்படாத விதி பற்றி அந்த அப்பாவிகளுக்கு ஞானமில்லாமல் போய்விட்டது.

ஏசுவடியாள் முடி தள்ளும் வேலையில் தள்ளப்பட்ட போது, வேலை அவ்வளவு கடினமானதாக இருக்கும் என்று

எதிர்பார்க்கவில்லை. உப்புத் தேய்த்துப் பதப்படுத்தி வரும், மாட்டுத் தோலிலும், ஆட்டுத் தோலிலும் நாட்பட்ட புண்ணில் இருந்து வடியும் சீழ்வாடை கலந்த ஊனின் வாடை தாங்க மாட்டாமல் ஓங்கரிக்க வரும். பலதவணைகளில் வீச்சம் தாங்காமல் வாந்தி எடுத்திருக்கிறாள். ஊன் வடியும் தோல்களை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி தோளில் சுமந்து வரவேண்டும். அல்லது கூடையில் சுமந்து வந்து சுண்ணாம்புக் கலவை ஊடாடும் குழிகளில் போட்டு, முடிகழிந்து அலச வேண்டும்.

முதல் நாள் விவரம் தெரியாமல், மயிலாத்தாளின் எச்சரிக்கையைத் தவறாகப் புரிந்து கொண்டு அலசு குழியில் இறங்கிய போது, பாதங்களும், கால்கள் தொடைவரையிலும் சுண்ணாம்புத் தண்ணீரின் வேகம் தாளாமல் வேக்காட்டில் வெந்து ரணமாகிப் போயிற்று. வேதனை தாளாமல், ஜுரம் கண்டது. அதற்குப் பிறகு தோல்களை அலசுவதற்குக் குழிகளுக்குப் போவது என்பது பேயைக் கண்டுவிட்ட பீதி.

இடுப்பு வரை நிறைந்து கிடக்கும் சுண்ணாம்பு நீரில் நின்று தோல்களை அலசுவதற்குள் உயிரு போய்விடும். ஆடை முழுவதும் சுண்ணாம்பில் ஊறி உடம்பில் சுண்ணாம்புத் தண்ணீர்பட்ட இடமெல்லாம்,நமைச்சல் தாங்காது பிறகு அது புண்ணாகி ரணவேதனை எடுக்கும்.

மேஸ்திரியும், ஏஜெண்டுகளும் சும்மா விட மாட்டார்கள். உடம்புக்குச் சௌகரியம் இல்லை என்று ஒரு நாள் கூட ஓய்வு எடுத்துக் கொள்ள முடியாது.

கணவனுக்கும், பாலகன் ஓசேப்புக்கும் வேண்டி உடல் உபாதைகளை எல்லாம் பொறுத்துக் கொண்டு நரக வேதனை மிக்க பணியை ஏசுவடியாள் செய்தாள். மனம் சோர்வடையும் போது அவளுக்குத் துணையாக நிற்பது அவள் செய்யும் ஜெபம் மட்டும் தான். உலகையும் தன்னையும் படைத்த பிதாசுதன் இஸ்பிரீத் சாந்து தன்னைக் காத்து ரட்சிக்க வேண்டும் என்று மனம் சுசந்து வேண்டிக் கொள்வாள்.

ரணமாகிப்போன உடம்பின் வேதனை தாங்காமல் இரவு வேளைகளில் ஜுரம் ஏற்படும். முதலில் விட்டுவிட்டு வந்த ஜுரம் முறை வைத்து வரத் தொடங்கியது.

மாட்டுத் தோலிலும், ஆட்டுத் தோலிலும் காணப்படும் ரோமக் கால்களைப் பிடுங்கி வீசுகையில் துகள்கள் பட்டு சுவாச கோசங்கள் அடைத்துக் கொண்ட மாதிரி மூச்சு வாங்கும். தாங்காத இருமல் வந்து வதைப்படுத்தும். கடைசியில் அவளை அறியாமலேயே ஏசுவடியாள் ஈழல் நோய்க்கு ஆளாகிப் போனாள்.

ஒரு நாள் அவள் காரி உமிழ்ந்த போது கபத்தில் உதிரம் கட்டித்து விழுந்தது. ஏசுவடியாள் பதறிப் போனாள். தெறிந்து விழுந்த கபத்தை இடது காலால் மண்ணைத் தள்ளி மாய்த்துவிட்டு வேலைக்குப் போனாள். ஆசீர்வாதம் பதை பதைத்துப் போவான் என்று தனக்கு ஏற்பட்ட உபாதையை அவள் வெளியில் சொல்லவில்லை. தனக்குள்ளேயே போட்டுப் புதைத்துக் கொண்டாள்.

கடைசியில் ஓசேப்புக்கு எட்டுவயது ஆகும்போது, தோல்ஷாப்பில் வேலைக்கு நடுவில் இரவில் வானப்பரப்பில் வெள்ளி புறம்படும் நேரத்தில் ஏசுவடியாள் மயங்கிவிழுந்து செத்துப் போனாள் அப்போதும் கூட அவளது நிறைவேறாத ஆசையின் காரணமாக அவளது நயனங்கள் வடக்கு திசையைப் பார்த்துத் தான் இருந்தன.

●

ஏசுவடியாளின் எதிர்பாராத அகால மரணம் ஆசீரைப் பொறி கலங்க வைத்துவிட்டது.

இப்படி, அவளையும் ஓசேப்பையும் மறுக வைத்துவிட்டுப் போய்விடுவாள் என்று அவன் நினைக்கவில்லை.

ஏசுவடியாளின் மரணச் சடங்கை நடத்துவதற்குக் கூட கையில் சல்லிக் காசு கிடையாது. ஆசீர் என்ன, அந்த நகரத்தின் தோல் ஷாப்பில் பணி செய்யும் பெரும்பாலான

தொழிலாளர்களுடைய நிலமையும் அதுவே தான் பிறப்பிலிருந்து இறப்பு வரையில் அவர்கள் தோல் ஷாப்பு முதலாளிகளின் கரங்களையும், தயவையும் எதிர் பார்த்தே வாழ வேண்டியதாக இருந்தது.

ஏசுவடியாள் பக்தி மிக்க கிறிஸ்தவச்சி. கர்த்தருக்குள் ஐக்கிய மாகிப் போனவளை, ஒரு கிறிஸ்தவ பிணத்துக்குச் செய்ய வேண்டிய சகல மரியாதையுடனும் நல்லடக்கம் செய்தாக வேண்டும். சாத்தானை ஆராதனை செய்யும் அஞ்ஞானிகளைப் போன்று ஏசுவடியாளைப் புதைத்துவிட முடியாது நியாயத் தீர்ப்பு நாளில் ஆசீர்வாதம் பதில் சொல்ல வேண்டிவரும்.

மயிலாத்தாளும் பக்கத்துக் குடிசை தோல் ஷாப்புப் பெண்களும் ஏசுவடியாளின் பிணத்தைத் தோல் ஷாப்பிலிருந்து எடுத்துவந்து, குளிப்பாட்டி உடை அணிவித்து, அவர்களாகத் தொடுத்த சிவந்திப்பூ மாலையைச் சூடி பிணத்தை அவனது குடிசையில் சாத்தி வைத்து ஒப்பாரியும் வைக்கிறார்கள். அவர்களால் அவ்வளவு தான் செய்ய முடியும்.

மகன் ஓசேப்புக் கூட ஏசுவடியாள் உயிரோடு இருக்கிறாளா அல்லது நித்திரையில் ஆழ்ந்திருக்கிறாளா என்பது தெரியாமல் மலங்க மலங்க விழித்த வண்ணம் பிணத்துக்கருகில் உட்கார்ந்திருக்கிறான்.

"ஏப்பா ஆசீர், பொணத்தைக் குடிசைக்குள்ளே வச்சுக்கிட்டு எத்தனை நாழி தான் மொகட்டைப் பாத்துப் பெருமூச்சு விட்டுக்கிட்டு ஒக்காந்திருப்பே. பொணத்த நல்லடக்கம் பண்ணதுக்கு ஆக வேண்டியதைப் பாருப்பா." என்று நாயுடு ஷாப்பு ஆவுரான் சொன்ன போது வேறு வழி தெரியாமல் செலவுக்கான பணம் வேண்டுவதற்காகப் பாலகன் ஓசேப்பையும் கூட்டிக் கொண்டு, முதலாளி அஸன் ராவுத்தரைப் பார்ப்பதற்குப் பேசும்பூருக்குப் போனான்.

வெகு காலைமுதலே முதலாளியின் திவ்ய தரிசனத்துக்காக, அந்தக் காம்பவுண்டுக்குள்ளே காத்துக் கிடந்த போது சூரியன் உச்சி திரும்பிய பிறகு தான் ஹாஜியார் அஸன் பாயைத் தரிசிக்கும் பாக்கியம் கிடைக்கப் பெற்றது.

தனது மாளிகையின் முன் கட்டில் கிடந்த ஆனைக்கால் மர நாற்காலியில், உடு நரை படிந்த குறுந்தாடியை வருடிய வண்ணம் ஹாஜியார் அஸன்பாய் வந்து அமர்ந்த போது ஆசீர்வாதம் தலைத்துண்டை அவிழ்த்து கட்கத்தில் சொருகிய படி வணக்கம் சொன்னான்.

தலையில் வட்டமான வெள்ளைத் தொப்பியும், இடுப்பில் கைலியுமாக நாற்காலியில் சாய்ந்து கிடக்கும் கருத்துத் தடித்த உருவத்தைப் பார்த்தபோது ஓசேப்புக்கு பயம் தட்டியது. உடம்பெல்லாம் கரடியின் உடம்பே போல் அடர்த்தியான ரோமம் வளர்ந்திருக்கிறது. ஓசேப்பு ஆசீர்வாதத்தின் முதுகுப் பக்கமாக ஒளிந்து கொண்டான்.

முதலாளி அஸன்ராவுத்தருக்கருகில் மிகவும் பக்தி சிரத்தையாக நின்றிருக்கும் கணக்கப்பிள்ளை கனிபாய் ஆசீருக்கு ஏற்பட்ட அளப்பரிய இழப்பு பற்றி எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தார்.

கனிபாயைப் பொறுத்த மட்டில், கடுக்காய் தொட்டியில் தோல் மாற்றிப் போடும் வேலைக்கு ஆசீரை விட்டால் வேறு ஆள் கிடைப்பது அரிது. எனவே எப்போதுமே கனி பாய்க்கு ஆசீர்பால் ஒரு பரிவு.

அஸன்ராவுத்தரின் காதோரம் குனிந்து நின்று கீதாபதேசம் செய்வதே போல் கனிபாய் சொன்ன சேதியைக் கேட்டபோது அஸன் பாயின் இல்லிக்கண் இமைகள் விரிந்து சுருங்கின. முகம் ஒருவிதமாகக் கோணிக் கொண்டது.

"மாதர் சோத், அரே சைத்தான் விடிஞ்சதும், விடியாததுமா மவுத்தான சேதியத் தான் சொல்லவந்தீரா அத்தா" என்று கோபமாகச் சொல்லிவிட்டுத் தன் முன்னாள் சோகமே உருவாக நிற்கும் ஆசீர்வாதத்தையும், கணக்கப் பிள்ளையவும் மாறி மாறிப் பார்த்தார். பிறகு உனக்கு என்ன வேண்டும் என்று கேட்பதே போல் வெறுப்புடன் அவனைப் பார்த்தார்.

"அவளை நல்லடக்கம் செய்யறதுக்குக்கூட கையிலே சல்லிக்காசில்லே மொதலாளி நீங்கதான் காப்பத்தணும்" ஆசீர் கேட்டான்.

அஸன் ராவுத்தருக்குப் பளியாகக் கோபம் ஏற்பட்டது.

"இந்த வேசை மக்களுக்கு இதுவே தான் சோலியாப் போச்சுது. இன்ஸால் அல்லா. இவன்களுக்கு அன்னாடம் கூலி கொடுக்க வட்டிக்கு வேண்டித்தான் அழ வேண்டியிருக்கு. அத்தா நான் இந்த தோல் ஷாப்புத் தொழிலை நடத்தனும்ன்டு நெனச்சாகளா. இல்லே ஊத்தி மூடிட்டுப் போவனும்ன்டு நெனச்சாகளா"கோபமாக கணக்கப் பிள்ளையைப் பார்த்துப் பேசியவர் தனது தாடியை வருடிய வண்ணம் சிறிது நேரம் உட்கார்திருந்தார். பிறகு ஹாஜியார் புத்திமதி சொல்வது போல்

"இந்த சனங்களுக்கு ரெண்டு சல்லி சேத்து வைக்க ஏலாது. சைத்தான்க கெடைக்கிற காசு அத்தனையவும் குடிச்சுத் தொலைச்சுப் போட்டு நம்மளை வந்து நச்சரிக்கது" என்றவர்

"சல்லிக்காசு குடுக்க முடியாதுண்டு சொல்லிப் போடுங்க அத்தா மையத்தை அவள் என்னவும் செய்யட்டும்"என்று வெறுப்பு ததும்பச் சொன்னவர்

"ஓம் சம்சாரம் மௌவுத்தான சமுசாரத்தைச் சொல்லிட்டேல்லே. இண்ணெக்கி வேணண்டா லீவு எடுத்துக்க. மையச் செலவுக்கு அல்லாம் நம்மால சல்லிக்காசு தர ஏலாது" என்ற தீர்க்கமாகச் சொன்னவர் கனிபாயிடம் உத்தரவுபோடுவது போல்.

"இதெல்லாம் யாவாரம் அத்தா. நாம என்ன தர்மச் சத்திரமா நடத்துதோம். கறாரா நடந்துக்கங்க" என்று தனது சிப்பந்திக்கு உபதேசம் செய்து கொண்டிருந்த ஹாஜியார் கண்ணில் ஓசேப்பு தென்படவும்

"லே! அது ஆருடா ஒம் பொடியனா?" சாதாரணமாக வினவுவது போல் கேட்டபோது, ஓசேம்பைப் பிடித்துத் தனது காலுக்கடியில் நிறுத்திக் கொண்டான்.

"பய என்ன டே செய்யறான். எங்காச்சும் டீக் கடையிலே நிறுத்தி வச்சிருக்கையா" மிகவும் அக்கறைப்பட்டவர் போல் கேட்கவும், அஸன் ராவுத்தரின் உள்ளக் கிடக்கையை அறிந்திராத ஆசீர்வாதம்.

"சும்மாதான் இருக்கான் மொதலாளி. பங்குச் சாமியார் நடத்திற பள்ளிக் கோடத்துக்குப் போயிட்டு வாரான். ஏதோ நாலு எழுத்து படிச்சா நம்மளாட்டம் நொம்பலப்பட வேண்டாம் பாருங்க" அப்பாவியாகச் சொன்னான்.

இப்படிச் சொல்லவும் ஏதோ பெரிய ஹாஸ்யத்தைக் கேட்ட மாதிரி அஸன் ராவுத்தர் ஆகுதியான உடம்பு குலுங்கச் சிரித்தார்.

"அட மாடா, சாமியாருக்கு வேறே வேலை இல்லை. வேலையத்த வேலையச் செய்யறான் பாரு. சாமியாரு எண்ணெக்கிடா, லே, பள்ளுப்பறை எல்லாம் என்டைக்கு பள்ளிக் கோடம் போய் படிச்சாவ. படிப்புத்தான் ஏறுமா. நீங்க அல்லாம் ஒழைக்கப் பொறந்தவங்க, ஒம்மவன் படிச்சுக் கலைக்டர் ஆவப்போரானாக்கும். ஹராம்டா ஹராம்." என்று சொல்லிவிட்டு

"இந்த வயசுலே சேத்து உட்டாத்தாம்லே நல்லா வசங்கி வேலையக்கத்துக் குவான்க ஒனக்கும் ஒத்தாசையா இருக்கும்."

ஆசீர்வாதத்துக்கு ஒன்றும் புரியவில்லை.

கணக்கப்பிள்ளை கனிராவுத்தரைப் பார்த்து ஏதோ ரகஸ்யமாகப் பேசிய முதலாளி.

"ஒம் பொண்டாட்டி மையச் செலவுக்குப் பணம் கேட்டாயில்லே. நீயும், இந்தப்பொடியனும் முறியிலே கை ஒப்பம் வச்சிட்டுச் சல்லிய வாங்கிட்டுப்போ. மத்ததெல்லாம் பொறவு பாத்துக்கலாம்." என்று சொன்னவாறே தனது இருக்கையினின்றும் எழுந்தார்.

"பச்ச மண்ணுசாமி. இந்த வயசுலேயா நறுங்கிப்போவும்."

கெஞ்சாமல் கெஞ்சினான். மகனைப் பற்றிய கனவெல்லாம் நொறுங்கிப் போன வேதனை.

ஆசீர்வாதம் ஒரு கணம் பிரம்மை பிடித்த மட்டில் நின்றிருந்தான். ஓசேப்புக்கு ஒன்றும் விளங்கவில்லை. தந்தையின் சோக முகத்தையே பார்த்த வண்ணம் நின்றிருந்தான். அவனுக்கு அழ வேண்டும் போல் பட்டது.

ஆசீர்வாதத்தின் மனக்கண் முன்னால் தெரு நாயைப் போல் செத்துக்கிடக்கும் ஏசுவடியாளின் சடலம் தென்பட்டது.

அவன் மௌனமாக, கனிராவுத்தர் நீட்டிய அடிமை சாஸனத்தில் தனது கைரேகையையும் பச்சிளம் பாலகனான ஓசேப்பின் கை ரேகையையும் பதித்தான்.

ஓசேப்பும் அடிமைப்படுத்தப்பட்டதன் அடையாளமாக அவனை ஈன்ற ஏசுவடியாளின் இறுதிச் சடங்குக்காக ஆசீர்வாதத்தின் கையில் பதினைந்து வெள்ளிக்காசுகள் வீசப்பட்டன.

●

தான் பிறந்த பாண்டிச்சேரிச் சீமையைப் பற்றிய ஏசுவடியாளின் கனவைப் போன்று மகனைப் பற்றிய ஆசீரின் கனவும் பாலைவனத்தில் பாய்ச்சிய நீராகச் சுவறிப்போய்விட்டது.

சாமியார் பள்ளிக்கூடத்துக்குப் போன ஓசேப்பு. தூக்குப்போணியும், கோணியுமாக அஸன் ராவுத்தர் தோல்ஷாப்புக்கே போய்க் கொண்டிருக்கிறான்.

ஏசுவடியாளின் மரணமும், மகனின் அடிமைப் பிழைப்பும் ஆசீரை வெகுவாகப் பாதித்து விட்டிருந்தது. தனக்கும் இந்த உலக நடவடிக்கைகளுக்கும் நடுவில் உடைக்க முடியாத மதில் உருவாகி விட்டதே போல் ஆசீர்வாதம் உணரலானான். யாருடனும் பேசிக்கொள்வதில்லை. வேலைத்தலத்தில் கூட சக-தொழிலாளர்களுடன் பேசுவது கிடையாது. எல்லோரிடமும் அவன் ஒரு ஊமையனைப்போல் நடந்து கொண்டான்.

ஓசேப்புடன் கூட முன்னைப்போல வாஞ்சையுடன் நடந்து கொள்வதில்லை. தன் மகனைத் தானே வஞ்சித்துவிட்டது போன்ற மன உளைச்சலால் துவண்டு நின்றான். ஓசேப்பு கடுமையாக வேலை வாங்கப்படும் போதும் ஏஜெண்டுகளின் சாட்டையடிக்கு அந்தப் பாலகன் ஆட்படும் போதும், ஒன்றும் செய்ய முடியாதவனாகத் தலையில் அடித்துக் கொள்வான். கடுமையான வேதனையால் அவதிப்படும் மிருகத்தைப் போல் அலறித் துடிப்பான்.

வேலை முடிந்து குடிசைக்குள் முடங்கிக் கொள்ளும் போது கூட ஆசீர்வாதம் முந்தையக் காலம் போல நித்திரை போவது கிடையாது. தகப்பனாரின் ஸ்பரிச சுகத்தில் தூங்கிப்போகும் ஓசேப்பு நடுச்சாமத்தில் அலறியடித்துக் கொண்டு உசும்பிப் பார்ததால் குடிசை இருளடைந்து கிடக்கும். ஆசீர்வாதம் மதுரை ரஸ்தாவில் நடப்பட்டிருக்கும் மயில் கல்லில் கூட்டத்திலிருந்து விரட்டியடிக்கப்பட்ட செந்நாயாக உட்கார்ந்து ஏசுவடியாள் பிரேதம் புதைக்கப்பட்ட தேவாலயத்தின் முகப்பையும் வானப் பரப்பையும் வெறித்துப் பார்த்த வண்ணம் உட்காந்திருப்பான். அடிக்கடி பாரம் சுமந்து களைத்துப் போன வண்டிக் காளைகளைப் போல் பெருமூச்செறிவான். அப்போதெல்லாம் ஓசேப்புக்கு தனது தந்தையைப் பார்க்க மிகவும் பயமாக இருக்கும். அவன் முகம் விகாரமாகத் தென்படும்.

கனவு கண்டதேபோல் உட்காந்திருக்கும் ஆசீர், பார்வையில் ஓசேப்பு பட்டுவிட்டான் என்றால் மகனை இருகரங்களாலும், ஆரத்தழுவி மார்போடு அணைத்தவண்ணம்

"அட சண்டாளி முண்டே என்னயையும் இந்தப் பாலகனையும் தவிக்க விட்டுட்டுப் பூட்டையடி! எங்களையும் கூட்டிட்டுப் போயிருக்கலாமே பாவி மவளே" என்று அங்கலாய்ப்பான்.

துக்கம் எல்லையை மீறிப் போய்விட்டதாலோ என்னவோ ஆசீர்வாதம் கண்ணில் சொட்டுக் கண்ணீர் கூடத் துளிர்ப்பதில்லை.

சில நாட்களில் இரவு வேளையில் ஆசீர்வாதம் குடிசையில் காணாமல் போய்விடுவான். அப்போதெல்லாம் அவன் கல்லறைத் தோட்டத்துக்குப் போய், ஏசுவடியாளின் புதை குழியின் அருகில் முழந்தாழில் நின்று மனம் கசந்து புலம்பிவிட்டு வருவதாகக் கண்டவர்கள் சொல்வதுண்டு.

அப்படிப்பட்ட இரவுகளில் ஓசேப்புக்கு ஆதரவாகவும், பாதுகாவலாகவும் இருப்பது நாயுடு ஷாப்பில் வேலை செய்யும் தாயம்மாள் மட்டும் தான். ஏசுவடியாள், தனக்குச் சாவு நெருங்கிவிட்டது என்ற உள்மனம் உணர்த்தியதாலோ என்னமோ,

"தாயம்மா, நான் இல்லாம போனா நீ தான் தாயே எம் புள்ளெயப் பாத்துக்கணம். தாய்க்குத் தாயா எம்புள்ளையவும் எம் ஊட்டுக்கார மனிசனையும் பாத்துக்கணம் அப்பாவி மனிசன்!" என்று அடிக்கடிச் சொல்லி அங்கலாய்ப்பாள். கடைசியில் ஏசுவடியாள் தாயம்மாளிடம் கேட்டுக் கொண்ட படியே ஏசுவடியாள் செத்துப் போன போது, அதை ஒரு தெய்வ கட்டளையாகவே தாயம்மாள் கருதலானாள்.

எனவே, தனிமையில் கிடந்து தவிக்க விடாதபடி, ஆசீர் இல்லாத இரவுகளில் தாயம்மாள் ஓசேப்பைத் தனது ஓலைக் கொட்டடிக்குக் கூட்டி வந்து தன்னுடன் படுக்க வைத்துக் கொள்வாள்.

தாயம்மாளுக்கு வயது முப்பத்தைந்தைத் தாண்டிவிட்ட போதும் வயது தெரியாத தேகக்கட்டு. மாநிறம் ஓங்கு தாங்கான உடல்வாகு. கருணை ததும்பும் நயனங்கள். பார்வையில் எதையோ இழந்துவிட்ட இனம் தெரியாத துக்கத்தினின்றும் ஈடேறிவிட்ட பார்வை. அவளைப் பார்க்கும் போதே, மற்ற குமரிப் பெண்களைப் போலல்லாமல் அவள் பால் மரியாதை கலந்த ஈர்ப்பு ஏற்படும் அளவுக்கான பெண்மை கலந்த உறுதி மிக்க பார்வை. வஞ்சக மற்ற தெளிந்த பேச்சு.

இவ்வளவு அழகும் குணமும் இருந்தும் சிற்றின்பத்தின் நாட்டம் இல்லாதவள் போல் தாயம்மாள் எந்த ஒரு

ஆணையும் விரும்பவில்லை. திருமண உணர்வே இல்லாமல் இருந்தாள்.

தாயம்மாவுக்குப் பூர்வீகம், தஞ்சாவூருக்கு வடக்கே ஏதோ ஊர் என்றும், அவள் தகப்பனும் தாயம்மாவும், பஞ்சம் பிழைக்க தெற்குச்சீமை நோக்கி வந்த போது, அரவக் குறிச்சிக்கு வருகையில் அவள் தகப்பன் தவறி விட்டதாகவும் அரவக்குறிச்சியைச் சேர்ந்த கருணை மிக்க முஸல்மான் ஒருவர் இவளை இங்கு வந்து சேர்த்துவிட்டதாகவும் தோல்ஷாப்புத் தொழிலாளர்கள் பேசிக்கொள்வதுண்டு. ஆனால் தாயம்மாள் மட்டும் தன்பூர்வீகம் பற்றியும், ஜாதி பற்றியும் பிரஸ்தாபித்தது கிடையாது. அவளுக்கே தன் ஜாதி மறந்து போய்விட்டபோது அவளால் தன் ஜாதியைப் பற்றி எப்படிச் சொல்ல முடியும். எனவே அனாதியான ஆண்டவனைப் போலத் தாயம்மாளுக்கும் ஜாதி கிடையாது.

ஆனால், எல்லோருக்கும் உதவி செய்யும் கருணைமிக்க நற்குணம்.. எனவே, ஏசுவடியாள், கையைக் காட்டிவிட்டு மரணத்தைத் தழுவிக் கொண்டதற்குப் பிறகு ஓசேப்பு மீது அவளுக்குப் பரிதாபத்தோடு கூடிய கருணை ஏற்பட்டதில் வியப்பில்லை.

நாயுடு ஷாப்பில் வேலைகளை முடித்துக் கொண்டு குடிசைக்குத் திரும்புகையில்அஸன் ராவுத்தர் ஷாப்பில் ஓசேப்புக்காகக் காத்து நிற்பாள் அவனுக்காக மண் சட்டியில் சோளக்கழியும், கொள்ளுத் தொகையலும் வைத்து மதிய உணவுக்குக் கொடுத்துவிடுவாள்.

தாயற்ற சிறுவனான ஓசேப்பின் மீது தாயம்மாளுக்கு ஏற்பட்ட கருணை, அன்பாக உருவெடுத்துப் பாசமாகப் பரிணமித்துக் கடைசியில் அவனைத் தான் பெறாமல் பெற்ற பிள்ளையாகவே பாவிக்கலானாள்.

பிறரிடம், கருணையையோ பரிதாபத்தையோ, உதவியையோ எதிர்பாராத ஆசீர்வாதம் அவ்வப்போது அவள் உவந்து செய்யும் உதவியை மறுத்தபோதும், சில சமயம் கடிந்து கொண்டான் என்றாலும்,அதைத் தாயம்மாள்

மௌனமாகச்சகித்துக் கொள்வாள். மீறினால் ஆசீர்வாதத்தின் மிருகத்தனமான நடவடிக்கைகளையும் போக்கையும் சாடவும் செய்வாள். ஏனோ, அவனால் ஓசேப்பின் பால் தாயம்மாள் காட்டும் பாசத்தையும், தன் பால் காட்டும் அக்கறையையும் உதறித் தள்ளிவிட முடியவில்லை. பிடாரனின் மகுடிக்கு அடங்கிப்போகும் பாம்பைப் போல், தாயம்மாளின் ஆக்கினைக்கு அவன் அடங்கிப் போவான்.

எனவே, தோல்ஷாப்புத் தொழிலாளர்கள் இந்த உறவை வேறுவிதமாகக் கற்பனை செய்து கொண்டார்கள். ஓசேப்பின் மீது தாயம்மாளுக்கு ஏற்பட்ட பரிவும் பாசமும் மனைவியை இழந்து ஒரு பரதேசியைப்போல் அலையும், அண்டைக் குடிசை வாசியான ஆசீர்பால் காட்டிய அக்கறையும் வேறுவிதமாகக் கற்பிதம் பண்ணப்பட்டு, ஓவலையாகவும் வதந்தியாகவும் உலவ விடப்பட்டபோது தாயம்மாள் எப்போதும் போல் பதில் பேசாமலே அலைந்தாள். அந்த வதந்தி மேலும் வலுவடைந்த போது தாயம்மாளுக்குள் வைராக்கியம் வலுத்துப் போயிற்று. கற்பனையை நிஜமாக்கினால் என்ன என்கிற எண்ணம் அவளுக்குள் நாளுக்கு நாள் வலுப்பட்டுக் கொண்டு வந்தது.

அப்போது விடுமுறை நாளான ஒரு வெள்ளிக்கிழமை தாயம்மாளுக்கு விசித்திரமான அந்த உணர்வும் யோசனையும் ஏற்பட்டது.

அன்றைய தினம் தாயம்மாள் ஓசேப்புக்கு எண்ணெய் ஸ்நானம் செய்வித்து, தானும் விசேஷமாக மஞ்சள் தேய்த்து ஸ்நானம் செய்திருந்தாள்.

ஓசேப்புக்குத் தாயம்மாள் எண்ணைக் குளியல் செய்திருந்தாள் என்றால் கவுச்சி உணவு கிடைக்கும் என்று மிகமிக மகிழ்ச்சியான தினம்.

மாலை மயங்கும் வேளையில் சமைத்திருந்த அயிரை மீன் குளம்பையும், அரிசிப் பருக்கை உணவையும், ஓசேப்புக்குப் பரிமாறி தானும் வயிறாற உண்டாள்

வெகுகாலமாகவே உடுத்தாமல் அடுக்குப் பானைக்குள் பத்திரப்படுத்தி வைத்திருந்த கண்டாங்கிச் சேலையை ஏதோ திருவிழாவுக்குப் போகிறவள் போல் உடுத்திக் கொண்டாள். ஒரு நாளுமில்லாத திருநாளாக அவள் கூந்தல் சீவிக் கொண்டை போட்டுக் கொண்டையின் முகப்பில் ஒரு செவந்திப் பூவையும் சூடியவள் மிகவும் மகிழ்ச்சி கரமாகத் தென்பட்டாள்.

பக்கத்துக் குடிசைக்காரியிடம் இரவல் வாங்கி வந்திருந்த அலுமினிய தூக்குப் போணியில் சமைத்த சோற்றில் குழம்பையும் ஊற்றிக் கையில் எடுத்துக்கொண்டு ஓசேப்பையும் மறுகையில் பிடித்துக் கொண்டு ஆசீர்வாதம் குடிசைக்குள் போனாள்.

ஆசீர்வாதம், தன்மைந்தனைக் கையில் பிடித்தவண்ணம் புதுமணப் பெண்ணாகத் தன் எதிரில் வந்து நிற்கும் தாயம்மாளைப் பார்த்து மலைத்துப் போனான். அவளது தோற்றமும் பார்வையும் அவனுள் ஒரு வித அச்சத்தை ஏற்படுத்தியது.

ஓசேப்பு, தனது சேக்காளிகளுடன் விளையாடுவதற்காகக் குடிசையை விட்டு வெளியே ஓடினான்.

வெளியே லேசாக இருட்டிக் கொண்டு வந்தது அவர்கள் தனிமையில் விடப்பட்டனர்.

"என்ன தாயம்மா ஒரு நாளுமில்லா திருநாளா இப்படி வந்திருக்கே" தட்டுத் தடுமாறிச்சொன்னான் ஆசீர்.

"நான் ரெம்ப நாளா ஆசைப்பட்டு ஒனன்கிண்ணே ஆக்கிட்டு வந்திருக்கன் சாப்பிடு. அப்புறமாப் பேசலாம்."

அவள் கொண்டு வந்திருக்கும் தூக்குப் போயிணியின் மூடியைத் திறந்து அவன் முன்னால் வைத்த வண்ணம் சொன்னாள்.

அவன் ஒன்றும் பேசாமல், சட்டியில் இருக்கும் உணவைப் பார்த்த வண்ணம் உட்காந்திருந்தான்.

அயிர மீன் குளம்பின் வாடை சுவாசிப்பதற்கு இனிமையாக இருந்தது.

"தப்பா எடுத்துக்காத தாயம்மா. நீ ஆக்கிட்டு வந்த சாப்பாட்டை நான் எண்ணைக்கிச் சாப்பிட்டிருக்கேன். ஏசுவடியா போனதோட அம்புட்டையும் நான் ஒதுக்கி வெச்சிருக்கேன்."

தரையைப் பார்த்தவண்ணம் சொன்னான். அப்போது தாயம்மாள்

"ஏசுவடியா மட்டும் தான் பொம்பளையா நாங்களெல்லாம் ஒங்கண்ணுக்குப் பொம்பளையாத் தெரியலையா" என்று கேட்டாள்

அவன் ஏறிட்டுப் பார்த்தபோது அவனைப் பார்த்து சுந்தரமாகச் சிரித்தாள். அவளது கன்னக் குழிகளில் ஏற்பட்ட சுழிப்பு அவனை நிலை குலைய வைத்தது. கரம்பை மண்ணுடன் காட்டுப் பச்சை மூலிகைகளையும் சேர்த்துத் தலையை அலசியிருந்ததால் அவள் உடம்பில் இருந்து நறுமணம் வீசியது. ஒரு தோல்ஷாப்புப் பெண்ணின் உடம்பில் இருந்து சகிக்க முடியாத துர்நாற்றத்தைத் தான் அவன் சுவாசித்திருக்கிறானேயல்லாமல் இப்படிப்பட்ட நறுமணத்தை அவன் சுவாசித்ததே கிடையாது.

இடது கரத்தால், தரையை நோண்டியபடி உட்காந்திருந்த தாயம்மாள் தலையை உயர்த்தி

"ஒங்கிட்ட ஒரு வெசயத்தைக் கேட்டுத் திடம் பண்றதுக்கு வேண்டித்தான் இப்படி உடுத்திட்டு வந்தருக்கன்"

"அப்படி எங்கிட்டே என்ன கேக்கப்போற தாயி" அவன் குரலில் நடுக்கம் கண்டது. தான் தடுமாறிப் போய்விட வேண்டிவருமோ என்கிற பீதி வெளியில் இருள் பரவிக் கொண்டிருந்தது "ஒன்னையும் என்னையும் சேத்து இந்த சனங்க உடுக்கடிக்கிறது தெரியுமில்லே ஒனக்கு"

அவளையும், அவனையும் சேர்த்து தோல் பதநிடும் தொழிலாளர்கள் தவறாகப் பேசுவது அவனுக்குத் தெரியும்

சந்தேகப்பட்டுக் கேட்ட தொழிலாளர்களிடம் கூட அவன் சண்டாளமாகச் சண்டை பிடித்திருக்கிறான்.

குடிசைக்கு வெளியே வெறித்துப் பார்த்த வண்ணம் வெகுநேரம் வரையில் உட்கார்ந்திருந்த ஆசீர்

"ஊர் ஆயிரம் சொல்லும் நம்ம மனசு சுத்தமா இருக்கே. அது போதும்."

ஒரு ஞானியைப் போல அவன் பேசிய போது தாயம்மாளுக்குக் கோபம் ஏற்பட்டது.

"ஒனக்கென்ன நீ ஆம்புளை. போயில விரிஞ்சாப் போச்சி. பொட்டச்சி சிரிச்சா போச்சி. நான் பொம்பளை ஒன்னை ஆட்டம் நான் அல்லாத்தையும் தொடைச்சு எரிஞ்சிட முடியாது" கோபம் நெறிக்கக் சொன்னாள்.

அவனால் அவளது கேள்வியை எதிர் கொள்ள முடியவில்லை.

நீ என்னை என்ன தான் செய்யச் சொல்கிறாய் என்று கேட்பதே போல் அவளைப் பார்த்தாள்.

ரஸ்தாவில் டி.வி.எஸ்.கரிவண்டி முக்கி முனங்கி மதுரையை நோக்கிப் போகும் இரைச்சல் கேட்கிறது தொடர்ந்து வெளியே நாய்கள் எலும்புக்காக ஒன்றோடு ஒன்று உக்கிரமாகச் சண்டை போடும் சத்தம் அமைதியைக் கிழித்து எழுகிறது.

அவள் ஒளிவு மறைவின்றி நேரடியாகப் பேசலானாள் "எந்த ஆம்பிளையையும் நான் நெனச்சது கெடையாது. எந்த ஒரு ஆம்பிளையோட கையும் எம்மேல பட்டதும் கெடையாது. இத்தனை காலம் கன்னி கழியாமலே வாழ்ந்திட்டேன்." இப்படிப் பேசிவிட்டு அவனைப் பார்த்தாள். காடா விளக்கின் வெளிச்சத்தில் அவன் முகம் விகாரமாகப்பட்டது. முகத்தில் வியர்வை அரும்பியிருந்தது

அவன் உணர்ச்சி வசப்பட்டிருக்க வேண்டும்.

"ஏசுவடியாளோட சாவு வாக்கைக் காப்பத்தணும்ன்னு தான் ஒம்மவன் ஒசேப்பு மேல நா அக்கறை காட்டினேன். பச்சிளம் பாலகனைப் பார்க்கையிலே பரிதாபமாகப் பட்டது. அப்பால அவன் பேரிலே ஒரு அன்பு. பாசம் இப்போ அவன் இல்லாம என்னால வாழ முடியாது. எம் புள்ளையாவே ஆயிப் போயிட்டான். அவனை உட்டுட்டு என்னால இருக்க முடியாது. ரோசனைப் பண்ணிப் பார்த்தன். நாம குடும்பமா இருக்கணமிங்கிற முடிவுக்கு வந்துட்டன் அதனால தான் ஊர் ஒவலையக் கூட நான் எதுக்கலை.

ஒவலையாக் கெடக்கதை நெசமா ஆக்கிப் போட்டா எந்த வேசமக்க நம்மளைக் கேவலமாகப் பேசும். இதச் சொல்றதுக்கோசுரம் நா எத்தனை நாள் காத்துக் கெடந்தன் தெரியுமா. எத்தனை ராவு தூக்கமில்லாம எத்தனையோ ராவு கடந்து போயிருக்கு. எம்புட்டு மனச்சிரமப் பட்டிருப்பன் தெரியுமா"

இப்படிப் பேசிவிட்டு, ஏனோ அவனது பார்வையை எதிர் கொள்ளச் சிரமப்படுபவள் போல் தலையைக் குனிந்து கொண்டாள்.

அவள் பேசுவதை மௌனமாகக் கேட்வாறே அடுப்பங்கரையோரம் உட்கார்ந்திருந்த ஆசீர்வாதம் எழுந்து நின்றான். அழுகையே வராத அவனது நயனங்களில் நீர்சுரந்து நின்றது.

பாச உணர்வால் சுட்டுண்டவனாக அவளைப்பார்த்து

"தாயம்மா. நா என்ன செய்வேன். என் நெஞ்சிக்குள்ளே. அந்தச் செருக்கி மவ ஏசுவடியா அல்லாம வேறு எந்தப் பொம்பளைக்கும் எடம் கெடையாதே. பரலோகத்திலே அவ எனக்காவ வேண்டி காத்திட்ருப்பா. நியாயத்தீர்ப்பு அண்ணெக்கி ஆண்டவனுக்கு நா என்ன பதில் சொல்ல முடியும்" என்று சொன்னவன் இடது புறங்கையால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு

"என்னை மன்னிச்சிரு தாயம்மா. எம்மவனை மட்டும் ஒங்கிட்டேயிருந்து பிரிக்க மாட்டன்" என்று சொன்னவன் அடிசையை விட்டு வெளியே போனான்

விளையாடப் போன ஓசேப்பு தாயம்மாள் மடியில் விழுந்தபோது, அவனைத் தனது மார்போடு அணைத்த தாயம்மாள் அவனது சுன்னங்களில் அவன் திணறிப் போகும் வரையில் முத்தம் கொடுத்தாள்.

"இந்த தாயம்மா நெஞ்சுக்குள்ள ஒங்கப்பனைத் தவித்து வேறே ஆம்பிளைக்கு எடம் கெடையாதுடா" என்று சொன்னவள் ஏதோ திடமான முடிவுக்கு வந்தவள் போல

"இந்த ஆம்புளை எங்கே போறான் பாப்பம்" என்று வர்மித்த வண்ணம் ஓசேப்பைக் கையில் பிடித்துக் கொண்டு தனது குடிலைப் பார்த்து நடந்தாள்.

அவள் ஆசிருக்காகச் கொண்டு வந்திருந்த மீன்கறியும்,சோறும் அடுப்பு மேட்டிலேயே இருந்தது.

●

அந்தச் சம்பவத்துக்குப் பின் ஆசீர்வாதம் மிகவும் வதங்கிப் போனான்.

தாயம்மாளைப் பார்க்கப் பயந்தவன் போல இரவு குடிசைக்குப் போவதைக்கூடத் தவிர்த்துவிட்டான்.

ஆனால் அவனுக்குப் பட்டுவாடா செய்யப்படும் சம்பளத்தை மட்டும் சல்லிக்காசு குறையாமல் தாயம்மாளிடம் கொடுத்து விடுவான். மகன் ஓசேப்பிடம் கூட அவ்வளவு அன்பு காட்டுவது கிடையாது.

தாயம்மாள் உரிமையுடன் திட்டினால் கூட மௌனமாகக் கேட்டுக் கொண்டு போய்விடுவான். பதில் பேசுவது கிடையாது.

தாயம்மாள் கூட ஒரு நாள் அவன் தன்னோடு குடும்பம் நடத்தப் போகிறான் என்று திடமாக நம்பினாள்.

அந்த வட்டாரத்துத் தோல்ஷாப்புத் தொழிலாளர்கள் அனைவரும் அப்படித்தான் நம்பினார்கள்.

கடைசியில் "பாஸ்கா" பண்டிகை நாளன்று ஆசீர்வாதம் ஏசவடியாளின் கல்லறை மீது பரிதாபமாக இறந்து கிடந்தான். முகம் மட்டும் மிகவும் விகாரமாக விசனமுற்ற மட்டில் காணப்பட்டது.

ஆசீர்வாதத்தின் சடலம் குடிசைக்குள் கொண்டுவரப்பட்ட போது கட்டிய கணவனைப் பறி கொடுத்த மாதிரி தாயம்மாள் அவன் பிணத்தின் மீது விழுந்து புரண்டு அழுதாள்.

ஆசீர்வாதத்தை முனீஸ்வரன் அடித்துக் காவு கொண்டுவிட்டது என்று பெண்கள் பேசிக் கொண்டார்கள். ஆனால் தாயம்மாள் மட்டும் அதை நம்பவில்லை ஏசவடியாள் பால் அவன் வைத்திருந்த பாச உணர்வே அவனைக் கொன்றுவிட்டது.

ஆசீரின் மரணத்துக்குப்பின் ஓசேப்பு முழுமையாக தாயம்மாளின் அரவணைப்பிலே வாழ வேண்டியதாயிற்று.

இப்போது தாயம்மாள் அவனுக்குத் தாயார். தாயம்மாளுக்கு ஓசேப்பு தான் மகன்.

இப்போது கூடத் தாயம்மாளுக்குச் சொல்லாமல் ஓடி வந்ததற்காக அவனுக்கு உள்ளூற மனவருத்தம்.

எப்படியும் அருக்காணி அவளைச் சமாதானப் படுத்திக் கொள்வாள் என்கிற நப்பாசை ஓசேப்புக்கு.

●

7

கிழக்கே சிறுமலைச் சிகரத்தில் விடிவின் கீறல் தென்பட்டது.

ரெயில்வே ஸ்டேஷனிலும் உயிர் பிடிக்கத் தொடங்கியது. பாயின்ஸ்ட்மேன் ரெங்கக் கோனார், வண்டி பக்கத்துக் கெடியை (ஸ்டேஷனை) அடைந்துவிட்டது என்பதற்கு அறிகுறியாகப் பிளாட்பாரத்தை ஒட்டிய இரும்புத்தூணில் கட்டப்பட்டிருக்கும் துண்டு தண்டவாளக் கம்பியில், இரும்பால் அடித்து ஒலி எழுப்பி பிளாட்பாரத்தில் உட்கார்ந்திருக்கும் பிரயாணிகளையும் படுத்துக் கிடப்பவர்களையும் உஷார் படுத்தலானான்.

ஸ்டேஷன் மாஸ்டர் சுப்புணியும், ஒரு செம்பு "ஜலத்தில் முகத்தை அலம்பி வாயையும் கொப்பளித்துவிட்டு, கோட்டை மாட்டிக் கொண்டு வண்டியை வரவேற்பதற்குத் தயாரானார். கௌண்டரில் டிக்கட் பெறுவதற்கு ஆள் இல்லாததால் கவுண்டரை மூடிவிட்டுப் பச்சை சிவப்புக் கொடிகளை விரித்து எடுத்துக் கொண்டு பிளாட்பாரம் போவதற்கு ஸ்டேஷன் மாஸ்டர் அறையை விட்டு வெளியே வந்தார்

ஸ்டேஷனுக்கு உள்ளிலும், வெளியிலும் இருக்கும் ஆலமரங்களிலும், அரச மரங்களிலும் தங்கி இரவைக் கழித்த பட்சி ஜாலங்கள் உணவைத் தேடி, வயல் வெளிகளுக்கும் மலையடிவாரங்களுக்கும் பிரயாணப்படும் எத்தளிப்பில் காட்டுக் கூச்சல் போட்டுக் கொண்டிருக்கின்றன.

பிள்ளையார் கோவில் அரச மரத்திலும் ஆலமரக் கிளைகளிலும் கிடந்த குரங்கினம் தங்களது குடும்ப

சமேதராகப் பிளாட் பாரத்தில் ரோந்து வர வாரம்பித்து விட்டன. ஒன்றிரண்டு கடுவன் குரங்குகள் வழக்கம் போல், தின்பண்டங்கள் வேண்டி பிள்ளைகளையும், பெண்களையும் மிரட்டும் உபாயத்தில் ஈடுபட்ட போது, வெண்டர்களும், போர்ட்டர்களும் குரங்குக் கூட்டத்தை அண்டவிடாமல் விரட்டிக் கொண்டிருக்கின்றார்.

வடக்கே போகும் கூலி ரெயில் வண்டி, ஸ்டேஷனை நெருங்கிவிட்டதற்கு அடையாளமாக ஒத்தைக் கண் பாலத்தருகில் வந்ததும், தனது வரவை அறிவிக்கும் வகையில் நீட்டி முழக்கி விசில் அடித்துப் புகைகையக் கனமாகக் கக்கி வான மண்டலத்தைக் கரும்புகை மண்டலமாக்கிக் கொண்டு பிளாட்பாரத்தை நோக்கி வருகிறது.

பிளாட்பாரத்தில் நிற்கும் ஒன்றிரண்டு பிரயாணிகள் இடம் தேடி, ஓடும் பெட்டிகளைப் பார்த்தவண்ணம் நடந்து போகிறார்கள்.

கழிப்பறையிலிருந்து வெளிப்பட்ட ஓசேப்பு தனது சட்டையையும் வேட்டியையும் போட்டுக் கொண்டு, மூன்றாம் வகுப்புப் பெட்டியைப் பார்த்து முண்டியடித்துக் கொண்டு ஓடுகிறான். ரயிலடியில் காவல் இருக்கும் அடியாட்கள் யாரும் அவனைப் பார்த்துவிடக் கூடாது என்கிற பயம். அவர்கள் கையில் மாட்டிக் கொண்டான் என்றால் அவன் கதி அதோ கதி தான். அவ்வளவு கிராதகர்கள்.

பரபரப்புடன் ஓடிவந்த ஓசேப்பு ரெயில் நிலைக்கு வரும் முன்பே முண்டியடித்துக் கொண்டு, இறங்க முயற்சிக்கும் பிரயாணிகளையும் தள்ளிக் கொண்டு மூன்றாம் வகுப்புப் பெட்டியின் கம்பியைப் பிடித்துக் கொண்டு, முதல் படியில் கால் வைத்தான். அப்போது யாரோ அவன் தோள்பட்டையில் கைவைப்பது போல் உணரவும் திரும்பிப் பார்த்தவன்

"ஆருடா. அவன் தோள் பட்டையிலே கை வைக்கிறது" கோபத்தோடு சொன்னவன் விகாரமான அந்த முகத்தைப் பார்த்தபோது ஆடிப் போனான்.

கருத்துக் கனத்து அம்மை வடுக்கள் நிறைந்த அந்த முகத்தில் வலது பாரிசத்தில் நாசிக்கு நேராக வெட்டு விழுந்ததன் அடையாளம்.

விகாரமான அந்த முரட்டு மனிதன் ஓசேப்பின் தோள் பட்டையை இறுக்கி அவனை பிளாட் பாரத்தில் இழுத்து விட்டான்.

"எந்த ஊருடா ஒனக்கு" தனது கரகரத்த குரலில் ஓசேப்பைக் கேட்டான்.

"ஊர்பேர் எல்லாம் ஒனக்கெதுக்கு. சொல்ல முடியாது" ஓசேப்பு கோபத்தோடு சொன்னான்.

"இப்படியெல்லாம் கேட்டா வக்காளி பதில் சொல்ல மாட்டான் பங்காளி. மருது கேக்கற வெதமா கேட்டாத்தான் பதில் சொல்லுவானுவ"

ஒல்லி சட்டையாகத் தேவாங்கு உடலும் முழியும், உதட்டைப் பிய்த்துக் கொண்டு நீண்ட தேங்காய் திருவியாட்டம் பல்லும் கொண்ட மனிதன் அவனைப் பார்த்துச் சொன்னான்.

"வக்காளி ஒரு வார காலமா ஒரு பெயலும் சிக்கலெண்டு பாத்தன் இன்டைக்கி வசமாகச் சிக்கிட்டான்" நீண்ட பல்லுக்காரன் சொல்லிவிட்டு விகாரமாகச் சிரித்தான்.

அவர்களின் பிடியினின்றும் விடுபடுவதற்காக ஓசேப்பு எத்தனித்தபோது

"மூச்சுவிட்டே மவனே சொருவிப் போடுவன்"

விகார மூஞ்சிக் காரனான அந்த தடித்த மனிதன் தன் இடுப்பில் இருந்த பிச்சு வாவை உருவிய வண்ணம் ஓசேப்பை எச்சரித்தான்.

"ஒன் கிராப்பே காட்டிக் குடுத்திருமேடா. நீ பாண்டிச்சேரி பறப் பெய தானே பாண்டிச்சேரிப் பயக தான் இப்படி கிராப்பு வெட்டிக் குவான்" என்று பெரிய பல்கார மனிதன் சொன்னபோது ஓசேப்புக்கு உள்ளுற நடுக்கம் கண்டது.

வேலைப் பளுவும், கொடுமையும் தாங்காமல், தப்பியோடும் தோல் ஷாப்புத் தொழிலாளர்களைப் பிடிப்பதற்கும் பிடித்தவர்களைச் சம்மந்தப்பட்ட முதலாளிகளிடம் ஒப்படைப்பதற்காகவும், தோல் ஷாப்பு முதலாளிகள் ரெயில்வே ஸ்டேஷனிலும், பஸ் நிலையங்களிலும் நியமித்திருக்கும் அடியாட்கள் இவர்கள் என்பது ஓசேப்புக்கு விளங்கி விட்டது.

"நான் பாண்டிச்சேரிக்காரனும் கெடையாது. ஒரு எழவும் கெடையாது என்ன வண்டி ஏற உடுங்க."

சமாளிக்கப் பார்த்தான் ஓசேப்பு.

"ஒக்காளி இந்தக் கழுவத் தேவன் பார்வையிலேந்து தப்ப முடியாதுலே. எத்தனை பேத்தை நான் இந்த டேஷன்லே பாத்திருப்பன் எனக்கிட்டையா பேத்து மாத்துப்பண்ணப் பார்க்கிறே" அவனது குரலை விடத்தானும் அவனுடைய பார்வை விகாரமாகப்பட்டது.

அந்தக் கிராதகர்கள் இருவரும் ஓசேப்பை பிடறியைப்பிடித்துத் தெற்குக் கோடியில் இருக்கும் வாகை மரம் வரையில் கேடியைப் போலீஸ்காரன் தள்ளிக் கொண்டு போவது போல் தள்ளிக் கொண்டு போனார்கள்.

பிளாட்பாரத்தில் காவலுக்கு வந்த போலீஸ்காரன் உட்பட அனைவரும் வேடிக்கை பார்த்தார்கள்.

வாகை மரநிழலில் வந்து நின்றதும் "கையக் காட்டுலே பாக்கலாம்" கழுவத்தேவன் சொன்னான்.

மறுக்கவே.

"பங்காளி சந்தணம். என்னண்ணு பாருய்யா"

பக்கத்தில் நின்ற தேவாங்கு பார்வைக்காரனிடம் சொன்னான்.

"கையக் காட்டுலே பாப்பம்" அதிகாரத் தோரணையில் அவன் சொன்னான்.

ஒசேப்பு தயக்கத்துடன் தனது உள்ளங்கைகளை விரித்துக் காட்டினான்.

கடுக்காய்ப் பட்டையும் அமிலங்களும் பட்டுக் கருத்துப்போன நகங்களையும், சுண்ணாம்புக் கலவையும் கடுக்காய்ப் பட்டையும் கலந்த நீர் பட்டுப் பட்டுப் பழுப்பேறின உள்ளங்கை நிறமும் அவனை ஒரு தோல் பதனிடும் தொழிலாளி என்பதைக் காட்டிக் கொடுத்துவிட்டது.

அவ்வளவு தான்

"தாயழி, யாரை ஏமாத்தப் பாக்கிறே. தோல் ஷாப்லே வேலை செய்ற பறப்பெய தானே நீ"

நீண்ட பல்காரன் தனது குச்சுக் குச்சான் கரங்களால் அவனது பிடறியில் ஓங்கி அறைந்தான். கண் விழிகள் தெறித்து விழுந்துவிட்ட வேதனை.

வேதனையைத் தாங்கிக் கொண்டே ஒசேப்பு அவனை முறைத்துப் பார்த்தான்.

"பாக்கதப் பாத்தியா பங்காளி பாண்டிச்சேரி பறப் பயவளுக்குகே மப்பு அதிகம்."

கழுவத்தேவன் ஒசேப்பின் கன்னங்களில் மாறி மாறி அறைந்தான்.

ஒசேப்பின் கையறு நிலைகண்டு மனம் நொந்து பெருமூச்செறிவதே போலும், அழுதுபுலம்புவது போலும் ரெயில் எஞ்சின் நீண்ட பெருமூச்சுவிட்டு, ஓலமிட்டப்பின் நீராவியையும் கரிய புகையையும் கக்கிய வண்ணம் பிளாட் பாரத்திலிருந்து கிளம்பியது.

ஸ்டேஷன் மாஸ்டர் சுப்புண்ணி பச்சைக் கொடியை ஆட்டிய வண்ணம் புகை வண்டிக்கு டாட்டாக் காட்டிக் கொண்டிருந்தார்.

கழுவனும் அவன் கூட்டாளியும் ஒசேப்பை ஸ்டேஷனுக்கு வெளியே கரங்களைக் கட்டி இழுத்துக் கொண்டு போனார்கள்

8

நந்தவனப்பட்டிப் பறைச் சேரி அம்மக்களின் வாழ்க்கையே போன்று இருளில் மூழ்கிக் கிடக்கிறது.

சேரிக்கு வடக்கே இருக்கும் வாழவைத்தான் குளத்துத் தவளைகள் வழக்கத்துக்கு விரோதமாக ஏகக் குரல் எடுத்து நாரசகமாகக் கத்திக் கொண்டிருக்கின்றன. ஒரு வேளை பின் இரவில் வர்ஷிக்கப் போகும் பெருமழையின் அறிகுறியாக இருக்கும் என்று சிலருக்கு ஊகம். சேரிக்கு மேற்கேயும், வடக்கேயும் வியாபகமாகியிருக்கும் சாலிமரக்காட்டிலும் சில் வண்டுகள் ஒரு சேரக் கூச்சலிடுவதும் திடீரென ஒன்று சொன்ன மாதிரி ஓலத்தை நிறுத்துவதும், பிறகு ஒன்று சேர்ந்து ஏகத்துக்கு ஓலமிடுவதுமாகத் திருவிளையாடல் புரிந்த வண்ணமிருக்கின்றன.

வானப் பரப்பை ஆக்கிரமித்திருக்கும் கருமேகக் கூட்டத்தினிடையே மிதந்து கொண்டிருக்கும் நிலவு முகம் காட்டுவதும், மேகக் கூட்டத்தினிடை மறைந்து கண்ணாமூச்சி ஆடுவதுமாக இருக்கிறது. சந்திரிகை மேகக் கூட்டத்தினின்று வெளியே வந்து ஒளிமுகம் காட்டும் போது மட்டும் சேரி வீதிகளில் ஒளியின் சாயல் தென்படும். பிறகு சேரியே அந்த காரத்தில் ஆழ்ந்து போகும்.

நில மாதாவுக்கும், ஆண்டைகளுக்கும் தமது உழைப்பையும், உதிர உப்பையும் கொடுத்துக் களைத்துப் போன சேரி மக்கள் தங்களது அலக்கழிப்பையும், களைப்பையும் மறப்பதற்கும், ஆசுவாசப் படுத்திக் கொள்வதற்கும் குடிசைகளுக்கு வெளியே இருளடைந்த சந்துகளில் உட்கார்ந்து தங்களது சேரிக் கதைகளைப் பரிமாறிக் கொள்கின்றனர்.

அந்தச் சேரி, நகரத்தின் அண்மையில் இருந்த போதும், நாகரிகத்தினுடையவும், நவீனத்தினுடையவும் சுவடு படாவண்ணம் தன்னைக் காலம் காலமாகக் காத்துக் கொண்டு கிடக்கிறது. அப்படியான ஒரு சபிக்கப்பட்ட குடியிருப்பு அது.

வழக்கம் போல வெட்டியான் காக்கையச் சாம்பான் குடிசை முன்பு அந்தச் சேரியின் வெடலைகளும், குமரிகளும் குழுமி உட்கார்ந்திருக்கிறார்கள். கதை சொல்லியான காக்கையனிடம் கதை கேட்பது மட்டும்தான் அவர்களுக்கு லபிக்கப்பட்ட ஒரு பொழுதுபோக்கு.

காக்கையன், சாமம் திருப்புகையில் கதை சொல்லவாரம்பித்தான் என்றால் சில நாட்களில், சூரியன் கிழக்குத் திசையில் கை ஊன்றி எழும் வரையில் நீண்டு போகும்.

காக்கையனுக்கு ஆதியும் அந்தமும் இல்லாத ஆண்டவன் போன்று மதிக்க முடியாத வயது. சாரைப் பாம்பு மாதிரி ஒருப்பூட்டு உடம்பு. வயது ஏறிக் கொண்டு போனாலும் இருளிலும் ஆளை அடையாளம் கண்டு கொள்ளும் துல்லியமான பார்வை, காட்டு மூங்கில்கள் உரசிக் கொள்ளும் போது ஏற்படும் ஓசையைப் போன்று பிசிறில்லாத குரல் வளம். அண்டங்காகத்தின் நிறம் என்றபோதிலும், தில்லை சபாபதி உயிர் பெற்று வந்துவிட்டது போன்ற உருவம்.

"ஏளா, அல்லாரும் வந்தாச்சா. பொறவு கதை சொல்லி முடிச்சம் பொறவு. நாவரலை நீ வரலையிண்டு ஆவுலாதி சொல்லப் படாது. ஏனெண்டா, இண்ணெக்கி நா, சொல்லப் போர கதை, கதை இல்லை நெசம். ஆமா, அம்ம சனத்தைப் பத்தின நெசமான புராணம்" என்று பீடிகை போட்ட வண்ணம், தனது கைத்தடியைப் பக்கத்தில் படுக்கப் போட்டுவிட்டு, குடிசையை ஒட்டிப் போடப்பட்டிருக்கும் திண்ணையில் கிழவன் ஏறி உட்கார்ந்தான்.

நாங்கு மரத்திலான அந்த ஒத்தைப் பூட்டுக் கைத்தடி கர்ணனுக்குக் கவசம் மாதி காக்கையனுக்கான உறுதுணை

திண்ணையில் சம்மணம் கூட்டிச் சாவதானமாக உட்கார்ந்த காக்கையன், மட்டப் புகையிலையையும், சருகாகிப் போன வெற்றிலையையும் மடித்துச் சுண்ணாம்புக் கலவை சேர்த்து வாய்க்குள் அதக்கிக் கொண்டான். அப்போது தான் சுருதி சேர்ந்த மாதிரி அவனுக்குக் கதை சொல்லுவதற்கான வேகம் பிறக்கும்.

வெட்டியான் காக்கையனுக்குச் சுடலையில் அதிகமாக 'வேலையில்லாததால், சுவாரஸ்யமாக விடிய விடியக் கதை சொல்லலாம்.

ஏதோ, யோசனை செய்பவன் போல், மேகம் திரண்டு நிற்கும் வானப் பரப்பைப் பார்த்தவன், வெற்றிலை எச்சிலை விழுங்கிச் செருமி, தொண்டையைச் சரி செய்து கொண்டான். பிறகு கதை சொல்ல ஆரம்பித்த காக்கையன் "இது நொம்ப நொம்ப காலத்துக்கு மின்னாடி நடந்த சம்பவம்.

தேவலோகத்துக்காரக் கடவுளுகளுக்குச் சாவாம இருக்கதுக்கான வெண்ணெ கடல்லே இருந்தது தெரிஞ்சிருக்கு.

தயிரைக் கடைஞ்சாத்தானே வெண்ணெய் வரும். கடல் எம்புட்டுப் பெரிசு. அதை உடத்தானும் பெரிசு பால் கடல் அதைக் கடைஞ்சு வெண்ணெய் எடுக்கதானா சும்மாவா. அதனால, கடையும் போது கெடைக்கிற வெண்ணையிலே பங்கு தாரதாக அவுகளோட எதிரிகளான அசுரலோகத்துக் காரவுகளுக்கும் ஆசை காட்டிச் சேக்காளி சேத்துக் கிட்டாவ"

இப்படிக் காக்கையன் கதை சொல்லத் தொடங்கவும்;

"ஆமா, ஆமா நெம்ப காலத்துக்கு மின்னாடி அவுஹ அல்லாம் சேந்து ஒங்க ஆத்தாளோட தாலிய அத்தாவ போக்கும் பொவலும் அத்துப் போயி இவம் பேசுத புளுகையும், பொய்யவும் கேட்டுட்டு ஒக்கார்ந்திருக்காவ பாரு" என்று கிழவனின் மனைவி வனப் பேச்சி அவனையும் கூட்டமாக உட்கார்ந்திருக்கும் வெட்டிகளையும் கடிந்து கொண்டாள்

"இங்க பாரு, வேனாப் பறக்க வெயில்லே நிண்டு களை வெட்டினதுலே குறுக்கே ஒடைஞ்சு போச்சுது. அலுப்புத்தட்டி மனுசக் கழுதைக்கு எப்படியோ வருது உசிரை வாங்காம இருக்கதைக் குடிச்சுப் போட்டு முடங்கதுக்கு வழியப்பாரு" என்று கணவனைக் கடிந்து கொண்டவனப்பேச்சி அவன் திண்ணை ஓரமாகச் சாத்தி வைத்திருந்த நாங்குக் கைத்தடியை எடுத்துக் கொண்டு வாசல் படலைத் தள்ளிக் கொண்டு குடிசைக்குள் போன போது

"ஏய், கைக்கம்பை வச்சிட்டுப் போடி. சுடுகாட்டுக்குப் போவ வேண்டியிருக்கு பொணம் வெந்திட்டிருக்கு" என்றான்

"அர்ஜுணனுக்குக் காண்டீபம் மாதிரி கிழவனுக்கு அந்தக் கைத்தடி." இப்படி காக்கையன் சொன்ன போது, "இந்த எழவெடுத்த சோலிய எண்ணெக்கித்தான் உடப் போர, மனிச் சீவாத்தியால பக்கத்திலே படுக்க முடியலெ சனியம் புடிச்ச பொணவாடை. ஓங்கரிக்க வருது" என்று சலித்தவண்ணம், கஞ்சிக் கலையத்தில் கலக்கி வைக்கப்பட்டிருந்த கேப்பைக் கூழையும், காணத் தொகையிலையும் கொண்டு வந்து அவன் முன்னால் வைத்து விட்டுப் பக்கத்துக் குடிசை திண்ணையில் முந்தானையை விரித்து முடங்கிக் கொண்டாள். வனப் பேச்சியைப் பொறுத்த மட்டில் காக்கையன் சொல்லும் கதைகளைக் கேட்டுக் கேட்டுச் சலித்துப் போய்விட்டது.

கஞ்சிக் கலையத்தை இரு கரங்களாலும் ஏந்திப் பிடித்த படியே வனப் பேச்சியின் செயலை மௌனமாகப் பார்த்தவண்ணம் இருந்த காக்கையன் ஏதோ அவளது அறியாமைக்கு இரங்குவது போல் சிரித்தவன், தன் முன்னால் கதை கேட்கும் ஆர்வத்தில் உட்கார்ந்திருக்கும் கூட்டத்தைப் பார்த்து

"இவளுக்கு எங்கிட்டே படுக்கதுக்குள்ளாற பொண வாடை அடிச்சி ஓங்கரிக்க வருதுண்ணா மனிச சீவாத்தி மண்ணிலே உருவான நா முதலா, சுடுகாடே சுதிண்டு அலையுதானே சிவனாண்டி (சிவபெருமான்) அவங்கூடப் படுக்க பார்வதிக்கு எப்படி இருக்கும். எம்புட்டு ஓங்கரிப்பு

வந்திருக்கும் செருக்கி மவ, அந்தப் பரதேசியோட படுத்து ரெண்டு புள்ளைகளையும் பெத்துப் போட்டு ருக்காவ்ளோய்" என்று வனப் பேச்சியைப் பார்த்து வேடிக்கையாகப் பேசியவன் கலயத்தை மார்புக்கு மேலாகத் தூக்கி, கரங்களால் அலம்பி, கலயத்தின் விளிம்பில் ஒட்டியிருந்த காணத் தொகையலை வலது கையில் எடுத்து வாய்க்குள் போட்டவண்ணம், குடிக்கப் போனவன் முகத்தைச் சுளித்து

"வனப்பேச்சி எனக்கும் கூழு இப்போதைக்கு வேணாம்ளோய்" திண்ணையில் படுத்திருப்பவளைப் பார்த்துச் சொன்ன வண்ணம், கலயத்தைத் திண்ணையில் வைத்தான். "உப்ப, நான் என்னத்தச் சொல்லிப் போட்டேன். சுருக்கிண்ணு கோவம் வருது. பசிய ஆத்திக்கய்யா, கும்பிப் பாவம் கூப்பிட்டுப் பழிவாங்கிப் போடும். அந்தப் பாவம் எனக்கு மாண்டாம்!" வனப் பேச்சி சொல்லவும் "மூதேவி! மூதேவி எனக்கெதுக்கு ஒம்மேல கோவம். கோவம் வந்து தான் என்ன ஆவப் போவுதாம். எரியரப் பொணத்துப் பக்கமா நிண்டதிலே, பொண வாடை பட்டுப்பட்டு ஓங்கரிக்க வருது. மேலத்தெரு வெடலப் பயவ சொன்னதாட்டம் ஒரு நாளைக்கு, இந்த ஈனத் தொழில உட்டுக் கடாசிர வேண்டியதுதான்" என்று சொன்னவன் பிணவாடை நினைப்புத் தட்டவும், காறி எச்சிலை. வீதியில் உமிழ்ந்தான். "சை! என்னடாப்பா. எந்தப் பொணமும் இப்படி அநியாயமா வாடை அடிக்கலே. பத்துப் பொணத்தோட வாடை இந்த ஒத்தப் பொணத்திலேருந்து வருவு". என்றவள்

அதான்பா, வட்டிக் கடை மொதலாளி தொந்தியா பிள்ளைபொணம். எத்தனை குடும்பங்களைக் கெடுத்திருப்பான். அத்தனை பாவங்களையும் வாங்கிட்டுப் பாடையிலே படுத்திட்டான்.

சந்தனக் கட்டையா அடுக்கித்தான் பொணத்த வச்சானுவ. எம்புட்டு நெய்யி எண்ணெய் பாவிப் பொணம் எரிவனாங்குது" என்றவன், எதையோ நினைத்துச் சிரித்துக் கொண்டு மேலும் பேசலானான்.

"பொணத்துக்கு ஆசையப் பாருய்யா. எவங்கிட்டேயோ, இந்தத் தொந்தியா புள்ளெ வட்டிய வகூல் பண்ணாம உட்டிருப்பான் போலருக்கு. சிதையிலே வெந்திட்டிருக்க பொணம் திடீரின்று எழுந்திச்சு ஒக்காருது திரும்பி என்னையப் பாக்குது."

அம்புட்டுத் தான் எனக்குச் சண்டாளமாக் கோவம் வந்திருச்சு. அம்ம சனங்க எத்தனை பேரை, இந்தப் பாவி, கட்டிப் போட்டு ஒதைச்சிருப்பான். எத்தனை பேரோட குடியக் கெடுத்திருப்பான் அத்தனை பேரோடையும் கோவம் எனக்குள்ளே வந்திட்ட மாதிரி வெறி. நாங்குக் கம்பை எடுத்து தலைக்கு மேலே வீசி போடு போடுண்டு போட்டன்.

இதெல்லாம் இந்தக் காக்கையன் கிட்டை நடவாது. ஒன்னையாட்டம் எத்தனை பொணங்களைப் பாத்திருப்பேண்ணு சொல்லிகிட்டே நாய அடிக்கறாப் போல அடிச்சான். பொணம் மருவாதையாக சிதையிலே முடங்கிப் படுத்துக் கிட்டது" என்று தலையை உயர்த்திக் கம்பீரமாகச் சொன்னவன் நீட்டி முழக்கி ஏப்பமிட்டான்.

காக்கையன் ஏப்பம் விட்ட போது பிணவாடையுடன் சாராய நெடியும் வீசியது. இப்படி அவன் ஏப்பம் விட்டான் என்றால், கிழவன் கதை சொல்லத் தயாராகிவிட்டான் என்று பொருள்.

"என்ன அப்புச்சி, ஒம்பாட்டுக்கு ஒம் பள்ளெயத்தை அளந்திக்கிட்டிருக்கே. என்னமோ சொல்ல வந்தையே. சொல்ல வேண்டியது தானே" கூட்டத்தில் இருந்த ஒரு வயதுப் பெண் கேட்டாள்.

"கும்மா இருளா. கெழவனுக்கு நெத்திக் காகும், வாக்கரிசியும், பணமும் பெருத்த வகூல். கள்ளையும், பட்டைச் சாராயத்தையும் செமத்தியா மண்டியிருக்கும் போலருக்கு அதுதான் கிரிச்சுக் கௌம்பி, பள்ளையம் பாடுது" என்று எதிர்த் திண்ணையில் உட்கார்ந்திருந்த கசமாடன் சொன்னான்.

"எவண்டா அவன் கிண்டலடிக்க பெய. எம்புட்டுக் குடிச்சாலும், இந்த வெட்டியான் காக்கையன் நெதானத்த எளந்திர மாட்டான் டோய்" என்று கச மாடனை மடக்குவது போல சொல்லிவிட்டுக் கதை சொல்லுவதற்குத் தயாரானான்.

எண்ணிக் கணக்கிட முடியாத கிழவன் காக்கையென் வயதைப் போன்று அவனது மனதில் புதைந்து கிடக்கும் கணக்கிட முடியாத கதைகள் அவனது உள்ளத்தில் கூடுகட்டிக் குஞ்சு பொறித்துக் குடியிருக்கின்றன. தோண்டத் தோண்டக்குறையாத கதைச்சுரங்கம் காக்கையன்.

முழு நிலவில் உட்கார்ந்து, தனது பேரக் குழந்தைகளுக்காக வேண்டி யுகயுகாந்திரமாக வடை சுட்டுக் கொண்டிருக்கும் கூனல் கிழவி, சந்திர சூசியரை விழுங்கி பூமி பரப்பில் அந்த காரத்தை ஏற்படுத்திய பாம்புகள், அனந்த கோடி காலத்துக்கு முன்னால், பூமிப் பரப்பில் கூரையாக நின்ற வானம், வீட்டுக்குத் தூரமான பெண் விளக்கு மாற்றால் அடித்ததால் கோவித்துக் கொண்டு, மனித கற்பனைக்கு எட்டாத தூரத்தில் உட்கார்ந்திருக்கும். வனப்பரப்பு, இப்படி எத்தனையோ எத்தனையோ கதைகளை இப்படி நாளெல்லாம் கிழவன் சலிக்காமல் கதை கதையாகச் சொல்லிக் கொண்டிருப்பான்.

சில சமயம், சுடுகாட்டில் பணக்காரப் பிணம் வந்து நெற்றிக்காசும், வாய்க்கரிசியும் அதிகமாகக் கிடைத்துவிட்டதென்றால் கிழவன் சாதாரணமாகச் சாப்பிடும் புளித்த கள்ளுக்குப் பதிலாகப் பட்டைச் சாராயத்துக்குப் போய்விட்டான் என்றால் குஷிகிளம்பிவிடும். அப்போதெல்லாம், கதையுடன் அவனாகக் கட்டிய பாட்டும் சேர்ந்துவிடும். அவ்வளவுதான் அந்தப் பிரதேசமே நாராசம் நிறைந்த அவனது கட்டைக் குரலில் அமிழ்ந்து தத்தளிக்கும். ஆனால் காக்கையனது பாடல்கள் அந்த மக்களின் சொல்லொணாத் துன்பம் நிறைந்த வாழ்க்கையைப் போன்று, சோகமும் துன்பமும் நிறைந்ததாக இருக்கும்.

வெட்டி, காக்கையன் சாம்பானுக்கு இந்தத் தொழில், பரம்பரை பரம்பரையாக வந்து வாய்த்துவிட்ட

தொழிலாகும். அவனுக்கு விவரம் தெரிந்த காலம் முதல் அவன் பாட்டன், அப்பன் காலத்திலிருந்து அவனுக்குக் கை வந்த தொழில் அது.

அப்போதெல்லாம், அவனது வாலிபப் பருவத்தில், குடியான தெருக்களில், பிணம் விழுந்து விட்டால் போதும், முதலில் காக்கையனுக்குத்தான் ஓலை வரும். வேட்டியைத் தார்ப்பாய்ச்சி உருமாளைக் கட்டிக் கொண்டு, கால் கடுக்க எட்டுப் பட்டிகளுக்கும் துட்டி சொல்லிவிட்டு வரவேண்டும். இப்போது வயதாகி விட்டதால், சுடுகாட்டில் பிணம் எரிப்பதோடு நின்று போகிறான்.

இவ்வளவு இருந்தும் வனப் பேச்சிக்கு வாரீசுப் பாக்கியம் மட்டும் அவ்வாளவாக வாய்க்கவில்லை. முதல் இரண்டு சூலும் காய் விழுந்து போய்விட்டது. அந்த இரண்டும் ஆண் குழந்தைகள், பாதி உடம்பில் பார்வதியைச் சுமந்து கொண்டு அலையும் சுடலை மாடசாமி, வனப் பேச்சியின் வயிற்றில் உருவான இரண்டு வாரீசுகளையும், தன் பசிக்குப் பிணம் கிடைக்காததால் அவளது கற்பக் கிரகத்தில் நுழைந்து காவு வாங்கிவிட்டது. எப்படியோ வனப்பேச்சி வயிற்றில் மூன்றாவது சிசுவாக துக்கையம்மாள் உருவானாள். சுடலை மாடனுக்குப் பயந்தோ என்னமோ வனப்பேச்சியின் வயிற்றில் குழந்தை உருவானதுமே, காக்கையின் சுடலைச் சாமியைப் பயப்படுத்துவதற்காகவோ என்னமோ, ஆண்டவனின் பத்தினியான துர்க்கையின் பெயரைப் பெண்ணுக்குச் சூட்டி வைத்திருந்தான். துர்க்கையம்மாளின் ஜனனத்துக்குப் பிறகு வனப் பேச்சியின் கர்ப்பக்கிரகம், கழைபிழந்த காள வாயிலாக நீத்துக் கிடக்கிறது. நல்ல வேளையாக, சுடலைச் சாமியின் கோபத்துக்கு ஆளாகாமல் ஊனம், இல்லாமல் வாழ்க்கைப் பட்டுப் பிள்ளையும் பெற்றுக் கொண்டாள் துக்கையம்மாள்.

சேரிக்கு மேற்கே, ஊரணியின் ஈசான மூலையில் பீடமாகக் குடி கொண்டிருக்கும், சுடலை மாடசாமிக்குக் கெடை என்றால் போதும் காக்கையின் அருள் வந்து, ஆதாளி போடுவான் வல்லயமும் கையுமாகக் கூந்தலை விரித்துப்

போட்டுக் காக்கையன் நிற்கும் காட்சியானது சிவபெருமானே நேரில் வந்து ருத்ர தாண்டவமாடும் பீதியும், பயங்கரமும் தென்படும். அப்போது அவனது நாவிலிருந்து பக்தர்களுக்கான அருள் வாக்குக்கள் கவணிலிருந்து வீசப்படும் கூழாங் கற்களைப் போன்று தெறித்து விழும். வாக்குப் பலிதமானாலும், பலிதமாகாமல் போனாலும், சேரி மக்களுக்குக் காக்கையன் மீது அளவு கடந்த பிரியமும் பாசமும் ஏனோ கால மாற்றத்தின் கோலமோ என்னமோ நகரத்துக்கும் தோல் ஷாப்புகளுக்கும் வேலைக்குப் போய்வரும் மேற்குத் தெரு வாலிபர்கள் மட்டும் காக்கையனது வெட்டித் தொழில் தங்களது சாதியை அவமானப்படுத்துவதாகக் கருதலானார்கள். அவனை அறியாமலேயே வாலிபர்கள் மத்தியில் மட்டும் எதிர்ப்பு வலுத்துக் கொண்டு வருகிறது. ஆனால் வயதானவர்களும் பெரியவர்களும், இந்த வெடலைப் பயவளுக்கு இந்த வெட்டி வம்பு எதுக்கு" என்று புறம் தள்ளி விடுகின்றனர்.

எது எப்படியான போதிலும், சேரி மக்கள், காக்கையனிடம் கதை கேட்கும் ஆர்வம் மட்டும் குறைவது கிடையாது.

கிழவன், தொண்டைக்கமறலைப் போக்கும் வகையில், செருமி காறலை வீதியில் மீண்டும் உமிழ்ந்த மட்டில் ஏதோ வாடை தொண்டைக் குழியில் சிக்கிக் கொண்டிருப்பது போல், முகத்தைச் சுழித்து ஏப்பம் விட்டான்.

"ஆமா, உப்ப நா, என்ன கதை சொல்லிட்டிருந்தேன்" எதிரில், தெருவில் உட்கார்ந்திருக்கும் பெண்ணைப் பார்த்துக் கேட்டான்.

"அப்புச்சி ஒனக்கே மறந்து போச்சா. அப்போ, இன்னெக்கி நாம கதை கேட்டாப்புலேதான்" அப்பெண் சொல்லவும்

"வயசு ஆச்சுல்லா பேத்தி. உப்ப வரவர மறதி அதியமாயிட்டுத்தான் வருவுது" என்ற காக்கையன், ஏதோ ஞாபகம் வந்த மட்டில்

"ஓ! தேவர்களும், அசுரர்களும் பாக்கடலைக் கடைஞ்சு வெண்ணெ எடுத்த கதையச் சொல்லிட்டிருந்தேன்" என்றவன் கதை சொல்லத் தயாரான போது, "ஆமா தாத்தா நீரு கடலைப் பார்த்திருக்கிறா" என்று பக்கத்தில் உட்கார்ந்திருந்த வாலிபன் கேட்டான்.

"நா எங்க பாத்திருக்கேன் பேரப்புள்ளெ. அந்த லவியெல்லாம், அம்மசனங்களுக்கு எங்கே கிடைக்கப் போவுது. என்னமோ, அம்ம தலைக்கு மேலே தெரியுது பாரு மானம், அது ஆட்டம், எல்லை இல்லாமப் போயிட்டிருக்குமாம். அம்புட்டும் தண்ணி" என்றவன், திரும்பவும் செருமிக் கொண்டு கதை சொல்லத் தொடங்கலானான்.

"அத்தம் பெரிய கடலை எப்படிக் கடையறது. மத்துக்கும், கயத்துக்கும் என்ன பண்றதுண்டு தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் வழி தெரியலே.

காடோசிலே நொம்ப ரோசனை பண்ணி ஈசுவரனைப் போய்ப் பார்த்தாவ. அப்போ ஈசுவரன் சொன்னான்.

அதாவப் பட்டது, ஒலவத்திலேயே பெரிய மலை மேரு மலை. ஒலவத்திலே பெரிய பாம்பு வாசுகிங்கிற மலைப் பாம்பு இந்த ரெண்டையும் கொணாந்து, மேரு மலைய மத்தாவும், வாசுகிங்கிற பாம்பைக் கயிறாவும் மலையைச் சுத்தி, தேவர்களும், அசுரர்களும் எதிர் எதிர் நிண்டு கடைஞ்சா அமுதுங்கிற வெண்ணை தெரண்டு வந்திடுமிண்டு ரோசனை சொன்னான்.

"அமுதுண்டா என்னது தாத்தா" வேலாண்டி கேட்டான்.

"அட மக்குப் பய புள்ளெ அமுதுண்டா தெரியாதா நம்ம கோனாக்க மாரு தெரு எடச்சிப் பொம்பளைக விக்கிறாவள்ள வெண்ணை அதைத் தாண்டா அவுக பாஷையிலே அமுதுங்கிறாவே" என்றவன், மேலும் கதை சொல்லலானான் கதையின் வேகத்திலும், சுவாரஸ்யத்திலும் மூழ்கிப்போன சேரி ஜனங்கள் மூச்சுவிடக் கூட மறந்த மட்டில் கதையைக் கேட்கலானார்கள்

"அதாவப்பட்டது, தேவர்கள் ஒரு பக்கமாவும், அசுரர்கள் மறு பக்கமாவும் நிண்டு, மேரு மலைய மத்தா வச்சு, பாம்போட தலைய ஒருவரும், வாலை ஒருவரும் புடிச்சு வடம் இழுக்கிறதாட்டம், கடலைக் கடைய ஆரம்பிச்சாவ. பால் கடலைக் கடையவும் சீதேவி, சரசுவதி, சாராம் பசு அல்லாமே கடலுக்குள்ளேருந்து வருது.

பால்கடல்லேருந்து வெளியே வந்த சீதேவி வெளியே வந்ததும், ஈசுவரனைப் பாத்து நா, எங்கே போவட்டும், பொவலிடம் சொல்லுண்டு கேட்டது.

ஈசுவரன் தன்னோட சடையையும், முடியவும் தடவிக்கிட்டு, நீபோயி ஆண்டைக வூட்டுலே போயி ஒக்காந்துக்கோண்டு உத்தரவு போட்டான். சீதேவியும் அப்படியே ஆண்டைக தெருவுக்குப் போயி ஒக்காந்திருச்சு. அதுநால தான் இண்ணெய வரைக்கும் ஆண்டைக செல்வச் சீமான இருக்காணுவ.

அடுத்து சரஸ்வதி வரவும், ஈசுவரன் அவளை அய்யமாரு தெருவுக்குப் போவச் சொல்லிட்டான். அப்படியே சரஸ்வதி போயி பாப்பாரக் குடியிலே போயி குந்திக்கிட்டது. அதால தான் பாப்பாரப் புள்ளெக அம்புட்டுப் படிப்புப் படிக்குதுவ.

அப்புறம் வெகு நேரம் தேவர்களும் அசுரர்களும் பால்கடலைக் கடை, கடையின்னு கடைஞ்சு பாத்தா மெத்த நேரமா ஒண்ணும் வரலை. ஈசுவரனுக்கானா படுகோவம். கடைஞ்சவளுக்குக் கையும் காலும் ஒஞ்சி போச்சுது.

அப்பத்தான் மெத்த நேரமாத் தூங்கி எந்திரிச்ச மாதிரி கடல்லேருந்து மூதேவி, கன்னங்கரேலிண்ணு கடல்லேருந்து எந்திரிச்சு வருது. ஈசுவரனுக்கானா கோவம் தாங்கலை.

மூதேவி, அல்லாத்தையும் போல நான் எங்கே போயி குடியிருக்க வேணம்ண்டு கேட்டதுதான் தாமசம் ஈசுவரன் சொன்னான்.

தரித்திரியம் புடிச்ச மூதேவி, மூளி நி போயி பள்ளும் பறைக இருக்க சேரிகள்ளே போயித் தொலையிண்டு

கோவமாச் சொல்லிப் போட்டான். ஈசுவரன் சொன்னது தான் தாமசம், மூதேவி பள்ளுப் பறைக இருக்க சேரிகளாப் பாத்துப் போயி சம்மணம் போட்டு ஒக்காந்திருக்க. அண்ணெயிலேருந்து நம்மப் புடிச்ச தரித்திரம் இண்ணெ வரையிலே நம்ம வுட்டுப் போவலை. வெளக்கு மாத்தால் பாம்பிப் பார்த்தும், அம்மைப் புடிச்ச தரித்திரம் போவ மாட்டேங்குது. அடம் பிடிக்குது. மூதேசி உடும்புப்புடியா சேரிவளைப் புடிச்சுத்தொங்குது

ஓர வஞ்சனைக்கார ஈசுவரனும், பாம்பு கக்கின வெஷத்தையும், அள்ளிக் குடிச்சுத் தொண்டைக்குழியிலே வச்சுக்கிட்டு, தன் பொண்டாட்டி புள்ளெகளோட கைலாச மலைக்குக் குடியிருக்கப் போயிட்டான். அம்ம சனங்க மட்டும் ஆடிக்காட்டில மாட்டின துரும்பா அல்லாடுது"

இப்படிச் சொன்ன காக்கையன்

இருண்டு கிடந்த ஆகாயத்தைப் பார்த்து அண்ணாந்து பயங்கரமாகச் சிரிக்கிறான். அவனது கோரச் சிரிப்பில், யுக யுகாந்திரமாக வறுமையிலும், வேதனையிலும் அவமானத்திலும் அமிழ்ந்து கிடந்த சேரி மக்களின் சோகமும், கோபமும் கலந்த ஊதைக்காற்றாக ஒலித்தது.

அப்போது சேரியில் நிலவிய அமைதியைக் குலைத்துக் கொண்டு, வானத்தின் கூரையையே பிளப்பது போன்ற அந்தச் சோகக்குரல் எழுந்தது.

"ஆத்தே நான் என்னத்தைச் செய்வேன். பாவிப் பய அநியாயமா, பச்சை மண்ணைக் கொத்திக் குதறிக் கொண்டு போட்டானே" என்கிற மருதாயினது சோகக் குரல் அவர்கள் அத்தனை பேருடையவும் நெஞ்சங்களை நிலை குலைய வைத்தது.

ஓலம் கேட்ட திக்கை நோக்கி நந்தவனப் பட்டிச் சேரி மக்கள் ஓடினார்கள் வெட்டியான் காக்கையனும், தனது உடன்பிறவா சுடுகாட்டு நாங்குத் தடியையும் எடுத்துக் கொண்டு அவர்களைத் தொடர்ந்து போனான்.

லேசாக மழை தூற ஆரம்பித்திருந்தது. அது பெரும் மழையாக வர்ஷிக்கும் என்பதற்கு அறிகுறியாக ஊதைக் காற்று வீசத் தொடங்கியது.

இரட்டை ஆல மரத்தை ஒட்டிய மைதானத்தில் அவன் கண்ட காட்சி காக்கையனின் ஈரல் குலையையே கலக்குவதாக இருந்தது.

அவனது மகள் துக்கையம்மாளின் ஒரே வாரீசான சின்னக்கிளியின் பிணத்தைக் குதிரை வண்டியிலிருந்து இறக்கிக் கொண்டிருந்தார்கள்.

மேலத்தெரு தோல் ஷாப்புப் பையன் ஒரு அரிக்கன் விளக்குடன் நின்று கொண்டிருந்தான். அவன் முகம் துக்கத்தால் இறுகிப் போயிருந்தது.

●

9

அன்று ஈஸ்டர் திருநாள்

ஏசு கிறிஸ்துவானவர், கல்லறையினின்றும் உயிர்த் தெழுந்த கிறிஸ்துவ மக்களுக்கான, உற்சாகமான புனித நாள்.

நகரத்தின் தேவாலயங்கள் எல்லாம், மணவாட்டிகளைப் போன்று அலங்கரிக்கப்பட்டு, நடு நிசி முதலே பிரார்த்தனைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நகரத்தின் கிறிஸ்தவ மக்கள் ஆணும் பெண்ணும், கிறிஸ்துமஸ் திருநாளைப் போன்று புத்தாடை புனைந்து தேவாலயங்களை மொய்த்துப் பிரார்த்தனையில் ஈடுபட்டிருக்கின்றனர்.

சிறுமலையில் இரவில் நல்ல மழை பெய்திருந்ததால், நகரத்தில் வெப்பம் குறைந்து, ஆகாயத்தில் ஈர நைதப்புக் கலந்து குளுமை தென்படுகிறது. புறநகர்ப் பகுதியில், பட்சி காலங்களின் ஆர்ப்பரிப்பு.

ஆசிரியர் இருதய சாமி, பஞ்சம் பட்டியில் தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவர்களுக்கென்று புதிதாகக் கட்டப்பட்ட புனித அந்தோணியார் சர்ச்சில் பூசை முடித்துக் கொண்டு, மேட்டுப் பட்டியில் இருக்கும் அவரது வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறார். புனித அந்தோணியார் சர்ச்சானது, இருதயசாமியுடையவும், அவரைப் போன்று படித்த தாழ்த்தப்பட கிறிஸ்தவப் பெரியவர்களின் முயற்சியாலும் புதிய தேவாலயம்கட்டப்பட்டிருந்ததால், திருச்சபையானது, அந்தத் தேவாலயத்தின் நிர்வாகத்தையும், பூசை நடத்துவதையும் ஆசிரியர் இருதய சாமியின் பொறுப்பில் விட்டிருந்தது.

நகரத்திலும், சுற்றுவட்டாரத்திலும் உள்ள அத்தனை கத்தோலிக்கத் தேவாலயங்களிலும், தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவர்கள், தீண்டப்படாதவர்கள் என்ற வகையில் பிரார்த்தனையின்போது அழிபாய்ச்சிப் பிரிக்கப்பட்டுத் தனியிடம் ஒதுக்கப்பட்டிருப்பதையும், சாமியார்கள் மேல் சாதிக் கிறிஸ்தவர்களுடன் சேர்ந்து நன்மை தர மறுப்பதையும் எதிர்த்து, இருதய சாமியும் மற்றும் தன் மானம் கொண்ட தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவர்களும் நடத்திய போராட்டம் காரணமாக வன்னியக் கிறிஸ்தவர்களது எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் பங்கு பெரிய சாமியார் பெப்பின் டிஸோஸா, தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவர்களைச் சமாதானப்படுத்துவதற்காக இப்படி ஒரு தேவாலயத்தைச் சமைத்துத் தனக்கு மிகவும் விருப்பமான இருதய சாமியின் பொறுப்பில் விட்டிருக்கிறார்.

தனது முயற்சியால், தாழ்த்தப்பட்ட கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களுக்கென்று இப்படி ஒரு தேவாலையம் அமைந்ததையும், அதிலும் தேவ மைந்தன் புத்துயிர்ப்புப் பெற்ற நன்நாளில் ஆலயம் திறக்கப்பட்டிருப்பதிலும் இருதயசாமிக்கு மிக்க மகிழ்ச்சி.

பஞ்சம்பட்டிஆலய பூசையை முடித்துக் கொண்டு, நண்பர்களுடன், வேத புத்தகமும் கையுமாக, வந்து கொண்டிருந்த இருதயசாமி மதுரை ரஸ்தாவைக் கடக்கும் சமயம் இருதயத்தையே பிய்த்துக் கொண்டு பீறிடுவது போன்ற அழுகுரலைக் கேட்டு மலைத்துப் போனார்.

மதுரை ரஸ்தாவில் ஹாஜியார் அஸன் ராவுத்தரது தோல் ஷாப்புக்கு எதிரில் ஆலமரத்துக்கடியில், சின்னத் தாயம்மாள் தலைவிரி கோலமாகப் புரண்டு புரண்டு ஒப்பாரி வைக்கிறாள். ஆலமரத்து நிழலிலும் சாலையிலும் ஆண்களும், பெண்களும் சோகமே உருவாகக் கையறு நிலையில் நின்று கொண்டிருக்கிறார்கள். அம்மக்களின் கையறு நிலையைக் கண்டு இயற்கையே கண்ணீர் வடிப்பதே போல், விடிகாலைப் போதில், பெய்த மழையில் நனைந்து நிற்கும் ஆலமரத்துக் கிளைகளில் இலைகளினின்றும்

தண்ணீர் சொட்டிக் கொண்டிருக்கிறது. ரஸ்தா முழுவதும் சேறும் சகதியுமாக அலங்கோலமாகக் கிடக்கிறது.

"எம்மவனைச் சாட்டையாலேயே அடிச்சுக் கொண்டு போடுவானே. அட கண்ணவிஞ்ச பாவி தெய்வமே. நீ கேக்க மாட்டையா" தாயம்மாள் தன் மார்பில் கரங்களால் மாறி மாறி அடித்த வண்ணம் கதறுகிறாள்.

ரஸ்தாவைத் தாண்டி, கிழக்குப் பக்கம் பார்த்த போது, அஸன் ராவுத்தர் தோல் ஷாப்பின் பிரதான வாசலை ஒட்டி நடப்பட்டிருக்கும் கல் தூணில் ஓசேப்பு, கௌபீனத்தோடு, முழு நிர்வாணமாகக் கட்டித் தொங்கவிடப்பட்டிருக்கிறான். தோல் ஷாப்பு உடைமையாளர்களின் ஏவல் நாயான கழுவன், கையில் உடும்புத் தோலால் பின்னப்பட்ட சாட்டை வாரினால் சரமாரியாக ஓசேப்பின் உடம்பில் தன் பலத்தை எல்லாம் கூட்டி அடித்துக் கொண்டிருக்கிறான். ஓசேப்பின் உடல் முழுவதும் சாட்டை வாரினால் ஏற்பட்ட காயங்கள், தோல் பிய்ந்து உதிரம் சொட்டிக் கொண்டிருக்கிறது.

குற்றம் செய்த தோல் ஷாப்புத் தொழிலாளியை இப்படிக்கல் தூணில் தொங்கப் போட்டுச் சாட்டை வாரினால் அடித்துக் காயப்படுத்துவது என்பது, அந்த ஊர் தோல் ஷாப்புகளில் ஏற்பட்டுள்ள சாதாரண நடைமுறை. சில சமயம் அடிதாளாமல், சிலுவையில் அறையப்பட்ட குற்றவாளி மரணமடைவதைப் போல், மரணத்தில் தொழிலாளி உயிர் ஒடுங்கிப் போவதும் உண்டு. எனவே தோல் ஷாப்புத் தொழிலாளர்களை எச்சரிக்கும் வகையில் ஒவ்வொரு தோல் ஷாப்பின் முகப்பிலும் அப்படிப்பட்ட கல் நாட்டப்பட்டுப் பராமரிக்கப்படும்.

"வக்காளி, இத்தனை அடி வாங்கியும், திமிரு போவுதா பாத்தியா. மொறைச்சாடா பாக்கிறே. பறப்பெயலுக்கு அம்புட்டுத் தெனாவெட்டா. மொதலாளிய மண்டைய ஒடைச்சுப் போட்டு தப்பி ஓடவா பாக்குறே" கழுவன் தன் உடம்பில் வழியும் வியர்வையைத் துண்டால் துடைத்துக் கொண்டு மீண்டும் ஓசேப்பைச் சண்டாளமாகத் தாக்க வாரம்பிக்கிறான்.

ஆசிரியர் இருதய சாமிக்குக் கொல்கதா மலையில் முள் கிரீடம் சூட்டப்பட்டுச் சிலுவையைச் சுமந்தவண்ணம் தாக்குண்ட ஏசுபிரானின் நினைவு தட்டியது.

திரும்பவும் சுசையடி ஏற்ற போது "ஏ சேசுவே" ஓசேப்புத் தலையை உயர்த்தி வேதனை தாங்காமல் சொன்ன வார்த்தைகள் அவரது இதயத்தையே பிளப்பது போல் இருந்தது. "பறத்தேவடியாமவன் சாமியக் கூப்பிடுதயாக்கும்" ஏசியபடி சுழுவன் மீண்டும் தாக்கலானான்.

அவரால் அந்த வார்த்தைகளை தாங்கிக் கொள்ள முடியவில்லை. கணப் போதில் அந்த சம்பவம் நடந்து விட்டது. கோபம் கொண்ட யானையைப் போன்று ஆசிரியர் இருதய சாமி சுழுவன் மீது பாய்ந்தார்.

அவரது எதிர்பாராத தாக்குதலைத் தாக்குப் பிடிக்க முடியாமல், இடறிவிழுந்த சுழுவத்தேவன் தனது மூளையே சிதறிப் போன மட்டில் அலறிச் சகதியில் சாய்ந்தான். அவன் கையில் இருந்த சாட்டைவார் இருதய சாமியின் கையில் இருந்தது. அவரது இடது கையில் பத்திரமாகப் பாவிக்கப்பட்ட வேதாகமும் கீர்த்தனைப் பாட்டுப் புஸ்தகமும் கல்தூண் ஓரத்தில் விரிந்து கிடக்கின்றன.

ஆஜானுபாகுவான சுழுவத்தேவன் பூஞ்சையான அந்த மனிதனின் முகத்தில் கொப்பளிக்கும் கோபக் கனலைக் கண்டு பயந்து போனான்.

இத்தனை நேரமும், சிறுத்தை ஊடுருவிய ஆட்டு மந்தையாகப் பீதியுடன் நின்றிருந்த தோல் ஷாப்புத் தொழிலாளர்கள் கூட்டம், இருதயசாமிக்குப் பின்னால் திரண்டு நின்றது.

"ஏண்டா தேவடியா மவனே. அவன் உழைப்பிலே ஊனை வளர்க்கிற பேமானி, என்று சொன்ன மட்டில் சாட்டை வாரினால் சுழுவனின் வெற்று மேனியில் மாறி மாறித் தாக்கலானார்.

தரையில் கையை ஊன்றி எழுந்த சுழுவன், "நீ யார்ரா, இந்தப் பற வேசை மவனுக்கு வக்காலத்து வாங்க, நீ என்ன

பறப்பயலுக்குப் பொறந்தவனாடா. வக்காளி கேக்க வந்திட்டான்" என்று இறுமாப்பாகப் பேசவும், ஓ! அவ்வளவு வாய்க்கொழுப்பா ஒனக்கு. பறசனங்கண்ணா அவ்வளவு எழுப்பமா கேக்க நாதியில்லேன்னு இத்தனை காலமா இந்த மக்களை வதை பண்ணிட்டிருக்கீங்க" என்றவர்

"மரியாதையா இங்கேருந்து ஓடிப் போயிரு. இல்லே உன்னை இந்த ஜனங்க நாரு நாரா கிழிச்சுப் போடுவாங்க" என்று மீண்டும் சொன்ன போது.

"வக்காழி தேவுடியா மவனை. அந்தக் கல்தூணிலே பிடிச்சுக் கட்டுங்கடா அம்ம மாதிரி அவனும் சாட்டையடி பட்டாத்தான் அம்ம வேதனை அவனுக்குத் தெரியும்"

கூட்டத்தில் இருந்த வயதான ஒருவன் சொல்லவும், கூட்டம் கழுவனை நெருங்கியது.

இரத்த வெறி கொண்ட செந்நாய்க் கூட்டத்தைப் போன்று கோபாவேசத்துடன் அந்தக் கூட்டம் கழுவனை நோக்கி வந்தது. கழுவன் உயிருக்குப் பயந்து, அடிபட்ட நாயாகக் கதறிக் கொண்டு, லங்கோடும் கையுமா வடக்குப் பக்கமாக ரஸ்தாவில் தலை தெறிக்க ஓட்டம் பிடித்தான். அவனுக்கு அஸன் ராவுத்தரிடம் புகார் சொல்லி அடைக்கலம் தேட வேண்டியிருந்தது. "மேட்டுத் தெரு நாட்டாமை மவன் வாத்தியாரய்யா" கூட்டத்தில் இருந்த அருள்மேரி பெண்களிடம் ரகஸ்யம் பேசுவது போல் சொன்னாள்.

மினிசாமி ஓசேப்பின் கட்டுக்களை அவிழ்த்துக் கல்தூணில் இருந்து இறக்கிவிட்டான். தாயம்மாள், தான் பெற்ற பிள்ளையாகப் பாவித்த ஓசேப்பைத் தழுவிக் கொண்டு கண்ணீர் ததும்ப அவனுக்கு மாறி மாறி முத்தம் கொடுத்தாள். முந்தானையால் அவன் உடம்பில் பெருக்கெடுத்து ஓடிய இரத்தத்தைத் துடைக்கலானாள்.

இருதயசாமியின் எதிர்பாராத இந்த நடவடிக்கை, தோள் தாப்புக்கள் அனைத்திலும் காட்டுத் தீயாகப் பரவிற்று.

அம்மக்களின் இதயங்களில் கனன்று கொண்டிருந்த கோபாக்கினிக்கு உருவம் கொடுத்தது போன்ற சம்பவத்தைக்

கேட்ட அம்மக்கள், தங்கள் தங்களது வேலைகளை அப்படி அப்படியே போட்டுவிட்டு, மதுரை ரஸ்தாவில், அஸன் பாய் தோல் ஷாப்புக்கு எதிரில் குவிந்து விட்டனர்.

எந்த ஒரு தோல் ஷாப்பிலும் பணி நடக்கவில்லை.

ஓசேப்பு கூடத் தன் வேதனையையும் மறந்தமட்டில், அவர்கள் மத்தியில் போய் நின்றான். அவன் உள்ளத்தில் திரண்டிருக்கும் கோப உணர்வும் வைராக்கியமும் அவனது நயனங்களில் தென்பட்டது.

சார்லஸ் என்ற வாலிபன், கல்தூண் ஓரம் மழைத்தூறலில் நனைந்து கிடந்த வேதாக மத்தையும், கீர்த்தனை புஸ்தகத்தையும் இருதய சாமியிடம் கொடுத்தான். சார்லஸ் இரண்டாம் வகுப்பு வரையில் இருதயசாமியிடம் படித்தவன்.

இரட்டை ஆலமரத்தை ஒட்டி இருந்த சமாதியின் மீது ஏறிநின்ற இருதயசாமி அங்கே கூடியிருந்த மக்களைப் பார்த்து, தேவாலயத்தில் பரிசுத்த பீடத்தில் நின்று பிரசங்கம் செய்வதே போன்று இப்படி பேசலானார்.

"கர்த்தருக்குப் பிரியமானவர்களே! இன்று, கர்த்தராகிய ஏசுபிரான் உயிர் பெற்று எழுந்த புனித நாள்.

காலம் காலமாக அடித்து அமர்த்தி அழுத்தப்பட்ட நம்மக்கள், ஏசு பிரானைப் போல, அடிமைத் தளைகளை நொறுக்கிக் கொண்டு உயிர் பெற்று எழுந்தாக வேண்டும் என்று சபதம் ஏற்போம்.

பறை சனங்கண்ணா இவங்க குண்டி துடைச்சுப் போட்ட கல்லா அசிங்கமா நெனக்கிறாங்க. நாம பட்ட அவஸ்தையும் அவமானமும் போதும். இந்த அவமானத்துக்கும், அடிமைத்தனத்துக்கும் கேவலத்துக்கும் முடிவு கட்டியாக வேணும். என் கையில் இருக்கும் வேதாகமத்தின் மீது ஆணையிட்டுச் சொல்வேன். இந்த அவமானத்துக்கும், அடிமைத் தனத்துக்கும் முடிவு கட்டாமல் நான் ஓய மாட்டேன்."

அடிமைப் பட்டுக் கிடந்த அம்மக்களுக்கு இருதய சாமி உயிர் பெற்று எழுந்து தங்களை இரட்சிக்க வந்த ஏசுபிர ானாகப்பட்டது.

"நாம காலம் காலமா நம்ம உள்ளத்தில் இருக்கும் அச்சத்தையும் பயத்தையும் ஒதுக்கி வச்சு ஒன்று பட்டாப் போதும், அவர்கள் நம்மைக் கண்டு பயந்து போவார்கள்." மீண்டும் இருதயசாமி அம்மக்களைப் பார்த்துச் சொன்னார்.

"ஆமா வாத்தியாரய்யா சொல்றது தான் நியாயம்" வயதான இருளைப் போன்று கருநிறம் கொண்ட ஏசுவடியான் சொன்னான்.

அன்று மறுநாள், அந்த நகரத்தில் எந்த ஒரு தோல் ஷாப்பிலும் வேலை நடக்கவில்லை.

ஆசிரியர் இருதயசாமி இப்படி ஒரு வேலையைச் செய்வார் என்றும், அவர் பின்னால் தோல் ஷாப்புத் தொழிலாளர்கள் திரண்டு நிற்பார்கள் என்றும் தோல் ஷாப்பு முதலாளிகள் எதிர் பார்க்கவில்லை.

10

ஆசிரியர் இருதயசாமியின் குடும்பம் மேட்டுப்பட்டிப் பறைச் சேரியில் பிரசித்தி பெற்ற குடும்பங்களில் ஒன்று.

இருதய சாமியின் தகப்பனார் சாமிக்கண்ணு மேஸ்திரி என்றால் அந்த ஊர் தோல் பதனிடும் தொழிலில் தெரியாதவர்கள் இருக்க முடியாது. அவ்வளவுக்குப் பிரபலமானவர் சாமிக்கண்ணு மேஸ்திரி, தனியாக நனைவு வைத்துத் தொழில் செய்யும் ஒன்றிரண்டு கீழ் ஜாதிக்காரர்களில் சாமிக்கண்ணு மேஸ்திரியும் ஒருவர்.

சாமிக்கண்ணு மேஸ்திரிக்கும் மற்ற தோல் ஷாப்புத் தொழிலாளர்களைப் போன்று பூர்வீகம் பாண்டிச் சேரிதான். ஆனால் அவர் ஏனைய தொழிலாளர்களைப் போன்றோ, அவர்களின் வாரீசுகள் போன்றோ, நேரடியாகத் தொழிலாளியாக அந்த ஊருக்கு வந்து சேரவில்லை. வரும்போதே, மேஸ்திரியாகத்தான் தோல் ஷாப்பு வேலைக்கு வந்து சேர்ந்தார்.

நகரத்தில் உள்ள பெரிய தோல் ஷாப்புக்களில் ஒன்றான கனி ராவுத்தர் தோல் ஷாப்புக்கு வரும்போதே, மற்றவர்களைப் போன்று அடிமை சாசனம் ஏதும் எழுதிக் கொடுத்து வரவில்லை. மாறாக மிகவும் கௌரவம் மிக்க தொழில் வல்லுனராகவே, விரும்பி வரவழைக்கப்பட்டிருந்தார்.

சாமிக்கண்ணு தனது சொந்த ஊரான பாண்டிச்சேரியில் வேளான் குப்பத்தில் பிராஞ்சுக்காரன் உருவாக்கியிருந்த பள்ளிக்கூடத்தில் ஐந்தாம் வகுப்பு வரையில் தான் படித்தார் சேரிப் பிள்ளையாண்டன்களுக்குப் படிப்பு ஏறாது என்கிற பொதுவான அபிப்பிராயத்தைத்

தோற்கடிக்கும் வகையில் படிப்பில் மிகக் கெட்டி. அந்த அளவுக்கு மகா சுட்டியும் கூட. மேல் சாதிக்காரப் பிள்ளையாண்டன்கள் அதிலும் வன்னிய குலச் சிறார்களுடன் சதா சண்டை சச்சரவு. அதன் காரணமாக சாமிக்கண்ணின் தகப்பன் முத்தையா மேல் ஜாதிக்காரர்களிடம், மந்தையில் நின்று தெண்டனிட்டு, மண்டியிட்டு பலதவணை அபராதமும் செலுத்த வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளானதும், சாமிக்கண்ணுவின் படிப்பு அந்தரத்தில் நிறுத்தப்பட்டுப் போயிற்று.

சாமிக்கண்ணு குடும்பத்தில் இருந்தால் மேலும் வம்பும் வழக்கும் ஏற்படும் என்று குடும்பத்தாருக்கு அச்சம் ஏற்படவும் அவரது தாய்மாமன் மத்தாயுடன், வாணியம்பாடி, தோல் ஷாப்புகளில் வேலைக்கு அனுப்பப்பட்டார். வெறும் பொடியனாகத் தோல் ஷாப்பு வேலைக்குப் போன சாமிக்கண்ணு, தனது புத்திக் கூர்மையின் காரணமாக, தோல் ஷாப்பு வேலை, வியாபார நுணுக்கம், நெழிவு, சுழிவு அனைத்தையும் கற்றுணர்ந்து, தொழிலே சாமிக்கண்ணுக்கு அத்துபடி. வாணியம்பாடியில் நயினா மும்மது முதலாளியின் தோல் ஷாப்புக்கான பச்சைத் தோல் கொள்முதல் கூட நாளாவட்டத்தில், சாமிக்கண்ணு மூலம் தான் நடைபெறுவதாயிற்று. தோலைப் பார்த்த உடனேயே பதப்படுத்தப்பட்டால் தோல் மனுவாகுமா அல்லது பழுவாகிப் போகுமா என்பதைக் கணிக்கும் அளவுக்கு அவரது கூர்மை இருந்தது.

இப்படிப்பட்ட சூழலில் தான் மும்மது கனி ராவுத்தர், அந்த மலைக்கோட்ட நகரில் பணத்தை அள்ளிக் குவித்து விடலாம் என்கிற எண்ணத்துடன், தோல் ஷாப்புத் தொழிலில் முதலீடு செய்ய, உடும்பு வேண்டாம், கரத்தைக் காப்பற்றினால் போதும் என்கிற அளவுக்குத் தொழில் அவரைப் பாதாளத்தை நோக்கித் தள்ளிக் கொண்டு போனது.

எனவே, வேறு வழியில்லாமல், வாணியம்பாடியில் செல்வச் சிறப்புடன், தொழிலில் கொடி கட்டிப் பறக்கும், தனது சகோதரியின் கணவன் நயினா மும்மது முதலாளியைப் போய்ப் பார்த்து ஆலோசனை கேட்ட போது "மச்சான் இந்தத் தொழில் நம்ப ஆளுக பாக்கிறமத்த யாவாரம் ஆட்டம்

லெகுவான சோலி கெடையாது. சூதாட்டம் மாதிரி. கண்ணிலே வெளக்கெண்ணைய ஊத்திட்டு நெழிவு சுழிவாப் போவணம். இல்லையெண்டா நம்மளை அதள பாதாளத்திலே தள்ளிப் போடும் திண்டு போடும்" என்று எச்சரிக்கையாகச் சொன்னவர் "இங்க பாருங்க. இந்தத் தொழிலெ நடத்திறதெண்டா, மிச்சம் அனுபவம் வேணம். பச்சைத் தோல் கொள் மொதல் பண்றதிலேருந்து, குளிக்குள்ளாற தோலைப் போட்டு, மேனி பண்ணி, ஆர்பர்ல ஏத்துமதி பண்ற வரையிலே சூதானம் இல்லையெண்டா போட்ட மொதலையும் கோட்டை உட்டுப் போட்டு, அல்லாவே கதியெண்டு, பக்கிரியாப் போயிர வேண்டியது தான்" என்று தனது தொழில் மகத்துவத்தைப் பேசி மைத்துனனைப் பயமுறுத்திக் கொண்டிருப்பதைப் பார்த்து எரிச்சல் அடைந்த கனி ராவுத்தரின் தங்கை ஆயீஸா பீவி.

"அத்தா, சும்மா நாட்டுக்கும் பீத்திக் கொண்டிருக்கா தீயும், அண்ணன், அத்தனை மொதலையும் இறைச்சுட்டுப் பரிதவிச்சுப் போய் வந்திருக்குது. இன்ஸால் அல்லா, அதுக்கு ஒரு நல்ல வழியைச் சொல்லாம சைத்தானாட்டம் என்ன வெல்லாமோ பேசுதியளே" என்று சற்றுக் கோபப்படவும் நயினா மும்மது வாயடைத்துப் போனார்.

ஆயிஸா பீவி ஆம்பிளை மாதிரி, அவள் கொண்டு வந்த சீதனப் பணத்தில் தான் நயினா மம்முது இந்தத் தொழிலையே ஆரம்பித்து நடத்தி வருகிறார். எனவே, எப்போதுமே, ஆம்பிளைக்குச் சமமாகப் பேசும் ஆயிஸா பீவியின் பேச்சைக் கேட்டு ஒரு கணம் மௌனமாக இருந்தவர் "மலையேறப் போனாலும் மச்சான் தொணை வேண்டியிருக்கு!" என்று சொல்லி ஏதோ பெரிய ஹாஸ்யத் துணுக்கைச் சொல்லி விட்டதே போல், தாடியை வருடிக் கொண்டு சிரித்தவர்

"அச்சப்படாதீய மச்சான். இன்ஸான் அல்லா, நம்ம கிட்டே ரோசனை கேட்க வந்துட்டீக. தொழில் ஏறு முகம்தான்" என்று சொல்லிவிட்டு யோசனை செய்த மட்டில் தொப்பியை விலக்கிப் பாதி வழுக்கை விழுந்து போன மொட்டைத் தலையைத் தடவிக் கொண்டார். சற்று நேரம் யோசனை செய்து விட்டுக் கம்பீரமாகத் தலையை உயர்த்தி

"பயப்படாதீய மச்சன் இன்ஸால் அல்லா, நம்மண்டை ஒரு பாண்டிச்சேரிப் பறைப் பொடியன் இருக்கான் நெம்ப நெம்ப சூட்சுமமான பையன். நொம்ப ரோக்கியமானவனும் கூட. பச்சைத் தோல் மார்க்கெட்ல கொள் மொதல் பண்றதிலேருந்து, தோலைப் பதப்படுத்தி விற்பனைக்கு வைக்கிற வரையிலே அத்தனையும் அவனுக்கு அத்துபடி.

ஒம்ம தங்கச்சிக்கு அவன் புள்ளெ மாதிரி. அவனை இஸ்லாத்துலே சேர்த்து நம்ம மார்க்கத்தைச் சேந்த பொண்ணை நிக்கா பண்ணிராமெண்டு ஆயிஸா எம்புட்டே முளைஞ்சு பாத்தா முடிலை" என்று மனைவியின் மனம் குளிரப் பேசிவிட்டு, ஆயீஸாவின் சம்மதத்தைக் கேட்கும் வகையில் தனது இல்லிக் கண்களை இடுக்கிக் கொண்டு பார்த்த போது, அவர் சொல்லப் போகும் ஆலோசனையை ஏற்பது போல ஆயிஸா தலையை ஆட்டவும் "அவனை ஒம்மோட அனுப்பிச்சு வக்கிறம் அல்லாத்தையும் பாத்துக்குவான். சம்பளத்தைக் கூட அவன் பெரிசு பண்ணமாட்டான்" என்ற போது, "ஆனா ஒண்ணு அத்தா, பய படு மானஸ்தன். சுருக்குண்டு பேசப் பொறுக்க மாட்டான். வேற பறக்குடி பசங்க கிட்டப் பேசறாப் போல, அவங்கிட்டே பேச்சுக் கொடுத்தீயளோ, மருவாதைக் கெட்டுப்போவும்" என்று ஆயிஸா எச்சரிக்கையாகச் சொல்லவும்.

"ஆமாம் மச்சான். பொடியன் மகா ரோஷக்காரன். மரியாதைக் குறைச்சலிண்டு பட்டாப் போதும். போடா ஜாண்டான்! ஒம் வேலையும் மாண்டாம்; மசிரும் மாண்டாண்ணு தூக்கி எறிஞ்சிட்டுப் போயிடுவான் "என்று எச்சரிக்கை செய்த பின்பு கணவனும் மனைவியும் எச்சரிக்கை செய்ததையும் அவர்கள் விதித்த நிபந்தனையையும் ஏற்றுக் கொண்டு, கனி ராவுத்தர் சாமிக்கண்ணை வாணியம்பாடியிலிருந்து அந்த ஊருக்கு மேஸ்திரியாகவே கூட்டி வந்தார்.

துடிப்பு மிக்க வாலிபனான சாமிக்கண்ணு மம்முது கனிராவுத்தர் தோல் ஷாப்பில் கால் வைத்துத் தனது பணியை ஆரம்பித்தது தான் தாமதம். தொழில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அபிவிருத்தி அடைந்தது

இரண்டு ஆண்டு காலத்துக்குள் ஏற்பட்ட நட்டத்தையும் ஈடு கட்டி, கனி ராவுத்தர் மைய்யன்னா காவன்னா கனி ராவுத்தர் என்று முஸல்மான்கள் மத்தியில் பெருமைபட்டுக் கொள்ளும் அளவுக்கு அவரது தோல் ஷாப்பு தொழில் பிரசித்தமாகியது.

அல்லாவுக்கு நன்றி சொல்வதற்காகக் கனிபாய் ஹச் யாத்திரையாக மெக்கா வரையில் போய்விட்டு வந்தார். கனி ராவுத்தர், ஆயிஸா பீவியைப் போலவே, சாமிக்கண்ணைத் தனது மூத்த மகனாகப் பாவித்துப் பெருமைபட்டுக் கொள்வார். கனிபாய் தனது குடும்ப விவகாரங்களைக் கூட சாமிக்கண்ணு மேஸ்திரியின் ஆலோசனை கேட்டுத்தான் செய்வார் மட்டுமல்ல. சாமிக்கண்ணுவுக்குத் தன் செலவிலேயே பெண்பார்த்துத் திருமணமும் செய்து வைத்தார்.

இவ்வளவும் மைய்யன்னா கானா கனிபாய் மௌத் ஆகும் மட்டும்தான்.

மம்முதுகனி ராவுத்தரது மரணத்துக்குப் பின், அவரது ஒரே மகனான அப்துல்லாவின் பொறுப்பில் தோல் ஷாப்பு நிர்வாகம் வந்தது தான் தாமதம், வியாபாரிக்குள்ள சாமர்த்தியமும் சாதுரியமும் இல்லாமல் அப்துல்லா ஒரு பணக்காரனுக்குள்ள திமிருடன், சாமிக்கண்ணு மேஸ்திரியுடன் மட்டுமல்ல, இதர ஊழியர்களுடனும் திமிருடன் நடந்து கொண்ட தோடல்லாமல் சாமிக்கண்ணுவை மரியாதைக் குறைவாகவும் நடத்தவாரம்பித்தான்.

தோல் ஷாப்பு வேலை சம்மந்தமாக, யார் தலையீட்டையும் விரும்பாத மேஸ்திரி சாமிக்கண்ணைப் பார்த்து அப்துல்லா "இந்தாய்யா மேஸ்திரி, நீ எங்கிட்டே கை நீட்டிச் சம்பளம் வாங்கிறவன். என்னோட தொழிலிலே தலையிடறதுக்கும், ரோசனை சொல்றதுக்கும் நீ ஆரு. மேஸ்திரிங்கிற மட்டுலே ஆளுங்களை மேய்க்கிற வேலையை மட்டும் பாரு" என்று சொன்னதுதான், தாமதம் மானஸ்தனும் ஒழுக்கசீலருமான சாமிக்கண்ணு மேஸ்திரி மறுகணமே கனிபாய் தோல் ஷாப்பை விட்டு வெளியேறிவிட்டார்.

தனது தோல் ஷாப்பை விட்டால் சாமிக்கண்ணு

பிச்சைதான் எடுக்க வேண்டும் என்பது அப்துல்லாவின் கணிப்பு. எப்படியும் தன்னை வந்து கெஞ்சுவார். மற்ற தாழ்த்தப்பட்ட மக்களைப் போல் அடிபணிவார் என்றுதான் அப்துல்லா எண்ணினான்.

மட்டுமல்லாமல், தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த எந்த மனிதனும், தொழில் நடத்தத் தகுதியற்றவர்கள். அந்த அளவுக்கு அவர்களுக்கு மூலதனமும் கிடையாது. புத்தியும் கிடையாது என்று அப்துல்லா மட்டுமல்ல, பெரும்பாலான தோல் ஷாப்பு முதலாளிகளும் எண்ணலானார்கள்.

ஆனால் சாமிக்கண்ணுவின் நாணயம் காரணமாகவும், தொழில் திறமை, நுட்பம் காரணமாகவும், பச்சைத் தோல் கொள்முதலை முதலில் கமிஷனுக்குத்தான் ஆரம்பித்தார். ஆனால் நாளாவட்டத்தில் தோல் ஷாப்பு உடைமையாளர்களே பச்சைத் தோல் கொள்முதலில் சாமிக்கண்ணு மேஸ்திரியவே நம்ப வேண்டிய நிலமை ஏற்பட்டுப் போனது. எனவே, வெறுங்கையில் முழம் போடுவது போல ஆரம்பமான சாமிக்கண்ணுவின் தொழில், பச்சைத் தோலை மார்க்கெட்டிலிருந்தும், கிராமங்களிலிருந்தும் கொள்முதல் செய்து கொண்டு வருவதற்கென்றே, இரண்டு இரட்டை மாட்டு வண்டிகள் வாங்கும் அளவுக்குத் தொழில் முன்னேற்றம் ஏற்பட்டது. பொறாமை கொண்ட அப்துல்லா, சாமிக்கண்ணுவின் வளர்ச்சியைத் தடை செய்ய எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தான். போக்கிரிகளை விட்டு, அவரது வண்டிகள் பச்சைத் தோல் பாரம் ஏற்றிக் கொண்டு, மணப்பாறைச் சந்தையில் இருந்து வரும் வழியில் தாக்கிக் கொள்ளையடிக்க ஏற்பாடு செய்து பார்த்தான். மாறாகக் கொள்ளை அடிக்கப் போன போக்கிரிகள் பிடிபட்டு, உண்மையைக் கக்கி விடவும், அப்துல்லா கேவலப்பட்டுப் போனதோடு, நகரத்தில் மிகவும் செல்வாக்கில் ஓடிக் கொண்டிருந்த மும்மது கனி ராவுத்தர் தோல் ஷாப்பு, சரியான கவனிப்பும், நிர்வாகமும் விவேகமும் இல்லாமல், நாளுக்கு நாள் சீணதிசை அடைந்து, விலை பேசும் அளவுக்கு நலிந்து போனது. ஆனால் சாமிக்கண்ணுவின் தொழில் நாளுக்கு நாள்

அபிவிருத்தியடைந்ததோடல்லாமல் அவரது அந்தஸ்தும் சமூகத்தில் மதிப்பும், மரியாதையும் உயர்ந்து கௌரவம் கொண்ட தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவ குடும்பங்களில் ஒன்றாக அந்தக் குடும்பம் பரிணாமம் பெற்றிருந்தது.

சாமிக்கண்ணு மேஸ்திரிக்கு, இவ்வளவு சம்பாத்தியமும், சாமர்த்தியமும் இருந்தபோதும், தாமும், தமது வம்சத்தவரும், கண்ணிருந்தும் குருடராக இருப்பதில் மிக்க மனவருத்தம், இரண்டெழுத்துப் படிக்கவில்லையே என்கிற ஆவேசம்.

எனவே, தனக்கு ஏற்பட்ட வனவம் தனது வாரிசுகளுக்கும் ஏற்படக் கூடாது என்கிற திடமான எண்ணத்தோடு, தனது மூத்த மகனான இருதய சாமியைச் சாமியார் நடத்தும் வேதப் பள்ளிக் கூடத்துக்கு அனுப்பி வைத்தார். தந்தையின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப இருதயசாமி படிப்பில் மிகவும் சாமர்த்திய சாலியாகவே திகழ்ந்தார்.

இருதயசாமி, மேல் படிப்புக்காகப் புனித சவேரியார் கல்லூரியில் போய்ச் சேர்ந்தபோது பிதாதர் பெப்பின் டிஸோஸாவின் அறிமுகமும் ஆதரவும் கிடைக்கப் பெற்றது.

பெப்பின் பொன்னாண்டோ, கோவாக்காரர். அவர் ஒரு ஆங்கிலோ இந்தியர். பெப்பின் பொன்னாண்டோ, தனது இரண்டும் கெட்டான் பிறவியின் காரணமாகவோ, என்னவோ தன்னிடம் கல்வி பயில வரும் தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவ மாணவர்கள் பால் பெரும் அன்பும் அக்கறையும் கொண்டவராகவும் இருந்தார்.

இருதயசாமி தனது ஆசிரியர் பயிற்சியை முடித்து வந்திருந்தபோது பிதாதர் பெப்பின் பொன்னாண்டோ, அந்த நகரத்தின் கத்தோலிக்க திருச்சபையின் பெரிய குருபீடமாகப் பதவி உயர்வு பெற்று வந்து சேர்ந்தார்.

பக்திமானான சாமிக்கண்ணு மேஸ்திரிக்குத் தன் மகன் திருச்சபையின் சேவையிலேயே முழுவதையாக ஈடுபடுத்தப் வேண்டும் என்கிற ஆவல். இருதய சாமியைப் பொறுத்தமட்டில் தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்கிற

மட்டில் எப்போதுமே தனது தனப்பனாரின் விருப்பம் தான் தனது விருப்பம் என்றிருப்பவர். எனவே சுத்தோலிக்க சாமியாராகி விடவேண்டும் என்பது அவரது ஆவல்.

குருமார்களைப் பயிற்றுவிப்பதற்காகச் சுத்தோலிக்க பீடம் ஏற்பாடு செய்திருக்கும் பெருமாள் மலை சாமியார் பள்ளிக் கூடத்திலோ பெஸ்கி கல்லூரியிலோ இடம் பெற்றுச் சாமியாராகி விடவேண்டும் என்று அவர் விருப்பம். சுத்தோலிக்கத் திருச்சபையும் இருதயசாமியை இருகரம் குவித்து வரவேற்கத் தயாராக இருந்தது.

எனவே, தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றத் தயாரான இருதயசாமி தனது குருவும் ஞானத் தந்தையுமான பெப்பின் பெர்னாண்டோவின் சந்நிதானத்தில் முழந்தாளிட்டு, ஆண்டவனுக்குள் தன்னை அர்ப்பணம் பண்ணிக் கொள்ளும் தனது மனப்பூர்வமான விருப்பத்தைத் தெரிவித்த போது, தனது நெஞ்சுக்கு நேராகச் சிலுவை அடையாளம் போட்ட வண்ணம் நின்றிருந்த குருவானவரிடமிருந்து எந்தவிதமான பதிலும் வரவில்லை.

இருதயசாமியின் விருப்பத்தைக் கேட்ட பின்பு முழந்தாழில் நின்று நயனங்களை மூடிய வண்ணம் தியானத்தில் ஆழ்ந்திருந்த ஞான குருவானவர். நித்திரை யினின்றும் கண் விழிப்பது போல் கண் மலர்ந்தார். பிறகு இருதயசாமியின் முகத்தைப் பார்த்துக் கருணை ததும்பப் புன்முறுவல் செய்தார்.

"மகனே! ஆண்டவன் உனக்கு அதற்கான அருள்பாலிக்கவில்லை" என்று சொன்னபோது இருதயசாமி மலைத்துப் போனார்.

முகம் சுண்டிப்போன இருதயசாமி மௌனமாகவே ஏதும் சொல்லாமல் சாமியார் முன் நின்றார்.

பங்குத்தந்தையப் பொறுத்தமட்டில் தேவ ஊழியத்தைப் பெரிதாக ஏற்றுக் கொண்ட சாமியார்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் சில விசித்திரமான போக்குகளைத் தனது சீடனிடம் வெளிப்படையாகச் சொல்ல

விருப்பமற்றவராக இருந்தார். தேவ ஊழியத்தை லட்சியமாகக் கொண்ட திருச்சபையில், சாமியார்கள், வெள்ளைக்காரர்கள் என்றும் கருப்பர்கள் என்றும் மேல் ஜாதிக்காரர்கள் என்றும் தாழ்ந்தவர் என்றும் அவர்களுக்குள்ளேயே தன்னவர்கள் என்றும் பிரத்தியார்கள் என்றும் ஒரு சீத யுத்தம் நடத்திக்கொண்டு திருச்சபையின் புனிதத் தன்மையை ஏசுபிரானின் நாமத்தினால் மாசுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதை அவரால் வெளிப்படையாகக் கண்டிக்கவோ பேசவோ முடியவில்லை. எனவே சபைக்குள் சாமியாராகி இருப்பதையும் விடத்தானும் அங்கி அணிந்து அங்கீகாரம் பெறாமலேயே தேவ ஊழியம் செய்ய முடியும் என்று பெப்பின் பெர்னாண்டோ விரும்பினார். அப்படிப்பட்ட ஒரு சோதனையைத் தனது மாணாக்கனும், சீடனுமான இருதய சாமியின் வாயிலாக நடத்த விழைந்தார். ஆகவே, தனது உள்ளக் கிடக்கையை வெளிப்படையாக வெளிப்படுத்திக் கொள்ளாமல் இருதய சாமியைப் பார்த்து "மகனே! ஆண்டவன், உனக்குத் தேவ ஊழியம் செய்வதற்கு வேறு விதமாகப் பணித்திருக்கிறான். திருச் சந்நிதானம் உன்னிடத்தில் அதைத்தான் எதிர்பார்க்கிறது" என்று சீடனைப் பார்த்துச் சொன்னார்.

குருவானவர் என்ன சொல்ல வருகிறார் என்று புரியாமல் இருதயசாமி திகைத்த போது "தேவ ஊழியம் செய்வதற்கும் மக்களை நல்வழிப்படுத்துவதற்கும் அங்கிதரித்துச் சாமியாராக வேண்டும் என்பது கிடையாது. பரம்பரை பரம்பரையாக அடிமைகளாகவும், அஞ்ஞானிகளாகவும், உழலும் இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களை, மோசேயானவன், இஸ்ரேல் மக்களை வழிநடத்திச் சென்றதே போல், இவர்கள் உணர்வு பெறவும், தாங்கள் யாரென்று உயிர்ப்புப் பெறவும், நீ, சத்தியமும் ஜீவனுமாய் வழி நடத்துவதற்கும், அவர்களைக் கடைத் தேற வைப்பதற்கும் ஆண்டவன் உன்னைத் தேர்ந்தெடுத்திருக்கிறான்" என்று சொன்ன குருவானவர், தான் வெகுகாலமாகப் பத்திரப்படுத்தி வைத்திருந்த வேதாகமத்தை இருதயசாமியிடம் மந்திரித்து ஜெபம் செய்து கையில் கொடுத்து ஆசீர்வாதம் செய்த கையோடு திருச்சபையால் நடத்தப்படும் ஒரு பள்ளிக் கூடத்தில் ஆசிரியராகவும் நியமித்தார்.

பக்தியும், விசுவாசமும் கொண்ட இருதயசாமியின் தேவ ஊழியம் அன்று முதல் ஆரம்பமாயிற்று.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பரமபிதா ஓய்வெடுத்துக் கொண்ட ஏழாம் நாளில், தனக்குச் சொந்தமான ஹெர்குலிஸ் சைக்கிளை எடுத்துக் கொண்டு ஒவ்வொரு கிராமத்துச் சேரிக்கும் போய் "ஓ! விரியன் பாம்புக் குட்டிகளே" என்று யோவான் வனாந்தரத்தில் நின்று முழங்கியதே போன்று, விக்கிரகங்களை ஆராதிக்கின்ற அஞ்ஞானிகளான சேரி மக்களை மனம் திருந்தி, ஏசு மதத்தில் சேர்ந்து நியாயத் தீர்ப்பு நாளில் வரும் தண்டனையினின்றும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள மன்றாடிக் கேட்டுக் கொள்வார். அதையே தேவ ஊழியமாகக் கொண்டார்.

அன்றும், தேவாலயத்தில் தேவ ஊழியம் செய்து விட்டு வீட்டுக்குத் திரும்பி வரும் போது தான் அந்த துக்ககரமான சம்பவம் அவரைப் பெரிதும் ஆட்கொண்டது. அவருள் இருக்கும் மனிதாபிமானத்தை உசுப்பி விட்டிருந்தது. ஓசேப்பின் பரிதாப நிலை கண்டு சீறிப் பாய்ந்தார்.

11

அன்று ஞாயிற்றுக் கிழமை என்பதால் நீதிமன்றங்களுக்கு விடுமுறை.

வக்கீல் சுந்தரேச அய்யர், வழக்கம் போல வெகு காலையிலேயே எழுந்து, காலைக் கடன்களை முடித்துவிட்டுக் கூடத்தில் கிடக்கும் ஊஞ்சலில் உட்கார்ந்து அன்றைய காலை ஹிந்துப் பத்திரிக்கையில் வந்த சேதிகளைப் படித்து முடித்து விட்டுத் தனது சகோதரர் ஜஸ்டிஸ் பரமசிவம் அய்யர். வால்மீகி இராமாயணம் பற்றி அனுப்பியிருக்கும் குறிப்புகள் அடங்கிய பைலைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

தேக்கு மரத்திலான மர ஊஞ்சலை ஒட்டிப் போடப்பட்டிருக்கும் யானைத் தந்தத்தினால் இழைக்கப்பட்ட வேலைப்பாடமைந்த கருங்காலி மரத்திலான டீப்பாயில் கம்ப இராமாயணப் பதிப்பும் வால்மீகியின் இராமாயணமும் இளங்கோவடிகளின் சிலப்பதிகாரமும் குறிப்புகள் அடங்கிய பெரிய நோட்டும் ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. அருகில் மகாத்மா காந்தியின் ஹரிஜன் இதழ்களும் தேதி வாரியாக முறைப்படுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன.

சிறுவயதிலேயே அதாவது கிராமப் பள்ளிக் கூட குருகுல வாசக் காலம் முதல் சமஸ்கிருதம் அதாவது தேவ நாகரி கிரந்தம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பயிற்றுவிக்கப் பட்டிருந்ததால் வால்மீகியின் இராமாயணம் காளிதாஸனின் சாகுந்தலம், மாளவிகாகினிமித்ரா பவபூதியின் உத்திர ராமசரிதம் ஆகிய இலக்கியக் கருவூலங்களை ஆழமாகப் பயின்ற காரணத்தால், இவ்விலக்கிய நூல்களில் பல "ஸ்லோகங்கள்" அவருக்கு மனப்பாடம்.

இளம் வயதில் தனது பட்டப்படிப்பை முடித்துவிட்டு சகோதரர் பரமசிவம் அவர்களின் அறிவுரையின் படி, வயதான பெற்றோரையும் பண்ணையையும் நிர்வகிக்கும் பொறுப்பு ஏற்ற போது, கிராமத்தில் பண்ணை நிர்வாகம் முடிந்து ஓய்வு நேரங்களில் கிரந்தப் பதிப்பான இராமாயணத்தின் பல காண்டங்களையும் மற்றும் மகாபாரதப் பெருங்கதையையும் தான் கற்ற மேல்நாட்டு ஆங்கிலக் கல்வி அறிவின் அடிப்படையில் ஆய்வு செய்த போது இராமனது தெய்வீகத் தன்மை பற்றி அவருக்கே சந்தேகம் தோன்றலாயிற்று. குறிப்பாக வாலி வதைப்படலத்தைப் படித்தபோது, தெய்வீகத்தன்மை படைத்த இராமன் சாதாரண மனிதனை விடத்தானும் கேவலமான குணநலத்துடன் நடந்து கொண்டமை அவருள் பெரும் ஐயப்பாட்டை ஏற்படுத்திவிட்டது. காகுத்தன் மட்டுமல்ல, பகவான் கிருஷ்ணனது தெய்வீகத்தன்மை பற்றியும் சுந்தரம் அய்யருக்குக் கடுமையான அய்யப்பாடு ஏற்பட்டலாயிற்று.

எனவே தனது சகோதரர் பரமசிவம் காட்டிய வழிமுறையில் வால்மீகியின் இராம கதையையும், கும்பகோணம் பண்டிதர்கள் எழுதிப் புதுப்பித்த மகாபாரதக் கதையையும், பாடல்களையும் அவற்றில் காணும் கதைகள் கதாபாத்திரங்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் தெய்வீகத் தன்மையை அகற்றிவிட்டு வெறும் இலக்கியம் என்ற மட்டில் படித்த போது வால்மீகி இராமாயணத்தில் காலமாற்றத்துக்கு ஏற்றாற்போல் ஏற்றபடி பல பாடல்கள் இடைச்செருகல் களாகக் சேர்க்கப்பட்டிருப்பதை அவர் கண்டார்.

ஒரு இனத்தின் வெற்றிக்காகவும் ஆதிக்கத்தை விஸ்தரிப்பதற்காகவும் போராடிய ஒரு சாதாரண குறு நில மன்னன் மீது தெய்வீகத் தன்மை புகுத்தப்பட்டுப் பெரிதுபடுத்தப்பட்டிருப்பதையும் சுந்தரேசய்யர் கண்டார்.

மட்டுமல்லாமல் இந்தியாவில் பேரரசுகள் உருவெடுத்த காலத்தில் தங்களது நாடு பிடிக்கும் விஸ்தரிப்புக் கொள்கையை நியாயப்படுத்தும் வகையில், இந்த இலக்கியங்கள் விரிவுபடுத்தித் தெய்வீகத் தன்மை பெற்றிருக்க வேண்டும் என்பது சுந்தரேசய்யரின் அசைக்க முடியாது அபிப்பிராயம்

அதுவரையில், இராம பக்தனாக இருந்த அய்யர் பக்தியினின்றும் விடுபட்டவர் தாம் கண்டறிந்த உண்மைகளை முழுமையாக வெளிப்படுத்த வேண்டும் என்கிற உணர்வோடு தான் உய்த்தறிந்த உண்மைகளை நிரூபணம் செய்யும் வகையில், இந்த நூல்களில் ஆதாரங்களைக் கண்டறிந்து, கொள்வதற்காகக் கடந்த பத்து ஆண்டுகாலமாக ஆய்வில் ஈடு பட்டிருக்கிறார்.

அதிலும், மகன் சங்கரன், சென்னை பட்டினத்தில், சட்டப்படிப்பு முடித்துவிட்டுத் தனக்குத் துணையாகத் தொழிலில் வந்து சேர்ந்ததற்குப் பிறகு, முன்னைவிடத்தானும் ஆழமாக ஆய்வில் ஈடுபட்டிருக்கிறார். மட்டுமல்லாமல், மாவட்ட காங்கிரஸ் கமிட்டி உறுப்பினராகவும், ஹரிஜன சேவக சங்கச் செயலாளராகவும் இருந்த போதும், ஆய்வுப்பணியின் காரணமாகச் சனி ஞாயிற்றுக் கிழமைகளில் அதிகமாகப் பொது வேலைகளையும் சுந்தரேசய்யர் குறைத்துக் கொண்டிருக்கிறார்.

கையில் வைத்திருக்கும் குறிப்புக்கள் அடங்கிய கடிதத்தை மடியில் கவிழ்த்து வைத்துவிட்டு, வால்மீகி ராமாயணத்தை எடுத்துப் பார்த்த போது, ஏதோ நிழல் தென்படவும் ஏறிட்டுப் பார்க்கிறார்.

எதிரில் மனைவி அம்புஜத்தம்மாள் வெள்ளிக் கூஜாவும், டம்ளருமாக நின்று கொண்டிருந்தார்.

சாதாரணமாகச் சுந்தரேச அய்யர் புத்தகங்கள் அல்லது வழக்குச் சம்மந்தமான கட்டுக்கள், உயர்நீதிமன்ற, உச்சநீதிமன்ற தீர்ப்பு ஆகியவற்றை ஆய்வு செய்யும் போது, அவர் கவனத்தை யாரும் திருப்பிவிடக் கூடாது. தலையிடக் கூடாது சாதாரணமாக மிகவும் சாந்த சொரூபியாகத் தென்படும் சுந்தரேச அய்யருக்கு மகாச் சண்டாளமாகக் கோபம் வரும். விதி விலக்கு மனைவி அம்புஜத்தம்மாள் மட்டும் தான். அது என்ன மந்திரமோ தெரியாது. சுந்தரேச அய்யருக்கு எவ்வளவு மூக்கு முட்டக் கோபம் ஏறியிருந்தாலும் சாந்தமும், சமாதானமும் ததும்பும் அம்புஜத்தம்மாளின் திருமுகத்தைப் பார்த்தால்

போதும், கோபமும் எரிச்சலும் மறைந்து சாந்தம் அடைந்து விடுவார்.

சமையல்கார அய்யா வெங்கி என்கிற வெங்கடேசன் அய்யர் ஸ்நானம் செய்து முடித்து டைனிங் டேபிள் முன்னால் வந்து உட்கார்ந்த உடனே, அவருக்குக் குங்குமப்பூ கலந்த பாலை மேசையில் கொண்டு வந்து வைத்திருக்க வேண்டும். அன்று அது ஒரு ஞாயிற்றுக் கிழமை என்பது வெங்கிக்கு மறந்து போய் விட்டது. ஏனைய நாட்களைப் போல், கோர்ட்டுக்குப் போவதற்கு முன்னால் ஐயா போஜனம் அருந்தப் போகிறார் என்று மறதியாக இருந்து விட்டான்.

சுந்தரேச அய்யர் உஞ்சலில் உட்கார்ந்து ஆராய்ச்சியில் இறங்கி விட்டால். வெறும் வயற்றோடு உட்கார்ந்திருக்கும் அய்யரிடம் பாலைக் கொண்டு வைத்தால் சண்டாளமாகக் கோபம் வரும். மட்டுமரியாதை இல்லாம ஏச்சும் கிடைக்கும் எனவே இப்படிப்பட்ட இக்கட்டான நேரங்களில் வெங்கியைக் காப்பாற்றுவது அம்புஜத்தம்மாள் தான்.

வெள்ளிக் கூஜாவுடன் நிற்கும் மனைவியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்த சுந்தரேச அய்யர் வியாஜ்ஜியங்கள் சம்மந்தமான கட்டுக்களும், சட்டப் புஸ்தகங்களும் அடுக்கி வைக்கப் பட்டிருக்கும் மேஜையில் கூஜாவையும், வைத்துவீட்டுப் போகும்படி மனைவியிடம் கண்ஜாடை காட்டிய படியே புஸ்தகத்தில் திரும்பவும் கவனம் செலுத்தியவர், அம்புஜத்தம்மாள் அங்கேயே நிற்பதைக் கண்டதும், அவளுக்கு ஏதோ சொல்ல வேண்டியுள்ளது என்று ஊகம் பண்ணிய மட்டில்,

'நோக்கு என்ன வேணும்' என்று கேட்பதேபோல் ஏறிட்டுப் பார்த்தார்.

கூஜாவில் இருந்து பாலை தம்ளரில் ஊற்றிக் கொடுத்த அம்புஜத்தம்மாள்

"சித்தே கொல்லைப் பக்கமா வந்திட்டுப் போரேளா" என்று சொன்னபோது அம்புஜத்தம்மாளின் வதனம் மங்கியிருப்பதை அவரால் காண முடிந்தது

ஏன் என்று கேட்பது போல், பாலைப் பருகிவிட்டுச் சுந்தரேச அய்யர் மனைவியைத் திரும்பவும் ஏறிட்டுப் பார்த்தபோது

"மாசானம் உங்களைப் பார்க்க வேணும்ன்னு நிண்ணிண்டிருக்கான். அவனோட வேறே ஒரு சேரிப் பொடியனும் நிக்கறான்." அம்புஜத்தம்மாள் சொன்னாள்.

"அவாளுக்குத் தேவையானதைக் கேட்டுக் கொடுத்தனுப்ப வேண்டியது தானே. என்னை ஏன் கேக்கறாய். அதெல்லாம் ஒன்னோட வேலை" சுந்தரேசர் சொன்னார்.

"அவா ஏதுமே கேக்கலை. சேரிக்குள்ளே ஏதோ பிரச்சனையாம் ஒரு பொண்ணோட பொணத்தை வச்சுண்டு அல்லாடிண்டிருக்களாம். அதுதான் அவா உங்களைப் பார்க்கணும்ண்ணு நிண்ணிண்டிருக்கா" அம்புஜத்தம்மாளின் குரலில் நடுக்கம் தென்பட்டது.

"சரி, போ நான் வாரேன்" என்றவர் தனது நீண்ட மூக்கைத் தடவிய வண்ணம் யோசனையில் ஆழ்ந்தார்.

சுந்தரேசய்யர், ஹரிசன சேவா சங்கத் தலைவராக இருப்பதால், பெரும்பாலும், அந்தப் பிராந்தியத்தில் சேரிகளில் ஏதாவது பிரச்சனைகள் ஏற்பட்டால் அம்மக்கள் சுந்தரேச அய்யரையும், தாலுகா காங்கிரஸ் கட்சித் தலைவரான கணேச அய்யாரையும் தான் உதவி கேட்டு வருவாங்கள்.

சுந்தரேச அய்யரைப் பொறுத்த மட்டில், மதுரை வைத்தியநாத அய்யரின் அத்யந்த சீடர். தான் ஏற்றுக் கொண்ட கொள்கைக்கேற்ப நடப்பவர். எனவே, சமையற் கட்டு தவிர மற்ற எல்லா வேலைகளையும் செய்வதற்கு, தாழ்த்தப்பட்டவர்களையும் சிறுபான்மையினரான முஸ்லீம்களையும்தான் அமர்த்தியிருந்தார்.

பின்கட்டில் வேலை செய்யும் மாசானம் சிறுபிள்ளைப் பிராயத்திலிருந்தே சுந்தரேச அய்யர் வீட்டில் வேலை செய்கிறான். சொல்லப்போனால் மாசானம் அந்த வீட்டில் பிறவாத பிள்ளை மாதிரி.

சிட்டுக்குருவி மாதிரி மகிழ்ச்சியாக இருக்கும் மாசானம் இப்படி மனம் குலைந்து நிற்பதை அம்புஜத்தம்மாள் பார்த்ததில்லை.

கணவனிடம் விவரத்தைச் சொல்லி விட்டுப் பின் கட்டுப் பக்கம் வந்த அம்புஜத்தம்மாள்.

"ஏண்டா, மாசானம் கூட வந்திருக்கும் புள்ளையாண்டானுக்கும் சேர்த்து ஏதாச்சும் வெங்கியத்தரச் சொல்லவா வெறும் வயத்தோட நிக்கப்படாது," என்று சொன்னபோது மாசானமும் உடன் வந்திருக்கும் சேரி வாலிபனும் மறுத்து விட்டனர்.

எப்போதுமே, மாசானம், பின்கட்டில் வேலைக்கு வந்ததும், சமையல்கார ஐயர் வெங்கி, மாசானத்துக்கு வயறு நிரம்ப ஏதாவது போஜனமோ, பண்டமோ கொடுத்தாக வேண்டும். அவனை வெறும் வயற்றுடன் வேலை வாங்கக் கூடாது என்பது அம்புஜம் அம்மாளின் கண்டிப்பான உத்தரவு

மாசானத்தையும், அவனுடன் வந்திருக்கும் வாலிபனையும் ஏதாவது சாப்பிட வேண்டும் என்று அம்புஜத்தம்மாள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே கதர் ஜிப்பாவும், பஞ்ச கச்சமுமாக சுந்தரேச அய்யர், பின்கட்டுக் கதவைத் தாண்டி வந்தார்.

"மாசானம் நோக்கு என்ன வேணும். அப்படி என்ன அவசரம்" என்று கேட்கும்போது பக்கத்தில் நின்ற சேரி வாலிபன் தனது தலைத்துண்டை அவிழ்த்துக் கட்கத்தில் இடுக்கிய வண்ணம் தொண்டனிடப் போனான். அதைப் பார்த்த போது சுந்தரேச அய்யருக்குச் சண்டாளமாகக் கோபம் வந்தது.

"படவா ராஸ்கல். இதென்னடா பழக்கம்? இந்த மாதிரியான நமஸ்காரமெல்லாம் படாதுண்ணு எத்தனை வாட்டிச் சொல்லியிருக்கேன். ஒனக்கு மட்டுமில்லேடா இவங்களுக்கும்தான்" என்று மாசானத்தைக் கடிந்து கொள்ளவும், உடன் வந்த வாலிபனை மாசானம் முறைக்கவும்

திரும்பவும், துண்டை எடுத்துத் தலையில் முண்டாசாகக் கட்டிக் கொண்டான்.

"சேரிக்குள்ளே பொணம் விழுந்திருக்கு சாமி" மாசானம் பரிதாபமாகச் சொன்னான்.

"எங்க சித்தப்பனோட மக புள்ளை சாமி" உடன் வந்த வாலிபன் பரிதாபமாகச் சொன்னான்.

இந்த அற்ப விஷயத்தை இங்கே வந்து ஏன் சொல்ல வேண்டும் என்பது போல் பார்த்த சுந்தரேச அய்யா.

"செலவுக்குப் பணம் ஏதும் வேணுமானா அம்மாவண்டை கேட்டு வாங்கிண்டுப் போக வேண்டியது தானேடா? சுந்தரேசய்யா சாவதான மாகக் கேட்டார். அவர் பேச்சில் ஒரு ஒருவிதக் கோபம் கலந்த அதட்டல் தென்படவும் மாசானம் பேசலானான்.

"ஊரணியிலே தண்ணி நெம்பிக் கெடக்குது. இடுகாட்டுக்குப் பொணத்தை எடுத்துட்டுப் போக வழி தெரியலை. மேல்சாதிக்காரவுக. பொணத்தை மேலக்குடிக தெருவழியா கொண்டு போவப்படாதுண்டு மரிக்காவ ஒண்ணும் தோணாம சேரி சனமே கையப் பெசஞ்சிக்கிட்டு நிக்குவு மாஞ்சிபோவுது"

மாசானம் பேசுவதைக் கேட்டதும், சுந்தரேச அய்யரின் முகம் சிவந்து போனது, வழக்கம் போல, தனது நாசியை வருடி விட்ட வண்ணம் அம்புஜத்தம்மாளையும், அந்தச் சேரி வாலிபர்களையும் பார்த்தார்.

இரண்டு வாரத்துக்கு முன்னால் தான், முன்சீப் கோர்ட்டின் தீர்ப்பை மேல் நீதிமன்றமும் ஆமோதித்திருக்கிறது. மதுரை வைத்திய நாதய்யரின் வேண்டுகோளின் படி அந்த வழக்கு சுந்தரேச அய்யரால் நடத்தப்பட்டது. மேல்சாதிக்காரர்களில் ஒரு பகுதியினருக்குச் சொந்தமான கருமாரியம்மாள் கோவில் வழியாகச் செல்லும் பாதை பொதுப்பாதை என்றும், சேரி மக்களது இடுகாட்டுக்குப் போவதற்கு அந்தப் பாதையல்லாது, வேறு

பாதை கிடையாது என்றும் சேரி மக்கள் அந்தப் பாதையை உபயோகிப்தை யாரும் தடுக்கக் கூடாது என்றும் சேரி மக்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

கருமாரியம்மன் கோவில் கூட, தெருவை மறித்து, அரசாங்க இடத்தில் ஆக்கிரமிப்புச் செய்து கட்டப்பட்டிருப்பது, வழக்கு நடக்கும் போது, அரக ஆவணங்களைப் பரிசீலித்த போது தெரிய வந்துள்ளது.

சுந்தரேசய்யர் நீதிமன்றத் தீர்ப்பை ஜில்லா கலைக்டருக்கு அனுப்பி வைத்ததோடு, நந்தவனப் பட்டிச் சேரி மக்கள் சடலங்களை, இடுகாட்டுக்கு எடுத்துச் செல்லுகையில் மேல் ஜாதிக்காரர்கள் தடுப்பதற்கு வாய்ப்பிருப்பதால், அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் போலீஸ் பந்தோபஸ்துத் தரவேண்டும் என்றும் கேட்டுக் கடிதமும் எழுதியுள்ளார்

"பிள்ளைமார் தெருவைத் தாண்டி கருமாரியம்மன் கோயில் வழியா சேரிப்பொணம் போகக் கூடாதிங்கிறாளா?" சுந்தரேசய்யர் சற்று ஆத்திரமாகக் கேட்டார்.

"ஆமாம் சாமி. எங்க பொணம் மேகுடி தெரு வழியாப் போனா ஊரும் சாமியும் தீட்டப்பட்டுப் போயிருமிங்கிறாங்க"

சற்று நேரம், பாதி வழுக்கை விழுந்து போன தலையை வருடிய வண்ணம் நின்றிருந்த சுந்தரேசய்யர் "அல்லாம் மனகாவலன் பிள்ளை ஏற்பாடு இல்லையாடா மாசாணம்" சற்றுக்கடுமை தொனிக்கக் கேட்ட போது, மாசாணம் தலையை ஆட்டி ஆமோதித்தான்.

"சாதி நாட்டாமையும், பெரியவுகளும் அவரண்டை போய்க் கெஞ்சினோம் சாமி. தீர்ப்பு வாங்கி வெச்சிருக்க அய்யரை வரச் சொல்லுங்கடா. பொணம் ஊர் வழியாகப் போறதைப் பாப்பம்னு வர்மிக்கிறார் சாமி." மாசானத்துடன் நின்ற வாலிபன் சொல்லவும் அதையேன் பேச வேண்டும் என்பது போல மாசானம் பார்க்கவும்.

"பரவாயில்லை அவனைப் பேச விடு" என்பது போல், அவர்கள் இரண்டு பேரையும் பார்த்த சுந்தரேசய்யர் "சரி!

நீங்க போகலாம்; பொணத்தை மயானத்துக்கு எடுத்துண்டு போரதுக்கான ஏற்பாட்டை எல்லாம் செய்யச் சொல்லுங்கோ. பொணம் தன்னாலே மயானம் போய்ச் சேரும்" என்று உறுதியாகச் சொல்லிவிட்டுப் போனில் உள்ளூர் சப்-கலைக்டரைத் தொடர்பு கொள்ளப் போனார்.

சப்-கலைக்டருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிவிட்டு ரிஸீவரை அவர் வைப்பதற்கும், மகன் வக்கீல் சங்கரன் டென்னீஸ் மட்டையுடன் வீட்டுக்குள் பிரவேசிப்பதற்கும் சரியாக இருந்தது.

இவ்வளவு நேரமும் வெளிவாங்கியிருந்த மழை திரும்பவும் சிணுங்க ஆரம்பித்தது.

●

சங்கரன் சென்னை ராஜதானி சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்ற கையோடு, தனது பெரிய தகப்பனார், பரமசிவம் அய்யரின் வக்கீல் ஆபீஸில் இளம் வழக்குரைஞராகச் சேர்ந்து பணியாற்றுகையில், பரமசிவம் அய்யர் உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்படவும், தந்தைக்குத் துணையாக இந்த நகருக்கு வக்கீல் பணிபுரிய வந்து சேர்ந்திருக்கிறான்.

சுந்தரேச அய்யரின் குடும்பம் தஞ்சைத் தரணியில், செல்வாக்கு மிக்க நிலச்சுவான் குடும்பம் என்பதோடல்லாமல், தேசிய உணர்வு கொண்ட குடும்பமாகவும் இருந்த காரணத்தால் அண்ணாமலை சர்வகலா சாலையில் படிக்கும் காலத்திலேயே தீவிரமான தேசபக்த அரசியலில் ஈடுபாடு கொண்டவனாகவும் இருந்தான் சங்கரன்.

தேச பக்த சிரோன்மணி, சுப்ரமணிய சிவா, தங்கள் ஊர்க்காரராக இருப்பதில் பெருமிதம் கொள்வது மட்டுமல்லாமல், நாட்டு விடுதலைக்கு மட்டுமல்லாமல் தமிழக மறுமலர்ச்சியின் சின்னமாக ஜாதியத்தின் அடையாளத்தையே நகர்த்தெறிந்ததில், முன்னணியில் நின்ற சுப்ரமணிய சிவா, மகாகவி பாரதியார், மற்றும் வக்கீல் சிதம்பரம் பிள்ளை ஆகியவர்கள்பால் பெரிதும் ஈடுபாடு கொண்டவனாகவும்

இருந்தான். அவர்களின் ஞாபகார்த்தமாக ஜாதியத்தின் அடையாளத்தையே தொலைத்து வீசிவிட்டதன் அடையாளமாகத் தனது சக மாணவனும், தலைவனுமான சுப்ரமணிய சர்மாவுடன் சேர்ந்து, ஜாதி மேலாதிக்கத்தின் அடையாளமான பூநூலையே அறுத்து எறிந்துவிட்ட மாணவர்களில் சங்கரனும் ஒருவன்.

மகனின் மகா பாதகமான செயலைக் கேட்டுப் பதறிப்போன அம்புஜத்தம்மாள் சுந்தரேச அய்யரிடம் புலம்பி விசனித்த போது, ஜனநாயக வாதியான அய்யர் அதை மிகவும் சாதாரணமான சம்பவமாக எடுத்துக் கொண்டது மட்டுமல்லாமல், மனைவியைச் சமாதானம் செய்வதே போல் இப்படிப் பேசலானார்.

"பூணூல் போட்டுக்கிறதும், தூக்கி எறிஞ்சுடறதும் அவா அவாளோட அபிப்பிராயம். நீ நிதம் ரெண்டு வாட்டி அபிராமி அம்மனைப் போய் சேவிச்சுண்டு வர்ராய். நான் தடுத்தது கெடையாது. ஏன் ஒரு காலத்திலே நான் அளவு கடந்த பக்தியை இராமபிரான் மேலே வச்சிருந்தேன். இப்போ நேக்கு அவனோட மனுஷத் தன்மையிலேயே சந்தேகம் வந்திட்டது. காலம் மாறிண்டு வர்ரது. சங்கரன் மேல் நாட்டு பிலாஸபியெல்லாம் படிச்சவன். பூணூல் போட்டிண்டிருக்கது அவனுக்கு அநாகரிகமாப் பட்டிருக்கலாம். அவனோட சுதந்திரத்திலே தலையிடறதுக்கு நமக்கு என்ன உரிமை இருக்கு. இல்லையா அம்புஜம்" என்று கேட்டபோது

எப்போதுமே, கணவனது வார்த்தைகளை மறுத்துப் பேசாத அம்புஜத்தம்மாள், வழக்கம் போலவே சுந்தரேசய்யர் சொன்ன வார்த்தைக்கு மறு பேச்சுப் பேசாமல், தலையை மட்டும் ஆட்டி ஆமோதித்து விட்டுப் பின் கட்டுக்குப் போய்விட்டார். ஆனால், பாரம்பரியமாகப் பக்தி விசுவாசத்தில் ஊறிப்போன அம்புஜத்தம்மாளின் உள்ளத்தை அவர் பேச்சு வெகுகாலமாக உறுத்திக் கொண்டிருக்கத்தான் செய்தது. ஆனால் அம்புஜத்தம்மாள் தன்னை அதிர்ச்சிக்குள்ளாக்கிய சங்கரனின் நடத்தை பற்றி மகளிடம் கூட பிரஸ்தாபிக்கவில்லை. அப்படி ஒரு குணம் அம்புஜத்தம்மாளுக்கு

சங்கரன், அண்ணாமலை சர்வகலா சாலையில் படிக்கும் போது, சர்வகலா சாலை கிரிக்கெட் அணியில் அவ்வப்போது சேர்க்கப்படுவதுண்டு. ஆனால் டென்னிஸ் விளையாட்டை மட்டும் விடுவதில்லை. சென்னைக்கு வந்து சட்டக் கல்லூரியில் சேர்ந்த போது, எக்மோர் டென்னிஸ் கிளப்பில் முக்கிய உறுப்பினர் மட்டுமல்ல, மதராஸ் சர்வகலாசாலை டென்னிஸ் அணியில் முக்கியமான நபராகவும் திகழலானான். மட்டுமல்லாமல், காலையிலும் மாலையிலும் டென்னிஸ் விளையாடுவது உடலுக்கு ஆரோக்யம் என்பதால், சொந்த ஊருக்கு வந்த பிறகும் கூட டென்னிஸ் விளையாடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தான் எனவே, ஆங்கிலோ இந்தியனான சப்-கலைக்டர் வளாகத்தில் மட்டும் டென்னிஸ் மைதானம் இருந்ததால், காலை ஆறு மணிக்கே சப்-கலெக்டர் வாட்ஸன் பங்களாவுக்கு டென்னீஸ் ஆடப் போய்விடுவான்.

அன்று ஞாயிற்றுக் கிழமையாகையால் சப்-கலெக்டர் வாட்ஸனுக்கும் ஓரளவு ஓய்வு தினம் என்பதால், சற்றுக் காவதானமாக விளையாட்டை முடித்துக் கொண்டு சங்கரன் வீடு திரும்பியிருந்தான்.

நந்தவனப் பட்டியில் ஏற்பட்டிருக்கும் அசாதாரண நிலை பற்றி கலைக்டருடனும் இதர அதிகாரிகளுடனும் தொடர்பு கொண்டு பேசிய சுந்தரேச அய்யர் போன் மூலம் மதுரை வைத்யநாத அய்யருக்கு இந்த விஷயத்தைத் தெரிவித்த போது, இந்த விஷயத்தில் காங்கிரஸ் கமிட்டியும், ஹரிஜன சேவா சங்கமும் மெத்தனமாக இருக்கக் கூடாது என்றும், கடுமையான நடவடிக்கை கைக் கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் தாக்கீது கொடுத்ததோடு, தேவைப்பட்டால் உதவிக்குத் தொண்டர்களை அனுப்பித் தருவதாகவும் சுந்தரேச அய்யருக்குத் தாக்கீதாகச் சொல்லவும் செய்திருந்தார்.

வீட்டுக்குள் நுழையும் போதே சுந்தரேச அய்யர் பரபரப்புடன் காணப்பட்டதைப் பார்த்துவிட்டுப் போன சங்கரன் வெகு சீக்கிரமே ஸ்நானம் செய்து காலைச் சிற்றுண்டியையும் முடித்துக் கொண்டு முன் கட்டுக்கு வந்தபோது "அம்பி இன்னைக்கி நான் உன்னோட ஓய்வு

தினத்தை டிஸ்டர்பு பண்ண வேண்டியிருக்கு. தப்பா எடுத்துக்கப்படாது" என்று சுந்தரேச அய்யர் பீடிகை போடவும்

"அப்பா என்ன சொல்ல வாரீர்" என்று கேட்பதேபோல் சங்கரன் ஏறிட்டுப் பார்த்த போது, "நாம டிகிரி வாங்கினோமே, நந்தவனப் பட்டிச் சேரி மக்களோட இடுகாட்டுப் பாதை. அது அதனோட இயற்கையான சண்டாளத்தனத்தைக் காட்ட ஆரம்பிச்சிருக்கு" என்றவர் "மேல் ஜாதிக்காரா, பிணம் இடுகாட்டுக்குப் போர வழியை மறிச்சுண்டு இருக்கா" என்றார்.

"நாம என்ன செய்யலாம்?" சங்கரன் கேட்டார்

"வைத்திய நாதய்யர்கிட்டேயும், கலைக்டரண்டேயும் பேசிட்டேன். ஸ்தலத்துக்கு சப் கலைக்டரையும் இந்த வட்டாரத்து உதவி சூப்பிரண்டையும், உடனே அனுப்பி வைக்கிறதா கலைக்டர் பிராமிஸ் பண்ணியிருக்கான்" என்றவர்

"ஸ்பார்ட்டுக்கு நாம யாராச்சும் போவது நல்லது. மேல் ஜாதிக்கார பெரிய மனுஷாளைக் கன்வின்ஸ் பண்ணி, பிணத்தை எடுக்க ஏற்பாடு செய்யலாம் இல்லையா, பாவம் சேரி மக்கள் மிகவும் பயந்து போயிருக்கா"

"திஸ், இஸ் வெறி ஷேம்புல்," என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்ட சங்கரன் "அப்பா நீங்க ஒண்ணும் போகாண்டாம். நானே போயி ஏற்பாடு செய்துட்டு வர்ரேன். சப்-கலைக்டர் வாட்ஸன், என்னோட பிரண்ட் தானே. நானே ஸ்பாட்டுக்குப் போரதா வைத்தியநாதய்யர் மாமாவுக்கும் சொல்லிப் போடுங்கோ" என்று சொல்லிவிட்டு, திரும்பவும் தொலைபேசியை எடுத்து, தானும் சம்பந்தப்பட்ட ஊருக்குப் புறப்படுவதாக சப்-கலைக்டர் வாட்ஸனுக்குச் சொல்லிவிட்டு வாசலில், வேப்ப மரத்து நிழலில் நின்ற ஜட்கா வண்டி அப்துல்லாவிடம் வண்டியைப் பூட்டச் சொன்னான்.

12

சங்கரன் நந்தவனப்பட்டி ஊரை வந்தடைந்த போது, சாரல் வலுக்கத் தொடங்கியிருந்தது.

ஊருக்கு ஒதுக்குப் புறமாக, ஊரணியை ஒட்டியிருக்கும், இரட்டை ஆலமரங்களைத் தாண்டி, சேரியினின்று வரும் ஒத்தையடிப் பாதையும், பிரதான சாலையும் சந்திக்கும் இடத்தில், இறந்து போன சின்னக் கிளியின் சடலம் மூங்கில் கழிகளாலான பாடையில் கிடத்தப்பட்டிருக்கிறது. சடலம் கிடக்கும் இடத்தை ஒட்டிச் சற்று கிழக்கே, சேரிக்குப் போகும் ஒத்தையடிப் பாதையில், பறைச்சேரி மக்கள் கூட்டம் கூட்டமாக உட்கார்ந்தும், ஆண்கள் நின்று கொண்டும் இருக்கின்றனர். பாடையை ஒட்டி, இரண்டு மூன்று பெண்கள் கூட்டமாக உட்கார்ந்து ஒப்பாரி வைத்துக் கொண்டிருப்பது பார்ப்பதற்குப் பரிதாபமாக இருக்கிறது.

சேரிக்குப் போகும் ஒத்தையடிப் பாதையிலும், மேல் ஜாதிக்காரர் குடியிருப்புக்குப் போகும் பாதையிலும், கருமாரியம்மன் கோவில் முன்பும் போலீஸ் ஜவான்கள் லத்திகளுடன் உலாவிக் கொண்டிருக்கின்றனர். பக்கத்துச் சேரிகளிலிருந்தும் மக்கள் சேரியை நோக்கி வந்து கொண்டிருக்கின்றனர்.

தொலைவில், சாலை, ஊரைக் கடக்கும் பகுதியில், மேல் ஜாதிக்கார பெரியவர்களும், வாலிபர்களும் கூட்டமாக யுத்த களத்துக்குப் போகிறவர்கள் போல நிற்கின்றனர். வாலிபர்களின் கரங்களில், தடிகளும், ஆயுதங்களும் காணப்படுகிறது. பாதுகாவலுக்கு வந்த சப்-இன்ஸ்பெக்டரும், ஹெட்கான்ஸ்டபிளும், சாவடியில் போடப்பட்டிருக்கும் இருக்கைகளில் யாருக்கு வந்த விளையோ என்ற மட்டில் உட்கார்ந்து கொண்டிருக்கின்றனர்.

ஜட்கா வண்டியில் இருந்த வண்ணமே, சூழ்நிலையைக் கணித்த சங்கரன், ஜட்காவை, ஆலமரத்து நிழலில் நிறுத்தும்படி அப்துல்லாவிடம் சொல்லிவிட்டு, வண்டியை விட்டு இறங்கிய போது, மாசாணம் வந்து வணக்கம் சொன்னான்.

இதுவரையில், ஒத்தையடிப் பாதையிலும், சாலி மரங்களின் அடியிலும் உட்கார்ந்திருந்த சேரி மக்கள் மரியாதையின் நிமித்தம் எழுந்து நின்றார்களே அல்லாமல் நெருங்கி வருவதற்காக அஞ்சிபயந்தவர்களாக நின்றார்கள்.

வண்டியைவிட்டு இறங்கிய சங்கரன் பாதையில் அனாதையாகக் கிடக்கும் பிணத்தைப் பார்க்க வந்த போது "அய்யோ சாமி வராதீங்க. தீட்டுப் பட்டிருக்கும்" யாரோ சேரிக்கிழவன், தனது குரலின் உச்சத்தில் சங்கரனைப் பார்த்து ஓலம் வைத்தான்.

கிழவன் ஓலம் வைப்பதையும் கேட்காதமட்டில் பிணத்தண்டை வந்த சங்கரன் "அவாளெல்லாம் ஏன் அப்படி ஒதுங்கிப் போய் நிக்கறா. அவாளை வரச் சொல்லுங்கோ. விவரம் கேட்க வேண்டியுள்ளது" என்று சொன்ன போது தயங்கி மயங்கிய வண்ணம் நின்றிருந்த மாசாணம். ஏதோ சொல்ல முற்பட்டபோது

மாசானத்தோடு வந்திருந்த வாலிபன், தலைத்துண்டை எடுத்துக் கட்கத்தில் வைத்துக்கொண்டு "வேணாம் சாமி, பாவம், கிட்டே வந்தா சாமிக்குத் தீட்டு. அவுங்க அங்ஙனவே நிக்கட்டும்" என்றான்.

"என்ன இது வேடிக்கையாக இருக்கு" என்று கேட்பதே போல், தனக்குச் சிறுவயது முதலே அறிமுகமான மாசாணத்தைச் சங்கரன் பார்த்த போது "வாணாம் அம்பி. அவங்க ஒன்னண்டை வரமாட்டாங்க. அய்யரண்டை எப்படி தீட்டுப்பட்ட சனங்க வரமுடியும். வழக்கத்தை எப்படி ஒடைக்க முடியும்"

மாசாணம் சமாதானம் சொன்ன போது சங்கரனுக்கு எரிச்சல் ஏற்பட்டது. "மனிசங்கள்ள என்னடா ஏற்றத்தாழ்வு தீண்டப்பட்டவன், தீண்டப்படாதவன்" என்று எரிச்சலுடன் மாசாணத்தைப் பார்த்துச் சொன்னபடியே, கூடி நிற்கும் சேரி மக்களைப் பார்த்து விறுவிறுவென்று நடந்து போனான்

சங்கரனது திடீர் நடவடிக்கையால் மலைத்துப் போன சேரிப் பெண்கள் பதறியடித்து எழுந்து, தூரத்தில் நிற்கும் சாலிமரத்துக்கடியில் போய் நின்றார்கள். பீதியுடன் சங்கரனை அவர்கள் இமை கொட்டாமல் பார்த்தவண்ணம் நின்றிருந்தனர். எதிர்பாராத அதிர்ச்சி.

காலம் காலமாக அடிமைப்பட்டுக் கிடந்த அம்மக்களுக்குச் சங்கரனின் நடத்தையும் போக்கும் ஆச்சரியத்தையும், அச்சத்தையும் ஏற்படுத்தியிருந்தது.

சேரி மக்கள் கூடியிருக்கும் இடத்துக்குச் சங்கரன் வந்தடைந்த போது, நாங்கிள் தடியும் கையுமாக ஓடி வந்த வெட்டியான் காக்கையன் நெடுஞ்சாண் கிடையாகச் சங்கரன் காலில் வந்து விழுந்தான்.

"சாமீ! நீங்க தான் எங்களைக் காப்பாத்தணம். பரம்பரை பரம்பரையா இந்த ஊர் சனங்களுக்குத் தொண்டூழியம் செஞ்சு இத்துப்போனன். உப்ப எம்பேத்தியா பெணத்தைக் கூட இடுகாட்டுக்குக் கொண்டு போக வழி உட மாட்டேண்டு மறிக்காவ ஆண்டைக" என்று சுதறவும் பதறிப் போன சங்கரன் "ஏய்! ஏய்! பெரியவரே ஒம்ம வயசு என்ன. எம் வயது என்ன. மனிசனை மனிசன் வணங்கப் படாதுய்யா" என்று சொன்னபடியே கீழே கிடக்கும் கிழவனைத் தொட்டுத்தூக்குவதற்குக் குனிந்த சங்கரன், கிழவனின் உடலில் சுடுகாட்டுப் பிணத்தின் துர்வாடை வீசவும், சகிக்காமல் மாறி நின்றான். சுடுகாட்டு வாடை சங்கரனின் வயிற்றைப் புரட்டியது.

மாசாணம் கிழவனை வைத வண்ணமே கிழவனைத் தூக்கி நிறுத்தினான்.

"தாத்தா அப்படியெல்லாம் பண்ணாதியும் அம்பிக்கு இதெல்லாம் புடிக்காது" மாசாணம் கிழவனையும் மற்றவர்களையும் பார்த்துச் சொன்னான்.

"வக்காழி, கெழட்டுப் பய மவனே தொண்டூழியம் பண்ணாதே பண்ணாதேண்டு சொன்னமே கேட்டையா உப்ப ஒங்க ஆண்டைக அவனுவ சாதிப் புத்தியக் காட்டிப் போட்டானுவல்லா அனுபவி" தூரத்துச் சாலி மர நிழலினின்றும் சங்கரன் நிற்கும் இடத்துக்கு வந்து சேர்ந்த

கருத்துக் கனத்த வாலிபன் கிழவனைக் கடிந்து கொண்டான். அவன் நகரத்து டீக்கடையில் வேலை செய்கிறான்.

காலத்தையும், எமனையும் வென்றதன் அடையாளமாகச் சுருக்கம் விழுந்த சருமமும், வெண்தாடியுமாக நிற்கும் கிழவனைப் பார்ப்பதற்குச் சங்கரனுக்குப் பரிதாபமாகப்பட்டது. துக்கத்தின் மொத்த உருவமாகக் கிழவன் நின்றிருந்தான்.

"பயப்படாதீயும் பெரியவரே, எந்தப் பாதையை அவா மரிச்சுண்டு நிக்கிறாளோ அதே வழியிலேயே ஒம்ம பேத்தியோட பொணம் போவும்" என்று சொல்லி விட்டுத் திரும்பும் போதே சப்-கலைக்டர் வாட்ஸன் தனது பேபி ஆஸ்டின் காரில் இரட்டை ஆலமரம் சமீபம் வந்து இறங்கினான்.

சப்-கலைக்டரைத் தொடர்ந்து, தாசில்தாரும், தனது சிப்பந்திகள் சகிதம் வந்து சேரவும், உதவி சூப்பிரண்டும் போலீஸ் பரிவாரங்களுடன் வந்து சேர்ந்தபோது, ஒரு குட்டி அரசாங்கமே, அந்த ஊரில் முகாம் போட்டது மாதிரி இருந்தது.

"காரிலிருந்து இறங்கியதுமே, தன்னை வரவேற்பதற்காக ஓடோடி வந்த உதவி-போலீஸ் சூப்பிரண்டிடம் "வாட் இஸ் திஸ் நான்சென்ஸ். ஐ வில் நாட் டாலரேட் திஸ் இஸ் பார்பாரிசம்" என்று கடிந்த வண்ணமே வாட்ஸன் சங்கரன் நிற்கும் திக்கை நோக்கி வந்தான்.

உதவி சூப்பிரண்ட் வெள்ளைத் துறை வெள்ளாளக்கவுண்டன் இனத்தைச் சார்ந்தவன். எனவே, ஏனோ தானோ என்ற முறையில் பாராவுக்குச் சில போலீஸ்காரர்களை மட்டும் அனுப்பிவிட்டுப் பராமுகமாக இருந்தான். இப்போது உதவிக் கலைக்டருடைய நடவடிக்கை காரணமாகவும், ஜில்லாவிலேயே மிக முக்கியப் பிரமுகரான சுந்தரேச அய்யர் தலையிடவும் தன்னையும் தனது உத்தியோகத்தையும் காப்பாற்றிக் கொள்ளத் தனது படை பட்டாளத்துடன் வந்து நிற்கிறான்.

உதவி சூப்பிரண்ட், சட்டம் ஒழுங்குப் பிரச்சினை ஏற்படக்கூடிய இந்த விஷயத்தில் இவ்வளவு மெத்தனமாக நடந்து கொண்டதைக் கடிந்த வண்ணம், வாட்ஸன் கோபமாக நடந்து போன போது, அவரைத் தொடர்ந்து வந்த தாஸில்தாரிடம்

"சட்டைக்காரப் பயவளுக்கு, நம்ம சாதி அமைப்பைப் பத்தி என்ன தெரியப் போவுது? பாரும், அவன் இன்னெக்கி அவமானப்பட்டுத் தான் திரும்பப் போரான். இந்த எழவுலே அய்யர் மவன் வேறே வந்திருக்காரு" என்று மேவுவது போல முனங்கிக் கொண்டு நடந்து போனான். தாஸில்தார் அமலநாதன் கிறிஸ்தவர். எனவே, அவருக்கு, உதவி சூப்பிரண்டு பேசியது பிடிக்கவில்லை. வெள்ளைத்துறை பேசியதற்கு எந்தப் பதிலும் பேசாமல், தான் கொண்டு வந்திருந்த பைல்களைக் கட்கத்தில் இடுக்கியவாறு சப்-கலைக்டரைத் தொடர்ந்து போனார்.

தனது அதிகாரிகள் என்ன அபிப்பிராயப்படுகிறார்கள் என்பதைப் பற்றிக் கூடக் கவலைப்படாமல், வாட்ஸன், சங்கரனையும் கூட்டிக் கொண்டு, மேல் ஜாதிக்காரர்கள் அணி வகுத்து நிற்கும் இடத்தைப் பார்த்துப் போனான்.

வேறு வழியில்லாமல் டிப்டி-சூப்பிரண்டு தனது பரிவாரங்களுடன் சப்-கலைக்டரைத் தொடர்ந்து ஓட்டமும் நடையுமாக வந்தவன், சாவடியில் சாவதானமாக நின்றிருந்த சப்-இன்ஸ்பெக்டரை அனாவசியமாகக் கடிந்து கொண்டான்.

வாட்ஸனும் சங்கரனும் சாவடியை நோக்கி வருவதைப் பார்த்ததும், தாஸில்தாரின் உத்தரவுப்படி ஊரில இருக்கும் பெரிய மனிதர்களின் வீட்டில் கிடந்த பழங்கால நாற்காலிகளும், வேறு ஆசனங்களும் சாவடியில் கொண்டுவந்து போடப்பட்டன.

இதற்குள் மிராசுதார் மனகாவலன் பிள்ளை, சப்-கலைக்டரின் வருகையை முன்னைக் கூட்டியே தெரிந்து கொண்டவர் போல சப்-கலைக்டரை வரவேற்பதற்காக மாலையும் கையுமாகச் சாவடியில் வந்து சேர்ந்தான். மன காவலம்பிள்ளை சப்-கலைக்டருக்கு மாலை போடப் போன

போது, மிகவும் கௌரவமான முறையில் வாட்ஸன் மாலையை வாங்க மறுத்த போது, பிள்ளையின் வதனம் இருள்போல் கருப்படைவதைச் சங்கரன் கவனித்தான் நீதிமன்றத்தில் இடுகாட்டுக்கான வழி சம்மந்தமான வழக்கு நடந்த போது ஊரார் சார்பாக வழக்கை நடத்துகிறோம் என்கிறபேரில், இந்த மனகாவலன் பிள்ளைதான் கடுமையாக எதிர்த்தவர்

பாடையில் கிடத்தப்பட்டிருக்கும் பிணத்தை இடுகாட்டுக்கு எடுத்துச் செல்வதை யாரும் தடுக்கக் கூடாது என்று வாட்ஸன் சொன்னது தான் தாமதம்.

"அதெப்படி தொரெ அதுகளோ தீண்டப்படாத பறைச்சனங்க. சேரிப் பொணம் மேலக்குடித் தெருவழியாப் போறது காலம் காலமாக இல்லாத வழக்கம்". மன காவலன் பிள்ளை சொன்னார்.

.மனகாவலன்பிள்ளை இவ்வாறு சொல்வதை ஆமோதிப்பதே போல் , சாவடியில் முன் வரிசையில் உட்கார்ந்திருந்தவர்களும் குரல் கொடுத்தார்கள். "பொணம் இந்த வழியாப் போனா, ஊரே தீட்டுப்பட்டுப் போவும். நாங்க கும்பிடுத சாமி எல்லாம் ஊரை விட்டு ஓடிப் போயிரும் ஆத்தா எங்களை யெல்லாம் பழிவாங்கிப் போடும்" என்றார்கள்

"அவங்க கோர்ட்டிலே தீர்ப்பு வாங்கி வச்சிருக்கு. தடுக்க முடியாது. தெரியுமா" வாட்ஸன் சற்றுக் கடுமையாகவே சொன்னான். சேரி மக்களின் ஏலாமையையும் அவஸ்தையையும் உணர வைக்கும் வகையில் சங்கரன் மனகாவலன் பிள்ளையை பார்த்துச் சொன்னான்

"பீவி குளம் நிரம்பி வழியறது. உரணியும் நிரம்பி நிக்கறது. பொணத்தை ஆழமான குளம் வழியாவும், ஊரணி வழியாவும் எடுத்துண்டு போக முடியாதெங்கிறது உங்களுக்குத் தெரியாதது அல்ல. அவாளோட இக்கட்டையும் இடைஞ்சலையும் நீங்க புரிஞ்சுக்கணும். காலம் காலமா ஒங்களோட கழனியிலேயும், சமுதாயத்திலேயும் அடிமை வேலை செய்தவா. அதைக் கருதியாவது அவாளுக்கு நீங்க கருணை காட்ட வேண்டாமோ?" சங்கரன், அவர்கள் மனதில் கருணை பிறக்கும் என்கிற நம்பிக்கையோடு பேசிப் பார்த்தான்

சங்கரன் இப்படிப் பேசிய போது மனகாவலன் பிள்ளைக்குக் கடுமையாகக் கோபம் ஏற்பட்டது.

"மதுரை வைத்தியநாதய்யன் பேச்சைக் கேட்டுப் போட்டு, ஒங்க அப்பாதானே பறப்பயலுவளுக்குச் சுடுகாட்டுக்குப் பாதை இருக்கிண்ணு வியாச்சியம் போட்டு, எங்க சாதி சனங்களை அல்லாம் அவமானப்படுத்திப் போட்டார். நீரு இப்போ கொம்பு சீவி விட வந்திருக்கீரோ. நீரும் ஒங்க அப்பாவும் சும்மா இருந்தாலே போதும் பறப்பயலுவ அடங்கிப் போயிருவான்க. ஊரு நிம்மதியா இருக்கும்." சப்-கலைக்டர் இருப்பதையும் பொருட்படுத்தாமல் மன காவலன்பிள்ளை பேசவும் கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது.

சப்-இன்ஸ்பெக்டர் எகிறிய வாலிபர்களை லத்தியைக் காட்டி மிரட்டவும் ஆரவாரம் மட்டுப்பட்டது. தான் கோபப்படுவதால் காரியம் கெட்டுப் போகக் கூடாது என்கிற முன்கருதலோடு, சங்கரன் கோபத்தை வெளிக் காட்டிக் கொள்ளாமல் மௌனமாக நின்றான்.

சங்கரனுடன் ஒரு சண்டையை உருவாக்கித் திசை திருப்பி, மனகாவலன்பிள்ளை காரியத்தைக் கெடுத்துவிடக் கூடாது என்று எண்ணிய வாட்ஸன்

> "இதெல்லாம் முடிந்து போன விஷயம். இவர்கள் பிரச்சனைக்குச் சுமூகமான முடிவு காணப் போகிறார்களா இல்லை முரட்டுத்தனமான முறையில் அரசுடன் மோதப் போகிறார்களா" என்று ஆங்கிலத்தில் தாஸில்தாரைப் பார்த்துக் கேட்டார். சப் கலெக்டர் தாசில்தார் அதைத் தமிழ்ப்படுத்தி அவர்களுக்குச் சொன்னார்.

சப்-கலைக்டர் இப்படித் திடீர் என்று கோபப்படுவார் என்று தாஸில்தார் அமலநாதன் எதிர்பார்க்கவில்லை. எனவே, ஊர்க்காரப் பெரிய மனிதர்களுக்குப் புத்திமதி சொல்லி, வழிக்குக் கொண்டு வருபவர் போல, மனகாவலன் பிள்ளையையும், அங்கு கூடியிருந்த மேல் ஜாதிப் பெரிய மனிதர்களையும் சாவடிக்குப் பின்பக்கமாகக் கூட்டிக் கொண்டு போனார்.

டிப்டி சூப்பிரண்ட் வெள்ளத்துரை மட்டும் முகத்தை ஒரு மாதிரியாக வைத்துக் கொண்டு பிணம் கிடக்கும்

இடத்துக்கும் சாவடிக்குமாக ஜவான்களை அதட்டி அதிகாரம் செய்தபடி போய் வந்து கொண்டிருந்தான்.

சங்கரனும், வாட்ஸனும் தனிமையில் விடப்பட்ட போது, சங்கரன் தான் ஒரு திடமான முடிவுக்கு வந்திருப்பதாகவும், என்ன ஆனாலும் பிணம் ஊர்வழியாத்தான் போயாக வேண்டும் என்றும் சொன்னார் வாட்ஸனும் அதை ஆமோதித்ததோடு, அந்த முடிவை நிறைவேற்றாமல் அங்கிருந்து நகரப் போவதில்லை என்றான். தாஸில்தார் அமலநாதன் கிறிஸ்தவ வன்னியர். என்னதான் கிறிஸ்து மதத்தில் பக்தி விசுவாசம் இருந்த போதும், வன்னியர் என்ற மேல் ஜாதி ஆதிக்க உணர்வு அவரையும்ஆட்டத்தான் செய்தது. ஆனால் எப்போதுமே அமலநாதன் பாம்புக்குத் தலையும், மீனுக்கு வாலையும் காட்டும் இருதலை மணியம் மட்டுமல்லாமல் தொட்டிலையும் ஆட்டிவிட்டுப் பிள்ளையவும் சீண்டிவிடும் குணம் அவருக்கு.

எப்போதுமே யாரையும் மதிக்காமல் மேல்ஜாதி ஆதிக்க மனப்பான்மையுடனும் பழைய டிஸ்ட்ரிக் போர்டு உறுப்பினர் என்கிற திமிருடனும் நடந்து கொள்ளும் மனகாவலன் பிள்ளையை அமல நாதனுக்குப் பிடிப்பதில்லை. எனவே மன காவலன் பிள்ளையை மட்டம் தட்டுவதற்கான சந்தர்ப்பம் வாய்த்தது என்று உள்ளூற வர்மித்துக் கொண்ட அமலநாதன், சப்-கலைக்டர் ஒரு ஆங்கிலோ இந்தியன் அவனுக்கு இந்துக்களின் பண்பாடும், நாகரிகமும் புரியாது. முரட்டுத்தனமாக நடந்து கொள்வான் என்றும், இருந்தாலும் ஊர் மக்கள் உணர்வை அவனிடம் எடுத்துச் சொல்லிச் சமாதானம் செய்வதாகவும், மனகாவலன் பிள்ளையிடமும் மற்ற பிரமுகர்களிடமும் உறுதி சொல்லி விட்டு வந்த வஞ்சகனான தாஸில்தார்.

"எதற்கும் நாம, இந்த மக்களோட உணர்வையும் கணக்கில் எடுத்துக் கொண்டு செயல்படுவது நல்லது" என்று பட்டும் படாமலும், வாட்ஸனுக்கு ஆத்திரம் ஏற்படும்படியாக வாழைப்பழத்தில் ஊசியை ஏற்றுவது போல் பேசவும்

"அரசு போட்ட பாதை வழியாகப் பிணத்தை எடுத்துண்டு போகக் கூடாதுண்ணு எந்த சம்பிரதாயம் சொல்றது சார்" என்று சங்கரன் கோபமாகக் கேட்டான்

"பாருடா அய்யரு சட்டம் பேச வந்திருக்கார்" கூட்டத்தில் இருந்த யாரோ ஒருவன் அடாவடித்தனமாகப் பேசவும்

"ஆர்ரா அவன் நாக்கு நீளுது. சொட்டெலும்பு முறிஞ்சு போவும்" வெள்ளத்துரை அதட்டவும் கூட்டம் சற்றுத் தள்ளிப் போனது.

இப்போது லேசாக வானம் தூறல் போட ஆரம்பித்திருந்தது. சேரி ஜனங்கள் சற்றுப் பதட்டம் அடைந்தனர். அவர்களுக்கு மாலை மயங்குவதற்குள் பிணத்தை அடக்கம் செய்தாக வேண்டும். வெளியூர்க்காரர்கள் சாமம் திரும்புவதற்குள் அவரவர் சேரிகளுக்குப் போயாக வேண்டும். இல்லையென்றால் ஆண்டைகளுக்கு அவர்கள் பதில் சொல்லியாக வேண்டும்.

மேல் ஜாதிக்காரர்களது வீம்பும், பிடிவாதமும் தளர்வதாகப் படவில்லை. மேல்ஜாதி வாலிபர்கள் ஒரு யுத்தத்துக்குத் தயாராவது போல் நின்று கொண்டிருந்தனர்.

வாட்ஸன், கூட்டத்தை விலக்கிப் பாதையை ஒழுங்குபடுத்துமாறு தாஸில்தாருக்கும் டிப்டி சூப்பிரண்டுக்கும் சொன்னான். கூட்டம் விலக்கப்பட்ட போதுதான் கருமாரியம்மன் கோவிலை ஒட்டிப் பாதையை மறித்துச் சுவர் கட்டுவதற்கான ஆயுத்தங்கள் செய்யப்பட்டிருப்பதை வாட்ஸன் பார்த்தான். பார்த்ததுமே தாங்கொணாக் கோபம் அவனுக்கு.

தாஸில்தாரிடம் வாட்ஸன் உத்தரவாக ஏதோ கோபமாகச் சொல்லவும், நிலமை கட்டு மீறிப் போனால் துப்பாக்கிச் சூட்டுக்கும் உத்தரவிடப்படும் என்று தாஸில்தார் மனகாவலன் பிள்ளையை எச்சரித்தார்.

மனகாவலன் பிள்ளையோ, மிகவும் சாதுரியமாக, ஊர் கட்டு மானத்தைத் தன்னால் மீற முடியாது என்றும், இரண்டிருக்கும் கூட்டத்துக்கும் தனக்கும் சம்மந்தமில்லை, அவர்கள் தனது பேச்சைக் கேட்க மாட்டார்கள் என்றும் நழுவப் பார்த்தார்.

"சில்லா சர்ச்சே இல்லே கலைக்டரே வந்தாலும், பொணம் கருமாரியம்மன் கோயிலைத் தாண்டிப் போவாது மேக்கொண்டு பொணம் தான் உளும்"

கருமாரியம்மன் கோயில் ஓரம் நின்ற ஆயுதபாணியான காவியுடுத்திக் கருத்துத் தடித்த வாலிபன் பேயைப் போல் கத்தினான்.

"இனியும் தாமதிக்கப்படாது. பிணத்தை நாம் அப்புறப்படுத்தியாக வேண்டும்" சங்கரன் தனது கைக் கடிகாரத்தைப் பார்த்து வாட்ஸனிடம் ஆங்கிலத்தில் சொன்னான்.

பிணத்தை எடுத்துச் செல்பவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்று வெள்ளைத்துரைக்கு உத்தரவு போட்டுவிட்டு, வாட்ஸன் சங்கரனுடன், சின்னக்கிளியின் பிணம் கிடக்கும் இடத்துக்குப் போனான்.

இப்போது, சேரி வாலிபர்கள் சற்று தெம்பு ஏற்பட்டவர்களாகப் பிணம் கிடக்கும் இடத்தில் வந்து நின்றார்கள். பெண்கள் கூட்டம் அழுகையை நிறுத்திவிட்டு என்ன நடக்குமோ என்ற பீதியுடன் கூட்டம் கூட்டமாக நிற்கின்றனர்.

"சரி, பிணத்தைத் தூக்குங்கோ, நானும் சப்-கலைக்டரும் துணைக்கு வருவோம்" சங்கரன் அவர்களைப் பார்த்துச் சொன்னான்.

பரம்பரை, பரம்பரையாக உதிரத்துடன் ஊறிப்போன அடிமைத்தனமும், கோழைத்தனமும் அவர்களை மேலும் பீதியில் ஆழ்த்தியிருப்பது புலப்பட்டது. வாலிபர்கள் சிலர் மலங்க மலங்க விழித்த வண்ணம் தயங்கித் தத்தளித்து நின்றிருந்தனர்.

சாவடியோரம் ஆர்ப்பரித்த வண்ணம் நிற்கும் கூட்டத்தையும், கலைக்டரையும் சங்கரனையும் பீதியுடன் மாறி மாறிப் பார்க்கிறார்கள் மறுகி மறுகி நிற்கிறார்கள்

வெட்டியான் காக்கையன், தனது கூடுகாட்டுத் தடியுடன் வெற்றுடம்பாகப் பரிதாபக் கோலத்தில் நிற்கிறான். அவனது நயனங்கள் கருக்கலைந்து போன முட்டையாக உருக்குலைந்து காணப்படுகிறது.

"இவர்கள் மிகவும் பயந்து போய் நிற்கிறார்கள்" சங்கரன் வாட்ஸனைப் பார்த்துச் சொன்னான்.

வெள்ளைத் துரையும், அமலநாதனும் மக்களே உங்கள் சமத்து என்று வாட்ஸனுக்கும் சங்கரனுக்கும் சவால் விடுவது போல் சாவடி ஓரம் மௌனமாக நின்று கொண்டிருக்கின்றனர்.

சங்கரனது பேச்சைக் கேட்டதும் வாட்ஸன், ஆலமரத்தின் உச்சியையும், தரையில் கிடத்தப்பட்டிருக்கும் பிணத்தையும் மாறி மாறிப் பார்த்தவண்ணம் நின்றிருந்தான்.

"இவங்களுக்கு நாம்தான் தைரியத்தை உருவாக்க வேண்டும்" என்று சங்கரன் வாட்ஸனிடம் ஆங்கிலத்தில் சொன்னான்.

இப்படி சங்கரன் சொன்ன போது, வாட்ஸன் தனது முழுக்கைச் சட்டையை மடித்தபடியே பிணத்தருகே போனான். சங்கரனும் தனது வேட்டியை மடித்துக்கட்டிய வண்ணம் சடலம் கிடக்கும் இடத்துக்கு வந்தான்.

"எஸ், லிப்ட் த பாடி" (உம், பிணத்தைத் தூக்குங்கள்) என்று சொன்னபடியே, வாட்ஸன் பாடையின் ஒரு முனையைத் தூக்கவும். மறுமுனையைச் சங்கரன் தூக்கியது தான் தாமதம் பீதியில், நின்ற சேரி வாலிபர்கள் அத்தனை பேரும் ஒன்று சேர்ந்தாற்போல் பாடையைத் தூக்கித் தோல்களில் வைத்துக் கொண்டனர்.

ஒத்தையடிப் பாதையைத் தாண்டி, பிரதான சாலையில் பாடை வந்த போது, சேரி வாலிபர்களே வாட்ஸனிடமிருந்தும், சங்கரனிடமிருந்தும், பாடையின் முகப்பைப் பெற்றுக் கொண்டனர்

சங்கரனும், வாட்ஸனும் பாடைக்கு முன் நடக்கலானார்கள்

ஊர்வலத்துக்குப் பாதுகாப்புக் கொடுக்கும்படி வாட்ஸன் வெள்ளைத்துரைக்கு உத்தரவு போட்டான்

ஊர்வலத்துக்கு முன்னும் பின்னும் துப்பாக்கி ஏந்திய போலீஸார் பாதுகாப்பு...

இதுகாறும் மிரண்டு போய் பாதை ஓரங்களிலும், சாலிமரங்களுக்கடியிலும் பீதியுடன் கூடி நின்ற சேரி மக்கள் ஏகமாகத் திரண்டு வந்து பிண ஊர்வலத்தில் கலந்து கொண்டதைக் கண்டு மன காவலன் பிள்ளையும், மேல் ஜாதிப் பெரிய தனக்காரர்களும் மிரண்டு போனார்கள். எதையும் எதிர்கொள்ளும் தைரியமும், தெம்பும் சமாளிக்கவும், சமர் புரியவும் தயார் என்பது போன்ற வேகம் ஊர்வலத்தில் தென்பட்டது. மேல் ஜாதிக்காரர்கள் பயந்து பின் வாங்கலானார்கள்.

ஊர்வலம் கருமாரியம்மன், சன்னதியை நெருங்கிய போது, வெட்டியான் காக்கையனுக்கு அருள் பிரவாகிக்கலாயிற்று.

அள்ளிச் சொருகிய கூந்தல் அவிழ்ந்து ஊசலாட ஊழிக் கூத்தாடும் தில்லைத் தாண்டவனாகச் சுடலைத் தடியைச் சுழற்றியவாறு ஆர்ப்பரித்து ஆடலானான்.

"நான் சுடலையக் காப்பவண்டா பிணம் தூக்கிச் சாமிடா ஒங்க ஆண்டவனுக்கு ஆண்டவண்டா எம் பாதையிலே எவம் வந்தாலும், கொடலை உருவி மாலையாப் போடுவன். ஏ, கருமாரி நாம் பொணம் திண்ணி, ஒன்னையவே மிழுங்கி ஏப்பம் போடுவேன்"

ஆவேசமாகக் கூச்சலிட்டபடி சுழன்று சுழன்று வெறியுடன் ஆடியபடியே முன் நடந்தான்.

மனகாவலன் பிள்ளையும் மற்றவர்களும் பீதியுடன் காலம் காலமாக அந்த ஊரில் நடவாத அதிசயத்தைப் பார்த்த வண்ணம் செய்வதறியாது நின்றிருந்தனர்.

கிழக்கே வானப்பரப்பு இடியும் மின்னலுமாக யுத்தகளமாகக் காட்சி தந்தது.

பிண ஊர்வலம், ஊர் எல்லையைத் தாண்டி இடுகாட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. சங்கரனும், வாட்ஸனும் ஊர்வலத்துக்கு முன் சென்று கொண்டிருந்தனர்

13

சங்கரன், வேப்பந்தோப்பு அக்ராஹரத்தை வந்தடைந்தபோது நன்றாக இருட்டியிருந்தது.

அக்ராஹாரமே, ஒருவித துக்கத்தில் ஆழ்ந்துவிட்டது போன்ற அமைதி தென்பட்டது. வழியில் தென்பட்ட ஒன்றிரண்டு ஆண்களும் பெண்களும், சங்கரனைப் பார்த்தபோது, சண்டாளனைக் கண்டு ஒதுங்குவதுபோல, வெறுப்புத்தட்ட, சங்கரனை ஏறிட்டுக் கூட பார்க்காமல் அசூயையுடன் ஒதுங்கி ஓடி மறையலானார்கள்.

வீட்டுத்திண்ணைகளில் உட்கார்ந்து தெரு விளக்கு வெளிச்சத்தில் அண்டை வீட்டுப் பெண்களையும் ஆண்கள் பற்றியும் புரணி பேசிக் கொண்டிருக்கும் வயதான அப்பள அம்மாமிகளும், சங்கரனைப் பார்த்ததும்

"ஈஸ்வரா! அப்பனே" என்று ஆண்டவன் நாமத்தை உச்சரித்த படியே அசூயையுடன் தலை முக்காட்டை இழுத்துப் போர்த்திய வண்ணம் வீடுகளுக்குள் தங்களை மறைத்துக் கொண்டார்கள்.

அக்ராஹாரத்தில் நிலவும், இந்த அசாதாரண நிலைமையைப் புரிந்து கொண்டவனைப் போல் ஜட்கா வண்டி அப்துல்லா. "ஹரே; அல்லா. இதென்ன ஹராம்" என்று சொன்னபடியே குதிரையை, வீட்டின் பின்பக்கமாகக் கொண்டு நிறுத்தினான்.

சாதாரணமாக சுந்தரேச அய்யரோ, சங்கரனோ, பொது வேலையாக வெளியே போய்விட்டு, வந்தால், பின்கட்டு வழியாகக் கொல்லைப் புறம் வந்து, கிணற்றில் இருந்து எடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஜலத்தில் ஸ்நானம் செய்து, புது உடை

அணிந்து கொண்டு தான் வீட்டுக்குள் பிரவேசிக்க வேண்டும், சுந்தரேச அய்யருக்கு இந்தச் சம்பிரதாயங்களில் எல்லாம் நம்பிக்கை இல்லை என்ற போதும் சனாதனத்தில் ஊறிப் போன அம்புஜத்தம்மாளின் உணர்வைப் புண்படுத்தக் கூடாது என்பதற்காக இப்படிப்பட்ட சடங்குகளை எல்லாம் அவர் புறக்கணிப்பது கிடையாது. சங்கரன், எவ்வளவு முற்போக்கான கொள்கை கோட்பாடுகளைக் கொண்டிருந்த போதும், அம்புஜத்தம்மாளின் உணர்வுகளைப் புண்படுத்தும் முறையில் நடந்து கொள்வது கிடையாது.

பின்கட்டுப் பக்கமாக சங்கரன் வந்தபோது, தாலுகா காங்கிரஸ் கட்சித் தலைவரும், நகர சபைத் தலைவருமான வக்கீல் கணேசய்யர் மட்டும் வந்து

"அம்பி ஸ்நானம் பண்ணிண்டு முன் அறைக்கு வந்திடு. தெரு முக்கியஸ்தா எல்லாம் ஏதோ பேசணம்ண்ணு காத்திண்டிருக்கா" என்று சொல்லிவிட்டுப் போனபோது அம்புஜத்தம்மாள். அதிர்ச்சியோடு நிற்பது சங்கரனது கவனத்தில் பட்டது. அம்புஜத்தம்மாளின் உள்ளில் மூண்டெழுந்த அசூயையும் வெறுப்பும் கோபமும் அவரது முகத்தில் தென்பட்டது. சமையற்காரர் வெங்கி அய்யா கூடத் தனது பூநூலை அடிக்கடி இழுத்துவிட்ட வண்ணம், தனது ஆவேசத்தை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளாமல் அடுக்களைக்கும் பின் கட்டுக்கும் குட்டிபோட்ட பூனையாட்டம் நடந்து கொண்டிருந்தான்.

நந்தவனப் பட்டியில் நடைபெற்ற சம்பவம், அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொண்ட சங்கரன் அக்ராஹாரத்து ஜீவனான அம்புஜத்தம்மாளிடம் ஏதும் பேசவில்லை.

சங்கரன் குளித்து விட்டுத் துணி மாற்றிக் கொண்டு வந்தபோது, தன் மீது தீட்டுப் பட்டு விடக் கூடாதே என்பது போல், அம்புஜத்தம்மாள் விலகி நின்று கொண்டார். ஆண்டவன் நாமத்தை அடிக்கடி உச்சரித்துக் கொண்டார்

இவற்றையெல்லாம் பார்த்தபோது, சங்கரனுக்கு உள்ளூற ஒரு விதமான நமைச்சல். தனது செயலில் இருக்கும் நியாயத்தையும், தார்மீகத் தன்மையையும் உள்மனம் ஏற்றுக்

கொண்டபோதும், பெண்ணின் பாடை பட்ட தோள் பட்டையில் தேவையற்ற ஏதோ வந்து உட்கார்ந்திருப்பது போன்ற அசூயை, குளிக்கும் போது கூட சங்கரன் தேவையற்ற வகையில் அந்த இடத்தில் இரண்டு முறை சோப்புப் போட்டுத் தேய்த்துக் கொண்டான். இப்படிப்பட்ட தன்னுள் எழும் இரண்டும் கெட்டான் முரண்பட்ட மன நமைச்சலை எண்ணிப் பார்த்தபோது உள்ளூறச் சிரிப்பு ஏற்பட்டது. பேசுவதை விட அதைச் செயல்படுத்துவதில் ஏற்படும் சிக்கலையும், சிரமத்தையும் இப்போது தான் சங்கரனால் உணர முடிந்தபோது, தான் எவ்வளவோ பண்பட வேண்டியிருக்கிறது என்று தனக்குள்ளேயே எண்ணியவாறு சங்கரன் வீட்டின் முன் அறையை நோக்கிப் போனான்.

சங்கரன் முன் அறைக்கு வந்தபோது, அசாதாரண சூழ்நிலை நிலவுவதைப் பார்த்தபோது வியப்படையவில்லை. ஏதோ எதிர்பார்த்தது நடந்து கொண்டிருக்கிறது என்பது போல், சுவற்றோரம் தான் எப்போதும் உட்காரும் நாற்காலியில் போய் அமர்ந்தான் சங்கரனது தலைக்குமேல், விவேகானந்தரின் கம்பீரமான தோற்றம், கொண்ட படம், சற்றுத் தள்ளி நிவேதிதா தேவியின் படமும் சுவரை அலங்கரிக்கின்றன.

சுந்தரேசய்யர், தான் எப்போதும் ஒய்வாக உட்காரும், ஆனைக்கால், சாய்வு நாற்காலியில் அமைதியாக உட்கார்ந்திருக்கிறார். எதிரே போடப்பட்டிருக்கும் நாற்காலிகளிலும், பெஞ்சுகளிலும், வேப்பம்தோப்பு அக்ராஹரத்துப் பிரமுகர்கள் மட்டுமல்ல, பக்கத்து இரண்டு தெரு பிராமணப் பிரமுகர்களும், துக்க சாகரத்தில் மூழ்கிப் போனது போல் உட்கார்ந்திருக்கக் கண்டான். அவர்கள் வெளிப்படுத்த முடியாத கோபத்தைத் தம்முள் அடக்கிக் கனன்று கொண்டிருப்பது தெரிந்தது.

சனாதனப் பெருமக்களுக்குத் தலைமை தாங்கி வந்திருக்கும் ஜமீன் நாராயண அய்யர் டாக்டர் பிச்சுமணியிடம் ஏதோ கடுமையான வாதத்தில் ஈடுபட்டிருந்தார் சங்கரனைக் கண்டதும், பேயைக் கண்டு

விட்டதே போன்ற பீதி நாராயணய்யர் முகத்தில் தென்பட்டது. அகுயைப் பட்ட மட்டில், சற்றுத் தள்ளிப் போய் உட்கார்ந்து கொண்டார்.

"பூரி, சங்கராச்சாரியாரும் காஞ்சி மடம் பெரியவாளும் வந்திட்டுப் போன பரிசுத்தமான தெருவை இப்படி அசுத்தப் படுத்துவேளா என்னா"

நாராயண அய்யர் சங்கரனையும், சுந்தரேச அய்யரையும் பார்த்துக் கோபமாகக் கேட்டார்.

'எவ்வள ஆசாரமான தெரு, தெய்வ குத்தத்தைக் கொணாந்து உட்டுட்டேளே' உட்கார்ந்திருந்தவர்களில் வயதான பிராமணன் ஒருவர் அங்கலாய்த்தார்.

ஜமீன் நாராயண அய்யருக்கு நாராதா அய்யர் என்று அக்ராஹரத்திலும் வெளியிலும் பெயர். அதாவது அவர் நிற்கும் இடத்தில் நிச்சயம் கோஷ்டி ஏற்படும் கோஷ்டிச் சண்டை உண்டாக்காமல் அந்த இடத்திலிருந்து நகர மாட்டார். அப்படி ஒரு ராசி ஜமீன் நாராயணய்யருக்கு.

நாராயண அய்யர் குடும்பப் பிரச்சனை சம்மந்தப்பட்ட சில வழக்குகளில், சுந்தரேச அய்யர், நாராயண அய்யருக்கு எதிராக வாதாடி வெற்றி பெற்றிருந்ததால், வக்கீல் சுந்தரேசஅய்யரை மடக்குவதற்கு வழி தெரியாமல், புழுங்கிக் கொண்டிருந்த நாராயண அய்யருக்கு நந்தவனப் பட்டிச் சம்பவம், வெறும் வாய்க்கு அவல் கிடைத்த மாதிரி என்பதால், எப்படியும், அக்ராஹரத்துச் சனாதனிகளின் உணர்வை உசுப்பிவிட்டு வக்கீல் அய்யரை அக்ராஹரத்தை விட்டே விரட்டி விட வேண்டும் என்பது அவரது திட்டம். எனவே அந்த இரவு வேலையில் பிராமண சமுதாயம் முழுவதையும் திரட்டிக் கொண்டு வந்து வைத்திருக்கிறார்.

"பூரி சங்கராச்சாரியர் சுவாமிகளும், காஞ்சி மடத்துப் பெரியவாளும் விஜயம் செய்து அவாளோட புனித பாதம் பட்ட புனிதமான தெரு. அதனோட புனிதத்தைத் தீட்டுப்பட வச்சுட்டேளே." என்று திரும்பவும் அழுத்தமாக

நாராயண அய்யர் பொடிவைத்து ஊதியபோது அங்கு கூடியிருந்த சனாதனக் கூட்டம் அவர் சொல்வதை ஆமோதிப்பதே போல் தஞ்சாவூர் தலையாட்டிப் பொம்மைகளைப் போல் தலையாட்டியபோது நகர சபைத் தலைவர் வக்கீல் கணேசய்யருக்கு உள்ளூற கோபம் மூண்டது. கோபத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல்

"அப்படியா, பரிகாரம் இருந்தா சொல்லுங்கோ" என்று கணேசய்யர் கேட்கவும்

"பரிகாரம் என்ன பரிகாரம். ஓய் யக்யமா நடத்தச் சொல்ரேன்" நாராயண அய்யர் சற்றுக் கடுமையாகக் கேட்டார். அவர் முகம் சுண்டிப் போயிருந்தது.

"நம்ம வேதங்களே தான் அல்லாத்துக்கும் பரிகாரம் உண்டே. பூசை புனஸ்காரம் யக்யம் செய்ய வேணுமானா செய்திடலாம். நீங்கதான் வேதத்தை எல்லாம் கரைச்சுக்குடிச்சவராச்சே சொல்லுங்கோ சாமி" என்று கணேசய்யர் சற்றுக் கிண்டலாகக் கேட்கவும்

"கணேசய்யர் வாள் ஆச்சாரம் எல்லாம் கெட்டுப் போயிட்டேங்கிற கவலையோட நான் பேசிண்டிருக்கேன். அக்யானம் பேசாதியும்" மீண்டும் நாராயண அய்யர் கோபமாகப் பேசினார்

நாராயணய்யர் ஆவேசமாகப் பேசுவதைக் கேட்டுச் சற்றுநேரம் அமைதியாக இருந்த கணேசய்யர்

"சரி. இப்போ என்ன செய்யச் சொல்ரேள் அல்லாரும் கூட்டமா வந்திருக்கேள் நாங்களும் இந்தச் சமூகக் கூட்டத்துக்கு 'மரியாதை கொடுக்க வேணும் இல்லையா'

இப்படிப் பதில் சொன்ன கணேச அய்யர் மௌனமாக உட்கார்ந்திருக்கும் சுந்தரேசய்யரைப் பார்த்தார் அவரோ மண் பேசினால் நான் பேசவேன் என்ற மட்டில் தனது ரோமானிய நாசியை இடது கரத்தால் வருடி விட்ட வண்ணம் உட்கார்ந்திருந்தார் சங்கரன் நடை பெறும் விவாதத்தைக் கவனித்த மட்டில் உட்கார்ந்திருந்தான் சங்கரனுக்கு ஏனோ அவனை அறியாமலேயே முகத்தில் வியர்வை துளிர்த்தது

தன்னோடு வந்திருந்த அக்ரகாரத்து மனிதர்களிடம் ஆலோசனை கேட்ட நாராயண அய்யர்

"பரிகாரம் என்ன பரிகாரம். இந்த அக்ராஹாரத்தையே தீட்டுப் படுத்திய குடும்பம் சுந்தரேச அய்யர் குடும்பம் இந்த அக்ராஹாரத்தில் இருக்கப்படாது. தீட்டுப் பட்டுப்போன இந்த பூமியை நாங்கள் பரிகாரம் செய்து சுத்தப்படுத்திக்கிறோம்" நாராயணய்யர் நீதிபதி தீர்ப்புக் கொடுப்பது போல் சொல்லவும்.

"அப்படி என்ன குத்தம் செய்திட்டான் சங்கரன்" கணேசய்யர் கேட்டார்.

இவ்வளவு நேரமும், நாற்காலியிலல் சந்திப்பிள்ளையாராட்டம் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த நாராயணய்யர், கண் சிவக்க இருக்கையில் இருந்து எழுந்தார்.

"என்ன குத்தம் செய்தானிண்ணா கேக்கறேள். கணேசய்யர், இதை விட என்ன அபச்சாரம் ஓய் செய்ய வேணும் ஒரு ஃப்ராமணன், அதிலேயும் ஆச்சாரமான குடும்பத்திலே ஜெனிச்சவன் சண்டாள ஜனங்கவாசம் செய்ய சேரிக்குப் போய்... அதுகளோட ஒண்ணா மண்ணாக கலந்திருக்கான். அத்தோட சகிக்க முடியாத அநியாயம் என்னண்ணா, ஒரு பறைச் சாதிப் பொண்ணோட பொணத்தை ஒரு சட்டைக்கார மிலேச்சப் பயலோட சேர்ந்து தோளிலே தூக்கியிருக்கான். இதைவிட அபச்சாரம் என்ன வேணும்.

யுக யுகாந்தமாக நடவாத ஒரு பாவக் கிரியயை சுந்தரேச அய்யரோட புத்ரன் செய்திருக்கான். இந்த அக்கிரமத்தை நாமெல்லாம் பாத்திண்டு, சகிச்சிண்டு இருக்கணமா என்ன" என்று சங்கரனைக் கோர்ட் மாஷல் செய்யப் போவதே போல் பேசிவிட்டு, அவிழ்ந்து கிடந்த தனது சிண்டைத் தட்டி முடிச்சுப் போட்டுக் கொண்டார். பிறகு என்ன சொல்லப் போகிறீர்கள் எனகிற பாவனையாக, சுந்தரேச அய்யரையும், கணேச அய்யரையும் முறைத்துப் பார்த்த படியே நாற்காலியில் திரும்பவும் அமர்ந்தார். ருத்திர தாண்டவமாடிவிட்ட உணர்வு அவருக்கு.

ஜமீன் நாராயணய்யர் இப்படிச் சொன்னபோது, அசூயையாலோ எண்ணமோ கணேசய்யர் ஏளனம் ததும்ப அவரைப் பார்த்தார்.

நாராயண அய்யர், எண்ணெய் சிக்கேறிய கருங்கல் சிலைபோன்ற மேனி. கரலாக்கட்டை போன்ற கட்டை குட்டையா வயது தெரியாத உடல்வாகு. அம்மைத்தழும்பு படிந்த விகாரமான முகம். அம்மை நோய்விட்டுவிட்டுப் போனதன் அடையாளமாக ஒரு பக்கம் பூ விழுந்த நயனம். அவர் சிரித்தார் என்றால் விகாரம் வெட்கப்பட்டு ஒதுங்கிக் கொள்ளும். அவர் மார்பை அலங்கரிக்கும் முப்புரி நூலை மட்டும் அகற்றிவிட்டால், கொத்தடிமை கூட அவரை மனிதனாக ஏற்றுக் கொள்ள மாட்டான். அவ்வளவு விகாரமான தோற்றம்.

எனவே,!

நாராயணய்யார்வாள், நீர் மார்பிலே புரள விட்டிருக்கிறீரே பூணூல், அதை மட்டும் நீக்கிவிட்டுப் பார்த்தா ஒம்மை யாருய்யா பிராமணண்ணு ஒத்துக்குவா. மனுஷ ஜென்மமாக கூட ஏத்துக்க மாட்டா என்று வெடுக்கென்று கேட்டு விட வேண்டும் போல் சங்கரனுக்கு ஆத்திரம் ஏற்பட்டது. அதற்குள் இவ்வளவு நேரமும் நாராயணய்யர் பேசுவதை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த சுந்தரேச அய்யர்

"தீண்டப்படாதவரான திருப் பாணாழ்வாரை லோக சாரங்க முனிவர் தோளில் சுமந்து திருவரங்கன் சந்நிதானத்துக்குப் போன கதை பாவம் நாராயணய்யருக்குத் தெரிய நியாயமில்லை தான்" என்று கணேசய்யரைப் பார்த்துச் சொல்லவும் கணேசய்யர்.

"நாராயணய்யர்வாள், பள்ளுப் பறை நாலா சாதி மக்களும் பயன்படுத்தற ஓடையிலே கெடக்கிற மலத்தையும் மூத்திரத்தையும் அள்ளிப் பூசிண்டு, ஜனங்களுக்கெல்லாம் வாக்குச் சொல்லியிண்டு அலைஞ்சாரே ஒதச்சாமியார் அவர் இந்தத் தெருக்காரர் தானே. அவரை எப்படி மகானாகச் சேவிக்கிறேள்" என்று வந்திருக்கும் பிராமணர்களைப் பார்த்துக் கேட்டார்.

"அவா எல்லாம் மகான்கள் தெய்வப் பிறவி. நாம எல்லாம் மநுஷாள் தானே. மனுஷாளுக்குக்கிண்ணு மனுநீதி விதிச்சிருக்கு இல்லையா" தாடியும், வெற்றுடம்பும் முப்புரி நூலுமாக இருந்த ஈஸ்வரய்யர் சமாதானம் சொன்னார்

தான் கருதி வந்த காரியம் திசை திருப்பப் படுவதைக் கண்ட நாராயணய்யர்.

"கணேசய்யர்வாள், புராணத்தையும், பிலாஸபியையும், வியாக்யானம் பண்றதுக்கா வந்திருக்கோம். மிஸ்டர் சுந்தரேசய்யர் என்ன சொல்றார் என்று கேட்டுச் சொல்லுங்கோ, அக்ராஹரத்து மக்களுக்குப் பெரியவா நாங்க பதில் சொல்ல வேண்டியிருக்கு" என்று திரும்பவும், ஜாதிப் பிரஷ்டத்துக்கு ஆச்சாரம் போடுவது போல் சொல்லவும் எரிச்சல் பட்டுப் போன கணேசய்யர்.

"ஓய், நீரெல்லாம், ஜாதி பத்தியும் ஆசார அனுஷ்டானம் பத்திப் பேசலாமோ? ஆச்சாரமா இருக்கவா பேசுங்கோ" என்று வெடுக்கென்று கேட்கவும் நாராயண அய்யர் வாயடைத்துப் போனார். சுந்தரேச அய்யர் கூட, கணேசய்யர் இப்படிப் பேசிவிடுவார் என்று எதிர்பார்க்கவில்லை.

நாராயணய்யர் வெட்கப்பட்டு தலை குனிந்து உட்கார்ந்து விட்டார். கணேச அய்யர் இப்படித் தனது பூர்வீகத்தை இழுத்துப் பேசிவிடுவார் என்று அவர் எதிர்பார்க்கவில்லை.

இந்த மனிதன் நாராயண அய்யருக்கு, அவரது மூதாதையர் மூலமாக அம்மைய நாயக்கன் பட்டி ஜமீன் மூலம் ஒரு கிராமமே மானியமாக வழங்கப்பட்டிருக்கிறது. அவர் வம்சத்தில் பட்ட ஒரு பெண்ணை நாயக்கன் பட்டி ஜமீன்தாருக்கு வைப்பாட்டியாகக் கொடுத்தற்குப் பரிகாரமாகத்தான் அந்தக் கிராமம் நாராயண அய்யர் குடும்பத்துக்குக் கிடைத்திருக்கிறது. இந்த உண்மை வேப்பம் தோப்பு அக்ராஹரத்தில் உள்ள ஒரு குழந்தைக்குக் கூடத் தெரியும்.

மட்டுமல்லாமல், நாராயண அய்யர் ஒரு ஸ்திரீ லோலனும் கூட. கழனிக்கு வேலைக்கு வரும் பெண்கள் கட்டு மஸ்தான தேகக் கட்டு உள்ளவளாக இருந்தால் நாராயண அய்யர் திருஷ்டியில் பட்டுவிடக் கூடாது. எப்படியாவது கண்ணி வைத்துப் பிடித்து விடுவார். இதுவும் ஊரறிந்த ரகஸ்யம். எனவே மேலும் பேச்சுக் கொடுத்தால்

"ஒரு பறைச்சியோடவும், பள்ளியோடவும் படுத்து அவளோட எச்சிலையும் உடம்பிலே பூசிண்டு, கூசாம அலையறவனை விடக் கேவலமான காரியத்தைச் சங்கரன் செய்யலை" என்று அவமானப்படுத்தவும் கணேசய்யர் தயங்க மாட்டார் என்று பீதி உள்ளில ஏற்படவும் மௌனமாகிப் போனார்.

நாராயணய்யர் வாயடைத்துப் போகவும், சுந்தரேச அய்யரை எப்படியாவது, அவமானப்படுத்தித் தலை குனிய வைத்துவிட வேண்டும் என்கிற பழிவாங்கும் எண்ணத்துடன் வந்திருந்த அய்யர் ஷாப்பு முதலாளி சுந்தரம் தனது இருக்கையில் இருந்தவாறே

"கணேசய்யர் வாள் வக்கிரம் போதீயும், மெத்தவும் சீரியஸான விஷயம் டயத்தை வேஷ்ட் பண்ணாதீங்கோ."

"அக்ராஹாரத்து பிராமணன் ஒரு கு, னா,மா, னா க்காரன் கூட செய்யத் துணியாத காரியத்தைச் செய்திருக்கான். இந்த அக்ராஹாரத்துப் புனிதமே கெட்டுப் போயிட்டது. ஆச்சார சீலர்கள் இந்த வேப்பந்தோப்புத் தெருவிலே வாஸம் செய்யறதா இல்லை காலி செய்திண்டு வெளியேறிப் போரதா. இவர் காலி செய்யலையான நாங்களெல்லாம் வெளியேறிட வேண்டியது தான்"

இப்படி சுந்தரம் அய்யர் பேசியபோது "வெளியே போரதானா போக வேண்டியது தானே இங்கே வந்து ஏன் அங்கலாய்க்கிறீர்" என்று கேட்டுவிட வேண்டும் என்று சங்கரனுக்கு மனம் துடித்தது. இருந்தாலும் பெரியவர்களே பேசி முடிக்கட்டும் என்று மௌனமாக இருந்து கொண்டான்

சுந்தரம் அய்யரும் நாராயண அய்யரைப் போலவே ஒரு திட்டத்துடன் தான் அங்கு வந்திருந்தார் சுந்தரேச அய்யரைப் பழி வாங்க வேண்டும் என்று ஆத்திரம் ஏற்படுவதற்கு வேறு ஒரு காரணமும் உண்டு. அதாவது, அந்த நகரத்திலும், சென்னை குரோம் பேட்டையிலும், வாணியம்பாடியிலும், தோல் ஷாப்புகள் நிறுவித் தொழில் செய்து வரும் சுந்தரம் அய்யருக்கும், அந்த ஊர் பெரிய தோல் ஷாப்பு அதிபரான

மானா மூனா கனிராவுத்தர் கம்பெனிக்கும் மேல் நாட்டுக்குப் பதப்படுத்திய தோல் ஏற்றுமதியில் வெளிநாட்டுக் கம்பெனியுடன் ஏற்பட்ட ஒப்பந்தம் சம்மந்தமாக அய்யர் கம்பெனிக்கும் கனி ராவுத்தர் கம்பெனிக்கும் ஏற்பட்ட வழக்கில், சுந்தரேச அய்யர் கனி கம்பெனிக்கு ஆஜரானதோடு மட்டுமல்லாது, தான் ஒரு பிராமணன் என்கிற சலுகை கூட காட்டாமலே கனி கம்பெனிக்குச் சாதகமாக நீதி மன்றத்தில் தீர்ப்பு வாங்கிக் கொடுத்ததில் சுந்தரம் கம்பெனிக்குப் பல லட்சம் ரூபாய் இழப்பு. எனவே, இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சுந்தரேச அய்யரைக் குறைந்த பட்சம் ஜாதிப் பிரஷ்டமாவது செய்து அவமானப் படுத்திவிடவேண்டும் என்பது அவரது ஆசை.

சுந்தரம் அய்யர் என்ன நோக்கத்தோடு வந்திருக்கிறான் என்பதை ஊகித்துக் கொண்ட கணேசய்யர்.

"சுந்தரம், ஸார், நீங்களெல்லாம், ஆச்சார அனுஷ்டானம் பத்தியும் ஜாதிப் பிரஸ்டம் பத்தியும் பேசலாமோ அப்படியானா உங்களைத்தானே சுவாமி முதல்லே ஜாதிப் பிரஸ்டம் பண்ணியாக வேணும். தோல் ஷாப்பு வச்சிருக்கேள். ஒரு பிராமணன் செய்யற தொழிலா அது. அபிராமி அம்மன் கோயில்லே வேதம் ஓதிண்டு சேவை செய்ய வேணம்." என்று வெடுக்கென்று பேசவும் வந்திருந்த கூட்டமே வாயடைத்துப் போய்விட்டது

சங்கரன் கூட கணேசய்யர் இப்படிப் பேசுவார் என்று எதிர்பார்க்கவில்லை.

வந்திருந்த அக்ராஹரத்துப் பெரிய மனிதர்கள் மத்தியில் சலசலப்பு ஏற்பட்டது. வந்திருப்பவர்கள் குடும்பத்தின் அங்கத்தினர் அத்தனைபேரும் அவர்கள் ஒவ்வொருவர் செய்யும் தொழில் பற்றியும், கணேசய்யருக்கும், சுந்தரேச அய்யருக்கும் தெரியும். அவர்கள் செய்யும் அனாச்சாரமும் தெரியும். அதனால் தங்கள் குட்டு வெளிப்படும் என்று அவரவர்களுக்குப் பயம் .

"இந்தப் பக்கிரி கரம்சந்த் காந்திக்குப் பின்னால போரவா கிட்டே எல்லாம் ஆச்சார அனுஷ்டானம் பத்திப் பேசலாமா வோய்," வட கோடியில், உட்கார்ந்து ஏதோ சமஸ்கிருத மந்திரத்தைச் சொல்லிப் பார்த்துக் கொண்டிருந்த கோடி வீட்டுக்கு குப்புசாமி அய்யர் அங்கலாய்த்தார்.

இவ்வளவு நேரமும் நாற்காலியில் சாய்ந்த வண்ணம் உட்கார்ந்து, இவர்கள் பேசுவதை யெல்லாம் மௌனமாகக் கேட்ட வண்ணம் உட்கார்ந்திருந்த சுந்தரேச அய்யர், தனது நீண்ட கிளி மூக்கு நாசியை மீண்டும் தடவிய வண்ணம்.

"குப்புசாமி அய்யவர்வாள் சரியாகச் சொன்னேள்" என்று அவர் சொன்னதை ஆமோதிப்பதே போல் சொல்லிவிட்டு,

"நான் காங்கிரஸ்காரன் மட்டுமில்லே ஜில்லா ஹரிஜன சேவா சங்கத் தலைவரும் கூட என்கிற உண்மை இங்கே வந்திருக்கவா எல்லாத்துக்கும் தெரியும்" சாவதானமாகச் சொன்னவர்.

"அவாளும் நம்மளைப் போல மனுஷாள் தான் நம்மைப் போலவே ஆண்டவனாலே படைக்கப்பட்டவா அவாளையும் மனுஷ புத்திரர்களா நடத்த வேணும்ங்கிறதுக்குத்தான் பாபு இப்படி ஒரு அமைப்பை உருவாக்கியிருக்கார். அதனால்தான் அவர் நடத்தற பத்திரிக்கைக்குக் கூட ஹரிஜன்னு பேருவச்சிருக்கார்" என்று பேசியபோது வந்திருப்பவர்கள் மத்தியில் முணுமுணுப்பு மட்டும் கேட்டதேயல்லாமல் யாரும் சுந்தரேச அய்யரை எதிர்த்துப் பேசத் தயாராக இல்லை.

சுந்தரேச அய்யரைப் பொறுத்த மட்டில சங்கரனது நடவடிக்கை, தான் ஏற்றுக் கொண்ட லட்சியத்தின் நீட்சியே என்று கருதினார்.

"நாராயணய்யர் வாள்" என்று சுந்தரேசய்யர் விழித்தபோது,

தலையை உயர்த்திப் பார்த்தவர் "என்ன சொல்லப் போறீர்?" என்று கேட்பது போல் பயமோ, மரியாதையோ தெரியவில்லை, அவரை அறியாமலேயே எழுந்து நின்றார்

"நீங்க நாலு வேதத்தையும் நன்னா சுத்தவா. ஒமக்குத் தெரியுமா. ஆதி சங்கரனே ஒரு சண்டாளனைத் தன் குருவாக ஏத்துண்டு சேவிச்சிருக்கார்."

அவரது அறியாமையைச் சுட்டிக் காட்டுவது போல் சொன்னபோது நாராயண அய்யரின் வதனம் வதங்கியது.

"ராமானுஜருக்குப் பிடித்தமான மனுஷன் ஆர் தெரியுமா? அவனும் ஒரு சண்டாளன். நாமெல்லாம் மகாப் பரிசுத்தவானா நினைக்கிறோமே ராமானுஜர். அவர் காவேரியிலே ஸ்நானம் பண்ணினதுக்கப்புறம் அந்தச் சண்டாள மனிசனோட தோளைப் புடிச்சிண்டு கரையேறி ரெங்கநாதனோட சந்நிதிக்கு வருவார். அவ்வளவு பரிசுத்தவா தீண்டப்படாதவளா நாமெல்லாம் ஒதுக்கிவச்சிருக்க தீண்டப்படாத ஜனங்கள். அவாதான் பிரம்மாவைப் படைக்கும் பிரம்மாக்கள்" என்று தனது மனப்பாரத்தையும், எரிச்சலையும் கொட்டித் தீர்த்த சுந்தரேச அய்யர்.

"நீங்கள் பிராமணா சங்கத்தைக் கூட்டித் தீர்மானம் போட்டுட்டு வந்து நிக்கறேள். நாட்டு நடப்பைப் புரியாமல் பேசிண்டிருக்கேள். காலம் மாறிண்டு வர்றது. சூரியனே அஸ்தமிக்காத பிரிட்டீஸ் காரன் சாம்ராஜ்யம் அஸ்தமிக்கப் போறது. பாரதி பாடிய பார்ப்பானை அய்யரென்ற காலமும் போச்சேங்கிற காலம் வரப் போரது. இப்படி இருந்தேளிண்ணா, இந்த வேப்பம் தோப்பு அக்ராஹாரமே நாசமாகப் போயிடும்." என்று உபதேசமாகப் பேசிக் கொண்டிருக்கும் போதே டெலிபோன் மணி அடித்தது. ரிசிவரை எடுத்துக் காதில் வைத்த சங்கரன்

"மாமா உங்களுக்குத் தான் போன்" சங்கரன் ரிசிவரை கணேசய்யரிடம் கொடுத்தான்.

என்ன சேதி என்று கேட்பதை போல் சுந்தரேச அய்யர் கணேசய்யரைப் பார்க்கவும் போனில் பேசிவிட்டு ரிசிவரைக் கீழே வைத்தவர்

"நான் ஊகித்த படியேதான் நடந்திருக்கு" என்றவர்

"நாளையிலேருந்து எந்த தோல் ஷாப்பிலேயும் வேலை நடக்காது. இருதய சாமிங்கிர வாத்தியார் அத்தனை தொழிலாளர்களையும், தோல் ஷாப்புகளிலேருந்து வெளியே கொண்டு வந்திட்டார். பேகம்பூரும், மேட்டுப்பட்டியும் அந்தோணியார் தெருவும் கொந்தளிச்சுப் போய் நிக்கறது சட்டம் ஒழுங்குப் பிரச்சனை ஏற்படலாம். அதிகாரிகளோட கூட்டத்தை கலைக்டர் கூட்டியிருக்கான். உடனே என்னை வரச் சொல்றா" என்று நகரசபைத் தலைவரான கணேசய்யர் சொன்ன போது, தோல் ஷாப்பு சுந்தரம் அய்யருக்கு நெஞ்சில் அறைந்த மாதிரி இருந்தது. தன் தோல் ஷாப்பைக் காப்பாற்றுவதற்கு வேகம் வேகமாகக் கூட்டத்தை விட்டு எழுந்து போனார். சுமார் ஒரு லட்சம் மதிப்புள்ள தோல்கள் நனைவுக்கு அவர் ஷாப்புகளில் வைக்கப்பட்டிருக்கின்றன.

கணேசய்யர் விடை பெற்றுக் கொண்டு, கலைக்டர் பங்களாவைப் பார்த்துப் போனார்.

நாராயணய்யர், தான் கருதி வந்த காரியம் சித்தியடையாமல் போகவே, வெறுங்கையோடு இலங்கை புக்க இராவணன் மாதிரி, தனது பரிவாரங்களோடு, சுந்தரேச அய்யர் வீட்டு வாசலை விட்டுப் படி இறங்கிப் போனார்.

சுந்தரேச அய்யர் எதுவுமே நடவாதது போல் வழக்கம் போல், நீண்டு வளர்ந்து புஜங்களில் புரளும் கூந்தலையும் தனது ரோமானிய நாசியையும் வருடிய வண்ணம், ஆனைக்கால் நாற்காலியில் சாய்ந்து கொண்டார்.

அம்புஜத்தம்மாள் மட்டும் அந்த இரவில் தூங்கவில்லை.

●

14

நரியின் கூக்குரல் கடல் மட்டும் வரை எட்டிய கதையாக, அஸன் ராவுத்தர் தோல்ஷாப்பில் ஏற்பட்ட வேலை நிறுத்தம் அந்த நகரில் உள்ள அத்தனை தோல் ஷாப்புகளுக்குப் பாவிப் படரலாயிற்று. காலம் காலமாக சித்திரவதையிலே உழன்று கொண்டிருந்த அம்மக்களின் நெஞ்சங்களில் கனன்று கொண்டிருந்த கோபாக்கினிக்கு உருவம் கொடுத்தது போலாயிற்று அந்தப் போராட்டம்.

ஒருவார காலமாக எந்த ஒரு தோல் ஷாப்பிலும் வேலை நடக்கவில்லை. குஞ்சு குளுவான் கூட மறுந்தும் தோல் ஷாப்புகள் பக்கம் தலை வைத்துப் படுக்கவில்லை.

தோல் ஷாப்பு உடைமைகளின் கேந்திரமான பேதும் பூரே சுதி கலங்கிப் போய் விட்டது. முதலில் தோல் ஷாப்பு முதலாளிகள் "இந்த சைத்தான்கள்" ஏதோ உணர்ச்சி வசப்பட்டு, இருதய சாமியின் துர் போதனையைக் கேட்டு ஷாப்புகளுக்கு வராமல் இருக்கிறார்கள் நாலு நாள் பட்டினி கிடந்து வயறு கடித்தால் தானாகவே சரண் அடைந்து விடுவார்கள் என்றுதான் மனப்பால் குடித்தார்கள் இறுமாப்புடன் இருந்து பார்த்தார்கள்.

தோல் ஷாப்புகளில் சுண்ணாம்புக் குழிகளிலும், பட்டைக் குழிகளிலும் பாடம் செய்யவும் பதப்படுத்தவும் போடப்பட்டிருக்கும், தோல்களின்றும் கெட்ட வாடை ஊரையே தூக்கிக் கொண்டு போவதே போல் வீச ஆரம்பித்துவிட்டது. நனவு வைத்த சிறு முதலாளிகள் வயற்றில் புளிக்கரைக்கலாயிற்று. பெரிய முதலாளிகள் வரட்டுக் கௌரவமாகப் பிடிவாதம் பிடித்தார்களேயல்லாமல், லட்சக்கணக்கில் பணத்தை வட்டிக்கு வாங்கி முடக்கப்பட்டிருக்கும் தோல்கள் அழுக

ஆரம்பித்துத் தோலில் பொத்தல் விழுந்தது என்றால் மேனி ஏற்படாமல் மார்க்கெட்டில் கழிக்கப்பட்டுக் குப்பைக் கிடங்குக்குத்தான் போக வேண்டும். சூதாட்டம் போல நடைபெறும் இந்தத் தொழிலைக் கண்ணில விளக்கெண்ணையைப் போட்டுக் கொண்டு நடத்த வேண்டியுள்ளது.

பெரிய பள்ளிவாசலில் தொழுகையின் போதுகூட தொழுகையைக் கூட மாற்றி வைத்துவிட்டு தோல் ஷாப்பு வேலை நிறுத்தம் பற்றிய விவகாரம் தான் பேச்சாக இருந்தது.

நகரத்தின் நான்கு எல்லைகளிலும் தோல் ஷாப்புகள் இருந்தால், நனைவுக் குழிகளில் அழுகிக் கொண்டிருக்கும் தோல்களின் துர்நாற்றம் நகரத்தையே நாற்றமடைய வைத்திருந்தது. நகரப் பிரமுகர்கள் எல்லாம் அரசு அதிகாரிகளையும் தோல் ஷாப்பு உடைமையாளர்களையும் நச்சரிக்கலாயினர். நகரமே நாற்றமெடுக்கும் சவக்கிடங்கில் அகப்பட்டுப் போனதை போன்ற அவலம். அதிலும் திடீரென்று பெய்த மழையால் ஈரப்பதம் நிறைந்த காற்று, மனிதன் சுவாசிக்க முடியாத அளவிலான துர்நாற்றத்தை நகரத்தில் அள்ளித் தெளிக்கலாயிற்று.

எனவே, இந்தச் சிக்கலுக்குத் தீர்வு காண வேண்டும் என்கிற முறையில், அரசு அதிகாரிகள் உத்தரவின் பேரில், தோல் உற்பத்தியாளர் சங்கத்தின் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் கூட்டப் பட்டது. அஸன் ராவுத்தர் மட்டும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள மறுத்ததோடு பெரிய பள்ளிவாசல் தொழுகை முடிந்தும், அல்லாவின் உதவியோடு, தோல்ஷாப்புச் சைத்தான்களின் போராட்டத்தை உடைத்துக் காட்டுவதாகச் சபதம் வைத்த கையோடு , தனது மாளிகைக்கு வந்து தனது அடியாளான சுழுவத்தேவனைக் கூப்பிட்டனுப்பினார்.

அஸன் ராவுத்தரைப் பொறுத்த மட்டில், அவருக்கு மட்டுமல்ல, அந்த நகரத்தில் உள்ள சகல தோல் ஷாப்பு முதலாளிகளுக்கும் பிரதான எதிரி, இருதயசாமி, தாழ்த்தப்பட்ட சுத்தோலிக்கக் கிறிஸ்தவ மக்களிடம் இருக்கும் செல்வாக்கையும் தாழ்த்தப்பட்ட தோல்ஷாப்புத்

தொழிலாளர் மத்தியில் தன் குடும்பத்துக்கு இருக்கும் செல்வாக்கையும் உபயோகித்துக் கொண்டு இதுகாறும், வேட்டைக்காரனைக் கண்டு பதுங்கி ஓடும் காடைக் கூட்டத்தைப் போன்று, முதலாளிகளின் வாடை தட்டுப்பட்டாலே அஞ்சி நடுங்கும் ஊமை சனங்களை மடக்கிப் போட்டிருக்கும் ஆசிரியர் இருதய சாமியை மட்டும் ஒழித்துக் கட்டிவிட்டால் இன்ஸால் அல்லா எல்லாம் சரிகட்டி விடப்படும் என்பது கணிப்பு. எனவே, தனது காரியஸ்தரும் கணக்கருமான இஸ்மத் பாட்சாவிடம்.

"பாட்சா பாய், இன்ஸால் அல்லா, இந்தக் காரியத்திலே எம்புட்டுச் செலவானாலும் அது நடந்தாவணம், ஆனா, காதும் காதும் வச்சாப் போல மூணாம் பெருக்குத் தெரியாம நடந்தாவணம். நம்பபேரு மட்டும் வெளியே தெரியப்படாது. கழுவத்தேவன் ஜெயிலுக்குப் போனா அதுக்காவுர செலவையும், அவன் குடும்பத்தையும் நாம பார்த்துக்கலாம்" என்று சதிவியூகம் அமைத்தார்.

எனவே அன்று காலை வேளையிலேயே இஸ்மத் பாட்சா நகரத்தின் பிரபல ரௌடியும், தோல் ஷாப்பு உடைமைகளின் கையாளுமான கழுவத் தேவனைச் சந்திக்கப் புறப்பட்டுப் போனார்.

இருதயசாமியை மொத்தமாக ஒழித்துக் கட்டுவதற்கான திட்டத்தோடு, அஸன் ராவுத்தரின் கணக்கப்பிள்ளை இஸ்மத் பாட்சா, ரௌடி கழுவத்தேவனை நாடிப்போகும் நேரமும், நகரத்தின் பெரிய கத்தோலிக்கத் தேவாலயமான வளவனார் சர்ச்சுக்குள் இருதயசாமி கால் வைக்கும் நேரமும் சரியாக இருந்தது.

கடந்த பத்து நாட்களாக நகரத்தில் நடைபெற்று வரும் தோல் பதனிடும் தொழிலாளர்கள் போராட்டம் சம்பந்தமாகத் தனது சீடனான இருதயசாமியிடம் பேசுவதற்காகவே, தந்தை பெப்பின் பெர்னாண்டோ வளவனார் ஆலயத்திற்கு அவரை வர வழைத்திருக்கிறார்.

இருதயசாமியைப் பொறுத்த மட்டில் ஞானத் தந்தை பெ ப்பின் பெர்னாண்டோவைப் பார்த்துத் தான் மேற் கொண்டிருக்கும் கடுமையான பணியை

நிறைவேற்றுவதற்காக ஆசீர்வாதம் பெற வேண்டியிருந்தது. உண்மையில் ஆண்டவனாகப் பார்த்து அவ்வளவு பெரிய பணியைத் தன்னிடம் ஒப்படைத்திருப்பதாக இருதயசாமி கருதியிருந்தார். எனவே வழக்கம் போல், பரிசுத்த வேதாகமும் கையுமாகப் பெரிய ஆலயத்துள் நுழைந்த இருதயசாமி, பீடத்தின் மீது, அங்கியும் சிலுவையுமாக நின்று கொண்டிருக்கும் தந்தையைப் பார்த்ததும், தேவாலயத்தில் தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவ மக்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் இடத்தில் முழந்தமிழில் நின்று ஸ்தேகத்திரம் சொன்னார். ஆனால், இருதயசாமியை வழக்கத்திற்கு விரோதமாகப் பீடத்தின் முன்னால் வரும்படி, பங்குத் தந்தையால் பணிக்கப்பட்ட போது அவருக்கே ஆச்சரியமாகப்பட்டது.

இதுகாறும், இருதயசாமி உட்பட எந்த ஒரு தாழ்த்தப்பட்ட கத்தோலிக்கக் கிறிஸ்தவனும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கென ஒதுக்கப்பட்ட அழியின் எல்லையைத் தாண்டி மேல் ஜாதிக் கிறிஸ்தவர்களுக்கென ஒதுக்கப்பட்ட முன் பகுதிக்கு வந்தது கிடையாது. நன்மையைப் பெற்றுக் கொண்டதும் கிடையாது.

பயபக்தியுடன், தேவனின் திருநாமத்தை உச்சரித்தவண்ணம் இருதயசாமி பீடத்தின் முன் வந்து முழந்தாழிட்ட போது பீடத்தில், ஆண்டவனின் தூதனாக எழுந்தருளியிருக்கும் அருள்தந்தை பெப்பின் பெர்னாண்டோ, பீடத்தினின்றும் இறங்கிவந்தபோது, தேவதூதன் ஆகாயத்தினின்றும் இறங்கி வருவதுபோல் இருதயசாமி உணரலானார்.

பிறகு இருதயசாமியின் சிரசில் கரம் பதித்து, ஆசிர்வதித்த சாமியார் குனிந்து, தியானத்தில் நின்றிருந்த இருதயசாமியின் நெற்றியில், உதடுகளைப் பதித்து முத்தம் கொடுத்தபோது உடல் ஒடிப் புல்லரித்தது. நயனங்களில் அவரை அறியாமலேயே தாரை தாரையாகக் கண்ணீர் வடியலாயிற்று.

ஆண்டவனின் நியாயத் தீர்ப்பு நாளில் கூட தாழ்த்தப்பட்ட கத்தோலிக்கன், அழிக்குப் பின்னால், எல்லைக் கோட்டுக்கு அப்பால்தான் நின்று தேவனிகத்தில்

தீர்ப்புப் பெற வேண்டுமா என்கிற சந்தேகம் இருதயசாமிக்குப் பலநாள் ஏற்பட்டதுண்டு.

இருதயசாமியின் உள்ளத்தில் உறுத்திக் கொண்டிருக்கும் சந்தேகத்தை அறிந்து கொண்டதேபோல்,

"மகனே ஆண்டவனின் திருச்சன்னிதானத்தில் பேதா பேதம் கிடையாது. மனிதர்களே வகுத்துக் கொண்ட பாவக்கிரியை கிறிஸ்தவ சபையும் அதற்கு அடிமையாகிப் போயிற்று. வெகுவிரைவிலேயே இவை எல்லாம் மறைந்து போகக் காண்பாய், ஆண்டவன் அனுமதிக்க மாட்டான்" என்றார்.

பிறகு, இருதய சாமியின் கரங்களைப் பிடித்து எழச் செய்து மார்போடு அணைத்துக் கொண்டார். ஆயரின் செயல் இருதயசாமிக்கு வியப்பாகப்பட்டது.

"நீ, ஆண்டவனின் இரத்தமும் தசையுமாக இருப்பாய்" என்று திருவாய் மலர்ந்தருளியவர், திராட்சை ரசத்தில் தோய்த்த ரொட்டித்துண்டை அவருக்கு ருசிக்கக் கொடுத்தார்.

"மகனே! நீ இப்போது எங்களை விடத் தானும் கர்த்தருக்கு அருகாமையில் இருக்கிறாய்" என்றபோது ஒன்றும் புரியாமல் இருதயசாமி ஏறிட்டுக் குருவானவரைப் பார்த்தார்.

"ஆம். மகனே எவனொருவன் வருத்தப்பட்டுப் பாரம் சுமப்பவர்களுக்காக நிற்கிறானோ, அவர்கள் கடைத்தேறப்பாடு படுகிறானோ, அவன் கர்த்தராகிய பரமபிதாவின் அன்பிற்குரியவன்!" என்றவர் ஒரு கணம் தன்னுள் ஆழ்ந்து போனவராக நின்றார்.

சாமியார் பெப்பின் பெட்டைண்டோவைப் பொறுத்த மட்டில் கிறிஸ்தவர்கள் கொத்தடிமைகளாக உழலுவதை அவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. பரமபிதா தனது படைத்தல் தொழிலை முடித்துக் கொண்டு ஓய்வெடுத்த ஏழாவது நாளான ஞாயிற்றுக் கிழமைகளில் கூட அம்மக்கள் தேவாலயங்களுக்கு வரவும், ஆண்டவனை வணங்கக் கூட

தோல் ஷாப்பு உடமையாளர்கள் அவர்களுக்கு ஓய்வு தருவதில்லை கிஸ்தி நாட்களில் உபவாசம் இருப்பதற்குக் கூட அவர்களுக்கு அவகாசமில்லை. அம்மக்களுக்கு இளைப்பாற, நிழல் தரும் விருட்சமாகச் சபை இருக்க வேண்டும். ஆனால் அங்கியும், சிலுவையுமாகக் கத்தோலிக்க மடத்துள் முடங்கிப்போன அவரால் இந்தப் பணியினைச் செய்ய முடியாது. ஆனால் தனது மாணாக்கனும் சீடனுமான இருதயசாமி மேற்கொண்டிருக்கும் பணி அவரது உள்ளத்தைக் குளிரவைப்பதாக இருந்தது. ஆகவேதான் தனது உள்மன உணர்வை வெளிப்படுத்தும் முகத்தான், இருதயசாமியின் நெற்றியில் முத்தம் பதித்தார்.

சாமியாரின் அன்பும் பாசமும் தன்பால் இருக்கிறது என்று பெருமிதம் கொண்ட இருதயசாமி தன் மீது சுமத்தப்பட்டிருக்கும் கடினமான பணியை எண்ணிப் பார்த்தபோது மலைப்புத் தட்டியது.

திரும்பவும் முழங்தாழில் நின்ற வண்ணம்.

"அருள் தந்தையே கர்த்தரின் நாமத்தினால் நீங்கள் என்னை ஆசீர்வதிக்க வேண்டும்" என்றார்.

திரும்பவும் இருதயசாமியின் தலையில் தனது திருக்கரங்களைப் பதியவைத்த அருள்தந்தை பெப்பின் பெர்னாண்டோ.

"ஆகாயத்தினின்றும் மன்னா வர்ஷித்தது போல, ஆண்டவனின் ஆசீர்வாதம் உன்னை மகிழ்விப்பதாக" என்றார்.

இருதயசாமி எழுந்து நின்று பங்குத்தந்தைக்கு ஸ்தோத்திரம் சொல்லிவிட்டு அந்தோணியார் தெரு தோல் பதனிடும் தொழிலாளர்களைச் சந்திக்கப் புறப்பட்டார்.

மாலையில் அங்கு தெருக்கூட்டம் நடத்த வேண்டியிருந்தது.

●

இருதயசாமி தனது ஹெர்க்குலிஸ் சைக்கிளில் அந்ததோணியார் தெருவுக்கு வந்தபோது நேரம் மதியம் திரும்பியிருந்தது. சாதாரணமாகத் தோல் பதனிடும் தொழிலாளர்களைச் சந்திக்கவும், தெரு முனைக் கூட்டங்கள் நடத்தவும் வரும் இருதயசாமி தனியாகத்தான் தெருவுக்கு வருவார். வந்தவரை அடியாட்கள் அவரைத் தாக்கப் பதிவைத்துக் காத்திருப்பது பற்றி எச்சரித்த போதும் கவலைப்படுவதில்லை. மறுநாள் கோட்டை மைதானத்தில் நடக்கப் போகும் பொதுக்கூட்டத்துக்கான முன் ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக ஏற்பாடு செய்ய வேண்டியிருந்தது. அதிலும் விசேஷமாக ஸாப்பில் கத்தி ஆள்வேலைசெய்யும் சார்லஸ்ஸைச் சந்தித்துச் சில விவரங்களைக் கேட்டறிய வேண்டியிருந்தது.

இரண்டும் கெட்டான் நேரமாகையால், பெண்கள் சமையல் வேலையில் ஈடுபட்டிருந்ததாலும் தெருவுக்குள் ஆள் நடமாட்டம் குறைந்திருந்தது.

இப்படிப்பட்ட அகால நேரமாகப் பார்த்து, இருதயசாமியைத் தீர்த்துக் கட்டிவிட வேண்டும் என்கிற திடமான திட்டத்துடன் அஸன் ராவுத்தர் உத்திரவுக்கிணங்க பேகம்பூர் வளைவைத் தாண்டி அந்தோணியார் தெருவும், இரண்டலைப் பாறை போகும் ஒத்தையடிப்பாதையும் சந்திக்கும் முக்கில் பயங்கர ஆயுதங்களுடன் தனது பரிவாரங்களுடன் கழுவன் காத்துக் கொண்டு நின்றிருந்தான்.

பதுங்கியிருக்கும் ஆபத்தை அறிவிப்பதை போல் கழுவத் தேவன் நிற்கும் இடத்துக்கு மேல், மலைக்கோட்டை உச்சியைச் சுற்றிக் கழுகுகளும் பருந்துகளும் வட்டமிட்டுக் கூச்சல் போட்ட வண்ணம் பறந்து கொண்டிருந்தன. அவற்றிற்கும் தோல் ஷாப்புகளில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமை காரணமாக உணவுக்குப் பஞ்சம் ஏற்பட்டிருக்க வேண்டும்.

கழுவனைத் தெரு முனையில் பார்த்த வயதான ஒரு சிலர் அசம்பாவிதம் நடக்கப்போகிறது என்று பயந்து போய் வீட்டுக்குள் முடங்கிக் கொண்டார்கள். கழுவன் பதுங்கி

நிற்கும் வதந்தி மட்டும் தெருக் கோடிவரையில் பரப்பப்பட்டது.

கழுவன் தெருவுக்குள் வந்தான் என்றால் பிணம் விழும் என்பது பொருள். கழுவன் தனது பரிவாரங்களுடன் அந்தத்தெரு மட்டுமல்ல, அந்த ஊர் மக்களை மிரட்டிப் பீதிக்குள் புதைத்து வைத்திருக்கிறான். கர்ணனோடு பிறந்த கவசம் போல், சதா அவனைப் பிரியாமல் அவன் தோள் பட்டையில் தொங்கிக் கொண்டிருக்கும் கொடு அருவாளை எடுத்தான் என்றால், காவு வாங்காமல் அவன் தோளுக்குத் திரும்பாது. அவ்வளவுக்குக் கொடியவன் எல்லாவற்றுக்கும் மேலாகப் போலீஸ் தயவு அவன் பக்கம் இருப்பதால், யாரும் அவனை ஏதும் செய்துவிட முடியாது. இதுவரையில் அவன் செய்த கொலைகள் எதிலுமே அவன் தண்டனை அடைந்தது கெடையாது. அவ்வளவு சாமர்த்தியசாலி.

அஸன் பாயிடம் வாங்கிய பணத்திற்காக வம்புக்கிழுத்து, இருதயசாமியைக் கொலை செய்துவிட்டுத் தப்பித்துப் போவதற்கான தயாரிப்புகளுடன் தெரு முனையில் கழுவன் நிற்கும் போதுதான். அருள்சாமி தனது ஹெர்குலிஸ் சைக்கிளில் வந்து சேர்ந்தார்.

கழுவனையும், அவனது பரிவாரத்தையும் பார்த்தும் பாராதது போல் இருதயசாமி கடந்த போனார்.

"வக்காளி, வாத்தி மருவாதி தெரியலையோ அய்யா நிக்காக இல்ல" என்று கழுவனது கூட்டாளி ஒருவன் இருதயசாமியைப் பார்த்துக் கத்தினான்.

எப்போதும், தாழ்ந்த ஜாதிக் காரர்கள் கழுவத் தேவனைப் பார்த்ததுமே. மாட்டுவண்டியில் போனால் கூட வாகனத்தை விட்டு இறங்கி, தலைத்துண்டைக் கட்கத்துக்குக் கொண்டு வந்து சாஸ்டாங்கமாக நமஸ்காரம் செய்துபின் தெய்வம் வரம் கொடுத்து மாதிரி கழுவன் தலையை ஆட்டி அனுமதித்தால் தான் கழுவனின் சன்னிதானத்தைக் கடந்து போக வேண்டும். இல்லையென்றால் காவுதான்.

குரல் கேட்கவும் சைக்கிளை விட்டு இறங்கிய இருதயசாமி திரும்பிப் பார்த்தார். பிறகு எதையும்

கவனிக்காத மட்டில் வேண்டும் என்றே சைக்கிளைத் தள்ளிக் கொண்டு அந்தோணியார் தெருவை நோக்கிப் போனார்.

"தாயழி! கூப்பிடுதேன், மருது கெவனிக்காம போவியாக்கும் வாடாண்டா, வாடா" கழுவன் கத்தினான்.

இருதயசாமி அமைதியாக நடந்து கொண்டிருந்தார்.

"வக்காளி ஒனக்குச் சனீஸ்வரன் புடிச்சுண்டாண்டா" தலையைச் சிலுப்பிக் கொண்டு ஓடிவந்த கழுவன் அவரை இடைமறித்தான்.

கழுவனது மிரட்டலைக் கேட்டதும் இதுவரையில் பீதியுடன் தங்களது குடிசைகளுக்குள் ஒடுங்கிக் கிடந்த பெண்களும் பெரியவர்களும் இருதயசாமிக்கு ஏதும் நடந்துவிடக் கூடாது என்று பயந்து தெருவுக்கு வந்தார்கள்.

இருதயசாமி மட்டும், கழுவனையும் அவனது அடியாட்களையும் பொருட்படுத்தாத மட்டில் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு தெருவுக்கு வந்தார்.

கழுவனையும் அவனது அடியாட்களையும் தாண்டி தெருவுக்குள் வந்ததும் சைக்கிளை ஸ்டான்ட் போட்டு நிறுத்தி விட்டு, வேட்டியை மடித்துக் கட்டிய படியே

"ஏய்! கழுவா, இங்கே வாடா" அதிகாரத் தோரணையில் சொன்னார்.

இருதயசாமியின் திடமான இந்த வார்த்தைகள், கழுவனின் கையாட்களின் நெஞ்சில் சம்மட்டியால் ஓங்கி அடித்தது போன்று பட்டது.

கழுவத்தேவனே ஒரு கணம் குலுங்கிப் போனான் ஒரு தாழ்த்தப்பட்டவன் கழுவனைப் பேர் சொல்லிக் கூப்பிட்டது கிடையாது.

"என்னடா சொன்னே மருவாதை கொறையுது? வெட்டிப்பொலி கொடுத்துப்போடுவன்" என்று இறைந்த கழுவன்

வேட்டியை மடித்துக்கட்டி, அருவாளை எடுத்து வீசிய படியே இருதயசாமியை நெருங்கினான்.

அப்போதுதான் வேலையை முடித்துவிட்டுத் திரும்பிய சார்லஸும் சவரியார், மாயாண்டி ஆகியவர்கள், இருதயசாமியை நோக்கி ஓடி வந்தார்கள். வாத்தியாருக்கு ஏதும் சம்பவித்து விடக் கூடாது என்று அவர்களுக்குப் பீதி.

கழுவனைப் பார்த்து,

"கூலிக்கு மாரடிக்கிற பேமானி ஒனக்கு எல்லாம் என்னடா மரியாதை, நீ அருவாளை எடுத்தா எங்க கையெல்லாம் புளியங்கா பறிக்கவா போவும்." இருதயசாமி கேட்டார்.

"வேண்டாண்ணே, வேண்டாம். வாத்தியார் மன்னிப்புக் கேட்பாரு" கழுவனின் கூட்டாளிகள், அவனைப் பிடித்துக் கொண்டு பாவலாச் செய்தார்கள்.

அவர்களை ஏளனமாகப் பார்த்த வண்ணம் நின்றிருந்த இருதயசாமி.

"அந்தக் காலமெல்லாம் மலையேறி போச்சுதுடா கழுவா. அஸன் பாய் ஷாப்புலே நடந்தது உனக்கு மறந்து போச்சுதா. நீயும் பத்து மாசம்தான் எங்க அம்மாவும் பத்து மாசம் சுமந்து தான் என்னையைப் பெத்திருக்காடா" அவனை நோக்கி நடந்து போனார்.

இதற்குள் இருதயசாமியின் பேச்சைக் கேட்டுத் தெருவே கூடிவிட்டது. இருதயசாமியின் உறுதி அவர்களைத் தெம்படைய வைத்தது. பெண்கள் தங்கள் ஆத்திரத்தை யெல்லாம் ஒன்று கூட்டிக் கழுவனைத் தூஷண வார்த்தைகளால் அர்ச்சிக்கலானார்கள். செந்நாய்க் கூட்டத்துக்குள் மாட்டிக் கொண்ட புலியாகக் கழுவன் தவித்தான்.

கணத்துக்குக் கணம் தெருவில் கூட்டம் அதிகமாகிக் கொண்டிருந்தது.

"நீ மட்டும் ஒருத்தனுக்குப் பொறந்தவனானா, உண்மையான கள்ளப் பயன்னா இப்போ என்மேலே கை வெச்சுப்பாரு, ஈமச்சடங்கு செய்யக்கூட எலும்பு மிஞ்சாது"

திரண்டு நின்ற கூட்டத்துக்கே தெம்பு ஏற்படும்படி இருதயசாமி சொன்னார்.

கழுவன் முகத்தில் சவக்கிளை தென்பட்டது. அவன் மிகவும் பீதிப் பட்டுப் போனான்.

"மாணாம் பங்காளி. மாணாம் வக்காளி இந்த பறைக் கூட்டம் அம்மளை மெண்டு திண்டிரதாட்டம் நிக்குது"

வயதான அடியாள் ஒருவன் சமயோஜிதமாகக் கழுவனிடம் சொன்னான்.

"ஏய்! கழுவா! கடைசியாக எச்சரிக்கை பண்றேன். இண்ணெயோட ஒன் அடியாள் வேலைய விட்டுப்போடு எங்க சனங்க மேலே கை வெச்சே. நீ காணமப் போயிடுவே"

இருதயசாமி எச்சரித்தார்.

அடிபட்ட நாயாக தனக்குள்ளேயே வைத வண்ணம் கழுவனும் அவன் கூட்டமும் பின் வாங்கினார்கள்.

இருதயசாமி ஒன்றும் நடவாதது போல கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் சாவடியைப் பார்த்து நடந்தார்.

கூட்டம் அவரைப் பின்தொடர்ந்தது.

15

கடந்த பத்து நாட்களாகச் சங்கரனால் வழக்கம் போல், காலை வேளையில் சப் - கலெக்டர் பங்களாவுக்கு டென்னீஸ் விளையாடப் போக முடியவில்லை. கோர்ட்டுக்கும் ஒழுங்காகப் போக இயலவில்லை.

நந்தவனப் பட்டிச் சேரியில் நடைபெற்ற சம்பவத்துக்குப் பிறகு, மேல் ஜாதிக்காரர்களும், சனாதனிகளும், சேரி ஜனங்களுக்குப் பலவாறாகத் தொல்லை கொடுக்கலாயினர். சில ஊர்களில் சேரி மக்கள் தங்கள் குடியிருப்புக்களைவிட்டு வெளியேற வேண்டிய நிலமைக்கு ஆட்படுத்தப்பட்டனர்.

தோல் ஷாப்பு முதலாளிகள், ஸ்ட்ரைக்கை உடைப்பதற்காகவும், தொழிலாளர்களின் ஒற்றுமையைக் குலைப்பதற்காகவும், தங்களது அடியாட்கள் வாயிலாக, அடி, உதை, தீ வைப்பு என்று பலவிதமான கிரிமினல் நடவடிக்கை மூலம் தொழிலாளர்களை அச்சத்தில் ஆழ்த்தியிருந்தனர். எனவே, நிர்க்கதியாக விடப்பட்ட சேரிமக்களும், தோல்ஷாப்புத் தொழிலாளர் போராட்டத்துக்குத் தலைமை தாங்கும் இருதயசாமியும் மற்றவர்களும் பாதுகாப்பு வேண்டியும், பரிகாரம் வேண்டியும் ஹரிஜன சேவா சங்கத் தலைவரான சுந்தரேச அய்யரையும், சங்கரனையும் நாடிவரலாயினர்.

நகரத்துக்கு விஜயம் செய்த மதுரை வைத்திய நாதய்யரும், நகரசபைத் தலைவர் கணேச அய்யரையும், இதர காங்கிரஸ் கமிட்டித் தலைவர்களையும், சுந்தரேச அய்யரையும் பார்த்து அம்மக்களுக்கு முழுமையான பாதுகாப்பும் உதவியும் செய்தாக வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தார்

எனவே, சங்கரன் வெகு காலையிலேயே எழுந்து இம்மக்கள் பிரச்சினை சம்மந்தமாக ரெவன்யூ

அதிகாரிகளையும், போலீஸ் உத்தியாகஸ்தர்களையும் சந்திக்க வேண்டியிருந்தது. வெகு நேரம் வீட்டுக்கும், கோர்ட்டுக்கும் வெளியிலேயே செலவழிக்க வேண்டியிருந்தது. போலீஸ் முழுமையாக ஒத்துழைப்புத்தரவில்லை யென்றாலும் சப் - கலெக்டரும் ரெவன்யூ அதிகாரிகளும், உதவிகரமாக இருந்ததால் ஓரளவு அம்மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க முடிந்திருந்தது. இருந்தாலும், போலீஸ் சூப்பிரெண்ட் வெள்ளத்துரையின் அடக்கு முறையையும், போலீஸ் அராஜகத்தையும் எதிர்த்து உக்கிரமாகப் போராட வேண்டியிருந்தது.

நந்தவனப்பட்டிச் சேரியில் நடைபெற்ற அபூர்வ சம்பவம், மறுநாளே இந்துப் பத்திரிக்கையிலும், மெட்ராஸ் மெயில் பத்திரிக்கையிலும் முதல் பக்கத்தில் தலைப்புச் செய்தியாகப் பிரசுரமாகியிருந்தது. அந்தச் சேதியைப் பார்த்த சங்கரனது கல்லூரித் தோழர் சுப்ரமணிய சர்மா சங்கரனது செயலைப் பாராட்டிக் கடிதம் அனுப்பியிருந்தார். சுப்ரமணியசர்மா, தலைமறைவாக இருந்து கொண்டு, சென்னை மாநகரில் நடைபெறும் தொழிலாளர் இயக்கங்களுக்குத் தலைமை தாங்கிச் செயல் பட்டு வருகிறார். அவரது கடிதம், உள்ளூர், ஸ்டார் ஸ்டுடியோ உரிமையாளரும், காங்கிரஸ் சோஷலிஸ்ட் பிரமுகருமான வேலாயுதம் மூலம் சங்கரனுக்கு வந்து சேர்ந்தது. கடிதத்தில், வெள்ளை ஏகாதிபத்தியத்தை இந்திய மண்ணில் இருந்து விரட்டுவதற்குக் காந்திய இயக்கம் மட்டும் போதாது என்பதோடு, தொழிலாள மக்களின் ஒன்றுபட்ட வீரம் செறிந்த இயக்கமும் அவசியம் என்பதோடு, மிகவும் தாழ்ந்த நிலையில் இழப்பதற்கு ஒன்றும் இல்லை என்ற நிலையில் உழன்று கொண்டிருக்கும் தீண்டப்படாத தோல்பதனிடும் தொழிலாளர்களை அமைப்பு ரீதியாக ஒன்று படுத்துவது, சமுதாய விடுதலைக்காகச் சங்கரன் ஆற்றப்போகும் மிகப் பெரிய தொண்டு என்றும் குறிப்பிட்டிருந்ததோடு அவ்வப்போது சங்கரனை வேலாயுதம் மூலம் தொடர்பு கொள்வதாகவும் குறிப்பிட்டிருந்தார். சர்மாவின் கடிதம் சங்கரனுள் பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியிருந்தது.

சுந்தரேசய்யரைப் பொறுத்த மட்டில் தனது மைந்தனுடைய நடவடிக்கைகள் தான் இதுவரை செய்து வந்த ஹரிசனத் தொண்டின் நீட்சியே என்று கருதினார். எனவே,

நீதிமன்றம் நடக்கும் நாட்களில் கூட, சங்கரனை நீதி மன்ற வேலைகளுக்கு நடுவில், தாழ்த்தப்பட்ட மக்கள் பிரதி நிதிகளும் தோல் பதனிடும் தொழிலாளர்கள் பிரதிநிதிகளும் வந்து சந்திப்பதையும் ஆலோசனை பெறுவதையும் அவர் தடை செய்வது கிடையாது.

இந்தப் பத்து நாட்களில் அக்ரஹாரத்துச் சனாதனிகளின் எதிர்ப்புக் கூட நபுஞ்காத் தனமாக முடங்கிக் கிடக்கிறது. அவர்கள் தமக்குள்ளேயே சுந்தரேசய்யர் குடும்பத்தைப் பற்றியும் சங்ரனின் நடத்தை பற்றியும் புரணி பேசிக் கொண்டார்களேயல்லாமல் வெளிப்படையாக எதிர்க்க முடியவில்லை.

அம்புஜத்தம்மாளால் கூட ஆரம்ப நாட்களில், உலகமே தலை கீழாகப் புரட்டிப் போடப்பட்டதே போன்று கலங்கிப் போனாள். பெரியவர் பரமசிவம் அய்யருக்கும் சுந்தரேச அய்யரின் சகோதரிக்கும், சங்கரனிடம் காணப்பட்ட அராஜகத்தைப் பற்றியும், சங்கரனைக் கண்டிக்காமல் அதைப் பற்றிய அக்கறையே இல்லாமல் சுந்தரேச அய்யர் நடந்து கொள்வது பற்றியும், போன் மூலமும் கடுதாசி வாயிலாகவும் குறை சொல்லிப் பார்த்தாள். அதற்கு சாதாரணமாகப் பரமசிவம் அய்யர் தொலைபேசிவாயிலாகவே

"அம்புஜம், அம்பியை அவன் போக்கிலேயே விட்டுடு, அவனது சுதந்திரம் அது. அவன் ஒன்னோட உணர்ச்சிகளுக்கு நிச்சயம் மதிப்புக் கொடுப்பான்" என்று மட்டும் பதிலாகச் சொல்லியிருந்தார்.

"தாய் என்ற முறையில் அம்புஜத்தம்மாளால் மகனிடம் வெகுநாட்கள் அசூயையும் விரோதமும் பாராட்ட முடியவில்லை. சங்கரனும் அம்புஜத்தம்மாளது சனாதன உணர்வுகளுக்கும், பக்தி மயக்கத்துக்கும் மரியாதையும், மதிப்பும் கொடுக்கும் வகையில் நடந்து கொண்டது. காலவரையில் அம்புஜத்தம்மாளுக்கு வியப்பை மட்டுமல்ல சங்கரன் பால் ஒருவித பட்சாதாபத்தையும் உண்டு பண்ணியிருந்தது. அதாவது சங்கரன் வெளிவேலைகளுக்குப் போய்விட்டு வந்தான் என்றால் பின்கட்டுக்குப் போய் ஸ்நானம் செய்து புது உடை மாற்றிக் கொள்ளாமல் வீட்டுக்குள் நுழைவது கிடையாது. தன்னைப் பார்க்க வரும்

ஊழியர்களையும் நபர்களைக் கூட பெரும்பாலும் தனது வக்கீல் ஆபிஸிலேயே வைத்துப் பேசி அனுப்பி விடுவான். வீட்டுக்கு வரவழைப்பதில்லை."

இவ்வாறு அம்புஜத்தம்மாளுக்கும் மகனுக்கும் நடைபெறும் சீத யுத்தத்தைச் சுந்தரேச அய்யர் மௌனமாகக் கவனித்துக் கொண்டிருந்தாரேயல்லாமல் வழக்கம்போல அலட்டிக் கொள்ளவேயில்லை. இயற்கையாகவே ஏழைகள் பால் கருணை உணர்வும், மகன் மீது மாறாப் பாசமும் கொண்ட அம்புஜத்தம்மாளை சங்கரனின் நடைமுறை ஆட்கொண்டுவிடும் என்று அவருக்குத் தெரியும்.

எப்போதாவது இருவரும் தனிமையில் விடப்பட்ட சமயங்களில் அம்புஜத்தம்மாள் சுந்தரேசய்யரிடம்

"அவன் ஏழைப்பட்ட ஜனங்களுக்கு உதவி செய்யறதை வேண்டாண்ணு சொல்லலை. என்னதான் இருந்தாலும் பிராமணப் பையன் ஒரு சண்டாள ஜாதிப் பொண்ணோட பாடையைத் தொட்டுத் தூக்கலாமோ" என்று அம்புஜத்தம்மாள் அங்கலாய்ப்பதுண்டு.

"அவன் அவ்வளவு பெரிய பாவத்தைச் செய்யததாகவே வெச்சுக்கோ. அதுக்காக வேண்டி, நாம ரெண்டு பேரும் சங்கரனை நம்மோட பிள்ளையாண்டனில்லேண்ணு சொல்லீட முடியுமா" என்று மட்டும் ஒரு கேள்வியை வீசிவிட்டு அய்யர் அப்பால் போய்விடுவார்.

அந்தப் பதிலை ஜீரணிக்க முடியாமல் வெகுநேரம் அப் அம்புஜத்தம்மாள் மௌனமாகவே உட்கார்ந்து விடுவார். ஆனால் கணேசய்யர் போன்ற பெரிய மனிதர்கள் சங்கரனது நடவடிக்கைகளுக்கு ஆதரவு தருவதும், பலபேர் சங்கரனைப் பார்க்க வருவதையும் உதவியை நாடி வருவதையும் பார்த்தபோது தனது புதல்வனின் நடவடிக்கையில் ஏதோ, தனக்குப் புரியாத நியாயம் ஒன்றிருப்பது போல் அம்புஜத்தம்மாளுக்கு உள்ளூற ஐயப்பாடு, ஏற்படும்காரணத்தை மட்டும் அம்புஜம் அம்மாளால் ஊகிக்க முடியவில்லை. அதற்காக அவர்கள் வீணாகத்தனது மூளையைப் போட்டுக் குழப்பிக் கொள்ள விரும்பவில்லை.

எல்லாத்துக்கும் காலம் பதில் சொல்லும் என்பது போல் தெய்வத்தின் மீதும் விதியின் மீதும் பாரத்தைப் போட்டுவிட்டுத் தனது வீட்டு வேலைகளைக் கவனிக்கலானார்.

அம்புஜத்தம்மாளுக்கு மனச்சிரமமும், வேலை சிக்கலும் ஏற்படக்கூடாது என்று கருதியோ எண்ணமோ சங்கரன் தனது அறையை வீட்டின் முன் கட்டுக்கு மாற்றிக் கொண்டிருந்தார். ஏனெனில், தனது பொது வேலை காரணமாக அகால வேளைகளில் கூட வெளியே போய்விட்டு வர வேண்டியிருந்தது. மட்டுமல்லாமல், சங்கரன் வீட்டில் தங்கும் நேரமும் சமயமும் கூட நாளுக்கு நாள் சுருங்கிக் கொண்டே வரலாயிற்று. சங்கரனிடம் ஏற்பட்டிருக்கும் மாறுதல்கள் அம்புஜத்தம்மாள் மனதுக்கு இதமாக இருந்த போதும், ஒரு நாள் தன் செல்ல மகன் மொத்தமாகத் தன்னை விட்டுப் பறிக்கப்பட்டுப் போய்விடுவானோ என்கிற அச்சம் அவரை வேதனை கொள்ளச் செய்திருந்தது. ஆனால் பொறுப்புள்ள குடும்பத் தலைவி என்கிற வகையில் அம்புஜத்தம்மாள் தனது மனக்குறையையும் அவஸ்தையையும் தனக்குள்ளேயே புதைத்துக் கொண்டார். சங்கரனின் அன்றாட நடவடிக்கைகளில் அவ்வளவாகத் தலையிடுவது கிடையாது. ஆனால் ஒரு தாய்க்குரிய அக்கறையுடன் மகனது பேச்சையும் மாற்றங்களையும் கவலையோடு கண்காணித்துக் கொண்டிருந்தார்.

●

அன்று வழக்கத்திற்கு மாறாகச் சங்கரன் வெகு காலையிலேயே எழுந்து தனது சைக்கிளை எடுத்துக் கொண்டு வெளியே புறப்பட்டுப் போனான்

பொன்னுமான் துறையிலும், சாலையூரிலும் சேரிகளில் தோல் ஷாப்பு முதலாளிகளின் அடியாட்கள் புகுந்து, அவர்கள் தோல் ஷாப்புக்களுக்குப் பணிபுரிய வரவேண்டும் என்று மிரட்டியதோடு குடிசைகளுக்குள் புகுந்து அவர்களின் உடை மைகளை உடைத்தெறிந்ததோடு பெண்களையும், வயோதிகர்களையும் தெருவில்

இழுத்துப்போட்டுத் தாக்கியதோடு, சிறார்களையும் காயப்படுத்தியிருக்கிறார்கள். போக்கிரிகளுக்கு உதவி செய்யும் வகையில் போலீஸ்காரர்கள், கண்ணில் பட்ட ஆண்களையெல்லாம் கைது செய்து போலீஸ் ஸ்டேஷனில் அடைத்து வைத்திருப்பதுடன் அடியாட்களின் அடாவடித்தனத்தை போலீஸ் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றிருக்கிறது.

எனவே தாக்குதலுக்கு உள்ளான சேரி மக்களைச் சந்தித்து, விவரம் கேட்டறிவதுடன் போலீஸ் இலாகாவின் பாரபட்சமான போக்கு பற்றியும் சப்-கலைக்டரிடம் தெரிவிக்க வேண்டியிருந்தது. தனக்கு வந்த புகார்களின் அடிப்படையில், இந்த ஊர்களுக்கெல்லாம் சென்று, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்வதுடன், முழு விவரத்தையும் தனக்குத் தெரிவிக்க வேண்டும் என்று சப்-கலைக்டர் வாட்சனே. வெகுகாலைப் போதே போன் மூலம் சங்கரனைக் கேட்டுக் கொண்டிருந்தான் சப்-கலைக்டரைப் பொறுத்த மட்டில், போலீஸ் அதிகாரிகளின் பாரபட்சமான போக்குக் காரணமாக நகரத்தில், பெரும் மோதலுக்கான சூழ்நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்று பயந்தான். உளவுத்துறை அவருக்கும் கலெக்டருக்கும் நகரில் அதிகரித்து வரும் போலீஸ் அராஜகம் பற்றி விவரமாகத் தெரிவித்திருந்தது.

சங்கரன், அந்தச் சேரிகளில் நடைபெற்ற சம்பவம் பற்றிக் கேட்டறிந்து சப்-கலைக்டரையும் சந்தித்து, எந்த விதமான குற்ற ஆதாரமுமில்லாத நிலைமையிலும் போலீஸ் லாக்கப்பில் அடைக்கப்பட்டிருந்த அப்பாவி ஜனங்களை விடுதலை செய்வதற்கான ஏற்பாடுகளையும் செய்துவிட்டு, வேப்பம் தோப்பு அக்ரஹாரம் வந்த போது, வீட்டின் முன்பு நகரசபைத் தலைவர் கணேச அய்யரின் சாரட்டு வண்டி நின்று கொண்டிருக்கிறது. நகரத்தின் பிரபல டாக்டரும் முஸ்லீம் பிரமுகருமான டாக்டர் சர்தார் பாய் அவர்களின் சவர்லெகாரும் நின்று கொண்டிருக்கிறது. சாதாரணமாக அவர்கள் இரண்டு பேரும் சேர்ந்து சுந்தரேச அய்யரைப் பார்க்க வருவதில்லை.

டாக்டர் சர்தார் பாய் நகரத்தில் முக்கியமான முஸ்லீம் பிரமுகர் அலி சகோதரர்கள் பால் பெருத்த மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கும் தேசிய முஸல்மானும் கூட

தேசிய வாதிகளுக்கெல்லாம் சர்தார் பாய் ஒரு வேடந்தாங்கல் மாதிரி. நாட்டு விடுதலைக்கான சத்யாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்ட தொண்டர்கள் குடும்பங்களுக்கு எல்லாம் அவரது வைத்திய சாலையில் இலவச சிகிச்சை.

வெகு காலைப் பொழுதிலே தன்வீட்டுக்குப் பெரும்புள்ளிகள் வந்திருப்பது கண்டு ஆச்சரியப்பட்டுப் போன மட்டில், சைக்கிளை ஸ்டான்டு போட்டு நிறுத்தி வேலைக்காரப் பொடியன் வேலுவின் கையில் கொடுத்துவிட்டு வீட்டுக்குள் வந்தபோது அவர்களுடன் சுதந்திரப் போராட்ட வீரர் நரசிம்ம பாரதியும் வேறுசிலரும் அங்கு போடப்பட்டிருக்கும் பெஞ்சுகளிலும், நாற்காலிகளிலும் உட்கார்ந்திருந்தனர். அவர்கள் அனைவரும் சுந்தரேச அய்யருடன் முக்கியமான விவாதத்தில் ஈடுபட்டிருந்தனர்.

வாசலில் வந்து நின்ற சங்கரனைப் பார்த்தபோது நகரசபைத் தலைவர் கணேசய்யர்

"அம்பி நேராக்காக வேண்டித்தான் இவாளெல்லாம் காத்திண்டிருக்கா வெளியில் போறதனா, சொல்லிண்டு போக வேண்டாமோ?" என்று கேட்டதும் சங்கரனுக்கு கணேசய்யர் முதல் நாள் இரவு போன் மூலம் சொன்ன சேதி ஞாபகத்துக்கு வந்தது நகரத்தின் முக்கிய காங்கிரஸ் பிரமுகர்களும், சமூக ஆர்வலர்களும் தனக்காகக் காத்துக் கொண்டிருக்கும் தாத்பரியம் புரியாத சங்கரன்.

"சட் கலைக்கும் வெகு காலையிலேயே ஒரு வேலை சொல்லியிருந்தார் அவசரமாகப் போக வேண்டியதாய்ப் போயிட்டது" என்று சொன்னான் சமையற்காரனை வெங்கி கொண்டு வந்து போட்ட பிரம்பு நாற்காலியில் போய் உட்கார்ந்து சுந்தரேசய்யரைப் பார்த்தான்.

"அவர் வழக்கம் போல் தனது நீண்ட நாசியை இடது கரத்தால் வருடி விட்டபடியே "கணேசய்யர் ஏதோ முக்கியமான சேதியோட வந்திருக்கார்" என்று சாதாரணமாகச் சொன்னார்.

அப்போது அவசர அவசரமாக முன் வாசலில் வந்து நின்ற இருதயராஜ் எல்லோருக்கும் ஸ்தோத்திரம்

சொல்லிவிட்டு, தான் கொண்டு வந்திருந்த கடுதாசி ஒன்றை கணேசஅய்யரிடம் கொடுத்துவிட்டு, நரசிம்ம பாரதிக்கும், வேலாயுதத்துக்கும் நடுவில் போய் உட்கார்ந்து அவர்கள் இருவரிடமும் எதையோ ரகசியக் குரலில் பேசலானார். வேலாயுதம் ஒரு தீவிர காங்கிரஸ் சோஷலிஸ்ட். பல தவணை போராடி ஜெயில் வாசம் அனுப்பிவித்தவர்.

ஆசிரியர் இருதயசாமி கொடுத்த கடிதத்தைப் படித்துப் பார்த்த கணேசய்யர், கடிதத்தை சர்தார் பாயிடம் கொடுத்தார். பிறகு இருதயசாமியைப் பார்த்து

"பிஷப்பை நான் வெகுவாக எதிர் பார்த்தேன் சரி, அவர் அவசரமாகச் சென்னைக்கு அழைக்கப் பட்டபோது நாம என்ன செய்ய முடியும்" என்று சொன்னபோது.

"சாமி! நாம எடுக்கர முடிவு சாமியாருக்கு முழுச்சம்மதம்ண்ணு சொல்லிட்டார், விழாவிலேயும் கலந்துக்கதாவும் சொல்லிட்டாங்க."

இருதயசாமி கணேசஅய்யருக்குப் பதிலாகச் சொன்னார்.

ஆயர் பெப்பின் பெர்னாண்டோ கொடுத்து விட்டிருந்த கடிதம் பிறகு சுந்தரேச அய்யரிடமும், மற்றவர்களிடமும் கொடுக்கப்பட்டது.

கடிதத்தை மற்றவர்களும் படித்து முடித்த பின்பு, கணேசய்யரும், சர்தார் பாயும் சுந்தரேச அய்யரைப் பார்த்தபோது.

"நேக்கு ஒண்ணும் ஆட்சேபனை கிடையாது. அவனை கேட்டுக் கோங்கோ" என்று சுந்தரேசய்யர் தன் மகனைப் பார்த்த வண்ணமே, அவர்களிடம் சொன்னார்.

பெரியவர்கள் பேசிக் கொள்வதன் காரணம் புரியாமல் சங்கரன் பார்த்தபோது

"அம்பி! நாங்களெல்லாம் தீர்க்கமா ஆலோசனை செய்த பின்னாலே தான் இந்த முடிவுக்கு வந்தோம்" என்று கணேசய்யர் சொன்னதை ஆமோதிப்பதே போல் நரசிம்ம பாரதியும்

"உங்களை மாதிரியான படிச்ச எளவட்டங்களாலதான் இந்தப் பணியைச் செய்ய முடியும்" என்றார்.

இவ்வளவு நேரமும், பெரியவர்களும் நகரத்தின் பிரமுகர்களும் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த இருதயசாமி

"கடந்த பத்து நாளா எங்கள் மக்கள் கேப்டன் இல்லாத மாலுமிகளாட்டம் போராடிக்கிட்டிருக்கோம். எங்களோட நியாயமான கோரிக்கைகளுக்கு உருவம் கொடுக்கறதுக்கும் எங்க பக்கம் இருக்க நியாயத்தை அரசுக்கும் மத்தவங்களுக்கும் எடுத்துச் சொல்லக் கூட சரியான ஆள் கிடையாது. தீண்டப் படாத மக்களாக ஒதுக்கப்பட்ட எங்களண்டை முதலாளிகள் பேச்சுக் கொடுக்கக் கூட த்தயாராக இல்லை" என்று சொன்ன வாறே சங்கரனை ஏறிட்டுப் பார்த்தார். தொடர்ந்து,

"எங்க சனங்களையும் மனித ஜீவன்களாக மதிக்கிற அம்பி மாதிரியானவங்களாண்டை தான் எங்க மக்களோட பாடு மரணங்களைச் சொல்ல முடியும்" என்று பேசி நிறுத்தினார்.

"நெல்லிக்காய் மூட்டையாகச் சிதறிக் கிடக்கும் தோல் பதனிடும் தொழிலாளர்களை ஒன்று படுத்தறதுக்கும் அவங்களோட தேவைகளுக்காக வாதாடறதுக்கும் ஒரு அமைப்பு தேவை" சர்தார் பாய் சொன்னார்.

தன்னோடு உட்கார்ந்திருக்கும் நபர்களுடன் ஆலோசனையில் ஈடுபட்டிருந்த வேலாயுதம் தனது தோளில் கிடந்த சிவப்புத் துண்டால் முகத்தில் அரும்பி நின்ற வியர்வையைத் துடைத்த வண்ணம்.

"பெரியவங்க நீங்களெல்லாம் இந்த மக்கள் பால் கருணை கொண்டு அக்கறை காட்டியிருப்பதே இந்த மக்களுக்குகாகப் போராடுவதற்கான அமைப்பு தேவையிங்கிறதை வலியுறுத்தறது. இவங்களை எல்லாம் ஒரு அமைப்பின் கீழே கொண்டு வருவது மூலம்தான் இன்னைக்கு ஏற்பட்டிருக்க ஒத்துமையைக் காட்டிக் காக்க முடியும்" என்றதும்.

"அம்பி என்னை சொல்றாய். ஒன்னோட அபிப்பிராயம் என்னவோ?" கணேசய்யர் சங்கரனைக் கேட்டார்.

"இன்னைக்கு ஒன்று பட்டுப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் தோல் பதப்பிடும் தொழிலாளர் நலம் காக்க ஒரு அமைப்பு உருவாக்கப்படவில்லையானால் இவர்கள்

திரும்பவும் தோல் ஷாப்பு உடைமையாளர்களால் அடிமைகளாக்கப்படுவார்கள்" என்று வேலாயுதம் ஏற்கனவே சங்கரனிடம் சொல்லியிருந்தார். ஆனால், அப்படியான ஒரு அமைப்பை உருவாக்குவதற்கான காலம் இவ்வளவு கனிந்து நிற்கும் என்று சங்கரன் நினைக்கவில்லை.

"நேக்கும் கூட அப்படித்தான் படறது மாமா. இல்லையானா தோல் ஷாப்பு முதலாளிகள் இந்த அப்பாவிகளைப் பழி வாங்கிப் போடுவா" என்று; சங்கரன் சொல்லவும்

"அதனால ஒண்ணோட சம்மதத்தைக் கேட்டுட்டுப் போகத்தான் அவாளெல்லாம் வந்திருக்கா. எங்களுக்கும் கூட அவகளோட புரப்போஸல் சரிண்ணு படறது"

கணேசய்யர், ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் முடிவை இவ்வாறு மறைமுகமாக வெளிப்படுத்தினார்.

"இதில் என்னோட சம்மதம் என்ன வேண்டியிருக்கு. இந்த மக்களுக்காகப் போராட ஒரு அமைப்பு ஒரு சங்கம் வேணும் அவ்வளவுதானே" என்று சங்கரன் சொன்ன போது.

"உங்களைத்தான் அந்தச் சங்கத்துக்குத் தலைவராகத் தேர்வு செய்ய வேணும் என்று, எங்க சமூகத்தைச் சேர்ந்த பெரியவங்க தீர்மானம் போட்டிருக்காங்க. அதை நீங்க தட்டாம ஏத்துக்க வேணும்." இருதயசாமி சங்கரனைப் பார்த்துச் சொன்னபோது சங்கரன் மலைத்துப் போனார்.

வேலாயுதத்தோடு வந்திருந்தவர்கள், இருதயசாமியின் பிரேரணையைச் சற்று மனத் தாங்கலோடு பார்த்தபோது.

"முதலில், ஒரு அமைப்பு அப்படி ஜாதி அமைப்பாக உருவாகலாம். இந்த அமைப்பின் உள்ளடக்கத்தைப் பார்க்க வேண்டும். இவர்கள் அத்தனை பேரும் உழைப்பாளர்கள் உழைப்பே அவர்கள் மூலதனம். நாளா வட்டத்தில், அது வலுவான ஒரு வர்க்க ஸ்தாபனமாக உருவாகும். இந்த அமைப்புக்குள் அக்னிக் குஞ்சாக ஒரு கரு இருப்பதை நாம் உணர வேணும். எதையுமே யாந்திரீகமாகப் பார்க்கக் கூடாது." அவர்களிடம் வேலாயுதம் ரகஸ்யமாகச் சொல்லிக் கொண்டிருந்தார்

இருதயசாமியின் பிரேரணையைக் கேட்டதும், மலைத்துப் போன சங்கரன், "குருவி தலையில் பனங்காயை வைக்கிறவிவகாரம், தன்னால் இப்படிப்பட்ட பொறுப்புகளை யெல்லாம் ஏற்றுக் கொள்ள முடியாது என்பது போல் தந்தையையும், கணேச அய்யரையும் சர்தார் பாயையும் மாறி மாறிப் பார்த்தார். பிறகு தானாக ஒரு முடிவுக்கு வந்த மட்டில்

"இதுக்கெல்லாம் நரசிம்ம பாரதி மாமாதான் சரியான நபர். அவருக்குத் தான் தொழிற்சங்க அநுபவம் எல்லாம் இருக்கு. எப்போதும் போலவே, என்னோட ஒத்துழைப்பு இருக்கும்."

அங்கிருப்பவர்களைப் பார்த்துச் சொல்லவும் அவர்கள் மத்தியில் ஒருவிதமான அசாதாரண மௌனம் நிலவியது.

சங்கரன் சொன்னதே போன்று, அங்கிருப்பவர்களில், தொழிலாளர் அமைப்பும் பற்றி அதிகமான அனுபவம் உடைய நபர் நரசிம்ம பாரதி. அவர், மதுரை ஹார்வி மில்லில் ஸ்ரீமான் வரதராஜலு நாயுடுவால் ஆரம்பிக்கப்பட்ட பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத்தில் நிர்வாகக் குழு உறுப்பினராக இருந்தவர். வேலை நிறுத்தத்தின் போது அரசாங்கத்தால் சிறைப்படுத்தப்படவும் செய்யப் பட்டுள்ளார். வரதராஜலு நாயுடுவுடன் அரசியல் ரீதியாக ஏற்பட்ட அபிப்பிராய பேதம் காரணமாக வெளியேறி வந்து விட்டார்.

சங்கரனது பேச்சில் காணப்பட்ட நியாயத்தை உணர்ந்த நரசிம்மபாரதி

"அம்பி சொல்றதில் நியாயம் இருக்கத்தான் செய்யறது. எனக்கு மதுரையிலும், மத்த ஊர்களிலும் நிறைய அமைப்புகளில் பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அவற்றையெல்லாம் பார்ப்பதற்கும், நிறைவேத்தவும் நேரம் போதாது, எப்படியும் நான் இந்த அமைப்போட நிர்வாகக் கமிட்டியில் இருக்கத்தான் போரேன். அம்பி, மறுப்புச் சொல்லப்படாது" என்று வேண்டுகோளாகச் சொல்லவும்.

"மிகவும் தாழ்ந்த நிலையில் இருக்கும் இந்த மக்களை உணர்வு பெற வைப்பதே பெரும் பணியாக இருக்கும். மட்டுமல்ல, அம்பி மாதிரியானவங்க இப்படிப்பட்ட கடைநிலை மக்களுக்கத் தலைமை ஏற்பதுமூலம் அந்த அமைப்பின் அந்தஸ்தையே உயரச் செய்வதாகும்" வேலாயுதம் சொன்னார்.

இவர்கள் பேசுவதையெல்லாம் மௌனமாகக் கேட்டபடி உட்கார்ந்திருந்த சங்கரன் வெகுநேரம் வரையில் ஒன்றுமே பேசவில்லை.

"சுந்தரேசய்யர் என்ன சொல்றார்." சர்தார் பாய் மௌனத்தைக் கலைத்துக் கொண்டு கேட்டார்.

"கணேசய்யரும், சர்தார் பாயும் நரசிம்மனும் எடுக்கிற முடிவை மறுதலிக்கிறதுக்கு நேக்கு என்ன உரிமை இருக்கு? அது அவனோட முடிவு நான் தலையிடப் போறதில்லை."

சுந்தரேசய்யர் சொன்னார் சங்கரன் பதில் ஏதும் பேசவில்லை. பெரும்பாலும், சுந்தரேச அய்யரின் பேச்சையும், கணேசய்யர் உத்தரவையும் சங்கரன் என்றும் மறுதலித்தது கிடையாது.

"அம்பி, இது பெரிய பொறுப்பு மட்டுமில்லை. நோக்கு இது ஒரு சோதனைக் கூடம்" என்று சொன்ன கணேசய்யர்.

"இந்த மக்களுக்காக நம்மை அர்ப்பணம் பண்ணிக்கிறது. மகாத்மா காந்தி மகானோட கட்டளையை நிறைவேற்றுவதாகும்." உணர்ச்சிவசப்பட்ட மட்டில், கணேசய்யர் சொன்னபோது, ஒரு குழந்தையைப் போல சங்கரன், சுந்தரேசய்யரைப் பார்த்தான்.

வேலாயுதத்துக்கு ஒரு வர்க்க அமைப்பு உருவானதில் மிக்க மகிழ்ச்சி.

16

கடந்த இரண்டு நாளாகத் தாயம்மாள் தனது வளர்ப்பு மகன் ஓசேப்பின் வருகைக்காக குடிசையின் வாயிலிலேயே இலவு காத்த கிளியாகக் காத்துக் கிடக்கிறாள்.

தனக்கேற்பட்ட பொருளாதாரச் சிக்கலையும் பொருட்படுத்தாமல் கடன் வாங்கி அவனுக்காகப் பன்றி இறைச்சி வாங்கிச் சமைத்து வைத்ததுக் காத்து நிற்கிறாள். சமைத்த கறி இரண்டு நாட்களாக மண் சட்டியில் பத்திரமாக உறியில் ஏற்றி வைத்துப் பாதுகாத்து வைத்திருக்கிறாள். எப்போதுமே ஓசேப்புக்குப் பன்றிக்கறி என்றால் அவ்வளவு விருப்பம். அதிலும் பழை கறி என்றால் மகா விருப்பம்.

டாக்டர் சர்தார் பாயின் மருத்துவ மனையினின்றும் டிஸ்சார்ஜ் ஆகி வந்ததும், தனது வளர்ப்புத் தாயான தாயம்மாளை வாஞ்சையுடன் ஓசேப்பு வந்து சந்தித்துக் கொண்டதை நினைவு படுத்திக் கொண்டபோது, அவளுக்கு உடல் புல்லரித்தது. அப்படி ஒரு வாஞ்சையை அவன் மனதுக்குள் தேக்கி வைத்திருப்பான் என்று தாயம்மாள் நினைத்துப் பார்க்கவில்லை.

அன்று இரவு ஓசேப்பு, தாயம்மாளின் குடிசைக்கு வந்தபோது, அவனுக்குச் சமைத்துக் கொடுப்பதற்குக் கூட அவளிடம் ஒன்றுமில்லை. தோல் ஷாப்பு வேலை நிறுத்தம் காரணமாக, முடிதள்ளும் பணிக்குக் கூடப் போக முடியவில்லை. ஏனைய தோல் பதனிடும் குடும்பங்களைப் போன்று, பெரும்பாலான நாட்களில் அவள் குடிசை அடுப்பும் புகையாமல் கிடந்தது. மார்க்கெட்டில் குப்பை

அள்ளிப் போட்டதில் கிடைத்ததைக் கொண்டு வரகரிசி கஞ்சிவைப்பதற்குத்தான் போதுமானதாக இருந்தது. ஏற்பட்ட அகோரப் பசியின் காரணமாகக் கஞ்சி முழுவதையும் குடித்துவிட்டுப் பானையைக் கழுவிக் கவிழ்த்து வைத்துவிட்டுப் படுக்கப் போன பிறகுதான் ஓசேப்புக்குடிசையின் படலைத் தள்ளிக் கொண்டு வந்து நின்றான்.

அருகில் வந்து உட்கார்ந்த ஓசேப்பு "பசிக்குது ஆத்தா. ஏதாச்சும் இருந்தா குடிக்கக் குடுக்கையா" என்று கேட்ட போது, அவளது ஈரல் குலையே நடுங்கிப் போனது.

அந்த அகால வேளையில் எங்கே போவது. பக்கத்துக் குடிசைகளிலும் , அவளைப் போன்று அறைப் பட்டினியும் முழுப் பட்டினியும்

காடா விளக்கை மட்டும் ஏற்றி வைத்துவிட்டு நிற்கும் அவளது கையறு நிலையை உணர்ந்தவனே போல்,

"ஆத்தா இப்படி வாயேன்" என்றவன் அவள் அருகில் வரவும். அவளது மடியில் முகம் புதைத்துப் படுத்துக் கொண்டான். ஓசேப்பின் எதிர் பாராத செயலால் மலைத்துப் போன தாயம்மா "சை எருமை மாடே, ஏழு கழுத வயசு ஆவுது. உன்னுமா ஒனக்குச் சின்னப்புள்ளெண்டு நெனப்பு" என்று கடிந்து கொண்டபோது, "ஆத்தா அப்படியே ஒன் வவுத்துக்குள்ளே போயி, சின்னப் புள்ளையாட்டமா மொடங்கி படுத்துக்க வேணும் போலப்படுது" என்ற ஓசேப்பு சொன்னபடியே ஒரு குழந்தையாட்டம் அவள் மடியில் அவன் தலை புதைத்துக் கொண்டபோது, பாச உணர்வால் உடல் புல்லரித்தது. கண்களில் நீர் கோர்த்து, தொண்டைக் குழியில் ஏதோ, விக்கிக் கொண்டது போன்ற உணர்வு.

அப்படியே நயனங்களை மூடியவண்ணம் தியானத்தில் ஆழ்ந்து விட்டதுபோன்று அமர்ந்திருந்தாள் அன்பொழுக அவன் தலையை வருடிக் கொண்டாள்.

அவனது பால பருவம் தாயம்மாளுக்கு நினைவுக்கு வந்தது.

ஏசுவடியாளின் எதிர்பாராத துர் மரணத்துக்குப்பின், அனாதையாக வீதியில் விடப்பட்ட ஓசேப்புக்கு அவள் தான் ஒரே ஆதரவு. தெருப்பிள்ளைகள் அவனைக் கடுமையாகத் தாக்கி விட்டாலோ, அல்லது ஏசுவடியாளின் நினைப்பு ஏற்பட்டாலோ ஓசேப்பு. தாயம்மாளைத் தேடி வந்து முகம் புதைத்து அழுவான். பிறகு அப்படியே அவள் மடியில் கிடந்து தூங்கிப் போவான்.

அப்போதெல்லாம், கன்னிகழியாத அவளது தனங்கள் விம்மிப் புடைத்துப் பால் அரும்பிக் காம்புகளில் அமிர்தம் சுரப்பது போன்ற உணர்வு ஏற்பட்டு, மூச்சுமுட்டும், அந்தப் பிள்ளையாண்டனைத் தானே பிரசவித்துவிட்ட உணர்வு எழும். இனம்புரியாத இன்பலகிரி அவள் உதிரத்திலும் உடம்பிலும் ஓடிப் பரந்து இன்பக் கிளுகிளுப்பு ஏற்பட்டு மதிமயங்கிப் போவாள். நயனங்களில் பெருக்கெடுத்து ஓடும் கண்ணீரைக் கூடப் பொருட்படுத்தாமல், ஓசேப்பை அள்ளி மார்போடு அணைத்துக் கொள்வாள். அவனைத் திரும்பவும் மடியில் படுக்கப் போட்ட வண்ணம் வெகுநேரம் வரையில் உட்கார்ந்து விடுவாள். மறுபடியும் அவள் நயனங்களைத் திறந்து பார்க்கும்போது அவன் மடியில் இருக்க மாட்டான். தனது கூட்டாளிகளுடன் வெளியே ஓடிவிடுவான். அல்லது அவளது நைந்து போன சேலையை இழுத்துப் போட்டுப் புதைந்து படுத்துக் கிடப்பான்.

பெரியவனாகி நனைவுக்குழியிலும், கடுக்காய்க் குழியிலும் வேலை செய்யும் அளவுக்கு வாலிபனாகிப் போன போதும் ஒரு குழந்தையைப் போலவே ஓசேப்பு நடந்து கொள்வது வியப்பாக இருக்கும்.

வேலைப் பளு காரணமாகச் சோர்வு ஏற்படும் போதெல்லாம் அவனுக்கு ஏசுவடியாள் நினைப்பு ஏற்படும். அப்படியே சோர்வுடன் தாயம்மாளின் மடியில் வந்து

படுத்துக் கொள்வான். சில சமையம் முகத்தை அவள் மடியில் புதைத்தபடியே, தனது மனபாரம் தீரும் வரையில் அழுவான். பிறகு அவளைப் பார்த்து,

"ஆத்தா, நீ என்னை ஒம்புள்ளெ இல்லேண்டு சொல்ல மாட்டையே" என்று கேட்பான்.

அவனது வார்த்தைகள் நெஞ்சில் இடிதாக்கியது போன்றிருக்கும்.

"ஒங்கப்பனை நெஞ்சிலே தாங்கிட்டிருக்க மனசுலே வேறு ஒருத்தனுக்கும் எடம் கெடையாதுடா அய்யா.

அய்யா நீ எம் மம்முதன் ஆசிரோட புள்ளெடா, எம் வவுத்துலே பொறக்காட்டியும், நீதாம்டா நாம் பெத்த புள்ளெ எம்மவன்" என்று சொல்லிவிட்டு கண்களைத் துடைத்துக் கொள்வாள்.

இப்போது கூட, அவனுக்குத் தாங்கொணா மனச் சஞ்சலம் ஏற்பட்டிருக்க வேண்டும். அதனால் தான் ஓசேப்பு ஆறுதலுக்காகத் தனது மடியைத் தேடி வந்திருக்க வேண்டும் என்று அவளுக்குப் பட்டது.

"அய்யா ஒனக்கு அம்புட்டு மனச்சடவுக்கு என்னடா வந்துச்சு சொல்லுப்பா" அவனது சிரசை வருடிய வண்ணம் கேட்டாள்.

இப்படி அவள் சொன்னபோது, கேட்க வேண்டாத வார்த்தையைக் கேட்டுவிட்டதே போல் அவளது மடியினின்றும் எழுந்தவன்,

"இல்லே ஆத்தா, நான் ரொம்ப சந்தோஷமா இருக்கன். கர்த்தர் நமக்கு நல்ல வழியக் காட்டியிருக்கார். அந்த சந்தோஷம் தாங்க மாட்டாமத்தான் ஒம்மடியைத் தேடி வந்திருக்கன்"

"என்னப்பா செல்லுத" தாயம்மாள் கேட்டாள்.

"வாத்தியாரையா சொன்னாவ அம்ம சனங்களுக்கெல்லாம் நல்ல காலம் வருவுது சங்கமாச் சேரப் போரம்" என்று சொன்படியே எழுந்து நின்றவன்.

"இனிமே அல்லாம், அம்ம பொம்பளைகள தோல் ஷாப்பு முதலாளிக பொண்டாள முடியாது. அம்மளை கல்தூணிலே கட்டி வச்சுச் சாவும் மட்டும் சாட்டையாலே அடிச்சு வதை பண்ண முடியாது."

கரங்களை ஆட்டி ஆலாபனையாகச் சொன்னபோது தாயம்மாள் வியந்து போனாள்.

"நெசமாவா என்னடாப்பா சொல்லுதே" என்று திரும்பவும் அவள் கேட்டாள்.

"அம்ம தலையெழுத்து மாறப்போவுது அதனால் தாம் எனக்கு அம்புட்டுச் சந்தோஷம்"

இப்படிச் சொல்லி விட்டு அவன் வெளியில் கிளம்ப முற்பட்டபோது "அய்யா வெறும் வவுத்தோட போவ வேண்டாண்டா. எங்கையாச்சும் பாத்துக் கேப்பக் கூழாச்சும் கிண்டிப் போடுதேன்" தாயம்மாள் மனக்கிலேசத்தத்துடன் சொன்னாள்.

"ஆத்தா, உப்ப எனக்குப் பசிக்கலை. ஒம்மடியிலே என் தலைவச்சுப் படுத்ததிலேயே எம் பசியெல்லா பறந்து போயிருச்சி" என்றவன் திரும்பவும் அவள் அருகில் வந்தான்

"ஆத்தா. நா பண்ணிக் கறி சாப்பிட்டு நொம்ப நாளாவுது. பன்னிக்கறி எடுத்து ஆக்கி வைக்கிறயா வெள்ளிக்கெழம வருவன்"

"கட்டாயம் வருவயாலே" தாயம்மாள் கேட்டபோது, "கட்டாயம் வருவன் உப்ப எனக்கு நெம்ப வேலை இருக்கு"

என்று உற்சாகமாகச் சொல்லிவிட்டுப் போனவன் சொன்னபடி வராததால் மனம் பேதலித்துப் போய் தாயம்மாள் குடிசையே கதி என்று உட்கார்ந்துவிட்டாள். அவன் எப்போதும் இப்படித்தான் ஒன்று சொல்லி விட்டு மற்றொன்றைச் செய்து கொண்டிருப்பான்.

கடைசியில் மலைக்கோட்டைக்கு மேற்கே சந்திரிகை மறையும் அகால வேளை வரையில் காத்திருந்தவள். சோர்வுடன் சேலையை விரித்துத் தலை சாய்க்கப் போனபோது ஓசேப்பும், மினிசாமியும் குடிசையின் படலைத் தட்டிக் கொண்டு நின்றார்கள்.

அவள் ஏதோ பேச முற்படவும் "ஆத்தா மொத்த வேலையாப் போச்சு அதான் நேத்து வர முடியலை. பண்ணி ஆனம் பன்னியிருக்கேல்லே. அதான் மினிசாமியும் கூட்டியாந்திருக்கேன்." தனது சகாவைப் பார்த்த வண்ணம் தாயம்மாவிடம் சொன்னான்.

"பேச நேரமில்லே, சோத்தைப் போடு ஆத்தா, மினிசாமி உரிமையுடன் தாயம்மாளைக் கேட்டான்."

"நாளைக்கு பேரேடு மைதானத்துலே சங்கக் கூட்டம் தெரியுமா ஆத்தா"

ஓசேப்பு தாயம்மாளிடம் சொன்னான்.

தாயம்மாள் ஏதும் பேசாமல், மண்சட்டிகளில், வரகரிசிச் சோற்றையும், உரியில் வைக்கப்பட்டிருக்கும் பன்றிக் குழம்பையும் பரிமாறினாள்.

அவர்கள் சாப்பிடும் வேகத்தையும் ஆவலையும் பார்த்த வண்ணம் நின்றிருந்த தாயம்மாள்,

"பாவம் புள்ளெக எத்தனை நாள் பட்டினியோ இப்படிச் சாப்பிடுதுவ" தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டாள்.

அவர்கள் சாப்பிட்டு முடித்ததும் "எங்களுக்குச் சங்க வேலை இருக்கு ஆத்தா, பேசதுக்கக் கூட நேரமில்லை" மினிசாமி தாயம்மாளைப் பார்த்துச் சொன்னான்.

பக்கத்துக் குடிசைகளில் இருக்கும் தோல் பதனிடும் தொழிலாளர்களும் ஓசேப்பைப் பார்ப்பதற்குத் தாயம்மாளின் குடிசைக்கு வந்து கூடிக்கொண்டிருந்தனர்.

ஓசேப்பு, சாப்பிட்டு முடிந்ததும் சுவர் ஓரமாகச் சாத்தப்பட்டிருக்கும், ஆசீர்வாதத்தின் பாலாக் கம்பை எடுத்தான்.

"ஏலே, அய்யா, அந்தக் கம்பை ஏம்டா எடுக்கே, இந்தக் கம்பை எடுத்துத் தாலா ஒங்கப்பன் அழிஞ்சு போனான்."

தாயம்மாள் சொன்னாள்.

"நான் அழிய மாட்டேன்" பரலாக் கம்பைத் துணியால் துடைத்துச் சுத்தம் செய்தவாறு சொன்னான்.

"அப்ப எதுக்கு" என்று தாயம்மாள் கேட்டாள்.

"எப்போதும், அடி வாங்கிட்டே இருக்க முடியாது ஆத்தா" என்று பதில் சொன்னபடியே தன் சகாவுடன் அவளது குடிசையைவிட்டு வெளியே போனான்.

தாயம்மாள் மனக்கிளர்ச்சியுடன் மகன் நடந்து போன திக்கையே பார்த்தபடி குடிசை வாசலில் வெகுநேரம் நின்றிருந்தாள்.

●

அது ஒரு ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் ஹைதர் அலியும், திப்பு சுல்தானும் தங்களது படைகளுக்காக ஒதுக்கிப் பாதுகாத்திருந்த பேரேடு மைதானம், சுத்தம் செய்யப்பட்டு மாவிலைத் தோரணங்களாலும், காட்டுமலர்களாலும் அலங்கரிக்கப் பட்டிருக்கிறது.

நகரப் பிரமுகர்களுடையவும், தோல் ஷாப்பு முதலாளிகளுடையவும், ஆட்சேபணையையும் எதிர்ப்பையும் மீறி, அவர்களுக்குப் பொதுக்கூட்டம் நடத்துவதற்கு அரசு அனுமதி கொடுத்திருக்கிறது. அரசின் அனுமதி பெறுவதற்கு கணேசய்யரும் சர்தார் பாயும் பெரும் முயற்சி மேற்கொள்ள வேண்டி வந்தது.

ஒசேப்பும், மற்ற தோல் ஷாப்புத் தொழிலாளர்களும், மைதானத்தைச் சுத்தப்படுத்துவதிலும், அலங்கரிப்பதிலும் பம்பரமாகச் சுழன்று பணியாற்றிக் கொண்டிருந்தனர். இருதயசாமி அவ்வப்போது, தனது சைக்கிளில் மைதானத்துக்கு வந்து நடைபெறும் வேலைகளைக் கண்காணிப்பதும், அவர்களுக்கு ஆலோசனை சொல்வதுமாக இருந்தார்.

காலம் காலமாக வதைபட்டுக் கேட்பாரும், எடுப்பாரு மற்றுக் கிடந்த தோல் பதனிடும் தொழிலாளர்கள் தங்களின் உரிமைகளை நிலை நாட்டிக் கொள்வதற்காக ஒரு சங்கத்தை அமைக்கப் போகிறார்கள் என்கிற உணர்வுதொழிலாளர் மத்தியில் கரை கடந்து காணப்படுகிறது. அக்கம் பக்கத்துச் சேரி மக்களெல்லாம் பேரேடு மைதானத்தை நோக்கி அணி வகுக்கலானார்கள்.

உதவி சூப்பிரெண்ட் வெள்ளைத்துரையின் நடவடிக்கைகளினால் அதிருப்தி கொண்ட கலைக்டரும் சூப்பிரண்டு துரையும், நகரத்துக்கு அதிகப்படியான போலீஸ் ஜவான்களை அனுப்பியதோடு நகரத்தில் சட்டம் ஒழுங்கு குலையாமல் பராமரிக்கப் பட வேண்டும் என்றுஅவர்களால் தாக்கீது நல்கப்பட்டிருந்தது. வெள்ளைத்துரையைப் பொறுத்த மட்டில், சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பது போல் பாவ்லாச் செய்தானேயல்லாமல், முதலாளிகளின் அடியாட்கள் கலவரத்தை ஏற்படுத்துவதற்குச் சாதகமாக மைதானத்திலும், அருகில் உள்ள காந்தி மைதானத்திலும்

ஒப்புக்குப் போலீஸ் ஜவான்களை நிறுத்தி வைத்திருந்தான். ஆனால் சேரிகளிலும் கண்காணிப்பைப் பலப்படுத்தி சேரி மக்களை மிரட்டும் பணியைச் செய்ய அவன் தயங்கவில்லை. நகரத்தின் எல்லைகளில் வெள்ளைத்துரையால் இறக்கிவிடப்பட்டிருந்த போலீஸ் ஜவான்கள், சேரி மக்களின் வரவால் நகரத்தின் தூய்மை தீட்டுப்பட்டுப் போகாமல் பார்த்துக் கொண்டனர். நகரவீதிகளுக்குள் வராமல் பார்த்துக் கொண்டனர்.

இவ்வளவு கெடுபிடிகளுக்கு மத்தியிலும் மதியம் திரும்பும்போது மைதானம் தோல் ஷாப்புத் தொழிலாளர்களாலும், சேரி மக்களின் வரவாலும் நிரம்பிக் கொண்டிருந்தது. அருக்காணி, கட்டுச் சோறு கட்டிக் கொண்டு தனது சகதொழிலாளர்களுடன் மைதானத்துக்கு வந்திருந்தாள்.

ஒசேப்பு மறு ஜென்மம் பெற்று சங்க வேலைகளில் ஈடுபட்டிருப்பது அவளுக்குப் பெருமையாக இருந்தது.

வெள்ளைத்துரையின் வஞ்சகத் தன்மையை உணர்ந்திருந்த வேலாயுதம், இருதயசாமியை எச்சரித்திருந்தார். என்வே தங்களைத் தாமே பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற மட்டில், சேரி வாலிபர்களும், தோல் ஷாப்புத் தொழிலாளர்களும், கம்பும் தடியுமாக ஆங்காங்கே பாதுகாப்புக்காக நின்று கொண்டிருந்தனர்.

தொழிலாளர் மத்தியில் கரைபுரண்டு ஓடும் உற்சாகத்தையும், எதற்கும் தயாரான நிலமையில் நிற்கும் வாலிபர்களையும் பார்த்துப் பயந்து போன கழுவத்தேவன்

"வக்காளி, இந்த மொதலாளிப் பயவளுக்கு ஏண்டுக்கிட்டுப்போயி, மருத்து எவண்டா நாயா அடிபட்டுச்சாவறது, வாத்தியான் ஆளுங்க அம்மளைக் கொண்டு போடுவான் மாண்டான்டா, பங்காளி

மாண்டாம்," என்று சக-கையாட்களிடம் அங்கலாய்த்தவன் சாலிக்காட்டுக்குள் தன்னை மறைத்துக் கொண்டான்.

மாலை வேளை நெருங்கி வரவும் மலைக்காற்று இதமாக வீசத் தொடங்கியது. மேற்கு வானம் மயக்கும் சூரிய ஒளிபட்டு இரத்தச் சிவப்பாக மாறி கொண்டிருக்கிறது.

சரியாக ஆறு மணியளவில், நகர சபைத் தலைவர் கணேசய்யரும் சுந்தரேசய்யரும் ஜட்கா வண்டியில் பேரேடுமைதானம் வந்துஅங்கு போடப்பட்டிருக்கும் மேடைக்குப் போனார்கள். காரில் வந்திறங்கிய சர்தார் பாய் தான் கொண்டு வந்திருக்கும் பெட்டியுடன் மேடைக்குப் போனார்.

வேலாயுதமும், இருதயசாமியும் மீண்டும் ஒருமுறை, கூட்டத்தைச் சுற்றிக் கண்காணித்துவிட்டு மேடைக்கு வந்தபோது சங்கரன் தனது மிதிவண்டியைத் தள்ளிக் கொண்டு மேடை நோக்கி வந்தார்.

இப்போது, ஆங்காங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் பெட்ரோமாக்ஸ் விளக்குகளின் ஒளி மைதானம் முழுவதும் பரவிப் படர்ந்திருக்கிறது.

கடைசியாகக் குருவானவர் பெப்பின் பெர்னாண்டோ தேவ ஊழியனுக்கான அங்கியணிந்து, சகோதரச் சாமியார்கள் இருவர் புடைசூழ மேடைக்கு வந்து அலங்கரித்தார்.

சர்தார் பாய் நரை திரைந்து போன தனது தாடியை வருடிய வண்ணம் வருபவர்க்கெல்லாம் சலாம் வைத்தார். பிறகு தான் கொண்டு வந்திருந்த பெட்டியைத் திறந்து, பெட்டிக்குள் பத்திரமாகப் பாவித்து வைத்திருந்து கொடியை எடுத்து ஆயர் கரங்களில் கொடுத்தார், ஞானஸ்நானம் செய்வதற்காகத் தன் கரங்களில் ஒப்படைக்கப்படும்

குழந்தையைப் பெறுவதுபோல் கொடியைப் பெற்றுக் கொண்ட ஆயர், முழந்தாழில் நின்று ஜெபம் செய்து, மந்திரம் சொல்லிக் கொடியைத் திரும்பவும் காங்கிரஸ் கட்சிச் செயலாளரும் நகர சபைத் தலைவருமான கணேசய்யர் கையில் ஒப்படைத்தார்.

கொடியை ஒரு கணம் கரங்களில் ஏந்திய வண்ணம் நின்றிருந்த கணேசய்யர் கொடியை வேலாயுதம் கையில் ஒப்படைத்தார்.

வேலாயுதம் தன்கையில் தரப்பட்ட சங்கக் கொடியை வானுற ஓங்கி நிற்கும் கம்பத்தோடு இணைக்கப்பட்டிருக்கும் நூல் கயற்றோடு பிணைத்துக் கட்டலானார்.

கொடி பிணைக்கப்பட்டிருக்கும் கயறு சங்கரன் கரங்களில் ஒப்படைக்கப்பட்டது.

"அம்பி கொடியை ஏத்தலாம்" மேடையில் நின்றிருந்த நரசிம்ம பாரதி சங்கரனுக்குச் சொன்னார்.

அந்த மாலை மயங்கும் வேளையில் பட்டொளி வீசும் அந்தப் பதாகை படிப்படியாக ஏறி, கம்பத்தின் உச்சியில், மாலைத் தென்றலில் கம்பீரமாக அசைந்தாடியது.

வேலாயுதம் தனது முஷ்டியை உயர்த்தி "இங்குலாப் ஜிந்தாபாத்" என்று மலைக்கோட்டை எதிர் ஒலிக்கக் கோஷமிட்டார்.

"போலோ மகாத்மா காந்திக்கு ஜே" கணேசய்யர் முழக்கம் செய்தார்.

பேராயர் முழந்தாழில் நின்று "ஆமென்" சொன்னார்.

கொடியின் தரிசனத்தில் மெய் மறந்து நின்ற நரசிம்மபாரதி மேடையில் நின்றபடியே

"பறையருக்கு மிங்கு தீயர்
புலையருக்கும் விடுதலை!
பரவரோடு குறவருக்கும்
மறவருக்கும் விடுதலை"

என்கிற பாரதியின் பாடல் வரிகளைத் தனது இனிமையும் கம்பீரமும் நிறைந்த குரலில் பாடலானார்.

அந்த இனிய கீதத்தின் நாதம் மலைக்கோட்டையில் பட்டு எதிரொலித்தது.

பேரேடு மைதானத்தில் குழுமியிருந்த மக்களின் குரல் ஒலியும். கரவொலியும் நகரத்தின் ஆகம் வரையில் பரவி இன்ப நாதமாய்ப் பரிமளிக்கலாயிற்று.

பாகம் - 2

1

தோல் பதனிடும் தொழிலாளர் சங்கம் ஆரம்பித்தபின் இந்த இரண்டரை ஆண்டு காலத்தில் அம்மக்களின் அக வாழ்விலும் புறவாழ்க்கையிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன.

தோல் ஷாப்பு முதலாளிகளால் தொழிலாளர்களை முன்னைப் போல் கொத்தடிமைகளாக நடத்த முடியவில்லை. ப்ட்டினி கிடந்தால் அவர்கள் பணிக்குத் திரும்பி விடுவார்கள் என்ற முதலாளிகளின் எதிர்பார்ப்பெல்லாம் பகல் கனவாகிப் போய்விட்டது. அடிமைச் சாசனமான முறிச் சீட்டுக்கு மொத்தமாக முடிவு கட்டப்பட்டுப் போயிற்று. அடிமை முறிச்சீட்டு எழுதி ரிஜிஸ்தர் செய்வது என்று கேள்விப்பட்டாலே, அந்த நிர்வாகத்தின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசாங்கமே தோல்ஷாப்பு உடைமைகளை எச்சரிக்கவேண்டிவந்தது. பதறிப்போன முதலாளிகளுக்குச் சீட்டுக்களைத் தீ வைத்து எரிப்பது அல்லாமல் வேறுவழி இல்லை என்றாயிற்று.

தொழிலாளர் நலச்சட்டங்கள் மெதுமெதுவாகத் தோல்ஷாப்புகளில் அமல் செய்யப்படுகிறது என்பதன் அடையாளமாக, எல்லாத் தோல்ஷாப்புகளுக்கும் மற்ற தொழில் கேந்திரங்களைப் போன்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறையாக அறிவிக்கப்பட்டது. இந்த முடிவு பாதிரியார் பெப்பின் பெர்னாண்டோவுக்கு இதயத்துக்கினிமையான சேதியாக அமைந்திருந்தது. அவர் ஆண்டவனுக்கு நன்றி சொல்லிக் கொண்டார்.

வேலாயுதம், இந்த இரண்டு ஆண்டு காலத்தில் அவரது அரசியல் கோட்பாடு காரணமாக அரசாங்கத்தால் இரண்டு தவணை பாதுகாப்புக் கைதியாகச் சிறையிலடைக்கப்பட்டுப், பிறகு எந்தக் காரணமும் சொல்லப்படாமல் விடுவிக்கப்பட்டார்.

நகரத்தின் பிரபல வியாபாரியின் மகனான வேலாயுதம் மொத்தமாகத் தனது குடும்பத் தொழிலான வியாபாரத்தையும் ஸ்டுடியோவையும் விட்டுவிட்டு, நகரத்தில் பணிபுரியும் நகரசுத்தித் தொழிலாளர்களையும் நகரத்தில் இதர பிரதான தொழிலான ஸ்பென்ஸர் சுருட்டுக் கம்பெனி போன்ற அமைப்புகளில் பணிபுரியும் தொழிலாளர்களையும், அமைப்பு ரீதியாக ஒன்றுபடுத்துவதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார்.

ஆசிரியர் இருதயசாமியைப் பொறுத்த மட்டில் தோல் ஷாப்புத் தொழிலாளர் மத்தியில் அன்றாடம் ஏற்படும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கு நேரம் போதவில்லை என்பதால், திருச்சபையின் கீழ் தான் பணியாற்றிய ஆசிரியர் வேலையை ராஜினாமா செய்ய வேண்டியதாயிற்று. அவரது ஆசிரியரும் ஞான குருவுமான ஆயர் பெப்பின் பெர்னாண்டோவை மட்டும் சந்திப்பதையும் அவரிடம் ஆலோசனை பெறுவதையும் நித்திய கர்மமாகக் கொண்டிருந்தார்.

ஆனால், பங்குத்தந்தை தாழ்த்தப்பட்ட தீண்டப்படாத கிறிஸ்தவர்களுக்கு முன்னுரிமை தருகிறார் என்ற குற்றச் சாட்டை, அவரது எதிரிகளான வன்னிய குல குருவானவர்களும், சீசர்களும் குற்றச்சாட்டைச் சுமத்தியதோடு பொறாமை கொண்டு அவரை அந்தப் பேராயத்தினின்றும், வேறு பேராயத்துக்கு மாற்றுவதற்கான பணிகளையும் மறைமுகமாகச் செய்து கொண்டிருந்தனர். தோல்ஷாப்புத் தொழிலில் ஈடுபட்டிருந்த வன்னியக் கிறிஸ்தவ முதலாளிகளுக்குப் பேராயர் ஆசிரியர் இருதய சாமிக்கு ஆதரவு தருவதும், தீண்டப்படாத மக்கள்பால் அனுதாபம் காட்டுவதும் அறவே பிடிக்கவில்லை. எனவே, அவருக்கு எதிராகச் சதிசெய்யும் குருமார்களுக்கு ஆதரவாக நின்றதோடு, அவர்களும் அவரை அந்தப் பேராயத்தினின்றும் மாற்றுவதற்குமான பிரயத்தனத்தில் தீவிரமாக

ஈடுபட்டிருந்தனர். எனவே, தனக்கு விரோதமாகவும், ஏழைப்பட்ட தீண்டப்படாத கிறிஸ்துவ மக்களுக்கு எதிராகவும் வியூகம் அமைக்கப்படும் சதியைச் சரியாகவே கணித்திருந்த பெப்பின் பெர்னாண்டோ, திருச்சபையின் அன்பையும் ஆதரவையும் இருதயசாமி வெகுவிரைவிலேயே இழக்க நேரிடும் என்று எச்சரிக்கையும் செய்திருந்தார்.

ஓசேப்பு கூட அஸன் ராவுத்தர் ஷாப்பில் வேலை செய்யப் பிரியப்படாமல் மாப்பிள்ளை ஷாப்பில் கத்தியாளாகச் சேர்ந்திருந்தான். அருக்காணி மட்டும் என்ன காரணத்தாலோ அஸன்பாய் தோல்ஷாப்பில் எப்போதும் போல வேலை செய்து கொண்டிருந்தாள். ஆனால், எவ்வளவு கஷ்டமான வேலை இருந்தாலும், வாரத்தில் ஒரு நாளாவது ஓசேப்பைச் சந்திக்காமல், அவனை வம்புக்கிழுக்காமல் அவளுக்கு நித்திரை கொள்ளாது. ஆனால் ஓசேப்புக்கு அருக்காணியிடம் நின்று பேசுவதற்குக்கூட நேரம் கிடைக்கவில்லை. அவ்வளவுக்குச் சங்க வேலைகளில் மூழ்கிப் போனான்.

ஓசேப்பும், முனிசாமியும் மற்ற தோல் ஷாப்பு வாலிபர்களும் நகரத்தின் ஒதுக்கப்பட்ட பகுதிகளிலும், சேரிகளிலும் குடியிருக்கும் தோல்ஷாப்புத் தொழிலாளர்களை, முதலாளிகளின் அடியாட்களின் தொல்லைகளினின்றும் சில்மிஷங்களினின்றும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு கொடுக்கப்பட்டிருந்தது. அதோடு காந்திய வாதியான, நரசிம்மபாரதி காந்தியவழி முறையில் நடத்தும், இரவுப் பள்ளிக் கூடத்துக்கும் வாரம் தோறும் வேலாயுதம் நடத்தும் அரசியல் வகுப்பிலும் தவறாமல் பங்கு பெற வேண்டியிருந்தது. அத்துடன் முதலாளிகளின் அடியாட்களின் தொல்லைகளிலிருந்து, சேரிகளிலும், நகரத்தின் எல்லைகளிலும், தோல்ஷாப்புக்களின் ஓரங்களிலும் குடிசை போட்டுக் குடியிருக்கும் தோல்ஷாப்புத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பும், தெம்பும் தருவதற்காக வேண்டி, ஏனைய தோல்ஷாப்பு வாலிபர்களுடன் சேர்ந்து பல இரவுகள் அந்தப் பகுதிகளில் தங்க வேண்டியிருந்ததால் தாயம்மாளைக் கூடப் பார்க்க வர முடிவதில்லை.

சங்கரன், தோல்பதனிடும் தொழிற் சங்கத்தின் தலைவர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட போது, அந்தப் பதவி தனக்கு ஒரு

சோதனையாக இருக்கும் என்று கருதவில்லை. தனது வழக்குரைஞர் தொழிலுக்கு இடைஞ்சல் வராத முறையில் ஒடுக்கப்பட்ட அந்த மக்களுக்குச் சேவை செய்ய முடியும் என்று கருதினார். எல்லோரும் அப்படித் தான் கருதலானார்கள். ஆனால் சுந்தரேச அய்யருக்கு மட்டும் சந்தேகம் ஏற்பட்டிருந்தது. எனவே, சங்கரனை எதிர்பார்க்காமல் வக்கீல் தொழிலில் ஈடுபட்டதோடு, சங்கரனை நீதிமன்றத்துக்கு முன்னைப்போல வரவேண்டும், வழக்குகளை நடத்த வேண்டும் என்று வற்புறுத்துவதையும் குறைத்துக் கொண்டார்.

சங்கரனைப் பொறுத்த மட்டில், வக்கீல் தொழிலில் மட்டுமல்லாமல், தனது அன்றாட நடவடிக்கைகளிலும் கூடத் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருந்தது.

வழக்குகள் சம்மந்தமான கட்டுகளையும் பைல்களையும் மட்டுமே பார்த்துப் பழக்கப்பட்டுப் போன சங்கரனுக்கு அம்மக்களின் அன்றாடப் பிரச்சனைகளில் தலையிடுவது, தீர்வு காண்பது என்பது புது அனுபவமாக இருந்தது. ஆரம்ப நாட்களில், தனது வக்கீல் ஆபீஸில் அமர்ந்த வண்ணமே, பிரச்சனைகளோடு வரும் ஊழியர்களுக்கு ஆலோசனைகளை மட்டும் வழங்கி வந்த சங்கரன் நாளா வட்டத்தில் தோல்ஷாப்புகளின் வாசலிலும் போய் நின்று பிரச்சனைகளைச் சந்திக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு தோல்ஷாப்பிலும், குடியிருப்புக்களிலும், தோல்ஷாப்பு முதலாளிகளும், அவர்களது அடியாட்களும், அவர்களுக்குச் சாதகமாக நிற்கும் காவல்துறையும், புதுப்புதுப் பிரச்சனைகளையும், சிக்கல்களையும் கலகங்களையும் உருவாக்கி வந்தனர்.

ஒவ்வொரு தோல்ஷாப்பிலும் ஏற்படும் பிரச்சனைகள் வெவ்வேறு விதமாக இருந்தன. எனவே, ஒவ்வொரு தோல் ஷாப்பைப்பற்றியும் தனித்தனியாகக் கவனம் செலுத்திப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண வேண்டியிருந்தது. உணர்வு பெற்றுவரும் அம்மக்கள் சோர்வடையாமல் இருப்பதற்கும், அவர்களது உள்ளங்களில் தாங்களும் மற்றவர்களைப் போன்று மனித ஜீவன்கள் என்கிற உணர்வை

ஏற்படுத்துவதற்கும், பிரச்சனைகள் ஏற்படும் போதெல்லாம், சங்கரனே சம்மந்தப்பட்ட தோல்ஷாப்பின் முன்னால் பிரசன்னமாகிப் பிரசங்கம் செய்ய வேண்டியிருந்தது. மெகப்போனில் பேசியறியாத சங்கரன் தேவை காரணமாக மெகப்போன் பிரச்சாரம் செய்ய வேண்டியிருந்தது. இதெல்லாம் சங்கரனுக்குப் புதிய அனுபவங்களாக இருந்தன.

நாளாவட்டத்தில் சங்கரன், மாலை வேளைகளில், சங்க வேலைகளைக் கவனிப்பதற்காகத் தோல் பதனிடும் தொழிலாளர் சங்கத்துக்குப் போகும் போதெல்லாம், தனக்கு வேண்டிய உணவையும், தண்ணீரையும் கவனமாக எடுத்துக் கொண்டு போவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். காலம் காலமாக உதிரத்திலும், உள்ளத்திலும் ஊறிக்கிடக்கும் தீண்டாமை உணர்வை அவ்வளவு சுலபத்தில் சங்கரனால் உதறியெறிந்து விட முடியவில்லை. அம்புஜத்தம்மாளது மனச்சாந்திக்கு வேண்டியாகிலும் இந்த முறையைச் சங்கரனால் கடைப்பிடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தது.

சனாதன தர்மத்தால் சமூகத்தில் தீண்டப்படாதவர்களாக ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் அம்மக்களும் கூட ஆரம்பத் திசையில் சங்கரனோடு நெருங்கி வருவதற்கு அஞ்சினார்கள். தங்களால் அவருக்குத் தீட்டுப்பட்டு விடக்கூடாதென்று சனாதனத்தின் உச்சத்திலிருக்கும் அய்யர், சங்கரன் அக்ரகாரத்திலிருந்து சேரியை நோக்கி, சேரி மக்களை நோக்கித் தினம் தினம் வருவதை அவர்கள் ஒதுங்கி நின்றே பார்த்தார்கள். தெய்வக்குற்றம் வரும் என்று பீதியோடு ஒதுங்கிப்போனார்கள். அம்மக்களின் பிரச்சனையைத் தீர்ப்பதற்கான லட்சிய உணர்வுடன் வரும் தனக்கும் அம்மக்களுக்குமிடையில் பெரும் இடைவெளி ஏற்பட்டிருப்பதைக் காணுந்தோறும் சங்கரனுக்கு அது மனவேதனை தருவதாக இருந்தது. தனக்கும் அம்மக்களுக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் அகழ்வு இடைவெளி நீங்காத வரையில் தன்னால் அம்மக்களின் பிரச்சனைகளையும் உள்ளுணர்வுகளையும் புரிந்து கொள்வது இயலாத காரியம் என்பதையும் சங்கரனால் அனுபவ ரீதியாக உணர முடிந்தது. இந்த ஆழமான அகழ்வு, சங்கரனது உள்ளத்தில் பெரும் மனப்போராட்டத்தை உருவாக்கிவிட்டிருந்தது. எனவே தனது கல்லூரி நண்பனும் மாணவர் இயக்க முன்னோடியுமான

சுப்ரமணிய சர்மாவுடன் திரும்பவும் தொடர்புகொண்டு பிரஸ்தாபித்தபோது "சங்கரன், உனக்குள் ஏற்படும் மனப்போராட்டமானது இயற்கையானது. நியாயமானதும் கூட. ஆனால், உனக்கும் அம்மக்களுக்கும், இடையில் ஏற்பட்டிருக்கும் இடைவெளி நிரப்பப்படாவிட்டால், அம்மக்கள் உன்னை அவர்களில் ஒருவனாக ஏற்றுக் கொள்ளாதவரையில் நீ அம்மக்களை வழி நடத்த முடியாது. வெறும் போலித்தனமான உறவாக மட்டுமே இருக்க முடியும். உனது அத்தனை முயற்சியும் வீணாகிப் போய்விடும். அவர்களில் ஒருவனாக நீ மாற வேண்டும்.

ஆனால் இந்த மாற்றம் ஒன்றிரண்டு நாட்களில் அல்லது மாதங்களில் நிகழ்ந்து விடக்கூடிய ஒன்று அல்ல. அதுவே ஒரு நீண்ட போராட்டம், உன்னுள்ளும் அம்மக்கள் மத்தியிலும் நடைமுறையில் உள ரீதியில் நடைபெற வேண்டிய நீண்ட போராட்டம் . அந்தப் போராட்டத்தில் நீ வெற்றி பெறுவாய்" என்று சங்கரனுக்குப் பதில் போட்டிருந்தார்.

உண்மையில் சுப்ரமணிய சர்மா சொன்னதே போல், அந்த மாற்றத்துக்கான போராட்டம் நீண்ட சிரமமான போராட்டமாகப்பட்டது. மழைக்காலம் வந்துவிட்டால், மலமும், சிறு நீரும் கலந்து, சகதியாகவும் குட்டையாகவும் தேங்கி, சகிக்க முடியாத துர்கந்தம் வீசும் சவரியார் பாளையம் சேரியின் குறுகல் மறுகலான தெருக்களையும் குடிசைகளையும் கடந்து, சங்க ஆபீசுக்குப் போவது என்பதே முதலில் சங்கரனுக்குச் சோதனையாக இருந்தது. மூச்சைப் பிடித்துக் கொண்டு தெருவில் நடக்க வேண்டியிருந்தது. சங்க ஆபீஸில் இருக்கும் போதும், காற்றில் கலந்து வரும் வாடை சகிக்க முடியாததாக இருக்கும். அக்ரஹாரத்தின் சுத்தக்காற்றை சுவாசித்த சங்கரனால், மலக்கலவையும், சிறு நீர்க்கழிவும் கலந்த துர்வாடையையே சுவாசிக்க வேண்டியிருந்தது. வீட்டுக்குப் போய் உணவருந்தும் போதும் கூட நாசியில் சேரியின் துர்கந்தம் தேங்கிக் கிடப்பது போன்ற உணர்வு ஏற்பட்டு ஓங்கிரிக்க வரும் பல நாட்கள் பரிமாறப்பட்ட உணவை அப்படியே வைத்துவிட்டுப் பட்டினியாகப் படுக்கப் போனதுண்டு.

ஆனால் தோல்ஷாப்பு நனைவுக்குழிகளில், காலத்தைக் கழித்ததன் அடையாளமாகக் கைகளிலும் பாதங்களிலும் ரணமும் வெடிப்பும் ஏற்பட்டுக் குஷ்டரோகிகள் போல் ஆகிப்போன தோல்ஷாப்பு பெண்களும் ஆண்களும் கொண்டு வரும் மொச்சைக் கொட்டைப் புழுக்களையும், தோல்கறி கலந்த குச்சுக்கிழங்கு அவியலையும், வேலாயுதமும், அவரது தோழர்களும் எந்தவிதமான அசூயையும் இல்லாமல் வாங்கி அருந்துவதும், அவர்களுடன் வேலாயுதம் இரண்டறக்கலந்து நிற்பதும் சங்கரனுக்கு வியப்புத் தரும் நிகழ்ச்சிகளாக இருந்தன. வேலாயுதத்தைப் போன்று தன்னை மாற்றிக் கொள்வது அவ்வளவு எளிதில் இயலாத காரியம் என்று சங்கரனுக்குப்பட்டது. எனவே, தான் பொறுப்பேற்றிருக்கும், தலைவர் பதவியை ராஜினாமா செய்துவிட்டுத் திரும்பவும், தனது தகப்பனாரது ஆபீசுக்கு வக்கீலாகப் போய்விடவேண்டும் என்கிற உணர்வு சங்கரனை அடிக்கடி அலைக்கழிக்கும் போதெல்லாம் நிர்க்கதியான அப்பாவியான அம்மக்கள் சங்கரன் பால் பாராட்டும் பாசமும், பரிவும், மரியாதையும் நினைவுக்கு வரும். மனம் பேதலிக்கும் சங்கரனுக்கு அது ஒரு நீண்ட போராட்டமாக இருந்தது.

ஆனால், காலமும் சூழ்நிலையும் சங்கரனை அவரது அக்ரஹார நிலைப்பாட்டினின்றும் சன்னஞ்சன்னமாகக் கரைத்துச் சங்கரனை அம்மக்களுடன் இரண்டறக் கலப்பதற்கான நிலைமையையும் சூழ்நிலையையும் மாற்றத்தையும் காலம் உருவாக்கிக் கொண்டிருந்தது.

நாளாவட்டத்தில் சங்க வேலைகள் காரணமாகச் சங்கரன் இரவு வெகு நேரம் வரையில் சங்கக் கட்டிடத்திலேயே தங்க வேண்டியிருந்தது. காற்றில் கலந்து வரும் துர்வாடையும் , வந்து போகும் தோல்ஷாப்புத் தொழிலாளர்கள் உடம்பிலிருந்து வெளிப்படும் சகிக்க முடியாத துர்கந்தமும் சங்கரனுக்குப் பழக்கப்பட்டுப் போனது. சூழ்நிலையாலும், காலமாற்றத்தாலும் அம்மக்கள் பால் அவருக்கு ஏற்பட்ட அசூயை குறையலாயிற்று.

அந்த மக்களும், சன்னஞ்சன்னமாகச் சங்கரனை நோக்கி மனப்பூர்வமாக அவர் அருகாமையில் வரத் தொடங்கியிருந்தார்கள். நாளாவட்டத்தில் இடை வெளி குறையவாரம்பித்தது.

2

"**தா**யழி, பறப்பயகளுக்கு இருக்க மப்பைப் பாத்தியளா, மாமூ, ஆட்டைக்கடிச்சு, மாட்டைக்கடிச்சு மனிசனையே கடிக்கிற கதையா ஏற்பட்டுப் போச்சு"

என்று தன்னுள் மூண்ட கோபத்தையும் ஆத்திரத்தையும் நாசி சிவக்க அஸன் ராவுத்தரைப் பார்த்து வெளிப்படுத்தினார், நத்தம் ரோடு நாயுடு ஷாப் மொதலாளி வரதராசு நாயுடு

ஜென்ம ஜென்மமாக நடைபெறாத சம்பவம் நடந்து விட்டதாகத் துடித்துப்போனார் வரதராசு நாயுடு.

"ஆத்திரப்படாதிய நாயுடுவாள். அல்லாத்துக்கும் ஒரு முடிவு கட்டத்தானே நாம அல்லாம் கூடியிருக்கம்" வழக்கம்போல நரை திரைந்த தனது தாடியை வருடிவிட்ட வண்ணம் நாயுடுவைச் சமாதானம் செய்வது போல் நாயுடுவையும், தோல்ஷாப்பு முதலாளிகளைப் பார்த்துச் சொன்னார், அஸன் பாய்.

"இன்ஸா அல்லா, அல்லாம் நல்லபடியா நடக்க அல்லா அருள் புரிவான்." என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டார்.

"அல்லாம், இந்த வக்கீல் பாப்பாரப் பய சங்கரன் செய்யற வேலைங் காணம். அவன் வரப்போய் தானே இந்தப் பறநாய்களுக்குக் கொழு கொம்பு ஏறிப்போச்சுது"

கிறிஸ்தவ வன்னியர் அமைப்புத் தலைவரும் சகாய மாதா தோல்ஷாப்பு உரிமையாளருமான வேத சிரோன்மணி பேசலானார்.

திருச்சபையில், ஆயர் பெப்பின் பெர்னாண்டோ ஆசிரியர் இருதய சாமிக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தைக்

கடுமையாக விமர்சனம் செய்து கொண்டிருப்பவர் வேத சிரோன்மணி. சபையில் பேராயரை மாற்ற வேண்டும் என்கிற கோஷ்டியின் தலைவர் அவர்.

"பாப்பான் கீப்பானென்டெல்லாம் சூனா மானாக்காரன் மாதரியெல்லாம் பேசாதீயும் அய்யர் கோவிச்சுக்கப் போறாரு" என்று அய்யர் சாப்பு முதலாளி, சுந்தரம் அய்யரைப் பார்த்தவண்ணம் ஹாஜியார் வேத சிரோன்மணியை எச்சரிப்பது போல் பேசவும்

"நான் ஏன் கோச்சுக்கப் போரேன் ஹாஜியார்வாள். அந்த சங்கரன் அக்ராஹரத்துலே பிறந்திருக்கானே அல்லாமல் அவன் பிராமணனோட சேத்தி கெடையாது. மிலேச்சன். அவனைப் போய் அய்யரிண்ணு சொன்னா நாக்கு அழுகிப் போயிரும். சுந்தரேச அய்யரும், மதுரை வைத்தியநாத அய்யனோடு சேர்ந்திண்டு இவனுக்குத் தாளம் கொட்டறார்" என்று தனது அடங்காத கோபத்தைக் கொட்டித் தீர்த்தார் சுந்தரம்.

இவ்வாறு நகரத்தில் உள்ள தோல்ஷாப்பு முதலாளிகள் அனைவரும் மாவட்ட கலைக்டரால் கூட்டப்பட்ட முத்தரப்புக் கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்த வேகத்தில் அஸன்ராவுத்தர் மாளிகையில் கூடி தங்களது ஆத்திரத்தைக் கொட்டித் தீர்த்துக் கொண்டிருந்தனர்.

ஜில்லாக்கலைக்டர் அனந்த சயனம் அய்யங்கார், இப்படி ஒரு முத்தரப்புக் கூட்டத்தைக் கூட்டியதே தோல்ஷாப்பு முதலாளிகளுக்குப் பிடிக்காத விஷயம். நாங்கள் முதல் போடுகிறோம். தொழிலாளர்கள் கூலிக்காக வேலை செய்கிறார்கள். இதில் மூன்றாவது தரப்பான அரசாங்கத்துக்கு என்ன வேலை. இது அநாவசியமான தலையீடு என்பது தோல்ஷாப்பு உடைமைகளின் போக்காக இருந்தது. இருந்தாலும் நாளைப் பின்னாளில், அரசாங்கத்தின் தயவை நாடிப் போகவேண்டி இருக்கும் எடக்குமுடக்காகத் தொழிலாளர் சட்டத்தைப் பயன்படுத்தலாம் என்கிற காரணத்தால், பீதியாலும் முதலாளிகள் கலைக்டர் துரை அனந்த சயனம் அய்யங்கார் ஐ.சி.எஸ் கூட்டிய முத்தரப்புக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு வேண்டா வெறுப்பாக

ஒத்துக் கொண்டிருந்தனர். ஆனால் கூட்டத்தில் இப்படி ஒரு அநியாயம், அசம்பாவிதம் நடக்கும் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை. ஜில்லாக் கலைக்டரும், அரசு அதிகாரிகளும் தங்களை இப்படி அவமானத்துக்கு ஆட்படுத்துவார்கள் என்று தோல்ஷாப்பு முதலாளிகள் எதிர்பார்க்கவில்லை.

"சங்கரனுக்குத் தான் புத்தி கெட்டுப்போனதென்றால், இந்த கலைக்டருக்குமா புத்தி பேதலிச்சுப் போக வேணும்" வரதராசு நாயுடு அங்கலாய்த்தார்.

"லண்டன் மாநகர் போய் ஐசிஎஸ் படிச்சிருக்கான், இந்த கலெக்டர். பார்த்தியளோ மிலேச்ச ஜனங்களோட பழகி ஆச்சாரத்தையே மறந்திட்டான். மாம்சம் கூடச் சாப்பிட்டிருப்பான். அதனாலேதான் அவனுக்கும் வெள்ளைக்காரன் வக்கரபுத்தித் தானே இருக்கும். பாப்பானையும், பறையனையும் ஒண்ணா நெனக்கிறான்" என்று அய்யர் ஷாப்பு முதலாளி ஆவேசமாகப் பேசினார்.

தானும் பிராமணன், கலைக்டரும் பிராமணன் என்பதால், சங்கம் வைத்ததற்குப் பிறகு, தீண்டப்படாத தோல்ஷாப்புத் தொழிலாளர்களால் சனாதனத் தன்மைக்கு ஏற்பட்டிருக்கும் ஊனத்தையும், அவமதிப்பையும் கலெக்டரிடம் எடுத்துச் சொல்லித் தொழிலாளர்களின் கோரிக்கைகளை முறியடித்துவிடலாம் என்கிற நப்பாசையுடன் போன சுந்தரய்யர் இப்படி அவமானப்பட்டுத் திரும்புவார் என்று எண்ணவில்லை.

"நாம இந்தக் கூட்டத்திலே கலந்துக்க மாட்டோமிண்ணு ஆரம்பத்திலேயே கலைக்டருக்குத் தாக்கீது அனுப்பியிருக்க வேணும்"

வேதசிரோன்மணி சொன்னார். இவ்வாறு தோல்ஷாப்பு முதலாளிகள் தங்களது மனப்புழுக்கத்தைக் கொட்டித் தீர்த்தார்கள். சாதாரணமாகத் தோல் உற்பத்தியாளர் சங்க முதலாளிகள் மத்தியில் ஒருவரை ஒருவர் சுழுத்தை நெரித்துக்கடித்துக்குதறும் அளவுக்குப் போட்டியும் பொறாமையும் இருந்த போதும் அன்று சப்-கலைக்டர்

ஆபீஸில் நடந்த சம்பவம் அவர்கள் அனைவரையும் ஒன்று படுத்தியிருக்கிறது.

அந்த நகரத்தில் தோல்பதனிடும் தொழில் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதலாக நடைபெறாத சம்பவம் அது.

அதாவது, தோல் பதனிடும் தொழிலாளர் சங்கம், சம்பளம் மட்டுமல்லாமல் தொழிலாளர் சட்டம் சம்மந்தமான பல முக்கிய பிரச்சனைகள் பற்றித் தீர்மானம் நிறைவேற்றியதுடன் நியாயமான இந்தச் சட்டங்கள் தோல்ஷாப்புக்களில் உடனடி நடைமுறைப் படுத்தப்படவில்லையென்றால், பெரும் போராட்டத்தைச் சந்திக்க வேண்டிவரும் என்று முதலாளிகள் அமைப்புக்கும், அரசுக்கும் சம்மந்தப்பட்ட அரசு நிர்வாகத்துக்கும் தெரிவித்திருந்தது. அப்படியான சூழ்நிலையை நோக்கிச் சம்பவங்கள் நகர்ந்து கொண்டிருந்தன.

அரசு உளவுத் துறையின் வாயிலாக உண்மை நிலைமையைக் கண்டறிந்த அரசு மீண்டும் ஒரு போராட்டம் நிகழ்வதைத் தடுக்கும் வகையில் நடவடிக்கை கைக்கொள்ளுமாறு ஜில்லா கலெக்டருக்கே உத்தரவு போட்டிருந்த காரணத்தால், தொழில் சமரசம் ஏற்பட வேண்டும் என்கிற முறையில் கலெக்டர் சம்மந்தப்பட்ட அரசு அதிகாரிகள், முதலாளிகள், தொழிலாளர்கள் பிரதிநிதிகள் அடங்கிய முத்தரப்புக் கூட்டத்தைக் கூட்டியிருந்தார்.

முத்தரப்புக் கூட்டத்தில் வழக்கம் போல், தொழிலாளர் பிரதிநிதிகளை மிரட்டிப் பணியவைத்துவிடலாம் அதிகாரிகளும் முதலாளிகள் பக்கம் நிற்கத்தான் போகிறார்கள் என்ற நம்பிக்கையுடன் அவர்கள் ராஜத்தந்திரமாக ஏராளமான தோல்ஷாப்பு உரிமையாளர்களும் கலெக்டர் ஆபீசுக்குப் போனார்கள். சட்டப் பிரச்சனைகள் ஏதாவது ஏற்பட்டால், ஆங்கிலத்தில் கலெக்டர் துரையுடன் விவாதிப்பதற்காக விசேஷமாக அந்தரம் அய்யரையும் கூட்டிக் கொண்டு போனார்கள்.

சாதாரணமாக, ஹிந்து, முஸ்லிம்கள், கிறிஸ்தவன், வன்னியன், ஆந்தியன் என்றெல்லாம் பிரிந்து நின்று யார் வழுக்கை யார் தெரிந்துக் கொள்வது என்கிற தொழில் [illegible]

போட்டியில் ஈடுபட்டிருக்கும் தோல்ஷாப்பு முதலாளிகள், தொழிலாளர்கள் ஒன்றுபடுவதைக் கண்டு அஞ்சி, அப்போதைக்கு ஒன்றுபட்டிருந்ததோடு, நாளை அரசாங்கத்தின் போக்கு, தங்களுக்கு விரோதமாகப் போய்விடக்கூடாது என்கிற விவேகம் காரணமாகவும், தோல்ஷாப்பு முதலாளிகள் அரசு ஏற்பாடு செய்திருந்த முத்தரப்புக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக சப்-கலைக்டர் ஆபீசுக்குப் போனார்கள்.

கூட்டம் நடைபெறும் அறையில், கால் வைத்தபோது, வரதராசு முதலாளியும் வேதசிரோன்மணியும் பதறிப் போனார்கள். நாயுடுவுக்கு நரம்பு புடைத்து உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரையில் வியர்வை அரும்பி அருவியாய் வடியலாயிற்று.

"என்ன பாய் இந்தக் காட்சியப் பாக்கறத்துக்கா என்னைக் கூட்டியாந்தீய" அஸன் ராவுத்தரைப் பாத்துக் கோபமாக நாயுடு கேட்டபோது

"இன்ஸா அல்லா, கோபப்படாதீங்க மாமூ" என்று வழக்கம் போல் தாடியை வருடிய அஸன் பாய் அறையைப் பார்த்துத் திகைத்துப் போனார்.

மேல்ஜாதிக்காரர்களின் வாடையே தட்டுப்படாத தூரத்தில் கைகட்டி வாய் புதைத்துக் கூனிக் குறுகித் தெண்டனிட்டுப் பணி செய்யும் பறையர்களான அந்த அடிமைத் தொழிலாளர்கள் கலைக்டருக்கும் மற்றைய அதிகாரிகளுக்கும் சமமாக நாற்காலி போட்டு உட்கார வைக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படி ஒரு காட்சியை முதலாளிகள், அவர்களது வாழ்நாளில் என்ன அவர்களின் மூதாதையர்களின் வாழ்நாளிலும் கண்டது கிடையாது.

அதாவது வக்கில் சங்கரன் தலைமையில் வந்திருக்கும் தொழிலாளர்கள், ஒரு ஷாப்புக்கு ஒரு பிரதிநிதி என்ற முறையில் அங்கு உட்கார்ந்திருக்கிறார்கள் நடுநாயகமாக ஜில்லாக் கலைக்டர் அனந்தசயனம் ஐசீஎஸ் உட்கார்ந்திருக்கிறார்.

இந்த அநியாயத்தைச் சகித்துக் கொள்ள முடியாத சுந்தரம் அய்யர், சங்கரனை வெளியே கூப்பிட்டு மிகவும் ரகஸ்யமாக

"அம்பி! சங்கரா இது நல்லா இருக்கா என்ன அநியாயம்" என்று கேட்டபோது

"அய்யர்வாள் என்ன சொல்லப் போறேள்" என்று கேட்பது போல் சங்கரன் பார்க்கவும்

"பிராமணப் புள்ளையாண்டான் தீண்டப்படாத இந்த சண்டாள ஜனங்களோட சரி சமானமா உட்காரலாமோ? சனாதானம் என்ன ஆவாது" உரிமையுடன் கண்டிப்பது போல் சொன்ன போது

"வக்கீல்சாமி நாங்களெல்லாம் பதை பதைச்சுப் போய் நிக்கறம்" வேத சிரோன்மணி சங்கரனைப் பார்த்துச் சொன்னார்.

"சாமி, அந்தப் பையன் கிட்டே என்ன கேக்கறது. அவர்தானே இம்புட்டுக்கும் காரணம்? இந்தக் கூட்டத்துக்கு ஏற்பாடு பண்ணின கலைக்டர் துரையைப் போய்க்கேளுங்க என்ன அநியாயம்."

நாயுடு ஷாப் முதலாளி, தோல் வர்த்தகர்கள் சங்கச் செயலாளர் மத்தூண் மைதீனைப் பார்த்துக் கோபமாகச் சொன்னார்.

இவர்கள் பேசுவதையும், ஆத்திரப்படுவதையும் மௌனமாகக் கேட்ட வண்ணம் நின்றிருந்த சங்கரன்,

"அவாளும் மனித ஜென்மங்கள் தான் " என்று சாதாரணமாகச் சொல்லிவிட்டுக் கூட்டம் நடைபெறும் அறைக்குள் போய் கலைக்டர் அனந்தசயனத்தோடு தொழிலாளர் பிரச்சனை சம்மந்தமாகப் பேசவாரம்பித்தார்.

தனது முதலாளியுடன், இதர தோல்ஷாப்பு உடைமையாளர்களையும் பார்த்த போது, உதிரத்தில் ஊறிப்போன பழக்கம் காரணமாக, மினிசாமி தனது

இருக்கையினின்றும் எழுந்து கும்பிட முனைந்த போது, ஓசேப்பு அவன் கையைப் பிடித்து இழுத்து உட்கார வைத்து முறைத்துப் பார்க்கவும் மினிசாமி மௌனமாகத் தலைகுனிந்து கொண்டான்.

வேறு வழியில்லாமல் முதலாளிகளின் பிரதிநிதியாகச் செயல்படும் அய்யர் ஷாப்பு முதலாளி சுந்தரம் அய்யர்,

சங்கரன் தவிர ஏனைய தொழிலாளர் பிரதிநிதிகள் அந்த அறையினின்றும் வெளியேற வேண்டும் என்று கலைக்டரைப் பார்த்துக் கேட்டார்.

"இது முத்தரப்பு பேச்சு வார்த்தைக்கான கூட்டம். அரசாங்கத்தோட அழைப்பின் பேரில் தான் வந்திருக்கா. அவாளை வெளியேத்த வேண்டியதுக்கான காரணம் சொல்லுங்கோ, அரசாங்கத்தோட ஆணையை நான் மீற முடியாது"கலைக்டர் சொன்னார்.

அவ்வளவு தான். இவ்வளவு நேரமும் உடம்பு வெட்வெடக்க அறைக்கு வெளியே நின்றிருந்த நாயுடு ஷாப்பு முதலாளி, முகத்தில் ஆத்திரமும் கோபமும் கொந்தளிக்கக் கலெக்டரிடம் வந்து

"நாங்க இந்த பறப்பயல்களோட சரி சமமா ஒக்கார முடியாது சாமி. இது இந்த ஜென்மத்தில் நடக்காத காரியம் கலெக்டரய்யா சிங்காரிச்சு மூக்கறுத்ததாட்டம் எங்களைக் கூப்பிட்டுக் கேவலப்படுத்திட்டீகளே" என்றவர் ஹாஜியாரைப் பார்த்து

"அஸன்பாய், மானங் கெட்டதனமா ரோஷம் இல்லாம இனியும் மெனக்கிட்டு நிக்காதீய. வாங்க போவலாம்" என்று கர்ஜித்தவாறு அறையை விட்டு வெளியேறினார்.

"எங்களால் இந்தக்கூட்டத்துலே கலந்துக்க முடியாது" மக்தூண் மைதீன் சொல்லவும் தோல்ஷாப்பு முதலாளிகள் அத்தனை பேரும் சப்-கலெக்டர் ஆபீஸை விட்டுக் கோபமாக வெளியேறினார்கள்

அவ்வாறு கோபாவேசத்துடன் வெளியேறிய தோல்ஷாப்பு முதலாளிகள் அஸன் ராவுத்தர் மாளிகையில் கூடியிருக்கிறார்கள்.

தோல்ஷாப்புத் தொழிலாளர்களையும், சங்கப் பிரதிநிதிகளையும் பழி தீர்த்துக் கொள்ள வேண்டும் என்கிற ஆத்திரமும் கோபமும் ஒவ்வொரு முதலாளியினுடையவும், பேச்சிலும் செயலிலும் வெளிப்பட்டது.

அவமானத்தை அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஜாதி வெறியும் ஆதிக்க தலைக்கேற பழிவாங்கத் துடித்தார்கள்.

3

அன்று ஆடித்திரு நாள்....

தன் நெஞ்சின் மீது விழும் உலக்கை அடியின் உக்கிரம் தாங்காமல் அந்தப் பிரதேசமே எதிரொலிக்கும் படியாக அந்தப் பன்றி மரண ஓலம் எழுப்பிக் கொண்டிருந்தது.

வேட்டியைத் தார்ப் பாய்ச்சிக் கட்டி, சிலம்பு விளையாடப் போகிறவனைப் போல் உலக்கையும் கையுமாக நின்ற ஓசேப்பு, தனது பலத்தையெல்லாம் கூட்டி, அந்தப் பன்றியைத் தாக்கிக் கொண்டிருந்தான்.

பன்றி எப்போது ஜீவனை விடப்போகிறது என்கிற ஆர்வத்தில், பன்றியின் ஜீவ மரண ஓலத்தை ரசித்த வண்ணம், தோல் ஷாப்பு வாலிபர்களும், கிழவர்களும், பெண்களும் குஞ்சும் குளுவானும், பன்றி கிடத்தப்பட்டிருக்கும் இடத்தைச் சுற்றிக் குளத்தங்கரையிலும், சாலையோர மரத்தின் அடியிலும் ஈயத்தூக்குப் போணியும் மண் சட்டியுமாக உட்காந்திருக்கின்றனர்.

சற்றுத்தள்ளி வேறு ஒரு பகுதியில் மினிசாமியும், வேறு சில வாலிபர்களும் பன்றியை வாட்டி, வெட்டிக் கூறு போடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கின்றனர்.

"ஏய், பாத்து அடிடா டோய். கட்டு அவுந்ததோ மிருகம் எந்திரிச்சு ஓம் வெதரப்பதம் பாத்துப் போடும்" அழுக்குப் படிந்த தன் வேட்டியை அவிழ்த்து, கூதலுக்கும், மலைச்சாரலுக்கும் அஞ்சி முக்காடாய்ப் போர்த்தியபடி பாதை ஓரத்தில் நொங்கிப்போன அலுமினியத் தூக்குப் போணியும் கையுமாக உட்காந்திருந்த கசமாடன் ஓசேப்பைப் பார்த்து வேடிக்கையாகச் சொன்னான்.

"குட்டம் புடிச்சு ஒக்காந்து போன பொறவும் ஒம் குசும்பு போகலை பாத்தியா" பக்கத்தில் நின்ற பாத்திமாக் கிழவி கசமாடனைப் பார்த்துச்சொன்னாள்.

கசமாடன், தோல்ஷாப்புச் சுண்ணாம்புக் குழியிலும், கடுக்காய்த் தொட்டியிலும் நின்று நின்று உடம்பே ரணமாகிக் குஷ்டரோகி போல் ஆகிப் போனான். இருந்தாலும் வாழ்க்கையின் மீது உள்ள ஆசை அவனை வாழ விட்டுக் கொண்டிருக்கிறது.

கசமாடன் சொன்ன கேலி வார்த்தையெல்லாம் கர்மமே கண்ணாகப் பன்றியின் உயிரைப் பறிப்பதற்கான கடும் முயற்சியில் ஈடுபட்டிருந்த ஒசேப்பின் கவனத்தில் படவில்லை.

உடம்பிலும் நெற்றியிலும் அரும்பி நின்ற வியர்வையைத் துடைத்து விட்டபடியே ஒசேப்பு

"வக்காளி பண்ணி எம்புட்டு அடி வாங்குது பாத்தியா. சுலபத்திலே சாவாது போலிருக்கு" பக்கத்தில் குத்துக்கால்போட்டு உட்காந்தருந்த மச்சக்காளையிடம் சொல்லவும்

"ஹூம், அல்லாத்தையும் மிரட்டிக்கிட்டுச் சண்டியராட்டமில்லே. இந்தப் பண்ணி பீங்காட்டுலேயும் ஓடைக்காட்டுலேயும் தனிக்காட்டு ராசாவா அலைஞ்சுது" என்று தன் தாடியில் கோர்த்து நின்ற பேனை எடுத்து நகக்கண்களுக்கிடையில் வைத்து நசுக்கிக் கொன்ற வண்ணம், பன்றியின் பூர்வீகம் பற்றியும் வம்சவழி பற்றியும் பேசலானான் மச்சக்காளை.

ஒசேப்பு மறுபடியும், பன்றியை உலக்கையால் பலமாகத் தாக்கவும், பன்றியின் ஜீவன் நின்று போய்விட்டது.

ஒசேப்பு கவுச்சி சாப்பிட்டு வெகு நாளாகிறது. மட்டுமல்லாமல் அவனது வளர்ப்புத் தாயான சின்னத் தாயம்மாளுக்கு உள்மூலம் வேறு. பன்றிக்கறி சாப்பிட்டால் உள்மூலம் மட்டுப்பட்டுவிடும் என்று நாட்டு வைத்தியன் வேறு சொல்லி வைத்திருந்தான்.

எனவேதான், வேலுக்குரவனிடம், பேரம் பேசி, விலை அத்துப்படியான உடன் பன்றியைப் பிடிப்பதற்கும், அதைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்கும் அவனும் அவனது சகாக்களும் வேலுக் குரவனுடனும், அவனது வளர்ப்பு நாய் காட்டுக் கருப்புடனும் உச்சிப்போது வரையில் மெனக்கிட வேண்டியிருந்தது அவ்வளவுக்குப் பன்றி அவர்களையும் காட்டுக் கருப்பையும் மிரட்டிப்போக்குக்காட்டித் தப்பித்துக்கொண்டிருந்தது. கடைசியில் காட்டுக் கருப்பு மட்டும் பன்றியின் பின்னங்காலைப் பிடித்து பன்றியை மறித்துப் போடவில்லை யென்றால் தனது கூரிய முன்பற்களால் அவர்களில் யாரையாவது குத்திக் குதறியெறிந்து தப்பித்துப்போயிருக்கும்

பன்றி அடிபடுவதையும் கொலை செய்யப்படுவதையும் அமைதியாகப் பார்த்தபடி மௌனமாக உட்காந்திருந்த அமலோர்ப்புதத்தின் கணவன் பெஞ்சமின்,

"நேரம் ஆவிக்கிட்டுப் போவுதில்லா கருக்கா பண்ணிய அறுத்துக் கூறு அடிங்கப்பா" என்று ஓசேப்பையும், மற்றவர்களையும் பார்த்துச் சொன்னான். அவனுக்குப் பன்றியின் காதுகளைச் சுட்டுச் சாப்பிடுவதில் மெத்த பிரியம்.

பெஞ்சமின் பன்றியின் காதுகளுக்காகச் சிறுவனைப் போல் எச்சில் வடிய உட்கார்ந்திருப்பதைப் பார்த்து எரிச்சல் பட்ட அமலோற்புதம்

"ஏய், மனிசா இங்க பாருய்யா விடிஞ்சதும் விடியாததுமா வாய் கூட கொப்புளிக்காம ஒட்டாக்குடியிலே நாய் காத்துக் கெடக்காப்புலே கெடக்கயே ஒனக்கு வெக்கமாயில்லே கூறு போட்டாத்தான் அம்மறைக் கூப்பிட்டு விடுவாகல்ல" என்று கடிந்து கொள்ளவும்

"அட வுடுக்கா மச்சான் எதுக்குக் காத்துக் கெடக்காருன்னு அல்லாத்துக்கும் தெரியும் கண்டுக்காம போவியா மனிசனை அசிங்கம் படுத்துரய" பக்கத்தில் நின்ற மச்சக்காளை சொல்லவும், பெஞ்சமின் அசடு வழியச் சிரித்துக் கொண்டான்

ஓசேப்பும் மற்ற வாலிபர்களும், பன்றியின் உடலைக் காவடியாகத் தூக்கிக் கொண்டு போய் நெருப்பில் வாட்ட ஆரம்பிக்கவும் பன்றியின் ரோமமும், வாரும் கருகி ஒருவித துர்கந்தம் அந்தப் பிரதேசம் முழுவதும் பரவிப் படர்ந்தது. பெஞ்சமின் அந்த துர்கந்தத்தை மிகவும் சுவாரஸ்யமாக உள்வாங்கி மகிழ்ந்தான்.

ரோமக்கற்றை உருகி வெளுப்பும் கருப்புமாகத் தென்படும் பன்றியின் மார்பிலும், நெஞ்சிலும்., ஓசேப்பு மஞ்சள் தடவி பன்றியின் உடலுக்கு மெருகூட்டவும், பன்றியின் உடல் மினுமினுப்புக் கொடுத்தது. அப்போது அவனுக்கு அருக்காணியின் நினைப்பு திடீரென்று ஏற்பட்டது. அவளது மஞ்சள் பூசிய முகம் இப்படித்தான் பளபளக்கும்.

அப்போதுதான் ஒப்பாரி வைத்தது போல்

"ஓசேப்பண்ணே! நா என்னத்தைச் சொல்வேன். நல்ல நாளும் பொழுதுமா இந்த அநியாயம் பண்ணுதானே சண்டாளன்" என்கிற பெண்ணின் அபயக் குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான்.

கடுக்காய் இடிக்கும் சக்கிலியப்பெண் செல்லி, தலைவிரி கோலமாக வடக்கே இருந்து அவளை நோக்கி ஓடி வந்து கொண்டிருந்தாள்.

நெற்றிக்குமேல் கையை வைத்து அவளைப் பார்த்த பெஞ்சமின்

"அட நம்ம செல்லிப் பொண்ணுப்பா எதையோ பறி கொடுத்தாப் போல ஓடியாருது என்னன்னு கேளுப்பா" பெஞ்சமின் ஓசேப்பைப் பார்த்துச் சொன்னான்.

ஒருவித அசூயையுடன் செல்லி வரும் திக்கைப்பார்த்த மச்சக்காளை "சக்கிலிய முண்டைக்குப் பறத் தெருவுக்குள்ளே என்ன வேலை. எம்புட்டுத் தகிரியம் இருந்தா அம்ம பயவளை மொறை சொல்லிக் கூப்பிடுவா? அவளை அங்ஙனயே நிக்கச் சொல்லுங்கப்பா" என்று கோபமாகச் சொன்னான்.

அவனுக்குத் தனது பறைச்சாதி சக்கிலிய ஜாதியைவிட உயர்ந்த சாதி என்கிற மாயை.

இப்படி அவன் சொல்லவும் பெஞ்சமின் அவனை முறைத்துப் பார்த்தான். ஒருவித கைப்புடன் காறித் தரையில் உமிழ்ந்தான்.

மச்சக் காளைக்குத் தோல்ஷாப்பில் வேலைசெய்து நைந்து போன உடம்பு. இத்தோடு ஈழல் வேறு; சதா இருமிக்கொண்டிருப்பான். சிக்கும், பேனும் நிறைந்த தாடியும், கேசமும் சதா கண்களில் பீளை அரும்புவதால், செத்த மாட்டின் கண்களில் ஈ மொய்த்துக் கொண்டிருப்பது போல் நயனங்களிலும் கோழை வடியும் உதடுகளிலும் ஈமொய்த்துக் கொண்டிருக்கும். அசப்பில் பார்த்தால் பிணத்துக்கு உயிர் கொடுத்தது போன்ற தோற்றம்.

எரிச்சலுடன் பெஞ்சமின் முறைத்துப் பார்க்கவும் "நல்ல சங்கம் வச்சீங்கடா சங்கம் நாளைக்கி இந்த முண்டைக அல்லாம் வந்து அம்மகிட்ட மச்சான் முறை கொண்டாடாப் போராளுவ" என்று ஓசேப்பைப் பார்த்துச் சாடை பேசவும் பெஞ்சமினுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

"பேண்ட குண்டிக் கழுவாத நாயி. ஒம்மூஞ்சியவும் மொகறக் கட்டையவும் பாத்தா. செத்த பொணமாட்டம் இருக்க ஒன்னைய மூதேவி கூட சீந்த மாட்டாடா. ஒன்னைய எல்லாம் ஊரோட சேத்து வச்சிருக்கம் பாரு. நீ அல்லாம் சாதி வித்தியாசம் பாக்க வேண்டியது தான்" என்று எரிந்து விழுந்தவன் அவனைத் தாக்கவும் தயாரானான்.

"ஹும்! காலம் கெட்டப் போச்சுப்பேய்: அம்ம சொல்ல ஆரு கேக்கப் போரா" என்று வேதாந்தம் பேசியவன் பெண்கள் நிற்பதையும் பொருட்படுத்தாமல் அழுக்கும் சிக்கும் நிறைந்த தனது கௌபீளத்தை அவிழ்த்துக் கட்டியபடி எழுந்து தனது குடிசையைப் பார்த்து நடக்கலானான் பன்றிக்கறி வாங்கிப் போவதற்காகக் கொண்டு வந்திருந்த பித்தளை தூக்குப் போணி அவனது இடது கரத்தில் ஆடிக்கொண்டிருந்தது. சிறிது தாமதித்தால் பெஞ்சமின் அவனைத் தாக்கியிருப்பான்

"மாமா. கோவப்படாதீயும். அந்த ஆளுக்குப் புத்தி அம்புட்டுத் தான்" ஒசேப்பு பெஞ்சமினைச் சமாதானம் செய்யவும். செல்லி, ஆடை குலைய அங்கு வந்து சேரவும் சரியாக இருந்தது.

ஆடை கலைந்து அலங்கோல கோலத்தில் மூச்சிரைக்க வந்து நின்ற செல்லி,

"ஒசேப்பண்ணே அந்தச் சண்டாளன் திரும்பவும் காலனிக்குள்ளாற வந்துட்டான். உப்ப எங்க அக்காளை உட்டுப் போட்டு சமைஞ்ச புள்ளெயப்புடிச்சு இழுக்கான் தடுக்கப்போன எங்கபாவாவையும் செமத்தியா அடிச்சுப் போட்டான். கேக்கப்போன என்னையவும் அவ வேண்டாம்ண்ணா நீ வாடீண்டு, எம் லவுக்கையயும் கிழிச்சுப் போட்டான். எம்புட்டோ கெஞ்சிக் கேட்டுப் பாத்திட்டம். கேக்க மாட்டேங்குறான். காலனியே பயந்து போய்க் கெடக்குவு" கண்ணீர் மல்கச் சொன்னாள்.

ஏற்கனவே கழுவனையும் அவனது கூட்டாளிகளையும் நகர சுத்தித் தொழிலாளர்கள் காலனிப் பக்கம் போவதும் வட்டிப்பணம் கேட்டு மிரட்டுவதும் சரியல்ல என்று சங்கரனும் வேலாயுதமும் எச்சரித்திருந்தார்கள்.

அவர்கள் இருவரும், மெட்ராஸ் போயிருக்கிறார்கள்.

அந்த வேளையில் கழுவன் காலனியில் நுழைந்திருக்கிறான்.

அவள் சொல்வதைக் கவனமாகக் கேட்ட ஒசேப்பு, பக்கத்துக் கருவேல மரத்தில் தொங்கப் போட்டிருந்த மேல் சட்டையை எடுத்துப் போட்ட வண்ணம் "மினிசாமி, வாப்பா, இவனை இன்னெக்கி ரெண்டிலே ஒன்னு பாத்திர வேண்டியது தான்" என்று புறப்படத் தயாரானான்.

மினிசாமியும்,வேறு இரண்டு தோல்ஷாப்புத் தொழிலாளர்களும் குடிசைக்குள் போய் பாலாக்கம்பை எடுத்துக் கொண்டு வந்தார்கள்.

"ஆவுலாதி இல்லாம கூறு அடிச்சிருங்கப்பா. பெஞ்சமின் மச்சானுக்கு பன்னிக்காது குடுக்க மறந்திராதீய" என்று பன்றியின் நெஞ்சைப் பிளந்து கொண்டிருந்தவனிடம் சொல்லிவிட்டுச் செல்லியுடன் ஓசேப்பு காலனி நோக்கி விரைந்தான்.

மினிசாமியும், கருப்பு சாமியும் வேறு ஒரு கறுத்த வாலிபனும் ஓசேப்பைப் பின் தொடர்ந்தார்கள்.

●

4

எல்லா ஊர்களிலும் இருப்பது போலவே அந்த நகரத்திலும் சக்கிலியக்குடி, அதாவது இப்போது முனிசிப்பல் ஸ்காவஞ்சர்கள் காலனி, நகரத்துக்கு வெளியே கிழக்குத் திக்கில் ஒரு ஒதுக்குப்புறமாக இருக்கிறது. அதாவது வடக்கே இருந்து வரும் வாடைக்காற்றும், தெற்கே இருந்து வீசும் தென்றல் காற்றும் ஊருக்குள் வரும்போது தீட்டுப்பட்டுவிடக்கூடாது என்கிற முன் கருதலோடு சக்கிலியக்குடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. தென்றலும் வாடையும் சக்கிலி வாடையில்லாமல் ஊருக்குள் வர வேண்டும்.

காலனியை ஒட்டி இருக்கும் நைட்சாயில் டிப்போவை அடுத்து விரிந்து பரந்து கிடக்கும் குப்பை மேட்டில், செத்துக் கிடக்கும் எருமைக்கன்றின் மாமிசத்தைப் பங்கு போட்டுக் கொள்வதற்காகத் தெரு நாய்கள் ஒன்றோடு ஒன்று உக்கிரமாகத் தாக்கிப் போராடிக் கொண்டிருக்கின்றன. அழுகி நாற்றமெடுக்கும் மாமிசத்தை நாய்களுடன் பங்கு போட வந்த மலைக்கழுகுகள், குப்பை மேட்டில் தள்ளாடி நடப்பதும், பிறகு எருமைக்கன்றை அணுகி நாய்கள் விரட்ட பீதிப்பட்டு பறந்து போய் வாகை மரங்களில் அடைக்கலம் புகுவதும்., ஆகாயத்தில் வட்டமிடுவதுமாக இருக்கின்றன.

மனிதக் கழிவு மிதிபடும் கண்மாய்க் கரையைத் தாண்டி ஒசேப்பும், மினிசாமியும் மாயாண்டியும் மற்ற வாலிபர்களும் செல்லியைத் தொடர்ந்து காலனியில் பிரவேசித்தபோது எலிவளைகளைப் போன்று, சணல் மறிப்புக்களாலும் கட்டிகளாலும் தடுக்கப்பட்டிருக்கும் குடிசைகளின் முன்னால் பெண்கள் பயபீதியுடன் நின்று கொண்டிருக்கின்றனர் அவர்களது நயனங்களில் வழக்கத்திற்கு மாறாக எல்லையற்ற பீதி உறைந்திருக்கிறது. இவ்வளவு களேபரத்துக்கும் மத்தியில் காலனியில் என்ன நடக்கிறது என்கிற அக்கறையே இல்லாத

மட்டில், பட்டைச் சாராயத்தைக் குடித்த மப்பில் முனிசிப்பல் சிப்பந்திகள் சிலபேர் உடம்பில் துணியே இல்லாமல் சொரணையற்ற முறையில் ஆங்காங்கே செத்த பிணங்களாகப் படுத்துக் கிடக்கின்றனர். மலம் அள்ளும் வண்டிகளும் டிப்போவின் குப்பை வாகனங்களும் காலனிக்கு எல்லை வகுத்தாற் போன்று ஆங்காங்கே நிறுத்தப்பட்டிருக்கின்றன.

காலனியின் நடு நாயமாகக் கிளை பரப்பி நிற்கும் அரச மரத்துக்கடியில் இருக்கும், சக்கிலிய ஜனங்களின் குல தெய்வமான மதுரைவீரன் பீடத்தில், கழுவத் தேவனும், அவனது சகாக்களும், ஆயுத சமேதராக உட்கார்ந்திருக்கின்றனர். அவர்களது காலடியில் மதுரை வீரசாமிக்குப் படைக்கப்பட்ட சுட்ட கருவாடும் பீடிக்கட்டும், ஒருபாட்டில் பட்டைச் சாராயமும் கேட்பாரற்றுக் கிடக்கின்றன.

கழுவத்தேவனுக்கு எதிரில், செல்லியின் அக்காள் கணவன் சுப்ப வாடன், பாகனது அங்குஜத்துக்குக் கட்டுப்பட்ட யானை போல், ஆஜானுபாகுவான தனது எண்சாண் உடம்பையும் ஒரு சாணாகக்குறுக்கிய வண்ணம் கைகட்டிப் பரிதாபமாக நின்று கொண்டிருக்கிறான். அவனது பக்கத்தில் மனைவி வீராயியும், வேடன் கையில் சிக்கிய பறவையைப் போல் பச்சிளம்பெண்ணுடன் நின்று கொண்டிருக்கிறார்கள்.

"எங்க அக்கா மவ, பச்சை மண்ணு சமைஞ்சு ரெண்டு வாரம் கூட ஆவலை. அது அவனுக்கு வேணுமாம்" வடிந்த கண்ணீரைப் புறங்கையால் துடைத்தவாறே செல்லி ஓசேப்பையும், உடன் வந்தவர்களையும் பார்த்துச் சொன்னாள்.

ஓசேப்பையும் அவள் தோழர்களையும் பார்த்ததும் கழுவன் ஏளனமாகச் சிரித்தான்.

"வக்காளி, இன்னெக்கி வசமா மாட்டிக்கிட்டே. அவன் பொலி தாண்டா பங்காளி". தனது கையாட்களைப் பார்த்து சொன்னவன், தனது வலது பாரிசத்தில், பீடத்தில் கிடந்த அரிவாளைக் கையில் எடுத்து விரல்களால் பதம் பார்த்துக்

கொண்டான். ஒசேப்பைத் தீர்த்துக் கட்டிவிட வேண்டும் என்பது அவனது நீண்ட நாள் ஆசை.

கழுவத் தேவனுக்குத் தோல்ஷாப்பு முதலாளிகளின் அடியாளாகச் செயல்படுவதோடு முக்கியமான தொழில் முனிசிப்பல் தொழிலாளர்களுக்கு வட்டிக்கு விடுவது. நகரத்தின் முக்கியமான போக்கிரிகளைப் போலவே அவனது பிரதான தொழில் இந்த வட்டித் தொழில். கழுவனிடம் வட்டிக்கு வாங்கினால் ஜென்மா ஜென்மத்துக்குக் கடன் தொலையாது. கடன் வாங்கிய முனிசிப்பல் சிப்பந்தியின் மனைவி, பெண்டு பிள்ளைகள் மாதாந்தரம் தர வேண்டிய வட்டிக்குப் பதிலாகக் கழுவனுடன் படுத்துக் கொள்ள வேண்டும். யாராவது ரோஷப்பட்டால் அடி உதைதான். கடந்த இரண்டு தலைமுறைகளாக நகரத்து முனிசிப்பல் காலனிகளில் நடக்கிற கரடு தட்டிப்போன மாமூல் அது எழுதப்படாத விதி.

அவர்கள் எடுப்புக்கக்கூசுகளில் குவிந்து கிடக்கும் மனித மலக்கழிவை கரங்களால் அள்ளி, கூடைகளில் வாரி மலக்கழிவு வண்டிகளில் நைட்சாயில் கிடங்குகளுக்குக் கொண்டு போக வேண்டியிருந்தது குடலைப் பிடிங்கி எறியும் படிக்கான குமட்டல் எடுக்கும். மனிதக் கழிவின் நாற்றம் சகிக்க முடியாமல் அவர்கள் தங்களை மறக்க வேண்டியிருந்தது; எனவே தங்களை மறப்பதற்காக நகர சுத்தித் தொழிலாளர்கள் மட்டமான மதுவை அருந்தி ஆழ்ந்து போக வேண்டியிருந்தது. சம்பளமாகக் கொடுக்கப்படும் பிச்சைக்காசு போதாது என்பதால் வட்டிக்கு வாங்கி மதுவருந்தினார்கள். வாங்கிய பணத்துக்கு வட்டி செலுத்த முடியாமல் தங்களது பெண்டு பிள்ளைகளை அடமானம் வைத்தார்கள். அடமானம் வைக்கப்பட்ட பெண் ஈட்டிக்காரனது சகல உபாதைகளுக்கும் பண்டமாகப் பாவிக்கப்பட்டாள். ஈட்டிக்காரர்களது அக்கிரம அநியாயங்களைக் கேட்பதற்கும், மறுப்பதற்கும் நாதியில்லாமல் அம்மக்கள் புழுக்களைப் போன்று உழன்றார்கள்.

ஒரு மாதத்துக்கு முன்னால், வட்டிக்குப் படுக்க மறுத்த பெண்ணை நிர்வாணமாக்கி நடுரோட்டில் கழுவன் ஓட

விட்ட பின்பு தான் சங்கரனும், வேலாயுதமும் கழுவனையும், ஏனைய ஈட்டிக்காரர்களையும் எச்சரித்திருந்தனர். இருதயசாமி என்றாலே கழுவனுக்கு ஒருவித பயம் இருந்தாலும் அன்றைய தினம் தலைவர்கள் எல்லோரும் ஊரில் இல்லை என்பதைத் தெரிந்து கொண்ட கழுவன் தனது சகாக்களுடன் காலனிக்குள் வந்திருக்கிறான். ஓசேப்பும் அவனது தோழர்களும் அங்கு வருவார்கள் என்று அவன் எதிர் பார்க்கவில்லை.

ஓசேப்பு அவர்கள் அருகில் வந்த போது,

"வட்டிக்கோசுரம் என்னையத்தான் அடுமையா வச்சிருக்கையே சாமி. எம்புள்ளைய விட்டுப்போடு. பச்சைப்புள்ளை தாங்காது." என்று பரிதாபமாகச் சொன்ன வீராயி கழுவனின் காலில் விழுகிறாள்.

வீராயிக்கு நடுத்தர வயதிருக்கும். புஷ்டியான உடற்கட்டு, கரண்டைக்கால் வரையில் உடுத்தியிருக்கும் கண்டாங்கிச் சேலையில் அங்குமிங்குமாக கிழிசல். நல்ல கஸ்தூரி மஞ்சள் நிறம். வசீகரமான முகவாகு, சுத்தம் செய்யப்படாத சிலைபோன்ற தோற்றம், வயது தெரியாத உடல்வாகு.

"ஏளா, ஒங்கூடப்படுத்துப்படுத்து மனிசனுக்கு அலுப்புத் தட்டிப் போச்சுது. அதான் சமஞ்ச குமரியக் கேக்கறேன். கிராக்கி பண்றயே. மண்ணு திங்கர ஒடம்பை மனிசன் அனுபவிச்சா என்ன அழுகிப்போவப்போரது, ஒம்மவ என்ன ராசாவூட்டுப்பெண்ணா" வீராயியையும் சுப்ப வாடனையும் பார்த்து ஏளனமாகக் கேட்டான்.

கழுவத் தேவன் ஏளனமாகப் பேசுவதை எந்தவிதமான ஆத்திரத்துக்கும் ஆட்படாமல் பாடம் கேட்கும் மாணவனைப் போல் கைகட்டி சுப்பவாடன் நின்றிருப்பதைப் பார்த்தபோது மினிசாமிக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

"இவன் என்ன மனிசனா, இல்லே மண்ணா ? எருமை மாடு. அத்தம் பெரிய உடம்பை வச்சுக்கிட்டு மங்கிணியா நிக்கதைப் பாரு" ஓசேப்பைப் பார்த்துக் கேட்டான்.

சுப்பவாடன் வீராயி போல் அல்லாமல் சுத்தமான அமாவாசைக் கறுப்பு. ஆனால் புஷ்டியான திடகாத்திரமான உடற்கட்டு, கரங்களிலும் நெஞ்சிலும் காடாக வளர்ந்திருக்கும் ரோமப்பிடிப்பு. மழிக்கப்படாத ஊடு நரை படிந்த தாடி. கூந்தலை அள்ளி முடிந்திருக்கிறான். கறுப்பாக இருந்த போதும், நாயக்கர்கள் காலத்துச் சிலை போன்ற வடிவான உடற்கட்டு. அவன் மட்டும் மூண்டெழுந்தால் ஒரு யானையவே மடக்கிப் போட்டுவிடக் கூடிய சக்தி அவனுள் ஒளிந்து கிடப்பது தென்படுகிறது. இருந்தபோதும் மந்திரத்தால் கட்டுப்பட்டுப் போன பூதகணம் மாதிரி கழுவனைக் கெஞ்சிக் கொண்டிருப்பதைப் பார்ப்பதற்கே பரிதாபமாக இருந்தது.

கிளர்ந்து அரும்பியிருக்கும் இளம் மொக்குகள் போன்று மார்பகங்களை மறைப்பதற்குக் கூட தாவணியில்லாமல், கரங்களால் நெஞ்சைப் பாதுகாத்த வண்ணம் நின்றிருக்கும் ஆண்டாளைத் தனது காமக் கண்களால் வெறி கொண்ட மட்டில் பார்த்த வண்ணம் உட்காந்திருந்த கழுவன்,

மாலை மாலையாகக் கண்ணீர் வடித்த வண்ணம் நிற்கும் வீராயியைப் பார்த்து "ஏம்ளா ஒப்பாரி வைக்கிறே. சாமை வெளஞ்சாத் தெரியும் சக்கிலிச்சி சமைஞ்சாத் தெரியும், வக்காளி சும்மா சொலவடை சொல்லலை. தாயழி ஒம்மவளை அப்படியே விழுங்கிட்டுக் கக்கீரலாம் போல இருக்கு, அம்புட்டு அம்சமா இருக்கா புள்ளெ."

என்றவன் திடீரென்று பீடத்தினின்றும் எழுந்து, சிறுமி ஆண்டாள் கையைப் பிடித்துப்பக்கத்துக் குடிசைக்கு இழுத்துப் போக முற்பட்டபோது "நாயினா! நாயினா நீவு பாரு நயினா ஒத்து, ஒத்து நான் மாட்டேன் மாட்டேன்" என்று வேட்டை நாயிடம் சிக்கிய மானாகக் கதறியது அந்தச் சிறுமி

"போடி! கூப்பிட்டா போவியா. நாலணா கொடுத்தா முந்தி விரிக்கிற சாதி. பெரிய பத்தினியாட்டம் பாவலாக் காட்டாதே" பக்கத்தில் நின்ற கழுவனின் அடியாள் சொன்னான். அவர்கள் இருவரும் போதையில் இருப்பது

போல் பட்டது. கழுவன் பெண்களை இழுத்துக் கொண்டு போய் அவர்கள் எதிரிலேயே புணர்வான். அவ்வளவு சண்டாளன்.

ஆண்டாளைக் கழுவன் பலாத்காரமாகக் குடிசைக்குள் இழுக்கவும் ஓசேப்பு தனது தடியால் பலமாக அவனது வலது கரத்தில் ஓங்கி அறைந்தான். பிடி நழுவியதும் செல்லி ஓடோடி வந்து சிறுமியைத் தனது மார்போடு அணைத்துக் கொண்டாள்.

"நீங்க, குடிசைக்குப் புள்ளெயக் கூட்டிட்டுப் போங்கம்மா. நாங்க பாத்துக்கிடுதம். "மாடசாமி செல்லியிடம் சொன்னான்.

நடப்பது அனைத்தையும் ஆடாமல் அசையாமல் பார்த்த வண்ணம் நிற்கும் சுப்பவாடனைப் பார்த்து

மகா ஆவேசத்துடன்,

"ஓரோதொங்கா. நீவு ஆம்புளை தானா. நீவு எனக்குப் புருஷனா. இல்லே செப்புண்டி. புள்ளெயப் புடிச்சு இழுக்கறான். குத்துக்கல்லா நிக்கறே சாண்டக்குடிக்கி" என்று கோபம் தாளாமல் காரி உமிழ்ந்தாள் வீராயி. அப்போதும் அவன் மௌனமாகவே நின்றிருந்தான். அவனது முகம் மட்டும் இறுக்க மடைந்து காணப்பட்டது.

ஓசேப்பின் தலையீடு கழுவனை ஆத்திரமடைய வைத்தது.

"வக்காளி, ஆர்லே நீ. என் கையத் தட்டிவிடதுக்கு அம்புட்டுத் தினா வெட்டா" என்று கோபமாகப் பேசிய படி திரும்பியவன் ஓசேப்பு நிற்பதைப் பார்த்ததும்

"லே ஓசேப்பு எனக்கு எடைஞ்சல் பண்ணிட்டே வார, நல்லால்லே. பொலி வாங்கிப் போடுவன். மருவாதையாப் போயிரு." எச்சரிப்பது போல் சத்தம் வைத்தான்.

"கழுவா கேக்கறதுக்கு நாதியில்லேண்டு பச்சை மண்ணைப் பெண்டுக்கு இழுக்கறவன். வட்டி வசூல் அல்லாம் வெச்சுக்க மாண்டாண்ணு போன மாசமே தலைவருக

எச்சரிச்சது மறந்து போச்சா" பாலாக் கம்பைத் தரையில் ஊன்றிய வண்ணம் கழுவனைப் பாத்து மிகவும் சாந்தமாகவே கேட்டான்.

"தாயழி சுப்பவாடன் குத்துக்கல்லா நிக்கறையே சொல்லேண்டா வட்டிக்கு வேண்டிப்பட்டை குடிசேல்லே"

கழுவன் சுப்பவாடனைக் கடிந்து கொள்ளவும்

சுப்பவாடன் ஏதோ சொல்ல முற்படவும்

"ஓஹோ! வட்டிக்கு வாங்கினா அவரு பொண்டாட்டியும் ஒனக்கு அடைக்கலமாக கொடுத்திரணும்"

மினிசாமி கேட்டான்.

"ஹாம், என்னலே அலுவுசமாக் கேக்கறானுவ. அல்லா சக்கிலியக் காலனியிலும் இது தாண்டா மாமூல். இந்தச் சக்கிலியத் தாயழிகளுக்குக் குடிக்கறதுக்கு நாங்க குடுக்கணம். குடுத்துப்போட்டு நாங்க என்ன உள்ளங்கையவும் புறங்கையவும் நக்கிக்கிட்டா அலைய வேணம்" கழுவனது கையாள் மினிசாமியைப் பார்த்து ஏளனம் தொனிக்கக் கேட்டான்.

"காலனி ஆம்புளை தேவுடியாப் பயலுவ நாளெல்லாம் போதையிலே கெடக்கதுக்கு பொண்டுகளான நாங்க தான் பொணையா. கேக்க நாதியில்லே. சொரணை கெட்ட தொங்கனுவ"

சூப்பிப் போட்ட பணங் கொட்டையாட்டம் செம்பட்டைத் தலை முடியும், மான் நிறமும் கொண்ட நடுவயதைத் தாண்டிய பெண்மணி தன் போக்கில் சொன்னவாறே இடுப்பில் தொங்கிய சுருக்குப் பையில் இருந்து நாசிப் பொடியை அள்ளி பல்லில் இழுவித் தேய்த்து, வெறுப்புடன் தரையில் காறி உமிழ்ந்தவாறே அவர்களைத் தாண்டிப் போனாள். கழுவத் தேவனையும் அவனது அடியாட்களையும் அவள் பார்த்த பார்வையில் வாழ்க்கையில் அவள் அனுபவித்த கசப்பு வெளிப்பட்டது.

காலனியில் என்ன நடக்கிறது. ஏது நடக்கிறது என்கிற சொரணையே இல்லாமல், வளைகளுக்குள் பதுங்கிக் கிடக்கும் எலிகளைப் போல, தங்களது ஓலைக் குடில்களுக்குள் பயந்து ஒடுங்கிக் கிடந்த நகரசுத்திப் பெண்களும், ஆண்களும் ஒவ்வொருவராகத் தங்களது குடிசைகளை விட்டு வெளியே வரலாயினர். ஓசேப்பும், அவனது சகாக்களும் அங்கே வந்திருப்பது அவர்களுள் அவர்களை அறியாமலேயே ஒருவித தெம்பையும், தைரியத்தையும் ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

"மாசா மாசம் நீ வட்டி வாங்குவே இல்லையா" ஓசேப்பு கழுவனைப் பார்த்துக் கேட்டான்."

"அதக் கேக்கறதுக்கு நீ ஆருடா. பறப்பெயனுக்குச் சக்கிலியக் குடியிலே என்னடா வேலை. நீங்க அல்லாம் சங்கம் வச்சிருந்தா. நாங்க என்ன பயந்திருவோமா. தலையிடாதே சொட்டெலும்பு முறிஞ்சு போவும்."

ஜாதியைக் குறைத்துப் பேசிய போது கருப்ப சாமிக்கும், மினிசாமிக்கும் கோபம் ஏற்பட்டது.

அவர்களைக் கையமர்த்திய ஓசேப்பு,

"ஒங்க ஆத்தா ஒன்னைய சுப்பவாடனுக்கு இல்லே அவுஹ அப்பனுக்குப் பெத்தாளா என்ன? மாசா மாசம் அவன் குடும்பம் ஒழைக்கிற காசை கேப்பார் இல்லாம வாங்கி ஏப்பம் போடறே"

ஓசேப்பின் மரியாதை கெட்ட வார்த்தைகளைக் கேட்ட போது கழுவனுக்குக் கோபம் தலைக் கேறியது. அவன் முகம் சுருகிச் சுருங்கியது. அவனது தாயை இதுவரையில் இவ்வளவு அவமானப்பட யாரும் பேசியது கிடையாது. அவமானத்தாலும் கோபத்தாலும் நிலை கொள்ள முடியாமல் துடித்த கழுவன்,

"வக்காளி. தாயழி. எங்க ஆத்தாளைச் சக்கிலியப் பயலோட படுத்தவண்டா சொன்னே ஒம் குடலை உருவி மாலையாப் போடலே நான் கள்ளனுக்குப் பெறக்கலடா" என்று கர்ஜித்த வண்ணம் அரிவாளை எடுத்து வீசிய படி ஓசேப்பை நோக்கிப் பாயவும், மினிசாமியும், மாடசாமியும்

தாக்குதலை எதிர்கொள்ளத் தயரானார்கள். அப்போது தான் அந்தப் பிரதேசமே எதிரொலிக்கும் படி

"ஏய்! தொங்கா. தேவடியா மவனே" என்று சுப்பவாடன் கர்ஜித்தான்.

சுட்டுண்ட பூதமாக நின்றிருந்த சுப்பவாடன், கண்மூடிக் கண்திறப்பதற்குள் சீற்றம் கொண்ட காண்டா மிருகமாக, கழுவத் தேவன் மீது பாய்ந்தான், கழுவன் கையில் இருந்த பாளை அருவாள் இடறி ஓசேப்புக்கும் மாடசாமிக்கும் நடுவில் போய் விழுந்தது.

சுப்பவாடனால் தூக்கி வீசப்பட்ட கழுவத்தேவன் ஒரு தூசியைப் போல் பறந்து அரச மரத்தின் கிளையில் இடறி "ஆத்தே செத்தேன்" என்று மரண ஓலமிட்ட படி பீடத்துக்கடியில் ஓசேப்பின் காலடியில் வந்து விழுந்தான்.

கழுவத் தேவன் அதிர்ச்சியினின்றும் மீளுவதற்குள்

"ஒஞ் சங்கைக்கடிச்சு நெத்தம் குடிக்காம உடமாட்டேன். எங்கொடுக்கு ஒனக்கு வப்பாட்டியா?" என்று கர்ஜித்த சுப்பவாடன், பலபேர் தடுத்தும் அடங்காமல் மதம் பிடித்த யானை பாகனைப் பந்தாடுவது போல், திரும்பவும் கழுவனைத்தூக்கி வீசினான். அவனை அந்தப் பிரதேசம் முழுவதும் புரட்டிப் புரட்டி வீசினான்.

"சுப்பவாடன் விடுமய்யா. கழுவத்தேவன் செத்துப் போவான். அவரைப் புடியுங்கய்யா" என்று ஓசேப்பு குரல் கொடுக்கவும், பாகனுக்குக் கட்டுப்படும் யானையைப் போன்று பீடத்தின் அருகில் போய் நின்றான்.

காலம் காலமாக அடிமைப்பட்டு,அவமானப்பட்டு ஒடுக்கப்பட்டுக் கிடந்த மக்களின் கோபாக்கினி அவனது நயனங்களில் தென்பட்டது.

தரையினின்றும் கையூன்றி எழுந்து நின்ற கழுவனின் அம்மைத் தழும்பு நிறைந்த முகத்திலும் நெற்றியிலும் உதிரம் ஓடிக் கொண்டிருந்தது. அவன் மிகவும் பயந்து போய் காணப்பட்டான்.

இப்போது, காலனியில் இருந்த அத்தனை ஆண்களும், பெண்களும் கழுவனைச் சுற்றி வளைத்து நின்றனர். அவர்களது நயனங்களில் கொலை வெறி தாண்டவமாடியது.

"பங்காளி, அரவம் காட்டாம வாய்யா. இந்த வெறி கொண்ட சனங்க அம்மளைக் கொண்டு போடும்" என்று பரிதாபமாகச் சொன்ன வண்ணம், கழுவனின் கையாள் அவனது உடம்பிலும் உடைகளிலும் ஒட்டிய சேற்றையும் சகதியையும் துடைத்தான்.

சூப்பிய பனங்கொட்டைக்கேசம் கொண்ட பரட்டைத் தலைப் பெண்மணி தன் குடிசையிலிருந்து விளக்கு மாற்றை எடுத்துக் கொண்டு கழுவன் முன்னால் வந்து நின்றாள்.

"ஏண்டா, சாண்டைக்குடிக்கி சக்கிலியச்சி இதுண்டாத்தான் இனிக்குமோ. உனிமே காலனிப் பக்கம் வந்தே. இதுதான்" விளக்கு மாற்றை அவன் முகத்துக்கு நேராக ஆட்டி எச்சரித்தவள்.

"இந்த பாவிப்பயகளுச்குப் பயந்துதான் எங்க நாயனா. என்னைப் பல்லிலே பொடிய இழுவச் சொல்லுச்சு. வெள்ளிப்பணமா இருந்த பல்லு சுட்ட கரியாகப் போச்சுது" அப்பவும் என்னைய உடலை நாரு நாரா ஆக்கிப் போட்டானுவ" என்று பரிதாபமாகச் சொல்லிச் சிரித்தவள் திரும்பவும், சுருக்குப்பை பொடியை அள்ளி, பல்லில் தேய்த்தாள். காறி தரையில் உமிழ்ந்த பிறகு தனது குடிலை நோக்கி நடந்து போனாள்.

ஒரு காலத்தில் அவள் அழகு சுந்திரியாக இருந்திருக்க வேண்டும் என்பது போல் ஓசேப்புக்குப் பட்டது. அந்தப் பெண்மணி சோர்வுடன் குடிசையை நோக்கிப் போவதைப் பார்த்த வண்ணம் நின்றிருந்த சுப்பவாடன்

"கழுவத் தேவன் என்ன, வேறே எந்தப் பெயலும் நா உசிரோட இருக்கு மட்டும் பொம்பளைகளைத் தேடி காலனிப்பக்கம் வர மாட்டான் மயினி" என்று திடகாத்திரமாகச் சொன்னான். அவனுள் உறங்கிக்கிடந்த மனிதம் உயிர் பெற்றிருக்கிறது.

அரசமரத்தடியில் மதுரை வீரசாமி பீடத்தடியில் கூடிநின்ற மக்கள் ஏதோ ஒரு புதிய காற்றைச் சுவாசிப்பதாக உணர்ந்தார்கள்.

கழுவன் கடிபட்டுப் பயந்தோடும் நாயைப் போன்று காலனியை விட்டு வெளியேறினான்.

ஓசேப்பும் அவனது சகாக்களும் செல்லியையும் சுப்பவாடன் குடும்பத்தையும் சங்கக் கட்டிடத்தை நோக்கிக் கூட்டிப் போனார்கள்.

அந்தச் சம்பவம், நகரமெங்குமுள்ள முனிசிப்பல் காலனிகளுக்கு வேகமாகப்பரவியது. ஈட்டிக்காரர்களிடையே பீதியை ஏற்படுத்தலாயிற்று.

●

5

தங்களது கொள்ளை லாபத்துக்குத்தடையாகவும், கௌரவத்துக்கு இழுக்கு ஏற்படுத்தி இடைஞ்சலாகவும் இருக்கும் தோல் பதனிடும் சங்கத் தலைவர்களையும் ஊழியர்களையும் எப்படியாவது பழிவாங்கி விட வேண்டும், நிர் மூலம் பண்ணியாக வேண்டும் என்று தோல் ஷாப்பு முதலாளிகள் துடியாய்த் துடித்தார்கள்.

அதிலும், தோல் ஷாப்பு முதலாளிகள் சங்கத் தலைவர் ஹாஜியார் அஸன் ராவுத்தருக்கு இரட்டைக் கோபம். ஏனெனில், சின்னக்கிளி என்ற பெண்ணின் அகால மரணத்தைச் சங்கத் தலைவர்கள் முன்னைப் போல் ஏனோ தானோ என்று விட்டுவிடத் தயாராக இல்லை. தனது செல்வாக்கை உபயோகித்து, அந்தப் பெண்ணின் மரணத்தை வெறும் விபத்து என்று மாற்றிவிட அஸன் பாய் எவ்வளவோ முயற்சித்தும் பலிக்கவில்லை. சின்னக்கிளியின் மரணம் காலைச்சுற்றிப் பாம்பாக அஸன் ராவுத்தர் குடும்பத்தைப் பயமுறுத்திக் கொண்டிருக்கிறது. அஸன் ராவுத்தரின் விரல் அசைப்புக்கு ஆட்டம் போடக்கூடிய போலீஸ் அதிகாரிகள் அவரைக் கேள்விமேல் கேள்வியாகக் கேட்டுக் கொண்டிருக்கின்றனர். போலீஸ்காரர்கள் மைத்துனன் முஸ்தாபா மீரானை எப்போது அரஸ்ட் செய்வார்கள் என்று சொல்ல முடியாது. அவ்வளவுக்கான போலீஸ் கெடுபிடி. எனவே ஆஸ்பத்திரியில் இருந்து வெளியே வந்ததுமே முஸ்தாபா மீரான் தலைமறைவாகப் போக வேண்டி வந்தது.

ஆனால், மைத்துனன் முஸ்தாபாவைத் தேடி அன்றாடம் போலீஸ், ஹாஜியார் வீட்டுக்கு வருவது அவருக்குப் பெருத்த அவமானமாகப்பட்டது. மட்டுமல்லாமல் தோல் ஷாப்புத் தொழிலாளர் சங்கத்துக்காரர்கள் பொதுக் கூட்டம் போட்டு, அவரையும் முஸ்தாபா மீரானையும் சின்னக்கிளியின்

மரணத்தையும், தோல் ஷாப்பில் நடைபெறும் அக்கிரமங்களையும் கண்டித்துப் பேசுவதால், மகமதியாபுறம் தெருவுக்குள் போவதற்கே அவருக்கு அவமானமாகப்பட்டது.

சாதாரணமாக முஸ்தாபா மீரானுக்குப் பேகம்பூரில் நல்ல பெயர் கிடையாது. மனைவியின் நச்சரிப்புக்காக ஹாஜியார் முஸ்தாபாவுக்கு மூன்று நிக்காகு பண்ணி வைத்துப் பார்த்தார். இரண்டு பெண்கள் திருமணமான இரண்டாவது மாதமே அவனது கொச்சையான அவஸ்தைகளைத் தாங்கிக் கொள்ளாமல் தலாக் வாங்கிக் கொண்டு போய்விட்டார்கள். மூன்றாவது மனைவி பக்கத்து வீட்டுப் பொடியனை இழுத்துக் கொண்டு வாணியம்பாடிக்கு ஓடிப் போய் விட்டாள். கடைசியில், அவர் எவ்வளவோ முயன்று பார்த்தும், பேகம்பூரிலும், மகமதிய புறத்திலும், ஏன் அந்த ஜில்லாவிலேயே அவனுக்குப் பெண் கொடுக்க யாரும் முன் வரவில்லை.

முஸ்தாபா மீரானின் கெட்ட நடத்தை காரணமாக மகமதியாபுறம் தெருவுக்குள் முஸ்தாபா நுழையக் கூடாது என்று ஜமாத்தே முடிவு செய்து அறிவித்தது. ஹாஜியாருக்கு அது பெருத்த அவமானமாகப்போயிற்று. இரண்டு தலாக் செய்து கொண்ட இரண்டு பெரிய வீட்டுப் பெண்களுக்கு ஆசை வார்த்தை காட்டி அவர்களைக் கெடுத்துப் போட்டான். ஒருத்திக்குக் கர்ப்பம் ஏற்பட்டு அதைக் கலைப்பதற்கே அந்தக் குடும்பம் பாடாய்ப்பட வேண்டியதாயிற்று.

கொலைக் குற்றம் சாட்டப்பட்டுத் தலை மறைவு வாழ்க்கை நடத்தும் காலத்தில் கூட முஸ்தாபாவின் ஹராம் தாங்க முடியாததாக இருந்தது. கடைசியில் பள்ள பட்டிச் சவுக்கை மொதலாளி வீட்டுப் பெண்களிடமே முஸ்தாபா தனது திருவிளையாடலைக் காட்டவும் பொறுமை இழந்து போன அஸன் ராவுத்தர், மனைவி பாத்திமா பீவியின் குறுக்கீடையும் சட்டை செய்யாமல் ஒரு நாள் நடுநிசியில் முஸ்தாபாவைத் தனது அந்தரங்க அறைக்கு வரவழைத்து இப்படிப் பேசலானார்:

"அத்தா ஒனக்கும் மார்கழி மாசத்துத் தெரு நாய்க்கும் வித்தியாசம் கெடையாது. நாய்வளுக்காச்சும் ஒரு மட்டும் மருவாதையும் உண்டு. குறிச்ச நாயோட பொச்சிய மோந்து பாத்திட்டு, நமக்கு ஆவாதிண்டு அந்தப் பொட்டையத் தொடாது; மயில் கல்லுலே சேலையச் சுத்தி வெச்சாக்கூட தொறந்து பாக்கிற ஆளு நீ. பொட்டச்சி எண்டால் நாக்கத் தொங்கப் போட்டு அலையிற பிறவி"

பிறகு ஒரு கணம் எதையோ சிந்தனை செய்தவாறு உட்கார்ந்திருந்தவர் திடீரென்று எழுந்து

"இன்ஸா அல்லா! அல்லாம் நல்ல படியா நடக்க வேண்டுமெண்டா அத்தா நீ ஊரை விட்டுப் போயிர வேணம். அது தான் ஒனக்கும் நல்லது. நம்ப குடும்பத்துக்கும் நல்லது" என்று சொல்லவும்

"மச்சான் என்ன சொல்லுதிய. ஒங்களையும் அக்காளையும் உட்டுப் போட்டு நா எங்க போவன். எம்மேலே தப்பு இருந்தா ஒங்களோட சோட்டால அடியுங்கோ. போவ மட்டும் சொல்லாதீய" என்று கெஞ்சிப் பார்த்தான்.

எப்போதுமே தான் எடுத்த முடிவில் உறுதியாக நிற்கக் கூடிய அஸன் பாய்

"மாப்ளே. கறியத் திங்கற மிண்டா எலும்பைக் கோத்துக் கழுத்திலே மாலையாப் போட்டுட்டு அலையப்படாது. இலை மறை காய் மறையா ஒனக்குப் பண்ணத் தெரியாது. வெளியிலே என்ன எழவும் பண்ணிட்டுப் போ, நம்ப வேதக் கார முஸ்லீம் பெண்டுகளுட்டேயே ஒன் கைவரிசயக் காட்டிப் பொட்டையே சவுக்கு ஊட்டுக்காரனுவ சண்டாளங்க கொலைகாரப் பாவிங்க. ஒன் உசிரக் குடிக்கதுக்கு வெறி நாயா அலையுறானுவ. போலீஸ்காரனும் மோப்பம் புடிச்சுக்கிட்டு அலையுறான். என்னால ஒன்னை துளியும் பாதுகாக்க முடியாது. ஒனக்கோசரம் நான் கேவலப்பட முடியாது. சங்கத்து ஆளுவ ஒன்னையக் கைது செய்ய வேணுமெண்டு, நெதம் கூட்டம் போட்டு ஒப்பாறி வைக்காணுவ. போலீஸ் ஒன்னைய எப்பவேணாலும் கைது செய்து போகும்.

எம்புட்டுத்துட்டு வேணாலும் தாரன். வாணியம் பாடிக்கோ வேலூருக்கோ போயிரு. ஒரு வருஷத்துக்கு நீ இந்தப் பக்கம் தலை வச்சுப் படுக்காதே. வந்தையோ ஒன் தலை தப்பாது" என்று எச்சரிக்கை செய்யவும் முஸ்தாபா ஊரை விட்டுப் போவதற்கு ஒப்புக் கொண்டு, பணத்தையும் பெற்றுக் கொண்டு பாத்திமா விடமும் விடை பெற்றுக் கொண்டு வெளியே போனான்.

பாத்திமா பீவிக்குத் தனது சகோதரனின் உயிர் காப்பாற்றப்பட்டதோடு வயது வந்து வீட்டில் இருக்கும் இரண்டு குமரிகளின் கற்பும் காப்பாற்றப்பட்டதில் மிக்க மகிழ்ச்சி.

●

முஸ்தாபா மீரான் ஊரைவிட்டுப் போன இரண்டு வாரத்துக்குப் பிறகு தனது மைத்துனன் பற்றி வந்த சேதியை அஸன் ராவுத்தரால் நம்ப முடியவில்லை.

பெரிய பள்ளிவாசலுக்குத் தொழுகைக்குப் போன போது, அரசல் புரசலாக தொழுகைக்கு வந்தவர்கள் பேசிக் கொண்டது காதில் விழுந்த போது கண்டுக்காமல் இருப்பது போல் பாசாங்கு செய்த போதும் உள்ளம் பதைபதைத்தது.

பாறைப்பட்டி பெரிய பண்ணையார் சக்கலா மம்முது ராவுத்தர் நேரடியாகவே அஸன் ராவுத்தரைக் கேட்டார்.

"அத்தா நான் கேக்கறனண்டு கோவப்பட்டிராதீயும். கோட்டை மலையடிவாரம், பூச்சி நாய்க்கன் தோட்டத்துலே ஓடையோரம் கெடக்கிற மையம், ஒம்ம மச்சான் சாயல்ல தோத்து துண்டு சொல்றாங்க" என்று சொல்லவும், திகைத்துப் போன ஹாஜியார், சந்தேகத்தோடு பண்ணையாரைப் பார்த்த போது,

"மலைய ஒட்டி தோட்டத்துக்கு மேலே, கழுகுக் கூட்டம் வட்டம் போட்டிருக்கு. சந்தேகப்பட்டு ஊர் ஜனங்க நாய்க்கன் தோட்டத்தைப் போயி பாத்திரிக்காவ. அரண்மனைக் கொளத்துலேருந்து வார பெரிய வாய்க்காலை ஒட்டி நாணப் புதர் ஓரமா, மணல் மேட்டுலே, சாக்குலே அந்தப் பொணம்

கெடந்திருக்கு. நாயோ நரியோ மணலைத் தோண்டி மையத்தை இழுத்துப் போட்டிருக்கு. நேத்து ராப்பூரா அந்த வட்டாரம் பூரா நரி ஊளைதானாம்" என்றவர் சற்று யோசனை செய்து விட்டு

"வெவரம் கேக்கதுக்குப் பூச்சி நாய்க்கனைத் தேடினா, நாய்க்கனையும் காணால. அவன் வைப்பாட்டிச் சக்கிலிய பெண்ணு சிட்டம்மாவையும் காணலயாம்" என்று கதை சொல்லுவது போல் சொன்ன போது ஹஸன் முகம்மது ராவுத்தருக்கு உள்ளூற சந்தேகம் ஏற்பட்டது.

தொழுகைக்கு வந்தவர்கள், அவரிடம் நேரடியாக விவரத்தைச் சொல்ல பயந்தோ என்னமோ, அவரிடம் பிரஸ்தாபிக்க மலைத்த போது, சக்கல மம்முது பெரிய மனுஷன் என்ற தோரணையில் சொல்லவும். அவர் சொல்வதில் உண்மை இருக்கும் என்று எண்ணிய ஹாஜியார் தொழுகையைக் கூட பூர்த்தி செய்யாமல் தனது கணக்கப்பிள்ளை சமேதராக சாரட்டு வண்டியில் மலையடிவாரத்தை ஒட்டி மேற்குப் பக்கமாக இருக்கும் பூச்சி நாய்க்கன் தோப்பைப் பார்த்துப் பயணமானார்.

பெரிய பள்ளிவாசலின் தெற்குப் பக்கமாகப் போகும் பெரிய வாய்க்கால், குடகனாரை வந்தடைவதற்கு வடக்கு முகமாகத் திரும்பும் இடத்தில், வானுற வளர்ந்த தென்னந்தோப்புக்கு நடுவே போகும் ஓடையில், மூங்கில் பண்ணையும் நாணற்புதரும் மண்டிக் கிடக்கும் இடத்தில் மணற் பரப்பில் பிணம் கிடக்கிறது. ஓடைக்குப் போகும் ஒற்றையடிப் பாதையை ஒட்டி, கிழமேலாகப் போகும் சரளைக்கல் சாலையில் மக்கள் கூட்டம் கூட்டமாக நின்று தங்களுக்குள் பேசிக் கொள்வதும், வேடிக்கை பார்ப்பதுமாக நின்று கொண்டிருக்கின்றனர். இரண்டு மூன்று போலீஸ்காரர்கள் ரோட்டில் ரோந்து வருவதும், லாத்திக் கம்புகளைச் சுழற்றிக் கூடி நிற்கும் மக்களைக் கூட விடாமல் மிரட்டுவதுமாகத் தங்கள் பணியினைச் செய்தவண்ணமிருக்கின்றனர்.

அஸன்பாயும், கணக்கப்பிள்ளை கனியும் சாரட்டு வண்டியில் வந்திறங்கியதும் கூட்டத்தில் அசாதாரணமான ஒரு அமைதி ஏற்படுகிறது.

முகத்திலும், தாடியிலும் அரும்பியிருக்கும் வியர்வையைத் தூவாலையால் துடைத்து விட்டபடி ஹாஜியார், ஒற்றையடிப் பாதையில் இறங்கி நடக்கிறார்.

உள்ளூற ஏற்பட்ட மனபாரத்தைக் குறைப்பதற்காக அவர் தனக்குள்ளேயே அல்லாவை வேண்டிக் கொள்கிறார். மைத்துனனால் தனது பெயருக்கு இழுக்கு ஏற்பட்டு விட்டதே என்கிற மனக்கிலேசம் அவருக்கு.

பாதையில் இருமருங்கிலும் காடாக வளர்ந்து கிடக்கும் காட்டுச் செடிகளை விலக்கி, வழி உண்டு பண்ணிய வண்ணம் போலீஸ் ஜவான் அவரைப் பிணம் கிடக்கும் இடத்துக்குக் கூட்டிப் போகிறான்.

கைலியை மடித்துக் கட்டியபடி ஓடையை நோக்கிப் போகையில், அஸன் ராவுத்தரை எதிர் கொண்ட இன்ஸ்பெக்டர் பாலையன்

"பாய் ஒங்களுக்காவ வேண்டித்தான் காத்துக் கிட்டிருந்தோம். நல்ல வேளை நீங்களே வந்துட்டீங்க. பொணம் ஒங்க சம்மந்தப்பட்டதுண்ணு சொல்றாவ. அடையாளம் காட்ட வேணம்" என்று சொல்லவும், தொப்பியை விலக்கி, மொட்டை மண்டையில் துளிர்க்கும் வியர்வையைத் துடைத்துக் கொண்டே

"மச்சான் ஊரைவிட்டுப் போயி ஒரு மாசம் ஆவுது. வாணியம்பாடிக்குச் சொந்தக்காரங்க ஊருக்குப் போயிருக்கார்" என்று தனது சந்தேகத்தைப் பாலையனோடு பகிர்ந்து கொண்டபடியே மணல் திட்டை வந்தடைந்த போது, சாக்கினால் பொதியப் பட்டுக் கிடக்கும் பிணத்தைப் பார்த்ததும் ஹஸன் ராவுத்தர் திடுக்கிட்டுப் போனார். இதயம் படபடக்கச் சிரசில் இரத்தக் குழாய்கள் கனத்து வேதனை ஏற்பட்டது.

பாலையனுக்கு முஸ்தாபா மீரானை நன்றாக அடையாளம் தெரியும் என்ற போதும், உறவினர் அடையாளம் சொல்ல வேண்டும் என்பதற்காகவே அப்படிப் பேச்சுக் கொடுத்தான்.

முஸ்தாபா மீரானின் முகம் வீங்கி பார்ப்பதற்கு விகாரமாக இருந்தது. கண் விழிகள் பிதுங்கி, யாரையோ மிரட்டும் தோரணையில் நாக்கு வாயை விட்டு வெளியே துருத்திக் கொண்டிருக்கிறது.

பிணத்தைச் சுற்றி, சப்-இன்ஸ்பெக்டர், தாஸில்தார் அமலநாதன் மற்றும் பிணத்தைச் சுமந்து செல்வதற்கான முனிஸிப்பல் சிப்பந்திகள் ஆகியவர்கள் நின்று கொண்டிருக்கின்றனர்.

சூரிய வெப்பம் அதிகமாக இல்லை. இரண்டு நாட்களுக்கு முன்னால் மழை பெய்திருந்ததால் ஓடையில் தெளிந்த நீர் சலசலத்துக் கொண்டிருந்தது.

பிணவாடையுடன், சிப்பந்திகளின் மூச்சில் கலந்து வெளிபடும் சாராய வாடையையும் சகிக்க முடியாமல், அஸன் பாய் தூவாலையால் நாசியைப் பொத்திக் கொண்டு, பிணத்தினை குனிந்து பார்க்கிறார். சந்தேகமே இல்லை. பிணம், முஸ்தாபா மீரான் தான் என்று உறுதிப்படவும்,

"ஹரே, அல்லா என்ன ஹராம்டா இது" என்று தன்னை அறியாமலே வாய்விட்டுக் கதறிய அஸன் ராவுத்தர் எதையோ தேடுவது போல் ஆகாயத்தை அண்ணாந்து பார்க்கிறார்.

"அய்யா, பொணம் என் மச்சான் முஸ்தாபாவே தான்" பாலைய்யாவைப் பார்த்துத் தொண்டை கனக்கச் சொன்னார், அஸன் ராவுத்தர்.

6

முஸ்தாபா மீரானின் கொலை பேகம்பூரிலும், தோல் ஷாப்புகளிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

அந்த நகரத்தின் சரித்திரத்திலேயே இப்படி மர்மமான முறையில் கொலை நடந்தது கிடையாது. அதிலும் அந்தப் பகுதியில் எல்லோர் கண்ணிலும் விரலைவிட்டு ஆட்டிக் கொண்டிருந்த ஒரு சண்டியர் அனாதைப்பிணமாக ஓடையில் கிடந்தது எல்லோரையும் வியப்படையச் செய்திருந்தது.

கொலை நடந்து ஒரு மாத காலம் ஆன போதும் துப்புத்துலக்க முடியாமல், காவல்துறை திணறிக் கொண்டிருந்தது. உதவி-சூப்பிரண்டு வெள்ளைத்துறையின் இத்தனை ஆண்டு சர்வீஸில் இப்படி ஒரு இக்கட்டான நிலைமையைச் சந்தித்தது கிடையாது. எனவே, எப்படியாவது இரண்டு போக்கிரிகளைப் பிடித்துப் போட்டு வழக்கை ஜோடித்துவிடலாம் என்று வெள்ளைத்துரை எண்ணியபோதும், கொலையுண்ட மனிதன் நகரத்தில் செல்வாக்குள்ள குடும்பத்தைச் சேர்ந்தவன் என்பதாலும், முஸ்லிமானாக இருப்பதாலும், காய்களை மிகவும் கவனமாக நகர்த்த வேண்டியிருந்தது. அல்லாமலும், சீக்கிரமாகத் துப்புத் துலக்கியாக வேண்டி உள்ளது. மேல் மட்டத்திலிருந்து, அதிகாரிகள் வேறு கேள்விமேல் கேள்வியாகக் கேட்டுக் கொண்டிருக்கின்றனர்.

வெள்ளைத்துரை நினைப்பது போல், தனது இச்சைப்படி வழக்கை ஜோடனை செய்ய முடியாது. ஏனெனில் சம்மந்தப்பட்ட சரகப் போலீஸ் இன்ஸ்பெக்டர் பாலையன் ஒரு வகையான முசிடுப் பேர்வழி. அரசியல் ரீதியாக மேல் மட்டத்தில் செல்வாக்குக் கொண்ட மனிதன். ஒரு வகையில் நேர்மையான மனிதன் என்பதோடு ஓரிரு மாதங்களில் பதவி உயர்வு பெற்று வெள்ளைத்துரைக்குச்

சமமான பதவியை வகிக்கப் போகிறவன் என்பதால், பாலையனை மிரட்டவும் முடியாது.

நகரம் முழுவதும், முஸ்தாபா மீரானுக்கு எதிரிகள் இருப்பதாலும், அவன் ஒரு போக்கிரி என்பதாலும், ஆகாத போகாத போக்கிரிகளைப் பிடித்துப் போட்டுக் கதையை முடித்துவிடலாம் என்கிற தனது மேலான யோசனையைப் பாலையனிடம் மறைமுகமாக வைத்த போது, இன்ஸ்பெக்டர் அந்த யோசனைக்கு எதிராக உள்ளதோடு ஏற்க மறுத்தான். வெள்ளைத் துரை அத்தகைய யோசனையை உதறிவிட்டுப் பாலையனை மட்டும் சீக்கிரமாகத் துப்புத்துலக்க வேண்டும் என்று நச்சரித்துக் கொண்டிருந்தான்.

அஸன் ராவுத்தரையும், அவர் குடும்பத்தையும் பொறுத்த மட்டில், முஸ்தாபா மீரானின் மரணத்தை விட, அவனது மரணத்தால் ஏற்பட்ட அவமானம் பொறுக்க முடியாததாக இருந்தது. அல்லாமல், முஸ்தாபா மீரானின் மரணத்தில் ஏற்பட்ட முடிச்சு அவிழ்க்க முடியாத புதிராகப்பட்டது.

பிணமானது பெரிய பள்ளிவாசலுக்குப் பின்பக்கம், ஓடையில் அதிலும், பள்ளிவாசல் இடுகாட்டுக்கு அருகாமையிலும் கிடந்ததால், முஸ்தாபாவை யாராவது முஸ்லீம் தான் கொலைசெய்திருக்க வேண்டும் என்பது ஹாஜியாரின் ஊகம். அதிலும் பெரிய வீட்டுக்காரனின் பெண்களை அவன் ஏமாற்றிவிட்டிருப்பதால் பெரிய வீட்டுக்காரர்களால் அவன் கொலை செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று பலத்த சந்தேகம். ஆனால் பெரிய வீட்டு மனிதர்கள் நகரத்தில் தன்னையும் மீறிய பணக்காராக இருப்பதோடு, இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர்களுக்கு மிகவும் நெருக்கமான செல்வாக்குக் கொண்டவர்கள். எனவே, வெளிப்படையாக அவர்களைப் பகைத்துக் கொள்ள அவரது வியாபார புத்தி இடம் கொடுக்கவில்லை.

இவ்வாறு முஸ்தாபா மீரானின் மரணம் பற்றிப் பலரும் பலவிதமாகக் கற்பனை செய்து கொண்டிருக்கும் வேளையில்தான், ஒரு ஞாயிற்றுக் கிழமை முற்பகல் சேம்பர் செயலாளர் மக்தூன் மீரான், அவசர அவசரமாக அஸன் ராவுத்தரைச் சேம்பர் கட்டிடத்துக்கு வரவழைத்தார்

எப்போதும் போலவே, தோல் ஷாப்பு முக்கிய புள்ளிகள் அனைவரும் கூடியிருந்த கூட்டத்தில், மீரானின் மரணத்தைச் சுற்றிச் சுழலும் மர்மத்தை உடைத்துவிட்டதே போல் நாயுடு ஷாப்பு முதலாளியும், மெட்ராஸ் அய்யரும் விவரம் சொன்னார்கள்.

அஸன் ராவுத்தரைப் பொறுத்தமட்டில், கூட்டத்தில் கலந்து கொண்ட முக்கிய உறுப்பினர்கள், ஒரு கல்லில் இரண்டு மாங்காயை வீழ்த்தும் உபாயத்தைச் சொன்ன போது ஏற்றுக்கொள்ள சற்றுத்தயக்கமாகவே இருந்தது. என்ன இருந்தாலும் மெக்கா புனித பயணம் போய் விட்டு வந்தவர்

"என்ன வேணண்டாலும் சொல்லுங்கோ, மனம் அறிஞ்சு இந்த அராத்தைச் செய்யறது நாயமாப்படலை" என்று முதலில் மறுத்துப் பார்த்தார்.

"அத்தா செத்துப் போன ஒங்கட மாப்ளை உசிரோடவரப் போரதில்லை. போலீஸ்காரங்களாலும் துப்புத் தொலக்க முடியலை. நல்லா ரோசனை பண்ணிப் பாருங்கோ. இதுல கோத்து விடலையானா இந்தப் பயலுவ நம்மளை வாழ விட மாட்டாங்க" என்று சேம்பர் செயலாளர் மக்தூன் மீரான் சொன்னதைக் கேட்டு ஹாஜியார் தயங்கிய போது

"மாமா கொஞ்சம் ரோசனை பண்ணிப் பாருங்கோ. மாப்பிள்ளை சாவுரதுக்கு ரெண்டு நாளைக்கி முன்னாலே தானே சங்கத்துக்காரங்க ஊர்வலம் வந்து ஆர்ப்பாட்டம் பண்ணானுவ. சின்னக்கிளியைக் கொண்ண முஸ்தாபா மீரானைக் கைது செய்யுண்ணு. ஊர்வலமா கோஷம் போட்டுட்டு வந்தாங்களே மறந்து போச்சா" என்று நாயுடு கேட்ட போது

"பழிக்குப் பழி. சின்னக் கிளியக் கொண்ணவனைச் சும்மாவுட மாட்டோம்ண்ணு கண்ட மேனிக்குக் கோஷம் போட்டவனுவ சும்மா இருப்பான்களா. எனக்கு என்னமோ அவங்க தான் அத்தாவோட மாப்பிள்ளையத் திட்டம் போட்டுக் கொலை செய்திருக்க வேணும்" இப்படி ஒரு துப்பறியும் நிபுணர் மாதிரி சகாய மாதா தோல் ஷாப்பு

முதலாளி வேத சிரோன்மணி சொன்ன போது, ஹாஜியாருக்கு உள்ளூற ஒருவிதமான ஐயப்பாடு ஏற்பட்டுப் போனது. என்னவானாலும், ஏனைய தோல் ஷாப்புகளை விடத்தானும் தனது தோல் ஷாப்பு மீதும் தனது மைத்துனன் பாலும், வன்மம் வைத்திருக்கும் தோல் பதனிடும் தொழிலாளர்களை இந்த வழக்கில் கோர்த்துவிடுவது உசிதம் எனப்பட்ட போது தனது உள்ளக் கிடக்கையை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ள விரும்பாத அஸன் முகம்மது யோசனை செய்வது போல் உட்கார்ந்திருந்தார். பிறகு, வழக்கம் போலத் தனது தொப்பியைக் கழற்றி மொட்டைத் தலையையும் தாடியையும் வருடி பிடறியைச் சொரிந்து கொண்டார்.

"சரி நீங்க அல்லாம் சொல்றதைப் பாத்தா எனக்கும் சங்கத்துப் பயவ மேலே சந்தேகம் தான் ஏற்படுது. இன்ஸால் அல்லா நமக்கு நாயம் கிடைச்சா சர்தான்" என்று பட்டும்படாமலும் பேசவும்

"பாய் ரோசனை பண்ணாதீங்க. போனவன் போயிட்டான். ஆருகொண்ணாக எண்டெல்லாம் பல்லான படியக ரோசனை பண்ணப் படாது நமக்கு எது நல்லதின்னுபடுதோ, அதை நாம செய்தாவ வேணம்" என்று திரும்பவும் வேத சிரோன் மணி, கர்த்தர் மேல் பாரத்தைப் போட்டு, அஸன் ராவுத்தருக்கு ஆலோசனை சொல்லவும் ஹாஜியார் மனம் இறங்கி வந்து ஒப்புதல் அளிக்கவும், சேம்பர் மூலமாகவே, பிராது தாக்கல் செய்ய வேண்டும் என்று ஒரு மனதாக முடிவு செய்து தோல் ஷாப்பு உடைமையாளர்கள், உதவி-சூப்பிரண்டு வெள்ளைத் துரையைப் பார்க்கக் கிளம்பிப் போனார்கள்.

●

தோல் ஷாப்பு முதலாளிகளும், அஸன் ராவுத்தரும், உதவி-சூப்பிரண்ட் வெள்ளைத்துரையின் கேம்ப்-ஆபீசுக்குப் போனபோது, வெள்ளைத்துரை தனது அறையில் இன்ஸ்பெக்டர் பாலையயனுடன் முஸ்தாபா மீரான் கொலை சம்மந்தமான விவாதத்தில் ஈடுபட்டிருந்தான். கொலை சம்மந்தமாகப் பல ரகஸ்ய தகவல்கள் கிடைத்திருப்பதால்,

வேற்று மனிதர்கள் கவனத்துக்குப் போய்விடக் கூடாது என்கிற எச்சரிக்கை உணர்வோடு சப்-இன்ஸ்பெக்டர் பலவேசத்தை அறைக்கு வெளியே காவலுக்கு நிறுத்தி வைத்திருந்தான்.

முஸ்தாபா மீரானின் கொலை சம்மந்தமாக யாரும் கைது செய்யப்படாமையாலும், துப்புத்துலக்கும் பணி மந்தகதியில் போய்க் கொண்டிருப்பதாலும் ஜில்லா சூப்பிரண்டே இரண்டு முறை வெள்ளைத் துரையை நேரில் வரச் சொல்லி எச்சரித்திருக்கிறார்.

உண்மையில், பாலையனைப் பொறுத்த மட்டில் கொலை சம்மந்தமாகத் துப்புத் துலக்கும் பணி, வெள்ளைத்துரையும் மற்றவர்களும் நினைப்பது போல் மந்தகதியில் நடைபெறவில்லை. மாறாக பாலையன் தோட்ட குத்தகைதாரரான பூச்சிநாயக்கனது மனைவி இரண்டாம் குடியாளை மிகவும் சிரமப்பட்டு ஒரு வாரத்துக்கு முன்னால் கைது செய்து, ரகஸ்யமான இடத்தில் வைத்து விசாரித்த போது, கொலை நடைபெற்றதாகக் கருதப்படும் நாளில், பூச்சி நாயக்கன் தோட்டத்தில் இருக்கவில்லை. தனது இரண்டாம் மனைவியையும் பிள்ளைகளையும் பார்ப்பதற்காகப் பன்றி மலை போயிருக்கிறான். அன்றைய தினம் அவனது வைப்பாட்டியான சக்கிலியப் பெண் சிட்டம்மாள் மட்டும் தோட்டத்துக் கொட்டத்தில் தனியாக இருந்திருக்கிறாள். ஆனால் முஸ்தாபா மீரானுக்கு வெகு நாட்களாக சிட்டம்மாள் மீது ஒரு கண் இருந்ததாகவும், பல நாட்கள் அவளை அடைய அவன் முயற்சி செய்ததாகவும் சிட்டம்மாள் நாயக்கரிடம் ஆவலாதி சொல்லியிருக்கிறாள். எனவே கொலையாளியைத் தான் நெருங்கி விட்டதாகவும், பூச்சிநாயக்கனையும் சிட்டம்மாளையும் பிடித்துவிட்டால், கொலையாளியைச் சுலபத்தில் கண்டுபிடித்து விடலாம் என்கிற விவரத்தை வெள்ளைத்துரையிடம் பாலையன் சொல்லிக் கொண்டிருக்கும் போதுதான் கதவைத் திறந்து கொண்டு உதவி-சூப்பிரண்டு அறையுள் வந்த சப்-இன்ஸ்பெக்டர் பலவேசம், தோல் ஷாப்பு முதலாளிகள், மகஜர் கொடுக்க வந்திருக்கும் விவரத்தைச் சொல்லவும் பேச்சுப் பாதியில் நின்றது.

வந்திருப்பவர்கள் நகரத்தின் செல்வாக்கு மிக்க பிரமுகர்கள். அவர்களை வரவேற்பதில் தாமதம் காட்ட முடியாது. மட்டுமல்லாமல் வெள்ளைத்துரைக்குத் தேவைப்பட்ட போதெல்லாம் பணமும், பொருளும் கொடுப்பவர்கள்.

பிறைவடிவில் வழுக்கை விழுந்து போன தலையையும், அம்மைத் தழும்பு படிந்த தனது விகாரமான முகவிலாசத்தையும் வருடிய படியே உட்கார்ந்திருந்த வெள்ளைத்துரை, சேம்பர் முதலாளிகள் கூட்டமாக வந்திருக்கும் காரணம் புரியாமல் திகைத்தான்.

தோல் ஷாப்புகளில் ஏதாவது பிரச்சனை ஏற்பட்டிருக்குமோ என்று சந்தேகம் தோன்ற பாலையனை வெள்ளத்துரை ஏறிட்டுப் பார்த்தான். பார்வையிலிருந்தே ஊகம் செய்து கொண்ட பாலைய்யன்

"அப்படிச் சிக்கலான பிரச்சனை ஏதும் நான் அறிய ஏற்படலை ஸார்" என்றான்.

முஸ்தாபா மீரான் கொலை சம்மந்தமான பைல்களை மூடி வைத்த உதவி-சூப்பிரண்ட்,

"பிரச்சனை என்னவென்று கேட்டுத்தானே ஆகவேண்டியிருக்கு" என்று பாலையனைப் பார்த்துச் சொன்ன வெள்ளைத்துரை

"மிஸ்டர் பாலையன் நீங்க போக வேண்டாம். சில சமயம் சட்டம் ஒழுங்கு பற்றிப் பேசினாலும் பேசலாம்" என்று இன்ஸ்பெக்டரிடம் சொன்னவன்

"சரி! அவங்களை வரச் சொல்லு" பலவேசத்தினிடம் சொன்னான்.

பாலையன் சுவர் ஓரமாக ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்தான். அஸன் ராவுத்தரும், ஏனைய தோல் ஷாப்பு முதலாளிகளும் கூட்டமாக அறையுள் நுழைந்தனர் வெள்ளைத்துரை அவர்களை உட்காரும்படி சமிக்கை செய்த போது, அஸன் ராவுத்தர் மட்டும் அருகில் வந்து, தயார்

செய்யப்பட்டிருந்த மனுவை வெள்ளைத்துரையிடம் நீட்டினார். ஏறிட்டுப் பார்த்த போது வழக்கத்திற்கு விரோதமாக அவர் முகம் இறுக்கம் கண்டிருந்தது.

மகஜரை வாங்கிப் படித்த வெள்ளைத்துரை சம்மந்தப்பட்ட அதிகாரியான பாலையனிடம் கொடுத்தான்.

"இந்த விஷயத்தில் நாங்கள் அவ்வளவு மெத்தனமா இருக்க மாட்டம். இப்பக் கூட நீங்க வறதுக்கு மின்னாடி அந்த விஷயமாக நானும் இன்ஸ்பெக்டரும் டிஸ்கஸ் பண்ணிட்டு இருந்தம்" வெள்ளத்துரை சொன்னான்.

அவர்களுக்கு வெள்ளத்துரையின் பதில் திருப்தி தரவில்லை. அதை உணர்ந்த வெள்ளைத்துரை

"விசாரணை எந்த அளவில் இருக்குண்ணு போலீஸ் உங்களுக்குத் தகவல் தரமுடியாது. குற்றவாளிகளை நாங்க நெருங்கிட்டோம். வெகு சீக்கிரம் அவங்களை நாங்க அரஸ்ட் செய்திடுவோம்" உத்தியோக முறையில் பதில் சொன்னபோது, அஸன் ராவுத்தரின் முகம் மேலும் இறுக்கமடைந்தது. ஒரு வித வெறுப்புணர்வோடு, ஹாஜியார் தன்னைப் பார்க்கிறார் என்பதை உணர்ந்து கொண்ட வெள்ளத்துரை,

"ஏன் எங்களோட விசாரணையில் அஸன்பாய்க்குத் திருப்தி இல்லையா? என்று நேரடியாகவே கேட்டான்,

"ஐயா, கொலையாளிங்க யாருண்ணு இந்த ஊருக்கே தெரியும். ஒங்களுக்கு மட்டும் தெரியாமப் போச்சேண்ணு ஆச்சரியமா இருக்கு" என்று வரதராஜலு நாயுடு சொல்லவும் பாலையனும், வெள்ளத்துரையும் வியப்புடன் அஸன் ராவுத்தரையும் மற்றவர்களையும் மாறி மாறிப் பார்த்தார்கள்.

"கொலையாளிக யாருண்ணு தெரிஞ்சுக்கிட்டே நீங்க மௌனமாக இருக்கீக. அவ்வளவுதான் எங்களால சொல்ல முடியும்" அஸன் ராவுத்தர் தனது தாடியை வருடி விட்ட வண்ணம் சொன்ன போது, வெள்ளத்துரை விக்கித்துப் போனான்.

"என்ன சொல்றீங்க பாய்" தொண்டை கனக்கக் கேட்டான்.

இன்ஸ்பெக்டர் பாலையனுக்கு உள்ளூற கோபம் மூண்டது. தனது நேர்மையான இன்வெஸ்டிக்கேஷனைப் பற்றி யார் குறை சொன்ன போதும் அவனுக்குப் பிடிக்காது.

"பாய், என்ன ஆதாரத்தை வெச்சு இப்படிப் பேசறீங்க. ஊரிலே கண்ட கண்ட பசங்க கிளப்பி விடற வதந்திகளை எல்லாம் வச்சு நாங்க விசாரணை நடத்த முடியாது" வெள்ளத்துரையின் எச்சரிக்கையையும் பொருட்படுத்தாமல் பாலையன் சொல்லவும்

"வதந்தி கெடையாது இன்ஸ்பெக்டர் ஸார். சின்னக்கிளியக் கொண்ண முஸ்தாபாவைக் கைது செய்யின்னு ஊரெல்லாம், தெருவெல்லாம் தட்டி எழுதி வச்சிருக்கது ஆரு. ஊர்வலம் விட்டுக் கோஷம் போட்டானுவளே. அதுவுமா ஒங்களுக்குத் தெரியாமல் போச்சுது" சேம்பர் செயலாளர் மக்தூன் மைதீன் வாழைப்பழத்தில் ஊசியைச் சொருகுவது போல் பேசவும்.

"அது அவங்களோட உரிமை பாய்" பாலையன் சொன்னான்.

"கொலைகாரனைச் சும்மாவுட மாட்டமின்னு கூட்டம் போட்டுப் பயமுறுத்தியிருக்காங்க. சும்மா மெரட்டலா அது" நாயுடு சாதுரியமாகச் சொன்ன போது வெள்ளத்துரை மட்டும் ஏதும் பேசாமல் மௌனமாக இருந்தான்.

"இவங்களை இப்படி உட்டு வச்சீங்களோ ஒரு நாளைக்கு எங்களையும் போட்டுப் பாத்திடுவாங்க. ஒங்க மெத்தனத்தால அது தான் நடக்கப் போவுது" சகாய மாதா தோல் ஷாப்பு முதலாளி, மிரட்டுவது போல் பேசலானார்.

வரதராஜ் நாயுடுவுக்கும், வேத சிரோன்மணிக்கும், முத்தரப்புக் கூட்டத்தில் தங்களை அவமதித்த தோல் ஷாப்புத் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளை எப்படியாவது பழிவாங்கிவிட வேண்டும் என்கிற ஆத்திரம்.

"சத்தியம் அசத்தியமெல்லாம் நமக்குத் தெரியாது. ஈஸ்வரனுக்குத் தான் வெளிச்சம். ஆனா, சந்தர்ப்பச் சூழ்நிலைகளை வெச்சுப் பாக்கிறச்சே, இந்தச் சங்கத்துக்காரா மேலேதான் ஐயம் ஏற்படறது. மேலும் அவா எல்லாம் லோ கிளாஸ் பீப்பிள் பாருங்கோ, கொலை பழிக்கு அல்லாம் அஞ்ச மாட்டா. அவாளோட சைக்காலஜியையும் கணக்கில் எடுத்துண்டு பார்த்தா, அவாளைத் தவித்து வேறு யாரு இந்த நீசத்தனத்தைப் பண்ணியிருப்பா நீங்களே சொல்லுங்கோ."

அய்யர் ஷாப்பு முதலாளி பிராசிக்கியூஷன் வக்கில் மாதிரி. பேசிய போது பாலையனுக்கு ஆத்திரமும் கோபமும் தாங்க முடியவில்லை.

"அனுமானத்தை வச்சுக் கொண்டு ஒருவனைக் கொலையாளிண்ணு சொல்ல முடியுமா சாமி" பாலையன் கேட்ட போது, கையமாத்திக் குறுக்கிட்ட வெள்ளத்துரை,

"அவங்க சொல்றதிலே இருக்க நியாயத்தையும் நாம பார்க்க வேணாமா மிஸ்டர் பாலையன்" என்று பாலையனை மூக்கறுப்பவன் போல் பேசினான்.

வெள்ளத்துரையைப் பொறுத்த மட்டில் தூண்டில் காரனுக்கு மிதப்பு மீது கண் என்பது போல், இந்த வழக்கைச் சாக்காக வைத்துக் கொண்டு, தோல்ஷாப்பு முதலாளிகளிடம் கறக்கப் போகும் பணத்தைப் பற்றிய சிந்தனை.

வெள்ளைத்துரை தங்கள் பக்கம் சாயத் தொடங்கியுள்ளான் என்பதை ஊகித்த சேம்பர் செயலாளர் மக்தூண் மைதீன் சிட்டிகை பொடியை அள்ளி நாசிக்குள் கிட்டித்துச் சுருதி கூட்டிய வண்ணம் பேச ஆரம்பித்தான்

"ஐயா, இவங்களைத் தவித்து வேறு ஆரும் இந்தக் கொலையச் செய்திருக்க மாட்டாங்க. இந்த வேசை மக்களைப் புடிச்சுப் போடறதிலேயும், வழக்கை நடத்தித் தொண்டனை வாங்கிக் குடுக்கறதிலேயும், எம்புட்டுச் செலவானாலும் சரி அம்புட்டுச் செலவையும் சேம்பர் ஏத்துக்கத் தயாராக இருக்கு"

மக்தூன் மைதீனின் பேச்சைக் கேட்டபோது வெள்ளைத்துரையின் விகார முகம் மலர்ந்தது. அவனது உதட்டுக் கோடியில் முறுவல் வெட்டி மறைந்தது.

"தேவடியா மவன் விலை போயிட்டானே" பாலையன் தனக்குள்ளேயே கறுவிக் கொண்டான்.

வெள்ளைத்துரை, வெளிப்படையாக எதையும் காட்டிக் கொள்ளாத மட்டில், பாலையன் கையில் கொடுக்கப்பட்ட மகரைத் திரும்பவும் வாங்கிப் படிப்பது போல் பாசாங்கு செய்தான்.

"சரி! நிச்சயமா உங்களுக்கு வேண்டியதை அரசாங்கமும் போலீசும் செய்யும். கவலைப்படாமல் நீங்க போகலாம்" என்றான். வெள்ளைத்துரை தங்களது வலையில் சிக்கிவிட்டான் என்கிற திருப்தி வியாபாரிகளுக்கு

தோல் ஷாப்பு முதலாளிகள் அறையை விட்டு வெளியேறியதும்,

"டேனரி ஒர்க்கர்ஸ் யூனியன் ஆட்களை இன்னைக்கே கைது செய்ய ஏற்பாடு செய்ங்க மிஸ்டர் பாலையன்" என்று அவன் உத்தரவாகச் சொன்னபோது, மலைத்துப் போன இன்ஸ்பெக்டர்

"ஆதாரம் இல்லாம கைது செய்யறது சரிதானா சார்?" உள்ளில் மூண்ட கோபத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல் பாலையன் கேட்டான்.

"ஆதாரம் எல்லாம் அப்புறம் பாத்துக்கலாம். உத்தரவை நிறைவேற்றுங்க மிஸ்டர் பாலையன்" என்று கடுமையாகச் சொல்லி விட்டு, வெள்ளைத்துரை அறையை விட்டு எழுந்து போனான்.

7

சென்னையிலிருந்து ரெயிலில் வந்த சங்கரன் ரெயிலடியில் முதல் வகுப்புப் பெட்டியிலிருந்து இறங்கிய போது, அவரை முதலில் வரவேற்ற நபர் பாயின்ட்ஸ்மேன் ரெங்கக் கோனார் மட்டும்தான்.

சாதாரணமாக ரெயிலடியில் அவரை வரவேற்றதற்காக ஸ்டேஷனுக்கு வரும் ஓசேப்பும், மினிசாமியும் வராதது வியப்பாகப் பட்டது. அல்லாமலும் ஒரு முக்கியமான தகவல் சொல்ல வேண்டியிருந்ததால் ஆசிரியர் இருதயசாமியும் ஸ்டேஷனுக்கு வருவதாகச் சொல்லியிருந்த போதும், அவரும் வரவில்லை. மாறாக ரெங்கக் கோனார் மட்டும் வழக்கம் போல முதல் வகுப்புப் பெட்டி நிற்கும் இடத்தில் சங்கரனுக்காகக் காத்து நிற்கிறார்.

பாயின்ட்ஸ்மேன் ரெங்கக் கோனார், சுந்தரேச அய்யர் காலத்து ஆள். சங்கரனைச் சின்ன வயது முதல் தெரியும். சுந்தரேசய்யர் குடும்பத்துக்குச் சேவை செய்வது, தனது பிறவிக்கடன் போல் பாவிப்பவர். இந்தப் பழக்கத்தின் காரணமாக ரெங்கக் கோனாருக்கு, சங்கரன் இப்போதுமே பாலகன் தான். சங்கரனைப் பொறுத்த மட்டில் ரெங்கக் கோனார்பால் அலாதியான பிரியம். ஸ்டேஷனுக்கு வந்தார் என்றால் பாயின்ஸ்ட்மேன் ரெங்கனைப் பார்க்காமல் இருக்க மாட்டார்.

ரெங்கக் கோனாரைப் பொறுத்த மட்டில், சுந்தரேச அய்யர் மட்டும் இல்லையென்றால் மதுரையிலேயே அவர் வாழ்க்கை அஸ்தமித்துப் போயிருக்கும். எனவே, சுந்தரேச அய்யர் குடும்பம் ரெயிலடிக்கு வந்தால் அவர்களுக்கு ரெங்கன் செய்யும் பணிவிடைகளைப் பார்த்து ஐயப்பட்டு யாராவது கேட்டார்கள் என்றால்

"என்னய்யா சொல்றீங்க, நான் ஒரு ஜென்மம் பூரா அய்யர் அவுஹ குடும்பத்துக்குப் பணிவிடை செஞ்சாலும் தீராது. நான் இண்ணெக்கித் திங்கற சோறு அய்யர் சாமி போட்ட பிச்சை" என்று பெருமிதம் ததும்பச் சொல்லி மகிழ்வார்.

உண்மையில் சுந்தரேச அய்யர் மட்டும் இல்லை யென்றால், மதுரையில் குட்ஸ் கிளார்க் சின்னமணி செய்த சதியால், ரெங்கக் கோனாருக்கு ரெயில்வே ஊழியர் வேலை போனது மட்டுமல்லாமல் பல ஆண்டுகள் சிறைச் சாலைக்குள் தள்ளப்பட்டிருப்பார்.

பாயின்ட்ஸ்மேன் ரெங்கக் கோனாருக்கு மதுரை மதிச்சியம் பூர்வீகம். மிகவும் ஏழ்மையான குடும்பம். பால் விற்றுத்தான் குடும்ப ஜீவனம். எப்படியோ ரெயில்வே குட்ஷெட்டில் வேலை கிடைத்திருந்த நேரம்.

அப்போது சுந்தரேச அய்யர், வைத்திய நாதய்யருடன் சேர்ந்து, தேச சேவையிலும், வக்கீல் தொழிலும் ஈடுபட்டிருந்தார். அய்யர் வீட்டுக்குப் பால் ஊற்றுவது ரெங்கக் கோனாரின் தாயார் எசக்கியம்மாள். அய்யர் மனைவி அம்புஜத்தம்மாவுக்கு எசக்கியம்மாள் என்றால் மெத்த பிரியம்.

இப்படி இருக்கும் போதுதான் குட்ஸ் கிளர்க் சின்ன மணியும், ரெயில்வே போலீஸ் ஜவான் இன்னாசிமுத்தும் சேர்ந்து, குட் ஷெட்டுக்கு வாகனில் வந்த நெல் மூட்டைகளைத் திருடி விற்றுவிட்டு ரெங்கக் கோனாரைக் கையைக் காட்டிவிட்டனர். அப்பாவியான ரெங்கன் திருட்டுக் குற்றம் சுமத்தப்பட்டு, ரிமாண்டில் வைக்கப்பட்டது மட்டுமல்லாமல் தற்காலிகமாக வேலை நீக்கமும் செய்யப்பட்டான். எசக்கியம்மாளால் ஏதும் செய்ய முடியவில்லை. அம்புஜத்தம்மாளிடம் தான் அவளால் முறையிட்டு அழமுடிந்தது.

அந்தக் குடும்பத்தின் ஏழ்மையையும் வஞ்சகமற்ற தன்மையையும் நன்கறிந்திருந்த சுந்தரேச அய்யர் எந்தவிதமான சன்மானமும் பெற்றுக் கொள்ளாமல்

ரெங்கனுக்காக நீதிமன்றத்தில் ஆஜராகி, விடுதலை வாங்கிக் கொடுத்ததுமல்லாமல், குட்ஸ் கிளர்க்கும் ரெயில்வே பாதுகாப்புப் படை ஜவானும் சேர்ந்து கொள்ளையடித்ததை மறைத்து, அப்பாவியான ரெங்கக் கோனாரைப் பலிகடா ஆக்கிய சதியையும் அம்பலப்படுத்தி ரெங்கன் இழந்த வேலையையும் வாதாடி திரும்பப் பெற்றுக் கொடுத்தார். அன்றிலிருந்து ரெங்கனது குடும்பமே சுந்தரேச அய்யர் குடும்பத்தின்பால் அலாதியான பக்தி விசுவாசம் மிக்க குடும்பமாகிப் போனது.

ரெங்கக் கோனாருக்குச் சங்கரனைச் சிறு வயது முதல் தெரியுமானதால், சங்கரன் அவருக்குச் சிறு பையன் தான். எனவே, மரியாதை விகுதி எல்லாம் போட்டு அழைக்கமாட்டார். ஒருமையில் அதுவும் பெயரைச் சொல்லித்தான் அழைப்பார், அவ்வளவு நெருக்கம்.

சங்கரன் முதல் வகுப்புப் பெட்டியிலிருந்து இறங்கவும், ரெங்கக் கோனார் வழக்கம் போல், சங்கரன் கையில் இருக்கும் தோல் சூட்கேஸை வாங்கப் போனார்.

"மாமா, நான் என்ன நொண்டியா, முடமா. சும்மா என் பின்னாலே வாங்கோ" என்று அவர் முதுகைத் தட்டிக் கொடுத்த வண்ணம், பிளாட் பாரத்தில் சங்கரன் இறங்கி நடந்தது. ரெங்கக் கோனாருக்கு வியப்பாகப் பட்டது. முகம் கூட சுருங்கிப் போனது.

"அம்பீ! என்ன சொல்லுதே புதுசா இருக்கு. நா ஒம் பெட்டியத் தொடக் கூடாதா என்ன"

இதற்கு முன்னால் எல்லாம், சங்கரன் இப்படி நடந்து கொண்டது கிடையாது.

"என் மேலே என்ன கோவமா?" திரும்பவும் கேட்டார் இப்படிப் பேசவும், ஒரு கணம் திரும்பி நின்று அவர் முகத்தைப் பார்த்துச் சிரித்த சங்கரன்

"மாமா. நீங்களெல்லாம் என்னைவிட எவ்வளவோ வயசுக்கு மூத்தவா. நேக்கு உங்களோட பிள்ளையாண்டான் வயசு. என் பெட்டியவும் படுக்கையவும் உங்களைச் சுமக்க

விட்டுட்டு நான் கையை வீசிண்டு நடந்து வர்ரது எவ்வளவு அசூயை பாருங்கோ, அநாகரிகம். என்னோட லக்கேஜை நானே எடுத்துண்டு போரது தானே நாயம். நாகரிகம்" என்று சொல்லவும்

"சரி! நாயுடு ரெஸ்டாரண்டிலே நான் வாங்கித் தர்ர காப்பியையாச்சும் சாப்பிடலாமில்லையா. அதுக்கும் நான் பணம் கொடுக்கலாமா. இல்லே....." என்று கேட்ட வண்ணமே சங்கரனது இடது கையில் இருந்த தலையணையை மட்டும் ரெங்கக் கோனார் வாங்கி, கட்கத்தில் வைத்துக் கொள்ளவும்.

"ஓ! பேஷா. டிபன் கூட பண்ணிட்டுத்தான் போகப் போறேன்" என்று முறுவல் செய்தவண்ணம் சொன்ன சங்கரன்

"பாவம், சுப்புண்ணி மாஸ்டரைத்தான் பாலக் காட்டுக்கு மாத்திட்டாங்க. எப்படி இருக்கார். மாத்தலானதுக்கப்புறம் வந்திட்டுப் போனாரோ" சங்கரன் கேட்ட போது ரெங்கக் கோனாரின் முகம் மேலும் கருத்தது.

சமீபத்தில் நடைபெற்ற தென்னிந்திய ரெயில்வே ஊழியர்கள் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கு பெற்றதன் காரணமாகப் பழிவாங்கும் நடவடிக்கையாக ஸ்டேஷன் மாஸ்டர் சுப்புண்ணியை நிர்வாகம் மலையாள நாட்டை ஒட்டியிருக்கும் பாலக்காடு ரெயில் நிலையத்திற்கு மாற்றி விட்டிருக்கிறது.

சுப்புண்ணி தீவிர தொழிற் சங்கவாதியாக இருந்ததால், சங்கரன் ஸ்டேஷன் பக்கம் வந்தால் போதும். ரெயில்வே ரெஸ்டாரெண்டுக்குக் கூட்டிப் போய், சிற்றுண்டி அருந்தச் செய்வதோடு மட்டுமல்லாமல், வெகு நேரம் வரையில் நாட்டு நடப்புப் பற்றியும் தொழிற் சங்கங்கள் பற்றியும் விசாரிக்காமல் விட மாட்டார். அவர் ஸ்டேஷனில் இல்லாமல் இருப்பது ரெயிலடியே வெற்றிடமாய்ப் போனது போல் பட்டது சங்கரனுக்கு.

இவ்வளவு நேரமும், பிளாட் பாரத்தில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த ரெயில் எஞ்சின் தண்ணீர் குடித்து விட்டுத்

தான் கடக்க வேண்டிய தொலைவை எண்ணிப் பெரு மூச்செறிந்து சலிப்புடன் ஸ்டேஷனிடம் விடை பெற்று ஓலம் எழுப்பி முக்கி முனங்கிப் பிறகு வேகம் எடுத்து, பிளாட் பாரத்தை வெறுமையாக்கி விட்டுப் புறப்பட்டுச் சென்றது.

அவர்கள் கேண்டீனை நெருங்கிக் கொண்டிருக்கையில் சங்கரன் தனது சகாக்கள் யாரும் வருகிறார்களா என்று திரும்பவும், பிளாட் பாரத்தைப் பார்த்தார்.

"அம்பீ, தோல் ஷாப்புப் பொடியன்களைத் தானே தேடுதே"

ரெங்கக் கோனார் கேட்கவும் ஆமாம் என்பது போல் சங்கரன் தலையை அசைத்தார்.

"அவங்க ஆரும் வர மாட்டாங்க" யாராவது உளவாளிகள் இருப்பார்களா என்று கணிப்பது போல் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு ரெங்கன்

ஒன்றும் புரியாமல் நின்ற சங்கரனைப் பார்த்து

"அந்தப் பொடியன்களையும் தோல் ஷாப்புச் சங்கத் தலைவர்களையும் ராத்திரியே போலீஸ் கைது செய்திருக்க சங்கதி அம்பிக்கு தெரியாதா?"

இரவோடு இரவாக நடைபெற்ற சம்பவம் பற்றி எப்படித் தெரிந்து கொள்ள முடியும்?

அவர்கள் கைது செய்யப்பட்டதற்கான காரணம் தெரியாமல் சங்கரன் ரெங்கக் கோனாரைப் பார்த்தார்.

அவர்கள் ரெயில்வே ரெஸ்டாரண்டை அடைந்த போது

"அஸன் ராவுத்தனோட மச்சான் முஸ்தாபா. கொலை சம்மந்தமா சங்கத்து ஆளுங்களைக் கைது செய்திருக்காங்க"

மன உளைச்சலுடன் ரெங்கக் கோனார் சொன்னார்

ரெயில்வே ஊழியர்களின் போராட்டத்தின் போது, ரெங்கக் கோனாருக்கும் மற்ற ரெயில்வே ஊழியர்களுக்கும் அவர்கள் தான் ஆதரவு.

"கொந்தளிச்சுப் போன சனங்களை அடக்கிறதுக்கா வேண்டி, நட்ட நடு ராத்திரியிலே அந்தோணியார் தெருவுலேயும், தோமையா புறத்துலேயும் போலீஸ் பூந்து சரமாரியா தாக்கியிருக்கு! ஊரெல்லாம் இதே ஒவலையாக் கெடக்குது."

இவ்வளவையும் சொல்லி விட்டு "அம்பி நீயும் எச்சரிக்கையா இருக்கணம். போலீஸ் ஒன்னயையும் புடிச்சுட்டுப் போனாலும் போவலாம். சேம்பர்காரப் பெயலுவளுக்கு அம்பி மேலே தானே கண்ணு"

இவ்வளவையும் கேட்ட போது சங்கரனுக்கு உள்ளில் ஆத்திரம் மூண்டது.

சங்கரனால் செர்வர் கொண்டு வந்து வைத்த காப்பியைக் கூட குடிக்க முடியவில்லை.

யோசனை செய்தபடியே ஸ்டேஷனை விட்டுச் சங்கரன் வெளியே வந்தார்.

சங்கரனை அக்ரஹாரத்துக்குக் கூட்டிப் போவதற்கு, ஜட்கா வண்டி அப்துல்லா வண்டியோடு நின்று கொண்டிருந்தான்.

"மாமா, பெட்டியவும் தலையணையவும் ஆத்திலே கொண்டு போய் சேத்திருங்கோ. எனக்கு வேலை இருக்கு"

பெட்டியையும் படுக்கையையும் ரெங்கக் கோனாரிடம் கொடுத்துவிட்டு சங்கரன் ஜட்கா வண்டியில் கால் வைத்தார்.

ஜட்கா வண்டி, வேப்பந்தோப்பு அக்ராஹரம் போவதற்கு மாறாக, சவரியார் பாளையம் சங்கக் கட்டிடத்தை நோக்கிப் பாய்ந்தது

8

"நாம எந்தத் குத்தமும் செய்யலையே. அம்மளை ஏன் கூட்டியாந்து டேஷன்லே பூட்டி வெச்சிருக்கானுவ"

போலீஸ் லாக்கப் அறையில் உட்கார்ந்திருந்த மினிசாமி ஓசேப்பைப் பார்த்துக் கேட்டான்.

"என்னடுண்ணு தெரியலய மினிசாமி. எதுக்காண்டி நம்மளை அல்லாம் அடிக்கிறானுவ" மினிசாமியின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் ஓசேப்பு திகைத்தான்.

வெகுகாலையிலேயே அவர்கள் இருவரையும் வேலைத் தலத்திலேயே பிடித்த சப்-இன்ஸ்பெக்டர் பலவேசம். அவர்களைப் பயமுறுத்தும் வகையில் ஸ்டேஷன் கொண்டு வந்த சூட்டோடு லாத்திக்கம்பால், முட்டிக்கு முட்டித்தட்டி உதைத்த பிறகு தான் லாக்கப் ரூமுக்குள் தள்ளிப் பூட்டி வைத்தான்.

வாத்தியார் இருதயசாமியையும் வேலாயுதத்தையும், ஏனைய தலைவர்களையும் பட்டப் பகலில் கைது செய்தால், தோல் பதனிடும் தொழிலாளர்கள் இருக்கும் பகுதியில் மட்டுமல்லாது தாழ்த்தப்பட்ட கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களில் ஒரு பகுதியினரும் கலவரம் செய்வார்கள் என்பதால் வெள்ளைத்துரை அவர்களை இரவோடு இரவாகக் கைது செய்தான். அப்போதும், அந்தோணியார் தெருவிலும், இருதயசாமி குடும்பத்தார் வாசம் செய்யும் மேட்டுப் பட்டியிலும் எதிர்ப்பு கிளம்பாமல் இருக்கவில்லை. இருதயசாமி மட்டும் வேண்டிக் கொள்ளவில்லையென்றால் தெரு மக்கள் வெள்ளைத் துரையையும், அவனது போலீஸ் பட்டாளத்தையும் விரட்டியடித்திருப்பார்கள்.

இருதயசாமியைப் பொறுத்தமட்டில் அவருக்கு இது புது அனுபவம். அவரை நள்ளிரவில் கைது செய்த போது வெள்ளைத்துரை அவர் கைது செய்யப்பட்டதற்கான காரணத்தைக் கூடச் சொல்லவில்லை. வெள்ளைத்துரை அவரைக் கைது செய்த போது ஆரம்பத்தில் அவமானமாக இருந்தது. ஒருவிதமான பதட்டம் கூட ஏற்பட்டது. ஆனால், பொது ஜன ஊழியத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட இருதயசாமி கொல்கதா மலையில் சிலுவையைச் சுமந்து கொண்டு போன ஏசுபெருமான் பட்ட அவமதிப்பையும், அவஸ்தையையும் நினைத்துக் கொண்ட போது மனம் சமனப்பட்டது.

வெள்ளைத்துரை, இருதயசாமியை நையப்புடைத்து, அவமானப்படுத்தியே போலீஸ் வண்டியில் ஏற்றவேண்டும் என்று திட்டமிட்டிருந்தான். அதற்கான பணமும் அவனிடம் தரப்பட்டிருந்தது. சப்-இன்ஸ்பெக்டர் பலவேசத்துக்கும் அப்படி ஒரு ஆலோசனையைத்தான் வழங்கியிருந்தான். ஆனால் அவரைக் கைது செய்யும் வேளையில் எதிர்பாராத விதமாகத் திரண்டிருந்த ஊர் மக்கள் கூட்டத்தைப் பார்த்து மலைத்துப் போன வெள்ளைத்துரை இன்ஸ்பெக்டர் பாலையாவின் விவேகமான ஆலோசனையை ஏற்க வேண்டியதாயிற்று.

"தாயழி, ஸ்டேஷன்லே வெச்சுக்கிறேன் சொட்டெலும்பை நொறுக்கிறேனா இல்லையா பாப்பம்" என்று மனதுக்குள்ளேயே வர்மித்தபடி இருதயசாமியைப் போலீஸ் வண்டியில் ஏற்றிக்கொண்டு ஸ்டேஷன் போனான்.

இருதயசாமி போலீஸ் ஸ்டேஷன் வந்தடைந்த போது வேலாயுதமும், காவல் நிலையம் கொண்டு வரப்பட்டிருப்பதைப் பார்த்த போது இருதயசாமிக்கு வியப்பாகப் பட்டது. வேலாயுதம் உடனிருப்பது மனதுக்குள் தெம்பை உண்டு பண்ணியது.

இன்ஸ்பெக்டர் பாலையனுக்கு மட்டும் இவர்கள் கைது செய்யப் பட்டிருப்பது பிடிக்கவில்லை. ஏனெனில், இன்ஸ்பெக்டரின் விசாரணை வேறுவிதமாக இருந்தது.

பூச்சி நாயக்கனது வைப்பாட்டியான சிட்டம்மாள் என்கிற சக்கிலியப் பெண்ணைக் கைது செய்து விசாரித்த போது, முஸ்தாபா மீரான் கொலை பற்றிய விசாரணை வேறு விதமாக இருந்தது. தான் துப்புத்துலக்கியது பற்றியும், கண்டறிந்த உண்மைகளையும் வெள்ளைத் துரையிடம் சொன்ன போது, அவன்

" நான் சொன்னதைச் செய் மிஸ்டர்." என்று மிரட்டிய தோடல்லாமல், விசாரணைக்காகத் தனியிடத்தில் வைக்கப்பட்ருக்கும் பூச்சி நாயக்கனையும், சிட்டம்மாளையும், தனது பாதுகாவலுக்கு அனுப்பும் படியாகவும் உத்தரவு போட்டுப் பாலையனை மடக்கிவிடவும் செய்தான். என்னதான் உண்மையைக் கண்டறிந்துவிட்ட போதும். பாலையனால், மேல் அதிகாரியின உத்தரவுக்கு அடங்கிப் போக வேண்டியிருந்தது. எனவே, உண்மையை மறைத்துவிட்டு வெள்ளத்துரை சங்க முக்கியஸ்தர்களைக் கைது செய்தான்.

வெள்ளத்துரை இருதயசாமியுடன் ஸ்டேஷன் வந்தபோது வேலாயுதம் தன் எதிரில் நாற்காலி போட்டு அமர்ந்திருப்பதைப் பார்த்ததும் அவனுக்கு கோபம் சிரசை முட்டிக் கொண்டு வந்தது.

"ராஸ்கல் படவா எந்திரிடா. கிரிமினல் பயலுக்கு நாக்காலி வேற கேக்குதோ" என்று சீறிய வண்ணம் வேலாயுதத்தைப் பார்த்துத் தன் இடுப்பு வாரைக் கழற்றி ஓங்கிய வண்ணம் பாய்ந்தான்.

"சார்! சார். வேணாம் சார்" என்ற படி இன்ஸ்பெக்டர் பாலையன் வெள்ளத்துரையைத் தடுத்தான்

வேலாயுதம் மட்டும் எதையும் கண்டுக்காத மட்டில் உட்கார்ந்திருப்பது இருதயசாமிக்கு ஆச்சரியமாக இருந்தது.

"என்னவே, தடுக்கிறீர்?" வெள்ளைத்துரை பாலையனைப் பார்த்துக் கேட்டான்.

"உதவி சூப்பிரண்டு ஸார். உன்னால் முடிஞ்சா என்னைய அடிச்சுப் பாருய்யா. சட்டம் தெரியாத ஆளா

இருக்கையே. சூப்பிரண்டு உத்தியோகத்துக்கு வேறே வந்துட்டே" என்று வேலாயுதம்

அவனை ஆத்திரப்படுத்துவது போல் பேசவும் வெள்ளத்துரையின் முகம் அவமானத்தால் மேலும் விகாரமடைந்தது.

"தாயழி எவ்வளவு பெரிய குத்தத்தைச் செய்து போட்டு, சட்டம் பேசுறே சட்டம்" வெள்ளத்துரை அவமானமும் கோபமும் கலந்த குரலில் தொண்டை கனக்கச் சொன்னான்.

வேலாயுதத்தைப் பொறுத்த மட்டில் போலீஸ் லாக்கப்பும், மிரட்டலும் புதிய விஷயங்கள் அல்ல. சுதந்திரப் போராட்டத்தின் போதும், வேறு ஆர்ப்பாட்டங்கள் போதும் பல முறை தடியடிக்கும் போலீஸ் அடகு முறைக்கும் ஆளாகிக் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டவர். போலீஸ் அதிகாரியின் அதிகார வரம்பு என்ன என்பது அவருக்குத் தெரியும். சட்டத்துக்குப் புறம்பான முறையில் கைது செய்து சிறையில் அடைக்கப்பட்ட போது உயர் நீதிமன்றத்தில் ஹேப்பியஸ் கார்ப்பஸ் மனுதாக்கல் செய்து, போலீஸ் சதியை உடைத்துக் கொண்டு விடுதலையான மனிதன்.

பாலையனுக்கு வேலாயுதமும், இப்போது கைது செய்யப்பட்டவர்களுக்கும் முஸ்தாபா மீரானது கொலைக்கும் சம்மந்தமில்லை என்பதோடு, வேலாயுத்தின் பலம் என்ன என்பதும் தெரியும். எனவே "என்ன மிஸ்டர். நம்ப ஸ்டேஷனுக்குள்ளாற வந்து நம்மண்டை இவ்வளவு அதிகாரம் பண்றான் பார்த்திட்டுச் சும்மா நிக்கறே. அண்ணாக்கவுத்த அறுத்து லாக்கப்பிலே தள்ளுய்யா." என்று வெள்ளத்துரை கோபம் தாளாமல் சத்தம் போட்ட போதும் பாலையன் ஏதும் செய்யாமல் கல்லுப் பிள்ளையாராக நின்று வேடிக்கை பார்த்தான்.

"மிஸ்டர் வெள்ளைத்துரை, வாத்தியார் மேலேயும், என் மேலேயும் கை வச்சுப் பாரு. அப்புறம் உன் கதி என்னாகுமிண்ணு பார்க்கலாம்."

இப்படி வேலாயுதம் வெள்ளைத் துரையைத் துச்சமாகப் பேசிய போது, இருதயசாமிக்கு உள்ளூற தெம்பு ஏற்பட்டது

"மிஸ்டர் வேலாயுதம் கோபப் படாதீங்க. டி.எஸ்பி.ஆத்திரப்பட்டு ஏதோ பேசிட்டார். மனசிலே வச்சுக்காதீங்க. நீங்க பயப்படற மாதிரி எதுவும் நடக்காது."

வேண்டுமென்றே வெள்ளைத்துரையை மட்டம் தட்டுவது போல் பாலையன் பேசிய போது, வெள்ளைத்துரைக்கு மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவிக்கும் நிலமை.

தனக்குக் கீழ் உள்ள உத்தியோகஸ்தன் என்ற போதிலும், போலீஸ் கமிஷனர் ஆபீஸ் வரையில் பாலையனுக்குச் செல்வாக்கு இருக்கிறது.

"சப்-இன்ஸ்பெக்டரிடமும் சொல்லி வையுங்க சார். லாக்கப்பில் இருக்க எங்க பையன்களை லத்தியால் பலமா தாக்கி இருக்கார். நாளைக்கு ரிமாண்ட் பண்ணும்போது, மாஜிஸ்திரேட்டண்டை கம்ளெயின்ட் பண்ணப்படும்" என்று வேலாயுதம் சொன்னபோது சப்-இன்ஸ்பெக்டர் பலவேசம் பதறிப் போனான்.

இன்ஸ்பெக்டர் சற்று கோபத்தோடு பலவேசத்தைப் பார்த்தார்.

"அப்படி ஒண்ணும் நடக்கலை சார். பயவளுக்குப் பயம் தட்டறதுக்காக வேண்டி வழக்கம்போலகான்ஸ்டபிள் ரெண்டு தட்டு தட்டிப்போட்டான்" பலவேசம் சமாதானம் சொன்னான்.

"மாத்தலாகி வந்திருக்க. மாஜிஸ்திரேட் ஒரு மாதிரியான ஆளு. வீட்டுக்கு அனுப்பிடப் போரார்." என்று சப் - இன்ஸ்பெக்டரை பாலையன் எச்சரித்தபோது, தனது அதிகார மையத்தில் பாலையன் ஆக்கிரமிப்புச் செய்கிறான் என்று வெள்ளைத் துரைக்கு உள்ளூற கோபம் மூண்டது கோபம் தாளாமல் டி.எஸ்பி பாலையனை முறைத்துப் பார்த்தான்."

"அய்யா கோவப்படக்கூடாது. உள்ளே வாங்க ஒரு விஷயம் சொல்ல வேண்டியிருக்கு." என்று சொன்ன பாலையா வெள்ளைத்துரையிடம் காணப்பட்ட எரிச்சலையும், கோபத்தையும் பொருட்படுத்தாமல் தனது அறையைப் பார்த்துப் போனான்.

சில சமயங்களில் மேல் அதிகாரிகள் சூழ்நிலை கருதி கீழ்நிலை உத்தியோகஸ்தர்களுடைய யோசனையையும் கேட்க வேண்டியிருக்கிறது.

வேறுவழியில்லாமல், "தாயழி. சாணாப்பய நம்மளையே அதிகாரம் பண்ணப் பாக்கிறான்." என்று தனக்குள்ளேயே பாலயனை வைது கொண்டு அறையுள் பிரவேசித்து, இன்ஸ்பெக்டர் இருக்கையில் அமர்ந்த வெள்ளைத்துரை, தன்னுள் மூண்டெழுந்த கோபத்தை மட்டுப்படுத்துவதற்காகப் பாக்கெட்டில் இருந்த கோல்ட் பிளேக் சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துத் தன் பலம் கொண்ட மட்டும் புகையை உறிஞ்சத் தொடங்கினான்.

அவன் சிகரெட்டைப் புகைத்துக் காலடியில் போட்டு பூட்ஸ் காலால் நசுக்கும் வரையில் அமைதியாக நின்றிருந்த பாலையன்

"அய்யா, வேலாயுதம் சாதாரணமான ஆள் கிடையாது. நாம சாதாரணமான மனிசங்களைக் கைது செய்யலை"

"அப்படியானா அவனுக்கு ரெண்டு கொம்பு முளைச்சிருக்கோ. கிரிமினல்களை எப்படி நடத்த வேணுமோ அப்படித்தான் நடத்தவேணும் மிஸ்டர்" மீண்டும் வெள்ளைத்துரை கோபம் கொத்தளிக்கக் சீறினான்.

"சார் வேலாயுதம் ஒரு கம்யூனிஸ்ட், நம்மை விட அந்த மனிசனுக்குச் சட்டம் தெரியும்." வெள்ளைத்துரைக்கு இந்தத் தகவல் புதிதாகப்பட்டது.

"கேடு கெட்ட காங்கிரஸ்காரப்பய. புழைப்புக்காக, காங்கிரஸ் சோஷலிஸ்ட்ன்னு ஊரெல்லாம் தம்பட்டம் அடிச்சுட்டு அலையறான்"

"அது வெறும் போர்வை மட்டும் தான். அவங்க கட்சிக்குள்ளேயே செல்வாக்கு உள்ள மனிசன் தலைவர் வாத்தியாரும் டேனரித் தொழிலாளர் தலைவர் மட்டுமல்ல தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவங்க மத்தியிலும் செல்வாக்கும் உள்ள மனிசன் குடும்பமும் செல்வாக்கான குடும்பம்"

பாலையா நிதானமாக விவரங்களைச் சொன்னதைப் பொருட்படுத்தாத மட்டில்

"அதனால என்ன, இவங்களை எல்லாம் கைது செய்யக்கூடாதா? என்ன மிஸ்டர் பாலையன் வேடிக்கையாப் பேசறீங்க. அதிகாரி மாதிரி நடக்கப் பழகிக்கங்க பாலையன் கிரிமினல்களைக் கிரிமினல் மாதிரித் தான் நடத்த முடியும்"

"அவங்களுக்கும் இந்தக் கொலைக்கும் சம்மந்தம் இருக்கா, இல்லையாங்கிறது இனியும் முடிவு செய்யப்படாத விஷயம் சார்"

பாலையன் வெள்ளைத்துரையின் சிவப்பேறிய நயனங்களைப் பார்த்து உறுதிபடச் சொன்ன போது வெள்ளைத்துரைக்கு உள்ளூற ஆட்டம் கண்டது. மேல் அதிகாரிகளிடம் தன்னைக் காட்டிக் கொடுத்துவிடுவானோ என்கிற பீதி.

"காசை வாங்கிட்டு பொய்க்கேசு போட முயற்சிக்கிறே மாப்பிளே. நீ சீரழிந்து செங்கச் சுமக்கப் போறே" என்று பாலையன் தன்னைப் பார்த்துப் பரிகசிப்பது போல் அவனுக்குப் பட்டது.

"பாலையன். என்னை மிரட்டப் பார்க்கிறயா என்ன?" "என்று கோபம் தாளாமல் பேசிய வெள்ளைத்துறை கையில் இருந்த சிகரெட்டைச் சுண்டி வீசிவிட்டு அறையை விட்டு வெளியே வந்தான்.

மீண்டும் தாக்கப் போவது போல், வேலாயுதம் முன்னால் போய் நின்று முஷ்டியை உயர்த்தினான்.

"மிஸ்டர் வெள்ளத்துரை, வாத்தியார் மேலேயோ. என் மேலேயோ மத்தவங்க மேலேயோ அதிகாரிங்கிற திமிரிலே கையை வச்சே, வச்சுப்பாரு அப்புறம் உன் கதி என்ன ஆகுமிண்ணு பாரு"

வேலாயுதம் மிகமிகச் சாதாரணமாகச் சொன்னார். அவர் பேச்சில் காணப்படும் உறுதி அவனுள் அச்சத்தை ஏற்படுத்தியது.

வெள்ளத்துரை ஒரு கணம் ஸ்தம்பித்துப் போய் நின்றான்.

முகம் வியர்த்துக் கொட்டியது. "பலவேசம் எப்.ஐ.ஆரைப் பதிஞ்சு இவங்களை ரிமாண்டுக்கு அனுப்புற வேலையைப் பாருய்யா." என்று கோபமாகச் சொல்லிவிட்டு வெள்ளத்துரை ஸ்டேஷனை விட்டு இறங்கிப் போனான்.

●

9

இன்ஸ்பெக்டர் பாலையன், போலீஸ் நிலையத்தில் தனது இருக்கையில் அமர்ந்தவாறு ஆழமாக யோசனை செய்து கொண்டிருந்தான்.

கடந்த ஒரு மாதகாலமாகப் பிரம்மப் பிரயத்தனம் எடுத்து துப்புத் துலக்கிய வழக்கில் ஒரு தெளிவு ஏற்படப் போகும் வேளையில், உதவி சூப்பிரண்டண்ட் வெள்ளைத்துரை தனது சுய நலத்துக்காக வேண்டி, வழக்கின் தன்மையையே திசை திருப்பி விட்டிருப்பதானது பாலையனுக்கு மிகுந்த வேதனை தருவதாக இருந்தது. உண்மையை மறைத்துப் பொய்யை நிஜம் என்று காட்டும் வகையில் வெள்ளத்துரை தோல்ஷாப்பு உடைமைகளைச் சிலாசிக்கும் வகையில் தோல்ஷாப்புத் தொழிலாளர் சங்கத்தின் முக்கிய தலைவர்களையும் ஊழியர்களையும் கைது செய்து சிறையில் தள்ளிவிட்டிருக்கிறான். ஒரு உண்மையான கிறிஸ்தவன் என்கிற முறையில், அந்தச் செயலானது ஆண்டவனை ஏமாற்றுகிற பாவச் செயலாகப்பட்டது. மனச்சாட்சியைக் கொன்றுவிட்டுத் தொழில் செய்ய வேண்டியிருக்கிறது.

இப்படியாகப் பலவாறாகப் பாலையன் மன உளைச்சலில் உழன்ற போது அந்தச் சக்கிலியப் பெண்ணை முதல் முதலாகச் சந்தித்துக் கொண்ட சம்பவம் நினைப்புக்கு வருகிறது.

முஸ்தாபா மீரானின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைத்துவிட்டு, அந்தத் தோட்டத்துக்காரன் பூச்சி நாயக்கனைத் தேடி அலைந்த போது எதிர்பாராத வகையில் அந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

முஸ்தாபாவின் மரண சம்பவத்துக்குப் பின் பூச்சி நாயக்கனும், அவனது வைப்பாட்டியான சக்கிலியப் பெண் சிட்டம்மாவும், தோட்டத்துச் சாளையைக் காலி செய்துவிட்டுத் தப்பிப் போய் விட்டதால் பாலையனுக்குப் பூச்சி நாயக்கன் பால் சந்தேகம் ஏற்பட்டு, அக்கம் பக்கத்தில் உள்ளவர்களை விசாரித்தபோது பூச்சி நாயக்கனுக்கு ஐம்பது வுயதுக்கு மேல் இருக்கும் என்றும் மகாசாது என்றும் சொன்னார்கள். மட்டுமல்லாமல் பூச்சி நாயக்கன் தான் உண்டு, தனது தொழில் உண்டு என்றிருப்பவன் சிறு மலையிலிருந்து விளை பொருட்களை உள்ளூர்ச் சந்தைக்குக் கொண்டுவரும் தனது சுமை மட்டக் குதிரைகளுக்கும் கோவேறு கழுதைகளுக்கும் புகலிடமாக இருப்பதற்கு வேண்டியே அந்தத் தோப்பைப் பிடித்துப் போட்டிருக்கிறான். ஆனால் பெண்கள் விஷயத்தில் மட்டும், சற்றுத் தூக்கலான காம உணர்வு. எனவே தான் வந்த இடத்திலும் தனது படுக்கையைப் பகிர்ந்து கொள்வதற்கு ஒரு துணை தேவை என்பதால் சிட்டம்மா என்கிற அந்தச் சக்கிலியப் பெண்ணைத் துணைக்கு வைத்துக் கொண்டிருக்கிறான்.

இருந்த போதும், பூச்சிநாயக்கனைக் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தினால்தான் உண்மையைக் கண்டறிய முடியும் என்கிற வகையில் நாயக்கரைத் தேடி அலைந்த போது மேலும் சில விவரங்கள் பாலையனுக்குத் தெரிய வந்தன. அதாவது பூச்சிநாயக்கனுக்கு மலையில் இரண்டு குடும்பங்கள். ஒன்று சிறுமலையில் உட்கடை கிராமம். ஒன்றில் மூத்தமனைவியும் பன்றி மலையை அடுத்த கிராமம் ஒன்றில் இரண்டாம் குடியாளும் இருக்கிறார்கள். சரியான பாதையில் இல்லாத மலைக் கிராமங்கள். மிகவும் சிரமப்பட்டுத் தனது பரிவாரங்களோடு அந்தக் கிராமங்களுக்குப் போன போதும் பூச்சி நாயக்கன் அகப்படவில்லை. அவனது மனைவிகளை விசாரித்த போதும் பூச்சிநாயக்களின் மறைவிடம் பற்றி சரியான விவரம் கிடைக்கவில்லை. பாலையனைப் பொறுத்த மட்டில் பூச்சி நாயக்கன் தனது வைப்பான சக்கிலியப் பெண்ணுடன் மலைப்பகுதியில் எங்கோ தன்னை மறைத்துக் கொண்டிருக்கிறான். அவனைத் தேடி, துப்புத் துலக்கிப் பிடிப்பது அவ்வளவு சுலபமான காரியமாகப்படவில்லை.

ஆனால் உண்மையான குற்றவாளியைக் கண்டு பிடிக்கும் தடத்தையும், தடையத்தையும் அடைய வேண்டும் என்றால் நிச்சயம் பூச்சி நாய்க்கனைப் பிடித்து விசாரணை செய்வது அல்லாமல் உண்மை குற்றவாளியைக் கண்டறிய முடியாது.

மலைப் பிரதேசங்களில் மேற்கொண்டதேடுதல் முயற்சி தோல்வி அடைந்து விரக்தியிலும் மேல்மட்ட அதிகாரிகளின் நச்சரிப்பாலும் சோர்வடைந்த மட்டில் தனது அலுவலகத்தில் பாலையன் உட்கார்ந்திருக்கும் போது அந்தப் பெண் படியேறி ஸ்டேஷனுக்குள் வந்தாள். அவள் வந்த முறையும், தோரணையும் பாலையனுக்கு எரிச்சல் மூட்டுவதாக இருந்தது.

எந்தவிதமான பயமும் கலவரமும் இல்லாமல் மிகவும் சாவதானமாக ஸ்டேஷனுக்குள் நுழைந்தவள். தனது இடுப்பில் தொங்கிய சுருக்குப்பையை அவிழ்த்து, வெற்றிலைப் பாக்குடன் கிறுக்கன் புகையிலையையும் அள்ளிக் குதப்பியவண்ணம், ஸ்டேஷன் ரைட்டருடையவோ அல்லது கான்ஸ்டபிள்களுடையவோ அனுமதியைக் கூடப் பெறாமல் இன்ஸ்பெக்டர் பாலையனின் மேஜை முன்னால் வந்து நின்றாள்.

"ஏமி சாமி. நான் தான் பூச்சி நாயக்கன் வப்பாட்டி" என்று,

தனது ஒழுக்கக் கேடு பற்றி எந்த விதமான அசூயையும் இல்லாமல் அவள் சொன்ன போது, பாலையனுக்கு அந்தப் பெண்ணின் பால் ஒரு அசூயை ஏற்பட்டது.

"வெளியே போடீ, நாயே" என்று கடிந்து கொள்ள வேண்டும் என்று உள்ளில் வெறுப்பு ஏற்பட்ட போதும், முஸ்தபா மரணம் பற்றித் துப்புத்துலக்குவதற்கு அவளை விசாரித்தாக வேண்டும் என்பதால் தனது இருக்கையில் அமர்ந்தவாறே ஏற இறங்கப் பார்த்தபோது, தன்னை அறியாமலேயே பாலையனுக்குத் தொண்டை வரண்டது.

சிவப்பும் மஞ்சளும் கலந்த ஒருவிதமான மோகனமான நிறம் புறா முட்டைகளை லாவகமாகச் சொருகி வைத்திருப்பது போன்று கருவிழிகள் , தாமரை இதழ்கள்

விரித்து வைத்தாற் போன்று வெட்டி இமைகள் இழுக்கும் பார்வை. தீட்டிய கூர் கத்தியைப் போன்று கதித்த நாசி. உணர்ச்சியை வெளிக்காட்டக்கூடிய வெற்றிலைக் காவிபடிந்த சிவந்த அதரங்கள், அதிக உயரமோ, பருமனோ, கட்டை குட்டை என்றோ சொல்ல முடியாத கடைந்தெடுத்தாற் போன்ற உடற்கட்டு. அசப்பில் அவளைப் பார்த்தபோது பாலையனுக்கு கல்லூரியில் படிக்கும் போது, கிருஷ்ணாபுரம் கலைக் கோவிலில் பார்த்த அரச குமாரனைச் சிறை எடுத்துச் செல்லும் குறத்திப் பெண்ணின் சிற்பம் நினைப்புக்கு வந்தது.

அவள் லேசாகச் சிரித்த போது., ஏனைய சக்கிலிப் பெண்களைப் போன்று அவள் பொடியைத் தேய்த்துப் பற்களைச் கருமைப்படுத்திக் கொள்ளவில்லை மென்மையான செக்கர் வானம் போன்ற பற்கள் அவளது அழகுக்கு மெருகூட்டுவனவாகப்பட்டது.

வயது வந்த இரண்டு பெண் குழந்தைகளுக்குப் பிதாவான தன்னால் அவளது அழகில் ஒரு கணம் பிரமித்துப் போனதற்காகத் தன்னையே நொந்து கொண்ட பாலையனுக்கு ஒரு கணம் அவள் பால் சந்தேகம் ஏற்பட்டது. கொலையாளியைக் காப்பாற்றுவதற்கு, தன்னை நிலை குலையச் செய்து, குற்ற விசாரணையின் தன்மையை மாற்றுவதற்காகவும் அவள் தூதாக அனுப்பப்பட்டிருக்கலாமோ என்று படவும், தன்னைச் சுதாரித்துக் கொண்டு

"பூச்சி நாயக்கன் வராம ஒன்னை அனுப்பிச்சிருக்கது ஆரு ஏய், பொம்பளை ஒன்னைய யார் இங்கே வரச் சொன்னது."

செயற்கையாகக் குரலை உயர்த்தி அவளை அதட்டும் பாவனையில் பாலையன் ஒரு போலீஸ் அதிகாரிக்குள்ள தோரணையில் மிரட்டிய போது, ஏதோ, உண்மையைப் பேசுவதற்காக அவள் தயங்குவது அவளது நயனங்களில் தென்பட்டது.

"கோச்சுக்காத சாமி" வாயில் சுரந்த எச்சியைக் கூட்டி விழுங்கிய படியே தயக்கத்துடன் சொன்னாள்.

பிறகு மௌனமாக, ஸ்டேஷனின் நான்கு சுவர்களையும் மலங்க மலங்கப் பார்த்தாள். ஏனோ, அவளது நயனங்களில் நீர் கட்டித்து நிற்பது தெரிந்தது.

மேலும், தனது மூத்தமகளது வயதே மதிக்கத்தக்க அந்த இளம் பெண்ணை மிரட்டுவது சரியல்ல என்று பாலையனுக்குப் பட்டது. எப்படியும் முஸ்தபாவின் மரணம் பற்றி அவளிடம் விசாரணை நடத்த வேண்டியிருக்கிறது.

"சாமி. என்னைய எங்க "அவ்வா" ஒரு கெழட்டுப் பயலுக்குக் கட்டிக்குடுத்துட்டுது. அவெ குடிகாரன். என்னால வாழ முடியலை" சம்மந்தா சம்மந்தமில்லாமல் பேசலானாள்.

சாக்கடை வாழ்க்கை நடத்தும் ஒரு வேசைப் பெண்ணிடம், நாகரிகமான ஒழுக்கமான வாழ்க்கையை எப்படி எதிர்பார்க்க முடியும்?

தனக்குள்ளேயே நினைத்துக்கொண்ட பாலையன் ஏதும் பேசாமல் தலையைக் குனிந்த வண்ணம் உட்கார்ந்திருந்தான்.

"நா, அதோட வாழப் புடிக்காம பூச்சி நாயக்கனண்டை வந்திட்டேன்" மிகவும் சாதாரணமாகச் சொன்னாள்.

அவள் என்னதான் சொல்லப் போகிறாள் என்று தெரிந்து கொள்ள வேண்டும் என்று , தன்னுள் மூண்டெழுந்த அசூயையும் கோபத்தையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் மௌனமாக இருந்தான்

"நா, வேசை, தேவடியாண்டு நெனைக்கிறயா சாமி. அது லேது லேது சாமி லேது" பாலையனின் உள் மனஉபாதையை உணர்ந்தவள் போல் சற்று வேகமாகவே அவள் சொன்னாள்.

இப்படி அவள் ஒரு கேள்வியை எழுப்பியது இன்ஸ்பெக்டருக்கு வியப்பாகப்பட்டது.

ஸ்டேஷன் சுவரில் சாய்ந்து நின்றவாறு திரும்பவும் பாலையனைப் பார்த்தாள்

"எளிய சாதிப்பொண்டுகள்ன்னா. அம்புட்டு எழப்பமா சாமி. நீயே சொல்லு" பாலையனின் நயனங்களைக் கூர்மையாகப் பார்த்த வண்ணம் சிட்டம்மாள் கேட்டாள்.

பாலையனால் அவளது கேள்வியின் உட்பொருளைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

அவள் யாரைக் குறி வைத்து இப்படிப் பேசுகிறாள் என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

புருவத்தை நெறித்த மட்டில் அவள் பேசுவதை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான் பாலையன்.

"இந்தச் சிட்டம்மா ரோக்கியமானவா ரோசக்காரி. ஒரு காலத்துலே ஒருத்தனுக்குத் தான் முந்தி விரிப்பா. கண்ட கண்ட தொங்கப்பயகிட்ட அல்லாம் நாப் பொழப்பு நடத்த மாட்டா".

அவள் ரோஷத்தோடு சொன்ன போது இன்ஸ்பெக்டருக்கு உள்ளூற வெறுப்புத் தட்டியது.

அவள் அனுசரிக்கும் கற்பும் ஒழுக்கமும் பாலையனுக்குப் புரியவில்லை. தலையைச் சொரிந்து கொண்டான்.

ஏதோ தபாலை இன்ஸ்பெக்டர் மேஜையில் வைத்துவிட்டுப் போக வந்த கான்ஸ்டபிள், இஸ்மாயில் அவளைப் பார்த்ததும் வியப்புடன் நின்றான். இன்ஸ்பெக்டரையும் அந்தப் பெண்ணையும் அவன் பார்த்த தோரணை ஒரு மாதிரியாகப் பட்டது. அவன் சந்தேகப் படக்கூடாது என்று

"இஸ்மாயில் உனக்கு இந்தப் பொண்ணைத் தெரியமா?" கேட்டான்.

"தெரியும் ஸார், குளத்தங்கரை ஜட்கா ஸ்டாண்டிலே வாடிக்கையா, புல்லுக்கட்டு விக்கிற பொண்ணு." என்றவன் ஒரு கணம் அவளை ஏற இறங்கப் பார்த்தான்.

"மகா வாய்க்காரி, சமாளிக்க முடியாது. ஆனா நெருங்க முடியாது நெருப்பு மாதிரி" என்று

இஸ்மாயில் நற்சான்றிதழ் கொடுத்தது, பாலையனுக்கு வியப்பாகப்பட்டது. இஸ்மாயில் பெண்கள் விஷயத்தில் ஒரு மாதிரி பெண்களைச் சுலபத்தில் மடக்கிப் போடக் கூடியவன் கூட.

மிகவும் கேவலமான, இழிவான வாழ்க்கை நடத்துபவர்கள் என்று சமூகத்தால் ஒதுக்கப்படும் கடைக்கோடி மக்களிடம் கூட ஒரு நியதியும் ஒழுக்கமும் இருப்பது இன்ஸ்பெக்டருக்கு ஆச்சரியமாகப்பட்டது.

"நாங்க எளிய சாதி தான். அதுக்கோசரம் வெத்திலைக்கும், போயிலைக்கும் ஒரு திராம் சாராயத்துக்கும் நாங்க எங்களை வித்துக்க மாட்டம்." இப்படி ஒருவித கோப உணர்வுடன் சொல்லிவிட்டு, பாலையனையும் இஸ்மாயிலையும் பார்த்தாள். அப்போது சிட்டம்மாளை நிலை குலைய வைத்த சேதியை இஸ்மாயில் சொன்னான்.

"அய்யா! செத்துப் போனானே, வேசமவன் அசன் ராவுத்தர் மச்சான் முஸ்தபா. அல்லார் முன்னாலேயும் இந்தப் பொண்ண அசிங்கப்படுத்திப் போட்டான். பாவம் இந்தப் பொண்ணு நனைஞ்சு குருவியா குறுகிப் போயிட்டது."

இஸ்மாயில் அந்தக் கேவலமான சம்பவத்தை நினைப்பூட்டிய உடன் சிட்டம்மாள் வெட்டுண்ட மரம்போல், சுவரில் சாய்ந்தாள். முட்டங்கால்களுக்கு மத்தியில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழவாரம்பித்தாள் அவள் மனம் கசந்து அழுவது பார்ப்பதற்குப் பரிதாபமாக இருந்தது.

அவள் தனது மனப்பாரம் குறையும் மட்டும் அழுது ஓயட்டும் என்று இன்ஸ்பெக்டர் பாலையன் மௌனமாக உட்கார்ந்திருந்தான்.

சிட்டம்மாள் கேவலையும், அழுகையையும் நிறுத்திவிட்டுப் பாலையனை ஏறிட்டுப் பார்த்தபோது,

அவளது நயனங்கள் கருக்கலங்கிய முட்டையைப் போன்று இரத்தச்சிவப்பாக இருந்தது.

"நா, வெக்கத்தை விட்டுச் செப்புறேன் சாமி. அந்த பேமானி, புல்லுக்கட்டை நா வெலை பேசிட்டிருக்கும் போது தான் வந்தான்.

ஏளா! புலுக்கட்டு எம்புட்டு வெலெ சொல்றேன்னான். அவ, ஏடாசி பேசுகிறானின்னு பதில் பேசலை. அப்பால மல்லுக்கட்டுக்கு எம்புட்டுக் கேக்கறேன்னான்.

மருவாதையாப் பேசுன்னேன். அவ்வளவு தான், அந்தச் சண்டாளன் அத்தனை சனங்க முன்னாலேயும், எம் மாராப்பு சேலைய வெலக்கிக் கட்டிப் புடிச்சு மார்பு ரெண்டையும் கசக்கிப் போட்டான். வண்டிக்காரங்க மட்டும் தடங்கல் பண்ணணைலையானா என்னயை அந்த மிருகம் பசாரிலேயே அல்லார் முன்னிலேயே கெடுத்திருக்கும்."

கேவிய வண்ணம் "அய்யா, ஒம் வூட்டுப் புள்ளெய இப்படி மார்பை புடிச்சுக் கசக்கிக் கடிச்சா ஒன்னாலே சகிக்க முடியுமா" கண்களில் நீர் வடிய சிட்டம்மாள் பாலையனைக் கேட்டாள். அவனுக்கு உள்ளில் கரையான் புத்தில் கால் பதித்த வேதனை ஏற்பட்டது.

இப்போது பாலையனுக்குச் சிட்டம்மாள் ஒரு ஒழுக்கங்கெட்ட பெண்ணாகப் படவில்லை. ஏசுநாதரின் பாதார விந்தங்களைப் பரிமள கந்தங்களால் அபிஷேகம் செய்த மகதலேனா மரியாளின் சாயல் அவளிடம் தென்படுவதாக உணரலானான்.

மாற்றானுடன் வாழ்ந்த போதும், அந்த யுவதிக்கு இருக்கும் மானம், தன்மான உணர்வு வியப்புக்குரியதாக இருந்தது.

"சேசுவே, பரமபிதாவே" என்று தனது மன உளைச்சலுக்குப் பரிகாரமாகத் தனக்குள்ளேயே சொல்லிக் கொண்ட பாலையன், மேஜையில் கொண்டு வந்து வைக்கப்பட்ட கடிதத்தைப் பிரித்துப் படிக்கலானான்.

கடிதம் பாலையனுடைய மூத்த மகள் இஸபெல்லாவிடம் இருந்து வந்திருக்கிறது. கல்லூரியில் சுற்றுலா போவதற்குப் பணம் கேட்டு எழுதியிருக்கிறாள்.

கடிதத்தை மடித்துத் தனது யூனிபார்ம் பாக்கெட்டில் வைத்துவிட்டுத் திரும்பவும் சிட்டம்மாளைப் பார்த்தபோது, அவள் குத்துக்கால் போட்டு உட்கார்ந்து எதையோ சிந்தனை செய்தவாறு இருக்கிறாள். முகம் மிகவும் சோர்வுடன் காணப்படுகிறது.

இன்வெஸ்டிக்கேஷன் என்ற முறையில் அவள் மனம் புண்படும் படியாகக் கேள்விகள் கேட்பதற்குப் பாலையனின் மனம் ஒப்பவில்லை.

இப்போது அவள் அசப்பில் அவனது மகளைப் போல் காணப்பட்டாள். வஞ்சகமற்ற அந்தப் பெண்ணின்பால் வாஞ்சை ஏற்பட்டது.

"உனக்குச் சாப்பாடு ஏதாவது வேணுமா பெண்ணே" பாலையன் மிகவும் பரிவுடன் கேட்டது அவள் உள்ளத்தைப் பாதித்திருக்க வேண்டும்.

நயனங்களில் கண்ணீர் மல்க, அவன் கேட்டதை ஆமோதிப்பதே போல் தலையை ஆட்டினாள். பரிதாபமாகப் பார்த்தாள்.

"அரவாக்குறிச்சிலேருந்து நடந்தே வந்திருக்கேன். மூணுநாளா பட்டினி!"

கான்ஸ்டபிள் இஸ்மாயிலைக் கூப்பிட்டு, அடுத்த அறைக்குக் கூட்டிப்போய் அவளுக்குச் சாப்பாடு போடும்படிச் சொல்லிவிட்டு சாப்பாட்டுக்கான பணத்தையும் இஸ்மாயிலிடம் கொடுத்தான்.

சிட்டம்மாள் அறையை விட்டுப் போனதும், இன்ஸ்பெக்டருக்குத் திரும்பவும் முஸ்தபா மீரானின் துப்புத் துலங்காத மரணம் பற்றிய நினைப்பு ஏற்பட்டது. விசாரணையும், ருசுவும், தடயமும் இல்லாமல் வெள்ளைத்துரை தோல்ஷாப்பு ஊழியர்களை அந்த மரணத்துடன் இணைத்திருப்பது உதவி சூப்பிரண்டின்பால்

அவனுக்கு வெறுப்பையும், ஆத்திரத்தையும் ஏற்படுத்தியது. எப்படியாவது வெள்ளைத்துரையின் முயற்சியை முறியடிக்க வேண்டும் என்கிற ஆத்திரம் மேலிட்டது.

அவள் மீண்டும் இன்ஸ்பெக்டர் அறைக்குள் வந்தபோது அவளது முகம் தெளிவாக இருந்தது.

வந்தவள் திரும்பவும், சுவற்றோரமாகச் சம்மணம் கூட்டி உட்கார்ந்து வெற்றிலை போட்டுக் கொண்டாள்.

இஸ்மாயிலையும் அவனுடன் வந்த கான்ஸ்டபிள்களையும் போகச் சொல்லிவிட்டுப் பாலையன் சிட்டம்மாளைக் கேட்டான்.

"எதுக்காக வேண்டி இவ்வளவு தூரம் நடந்து, ஸ்டேஷனுக்கு வந்திருக்கே?"

இந்தக்கேள்வி அவளுக்கு வியப்பாகப் பட்டிருக்க வேண்டும்.

பாலையனை ஒரு மாதிரி, முகத்தை ஒருச்சாய்த்துப் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தாள். முகம் கோபத்தாலோ ஆத்திரத்தாலோ இரத்தம் குவிந்து சிவந்து போனது. பெருமூச்செறிந்தாள்.

பிறகு செருமி தொண்டையைச் சரி செய்தவள் இப்படிச் சொன்னாள்.

"அந்த தொம்பப் பய. முஸ்தபா மீரானை நான் தான் சாமி கொண்ணேன். அதைச் சொல்லத்தான் இம்புட்டுத் தூரம் நடந்து வந்திருக்கன்."

ஆச்சரிய மேலீட்டால் பாலையன் இமை கொட்டாமல் அந்தப் பெண்ணையே பார்த்தான்.

அவனால் அவள் சொல்வதை நம்ப முடியவில்லை. அதிர்ந்து போனான். அந்த அதிர்ச்சியிலிருந்து விடுபட வெகுநேரமானது.

10

சங்கரன் வந்த ஜட்கா வண்டி பேகம்பூர் பெரிய பள்ளிவாசலைத் தாண்டும் போதே ஒருவிதமான அசாதாரண சூழ்நிலை நிலவுவதைச் சங்கரனால் உணர முடிந்தது.

உதவி சூப்பிரெண்ட் வெள்ளைத்துரை, சங்கரன் போலீசுக்குப் பயந்து சென்னை பட்டினத்துக்கு ஓடிவிட்டதாக ஒரு வதந்தியையும் பீதியையும் ஊருக்குள் அவிழ்த்து விட்டிருக்கிறான்.

மாதா கோவிலைத் தாண்டிய போது சவரியார் பாளையமும், அந்தோணியார் தெருவும் தோமையர் புறமும், இதர தோல் ஷாப்புத் தொழிலாளர் குடியிருப்புகளும் போலீஸாரால் முற்றுகையிட்டிருப்பது சங்கரனுக்குத் தெரிய வந்தது.

சேரித் தெருக்களில் மனித நடமாட்டமே குறைந்து காணப்பட்டது. வயதான ஒன்றிரண்டு தொழிலாளிகள் சங்கரனைப் பார்த்து ஒப்புக்குச் சலாம் வைத்துக் குடிசைகளுக்குள் பதுங்கிக் கொண்டனர். அவர்கள் மிகவும் பயந்து போய் காணப்பட்டார்கள்.

தெருக்களில், சட்டி பானைகள் உடைக்கப்பட்டுப் பொருட்கள் தெருவில் சிதறப்பட்டு, யானை புகுந்த கரும்புக் காடாகத் தோற்றம் தருகிறது.

சங்கரன் சங்க ஆபீஸ் இருக்கும் தெருவுக்கு வந்தபோது, போலீஸ் காரர்கள் நந்தவனம்பட்டி காக்கையனையும் பூச்சி

நாயக்கன்பட்டி வீரணனையும் தெருவுக்குள் போகவிடாமல் தடுத்து நிறுத்தி மிரட்டிக் கொண்டிருக்கின்றனர்.

சங்கரன் வந்த ஜட்கா வண்டியையும் ஊருக்குள் விடாமல் தடுப்பது போல் துப்பாக்கி ஏந்திய போலீஸ்காரர்கள் தெருவை மறித்துக் கொண்டு நிற்கிறார்கள்.

நிலைமையைப் பார்த்தபோது சங்கரனுக்குக் கடுமையாகக் கோபம் மூண்டது. அதற்குள் வழக்கமாக நீதி மன்றத்துக்கு ஸ்டேஷன் வழக்குக் கட்டுகளைத் தூக்கிவரும் ஹெட் கான்ஸ்டபிள் ராக்காச்சி மரியாதையாக சங்கரனுக்குச் 'சல்யூட்' அடித்து விட்டு "சாமி! ஆரையும் தெருவுக்குள்ளே உடப்புடாதுண்டு உத்தரவு. கோச்சுக்கப்படாது" என்றான்.

ஜட்காவில் உட்கார்ந்தவாறே "யார் உத்தரவு போட்டிருக்கா? அரசு நூத்தி நாப்பத்தி நாலு தடை போட்டிருக்கா என்ன" என்று சங்கரன் கேட்டார்.

காக்கையனும் வீரணனும் சங்கரனது ஜட்கா வண்டியின் இரு மருங்கிலும் வந்து நின்று கொண்டனர்.

"சாமி இவங்க அக்குருவம் தாங்க முடியலை" காக்கையன் சொன்னான். அவர்கள் இருவரும் நத்தம் சாலையிலும் திருச்சி ரோட்டிலும் உள்ள தோல் ஷாப்புகளில் முக்கிய ஊழியர்கள், எதற்கும் பயப்படாதவர்கள்.

"சங்க ஆபீஸைப் பூட்டி வச்சுக் காவல் போட்டிருக்கான் சாமி" வீரணன் மனக்கிலேசத்துடன் சொன்னான்.

சங்கரன் கோபத்தோடு ராக்காச்சி ஏட்டைப் பார்த்தபோது, ராக்காச்சி

"ஆரு உத்தரவு போட்டிருக்காங்களோ சாமி. சூப்பிரண்டு வெள்ளைத்துரை வந்து யாரையும் ஊருக்குள்ளாற உடப்புடாதுண்ணு உத்தரவு போட்டிருக்கார் நாங்க உத்தரவுப் படிதானே நடக்க வேணும்" இப்படிச் சொல்லிவிட்டு மீண்டும் பிடரியைச் சொரிந்த வண்ணம் நின்று கொண்டிருந்தான். ஜவான்கள் பாதையை மறைக்கத் தயாராக நின்றனர்.

சங்கரன் ஜட்கா வண்டியை விட்டுக் கீழே குதித்தார். தனது வேட்டியை மடித்துக் கட்டினார். ஜட்கா வண்டி பாயை வீட்டுக்கு வண்டியை ஓட்டிக் கொண்டு போகச் சொன்னார்.

"தைரியமிருந்தா வெள்ளைத்துரையை வந்து தடுக்கச் சொல்லுங்க ராக்காச்சி" என்று முகம் சிவக்கச் சொன்ன சங்கரன்,

'வாங்கோ போகலாம். எவன் தடுக்கிறான்னு பாத்திடலாம்' என்று சொன்னவாறு தெருவில் இறங்கி நடந்தார். காக்கையனும் வீரணனும் பாதுகாவலர்கள் மாதிரி சங்கரனது இருபாரிசங்களிலும் பின் தொடர்ந்தனர்.

சங்கரனுக்கும் போலீஸ்காரர்களுக்கு மிடையில் நடைபெற்ற வாக்குவாதத்தைத் தனது குடிசையில் இருந்தவாறு கவனித்துக் கொண்டிருந்த அமலோற்புதம், தலைவர் வந்திருக்கும் செய்தியைச் சொல்வதற்காக அடுத்த குடிசையைப் பார்த்து ஓடினாள்.

போலீஸ் கெடுபிடியால் பீதியடைந்த மட்டில், தங்கள் குடிசைகளுக்குள் முடங்கிப்போன பெண்களும், வயோதிகர்களும் வளையினின்றும் வெளிவரத் தயங்கும் சுண்டெலிகளைப் போல் தங்களது குடிசைகளினின்றும், சங்கரனும் மற்றவர்களும், தெருவில் நடந்து வருவதை அதிசயத்தைப் பார்ப்பது போல பயத்தோடு எட்டிப் பார்த்தார்கள்.

தெருவில் வீசப்பட்டுக் கிடக்கும் பொருட்களையும் நிலவும் அலங்கோலத்தையும் கண்டு விசனம் அடைந்த சங்கரன், தன்னைத் தொடர்ந்து ஓடிவரும் ஹெட்கான்ஸ்டபிள் ராக்காச்சியைப் பார்த்து

"இது என்ன ஊரா காடா என்ன நடந்திருக்கு" என்று கேட்பது போல், கோபமாகப் பார்த்தபோது அவன் மௌனமாகப் பின் வாங்கிக் கொண்டான். சங்கரனது கோபத்தை அவன் நீதிமன்றத்தில் பார்த்திருக்கிறான்.

சங்கரன் முன்னால் வந்து நின்ற அமலோற்புதம், "ஊருக்குள்ளாற ஒத்த ஆம்பிளை கெடையாது சாமி

போலீசுக்குப் பயந்து அத்தனையும் காட்டுலெயும், மேட்டுலெயும் ஒழிஞ்சுட்டுக் கெடக்குதுவ. ராவெல்லாம் போலீஸ் கெடுபிடி தாங்கலை சாமி. உள்ளது உரியது அத்தனையும் போலீஸ் புகுந்து நொறுக்கிப் போட்டது" கண்ணைக் கசக்கிக் கொண்டு சொன்னாள். அவளது பேச்சில் அம்மக்களின் ஆத்திரமும் கோபமும் வெளிப்பட்டது.

"ஏய், ஆம்புளெ பொம்பளை அத்தனையும் வாங்கடியோ, தலைவர் அய்யர் சாமி வந்திருக்கு" என்று கூச்சல் போட்டவாறு அக்னீஸ் மேரி, சேலையை வரிந்து கட்டிய படியே தெருத் தெருவாக ஓடி அறிவிக்கலானாள்.

ஆரவாரம் அடங்கிக் கிடந்த தெருக்களில் மனித நடமாட்டம் தென்பட்டது. தெருக்களில் ஆங்காங்கே நிறுத்தப்பட்டிருக்கும் போலீஸ்காரர்களைப் பார்த்தபோது சங்கரனுக்கு உள்ளூற கோபம் மூண்டது. வெளிக்காட்டிக் கொள்ளாமல் தோழர்களோடு சங்க ஆபீசைப் பார்த்து நடந்தார். தொழிலாளர்கள் சங்கரனைப் பின் தொடர்ந்தனர்.

சங்க ஆபீசை அடைந்தபோது கண்ட காட்சி சங்கரனைத் திகைக்க வைத்தது. கோட்டையை முற்றுகை யிட்டது போன்று ஆயுத பணிகளான போலீஸ் காரர்கள் சங்கக் கட்டிடத்தைச் சுற்றியும் நின்று கொண்டிருக்கின்றனர். ஆபீஸ் கதவு பூட்டப்பட்டிருக்கிறது. சாதாரணமாகச் சங்க ஆபீஸ் பக்கம் உட்கார்ந்திருக்கும் வயோதிகர்கள் கூட அங்கிருந்து விரட்டப்பட்டிருக்கிறார்கள்.

ஆபீசுக்கு எதிரே இருக்கும் ஆலமரத்து நிழலில் சப்-இன்ஸ்பெக்டர் பலவேசம், ஒரு அரச குமாரனைப் போன்று நாற்காலி போட்டு அமர்ந்திருக்கிறான்.

இவ்வளவு கெடுபிடிகளையும், கண்டுகொள்ளாத மட்டில், சங்கரன் தன்னோடு திரண்டுவரும் கூட்டத்தோடு சங்க ஆபீஸ் கதவைத் திறக்கப் போனபோது

"சார்! சார்! வக்கீல் சார், சங்கத்தைத் திறக்காதீங்க. உள்ளாற யாரும் போவப்படாது. உத்தரவு" இவ்வாறு

எச்சரிக்கை விடுத்தவாறே சப்-இன்ஸ்பெக்டர் பலவேசம் சங்கரனை நோக்கி ஓடி வந்தான்.

சங்கரன் காக்கையனைப் பூட்டை உடைத்துக் கதவைத் திறக்கும் படி சொன்னார்.

"மீறித் திறந்தீங்க, கைது செய்ய வேண்டி வரும்." பலவேசம் எச்சரித்தான்

பலவேசத்தைத் தொடர்ந்து அங்கே காவலுக்கு நின்ற போலீஸ்காரர்களும் வந்து குழுமலானார்கள்.

"எங்க சங்க ஆபீசை மூடறதுக்கும் தடுக்கறதுக்கும் நீங்க ஆரு? எவன் அதிகாரம் கொடுத்தான்.?" சங்கரன் பலவேசத்தைக் கோபத்தோடு கேட்டார்.

இதற்குள் தெருக்களில் பீதியுடன் நின்றிருந்த பெண்கள் சங்க ஆபீஸை நோக்கிப் படை எடுத்தாற் போன்று வரவாரம்பித்தனர்.

நீண்ட எத்துப் பற்களும், தடித்துக் கருத்த உதடும், பரட்டைத் தலையும், கந்தல் உடையுமாக நின்ற கிழவி, தனது கைத்தடியைத் தரையில்தட்டி பலவேசத்தைக் கோபமாகப் பார்த்தாள்.

"தோல் ஷாப்பு மொதலாளிக அல்லாம் ஒங்க ஆத்தாளைக் கெடந்தவங்களாடா அவங்க சொன்னாங்கண்டு, எங்க புள்ளாண்டங்களை அல்லாம் புடிச்சு உள்ளார போட்டீங்க. எங்களை ஆட்டை மாட்டை அடிக்கறாப் போல அடிச்சி மானபங்கப்படுத்தரீங்க. எங்கப்பன் அய்யர் வந்திட்டாரில்லே. உப்ப ஒங்க வீரத்தைக் காட்டுங்கடா" என்று பலவேசத்தைப் பார்த்து உரத்துக் கத்திவிட்டுக் கலைந்து கிடந்த தனது கூந்தலை அள்ளி முடிந்து கொண்டு நின்றவளைப் பார்த்து

"ஏய் கூனி இடம்பொலம் பார்க்காம தூஷனையாப் பேசாதை. தலைவருக்குப் பிடிக்காது" என்று வீரணன் எச்சரிக்கவும் வாய்க்குள்ளேயே யாரையோ வைத வண்ணம் அப்பால் போனாள் அவள் நாளெல்லாம் சங்கக் கட்டிடத்தின் முன்னால் படுத்துக் கிடப்பவள்

சங்கரன், சவரியார் பாளையம் வந்திருக்கும் சேதி காட்டுத் தீயே போல், தோல் ஷாப்புத் தொழிலாளர்கள் குடியிருப்புக்களுக்கும் சேரிகளுக்கும் பரவலாயிற்று. போலீசுக்குப் பயந்து காடுகரைகளில் தஞ்சம் புகுந்து இருந்த தொழிலாளர்களும், சேரிகளிலிருந்து விவசாயத் தொழிலாளர்களும் சங்க ஆபீஸை நோக்கிப் படையெடுக்கலாயினர்.

"சார், இந்த ஆபீசுலே வெச்சுத்தான் முஸ்தபா மீரானைக் கொலை செய்யறதுக்குச் சதித்திட்டம் நடந்திருக்கு.. எஸ்.பி. எஜமானும், மத்த அதிகாரிகளும், சோதனை போட்டப் பெறவுதான், திறக்கணம்" முகத்தில் வழிந்தோடும் வியர்வையைத் துடைத்தவண்ணம், தடுக்க வந்த சப்-இன்ஸ்பெக்டர் பலவேசத்தைச் சங்கரன் கோபக்கனல் பறக்கப் பார்த்தபோது, திரண்டு நிற்கும் கூட்டத்தைப் பார்த்துப் பீதிப்பட்டுப் போனவன், பின்வாங்கிய மட்டில், வெள்ளைத்துரைக்கு சேதியனுப்ப போலீஸ்காரர்களைத் தேடினான்.

இதற்குள், சைக்கிளில் வந்து இறங்கிய நரசிம்ம பாரதி, போலீஸ் அட்டூழியத்தைக் கண்டித்து, மாவட்ட கலைக்டருக்கும், அரசுக்கும் அடித்த தந்திகளையும், கடிதங்களையும், சங்கரனிடம் கொடுத்துவிட்டு "பலவேசம், ஒங்களுக்கும், ஒங்க போலீசுக்கும் இங்கே என்ன வேலை? இங்கே வாரதுக்கும், இவங்களை மிரட்டறதுக்கும் அதிகாரம் கெடையாது. உதவி சூப்பிரண்டு சொன்னானென்று ஊருக்குள்ளே வந்து அராஜகம் செய்திருக்கீங்க. மரியாதையா இங்கேருந்து போயிருங்க."

அனுபவமிக்க தேசியவாதியும், தொழிற்சங்கத் தலைவருமான நரசிம்மபாரதி எச்சரிக்கவும், பலவேசம் வதனம் சுருங்கிப் போனது.

வெள்ளைத்துரையை மனதுக்குள் வைத வண்ணம் பலவேசம் மீண்டும் ஆலமரத்தடிக்குப் போனான். போலீஸ் ஜவான் ஒருவன் தலைதெறிக்கும் வேகத்தில் டி எஸ்.பி பங்களாவைப் பார்த்து ஓடலானான்.

சங்க ஆபீசுக்கு முன்னால் தொழிலாளர்களும், ஜனங்களும் கூடிக் கொண்டிருந்தார்கள்.

மாலையான போது, மைதானமே ஜனங்களால் நிரம்பி வழிந்தது.

சங்கரன் தலைமையிலும், நரசிம்ம பாரதி தலைமையிலும் திரண்ட மக்கள் ஊர்வலம், போலீஸ்அட்டூழியத்தைக் கண்டித்து உதவி கலைக்டர் அலுவலகத்தை நோக்கிப் புறப்பட்டது.

பீதியில் மூழ்கிக் கிடந்த அந்த மக்களுக்குத் தங்களைப் பற்றித் தன்னம்பிக்கை பிறந்திருந்தது.

●

11

தோல் பதனிடும் தொழிலாளர் சங்கத்தின் முக்கியத் தலைவர்களையும் ஊழியர்களையும், கொலைக் குற்றச்சாட்டிச் சிறையில் அடைத்து இரண்டு மாதம் ஓடிவிட்டது.

அஸன் ராவுத்தரும், இதர தோல் ஷாப்பு உடைமைகளும், வெள்ளைத்துரைக்குக் கொடுத்த பணத்துக்காக, இவ்வளவு பெரிய வேலையைச் செய்திருக்கிறான் என்ற போதிலும், சங்கரனையும் ஒரு குற்றவாளியாகச் சேர்த்து, ஜெயிலில் அடைக்காதது அவனுக்கு மிகவும் விசனப் படக் கூடிய ஒன்றாக இருந்தது.

தோல் ஷாப்பு முதலாளிகள் சங்கச் செயலாளர் மக்தூன் மொய்தீனைப் பொறுத்த மட்டில், வெள்ளைத்துரைக்கு எவ்வளவு பணம் வேண்டும் என்றாலும் கொடுப்பதற்குத் தயார் என்றும், எப்படியாவது சங்கரனை மட்டும் எந்த வேலையும் செய்ய ஒட்டாமல் மடக்கிப் போட்டுவிட வேண்டும். வழக்கில் எப்படியாவது ஒரு பிரதியாகச் சேர்த்து விட வேண்டும் என்று உதவி சூப்பிரெண்டு வெள்ளைத்துரையைக் கேட்டுக் கொண்டிருந்தான். எனவே, வெள்ளைத்துரையும் தக்க தருணம் வேண்டி இலவு காத்த கிளியாகக் காத்துக் கொண்டிருந்தான்.

சங்கரனைப் பொறுத்த மட்டில் தலைவர்கள் அதிலும் குறிப்பாக இருதயசாமி கைது செய்யப்பட்டிருப்பதானது, தனது வலது கையே உடைந்து போனது போன்ற நிலைமை. எனவே, வீட்டுக்குக் கூடச் சரியாகப் போக முடியாமல் தனது முழு கவனத்தையும் சங்க வேலைகளிலேயே செலுத்த வேண்டியிருந்தது வக்கீல் தொழிலுக்கு முழுமையாகவே முழுக்குப் போட வேண்டியதாயிற்று.

இதற்கிடையில், சங்கரனுக்கு உள்ளூர் சப்-ஜெயிலில் அடைபட்டிருக்கும். ஊழியர்களுக்கான சட்ட உதவி செய்வதோடு, கொலைக்குற்றம் சாட்டப்பட்டிருப்பதால், வழக்கைத் திறன்பட நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதோடு, ஜெயிலில் இருப்பவர்களைப் பார்த்து, அவர்கள் சோர்ந்துவிடாமல் இருப்பதற்கான ஏற்பாடுகளையும் அவ்வப்போது செய்ய வேண்டியதாக இருந்தது.

நல்ல வேளையாகத் தோழர் வேலாயுதம் அவர்களுடன் அடைக்கப் பட்டிருப்பதானது. ஆசிரியர் இருதயசாமிக்கும் மற்றவர்களுக்கும், சோர்வு தட்டாமல் தென்பு ஏற்படக் கூடியதாக இருந்தது. அவர்களது உறுதி தளராமல் பார்த்துக் கொண்டார்.

இருதயசாமிக்கு முதல் முதலாகத் தன்னைக் கைது செய்து சிறையில் அடைத்தபோது ஒரு கேவலமான செயலாகப் பட்டது. சிறை என்பதும் போலீஸ் நிலையம் என்பதும் சமூகவிரோதிகளுக்கான இடம் என்று கருதியதோடு, இந்தக் கொலை வழக்கில் தன்னைச் சேர்த்திருப்பதன் மூலம் வெள்ளைத்துரை தன்னை மிகவும் அவமானப் படுத்தி விட்டதாகவே எண்ணினார். உண்மையில் சிறைச்சாலையில் அடைக்கப்பெற்ற ஒருவாரம் அவரால் நித்திரை கொள்ள முடியவில்லை.

கைது செய்த முதல் வாரத்தில் அவர்கள் நால்வரையும் தனித்தனிக் கொட்டடியில் அடைத்து வைத்ததும், இதர கிரிமினல் குற்றவாளிகளோடு, குற்றவாளிகளாக அடைக்கப்பட்டதும், ஆரோக்கிய சாமியை மிகவும் சோர்வடையச் செய்திருந்தது. தனது பிறவியையே நொந்து கொண்டார். கர்த்தரின் சோதனை தன்பால் இவ்வளவு கடுமையாக இருக்கக் கூடாது என்று மனதுக்குள் பிரார்த்தனை செய்து கொண்டார்.

ஆனால் மறுவாரத்திலேயே நிலைமையில் மாற்றம் ஏற்பட்டிருந்தது. வேலாயுதம் கொடுத்த மகஜாரை சப்-ஜெயிலர் ஏற்றுக்கொண்டு, அவர்கள் நான்கு பேரையும் ஒரே கொட்டடியில் அடைக்கும்படி உத்தரவு போட்டது

இருதயசாமிக்கு ஆறுதல் தருவதாக இருந்தது. அல்லாமலும் சங்கரனும், நரசிம்ம பாரதியும் அடிக்கடி அவர்களைச் சந்திப்பது மனதுக்குத் தெம்பூட்டுவதாக இருந்தது.

சங்கரன் ஜெயிலரின் அனுமதி பெற்று, வேலாயுதம் படிப்பதற்காகத் தத்துவார்த்தப் புத்தகங்களைக் கொண்டு வந்து கொடுத்ததுடன் இருதயசாமி படிப்பதற்கும், ஜெபம் செய்வதற்கும் பைபிளும், வேதநாயகம் பிள்ளை கீர்த்தனம் அடங்கிய பாட்டுப் புஸ்தகத்தையும் ஓசேப்பும், மினிசாமியும் ஆரம்பக்கல்வி பயில்வதற்கான தமிழ் ஆங்கில பாடப்புத்தகங்களையும் கொண்டு வந்து கொடுத்துவிட்டுப் போனதற்குப் பின்பு அவரது வாழ்வில் ஏதோ புதிய ஒளிபரவுவதாக இருதயசாமி உணர்ந்தார்.

தோழர் வேலாயுதத்தைப் பார்ப்பதற்கு அவரது தோழர்கள் தினசரி வந்து போனது அல்லாமல் படிப்பதற்கு நிறைய புஸ்தகங்களையும் கொண்டு வந்து கொடுத்து விட்டுப் போனார்கள். வேதாகமத்தையும், கிறிஸ்து மதம் சம்பந்தப்பட்ட புத்தகங்களை மட்டும் படித்து நெட்டுருச் செய்து வைத்திருந்த இருதயசாமிக்குத் தனக்கு முற்றிலும் மாறுபட்ட புஸ்தகங்களைப் பிரித்துப் பார்ப்பதே புதிய அனுபவமாகப்பட்டது.

வேலாயுதம், அவர்கள் இருந்த சிறைக் கொட்டடியை ஒரு கல்விச்சாலையாக மாற்றியிருந்தார். வறுமையின் காரணமாகப் பள்ளிக் கூடமே போக முடியாத பரிதாப நிலைமையில் இருந்த ஓசேப்புக்கும் மினிசாமிக்கும் இருதயசாமி கல்வி புகட்டும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தார்.

கதை படிப்பது வெறும் பொழுது போக்கு என்று திடமான நம்பிக்கை கொண்டிருந்த இருதயசாமிக்கு வேலாயுதம் வாசிப்பதற்காக ஜெயிலுக்குக் கொண்டு வந்திருந்த அன்னை என்கிற மொழி பெயர்ப்பு நாவல். ஒரு புதிய வாழ்க்கைக்கு வழிகாட்டியாகப்பட்டது. இரவு படுக்கைக்குப் போவதற்கு முன்னால் தோழர் வேலாயுதம், அந்த நாவலின் கதாநாயகன் பாவலையும் அவளது தாயார் அன்னை பற்றியும், அவனது தோழர்கள் பற்றியும் எடுத்துச் சொல்வது புது அனுபவமாக இருந்தது.

அவர்களுக்கு ஏற்பட்ட புதிய அனுபவமானது காவிய நாயகி மணிமேகலை சிறைச்சாலையை அறச்சாலையாக மாற்றிய சம்பவம் இருதயசாமிக்கு நினைப்பில் வந்தது. ஒசேப்பும், மினிசாமியும் மிக ஆர்வமுடன், தமிழோடு ஆங்கிலத்தையும் கற்றுக் கொண்டதோடு, சக கைதிகளுக்கு மனுக்கள் தயார் செய்து கொடுக்கும் அளவுக்குப் பக்குவப்பட்டிருப்பது இருதயசாமிக்குப் பெருமையாக இருந்தது.

சப்-ஜெயில் பொறுப்பு வகிக்கும் தாசில்தார் துரைப்பாண்டியன் வெளிப்படையான பெரியார் இராமசாமியின் கட்சிக்காரர். வேலாயுதத்தின்பால் அபரிமிதமான மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார். வார்டர்கள் கூட, ஆசிரியர்பாலும், வேலாயுதத்தின்பாலும் மிகவும் கண்ணியமாகவே நடந்து கொண்டனர். அவர்கள் முன்னிலையில் இதர கைதிகளிடம் கூட அவர்கள் மரியாதையாக நடந்து கொண்டார்கள். வார்டர்கள் அப்படி நடந்து கொண்டார்கள் என்பதோடு, பாசாங்கு செய்தார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். சொல்லப் போனால் பசுத்தோல் போர்த்திய புலிகளாக வேலாயுதத்துக்குப் பயந்து நடித்தார்கள்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் உதவி-சூப்பிரெண்டு வெள்ளைத்துரை தனது அதிகாரபலத்தைக் காட்டி இருதயசாமியை மிரட்டிச் சங்கரனையும் கொலை வழக்கில் சேர்த்துவிட வேண்டும் என்கிற நப்பாசையோடு, கைதி இருதயசாமியைத் தனியாகச் சந்திக்கவும். விசாரணை செய்யவும் சப்-ஜெயிலரிடம் அனுமதி கேட்டிருந்தான்.

அனுமதி கிடைக்கப் பெறவும் சப்-ஜெயிலுக்குத் தனது பரிவாரத்துடன் வந்த வெள்ளைத்துரை கைதிகளைச் சந்திப்பதற்கான அறையுள் நுழையும்போதே, தான் அமரப் போகும் ஆசனத்துக்கு எதிராக ஒரு நாற்காலியும் போடப்பட்டிருப்பதைப் பார்த்ததும் கோபம் ஏற்பட்டது.

"எதுக்கு இந்த நாற்காலி?" நின்ற சிறை வார்டரிடம் கேட்டான்.

"வாத்தியார் உக்காரதுக்கு எஜமான்" என்று வார்டர் சொன்னான்.

"ராஸ்கல் அவன் ஒரு கிரிமினல். இந்த நாற்காலிய இங்கே போடச் சொன்னது யார்" கோபமாகக் கேட்டான்.

"சப்-ஜெயிலர், தாஸில்தார் தான் போடச் சொன்னார்" வார்டர் சொன்னான்.

"சப்-ஜெயிலருக்கு என்ன பைத்தியமா?" நாற்காலியில் சாய்ந்தவாறே உதவி சூப்பிரண்டு கேட்டபோது தலையைச் சொரிந்து கொண்டு நின்ற வார்டர்

"இந்தச் சங்கத்துக்காரப் பயலுவளை சப்-ஜெயில்லே கொணாந்து அடைச்சதும் போதும். அல்லாம் தலை கீழாக மாறிப் போச்சுது எஜமான். அதிலேயும் இந்த யாவாரி வேலாயுதம் வச்சதுதான் சட்டமாய் போச்சுது. மூச்சுக்காட்ட முடியலை. தாஸில்தாரும் அவன் சொல்றதுக்கு ஆமாம் சாமி போடுதார் எஜமானாப் பார்த்து ஏதாச்சும் செய்தாத்தான் சரிப்பட்டு வரும்"

யாராவது தனது பேச்சை ஒட்டுக் கேட்கிறார்களா என்று சுற்று முற்றும் பார்த்த வண்ணம் தனது ஆதங்கத்தை வெளியிட்டான்.

வார்டர் ஒரு மாதிரியான ஆள் கைதிகளைப் பார்க்க வருபவர்களிடமே, பணம் பெறுவதும் கைதிகளை மிரட்டிப் பணம் பறிப்பது. ரேஷனில் கை வைப்பதும் இப்படிப் பலவாறாகச் சட்ட விரோதமான நடவடிக்கைகளையும் செய்பவன். வேலாயுதம் அவனது செயலை வெளிப்படையாகக் கண்டித்ததோடு, கைதிகளையும் உஷார் படுத்தியதால் பணம் பறிக்க முடியவில்லையே என்பதில் அவனுக்கு ஆத்திரம்.

சாதாரணமாக, வெள்ளைத்துரை போன்ற உயர் போலீஸ் அதிகாரிகள் ஜெயில் விஸிட்டுக்கு வரும்போது, ஜெயிலரே, வாசலில் வந்து நின்று வரவேற்பதுண்டு. அப்படிப்பட்ட மரியாதையை எல்லாம் பெரிதும் எதிர் பார்க்கும் வெள்ளைத்துரையை, சப்-ஜெயில் கூடுதல் பொறுப்பு வகிக்கும் தாஸில்தார் தன் வரவையே கண்டு கொள்ளாத முறையில் நடந்து கொண்டது உள்ளூற ஆத்திரத்தை மூட்டியிருந்தது. தான் அவமானப் படுத்தப்படுவதாகவே கருதினான்.

எப்படியும், வாத்தியார் இருதயசாமிக்குப் போடப்பட்ட நாற்காலியை வார்டர் மூலம் அப்புறப்படுத்தி விட வேண்டும் என்று வெள்ளைத்துரை ஜவானுக்கு உத்திரவு போட நினைத்த போது ஜெயிலர் சங்கர பாண்டியன் அறையுள் பிரவேசிக்கவும் அவருக்கும் ஒரு நாற்காலி போடப்பட்டது. தனது ஆசனத்தில் அமர்ந்த சங்கர பாண்டியன்

"சரி, போய் வாத்தியார் இருதயசாமியை வரச் சொல்லுங்க" தாஸில்தார் வார்டரிடம் சொன்னார்.

ஒரு ஜவானை தாஸில்தார் மரியாதை விகுதி போட்டு அழைத்தது வெள்ளைத்துரைக்குப் பிடிக்கவில்லை. கோபத்தை வெளிக்காட்டிக் கொள்ள முடியாமல் மூங்கைத் தனமாக சங்கர பாண்டியனைப் பார்த்த வெள்ளைத்துரை

"இந்த நாற்காலி எதுக்கு" வெள்ளைத்துரையின் குரல் சற்று தூக்காகவே இருந்தது.

அனுபவசாலியான துரைப்பாண்டி, வெள்ளைத்துரையின் உட்கிடக்கையைப் புரிந்து கொண்டபோதும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

"ஆசிரியர் இருதயசாமிக்கு" என்றவர்,

"அவரைப் பார்த்துப் பேசுவதற்குத் தானே நீங்கள் அனுமதி கேட்டிருக்கிறீர்கள்"

சாதாரணமாகச் சொல்லவும்

"ஜெயிலர் ஸார், அவன் ஒரு கிரிமினல், கொலைக் குற்றம் சாட்டப்பட்டிருக்க கொலையாளி. அவனையும் எனக்குச் சமமா உக்காந்து பேசச் சொல்றீங்களா?"

வெள்ளைத்துரையின் அம்மைத் தழும்பு நிரம்பிய முகம் விகாரமாக மாறியது.

துரைப்பாண்டிக்கு அவனது முகம் அடிபட்டுச் சீறும் நாயின் முகம்போல் பட்டது.

"அவர், இன்னும் குற்றவாளி என்று தீர்ப்பாகவில்லை. எனக்கு நீங்களும், அவரும் ஒன்றுதான். போலீஸ் அதிகாரியின்

முன்னால், குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு உட்காரத் தகுதியில்லையிண்ணு சட்டம் இருந்தாச் சொல்லுங்க உங்க இஸ்டப்படியே அவரை நிக்க வச்சு விசாரிக்கலாம்."

தாஸில்தார் கோபப்படாமல் சாந்தமாகச் சொன்னபோது வாயடைத்துப் போன வெள்ளத்துரை தனது கோபத்தை வெளிக்காட்டி அவரைப் பயமுறுத்த முடியாமல் வறண்டுபோன தொண்டைக் குழியை எச்சிலைக் கூட்டி விழுங்கி நனைத்த மட்டில் ஒரு கணம் தலையைத் தொங்கப் போட்ட படி உட்கார்ந்திருந்தவன், தலையை உயர்த்தி

"நான் அந்த மனிசனைத் தனிமையில் விசாரிக்க வேண்டும்"

வெள்ளைத்துரையின் திட்டப்படி, இருதயசாமியை மிரட்டிச் சம்மதமும், ஒப்புதலும் வாங்க வேண்டியிருப்பதால் தாஸில்தார் அங்கு இருப்பதை அவன் விரும்பவில்லை.

"ஓ, எஸ். தாராளமாக நீங்க விசாரணை பண்ணலாமே, யாரும் குறுக்கிட மாட்டாங்க. அவங்களோட வக்கீல் கூட வரமாட்டார்"

இவ்வாறு துரைப்பாண்டி சொன்னபோதும், அவர் அங்கேயே தனது இருக்கையில் இருப்பதைப் பார்த்ததும் வெள்ளைத்துரை இப்போது விளக்கமாகவே சொன்னான்.

"நான் அந்தக் குற்றவாளியைத் தனிமையில் உட்காரவைத்து விசாரணை செய்ய வேண்டியிருக்கு. இந்த அறையில் என்னையவும், அந்தக் கைதியையும் தவிர வேறு யாரும் இருக்கப்படாது. அதை நான் விரும்பவில்லை." அதிகாரத் தோரணையுடன் வெள்ளைத்துரை சற்று கடுமையாகவும், எச்சரிக்கும் முறையிலும் பேசவும், துரைப்பாண்டிக்கு எரிச்சல் ஏற்பட்டது.

"டி.எஸ்.பி. ஸார் ஜெயில் விதிகளைத் தெரிஞ்சுட்டுத்தான் பேசறீங்களா. இல்லே உங்க அதிகார முறையிலே பேசறீங்களா?" என்று வெள்ளத்துரையின் முகத்தைப் பார்த்துக் கேட்டார்.

"மிஸ்டர் வெள்ளத்துரை இப்போது அந்த மனிதன் என் பொறுப்பில் விடப்பட்டிருக்கிறார். உங்களோட கஸ்டடியில் கிடையாது. உங்க கஸ்டடியிலே எடுத்து விசாரணை செய்யறதுக்கும் மாஜிஸ்திரேட்டோட அனுமதி வேணும். அதற்கான கெடுவும் முடிஞ்சு போச்சுது. ஏதோ, ஒரு உயர்தர போலீஸ் அதிகாரி கேட்கிறாரேண்ணு, பார்ப்பதற்கு அனுமதி தந்திருக்கேன். மட்டுமில்லாம, ஜெயில் விதிகளின் படி. நீங்கள் கைதியோட பேசும்போது நான் உங்களைக் கண்காணிச்சாக வேணும் தெரியுமா" என்றவாறு எழுந்து நின்று.

"உங்களையும், என்னையும் விடத்தானும் வேலாயுதம் ஜெயில் விதிகளைத் தெரிஞ்சு வச்சிருக்க மனிதன். நாம ரெம்பவும் ஜாக்கிரதையாகவே பரிமாற வேண்டியதாக்கும்" என்று வெள்ளத்துரையின் முகத்தில் அறைந்தாற் போன்று அறிவுரையாகத் துரைப்பாண்டி பேசி முடிக்கவும். இருதயசாமி அறைக்குள் பிரவேசிப்பதற்கும் சரியாக இருந்தது.

இருதயசாமியின் தோற்றத்தைக் கண்டு வெள்ளைத்துரை திகைத்துப் போனான்.

●

வெள்ளைத்துரையைப் பொறுத்த மட்டில், ஜெயில் வாசம் காரணமாக மனம் உடைந்து, அழுக்கும் சிக்கும் நிறைந்த உடையும் பஞ்சடைந்த நயனங்களும், எண்ணெய் வாடையே படாத பரட்டைத் தலையுமாக, துவண்டு போன மனித ஜீவனாக இருதயசாமி தன் எதிரில் வந்து நிற்பார் என்று எதிர்பார்த்தான். அதிலும் படித்த மத்தியதர வர்க்கத் தவரை இப்படி ஜெயிலில் பிடித்துப் போட்டால் அவமானத்தால் குன்றித்துவண்டு போவார்கள். ஜெயிலில் இருந்து வெளியே வர வேண்டும் என்பதற்காக எதையும் செய்வதற்கும் தயாராக இருப்பார்கள் என்பது அவனது கணிப்பு.

ஆனால் வெள்ளைத்துரை எதிர் பார்த்ததற்கு எதிர்மாறாக வெள்ளைத் துப்பட்டாவுக்கொப்பான மடித்த மேல் சட்டையும், வேட்டியும் உடலில் தவழ தூய்மையான

தோற்றமும், தெளிவான பார்வையுமாக ஆசிரியர் இருதயசாமி அவன் முன்னால் வந்து நின்றபோது, வெள்ளத்துரை மிரண்டு போனான்.

தாஸில்தார் கூட வெள்ளைத்துரைக்கும் அவருக்கும் ஏற்பட்ட வாக்கு வாதத்தையும் மனத்தாங்கலையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல், இருதயசாமியை வரவேற்று நாற்காலியில் உட்காரவைத்த போது, அவனது அதிகார மமதையில் சாணியை வாரிச் சாத்தியமாதிரிப்பட்டது.

ஜெயில் விதிப்படி, அவர்களைக் கண்காணிக்க வேண்டியிருப்பதால், தாசில்தார் வெள்ளைத்துரையையும், இருதயசாமியையும் தனிமையில் விட்டுவிட்டு, அறைக்கு வெளியே அவர்களைப் பார்க்கும் தூரத்தில் நாற்காலி போட்டு அமர்ந்து கொண்டார்.

தனக்கேற்பட்ட அவமதிப்பையும், உள்ளூற தலையுயர்த்தி நிற்கும் கோபத்தையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல்

"என்ன இருதயசாமி எப்படி இருக்கே" வெள்ளைத்துரையின் மரியாதை கெட்ட வார்த்தைப் பிரயோகம் அவருக்குப் பிடிக்க வில்லை. செவிமடுக்காத மட்டில், எதிரில் சற்றுத் தொலைவில் உட்கார்ந்திருக்கும் சப்-ஜெயிலரைப் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தார்.

வெள்ளைத்துரையே மீண்டும் பேச்சைத் தொடங்கினான்.

"இந்த வழக்கு இப்படியே போச்சுண்ணா ஒங்க அல்லாத்துக்கும் தூக்குத் தண்டனை இல்லாட்டிப் போனா ஜென்மம் நிச்சயம்."

இப்படி ஒரு குண்டைத் தூக்கிப் போட்டால் இருதயசாமி மிரண்டு போவார் என்பது வெள்ளைத்துரையின் ஊகம்.

ஆனால், வெள்ளைத்துரை பேசுவதைப் பொருட்படுத்தாத மட்டில்,

"இப்போ, அதெல்லாம் எதுக்கு ஸார், வந்த விஷயத்தைச் சொல்லுங்க. என்னண்டை ஏதாச்சும் கேட்க வேண்டியிருந்தா கேளுங்க"

இருதயசாமி மிகவும் அமைதியாகப் பதில் சொன்னார்.

"இல்லே ஒங்க அப்பா, சாமிக்கண்ணு, மேஸ்திரி ரெண்டு நாளைக்கு மின்னால என்னை ஆபீஸில வந்து பாத்துச்சு. கூட ஒரு சாமியாரும் வந்தார்."

வேண்டும் என்றே அப்படி ஒரு பொய்யைச் சொன்னான்.

"பாக்கறதுக்கு ஒங்கப்பா ரொம்ப நல்ல மனுஷனாப் படுது. எவ்வளவு மரியாத பௌவியம்."

அந்த வஞ்சப் புகழ்ச்சி எல்லாம் எடுபடாது என்பதுபோல் இருதயசாமி உட்கார்ந்திருந்தார்.

"எப்படியாச்சும் எம் மவனை நீங்கதான் காப்பாத்தணும்ணு கெஞ்சாத குறையா கேட்டுது. சாமியாரும் அதைத்தான் கேட்டார்."

கையும், காலும் வைக்கப்பட்ட புனை கதையைக் கேட்ட இருதயசாமி அப்படியா என்று கேட்பது போல் அவனைப் பார்த்தார். பதில் ஏதும் பேசவில்லை.

வெள்ளைத்துரை, சொல்ல வந்ததை முழுமையாகச் சொல்லிவிடட்டும் என்றோ என்னவோ மௌனமாகவே உட்கார்ந்திருந்தார். ஆனால் அவரது மௌனத்தை வேறுவிதமாக அர்த்தம் பண்ணிக் கொண்ட வெள்ளைத்துரை மேலும் பேசவாரம்பித்தான்.

"வேறே வழியே இல்லாம நானும் வாக்குக் குடுத்துட்டேன்" என்று இருதயசாமிக்குச் சலுகை செய்துவிட்டதேபோல் பேசியவன், சப்-ஜெயிலர் தன்னைக் கவனிக்கிறாரா என்று திரும்பிப் பார்த்துக் கொண்டு சற்று நேரம் மௌனமாக உட்கார்ந்திருந்தான்.

மிகவும் ரகஸ்யமான ஒன்றைப் பேசப் போவதைப் போல, தனது இருக்கையினின்றும் எழுந்து வந்தவன், இருதயசாமியிடம்

"இங்க பாரு, இருதயசாமி வீணா, இந்த பாப்பாரப் பய சங்கரன் பேச்சைக் கேட்டுக் கெட்டுப் போயிரக்கூடாது. வீணா ஒன்னைய நீ அழிச்சுக்கப்படாது." என்றவன் திரும்பவும் நாற்காலியில் போய் உட்கார்ந்தான்.

"இந்த வழக்கிலேருந்து நீ விடுவிக்கப்பட வேணும்ண்ணா காப்பாத்திக்க வேணுமானா ஒரே வழிதான் இருக்கு பேசாம என்கூட வந்திடு.

மாஜிஸ்திரேட்டுக்கிட்டே வந்து ஒரே ஒரு வாக்கு மூலம் மட்டும் குடுத்தாப் போதும். இந்தக் கொலைய நாங்களாச் செய்யலே. இந்தச் சங்கர அய்யன் சொல்லித்தான் செஞ்சோம். அப்படிண்ணு சொன்னா போதும். நீ அப்ரூவர் ஆயிடுவே. ஒனக்கு விடுதலை வாங்கித்தர நான் கியாரண்டி" என்று சொன்னது தான் தாமதம், இருதயசாமி தேள் கொட்டியது மாதிரி, தனது இருக்கை யினின்றும் குதித்து எழுந்தார்.

"பேமானி என்னடா சொன்னே. நடக்காத சம்பவத்தைக் கதை கட்டி, எங்க மேலே பழியப் போட்டுதுமில்லாம ராப்பகலா எங்க சனங்களுக்காவ அலையுற மனிசனையும் பழிவாங்க பாக்கறையா, நான் பலிகடா ஆவணுமா" அந்த அறையே எதிரொலிக்கும் படிச் சத்தம் போடவும் அதிர்ந்து போன வெள்ளைத்துரை,

"படவா, மருவாதையாப் பேசுடா கீழ் ஜாதி நாயே" என்று எகிறிக்குதித்து, அவரை அடிப்பதற்குத் தன்கையில் இருந்த குறுந்தடியை ஓங்கிய வண்ணம் அவரை நோக்கி பாயவும்

"மிஸ்டர் வெள்ளைத்துரை இது உங்க போலீஸ் ஸ்டேஷன் கெடையாது. என் முன்னால திமிரா நடந்துக்கது நல்லதில்லை. அப்புறம் நான் வேறுவிதமா நடவடிக்கை எடுக்க வேண்டிவரும்" என்று எச்சரித்த தாசில்தார்

வெள்ளைத்துரை கையில் இருந்த குறுந்தடியைப் பிடுங்கி தரையில் வீசினார்

"விடுங்க சார், அவன் என்னைத் தாக்கிப் பாக்கட்டும். என்ன நடக்குதென்று பாப்பம்" எதிர்த் தாக்குதலுக்குத் தயாராகி விட்டதுபோல இருதயசாமி சொன்னார்.

வெள்ளைத்துரைக்குத் தனது திட்டம் தோல்வியடைந்து அவமானப் பட்டதால் மகாவிசனம்.

"படவா ராஸ்கல் உங்களையெல்லாம் சும்மாவிட மாட்டாண்டா இந்த வெள்ளத்துரை" என்று கத்திய மட்டில், தடியையும், தொப்பியையும் எடுத்துக் கொண்டு அறையை விட்டு வெளியே போனான்.

சப்-ஜெயிலர் ஒரு புழுவைப் பார்ப்பது போல், வெள்ளைத்துரையைப் பார்த்தார்.

●

12

சப்-ஜெயிலில் இருதயசாமியிடம் அவமானப்பட்டுத் திரும்பிய வெள்ளைத்துரை, மிகவும் ஆத்திரமும் கோபமும் கொண்டு எப்படியும் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும், தோல் ஷாப்புத் தொழிலாளர் சங்கத் தலைவர்களுக்கும், ஊழியர்களுக்கும் மரண தண்டனை அல்லது குறைந்த பட்சம் ஜென்மமாவது வாங்கிக் கொடுத்து விட வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு வெறியாக அலைந்தான்.

சங்கரன் தனது சதிவலைக்குள் வராமல் தப்பித்து விட்டதில் வெள்ளத்துரைக்குத் தாங்கவொண்ணாத மன வருத்தம்.

இன்ஸ்பெக்டர் பாலையன் ஏதாவது சதிவேலை செய்து, வழக்கின் போக்கை மாற்றி விடக்கூடாது என்கிற சந்தேகத்தின் பேரில் தனது கையாளான சப்-இன்ஸ்பெக்டர் பலவேசத்தின் உதவியோடு, வழக்கின் விசாரணையைத் தனது மேல் பார்வைக்குக் கொண்டு வந்தான்.

வெள்ளைத்துரையின் துப்புத்துலக்கலைச் சுலபமாக்கும் வகையில், சப்-இன்ஸ்பெக்டர் பலவேசம், மேற்கு மலைப் பகுதியில் பன்றி மலையை, ஒட்டிய கிராமங்களில் சுற்றி அலைந்து பூச்சி நாயக்கனைப் பிடித்துக் கொண்டு வந்து வெள்ளைத்துரையிடம் ஒப்படைத்திருந்தான். எனவே, பாலையனிடம் சரணடைந்திருந்த சிட்டம்மாளையும், தனது கஸ்டடிக்குள் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளையும் செய்திருந்தான்.

வெள்ளைத்துரையைப் பொறுத்த மட்டில், மற்ற சாட்சிகள் எப்படியான போதிலும், பிணம் கிடந்த இடம் சம்பந்தப்பட்ட சாட்சிகளான, இருவரையும் மிரட்டித் தன் வழிக்குக் கொண்டு வந்து விட்டால், வழக்கின் தன்மையையும், சூழ்நிலையையும் இணைத்து நிச்சயம் குற்றவாளிகளுக்குக் கடுமையான தண்டனையை உறுதி செய்துவிட முடியும் என்பது திட்டம்.

பூச்சிநாயக்கன், உதவி-சூப்பிரண்டின் முன்னால் கொண்டுவரப்பட்டது தான் தாமதம், வெட்டுண்ட மரம் போல் வெள்ளைத்துரையின் காலில் சாஷ்டாங்கமாக விழுந்தான். மலைபோன்ற தேகம் குலுங்கக் குலுங்க அழுதான் பிறகு எழுந்து நின்றவன், இரு கரங்களையும் கூப்பிக் கும்பிட்ட வண்ணம்,

"நாம் புள்ளெ குட்டிக்காரன் சாமி, இந்தக் கொலைக்கும் எனக்கும் சம்பந்தமே கெடையாது. செவனேண்ணு நாம் உண்டு எம் வேலை உண்டுண்ணு இருப்பவன்" என்று கெஞ்சினான்.

நாயக்கன் நல்ல கும்மிருட்டுக்கருப்பு. நெற்றியில் திருவரங்கத்து யானைக்குச் சாத்தியது போன்ற நாமம். செட்டியார் பொம்மைக்குக், கரலாக் கட்டைகளைப் பொருத்தி வைத்தது போன்ற கால்கள். இடுப்பை மறைத்துக் கட்டப்பட்ட காவி ஏறிய வேட்டி.

பூச்சி நாயக்கனின் விசித்திரமான தோற்றம் வெள்ளைத்துரைக்கு வியப்பைத் தந்தது.

"ஏண்டா, மன்மதா ஒனக்கும் வைப்பாட்டி கேக்குதா?" வேண்டுமென்றே அதட்டும் தொனியில் வெள்ளைத்துரை பேசலானான்.

"இல்லெ சாமி இல்லெ சாமி, வந்து அதுதான்" என்று பூச்சி ஏதோ பேச முற்படவும்

"ஏண்டா தாயழி. கோகுலத்திலே கிருஷ்ண பரமாத்மாண்ணு நெனப்போ நீ இருக்க லெட்சணத்துக்கு ஊரெல்லாம் பெண்டாட்டி. போதாக் குறைக்கு வப்பாட்டி. நீ

அல்லாம ஆருடா இந்தக் கொலையைப் பண்ணியிருப்பான். பாசாங்கா பண்ணறே" என்று அடிக்க வருபவன் போல் எழுந்து வந்து மிரட்டி விட்டுத் திரும்பவும் நாற்காலியில் அமர்ந்து கொண்டான்.

வெள்ளைத்துரை, போலீசுக்குரிய சாதுரியத்துடன் நாயக்கனை மிரட்டித் தான் விரும்பியபடி சாட்சி சொல்ல வைக்க வேண்டும் என்கிற திட்டம்.

"கொலையவும் பண்ணிப் போட்டு பொணத்தையும் புதைச்சு வெச்சுட்டு, முழுப் பூசணிக்காய சோத்திலே வச்சு மறைக்கவா பாக்கிறே" என்று மீண்டும் மிரட்டி விட்டு

"அந்தப் பொம்பளையவும், அதுதான் இவனோட வப்பாட்டிய வரச்சொல்லு" என்று நின்ற போலீஸ்காரனுக்கு உத்தரவு போட்டான்.

சிட்டம்மாள் எந்த விதமான கலவரமும் இல்லாமல், அறையுள் வந்து வணக்கம் வைத்தாள்.

சிட்டம்மாளின் எளிமையான அழகையும் வனப்பையும் கண்டு ஒரு கணம் குலுங்கிப் போனான். அவள் தீண்டப்படாத சக்கிலியப் பெண்ணா இல்லை தேவதையா என்பதே போல் அவளையே வைத்த கண் வாங்கமல் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்த வெள்ளைத்துரை, மூக்கை வருடிய படியே அவளையும், பூச்சி நாயக்கனையும் மாறி மாறிப் பார்த்தான் அவள் மயங்கிப் போவதற்கு எந்தவிதமான வனப்பும் தோற்றமும் அவனிடம் இல்லை.

"ஏண்டா அவ ஊரெல்லாம் மேஞ்சுட்டு வாரதுக்கு நீ ஒரு சாக்கு இல்லையா" வாய்த்துடிப்பாகக் கேட்டபோது நாயக்கன் பதறிப் போய் சிட்டம்மாளைப் பார்த்தான்.

சிட்டம்மாள் கண்களில் கனல் தெறிக்க வெள்ளைத்துரையைப் பார்த்தாள்.

"நான் மானஸ்தி சாமி. எளிய சாதிண்டா எப்படியும் நடப்போண்டு நெனப்பா அப்படியெல்லாம் பேசாதையும் நல்லால்ல சாமி"

வெடுக்கென்று கேட்டாள். அவள் இப்படிப் பேசுவாள் என்று பூச்சி நாயக்கன் எதிர்பார்க்கவில்லை. எச்சரிக்கை செய்ய

"ஏமி, சிட்டம்மா" என்று சொல்ல வாயெடுத்த போது

"நீ ஊரி குந்துய்யா நாயுடு" என்று சீறி விழுந்தாள்.

"ஏ பொம்பளை. என்னபேசுரே நீ" என்று வெள்ளைத்துரை கோபமாகக் கேட்டபோது.

"பின்னே என்ன சாமி. கண்டகண்ட நாய்கட்டே அல்லாம் படுத்து எந்திரிக்க சாதியில்லே நாங்க" என்று அவனது முகத்துக்கு நேராகச் சொன்னபோது வெள்ளத்துரை வாயடைத்துப் போனான்.

"இந்தச் சாணாப்பய இந்த வேசைமுண்டைக்கு என்னமோ இன்ட்ரெக்ஷன் குடுத்து நமக்கு எதிராகத் திருப்பி விட்டிருக்கான். இவகிட்டே எச்சரிக்கையா இருக்கவேணும்" என்று மனதுக்குள்ளே நினைத்துக் கொண்ட உதவி சூப்பிரெண்டு தனது மேஜைமீது வைக்கப்பட்டிருந்த ரூல் தடியை உருட்டிய வண்ணம் உட்கார்ந்திருந்தான்.

இவளைப் பயமுறுத்தித்தான் தன் வழிக்குக் கொண்டு வரவேண்டும் என்று மனதுக்குள் திட்டம் போட்ட வெள்ளைத்துரை,

"நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து திட்டம் போட்டு இந்தக் கொலையைச் செய்துபோட்டு இப்போ மறைக்கப் பாக்கறீங்க. நான் உங்களைச் சும்மா விட மாட்டன்"

இப்படி வெள்ளைத்துரை கண் சிவக்கச் சொன்னபோது பூச்சி நாயக்கன் உடல் நடுக்கம் கண்டது.

தூக்குமர நிழலில் நிற்பதே போன்று அச்சம் கொண்டவனாக

"இல்லெசாமி என் ரெண்டு பொஞ்சாதிக வயத்துப் பிள்ளைக சத்தியமாகச் சொல்றேன் அந்தக் கொலைய நாங்க செய்யலை" நடுங்கும் குரலில் சொன்னான்.

"பேமானி, தொங்கா" என்று நாயக்கனைப் பார்த்துத் திட்டிய சிட்டம்மாள், உண்மையை ஏன் மறைக்கப் பார்க்கிறாய் என்பது போல் பூச்சி நாயக்கனை முறைத்துப் பார்த்தாள்.

அவளைப் பார்க்கும் போது, சிட்டம்மாள் எதற்கும் துணிந்த கட்டை என்று வெள்ளைத்துரைக்குப் பட்டது. எனவே, தான் நினைத்தது போல அவளை மிரட்டுவதாலோ, நயம் படப் பேசுவதாலோ, அவளைத் தன் வழிக்கு கொண்டுவர முடியாது என்று உள்ளூற எண்ணிக் கொண்ட வெள்ளைத்துரை, பூச்சி நாயக்கனை மிரட்டுவது மூலம் தான் அவளைத் தன் வழிக்குக் கொண்டு வர முடியும் என்கிற உபாயத்தைக் கைக்கொள்ளும் வகையில்

"சரி நீ போகலாம்" என்று சொன்னவன்.

"பலவேசத்துக்கிட்டே இவனை ஒப்படைச்சிரு. அப்புறம் நான் அவளை விசாரணை செய்ய வேண்டியிருக்கு" என்று காவலுக்கு நின்ற போலீஸ் காரனுக்கு உத்தரவிட்டான்.

சிட்டம்மாள், அறையை விட்டுப் போனதைப் பார்த்த பூச்சி நாயக்கன் மேலும் கலவரப்பட்டவனாக மூலையில் கைகட்டியபடி நின்று கொண்டிருந்தான்.

அறையில் நிலவிய அமைதியும், வெள்ளைத்துரையின் பார்வையும் பூச்சி நாயக்கனை மேலும் பீதியுறச் செய்தது. அவன் மனோரீதியாகக் கலவரப்பட வேண்டும் என்று வெகுநேரமாக மௌனமாகவே உட்கார்ந்திருந்த வெள்ளைத்துரை பூச்சி நாயக்கன் பக்கமாகத் திரும்பி,

"பாருய்யா நாயக்கரே, நீயோ புள்ளை குட்டிக்காரன். ஒன்னையப் பாக்கும்போது பரிதாபமாத்தான் இருக்கு. இருந்தாலும் நாங்க போலீஸ் அதிகாரிங்க இந்த வழக்கிலே துப்புத்துலக்கித்தானே ஆவ வேண்டியிருக்கு. வழக்கையும் நடத்தித்தானே ஆவ வேண்டியிருக்கு" அவனுக்காகப் பரிதாபப்படுபவன் போல் பேசலானான்

உதவி-சூப்பிரண்டின் உட்கிடக்கையைப் புரிந்து கொள்ளாமல் நாயக்கன் அப்பாவித்தனமாகத் தலையை ஆட்டி ஆமோதித்தான்.

"நாயுடு. நீ முஸ்தபா மீரானைக் கொலை கூடப் பண்ணியிருக்கலாம்" என்று வெள்ளத்துரை, பூச்சி நாயக்கனது நயனங்களை ஊடுருவிய படியே சொல்லவும்,

"சாமி, அந்தக் கொலையை நான் பண்ணலெ. என்ன தண்டிச்சுப் போடாதீங்க எசமான்"

அவன் மிகவும் பயந்து போயிருக்கிறான் என்பதை உறுதி செய்து கொண்ட வெள்ளத்துரை.

"நீ இந்தக் கொலையைச் செய்திருப்பியோ, இல்லையோ, ஒன்மேல பரிதாபப்பட்டு இதைச் சொல்றேன்"

பூச்சி நாயக்கன் உடம்பெல்லாம் செவியாக வெள்ளைத்துரை சொல்வதைக் கேட்க எண்சாண் உடம்பையும் ஒரு சாணாகச் சுருக்கிக் கைகட்டி வாய்புதைத்து நின்றான்.

"நீ என்ன சொல்றேண்ணா, வெளியே நிக்கற சப்-இன்ஸ்பெக்டர் அய்யா. சொல்லித்தருவாரு. அதாவது முஸ்தபா மீரானோட சடலத்தைச் சங்கத்துக்காரங்க சாக்கிலே கட்டி, ஒன்சாளை ஓரமா ஒடிட்டு இருக்க ஓடைக்குக் கொண்டு வந்ததாகவும், அவங்க சடலத்தைப் புதைக்கப் பள்ளம் தோண்டினதை நீயும், அந்தச் சக்கிலியப் பொண்ணும் பார்த்ததாகவும் ஏனிண்ணு நீயும் அவளும் கேட்டதாகவும் ஒடனே அந்த வாத்தியாரும் வேலாயுதமிங்கிற நபரும் பார்த்ததை வெளியே சொன்னா கொண்ணு போட்டிரதாக மிரட்டியதாகவும் ஊரைவிட்டே ஓடச் சொல்லவும் அவங்களுக்குப் பயந்துட்டு நீயும், அவளும் ஊரைவிட்டு ஓடிப்போயி மலங்காட்டுலே ஒளிஞ்சுக்கிட்டதாகவும் சொல்ல வேணும்." என்று சொன்ன வெள்ளத்துரை, தான் சொன்னவற்றை நாயக்கர் கிரகித்துக் கொண்டுள்ளானா என்று அவனை ஒருமுறை உற்றுப் பார்த்தான்.

பிறகு,

"நீ மட்டும் சொன்னாப் போதாது."

"அந்தச் சக்கிலியப் பொண்ணும் சொல்ல வேணும். இப்படிச் சொல்லலை, நீங்கதான் கொலைக் குத்தத்துக்காக தூக்குமரம் ஏற வேண்டியிருக்கும்" என்று பயமுறுத்தினான்.

"அந்தப் பொண்ணு நாங்கிழிச்ச கோட்டைத் தாண்டாது எசமான்" பூச்சி நாயக்கன் சொன்னான்.

இப்படி ஒரு பொய்யைச் சொல்லி கொலைக் குற்றத்தினின்றும் தாம் மீட்கப்படுவோம் என்று பூச்சி நாயக்கன் எதிர்பார்க்கவில்லை.

வணக்கம் சொல்லிவிட்டுச் சிட்டம்மாளைப் பார்த்து, அவளைத் தயார் செய்ய அறையை விட்டு வெளியே வந்தான்.

●

13

உதவி-சூப்பிரண்ட் வெள்ளைத்துரையின் நேரடிப் பார்வையில் அந்தக் கொலை வழக்கு ஜோடனை செய்யப்பட்டு விசாரணைக்குத் தயாராக இருந்தது.

தனக்கும் இன்ஸ்பெக்டர் பாலையனுக்கும் உள்ளூற ஏற்பட்டிருக்கும் பகைமை காரணமாகவும், கொலைவழக்கின் உண்மை நிலைமையைப் பாலையன் தெரிந்திருப்பதாலும், தான் ஜோடனை செய்திருக்கும் வழக்கின் தன்மையை இன்ஸ்பெக்டர் பாலையன் திசை திருப்பி விட்டு விடலாம் என்கிற அய்யத்தின் காரணமாகவும், புலன்விசாரணையில் பாலையனை நெருங்கவிடாமல், தனது கையாளான சப்-இன்ஸ்பெக்டர் பலவேசத்தின் மூலமாகவே குற்றப் பத்திரிக்கையை வெள்ளைத்துரை தயார் செய்திருந்தான்.

வழக்கின் முக்கிய சாட்சியான பூச்சி நாயக்கனும், சிட்டம்மாவும் கால் மாறிவிடக்கூடாது என்கிற எச்சரிக்கை உணர்வுடன், கடந்த மூன்று மாதகாலமாக அவர்கள் இருவரையும் தனது நேரடிப் பார்வையில் வைத்துக் கண்காணித்துப் பாதுகாத்து வைத்திருந்தான். உளவாளிகளும், காவலாளிகளும் கூட வெள்ளத்துரையின் அனுமதியில்லாமல் அவர்களுடன் பேச்சுக் கொடுத்துவிட முடியாது. அவ்வளவு கண்டிப்பும் கெடுபிடியும்.

வழக்கு உள்ளூர் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டால், வக்கீல் சங்கரனும் மற்றவர்களும் சாட்சிகளைக் கலைத்துவிடலாம் என்கிற குற்றச்சாட்டையும் கூறித்தி வழக்கை அந்த மாவட்டத்தைச் சேர்ந்த வெளியூர் நீதிமன்றத்தில் நடத்துவதற்கான தற்காப்பு நடவடிக்கையையும் வெள்ளத்துரை செய்து வைத்திருந்தான்

சம்பவம் நடந்த மூன்றாவது மாதத்தின் முதல் தேதியிலேயே வழக்கு விசாரணை நடைபெறுவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் நீதிமன்றம் செய்திருந்தது.

மாவட்டத்திலேயே, எல்லோருடையகவனத்தைக் கவரக் கூடிய ஒரு வழக்காக இருந்த காரணத்தால், இருதயசாமியையும், வேலாயுதத்தையும், மற்றவர்களையும் பார்ப்பதற்காகவும், அவர்களுடன் பேசுவதற்காகவும், தோல் ஷாப்புகளில் இருந்தும் சேரிகளிலிருந்தும் தொழிலாளர்களும், சேரி மக்களும் திரண்டிருந்தனர். அருக்காணி கூட ஓசேப்புக்குக் கட்டுச்சோறு ஆக்கிக் கொண்டு வந்திருந்தாள். ஆனால் நீதிமன்ற வளாகத்தில் வெள்ளைத்துரையால் நிறுத்தப்பட்டிருந்த போலீஸ் ஜவான்களின் கெடுபிடியால் அவளால் ஓசேப்பின் அருகாமையில் கூடப் போக முடியவில்லை.

தோல் ஷாப்பு முதலாளிகளும் வழக்கின் போக்கைக் கண்காணித்து அவ்வப்போது நிலவும் நிலைமையையும் தன்மையையும் தெரிவிக்கும் வகையில் தங்களது அடியாட்களையும், உளவாளிகளையும் நீதிமன்றத்துக்கு அனுப்பிக் கண்காணிக்கலானார்கள். அவர்களுக்கு வக்கீல் சங்கரன் ஒரு குற்றவாளியாகச் சேர்க்கப்படாதது மிகவும் விசனமானதாக இருந்தது.

கீழ்நிலை நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்றதால் செஷன்ஸ் நீதிமன்றத்திற்கு வழக்கு மாற்றப்பட்ட பின், தமது தலையீடும், விசாரணையும் தேவை என்ற வகையில், சுந்தரேச அய்யரும் மதுரை வைத்திய நாத அய்யரும், வழக்கை நடத்தும் பொறுப்பை வக்கீல் சங்ரகனிடமே விட்டு விட்டனர்.

தோல் ஷாப்புத் தொழிலாளர் சங்கத்தின் முக்கியத் தலைவர்களும், ஊழியர்களும், கொலைக்குற்றம் சாட்டப்பட்டு, தண்டனை வழங்கப்பட்டால், ஆரம்ப தசையில் இருக்கும் சங்கம் முழுமையாக ஸ்தம்பிதமாகிப் போகும். தொழிலாளர்களும் நம்பிக்கை இழந்து விடுவார்கள், முதலாளிகளின் கை ஓங்கிவிடும், அடக்குமுறை தர்பார் திரும்பவும் தலைதூக்கிவிடும் என்பதால், சங்கரன் கடந்த

இரண்டுவார காலம் தூக்கம் ஓய்வு இல்லாமல் இரவு பகலாகப் படித்து வழக்கை நடத்துவதற்குத் தயாராக வந்திருந்தார்.

கொலை வழக்கு விசாரணை என்பதால் நீதிமன்றத்தில் வேறு வழக்குகளுக்கெல்லாம் வாய்தா கொடுக்கப்பட்டு, தோல் ஷாப்பு முதலாளி, முஸ்தபா மீரான் கொலை வழக்கிற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வெள்ளைத்துரை அரசு வழக்குரைஞர் சத்திய வாகீஸ்வரனைக் கூட மதிக்காமல், ஒரு அரச குமாரனைப்போல நீதிமன்றத்தில் வக்கீல்களுக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் கால் மேல் கால் போட்டு உட்கார்ந்திருந்தான், சத்திய வாகீஸ்வரனுக்கு வெள்ளைத்துரையின் அதீதமான அதிகாரத் தோரணை கொண்ட நடவடிக்கை பிடிக்கவில்லை. மரியாதையினிமித்தம், சாட்சிகளுக்கும், பார்வையாளர்களுக்கும் ஒதுக்கப்பட்ட இடத்தில் போய் அமரும்படி கேட்டுக் கொண்டபோது அலட்சியமாக "ஸார், நான் டிஎஸ்பி. செஷன் கோர்ட்டுல கூட இப்படித்தான் ஒக்கார்ந்திருக்கேன். வழக்கின் போக்கை நான் கண்காணிக்க வேண்டியிருக்கு" என்று திமிராகப் பேசிவிட்டு அந்த இருக்கையிலேயே அமர்ந்து கொண்டான்.

அரசு வழக்குரைஞர் தனது மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளும் வகையில் அவனிடம் மேலும் பேச்சுக் கொடுக்கவில்லை.

நீதிமன்ற மணியடிக்கவும், நீதிபதி தனது ஆசனத்தில் வந்தமர்ந்த போது, ஒரு போலீஸ் உத்தியோகஸ்தன், நீதிபதிக்குச் செய்யக்கூடிய மரியாதையைக் கூட அவருக்குக் கொடுக்க மனதில்லாதவனாக வெள்ளைத்துரை நடந்து கொண்டான்.

வெள்ளைத்துரையின் அதிகார மமதை கொண்ட நடவடிக்கையைக் கடைக்கண்ணால் பார்த்த நீதிபதி, அரக வழக்கறிஞரை மட்டும், இங்கே என்ன அராஜகம் நடக்கிறது என்று வினவுவது போல் பார்த்து விட்டுத் தலையைக் குனிந்து எதையோ எழுதிக் கொண்டிருந்தார்.

நீதிபதி சுந்தர மூர்த்தியின் பாட்டனார் ஒரு ராவ் பகதூர். குடும்பமே செல்வாக்கு மிக்க ஜஸ்டிஸ் பார்ட்டி. அசல் வெள்ளைக்காரன் மாதிரி நீதிமன்றத்தின் நியதியையும், கௌரவத்தையும் காப்பாற்ற நினைப்பவர். கருப்புக் கோட்டு போட்ட வக்கீல்கள் அல்லாமல் வேறு யாரையும் வக்கீல்கள் அமரும் இருக்கைகளில் அமர அநுமதிப்பதில்லை. போலீஸ் உத்தியோகஸ்தர் என்றால், சாட்சி சொல்லும் நேரம் அல்லாமல் மற்ற நேரங்களில் நீதிமன்றம் நடைபெறும் அறையுள் அநுமதிப்பது கிடையாது.

சிப்பந்தி எழுந்து குற்றம் சாட்டப்பட்டவர்களின் பெயர்களை வரிசையாகக் கூப்பிடவும், தோழர் வேலாயுதமும் மற்றவர்களும் குற்றவாளிக் கூண்டுக்குக் கொண்டுவரப் பட்டார்கள். அவர்கள் நீதிபதிக்குக் கைகூப்பி நமஸ்காரம் சொன்னார்கள்.

சேவகனிடம், அவர்கள் அமருவதற்கான ஆசனங்களைக் கொண்டு வந்து போடும்படி நீதிபதி உத்தரவிட்டார். நீதிபதியின் இந்த நடவடிக்கை வெள்ளைத்துரைக்கு எரிச்சலை ஏற்படுத்தியது.

இவ்வளவு நேரமும் தனது ஆசனத்தில் அமைதியாக உட்கார்ந்திருந்த சங்கரன், எழுந்து நின்று,

"நீதிபதியவர்களே இந்த மனிதன் இந்த அறைக்குள் இருக்கக் கூடாது" என்று ஆங்கிலத்தில் சொன்னார்.

"இந்த மனிதன் யார்?" வெள்ளைத்துரை யார் என்று தெரியாதது போல் வெள்ளைத்துரையைக் காட்டி நீதிபதி சுந்தரமூர்த்தி, அரசு வழக்கறிஞர் சத்ய வாகீஸ்வரனைக் கேட்டார். வெள்ளைத்துரையின் வதனம் மேலும் கருத்தது.

எழுந்து நின்று தான் ஒரு போலீஸ் ஆபீஸர் என்று சொல்ல முற்பட்ட போது குறுக்கிட்ட நீதிபதி சத்ய வாகீஸ்வரனைப் பார்த்து

"மிஸ்டர் பிராசிக்கூட்டர் உங்க ஆட்களுக்கெல்லாம் நீதிமன்ற நியதியும் மரியாதையும் தெரியாதோ?" என்று

முகத்தில் அறைந்தாற் போன்று சொல்லவும், சத்ய வாகீஸ்வரன் வெள்ளைத்துரையைக் கோபமாகப் பார்த்தான்.

"ஏதாவது சொல்ல வேணுமானா என்னண்டை சொல்லுங்கோ ஸார். நேரடியா கோட்டாரண்டை நீங்க பேசப்படாது" என்றவர்,

"அவருக்காக நான் மன்னிப்புக் கேட்கிறேன்" என்று ஆங்கிலத்தில் நீதிபதியிடம் சொல்லிவிட்டு அவர் இந்த ஊர் உதவி போலீஸ் சூப்பிரெண்டு என்றும் அறிமுகம் செய்தார்.

"அது சரி, எதிர்த்தரப்பு வழக்கறிஞர் இவரை விசாரணையின்போது இங்கே இருக்கக் கூடாது என்கிறார்" என்று ஆங்கிலத்தில் சங்கரனையும், சத்ய வாகீஸ்வரனையும் பார்த்துக் கேட்கவும். கோபம் கொண்டு வெள்ளைத்துரை சத்ய வாகீஸ்வரனிடம் ஏதோ சொல்ல வந்தபோது

"வாயப் பொத்திண்டு சும்மா இருங்கோ மிஸ்டர் டி.எஸ்.பி. இது போலீஸ் ஸ்டேஷன் கெடையாது. ஒம்ம உசிதப்படி பேசறதுக்கும் நடந்துக்கிறதுக்கும்" என்று வாகீஸ்வரன் கடிந்து கொள்ளவும் வெள்ளைத்துரை மௌனமாகச் சங்கரன் பேசுவதைக் கேட்கலானான்.

"இந்த மனிதன் இந்த வழக்கை விசாரணை செய்த அதிகாரிகளில் ஒருவர். நான் சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்யும் போது, இவர் இருந்தால் அவர்கள் உண்மையைச் சொல்லப் பயப்படுவார்கள். இவரது இருப்பு சாட்சிகளைப் பாதிக்கும். நியாயமான விசாரணை நடைபெற வேண்டுமானால், விசாரணையில் பங்குபெற்ற எந்த அதிகாரியும் இந்த மன்றத்தில் இருத்தல் கூடாது. அது தானே நியதி, அது தானே நியாயம்." இப்படி வக்கீல் சங்கரன் சொன்னபோது, அவரது வாதத்தில் காணப்படும் நியாயத்தை ஏற்றுக் கொண்டதே போல், நீதிபதி அரசு வக்கீலைக் கேட்டார்.

நீதிபதியின் வார்த்தைகளைக் கேட்டுப் பதறிப்போன வெள்ளைத்துரை,

"அதெப்படி ஸார், நான் ஒரு போலீஸ் அதிகாரி போக முடியாதிண்ணுசொல்லுங்க ஸார்" வெள்ளைத்துரை சத்திய வாகீஸ்வரனைச் கெஞ்சாத குறையாகக் கேட்டான்.

"இவர் இந்த மன்றத்தில் இருப்பது வழக்கின் போக்கைப் பாதிக்கும்" என்று சங்கரன் மீண்டும் நீதிபதியிடம் சொன்னபோது.

"அந்த மனிதனை வெளியே போகச் சொல்லுங்கள் மிஸ்டர் வாகீஸ்வரன்" என்று நீதிபதி ஆங்கிலத்தில் சற்று கடுமையாகச் சொன்னார்.

சண்டி மாடு மாதிரி நின்ற வண்ணம் தன்னைப் பார்த்த வெள்ளத்துரையைப் பார்த்து வாகீஸ்வரன்

"வெளியே போமய்யா, மடத்தனமா நிண்ணின்டிருக்காதீயும், நான் திட்டு வாங்க முடியாது. சிப்பந்தி வந்து ஒம்மைப் பிடறியைப் பிடிச்சு வெளியே கொண்டு போக வேணுமா" என்று எரிந்து விழவும், அவமானத்தை விழுங்கிக் கொண்டு வெள்ளைத்துரை விசாரணை மன்றத்தினின்றும் வெளியே வந்தான். வெளியே வந்த வெள்ளைத்துரையை நீதிமன்றச் சிப்பந்தி, வராந்தாவில் கூட நிற்க விடவில்லை.

வெள்ளைத்துரை முக்கிய சாட்சிகளை மிரட்டித் தன் வலைக்குள் போட்டு வைத்திருப்பது சங்கரனுக்குத் தெரியும். எனவே அவனை அங்கிருந்து விரட்டியாக வேண்டியிருந்தது.

நீதிமன்றத்தை விட்டு வெளியே வந்த வெள்ளைத்துரை, உலகத்தையே இழந்து விட்ட மாதிரி, போலீஸ் உத்தியோகஸ்தர்களையும், எதிரில் வந்தவர்களையும் கண்மண் தெரியாமல் திட்டிக் கொண்டிருந்தான்.

பாலையன் நடக்கும் சம்பவங்களை வேடிக்கை பார்ப்பது போல் தனது போலீஸ் படையுடன் நீதிமன்றத்தில் ஒரு ஓரமாக நின்று கொண்டிருந்தான்.

மன்றத்தில் சாட்சிகள் விசாரணை ஆரம்பமாயிற்று.

14

நீதிமன்றத்தின் வேறு ஒரு பகுதியில் கடுமையான போலீஸ் காவலுக்கு மத்தியில் சிட்டம்மாளும், பூச்சி நாயக்கனும் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

முஸ்தபா மீரானின் கொலை வழக்கில் முக்கிய சாட்சிகளான அவ்விருவரும், வெளியார் தொடர்பு கூட இல்லாத வகையில், மிகவும் ஜாக்கிரதையாகத் தனிமைப் படுத்தி, வைக்கப் பட்டிருக்கின்றனர்.

பூச்சி நாயக்கன், காலைச்சுற்றிய பாம்பாக இருக்கும் அந்த வழக்கில் இருந்து தான் மட்டும் தப்பித்து விட்டால் போதும் என்ற மட்டில், வெள்ளத்துரையால் பயிற்றுவிக்கப்பட்ட மாதிரி சாட்சி சொல்வதற்குத் தயாராகிவிட்ட போதும், பிணத்தை மறைத்ததில் தனக்கு இருக்கும் பங்கைச் சிட்டம்மாள் உளறிவிடுவாளோ என்ற பீதியில் வெங்கடாஜலபதியை வேண்டுவதும், சிட்டம்மாளைப் பார்ப்பதுமாக உட்கார்ந்திருக்கிறான்.

வெள்ளைத்துரையை முதன் முதலாகச் சந்தித்த நாள் முதல், சிட்டம்மாள் பூச்சிநாயக்கனிடம் அதிகமாகப் பேசுவது கிடையாது. சொல்லப்போனால் அவள் அவனைக் கடுமையாக வெறுத்தாள். அவனது கோழைத்தனத்தை அவள் காறி உமிழ்ந்தாள். எனவே, பூச்சி நாயக்கன், வெள்ளத்துரையை விட சிட்டம்மாளைக் கண்டே அதிகம் பயந்தான். தன்னை அவள் காட்டிக் கொடுத்து விடக் கூடாது என்கிற ஏக்கத்தோடு பூச்சி நாயக்கன் அவளைப் பார்த்தான்

சிட்டம்மாளோ, யாரைப் பற்றியும் அக்கறை காட்டாத மட்டில், அந்த அறையில் சுவற்றோரம் தலையைக் குனிந்தவாறு உட்கார்ந்திருந்தாள். அவளது மனம் மிகவும் குழம்பிப் போயிருந்தது.

மன உளைச்சல் காரணமாகக் கடந்த இரண்டு நாட்களாக அவளுக்கு நித்திரை கொள்ளவில்லை.

தான் சொல்லிக் கொடுத்தது போல், தோல் பதனிடும் தொழிலாளர் சங்கத் தலைவர்களை உட்படுத்திச் சாட்சியம் சொல்லவில்லையானால், அவளைச் சுட்டுக் கொன்று விடுவதாக வெள்ளைத்துரை அவளையும், பூச்சி நாயக்கனையும் சேர்த்து வைத்து மிரட்டியிருந்தான். வெள்ளைத்துரையின் மிரட்டலால் ஒன்றும் அவள் மிரண்டு போகவில்லை. மாறாகப் பூச்சி நாயக்கன் அப்பாவி, பிணத்தைப் புதைப்பதற்கும் மறைப்பதற்கும் அவன் உதவி செய்தானே யல்லாமல், அந்தக் கொலைக்கும் அவனுக்கும் யாதொரு சம்மந்தமும் கிடையாது. அல்லாமலும் கொலைக்குச் சம்மந்தமில்லாத அப்பாவிகளை மாட்டிவிட்டு விடக்கூடாது என்பதால் கொலை நடைபெற்றது சம்பந்தமான உண்மையைச் சொல்லிவிடலாமா அல்லது அப்பாவி பூச்சி நாயக்கனைக் காப்பாற்றும் முகமாக வெள்ளைத்துரையின் வழியைப் பின்பற்றுவதா என்கிற தயக்கம். அவளுக்கு.

இப்படியாக மனதைப் போட்டு அலட்டி, மறுகிக் கொண்டிருக்கும் போது, அவளுக்குக் கொலை நடந்த இரவு நடைபெற்ற அந்த பயங்கர சம்பவம் நினைவுக்கு வந்தது. அதை நினைத்துக் கொண்ட போது, உடல் புல்லரித்து நடுங்கிக் குலுங்கியது. மனிதனின் மரணத்தை அன்று தான் சிட்டம்மாள் நேரில் பார்த்தாள். அப்போது, அவளுக்குப் பீதியோ கழிவிரக்கமோ ஏற்பட்டதில்லை. வெறிதான் மிஞ்சியிருந்தது. இப்போதோ, அந்தச் சம்பவத்தை நினைத்துப் பார்க்கவே பயமாக இருக்கிறது. அவள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் அன்றைய சம்பவம் அவள் நினைவில் திரும்பத் திரும்ப வந்து போகிறது பயமுறுத்துகிறது.

சுவற்றோரம் சாய்ந்த மட்டில் கண்களை மூடிக் கொண்ட போது, திரும்பவும் அந்த பயங்கர இரவு அவள் நினைவில் துளிர்க்கிறது.

ஜட்கா வண்டி ஸ்டாண்டில், முஸ்தாபா மீரானால் ஏற்பட்ட அவமானம் தாளாமல், மனம் குன்றிப் போயிருந்த சிட்டம்மா, சம்பவத்தை மறப்பதற்காக வேண்டி, ஒத்தக்கடைக்குப் போய் சாராயம் வாங்கிப் பருகிவிட்டுத் தான் பூச்சி நாயக்கன் சாளைக்கு வந்தாள். சாளைக்கு வந்த போது, மாலை மயங்கியிருந்தது. அன்று பௌர்ணமியாக இருந்திருக்க வேண்டும், கிழக்கே சந்திரிகை தலையை உயர்த்தித் தென்னந்தோப்புகளுக்கு நடுவில் தனது மின்னொளியைப் பரப்பிக் கொண்டிருந்தது.

முஸ்தபா மீரானால் தனக்கேற்பட்ட அவமானத்தை அவள் பூச்சி நாயக்கனிடம் சொன்னபோதும், அவமானம் தாங்காமல் கதறி அழுத போதும், நபுஞ்சகனேபோல், முஸ்தபாவை எதிர்கொள்ளத் திராணியற்றவனாக உட்கார்ந்திருந்த பூச்சி நாயக்கன் பால் அவளுக்குச் சண்டாளமாகக் கோபம் வந்தது. வயற்றெரிச்சல் தீரும் மட்டும், வாய் வலிக்க அவனைத் திட்டித் தீர்த்தாள். அவளது கோபத்தையும், ஆத்திரத்தையும் எதிர்கொள்ள முடியாத பூச்சி நாயக்கன் வழக்கம் போலக் கோபித்துக் கொண்டு, மேட்டு ராஜக்கா பட்டியிலிருக்கும் தனது மூன்றாம் மனைவியையும் பிள்ளைகளையும் பார்க்கக் கிளம்பிப் போனான். மலையடிவாரத்துப் பண்ணைத் தோட்டக் கொட்டத்தில் சிட்டம்மா மட்டும் தனிமையில் விடப்பட்டிருந்தாள்.

மதுவின் மயக்கத்தாலும் மன உளைச்சலாலும் ஏற்பட்ட களைப்பின் மேலீட்டால், கொட்டத்துத் திண்ணையில் தலைசாய்த்த சிட்டம்மாள் தன்னை மறந்து தூங்கிப் போனாள்.

நிலா பட்டப் பகல் போல் மலைக்கோட்டைக்கு மேல் நின்று ஒளியைப் பாய்ச்சிக் கொண்டிருக்கிறது. குளிர்காற்று மட்டும், சிறு மலையின் நறுமணத்தை அள்ளித் தெளித்துக் கொண்டிருக்கிறது.

மார்கழி மாசத்து நாயாகப் பெண்களை மோப்பம் பிடித்து அலையும் முஸ்தபா மீரான் பூச்சி நாயக்கனின் சாளைத் தோட்டத்தை எப்படி அடையாளம் கண்டு கொண்டானோ தெரியாது. முழு நித்திரையில் ஆழ்ந்து போன சிட்டம்மாள், தனது அதரங்களிலும், மார்பகங்களிலும் மனித ஸ்பரிசம் பட்டபோதுதன் உணர்வுற்று திடுக்கிட்டு எழுந்தாள்.

அப்போதுதான் அவளுக்குத் தான் முழுமையாக நிர்வாணப்படுத்தப்பட்டிருப்பது தெரிந்தது. பதறிப்போய் எழுந்தபோது, நிலவொளியில், முஸ்தபா மீரான் வெறிகொண்ட மிருகமாக அவளை ஆலிங்கனம் செய்து கொண்டிருப்பதை உணர்ந்தாள், தன் பலத்தையெல்லாம் கூட்டி அவனை உதறித் தள்ளி விட்டாள்.

மானத்தை மறைக்கக் கூட முழந்துணி இல்லாமல் நின்ற சிட்டம்மாள் அபயக்குரல் கொடுத்த போது,

"ஒரு பயலும் வரமாட்டாம்ளா, ஒன்னை நாம் சம்போகம் பண்ணாம உட மாட்டன். பொட்ட முண்டை மொலையத் தொட்டத்துக்கு அம்புட்டு ரோசமா ஒனக்கு? ஒன்னைய கடிச்சுக் குதறப் போரான் இந்த மீரான் பாய்" என்று வெறி கொண்ட மட்டில் பேசியவன் மீண்டும் அவள் மீது பாய்ந்தான். வெறியோடு அவளைத் தன் உடலோடு சேர்த்து அணைத்தான்.

பெண்மையைக் காப்பாற்றிக் கொள்ள அவளுள் வெறி பிறந்தது. காட்டேறியாக அவள் வெறிகொண்டு அவனை உதறித் தள்ளவும், தூக்கி வீசப்பட்ட பல்லியாகப் பறந்துபோய் அப்பால் விழுந்தான், அவனது பிடறியும் பின்னந்தலையும், புண்ணாக்கு ஆட்டும் ஆட்டுக்கல்லில் மோதியது. அவன் நிலை குலைந்து போனான்.

முஸ்தபா இடது கையை ஊன்றி எழுந்து நிற்கத் தடுமாறினான். அவளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. மீண்டும் எழுந்தால், அவன் அவளைச் சீரழித்துப் போடுவான்.

முஸ்தபா மீரான் இரண்டாம் முறையாகக் கரங்களை முட்டுக் கொடுத்து நிமிர்ந்து நிற்க முற்பட்டபோது ஆட்டு உரலின் குழவிக்கல்லைத் தூக்கி அவன் நெஞ்சின் மீது வீசலானாள். அல்லாவின் பெயரை உச்சரித்த வண்ணம் தரையில் சாய்ந்தான்.

"பொட்டச்சிக்கு கோபம் வந்தா பூமியே தாங்காதுடா தொங்கா" அவனது மார்பிலும் கழுத்திலும் மாறி மாறி கால்களால் உதைத்தாள்.

அவளுள் மூண்டெழுந்த வெறியானது தணியாத மட்டில், அவனைக் கோபாவேசத்துடன் உற்றுப் பார்த்தாள். நாசியிலும் வாயிலும் உதிரம் பெருக்கெடுத்தோட முஸ்தபா மீரான் செத்துக் கொண்டிருந்தான். உதடுகோணி, குறக்குவலி ஏற்பட்டு அவனது உடல் மரண வலிப்பால் துடித்தபோது, சிட்டம்மாள் கோபம் கொண்ட பத்திர காளியாகச் சிரித்தாள்.

மீண்டும் மீண்டும் அவன் மார்பிலும் முகத்தில் கால்களால் வெறி தணியும் மட்டும் மிதித்தாள். குழவியைத் தூக்கி அவன் மார்பில் மீண்டும் வீசினாள். அதற்குப் பிறகு அவன் எழுந்திருக்கவில்லை.

பிணம் போகும் பாதையைக் கூடப் பார்க்க அஞ்சும் சிட்டம்மாளுக்கு முஸ்தபா மீரானின் சடலத்தைப் பார்த்துப் பயம் தட்டவில்லை. உதடுகள் கோணி, கண் சொருகி உடல் வலித்துக் கொண்ட மட்டில், முஸ்தபா மீரான் சாளை தாழ்வாரத்தில் செத்துக் கிடந்தான் தான் நிர்வாணமாக இருக்கும் உணர்வு கூட இல்லாமல் அந்தச் சடலத்தை வெறியுடனும் வெறுப்புடனும் பார்த்த வண்ணம் சிலையாகச் சமைந்து உட்கார்ந்திருந்தாள்.

ரெட்டியைக் கெடுத்த வெள்ளி சிறு மலைக்குமேல், தலை காட்டும் நேரத்தில் சாளைக்குத் திரும்பிய பூச்சி நாயக்கன் நிர்வாணமாக உட்கார்ந்திருந்திருக்கும் சிட்டம்மாளையும் . மாண்டு கிடக்கும் முஸ்தபாவின் சடலத்தையும் பார்த்துப் பதறிப் போனான்.

"அட தேவுடா, தேவுடா சண்டாளி குடியக் கெடுத்தாளே" என்று அவன் அலறுவதைக் கேட்டுத் தன் உணர்வு பெற்ற சிட்டம்மாளுக்கு அழுகை பீறிட்டுக்

கொண்டு வந்தது. அவனது கழுத்தைக் கோர்த்துப் பிடித்துக் கொண்டு ஒரு குழந்தையைப் போன்று தனது ஆத்திரமும், ஆதங்கமும், மனப்பாரமும் தணியும் மட்டும் அழுதாள். பிறகு நடந்ததையெல்லாம் ஒப்புவித்து விட்டுத் தான் செய்தது தவறா என்று கேட்டாள்.

பூச்சிநாயக்கன், முஸ்தபா மீரானின் அகால மரணத்தைக் கண்டு மிரண்டு போனபோதும், ஏனோ அவன் அவளைக் கடிந்து கொள்ளவில்லை.

அவளுக்கு உடுத்து மாற்றுவதற்கான துணிமணிகளை எடுத்துக் கொடுத்தான். முஸ்தபாவின் சடலத்தை மறைப்பதற்கான ஏற்பாடுகளையெல்லாம் அவளுடன் சேர்ந்து செய்துவிட்டு, அவளைப் போலீஸார் கண்ணில் படாமல் மறைந்து வாழும் படிச் சொல்லிவிட்டு மலைக்குப் போனவனை, வெள்ளைத்துரையின் விசாரணையின் போது தான் பார்த்தாள்.

பூச்சி நாயக்கன் வெள்ளைத்துரையிடம் கெஞ்சுவதைப் பார்க்கும் போதெல்லாம் அவன்பால் சிட்டம்மாளுக்குக் கோபமும் கருணையும் பிறந்தது.

அவன் செய்யாத கொலையில் அவனைச் சிக்கவைக்க அவளுக்கு மனம் ஒப்பவில்லை. அதேபோது, இப்போது குற்றம் சாட்டப்பட்டு நிற்கும் அப்பாவிகளையும் மாட்டிவிட அவளுக்கு மனம் இடம் கொடுக்கவில்லை.

உண்மை நிலைக்கும், வெள்ளைத்துரையின் பொய்மைக்கும் இடையில் இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவித்துத் திணறிக் கொண்டிருக்கையில், அவள் சாட்சிக் கூண்டுக்கு வரும்படி அழைக்கப்பட்டாள்.

முஸ்தபா மீரானின் மைத்துனரும், ராவுத்தர் தோல் ஷாப்பின் அதிபருமான அஸன் ராவுத்தரையும், மற்றும் பிரமுகர்களையும் எதிர்தரப்பு வக்கீலான சங்கரன் குறுக்கு விசாரணை செய்ய அவசியமில்லை என்று சொல்லிவிட்டதால், சம்பவத்தைக் கண்ணுற்ற சாட்சிகளான சிட்டம்மாளும், பூச்சி நாயக்கனும் வெகுசீக்கிரமே விசாரணைக்கு அழைக்கப்பட்டு விட்டனர்

சிட்டம்மாள் சாட்சியாக அழைக்கப்பட்டதும் "இந்த வேசை முண்டை என்ன சொல்லித் தொலைக்கப் போவுதோ, சரியாச் சொல்லிப்போடுவாளாடா" வெள்ளத்துரை சிட்டம்மாளுக்குச் சொல்லிக் கொடுத்த கான்ஸ்டபிளைப் பார்த்துக் கேட்டான். அவன் ஏதும் பேசாமல், சிட்டம்மாள் சாட்சியம் சொல்வதைக் கவனிக்கப் போகும் பாவனையாக விசாரணை மன்றத்தை நோக்கிப் போனான்.

சிட்டம்மாளின் சாட்சியம் தான் கொலைவழக்கின் தன்மையைத் தீர்மானிக்கப் போகிறது என்பதை உணர்ந்திருந்த சங்கரன், அரசு அதிகாரிகள் யாரும் நடமாடவிடாமல் கண்காணிக்கும் படியாக நீதிபதியைக் கேட்டுக் கொண்டார்.

சிட்டம்மாளிடம் தனது முதல் விசாரணையைத் தொடங்கிய அரசு வக்கீல் சத்திய வாகீஸ்வரன்

"இந்தாம்மா, இவாளை நோக்குத் தெரியுமா"

குற்றவாளிக் கூண்டில் நிற்பவர்களைச் சுட்டிக் காட்டிக் கேட்டார்.

ஒருவிதமான பதட்டம் கலந்த தயக்கத்துடன் சிட்டம்மாள் சாட்சிக் கூண்டில் நிற்பதைப் பார்த்த நீதிபதி

"பாவம் ஸ்காவஞ்சர் பெண். நீதிமன்ற சூழ்நிலையைப் பார்த்து அவள் பயந்து போய் இருப்பது போல் படுது. அவள் நிதானப் படுவதற்கு வாய்ப்புக் கொடுத்து அப்புறம் விசாரணை பண்ணலாம்" சத்திய வாகீஸ்வரனைப் பார்த்துச் சொன்னவர்.

"இந்தாம்மா, பயப்பட வேண்டாம். உனக்குத் தெரிஞ்சதை மட்டும் சொல்லலாம். யாரும் உன்னை ஏதும் செய்ய முடியாது" என்று சிட்டம்மாளைப் பார்த்து வாகீஸ்வரன் பேசவும், சிட்டம்மாள் தலையை ஆட்டிக் கொண்டாள்.

வெள்ளைத்துரையின் தலை தென்படுகிறதா என்று உறுதி செய்து கொள்ளுவதற்காக நீதிமன்றத்தையும், வாராந்தாவையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டாள்

அவள் என்ன சொல்லப் போகிறாள் என்பதைக் கேட்பதற்கு அந்த மன்றமே ஆவலாக இருந்தது. வெளியில் கூடிநின்ற மக்களைச் சிப்பந்தி விரட்டிக் கொண்டிருந்தான்.

"இந்தாம்மா, இவாளை நோக்குத் தெரியுமா" சத்யவாகீஸ்வரன் எழுந்து நின்று திரும்பவும் கேட்டார்.

"தெரியலேது சாமி" சிட்டம்மாள் பதில் சொன்னதும், சத்திய வாகீஸ்வரன் மலைத்துப் போனார்.

தனக்குப் பின்னால் நிற்கும் வழக்கு சம்மந்தப்பட்ட போலீஸ் கான்ஸ்டபிளைத் திரும்பிப் பார்த்தார். அவனோ விக்கித்துப் போய் நிற்கிறான்.

அவளிடமிருந்து இப்படி எதிர்மறையான பதில் வரும் என்று சத்தியவாகீஸ்வரன் எதிர்பார்க்கவில்லை.

"என்ன சொல்றே நீ, முஸ்தபா மீரான் சடலத்தை இவாதானே தூக்கிண்டு வந்து ஒன்னோட தோட்டத்திலே, ஓடை மணல்லே புதைச்சு வச்சா, நீ பாத்திருக்கே இல்லையா" என்று அதட்டும் தொனியில் பேசவும், ஆட்சேபணை செய்வதற்காகச் சங்கரன் இருக்கையினின்றும் எழுந்த போது,

"மிஸ்டர் பிராசிக்கியூட்டர் சாட்சியை மிரட்டாதீங்க" என்று நீதிபதி ஆங்கிலத்தில் வாகீஸ்வரனை எச்சரித்துவிட்டு, அவரே, தமிழில் அவளிடம் அந்தக் கேள்வியைத் திரும்பவும் கேட்டார்.

"தெரியலேது சாமி, சத்தியமா தெரியாது" என்றாள்.

"இப்போது நான் அந்தப் பெண் சொன்னதைப் பதிவு செய்து கொள்ளலாம் அல்லவா" என்று சங்கரனையும் சத்ய வாகீஸ்வரனையும் பார்த்துக் கேட்ட நீதிபதி, அவளது சாட்சியத்தைப் பதிவு செய்யலானார்.

சாட்சிக் கூண்டில் நிற்கும் சிட்டம்மாள் எதையோ சொல்ல வருபவள் போல், தயங்குவதைப் பார்த்த போது, சங்கரனுக்கு உள்ளூற சந்தேகம் எழுந்தது. என்னதான் அவள் கிளிப்பிள்ளையாகச் சொன்னாலும் குறுக்கு விசாரணையில்

உண்மையை வரவழைத்துவிட முடியும் என்கிற உள்மன உறுதி. எனவே, ஏதும் பேசாமல் மௌனமாக தஸ்தா வேஜுகளைப் புரட்டிப் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தார்.

சிட்டம்மாளிடம் காணப்படும் தயக்கத்தைக் கவனித்த நீதிபதி சுந்தரமூர்த்தி, அவளுக்குத் தெம்பூட்டும் வகையில்,

"இங்க பாருங்கம்மா, ஒங்களுக்கு இந்தக் கொலை சம்மந்தமா என்ன தெரியுமோ, பயப்படாம தயங்காமச் சொல்லலாம். யாருக்கும் நீங்க பயப்பட வேண்டியதில்லை. யாரும் ஒங்களை ஏதும் செய்திட முடியாது. நீதிமன்றம் பாதுகாப்புத் தரும்."

அவளது வாழ்நாளில் எந்த ஓர் ஆணும் அவளுக்கு இவ்வளவு மரியாதை கொடுத்துப் பேசியதில்லை. நீதிபதியின் மரியாதை கலந்த வார்த்தைகள் அவளது பெண்மையைப் பாதித்தது. உணர்ச்சி மேலீட்டால் அவளுக்கு அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது. கரங்களால் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்பி விம்பி அழுதாள்.

நீதிபதியின் வார்த்தைகள் அவளைப் பெரிதும் நெகிழ வைத்துவிட்டது. அவள் சமனப்படும் வரையில் நீதிபதி மௌனமாக உட்கார்ந்திருந்தார்.

தீர்க்கமான முடிவுக்கு வந்தவளாகக் கன்னங்களில் வழிந்தோடிய கண்ணீரை முந்தானையால் துடைத்துக் கொண்டே

"நடந்த உண்மைய நான் ஒளிவு மறைவு இல்லாமச் சொல்லிப் போடுதேன் சாமி" கரங்களைக் கூப்பிவாறு நீதிபதியைப் பார்த்துச் சொன்னாள்.

"அவ என்ன சொல்லப் போறா" இருதயசாமி வேலாயுதத்தைப் பார்த்துக் குற்றவாளிக் கூண்டில் உட்கார்ந்த படியே கேட்டார்.

"அழுக்கும் சிக்குமா அசிங்கமான வாழ்க்கை நடத்தற ஜனங்கதான் ஆனா இதுகளுக்குப் பொய் பேசத் தெரியாது. அப்பாவி மக்கள்" வேலாயுதம் இருதயசாமியிடம் சொன்னார்

"சாமி! அந்த பேசும்பூர் பாயை இவங்க ஆரும் கொல்லலை. நான் தான் என் மானத்தைக் காப்பாத்த அவன் நெஞ்சாங்குழியிலே கல்லைப் போட்டுக் கொன்னேன்."

எந்த விதமான பீதியோ தயக்கமோ இல்லாமல் நீதிபதியைப் பார்த்துச் சொன்னபோது நீதிமன்றமே அதிர்ந்து போனது.

நீதிபதி சுந்தரமூர்த்தி ஆச்சரியம் ததும்ப அவளைப் பார்த்தார்.

சத்திய வாகீஸ்ரவனது முகம் சாம்பிப் போனது.

"நீ எதுக்கு வந்திருக்காயிண்ணு நோக்குத் தெரியுமன்னோ. ஏன் இப்படி அபத்தமாப் பேசிண்டு நிக்கறாய். நன்னா யோசனை பண்ணிப் பேசு. இது நீதிமன்றம் சேரி கெடையாது. நினைச்ச படியெல்லாம் பேசறதுக்கு" சத்திய வாகீஸ்வரன் தோல்வி கண்ட எரிச்சலில் அவளை எச்சரிக்கை செய்வதே போல் உரத்த குரலில் பேசவும்

அரசு வழக்குரைஞர், சாட்சியை மிரட்டுவதாகவும், எல்லை மீறிப் பேசுவதாகவும் எச்சரித்த சுந்தரமூர்த்தி.

"நான் அந்தப் பெண்ணோட சாட்சியத்தைப் பதிவு செய்யப் போகிறேன். நீங்கள் வேணுமான அவளைப் பிறழ் சாட்சியாகக் கருதி குறுக்கு விசாரணை செய்து கொள்ளலாம்" என்று அரசு வக்கீலிடம் சொன்ன நீதிபதி, சிட்டம்மாள் சொல்வதை மிகவும் நிதானமாகப் பதிவு செய்யலானார்.

சங்கரன், தனது வேலை இவ்வளவுக்கு எளிமைப் படுத்தப் படும் என்று எதிர்பார்க்கவில்லை.

நீதிமன்றத்தில் பூரண அமைதி நிலவியது. வக்கீல்களும் மன்றத்தில் கூடி நின்றவர்களும் ஒரு துப்பறியும் கதையைக் கேட்பதே போல் சிட்டம்மாள் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

நடந்த சம்பவத்தை விவரமாக சொல்லவாரம்பித்தாள் சிட்டம்மாள் சொன்னதனைத்தும் நீதிபதியால் பதிவு செய்யப்பட்டது.

சிட்டம்மாள் விசாரணை நடந்த மறுவாரமே, கொலை வழக்குச் சம்மந்தமான தீர்ப்பு நீதிபதி சுந்தரமூர்த்தியால் வழங்கப்பட்டது.

"பிரைம்மா பேசி கேஸ்", அதாவது குறைந்த பட்ச சாட்சியங்களோ ருசுவோ இல்லை என்றும், தொழிற்சங்கத் தலைவர்கள் மீது சுமத்தப்பட்ட வழக்கு நிரூபணமாகவில்லை யென்றும், செஷன்ஸ் நீதி மன்றத்து விசாரணைக்கு அனுப்ப லாயக்கில்லாத வழக்கு என்றும் சொல்லி நீதிபதி வழக்கைத் தள்ளுபடி செய்தார்.

வழக்கைத் துப்புத்துலக்கிய போலீஸ் அதிகாரிகள் வழக்கின் உண்மைத் தன்மையைக் கண்டறிவதை விட்டு விட்டு, வெளியாரின் நிர்பந்தம் காரணமாக, அப்பாவிகள் மீது வீண் பழிசுமத்தி, அவர்களை அநாவசியமாக இத்தனை மாத காலம் சிறைக் கொட்டடிக்குள் அடைத்திருப்பதானது போலீஸ் இலாகா தனது அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்திருக்கிறது என்று கண்டனம் தெரிவித்திருப்பதோடு, பணியைச் சரிவர ஆற்றாத அதிகாரிகள் மீது நடவடிக்கை, இலாகாப் பூர்வமாகக் எடுக்கப்பட வேண்டும் என்றும் தீர்ப்பில் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறு நீதிபதி தனது தீர்ப்பில் குறிப்பிட்டிருப்பது வெள்ளைத்துரைக்கு அவமானமாகப் பட்டது. அல்லாமலும் உண்மையைச் சொன்ன சிட்டம்மாளைப் போலீஸ் மீண்டும் விசாரணை என்றோ, வழக்குத் தொடர வேண்டும் என்றோ அவளை உபத்திரம் செய்யவோ, தொல்லை கொடுக்கவோ முற்படக் கூடாது என்றும் தீர்ப்பில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அவனை மேலும் ஆத்திரமடையச் செய்திருந்தது.

நீதிபதியின் தீர்ப்பின்படி, விடுதலையான. இருதயசாமியும் மற்றவர்களும் நீதிமன்றத்தினின்றும் வெளியே வந்தபோது, நீதிமன்றத்துக்கு வெளியே திரளாகக் கூடியிருந்த தோல் ஷாப்புத் தொழிலாளர்கள் ஆரவாரம் செய்து மகிழ்ச்சியில் திளைத்தார்கள்.

பூச்சி நாயக்கனால் கைவிடப்பட்டு நிர்கதியாக நின்ற சிட்டம்மாளைச் சங்கரன் செல்லியிடம் ஒப்படைத்தார்.

அனாதையாகிப் போன தனக்கு இப்படி ஒரு அடைக்கலம் கிடைக்குமென்று சிட்டம்மாள் நினைக்கவில்லை.

●

முஸ்தாபா மீரான் கொலை வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பைக் கேட்டு, வெள்ளைத்துரை மிகவும் ஆடிப் போனான்.

வழக்கு விசாரணையிலும், துப்புத் துலக்குவதிலும், காவல் துறையின் நடவடிக்கை பற்றிய நீதிபதியின் கடுமையான கண்டனம் வெள்ளைத்துரையை மேலும் பயத்தில் ஆழ்த்தியிருந்தது.

சிட்டம்மாள், அவன் எதிர்பார்த்ததுக்கு மாறாகச் சாட்சி சொல்லி, வழக்கின் தன்மையவே கால் மாற வைத்துவிட்டது, அவனை மிகவும் விசனத்தில் ஆழ்த்தியிருந்தது. நீதிபதியின் எச்சரிக்கை காரணமாக அவனால் சிட்டம்மாளை ஏதும் செய்ய முடியாமல் போய்விட்டது. இல்லை என்றால் அவனுள் ஏற்பட்டிருக்கும் ஆத்திரத்தில், அவளை அடித்தே கொன்று போட்டிருப்பான். தீர்ப்புச் சொல்லப்பட்ட மறுகணமே, மிகவும் சாதுரியமான முறையில் வக்கீல் சங்கரன், அனாதையான அந்தப் பெண்ணுக்கு அடைக்கலம் கொடுத்ததோடு பாதுகாப்பும் கொடுத்ததானது வெள்ளைத்துரையின் வஞ்சகம் நிறைந்த கரங்களின் பிடிக்கு அப்பால் அவளைக் கொண்டு நிறுத்திவிட்டிருக்கிறது. இனிமேல் வெள்ளைத் துரையாலோ, பூச்சி நாயக்கனாலோ அவளை அணுகவோ பயமுறுத்தவோ முடியாது.

போதாக்குறைக்கு, பிராசிக்கியூஷன் தரப்பில் ஏற்பட்ட பலவீனத்துக்கும், காவல் துறையினரால் ஏற்படுத்தப்பட்ட குறைபாடுகளுக்கும் காரணமும், விளக்கமும் கேட்டு மேல் மட்டத்தில் இருந்து கடிதம் வந்திருக்கிறது. விசாரணையில் ஏற்பட்டிருக்கும் பலவீனத்துக்கான சரியான காரணம் சொல்லப்படவில்லையென்றால், சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை கடைப்பிடிக்கப்படும் என்று இலாகாப் பூர்வமாக விளக்கம் கேட்கப்பட்டிருக்கிறது

இவற்றையெல்லாம் ஒருமைப்படுத்திப் பார்த்தபோது வெள்ளைத்துரைக்கு, இன்ஸ்பெக்டர் பாலையன் மீது கடுமையான கோபம் ஏற்பட்டிருந்தது. உண்மையில் பாலையன் தான், தன் மீது ஏற்பட்ட தனிப்பட்ட குரோதம் காரணமாகத் தன்னைப் பழிவாங்கும் முகாந்திரமாகச் சிட்டம்மாளை உண்மையைக் கக்க வைத்துத் தன்னை மாட்டிவிட்டிருக்கிறான் என்று தணியாத ஆத்திரம்.

குறிப்பறிந்த இன்ஸ்பெக்டர் பாலையன், வெள்ளைத்துரையையும் விசாரணையில் அவனுக்குத் துணையாக நின்ற அவனது கையாள் பலவேசத்தையும், மேல் அதிகாரிகளிடம் மாட்டி விடும் வகையில், தீர்ப்பு வெளியான மறுநாளே நீண்ட விடுப்பில் தன் ஊருக்குக் கிளம்பிப் போய்விட்டான். மற்றும் அவனுக்கு உத்தியோக உயர்வு நாள் நெருங்கிக் கொண்டிருப்பதால், உத்தியோக உயர்வு பெற்ற பின்பு தான் பணியில் சேருவான் என்று சொல்லப்பட்டது.

இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்த போது, வெள்ளத்துரைக்கு நபுஞ்சகத்தனமான கோபமும் ஆத்திரமும் ஏற்பட்டதேயல்லாமல், ஏற்பட்டிருக்கும் சிக்கலில் இருந்து மீள்வதற்கான வழி தெரியாமல் திகைத்துப் போய் நின்றான். எனவே வேறு வழியின்றி பூச்சி நாயக்கனை வரவழைத்துத் தன் கோபம் தணியும் வரையில், அடிக்காத குறையாகத் திட்டி அனுப்பிவிட்டுத் தன் அறையில் வெள்ளைத்துரை உட்கார்ந்திருந்தான்..

கொலை வழக்குத் தோல்வியில் முடிந்திருப்பதால் விளக்கம் கேட்டு, மேல் மட்டத்திலிருந்து இரண்டாம் முறையாகக் கடிதம் வந்திருப்பதுடன், பதில் தருவதற்கான கெடுவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே, அரசின் கடிதாசியைத் திரும்பவும் பிரித்துப் படித்துவிட்டு, மேஜையில் வைத்துவிட்டு, மண்டையைப் போட்டுக் குடைந்த வண்ணம் உட்கார்ந்திருந்தான்.

சப்-இன்ஸ்பெக்டர் பலவேசத்தைப் பலிகடா ஆக்கிவிடலாம் என்றாலும், குற்றச் சாட்டு வெள்ளைத்துரையின் பால் திரும்பும் வகையில் மிகவும் கெட்டிக்காரத் தனமாக பலவேசம் அரசுக்கு விளக்கம் கொடுத்திருக்கிறான்.

இப்படிப்பட்டதோர் இக்கட்டான சூழ்நிலையில் வெள்ளைத்துரை தத்தளித்துக் கொண்டிருக்கும் போது தான், காவலுக்கு நின்ற போலீஸ்காரன், அந்தக் கடிதத்தையும் விஸிட்டிங் கார்டையும், மேஜையில் வைத்துவிட்டுப் போனான்.

தோல் ஷாப்பு முதலாளிகளின் பிரதிநிதிகள் தூதுக்குழுவாக வந்திருக்கிறார்கள் என்பதை அந்தக் கடிதத்தையும் விஸிட்டிங் கார்டையும் பார்த்த உடனேயே வெள்ளைத்துரைக்குப் புரிந்து விட்டது. அவர்களுக்குப் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது என்று நினைத்தபோது, உடல் வியர்த்தது.

தோல் ஷாப்பு முதலாளிகள் சங்கச் செயலாளர் மக்துன் மைதீனிடம் பெற்ற பணத்திற்கு அவன் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. சிட்டம்மாளது சாட்சியத்தையும், பூச்சி நாயக்கன் சாட்சியத்தையும், நம்பித்தான் சங்கத் தலைவர்களுக்கு ஜென்மதண்டனை வாங்கிக் கொடுப்பதாக உறுதி கூறிப் பணத்தைப் பெற்றான். ஆனால் சிட்டம்மாள் கடைசி நேரத்தில் காலை வாரி விட்டாள். பணம் பெற்றுக் கொண்டதற்கான பிரதிபலனை அவனால் செய்ய முடியவில்லை

திரை மறைவில் நடைபெற்ற பேரத்தை அவர்கள் அம்பலப்படுத்தி விட்டால் வாழ்க்கையே நரகமாகி நாசமாகிப் போய்விடும்.

அவர்களை இப்போது பார்க்க முடியாது என்று மறுதலித்துவிடலாமா என்று தோன்றியது. அப்படிச் செய்வது விவேகமாகப்படவில்லை. ஏனெனில் அவ்வளவு பேரும் செல்வாக்கு மிக்கவர்கள். நகரத்தில் மட்டுமல்லாமல் அரசியல் நீதியிலும் அரசுக்கு மிகவும் வேண்டியவர்கள் ஆட்டைப்பிடித்துக் குட்டியில் போட்டு, குட்டியைப் பிடித்து ஆட்டில் போடக்கூடிய செப்படி வித்தைக்கார மனிதர்கள் எனவே அவர்களைச் சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது.

நிலைமை தன்னையும் மீறி நடந்து விட்டது என்கிற சாக்கைச் சொல்லி, அல்லது பழியை இன்ஸ்பெக்டர் பாலையன் மீது சுமத்தி, அவர்களைச் சமாளிப்பது தான் விவேகமான செயலாக இருக்கும் என்கிற முடிவுக்கு வந்த வெள்ளைத்துரை, சிறிது நேரம் வழுக்கை விழுந்து போன தனது தலையை வருடிய வண்ணம் உட்கார்ந்திருந்தவன், அவர்களைத் தனது அறையுள் அனுமதிக்கும்படி போலீஸ் ஜவானுக்கு உத்தரவு போட்டான்.

"இந்த ஈனச் சாதி முண்டே நம்மளைக் கண்ட கண்ட நாயிக் கிட்டே எல்லாம் தலை குனிய வச்சுப் போட்டாளே" என்று தனக்குள்ளேயே சிட்டம்மாளைச் சபித்த வண்ணம், தோல் ஷாப்பு முதலாளிகளை வரவேற்பதற்குத் தயாரானான்.

மக்தூன் மைதீனும், அஸன் ராவுத்தரும் மற்றவர்களும், அறையுள் பிரவேசித்தபோது, உள்ளில் ஏற்பட்டிருக்கும் குற்ற உணர்வு காரணமாகவோ என்னவோ வழக்கத்துக்கு விரோதமாக ஆசனத்தினின்றும் எழுந்து நின்று கை கூப்பி நமஸ்காரம் செய்து அவர்களை வரவேற்றான். வெள்ளத்துரை சாதாரணமாகத் தனது மேல் அதிகாரிகளைத் தவிர வேறு யார் அவனைப் பார்க்க வந்தாலும், ஆசனத்தினின்றும் எழுந்து மரியாதை செய்தது கிடையாது. அதைக் கௌரவக் குறைவாகக் கருதுபவன்.

அவர்கள் அறையுள் பிரவேசித்ததும் அறையில் சென்ட் வாடை தாங்க முடியாத அளவுக்கு நெடியாகப் பரவிவியாபிக்கிறது. வெள்ளைத்துரைக்கு லேசாகத் தலை வலி ஏற்பட்டு விட்டதே போல் உணர்வு.

எதிரில் போடப்பட்டிருந்த நாற்காலிகளிலும், பெஞ்சுகளிலும் உட்கார்ந்திருந்த முதலாளிகள் சிறிது நேரம் ஏதும் பேசவில்லை. அவர்களின் மௌனம் வெள்ளைத்துரை யினுள் பீதியை உண்டுபண்ணியது.

நோன்புக் காலமாகையால் உபவாசம் காரணமாக ஹாஜியார் அஸன் ராவுத்தர் மிகவும் கிறங்கிப் போய்க் காணப்பட்டார். ஒரு வேளை, தன்னால் தொடுக்கப்பட்ட

வழக்கில் தோல்வி ஏற்பட்டதால் மனம் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்று வெள்ளைத்துரை எண்ணிக் கொண்டான்.

சற்று நேரம், தாடியைத் தடவியவாறு உட்கார்ந்திருந்த அஸன் ராவுத்தர்

"ஐயா, சொன்ன வாக்கைக் காப்பாத்த முடியலை" என்றார்.

என்ன இருந்தாலும் மைத்துனனைப் பறி கொடுத்த ஆதங்கம் மனிதனுக்கு இருக்கத் தானே செய்யும்.

வெள்ளைத்துரை பதில் சொல்வதற்கு முற்படும்போது குறுக்கிட்ட தோல் ஷாப் முதலாளிகள் சங்கச் செயலாளர்

"அவரு என்ன செய்வாரு அத்தா. ஐயா எம்புட்டோ முயற்சி பண்ணித்தான் பார்த்தார். வேசை மவா, இப்படிக் கவுத்துப் போடுவாளெண்டு கண்டாகளா என்ன" என்றான்.

"நம்மை மீறி அல்லாம் நடந்து போச்சுது. நாம ஒண்ணு நெனச்சா தெய்வம் ஒண்ணு நெனெக்கிது. அல்லாம் தெய்வச் செயல்"

வரதராஜு நாயுடு வேதாந்தம் பேசினார்.

ஒரு பூகம்பத்தையே எதிர்பார்த்த வெள்ளைத்துரைக்கு தோல் ஷாப்பு முதலாளிகள், கொலைக்கேசில் ஏற்பட்ட தோல்வியை மிகச் சாதாரணமாக எடுத்துக் கொண்டது வெள்ளைத்துரைக்கு மன ஆறுதலாக இருந்தது.

"ஆனா பாருங்கோ டி.எஸ்.பி. ஸார் இந்த வழக்கிலேருந்து விடுதலை கெடச்சதும் அவாளுக்குக் குளிர்விட்டுப் போயிட்டது"

ஐயர் ஷாப் முதலாளி சுந்தரம் அய்யர் அங்கலாய்த்தார். ஐயர் சொல்வதை ஆமோதிப்பதே போல்,

"அவங்க போடற ஆர்பாட்டம் சகிக்க முடியலை சாமி" மக்தூன் மைதீன் பேசவும் அவர்கள் ஏதோ திட்டத்துடன் வந்திருப்பது போல வெள்ளைத்துரைக்குப் பட்டது.

அவர்கள் பேசுவதைச் செவிமடுத்துக் கேட்பது போல் உட்கார்ந்திருந்த வெள்ளத்துரை,

"ஏதோ, ஆங்காங்கே அவங்க கூட்டம் போடறதாத்தான் ரிப்போர்ட் வந்திருக்கு. சட்டம் ஒழுங்குப் பிரச்சனை ஏற்பட்டதாத் தெரியலை. அப்படி ஏதாச்சும் இருந்தாச் சொல்லிப் போடுங்க. அப்படிப்பட்ட பயல்களை, வெளியே வரமுடியாத செக்ஷன்லே புடிச்சு உள்ளே போட்டுச் சொட்டெலும்பை முறிச்சுப் போடலாம்". வெள்ளைத்துரை மிகவும் உற்சாகமாகப் பேசவும் தாங்கள் தீட்டியிருக்கும் திட்டத்தை வெளிப்படுத்த தக்க தருணம் வாய்த்திருப்பதை உணர்ந்த மக்தூன் மைதீன்.

"மொதலுக்கே மோசம் வந்திரும் போலிருக்கு" என்றான்.

அப்படி என்ன ஆபத்து ஏற்பட்டு விட்டது என்று கேட்பதே போல் வெள்ளைத்துரை அவனைப் பார்த்த போது,

"பங்காளியாட்டம், எங்க லாபத்திலேயே பங்கு கேக்கிறாங்க சாமி" வரதராஜ நாயுடு சொல்லவும், மக்தூன் மைதீன் தான் கொண்டு வந்திருந்த பையில் இருந்த கடிதத்தை எடுத்து வெள்ளைத்துரையிடம் நீட்டினான்.

தொழிற்சங்கத்தின் பெயர் பொறிக்கப்பட்ட கடிதம் அது. கடிதத்தில் சங்கத்தின் கோரிக்கைகள் வரிசைப்படுத்தப் பட்டிருக்கின்றன. அதில், எட்டு மணி நேர வேலையை அமல்படுத்தாத தோல் ஷாப்பு முதலாளிகள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று, அரசாங்கத்தையும், தொழில் துறை சம்மந்தப்பட்ட அதிகாரிகளையும் கேட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

தொழிலாளர்களை ஆண்டாண்டு தோறும் அடிமைகளாக நடத்தி, விடிய விடிய ஜீவன் போகும் வரை

வேலை வாங்கிய தோல் ஷாப்பு உடைமைகளால் இந்தக் கோரிக்கையை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்.

கடைசியாக வர்த்தகர் சங்கத்துக்கு வந்த வேறு ஒரு கடிதத்தையும் மக்தூன் மைதீன் வெள்ளைத்துரையிடம் நீட்டினான்.

"எப்படி இருக்கு கதை பார்த்தீங்களா எசமான்" என்று மனம் வெதும்பிக் கேட்டான்.

கடிதத்தில், அந்த ஆண்டு, எல்லாத் தோல் ஷாப்புகளும் அபரிமிதமான லாபம் ஈட்டியிருப்பதால், கிறிஸ்துமஸ் பண்டிகை வருவதற்கு முன்பு போனஸாகப் பதினைந்து சதமானம் வழங்கப்பட வேண்டும். இல்லையெனில், எல்லா தோல் ஷாப்புகளிலும் வேலை நிறுத்தம் நடைபெற வேண்டியிருக்கும் என்றும் குறிப்பிடப் பட்டிருக்கிறது. எனவே, உடனடியாகத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடனான சமரசப் பேச்சு வார்த்தைக்கு வரும்படியாகத் தொழிற் சமரச அதிகாரியான உதவி தொழில் கமிஷ்னரின் குறிப்பும் கடிதத்தில் காணப்படுகிறது.

"உள்ளது உரியது அத்தனையவும், வித்தும், அடமானமும் வச்சுத் தொழில் நடத்துறம். இப்போ பங்கு கேக்கவும் வந்திட்டாங்க" அஸன் பாய் சற்றுக் கோபமாகவே பேசலானார்.

"போற போக்கைப் பார்த்தா நாளைக்கு நம்ப தோல் ஷாப்புக்களை அல்லாம் பிடுங்கி தொழிலாளிக கிட்டே ஒப்படைச்சுப் போடுவாங்க போலிருக்கே" புதிய தோல் ஷாப்பு முதலாளியான காளியப்பன் சொன்னான்.

வெள்ளைத்துரையோ அவர்கள் பேசுவதற்கு எந்தவிதமான பிரதிபலிப்பும் காட்டாமல், தன் பார்வைக்குத் தரப்பட்ட கடுதாசிகளையும் பைல்களையும் பார்த்துக் கொண்டிருந்தான். காரணம், அவர்கள் என்ன திட்டத்துடன் வந்திருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது. அதற்குப் பிறகுதான் அவன் தனது போர் யுக்தியை உருவாக்க வேண்டியிருக்கிறது.

ஒரு அரசு உத்தியோகஸ்தன் என்கிற முறையில் பார்க்கும் போது, தொழிலாளர் நலச் சட்டப்படி சங்கத்தின் சார்பில் நிறைவேற்றப் பட்டிருக்கும் தீர்மானங்களும், கோரிக்கைகளும் நியாயமானவை நிறைவேற்றப்பட வேண்டியவை.

"அய்யா, இத்தனைக்கும் இந்தச் சங்கரய்யன் தான் காரணம்" நாயுடு ஷாப் முதலாளி சொன்னார்

"இந்த தீட்டுப்பட்ட ஜனங்க, ஆத்தைக் கண்டாளா அழகரைச் சேவிச்சாகளா இந்தச் சண்டாளன், தான் ஒரு பிராமணன்ங்கிறதையும் மறந்து பற சனங்கனோட சேர்ந்து அத்தனையவும் சொல்லிக் கொடுத்து அவாளைத் தூண்டி விடறான் டி.எஸ்.பி. ஸார்" அய்யர் ஷாப்பு முதலாளி சுந்தரம் அய்யர் வருத்தமாகச் சொன்னார்.

"அய்யா, இந்த சங்கரய்யன் எங்களை நிம்மதியா இருக்க விட மாட்டான். இவன் இருக்க வரையிலே நாங்க உருப்பட முடியாது". கோபம் தாளாமல் மக்தூன் மைதீன் வெள்ளைத்துரையைப் பார்த்துச் சொன்ன போது, அவர்கள் சண்டாளத்தனமான முடிவுடன் வந்திருக்கிறார்கள் என்பதை வெள்ளைத்துரை ஊகித்துக் கொண்டான். சங்கரனை ஒழித்துக்கட்ட அவர்கள் ஏதும் செய்யத் தயங்க மாட்டார்கள் என்று பட்டது.

அதற்கு ஆதாரமாகச் சில சம்பவங்களும் நடைபெற்றிருக்கின்றன என்பதும் வெள்ளைத்துரைக்குத் தெரியும். திருச்சிச் சாலை தோல் ஷாப்பில் வேலை செய்யும், அந்தப் பகுதிச் சங்க முக்கிய ஊழியனான தாவீது என்பவனின் இடது கரத்தைத் தோல் ஷாப்பு முதலாளிகளின் அடியாட்கள் வெட்டிச் சிதைத்துப் போட்டார்கள் தாவீது இன்னும் ஆஸ்பத்திரியில் இருந்து வெளியே வரவில்லை. வழக்கும் துப்புத் துலக்க முடியாமல் கிடப்பில் போடப்பட்டிருக்கிறது.

"அய்யா நீங்க எங்களுக்குக் கொஞ்சம் அனுசரணையா நடந்து கிட்டாப் போதும்" மக்தூன்மைதீன் பூடகமாகப் பொடிவைத்தும் பேசலானான்.

வெள்ளைத்துரை மௌனமாக உட்கார்ந்திருப்பதைப் பார்த்து,

"இல்லையானா எங்களால தொழில் நடத்த முடியாது. அய்யாவோட ஒத்துழைப்பு இல்லெண்ணா நாங்க ஷாப்புகளை அடைச்சுப் பூட்டிட்டுப் போவவேண்டியது தான்" என்று சொல்லிவிட்டு நீ என்ன சொல்லப் போகிறாய் என்று கேட்பதே போல் வெள்ளைத்துரையைக் கூர்ந்து பார்த்தபடி எழுந்து நின்றான் மக்தூன் மைதீன்

அவர்கள் திரும்பவும், அவனது வலையில் விழப் போகிறார்கள் என்பது அவனது ஊகம். அவர்களுக்கோ, வெள்ளத்துரை தாங்கள் விரித்த வலையில் விழ வேண்டும் என்கிற எதிர்பார்ப்பு. எத்தனும் எத்தனும் ஒருவரை ஒருவர் ஏமாற்றப் பார்க்கும் செப்படிவித்தை, அவனுக்குப் பணம் வேண்டும். அவர்களுக்கு அவர்கள் செய்யும் சதிக்கு அவனது துணை வேண்டும்.

வெகுநேரம் மேஜையில் இருந்த பேப்பர் வெயிட்டரை உருட்டிய வண்ணம் உட்கார்ந்திருந்த வெள்ளைத்துரை,

"என்றைக்கு நான் உங்களுக்கு என்னோட ஒத்துழைப்பு இல்லேண்ணு சொல்லியிருக்கேன் பாய்"

என்று வஞ்சகமாகச் சிரித்தவாறு வெள்ளைத்துரை சொன்ன போது, அங்கே கூடியிருந்த தோல் ஷாப்பு முதலாளிகள் அத்தனை பேர்களுடைய முகங்களிலும் மகிழ்ச்சி குறி தென்பட்டது.

ஒருபெரும் சதிக்கான திட்டம் அங்கு நிறைவேறியது.

15

நீதிமன்றத்தின் தீர்ப்பும், தொழிலாளர் தலைவர்களின் விடுதலையும் தொழிலாளர்கள் மத்தியில் உற்சாகத்தையும் உத்வேகத்தையும் ஏற்படுத்தியிருந்தது. இந்த வெற்றியை ஒட்டி நகரத்தில் பல புதிய தொழிற்சங்கங்களும் வேறு தொழிலாளர் அமைப்புக்களும் உதயமாயின.

இந்த மாற்றமானது தோல் ஷாப்பு முதலாளிகளைப் பெரிதும் ஆத்திரமடையச் செய்திருந்தது. தொழிற்சங்கம் முன் வைத்திருக்கும் புதுப்புதுக் கோரிக்கைகள் அவர்களைப் பெரிதும் கலக்கத்தில் ஆழ்த்தியிருந்தன. எனவே காவல் துறையினரின் உதவியோடு தங்களது அடியாட்கள் மூலம், தோல் ஷாப்புத் தொழிலாளர் குடியிருப்புக்களிலும், அம்மக்கள் குடியிருக்கும் சேரிகளிலும் பெரும் கலகங்களை ஏற்படுத்திக் கொண்டிருந்தனர். திடீர் திடீரென்று தொழிலாளர்களைத் தாக்குவது, குடிசைகளுக்குத் தீ வைப்பது போன்ற தீய செயல்களைச் செய்து, அவர்களைப் பீதியடையச் செய்யும் வேலைகளைத் தொடர்ச்சியாகச் செய்யலாயினர். முக்கிய ஊழியர்கள் கொலை வெறித் தாக்குதலுக்கு ஆளாயினர்.

காவல் நிலையங்களில் முறையீடு செய்தாலும், வெள்ளைத்துரையின் தாக்கீது காரணமாக, காவல்துறையினர் அவ்வளவாகக் கண்டு கொள்வது கிடையாது. போக்கிரிகளைக் கையும் களவுமாகப் பிடித்துக் காவல் நிலையங்களில் ஒப்புவித்தாலும், ஒப்புக்கு அவர்களை மிரட்டிவிட்டுப் போக்கிரிகளை வேண்டும் என்றே வெளியே சுதந்திரமாக நடமாட விட்டு வைத்திருந்தது போலீஸ் இலாகா

எனவே தொழிலாளர்களும், அவர்கள் குடியிருக்கும் சேரி மக்களும் , தங்களையும் தங்களது உடைமைகளையும்

பாதுகாக்கும் படிக்கான தற்காப்பு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டியிருந்தது. ஆகவே தோல் ஷாப்புகளிலும் தொழிலாளர்கள் குடியிருக்கும் சேரிகளிலும் சென்று அவர்கள் உள்ளத்தில் தெம்பையும், தைரியத்தையும் ஊட்டி அவர்களை ஒன்றுபடுத்தி, தோல் ஷாப்பு முதலாளிகளுடையவும், கையாட்களுடையவும், தோல் ஷாப்புக்கு உள்ளிலும், வெளியிலும், ஏற்படும் தாக்குதல்களைச் சமாளிக்கும் அளவுக்கு அவர்களைத் தயார் செய்து உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பும் கடமையும் தலைவர்களுக்கு ஏற்பட்டிருந்தது. இரவு பகலாக தோல் ஷாப்புக்களின் வாசல்களிலும், தொழிலாளர் குடியிருப்புக்களுக்கும் சேரிகளுக்கும் போய் கூட்டங்கள் போட்டு, தொழிலாளர்களைத் திரட்டி அவர்களுக்குள் தைரியத்தையும், ஒற்றுமையையும் உருவாக்க வேண்டியிருந்தது. பெரும்பாலும் மாலை வேளைகளிலும் இரவு நேரங்களிலும் சேரிகளில் நடைபெறும் கூட்டங்களில் சங்கரன் கலந்து கொள்வார். அய்யர் பேசுகிறார் என்றாலே அந்தக் கூட்டங்களுக்குப் பக்கத்துச் சேரிகளில் இருந்தும் குடியிருப்புக்களிலிருந்தும் ஆண்களும் பெண்களும் கிழடு கட்டைகளும் கூட பனியையும் மழையையும் பொருட்படுத்தாமல் திரண்டு விடுவார்கள். அவரது விவேகமும், வேகமும் கலந்த பேச்சு அம்மக்களுக்கு டானிக் பானமாக இருந்தது. தோல் ஷாப்பு முதலாளிகளின் அடக்கு முறைகளையும், அவர்களது அடியாட்களுடைய அடாவடித்தனங்களையும், துச்சமாக மதித்து, எதிர்த்துப் போரிடும் அளவுக்கு அம்மக்களை உற்சாகப்படுத்தித் தயார் செய்யும் அருமருந்தாக இருந்தது. சங்கரனுடைய பேச்சுக்கள் எனவே, சங்கரனைக் கண்டு தோல் ஷாப்பு முதலாளிகள் பெரிதும் அஞ்சினார்கள். சங்கரனது வாயை அடைப்பதற்கும் ஒழித்துக் கட்டுவதற்கும் பல வழிகளிலும் முயன்றும், போலீஸ் ஒத்துழைப்பு இருந்தும் தோல்வியையே அவர்கள் தழுவ வேண்டிய துர்பாக்கியமான நிலைதான் ஏற்பட்டிருந்தது.

இப்படியான சூழ்நிலையில் அன்று பள்ளபட்டிக் கிராமத்தில் பொதுக்கூட்டம் நடைபெறுவதாக இருந்தது

கூட்டம் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளை, மினிசாமியும் சின்னப்பனும், தோல் ஷாப்புக்கு இரண்டு நாள் விடுப்பு எடுத்துக் கொண்டு செய்து முடித்திருந்தனர். ஓசேப்பும் அவ்வப்போது ஊருக்கு வந்து, கூட்ட நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்திவிட்டு போயிருந்தான்.

சங்கரன், தொழிற் தகராறு சம்மந்தமாக தொழில் சமரச அதிகாரியிடம் பேச வேண்டியிருப்பதால், பேச்சு வார்த்தையை முடித்துக் கொண்டு இரவு ஏழு மணி வாக்கில் கூட்டத்தில் வந்து கலந்து கொள்வதாக உறுதியளித்திருந்தார். வேறு ஒரு ஊரில் தோல் ஷாப்பில் வேலை செய்யும் குடும்பங்களுக்குள் ஏற்பட்டிருந்த சிறிய பூசல்களைத் தீர்த்து வைக்க வேண்டியிருந்ததால் வழக்கமாக, சங்கரனுடன் பொதுக் கூட்டங்களில் கலந்து கொள்ளும் இருதயசாமியால் அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள இயலாது என்று சொல்லிவிட்டிருந்தார். தலைவர் சங்கரன் கலந்து கொள்ளும் கூட்டம் என்பதால் மினிசாமியும், ஓசேப்பும், மாலை வேளையில் மீண்டும் ஒரு முறை பக்கத்துச் சேரிகளுக்கு எல்லாம் சென்று மெகபோன் பிரச்சாரம் செய்துவிட்டுத் திரும்பியிருந்தார்கள். சின்னப்பன் கூட்ட வேலைகளைக் கவனித்துக் கொண்டான்.

கூட்டம் நடைபெறும் இடம், பள்ளபட்டிச் சேரிக்கும் குடியானத் தெருவுக்கும் இடையிலான காலசாமி கோவில் புறம்போக்கு இடம் என்பதால் உள்ளூர் சேரி மக்களால் அந்த இடம் பெருக்கிச் சுத்தப்படுத்தப் பட்டிருக்கிறது.

அரச மரமும், வேப்ப மரமும் பின்னிப் பிணைந்து வளர்ந்திருக்கும் பீடம் தான் காலசாமி கோயில். அந்த வட்டாரத்துச் சேரி மக்களால் வணங்கப்படும் குல தெய்வம் காலசாமி. அம்மக்களைப் போலவே, காலசாமிக்குக் கூரையும் கோயிலும் கிடையாது. இரண்டு மரங்களும், ஒன்றோடு ஒன்று பிணைந்து நிற்கும் இடம்தான் கோவிலுக்கு அடையாளம். அவர்களது ஜாதிக் கூட்டமும் பஞ்சாயத்தும் நடக்கும் பொது இடமும் அந்தப்புறம் போக்கு நிலம் தான்.

காலசாமி வளாகத்தில் கூட்டம் நடக்கிறது என்பதற்கு அடையாளமாக வேப்ப மரத்தின் தாழ்ந்த கொப்பில்

பிணைந்திருக்கும் கம்பியில் தொங்கவிடப்பட்டிருக்கும் பெட்ரோ மாக்ஸ் விளக்கு நல்ல பாம்பாகச் சீறிய வண்ணம் வெளிச்சத்தை உமிழ்ந்து கொண்டிருக்கிறது. வழக்கம் போல் சேரிக்குழந்தைகள் புதிய ஒளியைக் கண்டுவிட்ட உற்சாகத்தில் பீடத்தையும் மரங்களையும் சுற்றிச் சுற்றி ஓடி விளையாடிக் கொண்டிருக்கின்றனர். கியாஸ் விளக்கு அடிக்கடி கண்ணாமூச்சி காட்டுவதால், விளக்குக்காரப் பொடியன் அவ்வப்போது, விளக்கை இறக்கி, பம்ப் அடித்து விளக்கிற்கு உயிர் கொடுத்துக் கொண்டிருக்கிறான்.

சேரி வாலிபர்களும், பெரியவர்களும் தோல் ஷாப்பில் வேலை செய்பவர்களும், குடும்ப சமோதரராக கும்மிருட்டைத் தாண்டி, பெட்ரோ மாக்ஸ் விளக்கு ஒளிபடும் தொலைவில் வந்து அமர்கிறார்கள்.

கூட்டம் தொடங்கப் படுவதற்கான குறிப்பிட்ட நேரம் நெருங்கிக் கொண்டிருப்பதால் மினிசாமியும், ஓசேப்பும் கூட்டத்தாரைக் கட்டுப்படுத்துவதும், நகரத்தில் இருந்து ஊருக்குள் வரும் கப்பிக்கல் பதித்த பாதையைப் போய் பார்த்து வருவதுமாக இருக்கிறார்கள் சங்கரனைப் பொறுத்த மட்டில் எப்போதுமே நேரம் தவறாமையைக் கடைபிடிப்பவர். சொன்ன நேரத்தில் வந்து சேரக்கூடியவர். சங்கரன் சொன்ன நேரத்தில் வந்து சேராததால் சின்னப்பனுக்கு உள்ளூற ஒரு பீதி. வழியில் அசம்பாவிதம் நடந்து விடக் கூடாது என்கிற கவலை.

சின்னப்பனைப் பொறுத்த மட்டில் எப்போதுமே எதிரியைப் பற்றி எச்சரிக்கையாக இருப்பவன். தலைவரைத் தனியாக ஜட்காவில் வரும்படி ஓசேப்பு சொல்லிவிட்டு வந்திருப்பதில் அவனுக்கு விசனம்.

அது சம்மந்தமாக ஓசேப்பிடமும், மினிசாமியிடத்திலும் அவன் பேசிக் கொண்டிருக்கும் போது அவன் பயந்தபடியே, இருளின் கருமையைக் கிழித்துக்கொண்டு, ஜட்கா வண்டி அப்துல்லாவின் அபய ஒலம் எழுந்தது.

"அடே, கைத்தானே அய்யரை வெட்டிட்டு ஓடுராண்டா வேசை மவன் புடியுங்கப்பா"

ஜட்கா வண்டி பாயின் ஒலத்தைக் கேட்டதும், ஓசேப்பும் மினிசாமியும், அங்கு கூடியிருந்த வாலிபர்களும் சத்தம் வந்த திக்கை நோக்கி ஓடினார்கள்

அவர்கள் அந்த இடத்துக்கு வந்தபோது குதிரை வண்டி, சேவுகம் பட்டி உடையார் தென்னந் தோப்புத் திருப்பத்தில் ஆராக்கால் உடைந்து குதிரை எழ முடியாமல் எகிறித் திணறிக் கொண்டிருக்கிறது. வண்டியின் முகப்பில் பொறுத்தப்பட்டிருக்கும் மண்ணெண்ணெய் விளக்குகளில் ஒன்று அணைந்து மற்றவிளக்கு மட்டும் மின்மினியாக ஒளி வீசிக் கொண்டிருக்கிறது.

ஜட்காவண்டி ஓட்டி அப்துல்லா பீதியுடன் ரோட்டில் அங்கும் இங்குமாக ஓடி சப்தம் போட்ட வண்ணமிருக்கிறான். அவர்கள் தோப்பை நெருங்கியபோது, சிலபேர் தோப்புக்குள்ளும் எதிரே காடாக வளர்ந்து நிற்கும் சோழக்காட்டுக்குள்ளும் புகுந்து ஓடிக் கொண்டிருக்கின்றனர். இருட்டில் அவர்களை அடையாளம் காண முடியவில்லை.

"அம்பிக்கு என்னாச்சிண்ணு பாருங்கோ சைத்தான். ஜட்காவை குடவண்டி தட்டிவிட்டுப் பேயாட்டம் அம்பி மேலே பாஞ்சான். வண்டியோட ஆராக்காலே ஒடஞ்சு போயிட்டது" அப்துல்லா சொன்னதைக் கேட்டு பீதிப்பட்டுப் போன ஓசேப்பும், சின்னப்பனும் சங்கரனைத் தேடி பாதையில் ஓடலானார்கள்.

"பயப்படாதீங்க ஒண்ணும் ஆகலை நிதானமா வாங்கோ"

பாதையின் இருள் நிறைந்த பகுதியினின்றும் சங்கரனது குரல் கேட்கவும், தாங்கள் கொண்டு வந்திருக்கும் தீப்பந்தத்தை ஏந்திய வண்ணம் பாதையை விட்டுப் பள்ளத்தில் இறங்கினார்கள். இறங்கியவர்கள் அந்தக் காட்சியைக் கண்டு பிரமித்துப் போனார்கள்.

ஒரு வாரத்துக்கு முன்னால் கொலை வழக்கில் தான் பெற்ற தண்டனையை முடித்துக் கொண்டு ஊருக்குத் திரும்பியிருந்த சண்டியர் சந்தனத் தேவன் பூமியில் முகம் குப்புறக் கிடக்கிறான். அவனது நீண்ட கேசம் சங்கரன் கையில் இருக்கிறது. அவனது முதுகைத் தனது கால்களால் வாமனா வதாரமாக நின்று அழுத்திக் கொண்டிருக்கிறார்

"தலைவருக்கு இம்புட்டுப் பலமா" மினிசாமி வியந்தான்.

சண்டியர் சந்தனத் தேவனின் வேட்டி கழன்று லங்கோட்டோடு பாதி நிர்வாணமாகத் தரையில் கிடக்கிறான் அவனது வீச்சருவாள் சிதறிப் போய் பக்கத்துப் பனை மூட்டில் கிடந்ததைச் சின்னப்பன் கண்டெடுத்தான்.

"தாயழி, அய்யரைக் கொலை பண்ணவாடா வந்தே" என்று ஆவேசமாக ஓசேப்பு சந்தனத் தேவனின் அல்லையில் காலால் உதைத்தான்.

வேண்டாம் என்பது போல், சங்கரன் கையசைத்துச் சைகை காட்டிய போது

"அம்பி சும்மாரும், அவன் ஒன்னை இந்நேரம் கொலை பண்ணிருப்பான். பேமானிய சும்மா விடறதா என்ன" வண்டிக்கார அப்துல்லா பாய் விசனத்துடன் சொன்னான்.

சந்தனத் தேவனுடன் வந்தவர்களைத் தேடிப்பிடிக்க அவர்கள் முற்பட்ட போது இருட்டு வேளையாதலால் அசம்பாவிதம் ஏதும் நடந்துவிடக் கூடாது என்கிற எச்சரிக்கையுடன் தொழிலாளர்களைத் தடுத்த சங்கரன், சந்தனத்தேவனை அவர்கள் கையில் ஒப்படைத்தார்.

சந்தனத் தேவனின் இடுப்பினின்றும் கழன்று கிடந்த வேஷ்டியை எடுத்து அவனுக்கு உடுக்கக் கொடுத்தவர். சந்தனத் தேவனை யாரும் உபத்திரவிக்கக் கூடாது என்று உத்தரவு போட்டது போல் சொல்லிவிட்டுப் பொதுக்கூட்டம் நடக்கும் இடத்தைப் பார்த்துப் பதட்டமில்லாமல் நடந்து போனார் மினிசாமியும் சின்னப்பனும் சந்தனத் தேவன் கரங்களைப் பின்கட்டாகக் கட்டி அவருக்குப் பின்னால் கூட்டிச் சென்றனர்.

தனது திட்டம் இப்படித் தோற்றுப் போகும் என்று சந்தனத் தேவன் கருதவில்லை. அதாவது சங்கரன் வரும் ஜட்கா வண்டி உடையார் தோப்பின் வளைவில் வந்ததும், சந்தனத் தேவனின் கையாள் வீரணன், வண்டியில் ஒரு சக்கரத்தைக் கழன்று ஓடச் செய்ய வேண்டும். வண்டி குடை

சாய்ந்ததும், நிலை குலைந்து போன சங்கரன் வண்டியிலிருந்து வெளியேறுவதற்குள், தோப்புக்குள் தனது ஆட்களுடன் மறைந்திருக்கும் சந்தனம் சங்கரனது தலையிலும் கழுத்திலும் மாறி மாறி வெட்டிக் கொலை செய்துவிட்டு இருட்டில் மறைந்து தப்பித்து விடவேண்டும் என்பது சந்தனத் தேவனின் திட்டம். ஆனால் அவனது திட்டம் இப்படிப் படு தோல்வி அடைந்து மாட்டிக் கொள்வான் என்று அவன் நினைக்கவில்லை.

வண்டி குடை சாய்ந்ததும், தோப்பில் இருந்து பாய்ந்து சங்கரனை வெட்ட வந்த தன்னைச் சங்கரன் அவ்வளவு லாவகமாகப் பிடித்துச் சுழற்றித் தரையில் வீசுவார் என்று எதிர் பார்க்கவில்லை. அதிலும் தரையினின்றும் எழுவதற்குள் பைல்வான் நண்டுப்பிடி போட்டது மாதிரி, தரையோடு தரையாகத் தன்னை அழுத்திப் போடுவார் என்றும் எதிர்பார்க்கவில்லை. திடகாத்திரமான சந்தனத் தேவன் எவ்வளவோ திமிறிப் பார்த்தும் சங்கரனது பிடியினின்றும் விடுபட முடியவில்லை. வீரணனும், அடியாட்களும் சந்தனத் தேவனுக்கு ஏற்பட்ட நிலைமையைப் பார்த்ததும் ஓடித் தப்பித்து விட்டார்கள். சந்தனத் தேவன் எவ்வளவோ கொலைகளைச் செய்ததுண்டு. ஆனால் இவ்வளவு கேவலமான முறையில் எப்போதும் மாட்டிக் கொண்டதில்லை.

இசகுப்பிசகாக மாட்டிக் கொண்ட ஆஜானுபாகுவான அந்த மனிதன் சங்கிலியால் பிணைப்புண்ட அல்சேஷன் நாயைப் போல் தலைகுனிந்த வண்ணம் நடந்து போனான்

ஒசேப்பும் மற்றவர்களும், குடைசாய்ந்து கிடந்த ஜட்காவையும் குதிரையையும் ஒழுங்குபடுத்தலானார்கள்.

16

வழக்கம் போல் பொதுக் கூட்டம் ஆரம்பமாயிற்று.

என்றைக்கும் விட அன்றைய தினம் நடைபெற்ற கூட்டத்தில் தொழிலாளர்களும், சேரி மக்களும் வழக்கத்திற்கு அதிகமாகக் கலந்து கொண்டார்கள்.

சங்கரன், தனக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்துப் பற்றியோ, தோல் ஷாப்பு முதலாளிகள் அவரது உயிரைக் குடிப்பதற்காகக் காவல் துறையுடன் சேர்ந்து நடத்தும் சதியைப் பற்றியோ, அதன் தொடர்ச்சியாக சந்தனத் தேவன் அவரைக் கொல்வதற்குத் தனது பரிவாரங்களுடன் வந்தது பற்றியோ ஏதும் பிரஸ்தாபிக்காதது அம்மக்களுக்கு வியப்பைத் தந்தது.

மாறாக, தோல் ஷாப்புத் தொழிலாளர் சங்கத்தின் சார்பாக முதலாளிகள் சங்கத்துக்கு வைத்திருக்கும் கோரிக்கைகளை விளக்கிச் சொன்னதோடு, எட்டு மணி நேர வேலை, எட்டு மணி ஓய்வு என்ற கோரிக்கைக்காக சிக்காக்கோ மாநகரில் தொழிலாளர்கள் நடத்திய மகத்தான போராட்டம், தியாகம் மற்றும் சோவியத் ருஷ்யாவில் தொழிலாளர்களுக்கான அரசு நடப்பதையும், அங்கே தொழிலாளி வர்க்கம் ஈட்டிய வெற்றிகள் பற்றியெல்லாம் பேசினார். தாங்களும் அப்படிப்பட்ட மகத்தான பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்கள் என்று சங்கரன் சொன்ன போது, அவர்களின் தாழ்வு உணர்வு சன்னம் சன்னமாகக் கழன்று போவதாக இருந்தது. சங்கரன் பேச்சு அவர்களை உற்சாகமடையச் செய்திருந்தது.

கடைசியில் அம்மக்கள் தங்கள் சார்பில் வைக்கப்பட்டிருக்கும் கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக எந்தத் தியாகமும் செய்வதற்குத் தயார் என்று சபதம் மேற்கொண்டு பிரதிக்ஞை எடுத்துக் கொண்டார்கள்.

கோரிக்கை வைத்தபோது முதலில் ஒரு சில வயதான தோல் ஷாப்புத் தொழிலாளர்களுக்கு மட்டும், போனஸ் என்கிற பேரில், முதலாளிகள் ஈட்டும் லாபத்தில் பங்கு கேட்பது என்பதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. முதலாளியின் முதலை மோசம் செய்வதாகவும், முதல் போட்டுத் தொழில் செய்பவரிடம் பங்கு கேட்பது அநியாயம் என்கிற சந்தேகமும் வலுவாக எழுந்திருந்தது. எனவே, அவர்களது ஐயம் களையும் வகையில் சங்கரன், முதலாளிகள் ஈட்டும் லாபம் என்பது, அவர்களது உழைப்பின் பலனால் ஏற்பட்ட மிச்சம் என்பதையும், கொடுபடாத அவர்களது சம்பளம் போனஸ் என்றும் போனஸ் கோரிக்கையின் நியாயத் தன்மையையும் அவர்களுக்குப் புரியும் வகையில் கூட்டத்தில் விளக்கிச் சொல்லிக் கொண்டிருந்தார்.

இதற்குள், சங்கரன் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல் சம்பவம் பற்றிக் கேள்விப் பட்டதும், இருதயசாமி, தோழர் வேலாயுதம் ஆகியவர்களும், சங்கத்தின் முக்கிய ஊழியர்களும் பள்ளபட்டிச் சேரியை வந்தடைந்திருந்தனர். முதலாளிகளின் சதி பற்றித் தெரிந்திருந்தும் பாதுகாப்பு இல்லாமல் தன்னந்தனியாகச் சங்கரன் கூட்டத்தில் கலந்து கொண்டமைக்காக அவர்கள் தலைவரைக் கடிந்து கொள்ளவும் செய்தனர்.

கடைசியாகக் கையும் களவுமாகப் பிடிபட்டிருக்கும் சண்டியர் சந்தனத்தேவனை என்ன செய்வது என்று அவர்கள் ஆலோசனை செய்து முடிவு செய்ய வேண்டியிருந்தது.

சந்தனத் தேவனை கையும், காலையும் உடைத்து ஊனப்படுத்தி விட வேண்டும் என்பது வாலிபர்களான மினிசாமி மற்றும் ஓசேப்பினுடைய அபிப்பிராயம். ஆனால் அது விவேகமற்ற செயல் என்பதால், தலைவர்களே பேசி ஒரு முடிவுக்கு வரட்டும் என்று தலைவர்கள் முடிவுக்கு விடப்பட்டது.

கூட்டம் முடிந்ததும் தலைவர்கள் சண்டியர் சந்தனத் தேவனை என்ன செய்வது என்று சந்தனத்தேவன் பற்றிய சர்ச்சையில் ஈடுபட்டிருக்கும் போது ஹெட் கான்ஸ்டபிள் மாத்யூ, கான்ஸ்டபிள் ஞான மாணிக்கத்துடன் கூட்ட மைதானத்தை வந்தடைந்தான். அவர்கள் இருவருக்கும் கூட்டம் நடைபெறும் இடத்திற்கான பாதுகாப்பு டியூட்டி.

உண்மையில் கூட்டம் நடைபெறுவதற்கு முன்னேயே, கூட்ட மைதானத்துக்கு வந்திருக்க வேண்டியவர்கள் கூட்டம் முடிவடைந்ததற்குப் பிறகு சாவதானமாக வந்து சேர்ந்திருக்கின்றனர்.

போலீஸ்காரர்களைப் பார்த்த போது ஓசேப்புக்கும் மினிசாமிக்கும் அவர்கள் மீது கடும் கோபம். அவர்கள் கோபத்தை மேலும் கிளறி விடுவது போன்று, சந்தனத் தேவனைப் பார்த்ததும்

"என்ன வாத்யாரய்யா, நம்ப சண்டியர் சந்தனத் தேவனைச் சிறை பிடிச்சுவச்சிருக்கீங்க" என்று ஒன்றும் தெரியாதது போல் கேட்டான் மாத்யூ.

"தலைவரை வெட்ட வந்தா, கொஞ்சவா செய்வாக" ஓசேப்பு, கோபமாக மாத்யூவுக்குப் பதில் சொன்ன போது கான்ஸ்டபிள் மாணிக்கம் உச்சுக் கூட்டி, "அடடே" என்று தனது ஆதங்கத்தைக் காட்டிக் கொண்டான்.

கான்ஸ்டபிள் ஞான மாணிக்கம் மட்டும் ஓசேப்பை ஒரு மாதிரியாகப் பார்த்தான். போலீஸ்காரனை முன்னுக்கு வைத்துக் கொண்டு ஓசேப்பு வாய்த்துடுக்காகப் பேசியது அவனுக்குப் பிடிக்கவில்லை.

ஞான மாணிக்கத்துக்கு ஈர்க்குச்சி போன்ற கருத்த உடல்வாகு. பீதியூட்டும் நயனங்களும் தட்டையான நாசியுமாக அசப்பில் கருநாகம் படம் எடுத்து நிற்பது போன்ற தோற்றம். யாரையும் கூசாமல் தாக்குவது அவனது நற்பண்புகளில் ஒன்று. வெள்ளைத்துரைக்கு மிகவும் வேண்டியவன்.

"இவனை எல்லாம் முட்டிக்கு முட்டி தட்டினாத்தான் சரிப்படும் இந்தப் பயவளோட வாய்க் கொழுப்பு அடங்கும்" என்று கறுவிக் கொண்டவன் "சங்கம் வைக்கவும் பயவளுக்குப்பயம் உட்டுப் போயிருச்சு. காலம் வரும்டா" என்று மனதுக்குள்ளேயே கறுவிக் கொண்டான்.

"ஏண்டா தாயழி, ஜெயிலவுட்டு வெளியே வந்து ரெண்டு நாளு ஆவலை. அதுக்குள்ளாற ஒன் கொணத்தைக் காட்டிட்டயே" ஒப்புக்குச் சந்தனத்தை ஞான மாணிக்கம் வைத போது சந்தனத் தேவனுக்கு உள்ளூற கோபம் மூண்டது.

எப்போதுமே சந்தனத் தேவனிடம் மாமூல் வாங்கிப் பிழைப்பு நடத்துபவன் ஞான மாணிக்கம்.

ஹெட் கான்ஸ்டபிள் மாத்யூ வேண்டும் என்றே தாமதமாக வந்திருப்பதன் உள் நோக்கத்தைப் புரிந்து கொண்ட தோழர் வேலாயுதம்,

"சந்தனத் தேவனும் அவனோட கூட்டாளிகளும், எங்களையெல்லாம் வெட்டிப் பலி கண்டதுக்கப்புறமா, பிணப் பரிசோதனை நடத்தறதுக்கு அய்யா, பட்டாளத்தோட வந்திருக்கலாம். இவ்வளவு வெள்ளனவே வந்திருக்க வேண்டாம்" கிண்டலாகப் பேசவும் மிரண்டு போன ஹெட் கான்ஸ்டபிள் மாத்யூ

"என்ன செய்ய சாமி, புறப்படப் போன நேரமாப் பாத்து, அடிதடி பண்ணிட்டு வந்து நிக்கறானுவ. அதிகாரிகள் எல்லாம் அல்லாத்தையும் நம்ம தலையிலே கட்டிட்டுப் போயிடராங்க ஊருக்கு ஒரு தேவடியா ஆருக்கு சவாப் சொல்லுகிறதிங்கிற மாதிரி நம்ம பொழப்பு" என்று வேண்டுமென்றே உண்மையை மறைத்து இட்டுக்கட்டி ஒரு கதையைச் சொன்னான்.

சங்கரனைத் தீர்த்துக்கட்ட, வெள்ளைத்துரையின் ஆசியோடு முதலாளிகளால் அனுப்பப்பட்ட சண்டியர் சந்தனத்தேவன் வசமாக மாட்டிக் கொண்டான் என்பதைக் கேள்விப்பட்ட பிறகு, சந்தனத் தேவன் உண்மையை

உளறிவிடாமல் பார்த்துக் கொள்வதற்கும், அவனை அவர்கள் பிடியிலிருந்து மீட்டுத் தன் பொறுப்பில் கொண்டு வந்துவிட வேண்டும் என்கிற திட்டத்தோடு அந்த போலீஸ் ஸ்டேஷனிலேயே மிகவும் சாதுரியமாகப் பேசக்கூடிய மலையாளத் தானாகிய மாத்யூவை வெள்ளைத்துரை அவசர அவசரமாகக் கூட்டம் நடக்கும் மைதானத்துக்கு அனுப்பி வைத்திருக்கிறான்.

போலீஸ் நிலையத்தில் எல்லோரும் அவனைக் குள்ள நரி மாத்யூ என்று பட்டப் பெயர் சொல்லித்தான் அழைப்பார்கள். அவ்வளவு தந்திரக்காரன்.

சங்கரனுக்கும் மாத்யூவை வெகு காலமாகவே தெரியும். மாத்யூவுக்குப் பூர்வம் பாலக்காடு என்ற போதும், அவன் பேசும் மணிப்பிரவாள மலையாள மொழி அல்லாமல், மலையாளத்துக் காரன் என்று சொல்லக் கூடிய எந்த அடையாளத்தையும் காண முடியாது.

மாத்யூ கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவன் என்ற போதிலும் எந்த பண்டிகை வந்தாலும் சரி பக்ரீத் முதல் ஆடி தீபாவளி, பொங்கல், ஈஸ்டர் கிறிஸ்துமஸ் அத்தனையையும் விட மாட்டான். ஒவ்வொரு பண்டிகைக்கும் சுந்தரேச அய்யரிடமும் வக்கீல்களிடம் நன்கொடை வாங்காமல் போக மாட்டான். அவ்வளவு பிச்சைக்காரன்.

மாத்யூ பணிபுரியும் போலீஸ் நிலையத்தில் உள்ள பாதி வழக்குகள் அவனால் உருவாக்கப்பட்டுப் பைசல் செய்யப்பட்டவையாக இருக்கும். இவ்வளவு அநியாயங்களைச் செய்த போதும் எதிலும் மாட்டிக் கொள்ளாமல் தப்பித்துக் கொள்வான். எனவே, மாத்யூ சுந்தரேச அய்யரைப் பார்க்க வந்தான் என்றால்,

"ஏய் மாத்யூ உன்னை மென்னவனும் கெடையாது தின்னவனும் கெடையாதுடா. உள்வாயில்லே விட்டா, புறவாயில் வழியா வந்திடுவேடாப்பா. மகா கில்லாடி" என்று வேடிக்கையாகச் சொல்லிவிட்டு "இண்ணெக்கி ஆர் குடியக் கெடுக்கப் போராய்" என்று கேட்டபின்தான் பண்டிகைக் காசு கொடுப்பார்.

எனவே, ஹெட் கான்ஸ்டபிள் மாத்யூ அதிலும், வெள்ளைத்துரைக்குக் கையாளான ஞான மாணிக்கத்துடன் வந்திருப்பது, சங்கரனுள் சந்தேகத்தை உருவாக்கியிருந்தது. ஆனால் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அவனது நடத்தையை மட்டும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தார்.

மாத்யூவும், ஞான மாணிக்கமும் வந்த பின்பு சந்தனத் தேவனது கரங்களைப் பிணைத்திருந்த கட்டுக்கள் தளர்த்தப்பட்டன.

ஆஜானுபாகுவான அந்த மனிதன் ஒரு கூனல் வண்டைப் போல் கூனிக் குறுகித் தலை குனிந்து அவர்கள் முன் நின்றான். அவனது வாழ்நாளில் இப்படி ஒரு அவமதிப்பைச் சந்தித்துக் கொண்டது கிடையாது.

போலீஸார் கையில் அவன் ஒப்படைக்கப்பட்டால் அவனைத் தூண்டிவிட்ட போலீஸ் அதிகாரிகளே சதி வெளியாகி விடும் என்பதற்காக அவனை நையப் புடைத்து, அவன் வெளியே வரமுடியாத வகுப்பில் ஜெயிலில் தள்ளிப் போடுவார்கள்.

சந்தனத்தேவன் பயந்த படியே, தலைவர் சங்கரனைக் கொலை செய்வதற்கான அவனது ஈனச் செயலைக் கண்டித்ததோடல்லாமல் அவமானம்படும்படியாகத் திட்டித் தீர்த்த மாத்யூ கடைசியாக சந்தனத் தேவனைத் தங்கள் வசம் ஒப்படைக்க வேண்டும் என்று சங்கரனையும் சங்கத் தலைவர்களையும் கேட்டபோது, சந்தனத் தேவனுக்கு ஈரல் குலையில் நடுக்கம் கண்டது.

மாத்யூவின் வேண்டுகோளைக் கேட்டதும் சங்கரன் பதில் ஏதும் சொல்லாமல் அவனைப் பார்த்துப் புன்னகை செய்தார்.

"நாங்கள் இவனை உங்களண்டை ஒப்படைக்கப் போவதில்லை" வேலாயுதம் மாத்யூவைப் பார்த்துச் சொல்லவும் ஞான மாணிக்கத்துக்குச் சண்டாளமாகக் கோபம் மூண்டது.

"கொலை முயற்சி பண்ணியிருக்கான். பார்த்திட்டுப் போலீஸ் சும்மா இருக்க முடியாது. குத்தவாளிய எங்க கிட்டே ஒப்படைக்காம நீங்க அவனை அடிச்சுக் கொல்லப் போரீங்களா சட்டத்தை நீங்க ஒங்ககையிலே எடுத்துக்க முடியாது தெரியுமா?" கோபமாக வேலாயுதத்தைப் பார்த்துச் சொன்னான்.

இப்படி திடீரென ஒரு குற்றவாளியை போலீசிடம் ஒப்படைக்க முடியாது என்று சொன்னது வேலாயுதம் அல்லது வேறு நபராக இருந்தாலும், போலீஸ் நிலையமாக இருந்தாலோ ஞான மாணிக்கம் பேசியிருக்க மாட்டான். அவனது லாத்திக் கம்பு பேசியிருக்கும் அவனை அறியாமலேயே உள்ளங்கையில் அரிப்புத் தட்டியது.

"என்ன ஸார். நீங்க எங்களுக்குச் சட்டம் சொல்லித் தர வர்ரீங்களா?"

சங்கரன் கேட்டார்.

தன் காரியம் சித்தியாக வேண்டும் என்று கர்மமே கண்ணாக இருந்த மாத்யூ ஞான மாணிக்கத்தைக் கடிந்து கொண்டதோடு, அவன் அப்படி வகை தொகையில்லாமல் பேச்சுக் கொடுத்ததுக்காக அவர்களிடம் மன்னிப்பும் கேட்டுக் கொண்டான்.

இதற்கிடையில் சங்கரனும், இதர தலைவர்களும் தங்களுக்குள் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

சண்டியர் சந்தனத் தேவனைப் போலீஸில் ஒப்படைத்தால், வெள்ளைத்துரை உண்மை வெளி வராமலிருக்கச் சந்தனத்தைக் கொன்று போடுவான். வழக்கை அவனது உசிதப்படி எப்படியும் மாற்றலாம், சந்தனத் தேவனைக் கருவியாக வைத்துக் கொண்டு வழக்கைச் சங்கத் தலைவர்களுக்கு எதிராகவே திருப்பிவிடலாம் என்பதால், சந்தனத் தேவனை போலீசாரிடம் ஒப்படைக்கப் போவதில்லை என்கிற அவர்கள் முடிவைச் சங்கரன் மாத்யூவிடம் தெரிவித்த போது மாத்யூ மலைத்துப் போனான்.

"அவன் ஒரு குத்தவாளி ஸார். தப்பிக்க விடப்படாது" மாத்யூ தொண்டை கனக்கச் சொன்னான். தனது திட்டம் பலிக்கவில்லையென்று அவனுக்கு வருத்தம். சந்தனத்தேவன் இல்லாமல் போனால் வெள்ளைத்துரை அவனை வைது தீர்ப்பான். மெமோ கூட கொடுக்கலாம்.

"நாங்கள் புகார் கொடுப்பதக்கு முன்னாலேயே இந்த மனிசன் குத்தவாளின்னு எப்படி முடிவுக்கு வந்தேள்" சங்கரன் மாத்யூவைக் கேட்டார்.

பிறகு, மாத்யூவையும், படமெடுத்த நல்ல பாம்பாக நிற்கும் ஞான மாணிக்கத்தையும் பார்த்துச் சங்கரன் மிகவும் சாவதானமாக

"இந்த மனிசனை எப்படி நடத்திடறதின்னு எங்களுக்குத் தெரியும். உங்களண்டை இந்த ஆளை ஒப்படைச்சா நீங்க என்ன செய்வேள்ன்னும் எங்களுக்குத் தெரியும். இவனை நாங்க போலீஸண்டை ஒப்படைக்கப் போறதில்லைன்னு ஒங்களை அனுப்பி வச்ச டி.ஒய். எஸ்.பி வெள்ளத்துரையண்டை போய்ச் சொல்லுங்கோ" என்றார்.

தங்கள் சதி அம்பலமானதும் மாத்யூவும், ஞான மாணிக்கமும் தலையைத் தொங்கப் போட்ட வண்ணம் இருளை நோக்கி நடந்தார்கள்.

அவர்களைக் கேலி செய்வதே போல் பெட்ரோ மாக்ஸ் லைட் கண் சிமிட்டிக் கொண்டது.

சந்தனத் தேவன் பெருமூச்சு விட்டான்.

"ஒசேப்பு, மினிசாமி நீங்க ரெண்டு பேரும் இந்த மனிசனைப் பத்திரமா அவன் ஊருக்குக் கூட்டிப் போய் அவன் தாயார்கிட்டேயும், மனைவியண்டேயும் ஒப்படைச்சிட்டு வாங்க"

வேலாயுதம் சொன்னதைக் கேட்டு சண்டியர் சந்தனத் தேவன் திகைத்துப் போய் நின்றான்.

17

தங்கசாமி வேடிக்கை பார்க்கும் மனப்பான்மையோடு கூட்டம் நடைபெறும் இடத்தைத் தாண்டி சாலி மரத்தினடியில் நின்று கொண்டிருந்தான்.

தங்கசாமியின் மூத்த சகோதரன் எட்வின் தாமஸ், நாயுடு தோல் ஷாப்புத் தொழிலாளர் கிளையின் முக்கியமான உறுப்பினர். எனவே, அடிக்கடி அவர், வக்கீல் சங்கரனைப் பற்றியும், தோல் பதனிடும் தொழிலாளர் சங்கத்தின் முக்கிய தலைவர்கள் பற்றியும் பிரஸ்தாபிப்பார்.

தாழ்த்தப்பட்ட, தீண்டப்படாத மக்கள் கூடுகிற கூட்டத்தில், ஒரு வைதீகப் பிராமணன் கலந்து கொள்வதும், அவர்களுக்காகப் பரிந்து பேசுவதும், அவர்களுடன் பாகுபாடில்லாமல் கலந்துரையாடுவதும் தங்கசாமிக்கு வியப்பைத் தருவதாக இருந்தது. அதிலும் சகோதரன் எட்வின் தாமஸ், சங்கரனைப் பற்றிப் பேசுவதில் சந்தேகமே துளித்திருந்தது. எனவே, எட்வின் தாமஸ் சொல்வதன் உண்மையைக் கண்டறியும் நோக்கத்துடன் தங்கசாமி அந்தக் கூட்டத்துக்குப் போனான்.

கூட்டம் நடைபெறும் இடத்துக்கு வந்து காலசாமி பீடத்தில் அமர்ந்த சங்கரனிடம் எட்வின் தாமசின் மனைவி பிலோமினாள் தயார் செய்து கொண்டு வந்திருந்த மொச்சை அவியலையும், சுக்குக் கஷாயத்தையும் சங்கரன் பறைக் குடியில் தயாரிக்கப்பட்ட சிற்றுண்டி என்கிற அகுயை சிறிதுமில்லாமல் வாங்கி அருந்தியதைப் பார்த்த போது, சென்னையில் ராயபுறம் கார்ப்பரேஷன் பள்ளிக்கூடத்தில் நடை பெற்ற சம்பவமும், டிராயிங் மாஸ்டர் பஞ்சாங்கம்

சஸ்பென்ட் செய்யப்பட்ட சம்பவமும் நினைப்புக்கு வந்தது, சங்கரனின் பேச்சையும், பரிமாற்றத்தையும் மிகவும் உன்னிப்பாகக் கவனித்தவண்ணம் நின்றிருந்தான்.

திருச்சியில் கத்தோலிக்க சாமியார்களுக்கான பள்ளிக் கூடத்தில் வேதாகமம் பயின்று கொண்டிருந்த தங்கசாமி ஒருவார விடுப்பில் தன் சகோதரனது வீட்டுக்கு வந்திருந்தான். சாமியார்கள் பள்ளிக்கூடத்தில் நடைபெறும் விசித்திரமான நடைமுறைகளையும், சாமியார்களின் குணநலன்களையும் பார்த்த போது, திரும்பவும் சாமியார்கள் பள்ளிக் கூடத்துக்குப் போக வேண்டுமா, வேண்டாமா என்கிற தயக்கம், கடந்த ஒரு வார காலமாகத் தங்க சாமியால் எந்த விதமான முடிவுக்கும் வர முடியவில்லை. அங்கு போகவேண்டாம் என்று தீர்க்கமான முடிவை மேற்கொள்வதானது மிகவும் பக்திமானாகிய தனது தகப்பனார் நிக்கலாசை ஏமாற்றுவதாகும். அவர் மிகவும் நொறுங்கிப் போவார் என்கிற பயம். தங்கசாமியின் எதிர்மறையான முடிவைக் கேட்டால் அந்தக் குடும்பமே அல்லல் பட்டுப் போகும். எனவே, தனது முடிவை எப்படியும் அண்ணன் எட்வின் தாமசிடம் சொல்லிச் சமாளிக்க வேண்டும் என்கிற முன் கருதலோடு தான் வழக்கத்துக்கு விரோதமாக அந்த ஊருக்கு வந்திருக்கிறான்.

தங்கசாமியின் தகப்பனார் நிக்கலாசுக்குப் பூர்வீகம் இந்த ஊர் என்ற போதும் பிழைப்புக்காக வேண்டி பட்டினம் போக வேண்டி வந்தது. உழைப்பாளியான நிக்கலாசைச் சென்னை பட்டினம் ஏமாற்றி விடவில்லை வெள்ளைக்கார முதலாளிக்குச் சொந்தமான குரோம் டேனரியில் படிப்படியாக உத்தியோக உயர்வு பெற்று மேஸ்திரியாக வேலை பார்க்கும் அளவுக்கு அவரது உழைப்பும், புத்திக் கூர்மையும் உதவியிருந்தது.

மிகவும் பக்தி விசுவாசம் கொண்ட நிக்கலாசுக்கு கர்த்தராகிய பரமபிதா குழந்தைச் செல்வத்திலும் குறை வைக்கவில்லை. மனைவி அருள் மேரி, ஆண்டவனின் அருளால், பன்றி குட்டி போட்ட மாதிரி, வீடு நிறைய பத்துப் பிள்ளைகளைப் பெற்றெடுத்தாள். பத்தாவது மகனைப் பெற்றுப் போட்ட கையோடு, பரலோகப் பதவியை அடைந்தாள் மனைவி இறந்ததற்குப் பிறகு இதர

தொழிலாளர்களைப் போல் இரண்டாம் கல்யாணம் செய்து கொள்ளாமல் தனது பிள்ளைகளைப் பராமரிப்பதிலேயே நிக்கலாஸ் கண்ணும் கருத்துமாக இருந்தார்.

தன்னால் தான் படிக்க முடியவில்லை. இதர ஆண்பிள்ளைகளுக்கும், பெண் பிள்ளைகளுக்கும் படிக்க வாய்ப்பில்லாமல் போய்விட்டது என்பதால், தனது கடைசி மகன் தங்கசாமியாவது படிக்க வைக்க வேண்டும் என்கிற ஆர்வத்தில் தான் குடியிருக்கும் பகுதியில் உள்ள ராயபுறம் கார்ப்பரேஷன் பள்ளிக் கூடத்தில் சேர்த்து விட்டிருந்தார். அதாவது வீடு நிறையப் பிள்ளைகளைக் கொடுத்துத் தன்னை ஆசீர்வதித்திருக்கும் கர்த்தராகிய ஆண்டவனுக்கு நன்றி சொல்லும் வகையில், தனது கடைசி மகனைத் தெய்வ ஊழியத்துக்கு அனுப்பி விடுவது என்பது நிக்கலாசின் நேர்த்திக் கடன். அதற்கு ஓரளவாவது கல்வி அறிவு வேண்டும் என்பதனால் தங்கசாமி கார்ப்பரேஷன் பள்ளிக் கூடத்திற்கு அனுப்பப்பட்டான்.

கார்ப்பரேஷன் பள்ளிக் கூடத்தில் ஆறாம் வகுப்பு வரையில், எந்தவிதமான பிற சிந்தனையும் இல்லாமல் கல்வி பயின்று வந்த தங்கசாமிக்கு ஏழாம் வகுப்பில் கால் வைத்த போது பள்ளிக் கூடத்தில் நிலவி வந்த தீண்டாமைக் கொடுமையை உணர முடிந்தது.

ஏழாம் வகுப்பில் பயிலும் மாணவர்கள் அனைவரும் ஒன்றாகப் பாவிக்கப்படவில்லை. தங்கசாமி போன்ற கீழ் ஜாதிச் சேரிப்பிள்ளைகள் அனைவரும் தனியாக ஒதுக்கித் தரையில் உட்கார வைக்கப்பட்டிருந்தனர். பாடத்தில் மோசமான மார்க் எடுத்த போதும், அடிக்கடி ஆசிரியர்களால் மண்டு, முட்டாள் என்று திட்டு வாங்கிய போதும் மேல் ஜாதியைச் சேர்ந்த பையன் என்பதற்காகச் செங்கல்பட்டுக் கைவண்டிக்கார வீரணன் மகன் வெள்ளைத்துரை பெஞ்சில் நிரந்தர இடம் பெற்றிருப்பது தங்கசாமிக்கு உள்ளூற எரிச்சலையும், பொறாமையையும் ஏற்படுத்தியிருந்தது. மண்பானையில் வைக்கப்பட்டிருக்கும் தண்ணீரைக்கூட கீழ் ஜாதிக்கார மாணவர்கள் தொட முடியாது. தீட்டுப் பட்டுவிடும் என்று தண்ணீர் கூட அவர்களுக்கு விலக்கப்பட்டிருந்தது.

மாணவர்கள் என்ன ஆசிரியர்கள் மட்டத்திலும் அந்த நோய் பரவியிருந்தது. டிராயிங் மாஸ்டரும், டிரில் மாஸ்டருமான பஞ்சாங்கம் மாணவர்களுக்கு மிகவும் பிரியமானவர். மிகவும் புத்திசாலி. அவர் சரித்திரப் பாடம் எடுத்தார் என்றால், நடைபெறும் உலக மகா யுத்தம் பற்றியெல்லாம் கதை கதையாகச் சொல்வார். அவர் பாடம் நடத்துகிறார் என்றால், பக்கத்து வகுப்பு மாணவர்களெல்லாம் கூடிவிடுவார்கள். கதை கேட்க வருவது போல் பாடம் கேட்க வகுப்பில் குழுமி விடுவார்கள். அந்தப் பள்ளிக் கூடத்தில், வனப்பிலும் பாடம் நடத்துவதிலும், மாணவர்களைப் பராமரிப்பதிலும் அவரை எந்த ஆசிரியரும் மிஞ்சி விட முடியாது.

ஆனால், பஞ்சாங்கம் சாரும், இஸபெல்லா டீச்சரும் மேல் ஜாதியைச் சேர்ந்த ஆசிரியர்களால் விலக்கி வைக்கப்பட்டிருந்தார்கள்.

தலைமை ஆசிரியர் ராமானுஜம் அய்யங்கார் குதிரை வால் கொண்டையும், குரங்கு மூஞ்சியும், காவி படிந்த பஞ்ச கச்சமுமாகப் பார்ப்பதற்கே அவலெட்சணமாகவும் அசிங்கமாகவும் இருப்பார். ஹெட் மாஸ்டர் அருகில் வந்தாலே ஒருவித புழுக்கு வாடையும், உடம்பிலிருந்து புறப்படும் கற்றாளை நாற்றமும் சகிக்காது. இந்த மகானுபாவர் தாழ்ந்த ஜாதிப் பிள்ளைகளுடைய நோட்டுப் புஸ்தகங்களைத் தீட்டுப் பட்டுவிடும் என்று கையால் கூடத் தொடமாட்டார் அவ்வளவுக்கு சனாதனி.

மேல் ஜாதியைச் சேர்ந்த சரித்திர ஆசிரியர் பக்தவத்சலம் முதலியார், கணக்கு வாத்தியார் சாமிநாத சர்மா, ஹரிஹர அய்யர் மனைவி ஜானகி அம்மாள் ஆகியவர்கள் ஓய்வெடுத்துக் கொள்ளும் ஆசிரியர்கள். ஓய்வறையில் கூட இந்த இருவருக்கும் அனுமதி கிடையாது. எனவே பஞ்சாங்கம் வாத்தியாரும், இஸபெல்லா டீச்சரும் தாங்கள் எடுத்து வரும் மதிய உணவைக் கூட இதர மாணவர்களைப் போன்று மரத்தடியில் இருந்து தான் அருந்த வேண்டியிருந்தது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில், ஒரு வெள்ளிக்கிழமை வாக்கில், கார்ப்பரேஷன் குழாயில் தண்ணீர் வராததால், ஆசிரியர்கள் ஓய்வறையில் வைக்கப்பட்ட மண்பானைத்

தண்ணீரை பஞ்சாங்க சாரும், இஸபெல்லா டீச்சரும் உபயோகப்படுத்தித் தண்ணீரையே தீட்டுப்படுத்தி விட்டதாக மேல் ஜாதி ஆசிரியர்கள் அனைவரும் ஹெட் மாஸ்டர் ராமானுஜம் அய்யங்காரிடம் முறையிட, அய்யங்கார் டிரில் மாஸ்டரைத் தன் அறையில் கூப்பிட்டுக் கண்டித்த போது, அவர் ஜாதியை இழிவாகப் பேசித் திட்டவும் வாக்குவாதம் முற்றி, பஞ்சாங்கம் வாத்தியார் தலைமை ஆசிரியர் அய்யங்காரைக் குடுமியைப் பிடித்துக் கீழே போட்டு மிதித்ததோடல்லாமல் அவர் சாதிய மேலாதிக்கத்தின் அடையாளமான பூ நூலையும் அறுத்தெறிந்தது வட்டாரத்திலேயே பரபரப்பு ஏற்பட்டு டிரில் மாஸ்டர் இரண்டு மாதத்திற்கு சஸ்பென்ட் செய்யப்பட்டார்.

ஆசிரியர் பஞ்சாங்கம் சஸ்பென்ட் செய்யப்பட்டதானது தங்கசாமியின் மனதில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி விட்டிருந்தது. எனவே, எட்டாம் வகுப்புப் பரீட்சை எழுதி முடித்த உடன் அந்தப் பள்ளிக் கூடத்துக்குப் போக தங்கசாமி மறுத்துவிட்டான்.

படிப்புக்கு அத்தோடு முற்றுப்புள்ளி வைக்கும் நிலைமை தகப்பனார் நிக்கலாசைப் பெரும் கவலையில் ஆழ்த்தியது.

●

ஆண்டவனுக்கு என்று நேர்ந்துவிட்ட தன் மகனது செயல் தந்தை நிக்கலாசை மிகவும் பாதித்து விட்டது. தெய்வக் குற்றம் ஏற்பட்டு விடும் என்று மிகவும் பயந்தார். மேற்கொண்டு அவனை எப்படியாவது படிக்க வைத்து மதகுருவாக்கி விடவேண்டும் என்பது அவரது ஆசை.

குடும்ப அங்கத்தினர்களும், பெரியவர்களும் எவ்வளவோ சொல்லியும் தங்கசாமி மசியவில்லை. தான் ஒரு வீரனாகவும், முன் மாதிரியாகவும் வைத்திருந்த ஆசிரியர் பஞ்சாங்கத்துக்கு ஏற்பட்ட அவமானம் தனக்கேற்பட்ட அவமானமாகத் தங்கசாமி கருதினான். இரட்டைத் தன்மை கொண்ட பள்ளிக் கூடத்துக்குப் போக முடியாது என்று திட்ட வட்டமாக மறுத்து விட்டான்.

இவ்வளவு இருந்தும், பக்தி விசுவாசம் மிக்க கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்த தங்கசாமி தனது குடும்பத்தாருடையவும்,

தந்தையினுடையவும் பிரார்த்தனையை நிறைவேற்ற வேண்டும் என்பதிலும், கர்த்தருக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்கிற குறிக்கோளை நிறைவேற்ற வேண்டும் என்பதிலும் தயக்கம் காட்டவில்லை.

நிக்கோலாஸ், தான் ஆண்டவன் சந்நிதானத்தில் எடுத்துக் கொண்ட சத்யப் பிரமாணத்தை நிறைவேற்ற விருப்பம் கொண்டு, பரங்கி மலையில் இருக்கும் பெரியசாமியாரிடம் தங்கசாமியையும் கூட்டிக் கொண்டு போய் அவரது பாதார விந்தங்களைச் சேவித்து, தனது பிரார்த்தனையைச் சொன்னார்.

நிக்கலாசின் பிரார்த்தனைக்கு உடனடியாகப் பெரிய சாமியார் இணக்கம் தெரிவிக்காததால், சலிக்காமல் பல வாரங்கள் நிக்கலாஸ் தனது புத்திர பாக்கியத்துடன் பரங்கி மலைக்குப் புனித யாத்திரை போக வேண்டியிருந்தது.

நிக்கலாசுடையவும், அவருடைய செல்வ புதல்வனு டையவும், உறுதியையும், பக்தி விசுவாசத்தையும் சோதனைக்குட்படுத்திய பரங்கி மலைப் பேராயர், கடைசியில் மனமிரங்கி தனது சந்நிதானத்துக்குத் தங்க சாமியை அழைத்து, முழந்தாழில் நின்ற அந்த இளைஞனை

"மகனே, உன் பிரார்த்தனை ஆண்டவன் சித்தத்தால் நிறைவேற்றக்கடவது" என்று சிரசின்மேல் கரம்பதித்து ஆசீர்வதித்தார். பிறகு அன்பும், ஆதரவும், பாசமும், நேசமுமிக்க பேராயர், அவனைத் தன் மார்போடணைத்து நெற்றியில் முத்தம் பதித்த போது, தங்கசாமியின் உடல் சிலிர்த்துக் கண்களில் நீர் கசிந்தது. பாமரர்களையும், அஞ்ஞானிகளையும் ரட்சிக்கும் தேவனின் சபையில் தன்னை இணைத்துக் கொண்டதில் அவனுக்கு மெத்த மகிழ்ச்சி. ஜென்மம் சாபல்யம் அடைந்துவிட்ட பெருமிதம்.

பேராயருடைய ஆசியுடனும், அவருடைய மேலான கடிதத்துடனும், திருச்சி பாதிரியார்கள் கல்லூரியில் சென்றடைந்த போது தங்கசாமியும் திருச்சபையில் ஒரு ஆட்டுக் குட்டியாக ஏற்றுக் கொள்ளப்பட்டான்.

சாமியார் பயிற்சிப் பள்ளிக் கூடத்தில் சேர்ந்த போது தங்கசாமிக்கு ஆயிரம் கனவுகள். ஏசுவானவர் கலிலியோ

கடலோரமாய்ப் போகையில், பேதுரு என்கிற சீமோனையும் அவனது சகோதரன் ஆந்திரேயா என்கிற பரதவர்களையும் "நீங்கள் என் பின்னே வாருங்கள் உங்களை மனுஷரைப் பிடிப்பவர்களாக்குகிறேன்" என்று அழைத்ததைப் போன்று தன்னை ஆண்டவன் தேவ ஊழியத்துக்குத் தேர்வு செய்திருப்பதாகவும் "பாவிகளே மனம் திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்று ஜனங்கள் மத்தியில் சுவிசேஷத்தைப் பரப்பும் பொறுப்பு ஆண்டவனால் தன்னிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவுமான மிகப்பெரும் கனவுகளுடனேயே அந்தப் பள்ளிக் கூடத்தில் தங்கசாமி கால் வைத்தான். தேவ ஊழியத்தையே லட்சியமாகக் கொண்ட மனிதர்களைக் கொண்ட திருச்சபையைக் கனவில் பதித்த இளைஞனாகத் தங்கசாமி அந்தப் பயிற்சிக் கூடத்தில் பிரவேசித்தான். இப்படி அருள் பாலித்தமைக்கு ஆண்டவனுக்கு "ஸ்தோத்திரம்" சொன்னான்.

ஆனால், பள்ளியில் சேர்ந்த ஓர் ஆண்டுக்காலத்தில், தங்கசாமிக்குத் தேவ ஊழியம் பற்றி கண்ட கனவெல்லாம் சிதைந்து போய்விட்டது. சீடர்கள் அடிமைகளைப் போல் நடத்தப்பட்டார்கள். பூஜைக்கு வரும் ஞானத் தந்தையின் பின்னால் வாலாகத் தொங்கும் வெல்வெட்டு அங்கியைச் சீடர்கள், அடிமைகளைப் போல் ஏந்திச் செல்ல வேண்டும். ஊதுபத்திக் கரண்டியையும், திராட்ச ரசக் குவளையையும், அப்பத் தட்டையும், கர்த்தராகிய ஏசுபிரானின் பெயரால் சுமந்து செல்வது, ஆண்டவனது உபதேசத்துக்கு மாறாகவும் ஆண்டவனை அவமதிப்பதாகவும் பட்டது.

ஏசுபிரான் தனது சீடர்களிடம் சொன்ன "உங்கள் கச்சைகளில் வெள்ளிக்காசும் செப்புக்காசும் சொருகப் பட்டிருக்கப்படாது" என்கிற திரு வசனத்துக்கு விரோதமாக ஆயர்களும் மேய்ப்பர்களும், செல்வத்தைக் குவிப்பதிலேயே கண்ணாயிருந்தது தங்கசாமியை மனம் பேதலிக்கச் செய்தது. போஜன பான பாத்திராதிகளிலும் அவர்கள் சனாதனிகளாக நடந்து கொண்டது தங்கசாமி தான் பயின்ற கார்ப்பரேஷன் பள்ளியில் அனுபவித்த கொடுமையை நினைவுபடுத்துவதாக இருந்தது. சாமியார்களும், குருமார்களும், ஜாதிரீதியாகப் பிரிந்து நின்று, ஒருவரை ஒருவர் மறைமுகமாகவும், சில சமயம் வெளிப்படையாகவும் அணிவகுத்து சமர் புரியலானார்கள்

அவர்கள் ஆண்டவனை அவமதிப்பவர்களாக அவனுக்குப் பட்டனர். மாயக்காரர்களாகவும், வெள்ளை யடிக்கப்பட்ட கல்லறைகளாகவும், ஏசுபிரானால் வெறுக்கப்பட்ட தேவ பாரகர், பரிசேயர்களாகவும் பட்டனர். அந்த அமைப்பு, பைபிளில் சொல்லப்பட்ட திருவசனத்துக் கொப்ப, வெளிப்புறத்தில் சுத்தப்பட்டது போல் தென்பட்ட போதும், உட்புறத்தில் கொள்ளையும் துர் ஆபாசமும் நிறைந்திருந்தது. தங்கசாமிக்கு அந்தப் பள்ளியில் இருப்பதும் பயில்வதும் அந்தகாரத்தில் நீந்திக் கொண்டிருப்பது போலிருந்தது. எனவே வேறு வழியில்லாமல், வெளிச்சத்தை நாடி வரும் பறவையைப் போல், சாமியார் பள்ளியிலிருந்து வெளியே வந்து விட்டான். அவ்வாறு வெளியேறிய தங்கசாமி தனது முடிவானது தகப்பனார் நிக்கலாசைப் பெரிதும் பாதித்துவிடக் கூடாது என்று தனது சகோதரர் எட்வின் தாமஸ் வீட்டுக்கு வந்தவன், வேடிக்கை பார்க்கும் மனப்பாங்குடன் அந்தக் கூட்டத்தை வெளியே நின்று கவனித்துக் கொண்டிருந்தான்.

தன்னையே வெட்டிக் கொலை செய்யும் திட்டத்தோடு தன்னைத் தாக்க வந்த கொலையாளி, சந்தனத் தேவனை சங்கரனோ அவரது ஆட்களோ உபத்திரவிக்காததும் சங்கரன் அவனைப் போலீஸார் கையில் ஒப்படைக்க மறுத்ததும் தங்கசாமிக்கு வியப்பாகப் பட்டது.

இவர்கள் ஏன் இப்படிச் செய்கிறார்கள் என்று தங்கசாமியால் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

எனவே, கூட்டம் நடைபெற்ற இடத்துக்குப் போன தங்கசாமி இருதயசாமியிடம் தனது சந்தேகத்தைக் கேட்டான். அவருக்குத் தங்கசாமியைத் தெரியும். சாமியார் பள்ளிக் கூடத்தில் படிக்கும் தங்கசாமியைச் சங்கரனிடம் அறிமுகப்படுத்தியவர். அவனுக்கேற்பட்டிருக்கும் சந்தேகத்தையும் அவரிடம் சொன்னார்.

மிகவும் பரிவுடன் தங்கசாமியைப் பார்த்த சங்கரன், அன்புடன் அவனைத் தனது அருகில் உட்காரவைத்தவர், அவனது தோளில் கரங்களைப் பதித்து அரவணைத்த வண்ணம்

"அப்பாவி இந்த சந்தனத் தேவன், காகக்கு மாரடிக்கிறவன். ஏவி விடறவங்க இருக்கச்சே ஆயுதத்தை

எப்படி நோக முடியும். நீங்களே சொல்லுங்கோ" என்று தங்கசாமியின் நயனங்களை ஊடுருவிப் பார்த்த வண்ணம் கேட்டார்.

இவர் என்ன சொல்ல விழைகிறார் என்று புரியாமல், தங்கசாமி அவரைப் பார்த்தான்.

"இவனுக்குப் புத்தி வர வேணுமானா இவனை நாம மன்னிச்சு விடறதாலேயே உண்மையை உணர்ந்துக்குவான். இவன் மிகவும் பலவீனமானவன் அவன் எவ்வளவு பயந்து போய் நிக்கறான் பார்த்தேளா. இவனை நாம அடிக்கிறதாலேயும், உதைக்கிறதாலேயும் வீம்புதான் மிஞ்சும். இவனை மன்னிச்சு விடறது அவனுக்கு ஒரு பாடம். அதனாலே தான் இந்த நபரை இப்போதைக்கு மன்னிச்சு விடறதா நாங்க முடிவு எடுத்திருக்கோம்" என்று அவர் சொன்ன போது

சிலுவையில் அறையுண்ட கர்த்தராகிய ஏசுபிரான்

"தாங்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள். பிதாவே இவர்களை மன்னியும் மன்னியும்" என்று சொன்ன திருவசனம் தங்கசாமிக்கு நினைவுக்கு வந்தது.

ஒரு கணம் சங்கரனையே வியப்புடன் பார்த்தவண்ணம் உட்கார்ந்திருந்த தங்கசாமி

"உங்களோடு நான் பேச வேண்டியிருக்கு, நிறைய சந்தேகங்கள் கேட்க வேண்டியிருக்கு" என்றான்.

"ஓ, பேஷா, தாராளமாப் பேசலாம். இப்போ நாழியாயிட்டது. நாளைக்கு உங்களுக்குச் சமயம் வாய்ச்சா சாயரச்சே சங்க ஆபீசுக்கு வாங்கோ. எங்களுக்கும் கிறிஸ்தவத்தைப் பத்தித் தெரிஞ்சுக்க வேண்டியிருக்கு" என்று பரிவுடன் பேசியவர் தங்கசாமியின் மூத்த சகோதரர் எட்வின் தாமசைப் பார்த்து

"இவரை நாளைக்கு நம்ம ஆபீசுக்குக் கூட்டிண்டு வாங்கோ" என்று சொன்னபோது தங்கசாமி நெகிழ்ந்து போனான்.

இது நாள்வரையில் யாரும் இப்படி அவனை ஒரு பொருட்டாக மதித்து மரியாதை கொடுத்துப் பேசியது கிடையாது

அந்தச் சம்பவத்துக்குப் பிறகு தங்கசாமி சங்கரனையும், வேலாயுதத்தையும் ஏனைய தலைவர்களைச் சந்திப்பதற்காக அடிக்கடி தோல் பதனிடும் தொழிலாளர் சங்கத்துக்குப் போகவாரம்பித்தான்.

சதாபைபிள் வசனங்களை மனப்பாடம் செய்வதும், சடங்குகளில் ஈடுபடுவதுமாகத் தனது பொழுதைக் கழித்துக் கொண்டிருந்த தங்கசாமிக்கு அது புது அனுபவமாக இருந்தது. தோல் ஷாப்புச் சவ்க்குழிக்குத் தங்களது இளமையையும், வலிமையையும் பறிகொடுத்துவிட்டு, அங்கெமல்லாம் பொலிவிழந்து, குஷ்டரோகிகளைப் போன்று தங்களது சொந்தப் பிரச்சனை, குடும்பப் பிரச்சனை ஆகியவற்றுக்குப் பரிகாரம் தேடிவரும் தோல் ஷாப்பு ஆண்களிடமும், பெண்களிடமும் மிகவும் பரிவுடனும், மனித நேயத்துடன், சங்கரனும் மற்றவர்களும் நடந்து கொண்ட முறை நாளாவட்டத்தில் தங்கச்சாமியை மிகவும் கவர்ந்திருந்தது.

தோல் ஷாப்புகளில் ரசாயனக் கலவைகளுடன், அழுகி மக்கிக் கொண்டிருக்கும் தோல் கழிவுகளின் வீச்சத்தில் நின்று, அந்த வீச்சமே அவர்களது உதிரத்தில் கலந்து, அந்த மக்கள் அருகில் வரும்போதே, பலகாலம் ஊறிக்கிடந்த மலக்கழிவினை உடம்பில் பூசிக் கொண்டதே போன்ற துர்க்கந்தம். அவர்களைத் தேடிவரும் தோல்ஷாப்பு ஆண் பெண் தொழிலாளர்கள் உடம்பில் இருந்துவரும் துர்க்கந்தம் சகிக்க முடியாததாக இருந்தது. ஆனால், சங்கரனும் மற்றவர்களும் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல், அம்மக்களுடன் இரண்டறக்கலந்து உறைவது தங்கசாமியை வியப்புறச் செய்தது. அந்தக் காட்சி, குஷ்டரோகிகளும், பெருவியாதிக்காரர்களும், ஏசுபெருமானைத் தேடிவந்த பைபிற் சேதியை நினைவூட்டுவதாக இருந்தது.

துன்பத்தில், துயரத்திலும் உழன்று, வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கும் அம்மக்களுக்கு, சங்கரனையும் அவரது சகாக்களைப் போன்று அவர்களுடன் இரண்டறக் கலந்து பணியாற்றுவதே உண்மையான தேவ ஊழியம் என்று தங்கசாமிக்குப் பட்டது.

காலவறையில் தங்கசாமி அம்மக்களோடும் அவர்களது வாழ்வோடும் ஐக்கியமாகிப் போனான்.

18

தனது கிரீடங்கள் பத்தையும், வீரத்தையும், தெம்பையும் போர்க்களத்தில் போட்டுவிட்டு வெறுங்கையோடு இலங்காபுரிக்குத் திரும்பிய இலங்கேஸ்வரனைப் போன்று ஊருக்குள் விடப்பட்ட சண்டியர் சந்தனத் தேவனுக்கு வீட்டை அடைந்த போது, கோபமும் ரோஷமும் ஆவேசமும் விஸ்வரூபம் கொள்ளலாயிற்று

அவனை ஊர் எல்லையில் கொண்டு வந்து விட்ட மினிசாமி, பாளை அருவாளை அவன் கையில் கொடுத்துவிட்டுச் சொன்ன வார்த்தைகள் நெஞ்சில் நின்று முள்ளாக உறுத்தலாயிற்று.

"இந்தா பாரு தேவரே, தலைவரு சொன்னாருங்கதுக் கோசுரம் ஒன்னெ காவ காத்துக் கொணாந்து உடறோம் இல்லேண்டா ஒன்னைய அங்கேயே காலசாமிக்குப் பொலி கொடுத்திருப்போம்." காலம் காலமா அடிமைப்பட்டுப் பயந்து கெடந்த எங்க சனம் அப்படியே கெடக்குமெண்டு நெனக்காதை. நாங்க ஒன்னை உப்போ சும்மா உட்டுட்டுப் போரம். அதை எங்க பலவீனம்ண்டு நெனக்காதை எங்களுக்கும் ஒன்னாட்டம் அருவாளைத் தூக்கத் தெரியும். நாங்க ஆயுதத்தைத் தூக்க மாட்டம். ஆயுதத்தை எடுக்க வச்சிராதிய. நாங்க மட்டும் ஆயுதத்தை எடுத்தோமிண்டா நீ மட்டுமில்லே. ஒனக்குச் சவரட்சணை பண்ணி, தண்ணி ஊத்தி அனுப்பி வைச்சாம் பாரு. அவங்களும் அவனுவ படை பட்டாளமும் தாக்குப்பிடிக்க முடியாது. அம்புட் டும் எகிறிப் போயிரும். சாவடியா அடிச்சுப் போட்டிருவம்" என்று சொன்ன போது, அவமானத்தாலும், கோபத்தாலும் இரத்தம் சூடேறி நெற்றி நரம்பு புடைக்க சந்தனத்துக்கு உள்ளில் கோபம் மூண்டது

கோழையாக ஊருக்குள் பிரவேசித்து, வெளி முற்றத்தில் கால் வைத்ததும், அவனது தலையைக் கண்டதுதான் தாமதம், வாசற்படியை ஒட்டிய பட்டியல் கல்லில் உட்கார்ந்திருந்த அவனது தாயார் விருமாயி, மாராப்புச் சேலை மார்புகளை விட்டு அகன்று போன உணர்வே இல்லாதவளாக, வயது முதிர்ச்சியால் சுவறிம் வற்றிப் போன மார்பகங்கள் அசிங்கமாக ஊசாட

"யப்பே! என் ராசா நீ வந்திட்டையாடா ஒங்கப்பனைக் கொண்டு போட்டதாட்டம் அந்தப் பறைக்குடி சனங்க ஒன்னையக் கொண்டு போட்டிருப்பாங்கண் டென்டல்லோ நெஞ்சு பதறிப் போனன். அய்யா மறு பெறவி எடுத்தல்லோ உசிர் பொழச்சி வந்திருக்கே" என்று மார்பில் அடித்துக் கொண்டு ஒப்பாரி வைத்தாள்.

சந்தனத் தேவன் பிடிபட்டதையும், அவன் கூட்டத்துக்குக் கொண்டு போய் நிற்க வைக்கப்பட்டதையும் கண்ட அவனது கையாட்கள் தப்பி வந்ததும், சந்தனத் தேவனை இந்நேரம் வெட்டிப் பலியாக்கியிருப்பார்கள் என்று அவளிடம் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்கள்.

அவன் செத்துப் போனது போல் விருமாயி ஒப்பாரி வைத்தது. சந்தனத் தேவனுக்கு அவமானமும், கேவலமுமாக இருந்தது. அது கோபமாகப் பரிணமித்தது.

"நோழி மவளே. உப்போ என்ன நா செத்தா போயிட்டன் ஒப்பாரி வைக்கறே. வாய மூடுடீ முண்டை. ஒக்காளி, நோளி மவளே வாயத் தொறந்தே. நோநி கலங்கும் படியா மிதிச்சுக் கொண்டு போடுவன் செடிய மூடிட்டுச் சும்மா இருப்பாளா ஒப்பாரி வச்சு ஊரையே கூட்டப் பாக்கையா" என்று அதட்டவும் அவள் அரவம் மொத்தமாக அடங்கிப் போனது.

லாந்தர் வெளிச்சத்தில், மகனது முகத்தில் தேங்கி நிற்கும் அவமானம் கலந்த கோபக்கனலைப் பார்த்ததும் பயந்து போய், தனக்குள்ளேயே விம்மி அழுகையை அடக்கிக்

கொண்டாள். விலகிக் கிடந்த மாராப்புச் சேலையைச் சரி செய்து, அவழ்ந்து கிடந்த கூந்தலை அள்ளிச் சொருகிய வண்ணம் தெருத் திண்ணையில் குத்துக்கால் போட்டு உட்கார்ந்தாள். அவளது கவனமெல்லாம் உள் வீட்டில் லயித்திருந்தது. பிறகு மடியில் இருந்த இரும்பு உரலையும் உலக்கையையும் எடுத்து அருகில் வைத்திருந்த வெற்றிலையையும், கழிப்பாக்கையும், சுண்ணாம்பையும் அதில் போட்டு இடிக்கலானாள். பாம்படமில்லாமல் தொங்கும் காதுப் படலங்கள் கல் உரலினின்று எழும் நாதத்துக்கேற்ப நர்த்தனமாடிக் கொண்டிருந்தன.

மத்தியான விருந்தின் போது சாப்பிட்ட கள் வாடை மட்டும் கிழவிக்கு ஏப்பம் ஏப்பமாக வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. கள்ளின் மப்பும் இனியும் குறையவில்லை. விருமாயிக்கு மற்றவர்களைப் போல பட்டை சாராயமெல்லாம் பிடிப்பதில்லை. ஆனால் அவளால் கள் உட்கொள்ளாமல் பொழுது போகாது.

உண்மையில் விருமாயிக் கிழவி ஒப்புக்காகத் தான் ஒப்பாரி வைத்தாளேயல்லாமல் அவன்பால் கொண்ட பாசம் காரணமாக அல்ல. வக்கீல் சங்கரனைத் தீர்த்துக்கட்டுவதற்காக, அவளது உடன்பிறந்த சகோதரன் வேலுத்தேவனால் உசிலம்பட்டியிலிருந்து அனுப்பப்பட்ட அடியாட்களைப் பற்றி சந்தனம் கேட்டுவிடக் கூடாது என்பதற்காக வேண்டித்தான் அவ்வாறு ஒப்பாரி வைத்துப் பாசாங்கு செய்கிறாள்.

உசிலம்பட்டியிலிருந்து கூட்டி வரப்பட்ட கள்ளர்கள் அவனது சகோதரன் வேலுத்தேவனுடைய மக்களும் பங்காளிகளும் ஆவார்கள் ஆண்டிப்பட்டிக் கணவாயே அவர்களது ஆதிக்கத்தில் தான் இருக்கிறது. ஆண்டிபட்டிக் கணவாயைத் தாண்டும் எந்த வாகனமும், யாத்திரை போகிறவர்களும், அவர்களுக்குக் கப்பம் கட்டாமல் கணவாயைக் கடக்க முடியாது. விழித்திருக்கும் போதே கண்ணாமூழியைத் தோண்டி எடுத்துக் கொண்டு போகும் திறமை படைத்தவர்கள். எனவே, தான் செய்யப் போகும்

கொலை பாதகச் செயலை அவர்களது துணையோடு செய்து முடிக்க வேண்டும் என்கிற முன் கருதலோடு மெனக் கெட்டு, ஆண்டிபட்டி போய் மைத்துனர்களைக் கூட்டி வந்து ஒரு வார காலமாக ஆடு கோழி என்றும், அவர்கள் சுகித்திருக்கப் பட்டை சாராயமும் வாங்கிச் சாமிக்குப் படப்புப் போடுவது போல் பராமரித்திருக்கிறான். ஆனால் அவர்கள் இவ்வளவுக்குக் கோழைகளாகவும், சுய நலமிகளாகவும் இருப்பார்கள் என்று சந்தனத் தேவன் எதிர்பார்க்கவில்லை.

கிழவி ஒப்பாரி வைத்த போது, அவள் பாசாங்கு செய்து பசப்புகிறாள் என்பது அவனுக்குத் தெரியும். அவளை உற்றுப் பார்த்தான். அவள் துக்கித்துப் போயிருக்கிறாள் என்பதற்கான சாயலே அவள் முகத்தில் தென்படவில்லை.

"ஹூம் எம்மவனை எந்தப் பெயலாலயும் செவிச்சிர முடியுமா என்ன. அவன் கரி பொறுக்கி வீரணத் தேவன் மவன்லா. அவம் மசிரக் கூட அசைச்சிர முடியாது. வார பயவளையெல்லாம், மருத்து கண்டம் துண்டமா வெட்டிக் கூறு போட்டிர மாட்டானா என்ன. வீரணத் தேவனுக்கல்லோ நான் முந்தி விரிச்சிருக்கேன்" மகனுக்கு வீம்பு மூட்டும் நோக்கத்தில் கிழவி தனக்குள்ளே சொல்லிக் கொள்வதே போல், உரலை இடித்தபடியே அவன் காது கேட்டும் படியாகச் சொல்லவும்,

"சை! நாற முண்டை. வாயப் பொத்திட்டுச் சும்மா இருக்கலே. நொங்க, மிதிச்சுப் போடுவன். மனிசன் சீப்பட்டுச் செங்கல் சுமந்து வந்து நிக்கான். நீ வீம்பு பேசுறயாக்கும் வீம்பு" என்று வைதபடி அவள் எதிரில் பூதமாக வந்து நின்றவன்,

"ஏ, கெழவி, விருமாயி, எங்கடீ, ஒங்க அருமை அண்ணன் மக்க பொன்னப் பயலுவ. அவுஹ ஆத்தா அத்தனை பெயவளையும் ஒம் தம்பிக்குப் பெத்தாளா இல்லே அவுசாரி போனாளா" என்று கோபமாகக் கேட்டவன்

"ஒவ்வொரு செரிக்கி மவனுக்கும் கிடாக் கொம்பாட்டம் மீசை. மீசைக்கு மட்டும் கொறச்சல் கெடையாது. அது

மீசையா. நாயி சூத்துலே மொளைக்க வேண்டி மசிரு அவன்களுக்கு அர்ப்பமா மொளச்சிருக்கு" என்று ஆவேசமாகக் கத்தினான்.

மேற்கொண்டு அவனிடம் பேச்சுக் கொடுத்தால், அவளது நொள்ளைக் காதுகள் அறுந்து போகும்படி அவளை நையப் புடைத்து விடுவான் என்று பயந்து தலையைக் குனிந்து மௌனமாகிப் போனாள்.

அவளிடம் மேற்கொண்டும் பேச்சுக் கொடுக்கப் பிரியப்படாதவனாக,

"வக்காளி, தாயழி பங்காளிகளை நான் வச்சுக்கிறன்" என்று வர்மித்தவாறு வாசற்படியைத் தாண்டி வீட்டுக்குள் போனான்.

வீட்டுக்குள் காடா விளக்குச் சுடர் வீசி எரிந்து கொண்டிருக்கிறது. மனைவி முத்துப் பேச்சி முகட்டைப் பார்த்து யோசனையில் ஆழ்ந்த வண்ணம் சம்மணம் கூட்டி உட்கார்ந்திருக்கிறாள். விளக்கொளியில் அவளது முகவிலாசமும், மார்புக் குவடுகளும் துல்லியமாகத் தெரிகின்றன. நல்ல மோகனமான மாந்தளிர் நிறம். மதுரை மீனாட்சியம்மன் கோவில் சிலைக்கு எண்ணெய் நீவிவிட்டது போன்ற கண்ணைச் சுண்டி இழுக்கும் அழகு. ஊளச் சதையே இல்லாத கட்டு மஸ்தான உடற்கட்டு.

அவளது உடல்வாகில் மோகம் கொண்டு தான் மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் பங்காளிகளுடன் உசிலம்பட்டிக்குப் போய் அம்மான் வேலுத்தேவனோடும், தாயாதிகளுடனும் கடுமையாகச் சண்டை பிடித்து, அயித்தை மகனுக்கு வாழ்க்கைப்பட இருந்தவளைச் சிறையெடுத்துக் கொண்டு வந்து கட்டாயத் தாலி கட்டிக் குடும்பம் நடத்துகிறான். சந்தனத் தேவன் முறை மாப்பிள்ளை என்பதாலும், சண்டியர் என்பதாலும், விருமாயிக் கிழவி காலில் விழுந்து வேண்டிக் கொண்டதால், வேலுத்தேவன் தனது கோபத்தையெல்லாம் ஒதுக்கி வைத்து விட்டு உறவை முறிக்காமல் இருந்தானே யல்லாமல், அவனது குடும்பத்தினர் சந்தனத் தேவன் மீது வைத்திருந்த வன்மம் மாறவில்லை.

முத்துப் பேச்சி கடந்த மூன்று ஆண்டுகளாக அவன் தாலியை மார்பில் தாங்கிக் கொண்டு அலைந்தாளேயல்லாமல் அவன் வசப்படவில்லை. அவனுக்காக அவளது வயிற்றில் ஒரு புழுப் பூச்சி கூட உற்பத்தியாகவில்லை அவனுக்கான வாரிசை உருவாக்கிவிடக் கூடாது என்கிற வைராக்கியத்தால் அவளது கர்ப்பக் கிரகத்தைக் காயப் போட்டுப் பாலைவனமாக வைத்திருக்கிறாள்.

கிழவி மட்டும் மருமகளுடன் சண்டை பிடித்துக் கொள்ளும் போதெல்லாம் மறவாமல், மருமகளின் வஞ்சகச் செயலை அவனுக்கு ஞாபகப்படுத்த மட்டும் மறக்க மாட்டாள்.

அப்போதெல்லாம் "ஏலே, சந்தனம் நோழி மவ ஒனக்குப் புள்ளெ பெத்துத் தர மாட்டா டோய். அவ நெஞ்சுக்குள்ளே நீ கெடையாது. லே, அவ அம்மான் மவன், சல்லிக் கட்டுச் சங்கரன் பெயதான் இருக்கான் ஒருநா, ஒன்னவும் என்னவும் உட்டு ஓடப் போறா பாரு" என்று ஒப்பாரி வைத்து அங்கலாய்ப்பாள்.

முத்துப் பேச்சி உட்கார்ந்திருக்கும் நிலைமையையும், அவள் முகத்தில் கூடி நிற்கும் பழிவாங்கும் ஆவேச உணர்வையும் பார்த்த போது, அவள் அவனுக்காகத் துக்கப்படவில்லை என்பதை அவனால் சகித்துக் கொள்ள முடியாததாக இருந்தது.

அவள் அவனைப் பார்த்த பார்வை அவனைப் பழிவாங்கி விட்டதாகப் பட்டது. உசிலம்பட்டியிலிருந்து கூலிக்கு வந்த அவளது சகோதரர்கள் வேண்டுமென்றே, அவனை எதிரிகளிடம் சிக்க வைத்துவிட்டுத் தப்பித்துப் போய் விட்டிருக்கிறார்கள். ஒரு கள்ளன் சாதாரணமாகச் செய்யக் கூடிய சதியா அது? பட்ட அவமானம் அவன் தலையைக் கிறங்க வைக்கவும்,

"வக்காளி, பங்காளி பங்காளிண்டு ஒரு வாரமா ஒத்தக் கடை தண்ணியவும், வெள்ளாட்டு நல்லி எலும்பையும் உடாம தின்னு தீத்துப் போட்டு வீறாப்புப் பேசினானுவ" என்றவன்

"பொன்னப் பயலுவ. ஆளைக் கண்டதும் சூத்தைப் பொத்திட்டு நாயாட்டம் என்னை அம்பேண்டு உட்டுப் போட்டுத்தப்பிட்டானுவ. அல்லாம் ஒன்னால தாண்டி வேசமுண்டை. அம்ம சாதி சனம் செய்யற வேலையா அது" என்று கூச்சல் போட்ட சந்தனத் தேவன் முத்துப் பேச்சியின் மீது புயலாகப் பாய்ந்தான். அவிழ்ந்து கிடந்த அவள் கூந்தலை இடது கரத்தால் சுருட்டிப் பிடித்து, ஆட்டுக்கல்லைச் சுழற்றுவது போல், நாலா பக்கமும் சுழற்றி, பலம் கொண்ட மட்டில் அவள் உடலை இழுத்துப் போட்டுக் காலால் துவம்சம் செய்தான்.

சந்தனத் தேவனின் சித்திர வதையால் மரத்துப் போன முத்துப் பேச்சி அவனை முறைத்துப் பார்த்தாளேயல்லாமல், அவளிடம் இருந்து ஒரு சிறிய அரவம் கூட வெளிப்படவில்லை.

"கொறப்பய மவ. இம்புட்டு ஒதையவும் வாங்கிட்டு, மண் பேசினாதாம் பேசுவேண்டு ஒரு வார்த்தை உடுதாளா பாத்தியா" விருமாயிக்கிழவி வெற்றிலைக் கலவையை வாய்க்குள் குதப்பிய வண்ணம் மகனுக்கு மேலும் வீம்பை மூட்டினாள். கிழவி பேச்சைக் கேட்டதும்

"வம்மம் புடிச்ச முண்டை. ஆனெ ஒதுக்கறதாட்டம் ஒதுக்கி வச்சிருந்து அண்ணன்மார் கிட்டே சொல்லி என்னையப் பழி வாங்கிட்டாளே" என்று கோபமாகப் பேசிய படியே அவளைத் திரும்பவும் தாக்கப் போனான்.

இவ்வளவு நேரமும் அவனது காலடியில் துவண்டு கிடந்த முத்துப் பேச்சி கோபம் கொண்ட ராஜ நாகமாகச் சீறி எழுந்தாள். காடா விளக்கைத் தூக்கி முற்றத்தில் வீசினாள்.

ஆடை குலைய நின்றவள் "மருத்து. தொட்டுப் பாருடா மாப்ளே. என்னத் தொட்டே வக்காளி சங்கைக் கடிச்சு நெத்தம் குடிச்சுப் போடுவன்"

பத்திர காளியாக நின்ற மருமகளைப் பார்த்த கிழவி அஞ்சி ஒடுங்கிப் போனாள்.

முத்துப் பேச்சி சந்தனத்தையும், ராமாயி கிழவியையும் பார்த்த பார்வையில் இந்த மூன்று ஆண்டுகாலம். அவள் அனுபவித்த வேதனையின் கோபம், ஆவேசமும் புலப்பட்டது.

முற்றத்தில் வந்து நின்றவள்

"சீ நீயெல்லாம் ஆம்பளையாடா பொட்டச்சிய அடிக்கிற பேமானி" என்று சந்தனத் தேவனைப் பார்த்துக் கேட்டாள்.

"இந்த மானங்கெட்ட பொழப்பு பொழைக்க சோரம். உடன் பொறந்தவளை நாலு பேருக்குக் கூட்டி வுட்டுப் பொழப்பு நடத்தலாம்டா" அவனது அடியாள் வாழ்க்கை அவனை வெறுப்படையச் செய்திருந்தது.

வீராவேசமாகச் சொன்னாள். அவனால் ஏதும் பேச முடியவில்லை. கட்டுண்ட பேயாக அவளையே பார்த்த வண்ணம் நின்றிருந்தான்.

தோப்பை விட்டு வானப் பரப்புக்கு ஏறிவந்த நிலவெளியில் அவள் வேட்டைக்குக் கிளம்பும் காளிதேவியாகப்பட்டாள்.

வானப் பரப்பையும், அமைதியில் மூழ்கிக் கிடக்கும் அந்தச் சிற்றூரையும் மாறி மாறிப் பார்த்தாள்.

"நீயும் மாண்டாம். நீ கட்டின தாலியும் மாண்டாம்" ஊரே எதிரொலிக்கச் சொன்னவள் திறந்து கிடந்த மார்பை அலங்கரித்த தாலியை அறுத்து வீதியில் வீசினாள்.

நிலை குலைந்து கிடந்த ஆடையவும், கூந்தலையும் சரி செய்து அள்ளி முடிந்தவள், அந்த அகால இரவுப் போதில், அந்த வீட்டையும், அந்த ஊரையும் விட்டு நிதானமாக நடந்து போனாள்.

அவள் அவனை விட்டு நிரந்தரமாகப் பிரிந்து போவதை, அமைதியாகப் பார்த்துக் கொண்டு நின்ற சந்தனத் தேவனின் நயனங்களினின்றும் தாரை தாரையாகக் கண்ணீர் வழிந்தோடியது. உள்ளில் வாழ்க்கையே அந்தகாரத்தில் மூழ்கிவிட்ட வெறுமை.

19

ராஜாக்காபட்டிப் பறைச்சேரியில் அன்று, முத்தாலம்மனுக்குக் கொடை.

பல்லி சொல் கேட்டுச் சகுனம் பார்த்து சுமார் ஒரு மாத காலத்துக்கு முன்னால், அம்மனுக்குக் கொடை என்று ஜாதிக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டிருந்தது.

சேரி மக்களைப் போன்றே வீடும், குடிசையும் புகலிடமுமில்லாமல், காலம் காலமாக, சேரி மந்தையைத் தாண்டி, ஊரணிக் கரையில், புறம் போக்கு நிலத்தில் வானுற உயர்ந்து நிற்கும் வேப்ப மரத்தின் மூட்டில் முளைத்திருக்கும் கரையான் புற்றுத்தான் அம்மனின் உறைவிடமும், புகலிடமும். மழையானாலும், வெயிலானாலும், அம்மக்களைப் போன்றே கேட்பாரும் பார்ப்பாருமின்றி அம்மன் காலம் காலமாக அங்கே குடி கொண்டிருக்கிறாள்.

ஊரில் செழிப்பும் வனப்பும், ஏற்பட்டால் சேரி வாழ் மக்கள் கையில், கொத்தும் கூலியும் அதிகமாகக் கிடைத்தால் மூன்று ஆண்டுக்கு ஒரு முறையோ, அல்லது ஐந்து ஆண்டுக்கு ஒரு முறையோ அம்மன் நினைக்கப்படுவாள். ஊரில் பஞ்சம் ஏற்பட்டால் சேரி மக்கள் அம்மனையே மறந்து போவார்கள். தாது வருஷப் பஞ்சம் வந்தபோது சேரி மக்கள் பஞ்சத்தாலும், பட்டினியாலும் வதங்கிப் பட்சிகளைப் போல் செத்து மடிந்த போது அம்மன் மொத்தமாக மறக்கப்பட்டு போனாள்.

அம்மனுக்குக் கொடை சாட்டியதற்குப் பிறகு அம்மனை அடையாளம் காட்டும் முறையில், வெறிச் சோடிக்கிடக்கும், கரையான் புற்றுக்கு மஞ்சள் தடவி

குங்குமப் பொட்டிட்டு, பீடத்தைச் சுற்றிச் சாணம் தெளித்துப் பனை ஓலையால் மேல் கூரையும் போடப்படும்.

முத்தாலம்மன் துடியான சாமி என்பதால் காப்புக் கட்டிய நாள் முதல் அந்த ஒரு மாத காலம் சேரிக்குள் கடுமையான விரதம் அனுஷ்டிக்கப்படுகிறது. கவுச்சி விலக்கப்பட்டதால், குடியான தெருவுக்குள் மாடு செத்தால் கூட, அவர்கள் ஏறிட்டுப் பார்க்க மாட்டார்கள். ஆண் பெண் அடங்கலும் சுத்தமாக இருக்க வேண்டும் என்பதால் சின்னஞ்சிறுசுகள் கூட இரவில் ஒன்றாகத் தங்க முடியாது. பிழைப்புக்காகவும், வற்புறுத்தல் காரணமாகவும் உடலைப் பண்ணைகளிடம் ஒப்புக் கொடுக்கும் பெண்கள் கூட அம்மனைச் சாக்குச் சொல்லி அந்த நாட்களில் தங்கள் கற்பைக் காப்பாற்றிக் கொள்வார்கள். அப்படி தப்பித்தவறி தவறுகள் நடந்துவிட்டால், அம்மனுக்குப் பழியாகக் கோபம் வந்துவிடும். அம்மன் அவர்களை ரத்தம் கக்க அடித்துக் கொன்று போடும் அல்லது சேரிக்குள் கொள்ளை நோயை உருவாக்கித் தன் கோபத்தைத் தணித்துக் கொள்ளும்.

இவ்வளவு இருந்தும், அம்மன் மிகவும் கருணை மிக்கவள். ஒரு தாய் சேயைப் பாதுகாப்பது போல், சேரி மக்களைப் பாதுகாத்துப் பரிபாலனம் செய்கிறாள் என்று அவர்கள் நம்பினார்கள். இப்போது கூட, வெள்ளி செவ்வாய்க்கிழமைகளில், அம்மன் தனது பரிவாரங்களுடன் காவேரிக் கரையிலிருந்து வெள்ளி ரதம் ஏறி, சேரிக்குள் நுழைந்து, தான் கொண்டு வந்து குடியேற்றிய மக்களின் சேம லாபங்களைப் பார்த்து விட்டுத் திரும்புவதாகவும், அப்படி அவள் நடமாடும் வேளையில் அம்மனின் பாதச் சிலம்பொலி சேரி எல்லை வரையில் கேக்கும். அம்மனின் சிலம்பொலியைப் பல பெரியவர்கள் கேட்டிருக்கிறார்கள். ஆனால் கலிகால மாகையால், அம்மன் மட்டும் யாருக்கும் இதுவரையில் தரிசனம் கொடுத்தது கிடையாது.

அவர்களைப் பாதுகாத்துப் பராமரிக்கும் முத்தாலம்மன், கொடை நடக்கும் கடைசி வெள்ளிக்கிழமை நடுநிசிக்குப் பிறகு சாமி கொண்டாடியும், பூசாரியுமான மூக்குச்சாம்பான் உடலில் அம்மன் ஆவியாக இறங்கி, அம்மக்களோடு கலந்து உறவாடிக்

குறி சொல்லி அவர்களைப் பரவசமடைய வைக்கத் தவறுவதில்லை. பரம்பரை பரம்பரையாக அம்மன் அந்தக் குடும்பத்தில் குடிபுகுந்திருக்கிறாள். எனவே, ஆதி மூக்கச் சாம்பான் அம்மனுக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றும் வகையில் குடும்பத்தில் பிறக்கும் முதல் ஆண்பிள்ளைக்கு மூக்குக்குத்தி, மூக்கன் என்று பெயர் சூட்ட வேண்டும். அப்படிச் செய்யாமல் போனால் அம்மனுக்குக் கோபம் சண்டாளமாக வந்து விடும். அந்தக் குடும்பத்திற்கு வாரிசுகளை உருவாக்கித் தரும் பெண்களின் கர்ப்பக் குழியில் புகுந்து கருவை மென்னு தின்னு போடும். ஆவியாகவும் இறங்கி நிமித்தமும் சொல்லமாட்டாள். எனவே, ஆத்தாளின் ஆங்காரத்துக்குப் பயந்து, அந்தக் குடும்பமும் சேரி மக்களும் ஆத்தாள் வகுத்த நியதியை இன்றுவரை பின்பற்றி வருகிறார்கள்.

ராஜக்கா பட்டிச் சேரி மட்டுமல்லாமல், அந்த வட்டாரத்துச் சேரி மக்களின் குல தெய்வமான முத்தாலம்மன், அந்த ஊரில் வந்து குடி கொண்ட கதை கேட்பவர்கள் மனம் ஒடிந்து போகும் சோகக் கதையாகும். முத்தாலம்மன் மட்டும் சமயத்தில் வந்து அவர்களுக்கு அபயம் தந்து காப்பாற்றவில்லையானால் அவர்கள் வம்சமே, அழிந்து வேரற்றுப் போயிருக்கும். அந்த வட்டாரத்தில் பறக்குடியே இல்லாமல் போயிருக்கும். அதாவது,

மூக்கனின் மூதாதையரான பெரிய மூக்கன் சாம்பானுக்குப் பூர்வீகம் சோழ தேசம். பெரிய மூக்கனும், அந்தச் சேரி வாழ் மக்களும் உள்ளூர் கைலாச நாதர் கோவிலுக்கு நேர்ந்து விடப்பட்ட கொத்தடிமைகள், மிருகங்களை விடத்தானும் கேவலமான அவல வாழ்க்கை.

இப்படிப்பட்டதோர் அவல வாழ்க்கை அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் போது தான், தஞ்சைப் பெரு உடையார் கோவிலுக்குக் கடைக்கால் நாட்ட துவார பாலகர்கள் நரபலி கேட்க, சோழ மாமன்னன் ஊராரின் முடிவுக்கும், வேண்டுகோளுக்கும் ஏற்ப, ஆயிரம் பஞ்சமர்களைப் பிடித்து நரபலி கொடுக்க வேண்டும் என்கிற உத்தரவைப் போடவும், சேவகர்கள் அந்த நல்ல சேதியை நாடெல்லாம் பறையறைந்து அறிவிக்கலானார்.

இந்தச் சேதியைக் கேட்ட சேரி ஜனங்கள் இடியோசை கேட்ட நாகமாக நடுங்கிப் போனார்கள். உயிரைக் காப்பாற்றிக் கொள்ள, ஊர் ஊராகச் சேரி ஜனங்கள் இருள்கவியும் நள்ளிரவில் மன்னனது ஆக்கினைக்குப் பயந்து குடும்பம் குடும்பமாகச் சோழ தேசத்தை விட்டு, வேற்று தேசங்களை நோக்கித் தப்பி ஓடலாயினர்.

பெரிய மூக்கனும் ஒரு அமாவாசை இரவாகப் பார்த்து, மனைவி ரெங்காத்தாள் சகிதம் வேற்று நாட்டை நோக்கித் தப்பி ஓடலானான்.

பஞ்சம ஜனங்கள் சேரிகளைக் காலி செய்து விட்டுத் தப்பி ஓடுவதைச் சோழ மகாராசனும், அவனது மந்திரி பிரதானியரும், கேள்விப்பட்டதும் தங்களது படை பட்டாளத்தையும் சிப்பாய்களையும் விட்டு அவர்களை விரட்டி பிடிக்க ஆக்ஞை பிறப்பித்தான். உத்தரவுப்படி, சோழ அரசனது சிப்பாய்கள், பெரிய மூக்கனையும் அவனது மனைவியையும் நிழல் போல் விரட்டிக் கொண்டு தொடர்ந்தனர்.

பெரிய மூக்கனும் அவன் மனைவியும் தப்பித்தோம் பிழைத்தோமென்று திருவரங்கத்தையும் தாண்டிக் காவிரிக்கரையை அடைகிறார்கள். காவிரியோ வெள்ளப் பெருக்கேற்பட்டு, காவிரித்தாய் இருகரைகளையும் தொட்டுக் கொண்டு நுங்கும் நுறையுமாக ஓடிக் கொண்டிருக்கிறாள். ஆற்றில் பெருவெள்ளம்

சோழ மன்னனது பட்டாளம் திருவானைக்காவை வந்து சேர்ந்து விட்டது.

அபயம் நாடி பெரிய மூக்கனும், ராமாத்தாளும் அரங்கநாதர் கோயிலுக்குள் போக முடியாது. பஞ்சம் ஜனங்களை எப்படிக் கோவிலுக்குள் அனுமதிக்க முடியும். கோவிலே தீட்டுப்பட்டுப் போகும்.

அமாவாசை இருளையும் தோற்கடிக்கும் சுருங்கும் மிருட்டு, மூக்கனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. சோழர் தேசத்துப் படையில் சிக்கினால், போர்வீரர்கள் அவனையும், மனைவியையும் சிரச் சேதம் பண்ணிப்

போடுவார்கள். நதியில் கால் வைத்தால் வெள்ளச் சுழற்சியில் சிக்கி மாண்டு போக வேண்டியது தான். இரு கொள்ளி எறும்பாகத் தவித்துப் போய் நிற்கிறார்கள்.

மழை வேறு சிணுங்க ஆரம்பித்திருக்கிறது. ஒரு வேளை அது பெரும் மழையாகவும் வர்ஷிக்கலாம்.

அப்போது தான் அவர்கள் ஒதுங்கிப் பதுங்கி நின்ற ஆலமரத்தை நோக்கி, பனை நார் முறத்தை காற்றுக்கு மறைப்பாக வைத்துக் கொண்டு, சிறு விளக்கைக் கையில் ஏந்திய வண்ணம் அந்தப் பெண் அவர்கள் பதுங்கி நிற்கும் ஆலமரத்தை நோக்கி வந்தது. மின்மினியாக விளக்கு எரிந்த போதும், அதன் ஒளியில் அந்தம் யுவதியின் முகம் பிரகாசமாகவும், துல்லியமாகவும் தெரியலாயிற்று.

குமரிக்குப் பதினாறு அல்லது பதினேழு வயதிருக்கும். அவளது வடிவழகைப் பார்த்துப் பெரிய மூக்கன் மலைத்துப் போனான். நீலம் கலந்த கறுப்பு. கருங்காலி மரத்தில் வடித்தெடுத்தது போன்ற வடிவம் பார்த்தாரைக் கிறங்க வைக்கும் வனப்பு. ஆனால் அவள் மிகவும் களைப்படைந்து இருக்கவேண்டும் என்று அவளது திருமுகத்தைப் பார்த்தபோது ரெங்காத்தாள் புரிந்து கொண்டாள்.

ரெங்காத்தாள் ஊகித்தபடியே, ஆலமரத்துக்கடியில் கட்டப்பட்டிருக்கும் பீடத்தில் விளக்கையும், முறத்தையும் அணைப்பாக வைத்து விட்டு, ரெங்காத்தாளை நோக்கி வந்த அந்த யுவதி.

"ஆத்தா, பசிக்குது ஏதாச்சும் தர்ரையா. சாப்பிட்டுப் பல நாள் ஆவுது" ஈன சுரத்தில் அவள் கேட்ட போது ரெங்காத்தாள் மிகவும் பயந்தவளாக

"ஆத்தா, நீ மே குலத்துப் பெண்ணாத் தெரியுது. நாங்க தீட்டுப்பட்டுப் போன தீண்டப்படாத சாதி. ஈனப் பறைச்சாதி ஒனக்கு நான் சாப்பாடு போட்டா ஒனக்குப் பாவம் வந்து சேரும் சாமி" தனது ஏலாமையைச் சொன்னாள். பசியை ஆற்றவிடாமல் குலம் குறுக்கே நிற்பது அவளை விசனமடைய வைத்தது.

இப்படி ரெங்கத்தாள் சொன்ன போது, குமரிப் பெண் தனது பசியையும் மறந்து, வெண் கலத்தில் நாதம் எழுப்பியது போல் கலகலவெனச் சிரித்தாள். யாசகம் கேட்பது போல் கரங்களை நீட்டினாள். பார்ப்பதற்குப் பரிதாபமாக இருந்தது.

"பசிக்கும் பட்டினிக்கும் சாதி தெரியாது." அந்தப் பெண் சொன்னாள். பசியின் கொடுமையையும் தீண்டாமை அவஸ்தையையும் நித்த நித்தம் அனுபவித்த ரெங்காத்தாளுக்கு அழுகை மூட்டியது.

பெரிய மூக்கனின், அழுக்கடைந்து கீறல் நிறைந்த வேட்டியில் முடிந்து கொண்டு வந்திருந்த கேழ்வரகுக்கழியை நீரில் நனைத்துப் பிரித்து குமரிப் பெண்ணிடம் கொடுத்தாள்

உப்பும், உரைப்பு மற்ற மொட்டைக் கேழ்வரகுக் கழியைத் தேவாமிர்தமாக அருந்திய அந்தப் பெண் அவளையும், அவனையும் பார்த்து மனமுவந்து சிரித்தான். பெரிய மூக்கனும், ரெங்காத்தாளும் தாங்கள் நாள் முழுவதும் பட்டினியாகிருப்பதும் பசித்திருப்பதும் நினைவுக்கு வந்தது. அதை அவர்கள் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. பசி அவர்களுக்குப் பழக்கப்பட்டுப் போன ஒன்று.

"உங்களோட நானும் அக்கரைக்கு வரவேணம் போகலாமா" அந்த யுவதி மிகவும் உற்சாகமாகச் சொன்னபோது பெரிய மூக்கனுக்குத் திகைப்பாக இருந்தது

மலைப்புத் தோன்ற அவர்கள் அந்தக் குமரியைப் பார்த்தபோது, அவளோ வழிகாட்ட வந்தவள் போன்று, காவிரியாற்றின் இறங்கு துறையை நோக்கி நடக்கலானாள்

அவளிடம் காணப்பட்ட உறுதியும் நம்பிக்கையும் அசாதாரணமாகப்பட்டது. அவர்களும் அவளைத் தொடர்ந்தனர்.

அந்த இளம் பெண் காவிரி ஆற்றில் வெள்ளப் பெருக்கையும் பொருட்படுத்தாமல் இறங்கி நடந்தாள் அவர்களும் ஆற்றுப்படுகையில் நடந்தனர் பெருக்கெடுத் தோடிய காவிரி வழிவிட்டு ஒதுங்கிக் கொண்டது. அவர்களது கால் தடம் பதியும் அளவுக்கு மணல் திட்டு தென்பட்டது

அவர்கள் காவிரியாற்றைக் கடந்து, ஆற்றின் தென்கரையை அடைந்த போது, அவர்களைத் தொடர்ந்து வந்த சோழநாட்டுப் படை பட்டாளம், ஆற்று வெள்ளத்தில் சிக்கி அடிபட்டு மூழ்கும் ஓலம் பெரிய மூக்கனை மயிர்க் கூச்சரியச் செய்தது.

வனப்பு மிக்க வாலைக்குமரியின் அற்புதச் செயலால் மலைத்துப் போன பெரிய மூக்கன் துறையூரை அடைந்த போது

"ஆத்தா, நீ ஆரு. அதிசயப் பெண்டா இருக்கையே" என்று கேட்ட போது தன் பெயர், முத்தாலம்மா என்றும், மைசூருக்கு வடக்கே இருந்து வருவதாகவும் சொன்னாள்.

துறையூரைத் தாண்டி இருபது காதம் கடந்த போது, முத்தாலம்மாவுக்கு அம்மை நோய் கண்டது. அவளால் நடக்கக்கூட முடியவில்லை. எனவே, அவளை ஒரு வேப்ப மரத்து மூட்டில் வளர்ந்திருக்கும் கரையான் புற்று அருகில் கிடத்தி விட்டு, அவர்கள் தங்கள் பிரயாணத்தைத் தொடரும் படிக்குப் பெரிய மூக்கனிடமும் சொன்னாள். அப்படி முத்தாலம்மா சொன்னபோது ரெங்காத்தாளால் சகித்துக் கொள்ள முடியாத துக்கம் அவளை ஆட்கொண்டது. தங்களையே தஞ்சமென்று வந்து சேர்ந்த முத்தாலம்மையைப் பிரிந்து போவது என்பது, உயிரைப் பிரித்து உடலை மட்டும் எடுத்துப் போவது போன்ற வேதனை. ஆனால் முத்தாலம்மை மட்டும், இந்த உலகத்தை விட்டுப் பிரியும் காலம் தனக்கு நெருங்கி விட்டது என்றும், அவளுக்காக பெரிய மூக்கனும் ரெங்காத்தாளும், அவளை அப்படியே விட்டு விட்டுத் தெற்கு நோக்கிப் போகும்படி வற்புறுத்திக் கொண்டிருந்தாள். ஆனால் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அவள் அருகிலேயே இருந்து பணிவிடை செய்தனர்

அம்மை போட்ட பதினைந்தாவது நாள், தனது அந்திம காலம் நெருங்கி விட்டதை அறிந்த முத்தாலம்மாள், ரெங்காத்தாள் மடியில் தலை சாய்த்தாள், தான் ஒரு தெய்வப்

பிறவி என்றும், அவர்களைச் சோழ அரசனின் கொடுங்கோன்மையினின்றும் காப்பாற்றுவதற்காக வேண்டி, காவிரிக் கரையில் அவர்களுக்குத் துணையாகவும், பாதுகாவலாகவும் வந்ததாகவும் திருவாய் மலர்ந்தருளினாள். கேட்டுப் பூரித்துப் போன பெரிய மூக்கன், நெடுஞ்சாண் கிடையாகத் தெண்டனிட்டு அம்மனைச் சேவித்தான்.

முத்தாலம்மாள், அவளை ஆசீர்வதிப்பதே போல் தனது திருக்கரங்களை உயர்த்திபடியே பேசலானாள். அவர்களைப் பார்த்துத் தனது ஜீவாத்மா பூத உடலை விட்டுப் பிரிந்ததும், அவளது பூத உடலுக்குச் செய்ய வேண்டிய ஈமக்கரியைகளைச் செய்து, உடலை எரித்து விட வேண்டும் உடல் எரியூட்டப்பட்ட மூன்றாவது நாள், அவளது சடலம் எரிக்கப்பட்ட இடத்திலிருந்து பிடி சாம்பலை அள்ளி ரெங்காத்தாள் தன் மடியில் கட்டிக் கொள்ள வேண்டும்.

அதன்பின், பெரிய மூக்கனும், ரெங்காத்தாளும், திரும்பிப் பார்க்காமல் பாண்டி நாட்டை நோக்கி நடக்க வேண்டும். தப்பித் தவறி திருப்பிப் பார்க்க நேரிட்டால் அவர்கள் எரிந்து பஸ்பமாகிப் போவார்கள் என்றும் அம்மன் எச்சரிக்கை செய்தது.

தெற்குச் சீமை நோக்கிப் போகையில் எந்த இடத்தில் ரெங்காத்தாள் மடி கனக்கிறதோ, அந்த ஊரில் வேப்பமரத்து நிழலில் மடி சாம்பலைக் கொட்டினால், அம்மன் கரையான் புற்றாக உருமாறி பெரிய கருப்பன் குடும்பத்தாருக்கும் அவனது வாரிசுகளுக்கும் பரம்பரை பரம்பரையாகப் பாதுகாவலும் பக்கத் துணையாகவும் இருப்பதாகவும் திருவாக்குச் சொல்லிவிட்டு அந்தக் குமரிப்பெண் தனது நயனங்களை மூடி ஆயுளை முடித்துக் கொண்டது.

அப்படிப் பெரிய மூக்கனும், அவனது பத்தினி ரெங்காத்தாளும், மடியேந்திக் கொண்டு வரப்பட்ட முத்தாலம்மன் கரையான் புற்றாக உருவெடுத்துக் காலம் காலமாக அந்த வட்டாரத்து பறைச்சேரி மக்களது குல தெய்வமாக நின்று அவர்களைப் பராமரித்து வருகிறது

பரம்பரை பரம்பரையாகச் சொல்லப்பட்டு வரும் முத்தாலம்மன் தலபுராணம் அது.

பெரிய மூக்கனால் பிரதிஷ்டை செய்யப்பட்ட முத்தாலம்மன் வாழையடி வாழையாக, அம்மனுக்குக் கொடை எடுக்கும் காலத்தில் அவனது குடும்பத்தின் மூத்த வாரிசின் மீது ஆவியாக இறங்கி, அருள் வாக்குச் சொல்லி அருள் பாலிக்கிறாள்.

அம்மன் அருள் வாக்குச் சொல்லும் நாட்களில் மட்டும் மேல் ஜாதிக்காரர்கள் கூட, தீண்டாமையை ஒதுக்கி வைத்துவிட்டு, அம்மனது அருள்வாக்கைப் பெறுவதற்குச் சேரிக்கு வருவார்கள்.

இப்போதைய வாரிசான சின்ன மூக்கன் மீது கடந்த இருபது ஆண்டுகளாக அம்மன் ஆவியாக இறங்கி, அவர்களுக்கு அருள் பாலிக்கிறாள்.

அவன் செய்த குற்றமோ, மூதாதையர் செய்த தெய்வப் பிழையோ, இரண்டு தாரம் கெட்டியும் சின்ன மூக்கனுக்கு ஆண் வாரிசு சித்திக்கவில்லை.

20

ராஜக்காபட்டி, முத்தாலம்மன் கொடைக்கு அந்த ஊர் சேரி மக்கள், பக்கத்துப்பட்டி தொட்டிகளிலுள்ள தங்கள் உறவினர்களையும், நண்பர்களையும் அழைத்திருந்தனர்.

அன்றைய தினம் ஊருக்குள் கவிச்சியும், மதுவும் தண்ணீர் பட்ட பாடு தான். ஆண் பெண், குஞ்சு குழுவான் கூட புளித்த கள்ளையும், சற்று வசதியானவர்கள் பட்டைச் சாராயத்தையும் அருந்தி விட்டுக் குதியாட்டம் போடுவார்கள். வாழ்க்கையில் அவர்கள் தங்கள் இன்னல்களையும் பாடு மரணங்களையும் மறந்து சுகித்திருக்கும் நாள் அந்த ஒரு நாள் மட்டும் தான். போலீஸ்காரர்கள் கூட, அன்றைய தினம் சேரிக்குள் நடக்கும் அசம்பாவிதங்களைக் கண்டு கொள்ள மாட்டார்கள்.

உள்ளூர்வாசியான மினிசாமி ஓசேப்பை அன்றைய தினம் விருந்துக்கு அழைத்திருந்தான்.

ஓசேப்பைப் பொறுத்தமட்டில், மாட்டிறைச்சி சாப்பிட்டு வெகு நாட்கள் ஆகிவிட்டதால், நாக்குக் கூட செத்துப் போன மாதிரி வறண்டு கிடந்தது. அந்த அளவுக்குத் தோல் ஷாப்பிலும், சங்கத்திலும் அவனக்குத் தலைக்கு மேல் வேலை இருந்து கொண்டே இருந்தது. மினிசாமி அவனுக்குப் பிரியமான நாக்கு ஈரல், வதக்கி இரத்தப் பொரியல் ஆகியவற்றை அவனுக்குத் தயார் செய்து வைத்திருப்பதாகவும், கலப்படம் சேராத ஒற்றைப் பனை மரக் கள்ளையும் அவனுக்காக இறக்கி வைத்திருப்பதாகவும் உறுதி சொல்லியிருந்தான்.

தலைவர் இருதய சாமியும், சங்கரனும் மது விஷயத்தில் மிகவும் கடுமையாக இருந்தனர். அவன் மட்டும், மது அருந்துவதாகத் தெரிந்தால் கொன்றே போடுவார்கள் எனவே, அவர்களுக்குப் பயந்து கள்ளுக்கடை போவதை ஒசேப்பும், அவனது சகாக்களும் தவிர்த்திருந்தனர். ஆனால், கொத்திக் கண்ட கோழியும், நக்கிக் கண்ட நாயும் சும்மா இருக்காது என்பது போல் சிறுவயது முதலே பழக்கமாகிப் போன கள்ளை அவனால் எப்படி மறக்க முடியும் தலைவர்களுக்குத் தெரியாத வரையில் சமாளித்துக் கொள்ளலாம் என்ற முறையில் மிகவும் நெருங்கிய நண்பர்கள் கேட்டுக் கொண்டால் இலைமறைகாய் மறையாக மது தாகத்தை அவன் தணித்துக் கொள்வதுண்டு. அதிலும் அதிகப் போதை தராத ஒற்றை மரக்கள்ளாக இருக்க வேண்டும்.

அவன் தலைமேல் கிடக்கும் சங்க வேலைகளை ஒதுக்கிவிட்டு, ராஜக்கா பட்டி திருவிழாவுக்கு வருவதற்கு வேறு ஒரு காரணமும் உண்டு. அதாவது அருக்காணியை அவன் பார்த்து நாட்களாகிறது. வெகு நாட்களாக அவன் உள்ளத்தை அரித்துக் கொண்டிருந்த அந்த ஆர்வத்தை அவளோடு பகிர்ந்து கொள்ள வேண்டியிருந்தது. மனம் திறந்து வெளிப்படையாகத் தனது விருப்பத்தையும் உணர்வையும் பலநாள் முயன்றும் வெளிப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

ஒரு அஞ்ஞானியை மனைவியாக ஏற்றுக் கொள்வதை வேதக்காரர்களும், சபையும் ஏற்றுக் கொள்ளாது அதையும் மீறி திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்றால், தலைவர்கள் தான் ரிசிஸ்தர் திருமணத்துக்கான ஏற்பாடுகளைச் செய்து தர வேண்டும். ஆனால் தனது மனக்கிடக்கையைத் தலைவர்களிடம் மனம் விட்டுச் சொல்லும் அளவுக்கு ஒசேப்புக்குத் தைரியம் இன்னும் ஏற்படவில்லை. தன் மன உணர்வை அவர்களிடம் சொல்வது கூட ஒழுக்கக் குறைவாக அவர்கள் எண்ணிவிடுவார்களோ என்கிற தயக்கம். கடைசியில் மினிசாமி தான் அந்த உபாயத்தை அவனுக்குச் சொல்லி தெம்பு மூட்டியிருந்தான். ஆகவே மனதைத் திடப்படுத்தி தலைவர்களிடம் சொல்லிவிட வேண்டும் என்கிற தீர்க்கமான முடிவுக்கு வந்த போதும்

அருக்காணியின் சம்மதம் பெறாமல் தலைவர்களிடம் எப்படி அதைச் சொல்ல முடியும். எனவே எப்படியும், அருக்காணியைக் கேட்டுவிடவேண்டும் என்கிற உறுதியோடு ஓசேப்பு அன்றைய தினம் ராஜக்கா பட்டிக்கு வந்திருந்தான்.

அருக்காணிக்கும் அதே நிலைமை. பாண்டிச்சேரியைப் பூர்வீகமாகக் கொண்டிருக்கும் ஓசேப்பு தங்கப் பறையன் பாண்டிச்சேரிக்காரர்கள் ஆண் பெண் அனைத்தும் தங்களை உள்ளூர் பறை மக்களை விட உயர்ந்த ஜாதி என்று எண்ணிக் கொண்டிருப்பவர்கள். அவளோ செத்த மாட்டைச் சாப்பிடும் வெட்டி வம்சம். எனவே பாண்டிச்சேரிக்காரர்கள், வெட்டியான் வம்சத்தினரிடம் கொள்வினை கொடுப்பினை வைத்துக் கொண்டது கிடையாது. எனவே, ஓசேப்பு அவள் பால் எவ்வளவு தான் அன்பும் பாசமும் காட்டின போதும், மற்ற தோல் ஷாப்புத் தொழிலாளர்களைப் போலக் கள்ளத்தனமான உடல் உறவை மட்டும் விரும்புகிறானோ என்பது அவளுக்குச் சந்தேகம். இருந்தபோதும் அவள் தன்னை இழிவான முறையில் தன் உடம்பை ஒப்புக்கொடுக்கத் தயாராக இல்லை. எப்படியும் ஒரு நாள் அவனிடம் தனது உள்ளக் கிடக்கையைச் சொல்ல வேண்டும் அல்லது மொத்தமாக அவனுடனான உறவை முறித்துக் கொள்ள வேண்டும் என்கிற திட மனதுடன் இருந்தாள். பாண்டிச் சேரிக்குத் தப்பி ஓட முயன்ற போது சொன்ன வார்த்தைகளை அவன் காப்பாற்றுவானா என்று அவளுக்குச் சந்தேகம்.

காலாகாலத்தில் தன் மகளுக்குத் திருமணம் நடத்திவிடவேண்டும் என்று மடியில் நெருப்பைக் கட்டிக் கொண்டு அலையும், அருக்காணியின் தாய் அல்லி இப்போதெல்லாம் மகள் அருக்காணியின் திருமணம் சம்மந்தமாகக் கணவன் ஆண்டிச் சாம்பானை நச்சரிக்க ஆரம்பித்து விட்டாள்.

"பொட்டப்புள்ளே சம்பளத்திலேயே காலத்தை ஓட்டலாம்ண்டு நெனப்பா மனிசா" என்று மிகவும் கேவலமாகவே கணவனைத் திட்டித் தீர்க்கிறாள் ஆண்டியைப் பொறுத்த மட்டில், வீட்டோடு மாப்பிள்ளையாகப் பார்த்தால் தனது ஏலாமை காலத்துக்கு ஏற்றதாக இருக்கும்

என்று இரண்டொரு இடங்களையும் பார்த்து வைத்திருந்தான். அருக்காணியோ தனது உள்ளக்கிடக்கையை வெளிக்காட்டிக் கொள்ளாமல் வந்த இடங்களையெல்லாம் தட்டிக் கழித்துப் பார்த்தாள். ஓசேப்பைக்கேட்டு அவள் தனது கல்யாணத்தை நிர்ணயிக்க வேண்டிய அவசியம் சன்னஞ்சன்னமாக அருக்காணியைப் பயமுறுத்திக் கொண்டிருந்தது. எனவே, அம்மன் கொடைக்கு ஊருக்கு வரும் ஓசேப்பைக் கேட்டுவிடுவது என்று அருக்காணியும் தீர்க்கமாக இருக்கிறாள் அதற்கான சமயமும் நெருங்கிக் கொண்டிருந்தது.

●

முத்தலாம்மன் சன்னிதானத்தில், மத்தியான உச்சிக் கால பூஜை. உறுமி மேளமும், பம்பைப் பறைக் கொட்டு முழக்கமும் அந்தப் பிரதேசத்தையே அலற வைத்துக் கொண்டிருக்கின்றன.

ஊராருக்கும் மற்றவர்களுக்கும் தெரியாதபடி கள்ளருந்த இது தான் தருணம் என்று மினிசாமியும் ஓசேப்பும் ஊரணிக்கு மேற்கே உப்பாற்று ஓடை மணலில் கொன்றை மர மறைவில் சாவதானமாக உட்கார்ந்து புளிச்ச கள்ளுக்குத் துணையாக இரத்தப் பொறியலையும், ஈரல் வறுவலையும் அருந்தி, நேரம் போவது கூடத் தெரியாமல், ஊர் கதைபேசி, தம்மை மறந்து சுகித்து, ஊர் திரும்பும் போது மேற்கே சூரியன் மலை வாயிலில் நின்று கொண்டிருந்தான்.

ஊருக்குள்ளும் அரவம் ஓய்ந்திருந்தது. சாமியாடியும் சேரிப் பெரியவர்களும் சாமகால பூஜைக்கான ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். மேளக்காரர்கள் சாமக் கொடைக்குச் சுருதி ஏற்றிக் கொள்ள ஊர் மந்தைக்குப் போனார்கள்.

மினிசாமியும், ஓசேப்பும் ஊரணிக் கரையைத் தாண்டி பாழ் மண்டபத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் போது அவர்கள் அருக்காணியைச் சந்தித்துக் கொண்டார்கள்

ஒசேப்பைக் கண்டதும், அவனை ஏறிட்டுப் பார்த்த அருக்காணி,

"இது எப்ப வந்துச்சு மச்சான்" மினிசாமியைப் பார்த்துக் கேட்டாள் மினிசாமி ஒரு வகையில் அவளுக்கு மச்சான் முறை.

ஒசேப்பு ஒன்றும் பேசாமல் மௌனமாக அவள் அழகை ரசித்த வண்ணம் நின்றிருந்தான். அவள் அம்மன் கொடைக்கு ஏனைய சேரிப் பெண்களைப் போன்று கோடி கண்டாங்கிச் சேலை உடுத்தியிருந்தாள். கள் மப்பு அவனைத் தலை கிறங்க வைத்திருந்தது. ஆனாலும் அவன் நிதானம் தவறுவது கிடையாது.

"நாதா வரச் சொன்னன் கொடையும் அதுவுமா நாக்குச்செத்துக்கெடக்குவுன்னான் மனிசன் நல்லது கெட்டது சாப்பிட்டுப் போவட்டுமேன்னு வரச் சொன்னன்"

அவன் இப்படிச் சொன்னதும் ஒசேப்பை மேலும் கீழுமாகப் பார்த்த அருக்காணி

"உப்ப இதெல்லாம் பெரியதலைவரா பூட்டுது. கண்ணு தெரியவா போவுது மச்சான்" முறுவல் செய்தபடி கேலி பேசவும் ஒசேப்புக்குக் கோவம் வந்தது.

"இந்தா பாரு மினிசாமி அப்படியெல்லாம் சாடை பேசப்படாது. அவன் அவன் நெஞ்சுக்குள்ளே ஆயிரம் ஆசையப் பூட்டி வெச்சுக்கிட்டு வெளிய சொல்ல மாட்டாம புழுங்கிச் சாவுறது ஆருக்குத் தெரியும்."

ஒசேப்பு கண் சிவக்கத் தொண்டை கனக்கச் சொன்னான்.

அவன் பேசியது அருக்காணியின் மனதைப் பாதித்திருக்க வேண்டும்.

இடது கால் பெருவிரலால் நிலத்தைக் கீறியபடி நிலத்தையும், மினிசாமியவும் பார்த்தவண்ணம் நின்றிருந்த அருக்காணி

"கேக்க வேண்டியதை நேரடியாக கேக்க வேண்டியது தானே. என்னமோ சொலவடை சொன்ன தாட்டம் சாடை மாடையாகப் பேசுறது."

மினிசாமிக்கு அவர்கள் இருவருக்கும் உள்ள உறவும், உள்ளக் கிடக்கையும் தெரியும்.

"ஊர்க்கொடையும் அதுவுமா கூட்டம் கூடிரப்போவுது. மறைப்பா நிண்டு பேசுங்க" என்று அவர்கள் இருவரையும் தனிமையில் விட்டுவிட்டுச்சற்று தூரம் போன மினிசாமி.

"பேசிட்டு அப்படியே போயிராதே ரோசேப்பு. ராத்திரிக்குச் :ாப்பிட்டுப் போட்டுத்தான் போவணம்" என்று திரும்பி நின்று சொல்லிவிட்டுப் போனவன் ஏதோ தனக்குத் தெரிந்த தெம்மாங்குப்பாட்டைக் குரலெடுத்தும் பாடிய படியே சேரியைப் பார்த்து நடந்து போனான்.

ஓசேப்புக்குப் புளித்த கள் ஏப்பம் வந்தது.

"நீ என்ன குடிச்சிருக்கயா?" அருக்காணி கேட்ட போது, பதில் பேச முடியாமல் தலை குனிந்து அப்பாவியாக நின்று கொண்டிருந்தான். அவனிடம் இவ்வளவு உரிமை எடுத்துக் கொண்டு அவனைக் கண்டித்தது அவனுக்கு உள்ளூற மகிழ்ச்சியாக இருந்தது. இருந்தாலும் அவள் தான் செய்திருக்கும் தவறை தலைவர்களிடம் போட்டுக் கொடுத்துவிடுவாளோ என்று உள்ளூற பயம்.

அவனைப் பயமுறுத்துவது போல், கண்களை உருட்டி அவனைப் பார்த்தவண்ணம் நின்றிருந்த அருக்காணி,

"வா, ஒங்கிட்டே நொம்பவே பேச வேண்டியிருக்கு"

ஒக்களித்து நின்று மரங்கொத்திய பறவையைப் போன்று தலையை ஆட்டி, ஆட்டிப் பேசியவள் அவனைத் தாண்டி பாழடைந்து கிடக்கும் மண்டபத்தை நோக்கி நடந்தாள்

ஆட்டுக்குட்டியைப்போன்று, அவளைப் பின்பற்றி நடந்து போனான்

அந்த மண்டபம் நாயக்கர் காலத்தில், தாடிக் கொம்பு அழகர், அபிராமி அம்மனைப் பார்ப்பதற்காகப் பிரயாணப்பட்டு வரும்போது, தங்கி இளைப்பாறிச் செல்வதற்காகக் கட்டப்பட்ட மண்டபம். இப்போது அது பாழடைந்து கிடக்கிறது.

கழனிகளில் செழித்துக் கொழுத்து வளர்ந்திருக்கும் சோளப் பயிர்களின் சிரசை வருடிப்பாய்ந்து வரும் மென்காற்று பசுமை கலந்த நறுமணத்தை மண்டபத்தில் தெளித்துக் கொண்டிருக்கிறது. காற்றின் ஈரப்சை ஓசேப்பின் சூடேறிய உடலுக்கு இதமாக இருக்கிறது. கள்ளின் மப்போ என்னமோ இப்போது, அவளிடம் பேசுவதற்கான தெம்பு ஏற்பட்டிருப்பது போல் அவனுக்குத் தோன்றியது.

இப்போது திரும்பவும்., முத்தாலம்மன் கோவிலினின்று எழும் பறை மேளத்தின் ஒலியும் பெண்களின் குரவை ஒலியும் மாறி மாறி கேட்கத் தொடங்கிவிட்டன.

அவ்வளவு தைரியமாகப் பேசிய அருக்காணி மண்டபத்தை அடைந்ததும் மௌனமாகிப் போனாள். மண்டபத்தில் வேலைப் பாடமைந்த கல் தூணில் சாய்ந்து உட்காந்தவள் சூனியத்தையே வெறித்துப் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருக்கிறாள்.

அருக்காணி மௌனமாக உட்காந்திருப்தைப் பார்த்துப் பொறுமை இழந்த மட்டில்.

"நொம்ப எங்கிட்டே பேசணமின்டு கூட்டியாந்தே. பேசாம ஒக்காந்திருந்தா என்ன அருத்தம்" ஓசேப்பு கேட்டான்.

மண்டபத்தை ஒட்டி வானுற வளர்ந்து கிளைபரப்பி நிற்கும் அரச மரத்தில் இரவைக் கழிப்பதற்காக வந்தடையும் பட்சி ஜாலங்களின் ஓலம், பறையோசையவே மங்க வைப்பதாக இருந்தது.

அரச மரத்தில் வந்திறங்கும் நீர்ப் பறவைகளையே வெறித்துப் பார்த்தபடி உட்கார்ந்திருந்த அருக்காணி

"எங்க ஊட்டுலே எனக்குக் கல்லாணத்துக்குச் கோப்புக் கட்டிட்டு இருக்காவ"

சுரத்து இல்லாமல் சொன்னாள். அவள் பேச்சைக் கேட்டு மனம் பேதலித்துப் போன ஓசேப்பு ஒன்றும் புரியாத மட்டில் தனது விரக்தியை வெளிக்காட்டிக்காமல்

"நல்லசேதி தானே. எம்புட்டு நாளா ஒத்தையிலே அலையறது. மாப்பிள்ளே ஆறு" என்று கேட்கவும்

"இதச் சொல்றதுக் கோசுரம் தா, இந்த மண்டபத்துக்கு வந்தையாக்கும்" அவள் பேச்சில் ஆத்திரம் தொனித்தது.

அவளுள் அழுகை பீறிட்டது. "அருக்காணி. நா. உப்ப என்ன சொல்லிப் போட்டன். இப்படி அழுவுறே" அப்பாவியாக அவன் கேட்கவும்

"நா ஒரு ஊசமுண்டே. நா கெட்டுப் போனவ, அதாலெ தானே நீயெல்லாம் என்ன ஒதுக்கி வைக்கிறே. என் தலைமெழுத்து ஏதோ, மொண்டி நூக்கரையைப் பார்த்து நா வாக்கப்பட்டுட்டுப் போறேன்"

கேவிய படியே வடிந்த கண்ணீரை முந்தானையால் துடைத்துக் கொண்டாள்.

அவளது நெஞ்சின் ஆழத்தில் பாறையாக உறைந்து கிடந்த விபத்தின் உறுத்தலின் அவமானமும் ஆத்திரமும் இப்படி வெளிப்பட்ட போது மனம் பேதலித்துபோன ஓசேப்,.

"அருக்காணி. அதெல்லாம் மூஞ்சுபோன சொப்பனமாட்டம், இப்ப அத்தையெல்லாம் கிளற வேணாம். நீயா கெட்டுப் போவலை. அப்பாவி நம்ப பொண்டுகளுக்கு வந்த ஆபத்து ஒனக்கும் வந்திருக்கு அத்தையெல்லாம் மறந்திருண்ணு எத்தனை வாட்டி சொல்லியருக்கன்" ஓசேப்பு நிதானமாகச் சொன்னான்

"சும்மா ஒப்புக்குப் போசாதை. ஒனக்குள்ளாற ஒன்னைய அறியாமலேயே என்னப் பத்தி அய்யரவு. அதாலே தானே இத்தனை நாளா என்னைப் பாத்து ஒதுங்கிட்டுப் போறே. அல்லா ஆம்புளைகளும் அப்படித் தான் நீ மட்டும் என்னவாம்."

இருளில் அவள் கேவுவது மட்டும் துல்லியமாகக் கேட்டது. அவள் மனம் கசந்து அழுது மனப்பாரத்தைக்குறைத்துக் கொள்ளட்டும் என்பது போல், எதிர்க் கல்தூணில் சாய்ந்து உட்காந்திருந்த ஓசேப்பு அவள் அருகில் போய் உட்கார்ந்தான். அவள் கன்னங்களைத் தொட்டுக் கண்ணீரைத் துடைத்த போது எந்த விதமான சலனமும் இல்லாமல் மௌனமாக உட்காந்திருந்தாள்.

"அந்தச் சாதி கெட்ட துலுக்கப் பய ஒன்னையக் கெடுத்துப் போட்டாங்கிறதுக் கோசரம் நான் ஒன்னை ஒதுக்க மாட்டன் நீ எதையும் எங்கிட்டே மறைக்கலை. எந்தப் பொம்பளைக்கு அப்படி தகிரியம் வரும். இப்படி ஒக்கியமான பொம்பளை எனக்குக் குடுத்து வெச்சிருக்கணம்."

"நீ மட்டும் என்னெயக் காப்பாத்தலையானா என்னப் புதைச்ச எடத்தலே புல்லு முளைச்சிருக்கும். இந்த உசிரு நீ போட்ட பிச்சை. அது ஒனக்குத் தான் சொந்தம்

ஒம்மேலே நா, எம்புட்டு ஆசை வச்சிருக்கேங்கிறது என் நெஞ்சுக்கு மட்டும் தான் தெரியும் அருக்காணி. எம் மனசிலே நீ தான் நெறஞ்சிருக்கே"

அவன் அவளது கரங்களைப் பற்றிப் பிடித்து நெஞ்சில் வைத்தபோது அவள் உடல் புல்லரித்தது.

பெருமூச்செறிந்த படியே அவளைத் தனது நெஞ்சோடு அணைத்துக் கொண்டான்.

அவள் அவனது ஸ்பரிசத்தை வெறுக்கவில்லை. ஓசேப்பு இப்படிச் சொன்ன போது, இத்தனை ஆண்டு காலம் அவளது உள்ளில் கட்டித்துப் புழுத்துச் சீழ்கட்டிக்கிடந்த அவமான உணர்வு வெடித்துச் சிதறியது. அவளது பெண்மையின் வன்மம் கிளர்ந்து எழுந்தது

ஒசேப்பின் மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டு நெஞ்சுப் பாரம் தணியும் வரையில் மனம் கசந்து அழுதாள்.

அவள் அழுது ஓய்ந்த போது, ஒரு குழந்தையை வாரி எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டது மாதிரி அருக்காணியை மார்போடு இறுக்கி அணைத்துக்கொண்ட ஒசேப்பு

"அருக்காணி உம்மையச் சொல்லப் போனா ஒஞ் சம்மத்தைக் கேக்கறதுக் கோசரம் தான், சாமி கொடை பார்க்க வந்தன். ஒன்னயைக் கேட்டப்புறம் தான் அம்மளோட தலைவர்க்கிட்டே உண்மையைச் சொல்லி அம்மடி கல்யாணத்தை ஏற்பாடு பண்ணப் போரன். நீ அம்ம கல்யாணத்துக்குச் சம்மதிப்பையோ இல்லையோங்கிற பயம் தயக்கம் நா அசலூருக்காரன். அனாதை. அத்தலைஞ்சு போன பரதேசி." இப்படிச் சொல்லும் போதே அவன் உணர்ச்சி வயப்பட்டதால் குரலில் நடுக்கம் கண்டது.

"அய்யோ, அப்படிச் சொல்லாதே என் ராசா. நீ அனாதை கெடையாது. ஒன் அருக்காணியிருக்கா" என்று சொன்னவள் திடீரென்று வெறி கொண்ட மட்டில் அவனது கழுத்திலும் மார்பிலும் உதட்டிலும் மாறி மாறி முத்தங்கள் கெடுத்தாள் அவனது பிடரியையும் கழுத்தையும் பற்றிப் பிடித்து ஒரு குழந்தையைப் போன்று மயங்கிக் கிடந்தாள்.

கள்ளின் இலேசான கிறக்கத்தில் இருந்த ஒசேப்புக்கு பெண்ணின் நெருக்கமும் அவளது உடம்பில் ஊறிய வியர்வையின் நாற்றமும் கூந்தலில் சொருகிய மல்லிகை மலரின் நறுமணமும் கலந்த வாசம் ஒசேப்பைக் கிறக்கத்தில் ஆழ்த்தியது. அவன் தன்னை மறந்தான். அவனது ஆண்மை விழித்துக் கொண்டது.

அவர்களுக்கிடையில் இத்தனை ஆண்டு காலம் இருந்த கற்பனையான மதில் உடைந்து சிதறிப் போனது. அவன் அவளை வாரியணைத்துக் கொண்டான். அவளோ முயங்கிக் கிறங்கி மயங்கி அவனோடு இணைந்தாள்.

அந்த அமாவாசையை ஒத்த இருளில், இரண்டு மனித ஜீவன்களின் வெப்பம் கலந்த பெரு மூச்சுக்கள், அழகுருக்கான அந்தப் பாழ் மண்டபத்தில் வெண் சாமரம் வீசிக்கொண்டிருந்த ஈரம் கலந்த மென்காற்றுடன் கலந்து மறைந்தது.

●

அவர்கள் இருவரும் தங்களை மறந்த நிலையில் அந்த பாழ் மண்டபத்தை எவ்வளவு நேரம் நிறைத்துக் கிடந்தார்களோ தெரியாது. அம்மன் கோவிலினின்றும் எழும் உச்சிக் கால பூஜைக்கான உடுக்கையின் ஒலி அருக்காணியைக் கண்மலரச் செய்தது.

கலைந்து கிடந்த கண்டாங்கிச் சேலையையும் அவிழ்ந்து அலங்கோலமாகக் கிடக்கும் கூந்தலையும் அள்ளி முடிந்து ஓசேப்பைப் பார்க்கிறாள். அவனோ ஒரு குழந்தையைப் போல் நித்திரையில் ஆழ்ந்திருக்கிறான்.

அவனது நித்திரையைக் கலைக்க அவள் விரும்பவில்லை. வானத்தை அண்ணாந்து பார்க்கிறாள். வனப்பரப்போ இருளடைந்து கிடக்கிறது.

திரும்பவும் ஓசேப்பைப் பார்க்கிறாள். இனி என்றென்றைக்கும் அவன் அவளுடையவன். மனநிறைவுடன் சேரியைப் பார்த்து, மோகினியைப் போன்று நடந்து போகிறாள். ஊரே, முத்தாலம்மன் சன்னதியில் கூடிக் கிடக்கிறது.

குடிசைக்குப் போன போது, வழக்கம் போல் குடிசைப் படல் திறந்து கிடந்தது. ஓசேப்புடன் முயங்கிக் கிடந்த இன்ப உணர்வு உடலெங்கும் நிறைந்து நிற்க, முந்தானையை விரித்து அருக்காணிதலை சாய்த்துத் தன்னை மறந்து தூங்கிப் போனாள்.

●

ஆழ்ந்த நித்திரையில் இருந்த அருக்காணி, உடுக்கையினுடையவும், உறுமி மேளத்தினுடையவும் ஒலியைக் கேட்டுத் திடுக்கிட்டுக் கண் விழித்தாள்.

வாசலில் பூசாரி மூக்கன், தலையில் கரகமும், இடுப்பில் கச்சையும், காலில் சலங்கையுமாக நின்று கொண்டிருக்கிறான்.

அல்லி அவனது பாதங்களில் தண்ணீர் ஊற்றிப் பாத பூஜை செய்கிறாள். ஆண்டிச் சாம்பான் கை கட்டி வாய் புதைத்து, ஒரு அடிமை போல் சாமியாடியின் முன்னால் நிற்கிறான்.

சேரிப் பெரியவர்களும், பெண்களும் பக்தி சிரத்தையுடன் பூசாரியின் பின்னால் நின்று கொண்டிருக்கின்றனர்.

பூசாரிக்குத் திரும்பவும் அருள் பிறக்கிறது.

வெட்டுண்ட மிருகம் போல் கூச்சல் போடவும், பம்பையும், பறைமேளமும் உடுக்கையும் எல்லாம் ஜீவனற்றது போல ஒடுங்கிப் போகின்றன.

"அடே, ஆண்டிச்சாம்பான்" உத்தரவு போடுவது போல் சாமியாடி கர்ஜிக்கிறான்.

"உத்தரவு தாயே" தலை வேட்டியை இடுப்பில் இறக்கிக் கட்டியவாறு ஆண்டி நிற்கிறான்.

"ஆண்டி, எனக்கு வாரிசு வேணம்டா. ஆத்தா இறங்கி அருள் வாக்குச் சொல்ல வாரிசு வேணம். அதாண்டா ஒன் வாசல் தேடி ஆத்தா வந்திருக்கா"

ஊர் ஜனமே மௌனமாகி ஆத்தாளது அருள் வாக்குக் கேட்க நிற்கிறது.

"அடே, ஒம்மவ அருக்காணிய மூக்கனுக்கு மூணாம்தாரமாக் கொடுக்கணம்டா. அவ வவுத்து வாரிசுலே தாண்ட ஆத்தா இறங்கப் போறா. அருள் வாக்குச் சொல்லப்போரா

இது ஆத்தா வாக்கு. உத்தரவை மீறினா இந்தச் சேரியவே ஆத்தா அழிச்சுப் போடுவா"

பூசாரி வாக்குச் சொன்னதைக் கேட்டதும், அருக்காணிக்கு தான் கண்ட கனவெல்லாம் கற்பனையாகச் சுக்கு நூறாகச் சிதறி சிதையுண்டது போன்ற பரிதவிப்பு.

தலை சுற்றிக் கொண்டு வந்தது, மயங்கித் தரையில் சாய்ந்தாள்.

●

21

பள்ளபட்டிச் சேரியில் நடைபெற்ற சம்பவத்துக்குப் பிறகு சண்டியர் சந்தனத் தேவன் கடந்த ஒரு மாத காலமாக வீடே கதி என்று முடங்கிப் போனான்.

தனிக்காட்டு ராஜாவாகத் தட்டிக் கேட்க ஆளில்லாமல் ராஜரீகம் நடத்திய சண்டியர் தனக்கேற்பட்ட தோல்வியையும், அவமானத்தையும் தாங்கிக் கொள்ள மாட்டாமல், மதம் கொண்ட யானையைப் போல, கையில் கிடைத்ததையெல்லாம் துவம்சம் செய்தவண்ணம் அலைந்தவன் திடீரென்று மௌனமாகிப் போனான்.

மகனிடம் காணப்பட்ட இந்தத் திடீர் மாறுதலைக் கண்டு விருமாயிக் கிழவி பயந்து போனாள். இப்படி அவன் மௌனமாகிப் போனான் என்றால், படுபயங்கரமான பாதகச் செயலைச் செய்வதற்காக மனதுக்குள்ளேயே திட்டம் போடுகிறான் என்பது அவளது அனுபவம்.

"ஏலே, அய்யா நடந்தது நடந்து போச்சுது. அம்ம சனங்களுக்கு உப்படி நடப்பதெல்லாம் சகஜம்டா. ஆனை வம்மம் வச்ச மாதிரி. மனசிலே வச்சிட்டு ஏதாச்சுப் பாதரவைப் பண்ணிராதலே. ஆத்தாளுக்கு ஆதரவா நாதியில்லேடா. அந்த முண்டையும் அம்ம வுட்டுட்டுப் போயிட்டா" என்று கிழவி கெஞ்சாத குறையாகக் கேட்ட போதும் கூட, சாதாரணமாகச் சிறி விழும் சந்தனம் மண்ணாக மௌனமாகிப் போனான்.

தள்ளாத வயதில் அவளுக்கு ஆதரவு சந்தனத் தேவன் மட்டும் தான் இருக்கிறான்.

முத்துப் பேச்சி தாலியை அறுத்து வீதியில் விட்டெறிந்து விட்டுப் போனவள் தான் கோபம் தாபம்

என்று வீட்டை விட்டுப் போன மனைவி முத்துப் பேச்சி என்ன ஆளாள் என்று கூட கவலைப்படாமல், அவளைப் பற்றி அக்கறையே காட்டாமல் அவன் உட்கார்ந்திருப்பது, கிழவியின் பீதியையும், கவலையையும் அதிகப்படுத்தியது.

மகனது உள்ளக் கிடக்கையைத் தெரிந்து கொள்ளும் நோக்கத்தில்,

"வம்மம் புடிச்ச முண்டே, நீ போயி அவளெக் கூட்டியார வேணமின்டு அவுஹ அப்பன் ஊட்டுலே ஒக்காந்திருப்பாடா. அப்பே ஒரு நடை போயி அந்த மூதேவிய இழுத்திட்டு வாடா, அத்தாளால அடுக்களை வெக்கையத் தாங்க ஏலலை. அங்க போயி நிண்டாலே தலை கிறங்கிட்டு வருது" என்று அவள் தனது ஏலாமையைச் சொல்லி மகனிடம் வேண்டுகோள் வைத்த போது

"நோழி மவ, மனம் ஒப்பியா எம் பின்னாலே வந்தா. அவ மனசு பூரா அவ அம்மான் மவன் தானே இருக்கான். அவ ஆசைப்படி நடக்கட்டும். ஆத்தா என்னை நச்சரிக்காதை" என்று சொல்லிவிட்டு, வீட்டின் முகட்டைப் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தவன்

"அவ, எனக்கு வாக்கப்பட்டு என்ன சொவத்தைக் கண்டா ஆத்தா, அவ ஒரு போக்கிரிப் பயலுக்கும் பொண்டாட்டியா இருக்கப் பிரியப்படலை" என்று மனம் ஒடிந்த மட்டில் சொன்னவன் முன் கட்டில் போய் உட்கார்ந்து கொண்டான்.

மகன் இப்படி ஒரு முற்றும் துறந்த முனிவனைப் போல பேசியது விருமாயிக் கிழவிக்கு வியப்பாக இருந்தது.

முத்துப் பேச்சி அவனை எவ்வளவு வெறுத்த போதும், சந்தனத் தேவன் அவள் மேல் உயிரையே வைத்திருந்தான். அவள் பேரில் கொண்டிருந்த தீராத மோகம் காரணமாகத்தான், அரசகுமாரன் சிறை எடுத்தது போல் அவளைக் கடத்திக் கொண்டு வந்து திருமணம் செய்து கொண்டான், முத்துப் பேச்சியை யாரும் குறை சொல்லச் சகிக்க மாட்டான். மருமகளைப் பற்றி அவள் ஏதாவது குறை சொல்ல வாயெடுத்தால் விருமாயிக்கு அடியும், உதையும் கிடைக்கும். இவ்வாறு தான் கட்டியவள் மீது உயிரையே வைத்திருந்த சந்தனம் சுரத்தும், அக்கறையுமில்லாமல் பேசிய போது

"ஏலே, ஒனக்குக் கோட்டியா புடிச்சிருக்கு? வம்சத்துப் பேரு சொலல் வாரீசைப் பெத்துத் தர வேண்டியவடா. ஒங்கப்பன் கறி பொறுக்கி வம்சம். பரந்து ஆலமரமா ஒசந்து நிக்க அம்ம வம்சத்துக்கு வாரீசு வேணம்டா" என்று உரிமையுடன் திரும்பவும் கேட்டபோது,

"ஆமாத்தா, பெரிய ராசா வமிசம், பொச கெட்டுப் பேசாதை சொத்து பத்தைக் காப்பாத்த வாரீசு வேணும். இந்த திருட்டுப் பய குடும்பத்துக்கு வாரீசே இல்லையானா ஒலகமே அழிஞ்சு போயிரப் போவுது" என்று சொல்லி விட்டுத் திண்ணையில் உட்கார்ந்தவாறே, எதையோ நினைத்துக் கொண்டவனாக அடிக்கடி பெருமூச்சுவிட்டுக் கொண்டான்.

சாதாரணமாக, ஏற்படும் தோல்விகளையும் தாக்குதல்களையும், பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் மறுநாளே தனது மாமூல் வேலைகளைத் தொடங்கிவிடும் சந்தனத் தேவனிடத்தில் காணப்படும் எதிர்பாராத இந்த மாற்றம் விருமாயிக் கிழவியை மட்டுமல்ல. அவனுடைய சகாக்களுக்கும், அவனுடன் சேர்ந்து போக்கிரிகளுக்கும் பீதியை ஏற்படுத்திருந்தது.

சந்தனத்தேவன் வீட்டில் முடங்கிக் கிடந்ததைப் பார்த்த ஒத்தை வீட்டு ராசமாணிக்கம் வந்து, ஆடு பிடிப்பதற்காக இரண்டு மூன்று இரவுகளில் நச்சரித்த போதும், சந்தனம் முற்றாக நிராகரித்து விட்டான்.

சந்தனத்துக்குக் கட்டப் பஞ்சாயத்திலும், அடியாள் பணியிலும் போதிய வருமானம் வந்த போதும். தனது சேக்காளிகளுடன் சேர்ந்து இரவு வேளைகளில் ஊர்விட்டு ஊர் போய், ஆடுகளைக் கடத்திக் கொண்டு வருவதும், அதன் மூலம் துப்புக் கூலி வாங்குவதும் அவனுக்குப் பெரிய பொழுது போக்கு. அப்படித் திருடிக் கொண்டு வரும் ஆடுகளில் கொழுத்த ஆடாகப் பார்த்து இரவோடு இரவாகக் கசாப்புச் செய்து, ஆட்டுக்கறியும், பட்டைச் சாராயத்தையும் சேர்த்துக் குடித்துவிட்டுக் கும்மாளம் போடுவதில் சந்தனத்துக்கு மிக்கப் பிரியம். எப்போதும், வெட்டுக்குத்து என்று அலையும் சந்தனம் சகலத்தையும் மறந்துவிட்டு நண்பர்களுடன் மகிழ்ச்சியாக இருக்கும் காலம் அப்படிப்பட்ட இரவுகள் தான். என்ன தலை போகிற வேலையாக இருந்தாலும், அதையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, குறைந்தது மாதம் ஒரு தடவையாவது ஆடு

திருடப் போகவில்லையென்றால் சந்தனத்துக்கு நித்திரை கொள்ளாது.

அப்படிப்பட்ட சந்தனம் வீடே கதி என்று முடங்கிப் போனான். ஆடு திருடும் களவு வேலையில் அவனைத் திரும்பவும் ஈடுபட வைப்பதற்காக ஒத்தை வீட்டு ராசமாணிக்கம் சந்தனத்துக்கு மிகவும் பிடித்தமான சாராயத்தையும், வறுத்த கறியையும், அவன் முன் கொண்டு வந்து படைத்த ராசமாணிக்கம் ஆடுபிடிக்கும் விளையாட்டுக்கு வருந்தி அழைத்தபோது, சந்தனம் எரிச்சலுடன் மதுப்புட்டிகளை உடைத்தெறிந்து, மாமிசத்தைச் சிதறி வீசியெறிந்தான். பிறகு, மௌனமாகிப் போனான். வழக்கமாக அவன் முகத்தில் வெடித்த கோபக் கனலும், தூஷண வார்த்தைகளும் வெளிப்படவில்லை. இது விருமாயியின் உள்ளத்தைக் கலங்கச் செய்தது. மாறாக, ராசமாணிக்கத்தையும் அவனது நண்பர்களையும் போகச் சொல்லிவிட்டு வாசலில் போய் திண்ணையில் உட்கார்ந்து, ஆகாயத்தை வெறித்துப் பார்த்து உட்கார்ந்து விடுவான். விருமாயிக் கிழவியை ஏறிட்டுப் பார்ப்பது கூடக் கிடையாது, அவள் வலிந்து போய் அவனிடம் பேச்சுக் கொடுத்தாலும் பேசுவது கிடையாது.

வேளா வேளைக்குக் கூட்ச் சாப்பிடுவது கிடையாது. அவனைத் தேடிவரும் நபர்களோடு பேசுவதும் கிடையாது.

சந்தனத்தேவன் வீட்டோடு முடங்கிக் கிடந்த காரணத்தால், அடுப்பில் பூஞ்சைக்காளான் கால் பரப்பிப் பூனை படுக்கும் அளவுக்கு வறுமையின் நிழல் வீட்டில் பரவத் தொடங்கியது. உழைக்காமல் வந்த செல்வத்தால் ஊனை வளர்த்த விருமாயிக் கிழவிக்கு இப்போது வறுமையின் கொடுமை புரியலாயிற்று. எனவே, ஊனமாகிப் போனமட்டில் முடங்கிக் கிடந்த தனது செல்ல மகனையும், தன்னையும் காப்பாற்றிக் கொள்ள, தள்ளாத வயதில் கூலிக்கோ, கொத்துக்கோ, போக வேண்டும் என்று விருமாயி முடிவுக்கு வந்த போது தான், மாதக் கடைசியில் சந்தனத்தேவன் எரவரத்தில் ஒய்வெடுத்துக் கொண்டிருந்த சூரிக் கத்தியை எடுத்து இடுப்பில் சொருகிக் கொண்டு வீட்டை விட்டு வீதியிலே நடந்தான்.

இப்படி, சூரிக்கத்தியும், கையுமாக மகன் சந்தனம் பட்டப் பகலில் வேட்டைக்குக் கிளம்பிய மாதிரி வீட்டை விட்டு வெளியேறியதை விருமாயி பார்த்தது கிடையாது.

மகன் வன்மம் தீர்க்கக் கிளம்பி விட்டான் என்று கிழவி பயந்தாள்.

பள்ள பட்டிச் சேரியில் நிச்சயம் கொலை பழி நடக்கப் போகிறது என்று விருமாயி அச்சப்பட்டாள். கடந்த ஒருமாத காலமாக அவனது உள்ளத்தை அரித்துக் கொண்டிருந்த அவமான உணர்வு இப்போது விஸ்வரூபம் பெற்றிருக்கிறது. மகனை மீண்டும் கொலைகாரனாகப் பார்க்கப் போகிறோம் என்று அச்சத்தோடு விருமாயி தெருவுக்கு வந்து, தலையில் கைவைத்துத் திண்ணையில் உட்கார்ந்து விட்டாள்.

என்ன ஆகுமோ, என்ன பாதகம் நடக்கப் போகிறதோ என்கிற பீதியுடனும் உள்ளக் கொதிப்புடன் விருமாயிக் கிழவி வெளித் திண்ணையில் எவ்வளவு நேரம் காத்துக் கிடந்தாளோ தெரியாது. உச்சிப் போது தாண்டி சூரியன் மேற்கு நோக்கி நகர்ந்து கொண்டிருக்கையில், சந்தனத்தேவன், கையில் இரண்டு வெள்ளாட்டன் கிடாய் தலையும், காலும் தலை வேட்டியில் அரிசியும், அரை மசாலாச் சாமான்களுடன் வீட்டுப் படியேறி வந்தான்.

பட்டப் பகலிலேயே, மகன் ஆட்டைத் திருடி, தலையைக் கொய்து கொண்டு வந்திருப்பதைக் கண்டு விருமாயி திகைத்துப் போனாள்.

"ஏலே பட்டப் பகல்லே எந்த ஊருலே கன்னம் வச்சு ஆட்டைத் திருடிட்டு வந்து நிக்கே" என்று கேட்பது போல் அவள் மகனைச் சந்தேகம் தொனிக்கப் பார்த்த போது சந்தனத்தேவன் அவளைப் பார்த்துச் சிரித்தான்.

"ஆத்தா, இது என் ஒழப்புலே வந்த கூலி. சந்தேகப் படாதை, ஒம்மவன் ஒழைச்சுக் கழைச்சு வாங்கியாந்தது" என்று சொன்னபோது

"யப்பே, ஒனக்குத்தான் ஒழப்புண்டா என்னண்டே தெரியாதப்பே. நீ எப்படிரா ஒழப்பே. அப்பே, ஆத்தாளை ஏமாத்தாதை உள்ளதைச் சொல்லு, மறைக்க மாண்டாம் ஒன்னைப் பத்தி ஆருட்டேயும் ஆத்தா ஆவுலாதி சொல்ல மாட்டா" உண்மையைத் தெரிந்து கொள்வதற்காக விருமாயிக் கிழவி மீண்டும் கேட்டபோது, கடந்த ஒரு மாதகாலமாக அவனது உள்ளத்தின் ஆழத்தில் மறைந்து கிடந்த மனப் போராட்டச் சிக்கலினின்றும் மீண்டுவிட்ட மகிழ்ச்சியின் மலர்ச்சி அவனது முகத்தில் தென்பட்டது.

"ஆத்தா ஒம்மவன் சந்தனத்தேவன் உனிமே சண்டியர் கொடையாது. ஒழச்சுச் சம்பாதிச்சு ஒன்னையக் காப்பாத்தப் போரான்" என்று அவள் கழுத்தைக் கட்டிக் குழந்தையைப் போல் சொன்னான்.

கிழவிக்கு ஒன்றும் புரியவில்லை. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்ட மாதிரி இருந்தது. மூன்று தலை முறைகளாக, கொள்ளை திருட்டு என்று பெயர் எடுத்த கள்ளர் குடும்பத்தில் நடைபெறாத சம்பவம்.

"அப்பே, நீ சொல்றது நெசந்தானா மவனே" தன் பஞ்சடைந்த கண்களால் மகனைப் பார்த்துக் கேட்டாள். அவளது நயனங்களில் நீர் முட்டி நின்றது.

"நெசந்தா ஆத்தா. மெய்யாலுமே. நா இனிமே ஒழைச்சுத்தா கஞ்சி குடிக்கப் போரன்" என்று சொல்லிவிட்டுத் தன்னை வியப்புடன் பார்க்கும் விருமாயிக் கிழவியை ஊடுருவிப் பார்த்தன்.

"அம்ம சீயான் தேவரு தான் என் கண்ணைத் தெறந்தாரு. கசாய்க் கடையிலே இருந்து இந்த கடாய் தலைவளையும் கால்வளையும் சம்பளத்துக் கோகரம் எடுத்துட்டுப் போவச் சொன்னாரு மாராசன்" என்று சொன்னபோது தனது ஜென்ம விரோதியாகக் கருதும் சீயான் தேவரை வியந்து பேசியது அவளுக்கு ஆச்சரியமாகப் பட்டது.

சீயான் என்றும் அப்பச்சி என்றும் அழைக்கப்படும் சங்கர பாண்டித் தேவரை சந்தனத்தேவனுக்கும், அவனது சகாக்களுக்கும் அறவே பிடிக்காது. ஊருக்குள்ளும், வெளியிலும் அவர்கள் நடத்தும் சட்ட விரோத நடவடிக்கைகள் பற்றியெல்லாம் போலீசுக்குத் துப்புச் சொல்லுபவர் சீயான் தேவர் என்பது அவர்களுடைய ஊகம். தன் இன மக்களையே காட்டிக் கொடுக்கும் இவனுரோகி கோடாரிக் காம்பு என்று, சந்தனத் தேவன் போன்ற களவாணிகள் சீயான் தேவரை வெறுத்தார்கள்.

சீயான் தேவருக்கு ஊருக்குள்ளும் சமுதாயத்தில் பெரிய மனிதர்கள் மத்தியிலும் அவருக்கு இருக்கும் செல்வாக்கு காரணமாக அப்பச்சித் தேவரை அவர்கள் விட்டு வைத்திருக்கிறார்கள். இல்லையென்றால் இதற்குள் கொலை செய்திருப்பார்கள். களவாணிக் கூட்டம் அவர் மீது

எவ்வளவு தான் வெறுப்புக் கொண்டிருந்த போதும் அப்பச்சித் தேவர் மட்டும், அவர்களுக்கு உபதேசம் செய்வதையும், திருந்தி வாழ்வதற்கான புத்திமதி சொல்வதையும் விட்டு விடுவதில்லை. சந்தனம் அவர் கண்ணில் படும் போதெல்லாம்,

"ஏய், சந்தனம் இந்தப் பொழப்பெல்லாம் ஒரு பொழப்பாலே. அடுத்தவன் காசுலே ஒடம்ப வளக்காதடா. இந்தச் சூத்தப் பொழப்பை உட்டுக் கடாசிட்டு ஒழைச்சுச் சாப்பிடுங்கடா. சல்லிக்காசு கிடைச்சாலும் ஒன்னோட உழைப்புலே வந்த காசா இருக்கணம்டா" என்று சொல்லும் போது சந்தனத்துக்குக் காரம் வாய்ந்த கொச்சு மிளகாயைக் கடித்துவிட்ட எரிச்சலும் கோபமும் ஏற்படும்.

"ஒக்காளி, நீயெல்லாம் புத்திசொல்ல வந்திட்டே ஏலாத பொச கெட்ட கெழட்டுப் பய. கள்ளனைப் பாத்து என்ன சொல்றே ஒனக்கு ஒரு நாளைக்கு இருக்குடா மாப்ளே" என்று மனதுக்குள்ளேயே வர்மித்த வண்ணம் காக்காய் பார்வை பார்த்துவிட்டுப் போய்விடுவான்.

சீயான் என்கிற அப்பச்சித் தேவருக்கு ஏகப்பட்ட வயசு. அவரது உண்மையான பெயர் சங்கர பாண்டித் தேவர். வயது காரணமாக அவரை எல்லோரும் சீயான் என்று தான் அழைப்பார்கள். மூன்று தலைமுறையைக் கடந்து வாழும். சங்கர பாண்டித்தேவருக்கு அவரது உண்மையான பெயர் காலகதியில் மறைந்து சீயான் அல்லது அப்பச்சி என்கிற பட்டப் பெயரே நிலைத்துப் போயிற்று.

அவரது பேரன் பேத்திகளைக் கண்டுவிட்ட போதும் மார்க்கண்டேயனைப் போன்று சீயானுக்கு என்றும் பதினாறு வயது. தலையில் ஒரு இடத்தில் கூட நரையைக் காண முடியாது. முகத்தில் வயதின் முதிர்ச்சியைக் காட்டும் ஒரு சுருக்கத்தைக் கூட பார்க்க முடியாது.

அவரது வயதை யாராவது குறும்புக்கார குமரிப்பெண் கேட்டுவிட்டால் போதும், வஞ்சகமில்லாமல் வாய்விட்டுச் சிரிப்பார்.

"அல்லாத்துக்கும் என்னோட ஒழைப்புத் தாம்விளா ஒழச்சிட்டே இருந்தா நோய் நொடி அண்டாது எமன் என் கிட்ட வரப் பயப்படுவான் விளா" என்று கிண்டலாகப் பேசுவார்.

சீயான் தேவர், தனது இளம் வட்ட வயசில், குற்ற பரம்பரைச் சட்டத்தின் கொடுமையை அனுபவித்தவர். அநியாயமான சட்டத்தை எதிர்த்து நடை பெற்ற போராட்டத்தில் சிறை சென்றவரும் கூட எனவேதான் தன் இனத்து வாலிபர்கள் கிரிமினல்களாகச் சித்தரிக்கப்படுவதையும் அவர்கள் குற்றவாளிகளாக அலைவதையும் அவர் வெறுத்தார்.

நடுத்தெருவில் இருக்கும் சீயான் தேவரின் சுசாய்க்கடை, அந்த வட்டாரத்திலேயே பிரபலமான கடை. வேறு சில மாமிச வியாபாரிகளைப் போன்று, வெள்ளாட்டுக்கறி என்ற பெயரில் செம்மறியாட்டுக்கறியைக் கலப்படம் செய்யமாட்டார். நாணயமான வியாபாரம், நியாயமான விலை என்பதால், கடையில் கூட்டம் நிரம்பி வழியும். கூட்டம் அலைமோதுகிறது என்பதற்காக அளவுக்கு அதிகமாக ஆடுகளையும் பலியிட்டு வியாபாரம் செய்வதில்லை. வெகுகாலையில் வியாபாரத்தை ஆரம்பிக்கும் சீயான், பெண்கள் கழனிக்குப் போவதற்கு முன்னமேயே கடையை மூடிவிடுவார். அதற்குப் பிறகு, தனது மாமூல் உடையான கதர் ஜிப்பாவும், சிவப்புத் துண்டுமாகச் சமூகத் தொண்டு செய்யப் புறப்பட்டு விடுவார். சீயான் என்றைக்குமே வெளிப்படையாக அரசியல் பேசுவது கிடையாது. எவ்வளவு பெரிய குற்றவாளியையும் திருத்திவிடலாம் என்பது அவரது நம்பிக்கை. எனவே சந்தனத்தையும் திருத்திவிடலாம் என்கிற நம்பிக்கை, அது வீண் போகவில்லை.

சந்தனத்தேவன் சொன்ன கதையை விருமாயிக் கிழவியால் நம்ப முடியவில்லை. ஜென்மப் பகையாளியாகக் கருதிய கிழவன் அவனுக்கு என்ன உதவி செய்திருக்க முடியும்.

"அப்பே, உள்ளதைச் சொல்லு சாமி. எந்த ஊரிலேடா களவாண்ட ? பட்டப்பகல்லேயே கன்னம் வச்சிருக்கே. போலீசு உன்னைத் தேடி வந்திருமேடா மவனே" என்று அவள் அங்கலாய்த்த போது,

"அட செருக்கி மவளே, ஒன் சத்தியமாக சொல்லுதன் நான் களவாண்டிட்டு வரலை. சீயான் தேவருதான், சம்பளத்துக் கோசுரம் எடுத்திட்டுப் போடாண்டு கொடுத்தாரு"

அவள் தலையில் அடித்துச் சத்தியம் செய்தான்.

"அது எப்படியெண்டு கேக்கறையா" என்றவன்

"கொள்ளத்தூரம் அவரோட நடந்து நடந்து நாக்கு வரண்டு போச்சுது. தாவமா இருக்கு தண்ணி தர்ரையா" என்று கேட்டான்.

கிழவி அடுக்களைக்குப் போய் நீச்சத் தண்ணி எடுத்துக் கொண்டு வந்தபோது அவளுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. சங்கர பாண்டித் தேவர், வெளித்திண்ணையில் சந்தனத்துடன் அமர்ந்திருக்கிறார். அவளைப் பார்த்ததும் "விருமாயி உப்பத்தான் ஒம்மவனுக்கு நல்ல புத்தி வந்திருக்கு. ஒம் புருஷனாட்டம் கெட்டுப் போவ உட்டிராதை" என்றார்.

மாராப்பைச் சரி செய்தபடி அவர் முன்னால் போய் நின்ற விருமாயி. வெகு நேரமாக ஒன்றும் பேசாமல் தரையைப் பார்த்து யோசனை செய்த வண்ணம் நின்றிருந்தாள். பிறகு பெருமூச்சு விட்டவாறு அவரைப் பார்த்து

"இந்தத் தள்ளாத வயசுலே அவன் செயிலுக்குப் போனா நா நாதியத்து நடுத் தெருவுலே சாவணம். அந்தக் கதி வந்திரப்படாது. நா எதுக்கு எம்புள்ளெய கெடுத்திரப் போரன். ஒங்களால எம்புள்ளெக்கி ஆண்டவன் நல்ல புத்தியக் குடுத்தா அதுவே போதும் மக்சான்" என்ற போது,

"ஒம்மவன் ஆடுகளவாடப் போற எடத்துலே கத்துக்குட்ட வேலை அவன் தொழில் செய்ய ஒதவுது பாத்தியா" இப்படிச் சொல்லிவிட்டு சந்தனத்தேவனைப் பார்த்தபோது, வெட்கம் வந்தது போல் தலையைக் குனிந்து கொண்டான்.

ஆட்டின் தொடைப் பகுதியையும், குறுக்குப் பகுதியையும் சந்தனம் பிடித்துப் பார்த்த உடனேயே ஆடு எத்தனை வீசை இருக்கும் என்று திட்டமாகச் சொல்லிவிடுவான். அதில் ஒரு பவுண்டு கூடக் குறையாது. ஆடு திருடப் போகும் இரவுகளில் சந்தனம் சுற்றுக் கொண்ட பாடம். சந்தனம் கணிக்கும் எடையை வைத்ததுத்தான் களவாடிய ஆட்டுக்கு விலை நிர்ணயிக்கப்படும்.

தோல்வியால் துவண்டு போய் திக்குத் தெரியாமல் திகைத்துப் போன சந்தனத்தேவன் சீயான் தேவர் அவனுள்

நம்பிக்கை மூட்டி கசாய் கடைக்குப் போன போது, அவர்தான், மேட்டுப்பட்டி ஆட்டுச் சந்தைக்குக் கூட்டிப் போய், அவர் கொள்முதல் செய்யும் ஆடுகளின் எடையையும் ஆட்டின் வம்சத்தையும் அவனையே நிர்ணயம் செய்ய வைத்து விலை பேசி ஆடுகளை ஓட்டிவந்திருக்கிறார்.

"சும்மா சொல்லப்படாது விருமாயி, ஒம்மவன் ஆட்டோட எடையையும், விருத்தியவும் அம்புட்டுத் துல்லியமா சொல்லுதான். மேக்கொண்டு, ஆடு கொள்முதல் பண்ரதை ஒம்மவங்கிட்டேயே விட்டுட்டன் விருமாயி அவன் செஞ்ச வேலைக்குக் கூலி இண்ணெக்கி கிடாத்தலையத்தான் என்னால தரமுஞ்சுது" என்று சொல்லிவிட்டு மேல்கொண்டு அவள் பேசப் போவதைக் கூட கேட்காமல் எழுந்து நடந்து போனார்.

கிழவியால் எதையும் நிர்ணயம் செய்ய முடியவில்லை. தொண்டை கனத்து இறுகிப் போனது. தெருவில் நடந்துபோகும் சீயான் தேவரையும், மகனையும் மாறி மாறிப் பார்த்த வண்ணம் அங்கேயே அடித்து வைத்த சிலையாக நின்றிருந்தாள்.

●

22

நீதிமன்றங்களுக்குக் கிறிஸ்துமஸ் விடுமுறை.

வழக்குகள் சம்மந்தமான ஆவணங்களையும் பிரிவிக் கவுன்சில் வரையிலான நீதிமன்றங்களின் தீர்ப்புக்களையும் படித்துச் சலித்துப் போன சுந்தரேசய்யர், இது போன்ற விடுமுறை நாட்களில் ஊரிலேயே இருக்க மாட்டார்.

பெரும்பாலும் விடுமுறை நாட்களில் ஊட்டி கொடைக்கானல் என்று சுகவாசஸ்தலங்களுக்கு மனைவி அம்புஜத்தம்மாளையும் சங்கரனையும் அழைத்துக் கொண்டு ஓய்வெடுக்கப் போய்விடுவார்.

கோடை விடுமுறை காலங்களை மூத்த சகோதரர் ஜஸ்டிஸ் பரமசிவத்தின் குடும்பத்துடன் காஷ்மீர் ரிஷிகேஸ், சிம்லா என்று போய்விடுவதும் உண்டு.

இப்போது பிள்ளைகள் பெரியவர்களாகி விட்டதாலும், அவர்களுக்கென்று தனித்தனி அலுவல்கள், ஆசாபாசங்கள் இருப்பதாலும், குடும்ப சமேதராகச் சுகவாசஸ்தலங்களுக்குப் போய்விட்டு வருவது என்பது சாத்தியமற்ற ஒன்றாக ஆகிவிட்டது.

ஆனால் பெரியவர் ஜஸ்டிஸ் பரமசிவம் மட்டும், தலைபோகிற வேலையாக இருந்தாலும் ஒதுக்கி விட்டு கிறிஸ்துமஸ் விடுமுறையைக் கழிப்பதற்குக் கொடைக்கானல் வந்து குடும்பத்துக்குச் சொந்தமான பங்களாவில் தங்கிடுவார்

அப்படித் தங்கும் காலத்தில் தஞ்சாவூரில் மாங்குடி கிராமத்தில் இருக்கும் தங்களது பூர்வீக நிலங்களையும், டிரஸ்ட் சொத்துக்களையும், இதர சொத்துக்களையும் பராமரிப்பது சம்மந்தமாகச் சகோதரர் சுந்தரேச அய்யருடன் கலந்தாலோசித்து முடிவுகளை மேற்கொள்ளுவார்.

கோடைக்கானலில் தங்கும் நாட்களில் தனது மேல்நாட்டு நண்பர்களுடனும், சுந்தரேசய்யருடனும், இந்திய இலக்கியங்கள், இந்திய தத்துவ ஞானம் பற்றியெல்லாம் விவாதிப்பதுண்டு. அப்படி ஏற்படும் விவாதங்களின்போது ஒரு நீதிபதிக்குள்ள நடுநிலை உணர்வுடன் ஜஸ்டிஸ் பரமசிவம் வெளிப்படுத்தும் கருத்துக்கள் வியப்பூட்டுபவையாக இருப்பதோடு, மறுக்க முடியாதவையாக இருக்கும். ஜஸ்டிஸ் பரமசிவம் அவ்வப்போது, ஆங்கிலப் பத்திரிகைகளில் எழுதும், ஆய்வுப் பூர்வமான கட்டுரைகள் சனாதனிகளையும், பண்டிதர்களையும் பயமடையச் செய்திருந்தது. புராணங்களிலிருந்து அவர் தரும் ஆதாரங்களை அவர்களால் மறுக்க முடியவில்லை.

இந்தத் தடவை ஜஸ்டிஸ் பரமசிவம், குடும்பச் சொத்துக்களை நிர்வாகம் செய்வது சம்மந்தமாக எடுக்க வேண்டிய முடிவுகள் பற்றி எழுதியிருக்கும் கடிதத்தோடு, தான் பதிப்பிக்கப் போகும், ராமாயண ஆய்வு பற்றிய புத்தகத்தின் தட்டச்சுப் பிரதியையும், சுந்தரேச அய்யருக்கு அனுப்பி மூலநூற்களுடன் ஒப்பிட்டுப் பார்த்துச் சரி செய்து கொண்டுவரும்படி சுந்தரேச அய்யரைக் கேட்டிருந்தார். எனவே, செல்பில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும், வால்மீகி இராமாயணம், கம்பன் காவியம், பவபூதியின் உத்திர ராமசரிதம் மற்றும் சிலப்பதிகாரம் ஆகிய பதிப்புக்களையும் மேல்நாட்டு ஆய்வுகளையும் மீண்டும் படிப்பதற்காகவும், ஒப்பிட்டுப் பார்ப்பதற்காகவும் டீப்பாயில் எடுத்து அடுக்கி வைத்துவிட்டு, ஜஸ்டிஸ் பரமசிவம் எழுதியிருந்த கடிதத்தை எடுத்துப் படிக்கலானார்.

வழக்கத்திற்கு விரோதமாகக் குடும்பச் சொத்துக்கள் பற்றி ஜஸ்டிஸ் பரமசிவம் எழுதியிருக்கும் கடிதம் சம்மந்தமாக அவரால் எந்த முடிவுக்கும் வர முடியவில்லை. இரவு படுக்கைக்குப் போகும் முன்பு கடிதம் பற்றி,

அம்புஜத்தம்மாளிடம் பிரஸ்தாபித்தபோது, அவர் "பெரியவர் தீர்மானிச்சுட்டார். நாம என்ன மறுப்பா சொல்ல முடியும்" என்று பதில் சொல்லிவிட்டுப் பாயை விரித்துப் படுத்துக் கொண்டார்.

பரம்பரை பரம்பரையாக அவி பக்த குடும்ப வழியில் வந்த அம்புஜத்தம்மாளுக்குக் குடும்பத்தின் கர்த்தா என்ற முறையில் பெரியவர் பரமசிவம் அய்யர் சொல்வது தான் தேவவாக்கு. இன்றைக்கும் கூட, அவரிடம் நேரில் நின்று அம்புஜத்தம்மாள் பேசியது கிடையாது. ஜஸ்டிஸ் பரமசிவம் என்பதை விட, குடும்பத்தின் தலைவர் என்கிற முறையில் அம்புஜத்தம்மாளுக்கு அவர் மீது அவ்வளவு கடந்த மரியாதை, ஏன் பக்தி என்றே சொல்லலாம். அம்புஜத்திடம் அதற்கு மேல் அபிப்பிராயம் எதையும் எதிர் பார்க்க முடியாது.

"எதுக்கும் அம்பியை ஒரு வார்த்தை கேட்டுக் கோங்கோ. அவனும் என்ன சொல்லிவிடப் போரான். பெரியவர் சொன்னதை ஆமோதிக்கத்தான் போரான்."

படுக்கையினின்றும் எழுந்து உட்கார்ந்து, சுந்தரேசய்யரிடம் சொல்லிவிட்டுத் திரும்பவும் படுத்துக் கொண்டார்.

சுந்தரேசய்யர் தனது வக்கீல் படிப்பை முடித்ததும் சகோதரர் பரமசிவத்தின் ஆக்ஞைப்படி சொந்தக் கிராமமான மாங்குடியில் பண்ணை வேலைகளைக் கவனித்ததோடு குடும்பத்துக்குச் சொந்தமான டிரஸ்ட் சொத்துக்களையும் மேற்பார்வை செய்து கொண்டிருந்தார். திடீரென்று மதுரை வைத்திய நாதய்யரின் வேண்டுகோளுக்கிணங்க மதுரையில் வைத்திய நாதய்யருடன் சேர்ந்து வக்கீல் தொழில் நடத்தும் படி சகோதரர் பரமசிவத்தால் பணிக்கப்பட்டார். அதாவது தேசியவாதியான வைத்திய நாதய்யர், போராட்டங்களில் ஈடுபட்டுச் சிறைச்சாலைக்கு அடிக்கடி போக வேண்டியிருப்பதாலும் அவரது வக்கீல் ஆபீஸ் வேலைகளையும், வழக்குகளையும் திறம்பட நடத்த நம்பிக்கையான நபர் வேண்டும் என்பதால், பரமசிவத்தால்

சுந்தரேசய்யர் மதுரைக்கு அனுப்பப்பட்டார். வைத்திய நாதய்யர் சுந்தரேச அய்யரை உள்ளூர் ஹரிஜனசேவா சங்கத்தலைவராக்கி இந்த ஊருக்கு அனுப்பி வைத்தார். இப்போது, மூத்தவர், திரும்பவும் சுந்தரேச அய்யரைப் பண்ணை வேலைகளைக் கவனிக்கச் சொந்தக் கிராமத்துக்குப் போக வேண்டும் என்று வேண்டிக் கொண்டிருக்கிறார்.

கருப்புக் கோட்டை மாட்ட வேண்டும் என்று தன் சகோதரனுக்கு உத்தரவிட்ட ஜஸ்டிஸ் பரமசிவம் திரும்பவும் கருப்புக் கோட்டைக் கழற்றிப் போட்டுவிட்டுக் கழனி வேலைகளைக் கவனிக்கப் போக வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

தனது சகோதரனின் கடிதத்தைப் படித்துவிட்டு, எந்த விதமான தீர்க்கமான முடிவுக்கும் வரமுடியாமல் தவித்த சுந்தரேச அய்யர், தனது அத்யந்த நண்பர்களான நகர சபைத்தலைவர் கணேசய்யருக்கும் வக்கீல் பொன்னுச்சாமி நாயுடுவுக்கும் போன் செய்து விட்டு, வழக்கம் போல் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு அவர்களின் வரவை எதிர்பார்த்துத் தனது ஊஞ்சலில் உட்கார்ந்து புத்தகங்களையும் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்.

உள்வீட்டிலிருந்து வானொலி, உலக யுத்தம் சம்மந்தமான சேதிகளை ஒலிபரப்பிக் கொண்டிருந்தது.

உலக அரங்கில் ஐரோப்பாக் கண்டத்தில் நடைபெறும் யுத்தம், ஏகாதிபத்தியங்களுக்கிடையில் நாடு பிடிப்பதற்காக நடைபெறும் போராட்டம் என்றும் இந்திய மக்கள் இந்த யுத்தத்தைக் கடுமையாக எதிர்க்க வேண்டும் என்று, சங்கரன் யுத்த எதிர்ப்பு இயக்கத்தின் முன்னணியில் நின்றதால் உளவுத்துறையும், போலீஸ் இலாகாவும் சங்கரனைச் சுற்றி வியூகம் அமைத்திருந்தது. சங்கரன் எந்த நிமிடத்திலும் போலீஸாரால் கைது செய்யப்படலாம் என்கிற அபாயம் தலைமேல் தொங்கிக் கொண்டிருந்தது. எனவே பரமசிவம் அய்யரின் கடிதம் பற்றிச் சங்கரனது அபிப்ராயத்தைப் பெற முடியுமா என்பதில் சுந்தரேசருக்குச் சந்தேகம். வயது வந்த குடும்ப அங்கத்தினன் என்கிற வகையில் எப்படியும்சங்கரனுடைய அபிப்பிராயத்தையும் கேட்க வேண்டியிருந்தது.

நண்பர்களின் வரவை எதிர் பார்த்து உட்கார்ந்திருந்த சுந்தரேசய்யர், வால்மீகி இராமாயணம் ஆய்வு சம்மந்தமாகப் பரமசிவம் எழுதியனுப்பியுள்ள ஆங்கிலத் தட்டச்சுப் பிரதியைத் திரும்பவும் பிரித்துப் படிக்கிறார்.

பரமசிவம் அய்யர் தனது ஆய்வில் இராமன் சகல கல்யாண குணங்களும் நிறைந்த புருஷோத்தமத் தெய்வப் பிறவியல்ல என்பதை உதாரணங்களுடன் விளக்கியிருந்தார்.

தசரதன், பரதனுக்கே அரச பதவி என்று வாக்குக் கொடுத்திருப்பதை அறிந்திருந்த இராமன், பரதன் வெளியூருக்கு அனுப்பப்பட்ட போது, அரசு பதவியை ஏற்றுக் கொள்ள ஆசைப்பட்டது. வானர அரசனான வாலியை நேருக்குநேர் நின்று சமர்புரிவதற்குத் திராணியற்று மறைந்து நின்று வதை செய்தது போன்ற செயல்களையும் சேது பந்தனத்தின் போது கடல் தேவதை இராமனுக்குப் புத்தி புகட்டிய பல சேதிகளை வால்மீகி இராமாயணத்தில் இருந்தே எடுத்துக்காட்டி, இராமன் இரத்தமும் தசையுமான ஆசாபாசம் நிறைந்த மனிதப்பிறவி என்றும். வால்மீகி இராமாயணம் சாதாரணமான கதை என்பதையும் மறுக்க முடியாத ஆதாரங்களுடன் சொல்லியிருப்பதுடன், வால்மீகியின் காவியம் ஒரு அருமையான காதல் கதை அல்லாது வேறில்லை என்று குறிப்பிட்டிருந்தார். அதற்கு ஆதாரமாக வால்மீகி இராமாயணத்தில் காணப்படும் பல சுலோகங்களையும் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆதிகாவியமான வால்மீகி இராமாயணப் பாடல்களைத் திரும்பவும் படித்துப் பார்க்கிற போது, ஜஸ்டிஸ் பரமசிவத்தின் ஆய்வு முடிவுகள் சரி என்றே பட்டது.

ஆனால், சிறந்த காந்தி பக்தரான கணேசய்யர் மட்டும் பரமசிவம் அய்யருடைய முடிவுகளை ஏற்றுக் கொள்ள மறுத்தார் இராமனது கல்யாண குணங்களை மறுத்து அவனது தெய்வீகத் தன்மையில் குறை காண்பதும், அவன் சாதாரண மனிதன் என்று சொல்வதும் மற்றும் அவனது நாத்திகச் செயல் என்று பட்டது

"சுந்தரேசய்யர் ஒம்மோட சகோதரரோட இந்த இன்வெஷ்டிகேஷன் இருக்கே அது இந்து தர்மத்தோட அஸ்திவாரத்தையே தகர்ப்பதாக இருக்கு. லட்சோப லட்சம் மக்களோட பக்தி உணர்வைத் தகர்த்துப்போடும்" என்று கடுமையாக விவாதம் செய்வார். ஆனால் வக்கீல் பொன்னுச்சாமி நாயுடு மட்டும்

"என்னமோ சாமி, வாலி வதை சம்பவத்தையும், விபீஷணனை இராமன் தன்னோடு சேர்த்துக் கொண்டதையும் பார்க்கறப்போ, இராமனுடைய கல்யாண குணங்கள்ளேயும், அவன் வகுத்துக் கொண்ட தர்ம நியாயங்கள்ளேயும் சந்தேகம் ஏற்படுறது. ஒரு சாம்ராஜ்யத்தை உருவாக்க எடுத்த நடவடிக்கையாத்தான் படுது" என்று கணேசய்யரது அபிப்பிராயத்துக்கு மௌனமாக எதிர்ப்புத் தெரிவிப்பார்.

இப்படியாக வால்மீகியின் இராமாயணம் பற்றி சர்ச்சைகள் மனதில் அலைபாய சுந்தரேசய்யர் ஊஞ்சலில் உட்கார்ந்து சிந்தனையில் ஆழ்ந்திருந்த போது, வெளிவாசல் கேட் கிறீச்சிடவும் ஏறிட்டுப் பாத்தார்.

நகரசபைத் தலைவர் கணேசய்யர் வழக்கத்துக்கு விரோதமாக, பட்டு அங்கவஸ்திரமும், பஞ்சகட்சமுமாக கேட்டைத் திறந்து கொண்டு வீட்டுக்குள் பிரவேசித்தார். கையில் பிரமுகர்களுக்கான கைத்தடியும் இருந்தது.

"வாருங்கோ கணேசய்யர்வாள் என்ன விசேஷம் ஒரு நாளுமில்லா திருநாளா கல்யாண மாப்பிள்ளை கோலத்தில் வந்திருக்கேள்" என்று வேடிக்கையாகச் சொன்ன வண்ணம் ஊஞ்சலினின்றும் எழுந்து போய் அவரை வரவேற்றார்.

"வேடிக்கை பண்ணாதியும், ஜமீன்தார் வீட்டுக்கல்யாணம் வேஷம் கட்ட வேண்டியதாய் போயிட்டது" என்று பதில் சொன்னவாறே, கணேசய்யர், அறையினுள் பிரவேசித்து வழக்கமாக அமரும் சோபாவில் போய் உட்கார்ந்தவர்,

"என்ன அவசரம். காலம் காத்தாலேயே போன் பண்ணியிருக்கீர். பிள்ளையாண்டானை ஏதாவது அரஸ்ட் பண்ணிட்டாளோண்ணு நேக்குச் சந்தேகம்" என்றதும்

"அது ஒன்னுமில்லை. அண்ணா ஒரு கடுதாசி போட்டிருக்கார். அதைப் படிச்சுப் பார்த்த போது நேக்கு எந்த முடிவுக்கும் வரத்தோணலை"

என்று சொன்ன மட்டில், டீப்பாயில் மடித்து வைக்கப்பட்டிருந்த பரமசிவம் அய்யரின் கடிதாசை எடுத்து அவரிடம் படிக்கக் கொடுத்துவிட்டு, வழக்கம்போல் தனது கிளிமூக்கு நாசியை வருடிக் கொண்டார்.

இதற்குள் சமையற்கார வெங்கி, வந்து பௌவியமாக நின்றவன் "அண்ணாவுக்குக் காப்பி டிபன் வேண்டியிருக்குமோ" என்று கைகட்டி நின்றவாறு கேட்டான்.

"டிபன் எல்லாம் ஆச்சுது. அம்பி நல்ல டிகிரிக் காப்பியா போட்டுக் கொண்டு வாடா" என்று கணேசய்யர் சொல்லவும், சரி சொல்லுவது போல் தலையை ஆட்டி ஆமோதித்த வெங்கி உள்பக்கம் போகத் திரும்பியபோது,

"இன்னும் ரெண்டு சேத்துப் போட்டுக் கொண்டு வாடா. பொன்னுச்சாமி நாயுடுவும் வந்திடுவார் வந்ததுமே ஒன்னோட டிக்காஷன் காப்பியைத் தான் கேப்பார்."

என்று சுந்தரேசய்யர் குறுக்கிட்டுச் சொல்லவும் தலையை மீண்டும் அசைத்து ஆமோதித்த படியே வெங்கிடு அடுக்களையை நோக்கிப் போனான்.

கணேசய்யர் கடிதம் முழுவதையும் படித்து முடித்துவிட்டுச் சுந்தரேசய்யரிடம் கொடுக்கும் போது வக்கில், பொன்னுச்சாமி நாயுடு, தனது ஜட்கா வண்டியிலிருந்து இறங்கி, முன் அறையில் பிரவேசித்தார்.

"வாங்கோ நாயுடுவாள்" என்று வரவேற்றார் சுந்தரேச அய்யர்.

"பட்ணத்தில் கண்ணன் எப்படி இருக்கான். பிரச்சனை ஏதும் இல்லையே" என்று கேட்ட போது

"சுந்தரேசய்யர்வாள் அவர் பிள்ளையாண்டான் பத்தித் துக்கம் விசாரிக்கிறாப் போல விசாரிக்கறீர்" என்று கணேசய்யர் கிண்டலாகக் கேட்ட போது

"கணேசா நீயே சண்டை மூட்டிவிட்டுருவே போலருக்கே. அவர் கேக்கறதிலேயும் நியாயம் இருக்குப்பா. பெண் வீட்டார் பக்கம் பிரச்சனை இல்லே. குடும்பத்திலே ஏற்பட்ட சிக்கலைத் தீக்கறதுக்கு நான்பட்ட பாடு எனக்குத் தான் தெரியும். பெத்த தாயே அவனை ஜாதிப் பிரஸ்டம் பண்ண வேணம்ண்ணு பத்திர காளியா நிக்கறா. ஜாதி விட்டு ஜாதி கல்யாணம் செய்யறதைச் சண்டாளமா எதிர்க்கிற ஜனங்கள் மதம் விட்டு மதம் கல்யாணம் பண்றதை ஒத்துக்குவாளா என்ன, இப்பவும் மழை விட்டும் தூவாமை ஓயலைங்கிற கதை தான்" என்று சொன்ன பொன்னுச்சாமி நாயுடு தனது தலைப்பாகையை எடுத்துப் பக்கத்தில் இருந்த பெஞ்சில் வைத்து விட்டுச் சோபாவில் அமர்ந்தார்.

வக்கீல் பொன்னுச்சாமி நாயுடு, ஓங்குதாங்கான உயரம், அதற்கேற்றாற் போன்ற உடற்கட்டு மஞ்சள் கலந்த மோகனமான சிவப்பு நிறம், வைஷ்ணவ களையைத் துல்லியமாக எடுத்துக் காட்டுவது போல் நெற்றியின் நடுவில் நேர்கோடாக இழுக்கப்பட்டிருக்கும் திருமண் ஆண்மைக்கு அடையாளமான நறுக்குத் தறித்தாற் போன்ற முறுக்கு மீசை சதா வெற்றிலையைச் சவைப்பதால் சிவந்து காணப்படும் அதரங்கள்.

நடைகூட ஒரு பட்டாளத்துக்காரனைப் போன்று கம்பீரமான மிடுக்கான நேர்கொண்ட பார்வை நிமிர்ந்த நடை.

நாயுடு வீட்டை விட்டுக் கிளம்பினார் என்றால் பஞ்ச கச்சமும், குளோஸ் கோட்டும் இல்லாமல் அவரைப் பார்க்க முடியாது. அவரது நடை உடை போன்றே எதையும் எதிர்கொள்ளும் உறுதியான மனோ திடம்.

பொன்னுச்சாமி நாயுடுவின் குடும்பம் ஜஸ்டிஸ் பரம்பரை. ஆனால் அவர் மட்டும் மாணவர் பருவத்திலிருந்தே காந்திய பக்தர். காங்கிரஸ்காரர் பரோபகாரி மட்டுமல்லாமல் சீர்திருத்தவாதியும் கூட. தங்குவதற்கும், தலை சாய்ப்பதற்கும் ஒரு மறைவிடமில்லாமல், பராரிகளாக அலைந்த தீண்டப்படாத போயர் குறவர்களுக்கென்று தனது நிலத்திலேயே இடம் ஒதுக்கிக்

கொடுத்தது தன் செலவிலேயே வீடுகளும் கட்டிக் கொடுத்திருக்கும் பரோபகாரி.

சென்னையில், உயர்நீதிமன்றத்தில், பிரபல வழக்கறிஞர், எத்திராஜுலு நாயுடு ஆபீஸில் ஜூனியராகப் பணிபுரிந்து கொண்டிருக்கும் அவரது மூத்த மகன், கண்ணன், தன்னோடு வக்கீல் தொழில் புரியும் ஜூலி என்கிற கிறிஸ்தவ, ஆங்கிலோ இந்தியப் பெண்ணை ரிஜிஸ்தர் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போவதாகவும், அதற்காக அவரது சம்மதத்தையும் வேண்டிக் கடுதாசி போட்ட போது பொன்னுச்சாமி நாயுடுவின் சமூகச் சீர்திருத்தக் கொள்கைக்குச் சோதனை ஏற்படலாயிற்று.

சேதி கேட்டதும், அவரது தாயார் சூடாமணி நாச்சியார் மூர்ச்சையே போட்டு விழுந்து விட்டார். உற்றார் உறவின் முறையார் எல்லாரும் கடுமையாக எதிர்த்தனர். கண்ணனை மட்டுமல்ல பொன்னுச்சாமி நாயுடு குடும்பத்தையே ஜாதிப் பிரஷ்டம் செய்யப் போவதாக மிரட்டலானார்கள். மனைவி கோதையம்மாள் மாட்டுக்கறி திங்கிற இரண்டாங் கெட்டான் பிறவியான சட்டைக்காரியை மருமகளாக ஏற்றுக் கொள்ள முடியாது என்று உண்ணாவிரதம் ஒத்துழையாமை என்கிற பலவிதமான சாத்வீகப் போராட்டங்களையும் நடத்திப் பார்த்தார்.

பொன்னுச்சாமி நாயுடு அசைந்து கொடுக்கவில்லை. எல்லா எதிர்ப்பையும், பொருட்படுத்தாமல் கண்ணன் தனது மனதுக்குகந்த பெண்ணை மணம் முடித்துக் கொள்ள பூரண சம்மதம் என்று பச்சைக் கொடி காட்டி, அந்தத் திருமணத்திற்கான ஏற்பாடுகளையும் தனது நண்பர்கள் வாயிலாகச் செய்தார்.

தங்களது எதிர்ப்பையும், போராட்டங்களையும் பொருட்படுத்தாமல், கல்லுளிமங்கனாக இருந்த பொன்னுச்சாமி நாயுடுவின் முடிவுகளை எதிர்த்துச் சமர் புரிந்து தோற்றுப் போன சூடாமணி நாச்சியாரும் கோதையம்மாளும் வேறுவழியில்லாமல் ஏற்றுக் கொண்டு சமரசம் செய்து கொள்ள வேண்டியதாயிற்று.

பொன்னுச்சாமி நாயுடு, ஜாதியத்துக்கு மடங்கிப் போய்விடுவார் என்று தான் ஊர் பிரமுகர்கள் எண்ணினார்கள். தனது கொள்கைக்கு ஏற்பட்ட சோதனையை அவர் சமாளித்த விதம் நண்பர்களான கணேசய்யருக்கும், சுந்தரேசய்யருக்கும் மகிழ்ச்சி தருவதாக இருந்தது. எனவே தான் கணேசய்யர் நண்பர் வக்கீல் பொன்னுச்சாமியைக் கிண்டல் செய்தார்.

"சுந்தரேசய்யர்வாள் அப்படி என்ன அவசரம் காலம் காத்தாலேயே போன் பண்ணியிருக்கீர்" என்று தன்னை வரச் சொன்னதற்கான காரணத்தை நாயுடு கேட்ட போது, கணேசய்யர் படித்து முடித்து விட்டுத் தன்னிடம் கொடுத்த ஜஸ்டிஸ் பரம சிவத்தின் கடிதத்தை அவரிடம் படிக்கக் கொடுத்தார்

"என்னால திட்டவட்டமான முடிவுக்கு வரமுடியலை" அதனால தான் உங்களையெல்லாம் அவஸ்தைப்படுத்தரேன்" சுந்தரேச அய்யர் சொன்னார்.

பொன்னுச்சாமி நாயுடு கடிதத்தை வாங்கிப் படிக்க முயன்ற போது, வெங்கி, மூன்று வெள்ளி டபராக்களில் காப்பி பானத்தை ஒவ்வொருவருடையவும் முன்னால் வைத்து விட்டுப் போனான்.

ஜஸ்டிஸ் பரமசிவத்தின் கடிதத்தைப் படித்து முடித்த கணேசய்யருக்குத் தனது அத்யந்த நண்பனை நிரந்தரமாகப் பிரிய நேரிடுமோ என்கிற விசனம் மனத்துள் எழுந்தது.

எந்தவிதமான சலனமுமில்லாமல், டபராவில் இருக்கும் காப்பியை டம்ளரில் ஊற்றிப் பருகிக் கொண்டிருக்கும் சுந்தரேசய்யரை இமை கொட்டாமல் பார்த்த வண்ணம் இருந்தார். சாதாரணமாக சுந்தரேசய்யர் தனது மூத்த சகோதரன் கிழித்த கோட்டைத் தாண்ட மாட்டார். சகோதரன் மீது அவருக்கு அவ்வளவு அளவு கடந்த பக்தி பரமசிவத்தின் முடிவு பற்றி மனதுள் நெருடல் ஏற்பட்டிருக்க வேண்டும்.

தன்னிடம் கொடுக்கப்பட்ட கடிதத்தைப் படித்து முடித்த வக்கீல் பொன்னுச்சாமி நாயுடு சுந்தரேசய்யரிடம்

"இது உங்களோட குடும்ப விவகாரம் இதிலே நாங்க சொல்றதுக்கு என்ன இருக்கு" என்று கேட்கவும்.

"நாயுடு நீர் பட்டும் படாமலும் பேசுவீரிண்ணு நேக்குத் தெரியும்" குரலில் சற்றுக் கடுமை தொனிக்க சுந்தரேசய்யர் சொன்னார்.

"நீர் ஒம்மோட சகோதரன் கிழிச்ச கோட்டைத் தாண்ட மாட்டீர். அது தெரிஞ்சு தான் நாயுடு அப்படிச் சொல்றார்" என்று கணேசய்யர் குறுக்கிடவும் சுந்தரேசய்யர் மௌனமாகிப் போனார்.

சற்று நேரம் அறை வழுக்கை விழுந்து போன தன் தலையை வருடியவாறே உட்கார்ந்திருந்த பொன்னுச்சாமி நாயுடு

"மாங்குடிக்குப் போறதுக்கு சுந்தரேசய்யருக்குத் தயக்கமா இருந்தா நாமே பெரியவரண்டை பேசலாமே"

பொன்னுச்சாமி நாயுடு சொன்னார்.

மாங்குடியில் அவர்களது பரம்பரைச் சொத்தை நிர்வகித்து வந்த காரியஸ்தர் ஐயர் இயற்கை எய்தி விட்டதால், சொத்தைப் பராமரிப்பதற்கும் தர்ம சத்திரத்தை முறையாக நிர்வாகம் செய்வதற்கும் வேறு நம்பிக்கையான நபர் இல்லாததால், பரமசிவம் அய்யர் அந்த பாரத்தைத் தம்பி மீதே சுமத்தியிருந்தார். அதிலும் தர்ம சத்திரம் முறையாகப் பராமரிக்கப்படவில்லையெனில் பரம்பரை பரம்பரையாகப் பாதுகாத்து வந்த குடும்பத்தின் பெயர் கெட்டுப் போய்விடும்.

மாங்குடி குடும்பத்தாரின் அன்ன சத்திரம், தஞ்சை வட்டாரத்திலேயே பெருமையாகப் பேசப்படும் சத்திரமாகும். காசி, ராமேஸ்வரம் என்று யாத்திரை போகும் பிராமண பக்தர்களுக்குத் தங்கிச் செல்வதற்கு மட்டுமல்ல மூன்று நேரமும் குல ஆச்சாரப்படி பிராமணர்களுக்குப் போஜனமும் பரிமாறப்படுகிறது. மூன்று தலைமுறைகளாக நடைபெற்றுவரும் சம்பிரதாயம்

ஜஸ்டிஸ் பரமசிவம் தனது சம்பளத்திலிருந்து ஒரு பகுதியை, அந்த வட்டார தாழ்ந்த குல மக்கள் படித்து முன்னேறுவதற்கென்று ஹைஸ்கூலைக் கட்டியுள்ளார். அதற்கான அரசு மானியமும் கிடைத்திருக்கிறது. ஆனால், சனாதனிகளும், பிற்போக்காளர்களும், பள்ளிக்கூடம் நடைபெற விடாமல் தடுப்பதற்காக எல்லா இடைஞ்சல்களும் செய்து வருகின்றனர். அந்தச் சதியையையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. அது சுந்தரேச அய்யரால் தான் முடியும்.

பரமசிவம் அய்யர் குறிப்பிட்டிருக்கும், புதிய ஆலோசனைகளையும், திட்டங்களையும், படித்துப் பார்த்த போது, வக்கீல் பொன்னுச்சாமிக்குத் தனது நண்பர் கிராமத்துக்குப் போவதும், புதிய பொறுப்புக்களை ஏற்று நிர்வாகம் செய்வதும் ஓரளவுக்குச் சரி எனப்பட்டது.

"எஸ்டேட்டையும், பள்ளிக் கூடத்தையும் நிர்வாகம் பண்றதுக்குச் சுந்தரேசய்யர் மாங்குடி போரது தேவையா என்ன" கணேசய்யர் வக்கீல் பொன்னுச்சாமியைப் பார்த்துக் கேட்டவர்

"இவரை நம்பி தங்களோட தலைவிதிய இவரண்டை ஒப்படைச்சிருக்காளே நூத்துக்கணக்கான கட்சிக்காரர். ஆவாளோட கதி என்னாவரது" கணேசய்யர் திரும்பவும் பொன்னுச்சாமி நாயுடுவைப் பார்த்துக் கேட்டார்.

"அதுக்குத் தான் வாரிசு வந்தாச்சே. அப்புறம் என்ன சங்கரனை விட புத்திசாலிப் பையன் வேணுமா என்ன" சுந்தரேசய்யரையும், கணேசய்யரையும் பார்த்து பொன்னுச்சாமி நாயுடு சொன்ன போது, சுந்தரேசய்யர் முகத்தில் சந்தேக ரேகை படர்வதைக் கவனித்த கணேசய்யர்

"சங்கரன் என்னவோ பிராக்டீஸைத் தொடர்வான்னு நேக்குத் தோணலை" கணேசய்யர் சுந்தரேசய்யர் முகத்தைப் பார்த்தவண்ணம் சொன்னபோது

"நேக்கும் அப்படித்தான் படறது நாயுடுவாள்" என்றார் சுந்தரேசய்யர்.

"அண்ணா அவனைப் புரிஞ்சுண்டுதான் கடுதாசியில் அவனைப் பத்தி அப்படி எழுதியிருக்கார்" நண்பர்களைப் பார்த்துச் சுந்தரேசய்யர் சொன்னார். பரமசிவம் அய்யர் தனது கடிதத்தில் சங்கரனைப் பற்றி இப்படிக் குறிப்பிட்டிருந்தார்.

"சங்கரனை எக்காரணம் கொண்டும் நீயோ, அம்புஜமோ வற்புறுத்தக் கூடாது. அவனது எதிர்காலம் பற்றி அவனே முடிவு எடுத்துக் கொள்ள விட்டுவிட வேண்டும். அவனைக் கேட்டபோது ஒரு புதிய சமுதாயம் உருவாவதற்குத் தன்னை அர்ப்பணம் பண்ணியிருப்பதாகச் சொல்கிறான். அந்த முயற்சியில் அவன் தோல்வி அடையலாம். அல்லது வெற்றி பெறலாம். அது அவன்பாடு. நாம் தலையிடுவது என்பது தனி மனித உரிமைகளில் தலையிடுவதாகும்" என்று ஒரு நீதிபதிக்குள்ள நடு நிலை உணர்வுடன் எழுதியிருந்தார்.

"அப்படியானா அம்பியைக் கேட்டுத்தான் நாம ஒரு முடிவுக்கு வர முடியும்"

வக்கீல் பொன்னுச்சாமி நாயுடு தனது இடது கரத்தால் நெற்றியை வருடிய வண்ணம் சொன்னார்.

"அம்புஜமும் கூட நீர் சொன்ன படிதான் சொல்றாள். சொல்லிவிட்டிருக்கேன். வந்திடுவான். தள்ளிப்போட வாண்டாம். நீங்க ரெண்டு பேரும் இருந்து சங்கரனையும் கேட்டு ஒரு முடிவு பண்ணிட்டுப் போங்கோ. மதிய போஜனத்தையும் ஆத்திலேயே முடிச்சுட்டுப் போனால் போறும்" சுந்தரேசய்யர் இப்படிச் சொல்லி விட்டு உள் வீட்டுக்குள் போனார்.

சுந்தரேசய்யர் உள் வீட்டுக்குப் போய் விட்டுத் திரும்புவதற்கும், தனது பணிகளை முடித்துவிட்டுச் சங்கரன்

வெளியில் இருந்து முன் அறையில் பிரவேசிப்பதற்கும் சரியாக இருந்தது.

"அடே, வாடாப்பா நோக்கு ஆயுசு நூறு. இப்போதான் உன்னைப் பத்திப் பேசின்டிருந்தோம்" என்று கணேசய்யர் சங்கரனை வரவேற்றார்.

"பேயை நினைக்கும் போது பேயே ஆஜராகி விட்டது" என்கிற ஆங்கிலப் பழமொழியைச் சொல்லிப் பொன்னுச்சாமி நாயுடு சிரித்தார்.

"என்ன மாமா? திரிமூர்த்திகளும் ஒண்ணாச் சேர்ந்திருக்கேள். விசேஷடம் ஏதும் உண்டா" சங்கரன் வேடிக்கையாகக் கேட்டார்.

அந்த ஊர் வக்கீல்கள் சங்கத்தில் நண்பர்கள் மூவரையும் திரிமூர்த்திகள் என்று வேடிக்கையாகச் சொல்வதுண்டு. அவ்வளவுக்கு இணை பிரியாத நண்பர்கள்.

"அம்பி வாடா. ஒன்னோட முடிவை எதிர்பார்த்துத்தான் ஒக்காந்திண்டிருக்கோம். இதைப் படி அப்புறம் அபிப்பிராயம் சொல்லு" என்று கணேசய்யர், டீப்பாயில் இருந்த பரமசிவம் அய்யரின் கடிதத்தை எடுத்துக் கொடுத்தார்.

மகனது முடிவை ஆவலுடன் எதிர்பார்த்த சுந்தரேச அய்யர், ஒருவித மன அவஸ்தையுடன் உட்கார்ந்திருந்தார்.

தனது பெரியப்பா எழுதிய கடிதத்தைப் படித்து முடித்த சங்கரன்,

"அப்பாவும், பெரியப்பாவும் முடிவு செய்ய வேண்டிய விஷயம். இதிலே நான் சொல்ல என்ன இருக்கு" மூன்று பேர்களையும் மாறி மாறிப் பார்த்த வண்ணம் சொன்னார்.

"அவா முடிவு செய்யறது இருக்கட்டும் அம்பி. நீ என்ன சொல்றாய்" பொன்னுச்சாமி நாயுடு கேட்டார்.

ஒரு கணம் யோசனையில் ஆழ்ந்திருந்த சங்கரன்

"பெரியவர் எப்போதுமே ஆழ்ந்து சிந்தித்துத் தான் முடிவெடுப்பார். பின் விளைவுகளைக் கணக்கில்

கொண்டுதான் இந்த முடிவுக்கு வந்திருக்கார்" என்று சங்கரன் தனது தந்தையைப் பார்த்துச் சொன்னார்.

"அப்படியானா வக்கில் ஆபீசை யார் பாத்துக்கிறது" கணேசய்யர் இப்படி ஒரு இக்கட்டான கேள்வியைக் கேட்பார் என்று சங்கரன் எதிர்பார்க்கவில்லை.

சங்கரனால் உடனடியாகப் பதில் சொல்ல முடியவில்லை.

மகன் தயங்குவதைப் பார்த்ததும்

"சங்கரா, நீ ஒன்னோட மனசில் பட்டதைத் தயங்காமல் சொல்லலாம். நீ என்ன முடிவுக்கு வந்தாலும் அந்த முடிவை இந்தக் குடும்பம் ஏத்துக்கத் தயங்காது" சுந்தரேசய்யர் சொன்னார்.

"அப்பா நீங்க, பெரியப்பா கேட்டுண்டபடி மாங்குடிக்குக் குடிபெயர்ந்து போரதா முடிவு பண்ணிட்டேளா" சங்கரன் கேட்டான்

"அது தான் இப்போதைக்குத் தேவையான முடிவுண்ணு கணேசய்யரும் நாயுடுவும் சொல்றா. பெரியப்பாவும் அதைத்தான் விரும்புறார்" சுந்தரேசய்யர் சாதாரணமாகச் சொன்னார்.

ஒரு கணம் தலையைக் குனிந்த படியே உட்கார்ந்திருந்த சங்கரன்,

"நான் இனிமே கருப்புக் கோட்டை மாட்டிண்டு கோர்ட்டுக்கு வர்றதா உத்தேசம் கிடையாது. என்னை நம்பி இருக்க இந்த ஏழைப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களோட பாடு மரணத்தோடுதான் என் வாழ்க்கை இரண்டறப் பிணைக்கப்பட்டிருக்கும். ஒப்புக்குச் சேவை செய்யறதாப் பாசாங்கு பண்ண நேக்குத் தெரியாது" சங்கரன் சொன்னார்

சங்கரனது முடிவைக் கேட்டு அதிர்ந்து போன பொன்னுச்சாமி நாயுடு வியப்புடன் சங்கரனைப் பார்த்தார்

ஆனால் தனது திருக்குமாரனின் தீர்க்கமான முடிவைக் கேட்டு அதிர்ச்சி ஏதும் கொள்ளாத சுந்தரேசய்யர் மௌனமாக உட்கார்ந்திருந்தார். பிறகு

"இது நான் எதிர்பார்த்தது தான்" சாவதானமாகச் சொன்னார். அவர் அதிர்ச்சி அடையவில்லை.

"நான் நடத்திண்டு வந்த வழக்குகள் சம்மந்தப்பட்ட கட்டுக்கள் உங்க ரெண்டு பேரோடவும் வக்கீல் ஆபீசுக்கும் வந்து சேரும்" என்று சொல்லிவிட்டு சுந்தரேசய்யர் கண்களை அகல விரித்துத் தனது கிளிமூக்கு நாசியை வருடி நண்பர்களைப் பார்த்துச் சுந்தரமாகப் புன்முறுவல் செய்தார்.

பிறகு எழுந்து போய் பீரோவின் டிராயரைத் திறந்து பத்திரம் ஒன்றை எடுத்துச் சங்கரன் கையில் கொடுத்தார்.

அது சுந்தரேச அய்யர் தன் கைப்பட எழுதிய உயில். உயிலில், அவர் வக்கீல் தொழிலில் சம்பாத்தியம் செய்த சொத்துக்கள் பற்றிய விவரம் சொல்லப்பட்டிருந்தது.

சொத்துக்களில் ஒரு பகுதியைச் சங்கரன் விற்று, அவரும், அவருடைய மூத்த சகோதரர் ஐஸ்டிஸ் பரமசிவமும், இராமாயணம் பற்றி எழுதிய ஆய்வுகளைப் புத்தகமாகப் பதிப்பிக்க வேண்டும் என்று சங்கரன் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

உயிலின் மறு பகுதியைப் படித்து வியந்து போன சங்கரன், உயிலை தகப்பனாரின் உயிர் நண்பர்களான கணேசய்யரிடமும், பொன்னுச்சாமி நாயுடுவிடமும் படிக்கக் கொடுத்தார்.

உயிலின் கடைசி வாசகத்தைப் படித்த போது அவர்கள் அதிர்ந்து போனார்கள். உயிலின் கடைசி வாசகம் இப்படி எழுதப்பட்டிருந்தது.

"நான் இயற்கை எய்திய பின், எனது சடலம் தகனத்துக்கு எடுத்துச் செல்லப்படும் போது, எந்த ஒரு புரோகிதனும் என் சடலத்தைத் தொடர்ந்து வருதல் கூடாது.

No Prohit should follow my dead Body" என்று கொட்டை எழுத்துக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது.

வியப்புடன் நண்பர்கள் அவரைப் பார்த்த போது

"இந்தக் கருவூலங்களையெல்லாம் படிச்சு முடிச்சதற்கப்புறம் என்னால் இந்த முடிவுக்குத் தான் வர முடிந்தது" என்று டீப்பாய் நிறைய அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் புஸ்தகங்களைக் காட்டி வஞ்சகமில்லாமல் சிரித்தார்.

"இந்த உயிலில் சாட்சிகளாக நீங்க ரெண்டு பேரும் கையெழுத்துப் போடுங்கோ. இந்த உயில் வாசகங்களை நிறைவேற்ற வேண்டியது சங்கரனது பொறுப்பு" என்று சொல்லிவிட்டு சுந்தரேச அய்யர் பெரும் பாரம் தணிந்த உணர்வோடு ஊஞ்சலில் அமர்ந்தார்.

23

சுப்பவாடன் திரும்பவும் இப்படி ஒரு காரியத்தைச் செய்வான் என்று முனிசிப்பல் காலனியில் யாரும் எதிர் பார்க்கவில்லை.

காலனியில் உள்ள பெண்கள் அனைவரும் சேதியைக் கேட்டு அசந்து போனார்கள்.

"அட தேவுடா, என்ன வைதாலும் கல்லுளி மங்கனா அலையுமே ஏமீடா அதுக்கு அம்புட்டுக் கோவம்" என்று அதிசயித்துப் போனார்கள்.

முன்னால் எல்லாம் காலனியில் இப்படிச் சம்பவம் நடைபெற்றது என்று கேள்விப்பட்டால் காலனியே நிலை தடுமாறிப் போய்விடும். போக்கிரிகளின் அடாவடித்தனத்துக்கும், போலீஸ் கெடுபிடிக்கும் பயந்து, காலனியில் ஆண் பெண் அடங்கலும், குஞ்சு குளுவான் உட்பட குடியிருப்பைக் காலி செய்துவிட்டு காடுமலை என்று ஓடிப்பதுங்கிக் கிடப்பார்கள்.

மாதாரி எவனாவது, மேல் ஜாதிக்காரனையோ உத்தியோகஸ்தனையோ முறைத்துப்பார்க்கிறான் என்று கேள்விப்பட்டாலே போதும். போக்கிரிகளும் போலீசும் வெங்கலக் கடையில் யானை நுழைந்த கதையாகக் காலனியில் புகுந்து, கண்ணில் பட்டவர்களை எல்லாம் கண் மண் தெரியாமல் நையப்புடைப்பார்கள். பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டுச் சீரழிக்கப்படுவார்கள். சக்கிலியப் பெண்கள் கற்பழிக்கப்படுவதும், மானபங்கப்படுத்தப்படுவதும், மேல் ஜாதிக்காரர்களின் உரிமைகளில் ஒன்றாகக் கருதப்பட்டது நாதியற்ற அந்த அப்பாவி மக்கள் தங்களது பிறவியையும் கலைவிதியையும் நொந்து புலம்புவதை அல்லாமல் வேறு கதியற்று கிடந்தார்கள்

காலனியில் கழுவத்தேவன் அவமானப்படுத்தப்பட்டு விரட்டியடிக்கப்பட்டதற்குப் பிறகு அவர்களுக்குள்ளாகவே ஒரு வித தெம்பும் தைரியமும் ஏற்பட்டுத் தாங்களும் மனிதர்கள் என்கிற அக்கறை அவர்களுக்குள் துளிர்க்கலாயிற்று.

கழுவன் விரட்டியடிக்கப்பட்ட மறுவாரமே வக்கீல் சங்கரனும் பிரதர் தங்கசாமியும் மற்றவர்களும் காலனிக்கு வரத் தொடங்கினர். வக்கீல் சங்கரனைத் தலைவராகவும் பிரதர் தங்கசாமியைச் செயலாளராகவும் கொண்ட முனிசிப்பல் தொழிலாளர் சங்கம் அமைக்கப்பட்டு, முனிசிப்பல் நிர்வாகத்துடன் நடத்திய பேச்சுவார்த்தை காரணமாகவும் போராட்டம் காரணமாகவும் மனித மலத்தை வெகுதூரம் தலையில் சுமந்து செல்வதற்குப் பதிலாக ஒவ்வொரு வார்டுக்கும் நயிட் சாயில் வண்டி கொடுக்கப்பட்டு வேலைப்பளு குறைக்கப்பட்டிருந்தது.

பிரதர் தங்கசாமி ஒவ்வொரு இரவும் காலனிக்கு வந்து, தெருவில் பரதேசிகளாகச் சுற்றித் திரிந்த குழந்தைகளுக்கு இரவுப் பாடம் நடத்திப் படிப்புச் சொல்லித் தருகிறார். ஒரு தடவை நகரசபைத் தலைவர் கணேசய்யரே வந்து பள்ளிக்கூடத்தைப் பார்வையிட்டுப் பாராட்டி விட்டுப் போனார்.

வக்கீல் சங்கரனும் அடிக்கடி காலனிக்கு வந்து, போனதால் அவர்களை அறியாமலேயே அவர்களுள் ஒரு வித தெம்பு ஏற்பட்டிருந்தது. கீத்துக் கொட்டகையிலான சங்க ஆபீசும் கட்டப்பட்டிருந்தது. அவர்கள் மத்தியில் ஏற்பட்டிருந்த விழிப்புணர்வு உம்மணாங்கட்டியாக வெந்ததைத் தின்று விதிவந்தால் சாவோமென்று அலைந்த சுப்பவாடன் மனதில் இப்படி ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கும் என்று அவர்கள் யாரும் கருதவில்லை.

சம்பவத்தைக் கேள்விப்பட்டதும், சம்பவ இடத்துக்குப் போய்ச் சேர்ந்த சங்கத்தின் உப-தலைவர் மாயவன் பகடை-

"ஒரே! சுப்ப வாடா. ஏமி உப்படிச் சே சே. நாயக்கன் பொல்லாதவண்டா மாப்புளே. ஒன்னைய வேலைய உட்டுக்கடாசிப்புடுவானே" என்று சொன்னபோது, கண்சிவக்கக் காண்டாமிருகமாக நின்ற சுப்பவாடன்,

"ஒரே, பாவா. இந்த உத்தோகம் பெத்த கலைக்டர் உத்யோவம் பாரு. மசிரு வேலை போனப் போவுது. ஊருப்பெய பேண்ட பீய அல்லாம் அள்ளிச் சுமக்கிற உத்யோகம்.

தேவுடாண்டு, தெருவோரம் ஒக்காந்து நாலு பீத்தச் செருப்பைத் தச்சுக் குடுத்தாலும் ரோக்கியமா நாலு காசு வாங்கி நாணயமாய் பொழப்பு நடத்தலாம் பாவா. என்னயவும் சம்சாரத்தையும் திட்டினான் கேட்டுக்கிட்டன். ஆண்டவனாட்டம் அம்மசனங்களுக்கு வாழ்க்கை கொடுத்த சங்கத்தையும் தலைவரையும் பிரதர் தங்ககாமியவும் கேவலமாப் பேசறான். கேட்டுட்டு இருக்கச் சொல்லுதையா" என்று கோபமாகக் கேட்டான் மாயவன் மௌனமாகிப் போனான்.

சுப்பவாடன் சுகாதார நேர் பார்வையாளர். சானிட்டரி இன்ஸ்பெக்டர் வேலு நாயக்கரைத் தாக்கிய சேதி நகர் முழுவதும் காட்டுத் தீயாகப் பரவிப் போனதால் காக்காய் கூட்டம் சேர்ந்தது மாதிரி அத்தனை நகரசுத்தித் தொழிலாளர்களும் அந்தத் தெருவில் வந்து கூடிவிட்டார்கள்.

மேல் ஜாதிக்காரனும், நகரசபை உத்தியோகஸ்தனுமான வேலு நாயக்கன் ஒரு கீழ் ஜாதி அதிலும் சமூகத்தின் கடைக்கோடி ஜாதிக்காரனான ஒரு மாதாரியால் தாக்கப்பட்டு அவமானப்படுத்தப்பட்ட சம்பவம் அதிகாரிகள் மத்தியிலும் வார்டு கவுன்சிலர்கள் மத்தியிலும் கடும் கோபத்தை ஏற்படுத்தியிருந்தது. முனிசிப்பல் அதிகாரியை நகரசுத்தித் தொழிலாளி தாக்கிய சம்பவம் இதுவரையில் அவர்கள் கேள்விப்படாத ஒன்று; அவனை அவர்கள் எப்படியாவது பழி தீர்த்துக் கொள்ளத் துடித்தார்கள்.

"அல்லாத்துக்கும் காரணம் இந்த சுந்தரேச அய்யர் மவன் சங்கரன் தான்யா, சும்ம கெடந்த அடுமைப் பயவளை உசுப்பிவிட்டுப் போட்டான்யா" என்று ஸ்தலத்துக்கு விரைந்து வந்த வார்டு கவுன்சிலர் ஆதிநாதன் ஆத்திரப்பட்டார். கூட்டம் கூடி சட்டம் ஒழுங்குப் பிரச்சனை

ஏற்பட்டுவிடக் கூடாது என்கிற முன் எச்சரிக்கையோடு, மாயவன் சங்கரனுக்கும் பிரதர் தங்கசாமிக்கும் போன் மூலம் விவரத்தைச் சொன்னான். பிறகு எல்லோரையும் கலைந்து போகும் படிக்குச் சொல்லிவிட்டு, சுப்பாவாடனைச் சங்க ஆபீசுக்குக் கூட்டிவந்தான். மாயவனுக்குக் கொஞ்சம் பயந்த சுபாவம். சுப்பவாடன் செயலில் நியாயம் இருக்கிறது என்பதால், வீராயி வழக்கத்துக்கு மாறாக அவனைத் திட்டவில்லை.

சங்க ஆபீசுக்கு வந்து சேர்ந்த சுப்பவாடன் ஆபீசுக்குள் போக மறுத்ததோடு வழக்கம் போல, தலைத்துண்டை அவிழ்த்துத் தரையில் சங்க ஆபீஸ் தாழ்வாரத்தில் முட்டுக்குத்தி உட்கார்ந்து கொண்டான். அவன் கோபம் தணியவில்லை என்பதை அவன் விடும் பெருமூச்சுக் காட்டிக் கொடுத்தது.

கழுவத்தேவனின் வட்டிப் பிடியினின்றும் சுப்பவாடன் குடும்பம் மீட்கப் பட்ட நாள் முதல் சுப்பவாடன் முற்றுமாக மாறிப் போனான். முன்னைப் போல் குடிப்பது, குடித்துவிட்டு மிருகமாக அலைவது எல்லாம் கிடையாது. எப்போதாவது வேலைப்பளு தாங்காமல், உடலில் வலி ஏற்பட்டால், குடித்தான் என்றால் யாருக்கும் தெரியாமல் எங்காவது முடங்கிக் கிடப்பான்.

சங்க ஆபீஸ் திறக்கப்பட்ட நாள் முதல் சுப்பவாடனுக்குப் புகலிடமே சங்க ஆபிஸின் தாழ்வாரம் தான். வேலை முடிந்து வந்ததும், தாழ்வாரத்தில் துண்டை விரித்துப் படுத்துக் கொள்வான். இரவு வேளைகளில் கூட தனது குடிசைக்குப் போவதில்லை. காலையில் எழுந்ததும், தாழ்வாரத்தைச் சுத்தம் செய்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பான். சங்கத்தின மீது அப்படி ஒரு பக்தி விசுவாசம்.

மாலை மயங்கி இருள் கவியத் தொடங்கினால் சங்கக் குடிசைக்குள் தொங்கும் அரிக்கேன் விளக்கை எடுத்துச் சிமினியைத் துலக்கி விளக்கை ஏற்றிவிட்டு வெளியே போய் உட்காந்து கொள்வான். பகலில் சீக்கிரமாக வேலை முடித்து வந்து விட்டால் , வராந்தாவில் உட்கார்ந்து தனது காக்கிச் சட்டையைக் கழற்றித் தையல் இடுக்குகளில் ஒளிந்திருக்கும் சேலைப் பேன்களைத் தேடி பிடித்து நசுக்கிக் கொன்று கொண்டிருப்பான்.

சுப்பவாடனைப் பொறுத்த மட்டில் எதை மறந்தாலும், தானும் தனது மனைவியும் தங்கையும் சங்கத்திற்குக் கட்ட வேண்டிய சந்தாவை மட்டும் கட்ட மறப்பது கிடையாது அதை ஒரு கடமையாகக் கொண்டிருந்தான்.

சங்கத்தின் சார்பில், துண்டுப் பிரசுரம் அச்சடித்து விநியோகப்படுத்தப்பட்டால், பிரசுரங்களை எடுத்துக் கொண்டு விநியோகம் செய்வான். அவனுக்குப் படிக்கத் தெரியாது. பிறரைக் கொண்டு படிக்கச் செய்து ஒரு பள்ளி மாணவனைப் போல் கேட்டுக் கொண்டிருப்பான். நோட்டீஸில் சொல்லப்பட்ட விவரம் கேட்டு அதன்படி நடப்பான்.

சங்கரனும், பிரதர் தங்கசாமியும் சங்கத்திற்கு வந்தால் எழுந்து நின்று வணக்கம் சொல்லிவிட்டு அப்பால் போய்விடுவான். அவர்களிடம் பேசுவது கிடையாது அவ்வளவுக்கு அவர்கள் மீது சுப்பவாடனுக்கு பக்தியும் மரியாதையும். அவர்களைத் தங்களைக் கடைத்தேற வைக்க வந்த தெய்வங்களாக எண்ணினான்.

இவ்வளவு வேலைகளையும் செய்துவிட்டு யாரிடமும் பேச்சுக் கொடுக்காமல் ஒரு அப்பாவியாகச் சங்கத்தின் வராந்தாவில் முடங்கிக் கிடப்பான்.

இப்படிப்பட்ட புளுவான, அப்பாவி துப்புறவு இன்ஸ்பெக்டர் வேலு நாயக்கரை நையப்புடைத்து நைட் சாயில் வண்டியில் தூக்கி வீசியிருக்கிறான் என்பதை எவராலும் நம்ப முடியவில்லை.

வேலு நாயக்கருக்கு தான் ஒரு மாஜிப் பட்டாளத்தான் என்பதோடு வீரம்மிக்க நாயக்கர் பரம்பரையைச் சேர்ந்தவன் என்கிற பெருமையும் திமிரும். இரண்டாம் உலகயுத்தத்திற்குச் கிப்பாயாகப் போன நாயக்கன், போர் முனைக்கும் போகப் பயந்து, பைத்தியமாகப் பாசாங்கு செய்து டிஸ்சார்ஜ் வாங்கிக் கொண்டு வந்த நபர் என்பது பலருக்குத் தெரியாத ரகசியம்.

கவுன்சிலர்களையும், அதிகாரிகளையும் காக்காய் பிடிப்பதிலும், அவர்களுக்குப் பணிவிடை செய்வதில் சமர்த்தன் என்பதால், அந்த வார்டிலிருந்து அவனுக்கு எந்த அதிகாரியும் மாறுதல் கொடுத்தது கிடையாது. எனவே, வேலு நாயக்கர் பணி செய்யும் மூன்றாவது வார்டில் அவன் வைத்தது தான் சட்டம். முடிகூடா மன்னன் மட்டுமல்லாமல் அந்த நகர சபையில், ஆள்பலமும், நிர்வாக பலமும் கொண்ட உத்தியோகஸ்தன். மாற்றலாகி வரும் முனிசிப்பல் அதிகாரிகள் கூட வேலு நாயக்கனை அனுசரித்துத்து தான் போக வேண்டும். இல்லையென்றால், அதிகாரிக்கு எதிராக மொட்டைப் பெட்டிஷன்கள் மேல் அதிகாரிகளுக்குப் பறக்கும்.

வேலுநாயக்கன், பணிக்குக் கிளம்பினான் என்றால் கையில் சவுக்கு இல்லாமல் வர மாட்டான். தப்புத் தவறு செய்யும் முனிசிப்பல் ஊழியர்களிடம் அவன் பேச மாட்டான். அவனது சவுக்குத் தான் பேசும். ஆண் பெண் பேதம் பாராட்டாமல், மயங்கி விழும்படி அடிப்பான். தூக்கிப் போட்டுப் பந்தாடுவான். யாரும் அவனைத் தட்டிக் கேட்கக் கூடாது.

பெண்கள் விஷயத்தில் நாயுடு அர்ஜுன மகாராஜா மாதிரி, குப்பைக் கூட்டும், மலம் அள்ளும் பெண்கள் அவன் அனுபவித்தது போக மிச்சம் தான் கட்டின கணவனுக்கு. பெண்களிடம் நாயக்கர் முயங்கும் போது யாராவது தலையிட்டால் அவனுக்குச் சண்டாளமாகக் கோபம் வரும். யானை மாதிரி ஒதுக்கி வைத்துப் பழி தீர்த்துக் கொள்ளுவான்.

ஆனால், முனிசிப்பல் தொழிலாளர் சங்கம் தொடங்கப்பட்ட பின்பு, நாயக்கரின் அடாவடித்தனம் தொழிலாளர்களிடம் அவ்வளவாக எடுபடவில்லை. சாட்டையை ஓங்க முடியவில்லை.

"சாமி சாட்டை வாராலே அடிச்சேண்டா சங்கத்திலே சொல்லிப் போடுவம்" என்று தொழிலாளர்கள் எதிர்த்துக் குரல் கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள் லஞ்சம் பெறுவதைக் கூட முன்னைப் போல அதிகார தோரணையில் வெளிப்படையாக மிரட்டிப் பெறமுடியவில்லை. ஆயிரம் பொய்யைப் பேசி இலை மறை காய் மறையாக வாங்க வேண்டிய நிலைமைக்கு நாயக்கன் தள்ளப் பட்டிருந்தான்

பெண்கள் கூட சுதாரித்துக் கொண்டு விட்டார்கள் அத்தலைஞ்சு, மானம் மரியாதை கெட்டலையும் ஒன்றிரண்டு மத்திய வயதுப் பெண்கள் அல்லாமல் மற்ற பெண்களிடம் அவனது ஜம்பம் பலிக்கவில்லை நாயக்கனுக்கு மெத்த மன வருத்தம். சங்கத்தைக்காட்டித் தொழிலாளர்கள் அவனை மிரள வைப்பதால் வேலு நாயக்கனுக்குச் சங்க உறுப்பினர்கள் மீதும் அவர்களது தலைவர்கள் மீதும் கடும் கோபம். சங்கத்தை ஒழித்துக் கட்டுவதற்குத் தன்னாலான சகலத்தையும் செய்து கொண்டிருந்தான்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில், புதிதாகத் துப்புறவுப் பணியாளராக நியமிக்கப்பட்ட, இறந்துபோன இருளப்பப் பகடையின்மகள் பொம்மியம்மாள் என்கிற பதினாறு வயதுக்குமரியின் உடல் வாகில் லயித்துப் போன வேலு நாயக்கன், அவளைத் தன் வலையில் சிக்க வைக்கும் நோக்கில், அவளிடம் ஆசை வார்த்தை பேசி மார்பில் கையைப் போட்டு விட்டான். அனாதைப்பெண் அவளை மடக்கிப் போடலாம் என்பது வேலுநாயக்கனின் திட்டம்.

பயந்து நடுங்கிப் போன பொம்மி வீராயியிடம் வார்டில் வேலை செய்யும் மற்ற துப்புறவுத் தொழிலாளர் பெண்களிடமும் அழுது முறையிடவும் அந்த வார்டுக்கான சங்கப் பிரதிநிதி என்கிற வகையில் பெண்கள் சுப்பவாடனிடமும் விஷயத்தைச் சொல்லி முறையிடலானார்கள். சுப்பவாடன் வேலுநாயக்கனை நல்வழிப்படுத்த வேண்டும் என்று அப்பாவித்தனமாக

"வேணாம் நயினா வேணாம். தாய் தகப்பனில்லாத அனாதைப் பொண்ணு. ஒம்மவளாட்டம் பச்சப்புள்ளெ. உப்ப ஊனியன் அல்லாம் வந்திரிச்சு. சங்கத்துலே சொன்னாளெண்டா. வெடலெப் பசங்க. ஒன்னைய அசிங்கம் படுத்திப் போடுவாணுவ" என்று புத்திமதி கூறுவது போலச் சொல்லவும் வேலுநாயக்கன் ஏளனமாகச் சிரித்தான்

"பாருடா சங்கம் வெச்சதும் சக்கிலியப் பயவ அல்லாம் நமக்கும் புத்தி சொல்லக் கிளம்பிட்டான்" என்று சுப்பவாடனைப் பார்த்துச் சொன்னான்.

"ஆட்டைக் கடிச்சு மாட்டைக்கடிச்சு மனிசனைக் கடிச்சதாட்டம் நம்ப கிட்டேயே சருக வாரான்களா யூனியன் மெம்பரிண்ணா ரெண்டு கொம்பு முளைச்சிருக்கிண்ணு நெனப்பு" என்று வெளிப்படையாகப் பேசினவன்

"இருடாலே, ஒனக்கு ஆப்பு இருக்கு" என்று மனதுக்குள் கருவிக் கொண்டு, தனது மேற்பார்வை வேலையைப் பார்க்கப் போகிற சாக்கில் பிள்ளைமார் தெருவை நோக்கிப் போனான்.

வேலுநாயக்கன் பொறுப்பில் இருக்கும் இரண்டு வார்டுகளும், நகரின் முக்கியமான ஜாதிகளான பிராமணர்களும், பிள்ளைமார்களும் குடியிருக்கும் தெருக்கள். முனிசிப்பல் நிர்வாகமே அந்த இரண்டு வார்டுகளிலும் தனிக் கவனம் கொண்டிருந்தது. எனவே, எடுப்புக் கக்கூசுகளும், தெருக்களும் நாளைக்கு இரண்டு தடவையாவது, அதாவது காலையும், மாலையும் சுத்தம் செய்யப்பட வேண்டும். இல்லையென்றால் தெருப்பிரமுகர்கள் உடனடியாக அதிகாரிகளுக்குப் புகார் எழுதி விடுவார்கள். கமிஷனர் அவனைச் சும்மா விடமாட்டார். நிர்வாகத்தின் கண்டனத்துக்குப் பயந்து, கண்ணில் விளக்கெண்ணையை ஊற்றிக் கொண்டு பணிகளை மேற்பார்வையிட வேண்டியிருந்தது.

வேலு நாயக்கன் அய்யர்மார் தெருவேலைகளைக் கண்காணித்துவிட்டு, பிள்ளைமார் தெருவுக்கு வரும்போது கிராம முன்சீப் சந்தில், நகரசுத்திப் பெண்கள், ஒவ்வொரு வீட்டின் பின் கட்டிலும் உள்ள எடுப்புக் கக்கூசுகளைச் சுத்தம் செய்து மலக் கழிவுகளைக் கூடைகளிலும், சட்டிகளிலும் சேகரித்து, வடியவடியத் தலை பாரமாகச் சுமந்து வந்து மலக்கழிவு (நைட்சாயில்) வண்டியில் கொட்டிக் கொண்டி ருந்தார்கள். ஆண்கள் தெருவையும், சாக்கடையையும் சுத்தம் செய்து குப்பைக் கூளங்களைச் சேகரித்துக் கொண்டிருந்தனர்.

சுப்பவாடன் மலக்கழிவு வண்டியின் நோக்காலில் உட்கார்ந்து வழக்கம்போல் வெற்றிலையை மென்று மலக் கழிவின் வீச்சத்தைத் தாங்க மாட்டாமல் மடியில் இருந்த அங்குவிலாஸ் சுருப்பட்டி மட்டைப் புகையிலையை அள்ளி வாயில் போட்டுக் குதப்பிக் கொண்டிருந்தான். காலை வெயில் இதமாக இருந்ததால், தலை வேட்டியை அவிழ்த்துக் கூந்தலைத் தட்டி முடிந்து மீண்டும் தலைப்பாகையைக் கட்ட முயன்ற போது வேலு நாயக்கனின் கர்ஜனையைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான்.

"தாயழி எறங்கி வாடா மருவாதையில்லாம என்னமோ பண்டார சன்னதி பல்லக்கிலே பவனிவர்ரதாட்டம் பீ வண்டியிலே ஒய்யாரமா ஒக்காந்திருக்கே" என்று சொன்னபடியே தன்கையில் இருந்த சவுக்கால் ஓங்கி அறைந்தான். சுப்பவாடனது தோள் பட்டையிலும் வலது கன்னத்திலும் சாட்டைபட்டுக் காயம் ஏற்பட்டது.

"நான் மலையாட்டம் வந்து நிக்கது கூட மவாராசாவுக்கத் தெரியலையோ" மீண்டும் சாட்டை வாரினால் தாக்கலானான்.

சுப்பவாடன் சாட்டை அடியையும் வாங்கிக் கொண்டு, வண்டியை விட்டு இறங்கிக் கைகட்டி வாய் புதைத்து நின்றான். வேலுநாயக்கன் சர்க்கஸ் மிருகங்களை வசக்குவது போல, அவன் வார்டு நகரசுத்தித் தொழிலாளர்களைப் பயமுறுத்திப் பணியவைத்திருக்கிறான்.

வெகு காலையில் சுப்பவாடன் தனது ஆசையை நிறைவேற்ற விடாமல் தடுத்து விட்டதில் ஏற்பட்ட கோபம் தலைக்கேறி நின்றது.

"வக்காளி சங்கம் வச்சதுக்கப்புறம் சக்கிலியப் பயவளுக்கெல்லாம் குளிர்வுட்டுப் போச்சு" என்று மேலும் தூஷனை வார்த்தைகளால் அவமானமாகப் பேசினான்.

அந்த அவமானத்தையும் தாங்கிக்கொண்டு மௌனமாகச் சுப்பவாடன் நின்றிருந்தான்.

"ஒங்களைச் சொல்லிக் குத்தமில்லேடா. அந்த பாப்பாரப் பயலையும், பிரதரிங்கிற பறச் செருக்கி மவனையும் சொல்லணும். ஒங்களை அல்லாம் உசுப்பி விட்டு வேடிக்கை பாக்கிறானுவ" என்று ஆத்திர மூட்டும் வகையில் வேலு நாயக்கன் பேசவும், சுப்பவாடனுக்குக் கோபம் ஏற்பட்டது.

"எங்களை வேணா எம்புட்டும் திட்டு சாமி தலைவர்களைப் பேசாதை. நல்லாருக்காது" அமைதியாக வேலுநாயக்கனைப் பார்த்துச் சொன்னான்.

"என்னடா தலைவர்களைச் சொல்லவும் ரோசம் பொத்துகிட்டு வருது. தாயழி பாப்பரப் பயலுக்கும், கிறிஸ்துவப் பயலுக்கும் சக்கிலியப் பயலுவனுக்கும் என்னடா ஒறவு மாமன் மச்சினன் உறவோ"

"அவங்க எங்களுக்கு உசிர் கொடுத்த தெய்வம் மாதிரி. வாய்க்கு வந்த மேனியாப் பேசாதை சாமி" அவனது நயனங்களில் கோபத்தின் சாயல் தென்பட்டது.

"ஒங்க அய்யரும், பிரதரும், எம் பூளுக்குச் சமம்டா. அய்யராலேயும், பிரதராலேயும் என்னோட கடைக்கால் மசிரைக் கூட புடுங்க முடியாது." வாய்க்கொழுப்பாகப் பேசினான்.

அவ்வளவுதான் சுப்பவாடன் "ஒரே தொங்கா , என்னடா சொன்னே, ஆரப்பாத்து சொல்றே தேவடியா மவனே"

என்று இறைந்த வண்ணம் மதம் பிடித்த காண்டா மிருகமாக வேல்நாயக்கன் மீது பாய்ந்தான். அப்படியே அலக்காகத் தூக்கி ஆகாயத்தில் சுழற்றி வீசினான். சூறாவளிக்காற்றில் சிக்கிய சருகாகச் சுழன்ற நாயக்கர் மலக்கழிவு நிரம்பி வழியும் வண்டியில் போய் விழுந்தான். உடம்பெல்லாம் மலக்கழிவு ஒட்டி வடிந்தது.

வேலு நாயக்கனின் அலறலைக் கேட்டு சாக்கடையை ஒதுக்குவதிலும், குப்பைக் கூளங்களை அள்ளிச் சேர்ப்பதிலும், மலக்கழிவுகளை அகற்றுவதிலும் ஈடுபட்டிருந்த துப்புறவுத் தொழிலாளர்கள் பதறியடித்துக் கொண்டு ஓடி வந்து கூடினார்கள்.

களேபரத்தில் மிரண்டு போன வண்டிக்காளை நாலுகால் பாய்ச்சலில் தெருவில் ஓட ஆரம்பித்தது.

பட்டாளத்து வேலு நாயக்கன், உயிரே போனது மாதிரி அலறி அடித்துக் கொண்டு ஓடும் நைட் சாயில் வண்டி யிலிருந்து குதித்தான் சரளைக்கல் பதித்த சாலையில் முகம் குப்புற விழுந்து எழுந்த போது மலக்கழிவும், உதிரமும் கலந்து உடம்பில் வடிந்த போது, சாயம் பூசப்பட்ட பெருமாள் கோவில் சுவர்போல் பரிதாப கோலத்தில் நின்றான்.

கோபம் தணியாத சுப்பவாடன் திரும்பவும் அவனைத் தாக்குவதற்குப் பாய்ந்தான்.

"ஒரே, இன்னொரு வாட்டித் தலைவர்களைப் பேசுன. தேவடியா மவனே ஒம் ஒடம்புலே உசிரு இருக்காது" கோபாவேசமாகப் பேசினான்.

சக துப்புரவுத் தொழிலாளர்கள் சுப்பவாடனை எகிறவிடாமல் பிடித்துச் சமாதானம் செய்யலாயினர். மலக்கலவை சொட்டச் சொட்ட வேலுநாயக்கன் தெருவைவிட்டு வெளியேறினான்.

●

முனிசிப்பல் காலனியில் இருள் கவிழத் தொடங்கியது.

சங்க ஆபீஸ் முன்னால் காலனியில் உள்ள ஆண்களும் பெண்களும் கூட்டமாக நிற்கிறார்கள்.

சுப்பவாடன் கன்னத்தில் வெற்றிலைக் கலவையைக் குதப்பிய வண்ணம், சங்கத்தின் தாழ்வாரத்தில் அப்பாவியாக நின்று கொண்டிருக்கிறான். என்ன செய்வது என்று புரியாமல் வீராயி கையைப் பிசைந்து கொண்டு அவன் அருகில் நின்று கொண்டிருக்கின்றாள். சுப்பவாடனுக்கு வேலைபறி போய் விடும் என்று அவளுக்குப் பயம்.

சங்க ஆபீஸிலும் மேஜையின் மீது ஏற்றி வைக்கப் பட்டிருக்கும் அரிக்கேன் விளக்கு, சன்னமாக ஒளியை நாலா பக்கமும் வீசிக் கொண்டிருக்கிறது.

மேஜையின் வலது பாரிசத்தில் போடப்பட்டிருக்கும் பெஞ்சில் சங்கத்தின் உப-தலைவர் மாயவனும் நிர்வாகக் குழு உறுப்பினர்களும் உட்கார்ந்திருக்கின்றனர். மேஜையின் முன்னால் கிடக்கும் நாற்காலிகளில் மாற்றலாகி வந்திருக்கும் ஹெட் கான்ஸ்டபிள் சத்திய நேசனும், வேலுநாயக்கர் வேலைசெய்யும் வார்டு கவுன்சிலர், ஆதிநாத நாயுடுவும், ஒருவரோடு ஒருவர் ரகசியமாகப் பேசிய வண்ணம் உட்கார்ந் திருக்கின்றனர்.

வேலு நாயக்கன் அரசு மருத்துவ மனையில் உள் நோயாளியாக அனுமதிக்கப் பட்டிருக்கிறான்.

வேலு நாயக்கன், போலீஸ் அதிகாரிகளுக்கும், முனிசிப்பல் கமிஷனருக்கும் கொடுத்த புகாரை விசாரித்து சுப்பவாடனைக் கைது செய்து கொண்டு போவதற்காக வந்தவர்கள், சங்க நிர்வாகிகளும், நகர சுத்தித் தொழிலாளர் களும் காட்டிய எதிர்ப்பின் காரணமாக சத்திய நேசன், மற்றும் தலைவர்களின் வருகையை எதிர்பார்த்து உட்கார்ந்திருக்கிறனர்.

ஆதிநாதன் வார்டு கவுன்சிலர் மட்டுமல்லாமல் உள்ளூர் நாயுடு சங்கத்தின் தலைவரும் கூட. கட்டபொம்மன் வம்சத்தைத் சேர்ந்த, வீரபரம்பரையினரான ஒரு நாயுடுவைத் தாழ்த்தப்பட்ட ஈன சாதிக்காரன் தாக்கி அவமானப் படுத்தியிருப்பது ஆதிநாதன் நாயுடுவுக்கு உள்ளூர மகாவிசனம். எனவே சுப்பவாடனைக் கைது செய்து கொண்டு போய், ஸ்டேஷனில் வைத்து நையப்புடைத்து ஊனப் படுத்த வேண்டும் என்பது அவனது திட்டம் இல்லையென்றால் நாயுடு மகாஜனங்களே கொதித்தெழுந்து ஜாதிக்கலவரமே ஏற்பட்டுவிடும் என்று சப்-இன்ஸ்பெக்டரையே மிரட்டிக் கான்ஸ்டபிள் சத்திய நேசனைக் காலனிக்குக் கூட்டி வந்திருக்கிறான்.

சம்பவம் பற்றி யூனியன் தலைவர்கள் காலையிலேயே போன் மூலம் தெரிவித்திருந்தனர். எனவே கோயம்பத்தூரில் இருந்து மாற்றலாகி வந்திருக்கும் சப்-இன்ஸ்பெக்டர் அப்துல்லா, சத்திய நேசனை மிகவும் சாதுரியமாக நடந்து கொள்ள வேண்டும் என்று எச்சரிக்கை செய்து அனுப்பியிருந்தார். அல்லாமலும் சத்தியநேசன் தாழ்த்தப்பட்ட புராட்டஸ்டன்ட் கிறிஸ்தவர். மேல் ஜாதி உத்தியோகஸ்தர்களால், பெரிதும் அவமானப்படுத்தப்பட்ட போதும் பிழைப்பைக் கருதி மௌனமாகச் சகித்துக் கொண்டிருப்பவன்.

தன்னால் முடியாததை ஒரு நகர சுத்தித் தொழிலாளி மேல் ஜாதிக்காரக் கும்மனாட்டியை நையப் புடைத்திருப்பது

உள்ளூற மகிழ்ச்சி. தழும்பேறிப் போன வடுவுக்கு ஒத்தடம் கொடுத்தது போன்ற இன்பம் இருந்தாலும் வெளிப் படையாகக் காட்டிக் கொள்ள முடியவில்லை எனவே சுப்பவாடனைக் கைது செய்யாமல் நேரத்தைக் கடத்திக் கொண்டிருந்தான்.

சத்தியநேசனின் மெத்தனமான நடவடிக்கையால் பொறுமை இழந்து வெகுண்டு போன கவுன்சிலர் ஆதிநாதன் நாயுடு "ஏட்டையா என்ன சார் இது? அவங்க சொல்றதைக் கேக்க வந்திருக்கையா இல்லே அந்தச் சக்கிலியப் பயலைக் கைது செய்ய வந்திருக்கயா. ஒரு சக்கிலியப் பய ஒரு நாயக்கன் மேலே கை வச்சிருக்கான்" என்று எகிறிய போது

"இந்தா பாருய்யா, சக்கிலியப்பய அப்படி இப்படி யிண்டெல்லாம் சாதியப்பத்திப் பேசினே. மானங்கெட்டுப் போவும். ஏட்டையா அந்த ஆள மருவாதையாப் பேசச் சொல்லுங்க"

பெண்கள் பகுதியில் இருந்து குரல் வரவும் ஆதிநாதன் ஏறிட்டுப் பார்த்தான். சிட்டம்மாள் சேலையை வரிந்து கட்டிய வண்ணம் குரல் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

"யக்கோவ் கோவப்படாதை. நாங்க இருக்கோமில்லே" என்று மாயன் சொல்லவும் தனக்குள்ளேயே முனங்கிய வண்ணம் அப்பால் போனாள்.

"நாயுடு மருவாதையாப் பேசுய்யா காக்காக் கூட்டம் எசகுப் பிசகா நடந்துக்கிட்டே ஒன்னோட சேந்து நானும் மொத்துப்பட வேண்டியது தான்" என்று கவுன்சிலரைச் சத்திய நேசன் எச்சரிக்கை செய்யவும் பிரதர் தங்கசாமியும் வேறு பிரமுகர்களும் ஆபீசுக்குள் வருவதற்கும் சரியாக இருந்தது. கூட்டத்தின் சலசலப்பும் அரவமும் ஓய்ந்து அமைதி ஏற்பட்டது.

மேஜைக்கு முன்னால் இருக்கும் தனது இருக்கையில் அமர்ந்த பிரதர் தங்கசாமி "ஏட்டையா, சுப்பவாடனைக்

கைது செய்து கூட்டிட்டுப் போக வந்தீங்களாக்கும்" என்று அமைதியாகக் கேட்டார்.

சத்திய நேசன் பதில் பேசவில்லை. மௌனமாக உட்கார்ந்திருந்தார்

"பாருங்க தலைவரே என்ன இருந்தாலும் வேலு நாயக்கர் கௌரவமான சர்க்கார் உத்தியோகஸ்தர் அவருக்கிட்டே ஒரு தூப்புக்காரப் பய சிலுவை இழுக்கலாமா அடிச்சுக் கேவலப் படுத்தியிருக்கான் கமிஷனரும், இன்ஸ்பெக்டரும் ரொம்பக் கோவமா இருக்காங்க. நெலமை மோசமாப் போறதுக்கு மின்னால சுப்பவாடனை ஒப்படைச்சுப் போடுங்க" என்று ஒருவித அதிகார தோரணையில் கவுன்சிலர் பேசுவதை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த பிரதர் தங்கசாமி,

"சுப்பவாடனைக் கைது செய்யறது இருக்கட்டும். வேலு நாயக்கரைக் கைது செய்திட்டீங்களா?" என்று கேட்கவும் மலைத்துப் போன கவுன்சிலர்,

"என்ன அய்யா சொல்றீங்க ஒங்க ஆளு அவரைத் தாக்கிப் பீ வண்டியிலே வீசி ஒதைச்சிருக்கான். ஒதை வாங்கின மனிசனைக் கைது செய்யச் சொல்றீங்களா? நல்லாருக்குய்யா ஒங்கநாயம் குதிரை கீழே தள்ளினது மட்டுமில்லாம குழி பறிச்ச கதையா ஆஸ்பத்திரிலே இருக்க மனிசனைக் கைது செய்யச் சொல்றீங்களாக்கும். நாயக்கன் ஒரு அரசு அதிகாரி" கோபம் தொனிக்கச் சற்று உரக்கப் பேசினான்.

"கவுன்சிலர் சார் எல்லாத்தையும் விசாரிச்சிட்டுப் பேசணும் நாயக்கர்தான் எந்தக் காரணமும் இல்லாமல் சாட்டை வாரால சுப்பவாடனைத் தாக்கியிருக்கார் மட்டுமில்லிங்க காலம்பரவே, பொம்மியம்மாங்கிற கன்னிப் பொண்ணண்டை தப்பா நடந்திருக்கான். இதையெல்லாம் பொறுத்திட்டு இருக்கணமா. ஒங்க ஆளுக்குத்தான் கோபம் வருமா எங்க ஆளுக்குக் கோபம் வரக்கூடாதா"

பிரதர் தங்கசாமியின் பதிலைக் கேட்டபோது கவுன்சிலருக்குக் கடும் கோபம் ஏற்பட்டது.

"ஏட்டைய்யா, வேடிக்கை பாக்கவா வந்தீரு? அவனைக் கைது செய்யப் போரீரா இல்லையா கைது செய்யலையானா ஒம்ம மேலே கமிஷனர் கிட்டேயும் எஸ்.பி. கிட்டேயும் கம்ளெயிண்டு கொடுக்க வேண்டி வேண்டிவரும்."

கோபாவேசமாகப் பேசினான். சத்தியநேசனுக்கு இக்கட்டான நிலைமை. கவுன்சிலர், சுப்பவாடனைக் கைது செய்யாமல் அங்கிருந்து நகர மாட்டான். ஆனால் சங்க ஆபீஸின் முன்னால் கூடியிருக்கும் நகர சுத்தித் தொழிலாளர்கள் சுப்பவாடனைக் கைது செய்து கொண்டுபோக விட மாட்டார்கள்.

"கவுன்சிலர் அய்யா, கொஞ்சம் பொறுமையா இருங்க" என்றவன் தங்கசாமியைப் பார்த்து

"வம்பு எதுக்கு? நீங்களே ஸ்டேஷன் வரையிலே வந்து ஒரு வார்த்தை சொல்லிவிட்டு வந்திருங்க. இல்லேயானா நீங்களே சுப்பவாடனை ஸ்டேஷன்லே கொணாந்து ஒப்படைச்சிருங்க" என்று பஞ்சாயத்துச் செய்வது போல் சொன்னான்.

சத்தியநேசன் இப்படிச் சொன்னபோது சங்கத்தின் முன்னால் கூடியிருந்த தொழிலாளர் மத்தியில் சலசலப்பு ஏற்பட்டு மாயவன் அவர்களைச் சமாதானம் செய்து கொண்டிருந்தான்.

"ஏட்டைய்யா உண்மையில் சுப்பவாடன் தவறு செய்திருந்தா, அவரைப் போலீஸில் ஒப்படைக்கிறதிலே அர்த்தம் இருக்கு. ஆனால் சம்பவத்தைப் பார்த்தா நிலமை வேறு மாதிரியா இருக்கு.

எதுக்கும் நீங்க கொஞ்சம் வெயிட் பண்ணுங்க. தலைவர்கள் கமிஷனரோடும் சம்மந்தப்பட்ட அதிகாரி களிடத்திலேயும் பேசிட்டு இருக்காங்க. பேச்சுவார்த்தை இனியும் முடியலை. தலைவர் வக்கீல் சங்கரன் வந்ததும் நாம்

முடிவு செய்யலாம். நீங்க அவசரப்பட்டா நிலமை சிக்கலாகிப் போகும். நீங்க வேணம்ண்ணா சுப்பவாடனைக் கைது செய்து கூட்டிட்டுப் போகலாம். நாளை நகர சுத்தித் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வாங்க ஊர் நாறிப் போயிடும். சம்மதமா" இப்படி ஒரு பாணத்தை தூக்கிப் போடவும், கவுன்சிலர் வாயடைத்துப் போனான்.

இந்த வம்பு நமக்கு எதற்கு என்பது போல் சத்திய நேசன் ஆதிநாத நாயுடுவைப் பார்த்தான்.

இதற்குள் சங்கரன் "என்ன சத்ய நேசன் சௌக்கியமா" என்று கேட்ட வண்ணம் சங்க ஆபீசுக்குள் நுழைந்த போது எல்லோர் கவனமும் அவர் மீது படிந்தது.

சத்தியநேசன் இருக்கையினின்றும் எழுந்து நின்று சலாம் வைத்தான் மாயவன் கொண்டு வந்து போட்ட நாற்காலியில் உட்கார்ந்த சங்கரன், தனது நெற்றியில் அரும்பி நின்ற வியர்வையைத் துடைத்து விட்டுச் சற்று நேரம் அமைதியாக உட்கார்ந்திருந்தார்.

"சாமி, என்ன சொல்றீங்க" சத்தியநேசன் வழக்கம் போல் கைகட்டி நின்ற வண்ணம் கேட்டார்.

"சத்தியநேசன் பழைய பழக்கத்தை இனியும் விட மாட்டீங்களா? கூச்சப்படாம நீங்க என்னைப் பேர் சொல்லிக் கூப்பிடலாம்" என்று புன்முறுவல் பூத்தவண்ணம் சொன்னவர்,

"உங்களுக்கு நாங்க சிரமம் கொடுக்கப்போரதில்லை. எஸ்.பி.விசாரணையில, வேலுநாயக்கர் தான் அக்ரஸர் (ஆக்கிரமிப்பாளர்) என்று ருசுவானதாலே. நாயக்கரே தான் கொடுத்த கம்ப்ளெயிண்டை வாபஸ் வாங்கிண்டார்" என்றதைக் கேட்டு அதிர்ந்து போன கவுன்சிலர் "என்ன ஏட்டையா சாமி என்ன சொல்லுதார்" தொண்டை கனக்கச் சத்திய நேசனை வினவினான்.

சத்தியநேசன் ஆகுவாசப் பெருமூச்சு விட்ட வண்ணம் "அய்யா தான் சொல்லிட்டாங்கல்லே வாய்யா போவலாம்" என்றபோது, அவன் போலீஸ் கான்ஸ்டபிளை முறைத்துப்

பார்த்தான். தோல்வியின் வேதனையும் அவமான உணர்வும் அவன் முகத்தில் இருந்தது.

சத்தியநேசன் மீண்டும் சங்கரனுக்குச் சலாம் வைத்துவிட்டு வெளியே வந்தபோது வேறு வழியில்லாமல் சுவுன்சிலரும் கூட்டத்தைவிட்டு வெளியேறினான், சங்கரன்.

"சுப்பன் இப்படி உள்ளே வாருங்கோ" என்று அழைக்கவும் கட்டுண்ட பூதமாகத் தலையைக் குனிந்த வண்ணம் சுப்பன் சங்கரனது எதிரில் வந்து கை கட்டி நின்றான்.

சமுதாயத்தில் கடையோனாக ஏன் மனிதப் பிறவியாகக் கூட கருதப்படாத அந்த மனிதனைச் சங்கரன் மரியாதை விகுதி போட்டு அழைத்தபோது அவனுக்குத் தொண்டை அடைத்தது.

சங்கரனுக்கு அந்த மனிதன் தன்மான உணர்வு பெற்று உயிர்த்தெழுந்து நின்றதைப் பார்க்க வியப்பாக இருந்தது.

"தோழர் சுப்பன் சும்மா வாங்க. இப்படி உட்காருங்கோ. ஏன் கூச்சப் படறேள். நாம அல்லாம் சரிநிகர் சமான மனித ஜீவன்கள்" என்று தன்னோடு அணைத்து ஆசனத்தில் உட்காரவைத்தபோது, சுப்பவாடனது மெய் சிலிர்த்தது. உடல் குலுங்கியது.

அவனது பஞ்சடைந்த கண்களில் நீர் பனித்தது.

மடை உடைந்தது போல், கரங்களால் முகத்தை மூடிக்கொண்டு விம்மி விம்மி குலுங்கிக் குலுங்கி அழுதான்.

காலம் காலமாகப் பிணைத்து அழுத்திக் கொண்டிருந்த ஏதோ ஒன்று தன்னுள் உடைந்து நொறுங்குவதை அவன் உணரலானான்.

24

அந்த ஆண்டு தோல் பதனிடும் தொழிலாளர் சங்கம் புதிய சம்பளம் மற்றும் அதிகப்படியான போனசும், பஞ்சப்படியும் கேட்டுக் கோரிக்கை வைத்திருந்தது. மேல்நாடுகளுக்கான தோல் ஏற்றுமதி அதிகமாகி இருந்ததால் முதலாளிகள் கொள்ளை லாபம் ஈட்டியிருந்தனர்.

லேபர் கமிஷனர் முன்னால் நடைபெற்ற முத்தரப்புப் பேச்சுவார்த்தையின் போது தோல் ஷாப்பு முதலாளிகள் தொழிலாளரின் கோரிக்கையை முற்றாக நிராகரித்து விட்டதால் பேச்சுவார்த்தை முறிவுற்றுச் சங்கத்தின் சார்பில் வேலை நிறுத்த நோட்டீஸ் ஒவ்வொரு தோல் ஷாப்புக்கும் அரசுக்கும் கொடுக்கப்பட்டிருந்தது.

எனவே, சங்கத்தால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளில் அடங்கிய நியாயத்தையும் வேலை நிறுத்தம் செய்ய வேண்டியதன் அவசியத்தையும், தொழிலாளர்கள் மத்தியில் விளக்கிச் சொல்ல வேண்டிய நிலைமை தலைவர்களுக்கு ஏற்பட்டிருந்தது.

இதுபோன்ற வேலை நிறுத்த நோட்டீஸ், வாணியம்பாடியிலும், சென்னையிலும், திருச்சியிலும் தோல் ஷாப்பு முதலாளிகளுக்கும், அரசு அதிகாரிகளுக்கும் சம்மந்தப்பட்ட சங்கங்களால் கொடுக்கப்பட்டிருந்ததால், அது சென்னை மாகாணம் தழுவிய வேலை நிறுத்தமாக உருவெடுக்கும் புதிய சூழ்நிலை ஏற்பட்டிருந்தது. அல்லாமலும் அய்ரோப்பாக் கண்டத்தில் அரசுகளுக்கிடையில் நடைபெற்றுக்

கொண்டிருக்கும் யுத்தமானது ஏகாதி பத்தியங்களுக்கு இடையிலான யுத்தம் என்பதாலும், பாட்டாளி, உழைப்பாளி மக்கள் நலனுக்கு எதிரானது என்பதாலும், ஏகாதிபத்திய யுத்தத்தை இந்திய மக்கள் எதிர்க்க வேண்டியதன் அவசியத்தையும், தொழிலாளர் களுக்கும், மக்களுக்கும் எடுத்துச் சொல்ல வேண்டிய கடமையும், தொழிற்சங்கத் தலைவர்களுக்கு ஏற்பட்டிருந்தது.

எனவே, சங்கத்தின் சார்பில், ஒவ்வொரு தோல் ஷாப்பு முன்னாலும் தோல் ஷாப்புத் தொழிலாளர்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகளிலும், கேட் கூட்டங்களும், பொதுக் கூட்டங்களும் முறையாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. சங்கரன் ஓய்வு ஒழிச்சலின்றிப் பொதுக்கூட்டங்களிலும் கேட்ட கூட்டங்களிலும் கலந்துகொண்டார்.

நாளுக்கு நாள் தொழிலாளர்கள் மத்தியில் ஏற்பட்டு வரும் ஒற்றுமையையும் வேலை நிறுத்தத்துக்குப் பெருகிவரும் ஆதரவையும் கண்டு தோல் ஷாப்பு முதலாளிகள் கொதித்துப் போயிருந்தனர். இவற்றுக்கெல்லாம் சங்கரனும், அவரது தோழர்களும் தான் காரணம் என்று கருதிய தோல் ஷாப்பு முதலாளிகள் சங்கரனைப் பழி வாங்குவதற்கான சந்தர்ப்பச் சூழ்நிலையை மீண்டும் எதிர் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அன்று வத்தலக்குண்டு சாலைப் பகுதிக் கூட்டம் என்பதால், வத்தலக்குண்டு சாலையிலும், மதுரைச் சாலையிலும் உள்ள தோல் ஷாப்புகளில் பணிபுரியும், தோல் ஷாப்பு தொழிலாளர்கள் தங்கள் வேலைகளை முடித்துக் கொண்டு மாரியம்மன் கோவிலை ஒட்டியிருக்கும் இரட்டை ஆலமரத்துக்கடியில் கூடிக் கொண்டிருக்கின்றனர்.

கூட்டத்துக்கான ஏற்பாடுகளைச் செய்யும் பொறுப்பு மகமதியாபுறம் அஸன் மறக்காயர் மேஸ்திரி, சவரிதாஸ் மேஸ்திரி மற்றும் அந்தப் பகுதி தோல் ஷாப்புக் கிளைகளின் பொறுப்பாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததால் அவர்கள் கூட்டத்துக்கு வரும் தொழிலாளர்களை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தனர்.

கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்பதற்காக வேண்டி, ஆண் பெண் தொழிலாளர்கள் சீக்கிரமாகவே தங்களது வேலைகளை முடித்துக் கொண்டு கூட்டம் நடக்கும் இடத்தில் வந்து குழுமிக் கொண்டிருக்கிறார்கள்.

சூரியன் இன்னும் மேற்கு மலைக் குவடுகளுக்குள் விழவில்லை. மேற்கு வானில், வெண்மேகக் கூட்டம் அங்கு மிங்குமாய் பரவிக் கிடக்கிறது. மேகக் கூட்டத்தை ஊடுருவிப் பாயும் மாலைக் கதிரவனின் செங்கதிர்கள் வானப் பரப்பையே, தங்க முலாம் பூசப்பட்டது போன்ற மாலை மயக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. உணவு தேடும் பணியை முடித்துக் கொண்ட பறவைக் கூட்டம் இரவின் அடைக்கலம் நாடி, சிறுமலை அடிவாரத்தை நோக்கிக் கூட்டம் கூட்டமாகப் பறந்து போய்க் கொண்டிருக்கின்றன.

கூட்டம் நடக்கும் இடத்தைக் குறி வைத்து, சாலையோரம் நிறுத்தப்பட்டிருக்கும் தள்ளுவண்டிக் காரனிடம் வேகவைத்த குச்சுக் கிழங்கையும், மொச்சைப் பயிறு கலவையையும், சுக்குக் காப்பியையும் வாங்கித் தொழிலாளர்கள் அப்போதைக்குத் தங்களது பசியை ஆற்றிக் கொள்கின்றனர். எப்படியும் கூட்டம் முடிவதற்கு இரவு வெகுநேரம் ஆகிவிடும் என்பது அவர்களது கணிப்பு.

வழக்கம்போல், கூட்டத்தில் தகராறு செய்ய வரும் சமூக விரோதிகளையும், அடியாட்களையும் கண்காணிக்கும் பொறுப்பு ஒசேப்பிடமும், மினிசாமியிடமும், அவர்களைச் சேர்ந்த வாலிபர் அமைப்பிடமும் ஒப்படைக்கப் பட்டிருப்பதால் அவர்கள் மிகவும் கவனமாக ஒவ்வொரு வரையும் கண்காணித்த வண்ணம் கூட்டத்தை ஒழுங்கு படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

இருதயசாமியும் தோழர் வேலாயுதமும் வேலை நிறுத்தத்தை உடைக்க முதலாளிகள் தங்கள் அடியாட்கள் மூலமாகவும் கருங்காலிகள் மூலமாகவும் செய்து வரும் சதிவேலைகளை விளக்கிச் சொல்லி, தொழிலாளர்கள் அவர்கள் செய்யும் ஆத்திரமூட்டும் செயல்களுக்கு இரையாகிவிடக் கூடாது என்று மெகப்போன் வாயிலாக எச்சரித்துக் கொண்டிருக்கின்றனர்

தலைவர் சங்கரனைப் பொறுத்த மட்டில், சுந்தரேசய்யர், நடத்திய வழக்குகள் சம்மந்தமாக கணேசய்யரிடமும், பொன்னுச்சாமி நாயுடுவிடமும் பேச வேண்டியிருந்ததால் அந்த வேலைகளை முடித்துக் கொண்டு சற்றுத் தாமதமாக வருவதாகவும் எப்படியும் இருள் கவிவதற்கு முன்பாகக் கூட்டத்துக்கு வந்து விடுவதாகவும் இருதயசாமியிடமும், வேலாயுதத்திடமும் காலையிலேயே போன் மூலம் தகவல் சொல்லியிருந்தார். எனவே, எந்த நேரத்திலும் தலைவர் வந்து விடுவார் என்று கூட்டம் காத்திருந்தது.

சங்கரனது உயிருக்குத் தோல் ஷாப்பு முதலாளிகளின் அடியாட்களால் ஆபத்து ஏற்படலாம் என்பதால், சங்கரன் வரும்பாதையை மினிசாமியும், ஒசேப்பும் கண்காணித்த வண்ணம் கூட்டத்தைத் தாண்டி பிரதான ரஸ்தாவில் நின்று கொண்டிருந்தனர்.

மேற்கு வானப் பரப்பைத் தங்கமுலாம் பூசப்பட்டதே போல், மாயா ஜாலம் ஆடிக் கொண்டிருந்த சூரியன் முற்றாக மேற்குமலைக் குவடுகளுக்கு மத்தியில் மறைந்து போனதால், மலைக் கோட்டையின் அடிவாரத்தில் இருள் கவியலாயிற்று.

வக்கீல் சங்கரன் பெரிய பள்ளி வாசலையும், மாதா கோவிலையும் தாண்டி தனது சைக்கிளில் கூட்டத்தை நோக்கி வந்து கொண்டிருந்தார். அந்த இடம் சற்றுத் தாழ்வான பகுதியாக இருந்ததாலும், குளத்தங்கரை உயரமாக இருந்ததாலும் வாகை மரங்களின் அடர்த்தியாலும் இருள் கவியத் தொடங்கியிருந்த காரணத்தாலும் பிரதேசம் முழுமையாகத் தெளிவாகப் புலப்படவில்லை.

அப்போது தான் மினிசாமி அந்தச் சம்பவத்தைப் பார்த்தான். குளத்தங்கரையில் இந்த மருதமரத்தின் மறைவில் இருந்து ரோட்டில் ஒரு மனித உருவம் குதித்து, அரிவாளைக் கையில் ஏந்திய வண்ணம் சங்கரனது சைக்கிளைத் தொடர்ந்து ஓடி வருகிறது.

"அடே மாப்ளே. தலைவரை வெட்டதுக்கு எவனோ வராண்டா" என்று ஓசேப்பிடம் சொன்ன வண்ணம் மினிசாமி சங்கரனை நோக்கி ஓடவும், "சத்தம் போடாத மாப்புளே. கூட்டம் கலைஞ்சு போவும். நாம பார்த்துக்குவம்" என்று எச்சரித்த வண்ணம் ஒரு தடியை எடுத்துக் கொண்டு மினிசாமியைத் தொடர்ந்து ஓடலானான்.

ரோட்டின் மேட்டுப் பகுதியைத் தாண்டியதும் சாலையின் இரு பக்கங்களிலும் இண்டஞ் செடியும், சாலி மரங்களும் சோலையாக வளர்ந்து கிடக்கிறது.

காட்டுப்பகுதியை அடைந்ததும் "வக்காளி, கூலிக்கு மாறடிக்கிற பேமானிக. அய்யரை வெட்டிப் போடுவீங்களா. ஏய் கழுவா, ஒன்னைய நா, வெட்டிப் பொலி கொடுக்கலே, நா விருமாண்டித் தேவனுக்குப் பொறக்கலடா, மாப்ளேய்" என்ற கூச்சலிட்டபடி சங்கரனது சைக்கிளையும் அந்த மனிதன் தாண்டிப் பாயவும், நான்கைந்து பேர், சாலிமரக் காட்டினூடே மேற்கு நோக்கி ஓடி மறைந்தார்கள்.

அந்த மனிதனின் குரலைக் கேட்டுச், சைக்கிளை நிறுத்தி ரோட்டில இறங்கி நின்ற சங்கரன், ஓடுபவர்களை விரட்டிப் போக முயன்ற மனிதனைத் தனது இடது கையால் பிடித்து நிறுத்திக் கொண்டு, "பைத்தியக்காரத்தனம் பண்ணாதீயும் அவங்க ஓடித் தொலையட்டும். அவங்க எத்தினை பேரிண்ணே தெரியாது. திருப்பித் தாக்கினாலும் தாக்கலாம்" என்று பதட்டப் படாமல் சொன்ன சங்கரன், தன் முன்னால் நிற்கும் மனிதனைப் பார்த்து ஆச்சரியப்பட்டுப் போனார்

"கழுவத்தேவன், காசுக்குப் பீ திங்கிற பய. தோல்ஷாப்பு மொதலாளிக்கிட்டே கழுவன் பேசிக் காசு வாங்கிட்டு, ஒன்னைய வெட்டிக்கொலை பண்ணதுக்கு ஆள் சேத்திட்டு வந்திருக்கான் அய்யரே. என்னையவும் வெல பேசிப் பார்த்தான். தேவுடியா மவனை ஒக்காளி சும்மா விடக் கூடாது" என்று மீண்டும் எகிறிய போது, சங்கரன் சந்தனத்தேவனைத் தன் பக்கமாக இழுத்துக் கொண்டார்

சந்தனத் தேவனைப் பார்த்தபோது மினிசாமிக்கும், ஒசேப்புக்கும் சந்தேகம் ஏற்பட்டது.

அவன் நாடகமாடுகிறானோ என்கிற சந்தேகம்.

"இவனை நம்ப முடியாது தலைவரே" மினிசாமி சொன்னான்.

இதற்குள் அப்புச்சி என்கிற சியான் தேவர். இரைக்க இரைக்க அவர்கள் நிற்கும் இடத்தைப் பார்த்துஓடி வந்தார்

"என்ன மன்னிச்சிரு சாமி. எனக்கு உயிர் பிச்சை குடுத்த கடவுள் நீ. அன்னிக்கு மட்டும் என்னையப் போலீசுலே ஒப்படைச்சிருந்தே. என்னையக் கொண்டு போட்டு ஒம்மேல பழியப் போட்டிருப்பான் அந்த சூப்பிரண்டு" சந்தனத் தேவன் சொன்னான்.

"அம்பி, சந்தனத்தை நம்புங்க. எங்கிட்டே சொல்லிட்டுத் தான் வந்துச்சு" சியான் தேவர் சொன்னார்.

"அய்யரே, உனிமே நாதான் ஒனக்குப் பாதுகாப்பு" "ஒன்னைய வுட்டுப் போவமாட்டன்". பாளையரிவாளை இடுப்பில் சொருகிய வண்ணம் சொன்னான்.

"சந்தனத்தேவரே. நீங்க இவ்வளவுக்கு மாறிப்போனது எங்களுக்கு மிக்க மகிழ்ச்சி நேக்கெல்லாம் பாதுகாப்பு வேண்டாம். இதோ இங்கே கூடிருக்காளே பாமரமக்கள் அவாளுக்கு நீங்க துணையா இருந்தாப் போதும்"

சங்கரன் சந்தனத் தேவரின் தோளில் கையைப் போட்ட வண்ணம் கூட்டத்தை நோக்கி நடந்து போனார்.

ஒசேப்பும், மினிசாமியும் சங்கரனது சைக்கிளைத் தள்ளிக் கொண்டு அவர்களைத் தொடர்ந்து போனார்கள்.

அப்புச்சித் தேவர் தனது கரங்களைப் பின்புறமாகக் கோர்த்த படி காட்டுக்குள் அரவம் கேட்கிறதா என்று கண்காணித்த வண்ணம் அங்கேயே நின்றிருந்தார்

25

வத்தலக்குண்டுச் சாலை பொதுக்கூட்டம் நடைபெற்ற மறுவாரமே சங்கரன் அரசால் கைது செய்யப்பட்டார்.

யுத்த எதிர்ப்புப் பிரச்சாரம் செய்ததற்காக, மாட்சிமை தங்கிய பிரிட்டிஸ் அரசைக் கவிழ்ப்பதற்காகச் சதி செய்து தேசவிரோதச் செயலில் ஈடுபட்டதாகச் குற்றம் சாட்டப்பட்டு நாடு முழுவதுமுள்ள பாட்டாளிவர்க்கத் தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர். அதே ராஜதுரோகக் குற்றம் சாட்டப்பட்டு இரவோடு இரவாகச் சங்கரனும் கைது செய்யப்பட்டார்.

சங்கரன் கைது செய்யப்பட்ட சேதி நகர் முழுவதும் காட்டுத் தீயாகப் பரவிற்று. தோல் பதனிடும் தொழிலாளர்களும், நகரசுத்தி ஊழியர்களும் இதர தொழிலாளர்களும், சங்கரன் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவார்கள் என்ற எதிர் பார்ப்புடன் நகரத்தில் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது. தொழிலாளர்களையும், பொது மக்களையும் பீதிப் படுத்த வேண்டும் என்று ஒவ்வொரு தொழிற்சாலையின் முன்பும், ஆயுதம் தாங்கிய போலீஸ் காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்தது.

சங்கரன் கைது செய்யப்பட்ட உடன் மூன்றாம் பேருக்குத் தெரியாமல் காதும் காதும் வைத்தாற் போன்று இரவோடு இரவாக அவரை உள்ளூர் மாஜிஸ்திரேட் முன்னால் ஆஜர் செய்து மத்திய சிறைக்குக் கொண்டு போய்விட வேண்டும் என்பது எஸ்.பி. வெள்ளைத்துரையின் திட்டம். எனவே, வெள்ளைத்துரை, தனது படை பட்டாளத்துடன் போய் சங்கரனைக் கைது செய்து கொண்டு வந்து நகரக் காவல் நிலையத்தில் உட்கார வைத்திருந்தான்

ஆனால் நிலைமை வெள்ளத்துரை எதிர் பார்த்ததற்கு நேர் மாறாக அவனது பிடியினின்றும் நழுவிக் கொண்டிருந்தது. அதாவது எந்தப் பகுதி மக்களுக்குச் சங்கரன் கைது செய்யப்பட்ட விவரம் தெரியக் கூடாது என்று நினைத்திருந்தானோ, அந்த மக்களே, ஆண் பெண் அனைவரும் காக்காய்க் கூட்டம் மாதிரி நகரக் காவல் நிலையம் முன்னால் கூடி நிற்கிறார்கள். சங்கரனைக் கைது செய்ததைக் கண்டித்து விண்முகட்டையே முட்டி மோதி எதிரொலிக்கும் படியாகக் கோஷங்களை முழங்கிய வண்ணம் நிற்கிறார்கள். நேரம் ஆக ஆகப் பொறுமையிழந்த மக்களின் ஆத்திரமும் கோபமும் அவர்கள் எழுப்பும் கோஷத்தில் தொனிக்கிறது. நேரம் ஆக ஆகத் தொழிலாளர் பொதுமக்கள் கூட்டமும் பெருகிக் கொண்டே போகிறது.

கைது செய்து கொண்டு வரப்பட்ட சங்கரன், இன்ஸ்பெக்டர் பாலையாவின் இருக்கைக்கருகில் போடப்பட்டிருக்கும் நாற்காலியில் மௌனமாக உட்கார்ந் திருக்கிறார்.

பாலையாவும், இன்ஸ்பெக்டர் பலவேசமும், அடிக்கடி போலீஸ் ஸ்டேஷன் வராந்தாவரையில் போய் பார்த்துவிட்டு நிலைமையை சூப்பிரண்ட் வெள்ளைத்துரைக்கு விளக்கிச் சொல்லிக் கொண்டிருக்கின்றனர்.

வெள்ளைத்துரையோ, அங்கு ஏற்பட்டிருக்கும் அசாதாரண நிலைமையைப் பொறுத்துக் கொள்ள முடியாத வனாக, குட்டி போட்ட பூனையாக ஸ்டேஷனுக்குள்ளேயே அங்குமிங்கும் நடமாடுவதும், சங்கரனை முறைத்துப் பார்ப்பதுமாக இருக்கிறான். சங்கரனோ இவற்றையெல்லாம் பார்த்தும் பாராததுமாகத் தான் எடுத்து வந்திருக்கும் பாரதியாரின் பாஞ்சாலி சபதக் கவிதை வரிகளை ஊன்றிப் படித்தவாறு உட்கார்ந்திருக்கிறார்.

ஒரு கட்டத்தில் ஆத்திரம் தாங்காமல்,

"பாலையன், அந்த ராஸ்கல்களை லத்திப் பிரயோகம் பண்ணி அடிச்சு விரட்ட வேண்டியது தானே. கோஷம் போடவுட்டு வேடிக்கை பார்க்கயா?" என்று வெள்ளைத் துரை பாலையனைப் பார்த்துக் கோபப்படவும்

இன்ஸ்பெக்டர் பாலையன் பதில் ஏதும் பேசாமல் மௌனமாக நின்றான். பாலையனின் மௌனத்தால் கோபம் கொண்ட வெள்ளைத்துரை

"என்ன மிஸ்டர் நான் கேக்றேன் பதில் பேசாம நிக்கறே. ஒபே பண்ணப்போறியா என்ன" என்றதும் பாலையா

"எஸ்பி.சார் விவேகமாப் பேசுங்க. ஆத்திரப்பட்டு எதையும் செய்திட முடியாது." என்று கடுமையாகப் பதில் சொல்லவும், திகைத்துப் போன வெள்ளைத்துரை தனது கோபத்தை வெளிக்காட்டிக் கொள்ள முடியாமல் பாலையனைப் பார்த்தான்.

"ஸார், லாத்தி பிரயோகம் என்ன துப்பாக்கிப் பிரயோகமே அதிகாரத் தோரணையில் நடத்திப் போடலாம். கூட்டத்தை வெளியிலே போய் பாருங்க. ஒரு கல்லைத் தூக்கிப் போட்டாப் போதும் நாம மட்டுமில்லே. இந்த ஸ்டேஷனே இடம் தெரியாம பஸ்பமாகிப் போவும். அவ்வளவு ஆவேசமா ஜனங்க நிக்கறாங்க. வேணுமிண்ணா வெளியே வந்து பாக்கறீங்களா" பாலையன் வெள்ளைத்துரையை பார்த்துச் சொன்னதும்

"வேணாம் எசமான். ஒங்க தலை மட்டும் தெரிஞ்சாப் போதும். அத்தனை ஜனமும் நம்ப மேலே பாஞ்சிரும் அம்புட்டுக் கோவமா நிக்குது" என்று சப்-இன்ஸ்பெக்டர் பலவேசம் குறுக்கிடவும் வெள்ளைத்துரையின் முகத்தில் சவக்களை தென்பட்டது. தலையில் கை வைத்து மேஜையின் முன்னால் போய் உட்கார்ந்தான்.

ரிமாண்ட் அறிக்கை தயார் செய்ய வேண்டிய ஹெட் கான்ஸ்டபிள் கூட என்ன செய்வதென்று தவித்த வண்ணம் அவனது மேஜையின் முன்னால் உட்கார்ந்துவிட்டான்.

இதற்குள் சங்கரன் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து அந்த அகால வேளையில் திருச்சி வழிப்பாதையிலும், மதுரை வழிப்பாதையிலும், தொழிலாளர் மறியல் செய்ய போக்குவரத்து தடை செய்யப்பட்டதாகவும் ரெயிலும் மறிக்கப்பட்டதாகவும் போன் மூலம் சேதி வந்ததைக் கேட்டு வெள்ளைத்துரை அதிர்ந்து போனான்

"இது ஆரம்பம் தான். இனிமே என்னவெல்லாம் நடக்கப் போவுதோ?" ஹெட் கான்ஸ்டபிள் மாத்யூ தன் அருகில் நின்ற போலீஸ்காரனிடம் சொல்லிக் கொண்டிருந்தான்.

இவ்வளவு நேரமும், ஸ்டேஷன் முன்னால் திரண்டு கொண்டிருக்கும் ஆவேசம் கொண்ட தொழிலாளர் கூட்டத்தை எப்படிச் சமாளிப்பது என்று புரியாமல், ஸ்டேஷன் வராந்தாவுக்கு வந்து, கூட்டத்தையும், கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதில் ஈடுபட்டிருக்கும் போலீஸ் ஜவான்களைப் பார்ப்பதும், ஸ்டேஷனுக்குள் வந்து, மேல் அதிகாரிகளுக்குத் தகவல் கொடுப்பதுமாக இருந்த பாலையன் கடைசியில் சங்கரனிடம் வந்தான்.

"சங்கரன் ஸார். இந்தக் கூட்டத்தைச் சமாளிக்க நீங்க தான் உதவி செய்ய வேணும்" என்று கேட்டான்.

வெள்ளைத்துரை பாலையன் சங்கரனிடம் பேசுவதை விரும்பாதவன் போல் முறைத்துப் பார்த்தான். பாலையன் அதைப் பொருட்படுத்தவில்லை.

சங்கரன் கேட்டுக் கொண்ட பிரகாரம் பலவேசம் பிரதர் தங்கசாமியவும், இருதய சாமியவும் ஸ்டேஷனுக்குள் கூட்டி வந்தான். அவர்களுடன் பேசிய பின்பு

"மிஸ்டர் வெள்ளத்துரை நான் வெளியே போய் எங்கள் மக்களோடு பேசலாமா?"என்று கேட்டபோது அவன், பாலையனையும் மற்றவர்களையும் சந்தேகத்தோடு பார்த்தான்.

அவனது சந்தேக உணர்வைப் புரிந்து கொண்ட சங்கரன்

"மிஸ்டர் வெள்ளத்துரை. நான் அப்படி ஒண்ணும் தப்பிச்சுப் போயிட மாட்டேன். நான் பேசாமல் சும்மா இருந்தாலே போதும், இந்த மக்கள் ஒங்களோட பிடியிலேருந்து என்னை மீட்டிண்டு போயிடுவாண்ணு புரிஞ்சுக்கோங்கோ. நீங்க சட்டத்தையும் தர்மத்தையும் மீறாத வரையில் நாங்களும் சட்டத்தை மீற மாட்டோம். நீங்க மீறினா நாங்க மீற வேண்டியிருக்கும்". தன்கையில் இருந்த பாரதியின் கவிதைப் புஸ்தகத்தை மடித்து மடியில் வைத்தவாறே சொன்னார்.

சங்கரனது நிதானமும், அமைதியும் அவனைப் பயமுறுத்தியது.

"சங்கரன் ஸார் அவங்களோட பேசி சமாதானப் படுத்தலையானா கூட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாது" இன்ஸ்பெக்டர் பாலையன், வெள்ளைத்துரையைப் பார்த்துச் சொன்னான்.

வெள்ளைத்துரையால் ஏதும் பேச முடியவில்லை.

வெள்ளைத்துரையின் கோபத்தையும், அதிகார மமதையையும் பொருட்படுத்தாமல் சங்கரனும், இன்ஸ்பெக்டர் பாலையனும் பிரதர் தங்கசாமியும் இருதய சாமியும் பின் தொடர காவல் நிலையத்தின் முன் பகுதிக்கு வந்தனர்.

சங்கரன் கையமர்த்திய போது, ஒன்று சொன்னாற் போல் காவல் நிலையத்தின் காம்பவுண்டுக்கு உள்ளிலும், வெளியிலும் தெருவிலும் கூடி நின்ற மக்களின் அரவம் ஒடுங்கி அமைதி நிலவியது.

"நான் கைது செய்யப்படுவது என்பது எதிர்பார்த்த ஒன்று" என்று அம்மக்களைப் பார்த்துச் சொன்ன சங்கரன், தொழிலாளர்கள் இந்த அக்கிரமச் செயலைச் சட்டப் பூர்வமான போராட்டங்கள் மூலம் எதிர்கொள்ள வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்.

பிரதர் தங்கசாமியும் , இருதய சாமியும், தொழிலாளர் களை அமைதியாகக் கலைந்து செல்ல வேண்டும் என்று வேண்டிக் கொள்ளவும் மக்கள் கூட்டம் அமைதியாக அங்கிருந்து கலைந்து கொண்டிருந்தது. இக்கட்டான சூழ்நிலையைச் சமாளித்ததால் இன்ஸ்பெக்டர் பாலைய்யன் நிம்மதிப் பெருமூச்சுவிட்டான்.

தனது அதிகாரத்துக்குச் சவால் விட்ட தொழிலாளர்களைப் பழிவாங்க வேண்டும் என்கிற உணர்வால் உந்தப்பட்ட வெள்ளைத்துரை, வேகம் வேகமாகத் தனது ஆஸ்டின் காரைக் கிளப்பிக் கொண்டு தனது பங்களாவை நோக்கி விரைந்தான்.

அன்று இரவே, சங்கரன் மதுரை மத்திய சிறைச்சாலைக்குக் கொண்டு போகப்பட்டார்.

26

தன் முன்னால் கொண்டு வந்து நிறுத்தப்பட்டிருக்கும் அப்பாவிகளான ஆண் பெண் தொழிலாளிகளைப் பார்த்தபோது மாஜிஸ்திரேட் தேவ இரக்கத்திற்கு மனம் வேதனித்தது.

சட்ட விரோதமான முறையில் மூன்று நாட்களாக லாக்கப்பில் பூட்டி வைத்து இன்று தான் அவர்கள் நீதிபதியின் முன்னால் ஆஜர் படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

நள்ளிரவில் மலபார் போலீஸ் சகிதம், தோல் பதனிடும் தொழிலாளர் குடியிருப்பில் புகுந்த உள்ளூர் போலீஸ் அம்மக்களைக் கொடூரமாகத் தாக்கி, அவர்களின் குடியிருப்புக்களுக்கும், உடைமைகளுக்கும் தீ வைத்து, அக்கிரமம் புரிந்திருப்பதையும், அப்பாவி மக்களைப் பொய்யான குற்றச்சாட்டுகளின் பேரில் கைது செய்திருப்பதையும் கண்டித்து வெகுஜன அமைப்புக்களும், ஜனநாயக வாதிகளும் வெளியிட்டிருக்கும் அறிக்கைகளுடன் அன்றைய காலைப் பத்திரிகைகளில் தலைப்புச் செய்தியாக வெளியிடப்பட்டிருக்கிற. பத்திரிகைச் செய்திகளை எல்லாம் படித்துவிட்டுத்தான் மாஜிஸ்திரேட் தேவ இரக்கம் தனது இருக்கையில் வந்து அமர்ந்திருக்கிறார்.

உண்மையை மறைத்து முதல் நாள் மாலையில் அவர்களைக் கைது செய்ததாக சப்-இன்ஸ்பெக்டர் முதல் அறிக்கையைத் தயார் செய்திருக்கிறான். மட்டுமல்லாமல் எஸ்.பி.வெள்ளைத்துரையின் உத்தரவின் பேரில் பலவேசம் குற்றப்பத்திரிக்கை உட்பட அனைத்தையும் தயார் செய்து நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறான். மூன்று நாட்களாகத் தலைவர்கள் யாரையும் அவர்களைப் பார்க்க வெள்ளத்துரை

அனுமதிக்கவில்லை. எங்கே அடைத்து வைக்கப் பட்டிருக் கிறார்கள் என்பதைக் கூட தெரிவிக்கவில்லை.

சட்ட விரோதமான முறையில் தடை உத்தரவை மீறிக் கூட்டம் போட்டு, மறியலில் ஈடுபட்டுப் போலீஸாரைத் தாக்கி அவர்களுக்குக் கொடுங்காயங்களை ஏற்படுத்தியதாக அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது.

முதல் அறிக்கையையும், குற்றப்பத்திரிகையையும் படித்த போது நீதிபதி தேவ இரக்கத்திற்கு உள்ளூற கோபம் ஏற்பட்டது.

குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கும் தொழிலாளர்களை ஏறிட்டுப் பார்க்கிறார். லாக்கப்பில் அனுபவித்த கொடுமையின் சாயல் அவர்களது பார்வையில் வெளிப்படுகிறது. பலருக்குக் காயம் ஏற்பட்டு முதல் சிகிச்சை கூட அளிக்கப்படவில்லை. பெண்களில் சில பேர் கைக்குழந்தைகளுடன் நின்று கொண்டிருக்கிறார்கள்.

இந்தத் தொழிலாளர்கள் ஜாமீனில் வெளி வருவதைத் தடுக்க வேண்டும் என்கிற நோக்கத்தில் எஸ்.பி.வெள்ளைத் துரையே நீதி மன்றத்தில் நேரடியாக ஆஜராகியிருக்கிறான்.

மீண்டும் ஒரு முறை குற்றப் பத்திக்கையைப் படித்துப் பார்த்த போது, நீதிபதிக்குக் குதிரை கீழே தள்ளியது மட்டுமல்லாமல் குழியும் பறித்த கதை நினைப்புக்கு வந்தது.

மனத்துள் மூண்டெழுந்த கோபத்தை அவரால் வெளிப்படையாகக் காட்டிக் கொள்ள முடியவில்லை. தன் முன்னால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் ஆவணங்களுக்கு அப்பால் அவரால் பேச முடியாது.

தேவ இரக்கம், நீதிமன்ற சிப்பந்தியை அழைத்து, அவர்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச் சாட்டைப் படித்துக் காட்டச் சொன்னார்.

குற்றச்சாட்டு படித்துக் காட்டப்பட்டபோது, அவர்கள் பதில் ஏதும் பேசவில்லை. மௌனமாக நின்றனர். நீதிபதியை ஆச்சரியத்துடன் பார்த்தார்கள்.

"பரம பிதாவே. இவர்கள் தங்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டின் தன்மையைக் கூட அறியாதவர்களாக இருக்கிறார்களே. இந்த அப்பாவிகளைத் தண்டனைக்குட்படுத்தும் பொறுப்பை என்னிடம் ஏன் ஒப்படைக்கிறீர்" என்று தனக்குள்ளேயே கண்ணை மூடி ஜெபித்துக் கொண்டார்.

அவர்கள் மீது போலீஸ் நிர்வாகம் சுமத்தியிருக்கும் அபாண்டமான குற்றச் சாட்டுகளினின்றும் அவர்கள் தப்பித்துப் போகாத படிக்குப் பலவேசம் குற்றப் பத்திரிக்கையைத் தயார் செய்திருக்கிறான்.

அவர்கள் மட்டும், தங்களது மேல் சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டை ஒப்புக் கொண்டு மாப்புக் கேட்டார்கள் என்றால், தன்னால் ஆன மட்டும் தனது அதிகாரத்துக்கு உட்பட்ட மட்டில் தண்டனையைக் குறைத்து, மன்னித்து நன் நடத்தையின் பேரில் அவர்களை விடுதலை செய்து விடமுடியும், அதன்படிச் செய்யலாம் என்று மனதுக்குள் திடம் பண்ணிக் கொண்ட தேவ இரக்கம், குற்றம் சாட்டப்பட்டு நிற்கும் தொழிலாளர்களைத் தனது இருக்கைக்குப் பக்கமாகக்கொண்டு வந்து நிறுத்தும்படி சிப்பந்தியினிடம் சொன்னார்.

ஒசேப்பின் தலைமையில் ஆண்களும் அக்னீஸ் மேரி தலைமையில் பெண்களும் இரு பகுதிகளாக நீதிபதியின் முன்னால் கொண்டு வந்து நிறுத்தப்பட்டனர்.

நீதிபதி திரும்பவும் அவர்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்களைப் படித்துக்காட்டிவிட்டு,

"தடை உத்தரவையும் மீறி நீங்கள் ஊர்வலம் போனீர்களா?" என்று கேட்டார்.

"ஆமாம் அய்யா எங்க தலைவரை ராவோட ராவா அரஸ்ட் பண்ணிட்டுப் போயிட்டாங்க. அந்த அநியாயத்தைக் கண்டிச்சு நாங்க ஊர்வலம் போனது உண்மைதானுங்க" ஒசேப்பு நீதிபதியைப் பார்த்துச் சொன்னான்.

பெண்கள் என்ன சொல்லப் போகிறார்கள் என்று கேட்பது போல் நீதிபதி திரும்பிய போது அக்னீஸ் மேரி, தாங்களும் ஊர்வலத்தில் கலந்து கொண்டதை ஒப்புக் கொண்டதுடன்

"என்ன சாமி அநியாயம், எங்க எதிர்ப்பை காட்ட ஊர்வலம் போனது கூட தப்புங்களா?" நீதிபதி தேவ இரக்கத்தைப் பார்த்துக் கேட்ட போது, நீதிமன்றச் சிப்பந்தி அவளைத் தடுக்க முற்பட்ட போது கையமர்த்திச் சிப்பந்தியை உட்காரச் சொன்ன நீதிபதி

"தனக்குப்பட்ட நியாயத்தைச் சொல்வதற்கு அந்தப் பெண்ணுக்கு உரிமை உண்டு. அவளைத் தடுக்காதீர்கள்" என்று ஆங்கிலத்தில் சொல்லிவிட்டு ஒசேப்பும் அக்னீஸ்மேரியும் அங்கு நிற்கும் தொழிலாளர்கள் சார்பில் சொன்ன வாக்குமூலத்தை ஒப்புதல் வாக்குமூலமாகப் பதிந்து கொண்டார்.

பிறகு அவர், தொழிலாளர்கள் மறியலில் ஈடுபட்டது சம்மந்தமாகவும், இதர ஆர்பாட்டங்கள் பற்றியும் கேள்விகள் கேட்டபோது ஒப்புக் கொண்ட ஒசேப்பும் மற்ற தொழிலாளர்களும், போலீஸ் ஜவான்களை அவர்கள் பணியைச் செய்ய விடாமல் தடுத்ததோடு, போலீஸ் காரர்களைத் தாக்கிக் காயம் ஏற்படுத்தியது சம்மந்தமான குற்றச்சாட்டைப் படித்துக் காட்டிய போது, ஒட்டு மொத்தமாக ஆட்சேபணை செய்தார்கள்.

"அய்யா அத்தனையும் பொய்யி. நட்ட நடு ராத்திரியிலே போலீஸ்காரங்க எங்க காலனிகளுக்குள்ளே பூந்து எங்களை அல்லாம் லாத்திக் கம்பால அடிச்சுக் காயப் படுத்தினாங்க. மண்டையப் பிளந்தாங்க. தெருவுலே இழுத்துப் போட்டுச் சாணிய மிதிக்கிறாப் போல மிதிச்சாங்க. எங்க குடிசைகளுக்கெல்லாம் தீ வச்சுக் கொழுத்தினாங்க. நாங்க ஆரும் போலீசைத் தாக்கலை" என்று சொன்ன பெஞ்சமின் தலையில் தனக்கேற்பட்ட காயத்தைக் காட்டினான்.

பெண்கள் போலீஸாரால் தாங்கள் மான பங்கப்படுத்தப்பட்டு அவமானப்படுத்தப்பட்டதையும்

பச்சிளம் குழந்தைகள் கூட போலீசின் தாக்குதலுக்குத் தப்பவில்லை என்கிற பரிதாப சம்பவங்களையும் கண்ணீர் மல்க நீதிபதி தேவ இரக்கத்திடம் சொன்னார்கள்.

போலீஸாரால் தாக்கப்பட்ட தொழிலாளர்கள் சொன்ன அனைத்தையும் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த நீதிபதி, முகம் கடுகடுக்க, எஸ்.பி. வெள்ளைத் துரையைப் பார்த்தார்.

"இல்லை யுவர்ஹானர் அவர்கள் சொல்வது அத்தனையும் பொய்" அரசு வழக்குரைஞர் வெள்ளைத்துரையின் சார்பாக நீதிபதியினிடம் சொன்னார் அவருக்குக் கோபம் தாளவில்லை.

"போலீஸ்காரன் சொன்னான் என்பதற்காக அசத்தியம் பேசாதீர்கள். அவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட காயங்களை இரத்தம் வடிய வடிய என் முன்னால் வந்து நின்று காட்டி முறையிடுகிறார்களே அது பொய்யா" என்று கோபமாக அரசு வக்கீலைக் கடிந்து கொண்ட நீதிபதி ஒரு கணம் மௌனமாக உட்காந்திருந்தார்.

பிறகு ஏதோ முடிவுக்கு வந்த மட்டில், தன் முன்னால் அப்பாவிகளாக நிற்கும் தொழிலாளர்களையும், நீதிமன்றத்தில் இருக்கும் வக்கீல்களையும், காவலுக்காக வந்திருக்கும் போலீஸ் ஜவான்களையும் பார்த்த வண்ணம் இருந்தவர்,

"உங்களில் பலபேர் பெண்கள் அதிலும் சிலர் கைக் குழந்தைகளோடு இருக்கிங்க. நீங்கள் அனைவருமே முதல் குற்றவாளிகள். எனவே நீதிமன்றம் உங்கள் பால் கருணை காட்ட விரும்புகிறது" என்று சொல்லவும், நீதிபதியின் பேச்சுக்கு மறுப்புச் சொல்ல வெள்ளத்துரை வேகம் வேகமாகத் தனது இருக்கையிலிருந்து எழுந்தான். அவனைக் கவனித்து விட்ட நீதிபதி,

"மிஸ்டர் அஸிஸ்டெண்ட் பிராசிக்கியூட்டர். நீதிமன்ற நடவடிக்கைகளில் உங்கள் அதிகாரியைத் தலையிட வேண்டாம் என்று எச்சரியுங்கள். மீறினால் அவர் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடர நேரிடும்" என்று கோபமாகச் சொன்னார்.

வெள்ளைத்துரை அவமான உணர்வோடு நாற்காலியில் அமர்ந்தான்.

தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டு நீதிபதி மேலும் பேசலானார்.

"இனிமேல், இதுபோன்ற குற்றங்கள் செய்ய மாட்டோம் என்று எழுதிக் கைஒப்பம் செய்யுங்கள். நீதி மன்றம் உங்களை மன்னித்து விடுதலை செய்துவிடும். பாவம் நீங்கள் பிள்ளை குட்டிகளோடு வந்து நிற்கிறீர்கள்"

நீதிபதி தனது உள்ளக் கிடக்கையை வெளியிட்ட போது, தொழிலாளர்கள் மத்தியில் அமைதி நிலவியது. பெண்கள் ஒருவருக்கு ஒருவர் மௌனமாகத் தங்களுக்குள் பேசிக் கொண்டனர்.

"நல்லா யோசனை பண்ணிச் சொல்லுங்க அவசரம் கிடையாது."

தேவ இரக்கத்துக்கு விதிக்கப்பட்ட அதிகாரத்தில் அதிக பட்சம் இந்தச் சலுகை தான் அவரால் காட்ட முடியும்.

"நாங்க எந்தக் குத்தமும் செய்யலை சாமி. ஊர்வலம் தான் போனோம் செய்யாத குத்தத்துக்கு நாங்க எப்படி மாப்பு எழுதிக் குடுக்க முடியும்" மேரி நீதிபதியைப் பார்த்துச் சொன்னாள்.

மேரியின் கேள்வியில் பொதிந்திருக்கும் நியாயமும், உண்மையும் அவரது மனச் சாட்சியைத் தாக்கியது.

மேரியை ஒரு கணம் இமை கொட்டாமல் பார்த்து உட்கார்ந்திருந்த நீதிபதி

"அந்த அம்மா சொல்ல வேண்டியதை சொல்லீட்டாங்க. நீங்க என்னம்மா சொல்லப் போறீங்க. மற்ற பெண்களைப் பார்த்துக் கேட்டார்."

தோளில் கிடந்த குழந்தையைத் தட்டிக் கொடுத்த அமலோற்புதம் மற்ற பெண்களை விலக்கிக் கொண்டு முன்னால் வந்து நின்றாள்.

"ஸ்தோத்திரம் சாமி" கை கூப்பி நீதிபதிக்கு நமஸ்காரம் வைத்தாள்.

"எந்தக் குத்தமும் பண்ணாத எங்க தலைவர் எங்களுக்காவப் பாடுபட்டாருங்கறதுக்காவ வேண்டி இந்தப் பாவிங்க அவரைப் புடிச்சு ஜெயிலுக்குள்ளாற அடைச்சிட்டாங்க. அந்த அக்குரவத்தைக் கண்டிச்சு நாங்க ஊர்வலம் போனோம். அது குத்தமா" என்றவள் குற்றவாளிக் கூண்டில் நடு நாயகமாக வந்து நின்று

"அதுக்காக வேண்டி. எங்க ஊருக்குள்ளே நடுச்சாமத்திலே பூந்து ஆட்டை மாட்டை அடிக்கிறாப்போல எங்களை அடிச்சு எங்க குடிசைகளையும் கொளுத்திப் போட்டாங்க. குத்தம் செஞ்சவரு இந்தா ஒக்காந்திருக்காரே அதிகாரி அவரும் அவரோட போலீஸ்காரவுங்க தான் நாங்க கெடையாது" என்று வெள்ளைத்துரையவும், அங்கு காவலுக்கு நின்ற போலீஸ் காரர்களையும் சுட்டிக் காட்டினாள்.

"குத்தம் செய்த அவங்களை மாப்புக் கேக்கச் சொல்றதுக்கு அல்லாம எங்களை மாப்புக் கேக்கச் சொல்றீங்களே எசமான் இது ஒங்களுக்கே நாயமா இருக்கா?" என்று கேட்டாள்.

அவரால் பதில் எதும் பேச முடியவில்லை.

"வம்பெதுக்கு எங்க தலைவரைத் தெண்டிச்ச மாதிரி எங்களையும் தண்டிச்சுப் போடுங்க நாங்களும் ஜெயிலுக்குப் போரம்"

இதுவரையில் ஒரு மூலையில் மௌனமாக நின்றிருந்த சின்னப்பன் நீதிபதியைப் பார்த்து ஆத்திரம் தொனிக்கச் சொன்னான்.

நீதிபதி தேவ இரக்கத்தின் உள்ளில் கருணை கசிந்த போதும் அவர் விரும்பியபடி அவர்களை அவரால் மன்னித்து விடுதலை செய்ய முடியாது. அவர்கள் மாப்பு எழுதிக் கொடுத்து விடுதலையாகத் தயாராக இல்லை.

"தேவனே நான் சூழ்நிலையின் அடிமை. என்னை மன்னித்தருளும்" என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டார்.

எப்போதும் தீர்ப்பு எழுதும் போது, மார்புக்கு நேராக சிலுவை அடையாளம் போடுவது போல் சிலுவை அடையாளம் போட்டுக் கொண்டார்.

பிறகு நீதிபதி தன் தீர்ப்பை இவ்வாறு எழுதலானார்.

"இந்தக் குற்றவாளிகள் நேர்மையாகக் குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளார்கள். இதற்கு முன் எந்தக் குற்றச் செயலிலும் ஈடுபடாத அப்பாவிகள். இவர்களின் அப்பாவித் தனத்தையும், நேர்மையையும் கணக்கில் கொண்டு குறைந்தபட்சத் தண்டனையாக இவர்கள் ஒவ்வொருவர்க்கும் மூன்று மாதக் கடுங்காவல் தண்டனை இந்த நீதிமன்றம் வழங்குகிறது." என்று தீர்ப்பு எழுதிவிட்டு நீதிபதி தேவ இரக்கம். மனவருத்தத்துடன் தனது அறைக்கு இறங்கிப் போனார் தொழிலாளர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பட்டிருக்கிறார்கள் என்கிற சேதி கேட்டு வேலாயுதமும் சகோதரர் தங்கசாமியும் நீதிமன்றத்துக்கு வந்த போது தண்டனை விதிக்கப்பட்ட அவர்கள் போலீஸ் வண்டியில் ஏற்றப்பட்டிருந்தார்கள்; அவர்களால் ஏதும் செய்ய முடிய வில்லை, செய்வதறியாது தவித்துப் போனார்கள். நீதிமன்ற வளாகத்தில் கூட்டம் கூடாதவண்ணம் போலீஸ் ஜனங்களை மிரட்டி விரட்டிக் கொண்டிருந்தது.

அதற்குப் பின் அந்த நீதிமன்றத்தில் அன்று வேறு வழக்கு எதுவும் நடை பெறவில்லை.

27

அய்ரோப்பாக் கண்டத்தில் யுத்தமேகங்கள் கருக்கொண்டு, அது நாடு பிடிக்கும் உலகப் போராகப் பரிணாமம் பெற்றிருந்தது.

தன்னை வளர்த்துவிட்ட ஏகாதிபத்திய சக்திகள் மீதே கை வைக்கும் அளவுக்குப் பஸ்மாசுரனாக அய்ரோப்பாக் கண்டத்தையும் ஏகாதிபத்திய நாடுகளையும் கபளீகரம் பண்ணும் அளவுக்குப் பாசிச சக்திகளும், நாசிச சக்திகளும் பூதாகரமாக உருக்கொண்டிருந்தன.

இத்தாலி நாட்டு முசோலினி தனது அண்டை நாடுகளைக் கபளீகரம் செய்யத் தொடங்கினான். ஜெர்மன் நாட்டு ஹிட்லர் பிரிட்டிஸ் அரசுடனும் பிரான்ஸ் நாட்டுடனும் உறவு கொண்டிருந்த போலந்து தேசத்தின் மீது திடீரென்று போர் தொடுத்துக் கபளீகரம் செய்த போது, பிரிட்டனும் பிரான்சும் ஹிட்லரை எதிர்த்துப் போர்க் கோலம் கொண்ட போது அது இரண்டாம் உலகப் போராக அவதாரம் கொண்டது.

சூரியனே அஸ்தமிக்காத பிரிட்டிஸ் சாம்ராஜ்யத்துக் கெதிராகக் காலனி நாடுகளில் சுதந்திரத்துக்கான போராட்டம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வலுப்பட்டுக் கொண்டிருந்தது. பிரிட்டிஸ் அரசாங்கமானது மாகாண இந்தியாவில் சட்ட சபைகளையும் கலந்து கொள்ளாமல், தனது காலனி நாடான இந்திய உப-கண்டமும் உலகப்போரில் பங்கு கொள்கிறது என்று அறிவித்தபோது சுயராஜ்ய இயக்கம் கடுமையாக எதிர்த்துச் சமர் புரியலாயிற்று. பூரண சுதந்திரம் வேண்டும் என்கிற போர்ப்பறை உலக அரங்கை அதிர வைக்கும் வண்ணம் உருக்கொண்டு உத்வேகம் பெற்றது. நாட்டு விடுதலைக்காகப் பிரிட்டிஸ் அரசை எதிர்த்து மக்கள் சக்தி

வலுப்பெற்ற போது தேசப் பிதாவான மகாத்மா காந்தி மட்டுமே ஹிட்லரின் கை ஓங்குமேயானால் லண்டன் பாராளுமன்றக் கட்டிடமும், வெஸ்ட் மினிஸ்டர் ஆபேயும் அழிந்து போகுமே என்று கவலைப்பட்டுத் தனிமைப்பட்டுப் போனார்.

இந்தியப் பாட்டாளி வர்க்கம், இந்த இரண்டாம் உலகப் போரை வேறுவிதமாகக் கணித்தது. இந்த உலகப் போரானது முதலாளித்துவ சக்திகளுக்கிடையிலான நாடு பிடிக்கும் சந்தைப் போராட்டம் என்றும், உழைப்பாளி மக்களுக்கும் சாதாரண மக்கள் வாழ்க்கைக்கு எதிரானது என்றும், யுத்த எதிர்ப்பு இயக்கத்தைத் தீவிரப்படுத்தியது. பம்பாயிலும் இந்திய உபகண்டத்தில் உள்ள முக்கிய நகரங்களிலும் பல்லாயிரக் கணக்கிலான பாட்டாளி மக்கள் தெருவில் இறங்கி யுத்த எதிர்ப்பில் தங்களை ஆட்படுத்திக் கொண்டனர். எனவே நாடு முழுவதும் பாட்டாளி வர்க்கத் தலைவர்கள் யுத்த எதிர்ப்புப் போராட்டத்தை பிரிட்டிஸ் ஆதிபத்தியத்துக்கெதிராகத் திருப்பி விட்டிருந்தனர்.

உழைப்பாளி மக்களின் போர் எதிர்ப்புப் போராட்டத்தால் குலுங்கிப் போன பிரிட்டிஸ் அரசு, மாட்சிமை தங்கிய பிரிட்டிஸ் அரசுக் கெதிரான சதியில் இறங்கியுள்ளார்கள் என்று பொய்க் குற்றம் காட்டி நாடு முழுவதிலும் உள்ள உழைப்பாளி மக்களின் தலைவர்களைக் கைது செய்யலாயிற்று. உழைப்பாளி மக்களின் போராட்டங் களை அடக்கி ஒடுக்குவதற்காகக் கடுமையான அடக்கு முறைத் தாண்டவமாடியது.

வக்கீல் சங்கரனை வெளியில் நடமாடவிடுவது என்பது பிரிட்டிஸ் அரசுக்கு அதனது யுத்த முஸ்தீப்புக்களுக்கும் ஆபத்து என்று கருதி அவரை இரவோடு இரவாகக் கைது செய்ய உத்தரவு பிறப்பித்திருந்தது. எனவே, சென்னை மாகாணம் முழுவதும் உள்ள சங்கரன் உட்பட உழைப்பாளி மக்களின் தலைவர்களை கைது செய்ய எந்த விதமான விசாரணையும் இல்லாமல் சிறைச்சாலைகளில் அடைத்து வைத்திருந்தது.

சங்கரனைக் கைது செய்து நகர எல்லைக்குள் வைத்திருந்தால் கொந்தளிப்பு ஏற்படும், சட்டம் ஒழுங்குப் பிரச்சனை ஏற்பட்டுச் சமாளிப்பது கடினமாகி விடும் என்று

கருதிய வெள்ளைத்துரை, சங்கரனைக் கைது செய்து அவரது குடும்பத்திற்குச் சொந்தமான கொடைக்கானல் பங்களாவில் கொண்டு வைத்து, எப்படியாவது கடுமையான கிரிமினல் வழக்கில் ஈடுபடுத்திவிட வேண்டும் என்று திட்ட மிட்டிருந்தான், வெள்ளத்துரை. ஆனால் அதற்கான ஆதாரம் ஏதும் சிக்காததாலும், நகரத்தில் தொழிலாளர் கொந்தளித்து ஆர்ப்பாட்டம் செய்வதாலும் சங்கரன் பற்றி, மேல் மட்டத்திலிருந்து, நொடிக்கொருதரம் விசாரிப்புக்கள் வந்து கொண்டிருந்ததாலும், தன்னைக் காப்பாற்றிக் கொள்ள இரவோடு இரவாகச் சங்கரன் மதுரை மத்திய சிறைச்சாலைக்குக் கொண்டு சென்று பாதுகாப்புக் கைதியாக அடைத்தான்.

மதுரை மத்திய சிறையிலும் சங்கரனை வெகுகாலம் அடைத்து வைக்க பிரிட்டிஸ் அரசாங்கம் விரும்பவில்லை. சங்கரனைப் போன்றே விசாரணையில்லாமல். கைது செய்யப்பட்டிருக்கும் பஞ்சாலை மற்றும் தொழிலாளர் தலைவர்களுடன் சங்கரன் இருப்பது ஆபத்து என்று கருதிய அரசு சங்கரனை மதுரை மத்திய சிறையினின்று மாற்றிச் சங்கரனை சேலம் மத்திய சிறைக்கு மாற்றியது. சேலம் மத்திய சிறையில் சங்கரனைப் போன்று, இந்தியாவின் இதர பகுதிகளினின்று தொழிலாளி வர்க்கத் தலைவர்கள் கைது செய்யப்பட்டு அங்கு கொண்டு வரப்பட்டிருக்கிறார்கள்.

சங்கரன் அவர்களுடன் சேர்ந்து சிறைச்சாலையின் மாமூல் கெடுபிடிகளையும், கொடுமைகளையும், அடக்குமுறை களையும் எதிர்த்துப் போராட வேண்டியிருந்தது. அத்துடன் சித்தாந்தம் சம்மந்தப்பட்ட, புத்தகங்களைப் படிப்பதற்கும், விவாதிப்பதற்கும் தன்னைத் திடப்படுத்திக் கொள்வதற்குமான வாய்ப்புக்களும் சங்கரனுக்கு ஏற்பட்டிருந்தது.

சிறைக் கொடுமைகளை எதிர்த்துப் போராடும் அதே வேளையில், அவர்களால் சிறைக்கூடம் அறச்சாலையாகவும், கல்விக் கூடமாகவும் மாற்றம் பெற்றிருந்தது. தான் படிக்க விட்டுப் போன தத்துவார்த்தப் புஸ்தகங்களைப் படிப்பதற்கான வாய்ப்பும் சங்கரனுக்கு ஏற்பட்டிருந்தது. ஆனால், அரசு அவரைக் கடலூர் சிறைக்கும் வேலூர் சிறைக்குமாக மாற்றிக் கொண்டிருந்தது.

28

தண்டனை பெற்ற அந்தப் பத்து தோல் பதனிடும் தொழிலாளர் பெண்கள் சிறையில் அடைக்கப்பட்டு இரண்டு மாதங்களாகிவிட்டன. இந்த இரண்டு மாத காலக் கெடுவுக்குள் அவர்கள் எத்தனையோ இன்னல்களை அனுபவித்துவிட்டனர்.

அன்று மாலைப் போதில், வேலைகள் முடிவுற்றதும், வழக்கம் போல், அவர்கள் கொட்டடிகளுக்குள் அடைக்கப்பட்டனர். தூறலாக ஆரம்பித்த மழை நேரம் ஆக ஆக வலுப்பெற்று வானமே பொத்துக் கொண்டு ஒழுகுவது போல் பெய்யலாயிற்று.

அவர்கள் யாரும் அன்று காலை முதலே உணவருந்தவில்லை. தட்டுகளில் போடப்பட்ட ரேஷன் உணவு அப்படி அப்படியே ஈ மொய்த்துக் கிடக்கிறது. ஜெயில் நிர்வாகம் அவர்களை எவ்வளவோ மிரட்டிப் பார்த்த போதும், அவர்கள் எதற்கும் மசியவில்லை. அவர்களைப் பயமுறுத்தும் வகையில் ஒவ்வொருவரையும் தனித்தனிக் கொட்டடியில் அடைத்து வைத்திருக்கிறது ஜெயில் நிர்வாகம்.

இப்படி ஒரு சோகச் சம்பவம் நடக்கும் என்று அவர்கள் மட்டுமல்ல. அந்த வார்டில் அடைக்கப்பட்டிருக்கும் பெண் கைதிகளும் எதிர்பார்க்கவில்லை.

பத்துப் பேராக அந்த வார்டில் அடைக்கப்பட்டிருந்த பெண்கள் இப்போது ஒன்பது பேராகக் குறைந்து

போனார்கள். அதாவது ஏசுவடியாள் மகள் அக்னீஸ்மேரி செத்துப் போய்விட்டாள்.

அவள் செத்துப்போனாளா அல்லது சாகடிக்கப் பட்டாளா என்று அவர்களுக்குச் சந்தேகம்.

முதல் நாள் வயிற்று வலிக்குச் சிகிச்சைக்கென்று கூட்டிப் போகப்பட்ட அக்னீஸ்மேரி கதி என்னவாயிற்று என்று சொல்ல மறுத்த சிறை நிர்வாகம் இந்த மாலை வேளையில் அவளைப் பிணமாக வார்டு மைதானத்தில் இருக்கும் வேப்ப மரத்துக்கடியில் கொண்டு வந்து போட்டிருக்கிறது.

அவர்களுக்கு வழிகாட்டியும், தைரியசாலியுமாக இருந்த அக்ளீஸ்மேரியை இப்போது பிணமாக வார்டுக்கு நடுவில் கொண்டு வந்து போட்டு வைத்திருக்கிறார்கள்.

அக்னீஸ் மேரிக்குத் திடீரென்று இப்படி ஒரு மரணம் ஏற்படும் என்று எந்தப் பெண் கைதியும் நினைக்கவில்லை.

சராசரி பெண்ணை விட சுமார் ஐந்தரை அடிக்கு மேலான உயரம், ஒவ்வொரு அவயவமும், அளவெடுத்து உருவாக்கப்பட்டது போன்ற உடற்கட்டு, மாந்தளிர் மேனி, யாருக்கும் அஞ்சாத நேர் கொண்ட பார்வை-

எல்லோருக்கும் சிம்மச் சொப்பனமாகப்படும் பெண் வார்டர் அம்மாளு அம்மாள், அக்னீஸ்மேரிக்குத் தான் பயப்படுவாள். அம்மாளு அம்மாள் தான் சதி செய்து அவளைக் கொன்றிருக்க வேண்டும் என்பது அவர்களுக்குச் சந்தேகம்.

அக்னீஸ்மேரி, இருபத்திஐந்து வயதைத் தாண்டியிருந்த போதும். மற்ற தோல் ஷாப்புப் பெண்களைப் போன்று திருமணம் செய்து கொள்ளவில்லை. சொல்லப் போனால் திருமணம் பற்றிய சிந்தனை அற்றவளாக இருந்தாள். அவளிடம் காமக்கிறுக்கர்களான தோல் ஷாப்பு முதலாளிகளோ, மேஸ்திரிகளோ வாலாட்ட முடியாது.

அவள் இருக்கும் பகுதியில், தோல்ஷாப்பு உடைமைகளோ. அவர்களது ஆட்களோ பெண்களிடம் தவறாக நடந்து கொள்வதை அவளால் சகித்துக் கொள்ள முடியாது. எனவே தோல்ஷாப்புப் பெண் தொழிலாளர்கள் மத்தியில் அவளுக்குத் தனி மரியாதையும் மதிப்பும் ஏற்பட்டிருந்தது.

தோல்ஷாப்பு வேலைகளானாலும், சங்கப் பணிகளானாலும் ஒரு நாள் கூட அக்னீஸ்மேரி சோம்பிப் பின் வாங்கியது கிடையாது. சங்கம் நடத்தும் ஆர்ப்பாட்டங்களிலும் போராட்டங்களில் கொடியை ஏந்தி ஒரு வீராங்கனையாக அவள் நடந்து போகும் அழகை நாளெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம். அவ்வளவு சுறுசுறுப்பு.

மேரி மட்டும் அவர்களுடன் சிறைக்கு வந்திருக்கவில்லை யெனில் பெண்கள் வார்டில் ஒரு சர்வாதிகாரியாக நடந்து கொள்ளும் ராட்சசி அம்மாளு அம்மாள், அவர்கள் அனைவரையும் சித்திரவதைப் படுத்தியே கொன்றிருப்பாள். அவர்கள் மட்டுமென்ன அந்த வார்டில் அடைக்கப் பட்டிருக்கும் ஏனைய பெண் கைதிகளுக்கும் கூட அக்னீஸ் மேரி அங்கு வந்ததற்குப் பின் அம்மாளு அம்மாளுவை எதிர்க்கும் தெம்பும் தைரியமும் ஏற்பட்டிருந்தது.

அம்மாளு அம்மாளை ஒரு ராட்சதப் பிறவி எனலாம். அந்தப் பெண்கள் வார்டே அவளுக்குத் தாரை வார்த்து விட்டாற் போன்று ஒரு ராணியைப் போன்று அதிகாரம் செய்வாள்.

அம்மை வடுக்கள் நிறைந்த கரிய முகமும் நறுங்கிப் போன மூக்கும், "பூ" விழுந்த ஒற்றைக் கண்ணும் பூதகி போன்ற உடல் வாகுமாகப் பார்ப்பதற்கே அவலட்சணமாக இருப்பாள். ஆண்குரலும், பெண் குரலும் இணைந்த கரகரப்பான ஓசையுடன் அவள் பேசுவதைக் கேட்கும்போதே பெண்களுக்குப் பீதி ஏற்படும்.

விபச்சார வழக்கில் கைதியாக வந்து சேர்ந்த அம்மாளு அம்மாள் தனது சாதுரியம் காரணமாகவும், சாமர்த்தியமான

நடவடிக்கைகளின் காரணமாகவும் அந்த வார்டின் வார்டராகவே நியமிக்கப்பட்டிருக்கிறாள்.

சிறை அதிகாரிகள் முதல், பணக்காரக் கைதிகள் வரையுள்ள பெரிய மனிதர்களுக்குத் தேவைப்பட்ட போதெல்லாம் பெண்கள் உட்பட அத்தனை தேவைகளையும் பூர்த்தி செய்யக் கூடிய சாமர்த்தியசாலி அம்மாளு அம்மாள்.

வடித்தெடுக்கப்பட்ட அம்மன் சிலையை விடத்தானும் அழகாக இருக்கும் அக்னீஸ்மேரியின் வடிவழகையும், அவளது கட்டு மஸ்தான உடல் வாகையும் பார்த்துப் பிரமித்துப் போன அம்மாளு அம்மாள் தனது மாய வலைக்குள் போட்டுக் கொள்ளும் தாஜா வேலைகளைச் செய்து பார்த்தாள். அதற்கு அவள் மசியவில்லை. பிறகு அவளுக்கும், அவளோடு சிறையில் இருக்கும் பெண்களுக்கான ரேஷனில் கை வைத்துக் கடுமையான பணிகளையும் கொடுத்துப் பார்த்தாள். அப்போதெல்லாம் எதிர்ப்புத் தான் மேலிட்டதல்லாமல் அம்மாளு அம்மாள் எதிர்பார்த்த பணிவும், இணக்கமும் அக்னீஸ் மேரியிடம் ஏற்படவில்லை.

தனது தந்திரோபாயம் எல்லாம் பலிக்கவில்லை என்ற விசனத்தில் அம்மாளு அம்மாள் இருக்கும் போது ஒரு நாள் மத்தியான வேளையில் அந்தச் சம்பவம் நடைபெற்றது.

தனது விபச்சார வியாபாரத் தொழிலுக்கு இணக்கம் தர மறுத்த மலையாளக் குமரியை

"வாடீண்டா வரமாட்டியோ. நீயோ விபச்சாரக் கேகலே வந்த முண்டை. கண்ட பயவளுக்கெல்லாம் முந்தி விரிக்கிற வேசை. பெரிய பத்தினியாட்டம் பாசாங்கு பன்றே" என்று சரமாரியாக வைத வண்ணம் அவளது குடுமியைப் பிடித்து இழுத்தாள்.

"அக்கா அது தான் வரமாட்டேங்குதே, அநியாயமா நீங்க இழுத்துக்கிட்டுப் போரது நல்லா இல்லே" அக்னீஸ் மேரி குறுக்கிட்டாள்.

பெண்கள், தங்களது பணிகளை அப்படியே போட்டுவிட்டுப் பீதியுடன் அம்மாளு அம்மாளைப் பார்த்தனர்.

அம்மாளு அம்மாளின் அதிகாரத்தில் இதுவரையில் எந்தப் பெண்ணும் தலையிட்டது கிடையாது. அக்னீஸ்மேரி அவள் விரித்த வஞ்சக வலையில் விழ மறுத்ததோடு, அமலோற்புதம் குழந்தைகள் பட்சிகளைப் போல் மரணம் அடைந்த போது அவள்தான் தைரியமாக ஜெயிலர் வரையில் போய் நல்லடக்கத்துக்குக் குரல் கொடுத்தாள் என்பதாலும் அம்மாளு அம்மாளுக்கு அக்னீஸ்மேரி மீது உள்ளூற கடுமையான குரோதமும் கோபமும் இருந்தது. இப்போது அம்மாளு அம்மாவின் அதிகார வட்டத்தில் அக்னீஸ் மேரி தலையிடுகிறாள் என்பதால் கடும் கோபம்.

"என்னடீ, அக்கா நொக்கா கூடப் பொறந்து தொப்புள் கொடி அறுந்து போனதாட்டம் சொந்தம் கொண்டாட வந்திட்டே. ராஸ்கோல் செடிய மூடிக்கிட்டுச் சும்மா இருப்பையா நாயம் பேச வர்ரீகளோ" என்றவள், நான் செய்யற வேலையைத் தடுக்க நீ ஆரு என்று எரிந்து விழுந்த வண்ணம் அந்த மலையாளத்துப் பெண்ணை வலுக் கட்டாயம் செய்தபோது அந்தப் பெண் உயிரே போனது மாதிரி அலறித் துடித்தாள்.

அப்பெண்ணின் அலறல் அக்னீஸ்மேரியின் மனச்சாட்சியையும், பெண்மையையும் விழித்தெழச் செய்தது தனது இரு கரங்களையும் அகல விரித்த வண்ணம் அம்மாளுவின் முன்னாள் போய் நின்றாள்.

"இது நல்லா இல்லே. நாங்க உடமாட்டம்" என்று அக்னீஸ்மேரி சொன்னாள்.

பெண் கைதிகள் ஒவ்வொருவராக வந்து கூட்டம் போடவும், அம்மாளுக்குக் கோபம் தாங்க வில்லை.

"என்னடீ, நல்லால்லே ரோசம் பொத்துக் கிட்டு வருதோ. நீ சங்கத்துக்காரியில்லே அப்படித்தான் பேசுவே

அத்தெல்லாம் ஒம் ஊர்லே வச்சுக்கோ எங்கிட்டக் காட்டாதை" என்றவள்

"ரோஷக்காரி. நீ போயி அவன் கிட்டே படுக்க வாரியா. இவளை நான் விட்டுருதேன்" வாய்க் கொழுப்பாகச் சொல்லவும், அக்னீஸ்மேரியின் உடம்பு கோபத்தால் நடுக்கம் கண்டது. கண் சிவக்கப் பல்லை நற நறவென்று கடித்த வண்ணம் அம்மாளுவைப் பார்த்தாள். அக்னீஸ்மேரியின் தோழிகளும், மற்ற பெண்களும் அங்கு கூட்டமாக வந்து சேர்ந்த போது அம்மாளு அம்மாளுக்குக் கோபம் மேலும் அதிகப்பட்டது.

அதற்குள் சின்னமனூர் வெள்ளத்தாயி, அம்மாளுவைப் பார்த்து இப்படிக் கேட்டாள்.

"ஏண்டீ முண்டே. ஆரப் பாத்துக் கேக்கறே? ஒனக்கு அரிப்பு எடுத்தா. நீ போயி அவனண்டை படுத்து எந்திரிக்க வேண்டியது தானே கொழுப்பெடுத்தவளே. எங்களை ஏண்டீ வம்பு பண்றே" மலையாளத்துப் பெண்ணை விட்டுவிட்டு அம்மாளு அந்த நடுத்தர வயதுப் பெண் மீது வேங்கையாகப் பாய்ந்தாள். லாத்திக் கம்பால் சரமாரியாக அவளைத் தாக்கவும், மின்னல் வேகத்தில் அம்மாளு அம்மாள் மீது பாய்ந்த அக்னீஸ்மேரி, லாத்தியைப் பிடிங்கி வீசியதுடன் அவளையும் அலாக்காகத் தூக்கி வீசினாள்.

தலை குப்புறப் போய் விழுந்த அம்மாளு எதிர்பாராத தாக்குதலால் நிலை குலைந்து போனாள். உதட்டோரம் கசியும் உதிரத்தைத் துடைத்துக் கொண்டு எழமுற்பட்டபோது, இது வரையில் பீதியில் உறைந்து போய் நின்ற மலையாளத்து யுவதி

"புலையாடி மவளே எந்தாடீ, என்னை விபச்சாரிண்ணு விசாரிச்சோ" என்று உரக்கக் கத்திய படியே அவள் மீது பாய்ந்து, அம்மாளுவின் குரல் வளையைப் பிடித்து நெறித்துக் கடித்துக் குதறப் போனாள்.

அவளை விலக்கிவிட்ட அக்னீஸ்மேரி, குலைந்து போய்க் கிடந்த தனது ஆடைகளைச் சரி செய்த படி,

"மேக்கொண்டும், இங்கு இருக்க பெண்ணுக்கிட்டே ஒன்னோட கைவரிசையைக் காட்டினே முண்டே ஒம் ஒடம்புலே உசிரு இருக்காது" என்று அக்னீஸ்மேரி எச்சரித்த போது, அங்கு நின்ற கைதிப் பெண்கள் அனைவரும் அம்மாளுவைக் கொன்று விடுவது போல் பார்த்த போது அம்மாளு பயந்து போனாள்.

உடலில் ஒட்டிய மண்ணையும் வீங்கிப் போன உதட்டிலிருந்து வடியும், உதிரத்தையும் துடைத்த வண்ணம், வாய்க்குள்ளேயே வன்மையாக முணுமுணுத்த படியே அங்கிருந்து வெளியேறினாள்.

ஏனோ, அவர்கள் பீதிப்பட்டது போல சிறை அதிகாரிகள் பெண்கள் வார்டுக்கு வந்து வழக்கம் போல் பெண் கைதிகளை மிரட்டுவதற்கு வரவில்லை.

ஆனால்,அந்தச் சம்பவத்துக்குப் பிறகு, அந்த வார்டில் அடைக்கப்பட்டிருந்த பெண்களுக்குத் தெம்பும் தைரியமும் ஏற்பட்டுப்போயிற்று. அம்மாளு அம்மாள் முன்னைப்போல், எடுத்ததற்கெல்லாம் பெண்களை மிரட்டுவதையும் விபச்சாரப் பணிகளுக்குப் பெண்களை வலுக்கட்டாயம் செய்து கூட்டிக் கொண்டு போவதையும் குறைத்துக் கொண்டிருந்தாள்.

ஆனால் பெண் வார்டர்கள், தங்களுக்குச் சவாலாக உருவாகியிருக்கும் அக்னீஸ் மேரியைப் பழி வாங்குவதற்காக வேண்டிய நேரம் பார்த்துப் பதுங்கிப் பதி போட்ட வண்ணமிருந்தனர். அதிலும் அம்மாளு அம்மாள் அக்னீஸ்மேரியைத் தனது பரம வைரியாகவே கருதிச் செயல்பட்டுக் கொண்டிருந்தாள்.

இப்படிப்பட்டதோர் சூழலில் தான் அவர்கள் எதிர் பாராத அந்தத் துக்க சம்பவம் நடை பெற்றுவிட்டது.

"அட கொலைகாரப் பாவிகளா. கொள்ளாக்கொமரு வில்லாச்சரக்கு அவளை உப்படி அநியாயமாக் கொண்டு போட்டீங்களே" என்று வாய்விட்டுக் கதறினாள் அமலோற்புதம். அவளது இரண்டு குழந்தைகளையும், ஜெயிலுக்குக் காவு கொடுத்த போது அமலோற்புதம் இவ்வளவு மனம் பதறி மனம் கசந்து அழுததில்லை.

அவள் மட்டுமல்ல, அவளோடு சேர்ந்து கைது செய்து சிறையில் அடைக்கப்பட்ட பெண்களும், அந்த வார்டில் அவர்களோடு பூட்டி வைக்கப்பட்டிருக்கும் பெண் கைதிகள் அனைவரும் அக்னீஸ்மேரியின் பிணத்தைப் பார்த்ததும் கதறி அழுதனர். இப்படி அவளுக்கு ஒரு அகால மரணம் ஏற்படும் என்று அவர்கள் யாரும் எண்ணிப் பார்க்கவில்லை.

காலையில் சிகிச்சைக்குக்கென கூட்டிப் போகப்பட்ட அக்னீஸ்மேரி இப்படி பிணமாக வார்டுக்குக் கொண்டு வரப்படுவாள் என்று அந்த வார்டில் அடைக்கப்பட்டிருக்கும் பெண் கைதிகள் யாரும் கருதவில்லை.

ஒரு வாரத்துக்கு முன்னால் தான் அக்னீஸ்மேரி தனக்கேற்பட்ட உபாதையை அமலோற்புதத்திடமும் அந்தோணி அம்மாளிடமும் சொன்னாள்.

"அக்கா, அந்தச் சண்டாளன் பலவேசம் என் அடிவவுத்துலேயும், உயிர் தலத்திலேயும் பூட்ஸ் காலாலேயும், லத்திக் கம்பாலேயும் ரெத்தம் வர்ர வரையில் அடிச்சு மிதிச்சான்.

உப்ப வவுத்துலேயும், ஒண்ணுக்குப் போவையிலேயும் ரணமா வலிக்குது ரெத்தம் ஊத்துவு" என்று வலி தாங்க முடியாமல் சொன்னவள், மறுவாரமே வேலைத் தலத்திலேயே உணர்வற்று மயங்கிக் கிடந்தாள். அதற்குப் பிறகுதான் அவளைச் சிகிச்சைக்காக முதல் நாள் காலைப்போதில் கூட்டிக் கொண்டு போனார்கள்.

இப்போது, அவர்கள் அனைவரையும் கொட்டடிக்குள் பூட்டி வைத்துவிட்டு இரவு வெகு நாழிகையான பிறகு செத்துப்போன தெரு நாயைக் குப்பைத் தொட்டியில் வீசி

எறிவது போல், அக்னீஸ்மேரியின் சடலத்தை வார்டுக்கு நடுவில் இருக்கும் வேப்ப மரத்துக் கடியில் வீசி எறிந்து விட்டுப்போயிருக்கிறது சிறைச்சாலை நிர்வாகம்.

காலையிலிருந்தே அவர்கள் உணவு அருந்த மறுத்துவிட்டதால்., அம்மாளு அம்மாள் தனது பரிவாரங்களுடன் ஒவ்வொரு அறையாகச் சென்று லாத்திக் கம்பை வைத்துக்கொண்டு மிரட்டிய போதும் எந்த ஒரு பெண் கைதியும், அவர்களுக்கு வழங்கப்பட்ட உணவைத் தொடவில்லை. மாறாக ஒவ்வொரு அறையிலிருந்தும் கேவலும், விம்மலும் ஒப்பாரியும் தான் அவலமாகக் கேட்டுக் கொண்டிருந்தது.

"அடியேய், முண்டைங்களா. எல்லா செருக்கிகளும் பேசி வச்ச தாட்டம் ரேஷனைத் தொட மாட்டீங்களோ விடியட்டும் ஒவ்வொருத்திக்கும் இருக்குடீ பூசை" என்று மிரட்டியவள்

"பாத்தீங்களா இந்த முண்டைக்கு ஏற்பட்ட கதிய. எங்களை எதுத்தீங்க. இவளாட்டம் நீங்களும் நாதியத்து மரத்துக்கடியிலே பிணமாகத் தான் கிடப்பீங்க" என்று ஒவ்வொரு அறையாகச் சென்று மிரட்டிவிட்டு வார்டைவிட்டுவெளியே போனாள்.

வார்டரிடம் முறையிட்டு, மேலும் ஜெயில் வார்டர்களைக் கூட்டி வந்து பெண் கைதிகளை நையப் புடைத்துத் தனது அதிகார வட்டத்துக்குள் கொண்டு வந்துவிட வேண்டும் என்பது அவளுடைய திட்டம்.

தூறலாக ஆரம்பித்த மழை, நேரம் ஆக ஆக அக்னீஸ்மேரியின் பரிதாப மரணத்தைக் கண்டு இயற்கையே மனம் துக்கித்துக் கசிந்து அழுவது போன்று மழை உக்கிரமடைந்து வானத்தையே பொத்துக்கொண்டு கொட்டியது. அக்னீஸ்மேரியின் சடலம். மழை வெள்ளத்தில் துவண்டு கிடந்தது. அறைகளுக்குள் பூட்டிக் கிடந்த பெண் கைதிகள் இரவு முழுவதும் நித்திரை கொள்ளாது, அக்னீஸ் மேரியின் பிணத்தைப் பார்த்து துக்கித்து நின்றார்கள்

ஒவ்வொரு கைதியின் உள்ளிலும் சிறை நிர்வாகத்தின் மனிதத் தன்மையற்ற மிருகத் தனமான நடவடிக்கையை எதிர்த்து வெறுப்பும், கோபமும் கனன்று கொண்டிருந்தது.

கீழ்வானில் விடிவின் கீறல் தென்பட்ட போது, இரவு முழுதும் பேய் மழையாக வர்ஷித்துக் கொண்டிருந்த மழை விடைபெற்றுக் கொண்டு வெளி வாங்கி, வான மண்டலம் துடைத்துச் சுத்தம் செய்யப்பட்டது போன்று நிர்மலமாகக் காட்சி தந்தது. வஞ்சகமற்ற சூரிய பகவானின் செந்நிறக் கதிர்கள் சிறைச்சாலைக் காம்பவுண்டுக்குள் பரவியபோது, அந்தப் பிரதேசமே பறவைகளின் இன்னிசையால் நிரம்பி வழியலாயிற்று. சூரிய கற்றைஅக்னீஸ்மேரியின் சடலத்தைத் தழுவி ஒளியால் அபிஷேகம் செய்து உடலை ஒளிர வைத்துக் கொண்டிருக்கிறது.

விடிந்து வெகு நேரத்துக்குப்பிறகே, தனது பரிவாரங்களுடன் வார்டுக்குள் பிரவேசித்த அம்மாளு அம்மாள், ஒவ்வொரு அறையாகத் திறந்துவிட்டாள். ஆனால் அவள் எதிர் பார்த்தது போல், எந்த ஒரு பெண் கைதியும் அறையை விட்டு வெளியே வரவில்லை.

"வேசை முண்டைங்களா, வெளியே வந்து பைலில் உட்காரப் போறீங்களா. இல்லே ஒவ்வொரு செருக்கியவும் இழுத்துப் போட்டு நோனி பிதுங்க சவட்டணுமா" என்று தன் கையில் இருந்த லத்திக் கம்பைச் சுழற்றிய வண்ணம் அதிகார தோரணையில் கர்ஜித்தாள். கைதிகளிடம் பிரதிபலிப்பு ஏற்படவில்லை.

மீண்டும் அம்மாளு அம்மாள் தாடகையாக நின்று கர்ஜித்தபோது எதிர் பாராத விதமாக வடக்குப் பார்த்த அறையிலிருந்து வீசப்பட்ட மலமும், சிறுநீரும் கலந்து நிறைந்த மண் சட்டி அவளது சிரசில் பட்டு உடைந்து சிதறிக் கீழே விழுந்தது அம்மாளு அம்மாள் மலக்கழிவினால் அலங்கரிக்கப்பட்டிருந்தாள்.

எதிர்பாராத தாக்குதலால் மிரண்டுபோன அம்மாளு அம்மாள் "எவடீ, அவளை அடிச்சு நொறுக்குங்கடி" என்று உத்திரவிட்டது தான் தாமதம் அந்த வார்டின் அத்தனை

அறைகளினின்றும் வீசப்பட்ட மலச்சட்டிகள் அம்மாளு அம்மாளைத் திணற வைத்தது.

"ஏண்டீ பாத்துட்டு நிக்கீங்க. அத்தனை தேவடியாளு வளையும் அடிச்சுக் கொல்லுங்க" என்று கர்ஜித்த போது, புற்றிலிருந்து ஈசல் கிளம்பியது போல் அத்தனை அறைகளிலுமிருந்த பெண் கைதிகளும் அம்மாளு அம்மாளையும் அவளது பரிவாரங்களையும் சூழ்ந்து கொண்டனர்.

"எங்கே. நீ எங்களைத் தொட்டுப் பாரு." சிட்டம்மாள் சொன்னாள்.

"அக்னீஸ்மேரி என்ன நாதியத்தவாண்ணு நெனைப்போ. கூட்டிட்டுப் போயி அநியாயமாக் கொண்டு போட்டதும் இல்லாம அனாதைப் பொணமா போட்டு வச்சிருக்கே"

அமலோற்புதம் துர்க்கையம்மாளாக நின்று அம்மாளுவைக் கேட்டாள்.

பெண் கைதிகளிடம் ஏற்பட்டிருந்த எதிர்பாராத ஒற்றுமையும் ஆவேசமும் அம்மாளு அம்மாளைக் கதிகலங்கச் செய்தது. சற்று நேரம் நின்றிருந்தாலே அவர்கள் அவளையும் அவளது பரிவாரத்தையும் பீறிப் போடுவார்கள் என்பது போல்பட்டது.

தோல்வி கண்ட படையைப் போன்று அம்மாளும், அவளது ஆட்களும் வார்டை விட்டு வெளியேறிப் போனார்கள்.

கூடிநின்ற பெண்கள் அக்னீஸ்மேரியின் சடலத்தை மேடையில் தூக்கி வைத்து ஒப்பாரி வைத்தார்கள்.

சிட்டம்மாள், அக்னீஸ்மேரியின் சடலத்தில் தவறிக் கிடந்த சேலையைக் களைந்து மாற்றுச் சேலையைச் சடலத்தின் மீத போர்த்தினாள். அமலோற்புதம் மட்டும் மனம் கசிந்து வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு

அக்னீஸ்மேரியின் மரணத்துக்காகத் துக்கித்து மனம் கசந்து அழுதாள்.

அவர்கள் எதிர்பார்த்த படியே ஜெயிலர் தனது படை பட்டாளத்துடன் அந்த வார்டுக்குள் வந்தான். ஆனால் ஏனோ அவன் வழக்கம் போல் அதிகார தோரணையில் நடந்து கொள்ளவில்லை. அம்மாளு அம்மாளும், அவளது பரிவாரமான பெண் வார்டர்களும் வராதது அந்தப் பெண்களுக்கு வியப்பாகப்பட்டது.

ஜெயிலர் மிகவும் சாந்தமாகப் பேசினான். அவர்களின் கோரிக்கைகளைச் செவி மடுத்துக் கேட்டான்.

பெண் கைதியிடம் ஒரு ராட்சசியைப் போன்று நடந்து கொண்ட அம்மாளு அம்மாளை இடைக்கால வேலை நீக்கம் செய்திருப்பதாக அந்த வார்டு கைதிகளிடம் சொன்னான்.

தோல் பதனிடும் தொழிலாளர் பெண் கைதிகளின் வேண்டுகோளை ஏற்று, ஒரு கிறிஸ்தவப் பெண்ணுக்குச் செய்ய வேண்டிய மத சடங்காச்சாரப்படி அக்னீஸ்மேரியின் சடலம் புதைக்கப்படும் என்கிற உத்திரவாதம் கொடுக்கப்பட்ட பின்னரே, அகனீஸ்மேரியின் சடலம் அந்த வார்டில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டது.

என்ன வானாலும் அக்னீஸ்மேரியின் மரணம் அவர்கள் உள்ளங்களில் ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தியிருந்தது.

இந்தச் சம்பவம் நடந்து மூன்று வாரங்களுக்குப் பிறகு, தோல் பதனிடும் தொழிலாளர் பெண்கள் தண்டனைக் காலம் முடிவு பெற்று, இதர ஆண் கைதிகளைப் போன்றே விடுதலை செய்யப்பட்டனர்.

அக்னீஸ்மேரியை இழந்த துக்கத்துடன் கனத்த உள்ளங்களோடு அவர்கள் சிறைக் கொட்டடியினின்றும் வெளியே வந்தார்கள்.

பாகம் - 3

1

1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ஆம் நாள் நூற்றாண்டுக் காலமாக இந்திய நாட்டு மக்களை, அடிமைத் தளைகளால் பிணைத்து நசுக்கிப் பிழிந்த ஆக்கிரமிப்பாளனும், அக்கிரமியுமான பிரிட்டீஸ் ஏகாதிபத்தியத்தின் அடையாளமான யூனியன் ஜாக்கொடி டில்லிக் கோட்டையினின்றும் இறக்கப்பட்டு, சுதந்திரப் போராட்டத்தின் தியாகத்தின் சின்னமான மூவர்ணக்கொடி கோட்டையை அலங்கரித்துப் பட்டொளி வீசிப் பறக்கும் மகத்தான திருநாள்

வெள்ளை ஏகாதிபத்தியம் சுதந்திரப் போரின் வெக்கையையும், வேகத்தையும் தாங்க முடியாமல், ஆட்சி அதிகாரத்தை இந்த நாட்டு மக்களின் தலைவர்களிடம் ஒப்படைக்கும் நாளாக விடியும். அந்த மகத்தான மகிழ்ச்சி மிக்க போதில் வெளிச்சத்தின் மறுபக்கம் இருள் சூழ்ந்தது. பேய்க்கு ஆட்பட்டு, இந்துக்கள் என்றும் முஸல்மான்கள் என்றும் பிரிந்து நின்று ஒருவரை ஒருவர் சண்டாளத்தனமாக வெட்டிச் சாய்த்து இரத்த வெள்ளத்தில் இந்த நாட்டை மூழ்கடித்துக் கொண்டிருந்தனர்.

பிரிட்டீஸ் ஏகாதிபத்தியக் குள்ளநரி தனது ஏகாதிபத்தியச் சதியை வெற்றிகரமான முறையில், இந்திய உபகண்ட மக்களைப் பிரித்தாண்டு சுதந்திர நன்நாளை நரகவாதனை மிக்க துன்பநாளாக உருவாக்கி விட்டுத் தப்பித்துக் கொண்டது.

சுதந்திர இந்தியாவின் சிற்பியான மகாத்மா மோகன்தாஸ் கரம்சந்த் காந்திக்கு இந்த தேசமே நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறது என்று பிரிட்டீஸ் அரசாங்கத்தின் பிரதிநிதியான லார்டு மவுண்ட் பேட்டன் பாராளுமன்றத்தில் புகழாரம் சூட்டியபோது அதை ஏற்றுக் கொள்ள அவர் அங்கு இருக்கவில்லை. மாறாக இந்த நாட்டிலேயே அதிகமான துக்கமும், வேதனையும் கொண்ட மனித ஜீவனாக வங்க மாநிலத்தில், கல்கத்தா மாநகர வீதிகளில் மூட்டிவிடப்பட்ட மத மாச்சரியக் கலவரத்தில் சிக்கித் தவிக்கின்ற முஸ்லீம் இந்து சகோதரர்களுக்கு ஆறுதல் சொல்வதற்கும், சமாதானத்தையும் சாந்தியையும் ஏற்படுத்துவதற்காக வேண்டி உண்ணா நோன்பு உணர்வோடு ஒரு பக்கிரியைப் போல் அலைந்து கொண்டிருந்தார்.

இப்படிப்பட்டதோர் சூழ்நிலையில் பகலும் இரவும் சந்திக்கும் இரண்யப் பொழுதில் வேலூர்க் கோட்டையின் மதில் கதவுகள் திறக்கப்பட்டு, சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கும் இந்தியக் குடிமகனாக, சங்கரனும், பாதுகாப்புக் கைதிகளாகச் சிறை வைக்கப்பட்டிருந்த மக்கள் ஊழியர்களும் விடுவிக்கப்பட்டார்கள்.

சிறைக் கொட்டடியினின்றும் வெளியே வந்த சங்கரனால், தஞ்சைத் தரணிக்குப் போய், சுந்தரேச அய்யரையும், தாயார் அம்புஜத்தம்மாளையும் பார்க்க வேண்டும் என்கிற பாச உணர்வு உள்ளூற முகிழ்த்த போதும், சிறைச் சாலையில் அவருக்குக் கிடைத்த சகோதரர் தங்கசாமியின் கடிதமும், இரண்டு வாரத்துக்கு முன்னால் சிறைச்சாலையில் அவரை வந்து சந்தித்து விட்டுப் போன இருதயசாமி சொன்ன தகவல்களும், சங்கரனுள் வேறுவிதமான உணர்வை ஏற்படுத்தியிருந்தது. அதிலும் பிரதர் தங்கசாமி தனக்கே உரிய பாணியில், சங்கரன் போலீஸாரால் கைது செய்யப் பட்டதற்குப் பிறகு ஏற்பட்ட ஒவ்வொரு நிகழ்ச்சியையும், ஏற்பட்ட எதிர்விளைவுகளையும் விவரமாகக் குறிப்பிட்டிருந்தார். சிறை சென்று மீண்ட பெண் தொழிலாளர்களையும் ஆண்களையும் வரவேற்பதற்காக ரெயில் நிலையத்தில் ஏற்பட்ட கூட்டமும் ஊர்வலமும், நான்கு மாத காலமாகத் தாயைப் பிரிந்து வாழ்ந்த ஏக்கம் காரணமாகத் தாயார் மேரியைப் பார்த்த மாத்திரத்தில்

அவளது ஒரே பையன் முத்தையன் உயிர் நீத்த பரிதாபத்தையும், வரவேற்பு ஊர்வலம் சடுதியில் சவஊர்வலமாக மாறிப் போன பரிதாப சம்பவத்தைக் குறிப்பிட்டிருந்தது. நெஞ்சை உருக்குவதாக இருந்தது.

இவ்வளவு அவலங்களும், இன்னல்களும் ஏற்பட்டிருந்த போதும், அடக்கு முறையையும், அவல வாழ்க்கையையும் பொருட்படுத்தாமல், அம்மக்கள் மனம் தளராமல் ஒன்று பட்டு நின்றிருக்கின்றனர் என்கிற உண்மை சங்கரன் உள்ளத்தில் பெருமிதத்தை ஏற்படுத்தியிருந்தது. எனவே, மற்ற வேலைகளையெல்லாம் ஒதுக்கி வைத்த சங்கரன், தான் விடுதலை அடைந்த விவரத்தையும் தான் புறப்பட்டு வரும் விவரங்களையும் தந்தி மூலம் இருதயசாமிக்கும், மற்றவர்களுக்கும் தெரிவித்துவிட்டு இரவோடு இரவாக அந்த மலைக்கோட்டை நகரம் நோக்கிப் பயணமானார்.

புகை வண்டி வழக்கம் போலவே, ஒரு மணிநேரம் தாமதமாகவே பயணப்பட்டுச் சாவதானமாகப் பொழுது புலரும் நேரத்தில் அந்தஸ்டேஷன் வந்து சேர்ந்தது.

பாயின்ஸ்ட்மேன் ரெங்கக் கோனார், சங்கரன் ரெயில் பெட்டியை விட்டு இறங்குவதற்கு முன்பாகவே சங்கரனது படுக்கையையும் பெட்டியையும் எடுத்துக் கொண்டார். ரெங்கக் கோனாரும், ஸ்டேஷன் மாஸ்டர் சுப்புண்ணிக்குப் பதிலாகப் பொறுப் பேற்றிருக்கும் பாலக்காடு கிருஷ்ணவாரியர் உதவியாளரான பொன்மலை வேளாங்கண்ணியும், ரெங்கக் கோனாருடன் வந்து நிற்பது சங்கரனுக்கு வியப்பாகப் பட்டது. அவர்கள் எல்லாம் ரெயில்வே ஊழியர்கள் சம்மேளனத்தின் முக்கிய உறுப்பினர்கள்.

"நான் இந்த வண்டியில வர்ரது உங்களுக்கு எப்படித் தெரியும்" என்று சங்கரன் ரெங்கக் கோனாரைக் கேட்டபோது.

"அம்பி நீங்க எங்கபோரீய வாரீயண்ணு எங்களுக்க எப்படித் தெரியாம இருக்கும் எங்க அமைப்பு அத்தனை பெரிசு" என்று சொன்ன படியே கோனார் தெற்கே பிளாட்பாரத்தைக் காட்டியபோது, தோழர் வேலாயுதமும் இருதயசாமியும் சங்கரனை நோக்கி வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

பல மாதங்களாக அவரைப் பார்க்காததன் காரணமாகவோ என்னவோ, சங்கரன் மீண்டும் ரெங்கக் கோனாரைப் பார்த்த போது அவரது வயது முதிர்ச்சி தென்பட்டது. தலையில் கூடப் பின்பக்கமாக வழுக்கை போட்டிருந்தது மட்டுமல்லாமல் கோனாரிடம் பெரும் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. அதாவது இரவு பகலாக அவரது நெற்றியை அலங்கரிக்கும் திருவரங்கப் பெருமானின் அடையாளமான நாமம் காணப்படவில்லை.

சங்கரன் தனது நெற்றியை ஆய்வு செய்வதேபோல் பார்ப்பதைக் கவனித்த ரெங்கக் கோனார்.

"அம்பி, போராட்டத்திலே ஜெயிலுக்குப் போனப் பொறவுதான் நமக்கும் நாமத்துக்கும் சம்மந்தமில்லேண்டு தெரிஞ்சுக்கிட்டேன்" என்று சுவாரஸ்யமாகக் கதை சொன்னபடியே எதிர்நோக்கி வந்து கொண்டிருக்கும் தோழர் வேலாயுதத்தையும் மற்றவர்களையும் பார்த்து நடந்து போனார்.

மாதம் தவறினாலும், திருப்பதி வெங்கடாஜல பதியைத் தரிசிப்பதற்காகத் திருப்பதிக்குப் போய்வரும் ரெங்கக் கோனாரிடம் இப்படி ஒரு மாற்றம் ஏற்பட்டிருப்பது சங்கரனுக்கு வியப்பாகப் பட்டது.

தோழர் வேலாயுதம் தான் கொண்டு வந்திருந்த மாலையை அணிவித்துச் சங்கரனை வரவேற்றார்.

"தோழர் நான்தான் உங்களுக்கு மாலை அணிவித்துப் பாராட்ட வேண்டும். நீங்க எனக்கு மாலை போடரேள்" என்று காரியமாகச் சொன்னபடியே, தனக்கு அணிவிக்கப்பட மாலையைத் திரும்பவும், வேலாயுதம் கழுத்தில் அணிவித்தார் சங்கரன்.

தோழர் வேலாயுதம் முதல் நாள்தான் தனது தலை மறைவு வாழ்க்கையை முடித்துக் கொண்டு வெளியே வந்திருக்கிறார். வேலாயுதம், தலைமறைவாக இருந்து கொண்டு, சரியான வழி காட்டவில்லையெனில், இருதயசாமியாலும், பிரதர் தங்கசாமியாலும்

மற்றவர்களாலும், போலீஸ் அடக்குமுறையையும், தோல் ஷாப்பு முதலாளிகளுடையவும் அவர்களது அடியாட்களுடையவும் அக்கிரமங்களைச் சமாளித்திருக்க முடியாது.

சங்கரன், ஸ்டேஷன் நுழைவாயிலை அடைந்த போது, பிரதர் தங்கசாமி ஒரு கிறிஸ்தவனுக்குள்ள பணிவோடு சங்கரனுக்கு ஸ்தோத்திரம் சொன்னார்.

சந்தனத்தேவர், காலசாமி கொண்டாடியாட்டம் வாயிலில் சங்கரனுக்காகக் காத்து நிற்பதைப் பார்த்தபோது

"தேவரே இனியும் எனக்குப் பாதுகாப்பு வேண்டாம் போய் உங்க வேலையைப் பாருங்கோ" என்ற போது,

"இப்போ, அவர் மூர்க்கக்குணத்துக்கு எல்லாம் அணை போட்டிருக்கோம். நத்தம் சாலை தோல் ஷாப்புக் கிளைகளுக்குத் தேவர்தான் பொறுப்பு" இருதயசாமி சொன்னபோது

"வாத்தியாரும் மத்தவங்களும் என் கையைக் கட்டிப் போட்டுட்டாங்க சாமி" என்று சொன்னபடியே சந்தனத் தேவன் அவர்களைத் தொடர்ந்து நடந்து வந்தான்.

ரெயில்வே நிலையத்தை விட்டு வெளியே வந்தபோது அந்த நகரத்து உழைப்பாளிப் பட்டாளமான தோல் பதனிடும் தொழிலாளர்கள் ஆண் பெண் அனைவரும் குடும்ப சகோதரராக அவரை வரவேற்கத் திரண்டிருப்பது கண்டு வியந்து நெகிழ்ந்து போனார் சங்கரன்.

அவர்கள் தங்களுக்கே உரித்தான தாரை தப்பட்டை இசைக்கருவிகளுடன் சங்கரனை வரவேற்க அங்கு குழுமி நிற்கிறார்கள்.

சங்கரனைக் கண்டதும், ஊர்வலத்துக்குத் தயாராக நின்ற பெண்கள் குரவை ஒலி எழுப்ப, தாரை தப்பட்டை ஒயிலாட்டம் சகிதம், ஊர்வலம் நகர வீதிகள் வழியாகச் சங்கக் கட்டிடத்தை நோக்கி ராஜ நடை போட்டு நகரலாயிற்று

தீண்டப்படாதவர்கள், என்றும் சண்டாளர்கள் என்றும் ஒதுக்கப்பட்டு, எந்த வீதிகளுக்குள்ளும், தெருவுகளுக்குள்ளும் வரக் கூடாது என்றும் தடுக்கப்பட்டிருந்தனரோ அந்தத் தெருக்கள் வழியாகவும், அந்த நகரத்தின் ராஜவீதிகளின் வழியாகவும், விலக்கப்பட்ட, வெறுத்தொதுக்கப்பட்ட தாரை தப்பட்டைப் பறை மேளத்தின் நாதம் வான்முகட்டைப் பெயர்த்தெறியும் ஆங்கார ஓசையுடன் எக்காளமிட அந்த மக்களின் கம்பீர ஊர்வலம் கடந்து போனது.

சுப்பவாடனும் அவனது சகாக்களும் சிலம்பு சுற்றியவண்ணம் ஊர்வலத்தின் முகப்பில் ஆர்ப்பரித்து நடந்தார்கள்.

தொழிலாளர்கள் இயக்கத்தின்பால் வெறுப்பும், கோபமும் கொண்டிருந்த சூப்பிரண்டு வெள்ளைத்துரை வழக்கம்போல், ஊர்வலத்தைக் குலைக்கவும், அவர்களை அச்சுறுத்தும் வகையிலும் அவனது கையாளான சப்-இன்ஸ்பெக்டர் பலவேசம் தலைமையில் வீதி தோறும் போலீஸ் ஜவான்களை நிறுத்தியிருந்தான். ஊர்வலத்தை ஒழுங்கு படுத்துவது போல், பலவேசமும் அவர்களைப் பயமுறுத்தும் உபாயங்களைக் கையாண்டு பார்த்தான். கட்டுப்பாடான அம்மக்களின் ஊர்வலத்தை அவனால் குலைக்க முடியாமல் போயிற்று.

ஊர்வலம் சங்கத்திடலை அடைந்தபோது, நாடு விடுதலை பெற்றதன் அடையாளமாக, மைதானத்தின் நடுவில் புதிதாக நட்டு வைக்கப்பட்டிருந்த கொடிக்கம்பத்தில் சங்கரன், தொழிலாளர்களின் கோஷம் முழங்க மூவர்ணக் கொடியை விண்ணில் பறக்க விட்டார்.

சங்கத்தின் எல்லா நடவடிக்கைகளிலும் முன்னுக்கு நிற்கும் ஊழியனான ஓசேப்பை ஊர்வலத்திலும், பொதுக் கூட்டத்திலும், காணப்படாதது, சங்கரனது மனதில் ஒருவித நெருடலை ஏற்படுத்தியிருந்தது.

2

மாலை மயங்கும் வேளை.

மலைக்கோட்டையை ஒட்டியிருக்கும் பேரேடு மைதானத்தில் குவிந்திருக்கும், குப்பைகளும், கழிவுகளும் அப்புறப்படுத்தப்பட்டுச் சுத்தம் செய்யப்பட்டிருக்கிறது. மைதானத்தைச் சுத்தம் செய்யும் பொறுப்பை நகரசபை ஏற்றுக் கொண்டிருந்ததால், நகரசுத்தித் தொழிலாளர்கள் அத்தனை பேரும் மைதானத்தைச் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள்.

ஒரு காலத்தில் திப்பு சுல்த்தானும், ஹைதர் அலியும், வெள்ளையனை எதிர்ப்பதற்காகவும், தங்களது ஆதிபத்தியத்தை நிலை நாட்டிக் கொள்வதற்காகவும், தங்களது படை பட்டாளத்தைப் பராமரிப்பதற்காகவும், பயிற்சி கொடுப்பதற்காகவும் பயன்படுத்தப்பட்ட நினைவிடமான மைதானம் புறக்கணிக்கப்பட்டு காலமெல்லாம் பாழடைந்து கிடந்த பேரெடு மைதானம், இப்போது கோட்டை மைதானம் என்று பெயர் சூட்டப்பட்டு சுத்தம் செய்யப்படுகிறது.

கோட்டை மைதானமான பேரேடு மைதானத்தின் நடுநாயகமாகப் புதிதாகக் கொடிக்கம்பம் நாட்டப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. அருகில் தலைவர்களும், பிரமுகர்களும், அமர்வதற்காக அமைக்கப்பட்டிருக்கும், மேடையில் கட்டப்பட்டிருக்கும் ஒலி பெருக்கியினின்றும் பாரதியின் ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே என்கிற கொலம்பிய கம்பெனி ரிக்கார்டு செய்த பாடல் ஒலி மலைக்கோட்டையில் பட்டு எதிரொலித்த வண்ணமிருக்கிறது

மைதானத்தைச் சுற்றிலும் வளர்ந்திருக்கும் மரங்களிலும், நாட்டப்பட்டிருக்கும் கம்பங்களிலும் கட்டப்பட்டிருக்கும் மூவர்ணக்கொடிகளும், தோரணங்களும் மைதானத்தில் வீசும் மென்காற்றில் அசைந்து ஆடி நர்த்தனம் புரிந்த வண்ணமிருக்கின்றன.

நூற்றாண்டுகளுக்கு முன்னால், வெள்ளை பிரிட்டீஸ் ஏகாபத்தியம் இந்த மண்ணில் கால் பரப்பச் சண்டாளத்தனமான அடக்கு முறையையும், கொலை பாதகத்தையும் அவிழ்த்து விட்டிருந்தபோது, வெள்ளையனை எதிர்த்து வியூகம் அமைத்து, கட்டபொம்மனும், மருது சகோதரர்களும், மற்றும் தென்நாட்டுச் சுதந்திர வீரர்களும், கும்பினியானை எதிர்த்துக் கூடிய வீரர்களுக்கு அடைக்கலமும், ஆதரவும் தந்த மலைக்கோட்டை, மைதானத்துக்கு மேற்கே மௌனச் சாட்சியாக நின்று கொண்டிருக்கிறது.

நாடு அந்நிய ஆதிபத்தியத்தின் பிடியினின்றும் விடுபட்ட மகத்தான நாளைக் கொண்டாடுவதற்காகவும், தலைவர்கள் நாட்டின் வருங்காலம் பற்றி என்ன சொல்லப் போகிறார்கள் என்பதைக் கேட்பதற்காகவும் நகரத்து மக்கள் அந்த மைதானத்தில் கூடிக் கொண்டிருக்கிறார்கள்.

சகோதரர் தங்கசாமியைப் பொறுத்த மட்டில் என்ன வேலை இருந்த போதும் அதை ஒதுக்கிவிட்டு மாற்றுக் கட்சியினரோ அல்லது மாறுபட்ட அபிப்பிராயம் கொண்ட பொதுஜன அமைப்புக்களோ நடத்தும் கூட்டங்களில் நிச்சயம் ஒரு பார்வையாளராகக் கலந்து கொள்வார். அப்போதுதான் மற்றவர்கள் சொல்லும் அபிப்பிராயங் களையும், விமர்சனங்களையும் செவி மடுக்க முடியும், தவறுகளைக் களைந்து கொள்ள உதவியாக இருக்கும். இது ஒரு பொதுஜன ஊழியனுக்கு இன்றியமையாத ஒன்று என்பது அவரது அபிப்பிராயம்.

எனவே சகோதரர் தங்கசாமி மினிசாமியையும் மைக்கேல் ராகவையும் துணைக்கு அழைத்துக் கொண்டு கோட்டை மைதானத்தை அடைந்த போது, மலைக்

கோட்டையின் அடிவாரத்தில் லேசாக இருள் கவியத் தொடங்கியிருந்தது. ஆங்காங்கே காவலுடன் நிறுத்தப் பட்டிருக்கும் பெட்ரோ மாக்ஸ் விளக்குகள் கோபம் கொண்ட நாகப் பாம்பாகச் சீற்ற மிகு ஒலியை எழுப்பிய வண்ணம் ஒளியை உமிழ்ந்து கொண்டிருக்கின்றன.

கதர் ஆடை அணிந்த தொண்டர்களும் போலீஸ்காரர்களும் கம்பும் தடியுமாகக் கூட்டத்தை ஒழுங்கு படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

அப்போது மக்கள் கூட்டத்தை விலக்கிக் கொண்டு, கருப்புச் சட்டையும், கையில் கருப்புக் கொடியையும் ஏந்திய வண்ணம் எண்ணெய்க் கடை வீரபத்திர நடாரும், அவரது தொண்டர்களும், சுதந்திர தினத்தைக் கண்டித்துக் கோஷம் எழுப்பியபடி கூட்டம் நடக்கும் மேடையை நோக்கிப் போன போது கூட்டத்தில் சலசலப்பு ஏற்படலாயிற்று.

சப்-இன்ஸ்பெக்டர் பலவேசமும், போலீஸ்காரர்களும், வீரபத்திர நாடாரையும், அவரோடு வந்திருக்கும் கருப்புச் சட்டைக் காரர்களையும் சுற்றி வளைத்து வியூகம் அமைத்து நின்றார்கள்.

போலீஸ் பட்டாளம் தன்னைச் சுற்றி வளைத்து நிற்பதையும் பொருட்படுத்தாமல் வீரபத்திரன் நாடார் கூட்டத்தைப் பார்த்து

"இந்த நாள் இந்திய மக்களுக்குச் சுதந்திரம் கிடைத்த நாளல்ல. இது பார்ப்பானுக்குக் கொடுக்கப்பட்ட சுதந்திரம். சூத்திரனையும், பஞ்சமனையும், சனாதனி கையில் அடிமைப்படுத்தும் நாள்.

வருணாசிரமம் இருக்க வேண்டும். ஜாதி இருக்க வேண்டும். முதலாளிகள் இருக்க வேண்டும். மதம் இருக்க வேண்டும். வேதம், புராணம் இதிகாசம் இருக்க வேண்டும். வெள்ளைக்காரன் மட்டும் போக வேணுமா.

வெள்ளைக்காரன் மட்டும் போக வேண்டும் என்கிற காங்கிரசோ, சுயராஜ்யமோ, காந்தியமோ, சுயமரியாதை

இயக்கத்திற்கு பகையாகும். எனவே, இன்று ஏற்பட்டிருக்கும் சுதந்திரநாள் நமக்கெல்லாம் ஒரு துக்கதினம்" என்று பேசவும், மேலும் நாடாரைப் பேச விட்டால் அசம்பாவிதம் ஏற்படும் என்று பயந்த பலவேசம், வீரபத்திர நாடாரையும் அவருடன் கருப்புக் கொடி ஏந்தி வந்தவர்களையும், கைது செய்து போலீஸ் வண்டியில் ஏற்றிக் கூட்டத்துக்கு வெளியே கொண்டு போனான். கூட்டத்தில் சின்ன சலசலப்பு.

வீரபத்திரன், ஈ.வே.ராமசாமி நாயக்கர் சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவர். நாஸ்திகர் ராமசாமி நாயக்கர் அந்த ஊருக்கு வந்தார் என்றால் வீரபத்திர நாடார் வீட்டில் தான் தங்குவார். அவ்வளவு நெருக்கம். வீரபத்திரன் நாடார், இராமசாமி நாயக்கர் கட்சியில் முக்கியப் பிரமுகர் என்பதோடு, உள்ளூர் நாடார் மகாஜன சங்கத்தின் முக்கிய புள்ளிகளில் ஒருவரும் கூட வீரபத்திர நாடாரின் கடலைக் கமிஷன் மண்டியும், எண்ணெய் மில்லும், அவருடைய தகப்பனார் பெரியகருப்ப நாடார் காலம் முதல் கடந்த இரண்டு தலை முறைகளாக வட்டாரத்தில் பிரபல்யம்.

வீரபத்திரன் நாடாரும் அவரது சக தொண்டர்களும், கைது செய்யப்பட்டுக் கூட்டத்தைவிட்டு வெளியே கொண்டு போகப்பட்டதற்குப் பிறகு, கூட்டத்தின் சலசலப்பு ஓயவும், பொதுக்கூட்டம் ஆரம்பமாகிறது என்று நரசிம்ம பாரதி ஒலி பெருக்கியில் அறிவித்தார். அதைத் தொடர்ந்து கூட்டத்தில் பேசுவதற்காகவும், பங்கு பெறுவதற்காகவும் வந்திருந்த பிரமுகர்கள் ஒவ்வொருவராக அடைமொழிகளுடன் மேடைக்கு அழைக்கப்பட்டனர்.

மேடைக்கு வரும்படியாக முதல் முதலாக அழைக்கப்பட்டவர் நகரத்தின் பிரபல பணக்காரரும், மேற்கு ரதவீதியில் நகைக் கடை வைத்திருப்பவருமான நாவன்னா மூவன்னா என்கிற சுருக்கப் பெயரால் அழைக்கப் படுபவருமான நகைக்கடை முத்தையா பிள்ளை பிள்ளையவர்களுக்கு, உள்ளூரிலும் வேற்று ஊர்களிலும் நகைக்கடைகள் மட்டுமல்லாது, வட்டிக் கடைகளும் ஏராளம்.

முத்தையா பிள்ளை மேடைக்கு வந்த உடனே, சகோதரர் தங்கசாமிக்குப் பக்கத்தில் இருந்த பெரிய மனிதர் ஒருவர்,

"கிழிஞ்சது போ. இவன் எப்படா காங்கிரஸ்காரன் ஆனான்" என்று வேடிக்கையும், கோபமும் கலந்த குரலில் சொன்னார்.

மர்மத்தைத் தெரிந்து கொள்ளும் ஆர்வத்தில்

"என்ன சார் அப்படிப் பேசறீங்க" என்று தங்கசாமி ஒன்றும் புரியாத மட்டில் கேட்டார்.

பெரியவருக்கு ஐம்பது வயதைத் தாண்டியிருக்கும், அவர் அணிந்திருக்கும் கதர் ஆடையையும், காந்தியின் சின்னமான கதர் தொப்பியையும் பார்த்த போது, தேச பக்தி இயக்கத்தில் ஒரு காலத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் போல் பட்டது.

பெரியவர், தங்கசாமியின் கேள்விக்கும் சந்தேகத்துக்கும் பதில் செல்ல வேண்டுமா அல்லது வேண்டாமா என்று யோசனை செய்வதே போல் உட்கார்ந்திருந்தவர் தங்கசாமியையும், அவரோடு வந்திருக்கும் தொழிலாளர்களையும் ஏற இறங்கப் பார்த்தார்.

"மழைக்குக் கூட காங்கிரஸ் கட்சி ஆபீஸ் பக்கம் ஒதுங்கினவன் கெடையாது. வெள்ளைக்காரனை நத்திப் பிழைப்பு நடத்தினவன் நாற்பத்திரெண்டு ஆகஸ்ட் போராட்டத்துக்குப் பிறகு, காத்து மாறியடிக்கவும், கதர்ச் சட்டைய அலங்காரமாப் போட்டுக்கிண்ட பயல்" என்ற போது அவர் நயனங்களில் ஒருவித தார்மீகக் கோபம் குடிகொண்டிருப்பதைத் தங்கசாமியால் உணர முடிந்தது.

தொடர்ந்து, நகரின் பிரபல தோல் ஷாப்பு முதலாளியுமான ஹாஜியார் அஸன் முகமது மேடைக்கு அழைக்கப்பட்ட போது,

"இவன் ஆரு தெரியுமா. இவன் நேத்து வரையிலே முஸ்லீம் லீக் கட்சிக்குத் தலைவன் முகமது அலி ஜின்னாவோட கட்சிக்குத் தூண்மாதிரி, சட்டையமாத்திக்கிற மாதிரி கட்சியை மாத்திக்கிராங்க. வெக்கம் நாணம் மானம்

இல்லாத பயவளும் அவனுவளைச் சேத்துக் கிராங்களே" என்று தன்னுடன் வந்திருக்கும் நண்பர்களிடம் சொல்லி அங்கலாய்த்துக் கொண்டது தங்கசாமிக்கு வியப்பாகப் பட்டது.

கடைசியாக நாடு விடுதலை பெறுவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னாள் வரையில் ஜஸ்டிஸ் பார்ட்டிப் பிரமுகரும், திருவிதாங்கூர் சமஸ்தானத்திலும், பன்றி மலைச்சரிவிலும் ஏராளமான காப்பித் தோட்டங்களுக்கும், ஏலத் தோட்டங்களுக்கும் அதிபதியான பட்டிவீரன் பட்டி சுந்தரவதனன் மேடைக்கு அழைக்கப்பட்டபோது, பெரியவர் மிகவும் மனம் நொந்து பேசலானார். உண்மையில் பைத்தியம் பிடித்தவர் போல் திட்டித் தீர்த்தார்.

"இந்தக் கண்ராவிய அல்லாம் பார்க்கவா என்னையக் கூட்டி வந்தீர். வாருமய்யா போவலாம்" என்று தன்னுடன் வந்திருந்த நண்பர்களுடன் கூட்டத்தைவிட்டு கைத்தடியை ஊன்றி நொண்டிய வண்ணம் நடந்து போனார்.

இவ்வளவு வெறுப்புடனும், ஆதங்கத்துடனும் ஆத்திரத்துடனும் பேசிவிட்டுப் போகும் நபரைப்பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற ஆவல் மேலிட தங்கசாமி விசாரித்த போது அருகில் நின்ற நபர் அவரைப் பற்றி இப்படிச் சொன்னார்.

"ஓ! அவர்தான் முருக பவனம் சுந்தரம் பிள்ளை. பெரிய தியாகி நாப்பத்திரெண்டு ஆகஸ்ட் போராட்டத்திலே கபாலாபீகத்துத் தீவச்சு தந்திக்கம்பத்தைச் சாய்க்கையிலே போலீஸ் தாக்கிய போது போலீஸ்காரன் அவர் காலையே ஒடைக்கப் போட்டான்"

இதற்குள் வியத்தகு வண்ணம் சுதர் ஆடை அணிந்து நிற்கும் பட்டிவீரன் பட்டி சுந்தரவதனம் அவர்கள் தேசியக் கொடியைக் கம்பத்தில் பறக்கவிடுவார் என்று அறிவிக்கப்படவும், கூட்டத்தில் அமைதி ஏற்பட்டு, எல்லோருடைய கவனமும் கூட்ட மேடையின்பால் திரும்பியது

தூய வெண்பட்டு ஆடையும் நெற்றியிலே திருநீறுமாக நின்ற சுந்தரவதனம் கொடிக் கம்பத்தில் கயிற்றை அசைத்து இழுத்தபோது ஏனோ கயிறு சிக்குண்டு கொடி பாதிக் கம்பத்தில் நின்று போயிற்று.

வேறு வழியில்லாமல் தியாகி நரசிம்ம பாரதி, கொடியைத் திரும்பவும் இறக்கிக் கயற்றைச் சுண்டிய போது கொடி மீண்டும் கம்பத்தின் மீதேறியது மலைக் கோட்டையினின்று வீசும் மென்காற்றில் அசைந்தாடியது.

நரசிம்ம பாரதி "ஜெய் ஹிந்த்" சொல்லிக் கொடியை வணங்கவும் கூட்டம் ஆர்ப்பரித்தது.

3

மலைக்கோட்டை பேரேடுமைதானத்தில் கோலாகல மாகக் கொண்டாடப்பட்ட, இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின் சுதந்திர தினக் கூட்டத்துக்குப் போய்வந்த தங்கசாமி, சங்க ஆபீஸில் இருந்த தோழர் வேலாயுதம் மற்றும் சங்கரன் ஆகியவர்களிடம் கூட்ட நடவடிக்கைகளையும், களேபரங் களையும் விவரித்தவர், நகரின் முக்கியத் தலைவர்களில் ஒருவரும் முக்கிய காங்கிரஸ் பிரமுகரும், நகரசபைத் தலைவருமான கணேசய்யர் விழாவில் பங்கு கொள்ளாத விஷயத்தை மனச்சோர்வுடன் சொன்னபோது வேலாயுதமும், சங்கரனும் அதிர்ந்து போனார்கள். அதிர்ச்சியூட்டுவதாக இருந்தது.

வேலாயுதத்தைப் பொறுத்தமட்டில் கடந்த இரண்டு ஆண்டுகாலமாகவே வக்கில் கணேசய்யருக்கும், உள்ளூர் புதிய காங்கிரஸ் காரர்களுக்குமிடையில் கடுமையான அபிப்பிராயபேதமும் முரண்பாடும் இருந்து வந்தது தெரியும். ஆனால், இந்திய நாடே விழாக்கோலம் பூண்டு கோலாகலமாகக் கொண்டாடப்படும் விழாவில் அவர் புறக்கணிக்கப்படும் அளவுக்கு அவர்களுக்கிடையிலான முரண்பாடு முற்றிப்போகும் என்று எதிர்பார்க்கவில்லை. ஆனால், கணேசய்யரைப் பொறுத்தமட்டில் ஒரு கட்டுப்பாடு மிக்க தேசபக்தன், காங்கிரஸ் ஊழியன் என்ற வரையில் தனக்கும், தலைமைக்கும், ஏனைய காங்கிரஸ் பிரமுகர்களுக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் மனஸ் தாபத்தையும் முரண்பாட்டையும் வெளியில் யாரிடமும் வெளிப்படுத்தியது கிடையாது. அப்படி யாராவது கேட்டால்,

"அது எங்கள் கட்சி சம்மந்தப்பட்ட விவகாரம். ஆயிரம் இருக்கலாம். அதைத் தெரிந்து கொள்வதனால் உங்களுக்கென்ன லாபம். நாட்டுக்கு என்ன லாபம்" என்று மடக்கிப் போட்டுவிடுவார்.

ஜெயில்வாசம் முடிந்து அப்போதுதான் வெளியே வந்திருக்கும் சங்கரனுக்கு கணேசய்யர், அந்த விழாவைப் புறக்கணித்தார் அல்லது புறக்கணிக்கப்பட்டாரா என்பது புரியாத புதிராக இருந்தது. தனது தகப்பனாரின் அத்யந்த நண்பரும், தனக்கு வழிகாட்டியுமாக இருந்த கணேசய்யரை, உடனடியாகச் சந்தித்து விவரம் அறிந்து கொள்ள வேண்டும் என்று ஆவலாக இருந்தார். அப்பழுக்கற்ற ஒரு தேச பக்த சிரோன்மணி, இப்படிப் புறக்கணிக்கப்படுவது கண்டு சங்கரனது மனம் மிகவும் வேதனித்தது. எனவே, கணேசய்யருக்கு மிகவும் வேண்டிய இருதய சாமியுடன், அவர்கள் மூவரும் மறுநாள் காலையிலேயே கணேசய்யரை அவரது பங்களாவில் சந்திப்பது என முடிவு செய்யப்பட்டது.

வெகுகாலைப் போதிலேயே எழும் கணேசய்யர், நகரத்தில் வார்டுகளில் நடைபெறும் துப்புரவுப் பணிகளைப் பார்க்கப் போய்விடுவார். அல்லது மலை அடிவாரத்தில் உள்ள அவரது பண்ணை வேலைகளைக் கவனிக்கப் போய்விடுவார். அப்புறம் அவரைச் சந்திப்பது மிகவும் கடினம். எனவே திட்டமிட்டபடியே அவர்கள் மூவரும் வெகுகாலையிலேயே கணேசய்யரின் பங்களாவைச் சென்றடைந்தனர்.

அவர்கள், பங்களாவின் வரவேற்பறையில் நுழைந்த போது, அந்நேரத்தில் அவர்களை எதிர்பாராத கணேசய்யர் ஒருவித ஆச்சரியத்துடன் அவர்களைப் பார்த்தார். அதிலும் அவர் சங்கரனை அங்கு எதிர்பார்க்கவில்லை.

"அம்பீ! எப்போடா வந்தாய், சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க சுதந்திர மனிதனாக வந்துட்டாய் அவர் உன்னை இவ்வளவு சீக்கிரத்தில் விடுதலை பண்ணுவான்னு நான் நினைக்கலை" என்ற போது

"இப்போ வெளியே விட்டிருக்கா, எப்போ எங்களை எல்லாம் திரும்பப்பிடிச்சுப் போடுவாண்ணு சொல்ல முடியாது" சங்கரன் வேடிக்கையாகப் பதில் சொன்னார்.

"அப்படிச் சொல்லாதே. பண்டிட் ஜி மிகவும் ஜனநாயக உணர்வு படைத்தவர். அவர் வெள்ளைக்காரன் அளவுக்குக் கிராதகமாப் போகமாட்டா. அவரை நீங்க எவ்வளவு வேணுமானாலும் விமர்சனம் செய்யலாம், பொறுத்துப்பார்" என்று ஒரு அபிப்பிராயத்தை உதித்தவர். பின்பக்கம் திரும்பி சமையல்கார கிட்டு அய்யரை அவர்களுக்கெல்லாம் காப்பி கொண்டுவரச் சொல்லிவிட்டு, அவர்களை அமரச் சொல்லிய வண்ணம் சுவரை ஒட்டி, ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுத் தானும் அமர்ந்து கொண்டார்.

அவரது தலைக்குமேல் சுவரில் தொங்கப் போடப் பட்டிருக்கும் மகாத்மா காந்தியின் படத்துக்குப் பிச்சிப்பூ ஆரம் சூடப்பட்டிருக்கிறது.

"மாமி கல்லடைக்குறிச்சி போயிருக்கா. பேத்தி பொறந்திருக்கா," என்றவர் சங்கரனைப் பார்த்து

"சங்கரா, எப்போடா நீ சுந்தரேசய்யரை மகிழ்ச்சிப் படுத்தப்போராய்" என்று கேட்கவும்,

"இருக்க பேரன் பேத்திகள் அவருக்குப் போராதா என்ன" என்று சங்கரன் சொல்லவும் ஒன்றும் பேசாமல் அறையின் முகட்டை ஏட்டை ஏறிட்டுப் பார்க்கலானார்.

அவரோ திரஸ்காரம் செய்தோ, அல்லாது, வேண்டுமென்றே அந்த மனிதனைப் புறக்கணித்துவிட்டோ, முதல் நாள் நடைபெற்ற விழாச் சம்பவங்களது பாதிப்பு ஏதும் இல்லாத மட்டில், மிகவும் இயல்பாக நடந்து கொள்ளும் கணேசய்யரது போக்கு தோழர் வேலாயுதத்துக்கு அவர் வியப்பாகப்பட்டது. ஆனால் புறக்கணிக்கப்பட்டிருப்பதைப் பற்றிய தனது உணர்வை

எப்படி வெளிப்படுத்துவது என்கிற தயக்கத்துடன் அவர்கள் உட்கார்ந்திருந்த போது

"என்ன விசேஷம் மூணு பேரும் ஒன்றாக வந்திருக்கீங்க" கணேசய்யர் கேட்டார்.

கிட்டு அய்யர் டபராக்களில் அவர்களுக்கு காப்பி கொண்டு வந்து கொடுத்துவிட்டுப் போனான். காலைக்காற்று வேம்பு மலர்களின் நறுமணத்தை அள்ளிவீசிக் கொண்டிருந்தது.

"உங்களண்டை அது பற்றிக் கேட்கலாமா வேண்டாமாங்கிற தயக்கம்,"

காப்பி பானத்தைப் பருகியவாறே வேலாயுதம் பீடிகையாகப் பேசவும்

"என்ன விஷயமானாலும் தாராளமாகக் கேட்கலாமே. என்னோட உங்களுக்கு என்ன தயக்கம்".

கணேசய்யர் அவர்களது உள் உணர்வுகளைப் புரிந்து கொண்ட மட்டில் பதில் சொல்லவும்,

"நேத்தைக்கு நடைபெற்ற தேசிய காங்கிரஸ் சுதந்திரவிழாவில் மாமா நீங்க கலந்து கொள்ளலையிண்ணு கேள்விப்பட்டேன். உண்மைதானா? நீங்களா திரஸ்காரம் பண்ணினேளா, அல்ல அவாளே ஒங்களை புறக்கணிச்சுட்டாளா" சங்கரன் காரியமாகக் கேட்டார்.

இந்தக் கேள்வி, கணேசய்யரிடம் ஒரு வித சலனத்தை ஏற்படுத்தும் என்பது சங்கரனின் எதிர்பார்ப்பு

அவரோ ஒரு கர்ம யோகியைப் போன்று எந்தவிதமான சலனமும் காட்டாமல் அவர்களைப் பார்த்தார். பிறகு செருமியபடியே

"இரண்டும் தான்" என்று புதிர் போடுவது போல் பேசவும்

"சாமி என்ன விடுகதை போடுறீங்களா? " இருதய சாமி சொன்னார்.

"இல்லை இருதயசாமி. நான் விடுகதை போடலை. அதுதான் உண்மை." என்று சொல்லிவிட்டு குழந்தைத்தனமாகச் சிரித்தவர்

"நான் அப்படிப்பட்ட ஒரு கூட்டத்தில் கலந்து கொள்ளப் பிரியப்படலை. அவாளும் நான் கலந்து கொள்வதை விரும்பலை" என்றவர் சற்று உரத்த குரலில் கோபம் வெளிப்படுவது போல

"நேற்று வரையிலே கனத்த பிரிட்டீஸ் விசுவாசியும் மற்றும் தேச விடுதலைக்கு எதிராகச் சதி செய்தவரெல்லாம் ஒரு கதர்ச் சட்டையை மாட்டீண்டு வந்தே மாதரம் சொல்லவும் அவா எல்லாம் காங்கிரஸ் கட்சியில் முக்கிய பிரமுகர். மது விக்கிறவனும், கள்ளச் சந்தைக்காரரும் பாம்பு சட்டையை உரிக்கிறாப் போல சட்டையை மாத்தீண்டா தேச பக்த சிரோன்மணி. இவகளோட எல்லாம் ஒன்னாய் எப்படி மேடையைப் பகிர்ந்துக்க முடியும். போடா ராஸ்கல்ன்னு பிடறியைப் பிடிச்சு வெளியே தள்ளத் தோணும். எனவே, அவாளும் அதைவிரும்பலை, நானும் அப்படிப்பட்ட ஒரு அபகரம் ஏற்படறதை விரும்பலை" என்று சற்று வெறுப்போடு பேசியவர் ஒரு கணம் தன்னுள் ஆழ்ந்த மட்டில் உட்கார்ந்திருந்தவர், நீண்ட பெருமூச்செறிந்த வண்ணம்

"வெள்ளைக்காரன் தன்னோட பிரித்தாளும் தந்திரத்தை லார்டு மவுண்ட் பேட்டன் மூலமாகவும், அவரோட தர்ம பத்தினியோட துணையோடும் நிறைவேற்றிண்டுண்டான்"

"ஐயா, என்ன சொல்றீங்க" வேலாயுதம் கேட்டார்.

"மகாத்மா காந்தியோட பேச்சை அவர் கேக்கலை" இப்படிச் சொல்லிவிட்டுச் சற்று நேரம் மௌனம் பாவித்த கணேசய்யர்

"இந்தத் துண்டாடல் மூலம், மகாத்மா காந்தி லட்சியம் ஏத்துண்ட இந்து, முஸ்லீம் ஒத்துமை லங்கினப்பட்டுப் போயிட்டது. பிரிட்டீஸ்காரனை எதிர்த்து சகோதரரா நிண்ண மக்கள் இப்போ ஒருவரோடு ஒருவர் முரண்பட்டு, சண்டாளமாச் சண்டை பிடிக்கப் போறா. இரத்தகளறிதான் எனக்கு இந்தச் சுதந்திரத்திலே சலிப்புத்தட்டிப் போயிட்டது" என்று சொல்லிவிட்டுத் தன் தலைக்கு மேல் தொங்கும் மகாத்மா காந்தியின் படத்தையும் தன் முன்னால் அமர்ந்திருப்பவர்களையும் மாறி மாறிப் பார்த்தார். பிறகு மிகவும் விசனமுற்ற மட்டில்

"வெள்ளைக்காரனோட ஆட்சி அதிகாரத்தை எதிர்த்துப் போராடினோம். அவனை எப்படியோ வெளியேத்திட்டோம். அந்த திருப்தியே நேக்குப் போரும் சங்கரா" என்று மீண்டும் சொன்னவர்,

"எங்களோட பரம்பரை இந்த நாட்டுக்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுத்திட்டது. நல்லதோ கேட்டதோ நாங்கள் எங்கள் கடமையைச் செய்திட்டோம். ஓநாய்களும், நரிகளும் அதைப் பிச்சுப்பிடுங்கி நாசப்படுத்தாம பாத்துக்க வேண்டியது உங்களோட கடமை" என்று சொல்லிவிட்டு உள்வீட்டுக்குள் எழுந்து போனார்.

அந்தச் சம்பவத்துக்குப் பிறகு கணேசய்யர் முழுமையாக அரசியலிலிருந்து விடுபட்டுப் போனார்.

4

கடந்த இரண்டு வார காலமாக ஓசேப்பு, அச்சுக்கால் ஒடிந்து போன கோயில் தேர் ஆட்டம் தன் வீட்டுக்குள்ளேயே முடங்கிப் போனான்.

தாயம்மாள் எவ்வளவோ அவனைக் கேட்டுப் பார்த்த போது, அவள் பால் எரிந்து விழுந்தானேயல்லாமல் அவள் கேட்டதற்குப் பதில் சொல்ல மறுத்து விட்டான்.

தோல் ஷாப்பு வேலையானாலும் சங்கம் சம்பந்தப்பட்ட வேலையானாலும் இரவு பகலாகத் தேனீயைப் போன்று சுறுசுறுப்பாக இருக்கும் தனது வளர்ப்பு மகன் இப்படிக் கூண்டுப் புழுவாக முடங்கிக் கிடப்பதைப் பார்த்துத் தாயம்மாள் பதறிப் போனாள்.

ஓசேப்பு, தனக்கு ஏற்பட்ட விபத்தை வெளியே சொல்ல முடியாமல், தனக்குள்ளேயே போட்டுப் புழுங்கிக் கொண்டிருந்தான். அந்தச் சம்பவத்தைத் திரும்பத் திரும்ப நினைவு படுத்திப் பார்த்த போதெல்லாம் நெஞ்சின் ஆழத்தில் தீப்பற்றிக் கொண்டது போன்ற வேதனை. அந்தச் சம்பவத்தை எவ்வளவோ மறக்க முயற்சித்த போதும் அவனால் மறக்க முடியவில்லை. மீண்டும் மீண்டும் அவன் உள்ளத்தைக் கரையானாக அரிக்கத் தொடங்கியிருந்தது. அதன் வேதனை தாங்கமுடியாததாக இருந்தது. மூன்றுமாதச் சிறைத் தண்டனையை அனுபவித்து விட்டு ஊர் திரும்பிய ஓசேப்புக்குச் சங்கம் சம்மந்தமான வேலைகள் இருந்ததால், அவனால், சுமார் ஒருமாதகாலம் வேறு எதைப் பற்றியும் சிந்திக்க முடியவில்லை. வெளியிடங்களுக்கும் போக முடியவில்லை.

கடைசியில் அதற்கான நேரத்தை ஒதுக்கிக் கொண்டு அருக்காணியை அவள் பணி செய்யும் தோல் ஷாப்பில்

போய்ச் சந்தித்துத் திருமண நாளை நிர்ணயம் செய்துவிட்டு, தனது கண் உள்ள போதே ஓசேப்புக்கு ஒரு கல்யாணத்தைச் செய்து கண்குளிரப் பார்க்க வேண்டும் என்று சதா நச்சரித்துக் கொண்டிருக்கும் வளர்ப்புத் தாய் தாயம்மாளுக்கும், தலைவர்களுக்கும் விவரத்தைச் சொல்லிச் சம்மதத்தைப் பெற வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டு அருக்காணி வேலை செய்த தோல் ஷாப்புக்குப் போய் விசாரித்த போது, அவன் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்ட நாளில் இருந்து அருக்காணி தோல் ஷாப்புக்கு வரவில்லை என்றும், அவள் மொத்தமாகத் தோல் ஷாப்பு வேலையினின்றும் நின்று விட்டாள் என்கிற விவரமும் அவனுக்குத் தெரிய வந்தது.

அருக்காணிக்கு ஏற்பட்டுப்போன அதிர்ச்சியூட்டும் சம்பவம் பற்றியும் ராஜக்காப் பட்டிச் சேரியிலிருந்து தோல் ஷாப்புக்கு வேலைக்குவரும் தொழிலாளர்கள் சொன்ன போது ஓசேப்பு அதிர்ந்து போனான். நெஞ்சின் ஆழத்தில் இடி இறங்கியது போன்றிருந்தது.

அருக்காணி தன்னை நிராகரித்து விட்டதாகவும், தன்னை அவள் வஞ்சித்து விட்டதாகவும் எண்ணி அவள் பால் ஓசேப்புக்குச் சண்டாளமாகக் கோபம் ஏற்பட்டது. தனது வாழ்க்கையே அவளால் நாசமாகிப் போய் விட்டதாக எண்ணலானான்.

தன்னைக் காதலித்துக் கல்யாணம் செய்யப் போவதாக நாடகமாடி, தனது வரும் காலத்தையே சிதறடித்துவிட்ட வஞ்சகியும், மாயப்பிசாசுமான அருக்காணியைச் சந்தித்து, தனது வெறுப்புணர்வைத் திட்டித் தீர்க்க வேண்டும் என்கிற வைராக்கிய உணர்வு கொண்ட ஓசேப்பு அருக்காணியைத் தேடிக்கொண்டு ராஜக்காபட்டியை நோக்கிப் பயணமானான்.

ராஜக்காபட்டியை அடைந்தபோது, அவனது கண்ணில் பட்டது மூக்கனின் குறி சொல்லும் கொட்டடி. முத்தாலம்மன் பீடம் இருந்த கரையான் புற்றை மறைத்து அங்கு தகரக் கொட்டகை போடப்பட்டிருக்கிறது. முத்தாலாம்மன் சாமி கொண்டாடியான மூக்கன் இப்போது குறி சொல்லும் பூசாரியாக அவதாரம் பெற்றிருக்கிறான்

அவனிடம் நிமித்தம் கேட்பதற்கும், அருள் வாக்குக் கேட்பதற்கும் வேண்டி வண்டி கட்டிக் கொண்டு ஜனம் கொட்டடி முன்பு குவிந்து கொண்டிருக்கிறது.

வேப்ப மரத்தடியில் முத்தாலம்மன் பீடத்தருகில் அமைக்கப்பட்டிருக்கும் மேடையில் அமர்ந்து உடுக்கையை முழக்கிய வண்ணம் மூக்கன் குறிசொல்லிக் கொண்டிருக்கிறான். ஒருகாலத்தில் சடங்காக ஆரம்பித் திருந்த நிமித்தம் சொல்லும் வழக்கத்தை இப்போது மூக்கன் சாதுரியமாகத் தொழிலாக ஆக்கிக் கொண்டிருக்கிறான்.

மூக்கனது கன்னங்கரேல் என்ற மேனியிலும் நெற்றியிலும் பட்டை பட்டையாக விபூதிப் பூச்சு. நெற்றியின் நடுவில் கால்அணா அளவுக்குக் குங்குமப்பொட்டு, சடை திரண்டு போன மயிற்கற்றை தோளில் பரந்து புரண்டு துவள்கிறது. இரண்டு கரங்களிலும் தங்கக் காப்புகள். விரல்களில் நிறைய வெள்ளித் தங்க மோதிரங்கள்.

மூக்கனின் சிவந்த நயனங்களில் குடிகாரனின் வெறி தென்படுகிறது. அடிக்கடி தனது கனத்துத் தடித்த அதரங்களைக் கடித்து எச்சிலை உமிழ்ந்த வண்ணம் இருக்கிறான்.

அவனது காலடியில் அமர்ந்திருக்கும் அவனது மூத்தாள் தீமூட்டப்பட்ட தாம்பாளத்தில், சாம்பிராணியையும் இதர வாசனைத்திரவியங்களையும் புகைத்து அப்பிரதேசத்தையே புகை மண்டலமாக்கிக் கொண்டிருக்கிறாள். இரண்டாம் குடியாள், காணிக்கைப் பெட்டிக்குக் காவலாக நின்று கொண்டிருக்கிறார்கள். மூக்கனிடம் குறிகேட்க வந்திருக்கும் உள்ளூர்காரர்களும், வெளியூர் மனிதர்களும், கசாப்புக் கடை ஆடுகளைப் போன்று வரிசையில் காத்து நிற்கிறார்கள்.

ஒசேப்பு, மனை உளைச்சலுடன் அருக்காணிக்காகக் காத்து நின்றான். அவனது ஆர்வமிக்க நயனங்கள் அந்தக் கூட்டத்தில் அருக்காணியைத் தேடி அலைபாய்கின்றன. அருக்காணி மட்டும் அங்கு காணவில்லை.

ஓசேப்பு மன உளைச்சலுடன் அந்தக் கூட்டத்தை விட்டு வெளியே வந்தான். வெறுமையான உணர்வுடன் கால்போன போக்கில் சேரிக்கும் ஊருக்கும் இடையிலான பாதையில நடந்து போகிறான்.

திடீரென்ற அவனும், அருக்காணியும் கடைசியாகச் சந்தித்துக் கொண்ட இன்பகரமான நினைவலைகளைத் தூண்டும் அந்தப் பாழ் மண்டபம் நினைவுக்கு வருகிறது. குளத்தைத்தாண்டி அந்தப் பாழ் மண்டபத்தில் போய் கல்தூணில் சாய்ந்த வண்ணம் வெறுமை தோன்ற ஆகாயத்தை ஏறிட்டுப் பார்க்கிறான். அவனது மனத்தைப் போன்றே வானப்பரப்பும் வெறுமையாகக் காட்சி தருகிறது வெறித்த பார்வையுடன் அமர்ந்திருக்கிறான்.

அசதி மேலீட்டாலோ என்னமோ ஓசேப்பு தூங்கிப் போனான். மனதை அலைக்கழிக்காத கனவுகளற்ற நிம்மதியான நித்திரை.

எவ்வளவு நேரம் தூக்கத்தில் ஆழ்ந்து போனானோ தெரியாது. கண்விழித்த போது சூரிய பகவான் அஸ்தமனத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான். சூரியனின் செங்கதிர்கள் மண்டபத்தில் இருளடைந்த பகுதிகளில் பரவிப்படர்ந்து விகசித்துக் கொண்டிருக்கிறது.

அவசர அவசரமாகக் குளத்தில் இறங்கி முகம் கை கால்களை அலம்பி விட்டுக் கரை ஏறி மண்டபத்தை நோக்கி நடக்கலானான். அப்போது தான் தனக்கு முன்னும் பின்னும் வெள்ளாட்டான் குட்டிகள் ஆடி ஓடிவர, தலையில் விறகுச்சுமையுடன் குளத்தின் மேற்குக் கரையில் மண்டபத்தை நோக்கி அருக்காணி மட்டும் தன்னந்தனியாக நடந்து வந்து கொண்டிருப்பது அவன் கண்ணில் பட்டது.

அவன் நின்று கொண்டிருந்த மண்டபத்தை ஒட்டிப் போகும் ஒற்றையடிப் பாதை வழியாகத்தான் அவள் சேரிக்குப் போக வேண்டும். ஓசேப்பு அவளுக்காகக் காத்துக் கொண்டிருப்பதை அருக்காணி கவனித்திருக்க வேண்டும் அதனால் தானோ என்னவோ, அவளது நடையில் ஒருவித தயக்கம் தென்பட்டது.

மண்டபத்தை நோக்கி நேரடியாக வந்த அருக்காணி, தலையில் சுமந்து வந்த விறகுக்கட்டை லாவகமாக இறக்கி மண்டபத்தின் கல்தூணில் சாய்த்து வைத்தாள், சும்மாடாகத் தலையில் சுருட்டி வைக்கப்பட்டிருந்த சேலைத் தலைப்பி உதறி மாராப்பாகப் போட்டு சேலையை திருத்தி உடுத்திய மட்டில் அவனே தன்னை நோக்கி வரட்டும் என்பது போல் சிலையாக நின்றிருந்தாள்.

மண்டபத்தை ஒட்டிக் குளத்தங்கரையில் வளர்ந்திருக்கும் நாவல் மரத்திலும், அத்தி மரத்திலும், அடைய வந்து சேரும் பட்சி ஜாலங்களின் இன்னோசையில் அந்தப் பிரதேசமே தழும்பிக் கொண்டிருக்கிறது.

அருக்காணியோடு ஓடிவந்த வெள்ளாட்ட மறிகள் அவனை ஒரு கணம் மோர்ந்து பார்த்துவிட்டுத் திரும்பவும், அருக்காணியின் அருகில் போய் நின்று கொள்கின்றன.

ஓசேப்பு மனக்கிலேசத்துடன் அவள் அருகில் போனபோது

"ஒனக்கு இப்பத்தான் நான் இருக்க தெசையும் திக்கும் தெரிஞ்சுதோ" சலனமில்லாமல் நின்றிருந்த அருக்காணி அவனது நயனங்களை ஊடுறுவிய வண்ணம் கேட்டாள்.

அருக்காணியின் சுந்தர வதனம் வதங்கிப் போய் காணப்பட்டது. அவள் அநியாயத்துக்கு மெலிந்து போய் காணப்பட்டாள். அடையாளம் தெரியாத அளவுக்கு உருமாறிப் போயிருக்கிறாள்.

அவள்பால் அவனுக்கு அனுதாபம் தோன்றியது.

அருக்காணியின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் தலை குனிந்து மௌனமாக நின்று கொண்டிருந்தாள்.

மௌனமாக நின்றிருந்த அருக்காணி ஆவேசம் வந்தவள் போல அவன் சட்டையவும், தோள் பட்டையவும் பிடித்து இழுத்துக் குலுக்கிய வண்ணம்

"அட சண்டாளா, என்னைய அப்போவே கூட்டிட்டுப் போயிடு, கூட்டிட்டுப் போயிருண்டு. எத்தனை வாட்டி மறுகி மறுகிச் சொன்னான். கேட்டையா. பொறு பொறுண்டு என்னையக் காக்க வெச்சு கடைசிலே இலவுகாத்த கிளியா ஏமாந்து போவ வச்சிட்டேயே பாவி. என் வாழ்க்கை எப்படிச் சீரழிஞ்சு போச்சுது பாத்தியா" என்று ஆவேசமாகக் கூச்சலிட்டாள்.

அடிபட்ட புலியின் சீற்றம் அவளது ஆவேசக் குரலில் தொனித்தது.

உண்மையில் அருக்காணி கல்யாணம் பற்றிச் சாடை மாடையாக வற்புறுத்திய சமயத்தில் அவளுக்கும் தனக்கும் ஏற்பட்டிருக்கும் காதலையும், உறவையும் தலைவர்களிடம் மட்டும் சொல்லியிருப்பானாகில், எவ்வளவு எதிர்ப்புகள் ஏற்பட்டாலும் அவர்களது திருமணம் நடத்தி வைக்கப்பட்டிருக்கும்.

அவனது கோழைத்தனமோ அல்லது காதல் பற்றிய சிறுமை உணர்வோ, தைரியமாகத் தனது உள் உணர்வை வெளிப்படுத்தக் காலம் தாழ்த்தியது இப்படி அவர்கள் வாழ்க்கையைச் சிதைத்து விட்டிருக்கிறது.

அருக்காணியின் ஆவேச உணர்வைக் கண்டு மலைத்துப் போய் மௌனமாக நின்ற ஒசேப்புத் தொண்டை கனக்க அவளைப் பார்த்து

"பொறுத்தது தான் பொறுத்தே நான் ஜெயிலிலேருந்து விடுதலை ஆகிவர வரையிலேயாச்சும் நீ பொறுத்திருக்கப் படாதா அருக்காணி"

ஒசேப்பு இப்படிச் சொன்னபோது கண்களில் கோபக்கனல் கொப்பளிக்க அவனைப் பார்த்தாள்

"அட பாவி ஒன்னோட கோழைத்தனத்துக்கு நான் பலியாகிப் போனேனே மனிசா" என்று சொன்ன மட்டில் அப்படியே மண்டபத்தின் தாழ்வான படிக்கட்டில் சரிந்து உட்கார்ந்தவள்,

"நான் என்ன கல்யாணம் வேணுமெண்டா துடிச்சேன் அந்தப் பொட்டக்கண்ணு சாமியாடிக் கெழவன் பதியிருந்த புலியாட்டம் என் மேலே கண்ணாயிருந்து சாமியக் காட்டி ஊரையும் ஏமாத்தி என்னையப் பொண்டாட்டியா ஆக்கிப் போட்டான். நா. பொட்டச்சி என்ன பண்ண முடியும். ஆருகிட்டே ஆதரவு தேட முடியும். ஆத்தாவும் அப்பனும் ஆதரவு கெடையாது. நாதியத்த முண்டை நா எங்கே போரது. என் பாதரவை எங்க போய்ச் சொல்லி அழுவுறது" துக்கம் தாளாமல் தூணில் தலையைச் சாய்த்த வண்ணம் பொல பொலவெனக் கண்ணீர் வடித்தவாறு உட்கார்ந்திருந்தாள்.

ஒசேப்பு, அவள் சொல்வதைக் கேட்டுக் குலுங்கிப் போய்விட்டான். குற்ற உணர்வு அவன் நெஞ்சைக் குத்திக் குடைந்தது.

வெகுநேரம் வரையில் மண்டபத்தின் கல்தூணில் தலை சாய்த்த வண்ணம் உட்கார்ந்திருந்த அருக்காணி, இடது புறங்கையால் கண்ணீரைத் துடைத்தவள்

"அந்த சாமியாடிப் பயலால என் கழுத்துலே தாலி மட்டும் தான் கட்ட முடிஞ்சது அவனால என்னப் பெண்டாள முடியலை" ஒருவித வைராக்கிய உணர்வுடன் அவனைப் பார்த்துச் சொன்னாள்.

"அவனோட படுக்க மாட்டேண்டதுக் கோசுரம் அவனும், அவம் பொண்டாட்டிகளும் பண்ணியிருக்க கொடுமையைப் பாரு" என்று சொன்ன அருக்காணி, தன் மாராப்புச் சேலையை விலக்கி அரை நிர்வாணமாக நின்றபோது, அவன் பதறிப்போனான்.

"அட ஏசுவே, எம்பெருமானே என்ன சாமி அநியாயம்" என்று அவனை அறியாமலே சுத்தினான்.

அருக்காணியின் கட்டு மஸ்தான மார்பகங்களில் குறுக்கும் நெடுக்குமாக சூட்டுக் கோலினாலான வடுக்கள்.

மார்புக்காம்புகள் சிதைக்கப்பட்டிருக்கின்றன. அடி வயிற்றில் பெண் குறியை ஒட்டியும் சூட்டுக் கோலின் அடையாளம்.

அவள் மடியில் விழுந்து துக்கம் தாளாமல் விம்மி விம்மி அழுதான்.

அப்படியே அவனைத் தனது மடியோடு கிடத்திக் கொண்டு அருக்காணி பெருமூச்சு விட்டாள். அழுது அழுது கண்ணீர் வற்றி விட்டதுபோல் பெருமூச்சு விட்ட வண்ணம் ஓசேப்பின் முதுகுத் தண்டை மட்டும் வருடிய வண்ணம் உட்கார்ந்திருந்தாள்.

மண்டபத்திலும், சுற்றுப்புறத்திலும் இருட்டிக் கொண்டு வந்தது.

நெஞ்சுப்பாரம் தணியும் மட்டும் அவன் அழுது தீர்க்கட்டும் என்பதுபோல்அவன் உட்கார்ந்திருந்தான். பின் அருக்காணி தலையை நிமிர்த்தி அவனைப் பார்த்து "நீ தொட்டு அனுபவிச்ச ஒடம்பை வேறே எந்தத் தேவடியா மவனையும் தொடவுட மாட்டேன். அந்த அவமானத்தைத் தாங்கறதவிட நா செத்துப் போவன்" கண்களில் வைராக்கிய உணர்வு தெறிக்க அருக்காணி சொன்னாள். அவனால் ஒன்றும் பேசமுடியவில்லை. ஒரு பெண்ணுக்கு இவ்வளவு வைராக்கியமா என்று மட்டும் அவனால் வியக்க முடிந்தது. குலைந்து போய்க் கிடந்த உடைகளைச் சரி செய்த அருக்காணி "ஒன்னோட உசிரு என் வவுத்துலே வளருது பாத்தியா" பெருமிதத்துடன் சொன்னவள், அவனது வலது கரத்தை எடுத்து அவளது அடிவயிற்றில் வைத்தாள்.

"அதுக்கு உயிர் பிடிச்சிருக்கு. வவுத்துக்குள்ளாற நீந்தி வெளையாடுது ஒனக்குத் தெரியலையா" அவனது கரத்தை அடிவயிற்றோடு அழுத்திப்பிடித்த வண்ணம் ஒருவிதமான கௌரவ உணர்வுடன் ஓசேப்பைப் பார்த்துச் சொன்னாள்.

அவளது அடிவயிற்றுக் கதகதப்பும், மெத்தென்றிருக்கும் வயிற்றின் ஸ்பரிசமும் அவனை நிலை குலைய வைத்தது.

வெகுநேரம் வரையில், தன்னுள் ஆழ்ந்து போன மட்டில் மௌனமாக உட்கார்ந்திருந்த ஓசேப்பு அருக்காணியின் கரங்களைப் பற்றிப் பிடித்தவாறே

"உப்ப ஒண்ணும் கெட்டுப் போவலை அருக்காணி. எங்கூட வந்திரு தலைவர்கள் கிட்டேச் சொல்லி நாம கல்யாணம் முடிச்சுக்கலாம். நம்மளை தப்பா நெனக்க மாட்டாவ"

ஓசேப்பு இப்படிச் சொல்லவும் வெடுக்கென்று கரங்களை விடுவித்துக் கொண்ட அருக்காணி

"ஒனக்கென்ன கோட்டி புடிச்சிருக்கா? பைத்தியகாரத் தனமாப் பேசாதை"

சற்று கடுமையாகச் சொன்னாள். அப்பாவித்தனமாகக் குற்றம் செய்துவிட்ட குழந்தையைக் கண்டிக்கும் பாவனையாகப் பார்த்தாள்.

"ஊர் ஒவலைய ஆருதாங்கிக்கிறது" என்றாள்.

அவள் பேசுவதின் உள் அர்த்தம் புரியாமல் ஓசேப்பு அவளைப் பார்த்தான்.

பரிதாபமாக அவனைப் பார்த்து முறுவலித்த வண்ணம்

"எனக்கும் ஒன்னோட வாழணங்கிற கொள்ளை ஆசை. ஆனா ஊருக்கு நா உன்னொருத்தம் பொண்டாட்டி.

நா ஒன்னோட வந்திடுவேன். ஊர் என்ன சொல்லும் உன்னொருத்தம் பொண்டாட்டிய கூட்டிட்டு ஓடிட்டாண்ணு தானே சொல்லும்" என்று சொன்னவள் அவனது பிரதிபலிப்பைக் கணிப்பது போல் ஓசேப்பின் நயனங்களை ஊடுறுவிப் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தாள்.

பிறகு அவனது தோள் பட்டையில் உரிமையுடன் கரங்கைகள் பதித்து

"நீ சாதாரண ஓசேப்புக் கெடையாது. அம்ம சங்கத்திலே ஒரு முக்கியமான ஆளு. ஒனக்கும் எனக்கும் வர்ர அவப்பேரு ஒனக்கு மட்டுமில்லே. சங்கத்துக்கும் வரும். தலைவர்களுக்கும் வரும். அல்லாரும் சங்கத்துக்காரன் அடுத்தவன் சம்சாரத்துக்கு ஆசைகாட்டி மோசம் பண்றவங்கண்டு ஓவலையாப் போவும். வெறும் வாயை மெல்லுற பேய்க்கு அவல் கெடைச்சதாட்டம் ஆயிப் போயிரும். அம்மாளால இந்த அசிங்கம் சங்கத் தலைவருக அல்லாத்துக்கும் வர வாணாம்" என்று சொல்லிவிட்டுப் பெருமூச்சு விட்டாள்.

"நான் ஒன் நெனப்புல என் காலத்தை ஓட்டிடுவன்" என்று சொன்ன அருக்காணி, தன் கண்களில் பனித்து நின்று கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

தூணில் சாத்தி வைக்கப்பட்டிருந்த விறகுச்சுமையைத் தலையில் சும்மாடு கூட்டிச் சுமந்த வண்ணம் திரும்பிக் கூடப் பார்க்காமல் சேரியைப் பார்க்க நடந்து போனாள்.

வெள்ளாட்டுக்குட்டிகள் அவளைத் தொடர்ந்தன.

அவளது நெஞ்சின் ஆழத்தினின்றும் வெளிப்பட்ட விம்மலும், கேவலும், அந்தகாரத்தையும், ஊடுறுவி அவன் செவியில் வெகுநேரம் ஒலித்துக் கொண்டிருந்தது.

ஓசேப்பு உயிரற்ற வெருங்கூடாக நகரத்தை நோக்கி நடந்து போனான்.

5

அது ஒரு வெள்ளிக் கிழமை மாலைப் பொழுது.

தலைவர்களும், தோல் ஷாப்புத் தொழிலாளர்களும், அரசாங்கத்தின் அடக்கு முறைக்கும், ஒடுக்கு முறைக்கும், ஆட்பட்டிருந்ததன் காரணமாக, வழக்கமாகத் தொழிற்சங்க முக்கிய ஊழியர்களுக்கு வாரா வாரம் நடத்தப்படும் அரசியல் வகுப்புக் கூட்டம் கடந்த இரண்டு ஆண்டுகாலமாக நிறுத்தப்பட்டுப் போனது அன்று மீண்டும் ஆரம்பமாயிற்று

அதிலும், தலைவர் சங்கரன் தொழிற் சங்கங்களில் ஆற்ற வேண்டிய பணிகளும், கடமைகளும் பற்றிப் பேசப் போகிறார் என்று சுற்றறிக்கைகள் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. நகரத்தின் பல பகுதிகளிலும் இருந்து, சம்மந்தப்பட்ட தொழிலாளர் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர். புதிதாக நகரத்தில் உருவாக்கப்பட்டிருக்கும், மோட்டார் தொழிலாளர் சங்கம் மற்றும் ஸ்பென்சர் கம்பெனி சுருட்டுத் தொழிலாளர் சங்கம் ஆகிய சங்கங்களின் முக்கிய ஊழியர்களும் அந்தக் கூட்டத்துக்கு விசேஷமாக அழைக்கப்பட்டிருந்தனர்.

நாடு விடுதலை அடைந்த பிறகு கூட்டப்படும் தொழிலாளர் அமைப்பு சம்மந்தமாகக் கூட்டப்படும் கூட்டம் என்பதால், மத்தியிலும் மாகாணங்களிலும் பதவிவகிக்கும் புதிய அரசு பற்றியும் ஏற்பட்டிருக்கும் புதிய சூழ்நிலைகள் பற்றியும் சங்கரன் அவர்களுக்கு விளக்கிக் கூறவேண்டிய கட்டாயமும் ஏற்பட்டிருந்தது.

வழக்கம் போல, சர்வதேசச் சூழல் பற்றிப் பேச்சை ஆரம்பித்த சங்கரன், ஐரோப்பாக் கண்டத்திலும் சர்வதேசச் சூழலில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள் பற்றியும் விவரித்தபிறகு

நாடு அந்நிய பிடியினின்று விடுபட்ட போதிலும், நாட்டில், சுரண்டலும், வறுமையும், வேலையின்மையும், தொழிலாளர்கள் மீதும் அவர்களின் இயக்கங்கள் மீதான அடக்குமுறையும் ஆளும் வர்க்கத்தின் அக்கிரமும் நீடிக்கிறது, எனினும், உலக சமாதானத்துக்காகவும், பெற்ற உரிமைகளைப் பாதுகாக்கவும் தொழிலாளர்கள் ஒன்றுபட்டுப்போராட வேண்டிய இயக்கங்களுக்கான அவசியம் குறித்தும் சுமார் இரண்டு மணி நேரம் விளக்கமாக எடுத்துரைத்ததுடன், தொழிலாளர்கள் எழுப்பிய சந்தேகங்களுக்கும், கேள்விகளுக்கும் அமைதியாகவும் சாந்தமாகவும் பதிலளிக்கவும் செய்தார்.

கூட்டம் முடிந்து, வேலாயுதம், மற்றும் இருதயசாமி ஆகியவர்களுடன், மேற்கொண்டு செய்ய வேண்டிய பணிகள் பற்றி விவாதித்துக் கொண்டிருக்கும்போது கூட்டத்திற்கு ஓசேப்பு வராமல் இருந்தது அவர் மனதை உறுத்தியது. ரெயிலடியில் சங்கரனை வரவேற்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊர்வலத்திலும் ஓசேப்பு காணப்படாமை அவர் கவனத்தில் பட்டபோதும், வேலைப்பளு காரணமாக ஓசேப்பைப் பற்றி அவரால் விவரமாக விசாரிக்கச் சந்தர்ப்பம் ஏற்படவில்லை.

இதுபோன்ற அரசியல் வகுப்புக்களில் மிகவும் உற்சாகமாகக் கலந்து கொள்ளக்கூடிய தொழிலாளி ஓசேப்பு மிகவும் கவனமாகக் குறிப்பெடுப்பதுடன், நிறையச் சந்தேகங்களையும் கேட்கக்கூடிய ஒரு ஊழியன். ஓசேப்பின் தொடர்ச்சியான இந்தப் போக்கு சங்கரனது உள்ளத்தில் ஒருவித நெருடலை உண்டு பண்ணியிருந்தது. எனவே தனக்கேற்பட்ட சந்தேகத்தை வெளிப்படுத்துவகையில்,

"ஏன் தலைவரே, தோழர் ஓசேப்பு என்ன ஆனான் பாக்கவே முடியலை" என்று இருதயசாமியைக் கேட்டார்

இப்படி சங்கரன் இருதயசாமியைக் கேட்டபோது, ஓசேப்பின் நண்பனும் சக தொழிலாளியுமான மினிசாமி,

"அவன் தோல் ஷாப்பு வேலைக்குக் கூட ரெண்டு வாரமாப் போவலை தலைவரே. வேலைய வுட்டே நிறுத்தினாலும் நிறுத்திப் போடறதா மேஸ்திரி சடையாண்டி சாடை மாடையாச் சொன்னாரு" என்றான்.

"அடே. அவன் ஒடம்புக்குச் சொஸ்தமில்லையோ என்னமோ, நீ கூடப் போய் பார்க்கையாடா. அடிக்கடி சங்கத்துப் பக்கம் வரும் தாயம்மாளையும் காணம்"

இருதயசாமி சொன்ன போது அக்கரையற்ற தன்மையில் சப்புக் கொட்டிய மினிசாமி,

"ஒடம்புக்கு ஒண்ணுமில்லே. நல்லாத்தான் இருக்கான். மனசுலேதான் ஏதோ முள்ளுத் தைச்ச தாட்டம் புழுங்கிட்டுக் கெடக்கான். பொம்பளைய நெனச்சுப் பொலம்பிட்டுக் கொடக்கான். அந்தப் பெய உருப்பட மாட்டான் தலைவரே" ஒரு வித விரக்தியுடன் சொல்லவும்,

"என்ன மினிசாமி விடுகதை போடறீங்க? புரியும்படியாச் சொல்லுங்கோ" சகோதரர் தங்கசாமி கேட்டார்.

இவ்வளவு நேரமும் அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த பெஞ்சமின்

"பெய ராஜக்காபட்டிக்குப் போயிட்டு வந்ததுங் கூட்டியும் ஆர்கிட்டேயும் மொகம் குடுத்துப் பேசறதில்லை. என்னடாப்பாண்டு கேட்டா ஒஞ் சோவியப் பாத்திட்டுப் போவெண்டு எறிஞ்சு விழுறான். வெறிக்க வெறிக்கப் பேசுதான்" என்று சொன்னான்.

அவர்கள் பேசுவதன் பொருள் புரியாமல் வேலாயுதமும் சங்கரனும் அவர்களைப் பார்த்தபோது

"அல்லாத்துக்கும் அந்த முண்டை அருக்காணி தான் காரணம் தலைவரே"

தலைப்பாகைத் துண்டை அவிழ்த்துத் தலையைச் சொரிந்த வண்ணம் பெஞ்சமின் சொன்னான்

"அந்த பெண்தான் ஆறு மாசமா தோல் ஷாப்பு வேலைக்கே வந்தது கிடையாதாமே. அதுக்கும் கல்யாண மாயிட்டதாகச் சொன்னாங்களே" இருதயசாமி எதையோ ஊகித்த வண்ணம் சொன்னார்.

அருக்காணியும், ஓசேப்பும் ஒருவருக்கு ஒருவர் அந்நியோன்னியமாகப் பழகுவதை அவர் பார்த்திருக்கிறார்.

"அவ ஒண்ணும் மோசமான பெண் கெடையாதே. சங்கத்தின் மீது அதீதமான மதிப்பும் மரியாதையும் வச்சிருக்கக்கூடிய பெண் அல்லவோ" தோழர் வேலாயுதம் சொல்லவும்

"அவளெ நம்பி நம்ம பெய நெம்பவே, ஏமாந்து போயிட்டான் நொந்து போனான் தலைவரே. நெம்பவே கனவு கண்டிட்டிருந்தான். உப்ப நொம்ப ஒடிஞ்சு போயிட்டான்" பெஞ்சமின் தனக்கே உரித்தான பெரிய மனித் தன்மையோடு சொல்லவும்.

"அப்படியா, பெஞ்சமின் சொல்றாரே அது உண்மைதானா?" என்று சங்கரன் மினிசாமியிடம் கேட்டார்.

சங்கரனது கேள்விக்கு உடனடி பதில் சொல்லாமல், ஒரு கணம் மௌனமாக உட்கார்ந்திருந்த மினிசாமி,

"அந்தப் பொட்டச்சி மேலே இம்புட்டுக்கு ஆசை வச்சிருக்கதை தலைவர்ஆர் கிட்டேயும் சொல்லலை. மனசுக்குள்ளாறவே போட்டுக் கொண்ணுக்கிட்டான். உப்ப அவளையும் கொறை சொல்ல முடியாது. வெள்ளம் உப்ப தலைக்கு மேல போயிட்டது

உப்ப அவளுக்கும் சாமி கொண்டாடி மூக்கனுக்கும் கல்யாணம் மூஞ்சி போச்சி" என்ற போது சங்கரனும், சகோதரர் தங்க சாமியும் ஒன்றும் புரியாமல் வியப்புடன் அங்கு இருப்பவர்களைப் பார்த்தனர்.

பிறகு சிந்தனையில் ஆழ்ந்தபடி உட்கார்ந்திருந்த சங்கரன், "சங்கத்தின் முக்கிய ஊழியனை நாம இப்படி நலிந்து

போக விட முடியாது. அவன் என்னதான் மனசில் வெச்சிருக்கான் என்பதை அறிந்து, அவனை நாம் பாதுகாத்துத் தெம்பூட்ட வேண்டியிருக்கு. அது நம்மோட கடமை" என்று இருதயசாமியைப் பார்த்துச் சொல்லவும், மினிசாமியை மட்டும் துணைக்கு அழைத்துக் கொண்டு சங்கரனும் மற்றவர்களும் ஓசேப்பின் குடிசையை நோக்கிப் போனார்கள்.

●

அவர்கள் ஓசேப்பின் குடிசையை அடைந்தபோது நன்றாக இருட்டியிருந்தது.

சங்கரனையும், ஆரோக்கிய சாமியையும் எதிர்பாராத தாயம்மாள் அவசர அவசரமாகக் காடா விளக்கைப் பற்ற வைத்தபோது, குடிசையில் இருள் மங்கி ஒளி பரவலாயிற்று.

ஓசேப்பு, அடுப்பை ஒட்டி, மண் சுவற்றோரம் முடங்கிக் கிடந்தான். அவனைப் பொறுத்த மட்டில் அருக்காணி யில்லாத வாழ்க்கை இருள் நிறைந்த வாழ்க்கையாகப் பட்டது. இருள் அவனுக்கு இதமாகப்பட்டதோ என்னவோ, தாயம்மாள் விளக்கை ஏற்றப் போகும் நேரம் எல்லாம் அவளோடு எரிந்து விழுந்தான்.

தலைவர்களைக் கண்டதும், வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து நின்றான். ஓசேப்பு மிகவும் களை இழந்து காணப்பட்டான். அவனது முகம், இருளின் பயங்கரத்தை அதிகப்படுத்துவது போல் விகாரமாகப்பட்டது.

சங்கரனை வரவேற்பதற்காக ஓசேப்பு கரங்குவித்து நமஸ்காரம் சொன்னபோது, சங்கரன் அவனை மார்போடணைத்துத் தனது தோளில் சாய்த்துக் கொள்ளவும், மடை திறந்தாற் போன்று விம்மி விம்மி சிறு பிள்ளையைப் போல் அழலானான்.

ஒரு தகப்பன் ஸ்தானத்தில் நின்று ஓசேப்பைப் பராமரித்துப் பாதுகாத்து வந்த இருதயசாமிக்கு, ஓசேப்பு ஒரு

கோழையைப் போன்று அழுவதைப் பார்த்தபோது உள்ளூறக் கோபம் மூண்டது.

அழுகை ஓய்ந்து, சங்கரனது பிடியினின்றும் விடுபட்டு அவன் நின்ற போது "கோழைப் பயலே ஏண்டா பொட்டச்சியாட்டம் அழுவுறே" என்று இருதயசாமி கடிந்து கொள்ளவும்

அதற்கு "தோழர், இந்த அதிர்ச்சியை எல்லாம் தாங்கிக் கொள்ளற பக்குவம் வராத வாலிபன். ஏன் கோவுச்சிக்கிறேள்" என்று சங்கரன் சொல்லவும், இருதயசாமியும், சகோதரர் தங்கசாமியும் குடிசைக்குள் தரையில் அமர்ந்தார்கள்.

குடிசையின் மூலை ஓரமாக நின்ற தாயம்மாள், முந்தானையை வாயில் புதைத்துக் கொண்டு விம்மலும், விக்கலுமாகத் தன்னுள் எழுந்த அழுகையை அடக்குவதற்காக பிரயத்தனப்பட்டுக் கொண்டிருந்தாள்.

ஓசேப்பை அருகில் உட்கார வைத்த சங்கரன், "ஒனக்கும் அருக்காணிக்கும் இப்படி ஒரு உறவும் எண்ணமும் இருக்கறதை அப்போவே எங்கள் யாரிடமாவது சொல்லியிருக்கலாமல்லவா. என்ன எதிர்ப்பு வந்தாலும், உங்களோட கல்யாணம் நடந்திருக்குமே" என்று சோர்வுற்ற நிலையில் உட்கார்ந்திருக்கும் ஓசேப்பைக் கேட்ட போது, அவன் பதில் ஏதும் பேசாமல் தலையைக் குனிந்து உட்கார்ந்திருந்தான்.

"இந்த அசிங்கத்தையெல்லாம் தலைவர் உங்ககிட்டே சொல்ல முடியுங்களா" மினிசாமி சொல்லவும்

"சகோதரர் மினிசாமி, காதல் என்பது அவ்வளவு கொச்சையான விவகாரமா. காதல் என்பது எவ்வளவு புனிதமான ஒண்ணு" தங்கசாமி சொல்லவும்,

"அப்படி கொச்சையா நெனச்சதாலேயும், வெக்கப்பட்டதாலேயும், அய்யா இப்படி உட்கார்ந்திருக்கார்" என்று கோபமாகப் பேசிய இருதயசாமி

"தாயம்மா, பெரிய மனுஷி தாய் ஸ்தானத்திலே இருக்கவா. நீயாச்சும் எங்களண்டை சொல்லியிருக்கலாம் அல்லவா" என்று தாயம்மாளைக் கடிந்து கொண்ட போது

"எனக்குத் தெரியாது சாமி, முடிவான் இப்படி ஒரு ஆசை வச்சிருக்கது தெரிஞ்சா நானே தலைவர்க கிட்டே ஒப்பிச்சிருப்பேனே" தாயம்மாள் அங்கலாய்த்தாள்.

"காதல் என்பது, ஆண் பெண்களிடை ஏற்படக்கூடிய புனிதமான உறவு. சொல்லப் போனால், இந்தச் சமுதாயத்துக்கு ஒரு புதிய உயிரை உருவாக்கித் தரக்கூடிய மனிதச் செயல்" என்று சங்கரன் சொன்னார்.

சற்று நேரம், மனம் உடைந்து போயிருக்கும். ஒசேப்பைப் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்த இருதயசாமி,

"அது சரி, அருக்காணிய நீ சந்திச்சுப் பேசிப் பார்த்தயல்லவா. அவ, இப்போது எப்படியிருக்கா" என்று வினவிய போது

"அந்தச்சாமி கொண்டாடியோட அவ மனம் ஒப்பி வாழமுடியலை. நரக வாழ்க்கை தான் வாழ்ந்திட்டிருக்கா" ஒசேப்பு திக்கித் திக்கிச் சொன்னான்.

"மனம் ஒவ்வாத பிரியமில்லாத தாம்பத்திய வாழ்க்கை தானா" தங்கசாமி கேட்டார்.

ஒசேப்பின் பதிலைக் கேட்டதும், குடிசையின் முகட்டைப் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்த இருதயசாமி, திடீர் என்று சங்கரனிடம் ரகஸ்யமாக எதையோ சொல்லவும், சங்கரனும் அவரது ஆலோசனையை ஏற்றுக் கொள்வது போல் தலையை ஆட்டவும்,

"இப்போ ஒண்ணும் குடி முழுகிப் போகலை. மனம் ஒப்பாத கணவனோட எப்படி வாழ்க்கை நடத்த முடியும் தீர்த்துக் கட்டிக்கிற சாதி தானே. ஊரை வேணா கூட்டிப் பஞ்சாயத்து வச்சாப் போச்சு. அல்லாம் நமக்குத் தெரிஞ்ச ஜனங்கள் தானே. என்னடா சொல்றே" இருதயசாமி ஒசேப்பைப் பார்த்துக் கேட்டார்.

"அது மட்டும் முடியாது. நடக்காது" அவரைப் பார்த்துச் சொன்ன ஓசேப்பு

"அவ உப்ப ஆறு மாசமா முழுகாம இருக்கா" தலையைக் குனிந்த படியே சொன்னான்.

ஓசேப்புச் சொல்வதைக் கேட்டு சங்கரனும் தங்கசாமியும் மலைத்துப் போனார்கள்.

"பூ! இவ்வளவு தானா. அருக்காணிக்கு ஒம்மேலே இருக்க ஆசை அம்புட்டுத்தானா பைத்தாரப் பயலே. இவ்வளவு ஆனப்புறமும் ஒனக்கு அவ மேலே என்னடா ஆசை கூதரை கூதரை" என்று இருதயசாமி கண்டிப்பது போல் பேசவும்.

"இல்லே, அவளோட வவுத்துலே தாங்கிட்டு இருக்கது என்னோட கரு. எம்புள்ளெ" வெட்கத்துடன் தலையைக் குனிந்தபடியே ஓசேப்புச் சொன்ன போது அவர்கள் வாயடைத்துப் போனார்கள்.

சங்கரன் மட்டும் சற்று யோசனை செய்துவிட்டு ஒரு முடிவுக்கு வந்த மட்டில்

"சரி தோழரே, யோசனை செய்ய வேண்டாம். என்ன எதிர்ப்பு ஏற்பட்டாலும் பரவாயில்லை. அருக்காணியை அழைச்சிட்டு வந்திர வேண்டியது தான். நாளையே தோழர் மினிசாமியை அருக்காணியப் பார்த்துப் பேச ஏற்பாடு செய்யுங்கோ" என்று சொல்லவும்

"ஓசேப்பு என்னடா சொல்றே" இருதயசாமி கேட்டார்

"அது மட்டும் வேணாம் தலைவரே", என்ற ஓசேப்பு

"அவ உப்ப வேறே ஒருத்தனோட சம்சாரம்" என்றவன்

"நானே அவளெக் கேட்டுப்பாத்தன். அவளே உப்படித்தான் சொன்னா. அவ என்னோட வந்தா ஊறான் சம்சாரத்தைக் கூட்டிட்டு ஓடிப் போனதா ஊர் ஒவலையாப் போவும்.

நா சங்கத்து ஆளு, எனக்கு ஏற்படக்கூடிய அசிங்கப் பேரு அம்ம சங்கத்து மேலே தான் வரும். சங்கத்துக்காரப் பெயலுவ. ஒழுக்கங் கெட்டவங்க. குடும்பத்தையே கலைச்சுப் பொண்டுபிடிக்கிற கேடு கெட்ட பெயலுவண்ணு ஊர் நம்மைத் தூத்திப் போடும். தலைவருகளுக்கெல்லாம் கெட்ட பேரு வந்திடும். அது வேணாம்ண்டு அருக்காணி சொல்லுச்சு" என்று சொல்லிவிட்டுத் தலையை உயர்த்தி அவர்கள் எல்லோரையும் பார்த்தவன்,

"எனக்கும் அது நாயமாப்பட்டது வந்திட்டேன்" என்று ஓசேப்பு சொன்னதைக் கேட்டு, அடி மனதில் ஆழமான வடு ஏற்பட்டது போல் அவர்கள் அனைவரும் மௌனமாகிப் போனார்கள்.

வெகுநேரம் வரையில் அவர்கள் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்ளவில்லை. அந்த அப்பாவிப் பெண்ணும், ஓசேப்பும் சங்கத்தின் மீது வைத்திருக்கும் மதிப்பும், பக்தி விசுவாசமும், அவர்களை உணர்ச்சி கொள்ள வைத்தது.

அங்கு நிலவிய மௌனத்தைக் குலைத்துக் கொண்டு சங்கரன் சொன்னார்.

"தோழர் ஓசேப்பு. இது ஒன்னோட வாழ்க்கை ஏற்பட்டிருக்கக்கூடிய விபத்து மட்டும்தான். மனம் தளரக் கூடாது. நாம் எவ்வளவோ, சோதனைகளையும், வாதனைகளையும் சந்திக்க வேண்டியுள்ளது. அந்தத் தடைகளையெல்லாம் தாண்டித்தான் நாம போக வேண்டியிருக்கும்" என்று சொல்வதை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த ஓசேப்பு,

"என்னயை விடவும், என் சீவனை விடவும் என் சங்கம் தான் எனக்குப் பெரிசு. என்னைப் பெத்த தாய் மாதிரி" என்று ஒருவிதத் தெளிவுடன் அவர்களைப் பார்த்துச் சொன்னான்

இதற்குள் தலைவர்கள் ஓசேப்பின் குடிசைக்கு வந்திருப்பதைக் கேள்விப்பட்டுத் தொழிலாளர்கள் அங்கு கூடிவிட்டனர்.

மறு நாள் முதல் அவனை ஆபீசுக்கு வரும்படியாகப் பணித்துவிட்டு அவர்கள் விடைபெற்றுக் கொண்டனர்.

கரு மேகங்கள் கலைந்து போன வானப்பரப்பைப் போன்று ஓசேப்பின் உள்ளத்தில் ஒரு தெளிவின் கீறல் ஏற்பட்டிருப்பதை அவன் உணரலானான்.

6

வேலூர் மத்திய சிறையினின்றும் (நாடு விடுதலை அடைந்த நாளில்) விடுவிக்கப்பட்ட வக்கீல் சங்கரனை ஒரு சுதந்திர மனிதனாக இந்த பூமியில் வெகுநாள் நடமாட இந்திய அரசு விட்டு வைக்கவில்லை.

நாடு விடுதலை பெற்ற மறு வருடமே, சங்கரன் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சியைத் தேச விரோதக் கட்சி என்று இந்திய அரசு அறிவித்தது. பழிவாங்கும் எண்ணத்தோடு அந்த அரசியல் கட்சியைச் சார்ந்த தலைவர்களும், தொண்டர்களும் இரவோடு இரவாகக் கைது செய்து சிறைக் கூடங்களில் அடைக்கப்பட்டார்கள். கைது செய்யப் பட்டவர்கள், என்னவானார்கள், எந்தச் சிறையில் அடைக்கப்பட்டார்கள் என்கிற விவரங்களைக் கூட அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டவர்களின் உற்றார், உறவின் முறையார்களுக்குக் கூட தெரிவிக்கப்படவில்லை.

அரசாங்கம் மிகவும் சண்டாளத்தனமாக நடந்து கொண்டது. பல ஊழியர்கள் பட்சிகளைப் போல் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

அரசாங்கத்தின் அநியாயமான விதிகளையும், உத்தரவுகளையும் நிறைவேற்றத் தக்க வகையில், காவல் துறையைப் பொறுத்த மட்டில், லஞ்சக் குற்றச் சாட்டு சுமத்தப்பட்ட, சூப்பிரண்ட் வெள்ளைத்துரை "சஸ்பெண்ட்" செய்யப்பட்டு அவனது இடத்தில் மகாக் கொடியவன் என்று பிரிட்டீஸ் ஆட்சிக்காலத்திலேயே பெயர் பெற்ற தேவசகாயம் என்கிற புதிய அதிகாரி நியமிக்கப்பட்டு சகல அதிகாரமும் வாய்க்கப்பெற்ற அரசிளம் குமாரனாக நகரைப் பரிபாலனம் செய்ய வலம் வந்தான்.

இன்ஸ்பெக்டர் பாலையன், உத்தியோக உயர்வில் வடக்கே மாற்றப்பட்டதால், தீச்சட்டிக் கோவிந்தன் என்கிற இன்ஸ்பெக்டரும், பலவேசத்திற்குப் பதிலாக ஏசுவடியான் என்கிற சப்-இன்ஸ்பெக்டரும் மாற்றலாகி வந்திருக்கிறார்கள்.

தேவ சகாயம் தனது மக்கள் விரோத குரூர நடவடிக்கைக்கு உறுதுணையாக நிற்கும் வகையிலேயே அந்த நகரத்தின் போலீஸ் வளையத்தை மாற்றி அமைத்துக் கொண்டிருக்கிறான்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் தோல்ஷாப்புத் தொழிலாளர்கள், ஏனைய தொழிலாளர்களைப் போன்று தங்களுக்குப் பஞ்சப்படியும், சம்பள உயர்வு போன்று முக்கிய கோரிக்கைகளை முன் வைக்க முதலாளிகள் சங்கத்துடனும் அரசுடனும் நடத்திய பேச்சு வார்த்தை முறிந்து போகவே, தொழிலாளர்கள் நீண்டதோர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட வேண்டியதாயிற்று.

போராட்டத்தின் கூர்முனையாகச் செயல்படும் சங்கரனையும், வேலாயுதத்தையும் ஒழித்துக் கட்டினால் தான் தாங்கள் நிம்மதியாகத் தொழில் நடத்த முடியும் என்று முதலாளிகள் மறைமுகமாக அரசை நிர்ப்பந்தப் படுத்தலானார்கள். அரசும், அரசு அதிகாரிகளும் முதலாளிகளுக்குச் சாதகமாக எதையும் செய்யத் தயாராகியது. அரசு யந்திரமும் முடுக்கிவிடப்பட்டது. இப்படிப்பட்ட நிலைமையில் இந்திய அரசாங்கம் சங்கரன் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சியைச் சட்ட விரோதமாக்கிய அன்று நள்ளிரவில் தேவசகாயம் தனது படை பட்டாளத்துடன் போய் சங்கரனைக் கைது செய்து வேலூர் மத்திய சிறைக்கு அனுப்பி வைத்தான். ஆனால் அவனால் தோழர் வேலாயுதத்தைக் கைது செய்ய முடியவில்லை. தேவசகாயம் பயிற்சி பெற்ற வேட்டை நாயாக வேலாயுதத்தைப் பிடிக்க வெறியாக அலைந்த போதும், வேலாயுதத்தையும் சகோதரர் தங்கசாமியையும் பிடிக்க முடியவில்லை. தோல் ஷாப்புத் தொழிலாளர் குடியிருப்புகளில் நுழைந்து ஆண் பெண் தொழிலாளர்களை

மிரட்டிப் பார்த்தபோதும் அவனால் துப்புத் துலக்க முடியவில்லை.

வேண்டும் என்றே, இருதயசாமியையும் தோல் ஷாப்புத் தொழிலாளர் சங்கத்தின் முக்கிய ஊழியர்களையும் கைது செய்யாமல். தேவசகாயம் விட்டு வைத்திருந்தான். அதாவது சின்ன மீனைப் போட்டுப் பெரிய மீனைப் பிடிக்கிற விவகாரமாக சங்க வேலைகள் சம்மந்தமாக எப்படியாவது, வேலாயுதமும், தங்கசாமியும், இருதயசாமியையும், மற்ற ஊழியர்களையும் சந்திக்க வேண்டிய சந்தர்ப்பம் நிச்சயம் நேரிடும். அப்படிப்பட்ட நேரத்தில் கோழியை ஈரத்துணியைப் போட்டு அரவமில்லாமல் அமுக்கிப் போடுவது மாதிரி பிடித்துவிடலாம் என்று இருதயசாமியையும் மற்ற தொழிலாளர்களையும் சுதந்திரமாக உலாவ விடுவது போல் பாவலாக் காட்டிய தேவசகாயம், தனது உளவுத்துறை மூலம், இருதயசாமியின் ஒவ்வொரு நடவடிக்கையையும் கண்ணில் விளக்கெண்ணை போட்டுக் கொண்டு கண்காணித்து வரலானான். ஆனால், தேவசகாயம் எதிர்பார்த்ததற்கு எதிர்மாறாக உளவுத்துறை, வேலாயுதம் பற்றியும், பிரதர் தங்கசாமி பற்றியும் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு புதுக்கதைகளையும் வதந்திகளையும் சொல்லிக் கொண்டிருக்கவே, தேவசகாயம் செய்வதறியாது குழம்பி போய் நின்றான்.

மாறாக ஒவ்வொரு நாளும், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் தோல் ஷாப்புத் தொழிலாளர்களது கோரிக்கைகளை வலியுறுத்தியும் அரசின் அடக்குமுறையைக் கண்டித்தும் நாட்டில் பெருகி வரும் பொருளாதாரச் சீரழிவை விளக்கியும், அரசின் கொடுங்கோன்மையைக் கண்டித்தும், வேலாயுதம் பெயரிலும், தடை செய்யப்பட்ட அமைப்பின் பெயரிலும், துண்டுப்பிரசுரங்களும், நோடீசுகளும், போஸ்டர்களும், நகரத்தில் விநியோகமாகிக் கொண்டிருந்தன. அவனது அதிகாரவரம்பையே கேலிக்கூத்தாகிக் கொண்டு நடைபெறும் நிகழ்ச்சிகள் தேவசகாயத்தின் ஈரல் குலையவே கலங்க வைத்துக் கொண்டிருந்தது.

ஓசேப்பும், சார்லசும் தொழிலாளர்கள் போராட்டத்தைத் தூண்டிவிட்டார்கள் என்று சாக்குப் போக்குச் சொல்லப்பட்டு, நிர்வாகத்தால் பணி நீக்கம் செய்யப்பட்டதானது அவர்கள் இருவரும், தொழில் சங்கப் பணியில் முன்னைவிடத்தானும் வேகமாகவும், உறுதியாகவும் வேலை செய்வதற்கு வசதியாகப் போயிற்று. சொல்லப்போனால், தலை சாய்க்கக் கூட நேரமில்லாமல் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர் உறுதி குலைய விடாமல் காப்பதற்கும், முதலாளிகளின் கையாட்களின் அக்கிரம அநியாயங்களையும் சமாளிக்கும் வகையில் போராடவும் வேண்டியிருந்தது. ஓசேப்பு சகதொழிலாளர்களின் பிரச்சனைகளில் தீர்வு காண்பதிலும், எதிரிகளின் தாக்குதல்களிலிருந்தும் அவர்களைக் காப்பதிலும், ஈடுபட்டிருந்தாலும், தலைமறைவுத் தலைவர்களின் உத்தரவுகளையும் வழி காட்டுதல்களையும் நிறைவேற்றுவதில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டதால், அருக்காணியின் பிரிவால் தனக்கு ஏற்பட்டுள்ள இழப்பைப் பற்றி நினைப்பதற்குக் கூட அவனுக்குச் சமயம் கிடைக்கவில்லை. எப்போதாவது, அருக்காணி பற்றிய எண்ணம் ஏற்படும் போது, அது தனக்கு ஏற்பட்ட விபத்து என்று தலைவர் சங்கரன் சொன்ன புத்திமதி நினைப்புக்கு வரும். காலம் என்கிற வைத்தியன், அருக்காணியின் பிரிவால் ஏற்பட்ட புண்ணைக் காலவறையில் ஆறச் செய்து இப்போது வெறும் வடுவாக மட்டும் மிஞ்சி நிற்கச் செய்திருக்கிறான்.

தலைமறைவாக இருக்கும், தலைவர்களைப் பிடிப்பதற்காகவும், அவ்வப்போது வேற்றுமாவட்டங்களில் இருந்து வந்து போகும் தலைமறைவுத் தலைவர்களை பிடிப்பதற்காக வேண்டியும் தேவசகாயத்தின் போலீஸ், தோல் ஷாப்புத் தொழிலாளர்கள் குடியிருப்புக்களிலும், நகர சுத்தித் தொழிலாளர் குடியிருப்புகளிலும், மோப்பம் பிடித்தலையும் வேட்டை நாயாக அலைந்தது. சோதனை என்ற சாக்கில் நள்ளிரவில் கூடக் குடிசைகளில் புகுந்து தொழிலாளர்களை இழுத்துப் போட்டுத் துன்புறுத்துவதும் அவர்களது உடைமைகளைச் சின்னாப்பின்னப்

படுத்துவதும், பொருட்களைக் கவர்ந்து செல்வதும் மாமூலாகப் போய்விட்டது.

தோல் ஷாப்புத் தொழிலாளர்களின் இக்கட்டான சூழ்நிலையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட தோல் ஷாப்புத் உடைமைகள், அவர்களது போராட்ட உணர்வை மழுங்கடிப்பதற்காகவும் "ஸ்ட்ரைக்கை" உடைப்பதற்குமான பணியை மும்முரமாகச் செயல்படுத்தலாயினர். தங்களின் கையாளான கழுவத் தேவனையும் அவனது கூலிப்பட்டாளத்தையும் மீண்டும் முடுக்கிவிட்டனர். கழுவத்தேவன் போலீஸ் இலாகாவினுடையவும், தோல் ஷாப்பு உடைமை களுடையவும் செல்லப் பிள்ளையாகக் கேட்பாரும், கண்டிப்பாரும் இல்லாத கோயில் காளையாக நகரை வலம் வந்து கொண்டிருந்தான். அதிலும் போலீஸ் அடக்கு முறைகளுக்கு அஞ்சி காலனிகளில் உள்ள ஆண்களில், கிழடு கட்டைகள் போக மற்றவர்கள் காட்டு வெளிகளில் தங்குவதால், கழுவத்தேவனுக்கு, அவனுடைய சமூக விரோதச் செயல்கள் புரிவதற்கு வாய்ப்பாகவும், வசதியாகவும் இருந்தது.

குருசடிக் காலனியில், மூன்றாவது சந்தில், மிக்கேல் ராஜ் குடிசைக்குக் கழுவனின் மைத்துனன் விருமாண்டியின் கையாள் வேலப்பனும், மாணிக்கமும், தீவைத்து அந்தத் தெருவையே தீக்கிரையாக்க முற்பட்ட போது, சின்னப்பனும், தெருவில் குடியிருக்கும் தோல்ஷாப்புத் தொழிலாளர்களும், வேலப்பனையும் அவனது சகாவையும், கையும் களவுமாகப் பிடித்துப் போலீசிடம் ஒப்படைத்த போது இன்ஸ்பெக்டர் தீச்சட்டிக் கோவிந்தன் அவர்கள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் அனுப்பிவிட்டதோடு, சின்னப்பனையும் அவன் அங்கம் வகிக்கும் தொழிற் சங்கத்தையும், அவதூறும், நிந்தனையும் செய்து அனுப்பியதற்குப் பிறகு, கழுவனின் அக்கிரமம் மேலும் அதிகப்பட்டுப் போயிற்று.

இரண்டு வாரங்களுக்கு முன்னால் ஒரு முன் இரவு வேளையில் சங்க வேலையாக மாப்பிள்ளை ஷாப் கேட்

கூட்டத்தில் கலந்து, கொண்டு, வீட்டுக்குத் திரும்பும் வேளையில் மாப்பிள்ளை ஷாப் சங்கக் கிளையின் செயலாளர் அந்தோணிக்குருசை வழி மறித்து கழுவனும் அவனது அடியாட்களும் கொலை முயற்சியில் ஈடுபட்ட போது, அவரது இடது முழங்கைக்குக் கீழ் உள்ள கொடங்கை துண்டாடப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருக்கிறார். நல்ல வேளையாக அந்தோணிக் குருசின் உயிருக்கு ஆபத்து ஏற்படவில்லை. புகார் செய்தும் போலீஸ் கழுவன் மீது எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

சங்கத் தலைவர்கள் வெளிப்படையாகச் செயல்பட முடியாமல் முடக்கப்பட்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, தோல் ஷாப்புத் தொழிலாளர் உறுதியைக் குலைத்து சங்கத்தையே நிர்மூலம் செய்து விட வேண்டும் என்பது தோல் ஷாப்பு உடைமையாளர்களின் திட்டம். கழுவனின் அடாவடித்தனத்தால் தொழிலாளர்கள் பயந்து ஒடுங்கிப் போவார்கள் என்பது அவர்கள் எண்ணம்.

மாறாகக் கழுவனின் இந்த நடவடிக்கைகள் தொழிலாளர் மத்தியில் கனத்த கோபத்தையும், ஆத்திரத்தையும் ஏற்படுத்தியிருந்தது. இனம் தெரியாத கோபம் ஒவ்வொரு தொழிலாளியின் உள்ளத்திலும் கனன்று கொண்டிருந்தது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் தோல்ஷாப்பில் வேலை யில்லாததால் அமலோற்புதம் நகரின் முக்கியப் பகுதிகளான நாகல் நாயக்கன் பட்டி, சௌராஷ்டிராபுரம் மேட்டு ராஜக்காபட்டி, பெரிய பள்ளிவாசல் வீதி என்று அலைந்து, தலைச்சுமையாக மீன்விற்று, வீடு வந்து சேர்ந்த போது சூரியன் மேற்கே திரும்பியிருந்தது. மீன் வியாபாரம் என்பதால் தலைக் கோழி கூவும் முன்னமேயே மீன் கூடையை எடுத்துக் கொண்டு கிளம்பிவிட வேண்டும்.

மிக்க களைப்புடன் முருகபவனம் சனீஸ்வரன் வீதியில் உள்ள தனது குடிசைக்கு வந்த அமலோற்புதம் கூடையை இறக்கித் திண்ணையில் வைத்தாள். கூடையில் பொட்டலமாக முடிந்து போட்டிருக்கும் ரெயில் குருணைப்

பொட்டலத்தையும் எடுத்து ஒதுக்கி வைத்தாள், மாராப்புச் சேலையை அவிழ்த்து முகத்திலும், கட்கங்களிலும், மார்பகங்களிலும் துளிர்த்த வியர்வையைத் துடைக்கவும் வீசும் இளம்காற்று உடம்புக்கு இதமாக இருந்தது.

கடந்த ஒருமாத காலமாகத் தோல் ஷாப்புக்களில் வேலை நிறுத்தம் என்பதால், தனது அடுப்பு எரிய வேண்டும் என்பதற்காகவும், பிள்ளைகளைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகவும், தெருத் தெருவாக மீன்விற்று அதில் கிடைக்கும் சொற்ப வருமானத்தில் குடும்ப ஜீவனம் நடக்கிறது. பெஞ்சமினும், நகரத்தில் உள்ள அரிசி மண்டிகளில் மூட்டை தூக்கப் போய்விட்டு மாலையில் தான் வீடு திரும்புவான்.

மீன் வாடை காரணமாக அவளது உடம்பிலும், திண்ணையிலும் ஈ கூட்டம் மொய்க்கவும், முன்தானைச் சேலையால் மொய்க்கும் ஈக்கூட்டத்தை விரட்டியபடியே அடி மடியில் சொருகி வைக்கப்பட்டிருந்த சுருக்குப் பையை அவிழ்த்து, சுருண்டு கிடக்கும் ரூபாய் நோட்டுக்களையும் சில்லறைகளையும் எண்ண ஆரம்பித்தாள். அவர்கள் வளர்க்கும் நாய் கருப்பு வேறு. மீன் வாடையை மாறிமாறி நுகர்ந்து பார்த்த வண்ணம் அமலோற்புதத்தின் கால்களுக்கருகில் வாலை ஆட்டியபடியே நின்று கொண்டிருக்கிறது. எப்போதாவது கூடையில் மீன்கள் விற்காமல் மீதம் கிடந்தால் கருப்புக்குக் கிடைக்கும்.

தன் உடம்போடு ஒன்றிப் போன மீன்வாடை அவளுக்கே அருவெறுப்பூட்டுவதாகப் பட்டது. குழந்தைகளுக்குக் கூட அவள் உடம்பிலிருந்து எழும் மீன்வாடை சகிக்க முடியாததாக இருந்தது. எனவே, குழந்தைகளுக்காக வேண்டி, மீன் விற்று முடித்து விட்டுக் குடிசைக்கு வந்த மறுகணமே, அரண்மனைக் குளத்துக்குப் போய் சேலையை அலசி, உடம்பையும், கழுவிச் சுத்தம் செய்த பிறகுதான் குடிசைக்கு வந்து அடுப்பைப் பற்ற வைப்பாள் அப்போதும் கூட மீன்வாடை அவளை விட்டுப் போவதில்லை அதிலும், வியர்வை அரும்பி விட்டால் மீன்வாடை சகிக்க முடியாததாக இருக்கும்

தன் உடம்பில் ஊறிப்போன மீன் வாடையைப் பற்றி அருவெறுப்புக் கொண்டபோது முதல்நாள் இரவு அவள் அருகில் பாயில்படுத்துக் கொண்டிருந்த பெஞ்சமின் சொன்னது நினைவுக்கு வந்தது.

பிள்ளைகள் அனைவரும் மூலைக்கு ஒருவராகப் படுத்துத் தலைகால் தெரியாமல் நித்திரை போய்க் கொண்டிருந்தார்கள். அமலோற்புதம் அருகில் வந்து, படுத்து அவளைப் பார்த்துத் திரும்பிய பெஞ்சமின்,

"சை மனிசன் மனம் ஒப்பிப் பக்கத்துலே படுக்க முடியலை. பக்கத்திலே வந்தாலே மீன்வாடை கொடலைப் புடுங்குது" என்றவன். மென்மையாக அவள் உடலை வருடியபோது "மீன்வாடை தாங்க முடியலையானா பக்கத்திலே படுக்காதே. மீனு விக்கறவா மேலே மீன்வாடை அல்லாம சந்தணமா மணக்கும் சை! தூரப்போவியா" என்று கடிந்த அமலோற்புதம் பெஞ்சமின் கரங்களைத் தட்டிவிட்டபோது,

"ஹூம் அம்மாம் பெரிய ராசாவே, மீன்காரியக் கட்டிப் புள்ளெயும் பெத்திருக்கான் ஒனக்கென்னடி என் ராசாத்தி" என்று சொன்னவன்.

"அம்ம தோல் ஷாப்பு நாத்தத்தை விடத்தானும் மீன்வாடை தேவலை" என்று சொன்னபடியே அமலோற்புதத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டான்.

"வலுக்காப் பேசாதை. புள்ளெக முழிச்சுக்கப் போவுது" என்று அவனது செவிகளில் ரகஸ்யம் சொன்னவள் அவனுக்கு இடம் கொடுத்து மயங்கிப் போனாள்.

உடல் புல்லெரிக்க அந்தச் சம்பவத்தை நினைத்துப் பார்த்துக் கொண்ட அமலோற்புதம்.

"ஆறு புள்ளெகளைப் பெத்தப் பெறவும் இந்த மனிசன் பொம்பளை வாடையில்லாம தூங்க மாட்டேங்குது" என்று தனக்குள்ளேயே எண்ணி மகிழ்ந்தவள் சுருக்குப் பையில் இருந்த சில்லறையை எண்ணவாரம்பித்தாள்.

கடனாகக் கொடுத்த மீன் கடைக்காரனுக்கு வட்டியும் முதலுமாகத் திருப்பிக் கொடுத்தால்தான் மறுநாள் கூடைக்கு மீன் தரப்படும். இல்லையானால் .விற்பனைக்கு மீன் கிடைக்காது. எனவே, மீன் கடைக்காரனுக்குக் கொடுக்க வேண்டிய முதலையும் வட்டியையும் தனியாக எடுத்து வைத்து மீதிக்காசை எண்ணும் போதே அமலோற்புதத்துக்குக் கல்லறைத் திருநாள் நினைவுக்கு வந்தது. இந்தச் சூழலிலும், மறைந்து போன மூதாதையர்களுக்குச் செய்யும் சடங்கை அவளும் அவள் குடும்பத்தினரும் செய்தாக வேண்டியுள்ளது. எனவே, அந்தச் செலவினங்களுக்கு வேண்டி, கடைசி நாளில் பெஞ்சமின் அல்லற்பட்டு நிற்கக் கூடாது என்பதற்காகக் கடந்த இரண்டு வாரகாலமாக, மீன் விற்ற காசில் ஒரு பகுதியைச் சிறுவாடாகச் சேமித்து வருகிறாள். தெய்வத்துக்கு ஒதுக்க வேண்டிய சில்லறையைத் தனியாக எடுத்து வைத்துவிட்டு மீதிப்பணத்தை அமலோற்புதம் எண்ண ஆரம்பித்த போது பாளையம் மூக்காண்டி மனைவி பேச்சியாத்தாள் அவதி அவதியாக அவளை நோக்கி வந்தாள் அவளது முகத்தில் அசாதாரணமான பீதி தென்பட்டது.

"அக்கா! அமலு அக்கா! மேட்டுப் பெட்டியிலே அம்ம சனங்களோட தெருவையே கொளுத்தினதாட்டம். இண்ணெக்கி அம்ம ஊரையே தீவச்சுப் பொசுக்கப் போரதா அந்த சண்டாளப் பெய, கழுவத் தேவன் முச்சந்தியிலே நிண்டு மொரட்டிட்டுப் போரான். யக்கா, அல்லல் படற அம்ம சனங்க எங்கே போவும்" என்று அங்கலாய்த்த வண்ணம் திண்ணையில் அமலோற்புதம் அருகில் அமர்ந்தாள்.

அவள் மிகவும் பயந்து போயிருக்கிறாள் என்பது அவளது பார்வையிலேயே தென்பட்டது.

பேச்சியாத்தாள் மிகவும் அமைதியான பெண் மாப்பிள்ளை ஷாப்பில் வேலை செய்கிறாள். சங்கத்தின் மீது அபரி மிதமான நம்பிக்கை வைத்திருக்கும் தொழிலாளி. அவள் கணவன் பாளையம் மூக்காண்டி எவ்வளவு தைரியமானவனோ அதற்கு நேர்மாறாகப் பயந்த சுபாவம்

கொண்டவள் பேச்சியாத்தாள். ஒரு குழந்தை மாதிரி தெருவில் நாய்கள் சண்டை போட்டுக் கொண்டால் கூட தன்னைக் குறிவைத்துத் தான் நாய்கள் சண்டை போட்டுக் கொண்டிருக்கின்றன என்று பயந்து போய் வீட்டைப் பூட்டிக் கொள்வாள். புருஷன் வந்த பிறகுதான் கதவைத் திறப்பாள் அவ்வளவுக்குப் பயந்த சுபாவம்.

இவ்வளவு இருந்த போதும் பேச்சியாத்தாளுக்குச் சங்கத்தின் மீதும் சங்கத்தலைவர்கள் மீதும் அபார பக்தி நம்பிக்கை. ஊருக்குள் எது நடைபெற்றாலும் அமலோற்புதத்திடம் மேவி அவள் சொன்னபடியேதான் நடப்பாள். அவ்வளவுக்கு அமலோற்புதத்தின் பால் அவளுக்கு நம்பிக்கை.

சுருக்குப் பையில் இருந்த கசங்கிப் போன ரூபாய் நோட்டுக்களையும் சில்லறைக் காசுகளையும் எண்ணிக் கணக்குப் பார்த்து முந்தானையில் முடிந்து கொண்ட அமலோற்புதம், கூடையில் கிடந்த ரெயில் குருணைப் பொட்டலத்தை எடுத்துக் கல் பார்த்த படியே,

"என்னடீ சொல்றே, நீ சொல்றதைப் பார்த்தா பயமா இருக்கு. முடிவான் அந்த பெய சொன்னபடி செய்தாலும் செய்து போடுவானே" என்று அங்கலாய்க்கவும்

"போக்கா, நீ ஒருத்தி ஊரெல்லாம் ஓவலையாக் கெடக்கு. சங்கத்துக்காரவுக ஒங்களுக்குத் தெரியலையாக்கும். குடிகெட்டுது போ" என்ற படியே சம்பவத்தை விளக்கவாரம்பித்தாள்.

அதாவது, வெகுகாலைப் போதே சனீஸ்வரன் கோவில் தெரு சேரிப்பகுதிக்குத் தன் பரிவாரங்களுடன் வந்த கழுவன் வேலை நிறுத்தத்தில் இருக்கும் தொழிலாளர்களது குடிசைகளுக்குள் புகுந்து அவர்களைச் சம்மந்தப்பட்ட தோல் ஷாப்புக்களுக்கு வேலைக்குப் போக வேண்டும் என்று மிரட்டியபோது தலையிட்ட சிட்டம்மாளுக்கும், கழுவனுக்கும் வாக்குவாதம் முற்றி, சிட்டம்மாள் அவனைக் கேவலமாகப் பேசியதோடு மேற்கொண்டு தொழிலாளர்

குடியிருப்புக்குள் நுழைந்தால் "ஒம் வேட்டிய உருவி நிறை அம்மணமா ஓடவிட்டுருவோண்டா" என்று எதிர்த்துப் பேசியதோடு,

"மாப்பிளே, எங்க தலைவர்க அல்லாம தலைமறைவா இருக்காங்கண்டு கூவுறயாருக்கும். நா, ஒரு கொலையப் பண்ணிட்டு வந்தவளாக்கும் எங்கிட்டே அல்லாம் வச்சுக்காத" என்று பத்திரகாளியாக நின்றுசத்தம் போடவும், கூட்டத்தைக் கண்டு மிரண்ட போன கழுவத்தேவன். அன்று சாயங்காலமே தெருவுக்கு வந்து சிட்டம்மாளைச் சேலையை உறுவி, நிர்வாணமாகச் சேரியில் விரட்டப் போவதாகவும், தோல் ஷாப்புத் தொழிலாளர் குடியிருப்பையே தீவைத்துப் பொசுக்கப் போவதாகவும் மிரட்டிவிட்டுப் போயிருக்கிறான்.

பேச்சியாத்தாள் பேசிக் கொண்டிருக்கும்போதே வேறு இரண்டு மூன்று பெண்களும் பீதியுடன் அமலோற்புதத்தை அணுகி ஆவலாதி சொன்னதோடு, தெரு மக்களைக் காப்பாற்ற சங்கம் ஏதாவது செய்தாக வேண்டும் என்ற பீதியுடன் சொல்லிக் கொண்டிருந்தனர். அமலோற்புதம் சங்கத்தின் முக்கிய மாதர் பகுதி உறுப்பினர் என்பதால் அவர்கள் சொல்லும் அங்கலாய்ப்பை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தாள் உண்மையில், காலையில் நடைபெற்ற சம்வம் சனீஸ்வரன் கோயில் தெருவையே கலங்கச் செய்திருந்தது.

கலங்கிப் போயிருந்த பெண்கள், ஆதரவற்ற தங்களது அவல நிலையை அமலோற்புதத்திடம் ஒப்புவித்துக் கொண்டிருக்கும் போது, ஒசேப்புடன் வந்த பெஞ்சமின்

"ஊருல கொடையிண்டு போனவ, எப்படியாத்தா வந்த" என்றுப் பேச்சியைக் கேட்டவாறுப் பொட்டலத்தைத் திண்ணையில் வைத்துவிட்டு, அமர்ந்தவன் தலைத்துண்டை அவிழ்த்து முகத்தைத் துடைத்துக் கொண்டான். அமலோற்புதத்தைச் சூழ்ந்து நிற்கும் பெண்களை வியப்புடன் பார்த்தான். ஒசேப்பு மட்டும் அவர்களை விட்டுச் சற்று தள்ளி அமர்ந்து கொண்டான்.

"இண்ணெக்கிக் காலம்பறத்தான் வந்தேன் மச்சான்" என்று பெஞ்சமின் கேள்விக்குப் பதில் சொன்ன பேச்சியாத்தாள்,

"ஏண்டா வந்தோமுண்டு அச்சலாத்தியாகி இருக்கு" என்று சலித்துக் கொள்ளவும்.

"சந்தா நான் கொடையிண்டு வசூல் பண்ண மட்டும் வந்திருங்க, நடக்க அக்குருவ அநியாயத்தைத் தட்டிக் கேக்காதீங்க" கணவனைப் பார்த்து அமலோற்புதம் எரிச்சல் ததும்பச் சொன்னாள்.

அமலோற்புதத்தின் எதிர்பாராத தாக்குதலால் மலைத்துப் போன பெஞ்சமின்

"உப்ப என்ன நடந்துபோச்சிண்டு எகிறுறவா" என்று மனைவியைப் பார்த்து சொல்லி விட்டு ஓசேப்பைப் பார்த்தான். ஓசேப்பு பதில் ஏதும் பேசாமல் திண்ணையில திரண்டிருந்த குப்பையை இடது கரத்தால் ஒதுக்கித் தள்ளிபடி உட்கார்ந்திருந்தான்.

"ஏமணிசா. அந்த கழுவத்தேவன் பண்ற அளும்பு தாங்க முடிலெ. அம்ம ஆளை வெட்டறான். அம்ம சேரிக் குள்ளாறவும், குடியிருப்புக்குள்ளாறவும் பூந்து தீவச்சிப் போட்டு மாப்பிள்ளையாட்டம் அலையுதான் சங்கத்துக்காரவுக, போலீசுக் கிட்டையாச்சும் சொல்லி, ஏதாச்சும் செய்ய வேணாமா, சனம் பரிதவிச்சுப் போயி நிக்குவு. இடிச்ச புளியாட்டம் ஒக்காந்திருக்கீங்க" என்று அவள் மீண்டும் கடிந்து கொண்டபோது

"நல்லாச் சொன்னடியாத்த ஒழியதுக்கு எடம் கெடையாம தலையாரிவூட்டுலே ஒளிஞ்ச கதையாட்டம் அந்தப் பெய செய்யற அக்குருவத்துக்கு அல்லாம் போலீஸ்காரங்க தாண்டி தொணை. அவங்க காவலுக்கு நிண்டுக்கிட்டு கழுவனைத் தீவைக்கச் சொல்லுறாங்கடீ" என்று சொன்னபோது, கூட்டத்தில் நின்றிருந்த பெண் ஒருத்தி "அட ஆண்டவா வேலியே பயிரை மேஞ்ச கதையா இருக்கே" என்று அங்கலாய்த்தாள்.

இவ்வளவு நேரமும் மௌனமாக உட்கார்ந்திருந்த ஒசேப்பு

"அமலா அக்கா. நம்மளை நாமதான காப்பாத்திக்கணும்" என்று மௌனமாகச் சொன்னான்.

பிறகு அந்தப் பெண்கள் சொல்லும் முறையீட்டைக் கேட்ட வண்ணம் உட்கார்ந்திருந்த ஒசேப்பும், பெஞ்சமினும் அவர்களுக்கு ஆறுதல் சொன்னார்கள்.

"பயப்படாமப் போங்க நீங்க பயப்படறாப்புலே ஏதும் நடக்காது.அல்லாம் இண்ணெயோட சரியாப்பூடும் என்று சொன்ன பெஞ்சமின், அமலோற்புதத்தை வீட்டுக்குள் கூட்டிக் கொண்டு போனான்.

தான் கொண்டு வந்திருந்த கித்தான் பொட்டலத்தை அவிழ்த்து அவள் முன்னால் வைத்தான். மணப்பாறை ஜீரகச் சம்பா அரிசி மினுமினுத்தது.அமலோற்புதத்துக்கு ஆச்சரியமாக இருந்தது.

"தலைமறைவா இருக்க தலைவர்களுக்கு இண்ணெக்கி அம்ம ஊட்டிலேருந்து தான் சாப்பாடு. கவுச்சி கெடைக்கலை கருவாட்டு ஆனாம் வச்சிரு. தூக்குப் போனியிலே எடுத்து வையி" என்றவன் தன் அருகில் நிற்கும் ஒசேப்பைப் பார்த்தான்.

"கிழக்கே ஒத்தக்கண்ண பாலத்தாண்ட இருந்து ஒரு குமரிப் பொண்ணவரும். என்ன எது ஏதுண்டெல்லாம் விசாரிக்கப்படாது. போணிய மட்டும் அந்தப் புள்ளெகிட்டே குடுத்துப் போடு. நாங்க வாரதுக்கு நேரம் ஆகலாம்" என்று பெஞ்சமின் கொடியில் கிடந்த அழுக்குச் சட்டையை எடுத்து அணிந்த வண்ணம் சொன்னான். அவனும், ஒசேப்பும் தெற்கு நோக்கிப் போனார்கள். அவர்கள் போகும் வேகத்தைப் பார்த்தபோது ஏதோ செய்யப் போகிறார்கள் என்கிற சந்தேகம் அமலோற்புதத்துக்கு ஏற்பட்டது.

நேரம் இருட்டிக் கொண்டு வந்தது. அமலோற்புதம் விறகை அடுக்கி அடுப்பை மூட்டி உலையை ஏற்றினாள்.

வெளியே அவளது குழந்தைகளின் ஆரவாரம் கேட்டது.

7

"ஆத்தீ! கண்ணு போச்சே" என்ற கழுவத்தேவனின் அலறல், அந்தப் பிரதேசத்தையே குலுக்கி எதிரொலிக்கிறது.

ஓசேப்பும் பெஞ்சமினும் சனீஸ்வரன் கோவில் தெரு குடியிருப்பை நெருங்கிய போது, அவிழ்த்துக் கொட்டப்பட்ட மூட்டையினின்றும் தெறித்து ஓடும் நெல்லிக்காய்களைப் போன்று கழுவனின் கையாட்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு சோளக் கொல்லைகளையும், சாலிமரக் காடுகளையும் குன்றுகளையும் நோக்கி, திக்குக்கு ஒருவராக ஓடிக் கொண்டிருக்கின்றனர். ஊருக்குள் நுழைந்துவிட்ட நரிக் கும்பலை விரட்டும் வேட்டைக்காரர்களைப் போன்று கம்பு, தடி சகிதமாகத் தெருப் பொடியன்கள் அவர்களைத் தொடர்ந்து விரட்டிக் கொண்டு போகின்றனர்.

சேரித் தெருவுக்குள், அவர்கள் நுழைந்த போது தெருவே அங்கு கூடி நிற்கிறது. தெருவில் நடு நாயகமாக வீறு கொண்ட அய்யனார் சாமியாட்டம் வீச்சருவாளும் கையுமாக சந்தனத்தேவன் நின்று கொண்டிருக்கிறார். மலர்த்திப் போடப்பட்ட மதம் கொண்ட யானையாக லங்கோட்டுடன், நிர்வாண கோலத்தில் கழுவன் துடித்துக் கொண்டு கிடக்கிறான். பெண்கள், கரைக்கப்பட்ட மிளகாய் நீரை அவன் முகத்திலும் உடலிலும் ஊற்றிக் கொண்டிருக்கின்றனர்.

"சிட்டம்மாள் அவிழ்ந்த கூந்தலை அள்ளி முடிந்து, குலைந்து போன சேலையைச் சரிசெய்து கட்டிய வண்ணம்

"ஏமிரா சாண்டக்குடிக்கி. ஒரே என்னை சேலையை உறுவி அம்மணமா தெருவுலே ஓட விடலாம்ண்டா வந்தே உப்ப நீதானே அம்மணமா கெடந்து துடிக்கிற நாங்கண்ணா அம்புட்டு எளப்பமாப் போச்சோ" என்று பத்திரகாளியாக நின்று ஏசிக் கொண்டிருக்கிறாள்.

மிளகாய்த்தூள் கரைசலைப் பெண்கள் மண் சட்டிகளிலும், அலுமினியப் பாத்திரங்களிலும் கொண்டு வந்து கழுவனை அபிஷேகம் பண்ணிக் கொண்டிருக்கின்றனர்.

"பங்காளி, என்ன உட்டுறச் சொல்லு அப்பு. நான் இனிமே இந்தப் பக்கம் தலை வச்சுக் கூடப் படுக்க மாட்டன். என்னைக் காப்பாத்து பங்காளி".

தரையில் கிடந்து புரண்டவாறே கழுவன் கைகூப்பிச் சந்தனத்தேவனைக் கெஞ்சவும்,

"வக்காளி இப்பத்தான் பங்காளிண்டு தெரியுதோ. வசமா மாட்டிக்கிட்டா சாதியச் சொல்லுவேகடா சொந்தம் கொண்டாடுவேகடா" என்று வேடிக்கையாகப் பதில் சொன்ன சந்தனத்தேவன்,

"ஆருக்கு மாப்புக்குடுத்தாலும், ஒனக்கு மட்டும் மாப்புக் கெடையாது. எத்தினி குடும்பத்தைக், கெடுத்திருப்பே. எத்தினிபேர் பொழப்புலே மண்ணள்ளிப் போட்டிருப்பே.

ஒன்னெ மடக்கதுக்குப் பதி போட்டுக் காத்திருந்தம். மாப்ளே இப்பத்தாண்டா வசமா மாட்டிருக்கே என்ன கழுவா, கண்ணெரியுதாக்கும் ஒடம்பும் வேகுதோ" என்று கேட்கவும் கழுவன் தலையை அசைத்து ஆமோதிக்கவும்

"எத்தினி குடும்பத்தோட வயித்தெரிச்சலை, தோல் வாப்புக் காரங்களுக்காக வேண்டி கொட்டியிருப்பே. உப்ப கண்ண மட்டும் தாண்டா எரியுது. இனிமே ஒம் ஒடம்பே எரியப் போவுது" என்று சொன்ன வண்ணம், வீச்சருவாளைப் பக்கத்தில் நின்ற தொழிலாளியிடம் கொடுத்துவிட்டுச்

சிட்டம்மாள் கொண்டு வந்த நூல்கயிற்றையும், கொச்சைக்கயிற்றையும் வாங்கி, தரையில் புரண்டு கொண்டு கிடக்கும் கழுவனின் கால்களையும், கரங்களையும் பிணைத்துக் கட்டத் தொடங்கினார்.

ஊருக்குள் புகுந்து வேட்டையாட வந்த புலியைப் பிடித்துவிட்ட பெருமிதத்துடன் தெருப் பெண்கள் கழுவனைச் சுற்றி நின்று கொண்டிருக்கின்றார்கள். அவனால் அவர்கள் அனுபவித்த இன்னல்கள்,அதன் காரணமாக அவன்பால் அவர்களுக்கு ஏற்பட்ட கோபமும், விரோதமும் அவர்களது நயனங்களில் தென்படுகிறது.

கழுவனைப் பொறுத்த மட்டில், அவன் அவ்வளவு சுலபத்தில் மாட்டிக் கொள்ளமாட்டான். எதையும் சமாளிக்கக் கூடிய மகாக் கில்லாடி என்று பேர் எடுத்தவன். அவனை எதிர்ப்பவர்கள் யாரும் எளிதில் தப்பித்து விட முடியாது. மறுநாளே அவர்கள் கழுவனாலும் அவனது அடியாட்களாலும் வேட்டையாடப் படுவார்கள். மட்டுமல்லாமல், அவன் தோல் ஷாப்பு உடைமையாளர்கள் மற்றும் காவல்துறையின் கைப்பாவையாகவும், செல்லப் பிள்ளையாகவும் இருப்பதால் , யாரும் தன்னை எதிர்க்க முடியாது என்ற இறுமாப்பில் ஊரை வலம் வந்து கொண்டிருந்தவன்.

எனவேதான் தன்னை எதிர்த்துப் பேசிய, அதிலும் கீழ்ச்சாதிக்காரியான சிட்டம்மாளைப் பட்டப் பகலில் சேலையை உறுவி நிர்வாண கோலத்தில் தெருவில் நாயை விரட்டிய மாதிரி ஓடவிட்டு வேடிக்கை பார்த்து அவளைக் கேவலப்படுத்தி ஊனப்படுத்த வேண்டும் என்கிற திட்டத்தோடு, தனது பரிவாரங்களுடன் சனீஸ்வரன் கோவில் காலனிக்கு அந்த மாலைப் போது வந்தான்.

கழுவன் போலீஸாரின் அனுமதியோடு காலனிக்கு வந்த தன்னை யாரும் எதிர்க்கத்துணிய மாட்டார்கள் என்கிற இறுமாப்பில் சிட்டம்மாள் குடிசை முன் வந்து, தூஷணை வார்த்தைகளால் அவளைத் திட்டவும், வெளியே வந்த சிட்டம்மாளைக் கையைப் பிடித்துத் தெருவில் இழுத்துப்

போட முயன்றான். அப்போது, அவனது கண்ணில் காட்டம் மிக்க மிளகாய்ப்பொடி பக்கத்து வீட்டுப் பெண்ணால் தூவப்படும் என்று கழுவன் எதிர் பார்க்கவில்லை.

நயனங்கள் பிடுங்கப்பட்டுப் போனது போன்ற வேதனை, வேதனை தாங்க மாட்டாமல், அலறவும், கூடு கலைக்கப்பட்ட தேனீக்களைப் போன்று அவனைச் சூழ்ந்து கொண்ட தோல் ஷாப்புப் பெண்கள் கழுவனைத் தெருவில் தள்ளி இழுத்துப் போட்டு அவன் உடம்பிலும், முகத்திலும் மிளகாய்ப் பொடிக்கரைசல் தண்ணீரை ஊற்றலாயினர். சிட்டம்மாள் தன்னை அவமானப்படுத்த வந்த கழுவனின் வேட்டியையும் சட்டையையும் கிழித்துக் காறி உமிழவும். தெருவே திரண்டு நின்றது. பயந்து போன கழுவனின் அடியாட்கள் உயிருக்குப் பயந்து சிதறி ஓடிப் போனார்கள்.

சந்தனத்தேவன் கழுவனின் கரங்களையும், கால்களையும் கட்டிப் பிணைத்துப் பிடி பட்ட பன்றியைத் தள்ளிவிடுவது போல நடுவீதிக்குக் கொண்டு வந்தபோது வெள்ளைப் பிள்ளையார்கோவில் டீக்கடை கோவிந்த சாமியும், வேறு சிலபேர்களும் வந்து சேர்ந்தார்கள்.

"கழுவத்தேவரே, சங்கத்துக்காரங்ககிட்டே மோதா தேண்ணு எத்தனை வாட்டி எச்சரிச்சோம். கேட்டையா" என்று ஓசேப்பு கேட்டபோது,

"உனிமே ஒங்க பக்கமே வரமாட்டான் இந்தக் கழுவன். ஒருவாட்டி மாப்புக்குடு சாமி" குரல் நடுங்கச் சொன்னான்.

"பயப்படாதை. ஊர்வலமாக் கொண்டிட்டுப் போய் ஒப்படைக்க வேண்டிய எடத்திலே ஒப்புவிச்சுப் போடுவம்"

இப்படிச் சொன்னவாறே, சின்னப்பன் நீளமான கொச்சைக் கயிற்றால் கழுவனின் கால்களைப்பிணைத்தான்.

"என்ன ஊர்வலம் புறப்படலேங்களா" பந்தாயி கேட்டாள்.

இதற்குள் மீனாட்சி நாயக்கன் பட்டி அய்யாச்சாமியும் அவனது கோஷ்டியும் தப்பும், தாரையுமாக வந்து சேர்ந்தார்கள்.

தோல் ஷாப்புத் தொழிலாளர் ஆண்களும் பெண்களும் முன்னால் நடந்துவர, சந்தனத்தேவன் மற்றும் டீக்கடை கோவிந்தசாமி ஆகியவர் தலைமையில் அய்யாச்சாமி கோஷ்டியாரின் தாரை தப்பட்டை முழக்கத்துடன் ஊர்வலம் நகர்வலம் செல்லப் புறப்பட்டது.

சின்னப்பனும், மற்றவர்களும் கயிற்றால் பிணைக்கப் பட்டுக் கிடந்த கழுவனைக் கொச்சைக் கயிற்றில் இணைத்து செத்தநாயை இழுப்பதுபோல் கப்பிக்கல் பதிக்கப் பட்டிருக்கும் பிரதான ரஸ்தாவுக்கு இழுத்து வந்தார்கள்.

வேதனை தாங்க மாட்டாமல், கழுவன் உயிரே போவது போல் ஓலமிட்டான். கப்பிக்கல்லும், சரளையும், கழுவனின் முதுகுத் தோலைக் கிழித்துச் சதையை மெல்லத் தொடங்கின.

ஊர்வலம் மட்டும் எதையும் பொருட்படுத்தாமல் நகரின் முக்கிய வீதிகளான நான்கு ரதவீதியையும் சுற்றி நகர்வலம் வந்தது. ரௌடி கழுவனது அக்கிரமத்துக்கு ஆளான சிறுகடைக்காரர்கள், தெருக்கடைக்காரர்களும், ஒருராட்சதனை வீழ்த்திவிட்ட ஆசுவாசத்துடன் ஊர்வலத்தில் கலந்து சங்கமித்தனர். ஊரே கூடிநின்று வேடிக்கை பார்த்தது.

கடைசியில், ஊர்வலம் ஊர் மக்கள் புடை சூழ தேர்முட்டி சமீபம் அமைந்திருக்கும் நகரப் போலீஸ் நிலையத்தில் போய் நின்றது.

இதற்குள், சேதி சொல்லிவிடப்பட்டு, தலைவர் இருதயசாமியும் காவல் நிலையம் வந்து சேர்ந்தார். போலீஸ் ஸ்டேஷனை முற்றுகையிட்டது போன்ற கூட்டம்.

கழுவன் நான்கு ரதவீதியிலும் இழுத்துச் செல்வதைக் கேள்விப்பட்ட தேவசகாயம் உடனடியாகக் கழுவனை விடுவித்துச் சம்மந்தப்பட்டவர்களைக் கைது செய்ய வேண்டும் என்று தீச்சட்டிக் கோவிந்தனுக்கும் சப்-இன்ஸ்பெக்டர் ஏசுவடியானுக்கும் உத்தரவு போட்டுவிட்டு உடனடியாக நகரக் காவல் நிலையம் நோக்கி விரைந்தான்

போலீஸ் உயர் அதிகாரியான தேவசகாயத்தின் உத்தரவை நிறைவேற்ற வேண்டிய அதிகாரியான சப்-இன்ஸ்பெக்டர் ஏசுவடியான், கழுவனை இழுத்து வரும் ஊர்வலத்தில் திரண்டு நிற்கும் மக்கள் கூட்டத்தைப் பார்த்து மலைத்துப் போனான். கூட்டத்தில் யாரையாவது கைது செய்ய முற்பட்டால், நிச்சயம் சமாதான பங்கம் ஏற்படலாம் என்கிற விவேகச் சிந்தையோடு, ஊர்வலத்துக்குப் பாதுகாப்புக் கொடுப்பது போல், தனது சிப்பாய்களுடன் ஊர்வலத்துடன் நடந்து போனான். ஓரளவு மனச் சாட்சியுடன் செயல்படும் அதிகாரி ஒரு அக்கிரமிக்கு இப்படி ஒரு தண்டனை கிடைத்திருப்பது நியாயம் என்று உணர்ந்த போதிலும் ஒரு போலீஸ் அதிகாரி என்பதால் அவனால் வெளிப்படையாகப் பேச முடியவில்லை.

இன்ஸ்பெக்டர் தீச்சட்டிக் கோவிந்தன் கோபாவேசத்துடன் நிற்கும் கூட்டத்தைப் பார்த்து மெல்லவும் முடியாமல் சொல்லவும் முடியாமல் நிற்கிறான்.

முகத்தில் கோபக்கனல் பறக்க போலீஸ் நிலையத்துக்கு வந்த தேவசகாயம் இருதயசாமியையும் மற்றவர்களையும் முறைத்துப் பார்த்த வண்ணம் நிலையத்துக்குள் நுழைந்ததும் நுழையாததுமாக,

"இந்த ராஸ்கல்களை ஏன் கைது செய்யாம விட்டு வச்சிருக்கே மிஸ்டர்" என்று தீச்சட்டிக் கோவிந்தனைக் கோபித்துக் கொண்டபோது, தேவசகாயத்தைப் பின் தொடர்ந்து ஸ்டேஷனுக்குள் பிரவேசித்த இருதயசாமி.

"எஸ்.பி. சார் மரியாதை கொடுத்து பேசுங்க. உங்க ஸ்டேஷன்லே கொணர்ந்து போட்டிருக்கோமே ஒங்க செல்லப்பிள்ளை அவன்தான் ராஸ்கல்" என்று சொன்னவர் எதிரில் கிடந்த நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்தார்.

இருதயசாமிக்கு உடல்நலம் சரியில்லாததால், அவர்குரல் சற்றுக் கம்மலாக இருந்தது.

இருதயசாமியின் தன்மான உணர்வு தாக்கப் பட்டிருந்ததால், அவர் தேவசகாயத்தையும் விடத்தானும் கோபம் கொண்டவராகக் காணப்பட்டார். எனவே தன்னுள் மூண்ட கோபத்தை வெளிக்காட்டிக் கொள்ள முடியாமல் தேவசகாயம் நபும்சகத் தனமாக, இருதயசாமியை முறைத்துப பார்த்தவன், இடதுகரத்தால் தான் உட்கார்ந்திருந்த நாற்காலியைத் தட்டிய படியே உட்கார்ந்திருந்தான்.

"சார், நாங்க இந்த அடியாளைப் பிடிச்சு ஒங்க ஸ்டேஷன்லே கொண்டு வந்து போட்டிருக்கோம். நீங்க இங்கே வந்திருக்க எங்கள்ளே யார்மேலே கேசு போடுவதாலும் போடுங்க. யாரை வேணாலும் கைது செய்ங்க நாங்க அதைச் சந்திக்கத் தயார்."

தலையை உயர்த்தி தேவசகாயத்தின் நயனங்களை ஊடுருவி உறுதியுடன் இருதயசாமி சொன்னபோது தேவசகாயம் கலங்கிப் போனான்.

இதற்குள் மற்றவர்களை முந்திக் கொண்டு, தேவசகாயத்தின் முன்னால் வந்து நின்ற சந்தனத்தேவன்,

"வாத்தியாரய்யா, செய்யாத குத்தத்துக்கு நீங்க ஏன் குத்தவாளியாவணும். வழக்குத் தொடுப்பதானா என்மேலே போடச் சொல்லுங்க. வக்காளிய நான்தானே ஊர்வலமா கொண்டு வந்திருக்கேன். கேசு போடறதானா எம்மேலே போடுங்க ஸார் ஜெயில் அல்லாம் எனக்குப் புதுசு கெடையாது அப்போவெல்லாம் அக்குருவ அநியாயம், போக்கிரித் தனம் பண்ணிட்டு செயிலுக்குப் போயிருக்கேன். இப்போ, ஒரு நல்ல காரியம் செஞ்சிட்ட மனதிருப்தியோட சந்தோஷமா ஜெயிலுக்குப் போறதுக்கு நான் தயார்" என்றார்.

அவர்கள் பேசுவதை ஸ்டேஷனின் வடக்குப் பாகத்தில் நிறைந்த வண்ணம் கேட்டுக் கொண்டிருந்த தீச்சட்டிக் கோவிந்தன்

"நீங்க ஏன் அவசரப்படறீங்க? கழுவன் யார் பேரைச் சொல்றானோ, அவங்க பேருலே வழக்குப் போடப்படும்" என்று சொல்லவும் கோவிந்தன் சொல்வதை ஆமோதிப்பது போல் தலையை ஆட்டிய தேவசகாயம்,

"அவனைக் கொண்டாங்க கேக்கலாம்" என்றான்.

கழுவத்தேவனைப் பிணைத்திருந்த கட்டுகள் அகற்றப்பட்டுக் கைத்தாங்கலாக இரண்டு போலீஸார் தாங்கிப்பிடிக்க, அவர்கள் முன் கொண்டு வந்து நிறுத்தப்பட்ட கழுவனிடம் எஸ்.பி.தேவசகாயம்,

"உன்னை யார் அடிச்சது. உன்னை யார் தாக்கியது" என்று கேட்டபோது கழுவன் வாய்பேசாமல் தரையை உற்றுப் பார்த்த படியே மௌனமாக நின்றிருந்தான்.

"எஜமான் கேட்கிறார் இல்லையா. யார் எவன் தாக்கினாங்க, காயப்படுத்தினாங்கண்ணு சொல்ல வேண்டியது தானே. சொல்லுடா" இன்ஸ்பெக்டர் கோவிந்தன் சற்று அதட்டலாகச் சொன்னான்.

"யார் எவரிண்ணு சொல்ல முடியும் சாமி வந்தவன், போனவன் எல்லாம் அடிச்சான் ஆம்பிளை பொம்பிளை அம்புட்டும் அடிச்சது என்னையத் தாக்கியிருக்கான் கண்ணே அவிஞ்சு போச்சுது" என்று ஈனஸ்வரத்தில சொல்லவும்,

"ஏண்டா முட்டாள் அடையாளம் சொல்ல முடியாதா என்ன" தேவசகாயம் கோபமாகப் பேசினான்.

"ஆரோ, பொட்டச்சி எங்கண்லே மொளகாப் பொடிய வீசி எறிஞ்சு எங்கண்ணைக் குருடாக்கிப் போட்டாள். ஆரை நான் அடையாளம் கண்டேன் அடையாளம் காட்ட" என்று திக்கித்திக்கி மிகவும் சிரமப்பட்டுச் சொன்னவன், கரங்களைக் குவித்து, தேவசகாயத்தையும், கோவிந்தனையும் பார்த்துக் கும்பிட்டவன்

"என்ன உட்டுருங்க சாமி, இந்தச் சங்காத்தமே வாணாம். நா உசிர் பொழைச்சாப் போதும்" என்று கெஞ்சவும்.

எஸ்.பி. தேவசகாயத்துக்குச் சண்டாளமாகக் கோபம் வந்தது.

"தூ. தூத்தேரி, உசிருக்கப் பயந்த நாயி" எழுந்து நின்று காறி உமிழ்ந்து இடது பூட்ஸ் காலை ஓங்கி மிதித்துத் தனது ஏலாமையையும், கோபத்தையும் வெளிக்காட்டிக் கொண்டு

"ஆக்ஸிடென்ட்ண்ணு சொல்லி இந்தப் பேமானிய ஆஸ்பத்திரியிலே கொண்டு தள்ளுங்க" என்று கோபமாகச் சொல்லிவிட்டு ஸ்டேஷனைவிட்டு வெளியேறிப் போனான்.

அரசு மருத்துவமனையில் கழுவத்தேவனைப் பரிசீலித்த டாக்டர் கழுவனின் முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்பட்டு கால்கள் இரண்டும் செயலிழந்து போனதாக அறிவித்தார்.

அந்தச் சம்பவத்துக்குப் பிறகு, எந்த ஒரு அடியாளும், தோல் ஷாப்புத் தொழிலாளர்கள் குடியிருப்புப் பகுதியில் தலை காட்டுவதில்லை.

8

தேசம் பூராவும் கோரமான உணவு நெருக்கடி.

டில்லி தலைநகரிலும், மாகாணத் தலைநகரில் இருந்தும் வெளியாகும் ஆங்கில மற்றும் பிரதேச மொழிப் பத்திரிக்கை எல்லாம் உணவு நெருக்கடி, பெரும் பஞ்சத்தை ஏற்படுத்தும் என்று எச்சரிக்கை விடும் வகையில், தலையங்கங்களும், செய்திகளும், வெளியிட்ட வண்ணம் இருந்தபோதும், மத்திய மாகாண அரசுகள் கேளாச் செவியர்களாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தன.

பதுக்கல்காரர்களுக்கும், கள்ள மார்க்கெட் காரர்களுக்கும் இந்த உணவுப் பற்றாக்குறையும், பண நெருக்கடியும், நாட்டை அவர்களது வேட்டைக் காடாக்குவதற்கு, வாய்ப்பும் வசதியும் அளித்து விட்டிருந்தன.

பெருத்த நிலச்சுவான்தார்களும், ரைஸ்மில் உடைமைதாரர்களும், கள்ளமார்க்கெட் காரர்களும், தானியத்தைப் பதுக்கி வைத்துக் கொள்ளை லாபத்துக்கு விற்றுப் பணமாக்கிக் கொண்டிருந்தனர். அரசாங்கக் கிட்டங்கிகளோ மலடியின் வயற்றைப்போன்று வெறுமையாய், பாழாய்க் கிடந்தன. உணவுப் பொருட்களும் அத்யாவசியப் பண்டங்களும், கொள்முதல் மற்றும் விநியோகம் ஆகியவற்றைக் கவனிக்கும் பொறுப்பளிக்கப் பட்ட உணவுக் கமிட்டிகள் கூட்டுறவு சொசைட்டிகள் ஆகியவற்றில், சுயநலமிகள் மற்றும், கொள்ளைக்காரர்கள் ஆதிக்கத்தில் இருந்ததோடு, அதிகாரிகளும், லஞ்ச லாவண்யத்தில் ஊறித் திளைத்தவர்களாக இருந்ததால், மிராசுதாரர்களும், பதுக்கல்காரர்களும் பெரும் ரைஸ்மில் உடைமையாளர்களும், அவர்கள் இஸ்டம்போல் விளைந்த

தானியத்தைப் பதுக்கி வைப்பதற்கும் கள்ள மார்க்கெட் லேவாதேவி நடத்துவதற்கும் மிகவும் வாய்ப்பாகவும் வசதியகாவும் இருந்தது. குஷ்டரோகி பட்டுப் பீதாம்பரம் போர்த்தி தன் நோயை மறைத்துக் கொள்வதுபோல், இந்த லேவாதேவிக்காரர்கள், மந்திரிப்பிரதானியருக்கும் அரசு உயர் அதிகாரிகளுக்கும் வரவேற்பு விருந்து வைபோகம் என்கிற மாய்மாலம் காட்டி அவர்களை மாலைக் கண்ணர்களாகவும் குருடர்களாகவும் ஆக்கத் தயங்கியதில்லை.

கிஸான் அமைப்புக்களும் தொழிற்சங்கங்களும், திராவிடக் கட்சிக்காரர்களும், லீக்கர்களும், தாழ்த்தப்பட்ட சம்மேளனத்தாரும், வெகுஜன அமைப்புக்களும் கள்ள மார்க்கெட் பதுக்கலை அம்பலப்படுத்தி, பதுக்கப்பட்ட தானியத்தை வெளிக் கொணர்ந்து பசியாலும், பட்டினியாலும் துடிக்கும் மக்களுக்கு விநியோகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்று அரசை வேண்டி தினம் தினம் வேண்டுகோளும் அறிக்கையும் வெளியிட்ட வண்ணமிருந்தனர்.

கிராமங்களில் மருந்துக்குக் கூட அரிசியும் நவதானியமும் கிடைக்காமல் அற்றுப் போய்விட்டதால் உள்ளது உரியது, பண்ட பாத்திரம் அனைத்தையும் அடமானம் வைத்து, விற்று மக்கள் பஞ்சம் பிழைப்பதற்காகக் குடும்பம் குடும்பமாக வேற்று நாடு தேடிப்புறப்பட்டும் போனார்கள். எமனை எதிர்நோக்கிக் காத்திருக்கும் நடமாட முடியாத கிழடு கட்டைகள் மட்டுமே கிராமங்களுக்குக் காவலாக விடப்பட்டிருந்தனர்.

உணவுப் பஞ்சமும், பண நெருக்கடியும் தனது கொடிய கரங்களை ஆக்டப்பஸைப் போன்று அந்த நகரத்தையே சுற்றிவளைத்துப் பிடிக்கத் தொடங்கியிருந்தது.

ஒரு காலத்தில் இரவு பகலாகச் சந்தைக் கூச்சலாக இருக்கும் சௌராஷ்டிராபுரத்திலும், நாகல் நகரிலும், சின்னாளபட்டியிலும் இயங்கிக் கிடந்த கைத்தறிகள் மௌனமாகிப் போயின. பம்பாய் மாநகரத்துக்கும் சௌராஷ்டிரபுரத்துக்கும், வடமாகாணங்களுக்கும் அனுப்பப்பட வேண்டிய கைத்தறி உடைகள் மாஸ்டர்

வீவர்களின் கிட்டங்கிகளில் தேங்கிக் கிடக்கின்றன இரவு பகலாகத் திருவிழாக் கோலம் கொண்டிருக்கும் நாகல் நகரம் பேச்சு மூச்சற்று அடங்கிப் போய்க் கிடக்கிறது. கைத்தறித் தொழிலாளர்கள், கைத்தறிகளை விறகுக்கடைகளுக்கு, அடிமாட்டு விலைக்கு விற்றுவிட்டு வடநாடு நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள். உழைத்துப் பிழைக்கும் மக்கள் நகரத்தைக் காலி செய்து கொண்டு போன போது, அவர்களை நம்பி வாழ்க்கை நடத்திய நாணயமான நடுத்தர வியாபாரியான செல்ல மரைக்காயரின் தொழிலும் படுத்து அவர் பாதிப்புக்குள்ளானார்.

செல்ல மரைக்காயர் மனச்சாட்சி மிக்க வியாபாரி. பக்தி விசுவாசம் கொண்ட முஸல்மான். எது எப்படிப் போனாலும், ஐந்து வேளை அவர் நடத்தும் தொழுகையை மட்டும் நிறுத்த மாட்டார். நோன்பு நாட்களில் அவர் இருக்கும் உபவாசம். மிகவும் கடுமையாக இருக்கும். பொழுது விழுந்து கைரேகை மங்கி இருள் மண்டும் வரையில் எச்சிலைக் கூட விழுங்க மாட்டார். மார்க்கத்தின் சட்ட திட்டங்களை அவ்வளவு துல்லியமாகக் கடைப்பிடிக்கும் முஸல்மான். செல்ல மரைக்காயருக்கு, குரான் வசனங்களும், குணங்குடி மஸ்தான் பாடல்களும் மனப்பாடம்.

செல்ல மரைக்காயர், ஒழுக்கமும், நியாய உணர்வும் கொண்ட வியாபாரி, ஏனைய வியாபாரிகளைப் போன்று தனது லாபத்தையும் செல்வத்தையும் அநியாயமாகப் பெருக்கிக் கொள்ள விரும்பாத மனிதன். எந்த ஒரு பொருளுக்கும் நியாயமான விலைக்கு மேல் சல்லிக்காசு கூட அதிகமாக விலை வைத்து விற்க மாட்டார். மஸ்தான் தெருவில் இருக்கும். அவரது கடையில் எந்தப் பொருளையும் நம்பி வாங்கலாம். கலப்பட மில்லாமல் நியாயவிலையில் பொருட்கள் விற்கப்படும்.

"என்னபாய் ஒரு வியாபாரியான நீங்க வியாபாரி மாதிரி நடந்துக்க மாட்றீங்களே கட்டுப்படியாவாதே" என்று சக வியாபாரிகளோ அல்லது நண்பர்களோ கேட்டுவிட்டால் போதும், தனது தலையில் மாட்டியிருக்கும் துருக்கித் தொப்பியை அவிழ்த்து இடது கையில் வைத்துக் கொண்டு

தோளில் கிடக்கும் டர்க்கிஸ் தூவாலையால் முகத்து வியர்வையைத் துடைத்துக்கொண்டு

"இன்ஸால் அல்லா, ஏழைங்க வவுத்துலே அடிக்க நான் பிரியப்படலை. அப்படி ஒரு பாவத்தை செய்றதுக்கு அத்தா எம்மனசு ஒப்பலை. இஸ்லாத்துலே என்ன சொல்லி யிருக்குதோ அதுக்கு ஏத்தாப் போலதான் நாம நடந்துக்கணம். அப்படி மாறாக நாம ஏதாச்சும் செஞ்சமிண்டா அல்லா நம்மளை மன்னிக்க மாட்டான். ஆண்டவன் அளக்கிற படி நமக்குப் போதும்" என்று சொல்லிவிட்டுத் தன்னிடம் பேச்சுக் கொடுத்தவரின் முகத்தை உற்றுப்பார்ப்பார்.

"அல்லா நமக்கு எம்புட்டோ குடுத்திருக்கான். இல்லையா பாய். அல்லாவின் கருணை இல்லையெண்டால், ஒரு லாடங்கட்டியோட புள்ளாண்டன் இந்த ஒசரத்துக்கு வந்திருக்க மாட்டான். இன்ஸால் அல்லா" என்று மறுபடியும் தனது பூர்வீகத்தை நினைவு கூர்ந்த வண்ணம் தனது கடையை நோக்கி நடந்து போவார்.

பண்டிகை நாட்களில் குடும்பத்துக்கு என்று கிடாய் வெட்டப்படும். அப்படி வெட்டப் படும் கிடாயின் மாமிசம், வேதத்தின் ஆக்ஞைப்படி அன்றையப் பொழுது குடும்பத்துக்கும் விருந்துக்குமான மாமிசம் போக, மிச்சம் அனைத்தும் அருகில் உள்ள ஏழை எளிய மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும். அப்போதெல்லாம் தனது பள்ளித் தோழனும் பால்யகால நண்பனுமான இருதயசாமி குடும்பத்துக்கு பிரியாணியும் பீரணியும் போய்ச் சேர்ந்துவிடும்.

செல்ல மரைக்காயர் குடும்பம் மகமதியாபுரத்தில் வசிக்கும் முஸல்மான்கள் குடும்பங்களில், மிகவும் பழமையான குடும்பமாகும். திப்புசுல்தானும் அவனது பட்டாளமும் அந்த நகருக்கு வந்தபோது செல்ல மரைக்காயர் குடும்பமும் அந்த ஊருக்கு வந்து சேர்ந்து விட்டது. திப்புசுல்தான் குதிரைப்படையைச் சேர்ந்த குதிரைகளுக்கு

லாடம் அடிப்பதற்கும், சேணம் தயாரிப்பதற்காகவும் வேண்டிச் செல்லமரைக்காயரின் மூதாதையர்கள் இந்த நகரத்துக்குக் கொண்டுவரப்பட்டனர்.

காலனி ஆட்சி ஏற்பட்டு வெள்ளைக்காரனது ஆட்சி ஏற்பட்ட போது, அவனது குதிரைப்படையைச் சேர்ந்த உயர்ரகக் குதிரைகளும், பந்தயக் குதிரைகளும், பம்பாயிலிருந்தும், பெங்களூர், ஊட்டி ஆகிய இடங்களில் இருந்ததெல்லாம் கொண்டு, வரப்படும். குதிரைகளுக்கு லாடம் கட்டி விடுபவர்கள் செல்ல மரைக்காயர் மூதாதையர் தான்.

வெள்ளைக்காரன் ஆட்சி போனதற்குப் பிறகு மரைக்காயரின் வாப்பா பீர் மகமது காலத்தில், நகரத்து ஜட்கா வண்டியிழுக்கும் குதிரைகளுக்கும், சிறுமலையிலும், பன்றி மலையிலும் பொதி சுமக்கும் மட்டக் குதிரைகளுக்கும் லாடம் அடிக்கும் தொழிலாக அருகிப் போனபோதும் தன் மகனும் வறுமையில் வாடக்கூடாது என்கிற தூரப்பார்வையுடன் பீர் மகமது ராவுத்தர் கடன் உடனை வாங்கிச் செல்ல மரைக்காயருக்கு இந்தச் சின்னஞ்சிறிய பல சரக்குக் கடையை ஆரம்பித்துக் கொடுத்தார்.

செல்ல மரைக்காயர் வாழ்க்கை கஷ்ட ஜீவனம் என்ற போதிலும் நாணயம் குறையாத வியாபாரி என்பதாலும், அவரது தொழிற் சுத்தம் காரணமாகவும் பலசரக்கு வியாபாரம் சுணக்கம் இல்லாமல் நடந்து கொண்டிருந்தது. நகரத்தில் உள்ள பெரும்பாலான உழைக்கும் மக்கள் குறிப்பாக, தோல் ஷாப்புத் தொழிலாளர்கள் மற்றும் கைத்தறி நெசவாளர்கள் ஆகியவர்களை நம்பியே செல்ல மரைக்காயரது வியாபாரம் நடைபெற்றுக் கொண்டிருந்தது மட்டுமல்லாமல் மாதக் கணக்கில் கடன் கொடுத்து அவர்களது சம்பளத்தை அனுசரித்துக் கடனை வசூல் செய்து கொள்வார். கருணை உள்ள முஸ்லிமான என்பதால், ஏழை பாழைகளிடம் வசூலில் கூட கடுமையாக நடந்து கொள்வது கிடையாது.

செல்ல மரைக்காயர் குடும்பம் மார்க்கத்தின் விதிகளை

அனுஷ்டிக்கும் இஸ்லாமியக் குடும்பம் என்பதால் வீட்டில் பர்தா அனுஷ்டிக்கப்பட்டதால், பெண் பிள்ளைகள் இரண்டு பேரையும், ஐந்தாம் வகுப்புக்குமேல் படிக்க அனுப்பவில்லை. செல்ல மரைக்காயர், எல்லோரும் உழைத்துச் சாப்பிட வேண்டும் என்கிற கொள்கை உடையவர் என்பதால் செல்ல மரைக்காயர் வீட்டுப் பெண்கள் முடையும் பாயானது திருநெல்வேலி ஜில்லா பத்த மடைப் பாயைவிடச் சிறந்தது என்று பிரபலம். அவர்கள் முடையும் பாயை வாங்கிச் செல்வதற்கு என்று நிரந்தர வாடிக்கையாளர்கள் உண்டு.

சௌராஷ்டிரபுரம் கைத்தறித் தொழில் படுத்து விட்டதும், தோல் ஷாப்புத் தொழிலாளர் வேலை நிறுத்தமும், நாட்டில் உருவாக்கிவிடப்பட்ட செயற்கையான பொருளாதார நெருக்கடி காரணமாகவும் செல்ல மரைக்காயரின் பலசரக்கு வியாபாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுப் போயிற்று. அன்றாட ஜீவனத்துக்கே அல்லாடும் ஏழை எளிய மக்கள் படும் அவஸ்தையைப் பார்த்த போது செல்ல மரைக்காயரால் அவர்களிடம் கடுமையாக நடந்து கொள்ள முடியவில்லை.

ஊரில் அரிதாகிப் போய், கள்ள மார்க்கெட்டில் ஆனைவிலை குதிரைவிலை விற்கும் அரிசி, செல்ல மரைக்காயர் குடும்பத்துக்கு அபூர்வப் பொருளாக மாறிப் போய்விட்டது. மனைவியும், பிள்ளைகளும் முடையும் பாயை விற்ற காசில், குதிரைக்குப் போடும் கொள்ளை வாங்கித்தான் குடும்பம் நடத்த வேண்டிய நிலைமைக்கு அவரது குடும்பம் தள்ளப்பட்டுப் போயிற்று.

தன்மானம் மிக்க செல்லமரைக்காயர் தனது குடும்பத்தின் கஷ்ட திசையையும் ஜீவனத்தையும் வெளியில் சொல்ல முடியாமல் பசித்த வயற்றுக்கு மேல் ஈரத்துணியைப் போட்டுப் பசியை ஆற்றும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார்.

ஆனால் ஒரு நாளைக்கு இந்த வாழ்வும் கட்டறுந்து போய்விடும் என்று செல்ல மரைக்காயர் கருதவில்லை.

9

அன்று கல்லறைத் திருநாள்

கிறிஸ்தவப் பெருமக்கள், கர்த்தருக்குள் ஐக்கியமாகிப் போன மாண்ட தங்களது உறவினர்களையும், மூதாதையர்களையும் நினைவு கூறும் பரிசுத்த நாள்.

ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட அந்த நகரத்துக் கத்தோலிக்கக் கிறிஸ்தவ மக்களுக்கான கல்லறைத் தோட்டம், அவர்களைப் போலவே ஊருக்கு வெளியே ஒதுக்குப் புறமாக வெளியூர் போகும் ரஸ்தாவுக்கு மேற்குப்புறமாக அந்தோணியர் சேரிக்கு அருகாமையில் பாழடைந்து கிடக்கிறது.

இடுகாட்டை ஒட்டி, அரசாங்கப் புறம் போக்கில், அம்மக்களுக்கான தேவாலயத்தைக் கத்தோலிக்க மதபீடம் கட்டிப் பாழடைய விட்டிருக்கிறது. தேவாலயம், நூறாயிற்றுக்கிழமைகளிலும் கஸ்தி நாட்களிலும், கிறிஸ்துமஸ், ஈஸ்டர் திருநாட்களிலும் விசேஷமாகத் திறக்கப்பட்டு மணியடிக்கப்படும் பங்குச் சாமியார் வந்து, தனது திருக்கரங்களை ஆகாயத்தை நோக்கி விரித்து நின்று "பாவிகளே மனம் திரும்புங்கள் பரலோக ராஜ்யம் உங்களுக்காகக் காத்திருக்கிறது" என்று அந்தப் பாவப்பட்ட மக்களுக்காக ஆண்டவனிடம் மன்றாடிப் பரிந்து பேசி ஜெபத்தை முடித்துக் கொண்டு போனபின் கோவில்

பிள்ளையால் தேவாலயம் மறு ஞாயிற்றுக் கிழமை வரை மூடப்பட்டிருக்கும். அந்த அப்பாவி மக்களும் அடுத்த ஞாயிற்றுக்கிழமை வரையில் தேவாலயத்தையும் திருக்குமாரனையும் மறந்து யந்திரங்களாகத் தங்கள் வேலையில் மூழ்கிப் போய்விடுவார்கள்.

எவ்வளவுதான் ஏழைகளாக இருந்த போதும், நீத்தார் நினைவு நாளை அவர்களால் எப்படிக் கொண்டாடாமல் இருக்க முடியும். தோல் ஷாப்புக்களில் வேலை செய்யும் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் எவ்வளவு வறுமையின் பிடியில் இருந்த போதும் கல்லறைத் திருநாளைக் கொண்டாடாமல் இருந்தது கிடையாது. அப்படி நீத்தார் நினைவு நாளை மறப்பது என்பது அவர்கள் தங்களையே மறந்து போனதற்கு ஒப்பான பாவமாகவே கருதலானார்கள்.

அந்த வருடம், தோல் பதனிடும் தொழிலாளர் சங்கம் பஞ்சப்படி சம்பள உயர்வு கேட்டும் போனஸ் கோரிக்கை வைத்தும், தோல் ஷாப்பு முதலாளிகள் ஒத்து வராததால் கடந்த மூன்று மாதகாலமாக வேலை நிறுத்தம் என்கிற யக்ஞத்தின் சிரமத்தை அம்மக்கள் ஏற்றுக் கொண்டதால், பசி பட்டினி என்பதோடு, முதலாளிகளின் அடியாட்களின் இன்னல்களையும் அந்த மக்கள் ஏற்க வேண்டியதாயிற்று. இந்தக் கொடுமையிலும் அவர்கள் மரித்துப் போன உறவினர்களையும் மூதாதையர்களையும் அவர்கள் மரித்த தினத்தைக் கொண்டாடுவதற்குமான செலவினத்திற்காக நாளா வட்டத்தில் சிறுகச் சிறுகச் சேமித்துக் கொண்டு வந்திருக்கின்றனர். என்னதான் வறுமையில் உழன்ற போதும், ஆண்டவனின் பாதார விந்தங்களை அடைந்து விட்ட பரிசுத்த ஆவிகளுக்குச் செய்ய வேண்டிய சடங்கையும் மரியாதையையும் செய்யாமலிருப்பது பரிசுத்த ஆவிக்கு எதிராகச் செய்யும் பாவச்செயல் என்பது அம்மக்களிடை பரம்பரை பரம்பரையாக நிலவிவரும் நம்பிக்கை. எனவே ஒவ்வொரு கத்தோலிக்கக் குடும்பமும் நீத்தார் தினமான கல்லறைத் திருநாளைத் திருச்சபையின் ஆச்சாரப்படிக் கொண்டாடுவதைப் பிறவிக் கடனாகச் சிரமேற் கொண்டிருந்தனர்.

தோல் ஷாப்புக்களில் வேலை நிறுத்தம் ஏற்பட்டிருந்ததன் காரணமாகக் கல்லறைத் திருநாளைக் கொண்டாடுவதற்காக வேண்டிய, தோல் ஷாப்பு உடைமைகளிடம் விடுமுறை கேட்க வேண்டிய அவசிய அவசரம் இல்லாமல் போயிற்று.

தேவனுள் ஐக்கியமாகிப் போனவர்களைச் சேவிப்பதற்காக வேண்டி ஒவ்வொரு கிறிஸ்தவக் குடும்ப அங்கத்தினரும், வெகுகாலையிலேயே எழுந்து குளித்து அடுக்குப் பானைகளிலும் மரப்பெட்டிகளிலும் பத்திரப்படுத்தி வைத்திருக்கும் ஆடைகளை எடுத்து உதறி உடுத்திக் கொண்டு, உபவாசம் இருந்து ஊருக்கு ஒதுக்குப் புறமாக இருக்கும் கல்லறைத் தோட்டங்களுக்குத் தங்கள் மூதாதையர்களும் உறவினர்களும் புதைக்கப் பட்டிருக்கும் கல்லறைகளை நோக்கிப் போனார்கள்.

முந்தைய ஆண்டு திருநாளுக்குப் பிறகு ஓராண்டு காலமாக மறக்கப்பட்டு, வெயிலிலும், மழையிலும் காற்றிலும் கரைந்து போய், புல் பூண்டுகள் முளைத்துக் காடாய்க்கிடக்கும் புதைக்குழிகளின் மேல் மண்டிக் கிடக்கும் காட்டுச் செடிகள் அகற்றிச் சுத்தப்படுத்தப்படும். மக்கிச் சிதைந்து போன நிலையில் காணப்படும் சிலுவைக் குச்சிகள் அகற்றப்பட்டு புதுச் சிலுவைக் குச்சிகள் புதைகுழிகளில் நாட்டப்பட்டுப் புதைகுழிகள் புதுப்பிக்கப்படும். குடும்பங்களின் செல்வம், அந்தஸ்துக்கு ஏற்ப கல்லறைகள், மலர்களாலும், மாலைகளாலும் மலர்ச் செண்டுகளாலும், அலங்கரிக்கப்படும். பிறகு, அவர்கள் மாண்ட உறவினர்களையும், மூதாதையர்களையும் நினைத்துத் துக்கித்து நிற்பார்கள். மாலையில், மாலை மயங்கும் வேளையில் தேவாலயத்தில் நீத்தாருக்கான ஜெபமும் பூசையும் நடைபெறும்.

ஆனால் அந்த ஆண்டு, பரிசுத்த தேவாலயத்தில் பூசை நடைபெறுவது என்பது சந்தேகத்துக்குரிய ஒன்றாக இருந்தது. ஏனெனில் கத்தோலிக்க மதபீடம், அம்மக்களைப் பற்றி அப்படி ஒரு முடிவை மேற்கொண்டிருந்தது.

தோல் ஷாப்புத் தொழிற்சங்கத் தலைவர்கள் அஞ்ஞானிகள், சைத்தானின் பிள்ளைகள் என்றும், பிதா, குமாரன், பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பாவக்கிரியைகள் செய்பவர்கள் என்று குருபீடம் பிரகடனப் படுத்தியிருந்தது.

எனவே, தோல் ஷாப்புத் தொழிற் சங்கத்துக்குச் சந்தா கொடுக்கும் கத்தோலிக்கக் கிறிஸ்தவன் "மஸ்வாதி" என்று அவனுக்கு நன்மை பரிமாறுவதையும், பாவமன்னிப்புத் தருவதையும் குருபீடம் நிறுத்திக் கொண்டு விட்டது. சங்க உறுப்பினரான கிறிஸ்தவர்கள் தேவாலயத்தின் சகல சடங்குகளினின்றும் திரஸ்காரம் செய்யப்பட்டிருந்தனர். சங்க உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தவர்களுக்கு மட்டிலும் நன்மை இதரச் சடங்குகளிலும் பங்கு பெறும் உரிமை உண்டு, என்று சாமியார் திட்டவட்டமாக அறிவித்திருந்தார். வாட்டிகன் மகா குருபீடத்தின் நடவடிக்கை இவ்வளவு கடுமையானதாக இருக்கும் என்றும் அதன் ஆக்ஞை அவ்வளவு கொடூரமாக இருக்கும் என்றும் அந்த அப்பாவி மக்கள் எண்ணவில்லை.

தங்களுக்குத் திருச்சபை வழங்கியிருக்கும் தண்டனையைப் பற்றி அவர்கள் பெரிதும் கவலைப் படவில்லை என்ற போதும் தேவனுக்குள் ஐக்கியமாகிப் போன தங்களது மூதாதையர்களையும் உறவினர்களையும், அவர்களது பரிசுத்த ஆவியையும் எப்படித்தவிக்க வைக்க முடியும் என்று ஒவ்வொரு குடும்பமும் மிகவும் கவலைப்பட்டது.

அமலோற்புதமும், மரியாளும், சந்தன மேரியும் மற்றும் மாதர் அமைப்பினைச் சேர்ந்த தோல் ஷாப்பு கிறிஸ்தவப் பெண்கள் கடந்த ஒரு வார காலமாக, திருச்சபையால் பிரகடனப் படுத்தப் பட்ட முடிவைக் கவலையோடு தலைவர் இருதயசாமியிடம் கேட்டு நச்சரித்த தோடு, எப்படியாவது பங்குச் சாமியாரையும், குரு மகா சந்நிதானத்தையும் பார்த்துப் பேசி, நீத்தார் தினத்தன்று மரித்தவர்களுக்கான வேண்டுதலும், பூசையும் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தனர். ஆனால் ஆண்களும், பெண்களும் அவரைக் கேட்கும் போதெல்லாம் "பூசை நடக்கும்" என்று மட்டும் சொல்லிவிட்டு மறுவார்த்தை பேசாமல் அப்பால் போய்விடுவார்

நீத்தாருக்கான ஜெபம் நிச்சயம் நடைபெறும் என்று உறுதியளித்த தலைவர் இருதயசாமி காலை முதலே கல்லறைத் தோட்டத்துக்கு வராதது, அவர்களுக்கு ஏமாற்றம் தருவதாக இருந்தது. ஏசுவடியாளின் கல்லறையையும் ஆசீர்வாதத்தின் கல்லறையையும், சுத்தம் செய்து சாணியால் மெழுகிச் சுத்தம் செய்து சிலுவையும் நட்ட தாயம்மாளுக்கும் ஓசேப்பு சொன்னதில் நம்பிக்கை பிறக்கவில்லை. ஆனால், ஓசேப்பும் சங்கத்தின் முக்கிய ஊழியர்களில் சிலபேர்களும், குட்டி போட்ட பூனையாகக் குடியிருப்புக்களுக்கும் கல்லறைத் தோட்டத்துக்குமாகப் போய்வந்து கொண்டிருந்தனர்.

மத்தியானம் கடந்து சூரியன் மலையில் விழுந்து கொண்டிருந்தது. பெண்களும், வயோதிகர்களும், காலையில் இருந்து பட்டினி, சீக்கிரத்தில் உபவாசத்தை முடித்துக் கொள்ள வேண்டியிக்கிறது. நம்பிக்கை இழந்து போன தோல் ஷாப்புப் பெண்கள் கூடி நின்று ஒருவரோடு ஒருவர் நம்பிக்கை இழந்து மனம் கசந்த பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டனர்.

அப்போது கொல்கதாக் குன்றின் கல்லறையினின்றும் உயிர்த்தெழுந்து ஏசுபிரானைப் போன்று, வேதபோதகருக்குரிய பரிசுத்த அங்கியும், கையில் பைபிளுமாக சகோதரர் தங்கசாமி, தலைவர் இருதயசாமி சகிதம் கல்லறைத் தோட்டத்துக்கு வந்து சேர்ந்தார். இவ்வளவு காலம் தலைமறைவாகிப் போன தங்கசாமி, ஒரு மதகுருவாக வந்து நிற்பதைக் கண்டதும், கல்லறைத் தோட்டத்தில் நிரம்பி நின்ற ஆண்களும், பெண்களும் ஆச்சரியப்பட்டுப் போனார்கள். அவருக்குப் பக்கத் துணையும் பாதுகாவலுமாக, வாலிபர்களான தோல் ஷாப்புத் தொழிலாளர்கள் திரண்டு நிற்கின்றனர்.

தேவனுள் ஐக்கியமானவர்களுக்காக முழந்தாழில் நின்று ஜெபம் செய்த பிரதர் தங்கசாமி பரிசுத்த வேதாகமத்தைத் திறந்து புதிய ஏற்பாட்டில் மத்தேயு இருபத்தி ஏழாம் வசனத்தை அவர்கள் மத்தியில் உரக்கப் படித்தார்

"ஐயோ! மாயக்காரர்களாகிய வேத பாரகர்களே. பரிசேயரே, வெள்ளையடித்த கல்லறைக்கு ஒப்பா

யிருக்கிறீர்கள். அவைகள் புறமே அலங்காரமாக காணப்படும். உள்ளேயோ மாயத்தினாலும், அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள்" என்ற ஏசுபெருமானின் பிரசங்க வசனங்களை மிகவும் விசனத்துடன் வாசித்துக் காட்டினார்.

பிறகு, ஏசுநாதர் ஒப்பிட்டுக் காட்டிய வேதபாரகர்களுக்கும், பரிசேயர்களுக்கும் ஒப்பாகிப் போன அப்போதைய குருபீடத்தையும் அதன் நடவடிக்கையையும், சபையின் போலி வேஷத்தையும் அம்பலப் படுத்தலானார்.

தொடர்ந்து, சங்கீதக்காரனின் புஸ்தகத்தில் காணப்படும் பாடலை "கர்த்தரே, நீர்தான் எங்களுக்கு ஆதரவு, எங்கள் கடவுளே எங்களை ரட்சித்தருளும், எங்கள் பகைவர்களைத் தேவரீர் தாடையில் அடித்துப் போடுகிறீர். பொல்லாதவர்களின் பற்களைத் தகர்த்துப் போடும் தேவரீருடைய ஆசீர்வாதம் உமது ஜனங்களாகிய இவர்கள் மீது இருக்கக் கடவதாக" என்று பாடி, பிதா, சுதன், இஸ்பிரித்துச் சாந்து என்று மந்திரமாகச் சொல்லி கரங்களை விரித்துக் கண்ணை மூடி, தியானத்தில் நின்று, ஆமென் சொல்லவும் அவர்களும் மறுமொழியாக ஆமென் சொன்னபோது வெகு தொலைவினின்றும்

"போலீஸ் வருதுப் போய்" என்று அசரீரியாக ஒருவன் எச்சரிக்கை செய்யவும் பிரதர் தங்கசாமியின் முன்னால் ஒளிவீசிக் கொண்டிருந்த பெட்ரோமாக்ஸ் விளக்கு திடீரென்று அணைக்கப்பட்டது.

தங்கசாமி ஆவியைப் போன்று கூட்டத்தினின்றும் மறைந்து போனார்.

போலீஸ் வண்டி மட்டும் ஆரவாரத்துடன் கல்லறைத் தோட்டத்தை நோக்கி வந்து கொண்டிருந்தது கல்லறைத் திருநாள் தடங்கலின்றி நடைபெற்றதில் அம்மக்களுக்கு மகிழ்ச்சி.

10

வெண்கலக் கடைக்குள் புகுந்த மதம் கொண்ட யானையைப் போன்று கல்லறைத் தோட்டத்துக்கு நுழைந்த இன்ஸ்பெக்டர் தீச்சட்டிக் கோவிந்தன்

"அப்படியே நில்லுங்க ஆரும் நவரக் கூடாது, நகர்ந்தா சுட்டுப்பொசுக்கிப் போடுவன்" என்று புதைக்குழிகளுக்கு முன்னால் நின்றவர்களைப் பார்த்துக் கத்தினான்.

"அவன் எங்கே சாமியார் பய தங்கசாமிய எங்கே ஒழிச்சு வச்சிருக்கிய" என்று கேட்டபடியே அவனும், அவனோடு வேனில் வந்த போலீஸ் ஜவான்களும், கல்லறைத் தோட்டத்தில் மோப்பம் பிடிக்கும் வேட்டை நாய்களாகத் தங்கசாமியைத் தேடித்தேடி அலைந்தனர்.

"எங்கேடா ஒளிச்சு வச்சிருக்கிங்க கொறை முண்டங்களா" என்று திரும்பவும் தீச்சட்டிக் கோவிந்தன் அதிகாரத் தோரணையில் பெண்களைப் பார்த்துக் கத்தவும்

"இந்தாய்யா மருவாதையாப் பேசு, இல்லேண்டா எகிறிப்போகும்" என்று யாரோ ஒரு பெண் ரோஷமாகக் கூச்சல் போட்டாள்

"ஆமா நாங்க பிரதர் தங்கசாமிய எங்க கொசுவத்துக்குள்றே ஒளிச்சு வச்சிருக்கம். அங்க வந்து தேடிக் கண்டுபிடிய்யா. போக்கும் போவலுமத்து வந்திட்டானுவ பாரு" வேறு ஒரு பெண் சொன்னாள்

போலீஸ் அநியாயத்திலும் கெடுபிடியிலும் அவர்கள் அனுபவித்த வேதனையின் எரிச்சல் அவள் குரலில் தென்பட்டது

இவ்வளவு நேரமும், அங்கு நடப்பதைக் கல்லறைத் தோட்டத்தின் நுழைவாயிலில், முனிசிப்பல் தூண் விளக்கின் நிழலில் நின்ற வண்ணம் கவனித்துக் கொண்டிருந்த தலைவர் இருதயசாமி, தீச்சட்டிக் கோவிந்தனைப் பார்த்து நடந்தார். பிறகு அவனைப் பார்த்து "இன்ஸ்பெக்டர் அய்யா, இது கர்த்தருக்குள் ஐக்கியமாகிப் போன பரிசுத்த ஆவிகள் நித்திரை போகும் இடம், தயவு செய்து அமைதியைக் குலைக்காமல் இருப்பீங்களா" என்று அங்கே குழுமியிருக்கும் மக்களுக்குக் கேட்கும் படியாகச் சொன்னார்.

"கிறிஸ்தவ மக்களுடைய மத உணர்வைப் புண்படுத்தும் படியாக அரசு உத்தியோகஸ்தர் நீங்கள் நடந்து கொள்வது நல்லதில்லை". மறுபடியும் அவனுக்கு அறிவுரை சொல்வது போல் அமைதியாகப் பேசவும், தன்னுள் மூண்டெழும் கோபத்தைக் காட்ட முடியாமல் அவரை முறைத்துப் பார்த்தான்.

"வாத்தியாரே என்னை ஏமாத்திப் போடலாண்ணு மட்டும் நினைக்காண்டாம். இங்கே பிரதர் தங்கசாமி வந்திருக்கான்." தீச்சட்டிக் கோவிந்தன் கேட்டான்.

"யார் சொன்னது", இருதயசாமி கேட்டார்.

"அதைச் சொல்ல முடியாது. வந்தானா இல்லையா?" அதிகாரத் தோரணையில் மீண்டும் கத்தினான்.

"அவர் வந்தாரென்று எவன் சொன்னானோ அவனைக் கேக்கதுக்குப் பதிலா என்னையைக் கேட்டால்?" அவனது கேள்வியவே திருப்பிக் போடுவது போல் தீச்சட்டிக் கோவிந்தனை அவர் கேட்டார்.

"பைபிளும், சாமியார் அங்கியுமாக வந்து பிரசங்கமும் ஜெபமும் பண்ணியிருக்கான். இல்லேண்ணு சொல்லுதியளா?" சற்று நிதானப்பட்ட மட்டில் கோவிந்தன் கேட்டான்.

அவனது அறியாமைக்கு இறங்குபவர் போல் அவனைப் பார்த்து புன்முறுவல் செய்தார். தொண்டையில் கூடி நின்ற சளியைக் காறி உமிழ்ந்த வண்ணம்

"ஆமாம், ஒரு சாமியார் பைபிளும், திருச்சபை சாமியாருக்குள்ள அங்கியுடன் வந்தார். இதோ, இதே இடத்தில் நின்று தான் வேதாகமத்தைத் திறந்து திருவசனங்களைப் படிச்சு ஜெபம் செய்து, இவர்களையும், தேவனுள் ஐக்கியமானவர்களையும் ஆசீர்வதிக்கவும் செய்தார்.

அவர் பிரதர் தங்கசாமியாகவும் இருக்கலாம் அல்லது அவர் சாயலில் குருபீடத்திலிருந்து வந்த சாமியாராகவும் இருக்கலாம் அல்லது ஆண்டவனே இந்த ஏழை ஜனங்கள் மேல் கருணை கொண்டு பரமண்டலங்களிலிருந்து தனது தேவதூதர்களில் ஒருத்தரை ஜெபம் முடிக்க அனுப்பியிருக்கலாம். அவர் வானத்திலிருந்து கொட்டும் மன்னாவைப் போல வந்தார். தேவதூதன் போல் மறைந்து போனார். அவ்வளவு தான் எனக்குத் தெரியும்".

இப்படி இருதயசாமி பதிலாகச் சொல்வார் என்று தீச்சட்டிக் கோவிந்தன் எதிர்பார்க்கவில்லை.

"இருதயசாமி என்னைய என்ன கேணையனிண்ணு நக்கல் பண்ரீரா? அனுபவிக்க வேண்டியிருக்கும் சார்" தீச்சட்டிக் கோவிந்தனின் ஏலாமை இப்படி வெளிப்பட்டது.

"இல்லை இன்ஸ்பெக்டர் அய்யா, நான் கண்ணாரக் கண்டதைத்தான் சொன்னேன். கலியுகத்திலேயும் அற்புதங்கள் நடக்கத் தானே செய்யுது. முடிஞ்சா பிரதர் தங்கசாமியத் தேடிப் பிடிச்சுக் கைதி பண்ணுங்க. அதை விட்டுப் போட்டு, எங்களை வந்து மிரட்டாதீங்க சாமி," என்று நிதானமாகப் பதில் சொல்லி விட்டு பிரதானரஸ்தாவை நோக்கி நடந்து போனார்.

கல்லறைத் தோட்டம் நிறையக் கூட்டம் இருப்பதாலும், ஜீவான்கள் எண்ணிக்கையில் மிகவும் குறைவாக இருப்பதாலும், தடியடிக்கு உத்தரவிட்டால் தனக்கும், இலாகாவுக்கும் தான் நட்டமும் அவப்பெயரும் ஏற்படுமென்று விவேகமான ஒரு முடிவுக்கு வந்த தீச்சட்டிக் கோவிந்தன், வெறுங்கையோடு ஸ்டேஷனை நோக்கித் தனது படையுடன் பின் வாங்கிப் போனான்

இந்த வேளையில் துண்டு பாய் என்கிற சவுக்கத் அலி, அவரது இணைபிரியாத வாகனமான சைக்கிளில், ஒருவித பீதியுடன் தலைவர் இருதயசாமியையும், இதர தோல் ஷாப்புத் தொழிலாளிகளையும் நோக்கி விரைந்து கொண்டிருப்பதை அவர்கள் பார்த்தார்கள்.

●

சவுக்கத் அலியை அந்த நகரத்தில் மூலை முடுக்கில் உள்ளவர்களுக்குக் கூடத் தெரியும். சொல்லப் போனால் பால்குடிக்கும் குழந்தைக்குக் கூட அவரைத் தெரியும் என்பார்கள். அந்த அளவுக்கு, ஏழை மக்கள் மத்தியிலும், உழைக்கும் மக்கள் மத்தியிலும் அறிமுகமான மனிதர். ஆனால் சவுக்கத் அலி என்றால் தெரியாது, துண்டு பாய் என்றுதான் அவர் அறிமுகம். எனவே நாளாவட்டத்தில், சுன்னத்துச் செய்து அவரை முஸல்மானாக்கிப் பெற்றோர் வைத்த சவுக்கத்து அலி என்கிற பெயர் மறந்து இப்போது அவர் துண்டுபாய் என்றே எல்லோராலும் அன்பாக பாசத்துடனும் அழைக்கப்படுகிறார். வேண்டுமானால் வாக்காளர் பட்டியலிலும், அரசு ஆவணங்களிலும் துண்டுபாயின் பெயர் சவுக்கத் அலி என்று பதியப் பட்டிருக்கலாம்.

துண்டுபாய் என்கிற சவுக்கத் அலி, ஒரு விசித்திரமான மனிதரும் கூட. ஒருவிதமான மாந்தளிர் மேனி, விசாலமான நெற்றியும், தாடியும் இடுங்கிய கண்களும், தடித்த உதடுமாகச் சுமார் ஆறு அடிக்கு மேலான ஆஜானுபாகுவான, எல்லைக் காந்தி காபர்கான் மாதிரியான தோற்றம். ஒரு காலத்தில் இந்த நாட்டுக்கு வந்த காபூலி வாலோக்கள் மாதிரியான நடவடிக்கைகள்.

தான் ஒரு முஸ்லீம் என்பதற்கு அடையாளமாக தலையை முழுமையாக மொட்டையடித்துத் துருக்கிய தொப்பி எப்போதும் அவர் தலையை அலங்கரித்திருக்கும். தான் ஒரு சுதேசியவாதி என்பதை எடுத்துக்காட்டும் வகையில் எப்போதுமே அவர் உடம்பைக் கதர் ஆடை போர்த்தியிருக்கும், தோளில், அரிவாள் சுத்தியல் போட்ட சிவப்புத் துண்டு, கவசம் போன்று தோளை அலங்கரிக்க தோளில் துண்டு இல்லாமல் துண்டு பாய் வெளியே கிளம்ப மாட்டார்

சவுக்கத்து அலியின் வாகனமான அந்தக் காலத்து ராலி மிதிவண்டியின் முன்புற மட்கார்டில், மூன்று கம்பிகள் முளைத்திருக்கும். அந்த மூன்று கம்பிகளையும், மூவர்ணக் கொடி முஸ்லீம் லீக்கின் அடையாளமான பிறை அரிவாள் சுத்தியல் பொறிக்கப்பட்ட பொது உடைமைக் கட்சியின் சிவப்புக் கொடி, இத்யாதி அலங்காரங்களும், பழைமை மாறாத ராலி மிதிவண்டியில், செல்வந்தன் ரோல்ஸ் ராய் காரில் பவனி வருவது போல் துண்டு பாய் தனது சைக்கிளில்அந்த நகரத்தையே வலம் வந்த வண்ணமிருப்பார்

துண்டுபாய்க்கு நிரந்தரமான தொழில் என்பது கிடையாது, வெகுகாலை எழுந்து தொழுகையை முடித்து விட்டு, வீடுவீடாகப் பேப்பர் போடும் பொடியன் வேலை. பிறகு, பேரீச்சம்பழத்துக்கு ஈயம் பித்தளை சேர்க்கும் பணி, மதியம் ஆகிவிட்டால், தலையைப் பிளக்கும் வெயில் என்றும் பாராமல், பழைய சேதிப் பேப்பர்களைத் தெருத் தெருவாக அலைந்து, நிறுத்து விலைக்கு வாங்கிக் கடைகளுக்குப் போடுவார். ஒரு தபால்காரனைப் போன்று, தெருத் தெருவாகவும் வீடு வீடாகவும் தொழில் நிமித்தம் ஏறி இறங்கி வருவதால் ஒவ்வொரு வீட்டுப் பெண்ணுக்கும் பிள்ளைகளுக்கும், காபூலி வாலா மாதிரி துண்டு பாய் அறிமுகம். எந்த ஒரு பொருளை நிறுவை செய்து போட்டாலும் சரி, வாங்கினாலும் சரி, குண்டுமணி அளவு கூட ஏற்ற இறக்கம் இருக்காது வேறு சில தெரு வியாபாரிகளைப் போன்று சவுக்கத்து அலி கள்ளத்திராக, கள்ள நிறுவை ஏதும் வைத்துக் கொள்வது கிடையாது துண்டுபாயின் நாணயம் காரணமாக, பழைய பேப்பர் விலைக்குப் போடும் நடுத்தர வர்க்க வீட்டுப் பெண்கள், எவ்வளவு நாள் ஆனாலும், தினசரிகளைச் சேர்த்து வைத்துத் துண்டு பாய்க்காகவே காத்துக் கொண்டிருப்பார்கள் அவ்வளவு நாணயம்.

ஈயம் பித்தளைப் பாத்திரங்களைக் கழித்துப் போடும் பெண்கள் கூட, தங்களுக்குத் தேவையான 'அலுமினியம் மற்றும் வெண்கலப் பாத்திரங்கள் வேண்டும் என்றால் சவுக்கத்து அலியிடம் சொல்லித்தான் வாங்கிக் கொள்வர்

கேட்டால், அவருக்குத் தான் பாத்திரத்தின் நயம், புலம் தெரியும் என்பார்கள். அவர் மூலம் வாங்கும் பண்ட பாத்திரங்கள் தரமானவையாக இருப்பதோடல்லாமல், மார்க்கெட் விலையை விட அஞ்சு, பத்து என்று விலை குறைவாக இருக்குமேயல்லாமல் எச்சாக எப்போதும் இருக்காது.

துண்டுபாய்க்குக் குடும்பம் பிள்ளை குட்டி என்பதெல்லாம் கிடையாது. அதேபோல சொந்தம் என்று சொல்வதற்கும் உறவினர்களும் கிடையாது. அதாவது, பொட்டல் புதூரிலிருந்து, பஞ்சம் பிழைக்க அந்த ஊருக்கு வந்து சேர்ந்த துண்டுபாய், மகமதியா புறத்தில், ஒரு ஒதுக்குப் புறமாகப் பெரிய பள்ளிவாசலுக்குச் சொந்தமான தரிசு பூமியில் ஜமாத்காரர்களின் அனுமதியுடன் குடிசை போட்டுக் குடியிருந்தவர், அன்று, முதல் இன்று வரையில் அந்தக் குடிசையில் தான் அவருடைய வாசம். துண்டு பாயுடைய வறுமை காரணமாகவோ, அல்லது குணம் காரணமாகவோ, ஜமாத்து, இதர குடியிருப்புக் காரர்களிடம் வசூல் செய்வது போன்று துண்டு பாயிடம் குடக்கூலி வசூலிப்பது கிடையாது.

சவுக்கத்து அலியின் பூர்வீகம் பற்றியோ, உறவினர் பற்றியோ கேட்டுவிட்டால் போதும், "இன்ஸால் அல்லா" என்று ஜெபிப்பது போல் சொல்வார், தலையில் இருக்கும் தொப்பியை எடுத்துக் கையில் இடுக்கிக் கொண்டு, ஆகாயத்தினின்றும் ஏதோ தகவலை எதிர்பார்ப்பது போல் நின்றிருப்பார். பிறகு பெருமூச்சு விட்ட வண்ணம், தன்முன்னால் நிற்கும் நபரைப் பரிதாபமாகப் பார்த்துவிட்டு

"ஆமா, நாங்க அல்லாரும் நாகூர் ஆண்டவரைத் தெரிசனம் பண்ணிப்போட்டு வேலாங்கண்ணி மாதாவைப் பார்க்கப் போனம். மாதாவைப் பாக்க முடியலை, கடல் அம்மா என்னைய மட்டும் தவிக்க விட்டுப் போட்டு, அத்தனை பேத்தையும் ஆவிச் சேத்துக் கொண்டு போயிட்டா" கண்களில் நீர் கசிந்து நிற்கச் சொல்லுவார்.

அதற்கு மேல், அந்த அனாதை மனிதனின் உள்ளத்தின் ஆழத்தில் புதைந்து கிடக்கும், சோகக் கதையைக் கிண்டிக் கிளர யாரும் முயற்சிப்பதில்லை அந்தக் கல்மிஷமில்லாத

மனிதனின் பின்னணியில் சொல்ல முடியாத சோகம் புதைந்து கிடக்கிறது என்று மட்டும் அந்த ஊர் மனிதர்கள் ஊகித்துக் கொண்டார்கள்.

சவுக்கத் அலி, இவ்வளவு இருந்தும், தனது சோகத்தையோ வறுமையையோ, இதரர்களுடன் பகிர்ந்து கொண்டது கிடையாது. கையேந்தி யாசகமும் கேட்டது கிடையாது. வறுமையிலும் செம்மை வாழ்க்கை என்பது மட்டுமல்ல; பிறர்க்கென வாழும் பெரும் குணம் பக்கத்திலிருப்பவர் துன்பம் பார்க்கச் சகிக்காத மனிதன். எனவே, நகரத்தில் எந்த ஒரு மூலையில், அநியாய அக்கிரமங்கள் நடைபெற்றாலும், அதை எதிர்த்துக் குரல் கொடுக்கும் கூட்டங்களிலும் ஆர்ப்பாட்டங்களிலும் நிச்சயம் சவுக்கத் அலியைப் பார்க்க முடியும், தன்னைவிட்டு இணைபிரியாத தனது வாகனமாக ராலி சைக்கிளைத் தள்ளிக் கொண்டு ஊர்வலத்தின், ஆர்ப்பாட்டத்தின் முன்னணியில் துண்டுபாய் நடந்து போவதைப் பார்க்கலாம். எனவே, ஒடுக்கப்பட்டவர்களுக்காகப் பாடுபட்டு, தீண்டப்படாதவர்களாகக் கருதி ஒதுக்கப்பட்ட தோல் ஷாப்புத் தொழிலாளர் சங்கத்தின்பாலும், அச்சங்கத்தின் தலைவர்கள் பாலும் துண்டு பாய்க்கு அலாதியான அன்பும் பாசமும் அவர்களைப் பற்றி அதிலும் சங்கரனைப் பற்றி யாராவது குறை சொல்வதைக் கேட்டால் சண்டாளமாகக் கோபம் வரும்.

துண்டுபாயின் தோளில் தொங்கிக் கொண்டிருக்கும் அரிவாள் சுத்தியல் பொறிக்கப்பட்ட சிவப்புத் துண்டையும், அவரது சைக்கிளின் முகப்பில் முஸ்லீம்லீக் மற்றும் மூவர்ணக் கொடியுடன், பறந்து கொண்டிருக்கும். அரிவாள் சுத்தியல் சின்னமிடப்பட்ட, சிகப்பு ஜண்டாவையும் பார்த்து மிரண்டு போன தீச்சட்டிக் கோவிந்தன்.

"ஏ பாய், இந்தச் சின்னம் போட்ட கட்சிய எல்லாம் அரசாங்கம் தடை பண்ணிப் போட்டது. மருவாதையா, துண்டைத் தோள்லேருந்து எடுத்துப் போடு. கொடியவும் கான்" என்று எச்சரிக்கை செய்தபோது, அறியாத

சிறுபிள்ளையைப் பார்ப்பது போல், தீச்சட்டிக் கோவிந்தனைப் பார்த்த வண்ணம் நின்றிருந்த துண்டுபாய்,

"இன்ஸ்பெக்டரய்யா, ஒங்க கேள்வி, அலுவுசமால்லே இருக்குது. இந்த துண்டா வந்து புரட்சி பண்ணப் போவுது. சிவப்புத் துணியக் கண்டு, கோயில்காளை மிரண்டதாட்டமல்லே மிரளுரீக" என்று அப்பாவியாக நின்று சொன்னதைக் கேட்டுச் சண்டாளமாகக் கோபப்பட்ட தீச்சட்டிக் கோவிந்தன்,

"ஏய், துண்டு பாய் ஏடாசியா பேசுறே. தோள் துண்டை இறக்கிக் கொடியக் கழற்றலே, ஒன்னையவும் கைது செய்து உள்ளே போட வேண்டியிருக்கும்" என்று மிரட்டுவது போல் சொல்லவும்,

"நல்லதாப் போச்சு, அதைச் செய்யுங்க எசமான். அவுத்து உடப்பட்டிருக்க பஞ்சத்திலே பசி, பட்டினிண்டு கெடந்து சாவும் காட்டி, ஜெயில்லே மூணுவேளையும் அறை குறை சாப்பாடாச்சும் போடுவீங்கல்லே" என்று காரியமாகவும், கேலியாகவும், பதில் உரைக்கவும் தீச்சட்டிக் கோவிந்தனால், அவரை மிரட்டும் பாவனையாகத்தான் பார்க்க முடிந்ததேயல்லாமல் பயமுறுத்திய பிரகாரம் வேறு ஏதும் செய்ய முடியவில்லை.

அதற்குப் பிறகு, அந்த நகரத்தில், அரிவாள் சுத்தியல் சின்னம் போடப்பட்ட சிவப்புத் துண்டு தோளை அலங்கரிக்க, சைக்கிளின் முகட்டில் சிவப்பு ஜண்டா காற்றில் பறந்து பட்டொளி வீசவலம் வரும் ஒரே நபர் துண்டு பாய் மட்டும்தான்.

தோளில் தொங்கிய சிவப்புத் துண்டைச் சரி செய்த வண்ணம் ஒருவித அவசர உணர்வுடன் வரும் சவுக்கத் அலியைப் பார்த்ததும், இருதயசாமியும், அவருடன் வந்த தோல் ஷாப்புச் சங்க முக்கிய ஊழியர்களும் அவரை எதிர் பார்த்து நின்றார்கள், வேர்க்க விறுவிறுக்கத் தனது சைக்கிளில் வந்து இறங்கிய துண்டுபாய் இருதயசாமியவும் மற்றவர்களையும் பார்த்து,

"வாத்தியாரய்யா, செல்ல மரைக்காயர் மவுத்தாயிட்டான்" என்று திடுக்கிடும் சேதியைச் சொன்னவர்.

"மரைக்காயரும் அவன் பெண்டு பிள்ளைகளும் விஷம் சாப்பிட்டுத் தற்கொலை பண்ணிட்டாங்க" என்று தொண்டை கனக்கச் சொன்னபோது,

"அட பாவிப்பய. என்ன காரியம் பண்ணிப் போட்டான்" என்று சொன்ன இருதயசாமி, துக்கம் தாளாமல் தலையில் கைவைத்து நடுரோட்டில் உட்கார்ந்து விட்டார். ஒசேப்புக்கும் மற்றவர்களும், இடி இறங்கியது மாதிரியான மலைப்பு.

செல்ல மரைக்காயரும், இருதயசாமியும் முனிசிப்பல் பள்ளிக் கூடத்தில் படிக்கும் காலம் முதல்லே நண்பர்கள். அவர்கள் இருவரும் தங்களுக்குள் பரிமாறிக் கொள்ளாத அந்தரங்கமே கிடையாது. இருதயசாமிக்கு இன்னல்கள் ஏற்பட்ட போதெல்லாம் அவருக்கு நிழல் தரும் தருவாக நின்றது செல்ல மரைக்காயரும் அவரது குடும்பமும் தான்.

ஒருவாரத்துக்கு முன்னால் சந்தித்துக் கொண்ட போதுகூட செல்ல மரைக்காயர் குடும்பம் வறுமையால் வாடுகிறது என்பதை மட்டும் நண்பனிடம் சொன்னாரே யல்லாமல் இப்படி ஒரு முடிவுக்குச் செல்ல மரைக்காயர் வருவார் என்று இருதயசாமி எதிர் பார்க்கவில்லை.

"சீக்கிரமாப் போகவேணும். போலீஸ் அல்லாம் வந்திருச்சி. நாம போவலையானா, தடயத்தை மறைச்சு மையத்தைப் புதைச்சுப் போடுவாணுவோ" துண்டுபாய் அவசரப்படுத்துலானார்.

இருதயசாமியும் மற்றவர்களும் மக்சான் தெருவை நோக்கி விரைந்தனர்.

11

செல்ல மரைக்காயர் குடும்பத்தின் மரணச்செய்தி நகரத்தில் காட்டுத்தீயாகப் பரவியது. நடுத்தர வியாபாரியான செல்ல மரைக்காயரின் பட்டினி மரணச் சேதி கேட்டு, நகரத்து மக்கள் அதிர்ச்சியில் ஆழ்ந்தனர்.

முஸ்லீம் மக்கள் குடியிருப்புக்களிலும் கடைவீதியிலும் பணிகள் ஸ்தம்பிதமாகிப் போனது. முஸ்லீம் இளைஞர்களின் கோபம், ஆளும் அரசு பக்கமும், அதிகாரிகள் மீதும் திரும்பி, வெறுப்பாகக் கனன்று கொண்டிருக்கிறது.

தோல்ஷாப்புத் தொழிலாளர்களும், நகரசுத்தி ஊழியர்களும், பட்டினி கிடக்கும் கைத்தறி நெசவாளர்களும் மகமதியாபுரத்தையே முற்றுகையிட்டுப் படையெடுப்பது போல், செல்ல மரைக்காயர் குடும்பத்தினரின் துக்கத்தில் பங்கு கொள்ளப் போய்க் கொண்டிருந்தனர்.

தலைவர் இருதயசாமி தனது சகாக்களுடன், மகமதியாபுரம் மக்கான் தெருவை அடைந்தபோது, தெருவையே அடைத்துக் கொண்டு கூட்டம் நிற்கிறது. ஆத்திரமும், ஆவேசமும் கொண்ட மட்டில் முஸ்லீம் இளைஞர்கள் அங்குமிங்கும் கோபாவேசத்துடன் அலைந்து கொண்டிருக்கின்றனர். தெருவின் மறுகோடியில் 'மினிசாமி தலைமையில் திரண்டு நிற்கும் தொழிலாளர் கூட்டம், அரசின் மக்கள் விரோத நடவடிக்கையைக் கண்டித்துக் கோஷம் எழுப்பிய வண்ணம் நிற்கின்றனர்.

மக்கான் தெருவில் நடைபெற்ற துக்கச் சம்பவத்தை அறிந்ததும், சட்டம் ஒழுங்கைப் பரமரிப்பதற்காகத் தனது

போலீஸ் படையுடன் கூட்டம் கூடுவதற்கு முன்னமேயே வந்து சேர்ந்துவிட்ட இன்ஸ்பெக்டர், தீச்சட்டிக் கோவிந்தனும், சப்-இன்ஸ்பெக்டரும் கூட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாமல், சங்கிலியால் கட்டுண்ட வேட்டை நாய்களாட்டம், நெரிசலுக்குள் அங்குமிங்கும் போய்வந்த வண்ணமிருக்கின்றனர்.

தனது பால்யகால நண்பனும் நாணயமான வியாபாரியுமான செல்ல மரைக்காயரின் குடும்பத்தின் மரணத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்த தலைவர் இருதயசாமி, வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் சடலங்களுக்கு மாலைகளைப் போட்ட போது, துக்கம் தாளாமல் தொண்டை கனத்தது. இருந்தபோதும், தன்னுள் ஏற்பட்ட துக்கத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல் உறவினர்களுக்குத் தனது அனுதாபங்களைத் தெரிவித்து விட்டு, வீட்டுக்கு முன்னால் தெருவை மறைத்துப் போடப்பட்டிருக்கும் பந்தலுக்கடியில் நாற்காலியில் உட்காரப் போன போது, இன்ஸ்பெக்டர் தீச்சட்டிக் கோவிந்தன் கோபாவேசத்துடன் அவரிடம் வந்து, தன் கையில் இருந்த பிரசுரம் ஒன்றை நீட்டி

"இந்தச் சட்ட விரோதமான பிரசுரத்தை யார் வெளியிட்டது, நீங்க வெளியிட்டது தானே" என்று அவரை மிரட்டுவது போல் கேட்டான்.

பந்தலில் உட்கார்ந்திருக்கும், முஸ்லீம் பிரமுகர்கள் கையிலும் அந்தப் பிரசுரத்தின் பிரதிகள் இருப்பதைக் கண்டார்.

மகமதியாபுரம் ஜமாத்தின் முக்கியப் பிரமுகரும், வியாபாரியுமான அஸின் முகம்மது ராவுத்தர் தனது தாடியை வருடிய வண்ணமே இன்ஸ்பெக்டரைப் பார்த்து,

"அவாளை ஏன் கேக்கறியோ, அந்தப் பிரசுரத்திலே கண்டது அத்தனையும் சத்தியம் தானே. ஒண்டையும் செய்யறதுக்கு ஏலலை. மிரட்டப் பாக்காதிங்கோ இன்ஸ்பெக்டர் அய்யா"

தன்னுள் மூண்டெழுந்த ஆத்திரத்தையும், கோபத்தையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் சொன்னார்.

அஸின் முகம்மது, செல்ல மரைக்காயரின் மனைவி வகையில் தூரத்துச் சொந்தம்.

அதற்குள், தொப்பியும், பைஜாமாவும் அணிந்த முஸ்லீம் வாலிபன் தீச்சட்டிக் கோவிந்தனிடம்,

"உங்களை யார் சார் இங்கே வரச் சொன்னது. மையத்தை எடுத்து அடக்கம் பண்றதுக்கு எங்களுக்குத் தெரியும். கலகம் உண்டு பண்ண வந்துட்டீயளோ" என்று கோபமாகக் கேட்ட போது,

"தம்பீ, கோவப்படாதீங்கோ. அய்யா அவர் வேலையைச் செய்ய வந்திருக்கார். நடந்தது நடந்து போச்சுது. நாமதான் பொறுமையா இருக்கணும்" என்று வாலிபனிடம் சொன்ன இருதயசாமி, தனது சட்டைப் பாக்கெட்டில் இருந்த வெள்ளெழுத்துக் கண்ணாடியை எடுத்துத் துடைத்து மாட்டிக் கொண்டு தன்னிடம் கொடுக்கப்பட்ட பிரசுரத்தைப் படிக்கலானார்.

பிரசுரத்தின் முகப்பில், தடை செய்யப்பட்ட கட்சியின் சின்னமான அரிவாள் சுத்தியல் அடையாளம் பொறிக்கப்பட்டிருக்கிறது.

அந்தப் பிரசுரத்தில் செல்ல மரைக்காயரின் குடும்பத்தின் பட்டினிச் சாவுக்கு, அரசின் மக்கள் விரோத நடவடிக்கையே காரணம் என்று குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

மத்தியிலும், மாகாணத்திலும் ஆட்சி நடத்தும் லைசென்ஸ், பெர்மிட் ஊழல் அரசு, கள்ளமார்க்கெட் காரர்களுக்கும், பதுக்கல் பேர் வழிகளுக்கும், நிலச்சுவான் களுக்கும் சாதகமாகச் செயல்பட்டு, அவர்கள் மக்களைக் கொள்ளையடிப்பதற்கு ஏதுவாகப் பதுக்கல் பேர் வழிகளுக்கும், கருப்பு மார்க்கெட் காரர்களுக்குச் சாதகமாகச் செயல்படுவதாகவும் குற்றம் சாட்டப்பட்டிருப்பதோடு, போலீஸ் அதிகாரிகள், கள்ளச் சந்தைக்காரர்களுக்கும், பதுக்கல் காரர்களுக்கும் பாதுகாவலர்களாகவும் எடுபிடிகளாகவும் நடந்து கொண்டிருப்பதையும் புள்ளி விவரங்களுடன் சுட்டிக் காட்டியிருந்தது.

மட்டுமல்லாமல் கூலி உயர்வு கேட்டுப் போராடும் தொழிலாளர், பாட்டாளி வர்க்கத்தின்பால் தடியடி தர்பார் நடத்தவும், துப்பாக்கிப் பிரயோகம் செய்யவும், ஏவிவிடப்படும் போலீசின் கவனம், சமூக விரோதிகளான கள்ள மார்க்கெட் காரர்கள், மற்றும் பதுக்கல் பேர்வழிகளான சமூக விரோதிகள்பால் ஏன் திருப்பப்படவில்லை என்றும் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது.

கடைசியாகப் போடப்பட்டிருக்கும் பட்டியலில் உள்ளூரின் பதுக்கல் காரர்கள், கள்ள மார்க்கெட் காரர்கள், விளை பொருட்களைப் பதுக்கிக் கள்ளச் சந்தைக்கு அனுப்பும் புள்ளிகளின் பெயர்கள் கையிருப்பு ஆகிய பட்டியலும் புள்ளி விவரத்துடன் கொடுக்கப்பட்டிருந்தது.

அத்துடன் இன்னும் இரண்டு நாட்களில் காவல்துறை, வருவாய்த்துறை அதிகாரிகளின் உதவியுடன், பதுக்கலை வெளிக்கொணர்ந்து நியாயவிலைக் கடைகள் மூலம் மக்களுக்கு உணவுப் பொருட்கள் விநியோகம் செய்ய அரசு நடவடிக்கை எடுத்து, பதுக்கல், கள்ள மார்க்கெட் பேர்வழிகளைக் கைது செய்யவில்லையெனில், மக்களைத் திரட்டி, அவர்கள் மூலம் பதுக்கல் பொருட்கள் மீட்கப்பட்டு மக்களுக்கு விநியோகிக்கப்படும் என்கிற எச்சரிக்கையும் விடப்பட்டிருந்தது.

கைது செய்யப்பட வேண்டியவர்கள் பட்டியலில் நகரத்தின் செல்வந்தர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் பெயர்களும், விவரமாகக் குறிப்பிடப்பட்டிருப்பது தீச்சட்டிக் கோவிந்தனைப் பெரிதும் மிரளச் செய்தது.

தன்கையில் கொடுத்த அந்தப் பிரசுரத்தை மிகவும் சாவதானமாகப் படித்து முடித்தபின்பு, இருதயசாமி தீச்சட்டிக் கோவிந்தனைப் பார்த்து

"இன்ஸ்பெக்டர் சார் உங்களுக்கு இதைவிட என்ன தகவல் வேணும்?" ஒன்றும் புரியாதவர் போல் கேட்கவும் அவனுக்கு ஆத்திரம் மேலிட்டது.

"இந்தப் பிரசுரத்தை வெளியிட்டது யார்? நகர் முழுவதும், இந்தப் பிரசுரம் வெளியிடப்பட்டிருக்கு. சுவர் அல்லாம் விளம்பரப்படுத்தப்பட்டிருக்கு" தீச்சட்டிக் கோவிந்தன் கேட்டபோது,

"அதுதான், பிரசுரத்திலேயே இருக்குதே இன்ஸ்பெக்டர் அய்யா. அவரைப் போய் ஏன் கேக்கரீய". மற்றொரு ஜமாத் உறுப்பினரான மைதீன் குட்டி இன்ஸ்பெக்டரைப் பார்த்து சற்று கோபமாகவே பதில் சொன்னார்.

"அந்தப் பிரசுரத்திலே சொல்லப்பட்டிருக்க சங்கதி உண்மையா, பொய்யாண்ணு, பாருங்க. யார் யாரெல்லாம் தானியங்களைப் பதுக்கி வெச்சுருக்காங்களோ, அவங்களைக் கைது செய்து உணவு தானியத்தை மக்களுக்குப் பங்கு வச்சிக் குடுக்காம எங்கிட்டே பேசுறது நல்லா இல்லை"

இருதயசாமி இன்ஸ்பெக்டரைப் பார்த்து உறுதியோடு சொல்லவும்.

"சட்ட விரோதமான இந்தப் பிரசுரத்தை வெளியிட்டவங்களைக் கண்டு பிடிச்சுக் கைது பண்ணாம விட மாட்டேன்."

தீச்சட்டிக் கோவிந்தன் கோபம் தணியாத மட்டில் பேசவும்,

"இன்ஸ்பெக்டர் சார், என்ன நீங்க மெரட்டரீங்களா" என்று குரலை உயர்த்திப் பேசிய இருதயசாமி.

"இந்த மொரட்டலுக்கெல்லாம் நாங்க பயப்படப் போரதில்லை. கைது செய்யறதானா செய்ய வேண்டியது தானே" என்று இன்ஸ்பெக்டரின் நயனங்களைப் பார்த்துச் சொன்னார்.

"சும்மா பொட்ட மிரட்டு மிரட்டறதுக்குப் பதிலா, வேலையப் போயி ஒழுங்காச் செய்யுங்க ஸார், நாங்க அல்லாத்துக்கும் தயாராகத்தான் வந்திருக்கோம்" என்று

இருதயசாமி சொன்னபோது, அந்த இடத்தில் கூட்டம் கூடவும், நிலைமை சிக்கலாகிவிடக் கூடாது என்ற விவேகச் சிந்தனை ஏற்படவும்.

"காலம் வரும், அப்போ உன்னை நான் கவனிச்சுக்கறேன்" என்று மனதுக்குள் இருதயசாமியைக் கறுவியபடியே தெருக் கோடியில், வண்டியில் வந்திறங்கிய தாசில்தாரையும், அதிகாரிகளையும் எழவு வீட்டுக்குக் கூட்டிவர, கூட்டத்தை விலக்கிக் கொண்டு தீச்சட்டிக் கோவிந்தன் கிழக்குப் பக்கமாகப் போனான்.

இன்ஸ்பெக்டர் போவதையே வெறுப்புடன் பார்த்த வண்ணம் நின்றிருந்த இருதயசாமியைப் பார்த்து,

"என்ன தலைவரே, இன்ஸ்பெக்டரை அப்படிப் பேசிப் போட்டீய. முகுருப் பெய ஏதாச்சும் செஞ்சாலும் செஞ்சு போடுவானே" மைதீன் குட்டி ராவுத்தர் கேட்கவும்,

"இவனுகளுக்கெல்லாம் பயந்தா பொது வாழ்க்கையில் இருக்க முடியாது பாய்" என்று பதில் சொன்னவண்ணம், செல்ல மரைக்காயர் குடும்பம் மரணம் சம்மந்தமாய் மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஜமாத் உறுப்பினர்களிடமும் வந்திருக்கும் பெரிய மனிதர்களிடம் ஆலோசனை கேட்க ஆரம்பித்தார்.

உண்மையில், அரசாங்கமே நினைத்தால், தலைவர் இருதயசாமியையும், சங்கரனைக் கைது செய்தது போலவே கைது செய்து சிறையில் அடைத்திருக்க முடியும். ஆனால் சிறிய மீனைப் போட்டுப் பெரிய மீனைப் பிடிக்கும் உபாயமாகத் தலைமறைவாக இருக்கும் தலைவர்கள் எப்படியாவது இருதயசாமியைத் தொடர்பு கொள்வார்கள் என்றும், அப்போது அவர்கள் அனைவரையும் ஒட்டு மொத்தமாகக் கைது செய்துவிட வேண்டும் என்கிற தந்திரோபாயமாக உளவுத்துறை இருதயசாமியை விட்டு வைத்து கடுமையாகக் கண்காணித்து வருகிறது. அரசின் உபாயமும் சதித்திட்டமும் இருதயசாமிக்குத் தெரிந்தே இருந்தது.

ரெவன்யூ அதிகாரிகளைத் தீச்சட்டிக் கோவிந்தன் வரவேற்பதற்காகப் போனபோது, தெரு முனையிலேயே, தாசில்தாரையும் ஏனைய அரசு ஊழியர்களையும் தடுத்து நிறுத்திய, தொழிலாளர்களும், முஸ்லீம் இளைஞர்களும், அவர்களைத் தெருவுக்குள் விடாமல் தடை செய்யவும், இன்ஸ்பெக்டருக்கும் அவர்களுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டுக் கலகம் ஏற்படும் நிலையை எட்டிக் கொண்டிருந்தது.

இக்கட்டான நிலைமையை உணர்ந்த இருதயசாமி, தான் உட்கார்ந்திருந்த பெஞ்சின் மீது ஏறி நின்று, கூட்டத்தை அமைதியாக இருக்கும் படியும், அரசு அதிகாரிகளைச் சட்டப்படியான வேலைகளைச் செய்ய அனுமதிக்க வேண்டும் என்றும், தங்களைப் பலாத்காரவாதிகள் என்று முத்திரை குத்த வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் அரசுக்கும், அரசு யந்திரத்துக்கும் சந்தர்ப்பம் கொடுக்கக் கூடாது என்றும் அமைதி காக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்ட போது கூட்டத்தில் அமைதி ஏற்பட்டது.

தொடர்ந்து அவர் பேச முற்பட்ட போது, தீச்சட்டிக் கோவிந்தன் குறுக்கிட்டுத் தடுக்க முற்பட்ட போது, அவரைப் பேச விடுங்க என்று கூட்டத்திலிருந்து எதிர்ப்புக் கிளம்பியது.

"இன்ஸ்பெக்டர் அய்யா வீணா எடைஞ்சல் பண்ணாதீயோ, சர்வாதிகாரியாட்டம் நடந்துக்கறீயளே" என்று அஸின் மம்முது பாய் சற்று எரிச்சலாகப் பேசவும், தீச்சட்டிக் கோவிந்தன் கூட்டத்தை ஒழுங்கு படுத்துவது போல் நகர்ந்து போனான்.

பிரசுரத்தைக் கையில் ஏந்தியவாறு, பெஞ்சின் மீது ஏறி நின்ற இருதயசாமி அங்கு திரளாகக் கூடிநின்ற மக்களைப் பார்த்து,

"செல்ல மரைக்காயர் குடும்பத்தின் பட்டினிச்சாவை நாம் சாதாரணமாக எடுத்துக் கொள்ளப் போவதில்லை.

பதுக்கல்காரர்களையும் கள்ளச்சந்தைக் காரர்களையும் நாட்டைக் கொள்ளையடிக்க அனுமதிக்கிற அரசாங்கத்தின்

நடவடிக்கைகளால் நாட்டு மக்கள், குதிரைக்குப் போடும் கொள்ளையும், மொச்சைக் கொட்டையும், புண்ணாக்கையும் சாப்பிடும் அளவுக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இப்போது அதுவும் அரிதாகிப் போயிட்டது. பொது மக்களான நாம இந்தக் கொடுமையப் பார்த்திட்டுச் சும்மா இருக்க முடியாது.

செல்ல மரைக்காயர் குடும்பத்தின் சாவே இந்தப் பட்டினிச்சாவின் முதலும் கடைசியுமான சாவாக இருக்க வேணும். பதுக்கல் காரர்களோட பட்டியல் இந்தப் பிரசுரத்தில் சொல்லப்பட்டிருக்கு இன்னெக்கி இரவே, சர்வகட்சி சார்பில் கலைக்டரண்டை மனு கொடுப்போம். பதுக்கல் பொருட்களைக் கைப்பற்றி மக்களுக்குப் பங்குவச்சிக் கொடுக்க அரசாங்கத்துக்கு ரெண்டு நாள் கெடுதான் கொடுக்கப்படும். இல்லையானால் மக்கள் பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள்" என்று பேசி முடித்த போது, இருதயசாமியின் பேச்சை ஆமோதிப்பது போல் கூட்டத்தில் ஆரவாரம் ஏற்பட்டது.

தீச்சட்டிக் கோவிந்தனோ ஒன்றும் செய்ய முடியாமல் கையைப் பிசைந்து கொண்டு, கோபம் தாளாமல் உதட்டைக் கடித்துக் கொண்டு நின்றான்.

அதே வேளையில் சூப்பிரண்டு தேவசகாயம் நகரமெங்கும் விநியோகிக்கப்பட்ட, பதுக்கல் பேர்வழிகளின் பட்டியல் கொண்ட பிரசுரத்தையும், துண்டுப்பிரசுரங் களையும் போஸ்டர்களையும் எடுத்துக் கொண்டு, நகரத்தின் பெரும் பணக்காரரும், அரசியல் பெரும் புள்ளியுமான நாவன்னா மூவன்னா, என்று அழைக்கப்படும். நாராயண மூர்த்தியா பிள்ளையவர்களின் மாளிகையை நோக்கித் தனது கிறிஸ்லர் காரில் விரைந்து கொண்டிந்தான்.

12

நாவன்னா மூவன்னா நாராயண மூர்த்தியா பிள்ளை, நகரத்தில் மட்டுமல்ல, அந்த ஜில்லாவிலேயே செல்வாக்கு மிக்க பெரும் புள்ளிகளில் ஒருவர்.

மகாபக்திமான். பரோபகாரி என்றும், வள்ளல் என்றும் புகழப்பட்டவர், பல கோவில்களின் தேவஸ்தான கமிட்டிகளில் அங்கத்துவம் வசிப்பவர் என்பதால், பல சைவக் கோவில்களிலும், வைஷ்ணவ ஆலயங்களிலும், உற்சவ நாட்களில், அன்னாருக்கும், அன்னாருடைய குடும்பத்துக்கும் முதல் மரியாதை செய்யப்பட்ட பின்னர்தான் மூலவருக்கே பூசை புனஸ்காரம் செய்யப்படும்.

நாராயண மூர்த்தியா பிள்ளைக்குத் திருவேங்கடத்தான் மீதுள்ள பக்தியோ வியப்புக்குரிய அலாதியான ஒன்று. நாவன்னா மூவன்னா விலாசத்தில் நடைபெறும் அத்தனை தொழில் வியாபார அமைப்புக்களிலும், ஏனைய பங்குதாரர்கள் போல், ஏழுமலையானும் பங்குதாரர். ஒவ்வொரு ஆண்டிலும், கணக்கு முடிக்கும் போதும் ஏழுமலையானின் கணக்கு, தனியாகப் பார்க்கப்பட்டு, தனியாகப் பிரித்துக் கண்டு முதல் செய்யப்படும். அப்புறம், மாதம் தவறினாலும், நாராயண மூர்த்தியாபிள்ளை திருப்பதி பயணமாவதும், திருவேங்கடத்தானைத் தரிசனம் செய்வதும் தவறாமல் நடைபெறும். அப்போது, ஏழுமலையானுக்குச் சேர வேண்டிய பங்குத் தொகையானது, நாராயண மூர்த்தியா பிள்ளையால் திருப்பதி உண்டியலில், சல்லிக்காசு குறையாமல் போடப்படும். இப்படி திருப்பதி

வெங்கடாசலபதி, நாராயணமூர்த்தியா பிள்ளையின் ஒவ்வொரு தொழில் அமைப்பிலும் பார்ட்னராக இருப்பதால் அவருக்கு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகத் தொழில்வர்த்தித்துக் கொண்டு வருகிறது என்று மக்கள் நம்பினார்கள்.

பக்தி மார்க்கம் மட்டுமல்லாமல், தர்ம காரியங்களிலும், வள்ளல் என்று போற்றப்படும் அளவுக்கு அவரது செயல் இருந்தது, உள்ளூர் மாரியம்மன் கோவிலில், செவ்வாய் வெள்ளிக்கிழமைகளில், நாராயண மூர்த்தியா பிள்ளை மனைவி கமலவேணி அம்மையார் பெயரில் அன்னதானம் அட்டியில்லாமல் நடைபெறுகிறது. அன்னதானம் என்றால் ஒப்புக்கான அன்னதானம் அல்ல. மாறாக, அறுசுவையுடன் கூடிய உணவு. உள்ளூர், வெளியூர் பண்டாரம், பரதேசிகள் மட்டுமல்ல, விரும்பியவர்கள் எல்லாம் வந்து சாப்பிட்டு இளைப்பாறிப் போகலாம்.

அதே போன்றுதான் அவர் பெயராலும் குடும்பத்தினர் பெயரிலும் நடைபெறும் வியாபார மையங்களிலும், தொழில் கேந்திரங்களிலும் ஒருவித ஒழுங்கும், நியதியும் கடை பிடிக்கப்படுகிறது. இவ்வாறு நாராயண மூர்த்தியாபிள்ளை அந்த நகரத்தில் நாணயம், நம்பிக்கை பரோபகாரம் ஆகிய நற்குணங்களின் மொத்த உருவமாகக் கருதப்பட்டார்.

நாராயண மூர்த்தியா பிள்ளையின் குடும்பமானது ஆரம்ப திசையில் பிரிட்டீஷ்காரன் ஆட்சிக்காலத்தில் வெள்ளைக்காரனுக்கு விசுவாசமான ஜஸ்டிஸ் கட்சிக் குடும்பமாக இருந்தது. அவரது மூதாதையர்களில் ஒருவருக்கு ராவ் பகதூர் பட்டம் வழங்கப்படும் அளவுக்கு அந்தக் குடும்பம் வெள்ளைக்காரன்பால் பக்தி விசுவாசம் மிக்க குடும்பமாக இருந்தது.

வெள்ளைக்காரனுக்கு, அப்பகுதியில் வேண்டிய குடும்பமாக இருந்த காரணத்தால், பன்றி மலையிலும், சிறுமலையிலும் பலநூறு ஏக்கர்களை வளைத்துப் போட்டு,

காப்பி எஸ்டேட்டும், ஏலத் தோட்டங்களும் விஸ்தரித்து, மாகாணத்திலேயே செல்வமும் செல்வாக்கும் மிக்க குடும்பமாக அந்தக் குடும்பம் பரிணாம வளர்ச்சி பெற்றிருந்தது.

நாடு, அந்நிய ஏகாதிபத்தியப் பிடியினின்றும் விடுதலை பெற்ற போது கூட நாராயண மூர்த்தியா பிள்ளை, பிரிட்டீஷ் காரன்பால் மிகவும் பக்தி விசுவாசம் கொண்டவராகத்தான் இருந்தார். இந்திய நாட்டின் ஆட்சிப் பீடம் இந்தியர்கள் கையில் ஒப்படைக்கப்பட்ட போது, நிர்வாகமே என்னவென்று தெரியாதவர்கள் கையில் வெள்ளைக்காரன் அரசாட்சியை ஒப்படைச்சிட்டுப் போரான். தேசமே சீரழிஞ்சு தான் போவப் போவுது என்றுதான் சாபம் கொடுத்துக் கொண்டிருந்தார். தன் கூற்றுக்குச் சாதகமாகப் பல நாட்கள் இந்திய பாகிஸ்தான் பிரிவு காரணமாக ஏற்பட்ட இந்து முஸ்லீம் கலவரத்தையும் உயிர் இழப்பையும் சுட்டிக் காட்டிக் கொண்டிருந்தார்.

நாராயண மூர்த்தியா பிள்ளையின் வெள்ளைக்கார விசுவாசமும், சுதேசிய எதிர்ப்பும் இரண்டு ஆண்டுகள் கூட நீடிக்க வில்லை. சூடான பாறையின் மீது படிந்த பனித்துளியே போல் மாய்ந்து போயிற்று. தனது தொழில்களையும், மறைமுகமாகவும், வெளிப்படையாகவும், தன் பெயரிலும், பினாமிகள் பெயரிலும் குவித்து வைத்திருக்கும் செல்வத்தைப் பூதம் காப்பது போல் காப்பாற்றிக் கொள்வதற்கும், லைசன்ஸ், பெர்மிட்டுகள் பெற்று, தனது லேவா தேவியைப் பெருக்கிக் கொள்வதற்கும் ஓணான் சூழலுக்கு ஏற்ப நிறத்தை மாற்றிக் கொள்வதே போல், நாராயணமூர்த்தியா பிள்ளை தனது கோட்பாட்டை மாற்றிக் கொள்ள வேண்டி வந்தது. எனவே, ஒருநாள் நல்ல பொழுதாகப் பார்த்து, நாவன்னா மூவன்னா, தனது ஜஸ்டிஸ் கட்சி வேஷத்தைக் கலைத்துவிட்டு, கதர் ஆடை புனைந்து காங்கிரஸ் கட்சிப் பிரமுகர் ஆனார்.

அந்த நன்னாளுக்குப் பிறகு, நகரத்தில் மட்டுமல்ல ஜில்லாவில் நடை பெறும் எந்த ஒரு அரசு நிகழ்ச்சியும்

நாராயணமூர்த்தியா பிள்ளையின் பங்களிப்பும் ஆசியும் இல்லாமல் நடைபெறுவது கிடையாது. மட்டுமல்லாமல், அந்த ஊருக்கு வரும் மந்திரிப் பிரதானயரும், அரசு உயர் அதிகாரிகளும், அவரது மலையடிவார விருந்தினர் மாளிகையில் தங்காமல் போகமாட்டார்கள். நாவன்னா, மூவன்னா, ஆளுங்கட்சியில் அங்கம் வகித்தது. அவரை விட அந்தக் கட்சிக்குக் கிடைத்த வரப்பிரசாதம் என்றே கருதப்பட்டது.

இவ்வளவு செல்வமும் செல்வாக்கும் படைத்த நாவன்னா மூவன்னா, நாராயணமூர்த்தியா பிள்ளையின் பெயர் பதுக்கல்காரர்கள், கள்ளச்சந்தைக்காரர்கள் பட்டியலில் முதல் இடம் பெற்றிருப்பதைக் கண்டு நகர மக்கள் மலைத்துப் போனார்கள். இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்பது போல், பலர் அதை நம்ப மறுத்தனர். ஆசாட பூதியாக இருப்பார் என்று நம்பவில்லை.

●

காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டும் என்கிற முதுமொழிக்கேற்ப எதையும், எந்த லேவா தேவியையும், காலம் அறிந்து செயல்படுத்தக் கூடியவர். நாராயணமூர்த்தியாபிள்ளை. எனவே நாட்டில் உருவாக்கப் பட்ட செயற்கை உணவுப் பஞ்சத்தையும், மக்களிடம் ஏற்பட்டிருக்கும் ஏழ்மை நிலைமையும் பயன்படுத்திக் கொண்டு, ஆந்திரப்பிரதேசம் நெல்விளையும் பிரதேசமான நெல்லூரில் இருந்தும், குண்டூரிலிருந்து, கள்ளப் பெர்மிட்கள் மூலம் வாகன் வாகனாக ரெயிலில் நெல் மூட்டைகளைக் கடத்திவந்து, தனது ரகஸ்ய கோடவுன்களிலும், ரைஸ்மில்லிலும் பதுக்கி வைத்திருக்கிறார். ரைஸ்மில்லில் பகல்வேளையில் குருவி கொரிப்பதற்குக் கூட நெல் மணியோ, தானியமோ தட்டுப்படாது. மில் வெறிச்சோடிக் கிடக்கும் மாலை மயங்கி இருள் கவிந்து விட்டால் நெல்

மண்டியிலிருந்தும், ரைஸ்மில்லில் இருந்தும் லாரி லாரியாக உணவு தானியம் வேற்று ஊர்களுக்கும் ஜில்லாக்களுக்கும் போய்க் கொண்டிருக்கும். உள்ளூர் வியாபாரிகளுக்கும் போதாமையையும், பஞ்சத்தையும் சாக்குச் சொல்லி ஆனைவிலை குதிரை விலையில் தானியம் விலையாகும்.

கள்ள மார்க்கெட் சம்மந்தமாகவும், பதுக்கல் சம்மந்தமாகவும் அரசு போடும் அவசர சட்டங்களும், ஆணைகளும், சுற்றறிக்கைகளும், நாராயண மூர்த்தியா பிள்ளையைப் பொறுத்த மட்டில் வெறும் உபயோகமற்ற குப்பைகள், அவற்றை அவர் பொருட்படுத்துவதே கிடையாது. அரசு அதிகாரிகள் அத்தனை பேரையும் தனது விரல் நுனியில் ஆட்டிப் படைப்பவர். தப்பித்தவறி ஏதாவது அதிகாரி, அட்டம் சுழித்தால் போதும், ஏதாவது போலிச்சாக்குச் சொல்லப்பட்டு அந்த அதிகாரிக்கு மெமோ கொடுக்கப்பட்டு, விளக்கம் கேட்கப்படும், அல்லது மாறுதல் உத்தரவு இருபத்து நான்கு மணி நேரத்தில் வந்து சேரும்.

இவ்வளவு, அநியாயங்களும், அக்கிரமங்களும், நடைபெற்ற போதும், அவையெல்லாம் நாராயண மூர்த்தியா பிள்ளையின் நற்பெயருக்குக் களங்கம் வராத அளவில், நடைபெற்ற சுவடே தெரியாத வண்ணம் செய்யப்படும். அந்த அளவுக்கு ரகஸ்யமாகவும், வெளிப்படையாகத் தெரியாத வண்ணமும் செய்து முடிக்கப்படும்.

இப்போது கூட, நாவன்னா மூவன்னா பதுக்கி வைத்திருக்கும் உணவு தானியக் குவியல், ஏழுமலைகளையும், தாண்டி ஏழுகடல்களையும் தாண்டி, பாதுகாக்கப்பட்ட மயில் ராவணனின் உயிரே போன்று, அவ்வளவு ரகஸ்யமான இடத்தில் பதுக்கி வைத்துப் பாதுகாத்து வரப்படுகிறது.

இப்படியான சூழ்நிலையில், நாராயணமூர்த்தியா பிள்ளை உணவு தானியங்களைப் பதுக்கி வைத்திருக்கும்,

இடம் மட்டுமல்லாமல், ரகவாரியான புள்ளிவிவரம் அடங்கிய விளம்பரம், அவரது ரைஸ்மில் வாசலிலும், அவரது பிரதான அலுவலக வாயிலிலும் ஒட்டப்பட்ட விவரத்தை அவரது மானேஜர் சுப்புரத்தினம் போன் மூலம் தெரிவித்த போது நாராயணமூர்த்தியாபிள்ளை சித்தம் கலங்கிப் போனார்.

படுக்கைக்குப் போவதற்கு முன்னால், வழக்கம் போல மேல்நாட்டு மதுவையும், மாமிசத்தையும் சுவைத்துக் கொண்டிருக்கும் போது இந்த அதிர்ச்சி தரும் சேதியைக் கேட்டதும் பிள்ளை ஸ்தம்பித்துப் போனார்.

சுப்புரத்தினத்தைத் திரும்பவும், போனில் அழைத்து இரவோடு, இரவாகப் பதுக்கி வைக்கப்பட்டிருக்கும், தானியத்தை வேற்று இடங்களுக்கு மாற்றி வைத்துவிட வேண்டும் என்று உத்தரவிட்ட போது, மறுமுனையிலிருந்து வந்த சேதி தலையில் கோடையிடி இறங்கியது போன்று இருந்தது.

அதாவது, பதுக்கல் தானியம் இரவோடு இரவாக, அடியாட்கள் மூலமாகவோ, வாகனங்கள் மூலமாகவோ, அல்லது அரசு அதிகாரிகள், உதவியுடனோ, கடத்து வதற்கான முயற்சி மேற்கொள்ளப்படுமேயானால், மக்களாலும் பொதுஜன ஊழியர்களாலும், அந்த முயற்சி முறியடிக்கப்படுவதோடு பறிமுதல் செய்யப்பட்டு, பொது மக்களுக்கு இலவசமாகப் பகிர்ந்து கொடுக்கப்படும் என்று சுவரொட்டியில் எச்சரிக்கப் பட்டிருப்பதாகச் சுப்புரத்தினம் சொன்ன போது, நாராயண மூர்த்தியா பிள்ளை செய்வதறியாமல் கையைப் பிசைந்து கொண்டு நின்ற போது, அந்த அகால வேளையில் அவரைப் பார்ப்பதற்காக தேவகாயம், வாசலில் காத்து நிற்பதாக உதவியாளன் வந்து சொன்னான்.

சாதாரணமாக, அந்த அகால வேளையில் அதிலும், அவர் மதுவருந்தியிருக்கும் சமயம் தனது அந்தரங்க அறையில் யாரையும் அனுமதிக்காத நாவன்னா மூவன்னா முதலாளி, ஏற்பட்டிருக்கும் அபாயகரமான அசாதாரண நிலைமை காரணமாக எஸ்.பி. தேவசகாயத்தை உள்ளேவர அனுமதித்தார்.

சலாம் வைத்துவிட்டு அறையுள் பிரவேசித்த தேவசகாயம் தான் சேகரித்துக் கொண்டு வந்திருக்கும் போஸ்டர்களையும், துண்டுப் பிரசுரங்களையும், மேஜையின் முன் விரித்துப் பரப்பிய போது நகர் முழுவதும், தனது கள்ளச் சந்தை நடவடிக்கைகள் அம்பலப்படுத்தப் பட்டிருப்பது நாராயணமூர்த்தியா பிள்ளைக்குத் தெரிய வந்தது.

நகரத்திலும் ஜில்லாவிலும் உள்ள பல பிரபல புள்ளிகள் பெயர்களும் அந்தப் பட்டியலில் இடம் பெற்றிருக்கின்றன. எனவே, தனது சொத்தையும், தன்னை ஒத்தவர்களையும் காப்பாற்றியாக வேண்டி, நாராயண மூர்த்தியா பிள்ளை அரசியல் தலைவர்களையும் மந்திரிப் பிரதானியர்களையும் இரவோடு இரவாகத் தொடர்பு கொண்டார்.

நகரத்தின் முக்கியப் பிரமுகர்களும், அரச அதிகாரிகளும், நாவன்னா, மூவன்னா முதலாளியின் மாளிகைக்கு வரவழைக்கப்பட்டு, மந்திராலோசனை செய்யப்பட்டது.

அவர்களது மேலான ஆலோசனைப்படியே அன்று இரவே நகரத்தில் செக்ஷன் நூற்றி நாற்பத்தி நான்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

முக்கிய வீதிகளிலும், குடியிருப்புக்களிலும் ஆயுதம் தாங்கிய போலீஸ் ஜவான்கள் காவலுக்கு நிறுத்தப்பட்டனர்

போலீஸ் வண்டிகள் நகரமெங்கும் பம்பரமாகச் சுழன்று கொண்டிருந்தன.

நகரமே போலீஸால் முற்றுகையிடப்பட்டது போன்ற தோற்றம்.

இவற்றையெல்லாம் கண்டு கொள்ளாத மட்டில், நகரத்தில் வைகறை பூக்கலாயிற்று.

●

13

நாராயண மூர்த்தியா பிள்ளையும், மற்றும் நகரத்தில் உள்ள பெரும் பணக்காரர்களும், தங்களுக்கும், தங்கள் உடைமைகளுக்கும், தங்களால் நடத்தப்படும் நிறுவனங்களுக்கும் பாதுகாப்பு வேண்டும் என்று காவல் துறையினருக்கும், அரசு அதிகாரிகளுக்கும் மனுக்கொடுத்து, மேலிடத்திலிருந்து அதிகாரிகளுக்கு நிர்பந்தம் கொடுக்கலாயினர்.

இதையே சாக்காகக் கொண்டு, எஸ்.பி. தேவசகாயம் அந்த ஜில்லாவின் காவல்துறையை வேட்டை நாயாக முடிக்கி விட்டிருந்தான். தடை செய்யப்பட்டுத் தலைமறைவாக இருக்கும் தலைவர்களைத் தேடவும் அவர்களைக் கைது செய்யவும் வேண்டி போலீஸ் இலாகாவின் உளவுத்துறை இரவு பகலாகப் பம்பரமாகக் சுழன்றது.

நகரத்தில் தடை உத்தரவு அமுல் படுத்தப்பட்டிருந்ததால், வீதிக்கு வரும் ஒவ்வொரு மனிதனும் போலீஸால் கண்காணிக்கப்பட்டான். தோல் பதனிடும் சங்கத்தின் முக்கிய ஊழியர்களை எப்படியாவது கைது செய்து, காவலில் வைத்தால்தான், பதுக்கல் காரர்களுக்கும், கள்ளச் சந்தைக்காரர்களுக்கும் பாதுகாப்பு என்பதால், தொழிலாளர் குடியிருப்புக்களிலும், சேரிகளிலும் தேவசகாயத்தின் போலீஸ் அவர்களை வலைபோட்டுத்

தேடிப் பார்த்தது எவ்வளவு முயற்சி செய்த போதும், அவர்கள் யாரையும் போலீஸால் கண்டு பிடிக்க முடியவில்லை.

ஒருவிதமான செயற்கையான பீதி காவல் துறையினராலும் அரசு அதிகாரிகளாலும் நகரத்தில் உருவாக்கப் பட்டிருந்தது. மக்கள் கூடும் பொது இடங்களில் எல்லாம் கடுமையான போலீஸ் காவல் போடப்பட்டிருந்தது.

நகரத்தில் ஏற்படும் ஒவ்வொரு அசைவும் தேவசகாயத்துக்கு உடனுக்குடன் தெரிவிக்கப்பட்டுக் கண்காணிக்கப்பட்டது. சொல்லப் போனால் அந்த நகரமே. அந்த இரண்டு நாட்களும், எஸ்.பி.தேவசகாயத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது.

கெடு விதிக்கப்பட்ட இரண்டு நாட்களிலும் எந்த விதமான ஆர்பாட்டமோ, அசம்பாவிதமோ நடைபெறவில்லை. மூன்றாம் நாள் முற்பகல் வரையிலும், அப்படிப்பட்ட சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்பதாலும், நடக்கவிருந்த பெரும் ஆர்ப்பாட்டத்தையும், நிகழ்வையும் முறியடித்துவிட்ட மகிழ்ச்சி எஸ்.பி. தேவசகாயத்திற்கும் போலீஸ் இலாகாவுக்கும்.

தனது இந்த நடவடிக்கைக்குப் பெரிதும் ஒத்துழைத்த தனது கீழ் அதிகாரிகளைத் தனது அலுவலகத்துக்கு வரவழைத்து, அவர்களைப் பாராட்டுவது போல் தேவசகாயம் தற்பெருமையாற்றித் தம்பட்டமடித்துக் கொண்டிருக்கும் போது அவனது காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போன்ற அந்தச் செய்தி தேவசகாயத்துக்குச் சொல்லப்பட்டது.

அதாவது மலைஅடிவாரத்தை ஒட்டிக் கட்டப் பட்டிருக்கும் நாராயண மூர்த்தியா பிள்ளையின் விருந்தினர்

மாளிகையை நகரத்து மக்கள் முற்றுகையிட்டிருப்பதோடு, பதுக்கல் அரிசி மூட்டைகளைக் கடத்த முயன்ற இரண்டு லாரிகளையும் மக்கள் மடக்கிப் போட்டிருக்கிறார்கள். பட்டினியாலும், பசியாலும் அவதிப்பட்ட நகர மக்கள் நாவன்னா மூவன்னா தொழிலதிபரின் விருந்தினர் மாளிகையை நோக்கிப் படையெடுப்பது போல் திரண்டு கொண்டிருக்கின்றனர்.

தோல் பதனிடும் தொழிலாளர்களும், நகர சுத்தித் தொழிலாளர்களும், இதர தொழிலாளர்களும் பொது மக்களும் சந்தனத் தேவன் தலைமையில் செங்கொடிகளை ஏந்திப் பிடித்த வண்ணம் நாராயண மூர்த்தியா பிள்ளையின், மலையடிவார பங்களாவினை நோக்கி ஊர்வலமாக வந்து கொண்டிருக்கின்றனர்.

நாராயண மூர்த்தியா பிள்ளையின் விருந்தினர் மாளிகையானது. அந்த வட்டாரத்து அரசியல் பிரமுகர்கள், அரசியல் அதிகாரிகள் மத்தியில் மிகவும் பிரபலமும், பிரசித்தமானதுமான மாளிகை இப்படி அல்லல்படும் என்று எதிர்ப்பாக்கப்படவில்லை.

பிருந்தாவனம் தோட்டத்துக்கு நிகரான மலர்த் தோட்டங்களும் நீர் ஊற்றுக்களும் நிறைந்த நந்தவனம். அதைப் பராமரிப்பதற்கென்றே வேலை ஆட்கள் சுகிப்பதற்கான சகலமான வசதிகளும் நிறைந்த அறைகள், பணியாட்கள் ஆகிய சகல வசதிகளும், நிறைந்த அந்த பங்களாவை, ஒரு சிறைக் கூடத்தைப் பாதுகாப்பது போல் கடுமையான வியூகம் அமைத்துக் கண்காணிக்கப்பட்டு வந்தது. மாளிகையில் என்ன நடக்கிறது என்கிற விவகாரமே வெளி உலகத்துக்குத் தெரியாது. அவ்வளவு பாதுகாப்புக் கொண்ட கட்டிடம்.

எனவே, அரசு உயர்அதிகாரிகளும் மந்திரிப் பிரதானிகளும், அந்த வட்டாரத்துக்கு வருகிறார்கள் என்றால் அந்த மாளிகையில் தான் தங்குவது வழக்கம். அரசியல் விவகாரங்கள் பேரங்கள் என்றால், பிரமுகர்கள் அந்தப் பங்களாவைத்தான் தேர்ந்தெடுப்பார்கள். ஆனால், அரசின் உயர் அதிகாரிகளோ, மந்திரிப் பிரதானியரோ, தொழில் அதிபரும், பிரமுகருமான நாவன்னா மூவன்னா முதலாளி,அந்த மாளிகையை இப்படியான சட்ட விரோதமான நடவடிக்கைக்குப் பயன்படுத்திக் கொண்டிருப்பார் என்று நினைக்கவில்லை.

விருந்தினர் மாளிகை மக்களால் முற்றுகை யிடப்பட்டிருக்கும் சேதியைக் கேட்டபோது எஸ்.பி. தேவகாயத்துக்குச் சண்டாளமாகக் கோபம் ஏற்பட்டது. தனது எதிரில் உட்கார்ந்திருக்கும், கீழ்மை போலீஸ் அதிகாரிகளைச் சகட்டு மேனிக்குத் திட்டித் தீர்த்தான்.

கோபம் தாளாமல், இருக்கையினின்று எழுந்து கோபம் கொண்ட வேங்கையாகத் தனது வழுக்கை விழுந்த தலையில் ஊற்றெடுக்கும் வியர்வையைத் தூவாலையால் துவட்டிக் கொண்டான்.

தடியடியும் துப்பாக்கிப் பிரயோகமும் செய்து, கூட்டத்தைக் கலைத்து, ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைத்துவிடலாம் என்கிற விசித்திரமான எண்ணம் ஏற்படவும்,

துப்பாக்கிப் பிரயோகம் செய்வதற்குத் தனக்கு அனுமதி வேண்டும் என்று கலைக்டரை போன் மூலம் கேட்டபோது, மாற்றலாகி வந்திருந்த புதிய கலைக்டர் நரசிம்மன் அனுமதி தர மறுத்துவிட்டதோடு, உடனடியாகத் தன்னைப் பின் தொடர்ந்து நாராயண மூர்த்தியா பிள்ளையின் விருந்தினர் மாளிகைக்கு விரையும்படிப் பணித்தார், தேவகாயத்தால் பல்லைக் கடித்துத் தனது கோபத்தை மட்டுப்படுத்தத்தான்

முடிந்தது. அல்லாமல் கலைக்டரை எதிர்த்துப் பேச முடியவில்லை.

மாற்றலாகி வந்திருக்கும் புதிய கலைக்டர் நரசிம்மன், எதையும் நிதானமாகச் சிந்தித்துச் செயல்படக் கூடியவர். எனவே தேவசகாயத்தைப் போல் அவசரப் படவில்லை. எனவே கலைக்டர் உத்தரவுப் படி அவன் நடக்க வேண்டிய தாயிற்று.

கலைக்டர் நரசிம்மனும், தேவசகாயமும் போலீஸ் படை சூழ, விருந்தினர் மாளிகையை அடைந்த போது, அங்கு குழுமியிருக்கும் மக்கள் திரளைப் பார்த்து நரசிம்மன் மலைத்துப் போனார்.

சார்லசும், ஒசேப்பும் மெக போன் வாயிலாக, அங்கே திரண்டிருக்கும் மக்களை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தனர். சிட்டம்மாள் அமலோற்புதம் தலைமையில் திரண்டிருக்கும் பெண்கள் பகுதியில் கலைக்டரைப் பார்த்ததும் சலசலப்பு ஏற்பட்டது.

கூட்டத்தையும், அம்மக்களிடம் எழும் ஆவேசத்தையும் பார்த்த போது, தேவசகாயத்துக்கும், இன்ஸ்பெக்டர் தீச்சட்டிக் கோவிந்தனுக்கும், கோபத்தால் கரங்கள் குறுகுறுக்கலாயின. எந்த நேரத்திலும் தங்களது படை பட்டாளத்துடன், திரண்டிருக்கும் மக்கள் மீது பாய வேண்டும், அடக்க வேண்டும் என்று துடிதுடித்துக் கொண்டிருந்தனர். கலைக்டர் நரசிம்மன் மட்டும் உணர்ச்சி வசப்படாமல் நிதானமாக நடந்து கொள்ள வேண்டும் என்று தேவசகாயத்துக்கு உத்தரவிடுவது போல் எச்சரிக்கை செய்தது அவனுக்கு எரிச்சல் தருவதாக இருந்தது.

துண்டுபாய் சவுக்கத்அலி, தெருமக்களையும் மகமதியாபுரம் முஸ்லீம் மக்களையும் கூட்டிக் கொண்டு தனது டிரேட் மார்க்கான முக்கொடி பறக்கும் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு வந்து சேர்ந்தார்.

அந்த விருந்தினர் மாளிகைக்கு எதிர்புறம், சற்று மேடாகத் தெரியும் பாறைத் துண்டின் மீது நின்ற வண்ணம் தலைவர் இருதயசாமி கூட்டமாக நின்றிருக்கும் மக்களைப் பார்த்துப் பேசிக் கொண்டிருந்தார். அவர் அருகில் மகமதியாபுரம் முஸ்லீம் பெரியவர்களான அசீன் மகமதுவும் மைதீன் குட்டியும் நிற்கிறார்கள். வேறுசில பொது அமைப்புக்களின் தலைவர்களும் அவர்களுடன் நின்று காரியமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

கலைக்டர் நரசிம்மனும் ஏனைய ரெவன்யூ அதிகாரிகளும் வருவதைப் பார்த்ததும் கூட்டத்தில் அரவம் ஓய்ந்து அமைதி ஏற்பட்டது. நரசிம்மன், தேவசகாயத்தையும், அவனது பட்டாளத்தையும் எல்லையில் நிற்கும் படியாக எச்சரித்து விட்டுத் தனது ரெவன்யூ அதிகாரிகளுடன் இருதயசாமியும் மற்றவர்களும் கூடி நிற்கும் பகுதிக்குப் போனபோது அவர்கள் அவரை அமைதியாக வரவேற்றார்கள்.

"இவ்வளவு கூட்டம் தேவைதானா?" நரசிம்மன் இருதயசாமியையும் மற்றவர்களையும் பார்த்துக் கேட்டார்.

"இரண்டு நாளைக்கு முன்னால சர்வ கட்சியின் சார்பில் நாங்கள் கொடுத்த மகஜர் பேர்ல அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தா இங்க இவ்வளவு பேரு கூடியிருக்க மாட்டாங்க"

இருதயசாமி பதில் சொன்னார்.

"ரெண்டு நாளா சும்மாவா இருந்தீங்க, வீதிக்கு வீதி போலீசைப் போட்டு சனங்ளை மிரட்டல்லா செஞ்சிங்க."

நைந்து போன உணர்வோடு அசீன்பாய் அங்கலாய்த்தார்.

"அதெல்லாம் நடந்து போன சம்பவங்கள். இப்போ என்ன செய்யப் போரதா உத்தேசம்"

கலைக்டர் அவர்களைப் பார்த்துக் கேட்டார்.

"நாங்க நினைச்சிருந்தா, இந்தக்கேட்டை உடைச்சிட்டு உள்ளே பதுக்கி வெச்சிருக்க தானியங்களை எல்லாம் கைப்பத்தியிருக்க முடியும். சட்டத்தை மதிக்கிறவங்க நாங்க. நடவடிக்கை எடுக்க வேண்டியவங்க அரசு அதிகாரிகளான நீங்க" என்று சொன்னார் இருதயசாமி.

இதற்குள் எங்கிருந்தோ சில நாற்காலிகளும் ஒரு பெஞ்சும் அங்கு கொண்டு வந்து போடப்பட்டபோது, கலைக்டரும் ரெவன்யூ அதிகாரிகளும் இருக்கையில் அமர்ந்தார்கள்.

கலைக்டர் நரசிம்மன் இருதயசாமியையும் மற்றவர்களையும் தனது அருகில் அமரும்படி சொன்னபோது, மரியாதையின் நிமித்தம் நிற்பதாகச் சொல்லி அமர மறுத்துவிட்டனர்.

வழக்கம் போல நியாயமாகப் பேசிப் பயமுறுத்தும் உபாயத்தை நரசிம்மன் கையாளலாம் என்று இருதயசாமி மிகவும் நிதானமாகவே பேசலானார்.

"மக்கள் விரோதி நாராயண மூர்த்தியைக் கைது செய்" என்கிற கோஷம் கூட்டத்திலிருந்து எழுந்தது.

ஒசேப்பும், சந்தனத்தேவனும் கூட்டத்தாரை அமைதியாக இருக்கும்படி, மெகபோன் வாயிலாகக் கேட்டுக் கொண்டார்கள்.

சார்லசும், சிட்டம்மாவும் கூட்டத்தினர் மத்தியில் புகுந்து அவர்களை அமைதிப் படுத்தலானார்கள்

இருதயசாமியும், மற்றவர்களும் பேசுவதைக் கேட்ட கலைக்டர் நரசிம்மன்

"நாங்க என்ன செய்யவேணும்ண்ணு நீங்க விரும்புரீங்க. ஒங்களோட கோரிக்கை தான் என்ன?" நரசிம்மன் ஒன்றும் தெரியாதவர் போல் கேட்டபோது, இவ்வளவு நேரமும் அங்கு நடப்பதைக் கவனித்த வண்ணம் நின்றிருந்த வீரபத்திரன்

"அரசாங்கமே அறிக்கைவிட்டிருக்கே சார்,அதன்படி பதுக்கல் பொருட்களைப் பறிமுதல் செய்து, சமூக விரோதிகளைக் கைது செய்ய வேண்டியது தானே. நாங்க சொல்லித்தான் நீங்க தெரிஞ்சுக்கனுமாக்கும்" என்று வழக்கம் போல் தனது கனத்த கரகரப்பன குரலில் சொல்லவும், நரசிம்மனுடன் வந்த வேறு ஒரு அதிகாரி சற்று கோபமாக

"நீங்க எங்களுக்கு உத்தரவு போடறீங்களா" என்று கேட்டான்.

"அய்யா நீங்க மக்களோட பணியாட்கள் என்பது ஞாபகமிருக்கட்டும்" கருப்புச் சட்டைக் காரனுக்குள்ள தெம்புடன் பேசவும் கலைக்டர் குறுக்கிட்டார். அதிகாரி வேறுவழியில்லாமல் மௌனமாகிப் போனான்.

"கலைக்டரய்யா, நீங்க இப்போவே, பதுக்கி வைக்கப்பட்டிருக்க உணவு தானியத்தைப் பறிமுதல் செய்யலையானா நாங்க இங்கேருந்து போகப் போரதில்லை பட்டினி கெடந்து சாவுறதை விட துப்பாக்கிக் குண்டு பட்டுச் செத்தா ஒரு நாழிகையிலே உயிர் போயிடும் தொல்லையில்லை" திடமாக இருதயசாமி சொன்னார்

அவர்களது உறுதியையும் கோபாவேசத்தையும் கண்ட கலைக்டர் நரசிம்மன் வேறு வழியில்லாமல், மாளிகையில் பதுக்கப்பட்டிருக்கும் உணவு தானியம், பொதுமக்கள்

பிரதிநிதிகள் முன்னிலையில் பறிமுதல் செய்வதாக ஒப்புக் கொண்டார்.

அன்று இரவே நாராயண மூர்த்தியா பிள்ளையைக் கைது செய்வதாக ஒப்புக் கொண்டதோடு, நகரத்தில் இரண்டு நாட்களுக்கு முன்னால் வெளியான பிரசுரத்தில் கண்ட நபர்கள் பதுக்கி வைத்திருக்கும் பொருட்களைப் பறிமுதல் செய்து, மக்களுக்கு விநியோகம் செய்யப்படும் என்பதோடு பதுக்கல் பேர்வழிகளும் கைது செய்யப்படுவார்கள் என்று அரசு தரப்பில் ஒப்புக் கொள்ளப்பட்டது.

இந்தமுடிவை கலைக்டர் நரசிம்மனே அங்கு அலைகடலெனத் திரண்டிருந்த மக்களுக்குச் சொன்னார்.

14

அந்தச் சம்பவத்துக்குப் பிறகு நகரத்தில், உழைக்கும் மக்கள் மத்தியிலும், தொழிலாளர் மத்தியிலும் ஒருவகையான நம்பிக்கையும் தெம்பும் ஏற்பட்டிருந்தது. ஒன்றுபட்டுச் செயல் பட்டால் எதையும் சாதிக்க முடியும் என்கிற உணர்வு தோல்ஷாப்புத் தொழிலாளர்களிடையிலும், நகர சுத்தித் தொழிலாளர்களிடமும் ஏற்படலாயிற்று.

அதற்கு ஏதுவாகக் கடந்த ஆறுமாத காலமாக மூடிக்கிடந்த தோல்ஷாப்புக்களில் பணிகள் முன்னைய காலத்தைவிட வேகமாகவும், விறுவிறுப்பாகவும் நடக்கத் தொடங்கியது. கிராமங்களில் இருந்து வேற்று ஜில்லாக்களிலிருந்தும் கொள்முதல் செய்யப்பட்ட பதப்படுத்தப்படாத ஆட்டு, மாட்டுத் தோல்கள், தெருவையே நாறடித்தபடி தோல் ஷாப்புகளில் மாட்டு வண்டிகளில் கொண்டுவந்து இறக்கப்பட்டன. தோல் ஷாப்புகளில் வேலைகள் தொடங்கப்பட்டதன் காரணமாக தோல்ஷாப்புத் தொழிலாளர் குடியிருப்புக்களிலும், சேரிகளிலும் புதிய உற்சாகம் பிறந்திருந்தது.

இந்திய அரசாங்கமானது பதப்படுத்தப்பட்ட தோல் ஏற்றுமதிக்கு விதித்திருந்த தடையை நீக்கியதோடு, தொழிலை ஊக்குவிக்கும் வகையில் மானியம் கொடுப்பதாக அறிவிப்புக்கொடுத்திருந்தது. மேலும் இந்தியத் தோலுக்கு அதிலும் தென்னிந்திய தோல்ஷாப்புக்களில் பதப்படுத்தப்பட்ட தோலுக்கு மேலை நாடுகளில் வரவேற்பும், மார்க்கெட்டும் இருந்த காரணத்தால், மிதப்பில் கண்பதிந்திருக்கும் தூண்டில்

காரனைப் போல் சதா லாபத்திலேயே கண்ணும் கருத்துமாக இருந்த நகரத்துத் தோல் ஷாப்பு முதலாளிகளும், தோல் மண்டிக்காரர்களும், காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள வேண்டும் என்கிற விவேக புத்தியுடன் செயல்படலானார்கள்.

கடந்த ஆறுமாத காலமாக, தோல்ஷாப்புத் தொழிலாளர் சங்கத்தின் கோரிக்கையான சம்பள உயர்வு, மற்றும் போனஸ் ஆகிய கோரிக்கைகளை நிறைவேற்ற மறுத்ததோடு, பிடிவாதமாகத் தோல் ஷாப்புக்களையும் மூடிவைத்துக் கொண்டு நின்ற தோல்ஷாப்பு முதலாளிகள், அரசாங்கம் ஏற்பாடு செய்திருந்த எந்த ஒரு பேச்சு வார்த்தைக்கும் வருவதற்கு மறத்துவிட்டதோடு, தோல்ஷாப்புத் தொழிலாளர்களைப் பட்டினி போட்டு வதைப்பதோடு, மிரட்டிப் பணிய வைக்க வேண்டும் என்ற தங்களது கையாட்களும், அடியாட்களுமான போக்கிரிகளைப் போலீஸ் உதவியுடன் குடியிருப்புக்களில் புகுந்து தகராறு செய்வதற்குச் செய்த உபாயமும் கழுவனுக்கு ஏற்பட்ட பரிதாபமான முடிவோடு முடங்கிப் போயிற்று.

இப்படியான இக்கட்டான சூழ்நிலையில் தேங்கிப் போயிருந்த தோல்ஷாப்பு உடைமைகள் எக்காரணத்தைக் கொண்டும், அரசாங்கத்தின் சலுகையையும், வர்த்தகச் சந்தர்ப்பத்தையும் இழக்கத் தயாராக இல்லை. எனவே தோல் வர்த்தக சங்கச் செயலாளர் மக்தூன் மைதீனே முன் வந்து, முத்தரப்புப் பேச்சு வாரத்தையில் கலந்து கொண்டு, அரசு அதிகாரிகள் முன்பாகவே தொழிற்சங்கத்தின் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்வதாக ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்த மறுதினமே நகரத்திலும், நகரத்தைச் சுற்றியும் உள்ள தோல் ஷாப்புகளில் வேலைகள் ஆரம்பமாயிற்று.

கலைக்டர் நரசிம்மன், நாராயண மூர்த்தியா பிள்ளை விருந்தினர் மாளிகையின் முன் கூடியிருந்த மக்கள் திரள் முன்னால் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றப் போவதில்லை என்று அதிபர் நாராயண மூர்த்தியாபிள்ளையும், நகரத்துப் பெரும் புள்ளிகளும் எண்ணியிருந்தார்கள்.

கலைக்டர் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றச் சொல்லி மேலும் போராட்டங்களும்., ஆர்ப்பாட்டங்களும் நடத்த வேண்டிவரும் என்று தான், தலைவர் இருதயசாமியும், இதர அரசியல் கட்சித் தலைவர்களும் எண்ணியிருந்தனர். ஆனால், கலைக்டர் நரசிம்மன், சம்பவம் நடந்த மூன்றாவது தினமே, சர்வகட்சிப்பிரமுகர்களை, உத்தியோகப் பூர்வமாகக் கலைக்டர் அலுவலகத்துக்கு வரவழைத்து, அவர்களுடன் கலந்தாலோசிக்கவும் செய்தார். அன்று மாலையே, நாராயண மூர்த்தியாபிள்ளையின் அரசியல் செல்வாக்கையும் பொருட் படுத்தாமல் கைது செய்தார். நாராயணமூர்த்தியா பிள்ளை கைது செய்யப்பட்ட கையோடு, அவரது கிட்டங்கியிலும், ரைஸ்மில்களிலும் இதர இடங்களிலும் பதுக்கி வைக்கப்பட்டிருந்த உணவு தானியம் அனைத்தும் பறி முதல் செய்யப்பட்டு, அரசு சேமிப்புக்கிடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டது. இச்செயல் நகரத்திலும் ஜில்லாவிலும் பெரும் அதிர்ச்சியையும் பரபரப்பையும் உண்டு பண்ணிவிட்டது. அந்த அதிர்ச்சியும், பீதியும் ஓய்வதற்குள்ளாகவே, சர்வ கட்சிக்காரர்கள் கொடுத்த பட்டியலில் காணப்பட்ட பதுக்கல் பேர்வழிகள், கருப்புச் சந்தைக் காரர்கள் ஆகியவர்களின் கிட்டங்கிகள், கலைக்டருடையவும் ரெவன்யூ அதிகாரிகளுடையவும் மேற் பார்வையிலேயே சோதனை செய்யப்பட்டுப் பதுக்கல் உணவு தானிய வகைகள் அரசால் கையகப்படுத்தப்பட்டது. சிலர் கைது செய்யப்பட்டனர். வேறு பலர் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காகச் சென்னை, தலை நகரை நோக்கி அபயம் தேடிப் படையெடுக்கலாயினர்.

கலைக்டர் நரசிம்மனின் இத்தகைய நடவடிக்கைகள், எஸ்பி. தேவகாயத்துக்கு மகா மனஎரிச்சலை ஏற்படுத்தியிருந்தது. வேறு வழியில்லாமல் தனக்கு வேண்டியவர்களையெல்லாம் கைது செய்ய வேண்டியிருந்தது.

நரசிம்மனால், நடவடிக்கைகளுக்கு உள்ளாகிப்போன பிரமுகர்களும், செல்வந்தர்களும் தங்களுக்கு ஏற்பட்ட அவமதிப்பையும், நஷ்டத்தையும் தோல்வியையும் ஏற்றுக் கொள்ளத்தயாராக இல்லை நகரப்பிரமுகர்களான கள்ளச் சந்தைக்காரர்கள், பதுக்கல்பேர்வழிகளின் பேரில்

நடவடிக்கை மேற்கொண்ட மறு மாதமே நரசிம்மன் ஜில்லாக் கலைக்டர் பதவியினின்றும் மாற்றப்பட்டு, சென்னை செக்கரட்டேரியட்டில், அதிகாரம் அற்ற ஒரு இலாகாவுக்குப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். ஆனால் நரசிம்மனோ, அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல், தனது மனச்சாட்சிக்கு ஏற்ப செயல்பட்டதாகத் தனது சிப்பந்திகளிடமும், சக அதிகாரிகளிடமும் சொல்லி விடை பெற்றுக் கொண்டார். கலைக்டர் நரசிம்மனால், பறிமுதல் செய்யப்பட்டு அரசு சேமிப்புக்கிடங்குகளில் வைக்கப்பட்ட உணவு தானியம் அரசு கடைகள் வாயிலாக அந்த நகரத்து மக்களுக்கு விநியோகமாகிக் கொண்டிருந்தது.

ஆனால் அரசின் ஊழல்களையும் அக்கிரமங்களையும் மக்கள் விரோத நடவடிக்கைகளையும், அம்பலப்படுத்திய வண்ணம், சட்ட விரோதமாக்கப்பட்ட கட்சியின் சின்னத்தைத் தாங்கிய பிரசுரங்களும், விளம்பரங்களும் தினம் தினம் நகரத்தின் ஏதாவது ஒரு பகுதியில் வெளியாகிக் கொண்டிருந்தது. அதைவிட அரசுக்குத் தலை வேதனை தரக்கூடிய விஷயம்; மக்கள் அந்தப் பிரசுரங்களில் காணப்படும் வழி காட்டுதல்களுக்குச் செவி மடுத்துச் செயல்படுவது. எனவே, தலைமறைவு வாழ்க்கை நடத்தும் தலைவர்களை உடனடி கண்டுபிடித்துக் கைது செய்வதுடன், அவர்களால் வெளியிடப்படும் பிரசுரங்களையும் வெளியீடுகளையும் அவற்றை அச்சடித்து வெளியிடும் அச்சகங்களையும் அமைப்புக்களையும் கண்டுபிடித்துக் கைது செய்து பறிமுதல் செய்ய வேண்டும் என்கிற தாக்கீது எஸ்பி. தேவசகாயத்துக்கு அரசாங்கத்தினிடமிருந்து தினம் தோறும் வந்த வண்ணமிருந்தது. சில வேளைகளில் தேவசகாயத்தின் ஏலாமையைக் கண்டித்துக் கண்டனச் சுற்றறிக்கைகளும் வந்து கொண்டிருந்தன.

எனவே, நகரத்திலும், சுற்று வட்டாரத்திலும் குறிப்பாகத் தோல் பதனிடும் தொழிலாளர் குடியிருப்புக்களிலும், சேரிப் பகுதியிலும் போலீஸ் கண்காணிப்பும் உளவும் பன்மடங்கு

அதிகப் படுத்தப்பட்டிருந்தது. சொல்லப் போனால் நகரத்தின் ஒவ்வொரு பகுதியும் கடுமையான போலீஸ் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

இதன் காரணமாக, தோல்ஷாப்புத் தொழிலாளர் ஒவ்வொருவரும் போலீஸ்காரராலும் உளவாளிகளாலும் கண்காணிக்கப்பட்டனர். திடீர் திடீரென இரவு வேளைகளில் சோதனை என்ற பேரில், தொழிலாளர் குடியிருப்புக்கள் தேவசகாயத்தின் போலீஸாரால் உபத்திரவிக்கப்பட்டன. பயங்கர ஆயுதங்கள் பற்றியும், வெடிகுண்டு பற்றியும் சோதனை நடத்துவதாகப் போலிச் சாக்குகள் சொல்லப்பட்டு, தொழிலாளர்கள் வீட்டுப் பண்டபாத்திரங்கள், பிள்ளை குட்டிகள் இரவு வேளையில் குடிசைகளை விட்டு வெளியே தூக்கி வீசப்பட்டு அடித்து நொறுக்கப்படும்.

போலீஸாருடையவும், உளவாளிகளுடையவும் தொல்லையும், கொடுமையும் அன்றாட நிகழ்ச்சியான போது, எனவே அடக்குமுறை எல்லையை மீறிப்போன போது அதைக் கண்டிக்கும் வகையில், நகரத்தில் பொது மக்களும் தொழிலாளர்களும் ஏகமாகக் கலந்துகொண்ட பிரம்மாண்ட மான ஊர்வலம் நடைபெற்றது. ஊர்வலத்தில் சவரியார் பாளையம். தோமையர்புரம் சேரி, லயன் தெரு, மக்காள் மக்கான் தெரு என்று ஏராளமான ஆண் பெண் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர் ஊர்வலத்துக்குப் பாது காவலாகவும், அவர்கள் ஒழுங்கை மீறாமல் பார்த்துக் கொள்வதற்காகவும் இன்ஸ்பெக்டர் தீச்சட்டிக் கோவிந்தனும், அவனது சிப்பாய்களும் ஊர்வலத்தின் முன்னும் பின்னும் அணிவகுத்து வந்து கொண்டிருந்தனர்.

ஊர்வலம் நாலு ரத வீதிகளையும் தாண்டி, பெரிய மார்க்கெட் தெருவில், நாராயண மூர்த்தியாபிள்ளை நகைக் கடையைக் கடந்த போது, கடையிலிருந்து ஆசீட் திரவம் நிரப்பப்பட்ட கோழி முட்டைகள் சரமாரியாக ஊர்வலத்தை நோக்கி வீசப்பட்டன. ஆசிட்பட்டு, ஊர்வலத்தில் வந்த பொம்மணனுக்கும், கருப்பையா, ஆறுமுகம் ஆகிய தொழிலாளர்களுக்குத் தீக்காயம் ஏற்படவும் ஊர்லத்தில் சலசலப்பு ஏற்பட்டது.

நண்டைச்சுட்டு, நரியைக் காவலுக்கு வைத்தாற் போன்று, ஊர்வலத்துக்குப் பாதுகாப்பு என்கிற போர்வையில் நடந்து வந்த இன்ஸ்பெக்டர் தீச்சட்டிக் கோவிந்தனும் போலீஸாரும் இதையே சாக்காகக் கொண்டு ஊர்வலத்தில் புகுந்து கண் மண் தெரியாமல் தடியடிப் பிரயோகம்செய்து, அமைதியாகவும், கிரமமாகவும் நடைபெற்ற ஊர்வலத்தைக் கலைத்தார்கள். குதிரை கீழே தள்ளியது அல்லாமல் புதைக்கக் குழியும் பறித்த கதையாகப் போயிற்று.

ஊர்வலத்தில் வந்த பல தொழிலாளிகள் கைது செய்யப்பட்டுப் போலீஸ் நிலையம் கொண்டு செல்லப் பட்டார்கள். நகரம் மீண்டும் பீதிக்குட்படுத்தப்பட்டது. பதட்ட நிலை உருவாக்கப்பட்டது.

மறுநாள் காலையில், தோல் பதனிடும் தொழிலாளர் சங்கமும், நகர சுத்தித் தொழிலாளர் சங்கமும், சட்ட விரோதமான சங்கங்கள் என்ற அரசின் அறிவிப்பு பத்திரிக்கைகளில் தலைப்புச் செய்தியாக வெளியிடப்பட்டது.

எஸ்.பி. தேவசகாயம், மகா உற்சாகத்துடன், இரண்டு சங்கங்களையும் பூட்டி சீல் வைத்தான்.

இருதயசாமி வீட்டுக் காவலில் வைக்கப்பட்டது போல், அவர் வீட்டின் முன்பு துப்பாக்கி ஏந்திய போலீஸ்காரர்கள் காவலுக்கு நிறுத்தப்பட்டனர்.

உழைப்பாளி மக்களைப் பயமுறுத்துவது போல், மலபார் போலீசும், துப்பாக்கி ஏந்திய போலீஸ் ஜவான்களும், தொழிலாளர் குடியிருப்புக்களில் ரோந்து வந்தார்கள்.

15

1950 ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம்நாள் புதிய அரசியல் சட்டம் அமுலுக்குவந்தது.

புதிய அரசியல்சட்டம் அமுலுக்கு வந்ததால் ஊத்தையாகிப் போன பழைய சட்டப் பிரிவின்கீழ்த் தாங்கள் கைது செய்யப்பட்டிருப்பதும், விசாரணை ஏதுமின்றித் தாங்கள் சிறைக்கூடங்களில் அடைத்து வைக்கப் பட்டிருப்பதும் அரசியல் சட்ட விதிகளுக்குப் புறம்பானது என்று சிறை மதிலுகளுக்குள் அடைக்கப்பட்டிருந்த தொழிலாளர் வர்க்கத்தலைவர்கள் மதராஸ் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரலாயினர்.

அதே போன்று சேலம் சிறைக்கூடத்தினின்றும் வேலூர் சிறைக்கு மாற்றப்பட்ட வக்கீல் சங்கரன் சார்பாகச் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஹேப்பியஸ் காப்பஸ் மனு மீது நடைபெற்ற விசாரணையில் சங்கரனைச் சிறைக் கூடத்தில் பூட்டி வைப்பதற்கான ஆதாரம் காரணம் எதையும், மாண்புமிகு அரசாங்கத்தால் சொல்ல முடியாததால் சங்கரன் உயர்நீதி மன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார்.

உயர்நீதிமன்றத்தால் சங்கரன் விடுதலை செய்யப்பட்ட போதும், மாட்சிமை மிக்க இந்திய அரசங்கத்தால் சங்கரன் போன்ற தலைவர்களைச் சுதந்திரமாக இந்திய பூமியில் நடமாடவிடப் பிரியப்படவில்லை. எனவே சங்கரன் சிறைக் கூடத்தின் கதவுகளைத் தாண்டி வெளியில்வரும் முன்பே அவரை மீண்டும் கைது செய்து, வேறு ஒரு சிறையில் கள்ளிவிட வேண்டும் என்று போலீஸ் இலாகாவுக்கும், உளவுத்துறைக்கும் ரகசிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. உளவுத் துறையினரும், ஜில்லாவின் போலீஸ் அதிகாரிகளும்,

சங்கரன் தப்பித்து விடாதபடி வியூகம் அமைத்து அவரின் வரவுக்காக வேலூர் கோட்டை மதில் வாசலில் காத்து நின்றனர்.

சங்கரனை வரவேற்பதற்காக வாணியம்பாடி தோல் பதனிடும் சங்கச் செயலாளர் அப்துல் ஜபாரும், வேலூர் பீடித் தொழிலாளர் சங்கச் செயலாளர் கோதண்டமும் கோட்டை வாசலில் மலர் மாலைகளுடன் நின்றிருப்பதைப் போலீசாராலும் உளவுத் துறையினராலும் தடுக்க முடியவில்லை.

சங்கரன் விடுதலையாகும் நேரம் வந்த போது, உளவுத் துறையும், போலீஸ் இலாகாவும் மீண்டும் உஷார் படுத்தப்பட்டது. ஆனால் துரதிர்ஷ்ட வசமாகச் சங்கரன் வேலூர் கோட்டையின் கதவுகளைத் தாண்டி வருவதை மட்டும் அவர்கள் கண்டார்களேயல்லாமல் மரத்துள் மறைந்தது மாமதயானை என்பது போல், அவர்கள் கண் எதிரே கோட்டை மதில்களைத் தாண்டிப் போன ஊர்வலத்தில் சங்கரனும்,அவரை வரவேற்பதற்காகக் காத்து நின்ற ஊழியர்களும் எப்படி மறைந்து போனார்கள் என்று புரியாமல் போலீஸ் அதிகாரிகளும் உளவுத் துறையினரும் மலைத்துப் போய் நின்றார்கள். தும்பை விட்டு விட்டு, வாலைப் பிடிக்கப்போய் அதையும் நழுவ விட்ட அவமானத்தால் துவண்டு போன அதிகாரிகள் பாலை வனத்தில் ஒட்டகத்தையே தவறவிட்ட யாத்ரீகர்களாக ஊரெல்லாம் சங்கரனை வலை போட்டுத் தேடப் போனார்கள். மாகாணம் முழுவதும் உள்ள போலீஸ் உஷார் படுத்தப்பட்டது.

சங்கரன், விடுதலையாகி வெளியே வந்ததும், தனது சொந்த ஊரான மாங்குடியில் வயோதிகம் காரணமாக சுகவீனமுற்ற நிலையில் இருக்கும் சுந்தரேச அய்யரைப் பார்க்க வேண்டியிருந்தது மட்டுமல்லாமல், மாங்குடியில் உள்ள சொத்து சம்மந்தமாகவும், தாழ்த்தப்பட்ட மக்களின் குழந்தைகளுக்காக, நடத்தப்பட்டு வரும் பள்ளிக்கூடம், ஹாஸ்டல் நிர்வாகம் பற்றியும் பேச வேண்டியிருப்பதாகவும், தன்னை எப்படியும் வந்து சந்திக்க வேண்டும் என்று சுந்தரேசய்யரே அவருக்கு எழுதிய ஒரு கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். தகப்பனார் போட்ட கடுதாசியைக் காட்டிச் சங்கரன் "பரேல்" கேட்ட போது சண்டாளத்தனமாக அரசால் அவரது வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டிருந்தது

எனவே விடுதலையாகி வெளியே வந்த உடன் சுந்தரேசய்யரை அவசியம் பார்க்க வேண்டியிருந்தது.

போலீஸ் வியூகத்தை உடைத்துக் கொண்டு வெளியே கொண்டு வரப்பட்ட சங்கரன் வேலூருக்கு வெளியே உள்ள ஒரு காட்டு ரெயில் நிலையத்தில் ஒரு பாசஞ்சர் வண்டியில் ரெயிலேற்றிவிடப்பட்டார். மாங்குடியை அடுத்த ஒரு ரெயில் நிலையத்தில் சங்கரனை இறக்கிவிடும் பொறுப்புப் பொன் மலையைச் சேர்ந்த ரெயில்வே தொழிலாளர் சங்கத்தின் முக்கிய ஊழியர்களான ஆனந்தனிடமும் ராஜுவிடமும் ஒப்படைக்கப்பட்டிருந்தது. நடுவழியில் போலீஸார் சங்கரனைத் தேடி பாஸஞ்சர் ரெயில் வண்டியைச் சோதனை யிடலாம் என்றும், மிகவும் ஜாக்கிரதையுடன் உஷார் தன்மையுடனும் நடந்து கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் எச்சரிக்கப்பட்டிருந்தனர். எனவே, இரவு முழுவதும், நித்திரை கொள்ளாமல் சங்கரன் தனது ரெயில் பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

சங்கரன் பிரயாணம் செய்த அந்த பாஸஞ்சர் வண்டி, கும்கோணம் ரெயில் நிலையத்துக்கு மேற்கே, ஆளில்லாத லெவல் கிராசிங்கில் நிறுத்தப்பட்டது. சங்கரனை, வரவேற்பதற்காக லெவல் கிராசிங்கில் காத்துக் கொண்டிருந்த விவசாயிகள் வேலப்பனிடமும், மாரப்பனிடமும் ஒப்படைக்கப் பட்டார். அவர்கள் இருவரும் தஞ்சை ஜில்லா, விவசாய சங்கத்தின் முக்கிய உறுப்பினர்கள். மாங்குடிக்காரர்கள், சங்கரனை இளமைக் காலம் முதலே தெரியும். அதிலும் வேலப்பனின் தந்தை வேலாயுதம் ஒரு காலத்தில், ஜஸ்டிஸ் பரமேஸ்வர அய்யரின் பண்ணையில் வேலை செய்து கொண்டிருந்தவர்.

அசாதாரணமான நிலையில், லெவல் கிராசிங்கில் நிறுத்தப்பட்ட பாஸஞ்சர் ரெயில் விடி வெள்ளி மறைந்து விடியலின் கீற்றல் கீழ்வானில் தென்படும் வேளையில் புகையைக் கக்கி, சலிப்பதை நீத்த கர்ப்பவிணியைப் போன்று பெரு நடக்கலிட வண்ணம் அவர்களிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு தெற்குமுகமாகப் பிரயாணப்பட்டுப் போயிற்று.

கடந்த ஒன்றரை ஆண்டு காலமாக வெறுக்கத் தக்க கிறைச்சாலை மதில்களையும், கொடுமையின் அடையாளங் களான ஜெயிலர்களையும், வார்டர்களையும் பார்த்துச்

சலித்துப்போன சங்கரனுக்குத் தனது பாதங்களைத் தான் பிறந்த மண்ணில் பதித்த போது உடல் சிலிர்த்துப் புல்லரித்தது. ஏதோ ஒரு புதிய புண்ணிய பூமியை மிதித்து விட்ட மனக்கிளர்ச்சி.

பொழுது புலர்ந்து வானம் நாணம் கொண்ட குமரியின் கன்னக்கதுப்புக்களைப் போன்று சிவப்பேறுகையில், இடையன் தனது ஆட்டுக்குடிலைத் தூக்கிக் கொண்டு மேடேறுவது போன்று, கீழ்வானில் சூரியன் தலை காட்டவும், நெல் வயல்களும், தோப்புக்களும், துறவுகளும் சிலிர்த்து உயிர்பிடித்தது போல் தோற்றம் தர, குளங்களையும், ஏரிகளையும் , மடுக்களையும் தேடி வானப் பரப்பில் பறந்து செல்லும் பட்சி ஜாலங்களின் ஆர்ப்பரிப்பு சங்கரனைத் தன்னை மறக்கச் செய்தது. தோப்புக்களில் வேர்ப்பலாக்கள் பழுத்துப் பலன் தரும் காலமாகையால், வயல்களில் தலை சாய்த்துக் கிடக்கும் முற்றிய நெற் கதிர்களின் வாடையோடு வெடி பலாக்களின் நறுமணம் கலந்த தென்றல் சுவாசிப்பதற்கே இனிமையாக இருந்தது.

அறுவடை காலமாகையால், உழவர்களும், உழத்தியர் களும் கஞ்சிக் கலையங்களைத் தலையில் சுமந்த வண்ணம் வயல் வரப்புக்களில் நடந்து போய்க் கொண்டிருக்கின்றனர்.

புதிதாகப் பிறந்து வந்த குழந்தையைப் போன்று, இயற்கையின் எழிலில் சங்கரன் தன்னை மறந்த நிலையில் நின்றபோது

"தோழர், புறப்படலாமா" என்ற மாரப்பனின் குரல் கேட்டுச்சங்கரன் ஏறிட்டுப் பார்த்த போது வேலப்பன் தன் கையில் இருந்த ஈரிழைத்துண்டை சங்கரனிடம் நீட்டினான். தனது அடையாளத்தை மாற்றிக் கொள்வதற்காகச் சங்கரன் தலையில் முண்டாசு கட்ட வேண்டியிருந்தது.

எந்த நேரமும், போலீசாரும் உளவாளிகளும், மோப்பம் பிடிக்கும் வேட்டை நாய்களைப் போன்று சங்கரனைப் பின் தொடரும் அபாயமிருப்பதால் அவர்கள் பிரதான ரஸ்தாவி லிருந்து விலகி, வயல் வெளிகளையும், வரப்புக்களையும், தோப்பு துரவுகளையும் தாண்டி மாங்குடியை நோக்கி நடந்து போனார்கள்.

சுமார் ஒரு மணி நேரம் காட்டுப்பாதை வழியாக நடந்து மாங்குடி கிராம எல்லையில் இருக்கும் தேவ நாயகியம்மன் கோவிலை அடைந்த போது, கோவில் தெப்பமண்டபத்தில்

சங்கரனையும், மாரப்பனையும் இளைப்பாரச் சொல்லிவிட்டு, வேலப்பன் ஊருக்குள் போலீஸ் நடமாட்டம் இருக்கிறதா என்பதைக் கண்காணித்து வர ஊருக்குள் புறப்பட்டுப் போனான்.

தேவநாயகியம்மன் கோவில் என்றும் புதுமை மங்காமல் சோழர் காலத்துச் சின்னமாக நிற்கிறது. தெப்பமும், மண்டபத்தின் தூண்களின் சித்தரிக்கப்படும் சிற்பங்களும் பண்டைத் தமிழரின் கலைநயத்தின் சாட்சிகளாக நிற்கின்றன. கோட்டையை ஒத்த சுற்றுச் சுவர்களும், அவற்றுள் பதிக்கப்பட்டிருக்கும் வேலைப்பாடமைந்த படிக்கட்டு களுமாகத் தெப்பத்தில் நீர் தத்தளித்துத் தழும்பிக் கொண்டிருக்கிறது. மழைக்காலமானாலும் கோடைக் காலமானாலும் தெப்பத்தில் நீர் குறைவதுமில்லை மிகுவதுமில்லை. ஒரு காலத்தில் அக்ராஹாரத்திலும், சித்திரை வீதிகளிலும் குடியிருப்போருக்குத் தாயாகப் பயன்பட்ட தெப்பம். இப்போது அமைதி தழும்பிக் கிடக்கிறது. அப்போதெல்லாம் சங்கரன் விடுமுறை நாட்களில் மாங்குடிக்கு வரும்போதெல்லாம் நண்பர்களுடன் பந்தயம் வைத்து தெப்பத்தின் நீரில் மணிக்கணக்காக நீந்தி விளையாடியது நினைவுக்கு வந்தது. நாளெல்லாம் தெப்பத்தை அடுத்த மண்டபத்தில், உடலுக்கு இதமான குளிர்காற்று வீசிக் கொண்டிருக்கும்.

தெப்பத்தின் நீரில் தென்படும், தேவநாயகியம்மன் கோயில் கோபுரத்தையும், அதை ஒட்டித் தென்படும் மாடவீதியின் பழமை வாய்ந்த கட்டிடங்களின் பிம்பத்தையும் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்த சங்கரனிடம் மாரப்பன் தனது மடியில் இருந்து கடிதம் ஒன்றை எடுத்துப் படிக்கக் கொடுத்தான்.

கடிதம் தஞ்சை ஜில்லா விவசாயிகள் சங்கச் செயலாளர் சுந்தரசாமியால் சங்கரனுக்கு எழுதப்பட்டிருந்தது. கடிதத்தில் சங்கரன் தஞ்சை ஜில்லாவில் இருந்து அடுத்த ஜில்லாவுக்குப் போகும் வரையில் அவர் நடந்து கொள்ள வேண்டிய முறை பற்றியும் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பாதுகாப்புப் பற்றியும் அவர் எங்கெல்லாம், எவ்வளவு நேரம் தங்க வேண்டும் என்கிற விவரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

அன்றைய இரவு சங்கரன் சுந்தரேச அய்யரைச் சந்தித்துவிட்டுப் புறப்படுகையில் மறுநாள் அதிகாலையில், ஒரு குறிப்பிட்ட இடத்தில் அவரைக் கந்தசாமி சந்திப்பதாகவும் சொல்லியருக்கிறார். கந்தசாமி இப்போது ஜில்லாவில் தலை மறைவு வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார். அரசாங்கம் கந்தசாமியின் தலைக்கு விலை வைத்து, அவரை ஊரெல்லாம் வலை போட்டுத் தேடிக் கொண்டிருக்கிறது. நீருக்குள் இருக்கும் மீனாக மக்கள் மத்தியில் உலாவிக் கொண்டிருக்கும் தோழர் கந்தசாமியின் பெயரால் நியாய வாரம் கேட்டு வெளி வந்திருக்கும் அறிக்கைகளையும், அறிக்கையைத் தொடர்ந்து விவசாயப் பெருமக்கள் நடத்தும் போராட்டங்களையும் ஆர்ப்பாட்டங் களையும் கண்டு தஞ்சை மிராசுதார்களும், அரசாங்க அதிகாரிகளும் மிரண்டு போயிருந்தனர்.

கந்தசாமி எழுதிய கடிதத்தில் போலீசாருடையவும், உளவாளிகளுடையவும் கெடுபிடி ஊருக்கு அதிகமாக இருப்பதால் சங்கரன் நடுநிசிக்குப் பிறகே சுந்தரேச அய்யரைச் சந்திக்க முடியும் என்றும், அதுவரையில் காலை முதல் நடுநிசி வரையில் மாடத் தெருவில் பேராசிரியர் வடிவாம்பாள் வீட்டில் அவரது அதிதியாகத் தங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்.

வழக்கம் போல் கடிதத்தைச் சுக்கு நூறாகக் கிழித்து தெப்பத்தின் தண்ணீரில் மிதக்கவிட்ட சங்கரனது உள்ளத்தில் தனது பால்யகால சகியான வடிவாம்பாளைப் பற்றிய எண்ணம் எழுந்தது. உண்மையில் சங்கரன் பேராசிரியர் வடிவாம்பாளைச் சந்தித்து அவரிடம் சில முக்கிய விஷயங்கள் பற்றிப் பேச வேண்டும் என்றிருந்தார். அவசரமும், அபாயமும் சூழ்ந்துள்ள இந்த நிலையில் வடிவாம்பாளைச் சந்திக்க முடியுமா என்கிற ஐயப்பாடு சங்கரனை அரித்துக் கொண்டிருந்தது.

இப்போது தோழர் கந்தசாமியே அவரிடம் மனம் திறந்து விவாதிப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்திருப்பது சங்கரனது மனதுக்கிணிமையாக இருந்தது

16

பேராசிரியர் வடிவாம்பாள் குடும்பமானது தஞ்சாவூர் ஜில்லாவில், விஜயாலய சோழன் காலம் முதல், பெரும் புகழ் பெற்ற ஆடல் பெண்டிரையும், பாடல் மகளிரையும் கொண்ட நீண்ட பாரம்பரியம்மிக்க தேவரடியார்களைக் கொண்ட குடும்பமாகும்.

ஸ்தல தேவததையான தேவ நாயகி அம்மனே மனித உருக்கொண்டு பூலோகம் வந்து, தேவலோக ஆடல் மகளிரான ரம்பை, திலோத்தமை, ஊர்வசி ஆகிய மூவருடையவும் திறமையை உட்கொண்டு திகழ வேண்டும் என்றும், காலம் காலமாக அந்தக் குடும்பம் தனக்குப் பணிவிடை செய்ய வேண்டும் என்று, அந்த வட்டாரத்திலேயே வசிகரம்மிக்க பெண்ணுக்கு வரம் தந்து விட்டுப் போனதாலும், அந்த நாள் முதலாக அந்தப் பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் வகையில், பிறக்கும் முதல் பெண் சிசுவுக்கும், கடைசிப்பெண்ணுக்கும் சடங்காச்சாரப்படிப் பொட்டுக் கட்டிவிடப்படும்.

தேவ நாயகிஅம்மன் தேர் கால்கள் தனது நிலையினின்று வீதிவலம் வரும்போது ராஜ வாத்தியங்கள் முழங்க பொட்டுக் கட்டப்பட்ட, அந்தக் குடும்பத்தின் பெண்கள் வீதி தோறும் நின்று சதிராடி அம்மனை மகிழ்ச்சிப் படுத்த வேண்டும். அந்தக் குடும்பத்தின் சேவையைக் கௌரவிக்கும் வகையில் சோழப் பேரரசால், அந்தக் குடும்பத்துக்கு மானியம் வழங்கப்பட்டிருந்தது. அதை உறுதி செய்யும் வகையில் செப்புப்பட்டயமும் வழங்கப் பட்டிருக்கிறது. அந்த மானியம் மராட்டிய மன்னர்களின் ஆட்சிக் காலம் வரையில் நீடித்தது.

ஆனால் வடிவாம்பாளின் மூதாதையர்களின் ஒருவரான அபரஞ்சியம்மாள், காலத்தின் மாற்றத்தின் வீச்சுக்கு ஆளாகிப் போனவள், பொட்டுக்கட்டிக் கொள்வதற்கும். தேரின் முன்னால் வீதித் தோறும், சதிராடி வருவதற்கும் மறுத்துவிட்டார், அது தன்னுடையவும், தனது குடும்பத்தாருடையவும், தன் மானத்தைப் பாதிக்கிறது என்று பிடிவாதமாக மறுக்கலானாள். எனவே ஊர் சபையோருக்கு வேறு வழியில்லாமல், சதிராடும் சம்பிராயத்தில் ஒரு சமரசம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுப் போயிற்று. அதன்படி அந்தநாள் முதலாகத் தேர்த்திரு விழாவின் போது, அந்தக் குடும்பத்தின் மூத்த பெண்மணி, கோடிப் பட்டு உடுத்தி, ராஜவாத்தியங்கள் முழங்க, நைவேத்தியம் ஏந்தி, தேரின் முன் நின்று தேங்காய் உடைத்துத் தேர்வடம் எடுத்துக் கொடுக்க ஊர் சபையோரும் பக்தர்களும் வடம் இழுக்கத் தேர் நிலையினின்றும் வீதிவலம் புறப்படும். வைபவத்தின் போது, பூஜை செய்யும் தேவரடியார் மங்கைக்கான பட்டு ஜரிகைகளாலும், வெள்ளி நூல் இழைகளாலும் நெய்தல் செய்யப்பட்டு, விசேஷமாகக் காஞ்சி மாநகரின்றும் கொண்டுவரப்படும் பட்டு, பூஜை செய்யும் பெண்ணுக்கு கொடுக்கப்படும் வைபவத்தின் போது, அபரஞ்சியம்மாளின் வாரிசுகள் உடுத்தும் பட்டின் நிறத்தை வைத்து, அந்த ஆண்டின் செழிப்பும் வறட்சியும் விவசாயப் பெருங்குடி மக்களால் கணிக்கப்படும்.

அபரஞ்சியம்மாள் காலம் முதற் கொண்டு மானியம் நிறுத்தப்பட்ட போதும், அந்தக் குடும்பம் செய்யும் சேவைக்காக வேண்டி, மாடவீதியில் அந்தக் குடும்பத்துக்கு அரச பரம்பரையினரால் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கும் பழங்காலத்து மாளிகை அந்தக் குடும்பத்துக்குப் பட்டாப் போட்டுக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தேவரடியாள் அபரஞ்சியம்மாளின் வாரிசுகள் குடும்ப கௌரவத்தையும் தன் மானத்தையும் காத்துப் பராமரிக்கும் வகையில், தங்களது கலை பாரம்பரியத்தை விட்டுக் கொடுக்காத வகையில் தங்களது உழைப்பிலேயே வாழும் இசை வேளாளர் குடும்பம் என்கிற நற் பெயருடன் இன்று வரையில் வாழ்ந்து வருகிறது

வடிவாம்பாளின் தாயார் கோதை நாச்சியம்மாள் தனது குல ஆசாரப்படி தனது நான்காவது வயதிலேயே கால்களில் சலங்கையைக் கட்டிக் கொண்டு நட்டுவனாரிடம் பயில ஆரம்பித்தவர். வீணையும் வாய்ப்பாட்டும் முறையாகச் சொல்லிக் கொடுக்கப்பட்டு இசை நுணுக்கங்களிலும் தாளங்களிலும் விசேஷ ஞானம் கொண்டவராக இருந்ததால் தனது பன்னிரண்டாவது வயதில் அரங்கேற்றம் பெற்ற கோதை நாச்சியாருக்குத் தென்னிந்திய நாட்டிய வகைகள் எல்லாம் அத்துப்படி. வெகுவிரைவிலேயே தென்னிந்திய இசை வல்லுநர்களாலும், நாட்டிய சிரோன்மணிகளாலும் மதிக்கப்படும் கலைஞர் ஸ்தானத்துக்கும், அந்தஸ்துக்கும் ஏற்றவராகப் பாண்டித்தியம் பெற்றுத் திகழந்தார்.

உலகப் பிரசித்தி பெற்ற பாலே நாட்டிய மேதை அன்னா பாவலோவா, இந்திய நாட்டிய வகைகளைப் பற்றி அறிந்து கொள்ள இந்தியா போந்தவர், மாங்குடிக்கு வந்து கோதை நாச்சியாரைச் சந்தித்து பரதக் கலையில் நுணுக்கங்களைத் தெரிந்து கொண்டு போகும் அளவுக்குப் பரதக்கலையின் நுணுக்கங்களை அறிந்து வைத்திருந்தார். இவ்வளவுக்குப் பேரும் புகழும் பெற்றிருந்த போதும், தனது பிறப்புடன் ஒட்டிக் கொண்டிருக்கும் தேவரடியார் என்கிற அவப்பெயர் மட்டும் தனது குலத்தைவிட்டு விலகவில்லை என்று கோதை நாச்சியாருக்கு மிக்க விசனமும், வெறுப்பும் தனது பிறவியை வைத்துத் தன்னையும், தன்னை ஒத்த கலைஞர்களையும் ஒதுக்கிவைக்கும் சமுதாய விதியைக்கண்டு கோதை நாச்சியாருக்கு உள்ளூற ஒரு பழிவாங்கும் உணர்வு ஏற்பட்டிருந்ததில் வியப்பில்லை.

கோதை நாச்சியாரின் உள்ளில் உறைந்து போன தாழ்வு மனப்பான்மையையும், வெறுப்பினையும் களைந்தெரிந்தவர், அதற்குப் பெரிதும் உதவியவர் ஜஸ்டிஸ் பரமசிவமும், அவரது குடும்பத்தாருமாவர். மாங்குடி அக்ராகரத்தில், ஏனைய பிராமணக் குடும்பங்களைப் போன்று ஜாதிபாகுபாடும், வேறுபாடும் பார்க்காதவர்கள் ஜஸ்டிஸ் பரமசிவமும்அவரது குடும்பத்தாரும். கோதை நாச்சியாரையும் அவரது பெற்றோரையும் தனது குடும்பத்தின் அங்கத்தினராகப்

பாவித்ததை அக்ரகாரமே எதிர்த்தபோதும் மேல் நாட்டுக் கல்வியும், முற்போக்கான சிந்தனையும் சீர்திருத்த நடவடிக்கையையும் கொண்டிருந்த ஜஸ்டிஸ் பரமசிவம் எதிர்ப்பைப் பொருட்படுத்தவில்லை. அதனால் கோதை நாச்சியாருக்கு ஜஸ்டிஸ் பரமசிவத்தின் பேரிலும், அவர் குடும்பத்தின் பேரிலும் அளவு கடந்த மரியாதை மட்டுமல்லாமல் அவரது சகோதரர் வக்கீல் சுந்தரேசனை அவரது சகோதரனாகவே சுவீகரித்துக் கொண்டிருந்தார்.

ஜஸ்டிஸ் பரமசிவம், ஹோம் ரூல் இயக்கத் தலைவியான சகோதரி அன்னிபெஸன்ட் அம்மையாரின் அத்யந்த நண்பர் மட்டுமல்லாமல் அடையாறு தியாஸபிக்கல் சங்கத்தின் முக்கிய உறுப்பினருமாவார். எனவே பெண் விடுதலை இயக்கத்திலும், இந்தியப்பண்பாட்டின் சிறப்பம்சங்களில் பெரிதும் நாட்டம் கொண்டு அதற்காகப் பாடுபடும் சகோதரி அன்னிபெஸன்ட் அம்மையாரைக் கோதை நாச்சியாரைத் தனது செலவிலேயே மதராஸ் பட்டினத்துக்குக் கூட்டிச் சென்று சந்திக்க வைத்தார்.

பெஸன்ட் அம்மையாரைச் சந்தித்த பிறகு கோதை நாச்சியாரின் உள்ளில் இருந்த தாழ்வு மனப்பான்மை துடைத்தெறியப் பட்டதோடு, பெண்மையின் மகத்துவத்தையும் அவரால் உணர முடிந்தது. இந்தியப் பண்பாட்டிலும், கலைகளிலும் மிக்க நாட்டம் கொண்டிருந்த பெஸன்ட் அம்மையாரைச் சந்தித்த பிறகு தான் தனது குடும்பத் தொழிலாகப் பயின்ற சதிராட்டத்தின் முக்கியத்துவத்தைக் கோதை நாச்சியாரால் உணர முடிந்தது. கோவில் சடங்குகளோடு முடக்கப்பட்டு, அவமானத்துக்குட்படுத்தப்பட்ட பரதக்கலையை மீட்டெடுக்கும் பொறுப்பும் கடமையும் தனக்கு இருக்கிறது என்று உணர்ந்து செயல்படவும் செய்தார். அதன் காரணமாகத் திருமதி ருக்மணி தேவி அருண்டேல் அவர்களால் ஆரம்பித்து நடத்தப்பட்ட அடையாறு கலாச்சேத்திராவுக்குக் குறைந்த பட்சம் மாதம் ஒரு முறையாவது விஜயம் செய்து குழந்தைகளுக்குப் பரதக்கலையின் நுட்பங்களையும், நுணுக்கங்களையும் சொல்லித் தரவும் செய்தார். அதிலும் 1927ம் ஆண்டு வாக்கில் பூனேயின் நடைபெற்ற அகில

இந்தியப் பெண்கள் மகாநாட்டில், பெஸண்ட் அம்மையாரின் உதவியோடு கலந்து கொண்டு திரும்பிய பிறகு, அந்த இயக்கத்தின் முக்கிய பெண்மணிகளில் ஒருவராக கோதை நாச்சியார் கருதப்பட்டார்.

கோதை நாச்சியாரைப் பொறுத்த மட்டில், தனக்குக் கிடைக்க வாய்ப்பில்லாமல் போன மேல் நாட்டுக்கல்வி தனது மகளுக்குக் கிடைக்க வேண்டும் என்று பெரிதும் விரும்பினார். எனவே, தனக்கும் தன் குடும்பத்தாருக்கும் தொழில் முறையாகவும் பரம்பரைப் பாத்யதையாகவும் வந்த சதிர் கலையையும் இசையையும் மகள் வடிவாம்பாளுக்கு பயிற்றுவித்த போதிலும், மேலை நாட்டுக் கல்வி பெற வேண்டும் என்பதற்காக வேண்டி, கிறிஸ்தவ மெஷினியார் நடத்திய உயர் நிலைப்பள்ளியில் சேர்த்து விட்டார்.

பத்தாம் வகுப்பு ஆங்கிலக்கல்வி படிப்பு முடிந்து கல்லூரி வகுப்பில் சேர வேண்டிய நேரம் வந்த போது பரமசிவம் அய்யரின் சிபாரிசுப்படி சிதம்பரம் அண்ணாமலை சர்வ கலாசாலையில் வடிவாம்பாள் உயர் கல்வி பயில்வதற்காகச் சேர்க்கப்பட்டார்.

அண்ணாமலை சர்வ கலாசாலையில் வடிவாம்பாள் மாணவியாகச் சேர்க்கப்பட்டபோது சங்கரன் பி.ஏ ஹர்ணர்ஸ் முதலாம் ஆண்டு மாணவனாகப் பயின்று கொண்டிருந்தார்.

தனது இளமைக்கால விளையாட்டுத் தோழனான சங்கரனது படிப்புத் திறனும் தேசபக்த அரசியல் நடவடிக்கைகளும் வடிவாம்பாளை வெகுவாகக் கவர்ந்தது.

அவ்விருவரின் நட்பும், தோழமையும் மேலும் அதிகரித்து மேலும் வலுப்பெறலாயிற்று.

●

17

உள்ளுக்குள் போன வேலப்பன் வெகு சீக்கிரமாகவே, தேவ நாயகியம்மன் தெப்ப மண்டபத்துக்குத் திரும்பி வந்து சேர்ந்தான்.

சங்கரனை வெளியிடங்களில் வெகு நேரம் காக்க வைக்கக்கூடாது என்று தோழர் சுந்தசாமி அவர்களை எச்சரித்திருந்தார்.

மாங்குடி, சங்கரனது பூர்வீக கிராமம் என்பதாலும், அவர்கள் குடும்பம், வட்டாரத்தில் பிரபலமான குடும்பங்களில் ஒன்று என்பதாலும், சங்கரனது நண்பர்களும், பெரியவர்களும் தெரிந்தவர்களும் அநேகம் பேர் இருப்பதால், அவர்களுடைய கண்ணில் பட்டுவிட்டால் ஊர் உவலையாகிப் போய் விபரீதம் ஏற்பட்டுவிடும். மட்டுமல்ல சங்கரனைக் கைது செய்வதற்காக, ஓடும் நீரில் கூடத் தடம் தேடி அலையும் உளவுத் துறைக்குப் பழம் நழுவிப் பாலில் விழுந்த கதையாகச் சங்கரனை மீண்டும் கைது செய்து சிறையில் அடைப்பது மிகவும் சுலபமாகிவிடும்.

சங்கரன் தாடி வைத்திருப்பதாலும் உடம்பு மிகவும் இளைத்துப் போயிருப்பதாலும் அவ்வளவு சுலபத்தில் அடையாளம் கண்டு கொள்ள முடியாது. இருந்த போதும் சங்கரன் விஷயத்தில் அவர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டியுள்ளது. ஏனெனில் அவ்வளவு பொறுப்பான பணிகளைச் சங்கரன் ஆற்ற வேண்டி உள்ளது

மண்டபத்தை ஒட்டி வானுற வளர்ந்தோங்கி நிற்கும் ஆலமரத்தின் அடியில் போடப்பட்டிருக்கும் ஒற்றைப் பிள்ளையார் பீடத்தின் அருகில் வந்து நின்ற வேலப்பன் சமிக்கை செய்யவும், மாரப்பனும் சங்கரனும், மண்டபத்தில் வடக்கு ஓரமாகப் போகும் ஒற்றையடிப்பாதை வழியாக மாங்குடி ஊரை நோக்கி நடக்கலானார்கள். பின் தங்கி நின்ற வேலப்பன், அவர்களை யாராவது பின் தொடருகிறார்களா தாங்கள் கவனிக்கப்படுகிறோமா என்று மரத்தடியில் நின்று கவனித்துவிட்டு அவர்களை எச்சரிக்கும் தூரத்தில் அவர்களைத் தொடர்ந்து ஒற்றையடிப்பாதையில் பின் தொடர்ந்தான்.

வானப்பரப்பில் மேகம் திரண்டு மப்பும் மந்தாரமுமாக இருந்ததால் வெயிலின் உக்கிரம் அதிகமாக இல்லை, வயல்களில் பசுமை போர்த்து நிற்கும். நெற் பயிர்களின் சிரசை வருடிய வண்ணம் மிதந்து வரும் மென் காற்று உடலுக்கு இதமாக இருந்தது.

வடிவாம்பாள் வீட்டில் தங்கி ஓய்வெடுத்த பின்பு தந்தையாரையும் பார்த்துவிட்டு அந்த ஜில்லாவை விட்டு வெளியே போவதற்கு முன்னால் தான் செய்ய வேண்டிய பணிகள் பற்றிச்சிந்தித்த வண்ணம் சங்கரன் வயல் வரப்புகளினூடே மாரப்பனைத் தொடர்ந்து ஒற்றையடிப் பாதை வழியாக நடந்து போனார்.

சுடலை மாடசாமி கோவில் வாய்க்காலைக் கடந்து சுமார் கால் மணிநேரம் நடந்த போது, ஊர் எல்லையில் ஒத்தையடிப்பாதையும் ஊரோடு இணையும் பெரிய சாலையும் இணையும் இடம் வந்ததும், அவர்கள் சுமார் பத்து தப்படித் தொலைவில் இருக்கும் அந்தப் பழங்காலத்துக் கட்டிடத்தின் முன் பகுதியை வந்தடைந்தனர்.

தாங்கள் வந்து அழைப்பு விடுக்கும் வரையில் வீட்டில் இருந்து வெளியில் வருவது கூடாது என்று சங்கரனிடம் எச்சரித்து விட்டு, மாரப்பனும், வேலப்பனும் விடை பெற்றுக் கொண்டார்கள்.

மாணவப் பருவம் முதல் பல தவணை வந்து போன வீடு, வீட்டின் ஒவ்வொரு பகுதியும் சங்கரனுக்கு அத்துப்படி. ஆனால் இப்போது வீட்டின் முன் கட்டை அடைந்தபோது இனம் புரியாத ஒருவித தயக்கம் வாசல் படியில் கால் வைத்தபோது கால்களில் ஒரு நடுக்கம்.

வடிவாம்பாளின் கேள்விக்கு என்ன பதில் சொல்லவேண்டும் என்கிற மன உறுத்தல், என்னவான போதிலும் அவளது கேள்விக்கு விடை கண்டாக வேண்டியுள்ளது என்கிற மனதிடத்துடன் ஒரு கணம் தயங்கி நின்ற சங்கரன் முன் கட்டைத் தாண்டி வேலைப்பாடமைந்த பழங்காலத்துக் கதவைத் தொட்டபோது, கதவு தானாகத் திறந்து கொண்டது.

கதவைத் திறந்து கொண்டு சங்கரன் கூடத்தில் கால் வைத்த போது, சங்கரனது வரவை எதிர்பார்த்துக் கூடத்துச் சோபாவில் உட்கார்ந்திருந்த வடிவாம்பாள் எழுந்து நின்றவள் சங்கரனது அசாதாரண தோற்றத்தைக் கண்டு மலைத்துப் போன மட்டில் மலங்க மலங்க அவரைப் பார்த்து நிதானித்து சுதாரித்த வண்ணம் வாசல் படி வரை வந்தவள் சிறிது நேரம் சங்கரனை மேலும் கீழுமாகப் பார்த்த படி நின்றிருந்தாள். பிறகு சங்கரனது கரங்களை வாஞ்சையுடன் பற்றியவள்

"சங்கரன் தானா, இப்படி மாறிப் போயிட்டையே அடையாளம் கண்டுக்க முடியாத அளவுக்கு மெலிந்து போயிட்டையே சங்கரா" மனம் வெதும்பிச் சொன்னாள்.

அவளது நயனங்கள் பனித்திருந்தன.

"இன்னெக்கி நீ வருவேன்னு தோழர் கந்தசாமி சொன்னார். ஆனா நீ இப்படி எலும்பும் தோலுமா வந்து சேருவேன்னு அவர் சொல்லலையே"

"நான் தாடி வெச்சிருக்கதாலே அடையாளம் மாறிப் போயிருக்கும்" அவளைச் சமாதானப்படுத்த சொல்ல முற்பட்ட போது

"ஓ நொண்டிச் சாக்கெல்லாம் சொல்லி என்னைச் சமாதானம் செய்து சமாளிக்க வேண்டாம். உன்னைப் பார்த்த அப்பா ரெம்பவும் மனம் உடைந்து போவார்" என்று சொன்னபடியே கூடத்தின் நடுப்பகுதிக்குக் கூட்டிப் போனாள். சோபாவில் உட்காரப்போன சங்கரனை

"உன்னோட ஆசனம் அதோ" என்று நடுநாயகமாகப் போடப்பட்டிருக்கும் கருங்காலி மரத்திலான ஆனைக்கால் சாய்வு நாற்காலியில் உட்காரச் சொன்னவள் தலையைச் சாய்த்துக் கொள்வதற்கான வெல்வெட்டுத் தலையணையைத் தலைக்கு ஆதரவாக வைத்துவிட்டு கலாப மயில் நடை பயில்வது போல் பின் கட்டுப் பக்கம் போனாள்.

சாதாரணமாகக் கலகலப்பாகப் பேசும் வடிவாம்பாளைச் சங்கரனின் தோற்றம் வெகுவாகப் பாதித்திருக்க வேண்டும்; அதனால்தானோ, என்னவோ, தனது மனக்கிலேசத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல் பின்கட்டுப்பக்கமாகப்போனாள். சங்கரனிடம் வழக்கம் போல அதிகமாகப் பேச்சுக் கொடுக்கவில்லை.

யானைக்கால் சோபாவில் சாய்ந்த வண்ணம் வடிவாம்பாள் கூடத்தைத்தாண்டிப் போகும் வரையில் அவளது எழில்மிகு எளிமையான தோற்றத்தை வியந்து பார்த்துக் கொண்டிருந்த சங்கரனது உள்ளத்தின் ஆழத்திலிருந்து இனம் தெரியாத பெருமூச்சு எழுந்து மறைந்தது.

வடிவாம்பாள் மனதில் ஏற்பட்டிருக்கும் தவறான சலனத்தையும், முடிவையும் எப்படிப் புரிய வைத்து எப்படி உண்மை நிலையை ஒப்புக் கொள்ள வைக்கப் போகிறோம் என்று வழித் தடம் தெரியாமல் உட்கார்ந்திருந்த சங்கரன் கூடத்தின் ஒவ்வொரு பகுதியையும் உற்றுப் பார்த்த படியே உட்காந்திருக்கிறார்

உண்மையில் உள்வீட்டில் கட்டமைக்கப்பட்டிருக்கும் கூடம் வெறும் கூடம் மட்டுமல்ல; அது ஒரு கலைக்கூடமாகவே அமைக்கப்பட்டிருந்தது

வான வெளி தெரியும் படியான முற்றம் கொண்ட கூடம் அந்த முற்றம் பளிங்குக் கற்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. நாட்டிய மங்கை நடுவில் நின்று சதிராடும் அளவுக்கு இடம் விட்டுக் கட்டப்பட்டிருக்கும் விசாலமான முன்றில், சங்கரனுக்காக வேண்டி வடிவாம்பாளே அந்த முன்றிலில் நின்று சதிராடியதுண்டு. இப்போதுகூட நாட்டிய வகுப்புக்கள் அந்த முற்றத்தில் வடிவாம்பாளால் நடத்தப்படுகின்றன.

கூடத்தின் வடக்குப் பகுதியில் உள் வீட்டுக்குப் போகும் இடத்தை ஒட்டி கூடத்தின் மேற்குப் பகுதியில், நிற்கும் ஐம்பொன்னால் சமைக்கப்பட்டிருக்கும் ஊழித்தாண்டவ மூர்த்தியான நடராஜ மூர்த்தியின் சிலை. சிலையின் கழுத்தை அலங்கரிக்கும் அன்றலர்ந்த மலர். மலர் மாலை விக்கிரகத்தின் பாதாள விந்தங்களை ஒட்டி, தரையில் வைக்கப்பட்டிருக்கும். வெண்கலப் பாத்திரத்தில் நீரில் ரோஜா மலர்களும், தாமரை மொக்குகளும் மிதக்கவிடப்பட்டிருக்கின்றன.

கோதை நாச்சியார் உயிரோடு இருந்த காலங்களில் நடராஜ விக்கிரகத்துக்கு மலர்தூவி மனம் கசிந்து இசை மயமாய் நின்று பூஜை செய்த பிறகுதான் தனது இதர வேலைகளைத் தொடங்குவார்.

கோதை நாச்சியாரின் நினைவாகவோ என்னவோ, இன்றளவும் வடிவாம்பாளால் அந்தச் சம்பிரதாயம் கடைப்பிடிக்கப்படுகிறது.

ஊழித் தாண்டவமாடும் நடராஜ மூர்த்தியின் சிலைக்கு எதிர் பாரீசத்தில் போடப்பட்டிருக்கும் மேடையில் செல்லக் குழந்தையைப் போன்று அந்தப் பழங்காலத்து வீணை நிறுத்தப்பட்டிருக்கிறது. நாட்டின் பிரபல சங்கீத கலாநிதிகள் பலரும் மீட்டிப் பார்த்த வீணை. வீணையை மீட்டி, வடிவாம்பாள் பாரதியின் பாடல்களைப் பாடும் போது, வீணையின் நாதத்தோடு வடிவாம்பாளின் குரல் இழையும் போது, அந்தப் பிரதேசமே இசை வெள்ளத்தில் திளைத்து மூழ்கிப் போகும். அவ்வளவுக்கு வளமிக்க பண்பட்ட குரல் வடிவாம்பாளின் குரல்

கூடத்தின் மேற்குச் சுவற்றில் மாட்டப்பட்டிருந்த ராஜாரவிவர்மாவின் அன்னப்பறவையும், அழகியும் என்கிற ஆள் உயரத்து ஓவியத்தை ஒட்டி, புதிதாக இரண்டு ஓவியங்கள் கருங்காலி மரத்திலான சட்டம்போட்டு மாட்டப் பட்டிருக்கின்றன. ஒன்று ஓவியர் சுஜுதேசபினுடையது மற்றது ஓவியர் ராய் சௌரியின் குளியல் என்கிற பிரசித்தி பெற்ற ஓவியம். அந்த இரண்டு ஓவியங்களையும் சாந்திநிகேதனுக்கு, வங்காள இசையையும் ரவீந்திரர் சங்கீதத்தையும் கற்றுக் கொள்ளப் போனபோது வாங்கி வந்திருந்ததாகச் சங்கனுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் வடிவாம்பாள் குறிப்பிட்டிருந்தது சங்கரனுக்கு ஞாபகம் வந்தது.

அரவம் கேட்டுச் சிந்தனையினின்றும் விடுபட்டுத் திரும்பிய போது, ஆவி பறக்கும் காப்பி கப்பை சோபாவின் முன்னால் இருக்கும் டீப்பாயில் கொண்டு வந்து வைத்த வடிவாம்பாள் நெற்றியில் அரும்பி நின்ற வியர்வையைத் துடைத்த படி எதிரில் இருக்கும் சோபாவில் போய் அமர்ந்தாள்.

"வேலைக்காரப் பெண் என்ன ஆனாள்" சங்கரன் கேட்டபோது

"அந்தப் பொண்ணுக்கு இன்னெக்கி விடுமுறை" என்றாள்.

"அவளுக்கு மட்டுமல்ல இந்த வீட்டு வேலைக்காரங்க அல்லாத்துக்கும் விடுமுறை. பாட்டும் பரதமும் கத்துக்க வர்ர குழந்தைகளைக் கூட இன்னெக்கி வரவேண்டான்னு சொல்லிட்டேன்" என்றவள் தான் சங்கரனது வருகையை முன்னிட்டு எச்சரிக்கையுடன் நடந்து கொண்டது சரிதானே என்று கண்ஜாடையால் கேட்டவளது கவனம் காம்பவுண்டுக்குள் இருக்கும். மாமரத்தினின்று அசரீரியாகப் பாடிக்கொண்டிருக்கும் மாங்குயிலின் இன்னோசைபால் திரும்பியது.

குழந்தைப் பருவம் முதலே கானத்துப் பறவைகளின் கலகல ஓசையில் வடிவாம்பாளுக்குத் தனி ஈர்ப்பு; அதிலும் குயில் ஓசை என்றாலே அந்த ஓசையில் தன்னை மறந்து நின்று

விடுவாள். பறவைகளின் இசையின்பால் வடிவாம்பாளுக்கு அப்படி ஒரு லயிப்பு ஈடுபாடு.

இளவேனிற் காலமாகையால் மாமரம் இளம்தளிர் போர்த்தித் தன்னை மணப்பெண்ணைப் போன்று அலங்கரித்துக் கொண்டிருக்கிறது.

வடிவாம்பாளுக்கு, மாந்தளிர்களுடன் போட்டிபோடும் மோகனமான மாந்தளிர் மேனி, கைதேர்ந்த சிற்பியால் அளவெடுத்துச் சமைத்த செப்புப் படிமம் போன்ற உடற்கட்டு. அதற்கேற்றாற் போன்ற உயரம். நாட்டியம் பயின்றதன் காரணமாகக் கட்டுக் குலையாத உடற்கட்டு, யாரையும் வசீகரிக்கும் உணர்ச்சி மிக்க நயனங்கள் அதரங்கள் பெண்மையை மெருகுபடுத்திக் கொள்ள விரும்பாத எளிமையான தோற்றம். அதற்கேற்றாற் போன்று சன்னமான தங்கச் சரிகை இழையோடும், இரணியல் கைத்தறிச்சேலை அவளது எளிமையை மேலும் அழகுபடுத்துவதாகப்பட்டது.

இவ்வளவு அழகும் திறமையும் கொண்ட பெண்ணின் இளமை வீணாகிக் கொண்டிருக்கிறதே என்ற கவலையுடன் வடிவாம்பாளை இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த சங்கரனது உள்ளத்தில் ஆயிரம் எண்ணங்கள் அவளை எப்படிச் சமாதானம் செய்வது என்பது மட்டும் சங்கரனுக்குப் புலப்படாத புதிராக இருந்தது.

திடீரென்று குயிலோசை அசரீரியாக மாய்ந்து போகவும், கற்பனை கலைந்து திரும்பிய வடிவாம்பாள், சங்கரன் தன்னையே இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருப்பதைப்பார்த்ததும்

"ஏன் அப்படிப் பார்க்கிறே சங்கரா" என்று கேட்டாள்

"ஒண்ணுமில்லை. நீ கட்டியிருக்கும் சேலை வித்தியாசமாகப் பட்டது" என்று சமாளிப்பதற்காகச் சொன்னபோது

"அதுவா, இரணியலிலே தயாரிக்கப்பட்ட கைத்தறி. இப்போ சமீபத்தில் ஒரு நாட்டிய உருவாக்கத்துக்காக கலாச் சேத்திரா போனபோது, அத்தை கொடுத்தாங்க, உன்னோட உடற்கட்டுக்கு ஒப்பா இருக்குன்னு சொன்னாங்க. அது தான் கட்டிப் பார்த்தேன்" என்று வஞ்சகமில்லாமல் ஒரு குழந்தையைப் போல் சொன்னாள்

"உனக்கு எந்தச் சேலை கட்டினாலும் நல்லாத் தான் இருக்கும்" என்று சொன்ன சங்கரன் டீப்பாயில் இருந்த சீனக் கோப்பையை கரங்களில் எடுத்த போது கரங்களில் வேதனை ஏற்பட்டுக் கரங்கள் நடுங்கலாயின.

சங்கரனது கரங்களினின்றும் நழுவிக் கீழே விழப் போன காப்பி கப்பைத் தாங்கிப் பிடித்த வடிவாம்பாள் கண்களில் சங்கரனது மணிக்கட்டிலும் கொடுங்கையிலும் ஏற்பட்டிருக்கும் காயங்களின் வடுக்கள்பட்டன.

"என்ன இது கையவே ஒடைச்சுப் போட்டாங்களா" என்று அங்கலாய்த்த வண்ணம் சங்கரனின் கரங்களையும், புயங்களையும் தடவிப் பார்த்தாள். அப்போது சங்கரனது கபாலத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் காயத்தின் வடுவும் கிற்றும் தென்படலாயிற்று.

என்ன இது என்று கேட்பது போல் வடிவாம்பாள் பார்த்தபோது

"ஜெயிலுக்குள் நடைபெற்ற தடியடியில் எனக்குக் கொடுக்கப்பட்ட பரிசுகள்" சங்கரன் விசனப்படாமல் சொன்னார்.

வடிவாம்பாளின் முகம் வாடிப் போனது. விசனமுற்ற மட்டில், சங்கரனின் உடம்பிலும், தலையிலும் ஏற்பட்டிருக்கும் காயங்களின் வடுக்களைப் பார்த்து மனம் பேதலித்துப் போன வடிவாம்பாள்

"இவர்களெல்லாம் மனிதர்கள் தானா" என்றவள் சங்கரன் கரங்கள் நடுங்கிய படியே காப்பி குடிப்பதை

மௌனமாகப் பரிதாபமாகப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தவள் தன் அறையை நோக்கி எழுந்து போனாள். பிறகு, சங்கரன் குளிப்பதற்கான சோப்பையும் டவலையும் கொண்டு வந்து சோபாவில் வைத்தாள். சங்கரன் மாற்றிக் கொள்வதற்கான புத்தாடைகள் அத்துடன் வைக்கப்பட்டபோது, சங்கரன் இதெல்லாம் எதற்கு என்பதே போல் அவளை ஏறிட்டுப் பார்க்கவும்

"ஏன் நான் வாங்கித்தர டிரஸ்ஸை போட்டுக்கக்கூடாதோ" என்று தலையைச் சாய்த்துக்கேட்டபோது சங்கரனுக்கு சிரிப்பு வந்தது.

"ஏன் குழந்தை யாட்டம் பேசறாய்" என்று பதிலுரைக்கவும்

"இன்னெக்கி எனக்கு நிரம்பவே வேலையிருக்குப்பா" என்று சொன்ன படியே வடிவாம்பாள் அடுக்களையை நோக்கி விரைந்தாள். சங்கரனது உடம்பில் ஏற்பட்டிருக்கும் ரணவடுக்களைப்பார்த்து அவள் மிகவும் துக்கித்துக் காணப்பட்டாள். ஏனோ அவள் தனது உணர்வை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

பிறகு சங்கரன் தனது காலைக் கடன்களை முடித்துவிட்டு டிபன் சாப்பிடுவதற்காக வடிவாம்பாளுடன் டைனிங் மேஜையில் உட்கார்ந்தபோது வடிவாம்பாள், மொத்தையாக ஒரு கடுதாசி பொட்டலத்தைச் சங்கரனிடம் கொடுத்தாள்.

"தோழர் சுந்தசாமி இந்த ஆவணங்களை உன்னன்டை சேர்க்கும் படியாகக் கொடுத்தார். அவர் சொன்ன தோரணையைப் பார்த்த போது மிகவும் முக்கியமான ஆவணமாக இருக்கும் போல் பட்டது." என்று சொல்லிவிட்டு சங்கரனுக்காக மதிய உணவு தயாரிப்பதற்காக பின்கட்டுப் பக்கம் போனாள்.

வடிவாம்பாள் சொன்னது போல், சங்கரனைப் பொறுத்த மட்டில் அவர்களது அமைப்பில் ஏற்பட்ட

நடைமுறை மற்றும் சித்தாந்தா சம்மந்தமான மிக முக்கியமான ஆவணம் அது. அந்த அமைப்பின் வருங்காலம் பற்றித் தீர்மானம் எடுப்பது சம்மந்தமான மிக முக்கியமான ஆவணம்.

நாடு முழுவதும் அவர்களை அமைப்பில் கெள்கைரீதியாக ஏற்பட்டிருக்கும் சர்ச்சை சாகஸ்ய ஆவணம் எப்படியும், அந்த ஆவணத்தைப் படித்து முடிக்காமல், ஒய்வெடுத்துக் கொள்ள முடியாது. எனவே, குறிப்பெடுப் பதற்கான குறிப்பேடுகளையும், பேனாவையும் எடுத்துக்கொண்டு, வடிவாம்பாளின் தனி அறைக்குப் பக்கத்து அறையைப் பார்த்து நடந்து போனார்.

வெளியில் வெயிலின் தாக்கம் தாங்க மாட்டாமல் இரண்டு காகங்கள் மட்டும் ஏகமாகக் கரைந்து கொண்டிருந்தன.

●

18

சங்கரன், மதிய உணவை முடித்துக் கொண்டு, கூடத்தில் கிடந்த ஆனைக்கால் நாற்காலியில் அமர்ந்து, கலாச் சேத்திராவிலும், கல்கத்தாவிலும், வடிவாம்பாளும், குழுவினரும் நடத்திய நாட்டிய நிகழ்ச்சிகள் சம்மந்தமான படங்கள் அடங்கிய ஆல்பத்தைப் புரட்டி, பார்த்துக் கொண்டிருந்தார். ஒவ்வொரு கோணத்திலும் வடிவாம்பாளின் அபிநயமும், பாவமும் வியப்பூட்டுவதாக இருந்தது.

தனது வேலைகளையெல்லாம் முடித்துவிட்டு, கூடத்தில் சங்கரன் உட்கார்ந்திருக்கும் தந்த வேலைப்பாடமைந்த நாற்காலியை ஒட்டினாற் போன்று கிடக்கும் சோபாவில் தலையைச் சாய்த்தவண்ணம் வடிவாம்பாள் பளிங்குத் தரையில் உட்கார்ந்தாள்.

சங்கரனது காலுக்கடியில் உட்கார்ந்த வடிவாம்பாள் சங்கரனது முகத்தை ஒரு கேள்விக்குறியுடன் ஏறிட்ட போது ஜெயிலுக்குப் போவதற்கு முன்னால் கடைசியாக மாங்குடி கிராமத்திற்கு வந்திருந்த போது வடிவாம்பாள் கேட்ட கேள்வி திரும்பவும் அன்று சங்கரனுக்கு ஞாபகத்துக்கு வருகிறது.

"என்னோட வேண்டுகோளுக்கு உடனடியா நான் பதில் கேட்கலை. நிதானமா யோசனை பண்ணிப் பதில் சொன்னாப்போதும், அந்தப் பதிலுக்காக வேண்டி எத்தனை காலமும் காத்திருக்க நான் தயார்" என்று வெடுக்கென்று சொல்லி விட்டு வடிவாம்பாள் தன் அறைக்குப் போய்விட்டாள்.

அந்தச் சம்பவத்துக்குப் பிறகு, சங்கரன் சிறைக்குள் அடைக்கப்பட்டிருந்த காலங்களில் வடிவாம்பாள் சங்கரனுக்குப் பல கடிதங்கள் போட்டிருக்கிறாள். எந்தக் கடிதத்திலும், அன்று அவள் பிரஸ்தாபித்த வேண்டுகோள் பற்றிக் குறிப்பிட்டதில்லை. யாரிடமும் பிரஸ்தகபித்ததும் கிடையாது.

எந்த விஷயத்தையும் சுலபத்தில் புரிந்து கொள்ளக்கூடிய புத்திசாலி வடிவாம்பாள். எனவே, அவள் வளர்த்துக் கொண்டிருக்கும் ஆசையினால், அவள் மேற்கொண்டிருக்கும் முடிவின் தவற்றைச் சுட்டிக்காட்டி நிலைமையை உணர வைத்துஅவளது முடிவை மாற்றிக் கொள்ளச்சம்மதிக்க வைக்க முடியும் என்கிற நப்பாசை சங்கரனுக்கு.

உண்மையில், வடிவாம்பாள் தன்னிடம் கேட்ட கேள்விக்கு அப்போதே சங்கரனால் பதில் சொல்லியிருக்க முடியும். ஆனால் அன்று வடிவாம்பாள் இருந்த சூழ்நிலை காரணமாகச் சங்கரன் எந்த விதமான பதிலும் சொல்லவில்லை, சொல்ல முடியவில்லை.

வயதாகிவிட்ட காரணத்தாலோ என்னவோ, கோதை நாச்சியாருக்கு மூட்டுவலியாக ஆரம்பமான வலி உடல் முழுவதும் வேதனையாகப் பரவி, புற்று நோயாகப் பரிணாமம் பெற்று நிபுணர்களின் கணிப்புப் படி, மருந்து மாயம் என்ற கோதையம்மாளின் அந்திம காலத்தை நீட்டிப் போட்டுக் கொண்டிருந்த சமயம்.

தான் மிகவும் நேசிக்கின்ற கோதை நாச்சியம்மாளுக்கேற்பட்ட விபத்தைக் கேள்வியுற்ற சங்கரன் தனது பொது வேலைகளையெல்லாம் ஒதுக்கி விட்டு, கோதை நாச்சியாரை அவரது படுக்கையில் வந்து பார்த்தபோது,

"அம்பி, இண்ணைக்கோ நாளைக்கோண்ணு நான் என் வாழ்நாளை எண்ணிக் கிட்டிருக்கேன். வடிவாம்பாளைத் தனியாக விட்டுட்டுப் போறேன். தங்களோட குடும்பமா எங்களைப் பாவிக்கிற நீங்கதான் வடிவாம்பாளுக்குப்

பக்கத்துணையும் பாதுகாவலும். என்னைப் பார்க்க வந்த சுந்தரேச அய்யரும் வாக்குக் கொடுத்திருக்கார்" என்று வடிவாம்பாளையும் அருகில் வைத்துக் கொண்டு அந்த மூதாட்டி சொன்னபோது, அந்த வார்த்தைகளை வடிவாம்பாள் மாறுபடப் புரிந்திருப்பாள் என்று சங்கரன் எண்ணவில்லை.

கோதை நாயகியின் வார்த்தைகளால் பாதிக்கப்பட்ட சங்கரன், கூடத்தில் வந்து சோபாவில் தனிமையில் உட்கார்ந்திருந்தார். சற்று நேரம் கழித்து, சங்கரனைத் தொடர்ந்து கூடத்துக்கு வந்த வடிவாம்பாள், எதிர் சாரியில் கிடந்த சோபாவில் உட்கார்ந்தாள். வெகுநேரம் எதையோ, சொல்லத் தயங்குவது போல் உட்கார்ந்திருந்த வடிவாம்பாள் ஒரு முடிவுக்கு வந்த மட்டில், சங்கரன் காலடியில் வந்து அமர்ந்தாள்.

"சங்கர் அம்மாவோட ஆயுசு இண்ணெக்கோ நாளைக்கோ தெரியாது. அப்புறம் நான் தனிமையில் விடப்பட்டுப் போவேன். எனக்கு நல்ல, அதிலும் என்னைப் புரிஞ்சுகிண்ட துணை வேணும். ஆமாம் அந்தத் துணை நீயாகத்தான் இருக்க முடியும்" என்று திடுதிப்பென்று சொன்னதைக் கேட்டுத் திகைத்துப் போன சங்கரன் மலைப்புடன் அவளை ஏறிட்டுப் பார்த்தபோது

"உனக்கு ஷாக்காகவும், மலைப்பாகவும் இருக்கலாம். ஆனா என் மனசுக்குள்ளே கிடந்து என்னை உறுத்தின பிரச்சனை. இப்போதே நீ எனக்குப் பதில் சொல்லத் தேவையில்லை. நன்னா யோசித்துப் பதில் சொல்லலாம். எத்தனை வருஷம் ஆனாலும் இந்த வடிவாம்பாள் உன்னோட பதிலுக்குக் காத்திண்டிருப்பாள்" என்று சொன்னவள் எழுந்து, சங்கரனது நயனங்களையே உற்றுப் பார்த்தாள். பிறகு ஏதும் பேசாமல் தனது அறைக்குள் போய்விட்டாள்.

வடிவாம்பாளின் அந்த வார்த்தைகள் சங்கரனை ஒரு மோகியியைப் போல் சதா வதைத்துக் கொண்டிருந்தது அந்தப் பெண்ணுக்குத் தன்பால் ஈர்ப்பு ஏற்படும் படியாக

எப்போதாவது நடந்து கொண்டாரா என்று கூட பல தவணை பழைய சம்பவங்களை எல்லாம் நினைவு படுத்திப் பார்த்த போதும் ஒரு வேளையில் கூட சங்கரன் அப்படி நடந்து கொண்டதில்லை.

அவள்பால் தனக்குள்ள உறவும், ஈடுபாடும், நட்பின்பால் பட்டதா, பாசத்தின்பால் பட்டதா, அல்லது காதல் வயமானதா என்பதை மட்டும் சங்கரனால் பாகுபடுத்திப் பார்க்க முடியவில்லை.

எப்படியும் அவள் தன் பால் கொண்டிருக்கும் ஆசைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதோடு, அவளை நல்வழிப் படுத்த வேண்டும் என்கிற முடிவோடு, சாய்வு நாற்காலியில் தலை சாய்த்த வண்ணம் சங்கரன் யோசனை பண்ணிக்கொண்டிருக்கும்போது,

"சங்கர், என்னோட கேள்விக்கு இதுநாள் வரையில் பதில் சொல்லவே இல்லையே" சங்கரனைப் பார்த்து வடிவாம்பாள் மிகச் சாதாரணமாகக் கேட்டாள்.

அவளது கேள்வியை உள்வாங்கிய படி சற்றுக் கண்ணை மூடிய படி உட்கார்ந்திருந்த சங்கரன் தலையை உயர்த்தி அவளைப் பார்த்து,

"நானே அது பற்றி உன்னோடு பேச வேண்டும், விவாதிக்க வேண்டும் என்றிருந்தேன்" பீடிகை போடுவது போல் சங்கரன் பேசலானார்.

பிறகு, "வடிவு நீயோ விவரம் தெரிந்தவள். எந்த விஷயத்திலும் விவேகமான முடிவெடுக்கக் கூடியவள். தீர்க்கமாக யோசனை பண்ணின பிறகுதான் இந்த முடிவை மேற்கொண்டாயா என்ன?" என்ற போது

"நான் ஒண்ணும் ஏதும் புரியாத சிறுமியல்லவே" சங்கரனது முகத்தைப் பார்த்துச் சொன்னவள், தன் பக்கத்து நியாயத்தைப் பேச முற்படுபவள் போல், எழுந்து சோபாவில் உட்கார்ந்தாள்.

"நட்பு வேறு, தோழமை வேறு காதல் வேறு தாம்பத்தியம் வேறு" என்று சங்கரன் சொல்ல ஆரம்பித்த போது குறுக்கிட்ட வடிவாம்பாள்.

"என்னை முழுமையாகப் புரிந்து கொண்ட ஆண்மகனே எனக்கு வாழ்க்கைத் துணையாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுப்பதற்கு எனக்கு உரிமை உண்டல்லவா. இதை நீ மறுக்கமாட்டாய் இல்லையா சங்கரா" என்று சொல்லிவிட்டு எழுந்து போய் பிளாஸ்கில் இருந்த காப்பியைச் சீனக் கோப்பையில் ஊற்றிச் சங்கரனுக்குக் குடிக்கக் கொடுத்தாள். சங்கரனின் கரங்களில் நடுக்கம் கண்டபோது பாத்திரம் நடுநழுவி விடாமல் பார்த்துக் கொண்டாள்.

"அஃப் கோர்ஸ், உன்னை முழுமையாகப் புரிந்து கொண்ட ஆண்மகனைத் தேர்ந்தெடுப்பதற்கு நிச்சயம் உனக்கு முழு உரிமையும் உண்டு. கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டால் தான் தாம்பத்திய வாழ்க்கை முறையாக இருக்கும்".

காப்பி பானத்தை அருந்திவிட்டு, டீப்பாயில் சீனக் கோப்பையை வைத்த படியே சங்கரன் அவளைப் பார்த்துச் சொன்னபோது,

"உனக்கு என்னைச் சின்னவயது முதல் கொண்டு தெரியும். ஏன் சொல்லப்போனால் எனது தாயார் கோதை நாயகிக்கப்புறம் என்னை முழுமையாகப் புரிந்து கொண்ட மனிதன் நீ மட்டும் தான். அப்படியானால் உன்னை அல்லாமல் நான்வேறு யாரை எனக்குத் துணையாகத் தேர்ந்தெடுக்க முடியும்."

என்று வடிவாம்பாள் சொன்ன வாதத்தைச் சங்கரனால் மறுக்க முடியவில்லை. அவள் பேசுவதில் நியாயம் இருந்தது.

சங்கரன் பதில் ஏதும் பேச முடியாமல் வடிவாம்பாளின் முகத்தையே பார்த்த படியே உட்கார்ந்திருந்தார்.

"அது மட்டுமல்ல சங்கர், என்னோட சிந்தனைக்கும் செயலுக்கும் சுதந்திரம் கொடுக்கக் கூடிய ஆணாக இருக்க வேணும். என்னோட லைஃப் பார்ட்னர் பெண்ணைச் சரிநிகர் சமானமாக மதிக்கக் கூடிய, பெண்ணுக்கு முழு சுதந்திரம் தரக் கூடிய மனிதனாக இருக்க வேண்டும். அந்த உணர்வு ஒப்புக்கான உணர்வாக இருக்கக் கூடாது. அந்த மனிதனோட உதிரத்திலே ஊறிப் போன கொள்கையாக இருக்க வேணும். அப்படிப்பட்ட ஆண்மகனைத் தேடியபோது சங்கர் உன்னை அல்லாமல் வேறு யாரும் எனக்குப் புலப்படவில்லையே.

வெகு நாட்களாகச் சிந்தித்து நான் எடுத்த முடிவு" என்று ஆசிரியர் வகுப்பறையில் மாணவர்களிடம் பேசுவது போல பேசிவிட்டுத் தனது முகத்திலும், கரங்களிலும் துளிர்த்திருந்த வியர்வையைத் தனது முந்தானையால் துடைத்துக் கொண்டாள்.

வடிவாம்பாள் தான் சொல்ல வேண்டியதை முழுமையாகச் சொல்லி முடிக்கட்டும் என்று மனதுக்குள் எண்ணிக் கொண்ட சங்கரன் அவளது உணர்ச்சி வயப்பட்ட வாதத்தை மௌனமாகச் செவி மடுத்த வண்ணம் உட்கார்ந்திருந்தார்.

காம்பவுண்டுக்குள் இருக்கும் மரங்களில் இரவைக் கழிப்பதற்காக வந்தடைந்த பட்சி ஜாலங்களின் அரவம் ஓய்ந்து இருள் பரவிக் கொண்டிருந்தது.

எழுந்து போய் ஹாலில் உள்ள விளக்குகளைப் போட்டுவிட்டு வந்து மீண்டும் பளிங்குத் தரையில் உட்கார்ந்து கொண்ட வடிவாம்பாள், மிகவும் உணர்ச்சி வயப்பட்ட மட்டில் சங்கரனைப் பார்த்து

"நான் தேவரடியாளாகப் பிறந்தது என் குற்றமா?" என்று கேட்டபோது நாகப்பாம்பையே மிதித்து விட்டது போல் பதறிப் போன சங்கரன்.

"என்ன சொல்றே வடிவு. யார் உன் பிறவியைப் பற்றி கேவலமாகச் சொன்னது" என்றவர், வடிவாம்பாளைப் பார்த்தார் அவள் கண்கள் கலங்கியிருந்தன.

வடிவாம்பாள் உணர்வுகள் சமனப்படுமட்டும், மௌனமாகத் தலைக்கு மேல் சப்தமில்லாமல் ஓடிக் கொண்டிருந்த மின் விசிறியை அண்ணாந்து பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்த சங்கரன், ஒரு குழந்தையைச் சமாதானம் செய்ய முற்படும் பெரியவர் போல் அவளது வலது கரத்தை எடுத்துத் தன் மடிமீது வைத்துக் கொண்டார்.

"நீ எவ்வளவு புத்திசாலி, இந்தச் சிறுமையை எல்லாம் பெரிசாக எடுத்துக் கொள்ளக் கூடாது. இந்தச் சமுதாயம் ஜாதிச் சாக்கடையிலிருந்து இனியும் மீடேறவில்லையே" சங்கரன் அவளைச் சமாதானப் படுத்துவதற்காகச் சொன்னார்.

"நான் எவ்வளவு திறமையான கலைஞனாக இருந்தாலும், என்பிறவியோடு, நிழலாகத் தொடரும் ஜாதியின் அடிப்படையிலேயே தான் என்னைப் பார்க்கிறார்கள். என்னைச் சமுதாயம் கணிக்கிறது அனாவசியமான அந்தச் சுமையை என்னால் ஏத்துக்க முடியாது" என்ற வடிவாம்பாள் திரும்பவும் சோபாவில் தலை சாய்ந்த வண்ணம் சொன்னாள்.

"என்னையவும், என் தாயார் கோதை நாயகியவும், எங்களது இழிவைப் பொருட்படுத்தாமல், குடும்பத்தில் ஒரு அங்கமாக இந்த அக்ராகரத்தில் நடத்திய குடும்பம் ஜஸ்டிஸ் பரமசிவம் குடும்பம் மட்டும்தான். என்னண்டை எந்தவிதமான வேறுபாட்டையும் காட்டாத குடும்பத்தில் இணைச்சுக் கொள்வதன் மூலம் என் தன்மானத்தையும் சுய கௌரவத்தையும் காத்துக்க முடியும்" என்று தனது முடிவுக்கான காரணங்களை முழுமையாகச் சங்கரனுக்கு எடுத்துச் சொன்ன திருப்தியுடன் சோபாவில் தலையைச் சாய்த்துக் கொண்ட வடிவாம்பாள் மௌனமாகக் கேசத்தை வருடிய வண்ணம் உட்கார்ந்திருந்தாள்.

வடிவாம்பாள் எடுத்து வைத்த நியாயங்களைத் திரும்பவும் நினைவுபடுத்திப் பார்த்தபோது, வடிவாம்பாள் உணர்ச்சிக்கு ஆளாகி அப்படி ஒரு முடிவுக்கு வந்ததாகப் படவில்லை

தன்பால் இவ்வளவு ஈடுபாடு கொண்டிருந்த போதும், அவள் தனது உள்ளக் கிடக்கையை ஒரு போதும் வெளிக்காட்டிக் கொள்ளாதது வியப்பாகப் பட்டது. காலவரையில் அவர்களுக்கிடையில் ஏற்பட்டிருந்த உறவு இவ்வளவு பிணைப்பு மிக்கதாக இருப்பதை இப்போது தான் சங்கரனால் உணர முடிந்தது.

வடிவாம்பாளை விடத்தானும் சகலத்திலும் சிறந்த துணையைச் சங்கரனால் காணமுடியாது. ஆனால், சங்கரன் சிரசின்மேல் ஏற்றுக் கொண்டிருக்கும் லட்சியம், லட்சிய வாழ்வு அதைச் சூழ்ந்து நிற்கும் ஆபத்துக்கள். இப்படி ஒவ்வொன்றாகச் சிந்தித்த வண்ணம் வெகுநேரம், மௌனமாக உட்கார்ந்திருந்த சங்கரன், வடிவாம்பாளை எப்படியும் சமாதானப் படுத்திவிட வேண்டும் என்கிற திடமான எண்ணத்தோடு,

"வடிவு. காடாறு மாசம் வீடாறு மாசமிண்ணு அலைஞ்ச அரசன் விக்கிரமாதித்தன் வாழ்க்கையாட்டம் என் போன்றவர்கள் வாழ்க்கை. எப்போது வெளியே இருப்போம். எப்போது கைது செய்யப்பட்டுச் சிறையில் அரசு எங்களை அடைக்கும் என்பது தெரியாது" என்று அவளைப் பார்த்துச் சொன்ன போது கலாப மயில் தலையைத் திருப்பிப் பார்ப்பது போல் பார்த்தாள். அவளது உதட்டோரம் லேசான புன்னகை அரும்பி நின்றது.

"எங்கள் வாழ்க்கை மிகவும் ஆபத்தானது. ஆபத்து நிறைந்தது. என் உடம்பையே ரணகளமாக்கியிருக்காங்க ஏன், வார்டர்கள், ஜெயிலரின் உத்தரவுப் படி, என்னையும், என்னைய மாதிரி, தலைவர்களைக் குறி வைத்துக் கட்டபோது, கேரளாவையும், ஆந்திராவையும் சேர்ந்த ஊழியர்கள் மட்டும் குறுக்கே பாய்ந்து காப்பாத்தலையானா நான் உயிர் தப்பியிருக்க முடியாது. உன் முன்னால உட்கார்ந்திருக்க சங்கரனை நீ உயிரோட பார்த்திருக்க முடியாது. அவ்வளவுக்கு ஆபத்து நிறைந்தது எங்கள் அரசியல் வாழ்க்கை" பொதுக்கூட்ட மேடையில் பேசுவது போல் சங்கரன் தன் பக்கத்து நியாயத்தை எடுத்துச் சொன்ன

பிறகு, அவ்வளவையும் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த வடிவாம்பாள்,

"அதனாலே கல்யாணம் பண்ணிக்க வேணாங்கிற அவ்வளவுதானே" என்று மிகச் சாதாரணமாக கேட்டாள்.

"ஆமாம், என்னை நம்பிவரும் ஒரு பெண்ணை நிர்க்கதியாக விடுவது எவ்வளவு மனிதாபிமான அற்ற செயல் என்னால் அந்தப் பெண்ணுக்கு என்ன நிம்மதியை தர முடியும். அவளுக்கு நான் என்ன சுகத்தையும் அமைதியையும் தர முடியும்?".

சங்கரன் இப்படிச் சொல்லவும், வடிவாம்பாள் பார்வையில் ஒருவித எரிச்சலும் கோபமும் தென்பட்டது.

"நீ ஒரு கோழை. வாழ்க்கையைக் கண்டு பயந்து ஓடப்பார்க்கிறாய்". அவளுடைய வார்த்தைகளில் கடுமை தென்பட்டது. அவளது கேள்வி சங்கரனது தன்மானத்தையே கேள்விக்குறியாக்கியது போல் இருந்தது.

தனது உயிரையே துச்சமென மதிக்கும் தன்னைப் பார்த்து வடிவாம்பாள் கேட்ட கேள்வியால் சங்கரன் குலுங்கிப் போனார்.

சங்கரனை யாரும் இதுவரையில் கோழை என்று சொன்னது கிடையாது தனக்கே ஏற்பட்ட தார்மீகமான கோபத்தை வெளிக்காட்டிக்கொள்ளாமல் , சற்று நேரம் மௌனமாக உட்கார்ந்திருந்த சங்கரன் பெருமூச்சுவிட்ட வண்ணம் அவளைப் பார்த்து,

"திஸ் இஸ் டூ மச் This is too much அதிதமானது வடிவாம்பாள் நீ எல்லையை மீறிப் பேசுறே" தொண்டை கனக்க சங்கரன் சொன்னார்

"இல்லை, நான் உண்மையை தான் சொன்னேன் லட்சியத்துக்காக வாழ்க்கையை அர்ப்பணம் பண்ணிட்டதாக உனக்கு ஒரு ஈகோ (Eago) பெண்டு பிள்ளை குடும்பம், பாசம் நேசம் என்கிற சாதாரண மனிதப் பண்புகளை

அனுபவிக்காமல் அந்த அனுபவத்தைப் பெறாமல் அதன் கஷ்ட நஷ்டங்களை அனுபவப்பூர்வம் உணராமல் சமூகத்தை எப்படி நேசிக்கப் போறீங்க. சாரிட்டி பிகின்ஸ் அட் ஹோம் (Charity Begins at home) தர்மம் வீட்டில் ஆரம்பமாகின்றது."

வடிவாம்பாளின் இந்த வார்த்தைகள் சங்கரனது உள்ளத்தில் அம்பாகப் பாய்ந்தது. ஆனால் தன்னுள் மறைந்து உறைந்த போலித் தனத்தை அவள் சுட்டிக்காட்டியது போல் பட்டது. மட்டுமல்லாமல் வடிவாம்பாள் இவ்வளவு உரிமை எடுத்துக் கொண்டு, அதிலும் வழக்கம் போலத் தயவு தாட்சண்யமில்லாமல் பேசியது வியப்பூட்டுவதாக இருந்தது.

வெகுநேரம் வரையில் அவர்கள் இருவரும் அதற்குமேல் பேசிக் கொள்ளவில்லை.

சங்கரன் தீர்க்கமாக யோசனை செய்து ஒரு முடிவுக்கு வரட்டும் என்பது போல், வடிவாம்பாள் எழுந்து போய், சங்கரனுக்கு வேண்டிய பொருட்களை எடுத்து வைத்து அவரை வழி அனுப்புவதற்கான வேலைகளைச் செய்து கொண்டிருந்தாள்.

தனிமையில் விடப்பட்ட சங்கரன் வடிவாம்பாள் பேரில் அவரை அறியாமலே அன்பும், பாசமும், வைத்திருப்பதை உணரலானார். தனக்காக வேண்டி வடிவாம்பாள் எந்தவிதமான தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்கிறாள். அவளுடைய நடத்தையும், பாச உணர்வும் சங்கரனை நெகிழ வைத்தது.

வடிவாம்பாள் பின்கட்டுக்கும், கூடத்துக்கும், அந்த அறைக்கும், சங்கரன் தங்கியிருந்த அறைக்கும் ஓடியாடி வேலை செய்து கொண்டிருந்தாள். வடிவாம்பாளை இமை கொட்டாமல் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்த சங்கரன்,

"வடிவாம்பாள். ஒரு கணம் வாவேன்" என்று அன்பொழுக அழைத்தார்.

சேலையை இடுப்பில் சொருகிய படி ஓடியாடி வேலை செய்து கொண்டிருந்த வடிவாம்பாள் எதிரில் வந்து இடுப்பில் இடது கையை வைத்தபடி

"நீ என்ன சொல்லப் போகிறாய்" என்று கேட்பதே போல் பார்த்தாள்.

"உன்னை நீ ஏமாற்றிக் கொள்ளப் பார்க்கிறாய் ஆனால் என்னை ஏமாற்றிவிட்டு நீ தப்பி ஓடிவிட முடியாது" என்று கேட்பது போல் இருந்தது அவளது பார்வை.

பழமையில் ஊறிப்போன தனது தாயார் மனதைப் புண்படுத்த விரும்பாத சங்கரன்,

"என்னோட முரட்டுத்தனமான நடவடிக்கைகள் காரணமாக எனது தாயார் அம்புஜத்தம்மாள் மனதை எவ்வளவோ புண்படுத்திவிட்டேன். நானும் நீயும் எடுக்கும் முடிவால் அவங்க மனம் உடைஞ்சு போகப்படாது வடிவு" என்று தயங்கித் தயங்கிச் சங்கரன் சொன்னதைக் கேட்டுச் சலனப்படாமல் நின்ற வடிவாம்பாள்,

"அம்புஜத்தம்மாள் தன்னைவிடத் தானும், தன்னோட நிழலைக் கண்டுதான் பயப்படறாங்க" என்றாள்.

வடிவாம்பாள் சொன்ன வார்த்தைகளின் பொருளைப் புரிய முடியாமல் அவளது நயனங்களையே பார்த்த படி உட்கார்ந்திருந்த சங்கரன்.

"நீ என்ன சொல்ல வர்ரே. புரியும் படியாகச் சொல்ல வேண்டியது தானே"

வடிவாம்பாள் வாய்விட்டுச் சிரிக்கலானாள். பிறகு சோபாவில் சரிந்து நின்றவாறே

"அப்பாவுக்கு வேண்டி, இப்பெல்லாம் வாரத்துக்கு மூணு நாள் ஒங்க ஆத்துக்குப் போயிட்டு வர்ரேன். அப்பாவுக்கு வேண்டி பாரதி பாடல்களையும், ஆண்டாள் பாசுரங்களையும் பாடுறது மாமூலாகப் போயிட்டது. சில நாட்களில் அம்புஜத்தம்மாளின் வேண்டுகோள் படி, வீணையோடு போய்த் தியாக பிரம்மத்தின் கீர்த்தனைகளை அவர்களுக்காகவே பாடுகிறேன் அப்போதெல்லாம்,

குங்குமம் கொடுத்து என்னை ஆசீர்வாதம் செய்யும் போது, என்னைப் போன்ற மாட்டுப் பெண் தனக்கு வாய்க்க வேண்டும் என்கிற ஆதங்கம் அவங்களோட கண்களில் தேங்கி நிற்பதைப் பார்த்திருக்கிறேன். சம்மந்தா சம்மந்தமில்லாமல் உன்னைப் பற்றி என்னண்டை விசாரிப்பார்கள். அந்த விசாரிப்பு எதுக்காம்." என்று சொல்லிவிட்டு எதிர் சோபாவில் உட்கார்ந்தவள்

"என்னவானாலும் நான் தேவதாசிப் பெண்தானே. தன்னையும் விடத் தன்னை ஒத்த சனாதனப் பெண்டுகள், தன்னைக் கேவலமாகப் பேசுவார்கள். பார்ப்பார்களே என்ற பீதி. அதனாலதான் நிழலைக் கண்டு அம்புஜத்தம்மாள் பயப்படறாங்க" என்று சொன்னபோது, சங்கரனுக்கு உள்ளூற வியப்பு தட்டியது. அம்புஜத்தம்மாளுக்கு வடிவாம்பாள்பால் வாஞ்சை அதிகம். அது மட்டுமல்லாமல் இதர பெண்களை விடத் தானும் அம்புஜத்தம்மாள் வடிவாம்பாளிடம் அதிக சலுகையும் உரிமையும் எடுத்துக் கொண்டு பேசுவதைப் பல தவணைகளில் சங்கரன் கவனித்திருக்கிறார்.

"அம்புஜத்தம்மாள் மானசீகமாக என்னைத் தன்னோட மாட்டுப்பெண்ணாக ஏற்றுக் கொள்ளும் காலம் வரையில் உனக்காக நான் காத்திண்டிருப்பேன். இல்லையானா அவங்களோட அந்திமகாலம் வரையில் காத்திண்டிருப்பேன். இந்த விஷயத்தில் யாருடைய மனத்தையும் நான் புண்படுத்த மாட்டேன். நிச்சயமாக மாட்டேன்" சங்கரனது கண்களை உற்றுப் பார்த்தவாறு வடிவாம்பாள் சொன்னாள்.

"இந்த உறுதிமொழி ஒண்ணே போதும் வடிவாம்பாள்" சங்கரன் மனநிறைவுடன் சொன்னார்.

சங்கரனது சம்மதத்தைப் பெற்றுவிட்ட மனநிறைவுடன் அவரையே பார்த்த வண்ணம் நின்றிருந்த வடிவாம்பாளின் உள்ளத்தின் ஆழத்தினின்றும் பெருமூச்செழுந்தது.

"என்னை என்னோட மனநிலையைப்புரிஞ்சு என்னை ஏத்துக்க ஆண் துணை கிடைச்சிருக்கு என்கிற மனநிறைவே எனக்குப் போதுமானது" என்று எண்ணிய வடிவாம்பாள்

"கண்ணன் எங்கிற கற்பனைக்காக ஆண்டாள் இண்ணெயவரை காத்து நிக்கறாளே. அது மாதிரி சங்கரன் என்கிற என் மனம் நிறைஞ்ச மனுஷனுக்காக எத்தனை காலமானாலும் நான் காத்திண்டிருப்பேன்."

நயனங்களில் நீர் கசிந்தோட உணர்ச்சிவயமாக நின்று அவள்பேசிய போது, ஒரு குழந்தையை வாரி எடுப்பது போல், சங்கரன் வடிவாம்பாளைத் தனது மார்போடணைத்துக் கொண்டார்.

அப்போது பின் கட்டுக்கதவு தட்டும் ஓசை கேட்டது.

மீண்டும் அவர்கள் பிரியப்போகும் நேரத்தை உணர்ந்த வடிவாம்பாள் சங்கரனது பிடியினின்றும் விடுபட்டு ஹாலில் இருந்த வானொலிப் பெட்டியை ஆன் செய்துவிட்டுப் பின் கட்டுப் பக்கமாகப் போனாள்.

வானொலிப் பெட்டியினின்றும் எழுந்த வீணையின் நாதம் அந்தக் கூடம் முழுவதும் சன்னமாக வியாபித்தது. கேட்பதற்கு மிகவும் இனிமையாக இருந்தது.

சிறிது நேரத்தில் வடிவாம்பாளைத் தொடர்ந்து வேலப்பனும், மாரப்பனும் அந்த உள்கூடத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

சங்கரன் சுவர்க் கடிகாரத்தையும் பார்த்தார். ஏற்பாடு செய்த படி அவர் சுந்தரேச அய்யரைச் சந்திக்க வேண்டிய நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது.

வந்தவர்களை உட்காரச் சொல்லிவிட்டு,

"இவங்களுக்கு ஏதாவது குடிக்கக் கொடு வடிவு" என்று வடிவாம்பாளிடம் சொல்லவும்.

"வேண்டாம் தோழரே. நேரம் ஆவுது" மாரப்பன் சொன்னான்.

சங்கரனது பிரயாணத்துக்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்த வடிவாம்பாள், மூன்று சாப்பாட்டுப்

பொட்டணங்களை வேலப்பன் கையில் கொண்டு வந்து கொடுத்தாள். சங்கரன் அவளை ஏறிட்டுப் பார்க்கவும்,

"உங்க மூணு பேருக்குமான இரவுச் சாப்பாடு. தலைவர் கந்தசாமி ஏற்கனவே மூணு பேருக்கான சாப்பாட்டைத் தயார் செய்யச் சொல்லியிருந்தார்" என்று சங்கரனிடம் சொல்லிவிட்டுத் தனது அறையை நோக்கிப் போனவள், வேலைப்பாடமைந்த தோல்பை ஒன்றைச் சங்கரனிடம் கொடுத்தாள்.

"இதில் உன்னோட உடையோடு வேறு ரெண்டு செட் உடையும் வச்சிருக்கேன். அவசரத் தேவைக்குக் கொஞ்சம் பணமும் உள்ளே இருக்கு" என்று காரியமாகச் சொன்னாள்

அவளது நெற்றிப் பொட்டில் வியர்வை அரும்பி நின்றதைக் கவனித்த சங்கரன்,

"இவ்வளவு சிரமப் பட வேணுமா என்ன" என்று கேட்டார்.

"அது என் கடமை" வியர்வையைப் புறங்கையால் துடைத்த படியே சொன்னாள்.

தோல் பையை வாங்கிக் கொண்ட சங்கரன் விடை பெற்றுக் கொண்டார்.

பின் கட்டு வரையில் வந்த வடிவாம்பாள் அவர்களை வழியனுப்பி வைத்தாள்.

சங்கரனது உருவம் இருட்டில் மறையும் வரையில் அவரைப் பார்த்த வண்ணம் நின்றிருந்தாள்

வானொலிப் பெட்டியிலிருந்து வீணையின் நாதம் கம்பீரமாக ஒலித்துக் கொண்டிருந்தது.

வடிவாம்பாளுக்கு உள்ளில் இதயம் நிரம்பி வழியும் மகிழ்ச்சி

19

அன்று அமாவாசை நாள். ஒன்றிரண்டு தெரு விளக்குகள் அங்கு மிங்கும் மின்மினிப் பூச்சிகளைப் போன்று ஒளிவீசிக் கொண்டிருக்கின்றன. மற்றபடி அந்த ஊரே, இருளில் மூழ்கிக் கிடக்கிறது. இருளின் பயங்கரத்தை மேலும் அதிகப்படுத்துவது போன்று வயல்களிலும் வாய்க்கால் களிலும் மறைந்து கிடக்கும் நீர்த்தவளைகள் காட்டுக் கூச்சலாக ஒன்றாக இணைந்து கூச்சல் போடுவதும் திடீரென்று நிறுத்திக் கொள்வதும், திரும்பவும் உக்கிரமாகக் கூச்சல் போடுவதுமாக இருக்கின்றன.

தெரு நாய்கள் கூட நடமாட்டமில்லாமல் வீடு களுக்குள் முடங்கிக் கிடக்கின்றன.

இவ்வளவு இருந்த போதும், போலீஸ் கெடுபிடியைக் கருதி நடுச் சாமத்திற்குப் பிறகு தான் சங்கரனால் மாங்குடி கிராம அக்ராகரத்தில் உள்ள தனது பூர்வீக வீட்டுக்குப் போக முடிந்தது. அதிலும் தனது குடும்பத்துக்குச் சொந்தமான அந்த வீட்டுக்குள் ஒரு திருடனைப் போல மிகவும் ஜாக்கிரதையாக நுழைய வேண்டியிருக்கிறது.

நடுநிசி வரையில் அந்தக் கிராமத்தை நேர்முகமாகவும், மறைமுகமாகவும் குறிப்பாக மாங்குடி அக்ராகரத்தையும் முற்றுகையிட்டுச் சங்கரனுக்காகப் பதிபோட்டுக் காத்திருந்த போலீஸாரும் உளவுத் துறையினரும் சங்கரன் பற்றியும், அவரது நடமாட்டம் பற்றியும் எந்தவிதமான துப்பும் கிடைக்காததால், விவரத்தை மேலிடத்துக்குத் தெரிவித்து, அவர்களின் உத்தரவைப் பெற்று, அவரவர் முகாமுக்குத் திரும்பியிருந்தனர். போலீஸ் மேலிடத்தைப் பொறுத்த மட்டில், சங்கரன், வேலூர்

கோட்டையினின்றும் வெளிவந்ததும் தலை மறைவாகத் தெலுங்கு தேசத்துக்குள் நுழைந்திருக்கலாம் என்கிற ஊகம்.

இருந்தபோதும், உளவுத் துறை எந்த நேரத்தில், என்ன அவதாரம் எடுக்கும் என்பது தெரிய முடியாது என்பதால், மிகவும் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டியுள்ளது. எனவே, முன் கருதலாக ஊர் எல்லையில் சில விவசாயிகள் சங்க ஊழியர்களும், அக்ராகரத்தின் தெரு முனைகளிலும் வேலப்பனும் மாரப்பனும், நின்று போலீஸ் உளவுத் துறையினரின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்ட பின்னரே, சங்கரன் தனது தந்தை சுந்தரேச அய்யரைச் சந்திப்பதற்கு அவர்கள் வீட்டுக்குப் போனார்.

அக்ரகாரத்தில் கட்டப்பட்டிருக்கும் அந்தப் பழமையான வீடு மிகவும் விஸ்தாரமானது முன் கட்டு ஒரு தெருவில் ஆரம்பித்துப் பின் கட்டு வேறு தெருவில் முடிகிறது. அந்த வீடு, சங்கரனது பாட்டனார் ராமச்சந்திர சிவம் என்பவரால், செட்டி நாட்டினின்றும் கட்டிடக் கலைஞர்களை வரவழைத்து அவர்கள் முறையிலேயே கட்டி முடிக்கப்பட்டிருக்கும் கட்டிடம். கட்டிடத்தின் பழமை மாறாமல் பாதுகாக்கப் படவேண்டும் என்பதற்காக, கூரையில் வேயப்பட்டிருக்கும் கள்ளிக்கோடு ஓடுகள் கூட பழமை மாறாமல் பராமரிக்கப்பட்டு வருகிறது. ராமச்சந்திர சிவனது காலத்துக்குப் பிறகும், சங்கரனது பெரிய தகப்பனார் பரமசிவம் அய்யரும், சுந்தரேச அய்யரும் வீட்டின் பழமையைப் பாதுகாப்பதில் மிகவும் அக்கறை எடுத்துக் கொண்டுள்ளனர்.

அந்த வீட்டில் பிறந்து வளர்ந்த இரண்டாம் தலை முறையினரும், மூன்றாம் தலை முறையினரும், தாங்கள் பெற்ற உயர்கல்வி காரணமாக டில்லி, பம்பாய், கல்கத்தா என்ற இந்தியப் பெரு நகரங்களுக்கும், லண்டன்,நியூயார்க் என்று வேற்று நாடுகளுக்கும் பெயர்ந்து போனது மட்டுமல்லாமல் மாற்றுப் பண்பாட்டுக்கு ஆட்பட்டுப் போன போதும், ஒரு காட்சி சாலை போன்று அந்த வீட்டின் பாரம்பரியமும்

பண்பாடும் பேணப்பட்டு வருகிறது. குடும்பச் சொத்துக்களை நிர்வாகம் பண்ணுவதற்காகவும், குடும்ப கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காகவும், சுந்தரேசய்யர் தனது மூத்த சகோதரரின் வேண்டுகோள்படி தனது வழக்கறிஞர் தொழிலையும் விட்டுவிட்டு மனைவியுடன் திரும்பவும் அந்த வீட்டில் வாசம் செய்து பராமரித்து வருகிறார்.

சங்கரன் அந்த வீட்டின் முன் கட்டையும், முதல் அறையையும் தாண்டி, விசாலமான, இரண்டாவது அறையின் கதவைத் திறந்து கொண்டு அறையுள் பிரவேசித்த போது, சாய்வு நாற்காலியில் உட்கார்ந்த படி, நாற்காலியை ஒட்டி நிற்கும், மின் விளக்கொளியில் ஏதோ, ஒரு புஸ்தகத்தில் ஆழ்ந்திருந்த சுந்தரேச அய்யர் அரவம் கேட்டு வாசலை ஏறிட்டுப் பார்த்தார்.

தனது கிளிமூக்கு நாசியைத் தடவி, மூக்குக் கண்ணாடியைத் துடைத்து மாட்டியவர்,

"வாடா சங்கரா உனக்காக வேண்டி எத்தனை நாழி காத்திண்டிருக்கேன்" என்று சொன்ன வண்ணம் நாற்காலி யினின்றும் எழுந்து நிற்கப் போனார். அதற்குள்

"அப்பா, சிரமப்படாதீங்கோ" என்று சொன்னபடியே சங்கரன் சாய்வு நாற்காலி அருகில் போன போது, ஆவலுடன் சுந்தரேச அய்யர் தன் மகனைக் கட்டிப் பிடித்துக் கொண்டார். அவருடைய மெலிந்த கரங்கள் சங்கரனின் முதுகை வருடுவதை அவரால் உணர முடிந்தது.

பக்கத்து அறையில் தனது நித்திரையைத் திரஸ்காரம் செய்துவிட்டு உட்கார்ந்திருந்த அம்புஜத்தம்மாள், அரவம் கேட்டு அவசர அவசரமாக வாசலண்டை வந்து மகனைப் பார்த்து விட்ட ஆர்வத்தில்

"அம்பீ, எப்போடா வந்தே" என்றவள், சங்கரனது மாறிப் போன மாற்றத்தைக் கண்டு துணுக்குற்று

"அய்யோ எவ்வளவு மாறிப் போயிட்டாய் அடையாளம் கூட கண்டுக்க முடியலையே அப்பா" என்று அங்கலாய்த்த போது, சங்கரன் தனது அன்னையின்

பாதங்களைத் தொட்டு வணங்கிய போது, அப்படியே உட்கார்ந்து கட்டித் தழுவிய அம்புஜத்தம்மாள், வேதனை தாளாமல் அவரது இருதயம் படபடத்துக் கரங்கள் நடுங்குவதைச் சங்கரனால் உணர முடிந்தது.

பெருமூச்செறிந்த வண்ணம் அம்புஜத்தம்மாள் சங்கரனது உடம்பில் ஜெயில் வார்டர்களினால் ஏற்படுத்தப்பட்ட காயங்கள் ஒவ்வொன்றையும் வருடிப்பார்த்தார். மாலை மாலையாகக் கண்ணீர் வடித்த வாறே,

"இப்படி அடியும் உதையும் வாங்கிறதுக்கா உன்னை ஈ எறும்பு கூட அணுகாமப்பாத்து வளர்த்தோம்" என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டார்.

அம்புஜத்தம்மாள் எப்போதுமே தனது உணர்வுகளை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளமாட்டார். தாடியும் மீசையுமான சங்கரனின் தோற்றமும், அவர் உடம்பு மெலிந்து காணப்படுவதும் அவர் உடம்பில் காணப்படும் வடுக்களும், அம்புஜத்தம்மாளை வெகுவாக உணர்ச்சி வயப்பட வைத்துவிட்டது.

"அம்மா எதுக்கு உணர்ச்சிவசப் படறேள். ஒன்னோட மகன் உயிரோட வந்ததுக்கு நீ சந்தோஷப்பட வேணும்" என்று அம்புஜத்தம்மாளின் கரங்களைப் பிடித்து ஆறுதல் சொன்ன சங்கரன், அம்புஜத்தம்மாளின் பிடியினின்றும் விடுபட்டு, சுந்தரேச அய்யர் உட்கார்ந்திருக்கும் சாய்வு நாற்காலிப் பக்கமாகக் கிடக்கும் சோபாவில் உட்கார்ந்தார்.

இவ்வளவு நேரமும், தனது மனைவியையும்,மகனையும் மௌனமாக பார்த்த வண்ணமிருந்த சுந்தரேசய்யர்,

"ஆட்சி செய்யறாளே ஆளும் கட்சி அவாளெல்லாம் கோழைகள் இவாளெல்லாம் மனித ஜென்மம் கிடையாது ஜெயிலுக்குள்ளே. நிராயுதபாணியாக நிற்கிற மனுஷாளை மிருகங்களாட்டம் அடிச்சுக் குதறியிருக்கா. துப்பாக்கிப் பிரயோகம் வேறே செய்திருக்கா" என்று எரிச்சல் ததும்பச் சொன்னவர்

"போன மாசம் தேரடித் தெருவிலே கூட்டம் நடந்தது. ராமசாமி நாயக்கர் ஜெயில்லே நடந்த அடக்கு முறையை, கடுமையாகக் கண்டிச்சார். கூட்டத்தைக் கலைக்கப் போலீஸ் தடியடி நடத்திப் பார்த்தா முடியலை" என்று சங்கரனைப் பார்த்துச் சொன்னவர், உணர்ச்சி வயப்பட்ட மட்டில் முகட்டைப் பார்த்தவாறு மௌனமாக உட்கார்ந்திருந்தார்.

அம்புஜத்தம்மாள், எழுந்து போய்ச் சங்கரனுக்குச் சாப்பிடுவதற்கும் அருந்துவதற்கும் தட்டில் பாலும் பழமும் கொண்டு வந்து கொடுத்து விட்டுப் பக்கத்திலேயே நின்று கொண்டிருந்தார்.

சோபாவில் உட்கார்ந்தபடியே சங்கரன் பழமையின் சின்னமாகவும், புதுமையின் சாட்சியாகவும் இருக்கும். அந்தப் பழங்கால அறையைப் பார்த்தார். அந்த அறை பாட்டனார் ராமச்சந்திர சிவம், அவர் வாசம் செய்வதற்கென்றே திட்டமிட்டுக் கட்டப்பட்ட அறை. அறையில், சுந்தரேச அய்யரின் சாய்வு நாற்காலிக்குப் பின்னால், தஞ்சாவூர் ஓவியர்களால் வரையப்பட்ட இராமர் பட்டாபிஷேக ஓவியம். இன்றும் புதுமை மங்காமல் பாதுகாக்கப் பட்டிருக்கிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வரையப்பட்ட படம் அது. அறையெங்கும் ஆங்காங்கே மேஜைகளிலும் பீப்பாய்களிலும் வால்மீகி இராமாயணப் பதிப்புக்களும், கம்பன் காவியமும், காளிதாஸன் பவபூதி ஆகிய கவிஞர்களின் படைப்புக்களும், ஷேக்ஸ்பியர் மில்ட்டன் ஆகியவர்கள் படைப்புக்களும் மற்றும் பல ஆங்கில நூல்களும் முறையாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன.

சுந்தரேச அய்யர், வால்மீகி இராமாயணம் பற்றி எழுதிய ஆய்வு முடிவுகளடங்கிய கையெழுத்துப் பிரதி அவரது சாய்வு நாற்காலியை ஒட்டிக்கிடக்கும் மேஜையில் ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டிருக்கிறது.

சோபாவில் உட்கார்ந்த படியே, அறையை ஆய்வு செய்து கொண்டிருக்கும் சங்கரனைப் பார்த்து

"அம்பி, என்னடா தாடி, முஸல்மான் ஆகப் போறியா என்ன" வேடிக்கையாகக் கேட்டார்.

"போலீஸ்காராளும் சி.ஐ.டிகளும் என்னை அடையாளம் கண்டுக்கக் கூடாது என்பதுக்காகவே ஒரு வேஷம்."

புன்னகை ததும்பச் சொல்லவும் சுந்தரேச அய்யர் திரும்பவும் சாய்வு நாற்காலியில் தலையைச் சாய்த்துக் கொண்டார்.

கன கம்பீரமாகச் செயல்படும் சுந்தரேசய்யர் அந்தச் சாய்வு நாற்காலிக்குள் முடங்கிப் போய்விட்டது. சங்கரனுக்கு வேதனையாக இருந்தது. வயோதிகத்தின் சோர்வு அவரது பார்வையில தென்பட்டது.

"அப்பா, இப்போ உடம்புக்கு எப்படி இருக்கு. எப்படி ஃபீல் பண்றேள். ஒய்வு ஒழிச்சலில்லாமல் எழுதிண்டிருக்கேள்ண்ணு சொன்னாள். சற்று ஒய்வு எடுத்துக்கப்படாதோ என்ன" சங்கரன் கேட்கவும்,

"எனக்கென்ன நன்னாத்தானேஇருக்கேன் சங்கரா. எப்போதுமே பதினாறு வயசு மார்க்கண்டேயனா இருக்க முடியுமா என்ன. தொண்ணூறு வயசைத் தாண்டியாச்சு.நான் தாங்கிண்டிருக்க வயசு என்னை அழுத்தத்தானே செய்யும். சின்னஞ் சன்னமாக என்னோட பாரத்தைக் குறைச்சுண்டாயிட்டது. இயற்கையை ஏமாத்திட முடியுமா. என்னைக்கும் ஒருநாள் சாவைச் சந்தித்துத்தானே ஆக வேணும்." புன்முறுவல் பூத்த வண்ணம் சொன்னவர்.

"உடம்பு முன்னைப் போல இல்லைதான். இருந்தாலும், உன்னோடு ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டியிருந்தது. அதனால தான் என்னவானாலும் என்னைவந்து சந்திக்க வேண்டி ஜெயிலுக்குக் கடுதாசி போட வேண்டியதாயிற்று" என்று சொன்னவர் சங்கரனை ஏறிட்டுப் பார்த்தார்.

அப்படி என்ன காரியமாகப் பேச வேண்டி உள்ளது என்று கேட்பது போல் சங்கரன் பார்த்த போது,

"என்னோட சொத்தில் உன் சகோதரர்கள் அவரவர்களுக்குச் சேரவேண்டிய பாகத்தைப் பிரிச்சு எழுதி வைச்சட்டேன். அவரவர் சொத்துக்களை என்ன செய்ய வேணும்ண்ணும் சொல்லியிட்டா. உன்னோட பாகம் மட்டும் அப்படியே இருக்கு. உன் பங்கு பத்தி எனக்கு ஒரு அபிப்பிராயம் உண்டு. உன் அபிப்ராயத்தைக் கேட்டுண்டுதான முடிவு செய்ய வேணும். உன் அபிப்பிராயப்படி அதையும் எழுதி முடிச்சுட்டா என் கடமை ஒஞ்சதுண்ணு நிம்மதியாயிடுவேன்" என்று சொல்லிவிட்டு, சங்கரனது பதிலை எதிர்பார்த்து மௌனமாக உட்கார்ந்திருந்தார்.

சுந்தரேச அய்யர் சொல்வதைக் கேட்டு விட்டு மௌனமாக உட்கார்ந்திருந்த சங்கரன்,

"எனக்குப் பாகம் வேண்டியதில்லை. அதை மத்தவாளுக்குப் பிரிச்சுக் கொடுத்திடலாம். இல்லையானா. அப்பா உங்களோட உசிதப்படி ஏதும் செய்யுங்கோ."

சங்கரனுக்குச் சொத்தின் மீது விருப்பமும் ஆசையும் இல்லாதிருப்பது அம்புஜத்தம்மாளுக்கு வியப்பாக இருந்தது.

என் மகனைப் பற்றி எனக்கு நன்றாகவே தெரியும் என்பதைப் போல் சுந்தரேச அய்யர் மனைவியைப் பார்த்தார்.

தனது பாகச் சொத்து சம்மந்தமாக அவர்கள் இருவரும் ஏற்கனவே பேசியிருக்க வேண்டும் என்று சங்கரனுக்குப் பட்டது.

சிறிது நேரம் யாதும் பேசாமல் உட்கார்ந்திருந்த சுந்தரேச அய்யர்,

"காசிக்கு யாத்திரையாப் போர பிராமணாளுக்கு அன்னதானம் செய்யறதுக்கு வேண்டி, அப்பா இராமச் சந்திரன் சிவம் ஏற்படுத்தியிருக்கும் டிரஸ்ட்டை. நான் டிஸ்ட்ரப் Distrub செய்ய விரும்பலை. அது சில பேருடைய மத உணர்வுகளைப் பாதிக்கும். எவ்வளவு காலம் ஓடுமோ

அவ்வளவு காலம் ஓடட்டும்" என்று அம்புஜத்தம்மாளின் முகத்தைப் பார்த்த வண்ணம் சொன்னவர்,

"அண்ணா பரமசிவம் அய்யர் தாழ்த்தப்பட்ட பிள்ளைகளுக்கு வேண்டி உருவாக்கி வெச்சிருக்க பள்ளிக் கூடத்துக்கு ஒன்னோட பங்கை எழுதி வைக்கலாம். நான் என்னோட பங்கையும் அந்தப் பள்ளிக் கூடத்துக்குத் தான் எழுதி வைக்கப் போரேன். என்ன சொல்றே" என்று கேட்ட போது, எந்த விதமான மறுப்பும் இல்லாமல்,

"ஓ, தாராளமா உங்களோட உத்தேசப்படியே செய்யுங்கோ. இப்படிச் செய்யறது அவ்வளவு காலம் ஹரிஜன சேவா சங்கத்தின் செயலாளராய் நீங்க இருந்ததுக்கு ஒரு அர்த்தம் இருக்கு." என்று சங்கரன் சொல்வதைக் கேட்டு திருப்திப்பட்ட மட்டில் சுந்தரேச அய்யர் தனது மூக்கை வருடிய வண்ணம் தலையைக் குலுக்கிக் கொண்டார்.

"இதுக்குத் தானா என்னை அவசரமா வரச் சொன்னேள். கடுதாசி மூலமா எனக்குத் தெரிவிச்சிருந்தா ஜெயிலில் இருக்கச்சையே என் சம்மதத்தைத் தெரிவிச்சிருப்பேன்" என்று சங்கரன் வெகு சாதாரணமாகச் சொல்லவும்.

"ஹோ. பெத்தவாளோட உள்ளமும் சங்கடமும் நோக்குப் புரியாது. நீ எவ்வளவு தான் பெரிய மனுஷனா யிட்டாலும் எங்களுக்கு நீ பிள்ளையாண்டன் தாண்டா சங்கரா.

உன்னை அடிச்சு மண்டையப் பிளந்திட்டாங்கர சேதியைக் கேட்டு நாங்க எவ்வளவு துடிச்சுப் போனம் தெரியுமா. அம்புஜம் எத்தனை இரவுகள் அதை நெனச்சு நெனச்சுக் கண்ணீர் விட்டிருக்கா தெரியுமா... இப்போ உன்னைப் பாக்கறதுக்கு எவ்வளவு மகிழ்ச்சியா இருக்கு" என்று சுந்தரேசய்யர் உடைந்த குரலில் பேசிய போது உணர்ச்சி வசப்பட்ட அம்புஜத்தம்மாள் தனது முந்தானையால் கண்களைத் துடைத்த வண்ணம் நின்றிருந்தார்

சங்கரன், சுந்தரேச அய்யரின் தலைக்கு மேல், சுவற்றில் மாட்டப்பட்டிருக்கும் அந்த பழங்காலத்துச் சுவர் கடிகாரத்தைப் பார்த்த போது,

"ஏன் நாழி ஆயுட்டதா." என்று சுந்தரேச அய்யர் கேட்டார்.

"என்னடா அம்பி. வந்ததும் வராததுமா கால்லே வென்னீரை ஊத்திண்டு நிற்கிறாய்... ஒரு வாரமாவது தங்கிண்டு போக வேண்டாமோ. என் ஆசை தீர நோக்குச் சமைச்சுப் போடாண்டாமா." அம்புஜத்தம்மாள் ஆதங்கத்துடன் சொன்னார்.

"அவனைப் போலீஸ் புடிச்சுண்டு போக வேணம்ண்ணு நீ ஆசைப்பட்டா அவனை ஒரு வாரம் என்ன ஒரு வருஷம் கூட தங்கச் சொல்லலாம். இருக்க நிலமையிலே ஒரு நாழி கூட அவன் இந்த ஆத்திலே தங்க முடியாது" என்று அம்புஜம் அம்மாளை எச்சரித்த சுந்தரேச அய்யர், தனது வாழ்நாள் கடமையாக ஆய்வு செய்திருக்கும் வால்மீகி இராமாயண விமர்சனத்தைப் பதிப்பிக்க வேண்டியதன் அவசியத்தையும், அதற்கான நிதியும் ஒதுக்கப்பட்டிருப்பதையும் சொல்லி, பதிப்பிக்க வேண்டியதற்கான பொறுப்பையும் சங்கரனிடம் ஒப்படைத்தார்.

சங்கரன் அங்கிருந்து விடை பெற்றுக் கொண்டபோது, விடிகாலையின் வரவை அறிவிப்பது போல், குடியானவர் குடியிருப்பில் கூரைகளில் உட்கார்ந்திருக்கும் சேவல்கள் கூவுவது காற்றில் மிதந்து வந்து கொண்டிருந்தது.

சங்கரன் முன்கட்டுக் கிராதியைக் கடந்து அக்ராகரத்துத் தெருவில் நடந்து போவதைச் சுந்தரேச அய்யரும் அம்புஜத்தம்மாளும் பெருமூச் செறிந்தவாறு பார்த்த வண்ணம் நின்றிருந்தனர்.

பாகம் - 4

1

சங்கரனது ஹேபியஸ்காப்பர்ஸ் மனு ஏற்றுக் கொள்ளப்பட்டு சென்னை உயர்நீதி மன்றத்தால் விடுதலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து புதிய அரசியல் விதிகளைக் காட்டி தங்களைச் சிறைக் கூடங்களில் அடைக்கப் பட்டிருப்பது, அரசியல் சட்ட விதிகளுக்குப் புறம்பானது, என்று சிறைகளில் கைதிகளாக அடைக்கப்பட்டிருந்த, தொழிலாளர் மற்றும் அரசியல் தலைவர்கள் மதராஸ் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். தலைவர்களுடைய மனுக்களை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட மதராஸ் உயர் நீதிமன்றம், அவர்கள் தரப்பு வாதங்களை ஏற்றுக் கொண்டு அவர்களை விடுதலை செய்ய உத்தரவிட்டது.

இவ்வாறு விடுதலை செய்யப்பட்ட தலைவர்களை மீண்டும் கைது செய்து, புதிய அரசியல் சட்டப்பிரிவுகளைப் பயன்படுத்தி அவர்களைத் திரும்பவும் சிறையில் அடைப்பதற்கான அரசின் முயற்சி பயனளிக்கவில்லை. அரசாங்கத்தின் சுயவாளித் தனத்தைப் புரிந்து கொண்ட தலைவர்கள், சிறைக் கூடத்தினின்று வெளியே வரும் போதே அவர்களைக் கைது செய்வதற்காகப் படை பட்டாளத்துடன் சிறை வாசலில் காத்துக் கிடக்கும், போலீஸ் அதிகாரிகளுக்கும், உளவுத்துறையினருக்கும் போக்குக் காட்டிவிட்டுத் தலை மறைவாகி மக்களுடன் மக்களாகக் கலந்து, முன்னையை விட வேகமாகவும், விவேகமாகவும் தங்களது சமூக அரசியல் பணிகளைத் தொடரலானார்கள்.

சிறையில் அடைக்கப்பட்டிருந்த தலைவர்கள் மீண்டும் மக்கள் மத்தியில் வேலை செய்ய ஆரம்பித்த போது, தொழிலாளர், விவசாயிகள், மற்றும் மக்கள் இயக்கங்கள் மேலும் வலுவாக நடைபெறலாயின. ஊழியர்கள் இரட்டிப்பு உற்சாகத்துடன் செயல்பட ஆரம்பித்தனர்.

ஏற்பட்ட புதிய சூழ்நிலை காரணமாக அரசாங்கம் கதிகலங்கிப் போனது. விடுதலையாகித் தலை மறைவாகிப் போன தலைவர்களையும் ஊழியர்களையும் கைது செய்வதற்காக, போலீஸ் இலாகாவும் உளவுத்துறையும் முடுக்கி விடப்பட்டது.

அடக்கு முறை, பாசிச உருவம் பெறலாயிற்று. வெகுஜன ஊழியர்களும், ஜனநாயக எண்ணம் கொண்ட நடுநிலை யாளர்கள் கூட ஏராளமாகக் கைது செய்யப் பட்டனர். சந்தேகப்படும் நபர் யாராயினும் கைது செய்யப்பட்டுச் சித்திரவதைக்கு ஆட்படுத்தப்பட்டனர்.

மலைக்கோட்டை நகரமான அந்த நகரத்தில் சங்கரன் போலீஸ் வளையத்தினின்றும் தப்பிவிட்டார் என்ற சேதி வந்ததுதான் தாமதம், போலீஸ் காவல் இரட்டிப்பாக்கப் பட்டது. சூப்பிரண்ட் தேவசகாயம், போலீஸ் பிடியினின்றும் தப்பிவிட்ட சங்கரனைக் கைது செய்யும் முகத்தான் தன் சக்திக்கும் அதிகார வரம்புக்கும் உட்பட்ட சகல ஏற்பாடுகளையும் செய்தான்.

தோல் ஷாப்புத் தொழிலாளர் மற்றும் நகர சுத்தித் தொழிலாளர் குடியிருப்புக்களிலும், தோல் ஷாப்புத் தொழிலாளர்கள் வசிக்கும், சேரிகளிலும், இரவு பகலாகப் போலீஸ் பாதுகாப்புக்கும், ரோந்துக்கும் ஏற்பாடு செய்திருந்தான். தெருவுக்குத் தெரு உளவாளிகளும், போலீஸ் காரர்களும் சங்கரனையும் தலைமறைவாக இருக்கும் தலைவர்களையும் தேடி அலையலானார்கள். போலீஸ் வண்டிகள் நகரத்திலும் சுற்று வட்டாரக் கிராமங்களிலும் இராப்பகலாக ரோந்து வந்து கொண்டிருந்தன.

சில நாட்களில் தேவசகாயத்துக்கும் அவனது போலீஸ் பட்டாளத்துக்கும் கோட்டி பிடித்துவிடும். ஏற்கனவே கையாண்ட அடக்குமுறை மீண்டும் தலை தூக்கலாயிற்று. நடுச்சாமத்தில் தோல்ஷாப்புத் தொழிலாளர்கள் குடியிருப்புக்களில் புகுந்தது. தலை மறைவாக இருக்கும் தலைவர்களையும், சங்கரனையும் தேடுகிறோம் என்கிற சாக்கில் குடிசைகளில் புகுந்து அவர்களின் உடைமைகளை உடைத்துத் தெருவில் வீசி, கண்ணில் பட்டவர்களை ஆண் பெண் சிறுவர் என்கிற பேதா பேதமின்றி நையப் புடைத்துக் கை கால்களை ஒடித்துப் போடுவார்கள். இவ்வளவு அடக்கு முறை தர்பார் ராட்சசத்தனமாகத் தாண்டவமாடிய போதும், அம்மக்களின் எதிர்ப்பு உணர்வையும் ஒற்றுமையையும் தேவசகாயத்தால் மழுங்கடிக்க முடியவில்லை.

தலைவர் சங்கரன் விடுதலையாகி வெளியே வந்த பிறகு, காவல் துறையினரின் கண்காணிப்பையும் உஷார் தன்மையையும் மீறி கண்கட்டி வித்தை மாதிரி போலீஸார் கண் எதிரே, போலீஸ் அடக்கு முறையையும் அரசின் அரை பாஸிஸ்ட் தர்பாரையும் கண்டித்துப் போஸ்டர்களும் பிரசுரங்களும், துண்டுப் பிரசுரங்களும், மக்கள் கூடும் பொது இடங்களில் நாள் தோறும் விநியோகிக்கப்பட்டன, அது தேவசகாயத்தைக் கதி கலங்க வைத்தது.

பிரசுரங்களில் அந்த நகரத்தில் நடைபெறும் போராட்டங்கள் மட்டுமல்லாது, தெலுங்கானாவில் நடைபெறும், நில மீட்சிப் போராட்டம், மலையாள நாட்டில் திவான் ஆட்சியை எதிர்த்து வயலாறு புன்னைப்புராவில் நடைபெறும் சுதந்திர எழுச்சி இயக்கம் தஞ்சை ஜில்லாவிலும், கம்பம் பள்ளத்தாக்கிலும் நடைபெறும் விவசாயமக்களுடைய குத்தகை வார, கூலி உயர்வு இயக்கங்கள் மற்றும் சென்னையிலும், கோவையிலும் நடைபெறும் தொழிலாளர் எழுச்சி அதனடியாக ஏற்படும் படிப்பினைகள் ஆகிய விவரங்கள் அந்தப் பிரசுரங்களில் சொல்லப்பட்டிருக்கும்.

நகரத்தில் ஏதாவது ஒரு மூலையில், போலீஸ் அடக்கு முறை ஏற்பட்டால், வீதி தோறும், போலிஸ் நடவடிக்கையைக்

கண்டித்துச் சுவரொட்டிகள் இரவோடு இரவாக அவதாரம் எடுக்கும். போலீஸ் தர்பாரைக் கண்டிக்கும் சுவரொட்டிகள் போலீஸ் ஸ்டேஷன் சுவர்களிலேயே ஒட்டப்பட்டிருக்கும். இவற்றையெல்லாம் கண்டு தேவசகாயம் பீதியடைந்தான். ஏனெனில் அவனது ஏலாமையைக் கண்டித்தும், விளக்கம் கேட்டும் உயர் அதிகாரிகள் அவனுக்குத் தாக்கீது அனுப்பிக் கொண்டிருந்தனர். இதனால் நொந்து போன போலீஸ் சூப்பிரண்ட், தனது கீழ் அதிகாரிகள் மீதும், போலீஸ் சிப்பந்திகள் மீதும் எரிந்து விழுந்தான்.

எனவே, தலைமறைவுத் தலைவர்கள் நடமாட்டத்தையும், அவர்கள் தம் நடவடிக்கைகளையும் கண்காணிப்பதற்கும், அவர்களைக் கைது செய்வதற்கும் வேண்டி, நகரத்திலும், தொழிலாளர் குடியிருப்புகளிலும், தோல் ஷாப்புத் தொழிலாளர்கள் பெருவாரியாக இருக்கும் சுற்று வட்டாரச் சேரிகளிலும், பகல் வேளையில் கூட "போலீஸ் பீட்" என்கிற பேரில் போலீஸ் கண்காணிப்பு இருக்கும். இரவு வேளைகளில் ஊர்காவல்படை என்ற ஊர்மக்களைக் கொண்ட படை அமைக்கப்பட்டு, இரவு வேளைகளில் இந்தத் தலைவர்களின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும், போலீசுக்குத் தகவல் கொடுப்பதற்கான அமைப்புக்களும் உருவாக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு சேரியிலும், உள்ள வாலிபர்கள், முறை வைத்துக் கண்காணிப்பில் இரவு முழுதும் காவல் இருக்க வேண்டும்.

இவ்வாறு தேவசகாயமும், அவனது போலீஸ் இலாகாவும், அரசாங்கமும் ஒவ்வொரு தொழிலாளர் குடியிருப்பையும், சேரிகளையும் போலீஸ் காலனியாக உருவாக்கிக் கொண்டிருந்தது

ஆனால் இரண்யன் வயற்றில் பிரகலாதன் உருவான கதையாகப் போலீஸ் துறையினர் உருவாக்கும் ஊர்காவல் படையானது அவர்களுக்கு எதிரான படையாக உருப்பெற்று நிற்கும். அதாவது சேரி வாலிபர்களில் பலர், தோல் ஷாப்புத் தொழிலாளர் சங்கத்தினர், வெளிப்படையாகத் தெரியாத தோல்ஷாப்புத் தொழிலாளர்களின் ஊர்காவல்படை முறை வரும் போது, அந்த விஷயம் தலைமறைவுத் தலைவர்களுக்குத்

தெரிவிக்கப்படும். அவர்கள், ஊர்காவல் படையின் பராமரிப்பிலும், பாதுகாப்பிலும், அந்த இரவு சம்மந்தப்பட்ட ஊருக்கு விஜயம் செய்து கூடிப் பேசிப் போராட்டம், இயக்கம் சம்மந்தமான திட்டங்களை வகுத்துவிட்டுப் பிரிந்து போவார்கள். இது போலீஸ்காரர்களுடையவும், அரசு உளவுத் துறையினருடையவும் கண்ணில் மண்ணைத் தூவுகின்ற விவகாரம்.

●

அன்று இரவு, ராஜக்கா பட்டிச் சேரியில் ஊர்காக்கும் பொறுப்பு ஊர் காவல் படையைச் சேர்ந்த அஸன் ராவுத்தர் ஷாப்பில் கத்தியாளாக வேலை செய்யும் முத்து மாரியிடமும், நாயுடு ஷாப்பில் வேலை செய்யும் மாரிச்சாமியிடமும், ஐயர் ஷாப்பு வேதமாணிக்கத்திடமும் அருள்மேரி தோல் ஷாப்பில் வேலை செய்யும் ஐயாக்கண்ணிடமும் ஒப்படைக்கப் பட்டிருந்தது.

இந்த நான்கு பேரும், தோல்பதனிடும் தொழிலாளர் சங்கத்தின் தீவிர உறுப்பினர்கள் என்பது தேவசகாயத்தின் போலீசுக்குத் தெரியாத விஷயம்.

இந்த விஷயம் மினிசாமி மூலம் ஒசேப்புக்கும் சொல்லப்பட்டு, தலைமறைவாக இருக்கும் தலைவர்கள் அன்று இரவு ராஜக்கா பட்டிச் சேரி, முத்தலாம்மன் கோவிலுக்குப் பின்புறம் இருக்கும் ஆலமரத்தடியில் கூட்டம் நடத்துவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனவே, முக்கியமான தோல் ஷாப்புத் தொழிலாளர்கள் அன்றைய கூட்டத்தில் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

அன்று இரவு நடைபெறும் கூட்டத்தை தலைமை தாங்கி நடத்தும் பொறுப்பு, சகோதரர் தங்க சாமிக்குக் கொடுக்கப்பட்டிருந்தது அவருக்கு உதவியாக நத்தம் சாலைத் தோல் ஷாப்புத் தொழிலாளர்களின் பொறுப்பாளரான சந்தனத்தேவர் இருக்க வேண்டும் என்று

முடிவு செய்யப்பட்டு, சரியாக இரவு பத்து மணியளவில், முக்கிய ஊழியர்களின் கூட்டம் ஆரம்பமாயிற்று.

அது ஒரு பனிக்கால இரவு என்பதால் சிறுமலையினின்றும் ஊதைக்காற்று வீசிக் கொண்டிருந்தது. சேரி நாய்கள் கூடக் குளிர்தாங்க மாட்டாமல், குப்பை மேடுகளிலும், தெருக்கோடிகளிலும் முடங்கிப் படுத்துக் கிடந்தன. தொலைவில் உள்ள மரக்கிளைகளில் உட்கார்ந்து அவ்வப்போது பிலாக்கணம் வைக்கும் மலைக் கூகைகளின் ஓலம் அல்லாமல் அந்தப் பிராந்தியமே, அமைதியில் மூழ்கிக் கிடந்தது.

மினிசாமியும், ஒசேப்பும் ஊர்காவல் படையைச் சேர்ந்த முத்துமாரி மற்றும் தொழிலாளர்களுடன், கூட்டத்தில் கலந்து கொண்டிருப்பவர்களுக்குப் பாதுகாவலாக, போலீஸாரையும், உளவாளிகளையும் கண்காணித்த வண்ணம் ராஜக்கா பட்டிச் சேரியின் தெருக்களையும் ஊருக்குள் வரும் பாதையிலும் காவலுக்கிருந்தனர்.

பின்னிரவு நேரமானதால், தேய்பிறை நிலவு, கீழ்வானில் தலைகாட்டவும், அந்தப் பிரதேசம் முழுவதும், கனவுக் காட்சிபோல் மங்கல் ஒளியில் மூழ்கிக் கிடக்கிறது. ஆங்காங்கே திட்டுத்திட்டாகப் பனி மூட்டம், வெடவெடக்கும் ஊதைக் காற்று அவ்வப்போது பேய்க்காற்றாக ஊளையிட்டுப் பிறகு திடீரென்று அமர்ந்து போகிறது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஊர் எல்லையில் சோழக்காட்டுக்குக் காவல் கிடந்த சொக்கப்பன் காட்டுநாய் காட்டேரியைக் கண்டு பயந்து போனது போல் மட்டில் ஓலம் வைக்கவும், கிழக்குத் திக்கிலிருந்து இருளைக்கிழித்துக் கொண்டு போலீஸ் வண்டி வருவது அவர்கள் கண்ணில் பட்டது. அவ்வளவு தான் கூட்டத்தில் கலந்து கொண்டிருப்பவர்களுக்குச் சமிக்கை காட்டப்பட்டது.

"சாமியாரைப் பத்திரமாப் பார்த்துக்கடோய் ஒசேப்பு" என்று எச்சரித்து விட்டு, சந்தனத்தேவன் மேற்குப் பக்கமாய் போனார். தேவர் அவ்வளவு கலபத்தில் போலீஸ்காரன்

கையில் மாட்டிக் கொள்ள மாட்டார் என்பது ஒசேப்புக்கும், மினிசாமிக்கும் தெரியும்.

தலைவர் தங்கசாமியைப் பாதுகாத்து, அவர் இருப்பிடத்தில் கொண்டு சேர்க்க வேண்டிய பொறுப்பு ஒசேப்பிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஏறிட்டுப் பார்த்த போது, வருவது போலீஸ் வண்டி என்பதும், ராஜக்கா பட்டிச் சேரியைக் குறிவைத்துப் போலீஸ் வண்டி வருகிறது என்பதும் உறுதியாகிவிட்டது. ராஜக்கா பட்டி சேரியில் கூட்டம் நடைபெறுவது பற்றிய துப்புக் கிடைத்ததால், தலை மறைவாக இருப்பவர்களைப் பிடித்து விடலாம் என்கிற திட்டத்தோடு அந்த அகால இரவு வேளையில் போலீஸ் வண்டி சேரியைப் பார்த்து வந்து கொண்டிருக்கிறது.

மினிசாமியும், ஒசேப்பும் தங்களுக்குள் ஏதோ யோசனை செய்தார்கள். பிறகு, ஒசேப்பு தலைவர் தங்கசாமியைக் கையில் பிடித்துக் கொண்டு ராஜக்காப்பட்டி சேரி தெருவுக்குள், சந்துகளைத் தாண்டிப் புயலாகப் பாய்ந்தான் தெருவின் நடுநாயகமாக இருக்கும் அந்த வீட்டின் கதவைத் தட்டினான்.

தங்கசாமி மட்டும் ஒன்றும் புரியாமல், சற்று தள்ளி மறைவாக நின்று கொண்டிருந்தார் கூரையின் இருள் அவரை முற்றுமாக மறைத்து இருளில் மூழ்கடித்திருந்தது.

தங்கசாமியைப் பொறுத்த மட்டில் தான் போலீசில் மாட்டிக் கொள்ளப் போவது உறுதி; வேற்று மனிதனாகிய தன்னை வெகுகுலபத்தில் போலீஸ் இனம் கண்டு கைது செய்து விடுவார்கள் என்கிற எண்ணத் தயக்கத்துடன் நின்று கொண்டிருந்தான்.

ஒசேப்பு இரண்டு முறைவாசல் கதவைத் தட்டவும், கிரிக்கிட்ட படியே வெளிக்கதவு தானாகத் திறந்து கொண்டது. அரவம் கேட்டு, படுக்கையினின்றும் எழுந்து வந்த அருக்காணி

"ஆரு, இந்த அர்த்தராத்திரியிலே கதவைத் தட்டுரது" என்று கோபமாகக் கேட்ட வண்ணம் கலைந்து கிடந்த மாராப்புச் சேலையை ஒழுங்கு படுத்திக் கொண்டு கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள்.

கதவண்டை வந்தவள் மங்கிய நிலவொளியில் தெருவில் நிற்கும் ஓசேப்பைப் பார்த்ததும் மலைத்துப் போனாள். நெஞ்சம் படபடத்தது.

கடந்த இரண்டு மாதகாலமாக தாயம்மாள், அவளையும், அவள் பிள்ளையையும் பார்க்க வந்ததும், பிள்ளை ஓசேப்பின் சாடையாக இருப்பதால் அங்கலாய்த்து விட்டுப் போனதும் அவளுக்கு நினைவு தட்டியது.

அவளை அறியாமலேயே கோபம் மூண்டது.

"சீ! நீ யெல்லாம் மனிசனா.. சாமத்திலே வந்து கதவைத் தட்டிட்டு நிக்கையே வெக்கமா இல்லே. விட்டுப் போன ஓரவை திரும்பவும் ஏற்படுத்திக்கலாமிண்டு வந்தையா" எரிந்து விழுந்தாள்.

அவள் பேசுவதை மௌனமாகக் கேட்ட வண்ணம் நின்றிருந்த ஓசேப்பு அவள் ஆத்திரம் தனியப் பேசி முடிந்ததும்

"அருக்காணி கோவப்படாத, எனக்கு எப்போவும் அந்த நெனப்புக் கெடையாது. உப்போ, இந்த அகால வேளையிலே ஒங்கிட்டே ஒரு உதவி கேட்டு வந்திருக்கேன்" என்று சொல்லவும். அவள் வாசற்படிவை விட்டுக் கீழே இறங்கி வந்தாள்.

அவன் முகத்தில் தேங்கிநிற்கும் பீதி உணர்வைப்பார்த்ததும் அவன் பால் பரிவு ஏற்பட்டது.

"என்ன உதவி கேட்டு வந்திருக்கே ஓசேப்பு. நா, என்ன உதவி பண்ணமுடியும். நா, அம்புட்டையும் இழந்திட்டு நிக்கவ" சாந்தம் ததும்பக் கேட்டாள். அவள் குரல் தழுதழுத்திருந்தது.

"தலைவர் தங்கசாமிய உப்ப நம்ப காப்பாத்தியவணம். இல்லே போலீஸ் அவரைப் புடிச்சட்டுப் போயிடும். வேட்டை நாயா போலீஸ் அவரைத் தேடி வந்திட்டு இருக்கு" என்று ஓசேப்பு சொல்லவும் தங்கசாமி மறைவிடத்திலிருந்து வெளியே வந்தார்.

போலீஸ் வண்டியின் ஆரவாரம் சேரியை நெருங்கி வந்து கொண்டிருந்தது.

தங்கசாமிக்கு வணக்கம் சொல்லிவிட்டு தரையைப் பார்த்த படி நின்றிருந்த அருக்காணி.

"சரி. நீ போ. நான் பார்த்துக்கிறேன்" என்றவள். அவன் தயங்கி நிற்பதைப் பார்த்ததும்

"நா, பாத்துக்குவேண்ணு சொல்லிட்டேன்ல்லே. போவெண்டா போய்யா, போயி நீ உன்னைத் தப்பிச்சக்கப் பாரு. தலைவரைக் காலம்பர ஒப்படைப்பேன்" என்று சொன்ன அருக்காணி, தங்கசாமியைக் குடிசைக்குள் கூட்டிக் கொண்டு போனாள்.

உள்வீட்டில் மங்கலாக எண்ணெய் விளக்கு மட்டும் எரிந்து கொண்டிருக்கிறது. கீழே பாயில் குழந்தை ஒன்று ஏதுமறியாத மட்டில் நிம்மதியாக நித்திரை போய்க் கொண்டிருக்கிறது.

வாசல் கதவைப் பூட்டாமல், ஒக்களித்துத் திறந்தவண்ணம், பாதிசாத்தியும், சாத்தாமலும் வைத்துவிட்டுக் குடிசைக்குள் வந்த அருக்காணி, தங்கசாமியை அவள் படுத்திருந்த பாயில் படுக்கச் சொன்னாள். அவர் தயங்கவும்,

"வேறு வழியில்லை தலைவரே படுங்க" என்று சொன்னவள், தங்கசாமி பாயில் படுக்கவும் மின்மினிப் பூச்சாக ஒளிவீசிக் கொண்டிருந்த விளக்கையும் அணைத்து விட்டு, தங்கசாமி படுத்திருக்கும் பாயில் அவரை ஒட்டிப் படுத்தவள் போர்வையை இழுத்து அவருக்கும் தனக்குமாக போர்த்திக் கொண்ட போது, பீதியால் தங்கசாமியின் உடல் நடுங்கியது. இருதயம் படபடத்துக் கொண்டது.

தங்கசாமி தனது வாழ்நாளில் இப்படி ஒரு பெண்ணின் அருகில் அவள் ஸ்பரிசம் படும்படியாகப் படுத்துக் கொண்டது கிடையாது. பச்சைப் பால் வாசனையுடன் அவளது உடம்பின் வியர்வை வாடையும் கிறங்க வைத்தது உடம்பில் ஓடிப் புல்லரித்தது.

அவளோ, எந்த விதமான சலனமுமில்லாமல் மறுபக்கம் திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

அவள் விடும் மூச்சுச் சத்தம் மட்டும் அவருக்குக் கேட்டது. தங்கசாமி அரவமில்லாமலே ஒரு குழந்தையைப் போல் அவள் அருகில் படுத்துக் கொண்டார்.

சற்று நேரத்தில் தெருக்களில் போலீஸ் நடமாடும் ஆரவாரமும் பூட்ஸ்கால் ஓசையும் தெருவில் கேட்கலாயிற்று. மட்டுமல்ல ஒவ்வொரு குடிசையிலும் கதவைத்தட்டி, உள்ளே புகுந்து போலீஸ் ஜவான்கள் செய்யும் ஆரவாரம் கேட்கிறது.

தங்கசாமி படுக்கையில் கிடந்தவாறு தெருவில் எழும் ஆரவாரத்தையும் கெடுபிடியையும் செவி மடுத்தவாறு, உயிரைக் கையில் பிடித்தவாறு படுத்துக்கிடந்தார்.

சற்று நேரத்தில் அவர் படுத்துக் கிடக்கும் குடிசையின் கதவைத் தட்டும் ஓசையும் கதவு திறக்கும் சத்தமும் கேட்கிறது.

"ஆர்ரா இது, தொறந்த வூட்டுலே நாயி நொழைஞ்சாப் போலா, கேக்காம கொள்ளாம ஊட்டுக்குள்ளாற வாரது" என்று எரிச்சல் பட்ட வண்ணம் சேலையைச் சரி செய்த அருக்காணி எழுந்து நிற்கிறாள்.

"ஆருண்ணா கேக்கிறே பொம்பளை போலீஸ்காரவுக. அடையாளம் தெரியலையா" குடிசைக்குள் அங்கும் இங்கும் நடமாடிய வண்ணம் போலீஸ் ஜவான் முரட்டுக்குரலில் அதட்டுகிறான்.

குடிசைக்குள் டார்ச் ஒளி அங்கும் இங்கும் பரவிப் படர்கிறது ஒளி அவள் உடம்பில் பட்ட போது, அவள் அவை நிர்வாணமாக வேண்டுமென்றே நின்றிருந்தாள். அகுயைப்பட்ட

போலீஸ்ஜவான் படுக்கையில் கிடக்கும் உருவத்தைப் பார்த்ததும்,

"ஆரு டீ அது" என்று ஏளனமாகக் கேட்கிறான்.

"என் ஊட்டுக்காரரு எஜமான். வேலை செஞ்ச அலுப்புல அடிச்சுப் போட்ட பாம்பாட்டமா படுத்துக் கெடக்குவு. ஒடம்புக்கும் முடியலை உசுப்பட்டுங்களா"

அருக்காணி சாவதானமாகப் பதில் சொன்னாள்.

சற்று யோசனை செய்தவண்ணம் நின்றவன்,

"சரி! சரி, தூங்குற மனுஷனைப் போட்டு உசுப்பி என்ன பண்ணப் போரம் தேடி வந்த பெய தப்பிச்சுப் போயிட்டான். இந்த சூப்பிரெண்டு நம்மளைப் போட்டு உசிர வாங்கிறான்" என்று எரிச்சல் ததும்பச் சொன்ன ஜவான் கதவைச் சாத்திக் கொண்டு தெருவில் இறங்கிப் போனான்.

தங்கசாமி நிம்மதிப் பெருமூச்சு விட்டார்.

அருக்காணி அவர் அருகில் தூங்கிக் கொண்டிருந்த குழந்தையைத் தூக்கிக் கொண்டு போய் குடிசையின் கதவோரம் படுத்துக் கொண்டாள்.

"ஓ. எவ்வளவு மகத்தான பெண்மணி இவள்"

தங்கசாமி தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டார்.

அவர் சொல்வதை ஆமோதிப்பது போல், பல்லி குரல் கொடுத்தது.

2

ஓசேப்பு அவனது குடிசைக்கு வந்து சேர்ந்தபோது கீழ்வானம் சிவப்பாகிக் கொண்டிருந்தது.

இரவு முழுவதும், தூக்கம் இல்லாததால் இமைகளில் பசை போட்டு ஒட்டியது மாதிரி தூக்கக் கலக்கம் அவனை ஆட்கொண்டிருந்தது.

ராஜக்கா பட்டிச் சேரியில் நடைபெற்ற கூட்டம் பற்றிப் போலீசுக்குத் தகவல் கிடைத்தது சம்மந்தமாக விசாரித்த போது, கருங்காலியாக மாறிப்போனது ஐயர் ஷாப்பு மிக்கேல் சாமி என்று துல்லியமாகத் தெரிந்து விட்டது. அவன் போலீசுக்குத் தகவல் கொடுக்கும் அளவுக்குச் சண்டாளமாக மாறிப்போனது சம்மந்தமாக ஓசேப்புக்கும், மினிசாமிக்கும் மிகுந்த மனவருத்தம். எனவே, இரவோடு இரவாக ஓசேப்பும், மினிசாமியும் தலைவர் இருதயசாமியைச் சந்தித்துத் தகவல் கொடுத்த போது, இப்போதைக்கு அதையெல்லாம் வெளிக்காட்டிக் கொள்ள வேண்டாம் என்றும், போலீஸ் சம்மந்தமாக மிகவும் உஷார் தன்மையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்று எச்சரித்திருந்தார்.

ஓசேப்பின் வருகைக்காக இரவெல்லாம் கண்விழித்துக் காத்திருந்த தாயம்மாள் அப்போதுதான் கண்ணயர்ந்திருக்க வேண்டும். அவனுக்காகவும், அவனது தகப்பனார் ஆசீர்வாதத்துக்கும் வேண்டி தனது வாழ்க்கையையே தத்தம் செய்து, அவனைத் தனது சுவீகாரப் புத்திரனாக ஏற்றுக் கொண்டிருக்கும் தாயம்மாளைப் பார்ப்பதற்குப் பரிதாபமாகப்பட்டது.

வயதாகிவிட்ட காரணத்தால் அவளது திடகாத்திரம் குறைந்து இப்போதெல்லாம் அடிக்கடி சுகவீனமாகிப் படுக்கையில் விழுந்து விடுகிறாள். தாயம்மாளுக்கு இப்போதெல்லாம் மூன்றாவது நபரின் உதவி தேவைப்படுகிறது. தொழிற்சங்கம் மற்றும் பொது வேலை காரணமாக ஓசேப்பால் தாயம்மாளைச் சரியாகக் கவனிக்க முடியவில்லை.

தாயம்மாள், தனது உடல்நிலையையும், பலவீனத்தையும் சாக்காகக் காட்டி அவனை வேறு ஒரு பெண்ணை மணம் முடித்துக் குடும்பம் நடத்த வேண்டும் என்று பல முறையும் வற்புறுத்திப் பார்த்தாள். அருக்காணியைச் சுமந்த நெஞ்சில் வேறு ஒரு பெண்ணுக்கு இடமில்லை என்று, திருமணமே தனக்கு வேண்டாம் என்று அவன் மறுத்துவிட்டதால், தாயம்மாள் மனம் உடைந்து போனாள் என்றே சொல்ல வேண்டும்.

ஆனால் சமீப காலமாக அடிக்கடி ராஜக்கா பட்டிக்குப் போய், அருக்காணியவும், அவளிடம் வளரும் அவளது வாரிசையும் பார்த்து வருவது தாயம்மாளுக்கு வாடிக்கையாகி விட்டது. அருக்காணியும், தாயம்மாளின் வருகையையும், தனது பிள்ளையின் பால் அவள் பொழியும் அன்பையும் பாசத்தையும் மறுப்பதில்லை; எனவே அவளுக்கு அருக்காணியவும், ஓசேப்பையும் மறுபடியும் தம்பதிகளாகப் பார்க்க வேண்டும் என்கிற அப்பாவித்தனமான நப்பாசை. அதன் காரணமாக அவனுள் ஒரு ஆசையை உண்டுபண்ண வேண்டும் என்று அருக்காணியின் பிள்ளை ஓசேப்பையே, அச்சடித்து வைத்தாற்போல இருப்பதாகவும் அவனிடம் அடிக்கடி சம்மந்தா சம்மந்தமில்லாமல் சொல்லிப் பார்ப்பாள். அவனோ, எந்தவிதமான பிரதிபலிப்பும் இல்லாமல் இருந்து விடுவான். ஆனால் ஓசேப்பைப் பொறுத்த மட்டில் அருக்காணியிடமான தாம்பத்திய உறவு என்பது முற்ற முடிய முடிந்து போன ஒன்று. அருக்காணியும் அப்படித்தான்.

அன்று இரவு தங்கசாமியைப் போலீஸார் பிடியிலிருந்தும் காப்பாற்றுவதற்காக அருக்காணியின் உதவியை நாடிப் போன போது, அவள் எங்கே தன்னை

திரஸ்காரம் செய்து போலீஸிடம் காட்டிக் கொடுத்து விடுவாளோ என்ற தயக்கம் இருந்தது. அவன் கதவைத் தட்டிய போது, வாசலில் வந்து நின்ற அருக்காணி, அவனை ஒருவித அசூயையோடு தான் பார்த்தாள். ஆனால் அவன் விஷயத்தைச் சொன்ன போது, அவள் நடந்து கொண்ட விதம் அவனை அசர வைத்துவிட்டது. சங்கத்தின் பாலும் தலைவர்கள் பாலும், அவள் வைத்திருக்கும் மரியாதையும் பரிவும் மகத்தானதாகப்பட்டது. ஆனால், அந்த அகால வேளையிலும், சந்தர்ப்பச் சூழ்நிலை காரணமாக ஏமாற்றப்பட்டுப்போன அருக்காணியின் ஏக்கத்தை அவளது நயனங்களில் காண முடிந்தது.

என்ன இருந்தாலும் அது காலாவதியாகிப் போனஅன்பு, பாசம், பிணைப்பு இருந்தாலும், அது அவனால் மறக்க முடியாத சந்திப்பு.

அருக்காணியைச் சந்தித்த தன் இன்பகரமான அதிர்வுகளுடன் திரும்பவும் தாயம்மாளின் களங்கமற்ற முகத்தைப் பார்க்கிறான். அந்த அப்பாவியின் ஆசைகளை அவனது தகப்பன் ஆசீரினாலும், நிறைவேற்ற முடியவில்லை. அவனாலும் நிறைவேற்ற முடியவில்லை. வெளியே சொல்ல முடியாத அந்த ஏக்க உணர்வும், ஏமாற்றமும் அவள் முகத்தில் தேங்கிக் கிடக்கிறது.

தாயம்மாளின் களங்கமற்ற முகத்தை ஒரு கணம் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்த போது, தூக்கச் சடவால் மூளையே சுரணையற்றுப் போனது போன்ற உணர்வு ஒருவித மயக்கநிலை. சரியான படி தூங்கி ஓய்வு எடுத்தால் தான் மறுநாள் தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பணிகளை அவனால் சரிவரச் செய்ய முடியும்.

எனவே, மூலையில் சுருட்டி வைக்கப்பட்டிருந்த கோரைப் பாயை எடுத்துத் தரையில் விரித்துத் தாயம்மாவுக்கு அருகில் படுத்தான்.

ஓசேப்பு லேசாகக் கண்ணயர்ந்திருப்பான். அப்போது தான் குடியிருப்பின் அமைதியைக் குலைத்துக் கொண்டு போலீஸ் வண்டியின் இரைச்சல் கேட்டது.

சாதாரணமாக இரவு வேளையில் வரும் அந்த இடிவண்டி, பகல் வேளையில் தெருவுக்குள் வருவதைத் தெரு மக்கள் வியப்புடன் பார்த்தார்கள். போலீஸ் வண்டியை அம்மக்கள் இடிவண்டி என்றே அழைத்தனர்.

இடிவண்டி ஓசேப்பின் குடிசை முன்பு போய் நின்றது. மிக்கேல் சாமி போலீஸ் வண்டியினின்று இறங்கி முன்னுக்குச் செல்ல இன்ஸ்பெக்டர் தீச்சட்டிக் கோவிந்தன் சப்இன்ஸ்பெக்டர் ஏசுவடியானும் வேறு சில போலீஸ் ஜவான்களும் அவனைத் தொடர்ந்து போனார்கள். போலீஸ் வண்டியின் பின் சீட்டில் இருந்து இறங்கிய போலீஸ்காரர்கள், தெருவில் அங்கும் மிங்கும் ராணுவம் மாதிரி அணிவகுத்து நின்றார்கள். தெருவில் கூட்டமாக நின்ற மக்களைத் தடிகளை ஓங்கிக் கலைத்துக் கொண்டிருந்தனர்.

மிக்கேல் சாமி குடிசையை அடையாளம் காட்டவும், இன்ஸ்பெக்டர் தீச்சட்டிக் கோவிந்தன், தனது படையுடன் குடிசைக்குள் நுழைந்தான்.

போலீஸ் பூட்ஸ் காலடி ஓசை கேட்டு உசும்பிய தாயம்மாள் பதறி எழுந்து, சேலையைச் சரி செய்து நின்றவள். எதிர்பாராத விதமாகக் குடிசைக்குள் நுழைந்திருக்கும் போலீஸ் படையைப் பார்த்ததும் மலைத்துப் போய் நின்றாள்.

"எங்கேடி அந்த வேசை மவன்" என்று தாயம்மாளை அதட்டிய வண்ணம் கேட்ட தீச்சட்டிக் கோவிந்தனது கண்ணில், மண் சுவற்றோரம் ஓசேப்பு பாயில் முடங்கிக் கிடப்பது தென்பட்டது.

"தாயழி, எம்புட்டுப் பெரிய குத்தத்தைச் செய்து போட்டு ஒண்ணும் தெரியாத மாதிரிப் படுத்துக் கெடக்கான் கொரை, எந்திரிடா" என்று பூட்ஸ் காலால் ஓசேப்பின் முதுகில் உதைத்தான்

எதிர்பாராத இந்தத் தாக்குதலால் அதிர்ச்சியோடு கண்விழித்துப் பார்த்தபோது என்ன நடக்கிறது என்று ஊகிப்பதற்கு ஓசேப்புக்கு சிறிது நேரம் பிடித்தது.

இன்ஸ்பெக்டர் திரும்பவும் அவனை உதைக்கப் போனபோது

"அவனை அடிக்காதீங்க சாமி" கையை எடுத்துக் கும்பிட்டவாறு தாயம்மாள் கெஞ்சினாள்.

"இவ ஆருடா" மிக்கேல் சாமியைப் பார்த்து ஏசுவடியான் கேட்டபோது

"அவனோட சின்னாத்தாக்காரி, பெறாமலே அவனைப் பெத்துக் கிட்டவ" மிக்கேல் சாமி சொன்னான்.

"உஹூம். அப்படியா" என்று சொன்ன தீச்சட்டிக் கோவிந்தன்.

"கெழட்டு முண்டை, மூச்சுவிட்டே மேல்வாயவும், கீ வாயவும் கிழிச்சுப் போடுவண்டீ." என்று அவளை அதட்டிய தீச்சட்டிக் கோவிந்தன், ஓசேப்பின் தலை முடியைப்பிடித்துத் தூக்கப் போனான்.

எழுந்து நின்று நிலைமையை ஊகித்துக் கொண்ட ஓசேப்பு, சுவற்றில் மாட்டப்பட்டிருந்த சட்டையை எடுத்துப் போட்டுக் கொண்டவன் கருங்காலி மிக்கேல் சாமியைக் கோபத்துடன் ஏற இறங்கப் பார்த்தான்.

"ராஸ்கல் அவனைப் பார்த்தா மொரைக்கிற" என்று கோபவேசமாகப் பேசிய தீச்சட்டிக் கோவிந்தன், அவனை அடிப்பதற்காக லத்தியை வீசியபோது லாவகமாக மாறி நின்று கொண்ட ஓசேப்பு.

"ஐயா, எம்மேலே அரஸ்ட்வாரண்டு ஏதும் இருந்தா அரஸ்ட் பண்ணிட்டுப்போங்க. அடிக்கிறது ஒதைக்கிறது அல்லாம் நல்லா இல்லே" என்று சினந்து பேசினான்.

"சங்கத்துக் காரப்பயலுவ இல்லே, சட்டம் பேசுவீங்கடா சட்டம்" என்றான் சப்-இன்ஸ்பெக்டர் ஏசுவடியான்.

"ஏண்டா, ஒங்க தலைவர் சங்கரனை எங்கேடா ஒழிச்சு வெச்சிருக்கீங்க" தீச்சட்டிக் கோவிந்தன் கேட்டான்.

அந்தக் கேள்வி ஓசேப்புக்கு விசித்திரமாகப் பட்டது.

"தலைவரைப் பாத்துக் கொள்ள நாளாச்சுது" என்று ஓசேப்புப் பதில் பேசவும்,

"பழனிச் சாலையிலே ராஜக்கா பட்டிக் கூட்டம் முடிஞ்சு குளத்து ஓரம், நீயும் தலைவர் சங்கரனும் பேசிட்டுப் போனதைக் கருக்கலிலே நான் பார்க்கலையா, சாமியார் தங்கச்சாமிய நீ தாண்டா ஒழிச்சு வெச்சிருக்கே," மிக்கேல் சாமி வேண்டும் என்றே பொய் சொன்னான்.

"மிக்கேல் சாமிக்கு மாலைக்கண் போலருக்கு" ஓசேப்பு இன்ஸ்பெக்டரைப் பார்த்துச் சொன்னான்.

அவர்கள் அவனைக் கைது செய்து கொண்டு போவதற்கான திட்டத்தோடு வந்திருக்கிறார்கள் என்பது அவனுக்குப் புரிந்துவிட்டது.

அதற்குள் போலீஸ் தடியடியையும், கெடுபிடியையும் மீறி பெஞ்சமினும் ஏனைய தெரு முக்கியஸ்தர்களும் குடிசை வாயிலில் குழுமிவிட்டனர்.

ஓசேப்பு கைது செய்யப்பட்டால், போலீஸ் வண்டியையும் மறியல் செய்து போராட வேண்டும் என்கிற திடமான முடிவுடன் பெஞ்சமின் தலைமையில் தொழிலாளர்களும், தெரு மக்களும் திரண்டு கொண்டிருந்தனர்.

எவ்வளவு சேதாரம் ஏற்பட்டாலும் அக்கறை கொள்ளாமல் ஓசேப்பைக் கைது செய்து கொண்டு வர வேண்டும் என்பது தேவசகாயத்தின் உத்தரவு.

விநாடிக்கு விநாடி, தெருவிலும் ஓசேப்பின் குடிசை முன்பும் திரண்டு கொண்டிருந்த மக்கள் கூட்டத்தைப் பார்த்துப் பயந்து போன தீச்சட்டிக் கோவிந்தன் போலீஸ் வண்டியில் போய்அமர்ந்து "ஓயர்லெஸ்" மூலம் எஸ்.பி. தேவசகாயத்திடம் நிலைமையைத் தெரிவிப்பதும், பதில் கேட்பதுமாகவும் அங்குமிங்கும் அலைந்த வண்ணமிருந்தான்.

இதற்கிடையில் தேவசகாயத்தின் போலீஸ் ஓசேப்பைக் கைது செய்து கொண்டு போவதற்காகக் குடியிருப்பை வளைத்து நிற்கும் சேதி, சங்கத் தலைவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. ஏற்பட்டிருக்கும் அசாதாரண நிலைமையைக் கணக்கில் கொண்டு, அதிகப்படியாக ஏற்படும் சேதத்தைக் கணக்கில் கொண்டு போலீஸாருடன் நேரடியான மோதலைத் தவிர்க்க வேண்டும் என்று தலைவர் இருதயசாமி வாயிலாகத் தெரிவிக்கப்பட்டது.

தலைவர்களின் ஆலோசனையை ஏற்றுக் கொண்ட ஓசேப்பு எந்தவிதமான எதிர்ப்பும் காட்டிக் கொள்ளாமல் போலீஸ் வண்டியில் கால் வைத்தான். கூடி நின்ற மக்களை அமைதியாகக் கலைந்து போகும்படி வேண்டிக்கொண்டான்.

தாயம்மாள் வாய்விட்டுக் கதறிப் புலம்பலானாள். ஓசேப்பு கைது செய்து கொண்டு போவதை அந்த மக்கள் மனம் நொந்த மட்டில் பார்த்துக் கொண்டிருந்தனர்.

3

போலீஸ் வண்டியில் ஏற்றப்பட்ட ஓசேப்பு, நேரடியாக எஸ்.பி. தேவசகாயம் அலுவலகத்துக்குக் கொண்டு போகப்பட்டான்.

எஸ்.பி. அலுவலகத்தில் தனியாக ஓர் அறையில் வைக்கப்பட்டான். வெகுநேரம் வரையில் யாரும் அந்த அறைக்குள் வரவில்லை. பஞ்சு மெத்தை போன்ற கம்பளம் அறையில் விரிக்கப்பட்டு, நடுநாயகமான மிகப் பிரம்மாண்டமான தேக்கு மரத்திலான மேஜை, அந்த அறையை அலங்கரிக்கிறது. மேஜைக்குப் பின்புறமாக குறுக்கு வாட்டில், துப்பாக்கிகள் புதுமை மங்காத நிலையில் சுவற்றில் பதிக்கப்பட்டிருக்கின்றன. துப்பாக்கிகளுக்கு மகுடம் சூட்டினாற் போன்று, இந்திய அரசின் சின்னமான அசோகச் சக்கரம், அதை ஒட்டி மூவர்ணக் கொடி. மூவர்ணக் கொடியைப் பார்த்துச் சிரித்த மட்டில் காணப்படும் தேசப்பிதா மகாத்மா காந்தியின் பொக்கை சித்திரம்.

ஓசேப்பு, தரையில் உட்கார்ந்து அசோகச் சக்கரத்தையும், மகாத்மா காந்தியின் சித்திரத்தையும் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தான்.

அறைக்கு வெளியே துப்பாக்கி ஏந்திய காவலர்கள், பாதுகாவலாக நிற்பது ஜன்னல் வழியாகத் தெரிகிறது.

குறுக்கும் நெடுக்குமாக வந்து போகும், போலீஸ் ஜவான்கள் காவலுக்கு நிற்பவர்களை அடிக்கடி சந்தித்துப் பேசிவிட்டு போகிறார்கள். மொத்தத்தில் அந்தக் காம்பவுண்டுக்குள் கப்சிப் தர்பார் போன்ற ஒருவித யாந்திரீக வாழ்க்கை நடைபெறுவது போல் அவனுக்குப்பட்டது. அந்த அசாதாரணமான சூழல் அவனுள் இனம் தெரியாத எரிச்சலையும், பீதியையும் ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

வெகுநேரம் கழித்து, அந்த அறைக்குள் திடீரென்று சிப்பந்திகள் பிரவேசிக்கின்றனர். எதையோ தேடுவது போல அறையின் நாலா பக்கத்தையும் கண்காணித்துவிட்டு வெளியேறுகின்றனர். வெளியில் பாராவுக்கு நின்ற போலீஸ் ஜவான்கள் உஷாராகி கவாத்துச் செய்து, நடமாடுவதால் அவர்களது கனத்த காலணிகளின் ஓசை மட்டும் கடிகார ஓசை கேட்பது போல் ஒலிக்கிறது.

அதைத் தொடர்ந்து தோல் ஏற்றுமதியாளர் சங்கத் தலைவர் மக்தூண் மைதீனும், ஆளுங்கட்சிப் பிரமுகரும், அந்த நகரத்தின் மிகப் பெரும் தொழில் அதிபருமான நாராயண மூர்த்தியா பிள்ளையும் அறைக்குள் பிரவேசிக்கின்றனர். அவர்களைத் தொடர்ந்து பரிவாரங்களுடன் அறையுள் பிரவேசம் செய்த எஸ்.பி. தேவசகாயம், பிரமாண்டமான அந்தத் தேக்குமர மேஜைக்கு முன்னால் போடப்பட்டிருக்கும் மெத்தை பதிக்கப்பட்ட நாற்காலியில் உட்கார்ந்து தனது தொப்பியினை எடுத்து மேஜை மீது வைத்து விட்டு, வழுக்கை விழுந்து போன தனது தலையைக் கைக்குட்டையால் துடைத்த வண்ணமே, மரியாதையின் நிமித்தம் எழுந்து நின்ற மைதீனையும், நாராயண மூர்த்தியா பிள்ளையையும் அமரும் படி சைகை செய்யவும். ஒசேப்பின் அருகில் வந்து நின்ற இன்ஸ்பெக்டர் தீச்சட்டிக் கோவிந்தன் அட்டன்ஸனில் நின்று எஸ்.பிக்கு சல்யூட் வைக்கிறான். பிறகு அவன் சைகை காட்டவும்,

விரிக்கப்பட்டிருக்கும் கம்பளத்தில் உட்கார்ந்திருந்த ஓசேப்பு எழுந்து நின்றான்.

ஓசேப்பு எழுந்து நின்று வணக்கம் சொல்லித் தனக்கு மரியாதை செலுத்தாமல் இருப்பதைப் பார்த்த தேவசகாயதத்துக்கு ஓசேப்பின் மீது உள்ளுறக் கோபம். ஆனால் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அதிகார தோரணையில், சுவற்றோரம் நிற்கும் ஓசேப்பை முறைத்துப் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்த தேவசகாயம்,

"ஏண்டா, ஒம்பேருதான் ஓசேப்பா"

தொழிலாளர்கள் பால் மகாசண்டாளமாக நடந்து கொள்ளும் தேவசகாயத்துக்கு மரியாதை கொடுக்க அவனுக்கு விருப்பமில்லை மௌனமாகவே நின்றிருந்தான்.

"தொரை வாய் தெறந்து பதில் சொல்லமாட்டீகளோ. எஜமான் கேக்கிறாகள்லே பதில் சொல்லுடா"

தீச்சட்டிக் கோவிந்தன் அருகில் நின்று முறைத்தான்.

"அவருதான் எம்பேரைச் சரியாச் சொல்றாரே" ஓசேப்பு சாவதானமாகப் பதில் சொன்னான்.

"கூலி வேலை சம்மந்தமா, மொதலாளிக சங்கத்தோட பேச்சுவார்த்தைக்கு வந்தால் கூட இப்படித்தான் நடந்துக்குவான். மகா திமிர்பிடிச்சவன்" மக்தூன் மைதீன் எஸ்டியிடம் சொன்னான்

"சங்கத்துக் காரபய, அப்படித்தானே தெனவெட்டா நடப்பாங்க" என்று சொன்ன தேவசகாயம்,

"சரி அவனைக் கிட்டவரச் சொல்லு கோவிந்தன்" தேவசகாயம் சொல்லவும், இன்ஸ்பெக்டர் ஓசேப்பை எஸ்டியின் மேஜை முன்னால் கொண்டு நிறுத்தினான்

"அந்த பாப்பராப்பய சங்கரனுக்கு ஒங்களையெல்லாம் தூண்டிவிடத் தெரியுமே அல்லாம ஒரு மசிரும் தெரியாது"

தேவசகாயம் இப்படிச் சொன்ன போது ஓசேப்புக்கு உள்ளூறச் சண்டாளமாகக் கோபம் மூண்டது. இருந்தாலும் மௌனமாகவே நின்றிருந்தான்.

"ஏண்டா நீங்கள்ளாம் அவங்க பேச்சைக் கேட்டு வாழ்நாளை வீண்பண்றீங்க. நம்ம பெயலுவளுக்குப் புத்தி என்பதே கெடையாது" என்று ஏதோ பெரிய தத்துவத்தைச் சொல்லிவிட்டதைப் போன்று தேவசகாயம் சொல்லவும் நாராயண மூர்த்தியா பிள்ளை அதை ஆமோதிப்பது போலத் தலையை ஆட்டி தனது தோளில் கிடந்த கதர் துண்டைச் சரி செய்து கொண்டார்.

இப்படி ஒரு கருத்தை உதிர்த்து விட்டுப் போலீஸ் சிப்பந்தி கொண்டுவந்து வைத்த பைலைச் சரிபார்த்து ஒப்பு வைத்த பிறகு,

"ஒன்னையப் பார்த்தா நல்ல பையனாத் தெரியுது. நீ உன் வாழ்க்கையை முன்னேற்றம் செய்றதுக்கு என்ன உதவி கேட்டாலும் செய்து கொடுக்க சர்க்கார் தயாராக இருக்கு. நீ கேட்கிற உதவிய இப்போவே தாரதுக்குத்தான் இவங்க ரெண்டு பேரையும் வரச் சொல்லியிருக்கேன். சங்கரனைப் பிடிச்சா சன்மானம் எவ்வளவு தெரியுமா? தேவசகாயம் கேட்டான்.

"ஆமா. தலைவரைப் பிடிச்சுக் குடுத்தா பத்தாயிரம் ரூவா கொடுப்பதாகச் சொல்லியிருக்கு" ஓசேப்பு சொன்னான்.

தான் சொன்ன ஆசை வார்த்தைகளுக்கு ஓசேப்பு மயங்கிப் போனான். தனது பணி சுலபத்தில் முடிந்துவிட்டது என்று தவறாகக் கணித்துக் கொண்ட தேவசகாயம்

"நல்லதாய் போச்சு பின்னே என்ன, சங்கரனும், மத்த பயல்களும் தலைமறைவா இருக்க எடத்தை மட்டும் சொல்லிப் போடு நாங்க பாத்துக்குவோம். ஒனக்கு என்ன சன்மானம் வேணுமோ அத்தனையவும் கொடுக்க நாங்க தயார்" மகிழ்ச்சி ததும்ப ஒசேப்பைப் பார்த்து மகதூண் மைதீன் சொன்னான்.

இவ்வளவு சுலபத்தில் ஒசேப்பு மடக்கப் பட்டுப் போவான் என்று தீச்சட்டிக் கோவிந்தன் எதிர் பார்க்கவில்லை வியப்புடன் ஒசேப்பைப் பார்த்தான்.

அவனது பதிலை எதிர்பார்த்து அங்கு உட்கார்ந்திருப் பவர்களையும், எஸ்.பி. தேவசகாயத்தையும் மாறி மாறிப் பார்த்த வண்ணம் நின்றிருந்த ஒசேப்பு

"தலைவர்க எங்கே தலைமறைவா இருக்காங்காங்கிற வெவரம் எனக்குத் தெரியாது. தெரிஞ்சாலும் நான் சொல்ல மாட்டேன்" அவனது வார்த்தைகளில் வெளிப்பட்ட தெளிந்த உறுதி தேவசகாயத்தை ஆத்திரமடையச் செய்தது. வேட்டை நாயின் நாசி துடிப்பது போல் அவன் முகச்சதை துடித்தது.

"ராஸ்கல் என்னடா சொன்னே தெரியாதா" என்று கத்திய படியே, மேஜையில் கிடந்த ரூல் தடியை எடுத்து ஒசேப்பை ஓங்கியடித்தான். அவன் தோளில் பட்டுத்தடி உடைந்து கீழே விழுந்தது.

ஒசேப்பு எவ்விதமான சலனமும் செய்யாமல், எதிரே மாட்டப்பட்டிருக்கும் மகாத்மாகாந்தியின் படத்தைப் பார்த்த வண்ணம் நின்றிருந்தான்.

"கொண்ணுபோடுவன். உள்ளதைச் சொல்றா லேய்" கீச்சட்டிக் கோவிந்தன் முறைத்தான்

"ஓசேப்பு உள்ளதைச் சொல்லிப் போடுப்பா. ஒனக்கு என்ன வேணுமெண்டாலும் கேளு நாங்க செஞ்சிதாரோம்" மீரான் அவனுக்குப் பரிந்து பேசிப் பார்த்தான்.

"ஒங்கிட்டே. இப்படிப் பேசினா சொல்லமாட்டே. ஒன்னண்டையிலிருந்து உண்மையை எப்படி வரவழைக்கணுங்கிறது எங்களுக்குத் தெரியும்" மீண்டும் அவனைப் பயமுறுத்துவது போல் பேசிய தேவசகாயம் சிற்றத்துடன் ஓசேப்பையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"ஏண்டா நீ சொல்லமாட்டே" என்று அதட்டலாகப் பேசியவன்.

"வீணா அடிபட்டுச் சாவப்போரே, உள்ளதைச் சொல்லிப்போடு" தன் குரலின் தொனியை மாற்றிக் கொண்டு சாந்தம் ததும்பக் கேட்டான்.

ரூல்தடியின் அடிவிழுந்த இடம் வீங்கி உதிரம் கசிந்து கொண்டிருந்தது. ஓசேப்பின் உறுதி தேவசகாயத்தை மலைக்கச் செய்தது.

ஒருவேளை அவன் சொன்னது உண்மையாகக் கூட இருக்கலாம் என்று ஊகம் பண்ணிக் கொண்ட தேவசகாயம் "சரி அது போகட்டும், இந்தப் பிரசுரங்களையும் போஸ்டர்களையும் எங்கே தயார் பண்ணறீங்க. எந்த பிரஸ்ஸில் அச்சடிக்கறீங்க. அதையாச்சும் சொல்லு உன்னை இத்தோட விட்டிரலாம்" தேவசகாயம் கேட்டான். தினம் தினம் தேவசகாயமும் அவனது போலீசும் நடத்தும் ராட்சத தர்பார் அந்தப் பிரசுரங்கள் வாயிலாகத் தான் அம்பலப்படுத்தப்படுகிறது. நாராயண மூர்த்தியா பிள்ளை கதர்ச் சட்டை போர்வையில் நடத்தும் பதுக்கலையும், கடத்தலையும் அந்தப் பிரசுரங்கள்தான் மக்களுக்குத் தெரியப் படுத்தியுள்ளன.

ஒசேப்பு தேவசாகாயத்தை ஒரு மாதிரியாகப் பார்த்தான். அந்தப் பார்வையில் இந்தக் கேள்வியை நீ என்னிடம் கேட்டிருக்க வேண்டிய அவசியமில்லை என்று திருப்பிக் கேட்பது போலிருந்தது.

அவனது ஏளனப் பார்வை, தேவசகாயத்தை ஆத்திரம் அடையச் செய்தது கோபாவேசத்துடன் திரும்பவும் எழுந்து நின்றான்.

"அந்தப் பிரசுரங்களை யெல்லாம் நாங்க எப்படி அச்சடிக்கிறோம். எங்கே அச்சடிக்கப்படுது. எப்படி விநியோகம் செய்யப்படுதுண்ணெல்லாம் நீங்க தான் துப்புத்துலக்கிக்க வேணம். அதைப்பத்தின வெவரம் ஒண்ணும் எனக்குத் தெரியாது. தெரிஞ்சாலும் நான் சொல்லப் போறது கெடையாது"

தலையை ஒக்களித்து நின்றவாறு, உறுதியான குரலில் எந்தவிதமான தயக்கமோ, நடுக்கமோ இல்லாமல், உறுதிபட ஒசேப்பு சொன்ன பதில் ஒரு சாதாரண கூலியிடம் தோற்றுப்போய்விட்ட ஆத்திரமும் கோபமும் தேவசகாயத்தின் சிரசை முட்டியது.

ஆத்திரத்தோடு எழுந்தவன், தனது இருக்கையின் வலது பாரிசத்தில், சொருகி வைக்கப்பட்டிருக்கும், நாங்கு, மரத்திலான பூண் பிடித்த லத்திக் கம்பை உறுவி ஒசேப்பைக் கண்மண் தெரியாமல் தாக்கலானான். அவனோ, புயலையும், மழையையும் பொருட்படுத்தாமல் உறுதி தளராமல் நிற்கும் கல்மலையைப் போன்று அத்தனை அடிகளையும் தாங்கிக் கொண்டு மௌனமாக நின்றிருந்தான்.

அப்போது கதவைத் திறந்து கொண்டு, அந்த அறைக்குள் அவசர அவசரமாக பிரவேசித்த சப்.இன்ஸ்பெக்டர் ஏகவடியான் ஒசேப்பைக் கைது செய்திருப்பதைக் கண்டிந்து, சந்தனத்தேவன் தலைமையில் சுமார் ஐநூறுக்கு அதிகமான

ஆண், பெண் தோல் ஷாப்புத் தொழிலாளர்கள் மதுரை ரஸ்தாவில் வாகனப் போக்கு வரத்தைத் தடுத்து நிறுத்தி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதாகச் சொன்னான்.

முகத்திலும், சுரங்களிலும் அரும்பி நின்ற வியர்வையைத் துடைத்த வண்ணம் நின்றிருந்த தேவசகாயம்

மறியலில் ஈடுபட்டிருப்பவர்களைத் தடியடிப் பிரயோகம் செய்து கலைக்கும் படியாக ஏசுவடியானுக்குச் சொன்னான்.

ஓசேப்பைத் தாக்கி களைத்துப் போன எஸ்.பி. திரும்பவும் தன் இருக்கையில் போய்அமர்ந்தான்.

ஒரு கணம் யோசனையில் ஆழ்ந்த வண்ணம் உட்கார்ந்திருந்தவன் இன்ஸ்பெக்டர் பலவேசத்தைப் பார்த்து இப்படி உத்தரவிட்டான்.

"இவனை இப்படி விசாரிச்சா உள்ளதைச் சொல்ல மாட்டான் கல்லுழி மங்கான் கொண்டு போய் லாடம் கட்டு என்று அவர்களது சங்கேத பாஷையில் சொன்னான். லாடம் கட்டுவது என்பது போலீஸ் அகராதியில் சித்திரவதை செய்வது என்பதாகும்.

தீச்சட்டிக் கோவிந்தன் கொலைச் சாலைக்கு ஆட்டுக்குட்டியை இழுத்துக் கொண்டு போவது போல், அந்த அலுவலகத்தின் ஒதுக்குப் புறமாக இருக்கும் சித்திரவதைக் கூடத்தை நோக்கி ஓசேப்பை நடத்திக் கொண்டு போனான். மக்தூன் மகதீனும் நாராயண மூர்த்தியா பிள்ளையும் ஏமாற்றத்துடன் அறையை விட்டு வெளியே வந்தனர்.

4

ஜேசேப்பு, கைது செய்யப்பட்டு, கடும் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டுப் பின் மதுரை மத்திய சிறையில் அடைக்கப் பட்டதற்குப் பிறகு நகரத்தில் போலீஸ் கெடுபிடி மேலும் இறுகியது.

தலைமறைவாக இருந்து கொண்டு செயலாற்றும் தலைவர்களைப் பற்றிய தகவலை மட்டும் போலீஸாரால் பெற முடியவில்லை. அரசுக்கெதிரான இயக்கங்களை அடக்குகிறேன் என்ற பெயரில் எஸ்.பி. தேவசகாயம் நடத்தும் அறை பாஸீஸ அடக்குமுறை தர்பாரைக் கண்டித்து தலைமறைவாக இருக்கும் தலைவர்கள் பெயரால் வெளிவரும் துண்டுப் பிரசுரங்களின் காட்டம் மட்டும் முன்னை விடத் தானும் அதிகமாக இருந்தது. நகரின் பல பகுதிகளிலும் மக்கள் கூட்டம் கூடும். பொது இடங்களிலும் போலீஸாரின் கண்காணிப்புக்கிடையில் பிரசுரங்கள் விநியோகப்படுத்தப்பட்டு, தேவசகாயம் அசிங்கப்படுத்தப் பட்டான். தேவசகாயத்தின் ஏலாமையைக் கண்டித்து மேல் அதிகாரிகள் கண்டனக்கணைகளை வீசிக் கொண்டிருந்தனர்.

இது போதாதென்று, போலீஸ் கெடுபிடியையும் ஒடுக்கு முறையையும் எதிர்த்துப் பாட்டாளி மக்களின் போராட்டத்தை வலுப்படுத்தவும், மக்கள் இயக்கங்களை மேலும் சக்தியாக நடத்துவதற்கும் வழிகாட்டுவதற்கும் வேண்டி, வெளி ஜில்லாக்களிலிருந்தும், மாகாணங்களி லிருந்தும் தலைவர்கள் அங்கு வந்து முகாமிட்டிருப்பதாகவும் அது பெரும் போராட்டமாக வெடிக்கப் போகிறது என்கிற வதந்தியும் தேவ சகாயத்தையும், அரசு அதிகாரிகளையும்

திக்கு முக்காடச் செய்திருந்தது. எனவே, தேவ சகாயம் வீதிக்கு வீதி போலீஸாரையும், உளவாளிகளையும் நிறுத்தி வைத்து, தலைமறைவுத் தலைவர்களைப் பிடிப்பதற்கு நாயாக அலைந்தான்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில், மருங்காபுரி ஜாமீனுக்குச் சொந்தமான ஒரு கிராமத்தில் தலை மறைவாக இருந்து பணிகளைக் கவனித்துக் கொண்டிருந்த தோழர் வேலாயுதம் சிறுமலை அடிவாரத்தில் ரெயில்வே தொழிலாளி ஒருவருக்கும் சொந்தமான தோட்டச் சாலையில் தங்கியிருக்கும் தங்க சாமியையும் அவருடன் தங்கியிருக்கும் ஏனைய ஊழியர்களையும் சந்தித்துச் சில முக்கியமான வேலைகள் பற்றிப் பேசிவிட்டு, மதுரையில் முக்கிய தலைவர்களையும் சந்திக்க வேண்டியிருப்பதால், நகரப் பேருந்து நிலையத்தில் இறங்கி, ரெயில்வே பீடர் ரோடு வழியாக நத்தம் சாலையை நோக்கிப் போய்க் கொண்டிருந்ததார், துணையாக வந்து கொண்டிருந்த சாரல்ஸ் வேலாயுதத்தின் வழிகாட்டுதலின் படி, சில ஆவணங்களுடன் வேலாயுதத்தை யாராவது கண்காணிக் கிறார்களா பின் தொடரப்படுகிறாரா என்று கண்காணித்த படியே சற்று தொலைவில் வந்து கொண்டிருந்தான்.

மாலை மயங்கும் வேளை, அன்று சந்தை தினமாகையால், நாகல் கேணிப் பகுதியில் கூட்டம் அதிகமாக இருப்பதால் தன்னை யாரும் அடையாளம் கண்டு கொள்ள மாட்டார்கள் என்பது தோழர் வேலாயுதத்தின் அநுமானம். அல்லாமலும், வேலாயுதம், சாம்பல் பூத்த கறுப்பு நிறம். அடர்த்தியாக வளர்ந்திருக்கும் கிருதா மீசை அழுக்குப் புரண்ட வேட்டி சட்டை அசப்பில், கூலி என்றே எண்ணத் தோன்றும்; மட்டுமல்லாமல் தொடர்ந்த தலை மறைவு காரணமாகவும், இரவு பகலாகத் தூக்கம் கெட்டு வேலைகளில் ஈடுபட்டிருந்ததன் காரணமாகவும் வேலாயுதம் அடையாளம் கண்டு கொள்ள முடியாத அளவுக்கு மாறிப் போயிருந்தார். ஆனால், வேலாயுதத்தின் அகன்ற நெற்றியின் வலது பாகத்தில் காணப்படும் வடுவும், அதை ஒட்டிக் காணப்படும் கறுப்பு மச்சமும், அவரைக் காட்டிக்

கொடுத்துவிடும் அடையாளங்கள். அவற்றை அவரால் மறைக்க முடியாது. மாய்த்துவிடவும் முடியாது.

வேலாயுதம் ரெயில்வே பீடர் சாலையைத் தாண்டி நத்தம் சாலையில் பிரவேசித்த போது திடீரென்று யாரோ, அவர் பெயரைச் சொல்லி அழைப்பது கேட்டு, திடுக்கிட்டுப் போன வேலாயுதம் கேட்காதது போல் நடந்து போய்க் கொண்டிருந்தார். திரும்பவும் அதே குரல் கேட்ட போது, உளவாளி தன்னை அடையாளம் கண்டு கொண்டிருக்க வேண்டும் என்று ஐயப்பாடு வேலாயுதம் உள்ளத்தில் துளிர்த்தது.

அவர் பெயரைச் சொல்லி அழைத்த நபரின் குரலை அவரால் கண்டு கொள்ள முடிந்தது. அந்தக் குரல் பயில்வான் மயில் வாகனனுடையது என்பதில் சந்தேகம் கிடையாது. ஒரு காலத்தில் காங்கிரஸ் தொண்டனாக இருந்த பயில்வான் மயில் வாகனன். அடிக்கடி அவர் கடைக்கு நன்கொடை கேட்டு வந்து அவருடைய செலவில் தனது ஒரு வேளை உணவை முடித்துக் கொண்டு போவான். இப்போது அவன் காங்கிரஸ் தொண்டன் கிடையாது. வேலை வெட்டியில்லாத வெட்டியாள். போலீஸ் உளவாளி.

அழைத்த குரலுக்குப் பதில் சொல்லாமல், கூட்டத்தில் புகுந்து அவர் மேலும் நடந்து போன போது, அவனே ஓடிவந்து வேலாயுதத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டான். கோபத்தோடு, வேலாயுதம் அவனைப் பார்த்த போது,

"என்ன தோழரே, ஒம்மோட நடைய வச்சே கண்டுபிடிச்சிற மாட்டேனா. அந்தா நெத்தியிலே இருக்க கழும்பும், மச்சமும் மாறவா போவுது" என்று நடுச்சாலையில் நின்று கூச்சல் போடவும். பாராவுக்கு நின்ற போலீஸ்காரர்கள் ஓடோடி வந்து வேலாயுதத்தைப் பிடித்துக் கொண்டார்கள்.

போலீஸ் ஜவான்கள் வேலாயுதத்தைப் பிடித்துக் கொள்ளவும் கூட்டம் கூடிவிட்டது. அவர்களை உதறிப் பிடியினின்றும் விடுவித்துக் கொள்ளுவதோ, பிடி கொடாமல் ஓடுவதோ ரசாபாசமாகப் போய்விடும் என்று வேலாயுதம் மௌனமாக நின்று கொண்டிருந்தார்

சந்தைக்குச் சாமான் வாங்க வந்திருந்த சிட்டம்மாள் வேலாயுதம் போலீஸார் கையில் மாட்டிக் கொண்டதைக் கேட்டுப் பதறிப் போய் கூட்டத்தை விலக்கிக் கொண்டு முன்னால் வந்தவள் ஏதோ சொல்ல வாயெடுத்த போது வேலாயுதம் கண் ஜாடை காட்டி, அவளை எச்சரிக்கவும், அடையாளம் கண்டு கொள்ளாத மட்டில் முகத்தில் சோகம் ததும்ப நின்று கொண்டிருந்தாள். தன்னை அடையாளம் கண்டு கொண்டதாக அவள் காட்டிக் கொண்டால் போலீஸாரால் அவளும் சித்திரவதைக்குட் படுத்தப்படுவாள் என்பது அவருக்குத் தெரியும்.

சிறிது நேரத்தில், தகவல் கொடுக்கப்பட்டு, இன்ஸ்பெக்டர் தீச்சட்டிக் கோவிந்தனும், சப்-இன்ஸ்பெக்டர்களும் அங்கு வந்து சோந்தார்கள்.

சாரல்ஸ், மிகுந்த எச்சரிக்கையுடன் கூட்டத்தோடு கூட்டமாக நின்று நடப்பவற்றைக் கவனித்து விட்டுத் தன்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் ஆவணங்களைத் தலைவர்களிடம் ஒப்படைப்பதற்கும் தகவல் சொல்லு வதற்கும் சிறுமலை அடிவாரம் நோக்கி நடந்தான்.

வேலாயுதம், கைது செய்யப்பட்டுப் போலீஸ் வண்டியில் ஏற்றப்பட்டார். அவர் கைது செய்யப்பட்ட சேதி நகரில் வேகமாகப் பரவலாயிற்று.

இன்ஸ்பெக்டர் தீச்சட்டிக் கோவிந்தனைப் பொறுத்தமட்டில் வேலாயுதம் பிடிபட்டது, அவனது வாழ் நாளிலேயே சாதிக்க முடியாத அரும்பெரும் செயலாகும். அதிலும் அந்த ஜில்லாவைப் பொறுத்தமட்டில் சங்கரனுக்கு அடுத்தபடியாக இயக்கத்தின் மூளையாகக் கருதப்பட்டவர் தோழர் வேலாயுதம். வேலாயுதத்தை முடக்கிப் போட்டுவிட்டால், அந்த ஜில்லாவில், அரசுக்கு எதிரான அத்தனை இயக்கங்களையும் முடக்கிப் போட்டுவிட்ட மாதிரி என்பது போலீஸ் துறையின் கணிப்பு.

வேலாயுதம் கைது செய்யப்பட்ட நற்செய்தியைத் தீச்சட்டிக் கோவிந்தன் "வயர்லஸ்" மூலம் தேவசகாயத்துக்குத் தெரியப்படுத்தியவுடன், வேலாயுதம் துப்பாக்கி, வெடி மருந்து போன்ற பயங்கர ஆயுதங்கள் எதையும் தற்காப்புக்காக வைத்துக் கொண்டிருக்கலாம் என்று சந்தேகப்பட்டு தேக சோதனை நடத்தி, போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு, வரும்படி உத்தரவிட்டவன், உடனடியாக வேலாயுதம் கைது செய்யப்பட்ட விவரத்தைத் தனது மேலதிகாரிகளுக்குத் தெரிவிக்கவும் தவறவில்லை.

எஸ்.பி. தேவசகாயத்தைப் பொறுத்தமட்டில், வேலாயுதம் தடை செய்யப்பட்ட அரசியல் அமைப்பில் ஒரு முக்கிய ஊழியன் என்பதைவிடத் தனது பகையாளி ஒருவன் தனது பிடியில் வந்து விட்டது என்பதில் பெரும் மகிழ்ச்சியும் பெருமிதமும் தனது பகைமையைப் பழி தீர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பாக அவன் எண்ணலானான். ஏனெனில், நகரத்தில் விநியோகப்பட்ட பிரசுரங்களிலும், போஸ்டர்களிலும், தேவசகாயம் நடத்தும் அடக்குமுறை தர்பார் மட்டுமல்ல. அவன் பெறும் லஞ்சத்தையும், ஒழுக்கக் கேடான நடவடிக்கைகளையும் கள்ள மார்க்கெட் புள்ளிகளுக்கும், பதுக்கல் காரர்களுக்கும் அவன் பக்கத்துணையும், பாதுகாவலுமாக இருப்பதை மறுக்க முடியாத புள்ளி விவரங்களுடன் வேலாயுதம் அம்பலப்படுத்தியிருந்தார். அதன் காரணமாக தேவ சகாயம் தனது இலாகாவில் தனிமைப்பட்டுப் போய் நின்றிருந்தான்.

எனவே, அன்று இரவு கவிந்ததும், தேவ சகாயத்தின் முன்னால் வேலாயுதம் கொண்டு நிறுத்தப்பட்ட போது, ஒரு புழுவைப் பார்ப்பது போல் வேலாயுதத்தைப் பார்த்தான்.

"அந்த பாப்பராயப் பய சங்கரன் எங்கடா ஒழிஞ்சிட்டு இருக்கான்" என்று கேட்ட போது வேலாயுதம் அவனை ஏளனமாகப் பார்த்த வண்ணம் நின்றிருந்த தோரணை அவனை ஆத்திரமடைய வைத்தது.

"சாதாரணமாகக் கேட்டா நீயெல்லாம் பதில் சொல்ல மாட்டே தேவடியா மவனே. ஏளனமாவா பார்க்கறே" என்று கோபமாகத் திட்டியபடியே, அவரது உயிர் தலத்தை நோக்கித் தனது ஆணி பதிந்த பூட்ஸ் காலால் ஓங்கி மிதித்தான். நல்ல வேளை அவர் ஒதுங்கிக் கொள்ளவும், அவரது முன்னந்தொடைகளில் பட்டு உதிரம் கசியலாயிற்று.

வேலாயுதம் கைது செய்யப்பட்ட சேதி கேட்டு, அவரைப் பார்ப்பதற்குத் தலைவர் இருதயசாமியும், பழைய காங்கிரஸ் காரரும்,வேலதயுதத்தின் ஆசான் போன்றவருமான நரசிம்ம பாரதியும் அவரைப் பார்க்க வந்த போது, அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

தங்களது தலைவர் கைது செய்யப்பட்டதைக் கண்டனம் செய்யும் வகையில் போலீஸ் ஸ்டேஷனை நோக்கித் திரண்டு வந்த தொழிலாளர்களும், நகரப் பொதுமக்களும் தடியடிப் பிரயோகத்துக்கு ஆட்பட்டு அடித்து விரட்டியடிக்கப்பட்டனர். ஸ்டேஷனைச் சுற்றி, ஆயுதப் படையைச் சேர்ந்த ஜவான்கள் காவலுக்கு நிறுத்தப்பட்டுக் கண்காணிக்கப்பட்டது.

வேலாயுதத்தைத் தேவசகாயமும், தீச்சட்டிக் கோவிந்தனும் துருவித்துருவி கேட்டபோதும் எந்தவிதமான தகவலையும் அவரிடமிருந்து பெற முடிவில்லை. எனவே, தோல்வியால் ஆத்திரமடைந்த தேவசகாயம் அவரைச் சொல்லொண்ணா சித்திரவதைக்கு உட்படுத்தலானான். போலீஸ் ஜவான்கள், மானைக் கடித்துக் குதறும் செந்நாய்களைப் போன்று வேலாயுதத்தைச் சுற்றி நின்று குண்டாந்தடிகளால்

தாக்கினார்கள் சித்திரவதையின் வேதனை தாங்காமல் அவர், மயக்கம் போட்டு விழுந்த போது, முகத்தில் நீர் தெளித்து உணர்வு பெற்றதும் மீண்டும் அவர் வதைக்கு உட்படுத்தப்பட்டார். விடிய விடிய வேலாயுதம் வதைக்கு உட்படுத்தப்பட்ட போதும் அத்தனையையும் அவர் சகித்துக் கொண்ட விதமும் உறுதியும் மனோ பலமும் தேவசகாயத்தை மேலும் ஆத்திரப்படுத்திற்று.

கடைசியில் தேவசகாயமும் அவனது போலீஸ் படையினராலும் ஏற்படுத்தப்பட்ட காயங்களாலும், உதிரப்பெருக்காலும் உணர்விழந்த வேலாயுதம் அரைப் பிணமாக அந்த சித்திரவதைக் கூடத்தின் ஒரு மூலையில் தூக்கி வீசப்பட்டார்.

அப்போதும், தேவசகாயத்தின் வன்மம் தணியவில்லை.

மறுநாள், வேலாயுதத்தை ஊர்மக்கள் மத்தியிலும், அவனை நேசிக்கும் தொழிலாளர் பொதுமக்கள் மத்தியிலும் அவமானப்படுத்த வேண்டும் அசிங்கப்படுத்த வேண்டும் என்கிற வஞ்சகமான திட்டத்தோடு, பின் இரவு வேளையில் தேவசகாயம் தனது பாதுகாவலருடன் தனது பங்களாவுக்குப் போனான்.

5

அது ஒரு பனிக்காலமாகையால் சிறுமலைக் குன்றுகள் அசாதாரணமாகப் பனிப் போர்வையில் மூழ்கிக் கிடக்கின்றன.

மலையினின்று எழும் ஈரம் கலந்த வாடைக்காற்று மென்மையாக நகரத்தின் வீதிகளில் வீசிக் கொண்டிருக்கிறது. மலைக் கோட்டையின் உச்சியிலிருக்கும் மாரியம்மன் கோவில் கோபுரத்தை மறைத்துப் படுத்துக்கிடந்த பனி மூட்டம் மெதுவாகச் சோம்பல் முறித்து, ஆகாயத்தை நோக்கி எழுந்து கொண்டிருக்கிறது. நகர வீதிகளில் பாலாடை போன்று மென்மையான பனி மூட்டம் பனிப் பொழிவின் காரணமாக வீதிகளில் இளம் ஈரநைப்பு.

நகரவீதிகளில் மக்கள் நடமாட்டம் அதிகமாகக் காணப்படாததால், அசாதாரணமான சோகம் அழுந்திக் கிடப்பது போன்ற மௌனம்.

வெகு காலையிலேயே அதிலும் சூரியன் கிழக்குத் திக்கில் தலை காட்டுவதற்கு முன்பாகவே தங்கள் பணிகளை முடித்துவிட வேண்டும் என்கிற அவசர உணர்வுடன் நகர வீதிகளில் மலக்கூடைகள் தூப்புக் கட்டைகளுடன் நைட்சாயில் வண்டிகள் சகிதம், எறும்புகளாக அலையும் நகரசுத்தித் தொழிலாளர்களின் நடமாட்டம் மொத்தமாகக் காணப்படவில்லை.

பால்காரக் கோனார்களும், பேப்பர் பொடியன்களும் சைக்கிள் மணிகளைக் கிலுக்கி, அமைதியைக் குலைத்த வண்ணம் நகர வீதிகளிலும், சந்து பொந்துகளிலும் அவசர

கதியில் ஓடிக் கொண்டிருக்கிறார்கள். நகரத்தில் அசம்பாவிதம் ஏதும் ஏற்பட்டு விடாமல் எச்சரிக்கையாக வீதிகளிலும், தெரு முனைகளிலும் நிறுத்தப்பட்டிருக்கும் தேவசகாயத்தின் போலீஸார் தூக்கக் கலக்கத்தோடு அங்குமிங்குமாக நின்று கொண்டிருக்கின்றனர்.

வெகு காலையிலேயே எழுந்து, செயற்கையான தெம்பூட்டிக் கொள்வதற்காகத் தெரு டீக்கடைகளுக்கும், இயற்கை உபாதையைப் போக்குவதற்காக ஓடைகளையும், குளங்களையும் நோக்கிப் போய்க் கொண்டிருப்பவர்கள் கண்களிலும், வீதிகளிலும் தெரு முனைகளிலும் வீசப்பட்டிருக்கும் துண்டுப் பிரசுரங்கள் தென்படுகின்றன. சாமியார் தங்கசாமி பெயரில் அச்சடிக்கப்பட்டிருக்கும் அந்தப் பிரசுரங்களில் தோழர் வேலாயுதம் ஆதாரம் ஏது மற்றுக் கைது செய்யப்பட்டு, தேவசகாயத்தின் போலீஸாரால் சித்திரவதைக்குட்படுத்தப்பட்ட மிருகத் தனமான செயல் வன்மையாகக் கண்டிக்கப்பட்டதுடன் காவல் துறையினருடையவும் அரசாங்கத்தினுடையவும் அராஜக அரக்கச் செயலைக் கண்டிக்கும் வகையில் நடைபெறும் "ஹர்த்தாலுக்கு"மக்கள் ஆதரவு தர வேண்டும் என்கிற வேண்டுகோளும் விடப்பட்டிருக்கிறது. நகரமெங்கும் வீதிகளிலும், கட்டிடங்களிலும் சுவர்களிலும் வேலாயுதம் கைது செய்யப்பட்டிருப்பதைக் கண்டனம் செய்து போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருக்கின்றன.

அன்று காலையில் வெளிவந்த உள்ளூர் வெளியூர் நாளேடுகளிலும், தேவசகாயத்தின் உத்தரவையும் மீறி, தொழிற்சங்கத் தலைவரும், தேச பக்தருமான வேலாயுதம் போலீஸாரால் கைது செய்யப்பட்டுச் சித்திரவதைக்குட்படுத்தப்பட்ட சம்பவம் தலைப்புச் செய்தியாக வெளிவந்திருக்கிறது. மிகவும் ரகசியமாக வைக்கப்பட வேண்டிய சம்பவம், பத்திரிக்கைகளுக்கு எப்படிச் செய்தியாகப் போனது என்பதை தேவ சகாயத்தால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

நகரத்தில் திடீரென்று ஏற்பட்ட இந்த அசாதாரண சூழ்நிலை ஒவ்வொரு கணமும் ஒயர்லெஸ் மூலம் தேவ சகாயத்துக்கும் உயர் அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தப் படுகிறது.

தேவகாயம் மிகவும் எச்சரிக்கையுடன் ஏற்படுத்தியிருக்கும் கண்காணிப்பையும் மீறி, தடை செய்யப்பட்ட அமைப்புத் தலைவர்கள் செயல்பட்டிருப்பதும், அவனது தீய நடவடிக்கைகளை அம்பலப் படுத்தியிருக்கும் விதமும் எஸ்பி.தேவசகாயத்தையும், உயர் போலீஸ் அதிகாரிகளையும் அதிர்ச்சி கொள்ள வைத்தது. அவனது இத்தனை ஆண்டு சர்வீசில் இப்படி ஒரு அசாதாரண சூழ்நிலையைத் தேவசகாயம் சந்தித்தது கிடையாது.

எனவே, கோப வெறி தலைக்கேறிய தேவசகாயம் தன் கண்ணில்பட்ட காவல் துறை சிப்பந்திகளையெல்லாம் தூஷண வார்த்தைகளால் திட்டித் தீர்த்தான்.

கடுமையான எச்சரிக்கையோடும், கோபத்தோடும், நகரக் காவல் நிலையத்துக்கு எஸ்பி.தேவசகாயம் வந்தபோது அவனது கண் முன்னாலேயே அவனையும் போலீஸ் இலாகாவையும் கிண்டல் செய்தது போன்று, காவல் நிலையச் சுவற்றிலேயே கண்டன போஸ்டர்கள் இரவோடு இரவாக ஒட்டப்பட்டிருக்கிறதைக் கண்டு தேவசகாயம் திக்கு முக்காடிப் போனான். மட்டுமல்லாது, நிலையத்தின் வெளிச் சுவர்களில் தடை செய்யப்பட்ட அரசியல் கட்சியின் சின்னம் பெருமாள் கோவில் மதில்களில் நாமம் போடப்பட்டது போன்று வரையப்பட்டிருக்கிறது. இருபத்தி நான்கு மணி நேரமும் பாரா போடப்பட்டிருக்கும் ஸ்டேஷன் சுவர்களில் வரையப்பட்டிருக்கும் சின்னமும், அறிவிப்பும் தேவ சகாயத்தின் அதிகாரத்தையே கேலிக் கூத்தாக்கப் பட்டிருப்பது அவனை மேலும் சினம் கொள்ளச் செய்தது.

தாங்க ஒண்ணாக் கோபத்துடன் நிலையத்துள் தனது சிப்பந்திகளுடன் பிரவேசித்த எஸ்.பி. தேவசகாயம் இன்ஸ்பெக்டர் தீச்சட்டிக் கோவிந்தனையும், நிலையப் பொறுப்பாளர்களையும் வரவழைத்துத் தன் ஆத்திரம்

தணியும் மட்டும் திட்டித் தீர்த்தான். பாராவுக்கு நின்ற போலீஸ் கான்ஸ்டபிள்களுக்கு மெமோ கொடுக்கப்பட்டு இடைக்கால நீக்கம் செய்யப்பட்டார்கள். போஸ்டர்களை நீக்கிச் சின்னம் வரையப்பட்டிருக்கும் சுவர்கள் கழுவிச் சுத்தம் செய்வதற்கு உத்தரவிடப்பட்டது. இவ்வளவுக்குப் பிறகும் கோபமும் ஆத்திரமும் மட்டுப்படாமல் கூண்டில் அடைக்கப்பட்ட புலியைப்போன்று கையைப்பிசைந்தவண்ணம் அறைக்குள் அங்குமிங்குமாக நடந்து கொண்டிருந்தான்.

தனது அதிகாரத்தையும், உத்தியோக பலத்தையும், கேலிக் கூத்தாக்கிவிட்டிருக்கும் தோல்ஷாப்புத் தொழிலாளர் சங்கத் தலைவர்களையும் தொழிலாளர்களையும் பழி தீர்த்துக் கொள்ள வேண்டும் என்கிற வஞ்ச உணர்வு எஸ்பி. தேவசகாயத்தினுள் தீயாகக் கனன்றது. எப்படியும், சட்டம் ஒழுங்குப்பிரச்சனையை உண்டு பண்ணி துப்பாக்கிப் பிரயோகம் நடத்தி, அவர்களின் ஒற்றுமையைக் குறைத்துச் சின்னா பின்னப்படுத்திப் பழி தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று அவனது உள்மனம் துடியாய்த் துடித்தது. அப்படி ஒரு திட்டத்தை வகுப்பதற்காக அறையின் நாலா பக்கமும் கோபத்தோடு அலைந்து திரிந்தான்.

கடைசியில் தேவசகாயத்தின் உத்திரவுப்படி, சித்திரவதைக் கூடத்தில் குற்றுயிராய்த் துவண்டு கிடந்த வேலாயுதத்தின் கரங்களில் விலங்குகள் மாட்டப்பட்டு கால்கள் சங்கிலி வளையங்களால் பிணைக்கப்பட்டு, தப்பி ஓட முயற்சிக்கும் காட்டு மிருகத்தை இழுத்து வருவது போல், சங்கிலியால் கட்டப்பட்டு, அவன் முன்னால் கொண்டு வந்து நிறுத்தப்பட்டார்.

முகத்திலும், உடையிலும் இரத்தச் சுவடுகள் சுவறித் தென்படுகிறது. உடம்பில் சில பகுதிகளில் இரத்தக் கசிவு இருந்து கொண்டிருக்கிறது.

அவ்வளவு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்ட போதும், சோர்ந்து காணப்பட்ட போதும் அவர் பார்வையிலும், தோற்றத்திலும் காணப்பட்ட கம்பீரம் அவனுள் அச்ச உணர்வை ஏற்படுத்திற்று.

தன் கால்சட்டை பாக்கெட்டில், இரு கரங்களையும் திணித்தபடியே ஒக்களித்து நின்று காக்காய் பார்வையாக வேலாயுதத்தைப் பார்த்தபடியே நின்றிருந்த தேவசகாயம்,

"தாயழி, பெரிய தலைவரின்னு நெனப்போ. இவ்வளவு அடியும் ஒதையும் வாங்கிய பொறவும் தெனாவட்டுப் போவலை பார்த்தியா. உன்னோட தொழிலாளிய விட்டே ஒன்னைக் கேவலப்படுத்துறேன் பாருடா. மொறைச்சா பாக்கிறே"

தேவசகாயத்தின் வன்மம் நிறைந்த சபதத்தைக் கேட்ட வேலாயுதத்தின் உதட்டோரம் இளம் புன்னகை அரும்பி மறைந்தது.

"தேவசகாயம், இதுக்கெல்லாம் நீ பதில் சொல்ல வேண்டியிருக்கும்" என்று அமைதியாகப் பதில் சொன்னார்.

ஏற்பட்ட சித்திரவதையால், வேலாயுதத்தின் முகமும், அதரங்களும் அசாதாரணமாக வீங்கி விகாரமாக இருந்தன. நிற்பதற்கும் நடப்பதற்கும் கூட அவர் சிரமப்பட்டார்.

இன்ஸ்பெக்டர் தீச்சட்டிக் கோவிந்தன் துப்பாக்கி ஏந்திய போலீஸ் ஜவான்களை வேலாயுதத்தைச் சுற்றி அணி நிறுத்திக் கொண்டிருந்தான்.

தன்னைச் சுற்றிலும் நடைபெறும் கூத்தையும், ஏற்பாடுகளையும் பொருட்படுத்தாது நின்றிருந்த வேலாயுதம்

தான் கைது செய்யப்பட்டு பதினான்கு மணி நேரத்துக்கு மேலாகிறது என்று இன்ஸ்பெக்டர் தீச்சட்டிக் கோவிந்தனைப் பார்த்துச் சொல்லவும் அவன் திடுக்கிட்டுப் போனான்.

குற்றவாளி என்று கருதப்படுவர்கள் கைது செய்யப்படுவார்களே யானால் கைது செய்யப்பட்ட இருபத்தி நான்கு மணி நேத்துக்குள் சம்மந்தப்பட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியாக வேண்டும். மாற்றலாக வந்திருக்கும் மாஜிஸ்திரேட் பாகுலேயன் இந்த விதிகளை அட்சரம் பிசகாமல் கடைப்பிடிப்பவர்.

வேலாயுதம் உஷாரானதைக் கண்டு பயந்த கோவிந்தன் தனது இக்கட்டை ரகஸ்யமாக தேவசகாயத்திடம் சொல்லவும்

"ஓ! துரை சட்டம் பேசுகிறாகளோ" ஏளனமாக வேலாயுதத்தை பார்த்துச் சொன்னான்.

"உன்னை நகர் வலமா கூட்டிட்டுப் போய் உன் மக்கள் முன்னாலே மரியாதை செலுத்திய பிறகு ரிமாண்டுக்கு நீ அனுப்பப்படுவே கவலைப்படாதே" என்று வஞ்சகமாகச் சிரித்த வண்ணம் சொன்ன தேவசகாயம் சற்று தள்ளி நின்ற போலீஸ் வாகனத்தில் ஏறிக் கொண்டான். வண்டி நகரத்தை நோக்கிப் புறப்பட்டது. நகரவீதிகள் வேலை நிறுத்தம் காரணமாக வெறிச்சோடிக் கிடந்தது.

அணிவகுத்து நின்ற போலீஸ்காரர்கள் முன்னும் பின்னும் நடந்துவர, வேலாயுதம் நகரத்தின் பிரதான வீதிகள் தோறும் இழுத்து வரப்பட்டுக் கடைசியில் சவேரியார் பாளையம், சங்கத்திடலில் கொண்டு நிறுத்தப்பட்டார். சங்கக்கூட்டிடம் பூட்டி சீல் வைக்கப்பட்டதால் பாழடைந்து காணப்படுகிறது.

சித்திரவதைக்குட்பட்ட தங்கள் தலைவரைப் பார்ப்பதற்கு வேண்டி, தோல் பதனிடும் தொழிலாளர்களும், நகர சுத்தித் தொழிலாளர்களும், மைதானம் மட்டுமல்லாமல் தெருக்களிலும், சந்துகளிலும் அடைத்துக் கொண்டு நின்றனர். அங்கு கூடிநின்ற ஒவ்வொரு தொழிலாளியினுடையவும் முகத்தில் அவர்கள் உள்ளங்களில் கப்பிக்கனன்று கொண்டிருக்கும் சோகத்தையும், கோபத்தையும் வேலாயுதத்தால் காண முடிந்தது. எந்த நேரத்திலும் அதுகலவரமாக வெடிக்கலாம். அதை உணர்ந்த வேலாயுதம் தனது கரங்களை உயர்த்தி அவர்களை அமைதியாக இருக்கும் படி சமிக்கை செய்தார். தலைவரின் மன உணர்வைப் புரிந்து கொண்ட தொழிலாளர்களும் ஊழியர்களும் ராணுவத் தலைவர் வார்த்தைக்குக் கட்டுப்படும் சிப்பாய்களைப் போல் மௌனம் காத்தார்கள்.

தனது போலீஸ் வாகனத்தினின்றும் இறங்கி வந்த தேவ சகாயம் சணப்பன் கோழியைப் போன்று அங்குமிங்கும் நடமாடினான். கூடி நிற்கும் தொழிலாளர்களை ஏளனமாகப் பார்த்தான்.

"சங்கரனை எங்கே ஒழிச்சு வச்சிருக்கீங்க? அவன் ஒளிஞ்சிட்டு இருக்க எடத்தைச் சொன்னா இந்த ராஸ்கலை விட்டிருவேன்."

கூடிநின்ற தொழிலாளர்களைப் பார்த்துச் சவால் விடுவது போல் கேட்டான்.

கூட்டம் அமைதியாக நின்றது. கோபம் தாளாமல் அவர்கள் விடும் பெருமூச்சை மட்டும் அவனால் கேட்க முடிந்தது.

"அவங்க சொல்ல மாட்டாங்க" தீச்சட்டிக் கோவிந்தனையும், அங்கே நிற்கும் போலீஸ் காரர்களையும் பார்த்து வேலாயுதம் சொன்னார்.

"உனக்குத் தெரியாமலா இருக்குது. சொல்லுடா இல்லே இங்கேயே உன்னை கொன்னு போடுவேன்" என்று கர்ஜித்த படி தனது இடுப்பு பெல்ட்டை அவிழ்த்து வேலாயுதத்தைச் சரமாரியாகத் தாக்கலானான். பெல்ட்டின் இரும்புப்பகுதி உதட்டில் பட்டு வாயிலிருந்து உதிரம் பெருக்கெடுத்தது. தேவசகாயத்தின் கரங்கள் மரத்துப் போகும் வரையில், சாட்டை வாரினாலான பெல்ட்டால் தாக்கலானான், வேலாயுதத்தின் முகத்திலும், நெற்றியிலும் உதிரம் பெருக் கெடுத்தது. மயங்கிவிழ இருந்த வேலாயுதம் அதையும் சமாளித்துக் கொண்டு, நின்றார்.

" பொன்னப்பய, பகுமானத்தைக் காட்டாதே. தலைவர் உசிருக்கு என்னமும் ஆச்சுதோ, மாப்புளே ஒக்காளி ஒன்னையச் சும்மாவிட மாட்டோம் டோய்"

ஆத்திரமேலீட்டால், தெருக்கோடியினின்றும் எவனோ ஒரு தொழிலாளி கூச்சல் போட்டான்.

தொழிலாளர்களை ஆத்திரமூட்டிச் சட்டம் ஒழுங்குப் பிரச்சனையை எழுப்ப வேண்டும் என்கிற தேவ சகாயத்தின் தீய நோக்கத்தை ஊகித்துக் கொண்ட வேலாயுதம் மீண்டும் அமைதி காக்கும்படி வேதனையுடன் சமிக்கை காட்டவும், கூட்டத்தின் முன்னால் நின்றிருந்த பெஞ்சமின் ஆத்திர முற்றவர்களை அமைதிப்படுத்தலானான்.

துவண்டு, விழுந்து எழுந்து நிற்கும் வேலாயுதத்தின் பரிதாபத்தைக் கண்டு விம்மியழும் பெண்களின் கேவல் மட்டும் கூட்டத்தில் ஆங்காங்கே அமைதியாகக் குலைத்து எழுந்த கொண்டிருந்தது.

களைப்பின் மேலீட்டால் மேல் மூச்சுக் கீழ்மூச்சு வாங்கியவாறு சிறிது நேரம் வேலாயுதத்தைப் பார்த்த நின்றிருந்தபடி தேவசகாயம். தனது நெற்றியிலும், பிறை போன்ற வழுக்கைத் தலையிலும் அரும்பி நின்ற வியர்வையைக் கைத்துண்டால் துடைத்துக் கொண்டான்.

"பெரிய புரட்சியாளர்" வேலாயுதத்தை ஏளனமாகப் பார்த்த வண்ணம் சொன்னான்.

வேலாயுதம் ஆத்திரப்படாமல் நின்று கொண்டிருந்தார்.

"எங்கேருந்துடா ஒங்க புரட்சி வருகுது. மாஸ்கோவி லிருந்து இறக்குமதியாகுதோ" திரும்பவும் கேட்டான். அப்போதும் வேலாயுதமோ, கூட்டத்தில் நிற்பவர்களோ ஆத்திரப்படவில்லை.

"புரட்சி பண்றவன் மூஞ்சியப்பாரு நாதியத்த நாதாரி" என்று வைத வண்ணம் பக்கத்தில் நின்ற போலீஸ்காரனின் லாத்தியைப் பிடுங்கி வேலாயுதத்தின் தாடையை நோக்கி அறைந்தான். வேலாயுதத்தின் வாயிலிருந்து ஊற்றுக்கண் திறந்த மாதிரி இரத்தம் பெருக்கெடுத்தது. இரண்டு பற்கள் உடைந்து கீழே உமிழ்ந்தார்.

"இன்னையோட ஒனக்குச் சமாதி தான் "என்று கர்ஜித்த படியே அவன் திரும்பவும் லாத்திக் கம்பை ஓங்கிய போது, வேலாயுதம் கை விலங்கிடப்பட்ட கரங்களால் லாத்தியை இறுகப் பற்றி பிடுங்கி வீசினார்.

அடக்குமுறை ஒழிக என்று ஜீவனைக் கூட்டிக் குரல் கொடுத்தார்.

லாத்திக்கம்பு பிடி தவறி இடறிக் கீழே விழுந்து எழுந்த தேவ சகாயம் அவமானமும் கோபமும் தாளாமல், திரும்பவும் லாத்தியை எடுத்துச் சரமாரியாகத் தாக்க முயன்ற போது, வேலாயுதம் கை முஷ்டிகளை உயர்த்திக் கொண்டு

"இங்குலாப் ஜிந்தாபாத்" என்று லாத்திஅடியைத் தாங்கியபடியே கோஷமிட்டார் அவர் தலையிலும், தாடையிலும் உதிரப் பெருக் கெடுத்தது.

வேலாயுதம் மூன்றாம் முறையாக "ஜிந்தாபாத்" என்கிற புரட்சி வார்த்தைகளை ஜீவனைக் கூட்டி முழங்கிய போது, அந்த மைதானத்திலும் தெருக்களிலும் தெரு முனைகளிலும் சந்து பொந்துகளிலும் நின்றிருந்த அத்தனை தொழிலாளர் களுடையவும் கரங்கள் விண்ணை நோக்கி உயர்ந்தன "ஜிந்தா பாத்" என்கிற மந்திர ஓசை விண்ணையே கிழிப்பதைப் போன்று எதிரொலித்தது.

புலியை வளைத்து நிற்கும் செந்நாய்க் கூட்டம் போன்று அவர்கள் தேவ சகாயத்தையும் அவனது போலீஸ் படையையும் நோக்கிக் கோபாவேசத்தோடு நகரலாயினர்.

வேலாயுதம், கரங்களை உயர்த்தி சமிக்கை செய்யவும், உறைந்து போன சித்திரம் போல், ஆங்காங்கே அவர்கள் ஸ்தம்பித்து நின்றார்கள்.

கோபக்கனல் பறக்க அவர்கள் விடும் பெருமூச்சுக் காற்றில் கலந்து மறைந்தது. தேவசகாயத்துக்கு உள்ளில் பீதி

சோர்வு மேலீட்டால் வேலாயுதம் மயங்கித் தரையில் சுருண்டு விழுந்தார்.

போலீஸ்காரர்கள் அவசர அவசரமாக வேலாயுதத்தைப் போலீஸ் வண்டியில் ஏற்றினார்கள்.

குறிப்பிட்ட காலவரைக்குள் வேலாயுதத்தை நீதி மன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டியிருந்தது.

6

கடைசியில் நீதிமன்றக் காவலுக்காக மாவட்ட நீதி மன்ற வளாகத்துக்குக் கொண்டு போகப்பட்ட வேலாயுதம், தீச்சட்டிக் கோவிந்தனும் அவனது சிப்பாய்களும், எவ்வளவோ முயற்சி செய்த போதும் போலீஸ் வண்டியை விட்டு இறங்க மறுத்துவிட்டார். மட்டுமல்லாதுகையில் மாட்டப்பட்டிருக்கும் விலங்கையும், கால்களைப் பிணைத்திருக்கும் சங்கிலி வளையங்களையும் அகற்று வதற்கும், கழற்றுவதற்கும் அவர் அனுமதிக்கவில்லை. வேலாயுதம் இப்படிப்பட்ட பிடிவாதமான முடிவை மேற்கொள்வார் என்று எஸ்.பி. தேவசகாயமும் போலீஸ் நிர்வாகமும் எதிர்பார்க்கவில்லை.

வேலாயுதத்தின் இந்தப் பிடிவாதமானபோக்கு நீதிமன்றத்தில் ஒரு பரபரப்பான சூழ்நிலையை ஏற்படுத்தி யிருந்தது.

வேறு வழியில்லாமல், வேலாயுதத்தின் நடவடிக்கை அவரை ரிமாண்டுக்கு அனுப்ப வேண்டிய மாஸிதி ரேட்டினிடம் தெரிவிக்கப்பட்டது. மாஜிஸ்திரேட், வேலாயுதத்தின் வக்கீல் திரு சேதுராமன் அவர்களிடம் அவரது கட்சிக்காரரின் அசாதாரணமான போக்குப் பற்றிக் கேட்டபோது, சேதுராமன் அந்தத் திடுக்கிடும் சம்பவத்தையும், போலீஸாரின் அத்து மீறிய நடவடிக்கை பற்றியும் நீதி மன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

அதாவது, முதல்நாள் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்குட்படுத்தப்பட்டு, நீதிமன்றக் காவலுக்குக் கொண்டு வரப்பட்ட, தங்களது தலைவர் வேலாயுதத்தைப்

பார்ப்பதற்காக, நீதிமன்ற வளாகத்தில் கூடிய, தோல் ஷாப்புத் தொழிலாளர்களையும் பொது மக்களையும், தேவ சகாயத்தின் போலீஸார், வேலாயுதத்தின் கண் எதிரிலேயே தடியடிப் பிரயோகம் நடத்திக் கலைத்து, நீதிமன்ற வளாகத்தை விட்டே வெளியே துரத்தியுள்ளனர்.

போலீஸாரின் இந்தச் செயல் சட்டவிரோதமானது மட்டுமல்லாது. நீதிமன்றத்தின் அதிகாரத்தில் தலையிடு வதுமாகும் என்று சொன்ன வழக்கறிஞர் சேதுராமன், துரத்தப்பட்ட தொழிலாளர்களையும், பொது மக்களையும் சந்திப்பதற்கும், அவர்களுடன் அவர் பேசுவதற்குமான ஏற்பாடு செய்யாத வரையில், அவர் போலீஸ் வண்டியை விட்டுக் கட்டாயம் வெளியே வர மாட்டார் என்ற திட்டவட்டமாக மாஜிஸ்திரேட்டிடம் சேதுராமன் தெரிவித்தார். மேலும், நீதி மன்ற வளாகத்திலேயே எஸ்பி. தேவசகாயம் நடத்தியிருக்கும் அராஜகச் செயலை மேல் அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தப் போவதாகவும் சொன்னார். சேதுராமன் அந்த ஜில்லாவில் எல்லா தரப்பினராலும் மதிக்கப்பட்ட, தேசிய பாரம்பரியம் மிக்க வழக்கறிஞராவார்.

ஜில்லா போலீஸ் அதிகாரியினுடையவும், அவருடைய போலீஸ் உத்தியோகஸ்தர்களுடையவும், அத்து மீறிய அராஜக நடவடிக்கைகளை மாவட்ட நீதிபதி ஜஸ்டிஸ் ஜனார்த்தனம் அவர்களிடம், வக்கீல் சேதுராமனால் எடுத்துரைக்கப்பட்ட போது அவர் மலைத்துப் போனார்.

மாவட்ட நீதிபதி நடைபெற்ற சம்பவம் பற்றி முழுமையாகக் கேட்டறிந்த போது, வேலாயுதத்தின் எதிர்ப்பிலும், கோரிக்கையிலும் நியாயம் இருப்பதாகப் பட்டது. அதிலும், நீதிமன்ற வளாகத்துக்குள்ளேயே, நீதிபதியின் அனுமதியில்லாமல், போலீஸ் தடியடி நடத்தியிருப்பதானது, வரம்பு மீறிய செயல் என்பதோடு, நீதிமன்றத்தின் அதிகாரத்தில் தலையிடுவதுமாகும். கேட்டபோது மாவட்ட நீதிபதிக்கு ஆத்திரமும் கோபமும் ஏற்பட்டது.

வேலாயுதத்தை, அவருடைய சகாக்களும் பொது மக்களும் பார்க்கப் பிரியப்படுவது என்பது இயற்கையான ஒன்று. எனவே, வேலாயுதத்தைப் பொது மக்களைச் சந்திப்பதற்கும், அவர்களுடன் பேசுவதற்கும் அனுமதிப்பது என்று மாவட்ட நீதிபதி முடிவு செய்த போதும், ஒரு அரசியல் கைதியை அவ்வளவுக்கு அனுமதிப்பது சரிதானா என்று ஐயப்பாடு ஏற்படவும் மாவட்ட நீதிபதி, மாவட்ட நீதிமன்ற வளாகத்துக்குள் இருக்கும், தனது சக நீதிபதிகளையும், அரசாங்க வக்கீலையும் வேலாயுதத்தின் வக்கீல் திரு. சேதுராமனையும் தனது சேம்பரில் வரவழைத்து ஆலோசனை நடத்தலானார். வழக்கம் போல் அரசு வழக்குரைஞர் வாமனன் மட்டும் தனது எதிர்ப்பைப் பதிவு செய்து கொண்டார்.

வேலாயுதம், தன்னைப் பார்க்க வருபவர்களைப் பார்ப்பதற்கும், அவர்களுடன் தனது கருத்தைப் பகிர்ந்து கொள்ளவும் அனுமதிப்பது என்பதும் ஒரு சாதாரண குடிமகனுக்கு வழங்கப்பட்ட சுதந்திரம், பிறப்புரிமை என்பதால், அனுமதிப்பது என்றும், சட்டம் ஒழுங்கு கருதி, அந்தச் சந்திப்பு மாவட்ட நீதிமன்ற ஹாலில், நீதிபதிகள் முன்னிலையில் நடத்தப்பட வேண்டும் என்று சகநீதிபதிகள் சொன்னபோது ஜஸ்டிஸ் ஜனார்த்தனம் அதை ஏற்றுக் கொண்டார்.

ஆனால், வேலாயுதம், அரசியல் சட்ட வரம்புக்குள் தன்னைக்கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதோடு, வேலாயுதத்தைப் பார்க்க வரும் தொழிலாளர்களும், பொதுமக்களும் கட்டுப்பாடுடன் நடந்து கொள்ள வேண்டும் என்று செஷன்ஸ் நீதிபதி ஜனார்த்தனம் சேதுராமனிடம் சொன்னபோது

"கோட்டார் அவர்களே! மக்கள் எப்போதும் ஒழுங்கும் கட்டுப்பாடும் நிறைந்தவர்கள். அவர்களைக் கட்டுப்பாடு இழக்கச் செய்பவர்கள் காவல் துறையினர்தான். எனவே, இந்த விஷயத்திலும் மிஸ்டர் தேவசகாயமும், அவரது போலீஸ்காரர்களும் மூக்கை நுழைக்காமல் இருப்பார்களே யானால் எல்லாம் கட்டுப்பாடுடன் நடைபெறும்" என்று வெடிக்கையாகப் பதில் சொல்லவும்,

"அதற்கான பொறுப்பு நீதிமன்றத்தைச் சார்ந்தது" என்ற நீதிபதி ஜனார்த்தனம் ஏனைய நீதிபதிகளையும், வேலாயுதத்தை நீதிமன்றக் காவலில் வைக்க உத்திரவு பிறப்பிக்க வேண்டிய மாஜிஸ்திரேட்டையும், ஜில்லா நீதிமன்றத்தில் அமரச் செய்த பின்பு, வேலாயுதத்தை நீதிமன்றத்திற்குக் கூட்டி வர உத்தரவிட்டார்.

நீதிபதியின் உத்தரவுப்படி வேலாயுதம் நீதிமன்றத்துக்குக் கூட்டி வரப்பட்டார்.

கைகளில் விலங்கும், கால்களில் இரும்புச் சங்கிலியும், வளையமுமாக தன் முன்னால் ஆஜர் படுத்தப்பட்ட கைதியைப் பார்த்த போது நீதிபதி திடுக்கிட்டுப் போனார். சக நீதிபதிகள் அசாதாரணமான நிலையைப் பார்த்து திகைத்துப் போனார்கள்.

வக்கீல் சேதுராமன் மட்டும் நீதிபதிகளின் முகபாவங்களையும், பிரதிபலிப்பையும் கவனித்தவாறு மௌனமாக உட்கார்ந்திருந்தார்.

"வாட் இஸ்திஸ் மிஸ்டர்" வேலாயுதத்தை ஆஜர் செய்து விட்டுச் சலாம் வைத்த இன்ஸ்பெக்டர் தீச்சட்டிக் கோவிந்தனையும், சப்-இன்ஸ்பெக்டரையும் மகாக் கோபத்துடன் நீதிபதி கேட்கவும்

"அவர் தான் விலங்கையும் சங்கிலியையும் கழட்ட மறுத்திட்டார்" தீச்சட்டிக் கோவிந்தன் திக்கித்திக்கிச் சொன்னபோது,

"ஒரு இந்திய பிரஜைக்கு விலங்கு, மாட்டவும் மிருகத்தைப் போல் நடத்தவும் உங்களுக்கு யார் அதிகாரம் கொடுத்தார்கள்?" என்று முகம் கடுக்கக் கடுகடுப்பாக நீதிபதி கேட்கவும்

தீச்சட்டிக் கோவிந்தனும், சப்-இன்ஸ்பெக்டர் ஏகவடியானும் அவசர அவசரமாக வேலாயுதத்தைப் பிணைத்திருந்த விலங்கையும், சங்கிலி வளையங்களையும் களைந்தார்கள்.

தீச்சட்டிக் கோவிந்தன் பேயறைப்பட்டவனைப் போல் நின்றான்.

வாசலோரம் நின்றிருந்த எஸ்.பி. தேவசகாயம் மட்டும் ஏதும் பேசாமல் நின்றிருந்தான். வேலாயுதத்துக்குத் தான் விளைத்த இன்னல்களை அவர் வெளிப்படுத்திவிடுவாரோ என்கிற ஐயப்பாடு அவனுக்கு. சாதாரணமாகக் கைதிகள் தேவசகாயத்தின் கொடுமைகளுக்கு அஞ்சி தாங்கள் அனுபவித்த இன்னல்களை நீதிமன்றத்தில் சொல்வது கிடையாது. பெரும்பாலும் அதற்கான சந்தர்ப்பமும் அவர்களுக்குக் கொடுக்கப் படுவதில்லை.

தன்னைப் பிணைத்திருந்த கைவிலங்கும், கால் சங்கிலிகளும் அகற்றப்பட்ட பின், குற்றவாளிக் கூண்டில் ஏறி நின்ற வேலாயுதம், முதுகை வளைத்து, தன்முன்னால் வரிசையாக உட்கார்ந்திருக்கும் நீதிபதிகளையும், பிரதம நீதிபதியையும் பார்த்தார்.

"மயக்கமாக இருக்கு. நீதிபதி அவர்களே குடிக்கத் தண்ணீர் கிடைக்குமா" என்று கேட்கவும், ஆச்சரியம் ததும்ப வேலாயுதத்தையும், அவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்துவிட்டு, வேலாயுதத்தின் இரு மருங்கிலும் நிற்கும் தீச்சட்டிக் கோவிந்தனையும் ஏசுவடியானையும் பார்த்தார்.

"கைதிக்கு, அவர் உணவருந்துவதற்கு ஏற்பாடெல்லாம் செய்த பிறகு தானே ரிமாண்டுக்குக் கொண்டு வரவேண்டும் அவருக்கு உணவுக்கு ஏற்பாடு செய்யப்படவில்லையா?"

நீதிபதி தீச்சட்டிக் கோவிந்தனைப் பார்த்துக் கேட்டார்.

"கோட்டார் அவர்களே, என்ன கொடுத்தாலும் சாப்பிட மறுத்துவிட்டார்" என்று தீச்சட்டிக் கோவிந்தன் சொல்லவும் அவர் சொல்வது சரிதானா, என்று கேட்பது போல் ஒரு கேள்விக்குறியுடன் நீதிபதி வேலாயுதத்தைப் பார்த்தார்.

"நான் தாகத்துக்குத் தண்ணீர் கேட்ட போது, அந்த மனிதன் குஷ்டரோகியின் சிறுநீரை எனக்குக் குடிக்கக் கொடுத்தான் நான் மறுத்த போது, அவன் லத்தியால்

அடித்தபோது, என் கடவாய் பற்கள் இரண்டு சேதமாகிப் போயிற்று"

பிரதம நீதிபதி ஜஸ்டிஸ் ஜனார்த்தனத்தைப் பார்த்துச் சொன்ன வேலாயுதம், வாசல் ஓரம் நின்றிருந்த தேவசகாயத்தைத் தன் கரங்களை உயர்த்திக் காட்டிய வண்ணம் சொல்லவும் கோபம் கொண்ட தேவசகாயம்

"அவனை மரியாதையாகப் பேசச் சொல்லுங்கள்" என்று அதட்டும் தொனியில் சொன்னதுதான் தாமதம்

"நீ மிருகம். உனக்கென்னய்யா, மரியாதை, மனிதாபிமானமில்லாத மிருகம், மிருகம்" என்று கோபமாக பேசிய நீதிபதி

"அந்த மிருகத்தை நீதிமன்ற ஹாலுக்கு வெளியே கொண்டு நிறுத்துங்கள். அவன் என் முன்னால் நிற்க வேண்டாம்" என்று ஆங்கிலத்தில் கோபாவேசமாகப் பேசவும் தேவசகாயம், தலைத் தொப்பியை எடுத்து கட்கத்தில் வைத்த வண்ணம் ஜில்லா நீதிமன்றத்தினின்றும் வெளியே போனான்.

நடப்பவற்றை இதுகாறும் மௌனமாகப் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்திருந்த வக்கீல் சேதுராமன்,

"அவரை நேற்றும், இன்றும் போலீஸார், கடுமையாக வதைத்திருக்கிறார்கள்" என்றார்.

சோர்வுடன் கைதிக் கூண்டில் நிற்கும் வேலாயுதத்தை இமை கொட்டாமல் பார்த்த வண்ணம் இருந்த நீதிபதி ஜனார்த்தனம் தனது பியூனை அருகில் அழைத்து ஏதோ சொன்னார்.

நீதிபதியின் அறைக்குள் போன பியூன், அவர் பிளாஸ்கில் இருந்த ஓவல் கலந்த பாலை எடுத்து வந்து வேலாயுதத்துக்குக் குடிக்கக் கொடுத்தான்.

வேலாயுதம் பானத்தைக் குடித்து முடித்ததும் "மிஸ்டர் வேலாயுதம், உங்களுக்கு ஏற்பட்ட சித்திரவதை பற்றி

விவரமாகச் சொல்லலாம். அவ்வளவும் பதிவு செய்யப்படும். நடவடிக்கையும் எடுக்கப்படும்" என்று தீச்சட்டிக் கோவிந்தனையும், ஏசுவடியானையும் பார்த்து சொன்னபோது, தீச்சட்டிக் கோவிந்தனுக்கு உள்ளூற நடுக்கம் ஏற்பட்டது.

வேலாயுதம் தனக்கேற்பட்ட, தனக்கு விளைவிக்கப்பட்ட கொடுமைகளை ஒன்றுவிடாமல் மாஜிஸ்திரேட்டிடம் சொன்னபோது, அவரது ஸ்டேட்மெண்ட் பதிவு செய்யப் பட்டது.

மாஜிஸ்திரேட்டிடம் அந்த இரண்டு தினங்களாக நடைபெற்ற சம்பவங்களைச் சொல்லிவிட்டு தாங்கள் எனது வழக்கறிஞரிடம் கொடுத்த வாக்கும், உறுதியும் என்னாயிற்று என்று கேட்பது போல் ஜில்லா நீதிபதியையும் அவருடன் அமர்ந்திருக்கும் சக-நீதிபதிகளையும் வேலாயுதம், புருவம் உயர்த்திப் பார்த்தார் அதை ஜாடையாகப் புரிந்து கொண்ட நீதிபதி ஜனார்த்தனம்,

"மிஸ்டர் சேதுராமன் உங்கள் கட்சிக்காரர் சார்பில் நீங்கள் நீதிமன்றத்துக்குக் கொடுத்த வாக்குறுதி காப்பாற்றப் படும் என்று நம்பலாமா?" என்று கேட்டபோது,

ஓ! தாராளமாக நிச்சயம் நியதி கடைபிடிக்கப்படும் என்பது போல வக்கீல் சேதுராமன் தலையை ஆட்டி ஆமோதிக்கவும், மாவட்ட நீதிமன்ற அறைக்கு வெளியே வேலாயுதத்தைப் பார்ப்பதற்காகத் திரண்டு நிற்கும் தொழிலாளர்களையும், பொது மக்களையும் மன்றத்துள் அனுமதிக்கும்படி நீதிபதி ஜனார்த்தனம் தலைமைக் குமஸ்தாவிடம் சொல்லவும் பியூன் அவர்களை அனுமதித்தான்.

நீதிபதி ஜனார்த்தனம், வேலாயுதம், தொழிலாளர் களிடம் பேசும் போது, அரசியல் பேசக் கூடாது என்கிற நிபந்தனை விதித்திருந்தார்.

நீதிமன்றத்துள் முதன் முதலாக இருதயசாமியும் நாரசிம்ம பாரதியும் அனுமதிக்கப்பட்டனர் அவர்களைத் தொடர்ந்து பெரும்பாலும் தோல் ஷாப்புத் தொழிலாளர்கள்

ஆண் பெண் அடங்கலும் அங்கு வந்திருந்தனர். நகர சுத்தித் தொழிலாளர்கள் பெரும்பாலானவர்கள் தங்கள் பணியை அப்படி அப்படியே விட்டு வைத்துத் தங்கள் தலைவரைப் பார்ப்பதற்கு நீதிமன்றத்துக்கு வந்திருக்கின்றனர்.

இருதயசாமி தான் கொண்டு வந்திருக்கும் பொட்டலத்தை வேலாயுதம் வசம் ஒப்படைப்பதற்கு நீதிபதியிடம் அனுமதி கேட்டார். பொட்டலத்தில் என்ன பொருள் இருக்கிறது என்று கேட்பது போல் மாஜிஸ்திரேட் பார்த்த போது

"வேறே ஒன்றுமில்லீங்க, தோழர் மாத்திக் கிடத்துக்கான உடை" என்று சொல்லவும் நீதிபதி அனுமதிக்கலாயினார்.

தலைவர் சந்தனத் தேவர் வழக்கம் போல், நீதிமன்ற வாசலில் நின்று வரும் கூட்டத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தார்.

நீதிமன்ற அறையுள்ளும் வராந்தாவிலும் வளாகத்திலும், கூட்டம் திரண்டு நின்றது. ஒரு தனிமனிதனைப் பார்ப்பதற்குப் பொதுமக்கள் இப்படி திரளாக வந்திருப்பது நீதிபதிகளை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

தன்னைப் பார்ப்பதற்கும், தான் சொல்லப் போவதைக் கேட்பதற்கும், திரண்டு நிற்கும் மக்கள் கூட்டத்தைப் பார்த்து நெகிழ்ந்து போன வேலாயுதம், குற்றவாளிக் கூண்டில் நின்றவாறே தனது இருகரங்களையும் கூப்பி அவர்களுக்கு நமஸ்காரம் சொன்னார்.

வேலாயுதம் அனுபவித்த சித்திரவதையெல்லாம், மறந்து உணர்ச்சிப் பெருக்கால் அவரது நயனங்களில் கண்ணீர் கட்டித்து நின்றது.

சோர்வுற்ற மட்டில் குற்றவாளிக் கூண்டில் நிற்பதற்குக் கூட சிரமப்படும் வேலாயுதத்தைப் பார்த்த பிரதம நீதிபதி தனது சக நீதிபதிகளைக் கலந்து ஆலோசனை செய்துவிட்டு, இப்படிச் சொன்னார்.

"மிஸ்டர் வேலாயுதம் நீங்கள் மிகவும் சோர்வுற்றுக் காணப்படுகிறீர்கள். நீங்கள் இருக்கையில் அமர்ந்த படியே மக்களிடம் பேசலாம். தவறாக எடுத்துக் கொள்ள மாட்டோம்" "மிஸ்டர் சேதுராமன், அவருக்கும் சொல்லுங்கள் நீதிமன்றம் அதைத் தவறாக எடுத்துக் கொள்ளாது" என்று திரும்பவும் அழுத்தமாக நீதிபதி சொன்னதை அமைதியாகச் செவி மடுத்த வண்ணம் நின்றிருந்த தோழர் வேலாயுதம் மீண்டும் சுரங்குவித்து நீதிபதிகளுக்கு வணக்கம் சொன்னவர்,

"நீதிபதி அவர்களே நீங்கள் என்பால் காட்டிய கருணைக்கும் அனுதாபத்துக்கும் நான் நன்றியுடையவனாவேன்

இது நீதிமன்றம். நீதி பரிபாலின இடம். ஒரு இந்தியபிரஜையான நான் இந்த மன்றத்துக்குக் கொடுக்கும் மரியாதையையும் கௌரவத்தையும் கொடுத்தாக வேண்டும். இப்படிச் சொல்வதற்கு என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும். எவ்வளவு உடல் உபாதை ஏற்பட்ட போதும், நான் நின்று கொண்டே, என் தோழர்களிடமும், என்பால் அன்பு செலுத்தும் மக்களிடமும் பேசுவேன்" என்று மௌனமாகச் சொன்னார்.

வேலாயுதத்தின் இந்த பதில் நீதிபதிகளை நெகிழ்ச்சியுற வைத்தது.

"உங்கள் பிரியம்" நீதிபதி ஜனார்த்தனம் சொன்னார்.

வேலாயுதம் பேசுவதைக் கேட்பதற்காக அந்த மக்கள் கூட்டம் அமைதியாக உட்கார்ந்திருந்தது.

வேலாயுதம், பேசுவதற்கும் நன்றி சொல்வதற்கும் நீதிமன்றத்தால் பதினைந்து நிமிடமே அனுமதிக்கப்பட்டது.

தான் அனுபவித்த இம்சை காரணமாக அவர் மிகவும் சோர்வுற்றிருந்தால், முதலில் உரத்துக் கூடப் பேசமுடிய வில்லை. ஆனால் நெஞ்சுரம் காரணமாகவோ என்னவோ, வேலாயுதத்தின் பேச்சு நெஞ்சை அள்ளும் உணர்ச்சிப் பிரளயமாக இருந்தது.

தன்பாலும், தான் சார்ந்திருக்கும் அரசியல் இயக்கத்தின்பாலும், நகர மக்கள் காட்டிய அன்புக்கும், அரவணைப்புக்கும் பாசத்துக்கும் நன்றி சொன்ன வேலாயுதம் நாடு, பதுக்கல் காரர்களாலும், கள்ள மார்க்கெட் பேர்வழிகளாலும், நாட்டில் செயற்கையான பஞ்சம் ஏற்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டிய வேலாயுதம் இந்த அநியாயங்கள் ஒழியும் மட்டும் தன்னைப் போன்றவர்களது பணியும் போராட்டமும் ஓயாது என்றும் அதற்கு மக்கள் ஆதரவுடன் பக்கத்துணையும் பாதுகாவலுமாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளவும் அங்கு குழுமியிருந்த மக்கள் ஒருவித மன உணர்வுடன் கலைந்து போனார்கள்.

வழக்கம் போலவே, வேலாயுதத்தை அரசு மருத்துவ மனைக்குக் கூட்டிச் சென்று முதல் உதவி செய்து, காயச்சான்றிதழ் பெற்று, அதை நீதிமன்றத்தில் ஒப்படைத்துவிட்டுப் பின்னர் மதுரை மத்திய சிறைச்சாலைக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்று, வேலாயுதத்தை ரிமாண்டுக்குக் கூட்டிச் செல்லும், போலீசுக்கும் சப்-இன்ஸ்பெக்டருக்கும் உத்தரவு பிறப்பித்த பிறகு நீதிமன்றம்கலைந்து சென்றது.

வேலாயுதம், அரசு மருத்துவ மனைக்குக் கூட்டிப் போகப்பட்டார். எஸ்.பி. தேவசகாயமும் தீச்சட்டிக் கோவிந்தனும், கனமான உள்ளக் கொதிப்புடன் நீதிமன்ற வளாகத்தை விட்டு வெளியே போனார்கள். செஷன்ஸ் நீதிபதி ஜஸ்டிஸ் ஜனார்த்தனம் எவருக்கும் அஞ்சாத நேர்மையாளர் என்கிற உண்மை தேவசகாயத்தை வதைக்க லாயிற்று.

தனது கடைசிப் புகலிடமான ஆண்டவனின் தயவை வேண்டி, நெஞ்சுக்கு நேராகச் சிலுவை அடையாளம் போட்டுக் கொண்ட தேவசகாயம் தேவலாயுதத்தை நோக்கி நடந்து போனான்.

7

ஓசேப்பு கைது செய்யப்பட்டு மூன்று மாதம் உருண்டோடிவிட்டது.

இந்த இடைப்பட்ட காலத்தில் தோழர் வேலாயுதமும், கைது செய்யப்பட்டார். அவர் சித்திரவதைப்படுத்தப்பட்டது சம்மந்தமாக ஜில்லா நீதிபதி ஜஸ்டிஸ் ஜனார்த்தனம், மதராஸ் உயர்நீதிமன்றம் மூலமாக எடுத்த கடுமையான நடவடிக்கை காரணமாக, எஸ்.பி. தேவசகாயம் கண்டனத்துக்கு ஆட்படுத்தப்பட்டு அவனுக்குக் கிடைக்க வேண்டிய பதவி உயர்வு நிறுத்தி வைக்கப்பட்டது. பதவி இறக்கம் செய்யப்பட்டு, வேறு ஜில்லாவுக்கு மாற்றப்பட்டிருக்கிறான். இன்ஸ்பெக்டர் தீச்சட்டிக் கோவிந்தனும் பதவி இடை நீக்கம் செய்யப்பட்டு இலாகாப் பூர்வமான விசாரணையில் இருக்கிறது. இவ்வளவு மாற்றங்கள் ஏற்பட்ட போதும், அத்தனையும் மேலோட்டமான கண்துடைப்பாகவே இருந்தது. பழைய குருடி கதவைத் திறடீ, என்கிறபடி, போலீஸாரின் கெடுபிடி வெவ்வேறு உருவத்தில் தொழிலாளர்களையும், பொதுஜன ஊழியர்களையும் மிரட்டிக் கொண்டு இருந்தது.

தாயம்மாள் ஓசேப்பு கைது செய்யப்பட்டதற்குப் பிறகு மிகவும் சோர்ந்து போனாள். உளப்பூர்வமாக ஏற்பட்ட சோர்வு அவளை உடல் ரீதியாகவும் பாதிக்கத் தொடங்கியிருக்கிறது. வயது காரணமாகவோ, என்னவோ, தாயம்மாளுக்கு அடிக்கடி மயக்கமும் சோர்வும் ஏற்படுகிறது. ஓசேப்பு இல்லாத தனது குடிசையில், தனிமையில் இருப்பதும், பொழுதைக் கழிப்பதும் யுகத்தைக் கடக்கிற மாதிரியான மன அழுத்தம்.

ஓசேப்பு கைது செய்யப்பட்டதற்குப் பிறகு, கிழவிக்குத் தனிமை உணர்வு தட்டிவிடக் கூடாது என்று மினிசாமியும், சார்லஸ்சும் தங்கள் பணிமுடிந்து வீட்டுக்குப் போவதற்கு முன்னால் கிழவியைப் பார்க்காமல் இருக்க மாட்டார்கள். சிட்டம்மாளும், மேரியும் கூட அடிக்கடி வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அவளைச் சந்திக்க வரும் போதெல்லாம், தங்கள் தோல் ஷாப்புகளிலும் நகரத்திலும் நடைபெறும் சம்பவங்களைப் பற்றியும், நிகழ்ச்சிகள் பற்றியும் புதுப்புதுக் கதைகளை, சுவாரஸ்யமாக அவளுக்குச் சொல்கிறார்கள். இருந்தாலும், அவர்களுக்கும் வாழ்க்கை யானது முன்னையதை விடத்தானும் கடுமையானதாகவே இருப்பதாகத் தாயம்மாள் உணரலானாள். அவ்வளவு சிரமத்திலும், அவர்கள் துன்பங்களை எதிர்த்துப் போராடுவதும், நம்பிக்கை தளராமல் இருப்பதும் கிழவியின் சோர்வைப் போக்குவதாகவும் ஓசேப்பின் இடத்தை நிரப்புவதாகவும் இருந்ததால் அவ்வளவாக தாயம்மாளுக்கு வாழ்க்கையின் பால் சலிப்புத் தட்டவில்லை.

இத்தனைக்கும் மத்தியில் தாயம்மாளின் கவலை யெல்லாம் தனது வளர்ப்பு மகனான ஓசேப்புக்குத் தன் கண்ணை மூடுவதற்குள் ஒரு பெண்ணைப் பார்த்து அவனை ஒரு குடும்பஸ்தனாக்கி அவனது வாரீசைத் தன் கையில் தாங்கி விடை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதாகும். ஆனால்,

"அந்த பாவிப்பெய புடிகுடுக்கமாட்டேங்கிறானே" என்று தன் வயதை ஒத்த மற்ற வயதான தோல் ஷாப்புப் பெண்களிடம் தன் ஆற்றாமையை அவ்வப்போது வெளியிட்டு அங்கலாய்த்துக் கொள்ளுவாள். அதற்கான மார்க்கத்தை அவள் அடிமனம் நித்தம் நித்தம் தேடிக் கொண்டிருந்தது. ஓசேப்பை ஒரு குடும்பஸ்தனாக்குவது, தன் மனசுக்குள் கணவனாக வரித்துக் கொண்ட ஆசீர்வாதத்தின் மறைந்த ஜீவனுக்குச் செய்யக்கூடிய மரியாதை என்று தாயம்மாள் எண்ணலானாள்.

ஓசேப்பு கைது செய்யப்பட்டதற்குப் பிறகு வாரக் கடைசியில் ராஜக்கா பட்டி கிராமச் சேரிக்குப் போய் வருவதை தாயம்மாள் வழக்கமாகக் கொண்டிருந்தாள். அது அவளுக்கு மன ஆறுதல் தருவதாக இருந்தது.

ஓசேப்பை எட்டிக்காயாக வெறுத்து நின்ற அருக்காணி, ஓசேப்பு கைது செய்யப்பட்டுச் சித்திரவதைக்கு ஆளானதைக் கேட்டதற்குப் பிறகு தாயம்மாளிடம் வேறுவிதமாக நடந்து கொண்டாள்.

ஓசேப்புக்காகவும் அவனது தகப்பனான ஆசீர் வாதத்துக்கும் வேண்டி, தனது வாழ்க்கையையே தத்தம் பண்ணியிருக்கும் தாயம்மாள் மனதில் அனாதை என்கிற உணர்வு ஏற்படாதவகையில் இருந்தது, அருக்காணியின் நடப்பும் போக்கும்.

தாயம்மாள் ராஜக்கா பட்டிக்கு வரும் போதெல்லாம், அருக்காணி அடிக்கடி ஜெயிலில் இருக்கும் ஓசேப்பு பற்றியும், அவனது உடல் நலம் பற்றியும் விசாரிப்பதும் அவளைத் தன்னை ஈன்ற தாயினும் மேலாகப் பாவித்துக் கவனித்துக் கொள்வதையும் பார்த்த போது, அருக்காணி ஓசேப்பைப் பற்றி வேறுவிதமாகச் சிந்திப்பதாகப் பட்டது. இருவருக்கும் இடையில் விடுபட்டுப் போன உறவை மீண்டும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்கிற எண்ணம் அவளை அறியாமலேயே உள்ளூற துளிர்த்திருப்பதாகத் தாயம்மாளுக்குப் பட்டது. எனவே உள்ளூற அருக்காணியைத் தனது மருமகளாக ஸ்வீகாரம் பண்ணிக் கொண்ட தாயம்மாள், எப்படியும் ஓசேப்பை அவர்களின் மறுவாழ்வுக்குச் சம்மதிக்க வைக்க வேண்டும் என்று மனதுள் திடம் செய்து கொண்டாள். என்ன இருந்தபோதும், தாயம்மாளைப் பொறுத்த மட்டில் அவள் நேரடியாக ஓசேப்பிடம் கேட்டால் மனதுக்குள் விருப்பம் இருந்தாலும் அவளிடம் நேரடியாகப் பேசவும் மாட்டான். சில வேளைகளில் மொத்தமாக வெறுத்து மறுப்புத் தெரிவிப்பதற்கான வாய்ப்பும் உண்டு. எனவே, அவனது தோழர்கள், நண்பர்கள் வாயிலாகத்தான் ஓசேப்பின் மன

உணர்வுகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். அவனைச் சம்மதிக்க வைக்க வேண்டும் என்று திடம் பண்ணிக் கொண்டிருந்த தாயம்மாள் அதற்கான சந்தர்ப்பத்தை எதிர் பார்த்துக் காத்திருந்தாள்.

தாயம்மாள் எதிர் பார்த்திருந்த படியே அதற்கான சந்தர்ப்பமும் வெகு விரைவிலேயே வந்து வாய்த்தது.

அன்று தாயம்மாள் உடம்புக்கு முடியவில்லை என்று வேலைக்குப் போகவில்லை. ஆனால் அவள் லீவு எடுத்துக் கொண்டதற்கு வேறு ஒரு முக்கிய காரணம் இருந்தது.

தலைமறைவாக இருக்கும் தலைவர்களுக்காக இரவு நேர உணவைச் சமைத்துக் கொடுக்க வேண்டியது அவளுடைய கெடு. இந்தப் பொறுப்பை எல்லா, தோல் ஷாப்புத் தொழிலாளர் மற்றும் நகர சுத்தித் தொழிலாளர்கள் குடும்பங்களும் ஏற்றுக் கொண்டிருந்தன. எனவே ஒவ்வொரு நாளும், ஒரு குடும்பத்தில் உணவு தயாரிக்கப்பட்டு, போலீஸாருக்கும், உளவாளிகளுக்கும், தெரியாமல், தலைமறைவாக இருக்கும் தலைவர்களுக்கு அவர்கள் முகாமிட்டிருக்கும் ரகசிய இடங்களுக்கு உணவு எடுத்துச் செல்லப்படும்.

அதற்கு ஏதுவாக முதல் நாள் தோல் ஷாப்பில் தோலைச் சுத்தம் செய்து கொண்டிருக்கும் போது தாயம்மாளுக்கும், மரியாளுக்கும் அவர்கள் சுத்தம் செய்த தோல்களின் சுழுத்துப் பகுதியிலும் வெதர் பகுதியிலுமிருந்து கொழுப்புகலந்த தோல்கறி கிடைத்தது. எனவே, மரியாளுக்குக் கிடைத்த தோல் கறியையும் வாங்கி வந்து அலசி, மசாலை சேர்த்துக் குச்சுக்கிழங்குடன் வதக்கிக் கொண்டிருந்தாள். நாக்கில் எச்சில் ஊற வகைக்கும் நறுமணம் வதக்கப்படும் கறியிலிருந்து பிரவாகித்துக் கொண்டிருந்தது.

அப்போது தான் மினிசாமி, அவள் தயார் செய்து தரும் உணவைத் தலைவர்களுக்குக் கொண்டு செல்வதற்காக இனம் தெரியாத மூன்றாவது நபருடன் தாயம்மாளின் குடிசைக்கு வந்து சேர்ந்தான். மினிசாமியுடன் வந்திருக்கும் வாலிபன்

சங்கத்தில் புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கும் தொழிலாளியாக இருக்கலாம்.

மினிசாமியிடமும் வந்திருக்கும் வாலிபனிடமும் ஏதும் பேசிக் கொள்ளாமல் தாயம்மாள், அவசர அவசரமாகத் தான் சமைத்த தோல்கறி -குச்சுக்கிழங்குக் கலவையை தயாராக வைக்கப்பட்டிருக்கும் பாத்திரங்களில் நிரப்பி, அந்த வாலிபனிடம் கொடுத்து விட்டு நெற்றியிலும், மார்பிலும் அரும்பி நின்ற வியர்வையை முந்தானையால் துடைத்துக் கொண்டாள்.

மூலையில் இருந்த காடா விளக்கு கண்சிமிட்டி ஒளிவீசிக் கொண்டிருந்தது.

குடிசைக்கு வெளியே போய் நின்று, யாராவது தங்களைக் கவனிக்கிறார்களா என்று கண்காணித்தபின் குடிசையுள் நுழைந்த மினிசாமி உடன் வந்த வாலிபனிடம் உணவுச் சட்டிகளைக் கொடுத்தனுப்பி விட்டு, தாயம்மாளுக்கு எதிரே இருக்கும் மண்திண்ணையில் போய் உட்கார்ந்தான்.

"ஏதாச்சும் சாப்பிடுதயாப்பா" அலைச்சலாலும், வேலைப்பளுவாலும், முகம் சோர்ந்து போயிருக்கும் மினிசாமியைப் பார்த்துத் தாயம்மாள் கேட்டாள்.

அவள் சொல்வதை ஆமோதிப்பது போல் அவன் தலையை ஆட்டவும், ஈயக்கும்பாவில், கேழ்வரகுக் கழி உருண்டையைப் புளிக்கவைத்த நீரில் கலக்கி அவன் முன் வைத்துக் காணத் தொவையலையும் கையில் கொடுத்தாள்.

"ஒங் கையால சாப்பிட்டு எம்புட்டு நாளாச்சு ஆத்தா" அவள் முகத்தைப் பார்த்துச் சொன்ன மினிசாமி பசியெடுத்து பசு ஊறலை உறிஞ்சுவது போல், கும்பாவில் இருக்கும் கேழ்வரகுக் கலவையைக் குடிக்கலானான்.

மினிசாமி சாப்பிடுவதை இமை கொட்டாமல் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்த தாயம்மாள், அவனிடம் அந்தப் பேச்சை எப்படி ஆரம்பிப்பது என்கிற தயக்கத்தோடு

உட்கார்ந்திருந்தாள்; அவளது தயக்கத்தைப் பார்த்த மினிசாமி "என்ன ஆத்தா. அப்படிப் பார்க்கிறவ" என்று கேட்டான்.

"ஒண்டுமில்லே. சும்மா நீ சாப்பிடு" தயக்கத்தோடு சொன்னாள்.

ஓசேப்பிடம் கூட, ஒரு விஷயத்தை ஆரம்பிப்பதற்கு, முன் இப்படித்தான் தயக்கத்தோடு கேட்பாள் என்பது அவனுக்குத் தெரியும்.

"ஒன்னெ எனக்குத் தெரியாதா என்ன. ஒம் மனசுல என்னமோ ஓடிக்கிட்டிருக்கு" என்று புன்முறுவலுடன் கேட்டபோது

"நீ வாயக் கொப்புளிச்சிட்டுவா... அப்புறம் சொல்லுறேன்" கிழவி தனது இடது கை விரலால் சேலையை முறுக்கிய படி தலையைக் குனிந்த வண்ணம் சொல்லவும், மினிசாமி, குடிசைக்கு வெளியே போய் கும்பாவை அலம்பி வாயைக் கொப்பளித்துவிட்டு மறுபடியும் திண்ணையில் வந்தமர்ந்தவன், நீ கேட்க வேண்டியதைக் கேள் என்பது போல கிழவியை ஏறிட்டுப் பார்த்தான்.

"ஏலே, அய்யா. அருக்காணிய என்னவெண்டு நெனெக்கிறே" சம்மந்தா சம்மந்தமில்லாமல் கேட்டாள்.

ஒரு கணம் அவள் மனதில் ஓடுவதைக் கணிப்பவன் போல் உட்கார்ந்திருந்த மினிசாமி லோசாகச் சிரித்தான்.

"இல்லேடா, அவ இப்ப நெம்பமாறிப் போயிட்டாப் போல இருக்கு. எம்மேலே அவளுக்கு கொள்ளப் பிரியம் உப்ப. ஓசேப்பைப் பத்தியெல்லாம் நெம்பக் கேக்கறாடா" மிகவும் வாஞ்சையுடன் கேட்டாள்.

"ரெண்டு பேத்தையும் திரும்பவும் சேத்து வச்சிரலா மெண்டு ஆசையாக்கும்" அவளது கண்களை ஊடுறுவிய வண்ணம் கேட்டான். அவளது பஞ்சடைந்த நயனங்களில் அவளது ஆவலும், ஆர்வமும் தழும்பி நின்றது.

"மூக்கனும் சவுக்கியமில்லாமப் போயிட்டான் நாதியத்து நிக்குவு" கிழவி முந்தானையை முறுக்கிய வண்ணம் சொன்னாள்.

அருக்காணியை பலாத்காரமாக சாமியைக் காட்டி மூன்றாம் தாரமாகத் திருமணம் செய்து கொண்ட மூக்கன் இப்போது குறி சொல்வதில்லை. அளவுக்கு மீறிய கஞ்சாப் பழக்கத்தாலும், பெண் உறவாலும் பைத்தியம் பிடித்தது. ஏர்வாடி தர்காவில் கொண்டு கட்டி வைத்திருக்கிறார்கள். அவனது மூத்த மனைவிகள் இரண்டு பேரும் வெவ்வேறு நபர்களைத் தேடிக் கொண்டு போய்விட்டார்கள்.

"நாம அல்லாம் அறுத்துக் கட்டிக்கிற சாதிதானே அய்யா" கிழவி மீண்டும் மினிசாமியைப் பார்த்துக் கேட்டாள்.

அவள் பேசுவதைத் தலைகுனிந்த படியே கேட்ட மினிசாமி மௌனமாக உட்கார்ந்திருந்தான். காடாவிளக்கின் ஒளிபட்டு அவன் நெற்றிச் சுருக்கங்கள் சுருங்கி விரிந்து கொண்டிருந்தது.

வெகுநேரம் அப்படியே உட்கார்ந்திருந்த மினிசாமி

"ஒம்மவனைக் கேட்டியா?" அவள் முகத்தை உற்றுப் பார்த்த படியே கேட்டான்.

"கிருகு கெட்ட பெய மனசுக்குள்ளாற அத்தனையவும் பூட்டி வெச்சிக்கிட்டு ஒண்ணெயும் சொல்ல மாட்டேங்கிறானே" கிழவி அங்கலாய்த்தாள்.

"இப்பெல்லாம் ஒம்மவன் ஜெயில்லே நெம்பப்படிக்கிறான். நெம்பப் பேச மாட்டான். நெம்பவே மாறிப் போயிட்டான்." கிழவியின் கேள்விக்கு நேரடியாகப் பதில் சொல்லாமல் சம்மந்தா சம்மந்தமில்லாமல்ப் பேசவும்

"நீதான் அவனைப் பார்க்க என்னையக் கூட்டிட்டுப் போவ மாட்டேங்கிறே. அருக்காணியே அடுத்த வாரம் என்னெய கூட்டிட்டுப் போரதாச் சொல்லியிருக்கு" மனம்

நிறைந்த மகிழ்ச்சியோடு தாயம்மாள் மினிசாமியைப் பார்த்துச் சொன்னாள்.

அவன் மீண்டும் அவளது அப்பாவித்தனத்துக்காகப் பரிதாபப் படுவது போல் சிரித்தான்.

"ஏண்டா சிரிக்கிறே. அவுஹ சேரப்படாதா" தாயம்மாள் பெருமூச்செரியக் கேட்டாள்.

"அவங்க ரெண்டு பேரும் நெம்பத் தெளிவாகத்தான் இருக்காவ. ஆத்தா நீ ஏமாந்து போவாதை"

என்று எச்சரித்தபடி குடிசையை விட்டு எழுந்து போனான். சுவர்க்கோழி கெச்சலிட்டது.

காடா விளக்கு அவிந்து குடிசையுள் இருள் கவிந்தது.

●

தாயம்மாள் கிழவி மினிசாமியினிடம் சொன்ன படியே, அந்த வாரக்கடைசியில் சனிக்கிழமை வாக்கில் அருக்காணியவும் கூட்டிக் கொண்டு, மதுரை மத்திய சிறைச் சாலையில், அடைக்கப்பட்டிருக்கும் ஒசேப்பைப் பார்க்கப் போனாள்.

கிழவிக்கு உதவியாக இருக்க வேண்டும் என்பதற்காக வேண்டி, தலைவர் இருதயசாமி மினிசாமியைத் துணைக்கு அவர்களோடு அனுப்பி வைத்திருந்தார். சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கும் தலைவர்கள் படிப்பதற்கும், ஒசேப்புப் படிப்பதற்கான ஆங்கில தமிழ்ப் புத்தகங்களும் மினிசாமி வசம் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

அருக்காணி, தன் மகளையும் தன்னோடு அழைத்து வந்திருந்தாள்.

ஒசேப்பு அரசியல் கைதி என்பதால், அவர்கள் கொடுத்த மனுவானது முறையாகப் பரிசீலனை செய்யப்பட்டு, தணிக்கை செய்யப்பட்டதற்குப் பிறகு, கைதியை அவர்கள்

சந்திப்பதற்கான அனுமதி ஜெயில் அதிகாரிகளால் வழங்கப்பட்டது. ஜெயில் வார்டன் ஒருவன் அவர்களை ஓர் அறைக்கு அழைத்துச் சென்று காவலுக்கு நின்றான். காவலுக்கு நின்ற காவலாளியும், அங்கு நிலவும் சூழ்நிலையும் தாயம்மாளுக்கு அச்சம் தருவதாக இருந்தது.

ஓசேப்பைப் பார்த்ததும், உணர்ச்சிவசப்பட்டு ஒப்பாரிவைத்துக் களேபாரம் ஏதும் செய்துவிடக் கூடாது என்று மினிசாமி தாயம்மாளை எச்சரித்திருந்தான்.

சாதாரணமாக அவனுடன் மனம் திறந்து கலகலப்பாகப் பேசக் கூடிய அருக்காணி மத்திய சிறைச்சாலை வளாகத்துக்குள் நுழைந்தும் மௌனமாகிப் போனதும், ஒருவிதமான பரபரப்புடன் நடந்து கொண்டதும், அவனுக்கு வியப்பாகப் பட்டது. ஒருவேளை அவள் தனது உணர்வுகளையும் உள்ளக்கிடக்கையையும் வெளிக்காட்டிக் கொள்ள பிரியப்படாமல் சிரமப்படுகிறாள் என்று யூகித்துக் கொண்ட மினிசாமி, அவளிடம் மேற்கொண்டு எதுவும் பேசாமல் ஓசேப்பை எதிர் பார்த்து அறையில் உட்கார்ந்திருந்தான்.

குறிப்பிடப்பட்ட நேரத்தில் பார்வையாளர் அறையுள் அனுமதிக்கப்பட்ட ஓசேப்பைப் பார்த்ததும், ஒன்றும் விளங்காமல் ஸ்தம்பித்துப் போய் நின்ற அருக்காணி, முகத்தைக் கரங்களால் மூடியவண்ணம் விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள். தன்னுள் விகசித்து நிற்கும் துக்க உணர்வைக் கட்டுப்படுத்த முயன்ற போது, அவளது திரேகமே ஜன்னி கண்டது போல் துடிப்பதைப் பார்க்கும்போது, மினிசாமிக்குப் பரிதாபமாகவும் பாதரவாகவும் பட்டது. அத்தனை ஆண்டுகாலமாக அவள் கட்டுப்படுத்தி வைத்திருந்த ஓசேப்பின்பால் உள்ள அவளது பாசமும், நேசமும் கட்டுப்பாட்டையும் உடைத்துக் கொண்டு பிரவாகமாகி விகசிப்பது போல் பட்டது.

காவலுக்கு நின்ற வார்டன் அவளை அதட்டிய போது "அவளை அழவிடுங்க சாமி" என்று மினிசாமி அவனைப் பார்த்துச் சொன்னான்.

உண்மையிலேயே, ஓசேப்பு மிகவும் மெலிந்து போயிருந்தான். அவன் அனுபவித்த சித்திரவதையின் தாக்கமும், சுவடும் அவனது நயனங்களில் தென்படுகிறது.

அருக்காணியையும், அவளது குழந்தையவும், தாயம்மாளுடனும் மினிசாமியுடனும் எதிர்பாராத ஓசேப்பு மின்சாரத்தினால் தாக்குண்டவன் போல் ஸ்தம்பித்து நின்றான்.

அருக்காணியின் பாச உணர்வு அவனைப் பாதித்திருக்க வேண்டும். உணர்ச்சி வயப்பட்டதால் ஓசேப்பின் கண்களில் கண்ணீர் கசிந்து நிற்பதை மினிசாமி பார்த்த போது அவனுள் ஒருவித ஆத்திரமும், கோபமும் ஏற்பட்டது.

இரண்டு வாரத்துக்கு முன்னால், ஓசேப்பைச் சந்தித்த மினிசாமி அருககாணி விஷயம் பற்றிப் பிரஸ்தாபித்த போது, சங்கத்தின் கௌரவத்தைக் காப்பாற்ற அருக்காணி எடுத்த முடிவில் ஏதும் மாற்றம் கிடையாது என்பதோடு அருக்காணி தன் மனதின் ஆழத்தில் பதிந்து போன போதும், அவளுடன் தாம்பத்தியம் என்பது முற்றாக முடிந்து போன விஷயம் என்று சொன்னவன், அவள் பால் இவ்வளவு அன்பும் பாசமும் கொண்டிருப்பான் என்று மினிசாமி எதிர் பார்க்கவில்லை.

தனது வளர்ப்பு மகனின் பரிதாபமான தோற்றத்தைக் கண்டு மலைத்துப் போன தாயம்மாள் வெட்டுண்ட மரம் போல் தரையில் உட்கார்ந்து அவனையே வைத்த கண் வாங்காமல் பார்த்த வண்ணம் இருந்தாள். அதீத துக்கம் காரணமாக அவளால் குரல் எடுத்து அழக்கூட முடியவில்லை.

தன் முன்னால் இருக்கும் பெஞ்சில் வந்து உட்கார்ந்த ஓசேப்பு, சுதாரித்த மட்டில் கரங்களைக் குவித்து அருக்காணியைக் கும்பிட்ட போது அவனது கரங்களில் நடுக்கம் கண்டது.

"அண்ணெக்கி நீ என்னை முறிச்சுப் பேசி திட்டினாலும் சாமியார் தங்கச் சாமியக் காப்பாத்தி விட்டதுக்கு, நானும் நம்ம சங்கமும் ஒனக்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கோம் அருக்காணி" என்று நன்றிப் பெருக்குடன் சொன்னபோது,

"அட பாவி, ஒனக்கு உப்படி ஒரு அவக்கேடு வருமிண்டு தெரிஞ்சிருந்தா ஒன்னையவும் அங்கேயே தங்க உட்டிருப்பேனே." அருக்காணி அங்கலாய்த்தாள் அவனோ எந்தவிதமான பிரதிபலிப்பும் காட்டாமல் மௌனமாக அவளையும், அவள் மார்பில் சாய்ந்து நின்றபடியே ஆச்சரியம் ததும்ப அவனைப் பார்த்துக் கொண்டிருக்கும் சிறுவனையும் உற்றுக் கவனித்த படியே உட்கார்ந்திருந்தான்.

அவனது பார்வையில் தேங்கி நிற்கும் ஏக்க உணர்வைப் பார்த்த அருக்காணி சிறுவனை அவனிடம் கொண்டு விட்டு விட்டுத் திரும்பவும் இருக்கையில் வந்து அமர்ந்தாள்

ஒசேப்பு சிறுவனைத் தன் மார்போடு அணைத்துக் கொண்டான். அவனைத் தொட்டு அணைத்துக் கொண்ட போது கரங்களில் நடுக்கம் ஏற்பட்டது சிறுவனின் தலையையும் கரங்களையும் ஸ்பரிசித்து வருடிய போது உணர்ச்சி மேலீட்டால் அவன் உடல் புல்லரித்தது. அப்படியே வாரி எடுத்து மடியில் இருத்திக் கொண்டான்

அந்தச் சிறுவன் அவனது உதிரத்தின் உருவாக்கம் வெளிப்படையாக அவனால் உறவு கொண்டாட முடியவில்லை; அவன் பெருமூச்சு விட்டான்

அருக்காணியின் கண்கள் மீண்டும் பனித்திருப்பதை மினிசாமி கண்டான்

தாயம்மாளுக்கு உள்ளூற மெத்த சந்தோஷம். தனது எண்ணம் நிறைவேறிவிட்ட திருப்தி

மினிசாமி மட்டும் ஒன்றும் புரியாமல் மௌனமாகவே நின்றிருந்தான்

சிறுவன் ஒசேப்பை அந்நிய மனிதனைப் பார்ப்பது போல் பார்த்த வண்ணம் இருந்துவிட்டு, அவனது பிணைப்பினின்றும் தன்னை விடுவித்துக் கொள்ளப் பார்த்த போது அவனைத் தனது பாசம் நிறைந்த பிணைப்பினின்றும் விடுவிக்க அவனுக்கு மனம் வரவில்லை.

"அய்யா ஒசேப்பு ஒன்னெ எண்ணெக்கித் தாண்டா ஊட்டுக்கு அனுப்பப் போராவ" தாயம்மாள் கிழவி ஆதங்கத்தோடு கேட்டபோது, அவளது அறியாமையையும் அப்பாவித்தனத்தையும் கண்டு அவனுள் சிரிப்பு ஏற்பட்டது.

"என்னெய புடிச்சு வச்சிருக்கு பாரு அரசாங்கம் தான் சொல்லவேணும் ஆத்தா" ஒசேப்பு இப்படிச் சொல்லவும் கிழவி மௌனமாக உட்கார்ந்திருந்தாள் அவர்கள் விடை பெற்றுக் கொள்ள வேண்டிய நேரம் நெருங்கிக் கொண்டிருந்ததால் காவலுக்கு நின்ற ஜெயில் சிப்பந்தி கேள்விக்குறியுடன் மினிசாமியைப் பார்த்தான்.

"ஆத்தா, ஒம் மவன்கிட்டே பேச வேண்டியிருந்தா பேசிப்போடு. சமயம் ஆயிட்டுப் போவுது அய்யாரு கோவப்படப் பேராரு"

வெறுப்போடு பார்த்த வண்ணம் நின்றிருந்த ஜெயில் சிப்பந்தியைப் பார்த்த படி மினிசாமி தாயம்மாளிடம் சொன்னான்.

அமைதியாக ஓடிக்கொண்டிருந்த சுவர்க் கடிகாரத்தைப் பார்த்த அருக்காணி தன் காலடியில் இருந்த பையிலிருந்து காகிதப் பொட்டலத்தை எடுத்து

"ஒனக்கு நெம்பப் புடிச்ச நாய்க்கர் கடை பிரியாணி" சிரித்த வண்ணம் ஒசேப்பின் கையில் கொடுத்தாள்.

"அடப் பாவி எங்கிட்டக் கூடச் சொல்லலையே' கிழவி வாயில் விரலை வைத்து ஆச்சரியப்பட்டாள்.

பொட்டலத்தை வாங்கிக் கொண்ட ஒசேப்பு எழுந்து அவர்களுக்கு வணக்கம் சொன்னான். விடை பெற்று கொண்டு மீண்டும் சிறைக் கூட்டத்துக்குள் போனான்.

சிறைச் சாலை வளாகத்தை விட்டு வெளியே வந்ததும், தன் மகனைக் கையில் தூக்கிக் கொண்டு நடந்து போன அருக்காணி தாயம்மாளை ஒரு மாதிரியாகப் பார்த்தாள்.

"இங்க பாரு கெழவி. இங்க நடந்ததை அல்லாம் இத்தோட மறந்து போயிரு. அந்த ஆளு வெளியே வந்தப் பொறவு நீயோ, ஒம் மவனோ என்வூட்டுப்பக்கம் தலைவச்சுப் படுக்கப்படாது, நாம் பொல்லாதவளாகிப் போவேன்" என்று சொன்னபோது தாயம்மாள் மலைத்துப் போனாள்.

அருக்காணியின் முகம் இறுகிக் காணப்பட்டது.

வேதாளம் திரும்பவும் முருங்கை மரத்திலேறிக் கொண்டது என்று எண்ணியவாறு மினிசாமி அவர்களைத் தொடர்ந்து நடந்தான்.

●

8

சங்கரன், சுந்தரேச அய்யரை அவர்களது சொந்தக்கிராமத்தில் பார்த்துவிட்டு வந்த பிறகு, சுந்தரேசய்யர் அதிக நாள் ஜீவித்திருக்கவில்லை.

சங்கரன் மீது அபாண்டமாகச் சுமத்தப்பட்டிருக்கும், சதிவழக்கின் காரணமாகவும், போலீஸ்கெடுபிடி காரணமாகவும், சுந்தரேசய்யர் மரணப்படுக்கையில் கிடக்கும் போது மட்டுமல்லாமல் அவரது இறுதி நிகழ்ச்சியிலும் சங்கரனால் கலந்து கொள்ள முடியவில்லை. அவரது மூத்த சகோதரர் சுந்தரேச அய்யரின் இறுதிச் சடங்கை எந்தவிதமான குறைபாடும் இல்லாத அளவுக்குச் செய்து முடித்திருக்கிறார்.

சுந்தரேச அய்யர் தனது உயிலில் குறிப்பிட்டிருந்த படியே, எந்த ஒரு புரோகிதனும் அவர் சடலத்தைத் தொடர்ந்து சுடுகாட்டுக்குப் போகவில்லை. எந்தவிதமான சடங்கும் செய்யப்படவில்லை. அவர் விருப்பப்படி அவரது அஸ்திமட்டும் காவிரியிலும் நாகைக் கடலிலும் கரைக்கப்பட்டிருக்கிறது.

சுந்தரேச அய்யரின் அந்திம காலமும் அமைதியாகவே முடிவுற்றுள்ளது என்று வடிவாம்பாள் தோழர் கந்தசாமியின் வாயிலாகச் சங்கரனுக்குக் கொடுத்தனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்திருக்கிறாள். கடைசி ஒரு மாத காலம், ஒவ்வொரு நாளும் மாலை வேளையில், வடிவாம்பாள், அவரது படுக்கையருகில் அமர்ந்து வீணையை மீட்டி, பாரதியின் பாடல்களைப் பாட வேண்டும். அதிலும் கண்ணன் பாடல்களைக் கேட்பதில் அவருக்கு ஆர்வம் அதிகம். அந்த நாதவெள்ளத்தில் மிதந்தவாறே தூங்கிப் போவார். அம்புஜத்தமாவும் உடனிருப்பார்.

சுந்தரேச அய்யர் கடைசி நிமிஷம் வரையில் தனது உற்சாகத்தையும், கம்பீரத்தையும் இழந்துவிட்டில்லை. உயிர் பிரியும் அந்த இரவில் ஏனோ சுந்தரேசய்யர் அவளிடம் பாரதியாரின் ஊழிக்கூத்தை அதற்கே உரிய வீரியத்துடனும், கம்பீரத்துடனும் பாடச் சொன்னவர், அந்தப் பாடலில் லயித்தவாறே கண்ணை மூடிக் கொண்டபின். நயனங்களைத் திறக்கவில்லை.

"சங்கரா உயிர் பிரிந்த பின்பும் உன்முகத்தில் கண்ட அதே கம்பீரத்தை அவர் முகத்தில் பார்த்தேன்" என்று சுந்தரேச அய்யரின் மரணத்தை விவரித்த வடிவாம்பாள், சங்கரனுக்கு ஆச்சரியத்தை விளைவிக்கக் கூடிய மற்றொரு விஷயத்தையும் விவரமாகக் குறிப்பிட்டிருந்தார்.

சுந்தரேசய்யர் மரணத்துக்குப் பிறகு அம்புஜத் தம்மாளுக்குப் பக்கத்துணையும் பாதுகாவலுமாக இருப்பது வடிவாம்பாள் மட்டும் தான்.

ஒவ்வொரு நாளும், மாலை வேளையில் கல்லூரி முடிந்த பிறகு வடிவாம்பாள், அம்புஜத்தம்மாளைச் சந்தித்தாக வேண்டும். அவளுக்காகவே ஒவ்வொரு மாலைப் போதும் மல்லிகைச் சரம் தொடுத்துக் காத்துக் கொண்டிருப்பார். அம்புஜத்தம்மாளுக்காக வேண்டி, வடிவாம்பாள் தியாகபிரம்மத்தின் கீர்த்தனைகளையும், கோபால கிருஷ்ண பாரதியின் பாடல்களையும் பாட வேண்டியிருக்கிறது பாடல் முடிந்ததும் அம்புஜம் அம்மாளே அவளுக்குப் பூச்சூடி பொட்டிட்டு, அழகு பார்த்து அனுப்பி வைக்கிறார்.

வடிவாம்பாள், ஊரைவிட்டு வெளியே போகும்போது, அம்புஜத்தம்மாளிடம் ஆசிபெற்று விடைபெற்றுச் செல்ல வேண்டும் இல்லையென்றால் குழந்தையைப் போன்று கோபித்துக் கொள்கிறார்.

அம்புஜத்தம்மாள் வடிவாம்பாளை மானசீகமாக மருமகளாக ஏற்றுக் கொள்ளத் தயாராகிவிட்டதைச் சொல்லாமல் சொல்லி உணர்த்திய வடிவாம்பாள்,

"சங்கரா, நீ எனக்குக் கொடுத்த வாக்குறுதியை எப்போ நிறைவேற்றப் பேராய்!" என்கிற கேள்வியுடன் கடிதத்தை முடித்திருந்தாள்.

மலையடிவாரத்தில் இருக்கும் அந்தத் தோட்டச் சாளையில் மறைவாக இருந்த சங்கரன் தன்னிடம் கொடுக்கப்பட்ட கடிதத்தைப் படித்து மடித்துப் பாக்கெட்டில் வைத்ததும் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார்.

அவர் அப்போதுதான் பம்பாயிலிருந்து மதுரைக்கு வந்து சகாக்களைச் சந்தித்து விட்டு அங்கு வந்து சேர்ந்திருக்கிறார்.

வடிவாம்பாள் கடிதத்தின் கடைசி வார்த்தைகள் திரும்பவும் அவர் மனதை உறுத்தியது.

வடிவாம்பாள் குறிப்பிட்டிருப்பது போன்ற அதற்கான நேரமும் சமயமும் கனிந்து கொண்டிருக்கிறது. அவளை மேலும் காத்திருக்க வைப்பதானது அவளை மேலும் வதைப்பதற்கு ஒப்பாகும். ஆனால், அதற்கு முன்னால் ஒரு பொதுஜன ஊழியன் என்கிற முறையில் அவர் ஆற்ற வேண்டிய பணிகளை நினைத்துப் பார்த்த போது மலைப்புத் தட்டியது.

இவ்வாறு சங்கரன் மனதைப் போட்டு குழப்பிக் கொண்டிக்கும் போதுதான் தலைவர், இருதயசாமி அந்த அறையின் கதவைத் திறந்து கொண்டு, உள்ளே பிரவேசித்தார். அவரைத் தொடர்ந்து மினிசாமியும், பாதாளையும் மாயவனும் உள்ளே வந்தார்கள்.

தங்கசாமி மேற்குமலை அடிவார கிராமம் ஒன்றில் இருப்பதால் அவர் மட்டும் வந்து சேரவில்லை.

தன் முகத்திலும், உடம்பிலும் அரும்பி வழியும் வியர்வையைத் தலைத்துண்டை எடுத்துத் துடைத்த வண்ணம் சங்கரனது எதிரில் உட்கார்ந்த இருதயசாமி,

"என் தலைச் சுமை பாதி இறக்கி வச்ச மாதிரி ஒத்தையிலே இதுவளைக்கட்டி இழுக்கதுக்குற்ற- அப்பப்பா, என்தலை பாதி நரைச்சுப் போச்சு வக்கீலைய்யா" என்று சங்கரனைப் பார்த்துச் சிரித்தபடி சொன்னார்

"தலைவரே, எப்படி இருக்கே தலைவரே எங்ஙன இருக்கேனிண்டு ஒரு வார்த்தை சொல்லிவிட்டா என்னவாம். சனங்க எம்புட்டு மலைச்சுப் போயிட்டுவ தெரியுமா?"

பாதாளை கேட்டான்.

இதற்குள் தங்கசாமி சகிதம் சார்லஸ் வந்து சேர்ந்தான். சங்கரன் வந்திருப்பது சம்மந்தமாகவும், நடைபெறும் கூட்டம் பற்றியும் சார்லஸ் மூலம் அவருக்குத் தகவல் சொல்லிவிடப் பட்டிருந்தது.

தங்கசாமி சங்கரனைப் பார்த்துக் கரங்களைக் குவித்து ஸ்தோத்திரம் சொன்னார்.

"சாமியாருக்கு இன்னும் பழைய வாசனை போவில்லை போல இருக்கு" சங்கரன் கேலியாகச் சொல்லவும்,

"நான் என்ன, நீங்கதான் என்னைவிடத் தீவிர கிறிஸ்தவனாயிட்டு வாரீங்க"

தங்கசாமி, தலைவர் இருதயசாமியைப் பார்த்தபடி சங்கரனைக் கேலி பேசலானார்.

"என்ன சொல்றீங்க தங்கசாமி, சங்கரன் வியப்புடன் கேட்டார்."

"அது தெரியாதா பாஸ்கல் திருவிழா நாடகத்திலே சாமியார் உங்களைச் சைத்தானாகக் காட்டியிருக்கார். சைத்தானும் பரமபிதாவினுடைய சேர்தானே"

தங்கசாமியின் வியாக்கியானத்தைக் கேட்டு எல்லோரும் சிரித்தார்கள்.

அதற்குள், ரெயில்வே தொழிலாளியின் மகள் பிச்சையம்மாள் எல்லோருக்கும் குடிப்பதற்காக மோர் கொண்டுவந்தாள்.

சிறுமலைக் காற்று வீசத் தொடங்கியது.

"நாம இப்போ கூடியிருப்பது, வருங்காலத்தில் நாம செய்ய வேண்டிய வேலைகள் பற்றித் தீர்மானிக்க வேண்டியிருக்கு" என்று ஆரம்பிக்கும் போதே சந்தனத்தேவன் ஆஜானுபாகுவாகக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே பிரவேசித்தார்.

"தேவரே. நீ எப்போவும் லேட்டுத்தானா" இருதயசாமி கேட்கவும்.

"என்ன செய்ய தலைவரே, ஒரு பஞ்சாயத்து அதை முடிக்காம கௌம்ப முடியலை. அல்லாம் நம்ப தோல் ஷாப்பு சனியங்க தான். புருஷனும் பொஞ்சாதியும் ஒரு உப்புக்குப் பொறாத வெசயத்துக்கு நாயும் பேயுமாக அடிச்சுட்டுக் கெடக்குதுவ. நாம தலையிடலேண்ணா. அத்துக்கும் போல இருக்கு. தெங்காஞ்சி வழக்கா பஞ்சாயத்துப் பண்ணிப் போட்டன்" என்று சொன்னவர், சங்கரனைப் பார்த்து புன்முறுவல் செய்தவாறு நமஸ்காரம் சொல்லிவிட்டு உட்கார்ந்தார்.

"காவலுக்கு ஏற்பாடு பண்ணியாச்சா?" தங்கசாமி கேட்கவும்.

"ஆம்" என்பது போல் தலையாட்டிய மினிசாமி

"நந்தவனப் பட்டி காக்கையனும், கசமாடன் மவன் அப்பாசாமியும் பாத்துக்குவாங்க. இண்ணெக்கி அம்புட்டு கெடுபிடி இருக்காது தலைவரே. ஏதோ மத்திய மந்திரி, பழனிக்குச் சாமிகும்பிட இந்த வழியாகத்தான் போராரு. அவரைப் பாதுகாப்பதுக்குள்ளாற போலீசுக்கு இடுப்பு நொடிஞ்சு போவும்"

சங்கரன் மீண்டும் பேச்சைத் தொடர்ந்தார்.

"அவர்கள், நமது அமைப்பைச் சட்டம் போட்டுத் தடை செய்தார்களேயல்லாமல் மக்களிடமிருந்து நம்மைப் பிரிக்க முடியவில்லை" என்று பேச்சை ஆரம்பித்த சங்கரன் ஆளும் அரசுக்கு எதிராக மக்கள் நடத்திய போராட்டங்களையும், அந்தப் போராட்டங்களுக்குத் தலைமை ஏற்று வெற்றி பெற்ற விவரங்களையும் சொன்னார்.

"அரசாங்கம் அம்பலப்பட்டு, மக்கள் மத்தியில் நிர்வாணமாகத் துடித்துக் கொண்டிருக்கிறது" என்று சொன்னவர், தொழிற்சங்கங்களை அரசு தடை செய்ததை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில் வெற்றி பெற்ற விவரம் பற்றியும் சொல்லி, வெகுவிரைவில் தோல் பதனிடும் தொழிற்சங்கம் செயல்படும் என்ற போது தலைவர் இருதயசாமி மகிழ்ந்து போனார்.

முடிவாக நடைபெறப்போகும் சட்டமன்றத் தேர்தலில் தோழர் வேலாயுதத்தை அபேட்சகராகப் போட்டியிட வைக்க வேண்டும் என்றும் நகர சபைத் தேர்தலில் ஓசேப்பையும் வேறு சிலரையும் போட்டியிட வைத்து, நகர சபையைக் கைப்பற்ற வேண்டும் என்று மேலிடம் முடிவு செய்திருப்பதையும் சங்கரன் அறிவித்தார்.

சங்கரனது மீள்வரவு அவர்களுள் உற்சாகத்தை ஏற்படுத்தியிருந்தது.

9

சட்டசபைக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டது.

அந்த ஜில்லாவிலேயே பெரும் பணக்காரரும் (அபேட்சகராக) மோட்டார் தொழிற்சாலை அதிபருமான மாரிமுத்தா பிள்ளை ஆளும் கட்சியின் அபேட்சைகாரராக அறிவிக்கப்பட்டார்.

ஆளும் கட்சி அபேட்சகராக அறிவிக்கப்பட்டதற்குப் பிறகே, மாரிமுத்தாபிள்ளை, தனது கிளாஸ்கோமல் உடையிலிருந்து முரட்டுக் கதராடை உடுத்தவும், வணக்கம் வைக்கவும் கற்றுக் கொண்டார்.

மாரிமுத்தாபிள்ளை ஆளும் கட்சியின் அபேட்சகாராக அறிவிக்கப்பட்டதற்கு இரண்டு முக்கிய காரணங்கள். ஒன்று அந்தத் தொகுதியின் விசேஷமாக, பெரும்பான்மையான ஓட்டர்கள் பிள்ளைமார் ஜாதிக்காரர்கள், என்னதான் வேற்றுமை வெறுப்பு இருந்தபோதும், பிரச்சனை என்று வருகையில் ஜாதி என்கிற உணர்வும், பிறப்பும் அவர்களைப் பிணைத்து விடும் என்கிற மேலான கணிப்பு. இரண்டாவது பிள்ளைமார் ஜாதியைச் சேர்ந்தவர்கள், அவர்களுக்குள் எண்ணுக்கடங்காத உப பிரிவுகள் இருந்தபோதும் நகரத்தில் பெரும் தொழில் அதிபர்கள் வியாபாரிகள் பிள்ளைமார் ஜாதியைச் சேர்ந்தவர்கள். மட்டுமல்லாமல் அந்தத் தொகுதிக்கு உட்பட்ட கிராமங்களில் பண்ணையார் களாகவும் மிராசுதார்களாகவும் இருப்பவர்கள் அவர்கள் தான். எனவே, தங்களுக்கு இருக்கும் நிலப்பிரபுத்துவ மேலாண்மையையும் அதிகார பலத்தையும் பணபலத்தையும் வைத்துக் கொண்டு, பண்ணை அடிமைகளான தாழ்த்தப் பட்டவர்களையும் பிற்பட்ட வகுப்பாரையும் மடக்கிப் போட்டுவிட முடியும் என்கிற கணிப்பு

அல்லாமலும், பணம் போட்டு வட்டியும் முதலுமாகப் பணம் சம்பாதிக்கும் லாபநோக்குக் கொண்ட மாரிமுத்தாபிள்ளை எடுத்த காரியத்தில் சித்திபெற பணத்தைத் தண்ணீராகச் செலவு செய்யும் வியாபாரி. எனவே லேவாதேவி விதிமுறையிலேயே தேர்தலைச் சந்திக்க அவர்கள் திட்டம் தீட்டியிருந்தனர்.

பிள்ளைமார்களுக்கு அடுத்த படியாக உள்ள மெஜாரிட்டி ஜாதிக்கார்கள் நாயுடுக்கள். திருமலைநாயக்கர் காலத்தில் இருந்தே ஆதிக்கத்துக்காகச் சண்டை பிடித்துக் கொண்டிருப்பவர்கள் என்பதால், அவர்களைச் சமாதானப்படுத்தும் வகையில், பிரமுகர்களான நாயக்கர்களுக்கு பஞ்சாலை வைப்பதற்கும் கல்லூரி வைப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டு மானியமும் கொடுத்து அவர்கள் சமாதானப் படுத்தப்பட்டார்கள். எனவே பிரபல நாயக்கர்களும், தேர்தல் களத்தில் மாரிமுத்தா பிள்ளைக்கு ஆதரவாக இறக்கி விடப்பட்டனர்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் சிறையில் அடைக்கப் பட்டிருக்கும் தோழர் வேலாயுதம், அபேட்சராக அறிவிக்கப்பட்டது, தலைவர் இருதயசாமிக்கு மலைப்புத் தருவதாக இருந்தது. அறிவிப்பு வெளியே வந்தபோது, பைபிளில் படித்த கேலியாத் தாவீது கதைதான் ஞாபகத்துக்கு வந்தது. சாமியார் தங்கசாமியிடம் இருதயசாமி தனது ஐயத்தைத் தெரியப்படுத்திய போது, தாவீதின் கவனிலிருந்து வெளிப்பட்ட கூழாங்கல் கோலியாத்தை வீழ்த்தவில்லையா என்று கேட்டு வைத்தார்.

சங்கரன் மட்டும் மிகவும் நம்பிக்கையுடனும், தூரநோக்குப் பார்வையுடனும், அந்தத் தொகுதியில் மட்டுமல்ல மாகாணம் முழுவதும் பெரும்புள்ளிகளை எதிர்த்து நிற்கும் மக்கள் பிரதிநிதிகள் வெற்றி பெறுவது உறுதி என்கிற நம்பிக்கையை அவர்களுக்கு ஊட்டிச் செயல்பட வைத்தார்.

சங்கரன் அந்த நகருக்கு வந்த மறுமாதமே ஒசேப்பு சிறைச்சாலையினின்றும் விடுதலை செய்யப்பட்டான். எனவே, அவனது வரவு தேர்தல் வேலைகளை மக்கள் மத்தியில் பரவலாக எடுத்துச் செல்வதற்கு உதவிகரமாக

இருந்தது. போலீஸ் கெடுபிடியைச் சட்டை செய்யாமல் தங்கசாமி மும்முரமாகத் தேர்தல் வேலையில் ஈடுபட்டது தொழிலாளர் மத்தியில் உற்சாகத்தை உண்டு பண்ணியிருந்தது.

வேலாயுதத்தைத் தேர்தல் களத்தில் இறக்கி விட்டதானது, இருதயசாமியும், வயதான பெரியவர்களும் ஐயப்பட்டதற்கு மாறாகத் தொழிலாளர் மத்தியிலும், பொதுமக்கள் மத்தியிலும் மிகுந்த உற்சாகத்தையும் எழுச்சியையும் ஏற்படுத்தியிருந்தது அதிலும் உழைப்பாளிகளான தோல் ஷாப்புத் தொழிலாளர் இடையிலும், நகர சுத்தித் தொழிலாளர்களான ஆண்பெண் இருபாலர் மத்தியிலும் பெரும் ஆர்வத்தையும், ஆதரவையும் உண்டுபண்ணிவிட்டிருந்தது. மினிசாமியும் பாதாளையும் மாயவனும், தோல் ஷாப்பு வேலைக்கு லீவு போட்டு விட்டுத் தேர்தல் வேலையில் மும்முரமாக ஈடுபட்டார்கள். அமலோற்புதமும், பெண் தொழிலாளர்களும் வீடு வீடாக ஏறி இறங்கினார்கள்.

சந்தனத்தேவன் பகல் வேளையில் தலைமறைவாக இருந்து கொண்டு, அத்தனை வேலைகளையும் ஒருங்கிணைத்துச் செயல்படும் தலைவர் சங்கரனுக்குக் காவலாக நின்றார்.

சங்கரன் இரவுபகலாக ஓய்வு உளைச்சலின்றி கிராம மக்களைக் கூட்டி மக்கள் தொண்டனான வேலாயுதத்தை வெற்றி பெற வைக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துச் சொல்லி, அவர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களுக்கும் பதில் சொல்வது தனது தலையாய கடமையாகக் கொண்டு எந்திரமாக இயங்கிக் கொண்டிருந்தார்.

தொழிலாளர் பிரதிநிதிகள் தேர்தல் வேலைகளுக்காக ஒவ்வொரு தோல் ஷாப்பு வாசலிலும் திரண்டு நின்று உண்டியல் குலுக்கிய ஒரு காசு, இரண்டு காசு என்று தேர்தலுக்கான நிதியைச் சேர்த்தார்கள்.

நகரத்தின் வீதிகளிலும், சந்தைக் கடைகளிலும் தோல் ஷாப்புத் தொழிலாளர்கள் மற்றும் நகர சுத்தித் தொழிலாளர்கள் குடியிருப்புகளிலும் கூட்டமாகச் சென்று

உண்டியல் குலுக்கினார்கள். தேர்தலுக்கான நிதியைக் காசு காசாகக் சேகரித்தார்கள். சிட்டம்மாளும், மேரியும் தங்களது ஒரே சொத்தான தங்கத் தோடுகளைத் தேர்தல் நிதிக்காகக் கொடுத்தார்கள்.

கார்களும், அலங்கரிக்கப்பட்ட வண்டிகளும், வாடகைக்கமர்த்தப்பட்ட அடியாட்களும் ரௌடிகளும் மாரி முத்தாபிள்ளையின் தேர்தல் அணி வகுப்பில் அலங்காரமாக அணி வகுக்கப்பட்டனர். பணம் தண்ணீராகச் செலவிடப்பட்டது.

மின்சாரமைக்கோ ஒலிபெருக்கி வசதியோ இல்லாமல் வெறும் மெகப்போனை வைத்துக் கொண்டு தலைவர் இருதயசாமியும், ஓசேப்பும் பேசும் கூட்டங்களை மக்கள் கூட்டம் கூட்டமாக நின்று கேட்டார்கள். கூட்ட முடிவில் தேர்தல் நிதிக்காக நீட்டப்படும் உண்டியலிலும் தங்களிடம் இருக்கும் பணத்தை மனமுவந்து போட்டுவிட்டுப் போனார்கள்.

துண்டு பாய், தனது தலைத்துண்டை விரித்துக் கடை வீதியில் நின்று ஒலமிட்டு நிதிவசூல் செய்தார்.

சுயேட்சைகளே இல்லாமல் நடைபெறும் விசித்திரமான தேர்தல், பஞ்சப் பராரிகளின் பிரதிநிதிக்கும், செல்வச் சீமானுக்கும் இடையில் நடைபெறும் பலப்பரீட்சை. தேர்தல் நாள் நெருங்கி வரும் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு விநாடியும், அந்த நகரத்து மக்கள் தேர்தல் முடிவுகளை ஆவலுடன் எதிர் பார்த்து நின்றார்கள்.

அந்த நாளும் எந்தவிதமான அசம்பாவிதமும் இல்லாமல் வந்து போனது.

வாக்குப்பதிவு நடைபெற்ற மூன்றாவது நாள். அதிக வெயிலும், அதிகக் குளிருமில்லாத ரம்மியமான மாலைப்பொழுது,

தொழிலாளர்கள் தங்கள் பணிகளை முடித்துக் கொண்டு தங்களது உறைவிடங்களுக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். நகர வீதிகளில் பொருள்களை

வாங்குவதற்கும், பொழுது போக்குவதற்கும் மக்கள் திரண்டு கொண்டிருந்தனர்.

அப்போது துண்டு பாய் என்கிற சவுக்கத் அலி, தனது ராஜவாகனமான சைக்கிளில், பதாகைகளைக் கம்பீரமாகப் பறக்க விட்ட வண்ணம்,

"தோழர் வேலாயுதம் தேர்தல்லே கெலிச்சுப் போட்டார். இது சகலமான ஜனங்களுக்கும் சொல்லப்படும் அறிவிப்பு" என்று மெகப்போனை வைத்துக் கொண்டு வீதி தோறும் நின்று அறிவிப்புச் செய்தார்.

தோழர் வேலாயுதம் சட்டமன்றத்துக்கான தேர்தலில் வெற்றி பெற்ற சேதி, மின்சார வேகத்தில் அந்த ஜில்லாவின் பட்டி தொட்டிகளெங்கும் பரவலாயிற்று . தோல் பதனிடும், தொழிலாளர்களும், நகர சுத்தித் தொழிலாளர்களும், பொதுமக்களும் போலீஸ் கெடுபிடியையும் மீறித் திரளாகச் சங்கக் கட்டிடத்தின் முன்னால் திரண்டு நின்றனர். அவர்களுள் ஆழ்ந்து கிடந்த துக்கமும், கோபமும் உற்சாகமாகப் பிரவாசித்தது.

தடை செய்யப்பட்டு மூடிச் சீல்வைக்கப்பட்டிருந்த சங்கக் கட்டிடத்தின் முன்னால் மூளியாய் நின்றிருந்த கொடி மரத்தில், தடை செய்யப்பட்ட சங்கக் கொடியைத் தலைவர் இருதயசாமி மனநிறைவுடன் பறக்கவிட்டார். அதைத் தடுக்கும் தைரியம் போலீசுக்கு இல்லை.

கூடிநின்ற தொழிலாளர்கள் ஆர்ப்பரித்தனர்.

கூட்டத்தில் இருந்தவர்களிடம் வக்கீல் சங்கரன் பெயரிலான பிரசுரம் விநியோகம் செய்யப்பட்டது.

அதில் நகர சபைக்கான தேர்தலுக்கு அவர்கள் தயாராகும்படியாக வேண்டுகோள்விடப்பட்டிருந்தது.

அந்தப் பிரசுரத்தில் நகரத்தின் தீட்டாக, நகர வீதிகளில் நடமாடுவதற்குக் கூட அருகதையற்றவனாகக் கருதப்பட்ட அடிமை பஞ்சமன், நகரத் தந்தையாகப் பதவி ஏற்கப்போகும் நாள் வெகு தொலைவில் இல்லை என்கிற வாக்கியங்கள் கொட்டை எழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருந்தது.

பாகம்— 5

1

மாகாண சட்ட சபைக்கு நடை பெற்ற தேர்தலில் ஆளும் கட்சிக்குப் பெரும் பின்னடைவு ஏற்படலாயிற்று. பல அமைச்சர்கள் சாதாரண மனிதர்களிடம் தோற்றுப் போனார்கள்.

பணபலமும், அதிகார பலமும் அவர்களுக்குக் கை கொடுக்கவில்லை. மாறாகத் தடை செய்யப்பட்ட கட்சியின் வேட்பாளர்கள் பலபேர் சிறைக் கூடத்தில் அடைக்கப்பட்டிருந்த போதும் பலபேருடைய தலைக்கு அரசால் விலை வைக்கப்பட்டுத் தலை மறைவு வாழ்க்கை நடத்தியவர்களில் பலபேர் தேர்தலில் அமோகமாக வெற்றி பெற்றனர்.

ஆளும் கட்சியானது மீண்டும் ஆட்சி அமைப்பது என்பது பெரும் பாடாய்ப் போய்விட்டது மிகவும் கேவலமான தந்திரோபயங்களைச் செய்து பசி கொண்ட முதலை, ஆடு கோழிகளை விழுங்குவது போன்று, தேர்தலில் வெற்றி பெற்ற ஊசலாட்ட ஜாதிக் கட்சிகளை விழுங்கி ஏப்பமிட்டு ஜீரணம் செய்த பிறகே தட்டுத் தடுமாறி ஆட்சிக் கட்டிலில் அமர முடிந்தது.

பொதுத்தேர்தலில் ஏற்பட்ட பின்னடைவு காரணமாகவும் ஜனநாயக உரிமை வேண்டி தொழிலாளர்கள் நடத்திய போராட்டம் காரணமாகவும் தடை செய்யப்பட்ட இடது சாரி தொழிற் சங்கங்கள் மீது விதிக்கப்பட்டிருந்த தடை அரசால் நீக்கப்பட்டது. எனவே தடை செய்யப்பட்டிருந்த தொழிலாளர் சங்கங்களும், சம்மேளனங்களும் "பீனிக்ஸ்" பறவையைப் போன்று மீண்டும் புத்துயிர்ப்புப் பெற்று இயங்கத் தொடங்கின.

மகாகவி பாரதியின் உற்ற நண்பரும், தேச பக்தரும், சிறந்த மனிதாபியும், தொழிற்சங்கத் தலைவருமான திரு.சர்க்கரைச்செட்டியாரே மாகாணம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு அடைத்து மூடிச் சீல் வைக்கப்பட்டிருந்த சங்கங்களைத் திறந்து வைத்து அவற்றைச் செயல்பட வைத்தார். அந்தத் திட்டத்தின்படி அந்த நகருக்கு விஜயம் செய்ய சர்க்கரைச்செட்டியார் மூடிச் சீல் வைக்கப்பட்டிருந்த சங்கங்களின் திறவு கோல்களை நகரப் போலீஸிடம் இருந்து பெற்றுத் திறந்து செயல்பட வைத்த தோடல்லாமல், அவர் ஆற்றிய சொற்பொழிவுகள் தொழிலாளர்களுக்கும் பொது மக்களுக்கும் தென்பும், உற்சாகமூமூட்டுவதாக இருந்தன.

சக்கரைச் செட்டியார் தோல் ஷாப்புத் தொழிலாளர் சங்கத்தைத் திறந்து வைத்த நாள் முதல் தொழிலாளர்கள் சங்கத்தை மொய்க்க ஆரம்பித்தனர். தேவசகாயத்தாலும் அவனது போலீஸ் படையினாலும் தொழிலாளர்களை முன்னைப் போல் பயமுறுத்த முடியவில்லை. தேவசகாயத்தை மேலும் அதிர வைத்த சம்பவம் என்னவென்றால் தலைவர் சக்கரைச் செட்டியார் அந்த நகருக்கு விஜயம் செய்துவிட்டுப் போன இரண்டாவது நாளே சகோதரர் தங்கசாமி தலைமையில், தொழிற்சங்கச் சம்மேளத்தின் கூட்டம் நகரத்தின் முக்கிய மைதானமான

காந்தி மைதானத்தில் நடை பெறும் என்றும் நகர சபைக்கான தேர்தலில் தொழிலாளர் அமைப்புக்களின் சார்பில் வார்டுகளில் போட்டியிடும் அபேட்சர்கள் அறிவிக்கப் படுவார்கள் என்கிற அறிவிப்பு வெளியாகியிருந்தது.

இந்த அறிவிப்பானது எஸ்.பி தேவசகாயத்தை மிகவும் கோபமுறச் செய்தது. இவ்வளவு காலம் தலை மறைவு வாழ்க்கை நடத்திய தங்கசாமி, பகிரங்கமாகப் பொதுக் கூட்டத்துக்குத் தலைமை தாங்குவதும், வேட்பாளர்களை அறிமுகப்படுத்துவதும் தனது அதிகாரத்துக்கே விடப்பட்ட சவாலாகத் தேவசகாயம் எடுத்துக் கொண்டு செயல்படலானான்.

சகோதரர் தங்கசாமியைக் கூட்டம் நடைபெறுவதற்கு முன்பாகவே, கைது செய்து வழக்கு ஜோடனை செய்து சிறையில் அடைத்துப் போடுவது என்பது தேவசகாயத்தின் திட்டம்.

கூட்டத்துக்கு அனுமதி கேட்டு மனு கொடுக்க வந்த மினிசாமியையும் சார்லஸையும் காரணமில்லாமல் பிடித்துக் லாக்கப்பில் போட்டதோடு, மனுவையும் கிழித்துக் குப்பைத் தொட்டியில் போட்டான். கூட்டத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

நகரவீதிகளில் காந்தி மைதானத்தில் நடக்கப் போகும் கூட்டம் பற்றி வைக்கப்பட்டிருந்த விளம்பரத்தட்டிகள் போலீஸாரால் அடித்துச் நொறுக்கப்பட்டன. போஸ்டர்கள் கிழித்தெறியப்பட்டன. கூட்டம் பற்றிய நோட்டீஸ்களை விநியோகம் செய்து கொண்டிருந்த தொழிலாளர்கள் போலீஸாரால் நையப்புடைக்கப்பட்டனர். அவர்கள் போலீஸ் வண்டியில் ஏற்றப்பட்டு நகருக்கு வெளியே அத்துவானக் காடுகளில் இறக்கிவிடப்பட்டனர்

தொழிலாளர்களும், பொதுமக்களும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் இருக்க, அவர்களை பீதிப்படுத்தும் வகையில் தொழிலாளர் குடியிருப்புப் பகுதியிலும் உழைப்பாளர் மக்கள் பெரும்பகுதியாக வாழும் இடங்களிலும், குடியிருப்புக்களிலும் போலீஸ் பீட் போடப்பட்டுக் கண்காணிக்கப்பட்டது. பொதுக்கூட்டம் நடைபெறுவதாக இருந்த காந்தி மைதானம் போலீஸ் பார்வையின் கீழ் கொண்டு வரப்பட்டு இரவு பகலாகக் கண்காணிக்கப்பட்டது. வேதாளம் மறுபடியும் முருங்கை மரம் ஏறிய கதையாகத் தேவசகாயத்தின் அட்டூழியம் திரும்பவும் தலை தூக்கலாயிற்று.

கெடு விதிக்கப்பட்ட ஞாயிற்றுக் கிழமை மாலை மயங்கி, பொழுது இரவை நோக்கிச் சஞ்சாரம் செய்யத் தொடங்கிற்று. கூட்டம் நடைபெறப் போகிறது என்பதன் அடையாளமாகக் காந்தி மைதானத்தில் நடுநாயகமாகப் போடப்பட்டிருக்கும் மேஜையில் வைக்கப்பட்டிருக்கும் பெட்ரோமாக்ஸ் விளக்கு நாலா பக்கமும் ஒளியைப் பாய்ச்சி ஒளிர்ந்து கொண்டிருக்கிறது.

மைதானத்தைச் சுற்றிக் கோட்டை மதில் அமைத்தாற் போன்று போலீஸ் வளையம் அமைக்கப்பட்டிருந்தது. தேவசகாயம் தான் வந்த போலீஸ் வண்டியை இருளில் நிறுத்தியபடி இரைக்காகப் பதிபோட்டுக் காத்திருக்கும் வேங்கையாகத் தங்கசாமியின் வரவுக்காகக் காத்திருந்தான்.

இருட்டிச் சரியாக ஏழரை மணியான போது, தலைவர் இருதயசாமி சகிதம் தங்கசாமி காந்தி மைதானத்தில் பிரவேசிக்கிறார். ஒலி பெருக்கி வைப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டதால் மேஜைக்கு அருகில் போடப்பட்டிருக்கும் பெஞ்சின் மேல் ஏறி நின்ற தங்கசாமி ஒசேப்பின் கையில் இருந்த மெகபோனை வாங்கிப் பேச வாரம்பிக்கிறார்.

போலீஸ் வண்டியினின்றும் குதித்து மைதானத்துக்குள் பாயந்த தேவசகாயம்

"ராஸ்கல் ஆரடா நீ. தடை உத்தரவையும் மீறிக் கூட்டம் போறது" என்று அதட்டும் தொனியில் கேட்டான்.

"என்னைத் தெரியலையா மிஸ்டர் தேவசகாயம் ரொம்ப நாளா நீங்க தேடிட்டு இருக்க பிரதர் தங்கசாமி" மிகவும் சாந்தமாகப் பதில் சொன்னார்.

"உன்னை ஆருடா இங்கே கூட்டம் போடச் சொன்னது" கோபமாகக் கேட்டான்.

"மிஸ்டர் எஸ்.பி.கூட்டம் போடறதுக்கு அரசாங்கம் தடை உத்தரவு ஏதும் போடலை. நாங்க ஒன்னண்டை அனுமதி வாங்கிக் கூட்டம் நடத்த வேண்டியதில்லை இது எங்களோட உரிமை."

இப்படி ஒரு பதிலைத் தேவசகயாம் எதிர்பார்க்கவில்லை.

"இத்தனை காலம் ஒழிஞ்சுக்கிட்டு அலைஞ்சு பேமானி அவ்வளவு திமிராடா ஒனக்கு"

தேவசகாயம் கோபம் தாளாமல் பாரம் இழுக்கும் வண்டி மாடு மாதிரி பெரு மூச்சுவிட்டான்.

"நான் மக்கள் மத்தியிலே தான் வேலை செஞ்சிட்டு இருந்தேன். ஒன்னாலே என்னைக் கண்டுபிடிக்க முடியலை. அந்த அளவுக்குக் குருடர்கள் நீயும் உன் இலாகாவும்"

அவனை ஏளனமாகப் பார்த்தபடி தங்கசாமி சொன்னார்

இருதயசாமி மௌனமாகப் பெஞ்சில் உட்கார்ந்து கொண்டிருந்தார். ஒசேப்புக்கும் மற்ற தொழிலாளர்களுக்கும் தேவசகாயத்தின் மீது படுகோபம்.

"அவனைக் கைது செய்யுங்கடா" பக்கத்தில் நின்ற போலீஸ்காரனைப் பார்த்து தேவசகாயம் சொன்னான்.

"மிஸ்டர் தேவசகாயம் என்னைக் கைது செய்யறதுக்கு வாரண்ட் இருக்கா. வாய்ச் சவடால் எல்லாம் பேசடப்படாது, அல்லாமல் நீயோ உன் போலீஸோ என்னை நெருங்க முடியாது." பெஞ்சைவிட்டுக் கீழே இறங்கி நின்ற தங்கசாமி சொன்னார்.

"ராஸ்கல் ஒன்னைய கைது செய்யதுக்கு வாரண்ட் வேணுமோ. தாயழி ஒன்னைய நாயை இழுத்து அடிக்கிறாய் போலே அடிச்சு இழுத்திட்டுப் போரன்பாரு" என்று கர்ஜித்த படியே தங்கசாமியை நோக்கிப் பாய்ந்தான்.

"யாரும் கிட்ட வராதீங்க" என்று ஆத்திரம் ததும்ப நின்ற தொழிலாளர் தோழர்களைப் பார்த்துச் சொன்ன தங்கசாமி தன் வேட்டியை மடித்துக் கட்டினார்.

"வேசை மவன், தைரியமிருந்தா என்னையைக் கைது செய் பார்க்கலாம். இன்னெக்கி நீயா நானான்னு ரெண்டிலே ஒண்ணு பார்த்துப் போடலாம்" என்று குரலை உயர்த்திச் சொன்னபடியே தங்கசாமி தேவசகாயத்தைத் தாக்குவது போல் முன்னேறவும் பயந்து போன தேவசகாயம் ஸ்தம்பித்துப் பின்வாங்கினான்.

மூங்கையாகிப் போன தனது கோபத்தை வெளிக்காட்ட முடியாமல் தங்கசாமியையும் அங்கே நின்றவர்களையும் முறைத்துப் பார்த்தான். அவமானப் பட்டுப்பேன வாய்க்குள்ளேயே தங்கசாமியை வைதவாறே தனது போலீஸ்

பட்டாளத்துடன் மைதானத்தைவிட்டு வெளியேறினான். தங்கசாமி எதிர் பார்த்தது போல் தேவசகாயம் ஏனோ, தடியடி ஏதும் நடத்தவில்லை. தங்கசாமி மீது வாரண்ட் வழக்கு ஏதும் கிடையாது என்று தலைவர் சர்க்கரைச்செட்டியார் சொன்ன தகவல் உறுதி செய்யப்பட்டது. ஒசேப்பும் மற்றவர்களும் தங்கசாமி இவ்வளவு தைரியமாகச் செயல்படுவார் என்று எதிர்பார்க்கவில்லை.

இவ்வளவு நேரமும் போலீஸ் வளையத்துக்கு வெளியே நின்ற வண்ணம் என்ன நடக்குமோ ஏது நடக்குமோ என்கிற பீதியுடன் நின்ற மக்கள் கூட்டம் மைதானத்தை நோக்கி வந்தது. அவர்களுக்குப் புதுத்தெம்பு ஏற்பட்டிருந்தது

தங்கசாமி திரும்பவும் பெஞ்சின் மீது ஏறி நின்று பொதுக்கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார். தலைவர்கள் பேசியதற்குப் பிறகு இருதயசாமி சங்கத்தின் சார்பில் நகர சபைக்கான தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிமுகப்படுத்தினார்.

அந்த அறிமுகம் நகரசபை அரங்கைப் புதியதோர் சக்தி அலங்கரிக்கப் போவதன் தொடக்க நிகழ்ச்சியாக இருந்தது.

●

2

அன்றைய சம்பவத்துக்குப் பிறகு சகோதரர் தங்கசாமி வெளிப்படையாகவே செயல்படத் தொடங்கினார். அந்தச் சம்பவத்திற்குப் பிறகு தேவசகாயம் நகரத்தில் நடைபெறும் பொதுக் கூட்டங்கள், ஊர்வலங்கள், ஆர்பாட்டங்கள் ஆகியவற்றை முரட்டுத் தனமாகத் தடுக்க முற்படுவதைக் குறைத்துக் கொண்டான்.

சங்கரன் மீது சதி வழக்கும் வாரண்டும் இருப்பதால், அவரைப் பிடிப்பதற்கும் கைது செய்வதற்கும் வேண்டி போலீஸ் நாயாகப் பேயாக அலைந்தது. இதை எல்லாம் பொருட்படுத்தாத மட்டில் சங்கரன், நகர சபைத் தேர்தலில் ஆளும் கட்சிக்கு எதிரான ஜனநாயக அணியை உருவாக்குவதிலும், பயன்படுத்துவதிலும் மும்முரமாக ஈடுபட்டிருந்தார். சங்கரன் தலைமறைவு வாழ்க்கை நடத்திய போதும், நகரத்தில் உள்ள இடது சாரி ஜனநாயக எண்ணம் கொண்ட பிரமுகர்களையும் கட்சிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்துக் குறைந்த பட்ச செயல் முறையை வகுத்து ஆளும் கட்சிக்கெதிரான ஜனநாயகம் முற்போக்கு அணியை உருவாக்கினார். அந்தத் திட்டத்தின்படி நகர சபைக்கான தேர்தலில் ஒவ்வொரு வார்டிலும் வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டனர். ஆளும் கட்சி இப்படி ஒரு சவாலை எதிர் பார்க்கவில்லை.

ஆளும் கட்சியைப் பொறுத்தமட்டில் நகர சபைக்கான தேர்தலில் கால்வைத்திருக்கும் இடது சாரி சக்திகளை முளையிலேயே கிள்ளி அழித்துவிட வேண்டும் என்கிற ஆத்திரத்தோடு செயல்படலாயிற்று. மேலும், நகரசபையில் தனக்கு ஏற்பட்டிருக்கும் அதிகாரத்தையும் அதிகார பலத்தையும் இழந்துவிடக்கூடாது என்கிற வெறி.

எனவே, நகரத்தின் பெரும் புள்ளியும் செல்வந்தரும் பெருவாரியான ஜாதியின் முக்கியஸ்தருமான நாராயண மூர்த்தியா பிள்ளையிடம் நகரசபைக்கான தேர்தல் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. நாராயண மூர்த்தியா பிள்ளை இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு தனது பினாமியும் மைத்துனருமான சுந்தரமூர்த்திபிள்ளையை நகரசபைத் தலைவராக்கி நகரசபையின் அதிகாரம் தன் கையில் இருக்க வேண்டும் என்று அவரை நகரத்தின் ஒன்றாவது வார்டில் வேட்பாளராகப் போட்டியிட வைத்தார். நகரத்தின் ஒன்றாவது வார்டு பிள்ளைமார்களையும். அக்ரகாரத்துக் காரர்களையும் பெருவாரியாகக் கொண்ட வார்டு என்பதால் மைத்துனர் சுலபத்தில் வெற்றி பெற்று விடுவார் என்பது நாராயண மூர்த்தியா பிள்ளையின் கணிப்பு.

நாராயண மூர்த்தியா பிள்ளை மிகவும் சாதுரியமான லேவாதேவிக்காரர் என்பதால் மிகவும் கெட்டிக்காரத் தனத்தோடு அரசியல் சதுரங்கத்தில் காய்களை நகர்த்தலானார். நகரத்தில் உள்ள ஒவ்வொரு வார்டிலும் எந்த ஜாதி, மார்க்கத்தார் மெஜாரிட்டியாக இருக்கிறார்கள் என்பதைத் துல்லியமாகக் கணக்கெடுத்து அந்த ஜாதியின் முக்கியப் பிரமுகர்களை வேட்பாளர்களாக நிறுத்தி வைத்தார். அவர்களுக்கு ஆளும் கட்சியின் சின்னம் கொடுக்கப்பட்டது. வேற்று ஜாதியிலிருந்து மறுப்பு ஏதும் ஏற்படாவண்ணம் பார்த்துக்கொள்ளப்பட்டது.

ஆளும் கட்சியில் அங்கம் வகித்த இதர ஜாதிப் பிரமுகர்களுக்கு, நகரசபை அதிகாரம் நாராயண மூர்த்தியா பிள்ளையிடம் போவது பிடிக்கவில்லை. எப்போதும், ஜமீன்தாரும் மாஜி ஜில்லா போர்டு தலைவருமான வீரபத்திர நாயுடுவுக்கும் நாராயண மூர்த்தியா பிள்ளைக்கும் ஒரு சீத யுத்தம் நடந்து கொண்டிருக்கும். ஜாதி அபிமானம் படைத்த நாராயண மூர்த்தியாபிள்ளை மறைமுகமாக முஸ்லீம்களை ஒதுக்கிவைத்திருந்ததால் தோல்ஷாப்பு முதலாளி சங்கத்தின் தலைவர் மக்தூண் மைதீன் தலைமையில் அணிவகுத்து நின்ற அதிருப்தி முஸ்லீம் பிரமுகர்கள் வீரபத்திர நாயுடுவுடன் அணி சேர்ந்து கொண்டு, கட்சியின் அதிகாரப் பூர்வமான வேட்பாளர்களை எதிர்க்கலாயினர்.

எதிர் கோஷ்டியினர் பிரதிநிதிகள் ஒவ்வொரு வார்டிலும் நிறுத்தப்பட்டு வேலை மும்முரமாக நடைபெறலாயிற்று. ஆளும் கட்சியினருக்குள் ஏற்பட்டிருக்கும் இந்த கோஷ்டிப் பூசலைச் சரி செய்துச் சமரசம் செய்துவிட வேண்டும் என்று மேலிடத்திலிருந்து பெரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அரசியல் சாணக்கியனான வீரபத்திர நாயுடு, பாம்புக்குத் தலையையும் மீனுக்கு வாலையும் காட்டுவது போல், கோஷ்டியே இல்லாதது போல் நாடகமாடி, அதிகாரப் பூர்வமான வேட்பாளர்களைத் தோற்கடிப்பதற்காக எல்லா ஏற்பாடுகளையும் மறைமுகமாகக் செய்து கொண்டிருந்தார். இரு கோஷ்டியினராலும் பணம் தண்ணீராகச் செலவிடப்பட்டது. இரு கோஷ்டியினரும் எதிர் கோஷ்டியினரின் ஊழலையும், தில்லு முல்லுகளையும் கூட்டம் போட்டு அம்பலப்படுத்தியதால், ஆளும் கட்சியின் நாணயமும், மானமும் நடு வீதியில் நண்டுக்குடுவையை நடுவீதியில் போட்டு உடைத்தது மாதிரி மூக்கைப் பிடிக்கும் அளவுக்கு நாற்றமடிக்கலாயிற்று. மக்களுக்கு ஆளும் கட்சியின்பால் நம்பிக்கை இற்றுக் கொண்டிருந்தது.

ஜனநாயக முற்போக்கு அணியின் வேட்பாளர்கள் ஒவ்வொரு நாளும் தெருவில் நின்று உண்டியல் ஏந்தித் தேர்தல் செலவுகளைப் பார்க்க வேண்டியிருந்தது. அவர்களுக்கு எதிராக ஜாதி வெறியும், மத வெறியும் தூண்டிவிடப்பட்டிருந்தது.

கத்தோலிக்க மதகுருமார்கள், கச்சையை வரிந்து கட்டிக் கொண்டு, முற்போக்கு அணி வேட்பாளர்களைத் தோற்கடிப்பதில் மும்முரமாக ஈடுபடலாயினர். ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் தேவாலயங்களில் நடைபெறும் பிரார்த்தனையின் போதும், சங்கரன் தலைமையில் இயங்கும் சங்கங்களில் அங்கம் வகிப்பவர்கள், அந்திக் கிறிஸ்தவர்கள் சைத்தானின் மைந்தர்கள் என்றும், அந்தச் சங்கங்களில் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு வாக்களிப்பது தேவனுக்கும், பரத்துக்கும் எதிராகச் செய்யும் பாவம் என்றனர். அந்தப் பாவிகளின் வெற்றிக்காக யாராவது செயல் படுகிறார்கள் என்று கேள்விப்பட்டால் அவர்கள் மதப்பிரஸ்தம் செய்யப்படுவார்கள் என்று தேவமைந்தன் பெயரால் மிரட்டப்பட்டனர்.

மசூதிகளும் இதற்கு விலக்காக இருக்கவில்லை. சங்கரனது கட்சிக்கார வேட்பாளர்களுக்கு வாக்களிப்பதானது இஸ்லாத்துக்கும், மார்க்கத்துக்கும் எதிரான செயல் என்றும், ஹராம் என்றும் ஓதப்பட்டு அவதூறு அள்ளித் தெளிக்கப்பட்டது.

இவ்வளவு எதிர்ப்புக்கும் மத்தியில் நகரசபைக்கான தேர்தல் முடிவுகள் வெளியான போது நகர மக்களே ஆச்சரியப்பட்டுப் போனார்கள். ஆளும் கட்சி வேட்பாளர்கள் அநியாயமாகத் தோற்கடிக்கப்பட்டனர். மாறாக ஜனநாயக முற் போக்குக் கூட்டணி வேட்பாளர்கள் பெருவாரியான வாக்குகள் பெற்று நகரசபை அதிகாரத்தைக் கைப்பற்றும்

அளவுக்குப் பெருவாரியாக வெற்றி பெற்ற தாக அறிவிக்கப்பட்டது.

நகரசபைக்கான தேர்தல் முடிவுகள் வெளியான மூன்றாவது நாள் ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் கண்வீனரான தோழர் சங்கரன் பெயரில் அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது.

அந்த அறிக்கையில் தோல் பதனிடும் தொழிலாளர் சங்கத்தின் முக்கிய ஊழியரும், எட்டாவது வார்டு நகரசபை உறுப்பினருமான தோழர் ஒசேப்பு என்கிற யோசேப்பு நகர சபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் படுவார் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

3

அது கிறிஸ்தவ மக்களுக்கான விசேஷமான ஞாயிற்றுக் கிழமை.

கர்த்தராகிய ஏசுபிரான் புத்துயிர்ப்புப் பெற்று பக்தர்களுக்குத் தரிசனம் கொடுத்த, கிறிஸ்தவ மக்களுக்கான ஈஸ்டர் ஞாயிற்றுக் கிழமை.

முன்னைப்போல அல்லாமல் இப்போது ஈஸ்டர் பண்டிகையை முன்னிட்டு, நகரத்தின் எல்லாத் தொழிற் சாலைகளுக்கும் விடுமுறை. கிறிஸ்தவ மகா ஜனங்கள் புத்தாடை புனைந்து, வெகு காலைப் பொழுதிலேயே பிரார்த்தனைக்காக நகரத்தின் தேவாலயங்களில் முழங்காலில் நின்று தேவ தேவனிடம் பாவ மன்னிப்புக் கேட்டு ஜெபம் செய்தவண்ணமிருக்கின்றனர்.

கடந்த இரண்டு ஆண்டுகாலமாக அரசால் தடை விதிக்கப்பட்டுக் கிடந்த தோல்பதனிடும் தொழிலாளர் சங்கம் தடை நீங்கப்பட்டுத் திரும்பவும் சங்கம் செயல்படத் தொடங்கிய நாள் முதலாகத் தேன் கூட்டைப் போன்று, தொழிலாளர்கள் சங்கக் கட்டிடத்தை மொய்த்துக் கொண்டிருக்கின்றனர்.

சங்கத்தின் வளர்ச்சிக்காகவும், மாநாட்டுச் செலவுகளுக்காகவும் வேண்டி, ஒவ்வொரு தொழிலாளியும், தங்களின் ஈஸ்டர் பண்டிகை போனசில் பாதித் தொகையை நன்கொடையாக அளித்திருக்கின்றனர்.

கடந்த மூன்று தினங்களாகச் சென்னை மாகாண தோல் பதனிடும் தொழிலாளர் அமைப்புக்களின் சம்மேளன மகாநாடு, சங்கக் கட்டிடத்தில் விமரிசையாக நடந்து கொண்டிருக்கிறது. மாகாணம் முழுவதுமிருந்து பிரதிநிதிகள் அந்த மகாநாட்டில் கலந்து கொண்டிருக்கின்றனர்.

மாநாட்டை ஒட்டி, நகரமே விழாக் கோலம் பூண்டது மாதிரி, நகரத்தின் முக்கிய வீதிகளிலும், பொது இடங்களிலும் தட்டிகளும், போஸ்டர்களும் வைத்துப் பிரகடனப்படுத்தப் பட்டிருக்கிறது. ஆங்காங்கே, முக்கிய இடங்களில் கொடிக்கம்பங்கள் நாட்டப்பட்டு, சங்கத்தின் சின்னம் பொறிக்கப்பட்ட பதாகைகள் பட்டத்து யானைகள் செவியசைத்து நிற்பது போல் கம்பீரமாகப் பட்டொளி வீசிப் பறக்கவிடப் பட்டிருக்கின்றன.

எஸ்.பி.தேவசகாயத்தைப் பொறுத்தமட்டில், பதவி உயர்வு மறுக்கப்பட்டதாலும் கண்டனத்துக்கு உட்படுத்தப் பட்டதாலும் முன்னைப் போல் தனது அடக்குமுறை தர்பாரைத் தொடர முடியவில்லை. இருந்த போதும், போலீஸ் பாதுகாப்பையும், உளவு வளையத்தையும் உஷார் படுத்தியிருந்த காரணத்தால் நகரமெங்கும் உளவாளிகள் உதிர வாடை தேடி அலையும் ஓநாய்களாக நகர வீதிகளில் அலைந்து கொண்டிருந்தனர். தொழிலாளர்களைப் பீதிப்படுத்தும் உபாயமாகத் தொழிலாளர் குடியிருப்புக்களிலும், முக்கிய வீதிகளிலும் போலீஸ் பாரா போடப்பட்டிருக்கிறது. தேவசகாயத்துக்கு எப்படியாவது சங்கரனைப் பிடித்து விட வேண்டும் என்கிற நப்பாசை

மூன்று நாட்களாக நடைபெறும் மாநாடு. அன்று பிற்பகலோடு முடிவடைகிறது. மாநாட்டுப்பொதுக் கூட்டம் மலைக்கோட்டையை ஒட்டிய பேரேடு மைதானத்தில் நடைபெறுகிறது மாநாட்டு ஊர்வலம் சங்கத்திடலில் நடைபெறும். தொழிலாளர் அணிவகுப்புடன் ஆரம்பமாகி நகரத்தின் முக்கிய வீதிகள் வழியாகப் பேரேடு மைதானத்தில் சங்கமிக்கிறது. எனவே, ஊர்வலம் போகும் வீதிகள்

அனைத்தும், கொடிகளாலும், தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன.

மாநாட்டுத் தலைமைக் குழுவுக்குத் தலைமை தாங்கியிருந்த இருதயசாமி, சங்கரனின் வாழ்த்துச் செய்தியைப் பிரதிநிதிகளிடை வாசித்த கையோடு, தலைமைப் பொறுப்பைச் சட்டமன்ற உறுப்பினர் தோழர் வேலாயுதத்திடம் ஒப்படைத்துவிட்டு, பிற்பகல் நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காகவும் கங்காணிப்பதற்காகவும் சங்கக் கட்டிடத்தின் முன் பகுதிக்கு வந்து சேர்ந்தார். சங்கரனது வாழ்த்தைப் பிரதிநிதிகள் மத்தியில் வாசித்த போது, உண்மையில் அவர் மனம் பேதலித்தது. தனது நடவடிக்கைகள் அத்தனைக்கும் பக்கத்துணையும், பாதுகாவலாகவும் நின்று, வழிகாட்டிய சங்கரன் அருகில் இல்லாது தனிமையில் விடப்பட்டதே போன்ற வெறுமை. இனம் தெரியாத துக்கம். அவர் வெளிப்படையாகச் செயல்பட முடியவில்லை என்கிற மன உளைச்சல்; எனவேதான், தன்னுள் மூண்டெழுந்த வெறுமை நிறைந்த துக்கத்தை வெளிக்காட்டிக் கொள்ளவிரும்பாத இருதயசாமி, பிற்பகல் நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தும் சாக்கில் மாநாட்டை விட்டு வெளியே வந்து வராந்தாவில் அமர்ந்தார். சங்கத்திடலை ஏறிட்டுப் பார்க்கிறார். திடலில் மட்டுமல்ல, திடலைச் சுற்றியிருக்கும் தொழிலாளர் குடியிருப்புத் தெருக்களிலும், தோரணங்கள் கட்டி அலங்கரிக்கப் பட்டிருக்கிறது.

அல்லாமலும் பிற்பகல் நடைபெறும் ஊர்வலத்தையும், பேரேடு மைதானத்தில் நடைபெறும் பொதுக் கூட்டத்தையும், இயற்கை குலைத்துவிடக்கூடாது, ஒத்துழைக்க வேண்டும் என்று அவருக்குக் கவலை. ஏனெனில் பெரும் சிரமம் எடுத்துக் கொண்டு ஊர்வலத்துக்கும், கூட்டத்துக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காலையில் இருந்தே இயற்கைக்கு ஜலதோஷம் பிடித்துக் கொண்டதுமாதிரி வானமண்டலம் மப்பும் மந்தாரமுமாக

இருப்பதோடு அவ்வப்போது சிறுமலையினின்று வீசும் ஊதைக்காற்றுடன் தூறலும் வந்து போகிறது. காற்றில் ஈரப்பசை கலந்திருப்பதால் காற்றில், தோல் ஷாப்புக் கழிவுகளின் துர்கந்தமும், நிணவாடையும் கலந்திருக்கிறது. இருதயசாமியைப் பொறுத்த மட்டில் பழகிப் போன பரிமளகந்தம்.

மப்பும் மந்தாரமுமாக இருக்கும் கீழ்வானப் பரப்பில் மேகம் திரண்டு பெருமழையாக உருவெடுத்து விடக்கூடாது என்கிற கவலையோடு கிழக்கே தெரியும் சிறுமலைக் குன்றுகளை இருதயசாமி ஏறிட்டுப் பார்க்கிறார். சிறுமலைக் குன்றுகள் மீது மேகக்கூட்டமும், மஞ்சுப்பனி மூட்டமும் கவிந்துவிட்டதென்றால், நகர எல்லைவரையிலும், அதற்கப்பாலும், கோட்டைகட்டினாற் போன்று கரு மேகம் சூழ்ந்து பெரும்மழையாக வர்ஷிப்பதோடு, இரவு முழுவதும் சவலைப்பிள்ளையாக அழுது தீர்த்துவிடும். எனவே, கீழ்வானப் பகுதியில் மழை வருவதற்கான அறிகுறி தென்படுகிறதா. என்று கணிக்கும் வகையில் பார்த்த போது, மலைக்குன்றுகளின் சிரசில் கீரிடம் தறித்த மாதிரி படிந்து கிடக்கும் மஞ்சு மூட்டமும் சஞ்சாரம் செய்யும் மேகத்திரளும் தென்படவில்லை. மேகம் கருக் கொள்வதற்கான லட்சணம் ஏதும் தென்படவில்லை. சிறிது நேரத்தில் கீழ்வானம் வெளிவாங்கிப் போகும். கிழக்குத் திக்கிலிருந்து மழை வர்ஷிப்பதற்கான குறிப்புக்கள் ஏதும் தென்படவில்லை.

மேற்கு திக்கைப் பார்க்கிறார். தொடுவானத்தோடு சங்கமித்திருக்கும் மேற்கு மலைத் தொடர்களின் பின்னணியில் கும்பினியாளை எதிர்த்துச் சமர்புரிவதற்கான வியூகம் அமைக்க கட்டபொம்மன் வாரிசுகளுக்கும் மருது சகோதரர்களுக்கும் அடைக்கலம் அளித்த மலைக் கோட்டை, சரித்திர உண்மைகளை யெல்லாம் தன்னுள் அடைகாத்த வண்ணம் மௌன சாட்சியாகப் படுத்துக் கிடக்கிறது. கோட்டை உச்சியில் தென்படும் மாரியம்மன் கோபுரத்துக்கு மேலாக நேர்த்திகடனை நிறைவேற்ற அங்கப்பிரதிஷ்டை செய்யும் பக்தர்களைப் போல் வானப்

பரப்பில் கருடன்கள் தட்டாமாலை ஆடிக் கொண்டிருக்கின்றன. வானப்பரப்பு சலனமற்றுத் தென்படுகிறது.

வானம் சதி செய்யப் போவதில்லை என்கிற திருப்தியோடு மீண்டும் மைதானத்தை அவர் பார்த்த போது அமைதியைக் குலைத்துக் கொண்டு எழுந்த மணிக்கூண்டு வளவனார் தேவாலய மணியின் நாதம் மலைக்கோட்டையில் பட்டு மைதானத்தில் எதிரொளிக்கிறது.

மைதானத்தில் நிரம்பி வழிந்த மணி நாதம் இருதயசாமியின் இதயச் சரளங்களில் பட்டுத் தெறித்த போது, அவரது உள்ளத்தின் ஓரத்தில் உறைந்துகிடந்த அந்தச் சம்பவம் உயிர் பெற்று நினைப்புக்கு வருகிறது.

இது போன்ற ஒரு ஈஸ்டர் ஞாயிற்றுக் கிழமை பைபிளும் கையுமாக மதுரை போகும் ரஸ்தாவில் நடந்து போகையில், அஸன் ராவுத்தர் தோல் ஷாப்பின் முகப்பில் அவர் கண்ட இதயத்தைப் பிழியும் சம்பவம் அவரது நினைப்புக்கு வருகிறது. இன்று அந்தச் சம்பவம் உள்ளில் பசுமையாக உயிர்த்தெழுந்து நிற்கிறது.

அன்று அவர் பக்தி விசுவாசம் மிக்க கத்தோலிக்கக் கிறிஸ்தவர், கர்த்தராகிய ஏசுவானவர் உயிர்த்தெழுந்த நன்நாளில், அந்த வாலிபன், கல்தூணில் பிணைக்கப்பட்டு, தோல் ஷாப்பு உடைமைகளின் அடியாட்களால் கசையடிக்கு உட்படுத்தப்பட்ட கொடுமை அவரை அறியாமலேயே, உலக ரட்சகனாகிய யோசேப்பின் மகனான நசரேயனுக்கு இழைக்கப்பட்ட கொடுமையினும் கொடியதாகப்பட்டது.

அந்தக் கொடுங்கரங்களினின்றும், அவனை மீட்பதற்காக அவர் நடத்திய போராட்டம் பின் ஒரு சமுதாயத்தின் அடிமைத் தளைகளையும் அடிமை சாசனங்களையும் அறுத்தெறிவதற்கான இயக்கமாகப் பரிணாமம் பெற்று, ஒரு வர்க்கத்தின் மீட்சிக்கான

போராட்டமாக உருப்பெற்று பரிணமித்திருக்கிறது. அந்த நெடும் பயணம் பற்றிய சம்பவங்கள் ஒன்றன் பின் ஒன்றாக அவர் நினைவில் படிகின்றன.

அம்மக்களின் இழிநிலையைப் போக்குவதற்காகவும், உரிமையை நிலைநாட்டுவதற்காகவும் வேண்டி, தலைவர் சங்கரனது தலைமையில் அவர்கள் நடத்திய உரிமைச் சமர்கள், அனுபவித்திருக்கும் இன்னல்கள், சிறைக் கொடுமைகள் உயிர்ச் சேதங்கள். இழப்புக்கள் ஒவ்வொன்றும் இருதயசாமியின் மனக்கண் முன்பு நிழல்களாகவும் நிஜங்களாகவும் வந்து போனபோது இதயத்தின் ஆழத்தில் விறுவட்டன் முள் தைத்து விட்டது போன்ற வேதனை.

நினைவு படுத்திப் பார்க்கையில் அந்த இன்னல்களையும், சிரமங்களையும் ஏற்றுக் கொண்டதிலும், சகித்துக் கொண்டதிலும் ஒரு மன திருப்தியும் பெருமிதமும் தட்டுப் படுகிறது. அவரும் அவர்களும் அனுபவித்த இன்னல்கள் நடத்திய போராட்டங்கள் விழலுக்கிறைத்த நீராக நீத்துப் போய்விடவில்லை.

அந்த மக்களின் வாடை தட்டுப்பட்டாலே, காற்றும் ஊரும் தீட்டுபட்டுப் போகும் என்று நகர எல்லைக்கப்பால் ஒதுக்கப்பட்ட தீண்டப்படாதவர்களாக நடத்தப்பட்ட அந்தப் பஞ்சம மக்கள்பால் அனுஷ்டிக்கப்பட்ட சனாதன மதிலும் வளையமும் தளர்ந்து தகர்ந்து நகர்ந்து போய்க் கொண்டிருக்கிறது.

கசையடிக்காட்படுத்தப்பட்ட அடிமை ஓசேப்பை நகர மக்கள், நகர சபையின் தலைவராகத் தேர்வு செய்யப் போகிறார்கள் இருந்த போதும், அவர்கள் எதிர்கொள்ள வேண்டிய தடைகள், தாண்ட வேண்டிய சவால்கள் மலைப்பூட்டும் மதில்களாகவும் மலைகளாகவும் நிற்கின்றன திகைப்பூட்டுவனவாகப் படுகின்றன.

அவர்கள் நடந்து வந்த பாதை முழுவதும் ஏற்பட்ட தடைகளையும், தளைகளையும் சவால்களையும் எதி

கொண்டபோது, போராட்டங்களுக்கெல்லாம் தலைமை தாங்கி பக்கத்துணையும், பாதுகாவலனுமாக நின்று வழிகாட்டிய சாரதியான தோழர் சங்கரன், அந்த மாநாட்டில் வெளிப்படையாகக் கலந்து கொள்ள முடியாமையை எண்ணிப் பார்த்த போது இருதயசாமியின் உள்ளில் இனம் தெரியாத வேதனை. தோல் ஷாப்புத் தொழிலாளர்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் நீங்காத இடம் பெற்றிருக்கும் சங்கரனை வெளிப்படையாகச் செயல்பட விடாமல் தடுத்திருக்கும் அரசின் சதிச்செயல்கள் அம்மக்களின் உள்ளத்தில் நீறு பூத்த நெருப்பாகக் கனன்று கொண்டிருக்கிறது. அது எந்த நேரத்திலும் எரிமலையாக வெடிக்கலாம். மக்களின் மனப்போக்கை அறியாது, தேவசகாயத்தின் போலீசும் உளவுத்துறையும் சங்கரனைக் கைது செய்து சிறையில் அடைப்பதற்காக வேட்டை நாய்களாக வெறி கொண்டு அலைந்து கொண்டிருக்கின்றனர்.

சங்கரன் கலந்திருக்கும் அரசியல் இயக்கத்தையும் அவர்கள் தலைமையில் இயங்கிய வெகுஜன அமைப்புக் களையும், தேச விரோத சக்திகள் என்று ஆளும் அரசு தடை விதித்தது. செயல்பட விடாமல் மறித்துப் பார்த்தது. ஆனால் மக்கள் அவர்களை மறுதலிக்கவில்லை; மறந்துவிடவில்லை. தடை செய்யப்பட்ட அரசியல் இயக்கம் இப்போது மாகாண சட்ட சபையில் பிரதான எதிர்கட்சி, வெறிகொண்ட மிருகத்தைப் பிணைப்பது போல், விலங்காலும், சங்கிலிகளாலும் பிணைக்கப்பட்டு, நகர வீதிகளிலெல்லாம் இழுத்துவரப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்ட தோழர் வேலாயுதம் அந்தத் தொகுதியின் சட்ட மன்ற உறுப்பினர் மட்டுமல்ல. சட்டசபை எதிர்கட்சியின் உப-தலைவருமாவார்.

இவ்வளவுக்குப் பிறகும், மழைவிட்டும் தூவானம் விடவில்லை என்கிற மட்டில், தலைமறைவாக இருக்கும் தலைவர்கள் மீது போடப்பட்டிருக்கும் பொய் வழக்குகள் வாபஸ் பெறப்படவில்லை. அவர்கள் பால் பிறப்பிக்கப்பட்டிருக்கும் அரஸ்ட் வாரண்டுகளும் ரத்துச் செய்யப்படவில்லை. அரசு கடைப்பிடிக்கும் பழிவாங்கும் போக்கைக் கண்டித்து ஜனநாயக

அமைப்புக்களும் பத்திரிகைகளும் எழுப்பும் கண்டனங்களும், அரசைப் பொறுத்த மட்டில் செவிடன் காதில் ஊதப்பட்ட சங்கொலியாகவே இருக்கின்றன. இவற்றையெல்லாம் நினைவு படுத்திப் பார்த்த இருதயசாமி மனச்சுமை தாங்க மாட்டாமல் பெருமூச்செறிந்தார். மனதுள் வெறுப்புக்கலந்த கோபம்.

திடீர் என்று ஏற்பட்ட தாரை தப்பட்டை ஓசை கேட்டு, சுய நினைவு தட்டியது. இருதயசாமி ஏறிட்டுப் பார்த்தபோது ஊர்வலத்தில் கலந்து கொள்வதற்காகத் தொழிலாளர்கள் மைதானத்தில் குவிந்து கொண்டிருக்கிறார்கள். சேரிகளிலிருந்து தொழிலாளர்கள், தாரை தப்பட்டைகளுடன், வேட தாரிகளாகவும் மைதானத்துக்கு வந்து கொண்டிருக் கிறார்கள்.

சந்தனத் தேவரும், மினிசாமியும், மற்ற ஊழியர்களும், ஊர்வலத்துக்காக வேண்டி, தொழிலாளர்களை ஒழுங்கு படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

இருக்கையினின்றும் இருதயசாமி எழுந்து நின்ற போது, தாயம்மாள் ஒரு சிறுவனைக் கையில் பிடித்த வண்ணம் படியேறி வந்து வணக்கம் சொன்னாள். இருதயசாமி ஒன்றும் பேசாமல் மௌனமாகக் குழந்தையைப் பார்த்தபோது

"என்ன பாக்கிறீய தலைவரே, மகன் புள்ளே பேரன் இவுகளைத் தான் நீங்க ஒண்ணாச் சேத்துவைக்க மாட்டீய" என்று அவர் முகத்தைப் பார்த்துச் சொல்லிவிட்டபடி இறங்கிப் போனாள்.

"அருக்காணியோட பிடிவாதம் கிழவிக்கு எங்கே புரியப் போவுது" இருதயசாமி தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டார். இதற்குள் மாநாட்டுப் பிரதிநிதிகள் மைதானத்தை நோக்கி அணி வகுத்து வந்த தொண்டர் படையினருடன் கொடிக் கம்பத்தை ஒட்டி வந்து நின்றார்கள்.

பிரதிநிதிகள் கூட்டம் முடிந்து வெளியே வந்த தங்கசாமி "நேரமாயிட்டுப் போரது ஊர்வலத்தை ஆரம்பிச்சிடலாம்" என்றுள சொல்லவும் இருதயசாமி சங்கக் கட்டிடத்தின் தலைப்பில் வந்து நின்றார்

சம்மேளனத்தின் செயலாளராகத் தேர்வு செய்யப்பட்ட தோழர் சாமியார் தங்கசாமியும், ஒசேப்பும் முன் செல்ல, இருதய சாமியும், தோழர் வேலாயுதமும், கொடிக் கம்பத்தை நோக்கி நடந்து போனார்கள்.

இருதயசாமி கொடிக் கம்பத்தில் சங்கத்தின் சின்னம் பொறிக்கப்பட்ட கொடியைப் பறக்கவிட்டு மாநாட்டு ஊர்வலத்தைத் தொடங்கி வைக்க வேண்டும்.

மைதானத்தில் குழுமி நின்ற அத்தனை பேர்களுடைய பார்வை கொடிக்கம்பத்தின் பாலும், தலைவர் இருதயசாமியின் பாலும் திரும்பியிருந்தது.

மைதானத்தில் நிலவும் அமைதியைக் குலைத்துக் கொண்டு அந்தக் குரல் ஏகாந்தமாக ஒலித்தது.

"எங்க தலைவர் சங்கரன் எங்கே, பதில் சொல்லிட்டுக் கொடியேத்து தலைவரே"

திடலின் நடுவில் தள்ளாடிய வண்ணம் நின்று ஓய்வு பெற்ற தோல்ஷாப்புத் தொழிலாளி சிங்காரம் குரல் கொடுக்கிறான்.

சிங்காரம் சங்கத்தின்பால் மிகவும் விசுவாசம் கொண்ட தொழிலாளி, வழக்கம் போல அவன் குடித்திருக்க வேண்டும்.

தோல்ஷாப்புத் தொழில் அவனது அங்கங்களை அழித்து, உடம்பில் ஏற்படுத்தியிருக்கும் ரணங்களின் வேதனையை மறைப்பதற்காகக் குடித்திருக்கிறான். தொழுநோயாளி போல் அவலட்சணமாக காட்சி தருகிறான்.தோல்ஷாப்பு உடைமைகள் அவனது உழைப்பையும் உதிரத்தையும் உறிஞ்சி சக்கையாகத் துப்பியிருக்கிறது.

சிங்காரம் குடித்துவிட்டான் என்றால் அழுக்கேறி அரைக்கால் சட்டையும், தோளில் சங்கத்தின் கொடியுமாக நகர வீதிகளில் எல்லாம் பிணம் ஊர்வலம் வருவது போல்

கோஷித்துக் கொண்டு ஊர்ந்து போவான். தெருவின் நடுவில் நின்று கோஷம் வைப்பான். பைத்தியக்காரனைப் போல் அதிகாரவர்க்கத்தைத் தட்டிக்கொண்டு கடந்து போவான். அவனை யாரும் தடுக்க முடியாது.

துண்டு பாய் சிங்காரத்தைக் கூட்டத்திலிருந்து அப்புறப்படுத்தப் போன போது இருதயசாமி கையமர்த்தி அவரைத் தடுத்தார்.

சிங்காரம் தள்ளாடிய படியே நின்று திரும்பவும் அதே கேள்வியைக் கேட்டான்.

இருதயசாமி சிங்காரத்தையும் ஊர்வலத்துக்காக அணிவகுத்து நிற்கும் தொழிலாளர் அனைவரையும் பார்க்கிறார். அவர்கள் அத்தனை பேர் பார்வையிலும் சிங்காரம் எழுப்பிய கேள்விக்குறி தென்படுவதை அவர் பார்க்கிறார். உணருகிறார்.

"தலைவர் சங்கரன் மேலே அரசு பிடிவாரண்டு போட்டிருக்கு" ஒசேப்பு சிங்காரத்தைப் பார்த்துச் சொன்னான்.

கூட்டத்தாரின் எதிர்பார்ப்பும் தவிப்பும் பெருமூச்சாக அதிர்ந்தது.

"புடி வாரண்டு என்னய்யா மசிரு புடி வாரண்டு. வரச் சொல்லுய்யா தலைவரை, தாயழி ஆர் புடிக்க வாரானெண்டு பாப்பம். எகிறிப்போடும்" சவால் விடுபவன் போல் சொன்னவன் ஒருவித வெறுப்புணர்வுடன் அவர்களைப் பார்த்தான்.

அவனை யாரும் தடுக்க வேண்டாம் என்பது போல் சைகை காட்டிய இருதயசாமி

"சிங்காரம் இங்கே வாரும்" என்று கூப்பிடவும் மரியாதையாக அவன் முன்னால் வந்து நின்று வணக்கம் சொன்னான்.

மதுவாடை மூக்கைத் துளைத்தது.

"நம்ம தலைவர் மட்டுமில்லே. மாகாணம் முழுக்க உள்ள நம்ம தலைவர்கள் மேலே போட்டிருக்க பொய் சதி வழக்குகளை வாபஸ் வாங்கும் படியா தீர்மானம் போட்டிருக்கம். பொய் வழக்குகள் வாபஸ் பெறப்படலையானா, நாம சும்மா வுட மாட்டம் அதுக்காவ வேண்டித் தான் இந்த ஊர்வலம் பெரும் போராட்டமே நடக்கும், அரசே ஸ்தம்பித்துப் போய்விடும்" என்று அமைதியாகப் பதில் சொன்னார்.

மைதானத்தில் கூடியிருக்கும் தொழிலாளர்களையும், தன் முன்னால் இருக்கும் தலைவர்களையும் மாறி மாறிப் பார்த்த சிங்காரம்

"வாரண்டு ரத்தாகித் தலைவர் சீக்கிரமா வெளியே வந்திடுவார்" இருதயசாமி சொன்னார்.

"அப்ப சரி கொடி ஏத்தலாம்"

உத்தரவு போடுவது போல் சொன்னவன் கொடிக்கம்பத்தை நோக்கி முஷ்டியை உயர்த்தி லல் சலாம் வைத்து மைதானத்தை விட்டு வெளியே போனான்.

சிங்காரத்தின் கேள்வியால் மலைத்துப் போய் நின்ற தங்கசாமி கொடிக்கயிற்றைத் தலைவர் இருதய சாமியின் கையில் கொடுத்தார்.

"தோழர்களே! இனியும் இந்தக் கொடியை நம் கையிலிருந்து யாரையும் பிடுங்க அனுமதிக்க மாட்டோம்" என்று இருதயசாமி குரல் நடுங்கச் சொன்ன போது கூட்டத்தில் ஆரவாரம் எழுந்தது.

கம்பத்தில் ஏறிய கொடி மென் காற்றில் பட்டொளி வீசிப் பறந்த போது தோழர் வேலாயுதம் முஷ்டியை உயர்த்தி

"இங்குலாப் ஜிந்தா பாத்" என்று குரல் கொடுக்கவும் ஆயிரக்கணக்கான புரட்சிக்குரல்கள் வானை நோக்கி ஒலித்தன.

தாரை தப்பட்டைகள் முழங்க ஊர்வலமாகக் கிளம்பியது.

4

தோல் பதனிடும் தொழிலாளர் சங்கங்களின் கூட்டமைப்பு மகா நாடு நடைபெற்று இரண்டு மாதங்களுக்கு மேலாகிறது.

சங்கரன் மீதும், அந்த இயக்கத்தின் முக்கிய தலைவர்கள் மீதும் அரசால் போடப்பட்ட பொய்ச் சதி வழக்குகளும், கொலை வழக்குகளும் வாபஸ் பெறப்படவில்லை. அவர்கள் மீது பிறப்பிக்கப்பட்ட அரஸ்ட் வாரண்டுகளும் ரத்துச் செய்யப்படவில்லை. அரசாங்கத்தின் இந்த ஜனநாயக விரோத நடவடிக்கைகளைப் பத்திரிக்கைகளும்ஜனநாயக இயக்கங்களும் கண்டனம் தெரிவித்த போதும், ஆளும் அரசு பழிவாங்கும் போக்கிலேயே நடந்து கொண்டிருந்தது.

இதற்கிடையில், தஞ்சை ஜில்லாவிலும் இதர பகுதிகளிலும் விவசாயிகளின் போராட்டம் காரணமாக வேறு வழியில்லாமல் அரசு நிறைவேற்றிய நியாய வாரச் சட்டம், பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் போன்ற சட்டத்தின் விதிகளை அமல் நடத்தாமல், அரசு, பண்ணையார்களுக்கும், மிராசுதார்களுக்கும் சாதகமாகவே நடந்து கொண்டிருந்தது. எனவே, சட்டங்களை அமல் நடத்தும் வகையில் அரசாங்கத்தை நிர்பந்தப்படுத்தவும் விவசாயப் பெருங்குடி மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் வேண்டி தஞ்சை ஜில்லாவில் திருத்துறைப்

பூண்டியில் மாகாண விவசாயிகள் சங்கத்தின் மாநாட்டை நடத்துவதற்கான பணிகள் தோழர் கந்தசாமியின் தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அரசால் தலைக்கு விலை வைக்கப்பட்ட கந்தசாமி இப்போது அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஜில்லா விவசாய சங்கத் தலைவருமாவார்.

சங்கரன், அகில இந்திய விவசாயிகள் சங்கப் பொறுப் பாளர்களில் ஒருவர் என்பதால் தலை மறைவு வாழ்க்கை நடத்திய போதிலும், விவசாய சங்க மாகாண மாநாட்டில் முழுமையாக ஈடுபட வேண்டியிருந்தது. வழிகாட்ட வேண்டியிருந்தது.

இச்சூழ்நிலையில் மாநாட்டு வேலைகளை முறைப் படுத்துவது சம்மந்தமாக மாங்குடிக்கு வந்திருந்த கந்தசாமி வடிவாம்பாளைச் சந்தித்து,

"பேராசிரியர் வடிவாம்பாள் மேலும் நீங்கள் அவமானத்துக்கு உட்படுவதை நாங்கள் விரும்பவில்லை. உங்கள் திருமணம் திருத்துறைப்பூண்டி மகாநாடு நடைபெறுவதற்கு முன்னாலேயே நடைபெறும். அந்தச் சேதியைத் தெரிவிக்கத் தான் வந்தேன்" என்று சொல்லிவிட்டுப் போனார். வடிவாம்பாளுக்குக் கந்தசாமி சொன்னதை நம்ப முடியவில்லை.

உண்மையில் வடிவாம்பாள் கந்தசாமி சொன்னபடியே எந்தவிதமான காரணமும் இல்லாமல் அவமானத்துக்கும், அவமதிப்புக்கும் கேவலத்துக்கும் உட்படுத்தப்படவில்லை என்றால், சங்கரனுக்கும் தனக்குமான திருமணம் நடைபெறும் சமயம் வரும் போது நடைபெறட்டும் என்று இருந்திருப்பார். ஆனால், அவமானம் படும் வகையில் அவள் பெயர் அவதூறு செய்யப்பட்டது. எனவே மனம் நொந்து போன வடிவாம்பாள் கடிதம் மூலம் சங்கரனுக்குத் தனது மன உளைச்சலைத் தெரிவித்திருந்தாள்.

அதாவது வேலூர் ஜெயிலிலிருந்து விடுதலையான சங்கரன் போலீஸ் வளையத்தினின்றும் தப்பித்துத் தலை மறைவாக இருந்து, சுந்தரேச அய்யரைச் சந்திப்பதற்காக மாங்குடிக்கு வந்தபோது ஒரு நாள் முழுவதும் வடிவாம்பாள் இல்லத்தில் சுழித்த சேதி எப்படியோ வெளியாகி, காலும், கையும் கண்ணும் வைத்து ஜோடனை செய்யப்பட்டு, அவளையும் சங்கரனையும் இணைத்து அக்ரகாரத்திலும் மாடத்தெருவிலும் கேவலமான சேதியாகப் பரப்பப்பட்டது. வெறும் வாயை மெல்லும் அம்மனுக்கு அவல் கிடைத்தாற் போன்று, அக்ராகாரத்து அம்மாமிகளுக்குப் புரணி பேசுவதற்கான அவதூறாகப் பரிணமித்திருந்தது. "என்ன இருந்தாலும் தேவதாசி தேவதாசி தான். குலத்தோடு வந்த குணம் அவளை விட்டுப் போகாது" என்றார்கள்.

அக்ரகாரத்திலும், மாடத்தெருவிலும். நடமாட ஒட்டாமல், பெண்கள் அவளைக் கேவலமாகப் பார்த்தனர். சிலர் ஜாடை பேசி அசிங்கப்படுத்தினர். அவளது ஒழுக்கம் கேள்விக் குறியாக்கப் பட்டிருந்து. வடிவாம்பாளின் பிறவியோடு அவளது ஒழுக்கமும் கற்பும் கேள்விக் குறியாக்கப்பட்டுச் சகிக்க முடியாததாக இருந்தது. தெருவில் நடமாடுவதே அவமானகரமானதாகப்பட்டது. வேலையை முடித்து வந்தால் வீட்டோடும், தனது எண்ண அலைகளோடும் முடங்கிப் போக வேண்டிய அவல நிலைமைக்கு வடிவாம்பாள் தள்ளப்பட்டுப் போனாள்.

மனம் ஒடிந்து போனாள்.

இப்படிப்பட்ட இக்கட்டான சூழலில் திடீரென்று தோழர் கந்தசாமியால் கொடுக்கப்பட்ட உறுதிமொழி அப்போதைக்கு மன ஆறுதல் அளித்த போதும் திருமணத்துக்கான சாத்தியப்பாடுகள் இருப்பதாக வடிவாம்பாளுக்குப் புலப்படவில்லை.

சங்கரன் மீது பிறப்பிக்கப்பட்ட அரஸ்ட் வாரண்டுகளும், வழக்குகளும் வாபஸ் பெறப்படவில்லை. சங்கரன்

வெளிப்படையாக சுதந்திர மனிதனாக நடமாடுவது தடுக்கப்பட்டிருக்கிறது. சங்கரனைக் கைது செய்வதற்கும், சிறையில் அடைப்பதற்குமான ஏற்பாடுகளுடன் போலீசும், உளவுத்துறையும் வலைபோட்டு அரித்துக் கொண்டிருக்கிறது. அதிலும் விசேஷமாக வடிவாம்பாள், சங்கரன் உறவு பற்றிய அவதூறு வெளியான பின்பு, வடிவாம்பாளையே வட்டமிட்டுக் கண்காணிக்கிறது உளவுத்துறை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் தோழர் கந்தசாமி சொன்ன வாக்குறுதியை முழுமையாக வடிவாம்பாளால் நம்ப முடியவில்லை அல்லாமலும் அவள் பால் அனாவசியமாக அவதூறு சுமத்தப்பட்டிருக்கிறது. அந்த அபவாதத்தை அவளால் வெளிப்படையாக மறுக்கவும் முடியவில்லை. ஏற்றுக் கொள்ளவும் மனம் ஒப்பவில்லை.சங்கரனை உத்தேசித்து அவற்றையெல்லாம் தாங்கிக் கொள்ள வேண்டியிருந்தது.

இவ்வாறு பலவாறான சிந்தனையில் மூழ்கித் தவித்த படி முன் அறையில் வடிவாம்பாள் உட்கார்ந்திருக்கும் ஒரு ஒரு காலைப் போதில் சங்கரனும் கந்தசாமியும் விடிவின் வரவே போல் அந்த அறையுள் பிரவேசித்தபோது வடிவாம்பாள் மலைத்துப் போனாள்.

வியப்புடன் அவர்களைப் பார்த்தாள். அத்தனை போலீஸ் கட்டுக் காவலையும் கெடுபிடியையும் தாண்டி அவர்கள் வந்திருப்பது ஆச்சரியமாகப்பட்டது.

சற்று நேரம் திகைத்துப் போய் நின்ற வடிவாம்பாள் அவர்களுக்கான காலை உண்டியைத் தயாரிப்பதற்காக வேண்டி, அவசர அவசரமாகப் பின்கட்டுப் போகத் திரும்பியதும் "வடிவாம்பாள் எங்களுக்காக நீங்கள் சிரமம் படவேண்டாம். வந்த சேதியை மட்டும் சொல்லிவிட்டு நாங்கள் புறப்படவேண்டும்" என்று கந்தசாமி சொல்லவும் அவர் சொல்வதை ஆமோதிப்பது போல சங்கரன் வடிவாம்பாளைப் பார்த்தார்.

சோபாவில் போய் அமர்ந்த சங்கரன் "வடிவு நான் உன்னை விரும்பத் தகாத அவமானத்துக்கு உட்படுத்தி விட்டேன்". அவளிடம் மன்னிப்புக் கேட்பதே போல் சங்கரன் சொன்னார்.

சிறிது நேரம் தரையைப் பார்த்த படி நின்றிருந்த வடிவாம்பாள் பெருமூச்செறிந்த வண்ணம்,

"உன்னை நான் எப்படிக் குறை காண முடியும்" என்று சொன்ன போது துக்கிதையான அவள் நயனங்கள் பனித்திருந்தன.

"அம்மா தான் மிகவும் ஆடிப்போனார்கள். எனக்காக அவர்கள் மிகவும் பரிதாபப்பட்டார். புரணி பேசுபவர்களால் கிளப்பிவிட்ட அவதூறுகளையும் வதந்திகளையும் கொஞ்சம் கூட அவங்க நம்பலை. "நேக்குத் தெரியும் டீ பெண்ணே. பெண்கள் விஷயத்தில் என் மகன் என்ன அவனைச் சேர்ந்த அத்தனை பேரும் நெருப்பு.

தேவலோகத்திலேருந்து , ரம்பையும், ஊர்வசியும் திலோத்தமையும் இறங்கி வந்து லீலாவிநோதம் பண்ணினாலும் அவாளை வசியம் பண்ண முடியாது. ஒனக்கும் சங்கரனுக்குமுள்ள நட்பு அப்பழுக்கற்றதடீ

பொறாமை பிடிச்ச ஜென்மங்கள் உன்னையவும், சங்கரனையும் சேர்த்து ஆலோலம் பாடறதுகள்ண்ணு" மகாக் கோபமாகப் பேசினாங்க" என்று சொல்லிவிட்டுச் சங்கரனது முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். ஆனாலும் அவள் பெற்ற அவமான உணர்வின் சாயல் முகத்தில் தென்பட்டது.

வடிவாம்பாளின் வாடிய முகத்தில் காணப்படும் விசனம் சங்கரனை அவள்பால் இரக்கம் கொள்ள வைத்தது.

வடிவாம்பாள் பேசுவதை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த கந்தசாமி

"வதந்திக்கு எல்லாம் நான் தான் காரணம், அன்றைய தினம் தோழர் சங்கரனை உங்கள் வீட்டில் அல்லாமல் வேற்று இடங்களில் தங்க வைத்திருக்க வேணும் ஆனால் அவங்க" என்று சொன்னபோது

"உங்கள் தோழரைப் பாதுகாக்க வேண்டியது உங்களோட கடமைதானே. உங்களை எப்படி நான் குறை சொல்ல முடியும்" என்று சொன்ன வடிவாம்பாள்,

"அவங்க கிளப்பிவிட்ட அவதூறு மனச்சிரமத்தையும் கேவலத்தையும் ஏற்படுத்தினாலும், வேறு வகையில் எனக்கு நன்மை செய்திருக்கு"

சங்கரனைப் பார்த்துச் சொன்ன வண்ணம் முறுவல் செய்தாள்.

வடிவாம்பாள் அப்படிப் பூடகமாகப் பேசியதற்கான காரணம் புரியாமல் சங்கரன் ஒரு கேள்விக் குறியுடன் வடிவாம்பாளைப் பார்த்தார்.

முகத்தில் அரும்பிய வியர்வையை முந்தானையால் துடைத்துக் கொண்ட வடிவாம்பாள்,

"வதந்திகளையும், அக்ரகாரத்துப் பெண்களும் ஆண்களும் பேசும் ஜாடைப் பேச்சுக்களையும் கேட்டுச் சலித்துப் போன அம்புஜத்தம்மாள் ஒருநாள் விடிகாலைப் போது என்னைப் பார்த்து இப்படிக் கேட்டார்கள். 'ஏண்டீ வடிவாம்பாள். அவா அவுத்து விட்டிருக்க பொய்ய நிஜமாக்கிட்டா. அப்புறம் என்ன பண்ணுவாளாம். வாயடைச்சுப் போவாளோ இல்லையோ' இப்படிக் கேட்டு விட்டு ஒரு வித எதிர்பார்ப்போடு என்னைப் பார்த்தார்கள். என்னால் அம்புஜத்தம்மாளோட கேள்வியைப் புரிந்து கொள்ள முடியவில்லை. மௌனமாக அம்புஜத்தம்மாளைப் பார்த்தேன். அவர்களுக்கு எனது மௌனம் உள்ளூற கோபத்தை ஏற்படுத்தியிருக்க வேணும்.

'அடிமக்குப் பெண்ணே, சங்கரனைக் கல்யாணம் பண்ணிக்கொண்ணு சொல்றேன் என்ன சொல்றாய்' என்று அம்புஜத்தம்மாளிடம் இருந்து அம்புபோல இப்படி ஒரு கேள்வி வரும் என்று நான் எதிர்பார்க்கவில்லை உடல் சிலிர்த்துப் புல்லரித்துப் போனேன். அம்புஜத்தம்மாளா இப்படிப் பேசறாங்க? என்னால் சிறிது நேரம் ஏதும் பேச முடியவில்லை. என்னோட தயக்கம் அவர்களுள் சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். எனவே எழுந்து வந்து என்னோட தோளில் கையைப் போட்ட வண்ணம்,

'ஒரு தேவதாசிப் பெண்ணை, ஆச்சாரமான பாப்பார வீட்டுக்கு மாட்டுப் பெண்ணா ஏத்துக்குவாளோண்ணு சந்தேகம். அடி அசடே, இப்படி அப்ஸரன் ஆட்டமா, தேவலோகக் கன்னி ஆட்டம் மாட்டுப் பெண் கிடைக்கணமே' என்று சொன்ன வண்ணம் என் கன்னத்தில் வழிந்தோடிய கண்ணீரை அவங்களோட முன்தானையால துடைச்சு விட்டாங்க என்று வடிவாம்பாள் சொல்லும்போது அவளது கண்கள் கலங்கியிருந்தன.

அம்புஜத்தம்மாளிடம் காணப்பட்ட இந்த மாற்றம் சங்கரனைப் பிரமிக்க வைத்தது.

சாதாரணமாகத் தனது சனாதனப் போக்கினின்றும் மாறாத விட்டுக் கொடுக்காத அம்புஜத்தம்மாளிடம் முதல் நாள் இரவு வடிவாம்பாளைத் திருமணம் செய்வது பற்றி, சங்கரனும், கந்தசாமியும் சொல்லிவிட்டு அவரது அபிப்பிராயத்தையும் சம்மதத்தையும் கேட்டபோது, எந்த விதமான எதிர்ப்பும் காட்டாமல் சம்மதமும் தெரிவிக்காமல் மௌனமாக இருந்ததற்கான காரணம் கந்தசாமிக்குப் புரியலாயிற்று.

வேலைக்காரப் பெண் அவர்களுக்கான சிற்றுண்டியையும், காப்பி பானத்தையும் கொண்டு வந்து சிறு மேஜையில் வைத்து விட்டுப் போனாள். சிற்றுண்டியை அவர்களுக்குப் பரிமாறிய வண்ணம் பேச ஆரம்பித்த வடிவாம்பாள்,

"அம்மா, வன்மமாக வேறு ஒரு காரியத்தையும் செய்தார்கள்" என்று சொன்னபோது, சனாதனியாகவும், பிடிவாதகுணமும் கொண்ட அம்புஜத்தம்மாளின் போக்கும் நடத்தையும் விசித்திரமாகப் பட்டது.

"அந்தச் சம்பவத்துக்குப் பிறகு, அம்மா என்னைப் பட்டு உடுத்திக் கொண்டு காலையிலேயே வீட்டுக்கு வரச் சொன்னபோது என்னால முதல்ல புரிஞ்சுக்க முடியலை.

புத்தாடை உடுத்திக் கொண்டு போன போது, அவங்க வாங்கி வச்சிருந்த மல்லியப் பூச்சரத்தை அவங்களே என் கூந்தல்லே சூடி விட்டாங்க. பிறகு பூசைக்குரிய அத்தனையையும் என் கையில் கொடுத்து அக்ரகாரம் பிரதான தெருவழியாக என்னைத் தன் மாட்டுப் பெண்ணைக் கூட்டிட்டுப் போராப் போல அம்மன் கோவிலுக்கு அழைச்சிட்டுப் போனாங்க. தெருவில் நிற்கும் அம்மாமிகளையும், அக்ரகாரத்துப் பெண்களையும், பெரியவர்களையும், இப்போ என்ன சொல்லப் போரீங்கண்ணு, சவால் விடறமாதிரி ஒரு வித கர்வத்துடன் தெருவில் என்னோடு நடந்து வந்தாங்க. ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும் வெள்ளிக் கிழமைகள்ளேயும் தவறாமல் அவங்களை நான் அக்ரகாரம் வழியாக அம்மன் சன்னதிக்குக் கூட்டிட்டுப் போக வேணும். அது அம்மாவோட உத்தரவு" என்று பெருமிதமாகச் சொன்ன வடிவாம்பாள் சங்கரனைப் பார்த்த போது.

"அம்புஜத்தம்மாள் எனக்கு இண்ணெய வரையில் ஒரு புதிர் என்னால் புரிஞ்சுக்க முடியலை"என்று சங்கரன் சொன்னார்.

"அம்மாவை நான் நல்லாவே புரிஞ்சிட்டேன். அவங்களோட அங்கீகாரத்தை நான் வாங்கியாச்சு. ஒரு பெண்ணை ஒரு பெண்ணால் தான் புரிஞ்சுக்க முடியும். அவங்க ரொம்ப மாறிப் போயிட்டங்க" என்று சங்கரனைப் பார்த்து வடிவாம்பாள் உளம் பூரிக்கச் சொன்னாள்.

தன் கைக்கடிகாரத்தைப் பார்த்த சுந்தசாமி,

"தோழர் நேரமாயிட்டுப் போரது, போகலாம்" சங்கரனைப் பார்த்துச் சொல்லவும்,

அடுத்த வாரம் இதே நேரத்தில், வடிவாம்பாளின் பூர்வீக இல்லத்திலேயே திருமணம் நடைபெறும் என்பதைச் சங்கரன் வடிவாம்பாளிடம் சொன்னார்.

வடிவாம்பாள் வியப்போடு பார்த்த போது,

"நாம சிலசமயம் ரிஸ்க் எடுக்க வேண்டியிருக்கு" என்று சொல்லி விட்டு சுந்தசாமி எழுந்து போனார்.

5

திருத்துறைப் பூண்டியில் திட்டமிட்டபடி, மாகாண விவசாயிகள் மகாநாடு நடப்பதற்கு இரண்டுநாள் மட்டும் இருக்கிறது.

தஞ்சை ஜில்லாவே, மகா நாட்டுக்காகத் தன்னையே அலங்கரித்துக் கொண்டது போல், ஒவ்வொரு ஊரும் சேரியும், கொடிகளாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப் பட்டிருக்கிறது. மாங்குடி கிராமமும் இதற்கு விதிவிலக்கில்லை என்பது போல், மாடத்தெருவும் கொடிகளாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு காலத்தில் இசை வாணர்களுக்கும், நாட்டிய சிரோன்மணிகளுக்கும், சங்கீத வித்துவான்களுக்குமான பயிற்சிக் கூடமாகவும், அரவணைப் பகமாகவும் பயன்பட்ட, வடிவாம்பாளின் பழம் பெரும் இல்லத்தின் உட்புறமும், எளிமையாக மலர்த் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. கூடத்தின் நடுவில் மணமக்கள் அமருவதற்கான சிறிய மேடை, அதை ஒட்டி, ரெஜிஸ்தார் உட்காருவதற்கான மேஜையும், நாற்காலியும், அதை ஒட்டி, வடிவாம்பாளின் பாட்டியும், மூதாதையரும் பயன்படுத்திய ஈட்டி மரத்திலான யானைக்கால் சாய்வு நாற்காலி அம்புகத்தம்மாள் அந்த நாற்காலியில் அமர்ந்திருக்கிறார்.

வடிவாம்பாள் காலையிலேயே குளித்து முழுகி, எளிமையாகப் புத்தாடை புனைந்து கூடத்தில் நடமாடிக் கொண்டிருக்கிறாள். அவளது திருமணத்தைக் காண சகப்

பேராசிரியைகளான கோப்பெருந் தேவியும், மாதவிக்குட்டியும் வந்திருக்கிறார்கள். ஒலி பெருக்கியில் வீணையின் இனிய நாதம், காதைக் குடைந்து குமைக்காத மட்டில் சன்னமாக இழையோடிக் கொண்டிருக்கிறது.

பழங்காலத்துச் சுவர்க் கடிகாரம் ஒன்பது மணி முப்பது நிமிடத்தைத் தொட்ட போது, சங்கரனும், கந்தசாமியும் இருதயசாமி, தோழர் வேலாயுதம் ஓசேப்பு ஆகிய தோழர்கள் சகிதம் முன் வாசலைத் தாண்டி, அந்த ஹாலுக்குள் பிரவேசிக்கின்றனர். மாதர் சங்கத் தலைவியும், கந்தசாமியின் மனைவியுமான சிவகாமியம்மாள், அம்புஜத்தம்மாளை அழைத்து வந்து, மணமேடை முன்பு போடப்பட்டிருக்கும் பழங்காலத்து சாய்வு நாற்காலியில் உட்கார வைக்கிறார்.

சுவர்க் கடிகாரம் சரியாகப் பத்து மணி அடித்து ஓய்ந்தபோது கல்யாண ரெஜிஸ்தார் தனது சிப்பந்தியுடன், அவருக்காகப் போடப்பட்ட மேஜையில் அமர்ந்து, கல்யாண ரிஜிஸ்தரையும் முத்திரையையும் மேஜையில் பரப்பி வைக்கிறார்.

பேராசிரியை கோப்பெரும் தேவி வடிவாம்பாளை மேடைக்கு அழைத்து வந்து அமரச் செய்கிறாள். கந்தசாமியும், சங்கரனும் மேடைக்கு வந்தபின் கந்தசாமி, தனது ஜிப்பா பாக்கெட்டில் வைத்திருந்த இரண்டு மோதிரங்களை எடுத்துப் பிரித்துச் சங்கரன் கையிலும், வடிவாம்பாளிடமும் கொடுக்கிறார். அவர்கள் இருவரும் மோதிரங்களை மாற்றிஅணிந்து கொள்கின்றனர்.

மணமேடையை விட்டு இறங்கி வந்து, ரெஜிஸ்த்தார் முன் விரித்து வைக்கப்பட்டிருக்கும் ரெஜிஸ்தரில் கை ஒப்பம், வைத்த போது, தோழர் வேலாயுதமும், இருதயசாமியும் சாட்சிக்கை ஒப்பமிடவும் திருமணம் இனிதே முடிவடைந்தது என்பதன் அடையாளமாக ரிஜிஸ்தார், கை ஒப்பம் வைத்து தனது முத்திரையைப் பதிக்கிறார். தங்கசாமியும், ஓசேப்பும் இரண்டு மல்லிகை மாலைகளை மணமக்களிடம் கொடுக்கவும் மாலை மாற்றிக் கொள்ளப்படுகிறது.

வடிவாம்பாள், அம்புஜத்தம்மாள் அருகில் வந்து அவரது பாதங்களைத் தொட்டு நமஸ்காரம் செய்கிறாள்.

அம்புஜத்தம்மாள் வடிவாம்பாளைத் தூக்கி மார்போடணைத்து அவளது நெற்றியில் முத்தம் பதித்தபடியே சங்கரனை ஏறிட்டுப் பார்க்கிறார்.

அந்த வேளையில்

"எக்ஸ்யூஸ்மீ! மே.ஐ. கம் இன். மன்னிக்கவும் நான் உள்ளே வரலாமா" என்று கேட்ட வண்ணம், கூடத்தின் வாசலில் வந்து நின்ற உள்ளூர் இன்ஸ்பெக்டர் தனசேகரன் குரல் கொடுத்த போது எல்லோருடைய கவனமும் அவர் பால் திரும்பியது.

சங்கரன் எந்த விதமான அவசரமும் காட்டாமல் வடிவாம்பாளின் அருகில் நின்றிருந்தார்.

"பரவாயில்லை நீங்கள் உள்ளே வரலாம்" கந்தசாமி தனசேகரனைப் பார்த்துச் சொன்னபோது, தனசேகரனும், இரண்டு போலீஸ்காரர்களும் கூடத்துள் வந்தார்கள்.

"மன்னிக்கவும் வக்கீல் ஸார்". தொப்பியைக் கழற்றி நாற்காலியில் அமர்ந்தவாறே தனசேகரன் சங்கரனைப் பார்த்துச் சொன்னான்.

"இது நாங்கள் எதிர்பார்த்ததுதான்" சங்கரன் வடிவாம்பாளின் வலதுகரத்தைப் பிடித்த வண்ணம் சொன்னார். வடிவாம்பாளின் உடம்பில் காணப்படும் நடுக்கத்தை அவரால் உணர முடிந்தது.

"மணமக்களுக்கு எனது மணமார்ந்த வாழ்த்துக்கள்" தனசேகரன் அவர்களைப் பார்த்துச் சொன்னபோது, தோழர் வேலாயுதத்துக்குச் சிரிப்பு வந்தது.

"நல்ல வேடிக்கை" இருதயசாமியிடம் சொல்லிக்கொண்டார்.

"மிஸ்டர் தனசேகரன் இப்போவே நான் உங்களோடு வந்தாகணுமா?" சிறிதுநேர மௌனத்துக்குப் பின் சங்கரன் கேட்டார்.

"அவசரம் ஒன்றுமில்லை. நீங்க தப்பிக்க மாட்டீர்கள் என்பது தெரியும். கல்யாண காரியங்களை எல்லாம் முடிச்சுட்டு வந்தாப் போதும். எவ்வளவு நேரமானாலும் நானும் என் ஜவான்களும் காத்திட்டிருப்போம்" தனசேகரன் இருக்கையினின்றும் எழுந்து நின்று மரியாதையாகப் பதில் சொன்னான்.

"டிபன் சாப்படலாமல்லவா. ஆட்சேபனை கிடையாதே" தோழர் வேலாயுதம் இவ்வாறு கேட்ட வண்ணம், மற்றவர்களைப் போல் தனசேகரனுக்கும் போலீஸ்காரர்களுக்கும் சிற்றுண்டி கொண்டு வைத்தார்.

இந்த வேளையிலும் இவர்களால் எப்படி, சாவதானமாக நடந்து கொள்ள முடிகிறது என்ற வியப்புடன் வடிவாம்பாள் சங்கரனையும் மற்றவர்களையும் பார்த்தாள்.

அம்புஜத்தம்மாள், வடிவாம்பாள் போல் கலவரப்படாமல், சாதாரண நிகழ்ச்சியைப் பார்ப்பது போல் தனது இருக்கையில் அமர்ந்திருந்தார். அம்புஜம் அம்மாளைப் பொறுத்த மட்டில் சங்கரன் கைது செய்யப் படுவதும், சிறைக்குப் போவதும், விடுதலையாகி வருவதும் பழக்கப்பட்டுப் போன ஒன்று.

"எங்களைப் பழிவாங்க வேண்டும் என்பதற்காக இந்த அரசு ராட்சதத்தனமாக நடந்து கொள்கிறது. ஆனால் அவர்கள் எரிமலையின் மேல் உட்கார்ந்திருப்பது அவங்களுக்குத் தெரியவில்லை" கந்தசாமி இன்ஸ்பெக்டர் தனசேகரனைப் பார்த்துச் சொன்னபோது, அவன் மௌனமாகவே உட்கார்ந்திருந்தான்.

சங்கரன் போலீஸ்காரர்களை வெகுநேரம் காத்து நிற்க வைக்க விரும்பவில்லை.

வடிவாம்பாளின் தோளில் கையமர்த்தி, அம்புஜத்தம்மாளிடம் ஒப்படைப்பது போல் அவர் முன் கொண்டு வந்து நிறுத்தினார்.

அம்புஜத்தம்மாள் தனது இருகரங்களாலும் வடிவாம்பாளின் கரங்களைப் பற்றிப் பிடித்த வண்ணம், மனதிருப்தியுடன் வடிவாம்பாளை ஆதரவாகப் பார்த்தார். அவளோ மௌனமாகவே நின்றிருந்தாள்.

வடிவாம்பாளின் உள உளைச்சலைப் போக்குவதே போல் சங்கரன், அவள் அருகில் வந்து,

"தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்
தருமம் மறுபடியும் வெல்லும்"

என்கிற பாஞ்சாலி சபத வரிகளைச் சொல்லிவிட்டு, "நீ இவ்வளவுக்கு மனம் தளர்ந்து போவாயிண்ணு நான் எதிர் பார்க்கலை" என்றபோது

"தோழர் சங்கரன், வடிவாம்பாளும் சாதாரணப் பெண்மணி, யந்திரம் அல்லவே. சாதாரணப் பெண்ணுக்கு இருக்கக் கூடிய ஆசா பாசங்களும் உணர்வுகளும் அவங்களுக்கு இருக்கத்தானே செய்யும். அதை மதிக்க நாம கத்துக்க வேணம் தோழரே" சிவகாமியம்மாள் சற்றுக் கடுமையாகவே சொன்னார்.

"அது சரிதான். வடிவாம்பாள் யதார்த்தத்தை ஜீரணிக்கக் கத்துக்க வேணுமல்லவா. குழந்தை அல்லவே. போராசிரியர்" வடிவாம்பாளைப் பார்த்து வேடிக்கையாகச் சொன்னவாறே தோழர்களிடம் விடை பெற்றுக் கொண்டு இன்ஸ்பெக்டர் தனசேகரன் இருக்கும் திக்கை நோக்கிச் சங்கரன் நடந்து போனார். திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவரும் தங்களைக் கட்டுப்படுத்திய வண்ணம் மௌனமாக நின்றிருந்தனர்.

சங்கரன் போலீஸ் படை சூழ போலீஸ் வண்டியை நோக்கிப் போவதை ஏக்கப் பெருமூச்சுடன் பார்த்தபடியே அம்புஜத்தம்மாள் அருகில் நின்றிருந்தார்.

"பேராசிரியர் வடிவாம்பாள் நாங்கள் உங்களை வெகு காலம் தனிமையில் தவிக்கவிட மாட்டோம்" என்று உறுதி சொன்னவாறு சுந்தசாமி அவர்களைத் தொடர்ந்தார்.

அவர்களை அறியாமலேயே அந்த இடத்தில் இனம் தெரியாத சோகம் சூழலாயிற்று.

●

அவர்கள் திருமணத்துக்குப் பிறகு அவதூறு பொழிந்தவர்களும், வதந்தி கிளப்பி விட்டவர்களும் வாயடைத்துப் போனார்கள்.

ஜஸ்டிஸ் பரமசிவம் அய்யர் வீட்டு மருமகள் என்கிற புதிய அந்தஸ்து வடிவாம்பாளைப் பெருமிதம் கொள்ளச் செய்திருந்தது.

வீட்டுக்கு முன்னால் தொங்கவிடப் பட்டிருந்த பெயர்ப் பலகையில் கூட மாற்றம் செய்யப்பட்டு இப்போது பேராசிரியை திருமதி சங்கரன் வடிவாம்பாள் என்று புதிய அவதாரம் பெற்றிருக்கிறது.

அன்று வெள்ளிக் கிழமையாகையால் வெகு காலையிலேயே குளித்துப் பட்டாடை உடுத்தி அம்புஜத்தம்மாளை அம்மன் தரிசனத்துக்கு அழைத்துக் கொண்டு போய் அவர்களது ஆசீர்வாதத்தையும் வாங்கிக் கொண்டு வீட்டுக்கு வந்திருக்கிறாள் வடிவாம்பாள்.

முதல்நாள்தான் சங்கரன் முதன் முதலாக அவளுக்குச் சிறைச் சாலையிலிருந்து கடிதம் போட்டிருக்கிறார். கடிதத்தின் ஆரம்பத்திலேயே, கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரியாக இருக்கும் சங்கரன் எழுதும் லிகிதம் என்ற

கிண்டல் நிறைந்த வாசகங்களைப் படிக்கிறபோது அவளுக்குச் சிரிப்பு வந்ததோடு, சங்கரன்பால் பரிவும், பச்சாதபமும் ஏற்பட்டது. கடிதத்தில் பல இடங்களில் அவரது தனிமையும், தவிப்பும் வெளிப்பட்டிருக்கிறது. தவிப்பை அவருக்கே உரிய நகைச்சுவைத் தன்மையுடன் வெளிப்படுத்தியிருந்தார். எனவே சங்கரனது கடிதத்தை அம்புஜத்தம்மாளிடம் வாசித்துக் காட்டுவதா இல்லை மறைத்துவிடுவதா என்கிற தயக்கம் வேறு.

இவ்வாறு இருபட்ட சிந்தனையோடு, பிரதான கேட்டைத் திறந்து கொண்டு வீட்டின் முன்பகுதியில் வந்து நிற்கிறாள்.

பள்ளிக் கூடத்துச் சிறுமியைப் போன்று தனது ஜாக்கெட்டின் முன்பகுதியில் பத்திரமாக மடித்து வைக்கப்பட்டிருந்த கடிதத்தை திரும்பவும் எடுத்து விரித்து, வராந்தாவில் கிடந்த நாற்காலியில் உட்கார்ந்த வண்ணம் ஒவ்வொரு வாசகத்தையும் எழுத்துக் கூட்டிப் படிப்பது போல் படிக்கும் போது, இன்ப உணர்வால் உடல் ஒடிப் புல்லரிக்கிறது.

இன்ப உணர்வுகளை மனதில் சுமந்த வண்ணம் தோட்டத்தை ஏறிட்டுப் பார்க்கிறாள். தென்றல் காற்றுடன் மிதந்து வரும் சாரல் தோட்டத்து மரங்களையும், மலர்ச் செடிகளையும் நனைத்துக் கொண்டிருக்கிறது. சாரலின் ஸ்பரிசம் பெற்று ஒவ்வொரு மரமும் செடியும் சிலிர்த்துப் போனதே போன்ற தோற்றம்.

தோட்டத்தின் நடுவில் நிற்கும் கொன்றை மரம், தங்கத்தால் தன்னை அலங்கரித்த மாதிரி பூத்துக்குலுங்கி நிற்கிறது. குண்டுமல்லியிலும், கொடி மல்லியிலும் மலர்கள் கொத்துக் கொத்தாகப் பூத்துக் கிடக்கின்றன. மல்லிகை மலர்களின் நறுமணம் அந்தப் பிரதேசம் முழுவதும் பாய்ந்து பரவி பரிமளிக்கிறது. மாமரச் செறிவிலிருந்து குயில்களின் இனிய நாதமும், மழை வேண்டித் தவமிருக்கும் செம்பூத்துப்

பறவைகளின் நாதமும், தொலைந்து போன துணைக்காக வேண்டி துக்கிக்கும் சோகம் ததும்ப பாடுவது போல் தென்படுகிறது. அவள் மனதை நெட்டிப் பிழிகிற மாதிரியான உணர்வு. இயற்கையும், ஜீவராசிகளும், நாயகனின் வரவுக்காகக் காத்திருப்பது போன்ற தோற்றம். ஏக்கம்

"நானும் அவரோட வரவுக்காக இப்படித்தானே வழிமேல் விழி வச்சுக் காத்திருக்கிறேன்". வடிவாம்பாள் ஆகத்தில் திடீரென்று அப்படி ஒரு எண்ணம்.

"சை! அது என்ன சபலம்" நான் ஒரு லட்சிய வாதியின் மனைவி புரட்சியாளனின் துணைவி என்று தனக்குள்ளேயே சொல்லித் தலையைச் சிலுப்பிக் கொண்டு வீட்டுக்குள் பிரவேசிக்கிறாள். ஆனாலும் மனதின் ஆழத்தில் இனம் தெரியாத வேதனை தவிப்பு.

மத்திய ஹாலில் நட்டுவனாரும், நாட்டிய மாணவர்களும் அவளது வரவுக்காகக் காத்து நிற்கிறார்கள்.

வடிவாம்பாள் இசையமைத்து உருவாக்கியிருக்கும் நாட்டிய நாடகத்துக்கான கடைசி "ரிகர்ஸல்" அந்த ஹாலின் முற்றத்தில் நடைபெறுகிறது. அடையாறு கலாச் சேத்திராவில் நடைபெறும் அகில இந்திய நாட்டிய விழாவிற்கு வேண்டி, வடிவாம்பாளால் விசேஷமாகத் தயாரிக்கப்பட்ட நாட்டிய நாட்கம்.

குடும்பத்துக்குச் சொந்தமான பழங்கால வீணையைத் தாங்கி நிற்கும் மேடையில் போய் அமர்ந்து வீணையின் நரம்புகளைச் சரி பார்க்கிறாள். தந்திகளினின்றும் எழும் ஓசை ஒவ்வொன்றும் அவளது தனிமைக்கு இறங்குவது போல் படுகிறது; இசைக்கிறது.

வீசும் வாடைக்காற்றுடன் கலந்து வரும் குயிலின் நாதமும், செம்பூத்தின் கூவலும் அவளை மேலும் சோகத்தில் ஆழ்த்துகின்றது.

வடிவாம்பாள் உள்ளத்தை தாம்பத்ய வாழ்வின் தனிமை ஆக்கிரமித்திருக்கிறது. சங்கரன் வரவுக்காக அவள் மனம் ஏங்கித் தவிக்கிறது. நாட்டிய நாடகத்துக்கான கவிதை வரிகளை வடிவாம்பாள் திரும்பத் திரும்பப் படித்துப் பார்க்கிறாள். கார் காலத்தில் ஊர் திரும்புவதாக உறுதி சொல்லிவிட்டுப் போர்க்களம் போன தலைவன் ஊர் திரும்பவில்லை. அவன் வரவுக்காகத் தனிமையில் ஏங்கித் தவிக்கும் தலைவியின் ஏக்கத்தையும், எதிர்பார்ப்பையும் துக்கத்தையும் வெளிப்படுத்தும் வரிகள் படித்த போது, வடிவாம்பாளுக்குக் கவிதை வரிகளில் தானே கரைந்து கலந்துவிட்ட உணர்வு. தானும் தலைவியும் ஒன்றாகி ஒன்றிவிட்ட சோகம். அந்த உணர்வு அவளது உள்ளத்தையும் உணர்வுகளையும் ஆட்கொண்டு விட்ட சோகம்.

வடிவாம்பாள் வீணையை மீட்டிப் பாட ஆரம்பித்த போது அந்தச் சோகம் கலந்த இனிய நாதம் அந்தப் பிரதேசத்தையே ஆக்கிரமித்து வியாபிக்கிறது.

பாடலுடன் ஒன்றிப் போன வடிவாம்பாளின் நயனங்களினின்றும் மாலை மாலையாகக் கண்ணீர் வடிந்து முத்துக்கள் வீணையின் நரம்புகளில் சிதறி விழுகின்றன.

●

டி.செல்வராஜின் இந்த நாவல் தோல் தொழிலாளர்களைப் பற்றிய முதல் இலக்கியப் பதிவு. திண்டுக்கல் மாவட்டத் தோல் தொழிலாளர்களின் அவலம் நிறைந்த சமூக வரலாற்றைப் பொதுவுடைமை இயக்கத்தின் வரலாற்றோடு இணைத்துச் சொல்கிறது. விளிம்பு நிலை மக்களின் வாழ்வைப் போராட்ட உணர்வோடும் நம்பிக்கையோடும் எழுச்சியோடும் சித்திரிக்கிறது. மக்சிம் கார்க்கி முன்னெடுத்த சோசலிச யதார்த்தவாதம் தமிழ் நாவல் உலகில் விழுதுவிட்டு நிற்பதற்கு இந்நாவல் ஒரு சான்று.

பா.ஆனந்தகுமார்.

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 098
☎ 044 - 26251968, 26258410, 26241288
www.ncbhpublisher.in | email: info@ncbh.in

ISBN 978-81-2341-739-4
9 788123 417394
Code No. A 2123 ₹ 450/-